அந்தகம், *s.* A shrub, ஆமணக்கு, Ricinus, *L.*

*அந்தகன், *s.* Destroyer, அழிப்போன். 2. Yama the god of death, யமன். Wils. p. 37. Antaka. 3. A blind person, குருடன். Wils. p. 39. And'haka. 4. The planet Saturn, சனி. 5. Soap, சவுக்காரம்.

அந்தகசயன், *s.* Siva, he who overcame Yama, சிவன்.

அந்தகாரி, *s.* Siva the foe of Yama; *ex* அரி, foe.

*அந்தகாரம், *s.* Darkness, gloom, இருள். 2. Mental darkness, மனவிருள். Wils. p. 39. And'hakara. 3. Hell, நரகம்; *ex* அந்தம். blind, *et* காரம், that which makes.

அந்தகோரம், *s.* The நெல்லி tree, Phyllanthus, *L.*

*அந்தக்கரணம், *s.* The intellectual faculties—embracing, 1. மனம், The mind or organ of thought; 2. புத்தி, Reason, the organ of consciousness, or apprehension; 3. அகங்காரம், Energy, any one of the passions; 4. சித்தம், Will, resolution, desire; *ex* அந்தர், within, *et* கரணம். (*p.*) Wils. p. 37. Antahkarana.

அந்தக்கரணசாட்சி, *s.* Conscience.

அந்தணன், *s.* The supreme Being, கடவுள். 2. Brahma, பிரமன். 3. Siva, சிவன். 4. Argha, அருகன். 5. A sage, recluse, முனிவன். 6. A Brahman, பார்ப்பான். 7. The planet Jupiter, வியாழம். 8. Saturn, சனி; *ex* அம், beauty, *et* தண்மை, coolness, kindness. (*p.*)

அந்தணநாபி, s. A sacerdotal antidote for a kind of poison. See நாபி.

அந்தணர்வாக்கு, s. The vedas, வேதம்.

அந்தணர், s. Brahmans, பார்ப்பார். 2. One of the five confidential servants of a king, a king's household priests, அரசர்க்குறுதிச்சுற்றத்தொருவர். 3. Recluses, முனிவர்.

அந்தரஸ்து, s. (*Hin.*) Order, regularity, ஒழுங்கு. 2. Condition, நிலை. உன்னந்தஸ்துக்குப்பொருந்தியதல்ல. This does not agree with your circumstances.

*அந்தப்புரம், s. A place for kings' wives, &c. (*p.*) See அந்தப்புரம், under அந்தர். Wils. p. 37. ANTAHPURA.

*அந்தம், s. End, termination, கடை. 2. Death, சாவு. Wils. p. 37. ANTA. 3. Beauty, handsomeness, comeliness, அழகு. 4. (மிக.) Musk, கஸ்தூரி. 5. [*in anat.*] Extremity of a bone, என்பின்அந்தம்.

அந்தக்காரி, s. A fair, handsome woman.

அந்தக்கேடு, s. Deformity, ugliness, அழகீனம்; *ex* கேடு, ruin.

உடலந்தம், s. The end or perishing of the body, i. e at death, dissolution.

அந்தர், s. Low caste persons, கீழ்மக்கள்.

அந்தந்தலை, s. End and beginning, முடிவுமுதலும்.

அந்தாதி, s. A species of verse. (See தொடை.) 2. A poem of அந்தாதி verses, ஓர்பிரபந்தம். 3. God—the first and last, பரபரம்.

எழுத்தந்தாதி, s. See எழுத்து.
அசையந்தாதி, s. See அசை.
அடியந்தாதி, s. See அடி.
சீரந்தாதி, s. See சீர்.

அந்தாதித்தொடை, s. A consonance or connexion in a stanza, wherein the syllable, word or words, which end one line, begin the following. See தொடை.

*அந்தரம், s. Open space, வெளி. 2. Intermediate space, இடை. 3. Ether, as the vehicle of light and sound—supposed to pervade all things and to extend through the universe, பஞ்சபூதத்திலொன்று. 4. The sky, atmosphere, ஆகாயம். Wils. P. 37. ANTARA. 5. Temple, தேவர்கோயில். 6. Singleness, loneliness, solitariness, தனிமை. 7. Disaster, mishap, dilemma, தீமை. (பகு. 49.) 8. End, taken distributively, end of each, முடிவு. 9. Difference, dissension, பேதம். 10. Measure, அளவு. 11. Remainder after subtraction, difference, சேஷம். 12. Period of time, காலம். (சது.) 13. Darkness, இருள். 14. Crowd, கூட்டம். (*p.*)—*Note.* All the meanings may be referred to the idea of *within* and *without*. (*S. Dic.*) In combination some variety of meaning is found, as, தேசாந்தரம், a foreign country; வருஷாந்தரம், every year; மாதாந்தரம், every month; முகாந்தரம், on account of; தீவாந்தரம், the remotest isle, &c.

அந்தரஆண்டு, s. The time between any given points. [அந்தரம். 2.]

அந்தரகாமி, s. A horse which goes above the earth, through the air, ஆகாயமார்க்கமாய்ச்செல்லும்பரி. [அந்தரம். 4.]

அந்தரசைவம், s. One of the divisions of the Saiva religion, ஓர்சைவம்.

அந்தரச்சிந்து, s. One of the thirty-two kinds of arsenic in its natural state, சற்பாஷாணம்.

அந்தரதிசை, s. A nine-fold subdivision of the period of a planet's influence on a person's life, கிரகநிலை. [அந்தரம். 2.]

அந்தரத்தாமரை, s. A species of lotus whose roots float in the water, not adhering to the soil, ஆகாயத்தாமரை. [அந்தரம். 4.]

அந்தரத்திலேநிற்க, *inf.* To be forsaken by all, be abandoned. [அந்தரம். 1.] என்னையந்தரத்திலேவிட்டான். He has forsaken me.

அந்தரபவனி, s. Motion through the air, ஆகாயகமனம். 2. (*fig.*) Very great swiftness, மிகுவேகம். 3. [*prov.*] Any thing that goes swiftly, வேகமாய்ச்செல்லுவது. [அந்தரம். 4.]

அந்தரப்பிசாசுகள், s. The evil spirits of the air. [அந்தரம். 4.]

அந்தரமத்திமபுத்தி, s. Difference between the mean and true daily motion of the sun, or of a planet. [அந்தரம். 4.]

அந்தரவல்லி, s. A medicinal creeper, கொல்லன்கோவை. [அந்தரம். 4.]

அந்தரவனம், s. An uninhabited desert land. [அந்தரம். 1.]

அந்தரவாசம், *v. noun.* Dwelling in the air, ஆகாயத்தில்வசிக்கை. 2. s. A medicinal shrub, ஓர்மருந்துப்பூடு. [அந்தரம். 4.]

அந்தரவாயு, s. Hydrocele, வீமபீசம். [அந்தரம். 2.]

அந்தரவீச்சு, *v. noun.* Beating the air.

அந்தரவீச்சுக்காரன், s. One who beats the air, a cheat, a fraudulent man. [அந்தரம். 4.]

அந்தராயம், s. Disaster, obstacle, mishap, dilemma, exigency, impediment தீமை. (*p.*) Wils. p. 38. ANTARAYA. [அந்தரம். 7.]

அந்தராளம், s. Middle, intermediate space, நடு. Wils. p. 38. ANTARALA. (*p.*) See கர்ப்பகிரகம். [அந்தரம். 2.]

அந்தரானன், s. The son of an அனுலோம father, and பிரதிலோம mother, அனுலோமத்தந்தைக்கும் பிரதிலோமத்தாய்க்கும்பிறந்தபிள்ளை.

அந்தரி, s. A goddess as inhabiting the ærial regions, ஆகாயவாணி. 2. Durga, துர்க்கை. 3. Parvati, பார்வதி. (*p.*) [அந்தரம். 4.]

அந்தரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be forlorn, solitary, lonely, தனித்திருக்க. 2. To be friendless, helpless, forsaken, without means of subsistence, to be in difficulty, or extremity, உதவியற்றிருக்க. (*c.*) 3. (*p.*) *v. a.* To find the difference between two quantities, சேஷமறிய.

அந்தரிப்பு, *v. noun.* Forlornness, solitariness, தனித்திருக்கை. 2. Helplessness, being without means of subsistence, உதவியின்மை.

*அந்தரிலம்பம், s. An acute-angled triangle, கூர்முக்கோணம்; *ex* அந்தர், *et* லம்பம். Wils. p. 38. ANTARLAMBA.

*அந்தர், s. The interior, inside—used only in combination, உள். Wils. p. 37. ANTAR.

அந்தரங்கம், s. Privacy, secrecy, what is said in confidence, இரகசியம். (R. 91.) 2. The interior, the mind, உள்ளம். Wils. p. 38. ANTARANGA. 3. Separateness, ஏகாந்தம்.

அந்தரங்கஸ்தானம், s. The private parts.

அந்தரங்கன், s. One who keeps a secret, one who may be trusted with secrets.

அந்தரிந்திரியம், s. The internal senses, of which there are four, as specified under, அந்தக்கரணம்.

அந்தரியாகம், s. Internal or mental worship, உட்பூசை. (ஞா. 68, தத்வ. 144.) See பகிரியாகம்.

அந்தரியாமி, s. The deity, கடவுள். Wils. p. 38. ANTARYAMI.

அந்தர்க்கதம், *v. noun.* Disappearing, becoming invisible, மறைந்திருக்கை. Wils. p. 38. ANTARGATA.

அந்தர்த்தானம், s. A secret place, மறைவிடம். 2. The privy parts, அந்தரங்கஸ்தானம். 3. Disappearance, concealment, மறைகை. Wils. p. 38. ANTARDD'HANA.

அந்தர்ப்புரம், s. A place for kings' wives, the queen's apartments in a palace, zenana, seraglio, women's apartments, அரசன்தேவியிருக்கை.

அந்தலை, s. [*prov.*] End, extremity, border, முடிவு. 2. Result, object, பேறு. 3. Juncture, சந்திப்பு. 4. Projection as of a roof, மேடு. இந்தக்காரியத்தினந்தலையெப்படியோ தெரியாது. I cannot tell where the affair will terminate.

அந்தளம், s. Coat of mail, கவசம். (சது.)

அந்தளி, s. A temple, தேவர்கோயில். (சது.)

*அந்தன், s. A blind man, குருடன். Wils. p. 39. AND'HA. 2. The planet Saturn, சனி.

அந்தாளிபாடை, s. A kind of tune, ஓர்பண். (திவாக.)

அந்தி, s. Evening, evening twilight as joining the day with the night, மாலைக்காலம். 2. (*p.*) The meeting of three ways or the place where three ways meet, முச்சந்தி தெருக்கூடுமிடம்.

அந்திகாவலன், s. The guardian deity of the evening twilight, supposed to walk the streets, &c.

அந்திக்காலம்—அந்திப்பொழுது, s. The evening.

அந்திசந்தி, s. Morning and evening. 2. Continuance, perpetuity.

அந்திநட்சத்திரம், s. The evening star.

அந்திமந்தாரம்—அந்திமந்தாரை, s. A flower plant that blossoms in the afternoon, அந்திமிற்புஷ்பிக்கும் பூண்டு, Polyanthes, *L.*

அந்திவண்ணன், s. Siva, he whose color is that of the evening clouds—red, சிவன்.

அந்தி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To unite, join, be connected, பொருந்த. (*p.*)

*அந்திகம், s. Nearness, proximity, அயல். Wils. p. 39. ANTIKA.

*அந்திகை. s, Night, இரா. 2. A woman, பெண். 3. A disease of the eye, ஓர்கண்ணோய். Wils. p. 39. AND'HIKA. 4. A fire place, அடுப்பு. Wils. p. 39. ANTIKA, or ANDIKA. 5. Blindness, குருடு.

அந்திமான், s. One of the seven of the second class of liberal kings, இடைவெழுவள்ளலிலொருவன்.

*அந்தியபம், s. The twenty-seventh or last of the lunar asterisms, இரேவதி. Wils. p. 39. ANTYAB'HA.

*அந்தியம், s. End, termination, முடிவு. Wils. p. 39. ANTYA. 2. Death, மரணம்.

அந்தியகருமம், s. Funeral ceremonies. See சாச்சடங்கு. Wils. p. 39. ANTYAKARMA.

அந்தியகாலம், s. The time of death.

அந்தியவர்ணம், s. The fourth caste, சூத்திரசாதி. Wils. p. 39. ANTYAVARNA.

அந்தியேஷ்டி, s. Funeral obsequies performed for the benefit of progenitors, உத்தரகிரியையிலொன்று; [ex இஷ்டி, sacrifice.] Wils. p. 39. ANTYESHTI.

அந்திக்கொடிச்சி, s. Sulphur, கெந்தகம்.

*அந்திரம், s. Intestine, குடல். Wils. p. 39. ANTRA.

அந்திரவசனம், s. Betel-nut, கொட்டைப்பாக்கு. (M. Dic.)

அந்தில். A particle of place, there, அவ்விடம்; as, சேயிழை அந்திற்கொழுநற்காணிய சென்றனள், the woman went there to see her husband. 2. An expletive, அசைச்சொல்; as, அந்திற்கச்சினன்கழலினன், one who wears a girdle and foot-rings. (p.)

அந்து, s. A small insect found in stored grain, நெற்பூச்சி. (c.)

*அந்துகம், s. A ring or chain for the ankle, சங்கிலி. 2. An elephant's chain fastened to the foot, யானைச்சங்கிலி. Wils. p. 39. ANDUKA.

அந்தேசம், s. [prov.] Extremity, great straits, அந்தரிப்பு.

அந்தோ, inter. Alas! an exclamation of surprise, pity or distress, அதிசயவிரக்கச்சொல். (p.)

அந்தோர், s. The நெல்லி tree. (p.)

அநலார், s. Those females, அப்பெண்கள். 2. The fair sex, females, அழகிய பெண்கள்; [ex அ, those, or அம், beauty, et நல்லார், females.] (p.)

*அந்நியம், s. A strange or foreign thing, &c. See அன்னியம். Wils. p. 40. ANYA.

*அப, prep. A particle—prefixed to Sanscrit words—implying inferiority, privation, separation, contrariety, &c. இருபசர்க்கை. Wils. p. 42. APA.

அபகரணம், s. Impropriety, ill-treatment, injury, தீமொழுக்கம். Wils. p. 42. APAKARANA.

அபகாரம், s. Ingratitude, ungrateful acts, நன்றியற்றசெய்கை. 2. Injury, offence, effrontery, insult, mischief, தீமை; opp. to உபகாரம். Wils. p. 42. APAKARA.

அபகாரி, s. An ingrate, நன்றிகெட்டவன். 2. A defrauder, cheat, எத்தன். 3. One who does evil to another, an evil-doer, துஷ்டன். Wils. p. 42. APAKARIN.

அபகீர்த்தி, s. Infamy, disgrace, dishonor, disrepute, களங்கம். Wils. p. 42. APAKIRTI.

அபகீர்த்திபெற்றவன். One who is dishonored.

அபக்கியாதி, s. Disrepute, disesteem. See அவக்கியாதி; opp. to பிரக்கியாதி.

அபக்கியாதியானகாரியம், s. A shameful, ignominious thing.

அபக்கிரோசம், s. Reviling, abusing. Wils. p. 42. APAKROSHA.

அபசகுனம், s. A bad omen, துர்க்குறி.

அபசத்தம், s. Ungrammatical language, வழூஉமொழி. 2. Vain talk, வீண்பேச்சு. 3. Inauspicious expression, அசபமொழி. Wils. p. 45. APASHABDA.

அபசயம்—அபசெயம், s. Defeat, vanquishment, தோல்வி.

அபசயப்பட, inf. To be defeated, தோற்க. See படு, v.

அபசரணம், s. Departure, egress, புறப்பாடு. Wils. p. 46. APASARANA.

அபசரிதம்—அபசரிதை, s. History of bad transactions, துர்ச்சரித்திரம். 2. Improper conduct, துன்னடை.

அபசவ்வியம், s. The right side, வலதுபக்கம். Wils. p. 46. APASAVYA.

அபசாரம், s. Incivility, disrespect, affront, irreverence, impropriety, உபசாரமின்மை. 2. Non-conformity to the Shasters, wrong conduct, misbehavior, குற்றம்; [ex சர, to move, go.] Wils. p. 42. APACHARA.

உபசாரஞ்செய்தவர்க்கபசாரம்பண்ணுகிறது. To return civility with incivility.

உமக்கென்னலென்ன அபசாரம்வந்தது? What injury have I done you? or what reproach have I brought upon you?

அபசாரி, s. An impolite man, one who deviates from the Shasters, a bad man, மரியாதையில்லான். Wils. p. 42. APACHARIN.

அபச்சாயை—அவச்சாயை, s. A shadowless being, as a deity or celestial being, சாயையற்றது. 2. An unlucky shadow, ஓர்மரணக்குறி. 3. Deduction according to the time of the year from the length of the person's shadow, cast by the sun or moon, in calculating the hour of the day or night, தள்ளுபடிகிழல்; [ex சாயா, shadow.] (p.) Wils. p. 42. APACHCHAYA.

அபதேசம், s. Evasion, prevarication, disguise by dress, &c., pretence, contrivance, தந்திரம்; [ex திச, to show.] (p.) Wils. p. 43. APADESHA.

அபமிருத்து, s. Sudden death, dying of some casualty, not of sickness or decay, அகாலமரணம். Wils. p. 43. APAMRITYU.

அபரூபம், s. Deformity, ugliness அவலட்சணம். (p.) Wils. p. 45. APARUPA. 2. Scarceness, அருமை. (c.)

அபவருக்கம், s. Final beatitude, deliverance from births, exemption from farther transmigration, முத்தி; [ex வரு, to leave.] Wils. p. 45. APAVARGA.

அபவாகம், s. Inference, deduction, அருத்தாபத்தி. Wils. p. 45. APAVAHA.

அபவாதம், s. Censure, abuse, reproach, பழிச்சொல். 2. Defamation, slander, scandal, பொய்ச்சாட்டு. 3. Contradiction, opposition, ஒவ்வாப்பேச்சு. Wils. p. 45. APAVADA. 4. Defence, (in law) replication, பிரதிவாதம்; [ex வாத, speech.] 5. Comprehending fully without mistake, உள்ளபடியறிகை.

புலி மனிதரை படித்துத்தின்கிறதென்று லோகாபவாதம். It is a common saying that tigers kill and eat people. (பஞ். 31.)

அபவாரணம், s. Concealment, disappearance, மறைவு. Wils. p. 45. APAVARANA.

அபாகரணம், s. Liquidation of a debt, கடனிறுக்கை. Wils. p. 46. APAKARANA.

அபாங்கம், s. The outer corner of the eye, கடைக்கண். Wils. p. 47. APANGA. 2. A side glance, கடைக்கண்பார்வை.

அபாதானம், s. The meaning of the fifth case denoting removal, ஐந்தாம்வேற்றுமையினெல்லைப்பொருள். Wils. p. 47. APADANA.

அபாமார்க்கம், s. The plant நாயுருவி, Achyranthes, L. Wils. p. 47. APAMARGA.

அபாயம், s. Loss, injury, நஷ்டம். 2. Disaster, mishap, calamity, dilemma, இடையூறு. Wils p. 47. APAYA. 3. An unforeseen danger, jeopardy, an unexpected evil, சடுதியாய்வருமாபத்து. 4. A trick, stratagem, scheme, mischievous device, சதியோசனை.

அபாயதந்திரம், s. Artifice, trick.

அபாயம்பண்ண, inf. To deceive, defraud, act treacherously.

அபாயோபாயம், s. Expedient, shift, what is done by hook or by crook, by any means direct or indirect.

அபானம், s. The anus, குதம். 2. One of the ten vital airs, தசவாயுவிலொன்று; as, அபானன்; [ex அந, to breathe.] Wils. p. 47. APANA.

அபானவாயு—அபானன், s. Wind from the anus.

*அபகரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To seize by fraud, dispossess, defraud, usurp, steal, வஞ்சனையாய்க்கவர. 2. To bereave, deprive of, plunder, கொள்ளையிட; [ex அபகாரம்.]

*அபக்குவம், s. [priv. அ.] Immatureness, unripeness, [vul.] over-ripeness, what is past the proper age, பக்குவமின்மை; [ex பக்குவம், ripeness.] Wils. p. 42. APAKVA.

அபக்குவர், s. Unfit, unworthy persons, persons ineligible for an advanced, தீட்சை.

*அபங்கம், s. [priv. அ.] Want of defect, perfectness, பழுதின்மை. 2. One of the thirty-two kinds of arsenic in its natural state, கௌரிபாஷாணம்.

அபட்டை, *s.* One of the lower poisonous fangs of a snake, பாம்பின் நச்சுப் பல்லிலொன்று.

*அபட்சம், *s.* [*priv.* அ.] Dislike, opposition, பட்சமின்மை. Wils. p. 42. APAKSHA.

அபதூறு—அவதூறு, *s.* Ill-report, slander, scandal, பழிமொழி. 2. Rapine, கொள்ளை.

*அபத்தம், *s.* Mistake in speech, error, nonsense, untruth, falsehood, பொய். Wils. p. 51. ABADD'HA.

அபத்தம், *s.* [*prov.*] Disaster, accident, calamity, மோசம்.

*அபத்தி, *s.* [*priv.* அ.] Impiety, பத்தியின்மை. Wils. p. 52. AB'HAKTI.

*அபத்தியம், *s.* [*priv.* அ.] Improper, unfit or unsuitable diet or regimen in medicine, deviation from prescribed diet, பத்தியத்தவறு. 2. Transgression of abstinence from venery as a medicinal prescription, இச்சாபத்தியம்மீறுகை. Wils. p. 43. APATHYA.

*அபநயனம், *s.* Removing, destroying; liquidating a debt, கடனிறுக்கை. Wils. p. 43. APANAYANA.

*அபநோதம், *s.* Taking away, removing, நீக்குகை. Wils. p. 43. APANODA.

*அபமம், *s.* Declination, in Astronomy, கிழ்க்கதி. Wils. p. 43. APAMA.

*அபயம், *s.* [*priv.* அ.] Fearlessness, intrepidity, அச்சமின்மை. Wils. p. 52. AB'HAYA. 2. An appeal, ஓலம். 3. (*fig.*) A place of refuge, shelter, அடைக்கலம். (*p.*)

அபயமென்றடைந்தோர். Those who have applied for protection.

அபயகரம்—அபயாஸ்தம்—அபயாத்தம், *s.* The right hand of a deity, idol or great person raised in token of dispelling fear and in assurance of protection, பயந்திரவமைக்குங்கை.

அபயங்கொடுக்க—அபயஸ்தங்கொடுக்க, *inf.* To dispel fear, cheer, encourage, dispel fear by raising the hand or otherwise, to give assurance of protection. See கொடு, *v.*

அபயமிட, *inf.* To call for succor, cry for protection, appeal as in a suit. See இடு.

அபயர், *s.* Warriors, veterans, போர்வீரர். (*p.*)

அபயவாக்கு, *s.* Assurance (given) of protection, encouragement, அஞ்சாதேயெனுஞ்சொல்.

அபயன், *s.* One who removes fear, அச்சமறுப்போன். 2. The Supreme Being, கடவுள். 3. A warrior, hero, வீரன். 4. A king of the Solar dynasty, சோழன். (*p.*)

அபரஞ்சி, *s.* (*Tel.* అపరంజి.) Fine gold, புடமிட்டபொன்.

*அபரம் *s.* The end, after part, பிற்பக்கம். 2. The back, முதுகு. 3. The hind quarter, or hind leg of an elephant, யானைப்பின்கால். 4. Variance, discord, பிணக்கு. 5. The west, மேற்கு. Wils. p. 44. APARA. 6. Hell, நரகம். 7. The stern of a ship, கப்பலின்பிற்பக்கம். 8. Coat of mail, கவசம். (*p.*)

அபரசன், *s.* A younger brother, பின்னோன்; [*ex* ஜ, born,] also written, அவரசன், which see.

அபரஞானம், *s.* Limited and superficial knowledge obtained by the senses, &c., and subject to interruption, oblivion, &c., பொறிகளாலறியுமறிவு.

அபரநாதம், *s.* One of the five powers or தத்துவம் belonging to Siva. (உப. 157.)

அபரபக்ஷம்—அபரபக்கம்—அபரபட்சம், *s.* The second fortnight of the moon, the moon in its decrease, தேய்பிறை.

அபரமுத்தி, *s.* An inferior heaven, பதமுத்தி.

அபரராத்திரம், *s.* The last watch, கடைச்சாமம். Wils. p. 44. APARARATRA.

அபரவயசு, *s.* Advanced age. (தி. 229.)

அபரவாக்கியம், *s.* A resulting equation, or correction following a calculation. 2. [*in Hindu Astronomy.*] The equation of a given tabular number or argument answering to the preceding one.

அபரவிந்து, *s.* One of the five powers or தத்துவம் of Siva. (உப. 157-158, ஞான வா. 33.)

அபராசிதன், *s.* A name of Siva and Vishnu, (*lit.*) the unsurpassed. Wils. p. 44. APARAJITA.

அபராணம், *s.* The afternoon, the fourth part of the day or from twelve minutes past one till thirty-six minutes past three, பின்னேரம். Wils. p. 44. APARAHNA.

*அபராதம், *s.* Offence, transgression, fault, guilt, insult, affront, குற்றம். Wils. p. 44. APARAD'HA. 2. Amercement, penalty, mulct, தெண்டம்; [*ex* அப, *et* ராத, to accomplish.] (சத். 38.)

என்னபராதத்தைப்பொறுத்திரட்சிப்பாய். Pardon my fault and save me.

அபராதஞ்செய்ய, *inf.* To transgress, offend. See செய், *v.*

அபராதி, *s.* A faulty or guilty person, an offender, குற்றவாளி. (பஞ். 13.)

*அபரிச்சதம், *s.* [*priv.* அ.] Nudity, nakedness, திருவாணம்; [*ex* பரிச்சத, covering.] Wils. p. 44. APARICHCHHADA.

*அபரிமாணம், *s.* [*priv.* அ.] Immeasureableness, immensity, அளவின்மை. Wils. p. 44. APARIMANA.

*அபரிமிதம், *s.* [*priv.* அ.] Unlimitedness, immensity, அளவின்மை. Wils. p. 44. APARIMITA. 2. (சது.) Greatness, பெருமை.

*அபரியந்தம், *s.* [*priv.* அ.] Immensity, மட்டில்லாமை.

*அபரோட்சம், *s.* [*priv.* அ.] Union with the deity, a state of proximity to liberation from births and of absorption in the deity, கடவுளோத்தரிசிக்கை. One of the seven அவத்தை.

அபரோட்சஞானம், *s.* Consciousness, or knowledge of identity with the deity.

*அபலம், *s.* [*priv.* அ.] Weakness, want of strength, பலவீனம். Wils. p. 51. ABALA. 2. Unprofitableness, uselessness, unfruitfulness, vainness, unproductiveness, பயனின்மை. Wils. p. 51. APHALA.

அபலச்சா—அபலமானசா, *s.* An ignominious death.

*அபவித்திரம், *s.* [*priv.* அ.] Impurity, uncleanness, புனிதமின்மை; [*ex* பவித்திரம், purity.] Wils. p. 45. APAVITRA.

*அபாகம், *s.* [*priv.* அ.] Immatureness, rawness, unripeness, பாகமின்மை. Wils. p. 46. APAKA.

*அபாக்கியம், *s.* [*priv.* அ.] Unfortunateness, wretchedness, நிர்ப்பாக்கியம். Wils. p. 52. AB'HAGYA.

அபாக்கியன், *s.* An unhappy man.

*அபாசம், *s.* [*priv.* அ.] Want of desire, விருப்பின்மை.

அபாசம், *s.* Distortion, as ஆபாசம்.

*அபாஷணம்—அபாடணம், *s.* [*priv.* அ.] Silence, மௌனம். Wils. p. 52. AB'HASHANA.

*அபாண்டம், *s.* A false accusation or report, இடுநிந்தை.

என்மேலேயபாண்டம்போட்டான். He charged me falsely with a crime.

*அபாத்திரம், *s.* [*priv.* அ.] Unfitness, unworthiness, பாத்திரமின்மை. Wils. p. 47. APATRA.

*அபாரணை, *s.* [*priv.* அ.] Fasting, omitting a meal after a partial fast, பாரணைமுண்ணுமை.

*அபாரம், *s.* Boundlessness, immensity, எல்லைப்படாதது. Wils. p. 47. APARA. 2. The supreme Being, கடவுள்.

*அபாவம், *s.* [*priv.* அ.] Non-existence, absence of a quality or thing, nonentity, இன்மை. 2. [*in Rhetoric and Logic.*] Negation, absence or destitution, நியாயநூலினோரளவை. 3. Annihilation, நிருமூலம். Wils. p. 52. AB'HAVA. [*ex* பாவம், being.]

சம்சர்காபாவம். Universal negation.

அன்னியோன்னியாபாவமுண்டு. There is mutual negation.

அபாவஅளவை—அபாவப்பிரமாணம், *s.* One of the eight laws of evidence of non-existence, the certainty of the non-existence of a thing, இல்லாததற்குவமை.

*அபி. A Sanscrit particle used only in combination, implying superiority, &c., ஒருபசர்க்கை. Wils. p. 52. AB'HI.

அபிதாபம், *s.* Great heat, மிகுவெப்பம். 2. Agitation, affliction, கலக்கம். Wils. p. 53. AB'HITAPA.

*அபிகாதம், *s.* Striking, wounding, அடித்தல். 2. Pain, torture, வருத்தம். Wils. p. 53. AB'HIG'HATA.

*அபிகாயம், *s.* A pulmonary complaint, phthisic, ஓர்காசம். 2. [*prov.*] Irascibility, irritability arising from a disease, impatience, malice, envious or revengeful feelings leading to sudden retaliation, அழற்சி; [*ex* அபி, *et* காய, phthisic.]

*அபிகாரம், *s.* Robbing, கொள்ளையிடுகை. 2. Attack, வருத்துகை. 3. Taking up arms, படையெழுச்சி. Wils. p. 56. AB'HIHARA.

*அபிசரன், *s.* A companion, follower, தோழன். Wils. p. 56. AB'HISARA.

*அபிசாரம், s. Magic for a malevolent purpose, practised with sacrificial fire, spells, diagrams, &c., supposed to produce mental aberration, love, hatred, loss of mental powers, paralysis and death, மந்திரவித்தை. Wils. p. 53. AB'HICHARA.

*அபிசாரி—அபிசாரிகை, s. A courtezan, வேசி. 2. An unchaste woman, வியபிசாரி. Wils. p. 56. AB'HISARIKA.

*அபிசித்து, s. An expunged nakshatra, sometimes introduced after the 21st, for astrological purposes, thus increasing the number to 28, இரொட்டெட்சத்திரம். 2. One of the eight muhurttas or hours, ஓர்முகூர்த்தம். Wils. p. 53. AB'HIJIT.

*அபிஷங்கம்—அபிடங்கம், s. curse, oath, சபம். Wils. p. 56. AB'HISHANGA.

*அபிஷேகம்—அபிடேகம், s. Sacred or royal bathing, or anointing as an inaugurating ceremony a king, a guru, &c.; the daily bathing of an idol with Ganges' water, oil, ghee, milk, திருமுழுக்கு. Wils. p. 56. AB'HISHEKA.

அபிஷேகக்கூட்டு, s. Macerated spices, &c.. for anointing an idol.

அபிஷேகம்பண்ண, inf. To anoint, pour water, milk, butter, honey, fruit, &c., upon an idol.

கனகாபிஷேகம், s. The pouring of gold.

பட்டாபிஷேகம், s. Unction, the act of initiating into office.

அன்னாபிஷேகம், s. The pouring of boiled rice.

*அபிட்டம், s. Quicksilver, இரதம்.

*அபிதானம்—அபிதேயம், s. Name, appellation, பெயர். Wils. p. 53. AB'HID'HANA and AB'HID'HEYA.

*அபிநயம், s. Indication of passion, purpose, &c., by gesture in dramatic personification, acting, gesture, கைமெய்காட்டுகை. Wils. p. 53. AB'HINAYA. 2. A treatise on gesticulation, அபிநயநூல்.

அபிநயர், s. Actors, dancers, கூத்தர்.

அபிநயிக்க, inf. To express sentiments, as anger, sorrow, joy, &c., by gesture; to assume an appearance, feign, அபிநயஞ்செய்ய. (பஞ். 54.)

*அபிநவம், s. Novelty, an extraordinary or wonderful thing, புதிது. Wils. p. 53. AB'HINAVA.

*அபிநிவேசம், s. Engagement in a particular business or department, தொழிலிற்பிரவேசிக்கை. Wils. 54. AB'HINIVESHA.

*அபிப்பிராயம், s. Object, internal design, real purpose, intention or motive, உட்கருத்து. 2. The main object, design or scope of a writer, நோக்கம். 3. The real or hidden meaning, மறைபொருள். (உப. 389.) 4. Opinion, judgment, advice, counsel, எண்ணம். Wils. p. 54. AB'HIPRAYA.

இந்தவார்த்தைக்கபிப்பிராயமென்ன. To what does this word allude.

உன் மனதிலிருக்கிறவபிப்பிராயத்தைச் சொல்லு. Speak from the heart, disclose your thoughts.

*அபிமதம், s. Consent, pleasure, liking, wish, assent, சம்மதம்; [ex அபி, consent, et மத, thought.] Wils. p. 54. AB'HIMATA.

*அபிமந்திரணம், s. Conjuration, enchantment, மந்திரவித்தை. 2. Consecration, பிரதிஷ்டை. Wils. p. 54. AB'HIMANTRANA.

அபிமந்திரிக்க, inf. To conjure, enchant by means of incantation with sacred ashes, &c., held by a magician in his hand and afterwards thrown on the person to be enchanted and into his mouth; applied also to cure a disease, or to effect some specific object; to repeat incantations with the reception or administration of medicine, மந்திரவித்தை செய்ய. 2. To consecrate, பிரதிஷ்டை பண்ண.

*அபிமன்—அபிமன்னு, s. Son of Arjuna, அருச்சுனன்மகன். Wils. p. 54. AB'HIMANYU.

*அபிமானம், s. High esteem, special estimation, சன்மானம். 2. Care, love, affection, நேசம். 3. Regard, respect, honor, (to others) கனம். 4. The sense or feeling of honor which leads one to abstain from mean or unworthy actions, magnanimity, greatness of mind, intrinsic dignity, nobility of soul, உயர்குணம். 5. Glorying in, களிப்பு. (உப. 294, 15.) Wils. p. 54. AB'HIMANA.

அபிமானக்குறைச்சல்பண்ணல், v. noun. Dishonoring, disgracing a person.

அபிமானபுத்திரன், s. A son adopted after the proper age, or otherwise disqualified.

அபிமானமுள்ள சிநேகிதன், s. A familiar friend, one dearly beloved.

அபிமானி, s. A very honorable person, கனவான். (உப. 59.)

அபிமானிக்க, inf. To honor, esteem highly, மெச்ச. 2. To regard, love, respect, கனம்பண்ண. 3. To prize, value, appreciate, take great care of, glory in, boast of, மதிக்க. (உப. 124. சத. 55.)

*அபிமுகம், s. Presence, nearness, நேர்முகம். Wils. p. 55. AB'HIMUKHA.

ஒருவனையபிமுகமாயழைத்து. Calling one into one's presence.

*அபியிதகருத்தன், s. [in grammar.] The agent or nominative to the verb, எழுவாய்க்கருத்தன்.

*அபியோகம், s. Challenging to fight, போருக்கழைக்கை. 2. War, battle, போர். 3. Prohibition, prevention, தடை; [ex அபி, before.] Wils. p. 55. AB'HIYOGA.

அபிரங்கி, s. The கருநெல்லி tree.

*அபிரட்சை, s. Universal protection, benevolence, சர்வரட்சணம். Wils. p. 55. AB'HIRAKSHA.

*அபிரதி, s. Pleasure, இன்பம். 2. Practice, occupation, தொழில். Wils. p. 55. AB'HIRATI.

*அபிராமம், s. Beauty, அழகு; [ex அபி, before, et ரம், to sport.] Wils. p. 55. AB'HIRAMA.

அபிராமி, s. One of the seven beautiful females, சத்தமாதரிலொருத்தி. 2. Parvati, பார்வதி. 3. Saraswati, சரச்சுவதி. (p.)

*அபிருசி, s. Ambition, desire of fame, கீர்த்திப்பிரியம்; [ex அபி, before, et ருசி, light.] Wils. p. 55. AB'HIRUCHI.

*அபிரூபன், s. A learned man, அறிவுடையோன். 2. Name of Kama, Siva, Vishnu and the Moon, காமன், சிவன், விட்டுணு, சந்திரனிவர்கள்பேர்; [ex அபி, before, et ரூப, to have form.] Wils. p. 55. AB'HIRUPA.

*அபிலாசம், s. Desire, விருப்பம்; [ex அபி, before, et லஷ or லச, to like.] Wils. p. 55. AB'HILASHA, or AB'HILASA.

*அபிவியத்தம், s. Clearness, distinctness, தெளிவு. 2. That which is revealed, வெளிப்படை; [ex அபி, to, et வியக்த, plain.] Wils. p. 55. AB'HIVYAKTA.

*அபிவியாத்தி, s. Omnipresence, சருவவியாபகம்; [ex அபி, everywhere, et வியாப்தி, spreading.] Wils. p. 55. AB'HIVYAPTI.

*அபிவிருத்தி, s. Increase, augmentation, continued increase, growth, accession, மிகப்பெருகுகை. 2. Advancement, கதிப்பு.

அபினி, s. (Hin.) Opium, ஓர்மருந்து.

அபின், s. Opium, ஓர்மருந்து, Papaver Somniferum.

*அபின்னம், s. [priv. அ.] Sameness, identity, unity, homogeneousness, as of heat in the sun or in fire, ஒற்றுமை. Wils. p. 54. AB'HINNA.

அபின்னசத்தி, s. Visible nature, or maya as identified with the deity, மாயை.

*அபீடனம், s. [priv. அ.] Kindness, gentleness, சாந்தம். Wils. p. 48. APEEDANA.

*அபீஷ்டம்—அபீட்டம், s. Great desire, wish, love, that which is beloved, மிகவிருப்பம்; [ex அபி, superiority.] Wils. p. 57. AB'HEESHTA.

மனோபீஷ்டம், s. Great desire of the mind.

*அபீரன், s. [ex அபி.] A cowherd, இடையன். Wils. p. 57. AB'HEERA.

*அபூதம் s. [priv. அ, et பூத, been.] Non-existence, absence, இன்மை. Wils. p. 57. AB'HUTA.

அபூதவுவமை, s. A rhetorical figure, இல்பொருளுவமம்.

*அபூபம், s. [priv. அ.] Cakes, pastry, அப்பவருக்கம். Wils. p. 48. APUPA.

*அபூருவம்—அபூர்வம், s. [local and improp. அபுருபம்.] [priv. அ.] Rareness, unfrequency, an extraordinary or wonderful act or thing, அருமை. Wils. p. 48. APURVA.

*அபேட்சி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To desire earnestly, மிகவிரும்ப; [ex அபேட்சை.]

அபேட்சிப்பு, v. noun. Desiring.

*அபேட்சை, s. Desire, hope, expectation, desire and love united, anxious desire, eagerness, ஆசை. Wils. p. 48. APEKSHA.

*அபேதம், s. [priv. அ.] That which is not discordant, or different, &c., union, concord, similarity, பேதமின்மை. Wils. p. 57. AB'HEDA.

*அபேனம், s. Opium, அபினி. Wils. p. 51. Aphena.

*அப்தசதம், s. A century, நூறாண்டு; [ex அப்தம், an era, et சதம், 100.] Wils. p. 51. Abdashata.

*அப்தோரியாமம், s. One of the twenty-one யாகம், யாகமிருபத்தொன்றிலொன்று.

அப்ப—அப்பப்ப. An interjection of admiration, from which, by adding அடா, is formed அப்படா; expressing also admiration, but more frequently lamentation; ah, alas! அதிசயச்சொல்.

அப்படி, adv. Thus, so. See படி. (c.)

அப்பட்டா, s. The வட்டத்திருப்பி plant, Cissampelos, L.

அப்பணை, s. [prov.] License, leave, உத்தரவு. 2. Security, bail, பிணை. 3. Prop, support, ஆதாரம்.

அப்பத்தாள், s. [prov.] Elder sister, அக்காள்.

அப்பம், s. Rice cakes, bread, pastry, [Anglice.] hoppah, சிற்றுண்டி. 2. The புட்டுத்திருப்பி plant, Cissampelos, L.

அப்பஞ்சுட, inf. To bake cakes, bread, &c. See சுடு.

அப்பவருக்கம், s. Various kinds of cakes, pastry, &c.

அப்பர், s. One of the three celebrated votaries of Siva, who composed a portion of the poem தேவாரம், சிவனடியார் மூவரிலொருவர். 2. Fathers, தந்தையர்.

அப்பளம், s. A kind of thin cake, அப்பவருக்கத்தொன்று. (c.)

உழுந்தப்பளம்-சோற்றப்பளம், s. Thin cakes made the first, of உழுந்து, the second, of rice.

அப்பளாகாரம், s. One of the twenty-five bodies possessing sharpness with saltness, உறைப்புமுவர்ப்புமுள்ள ஓர்வஸ்து.

அப்பறுத்தூணி, s. An unfailing quiver for arrows, அம்புக்கூடு; [ex அம்பு, arrow, the ம் changed to ப், et அறு, negative of அறு, to cease—unceasing, unfailing, et தூணி, arrow case.]

அப்பன், s. Father, தகப்பன்.

பெரியப்பன், s. Father's elder brother. (c.)

சிற்றப்பன், s. Father's younger brother. (c.)

அப்பா, s. Vocative of அப்பன். 2. A word used by parents towards their young children; sometimes to others in calling, especially inferiors; and commonly a word of respect to aged men. 3. An exclamation of surprise, grief or pain. (c.)

அப்பாட்டன், s. [prov.] A great grand-father, முப்பாட்டன்.

அப்பால், adv. Further, beyond, on that side, furthermore, moreover, after that, afterwards, மேலும்; [ex அ, et பால்.]

அப்பாவி, s. A harmless, artless, undesigning person, கபடமில்லாள். 2. A simpleton, பேதை. (c.)

அப்பி, s. [prov.] Elder sister, அக்காள்.

*அப்பியங்கம்—அப்பியங்கனம், s. Anointing the head and body preparatory to bathing, முழுக எண்ணெய்பூசுகை. Wils. p. 57. Ab'hyanga.

அப்பியங்கஸ்நானம், s. Bathing after anointing with oil.

*அப்பியஞ்சனம், s. Smearing the body with oil, எண்ணெய்பூசுகை. 2. Applying collyrium to the eye-lashes, மைதீட்டுகை. Wils. p. 57. Ab'hyanjana.

*அப்பியந்தம், s. Procrastination, postponement, delay, தாமதம்.

*அப்பியாகதன், s. Visitor, guest, அதிதி. Wils. p. 58. Ab'hyagata.

*அப்பியாசம், s. Exercise, practice, application, custom, பயிற்சி. Wils. p. 58. Ab'hyasa.

எனக்கப்பியாசமில்லை. I have no practice, no experience.

அப்பியாசமாய்ப்போதல், v. noun. Becoming acquainted, accustomed, habituated.

அப்பியாசி, s. A practiser, one who accustoms himself to any exercise, பயிற்சியுள்ளோன்.

அப்பியாசிக்க, inf. To practise, exercise one's self, பழக. (c.)

*அப்பிரகம், s. Mica or talc, ஓர்வகைவேகக்கல். Wils. p. 59. Ab'hraka. Of this are five kinds:—1. பொன்னப்பிரகம், gold-colored mica. 2. வெள்ளியப்பிரகம், silver-colored mica. 3. தேனப்பிரகம், honey-colored mica. 4. கிருஷ்ணப்பிரகம், black-colored mica. 5. கெந்தகப்பிரகம், yellow-colored mica.

அப்பிரகசிந்தூரம், s. Red oxide of talc.

அப்பிரகத்தகடு, s. A plate or lamina of mica.

அப்பிரகநவநீதம், s. Mica made into an ointment.

அப்பிரகபற்பம், s. Oxide of talc.

அப்பிரகபாஷாணம், s. One of the thirty-two kinds of arsenic in its natural state.

*அப்பிரகாசம், s. [priv. அ.] Darkness, absence of light, இருள். Wils. p. 49. Aprakasha.

*அப்பிரசித்தம், s. [priv. அ.] Being uncelebrated or unpublished, பிரசித்தமின்மை. Wils. p. 50. Aprasidd'ha.

*அப்பிரதக்ஷிணம்—அப்பிரதட்சிணம், s. [priv. அ.] Walking around an object of worship, or a temple, keeping it on the left side, இடசாரியாய்ச்சுற்றுகை; opp. to பிரதக்ஷிணம்.

*அப்பிரதானம், s. [priv. அ.] That which is unimportant, a non-essential, முக்கியமற்றது. Wils. p. 50. Aprad'hana.

அப்பிரதானி, s. An insignificant or unimportant person. (பஞ்ச.)

*அப்பிரமாணம் s. [priv. அ.] That which is the cause or origin of true wisdom, i. e. God, கடவுள்.

*அப்பிரமாணிக்கம்—அப்பிராமாணிக்கம், s. [priv. அ.] Unfaithfulness, பிரமாணமின்மை.

அப்பிரமாணிக்கன், s. A liar.

*அப்பிரமு—அப்பிரமை, s. Female of the male elephant supporting the east, கிழக்குத்திசையானைக்குப்பெண்யானை. Wils. p. 59. Ab'hramu.

*அப்பிரமேயம், s. [priv. அ.] Unboundedness, immeasurableness, எல்லையற்றது. Wils. p. 50. Aprameya. 2. A number, a hundred quintillions, தசமகாபூரி; [ex பிரமேயம், measurableness.]

அப்பிரமேயன், s. One unlimited, the Deity, கடவுள்.

*அப்பிரம், s. A cloud, மேகம். Wils. p. 59. Ab'hra.

*அப்பிரயோசனம், s. [priv. அ.] Uselessness, unprofitableness, fruitlessness, பயனின்மை.

*அப்பிரயோசிகம், s. [priv. அ.] Any thing useless, பிரயோசனமற்றது.

*அப்பிராகிருதம், s. [priv. அ.] Uncommonness, superiority, newness, விசேஷம். Wils. p. 50. Aprakruta.

அப்பிராகிருதசரீரம், s. Superior or immortal body.

*அப்பிராணி, s. [priv. அ.] A poor, pitiable person, ஏழை. 2. A harmless, undesigning person, கபடமில்லாள். (c.)

அப்பு, s. A tree, பாதிரிமரம், Bignonia, L. 2. An arrow, அம்பு. 3. (Tel. అప్పు.) A debt, கடன். (p.)

*அப்பு, s. Water, நீர். 2. The sea, கடல். (p.) Wils. p. 42. Ap.

அப்புவின்குணம், s. The property of water, நீரின்றன்மை.

அப்பு, கிறேன், அப்பினேன், வேன், அப்ப, v. a. To stick or clap on with the hand, as sandal paste, plaster, &c., or with a trowel, as mortar against a wall, சாத்த. 2. To snatch at, as a dog, கௌவ. 3. To apply in a patting manner, as, a lotion, a fomentation, ஒற்ற. 4. [prov.] To beat gently with the hands, as in washing muslin, குமை.

நாய் அப்பிக்கொண்டுபோய்விட்டது. The dog snatched and carried it away.

அப்பல், v. noun. Beating, clapping. 2. Plastering with mortar, &c.

அப்புது, s. The sound which the elephant-keeper makes to excite the animal, யானையைப்பாகனதட்டுமோசை. (சது.)

அப்புறம், s. [used adverbially.] Further, beyond, on that side, furthermore, henceforth, afterward, after that. See புறம்.

அப்புறத்துக்கப்புறம். Let the future take care of itself.

அப்புறப்பட, inf. To become more distant.

அப்புருத்தூணி, s. One of the thirty-two kinds of arsenic in its natural state, சரகாண்டபாஷாணம்.

அப்பை, s. A plant, அப்பைக்கோவை, Bryonia Rostrata, L. 2. A tree, கொன்றை, Cassia, L.

அப்பொழுது—அப்போது, [vul.] அப்போ, [poetic.] அப்போழ்து, s. [used adverbially.] Then, at that time, அக்காலத்தில். 2. Then, in that case, in such circumstances, or under such condition, அப்படியிருக்க; [ex அ, et பொழுது.]

அப்போதைக்கப்போது. On proper occasions, forthwith, henceforth, from time to time.

*அமங்கலம், s. [priv. அ.] Inauspiciousness, மங்கலமின்மை. Wils. p. 59. AMANGALA.

அமங்கலி—அமங்கலை, s. A widow, கைமை; opp. to சுமங்கலை, a married woman.

அமசடக்கம், s. [prov.] Cover, concealment, மறைப்பு.

அமசடக்கமாய்ச்செய்ய, inf. To act with secrecy.

அமசடக்கம்பண்ண, inf. To keep under cover, wrap up. 2. To preserve, protect. 3. To do a thing without noise, quietly.

அமச்சன், s. A king's minister, மந்திரி. 2. The planet Jupiter, வியாழம். (p.)

அமச்சு, s. The office of a minister, மந்திரித்தொழில். 2. A minister, மந்திரி. (p.)

அமச்சர், s. King's ministers, statesmen, senators, officers of state, மந்திரிகள்.

அமச்சியல், s. Office of a minister, மந்திரித்துவம். 2. A cabinet, council, மந்திராலோசனை. 3. A chapter on the duties of a minister, குறளின்பொருட்பாலுளோரியல்.

அமஞ்சி—அமிஞ்சி, s. (For.) Compelled service, கூலிகொடாமல் வாங்கும்வேலை. (c.)

அமஞ்சியாள். s. A pressed workman.

அமடு, s. Inveigling, entrapping, மடிப்பு. (c.)

அமடுபண்ண, inf. To inveigle, take one in.

அமட்டு, கிறேன், அமட்டினேன், வேன், அமட்ட, v. a. To reprimand, upbraid, அதட்ட. 2. To inveigle, entrap, ensnare, சிக்குப்படுத்த. 3. To hector, bully, overpower by sophistry, உறுக்க. 4. To move tiles, &c., புரட்ட. 5. To overcome one, as sleep, மேற்கொள்ள. 6. v. n. To wabble, turn aside, be unsteady as a bench with uneven legs, புரள.

என்னைத்தூக்கமமட்டுகிறது. Sleep overcomes me.

அமட்டு—அமட்டுகை, v. noun. Threatening, threat, menace.

அமணம், s. Twenty thousand betelnuts, இருபதினாயிரம்பாக்கு. See அவணம்.—Note. In poetry it is used for அம்மணம், nakedness.

பதினாயிரங்கொட்டைப்பாக்காயிருந்தனள் பைந்தொடியே. In this the number பதினாயிரங்கொட்டைப்பாக்கு is the same as அரையமணம், half naked, and so the verse is ambiguous and may mean, she was naked.

அமண், s. The Jaina religion, சமண்மதம். (p.)

அமணர், s. The Jainas as a sect. See சமணர்.

*அமண்டம், s. The castor-plant, ஆமணக்கு. Wils. p. 59. AMANDA.

*அமதி, s. [priv. அ.] Want of knowledge, ignorance, மதியின்மை. Wils. p. 59. AMATI.

அமரசிலேக்கெந்தகம், s. One of the thirty-two kinds of prepared arsenic, ஓர்வகைக்கந்தகம்.

*அமரம், s. A Sanscrit vocabulary, the Amara Kosha, ஓர்நிகண்டு.

அமரம், s. A disease of the eye, கண்ணோய். 2. The revenue of a village granted by the king to any one, சுவந்திரிகம். 3. The command of one thousand footmen, ஆயிரங்காலாள்களை யாளுகை. 4. [prop. அபரம்.] The stern or hinder part of a vessel, தோணியின்பிற்பக்கம்.

அமரக்காரன், s. The commander of one thousand infantry.

*அமரர், s. [priv. அ.] The Devas, inhabitants of Swarga, foes of the Asuras, the immortals, celestials, வானோர்; [ex மரர், those who die.] Wils. p. 60. AMARA.

அமரமாதர்—அமரர்மாதர், s. Goddesses, the females of the Devas, தெய்வப்பெண்கள்.

அமரர்பதி, s. God, கடவுள். 2. Indra, இந்திரன். 3. World of the gods, தேவலோகம்.

அமராவதி, s. The capital of Indra, இந்திரன்நகரம். Wils. p. 60. AMARAVATI.

அமராவதியோன், s. Indra, தேவேந்திரன்.

அமரேசன், s. Indra, இந்திரன். Wils. p. 60. AMARESHA.

*அமரசயம்—அமராசயம், s. [in physiology.] One of the ஆசயம் of the body, the stomach, அசனசயம்.

அமரி, s. Ambrosia or nectar, அமிழ்து. 2. Urine, சிறுநீர். 3. The goddess Durga, துர்க்கை. 4. Poison, விஷம். (p.)

அமரியுப்பு, s. Urine salt, the salt taken from urine, சிறுநீரிலிருந்தெடுக்குமுப்பு, one of the five kinds of உப்பு.

அமரிக்கை, s. Quietness, stillness, tranquillity, calmness, அமைவு; [ex அமர், to be quiet.] (c.)

அமரியம், s. A tree, the குருந்து, Trichilia, L. 2. The செண்பகப்பூ, flower of the Michelia, L.

அமர், s. War, fighting, strife, with all the din of war, போர். 2. Wall around a fort, மதில். 3. Rage, fury, crisis of a disease, the violence or paroxysm of a fever, delirium, உக்கிரம். (p.)

அமரர், s. Foes, enemies, பகைவர். (p.)

அமராட—அமரியற்ற, inf. To fight, war. See ஆடு and இயற்று.

அமராபரணன், s. An undaunted hero, one who considers his wounds received in close action as ornaments. (நன்னூல்.)

அமர்க்களம், s. [impr. அமக்களம்.] Field of battle, போர்க்களம் 2. A confused noise, stir, bustle, tumult, agitation, conviviality, ஆரவாரம்.

விருந்தமர்க்களம், s. Stir and bustle, as talking, cooking, going out and coming in.

வெள்ளாண்மையமர்க்களம், s. Stir and bustle of harvest.

அமர்—அமரு, கிறேன், அமர்ந்தேன், வேன், அமர, v. n. To be or become still, tranquil, settled, quiet, hushed, calm, serene; to become pacified, appeased, obedient, submissive, அமைய. 2. To rest, repose, enjoy repose, இளைப்பாற. 3. To settle, sink, be deposited as a sediment; to subside, become close and hard as sand by rain, அடங்க. 4. To agree, பொருந்த. 5. To become compressed, condensed, படிய. 6. To abide, dwell, remain, இருக்க. (திருவிளை.) 7. To rejoice, be placid, cheerful, களிக்க. 8. To abound, be abundant, பொலிய. 9. To be magnanimous, பெருமையாக. 10. To wish, desire, விரும்ப. (குறள்.) 11. [vul.] To be obtained, வாய்க்க. (p.)—Note. This verb forms a past. part. அமரிய, as well as the usual, அமர்ந்த; as, அமரியசேனை, the army which fought.

காற்றமர்ந்துவிட்டது. The wind has subsided.

புழுதியமர்ந்தது. The dust is settled.

குலத்துக்கமர்ந்ததொழில். Office agreeing with his rank.

அகனமர்ந்து. Rejoicing in heart.

முகனமர்ந்தீதல். Giving with a shining face.

அவனுக்குச்சேவகமமர்ந்தது. He has obtained service.

அமரார், s. Foes, enemies, the insubordinate, பகைவர். (p.)

அமர்த்து, கிறேன், அமர்த்தினேன், வேன், அமர்த்த, v. a. To make quiet, tranquillize, settle, make steady, quell, mitigate, appease, &c., அடக்க. 2. To press down, put or keep down, (a person or thing inclined to rise,) put or hold down, suppress or curb pride, anger, &c., repress, restrain, அமரச்செய்ய. (c.) 3. To prepare, எத்தனம்பண்ண. 4. To engage, employ, ஏற்படுத்த. 5. v. n. To engage in battle, பொர. (p.)

பூசைக்குவேண்டியவைகளையமர்த்தினான். He has prepared things necessary for the puja.

பந்தியமர்த்த, inf. To seat a company in rows at a feast.

*அமலம், s. [priv. அ.] Purity, beauty, புனிதம். Wils. p. 60. AMALA. 2. Spotlessness, immaculateness, அழுக்கின்மை.

அமலன், s. The Supreme Being, கடவுள். 2. A pure person, மலமிலி. 3. Siva, சிவன். 4. Argha, அருகன். 5. Vishnu, விட்டுணு.

*அமலை, s. The goddess Lakshmi, இலக்குமி. Wils. p. 60. AMALA. 2. Parvati, உமையாள்.

அமலை, s. Noise, din, sound, ஒலி. 2. Boiled rice, சோறு. 3. Abundance, மிகுதி.

அமல்—அமறல், s. Abundance, மிகுதி. (திவாகரம்.) (p.)

அமளி, s. Tumult, uproar, bustle, stir, press of business, ஆரவாரம். (c.) 2. Bed, mattress, &c., for sleeping on, மெத்தை. (p.) 3. Sleeping room, பள்ளியறை. 4. [prov.] Abundance, fruitfulness, மிகுதி.

அவன் வீட்டிலேயின்றைக்கு மிகவுமமளியாயிருப்பதேன். What is the bustle in his house to-day?

பனம்பழமிப்போதுநல்லவமளியாயிருக்கும். Now palmyra fruit will be more abundant.

அமளிபண்ண, inf. To scuffle, contend, wrangle, scold at.

அமனை, s. A plant, ஓர்பூடு.

*அமாத்தியர், s. King's ministers, councillors, மந்திரிகள். Wils. p. 60. AMATYA.

அமார், s. (Port.) A cable, அமார்க்கயிறு.

*அமார்க்கம், s. [priv. அ.] Heresy, irreligion, வேதப்புரட்டு. 2. Viciousness, துன்மார்க்கம். Wils. p. 61. AMARGA.

*அமாவசி—அமாவாசி—அமாவாசியை, s. The new moon, conjunction of the sun and moon, இரவிமதியோகம்; [ex அமா, et வச், to abide.] Wils. p. 61. AMAVASI and AMAVASYA.

அமாவாசிகூடுதல், v. noun. The ending of the tithi preceding the new moon, the commencement of the new moon.

*அமானம், s. [priv. அ.] Immensity, countlessness, அளவின்மை.

அமானி, s. [Arab.] Land or other sources of revenue not rented but under the direct control of the Government officers, இராசவிசாரணைக்குள்ளானநிலம்.

*அமிசம், s. Part, portion, a fraction, பங்கு. 2. The numerator of a fraction, மேல்வாயிலக்கம். Wils. p. 1. AMSHA. 3. Good fortune, அதிஷ்டம். See அம்சிசம்.

*அமிசு, s. The sun, சூரியன். 2. An atom, அணு. 3. Light, ray of light, splendor, பிரவை. Wils. p. 1. AMSHU.

*அமிதம், s. [priv. அ.] Immensity, boundlessness, அளவின்மை. Wils. p. 61. AMITA.

*அமித்திரன்—அமித்துரு, s. [priv. அ.] Foe, enemy, பகைவன். Wils. p. 61. AMITRA.

*அமிருதம், (St.) அமிர்தம், s. Immortality, அழியாமை. 2. Ambrosia, nectar, milk, honey, அமிழ்தம். 3. A restorative, a reviving medicine, stimulant, மூர்ச்சைதீர்த்துயிருர்தருமருந்து. 4. Sweetness, இனிமை. 5. Water, நீர். 6. Final emancipation, மோட்சம். Wils. p. 61. AMRITA.

அமிர்தகலசம், s. That which contains nectar, (fig.) a woman's breast.

அமிர்தகலை, s. A phase of the moon.

அமிர்தகிரணன், s. The moon.

அமிர்தங்கலங்க, inf. To be disturbed, shocked, &c. as the brain by a blow, மூளைகலங்க.

அமிர்தசஞ்சீவினி, s. A medicament supposed to restore the slain to life.

அமிர்தபிந்து, s. One of the thirty-two உபநிடதம்.

அமிர்தரசம், s. An ambrosial juice.

அமிர்தவல்லி, s. A creeper. See அமுதவல்லி.

அமிர்தன், s. An immortal, God, கடவுள். (p.) Wils. p. 61. AMRITA.

அமிர்தாசனர்—அமுதாசனர், s. The gods, தேவர். Wils. p. 62. AMRITASHANA.

*அமிர்தை, s. (St.) Immortality, imperishableness, அழிவின்மை. Wils. p. 61. AMRITA.

அமில்தார், s. (Hin.) An officer employed in collecting revenue, ஓரதிகாரி.

அமிழ், கிறேன், ந்தேன், வேன், அமிழ, v. n. To be immersed, plunged; to sink, ஆழ.

துக்கசமுத்திரத்திலமிழ்ந்துவிட்டான். He sunk in a sea of sorrow.

அமிழ்தம், s. Ambrosia, nectar, the elixir of life, தேவருணவு. (p.)

அமிழ்து, s. Ambrosia, nectar, அமிர்தம். 2. Sweetness, any sweet thing, இனிமை. (p.)

அமிழ்த்து, கிறேன், அமிழ்த்தினேன், வேன், அமிழ்த்த, v. a. To immerse, ingulf, sink a thing, ஆழ்த்த. 2. To press down, into or under another substance, as pressing a thing into the earth, &c., to lower, அமுத்த.

அமிழ்ந்து, கிறேன், அமிழ்ந்தினேன், வேன், அமிழ்ந்த, v. n. As அமிழ்; which see.

அமீனு, s. (Hin.) An inferior officer in charge of village affairs under the Amildar, ஒருத்தியோகஸ்தன்.

அமுக்கிரா—அமுக்குரா, s. A medicinal shrub, branched winter cherry with a tuberose root, having deobstruent and diuretic qualities. It is pulverized and taken as a decoction, ஓர்மருந்துப்பூடு, Physalis Flexuosa, L.

அமுக்கிராக்கிழங்கு, s. The root of the same.

அமுக்கு, கிறேன், அமுக்கினேன், வேன், அமுக்க, v. a. To crush, press or squeeze, as a fruit, a boil, &c., அமுத்த. 2. Press down, press in or under, as a vessel into water, immerse, depress, press down or in, indent by pressure, அமிழ்த்த. 3. (fig.) To oppress, நெருக்க.

நீரிலேசெம்பையமுக்கிமொண்டுவா. Sink the brass pot in the water, draw it up, and bring it.

அமுக்கு, v. noun. Compression, depression, oppression as by nightmare, pressure as by the hand of the bailiff, அமுத்துகை. 2. That which compresses, depresses, &c., an incumbent weight, அமுக்குபாரம்.

அமுக்குண்டு கதறிக்கொண்டுகிடந்தான். He lay crying out, prostrate under the burden.

அமுக்கன், s. One who does things secretly, இரகசியத்திற்கருமமுடிப்போன். 2. A sly, cunning person, dissembler, a deceiver, தந்திரகாரன். (c.) 3. [prov.] Nightmare, நித்திரையிலமுக்குமாவி.

அமுக்கொத்தி, s. [local.] A cleaver. ஓர்வகைக்கத்தி.

அமுங்கு, கிறேன், அமுங்கினேன், வேன், அமுங்க, v. n. To be pressed, crushed, to yield to pressure, (as a ripe fruit, a boil, &c.,) become shrivelled, dried up as a blister, அமுந்த. 2. To sink, அமிழ். (c.)

வீடுவிழவெல்லாருமமுங்கிப்போனூர்கள். The house falling, they were all crushed.

அமுசம், s. A shrub, சிறுசெருப்படை.

அமுசு, s. Soot, ஒட்டறை.

அமுதங்கம், s. A shrub, as சதுரக்கள்ளி.

*அமுதம்—அமிருதம், s. Ambrosia, nectar, the food of the gods, obtained by churning the sea of milk, தேவருணவு. 2. Sweetness, இனிமை. 3. Milk, பால். 4. Water, நீர். 5. A medicine, a medicament that restores to life, a cordial, ஓர்மருந்து. 6. Final emancipation of the soul or eternal felicity according to Hindu philosophy, முத்தி. 7. A kind of liquor supposed to ooze from the brains of a class of yogis, on which they subsist. (See அமுததாரணை.) 8. Curds, தயிர். 9. Three kinds of medicinal fruits, திரிபலை. 10. Three kinds of spices, திரிகடுகு. 11. A plant, சீந்தில்.

அமுதகம், s. The sea of milk, பாற்கடல். 2. Water, சலம். 3. The female breast, கொங்கை. (p.)

அமுதகுலர், s. Shepherds, இடையர். 2. The learned, the great, சான்றோர்.

அமுதங்கரந்தநஞ்சு, s. A poisonous substance enclosing something valuable, as the covering of ginger root, which is to be rejected, &c. 2. A person with harsh words and good disposition.

அமுதசருக்கரை, s. A medicinal sugar prepared from the சீந்தில் root or stem.

அமுததாரணை, s. The nectarine principle in the head or brain from which the silent, motionless devotee is supposed to obtain nutrition, support and enjoyment, when living without external food.

அமுதபுட்பம், s. A creeping plant, சிறுகுறிஞ்சா, Periploca, L.

அமுதப்பார்வை, s. A favorable or propitious look, as of a lady towards her admirer, குளிர்ந்தபார்வை.

அமுதமேந்தல், v. noun. Giving food to ascetics and other virtuous persons, guests, as one of the nine kinds of புண்ணியம், and of the sixteen உபசாரம்.

அமுதயோகம், s. [in astrology.] The auspicious conjunction of a certain day of the week, phase of the moon and lunar constellation. See யோகம்.

அமுதர், s. Celestials, வானோர். 2. Herdsmen, இடையர். (p.)

அமுதவல்லி, s. A creeper, as சீந்தில்.

அமுதவெழுத்து, s. Letters deemed propitious and proper to begin a poem, or to be in other important places. They are the vowels, அ, இ, உ, எ, and the consonants, க், ச், த், ந், ப், ம், வ், or all the letters but the நஞ்செழுத்து.

அமுதாசனர், s. The gods, as அமிர்தாசனர்.

அமுதாரி, s. A plant, the பூனைக்காலி, Dolichos, L.

அமுது, s. Ambrosia, அமுதம். 2. Sweetness, இனிமை. 3. Water, நீர். 4. Milk, பால். 5. Boiled rice, சோறு. 6. Food in general, போசனம். 7. A restorative medicine, elixir, cordial, ஓர்மருந்து. 8. Taste, சுவை. (p.)

அமுதுசெய்ய, inf. To take food, (applicable to superiors.)

அமுதுபடி, s. Raw rice.

அமுதுமோர், *s.* Sour milk used for curdling.

அமுதூட்ட, *inf.* To give food, nurse or suckle a child. See ஊட்டு.

கட்டமுது, *s.* Rice tied up for a journey.

அமுத்தம், *s.* A vegetable poison, as வசநாபி.

அமுரி, *s.* Urine, சிறுநீர்.

அமுரியுப்பு, *s.* Urine salt, சிறுநீரி லிருந்தெடுக்குமுப்பு. One of the five kinds of உப்பு.

அமுல், *s.* (*Hin.*) Theft, detection of theft, smuggled property, களவு.

அமுல்பிடித்தான். He detected a theft, he brought out a thief.

*அமூர்த்தம், *s.* [*priv.* அ.] That which is formless, shapeless, unembodied, incorporeal, உருவில்லது. Wils. p. 61. Amurtta.

அமூர்த்தன்—அமூர்த்தி, *s.* An incorporeal or immaterial being, as the deity or the soul in the கேவலம் state.

அமூர்த்திசாதாக்கியம், *s.* One of the immaterial benevolent states of Siva, சிவனதிரட்சண்ணியவுருவத்திலென்று.

*அமேத்தியம், *s.* [*priv.* அ.] Uncleanness, excrement, அசுத்தம். Wils. p. 62. Amed'hya.

அமை, *s.* Bamboo, மூங்கில். (*p.*)

அமை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To yield, come to a right state, submit, comply, obey, acquiesce, சம்மதிக்க. 2. To become settled, peaceable, quiet; to subside, படிய. 3. To be at one's disposal, as a thing that may be effected, acquired, brought to good order, &c., வசமாக. 4. To fit, suit, join nicely, be adapted to, இசைய. 5. To be destined, be subject to a divine appointment or destiny, good or bad, விதிக்குட்பட. 6. To be made, formed, adjusted, திருந்த. 7. To be satisfied, contented, composed, comfortable, resigned, திருத்தியாக. 8. (in the third person only) To be enough, sufficient, போதுமாக. 9. To happen, occur, come to pass, சம்பவிக்க. 10. To belong to, be connected or combined with, be appropriate to, பொருந்த. 11. To be obtained, அமர. (*p.*)—*Note.* Most of the meanings of this word have reference to the mind.

சாஸ்திரத்திற்கமைந்துநடக்கிறவன். He is one who obeyed the shasters.

இடார், *s.* A basket for irrigation, இறைகூடை. (*p.*) 2. [*prov.*] A trap for squirrels, or rats, எலிமுதலியனபிடிக்கும்பொறி.

இடாரிலகப்பட்ட எலிபோலே. Like a rat caught in a trap; i. e. perplexed.

இடாரேற்ற, *inf.* To set a squirrel or rat-trap.

இடி, *s.* A stroke, blow, push with the fist, elbow, shoulder, &c.—also with a club or other blunt weapon, தாக்குகை. 2. A thunder-bolt, அசனி. 3. (*p.*) A roar, thunder, sound, noise, ஒலி. 4. Ground grain, flour, rice-flour, இடித்தமா. 5. Cakes, &c., as a light meal, luncheon, tiffin, சிற்றுண்டி. 6. Pulvil, powder, dust, any thing pulverized, &c., சுண்ணம். 7. Hair-ointment, probably made of powder, மயிர்ச்சாந்து. 8. Asseveration, affirmation, உறுதிச்சொல். 9. A throb, palpitation, துடிப்பு. 10. The standard of Indra, இந்திரன்கொடி.

இடிபுரிந்தெள்ளுஞ்சொற்கேட்பர் மடிபுரிந்துமாண்டவுஞற்றிலவர். They who are too idle to engage in any enterprize, will hear the words of rebuke which are applied to them.

இடியுந்துய்த்து. Eating also millet-meal. (கல்லா.)

இடிகொம்பு—இடியம்பு, *s.* Small mortars fastened upon a pole, which are loaded with powder and discharged at festivals, funerals, &c.

இடிக்கொடி, *s.* The flag of Indra, இந்திரன்கொடி.

இடிக்கொடியோன், *s.* Indra, இந்திரன்.

இடிபட—இடியுண்ண, *inf.* To be pushed about, elbowed, shouldered, battered, demolished, &c.—as a wall, bank, &c. 2. To be pounded—as rice, &c.

இடிமுழக்கம், *s.* Thunder.

இடியப்பம், *s.* A kind of paste or cake cooked in steam, சிற்றுண்டிவகையிலொன்று.

இடியப்பத்தட்டு, *s.* Flat circles or squares of braided rattan, &c., used for making the இடியப்பம்.

இடியப்பவுரல், *s.* The mould or cullender through which the paste is pressed to form the cake.

இடியப்பவுரற்கண், *s.* The holes of the இடியப்பம் mould.

இடிவிழ, *inf.* To strike as lightning, to fall as a thunder-bolt. 2. To cave or fall in—as a well.

இடி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To be broken, battered, demolished—as a wall, &c., to fall to pieces, crumble in ruins, உடைய. 2. To be washed or broken down—as the bank of a river, கரையிடிய. 3. To become partly bruised—as rice in a mortar, நொறுங்க.

இடிகரை, *s.* A broken bank, margin, &c. of a river, tank or well.

இடிசாமம், *s.* [*vul.*] A time of ruin, கெடுகாலம். 2. Defamation, reproach, நிந்தை.

இடிசுவர், *s.* A dead wall, a broken wall.

இடிவு, *v. noun.* Demolition, ruin, dilapidation, the washing or crumbling away of a bank.

இடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To pound, beat in a mortar, comminute, pulverize, reduce to flour, அரைக்க. 2. To strike with the fist, a club or any thing blunt, slantingly, not with a direct blow, தாக்க. 3. To push, gore as a beast, to thrust, to butt—as an old calf in sucking, முட்ட. 4. To thunder, eject thunder-bolts, இடிவிடிக்க. 5. To beat so as to break, bruise or batter to pieces, demolish, shatter, தகர்க்க. 6. To speak forcibly and emphatically, to use strong language in order to make an impression, to urge, insist upon with earnestness, உறுதிசொல்ல. 7. *v. n.* To throb, beat—as the head when aching; to beat, pant, palpitate, துடிக்க. 8. To strike—as a vessel against the shore—as a gun fired, &c., உதைக்க. 9. To sound, make a noise, ஒலிக்க.

இடிக்குந் துணையாரை யாள்வாரையாரே கெடுக்குந் தகைமையவர் ? Who can destroy those with whom are counsellors, that caution them faithfully ?

நீலனை முழங்காலி னலிடித் துருட்டினன். He pushed Neelan with his knee, and rolled him over. (இராமா.)

இடித்துரை, s. Affirmation, assurance, உறுதிச்சொல்.

இடிமரம், s. A pestle, உலக்கை.

இடிமருந்து, s. Pulverized or comminuted medicine.

இடிஞ்சில், s. A round, earthen lamp, அகல். (p.)

இடிம்பு, s. Haughtiness, அவமதிப்பு. See இடும்பு. (p)

*இடீகை, s. A commentary, glossary, ஆரியநூல்வியாக்கியானம். Wils. p. 359. Deeka. 2. A Sanscrit Dictionary or vocabulary, ஆரியவகராதி.

இடீக்கு, s. Pomp, parade, show, eclat, இடம்பம். (usage.)

இடு, கிறேன், இட்டேன், வேன், இட, v. a. To set, put on as ornaments, தரிக்க. 2. To put in, deposit, keep, வைக்க. 3. To give, bestow, grant, devote, appropriate, ஈய. 4. To throw, cast, poke out, poke or thrust into, எறிய. 5. To designate, appropriate, assign, allot, destine, dictate, விதிக்க. 6. To pour, shower, சொரிய.—As an expletive, it is joined to the gerunds of other verbs in which, it sometimes gives additional force or emphasis to the action expressed, or serves as a kind of finish, வினையெச்சத்தோடுசேர்ந்தோர்பகுதிநீர்மைத்தாய்வருவது.—The gerund இட்டு is sometimes used to express cause, instrumentality, &c.—as, அவனையிட்டிந்தப்பழிவந்தது, this disgrace happened through him.

மரத்தினிற்பறவைக்கிடுகலேபோலப்பாதகமனைத்துந் தொலைத்திடும். It will drive away every evil, as a stone thrown at birds in a tree puts them to flight.

இடுகடை, s. A door or gate where much liberality is exercised, கொடுப்போனில்வாயில். (p.)

இடுகறல், s. Fuel, விறகு. (நிகண்டு.) (p.)

இடுகாடு, s. A burying place, பிரேதம்புதைக்குமிடம். 2. A place for burning the dead, சுடுகாடு.

இடுகுறி—இடுகுறிப்பெயர், s. Arbitrary names of things, primitive terms.

இடுகுறிச்சிறப்புப்பெயர், s. [in grammar.] A specific term or primitive nouns not common to all—as தெங்கு, a cocoanut tree.

இடுகுறிப்பொதுப்பெயர், s. [in grammar.] A generic term, or primitive common noun—as மரம், tree or trees.

இடுதங்கம், s. Refined gold, gold of the best quality, புடமிடுதங்கம். 2. Gold inlaid, set, mounted, &c., கல்நகையிலுள்ளிடுதங்கம்.

இடுதண்டம், s. A penalty, விதிக்கப்பட்ட ஆக்கினை. 2. A penalty, fine, mulct, அநியாயதண்டம்.

இடுதிரை, s. A curtain, திரைச்சீலை.

இடுமருந்து, s. A philter, வசமாக்கவிடுமருந்து.

இட்டறுதி, s. A fixed time or limit, நியமித்தவெல்லை. 2. A critical time, இரண்டுக்குற்றகாலம் 3. Destitution, extreme want, வறுமை.

இட்டுக்கட்டிக்கொள்ள, inf. To disparage, asperse, to bring reproach upon.

முன்னிட்டுப்போக, inf. To go forward.

பின்னிட்டுப்போக, inf. To go backward.

இடுகை, v. noun. Bestowing, ஈகை. 2. s. Gift, கொடை.

இடுகு, கிறது, இடுகினது, ம், இடுக, v. n. To become slender, strait, confined, சுருங்க. (p.)

இடுகிடைமடவார். Slender-waisted women.

இடுகு, v. noun. Narrowness, closeness, ஒடுக்கம்.

இடுக்கண், s. Suffering, affliction, distress, adversity, straits, tribulation, persecution, துன்பம்.

இடுக்கட்படுத்த, inf. To afflict, oppress, persecute, துன்பப்படுத்த.

இடுக்கு, s. The claws of a lobster, scorpion, &c., கொடுக்கு. 2. A small hole, nook or corner—as the parting between the fingers or teeth, the arm-pit, any parting where a thing becomes infixed, confined, pressed, &c., a recess, சந்து. 3. Narrowness, trouble, துன்பம்.

பல்லிடுக்கிலேயகப்பட்டுக்கொண்டது. It has stuck between the teeth.

இடுக்கணி, s. [prov.] A corner, nook where a thing may be held—as under the arms, between the fingers, under the hams, or where a person or thing may become confined, jammed in, wedged in, &c.

இடுக்குமரம், s. A narrow passage through posts to a field, for men, which cattle cannot pass, கடவைமரம்.

இடுக்குமுடக்கு—இடுக்குமுடுக்கு, s. A close, confined place, a narrow corner, முட்டுச்சந்து. 2. Straits, difficult circumstances, embarrassment, difficulty, சங்கடம். (c.)

இடுக்குவழி, s. A narrow way or lane.

இடுக்குவாசல், s. A strait gate.

இடுக்கு, கிறேன், இடுக்கினேன், வேன், இடுக்க, v. a. To press as between two boards, நெருக்க. 2. To pinch, இடுக்கிப்பிடிக்க. 3. To take between the fingers, toes, &c., to grasp—as a crab, with its claws; to lay hold of—as with pincers, to take under arms or between two things, குறடுமுதலியவற்றாலிடுக்க.

அவள்பிள்ளையையிடுக்கிக்கொண்டுவந்தாள். She came with her child on the hip, holding him under the arm.

பொருளையிடுக்கிப்பிடிக்கிறான். He holds his property very stingily, tenaciously.

இடுக்கி, s. Pincers, tongs, forceps, tweezers, nippers, குறடு. 2. A stingy, parsimonious person, a niggard, உலோபி.

முள்ளிடுக்கி, s. Pincers to draw out thorns from the feet.

இடுக்கிடை, s. Closeness, narrowness, நெருக்கம்.

இடுக்குதடி, s. A double stick used to press things with—as that of a toddy-drawer to press the flower or fruit-stem of the palmyra, &c.

இடுக்குபனை, s. [prov.] Palmyra trees from which toddy is drawn.

இடுக்குபிள்ளை, s. A child in arms carried on the hip, கக்கத்திலிடுக்கும்பருவமுடையபிள்ளை.

இடுக்குமரம், s. A kind of oil-press, எண்ணெயூற்றுமரம்.

இடுக்கம், v. noun. Closeness, confinement, narrowness, நெருக்கம். 2. Affliction, adversity, straits, இடுக்கண்.

இடுக்கப்பட, inf. To become narrow, close, confined, ஒடுக்கப்பட. 2. To be oppressed, be persecuted, to suffer, துன்பப்பட.

இடுக்கப்படுத்த, inf. [caus.] To make narrow, close, &c., நெருக்க. 2. To oppress, persecute, distress, துன்பப்படுத்த.

இடுப்பு, s. The hip, sides, மருங்குல். (c.)

இடுப்புவலி, s. The lumbago, pain in the loins.

இடும்பன், s. The name of an inferior deity—one of the generals in Skanda's army, குமரனேவல்செய்வோன். 2. The name of a giant, ஓராக்கன்.

இடும்பி, s. A giantess, the sister of இடும்பன், ஓரிராக்கதி.

இடும்பிகொழுநன், s. Bhima—one of the Pandavas, வீமன்.

இடும்பு, s. Haughtiness, arrogance, அகந்தை. 2. Audacity, impudence, சேட்டை. 3. Disesteem, disdain, contumely, அவமதிப்பு. 4. Cruelty, oppression, tyranny, persecution, கொடுமை.

இடும்பர், s. Haughty persons, the arrogant, செருக்குடையோர். 2. As இராக்கதர், which see.

இடும்பி, s. A haughty woman, செருக்குடையாள்.

இடும்பை, s. Suffering, affliction, distress, calamity, துன்பம். 2. Evil, தீமை. 3. Fear, அச்சம். 4. Poverty, வறுமை. 5. Pride—as one of the eight evil dispositions, விகாரமெட்டிலொன்று.

வேண்டுதல்வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கியாண்டுமிடும்பையில. To those who have adored, at the feet of him who is without desire or aversion, there shall be no suffering for eternity.

*இடுலி, s. A female turtle, பெண்ணாமை. Wils. p. 360. Duli. (p.)

இடுவந்தி, s. Calumny, defamation, false accusation, அபாண்டம். 2. Oppression, extortion, அடாவரி. 3. Injustice, அநீதி.

இடுவந்திக்காரன், s. A calumniator.

இடை, s. Middle, midst, centre, நடு. 2. The middle of a body, the waist, மருங்குல். 3. As இடைச்சொல்—a particle. 4. Interval of time, &c., நடுநேரம். 5. (p.) Place, room, space, position, situation, இடம். 6. A form of the seventh or locative case, ஏழனுருபு. 7. The side of a thing, place, quarter, region, பக்கம். 8. An elephant, யானை. 9. Interim, opportunity, con-

venient season, season, சமயம். 10. The full moon, பௌர்ணை. 11. A measure of length, breadth, thickness, &c., நீட்டலளவையிலொன்று. 12. One of the three நாடி, or passages for the breath—that through the left nostril, the lunar nerve or vessel, திரிநாடியிலொன்று. 13. One of the (நாடி) nerves or arteries, தசநாடியிலொன்று. (See நாடி.) 14. (misused for எடை.) Weight, gravity நிறை. (See சுழுமுனை, and பிங்கலை.)

நல்லாரிடைப்புக்கு. Associating with the good.

இடைகலை, s. The breath of the left nostril—as சந்திரகலை. See பிங்கலை.

இடைக்கட்டு, s. A girdle, sash. 2. The allowance made for the weight of a vessel before weighing any thing in it.

இடைக்காடன், s. A Rishi or சித்தன்—one of the eighteen.

இடைக்கிடை. Here and there, interspersed, நடுநடுவே. 2. Of like weight, even weight, equilibrium, நிறைக்குநிறை.

இடைக்குலநாதன், s. Vishnu as brought up by shepherds.

இடைக்குறை, s. [*in grammar.*] A word shortened in the middle, syncope, elision; as ஓதி for ஓந்தி, camelion. (See விகாரம்.) 2. An island, blank space in a river, &c., ஆற்றிடைக்குறை.

இடைக்கொள்ளை, s. Pillaging, plunder, free booty, plundering without regard to either party, நடுக்கொள்ளை. 2. (*in Agastiar.*) The ravages of an epidemic disease, கொள்ளைநோயான்வருமழிவு.

இடைசுருங்குபறை, s. A small drum tapering in the middle, உடுக்கை.

இடைசூரி, s. [*prov.*] Gold or silver-beads interspersed here and there between sacred or other beads, உருத்திராக்கமுதலியவற்றிற்கிடையிற்கோத்திடுவது.

இடைச்சனி—இடையெழுஞ்சனி, s. The eleventh lunar asterism, in which Saturn is considered very malignant. See கடையெழுஞ்சனி and முதலெழுஞ்சனி.

இடைச்சன், s. The second child, இரண்டாம்பேறு. (*c.*)

இடைச்சாதி, s. The second or middle tribe of வைசியர்—the third caste.

இடைச்சேரி, s. A shepherd's village.

இடைத்தட்டு, s. Getting profit indirectly by interposing between parties, &c. or by purchasing goods of one and selling them again from a distance.

இடைநடு, s. The middle emphatically (a pleonasm in rhetoric.)

இடைநரை, s. Hair or beard growing grey here and there.

இடைநிலை, s. In verbs generally, the characteristics of tense, வினையிடைநிலை. 2. A neutral state, neutral or middle state, stagnation in business transactions, இருபுறத்திலுஞ்சாராமனிற்கை. 3. In some compound nouns, one of the component parts, பெயரிடைநிலை.

இடைநிலைத்தீபகம், s. One of the beauties of poetry, விளக்கணிமூன்றிலொன்று. See தீபகம்.

இடைநிலைமயக்கு, s. [*in orthography.*] The proper combination of letters in the middle of a word, மொழியிலிரண்டெழுத்து மயங்கிநிற்கை—if the same consonant be repeated in the middle of a word, it is called, உடனிலைமெய்மயக்கு; if otherwise, it is called, வேற்றுநிலைமெய்மயக்கு.

இடைநீரினிற்க, *inf.* [*prov.*] To swim with the body erect and the water only up to the waist.

இடைப்பட, *inf.* To interpose, happen in the interim, come in, between, among, &c., to happen, இடையிலுண்டாக.

இடைப்படுதானம், s. Giving of a secondary order, bestowing through pity on the poor, the blind, மத்திமதானம்.

இடைப்பழம், s. Ripe fruits interspersed among the unripe.

இடைப்பழம்பழுத்தல், *v. noun.* Ripening as fruits here and there.

இடைப்பிறவரல், *v. noun.* Words intervening between any one word and another with which it makes sense—as between the noun and its attribute, &c., எழுவாய்முதலிய தொடரினுள் இடையிலேற்றபிற சொல்வரல்.

இடைப்புழுதி, s. Land in a state for sowing, neither very moist nor very dry, காய்ந்துங்காயாதிருக்கிறபுழுதி.

இடைப்புள்ளி, s. Marks scattered here and there—as in tobacco leaves, &c., fruits, &c.

இடைப்பூட்டு, s. A truss, girdle, அரைப்பூட்டு.

இடைப்போகம், s. An interior crop, out of season, இடையிற்புன்பயிர்விளைவு.

இடைமடக்கு, s. Silencing one by vociferation, இடையிற்றடுக்கை. 2. Haughty speaking, இடக்குமடக்கானபேச்சு. 3. [*in prosody.*] The repetition of a word in the middle of a line with a varied meaning. See மடக்கு.

இடைமுள், s. Small, new eruptions about a healing ulcer or bile, மறுமுள்பாய்கை. 2. A disease, a kind of eruption, ஓர்கரப்பன்.

இடைமேடு, s. Rice-land of moderate height, நடுத்தரமானமேடு.

இடையற, *inf.* To cease or terminate suddenly.

இடையறாவன்பு, s. Never-ceasing love.

இடையன், s. (*fem.* இடைச்சி.) A shepherd—as occupying a middle position.

இடைப்புத்திபிடரியிலே. The shepherds have their wit in their nape; i. e. they have none.

இடையன்கால்வெள்ளி, s. [*prov.*] The star Aldabaran in the constellation Aries, ஓர்விண்மீன்.

இடையாந்தரம், s. An intermediate space or time.

அந்தவேலை யிடையாந்தரத்திலே கெட்டுப்போயிற்று. The business was interrupted, spoiled in the interim.

இடையாயர், s. Persons of a middling class in piety, excellence, &c. See தலை and கடை.

இடையிட, *inf.* To intervene, be interspersed, to have intermediate spaces either of time or place, to intermit, happen intermediately, நடுவிற்சேர்ந்த.

இடையிட்டுவந்தசெல்வம், s. Acquired wealth and prosperity, obtained during life, not derived from ancestors.

இடையிட்டெதுகை, s. The எதுகை or rhyming of the third letter in every other line.

இடையிடை. From time to time, at intervals, intervening space.

இடையிலேகொண்டுபோக, *inf.* To take by theft or force, to plunder fruits, furniture, &c. 2. To take off property at one's death—as persons who are not heirs. 3. To seize and carry off property from one who has stolen it—as a constable from a thief. (*c.*)

இடையிலேவயிறுவளர்க்க, *inf.* To get a living at the expense of others, not reducing one's own stock. (*c.*)

இடையினவெதுகை, s. One of the இனவெதுகை—that in which the second letter of each line is any of the medial letters.

இடையீடு, s. Obstacle, impediment, frustration, விக்கினம். 2. Equivalent, equilibrium, சமம்.

இடையூறு, s. Frustration, interruption, disappointment, obstruction, hinderance, mishap, casualty, contingence, misfortune, disaster, இடர். (*c.*)

இடையெண், s. A poem increasing and decreasing like the waves of the sea, அம்போதரங்கத்தொன்று.

இடையொடுகடைமடக்கு, s. A figure in Rhetoric, repetition of a word or phrase in the middle and end of a line with different meanings, மடக்கணியிலொன்று.

இடைவழக்கு, s. [*prov.*] A suit at law instituted by a new claimant while the previous one is going forward, இளைவழக்கு.

இடைவழக்காளி, s. An intervening party in a law-suit.

இடைவழி, s. Midway.

இடைவள்ளல், s. A term common to the second of the three classes of kings famed for liberality. (*p.*)

இடைவாய், s. The degrees marked upon a steel-yard.

இடைவிட, *inf.* To intermit, suspend, interrupt, leave intermissions, interstices, &c.

இடைவிட்டுவிட்டு. Every other one.

இடைவிடாமழை, s. Incessant rain.

இடைவிடாமல், *neg. v. part.* Incessantly, constantly, without intermission.

இடைவெட்டுப்பணம், s. A clipped or imperfectly stamped coin, மாறுமுத்திரைவிழுந்தபணம். 2. [*prov.*] Profit made indirectly, பொதுக்கிடுவெடுத்தபணம்.

இடைவெட்டுப்பேச்சு, s. Derision, ridicule.

இடைவெளி, s. An intervening space, நடுவெளி.

எட்கிடை—எள்ளிடை, s. The thickness of a rape-seed. (c.)

நான்குவிரற்கிடை—நான்குவிரலிடை. Four fingers-breadth, thickness.

முதலிடைகடை. Beginning, middle and end.

இடை, கிறேன், ந்தேன், வேன், ய, v. n. To recede, go out of one's way, ஒதுங்க. 2. To retreat—as before a foe, பின்னிட. 3. To be reduced in circumstances, to become poor, தாழ.

கதிரெதிரிருள்போலிடைந்தவப்பொழுதில். While (his army) was scattered before the enemy—as darkness by the sun.

இடைஞ்சல், s. Narrowness, இடுக்கு. 2. Closeness, நெருக்கம். 3. Oppression, tyranny, persecution, உபத்திரவம். 4. Obstruction, தடை. (c.)

எனக்கிடைஞ்சலாயிருக்கிறது. I am driven to straits, I am obstructed in the way.

அதற்கிடைஞ்சலாய்நின்றேன். I was a hinderance to it.

இடைஞ்சற்பட, inf. To suffer oppression, persecution, calamity.

இடைஞ்சற்பண்ண, inf. To molest, frustrate, obstruct, retard, oppose.

இடோலி, s. (Tel. డోలి.) A dooly, a litter, ஓர்வகைச்சிவிகை.

இடோல், s. (Tel. డోలు.) A kind of drum, ஓர்பறை.

இட்டடை, s. [prop. இட்டிடை.] Poverty, misery, calamity, துன்பம்.

*இட்டம்—இஷ்டம், s. Voluntariness, freedom of choice, option, one's own pleasure, பிரியம். 2. Desire, wish, choice, opinion, approbation, விருப்பம். 3. Kindness, friendship, love, attachment, affection, அன்பு. Wils. p. 134. Ishta. 4. Manumission of a slave, அடிமைவிடுதலை. 5. [in astrology.] Indication of good or evil from the planets according to their position, கிரகநிலையாலாகும்பலாபலன். 6. [in astronomy.] The longitudinal difference between துருவம், and the end of a sign.

இட்டகாமியம்—இஷ்டகாமியம், s. What delights, satisfies the mind.

இட்டங்கட்ட—இட்டம்வைக்க, inf. To construct a plan, or lay down the situations of the stars, in entering on astrological calculations, இராசிநிலைவரைய.

இட்டசட்டம்—இஷ்டசட்டம், s. Voluntariness, freedom from constraint, free choice, யதேச்சை.

இஷ்டதேவதை, s. The family or guardian deity, தான்வழிபடுதெய்வம். Wils. p. 134. Ishtadevata.

இஷ்டபிரசாதம், s. A gift from benevolence, free grace, கைம்மாறுவேண்டாக்கொடை. 2. Free grace of God, தேவகிருபை. 3. Boiled rice offered to the idols and eaten joyfully by the offerers, தேவபிரசாதம்.—Note. Among christians it is often used for the eucharist.

இஷ்டபோகம், s. Enjoyment of wished for pleasure, gratification, விரும்பினபடியனுபவிக்கை.

இஷ்டம்பண்ண, inf. To emancipate a slave (commonly இஷ்டமாக்க.) 2. To make friendship with one, to ingratiate one's self with another, சந்தோஷம்பண்ணிக்கொள்ள.

இட்டம்வைக்க, inf. To love, set the affections on one.

இட்டலி, s. A kind of cake, pie, ஓர்சிற்றுண்டி.

இட்டளம், s. Affliction, pain, sorrow, துன்பம், (நிக.) 2. Weakness, languor, lassitude, தளர்வு.

இட்டறுதி, s. See under இடு.

இட்டி, s. A spear, lance, ஈட்டி. (சது.)

*இட்டி—இஷ்டி, s. A sacrifice, any sacrificial rite, யாகம் ; [ex இஷ, to desire.] Wils. p. 134. Ishti.

*இட்டிகை, s. Bricks, செங்கல். Wils. p. 134. Ishtika. 2. A narrow way, இடுக்குவழி. 3. A mixture of wax, resin, &c., used by gold-smiths, கட்டுமெழுகு.

இட்டிடை, s. Smallness, minuteness, சிறுமை. 2. Straits, adversity, தரித்திரம். 3. [prov.] A vise in the turner's lathe, கடைச்சற்கருவியிழேருறுப்பு.

இட்டிடைஞ்சல், s. [prov.] Injustice, oppression, persecution, துன்பப்படுகை. 2. Adversity, straits, great extremity, extreme necessity, வறுமை.

இது இட்டிடைஞ்சல் வருங்காலத்திலுதவும். This will render assistance at the time of extreme necessity.

யாதொரு இட்டிடைஞ்சலும் வாராமற் காப்பாற்றினர். He protected me from all oppressions.

*இட்டு—இஷ்டு, s. Desire, wish, விருப்பம். Wils. p. 134. Ishtu.

இட்டு. [ex இடு.] A particle sometimes employed as a component of verbs, ஓரசைச்சொல்—as வந்திட்டான், he is come.

இட்டு, s. A little, small thing, சிறிது.

ஆகாறளவிட்டிதாயினும். Though the income be small. (குறள்.)

இட்டுறுதி, s. Firmness, severity, rigor, கண்டிதம்.

இட்டேற்றம், s. [prov.] Tyranny, cruelty, injustice, கொடுமை. 2. A gross falsehood, false accusation, முழுப்பொய்.

இப்படி இட்டேற்றம்பேசகிறதாகாது. It is not good to speak such a gross falsehood.

எனிப்படி இட்டேற்றம்பண்ணுகிறாய்? Why do you do so unjust an action?

இட்டோடு, s. Disunion, discord, separation, பிரிவு.

இட்டோட்டு, s. [prov.] Vexation, trouble, அலைக்கழிவு.

இணக்கம், s. Agreement, union, congeniality, conformity, congruity, conjunction, connection, friendship, familiarity, acquiescence, acceptableness, உடன்பாடு. 2. Fitness, suitableness, acceptableness, பொருத்தம். 3. Adjustment, correction, amendment, திருத்தம்.

இணக்கமறிந்திணங்கு. Make friendship with the worthy.

நல்லிணக்கமல்லதல்லற்படுத்தும். Alliance with the unworthy will cause mutual pain.

இணக்கப்படுத்த, inf. To bring about a reconciliation between two parties.

இணக்கம்பேச, inf. To try to reconcile two parties.

இணக்கோலை, s. A deed of cession, agreement, reconciliation, உடம்படிக்கைப்பத்திரம்.

இணக்கு, கிறேன், இணக்கினேன், வேன், இணக்க, v. a. To cause to agree, to unite, connect, adjust, fit, correct, confirm, rectify, bring over, persuade, reconcile, conciliate, உடன்படுத்த.

இணங்கன், s. Salt-petre, வெடியுப்பு.

இணங்கு, s. A devil, பிசாசம். (p.)

இணங்கு, கிறேன், இணங்கினேன், வேன், இணங்க, v. n. To agree, consent, yield, comply with, to be reconciled; to acquiesce in, be agreeable to, &c., உடன்பட.

அதற்கவனிணங்கவில்லை. He has not acquiesced in, or been satisfied with it.

இணங்கலர்—இணங்கார், s. Enemies, பகைவர்.

இணங்கி, s. A lady's female friend or companion, தோழி.

இணர், s. A cluster of flowers, பூங்கொத்து. 2. A blossom, a blown flower, பூமலர். 3. Filaments of a flower, பூந்தாது. 4. The கிச்சிலி tree, Citrus, L.

இணரெரி, s. A large fire consisting of many flames, பலசுடருள்ளநெருப்பு.

இணரெரிதோய்வன்னவின்னசெயினும் Though one causes affliction as cruel as that effected by fire of many flames. (குறள், வெகுளாமை.)

இணுட்டு, s. [prov.] Fish-gills, மீன்செவுள். 2. A small piece of ola, ஓலைத்துண்டு.

இணுப்பு, கிறேன், இணுப்பினேன், வேன், இணுப்ப, v. a. [prov. as also அணுப்பு.] To deceive, cheat, disappoint, entice, எய்க்க.

இணுப்பு, v. noun. Deceit, cheating, defrauding, எய்ப்பு.

இணி, s. [prop. அணி.] A row of squares in a rice-field, கன்னறு. 2. Boundary, limit, எல்லை. 3. A ladder, ஏணி.

இணுக்கு, s. Twig as formed on branches, வளார். 2. A handful of cocoanut leaves, &c., or of fruit from a tree plucked off, கைப்பிடியளவிணுக்கப்பட்டது. (c.) 3. The interstices between the separate olas of the palm leaf, இரண்டோலைகளினிடைவெளி. 4. The fork or joining of the twig to its larger twig or branch, கிளைமுதலியவைகளினிடைச்சந்து.

இணுக்கு, கிறேன், இணுக்கினேன், வேன், இணுக்க, v. a. As இணுங்கு.

இணுங்கு, கிறேன், இணுங்கினேன், வேன், இணுங்க, v. a. To pull off with force, split off—as a twig from a branch—a down from a feather—palm leaves, &c., from a tree ; to tear off with force, இசிக்க.

இணை, s. Union, conjunction, communion, fellowship, இசைவு. 2. Comparison, parallel, similitude, resemblance, ஒப்பு. 3. (p.) Two things of a kind, a pair, couple, brace, துணை. 4. A companion, associate, partner, escort, protector, துணைவன். 5. Desire, இச்சை. 6. Women's hair, கூந்தல்.

இணையிலெனெஞ்சமே. O! mind, debased beyond comparison. (வைராக்.)

இறைகழலிணை மேவிய விமலர். Holy men who unite themselves to the feet of the Supreme Being.

இணைக்கயல், *s.* A couple of carp-fish, figures of which in gold, silver, &c., form one of the eight auspicious articles placed on special occasions as good omens, also as pleasing to the gods, அட்டமங்கலத்தொன்று. 2. One of the emblems of royalty, அரசசின்னத்தொன்று.

இணைக்கலவை, *s.* Two leaf-plates—as set before a religious mendicant or pandarum, while feeding him.

இணைக்குப்போக, *inf.* [*prop.* இணையாகப்போக.] To walk with another, to walk abreast.

இணைக்குறளாசிரியப்பா, *s.* A kind of ஆசிரியப்பா, some of whose middle lines are shorter than the first or last line.

இணைமணிமாலை, *s.* A poem consisting either of the kind of verses called வெண்பா and அகவல், or வெண்பா and கலித்துறை, in hundred verses and composed in accordance with the rule of அந்தாதி—one of the பிரபந்தம்.

இணைமுரண்டொடை, *s.* [*in poetry.*] A kind of rhyme where the first two feet in a line are opposed to each other either in word or meaning, ஓர்தொடை—as சிறுடிப்போகலல்குல்.

இணைமோனைத்தொடை, *s.* A species of rhyme in which the first letters of each of the first two feet are the same. See தொடை.

இணையசை, *s.* A compound metrical syllable, நிரையசை.

இணையடி or கழலிணை, *s.* The two feet.

இணையடிசூட, *inf.* To adorn, crown one's self with the feet (of the deity or guru) regarding them as flowers.—*Note.* To place the feet of another on one's head, is a figurative form for expressing great reverence, devotedness, respect, &c.

இணையளபெடைத்தொடை, *s.* A verse in which the first letter of the first two feet is protracted.

இணையிட்டுப்பார்க்க, *inf.* To compare one thing with another.

இணையியைபுத்தொடை, *s.* The repetition of the same letter in the last two feet of any line. See தொடை.

இணையெதுகைத்தொடை, *s.* [*in poetry.*] The rhyming of the second letters of the first two feet in each line.

இணையெழுத்து, *s.* A substituted letter, போலியெழுத்து.

இணைவிழைச்சு, *s.* Unchastity, unchaste desire, கற்பில்லாமை. (நீதிநெறி.) 2. Sexual desires, காமம். (*p.*)

கண்ணிணை, *s.* A pair of eyes.

இணை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To join, unite, coalesce, சேர. 2. To harmonize, agree, be suitable to, acquiesce, இசைய. 3. To be like, similar, ஒவ்வ. 4. To copulate, சையோகஞ்செய்ய.

இணைவு, *v. noun.* Union, conjunction, connexion, copulation, புணர்ச்சி.

இணை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To join, unite, conjoin, adjust, combine, சேர்க்க. 2. To couple, join in pairs, fasten together, connect, கூட்ட. 3. To compose verses, sentences, &c., வாசகமிணைக்க.

இண்டர், *s.* Shepherds, இடையர். (*p.*)

இண்டு, *s.* (also இண்டஞ்செடி, the final உ being dropped and அம் added.) A thorny creeper—as ஈகைக்கொடி, Mimosa rubicaulis, *L.*

செவ்விண்டு, *s.* The red species.

வெள்ளிண்டு, *s.* The white species.

இண்டை, *s.* The இண்டு creeper. 2. The lotus, தாமரை. 3. The முல்லை, a flowering shrub. 4. A garland, மாலை.

இதணம்—இதண், *s.* A high shed with a platform secure from wild beasts, for watching a field, காவற்பரண். 2. A scaffold, a raised platform, பரண். (*p.*)

*இதமியம், *s.* Pleasure, satisfaction, sweetness, இன்பம். [*ex* இதம்.] (*p.*)

*இதம், *s.* That which is acceptable, pleasant, agreeable, delightful, gratifying, welcome, இன்பமானது. 2. A good, benefit, நன்மை. Wils. p. 975. HITA. 3. Taste, gust, relish, இனிமை. 4. That which belongs, உரிமை. 5. Word, சொல்.

இதக்கேடு, *s.* Tastelessness, insipidity.

இதஞ்சொல்ல—இதம்பேச, *inf.* To give good advice, give appropriate counsel. (அரிச்சந்.) 2. To speak good things. 3. To speak kindly, sweetly, acceptably.

இதம்பண்ண, *inf.* To please, gratify a person, &c., இன்பஞ்செய்ய.

இதாகிதம், *s.* Good and evil, நன்று தீது. [*in usage* இதமகிதம்.] Wils. p. 975. HITAHITA.

வாய்க்கிதம், *s.* Being pleasant to the taste.

இதயம், *s.* The mind, heart. See இருதயம், of which it is a contraction.

*இதரம், *s.* That which is different or foreign, another, அன்னியம். 2. Vileness, lowness, ஈனம். Wils. p. 130. ITARA. 3. Ruin, evil, injury, தீங்கு. (பாரதம்.) 4. Quicksilver, பாதரசம்.

இதரபதார்த்தம், *s.* Other things, other objects, வேறுவஸ்துகள்.

இதரபதார்த்தானவச்சின்னவான்மா, *s.* The soul undetached, universal spirit undivided by union with a body, தேகப்பிணிப்பில்லாதவாத்துமா.

இதரர், *s.* Strangers, foreigners, aliens, அன்னியர். 2. Inferiors, persons of no worth or character, ஈனர்.

இதரவிதரம்—இதரேதரம்—இதரேதரவுவமை, *s.* [*in rhetoric.*] A reciprocal comparison—as கவிக்குங்கயல்போலுநின்கணின்கண்போற்கவிக்குங்கயலும். Your eyes resemble the carp-fish, and the carp resembles your eyes. [தண்டியலங்காரம்.]

இதலை, *s.* The navel, கொப்பூழ். (*p.*)

இதல், *s.* A partridge, கவுதாரி. 2. The bird called காடை, a quail.

இதவு, *s.* That which is pleasant, agreeable, gratifying—as இதம். (சது.)

இதழி, *s.* The கொன்றை tree, Cassia, *L.*

இதழ், *s.* The petals of a flower, பூவிதழ். 2. Lip, the lips, உதடு. 3. The eyelids, கண்ணிமை. 4. A palmyra leaf, a palm leaf, பனையேடு. 5. A strip of palm leaf or other materials for making baskets, mats, &c., வகிர்ந்தவோலை. 6. The strips in venetian windows, &c., கதவினிலை. 7. A square or diamond in braiding mats, பாயினிதழ். 8. Sheath of flowers, &c., பாளை. 9. Leaf, இலை. மீகீழிதழுறப்பம்மப்பிறக்கும். The letters ப, and ம, are produced by the lower lip coming in contact with the upper one. (நன்.)

இதழவிழ, *inf.* To open as a flower, மலர.

இதழ்குவிக்க, *inf.* To close as flowers. 2. To join the lips conically, &c. 3. (*fig.*) To shut the eyes.

இதழ்குவிவு, *v. noun.* Joining as the lips conically in sounding the letters, உ, ஊ, ஒ, ஓ, ஔ.

இதழ்கூட்ட, *inf.* To join the lips for speaking. 2. To join the lips—as infants when they begin to make articulate sounds.

இதழ்விள்ள, *inf.* To open as a flower, மலர. 2. To open the mouth, வாய்திறக்க. 3. To speak, பேச.

இதள், *s.* Quick-silver, இரசம்.

இதி, *s.* A devil, பிசாசம். 2. Strength, steadiness, firmness, உறுதி. (சது.)

*இதிகாசம், *s.* Ancient heroic history—a class of ancient books including the B'harata and Ramayana—one of the sixty-four கலைஞானம். Wils. p. 130. ITIHASA.

*இதியாசம், *s.* An example, an authority—as உதாரணம்.

இது, *s.* This, this thing, it, சுட்டுச்சொல்.

இதுகாரியமாய்வந்தான். He has come on this account.

இதற்குள். Within this. 2. Ere this, by this time, within or before this time.

இதை—இதால்—இத்துடன். Oblique forms of இது, occasionally found in approved writings as well as in common use.

இதோ, This! lo! behold!

இதோபார். Lo! see.

இதோவந்தான். See, he is come.

இதை, *s.* A kind of pulse used as food, காராமணி. 2. An enclosure newly cultivated, புதுக்கொல்லை—as விதைப்புனம். 3. The sail of a vessel, மரக்கலப்பாய். 4. A plough, கலப்பை. (*p.*)

இத்தி, *s.* A species of tree, one of the nine kinds of sacrificial fire-wood, கல்லால், Ficus virens, *L.*

இத்திநடையம், *s.* The snail, நத்தை.

இத்து, *s.* A kind of grass, காவட்டம்புல், Andropogon, *L.*

இத்துரு, *s.* Sand containing tin, ஈயமணல்.

இத்தை, s. A poetic expletive joined to verbs of the second person, முன்னிலை யசைச்சொல்.
நீபொன்றுபாடித்தை. Sing something.

இந்த. This, a demonstrative prefix, சுட்டு.

இந்தக்காரியம், s. This thing.

இந்தம், s. The tamarind tree, புளி யமரம். Tamarindus indica. (p.)

இந்தளம், s. A censer-stand, தூபக் கால். 2. A tune or musical mode, ஓர்பண்; [ex இந், to kindle.]

*இந்தனம், s. Fuel in general, விறகு. Wils. p. 133. Ind'hana. 2. Incense, நறும் புகை. 3. Above, high, மேல். 4. Flame சுவாலை. (p.)

இந்தா, [vul. honorifically இந்தாரும்.] A word signifying, take this, இதைவாங்கிக் கொள். 2. Come here, இங்கேவா.

இந்தி, s. A cat, பூனை. (p.)

இந்திகோபம், s. Lead, ஈயம். (M. Dic.)

இந்தியம், s. The senses—a contraction of இந்திரியம்.

*இந்திரகம், s. An assembly room, a hall, சங்கங்கூடுமிடம். Wils. p. 131. Indraka. (p.)

*இந்திரகீலம், s. The mandara mountain, மந்தரமலை. Wils. p. 131. Indrakeela.

இந்திரபம், s. A tree, வெட்பாலை, Wrightia antidysentirica.

இந்திரபாஷாணம், s. One of the thirty-two kinds of prepared arsenic.

இந்திரபுஷ்பம், s. A medicinal plant, ஓர்பூடு. Wils. p. 132. Indrapushpa.

*இந்திரம், s. An organ of sense—as இந்திரியம். 2. [in comp.] Excellency, what is best, மேன்மை. Wils. p. 131. Indra. (p.)

இந்திரகோபம், s. A scarlet insect appearing after rain, the cochineal, தம் பலப்பூச்சி, Coccinella; [ex இந்திர, best, கோ, light, et ப, which nourishes.] Wils. p. 131. Indragopa.

இந்திரசாலம், s. Conjuring, juggling—one of the sixty-four கலைஞானம்; [ex சாலம், net.] Wils. p. 132. Indrajala.

இந்திரமாசாலம், s. The art of producing supernatural and wonderful appearances, இந்திரசாலம்.

இந்திரநீலம், s. Sapphire. Wils. p. 132. Indraneela.

இந்திரவல்லி, s. The கொத்தான் plant or creeper, Cassyta filiformis, L. 2. The பிரண்டை creeper.

இந்திரவாசம், s. The நெய்தல் plant, Nymphæa pubescens, L.

*இந்திரன், s. Indra, king of the Devas or genii who inhabit Swerga, lord of the clouds, rain, seasons, crops, and worshipped at the seasons of sowing and reaping, வானவன். In composition it signifies chief, prime, supreme, &c. Wils. p. 131. Indra. 2. The fifth constellation of the Hindus, மிருகசீரிடம். (p.)

இந்திரசித்து, s. The conqueror of Indra, the son of Ravana, மேகநாதன். Wils. p. 132. Indajit.

இந்திரசிற்பம், s. A work on architecture, சிற்பநூலிலொன்று.

இந்திரதனு—இந்திரவில், s. The bow of Indra, the rainbow, வானவில்; [ex தனு, bow.]

இந்திரதிசை—இந்திரி, s. The east, கிழக்கு.

இந்திரபதம், s. The world of Indra, இந்திரலோகம்.

இந்திரபிரகரணம், s. Indra's thunderbolt, இடி. Wils. p. 132. Indrapraharan'a.

இந்திரப்பிரஸ்தம், s. Ancient Delhi, பாண்டவர்நகரம். Wils. p. 132. Indraprastha.

இந்திரவியாகரணம், s. A Sanscrit grammar, said to be written by Indra.

இந்திரனாள், s. The eighteenth lunar mansion—the day in which Indra was born, கேட்டைநாள்.

இந்திரன்மைந்தன், s. The son of Indra, சயந்தன். 2. Arjuna, அருச்சுனன்.

இந்திராணி, s. Wife of Indra, இந்திரன்மனைவி; [ex அணி, she who is united.] Wils. p. 132. Indran'i.

இந்திராவரசன்—இந்திராநுசன், s. Vishnu the younger brother of Indra, விட்டுணு. Wils. p. 132. Indravaraja and Indranuja.

கசேந்திரன், s. The name of the chief elephant, that was delivered by Vishnu, from the mouth of an alligator.

உபேந்திரன், s. Vishnu, விட்டுணு.

நரேந்திரன், s. The king of men. 2. A lord, superior, இறைவன்; [ex நரர், men.]

தேவேந்திரன், s. The king of the Devas.

முனீந்திரன், s. The chief among the munis.

*இந்திரியம், s. [contracted into இந்தியம்.] An organ of sense, or organ of the body, பொறி; [ex இந்திர, the soul or self, or what is with difficulty restrained by the soul.] There are three kinds of இந்திரியம், or sensual organs; viz.: those of perception, those of action and the intellectual organs. Wils. p. 133. Indrya. I. ஞானேந்திரியம், the organs of sense or perception are five; viz.: 1. சக்கு, சட்சு or கண், the eye, the organ of sight having உருவம் or visible forms as its object. 2. சோத்திரம் or செவி, the ear, the organ of hearing, having சத்தம், (sound) as its object. 3. ஆக்கிராணம் or மூக்கு, the nose, the organ of smelling, having கந்தம், (odors) as its object. 4. சிங்குவை or நா, the tongue, the organ of tasting, having இரசம், (flavors) as its object. 5. தொக்கு or துவக்கு or உடம்பு, the surface of the body, the organ of feeling, having பரிசம், (touch or contact) as its object. II. கன்மேந்திரியம், or organs of actions are five; viz.: 1. வாக்கு, the mouth or organ of speech. 2. பாதம், the feet. 3. பாணி, the hands. 4. பாயுரு, the anus. 5. உபஸ்தம், the genitals. III. அந்தக்கரணம் or அந்தரிந்திரியம், the intellectual powers are four; viz.: 1. மனம், the organ of thought or perception, emotion. 2. புத்தி, understanding, conception, reason, intellect—the organs of examination, investigation, reflection, comparison, device, experiment. 3. அகங்காரம், emotion, self-importance, inflation, presumption, energy, impulse, the organ of excitement, resolution, effort, &c. 4. சித்தம், volition, will, purpose, determination, that power of the mind which leads to the accomplishment of objects. 2. The sperm, seed of men, விந்து.

இந்திரியகோசரம், s. Perceptibleness, capability of being determined by the senses, இந்திரியத்துக்குவிஷயமாகுகை. Wils. p. 132. Indryagochara.

இந்திரியகாட்சி—இந்திரியப்பிரத்தியட்சம், s. Evidence of the senses.

இந்திரியத்துவாரம், s. The inlets or avenues of the senses—as means of perception.

இந்திரியநிக்கிரகம், s. The subjugation of the passions, இந்திரியமடக்குகை.

இந்திரியநுகர்ச்சி, s. Enjoyment of sense, இந்திரியானுபவம்.

இந்திரியாசங்கம், s, Stoicism, detachment from sensual objects, விஷயவெறுப்பு; [ex ஆசங்கை, doubt.]

*இந்திரை, s. Lukshmi, இலக்குமி. (p.) 2. Orpiment, a prepared arsenic, அரிதாரம்.

இந்திரைகேள்வன், s. Vishnu, the consort of Lukshmi, விட்டுணு.

இந்திரைக்குமூத்தாள், s. The goddess of ill-luck, the elder sister of Lukshmi, மூதேவி.

*இந்தீவரம், s. The blue lotus, கருநெய்தல், Pontederia vaginalis, L. 2. The black குவளை flower. Wils. p. 131. Indeevara.

*இந்து, s. The moon, சந்திரன். 2. Crude camphor, பச்சைக்கர்ப்பூரம். Wils. p. 131. Indu. 3. A bear, கரடி. 4. A charcoal, கரி. 5. A kind of prepared arsenic, கௌரிபாஷாணம். 6. The river Indus, சிந்துநதி.

இந்துகாந்தம், s. The lunar gem, the moon-stone, சந்திரகாந்தக்கல்.

இந்துஸ்தானி, s. The Hindustani language, ஓர்பாஷை.

இந்துதேசம், s. India, a country, சிந்துதேசம்.

இந்துரவிகூட்டம், s. The conjunction of the sun and moon, the new moon, அமாவாசியை.

இந்துரேகை, s. A digit of the moon used in Hindu Astronomy, சந்திரகலை.

இந்துப்பு, s. A fossil salt, brought, it is said from Ormus and much esteemed in medicine. 2. Cloride of Sodium. 3. Muriate of Ammonia.

இந்துழி—இந்துளி, s. Narthex assafœtida, பெருங்காயம்.

இந்துளம், s. The Cadamba tree, கடம்பமரம், Nauclea cadamba, L.

இந்துள், s. The நெல்லி tree, Emblica officinalis, L.

*இந்தோளம், s. One of the new musical tunes for the morning, ஓர்ராகம். 2. A swing, ஊசல். Wils. p. 975. Hindola.

இபங்கம், *s.* A species of sour mango tree, புளிமா. (*p.*)

*இபம், *s.* An elephant, யானை. Wils. p. 133. IB'HA. (*p.*)

இபம், *s.* A branch of a tree, மரக்கொம்பு. (*p.*)

*இபவ, *s.* As விபவ—the second year of the Hindu cycle.

இப்பந்தி, *s.* A feeble or weak person, பலவீனன். 2. A hermaphrodite, பேடி. 3. A miser, உலோபி. 4. A stupid fellow, a dunce, வகைதெரியாதவன்.

இப்பந்தியாடு, *s.* A sheep begotten by two different species, ஓர்வகையாடு.

இப்பர், *s.* The third of the four regular castes, வைசியர்பொது. 2. Merchants, தனவைசியர். 3. Herdsmen, கோவைசியர். (*p.*)

இப்பி, *s.* Bivalvular shell-fish, oysters, pearl-oysters or the shell of such fish, சிப்பி. 2. The conch-shell, சங்கு. (*p.*)

*இமம், *s.* Frigidity, coldness, சீதளம். 2. Frost, snow, உறைந்தபனி. Wils. p. 975. HIMA. 3. Gold, பொன். (*p.*)

இமகரன், *s.* The moon, சந்திரன். Wils. p. 975. HIMAKARA.

இமகிரி—இமாசலம்—இமாலயம், *s.* The Himalaya, or cold mountains which bound India on the north—the Imus or Emaus of the ancients, giving rise to the Ganges, Indus and other rivers, இமயமலை. Wils. p. 976. HIMALAYA.

இமப்பிரவை, *s.* One of the seven hells, எழுநரகங்களிலொன்று.

இமவான், *s.* The Himalaya range. Wils. p. 975. HIMAVAT.

*இமயம்—இமையம், *s.* The Himalaya—as இமாசலம். Wils. p. 975. HIMAJA. 2. The gold mountain, பொன்மலை.

இமயவல்லி, *s.* Parvati who was born on the Himalaya mountain, and said to be like an entwining creeper, பார்வதி. (*p.*)

இமயவில்லி, *s.* Siva, சிவன். (*p.*)

இமலம், *s.* A medicinal tree, மரமஞ்சள்.

*இமிசை, *s.* Killing, slaughter, கொலை. 2. Pain, affliction, வருத்தம். Wils. p. 974. HIMSA.

இமிர், கிறது, ந்தது, இமிரும், இமிர, *v. n.* To sound, hum, buzz, &c., ஒலிக்க. 2. To rush, swarm, crowd, to be thick together, மொய்க்க. (*p.*)

வண்டிமிர்கோதை. A garland of flowers in which bees swarm.

இமில், *s.* The hump or bunch on a bullock's back, எருத்துத்திமில். (*p.*)

இமிழ், *s.* Sound, hum, roar, &c., ஒலி. 2. Sweetness, இனிமை. 3. (*fig.*) A drum, பறை. (*p.*)

இமிழ், கிறது, ந்தது, இமிழும், இமிழ, *v. n.* To be sweet, இனிக்க. 2. To sound, roar, hum, &c., ஒலிக்க. (*p.*)

இமிழ்கடல், *s.* The roaring sea.

இமிழ்முரசு, *s.* The sounding drum.

இமிழ், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To sound, ஒலிக்க. 2. To vomit, spew, eject from the mouth—as after gargling, கொப்பளிக்க. 3. To bind, tie, கட்ட. (*p.*)

இமை, *s.* The eye-lid, கண்ணிமை. 2. A twinkle, twinkling of the eye, கண்ணிமைப்பொழுது. 3. (*p.*) A small or minute thing, a particle, அற்பம். 4. A bear, கரடி. 5. A peacock, மயில்.

கண்ணிமைகைந்நொடியளவே மாத்திரை. The time of a twinkling of the eye, or snapping of the finger is the duration of a மாத்திரை.

இமைகொட்ட, *inf.* To twinkle, இமைக்க.

இமைக்குழிவு, *s.* A hollow formed within the eye-lid, causing acute pain.

இமையவர்—இமையோர், *s.* The gods who never sleep nor wink, வானவர். (*p.*)

இமையவர்வேந்தன், *s.* Indra the king of the gods, இந்திரன்.

இமையாட, *inf.* To twinkle—as the eyes.

இமையில், *s.* Garuda—the watchful bird that never shuts its eyes—the vehicle of Vishnu, கருடன். (*p.*)

இமை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To twinkle with the eyes, to wink, இமைகொட்ட. 2. (*p.*) To coruscate—as the stars, to glitter, emit light, ஒளிசெய்ய.

இமையாநாட்டம் பெற்றிலமென்றார். (The terrestrial inhabitants) exclaimed we are not gifted with unwinking eyes (as the gods.)

இம்பர், *s.* Here, this place, இவ்விடம். 2. This world, இவ்வுலகம். See அம்பர், and எம்பர். (*p.*)

இம்பூறல், *s.* A root for dying scarlet—as சாயவேர், Chaya root or Indian madder, Oldenlandia umbellata, *L.*

இம்பூறற்சக்களத்தி, *s.* A plant, Hedyotis dichotoma.

இம்மடி, *s.* Elephant, யானை. (*p.*)

இம்மி, *s.* The smallest fraction, the 1075,200th part of a unit—$10\frac{1}{2}$ இம்மி make one கீழ்முந்திரிகை. Of these three-hundred-and-twenty make one மேல்முந்திரிகை, of which, three-hundred-and-twenty make a unit, ஒரொன். 2. An atom, a minute particle, நுண்மை. 3. (*p.*) Gold-color, பொன்மை. 4. Information, புலம். 5. (நாலடி.) The grain of a certain grass, மத்தங்காய்ப்புல்லரிசி.

இம்மெனல். An imitative sound, இம்—as expressive of haste, அனுகரணவோசை. 2. A particle of quickness, விரைவுக்குறிப்பு. (*p.*)

இம்மெனவந்துவிட்டான். He is come already.

இம்மெனுமளவுநீங்காதென்செய்வானேங்கினனே. (The spectre) not being separated, from him, even for a moment, he was frightened, finding no means to be rid of it. (திருவிளை.)

இம்மை, *s.* The present birth—as distinguished from the past or future, the present state, this life, இப்பிறப்பு. (*p.*)

இம்மையிலனுபோகம், *s.* The enjoyments or sufferings of the present state.

*இயக்கம், *s.* Greatness, wealth, power, ability, physical strength, பெருமை. 2. (*p.*) Light, brightness, பிரகாசம். 3. The north, northern point of the compass, வடதிசை.

இயக்கர், *s.* One of the eighteen classes of demigods, பதினெண்டேவகணத்களிலோர்வகையார்.

இயக்கர்கோமான், *s.* Kuvêra, the king of இயக்கர்.

*இயக்கன், *s.* Kuvêra, குபேரன். Wils. p. 677. YAKSHA. (*p.*)

இயக்கன், *s.* A dog, நாய். (*p.*)

இயக்கி, *s.* Goddess of benevolence, தருமதேவதை. (*p.*)

இயக்கு, கிறேன், இயக்கினேன், வேன், இயக்க, *v. a.* [*causative of* இயங்கு.] To cause to go, move or pass, செலுத்த. 2. To train, reduce to order, break in (a horse, ox, &c.) to exercise, practise, பழக்க. 3. To direct, influence, manage, perform, command, நடத்த. 4. To operate in sentient beings—as the Deity, who, being the life of their life, influences their movements and is himself the agent in every action they perform, இயங்குவிக்க.

காளையையியக்க, *inf.* To train a steer to the plough.

இயங்கு, *s.* The இசங்கு shrub, ஓர்முட்செடி, Monetia tetracantha.

இயங்கு, கிறேன், இயங்கினேன், வேன், இயங்க, *v. n.* To move, stir, அசைய. 2. To go, walk, நடக்க. 3. To move about, உலாவ. 4. To respire, breathe, மூச்சியக்க. 5. (*p.*) To appear, be visible, to shine, ஒளிசெய்ய. 6. To abide, தங்க.

இயக்கம், *v. noun.* Motion, locomotion, going, moving, action, அசைவு. 2. Respiration, motion connected with life, பிராணவியக்கம்.

என்பியக்கங்கண்டும்புறந்தரார். They relinquish not (their austerities) though their very bones protrude. (நீதிநெறி.)

எல்லாங்கருத்தாவினியக்கம். All things are kept in motion by God.

இயக்கு, *v. noun.* Motion, going, action, அசைவு. (*p.*)

*இயசுரு, *s.* The second Veda which particularly treats of the ceremonies to be performed in sacrifices, இரண்டாம்வேதம்—as யசுரு. Wils. p. 678. YAJUS. (*p.*)

*இயத்தினம், *s.* Effort, exertion, perseverance, energy, முயற்சி. Wils. p. 679. YATNA. 2. Preparation, ஆயத்தம். 3. Means, கருவி.

*இயந்திரம், *s.* A machine, an engine in general, any piece of mechanism, சூத்திரம். (See எந்திரம்.) 2. A diagram of a mystical nature or astrological character, சக்கரம். Wils. p. 680. YANTRA. 3. (*p.*) Engines set on fortifications—as weapons, bombs, &c., மதிலுறுப்பு. 4. A car, தேர். 5. A press for pressing sugar-cane, ஆலை.

இயந்திரமயில், *s.* The mechanical peacock, caused to rise in the air by means of machinery.

இயந்திரமியற்ற, *inf.* To form or construct machines, &c. (*p.*)

இயந்தை, *s.* A kind of guitar used especially by husbandmen, மருதயாழ்த்திறம். (*p.*)

*இயமம், *s.* One of the eight yogas, அட்டாங்கயோகத்தொன்று. See யோகம். Wils. p. 681. YAMA. (*p.*)

*இயமன், *s.* Yama the god of death, regent of the south, and king of hell, (நரகம்,) the place of his capital, in which he sits in judgment on departed souls, sending the good to Swerga and the wicked to Naraka. In the latter there are 280,000,000 divisions appropriated to different classes, according to their respective demerits. He is figuratively described as devouring souls for food. He takes the buffalo for his vehicle; and for weapons, the battle-axe, club and cord, நமன்; [*ex* யம, to stop, restrain.] Wils. p. 681. YAMA. 2. [*Med. usage.*] One of the two poisonous fangs of snakes, பாம்பினச்சுப்பற்களி லொன்று.

இயமகணம்—இயமகிங்கரர்—இயமதூதர்—இயமபடர், *s.* The messengers of Yama, நமன்றூதர்.

இயமதூதி, *s.* One of the lower poisonous fangs of a snake.

இயமலோகம், *s.* The place of departed souls, the purgatory of the Hindus—the kingdom of Yama.

*இயமானன், *s.* The conductor of a sacrifice, one who institutes it and directs its performance, யாகஞ்செய்விப்போன். Wils. p. 678. YAJAMANA. 2. A master, manager, chief, lord, யசமானன். 3. The life, the soul, உயிர். (*p.*)

இயமானன்சதமகனுவிருத்தி. Invoking Indra to preside at a sacrifice.

இயமானகணம், *s.* One of the eight kinds of ominous feet. See கணம். (*p.*)

*இயமான், *s.* [*contr. of* யஜமானன்.] A master, manager, conductor. See also எசமான்.

இயம், *s.* Sound in general, ஒலி. 2. Musical instrument, வாச்சியம். 3. A word, சொல். 4. Fly, ஈ. (*p.*)

இயம்பு, கிறேன், இயம்பினேன், வேன், இயம்ப, *v. a.* To say, speak, utter, சொல்ல. 2. To sound instruments, வாச்சியமுழக்க. 3. *v. n.* To sound, roar, ஒலிக்க. 4. To sound—said of instruments, வாச்சியமொலிக்க. (*p.*)

கோடியம்பியும். Blowing the horn.

காரொடுபௌவமின்றியம்புவது. The roaring of the sea and clouds.

இயம்பல், *v. noun.* Saying, speaking, uttering. 2. Sounding instruments. 3. *s.* A proverb, maxim, by-word, old sayings, பழமொழி.

இயல், *s.* Nature, natural property or quality, குணம். 2. Good conduct, conduct appropriate to a person's caste, rank, office, &c., ஒழுக்கம். 3. Order, course, rule, method, ஒழுங்கு. 4. Aspect, appearance, shape, likeness, சாயல். 5. Melody, musical harmony, இசை. 6. A chapter, section treating of a series of subjects or things in order, ஓத்து. 7. Natural and plain Tamil. (See இயற்றமிழ்.) 8. Destiny, appointment, assignation, decree, allotment, விதி. 9. Grammar, இலக்கணம். (*p.*)

கோவியலோம்புறுகொள்கையன். One disposed to maintain a course of conduct proper for a king.

இயலுவமம், *s.* [*in rhetoric.*] A comparison of the properties of different things, பண்புவமை.

இயற்சீர், *s.* The ஆசிரியவுரிச்சீர் verse—a metrical foot of four அசை. See சீர்.

இயற்சீர்வெண்டளை, *s.* Combination of two simple or ஆசிரியம் feet, or connection of an ஆசிரியம் foot, ending with a compound அசை, with another beginning with a simple one, or vice versa, மாமுன்னிரையும்விளமுன்னேருமொன்றிவருவது.

இயற்சொல், *s.* A word in common use—in distinction from திரிசொல்—exclusively poetic usage—words understood both by the learned and unlearned.

இயற்பெயர், *s.* Proper or arbitrary names, titles, terms of office, &c., இயல்பாயிடப்பட்டபெயர்; also names of things indicating a whole—as distinguished from parts. 2. Simple or original names—as distinguished from ஆகுபெயர் or derived names, செம்பொருளையுணர்த்தும்பெயர்.

இயற்றமிழ், *s.* Natural Tamil, whether common or poetic—as distinguished from இசைத்தமிழ், or Tamil adapted to music, and நாடகத்தமிழ் or dramatic Tamil, in both of which various changes occur in combination, construction, &c., முத்தமிழினொன்று.

இயற்றளை, *s.* Connection of ஆசிரியம் verse—as ஆசிரியத்தளை. See தளை.

இயனூல், *s.* A system of grammatical rules.

இயன்மொழிவாழ்த்து, *s.* A poem instructing children by the good disposition and behavior of their forefathers, ஓர்பிரபந்தம்.

இயல்—இயலு, கிறது, இயன்றது, இயலும், இயல, *v. n.* To be able, be possible, கூடியதாயிருக்க. 2. (*p.*) To be incident to, be exposed, பொருந்த. 3. To agree, suit, be adapted to, இசைய. 4. To be done, performed, made or composed, ஆக. 5. To be destined, decreed, allotted, விதிக்கப்பட. 6. To happen, pass, to be in vogue, நடக்க.—*Note.* This word is often changed to ஏலு both in poetry and in the colloquial language.

இயல்வதுகரவேல். Do not refrain from doing what is in your power.

வெயிலியல்வெஞ்சுரம். The parched desert exposed to the scorching beams of the sun.

தச்சனுலியன்றவீடு. A house made by the carpenter.

என்னாலியலாது. I am not able, I cannot do it.

என்னாலியன்றவளவும். To the extent of my ability, as much as I can.

இயலாமை, *neg. v. noun.* Impracticability, impossibility, incompetency, கூடாமை.

இயல்பு—இயல்வு, *v. noun.* Ability, being able.

இயல்பாயிருக்க, *inf.* To be able, be influential.

இயல்புள்ளவன், *s.* A man of ability.

இயல்பு, *s.* Nature, property, quality, natural or essential quality, instinct, genius, குணம். 2. Conduct, a proper course of conduct, good character, ஒழுக்கம். 3. A prescribed rule, order, method, custom, habit, முறை. 4. State, condition, circumstances, situation, rank, class, &c.—as applicable to man, brute, vegetable, &c., தன்மை. 5. Propriety, regularity, legitimacy, genuineness, நேர்மை. 6. Simplicity, plainness, honesty, frankness, இயற்கை.

இயல்பினானில்வாழ்க்கைவாழ்பவன். The householder who discharges his domestic duties with propriety. (குறள்.)

இயல்பானபகை, *s.* What is naturally uncongenial or counteracting—as medicine to the disease.

இயல்பானபகையாளி, *s.* A foe by nature—as the cat to birds.

இயல்புதப்பிப்போக, *inf.* To be dishonest, to act dishonestly, live disorderly, go beyond the proper bounds.

இயல்புப்புணர்ச்சி, *s.* [*in grammar.*] Combination of words suffering no change, விகாரங்களின்றிப்பதம்புணர்வது—as பொன்மணி. (*p.*)

நல்லியல்புடையோன், *s.* One of a good nature.

தீயியல்புடையோன், *s.* One of a bad nature.

*உபவாசம், s. A fast comprising abstinence from food and drink, and in some cases, also from venery, from the use of a matrass or mat, &c. when sleeping, and even from sleep. It is connected with the observance of religious duties: some fasts are continued for nine days in succession with only a little water, milk or fruit occasionally taken, உணவொழிக்கை. 2. A fire-altar, ஓமபீடம். Wils. p. 158. Upavasa.

உபவாசதினம், s. A fast day.

உபவாசம்பண்ண, *inf.* To fast.

உபவாசவிரதம், *s.* Abstinence from food, fast.

உபவாசி, *s.* A person performing a fast. Wils. p. 158. Upavasin.

உபவசிக்க, *inf.* To fast, நோற்க.

*உபவீதம், *s.* The thread or cord worn by Brahmans and others, over the left shoulder, பூணூல். Wils. p. 158. Upaveeda.

*உபவேசனம், *s.* Sitting, உளுக்கா ருகை. 2. Voiding by stool, மலங்கழிக்கை. Wils. p. 158. Upavesana.

உபறியாவி, *s.* The கோட்டம் plant, Cortus, *L.*

*உபாகமம், *s.* [*pref.* உப.] A class of books secondary to the Agamas, சார்பாகமம்.

*உபாகருமம், *s.* [*pref.* உப.] Ceremonies performed before reading the Vedas, a preparation, வேதமோதற்குமுன்செய் யுஞ்சடங்கு. Wils. p. 160. Upakarmman.

*உபாகிதை, *s.* A meteor, a comet, விண்வீழுங்கொள்ளி. Wils. p. 161. Upahita.

*உபாக்கியானம், *s.* [*pref.* உப.] A tale, a story, a narrative, இதிகாசம். Wils. p. 160. Upakhyana.

உபாக்கியானஞ்சொல்ல, *inf.* To repeat a narrative. (உப. 407. top.)

*உபாங்கம், *s.* [*pref.* உப.] Necessary appendages—as cloths, ornaments, weapons, sectarial marks, &c., மார்க்கத்துக் குரியகுறி. 2. Component parts as the eyes, mouth, nose, &c., are of the face சார்பானவுறுப்பு. Wils. p. 160. Upanga.

*உபாசனம், *s.* [*pref.* உப.] A seat, ஆசனம். 2. Archery, வில்வித்தை. Wils. p. 161. Upasana.

*உபாசனை, *s.* Worship, adoration, religious practice, ஆராதனை. Wils. p. 161. Upasana.

உபாசனைபண்ண, *inf.* To worship, serve, adore. (சத. 56.)

மந்திரோபாசனை, *s.* The repetition of incantations in worship with the appropriate rites.

உபாசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To worship, adore, perform religious rites, ஆராதிக்க.

*உபாதானம், *s.* [*pref.* உப.] Proximate cause, the material cause—as clay is to the earthen vessel; gold to the ring from which they are made, cause, origin, முதற்காரணம். 2. Presents to priests or religious mendicants of uncooked rice, &c., usually a handful, அரிசிப்பிச்சை. When cooked it is called, அன்னதானம். 3. Restraining the organs of sense, ஐம்புலனடக்கு கை. Wils. p. 160. Upadana.

*உபாதி, *s.* Severe pain, torment, agony, distressing rage of the passions, வாதை. 2. Disease, ailment, வியாதி. 3. (*fig.*) Difficulty, obstruction, வருத்தம்.

உபாதிப்பட, *inf.* To suffer, to be distressed, afflicted.

*உபாதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To cause distress, to afflict, torment, torture, plague, உபத்திரவஞ்செய்ய.

*உபாத்தியாயன், *s.* A teacher of the Vedas, வேதங்கற்பிப்பவன். 2. A preceptor, a schoolmaster (commonly), உபா த்தி. 3. Family augur, புரோகிதன். Wils. p. 160. Upathyaya.

*உபாந்தியம், *s.* The corner of the eye, கடைக்கண். 2. The last but one, penultimate, ஈற்றயல். Wils. p. 160. Upantya.

*உபாயம், *s.* Means, contrivance, expedient, device, good or bad, skill in accomplishing an object, சூழ்ச்சி. 2. Stratagem, artifice, craft, shift, art, cunning, shuffling, intrigue, தந்திரம். 3. The means for bringing an enemy to terms, of which four are enumerated, viz.: 1. சாமம், conciliatory measures. 2. பேதம், sowing dissension. 3. தானம், gifts, presents. 4. தண் டம், chastisement, punishment (by war), அரசர்க்குரியவுபாயம். 4. [*vul.*] Smallness, சொ ற்பம். Wils. p. 160. Upaya.

உபாயக்காரன்—உபாயி, *s.* An artful person, a schemer, contriver, தந்திரக்காரன்.

உபாயஞ்சூழ, *inf.* To contrive, scheme.

உபாயஞ்சொல்ல, *inf.* To give counsel.

உபாயதந்திரம், *s.* Devices, craftiness, subtility.

உபாயமானவிளையாட்டு, *s.* Artful cheating in play.

உபாயம்பண்ண, *inf.* To adopt stratagems, to contrive, employ address, use means.

உபாயவிலக்கு, *s.* [*in rhetoric.*] Artfully endeavoring to prevent an act, by representing the evil which will happen to one's self—as when a wife dissuades her husband from leaving her by declaring that, in case he does, she must die, ஓரலங்காரம்.

உபாயோபாயம், *s.* Various means or artifices. 2. Cunning for cunning in retaliation, &c.

மோட்சம்பெறுமுபாயம்—மோட் சோபாயம், *s.* Means for obtaining eternal bliss.

உபானம்—உபானவரி, *s.* Ornamental line above the lower wall of a temple where the tower begins, கோபுரத் தினடிச்சித்திரவரை.

உபுக்கு, கிறது, உபுக்கினது, ம், உபு க்க, *v. n.* [*prop.* உப்புகிறது.] To swell, overflow, பெருக.

*உபேட்சை, *s.* [*pref.* உப.] Neglect, indifference, connivance, abandonment, அலட்சியம். Wils. p. 161. Upeksha.

உபேட்சிக்க, *inf.* To neglect, disregard, connive at, அலட்சியம்பண்ண. 2. To abandon, leave, forsake, கைவிட.

*உபேந்திரன், *s.* [*pref.* உப.] The younger brother of Indra—an incarnation of Vishnu, விட்டுணு. Wils. p. 161. Upendra.

உபோதம், *s.* The பேய்ப்பசளை plant, Portulaca, *L.*

உப்பக்கம், *s.* [*pref.* உ.] The back, முதுகு. (*p.*)

உப்பட்டி, *s.* [*prov.*] A sheaf, அரிக்கட்டு.

உப்பரவர், *s.* A tribe of tank or well-diggers, &c., குளமுதலியவகழ்வோர்.

உப்பரிகை, *s.* [*pref.* உ.] An upper room or terrace, மேனிலைமாடம்.

உப்பிலி, *s.* A kind of running plant, the இண்டு. 2. A plant, ஈர்கொல்லிக் கொடி, Pentatropis microphylla, *Willd.*

உப்பு, *s.* Salt, any species of salt, acid or alkaline, லவணம். 2. Saltness, உவர்ப்பு. 3. The sea of salt-water—as distinguished from the other seas of Hindu cosmogony, the ocean, கடல். 4. Sweetness, deliciousness, இனிமை. (கு. 382. 8.) 5. A kind of play among females, மகளிர்விளையா ட்டு. 6. Melody, music, அராகம். 7. A heap of sand used as a goal in the game of prison-bars, விளையாட்டுமணற்குவியல்.—*Note.* Five salts are spoken of as used by alchymists and சித்தாதிகள்; viz.: 1. கறியுப்பு, culinary salt. 2. வெடியுப்பு, salt-petre. 3. இந்துப்பு, a fossil, medicinal salt. 4. ஓட்டு ப்பு, salt supposed to be formed in the skull. 5. அமரியுப்பு, Urinary salt.

இந்தப்பேச்சிலேஉப்பில்லை. This speech is void of savor.

உப்பங்கழி, *s.* Salt-pan, உப்புக் கழி.

உப்பளம், *s.* Salt-works, salt-pans, உப்புவிளைநிலம். 2. Brackish land, கழி.

உப்பளங்கட்ட, *inf.* To construct salt-pans.

உப்பளம்பாய்ச்ச, *inf.* To convey water into the salt-pans.

உப்பளவர்—உப்பமைப்போர், *s.* Saltmanufacturers.

உப்பிட—உப்புப்போட, *inf.* To salt.

உப்பில்லாப்பேச்சு, *s.* Insipid discourse.

உப்புக்கசனை—உப்பூறணி, *s.* Being impregnated with salt, as land.

உப்புக்கட்டி, *s.* A granulation on a lump of salt.

உப்புக்கண்டம், *s.* Salted meat, a piece of saltfish, flesh, &c.

உப்புக்கண்டம்பறிகொடுத்தபார்ப்பாத்திபோல.... Like a Brahmanee who has lost her salted mutton [*prov.*], used when something is lost which cannot be inquired after.

உப்புக்கரித்தல்—உப்புக்கூர்த்தல், *v. noun.* Having a saline taste.

உப்புக்கீரை, *s.* A plant used for curry, ஓர்வகைக்கீரை. 2. A kind of curry made of that plant, ஓர்கறி.

உப்புக்குத்தி, *s.* A kind of bird, ஓர்பட்சி.

உப்புக்கொள்ளுகிறது. A play, taking a child on the back and crying, *Salt for sale*, ஓர்விளையாட்டு.

உப்புச்செய்ய—உப்புவிளைவிக்க—உப்பமைக்க, *inf.* To make salt, உப்புண் டாக்க.

உப்புத்தண்ணீர், *s.* Salt-water, brackish water.

உப்புத்தரை—உப்புத்தரவை, *s.* Brackish soil.

உப்புத்திராவகம், *s.* Muriatic acid, இலவணதிராவகம்.

உப்புத்திரி, *s.* A twist dipped in a preparation of salt, to serve as an injection for a child, மலக்கழிக்கஏற்றுந்திரி.

உப்புப்பட, *inf.* To form as salt in pans, &c., by natural process, உப்புண்டாக.

உப்புப்பாத்தி, *s.* The divisions or beds in salt-pans.

உப்புப்பாத்திகட்ட, *inf.* To make salt-pans.

உப்புப்பார்க்க, *inf.* To try the seasoning of curry, &c. by the taste, உப்புருசிபார்க்க.

உப்புப்பால், *s.* The milk of the mother after child birth for three days.

உப்புப்புல்லு, *s.* Grass growing in salt soil.

உப்புப்பூக்க—உப்புப்பொரிய, *inf.* To begin to form—as salt; to form as the lamina, உப்புமலர. 2. To have a pale color on the skin, perhaps a concretion from perspiration, சரீரத்திலுப்புப்பட.

உப்புப்புளிதள்ள, *inf.* To abstain from salt and acid things—a regimen in medical prescriptions.

உப்புப்புளிப்புப்பார்க்க, *inf.* To examine the taste of curries, சுவையினிசைவுபார்க்க. 2. (*fig.*) To examine, make inquiry beforehand. பரீட்சைபார்க்க. 3. (*fig.*) To try or examine a part of a work, &c. in order to form an estimate of the whole.

உப்புவாணிகர், *s.* Salt dealers, the caste, உமணர்.

உப்புவாணிகனறிவானோகர்ப்பூரவிலை? Is a salt dealer acquainted with the price of camphor?

உப்புறைப்பு, *s.* Saltishness, flavoring of salt, உப்புக்கரிப்பு.

காய்ச்சுப்பு or சவட்டுப்பு, *s.* Alkali, salt produced from the earth impregnated with soda.

வழலையுப்பு, *s.* Soap.

கறியுப்பு—கடலுப்பு, *s.* Sea-salt.

காருப்பு, *s.* Salt produced from sesamum seed, கடுகிலாலவணம்.

வளையலுப்பு, *s.* Fel vitri, glass-gall; a very white salt.

கல்லுப்பு, *s.* Salt in lumps.

கந்தகவுப்பு, *s.* Salt produced from sulphur.

கறுத்தவுப்பு, *s.* Black salt produced from the ashes of certain plants.

மரவுப்பு, *s.* Potash.

உப்பு, கிறது, உப்பினது, ம், உப்ப, *v. n.* To swell, bloat, puff up—as the belly by wind, indigestion, &c., வீங்க. 2. To rise—as leaven, &c., பொங்க. (*c.*)

உப்பிப்போனமா, *s.* Risen dough.

உப்பினவயிறு, *s.* A swollen belly.

உப்புசம், *s.* Internal swelling preventing respiration and causing asthma, வயிற்றுவீக்கம்.

உப்பை, *s.* One of the four celebrated female authors, the daughter of ஆதி and பகவன்; the names of her sisters, are ஔவை, உறுவை and வள்ளி. Three brothers of the same family வள்ளுவர், கபிலர் and அதிகமான் are also celebrated for moral writings.

உமணர், *s.* Saltmakers, saltdealers, the caste, உப்பமைப்போர். (*p.*)

உமணத்தி, *s.* A female of the உமணர் caste. (*p.*)

*உமம், *s.* A wharf, landing place, இறங்குதுறை. Wils. p. 162. Uma.

உமரி—உமிரி, *s.* A kind of delicate, brittle herb, saltish in taste, growing in sandy soils which are occasionally overflowed by the sea. It is used for pickles. Salicornia Indica, *L.* There are various kinds—as காட்டுமரி, சிற்றுமரி, நிலவுமரி, பேருமரி, and சீருமரி. 2. A snail, நத்தை.

உமரிக்காசு, *s.* Cowries, shells used as money.

உமலகம், *s.* An orpiment, அரிதாரம்.

உமலோத்திரம், *s.* See உபலோத்திரம்.

உமல், *s.* [*prov.*] A bag made of palmyra leaves or rushes, ஓலைப்பை.

உமற்கடம், *s.* The cusa grass, தருப்பை.

*உமாகடம், *s.* A cluster of flax. Wils. p. 162. Umakada.

*உமாதசி, *s.* The hemp-plant, சணல்.

*உமாபட்சி, *s.* A species of bird, ஓர்வகைப்பட்சி, Paradisea, *L.*

உமி, *s.* Husk, chaff, hull, bran, தானியங்களினுமி. (*c.*)

உமிக்கரப்பான், *s.* A small kind of eruption especially in children.

உமிக்கரி—உமிச்சாம்பல், *s.* Rice-husk, charcoal used for cleaning the teeth, polishing metals, &c.

உமிக்காந்தல், *s.* A fire by rice-husks.

உமிக்கூர்—உமிமூக்கு, *s.* The apex of rice chaff broken off, or several of them.

உமிச்சட்டி, *s.* A vessel containing chaff in which fire is kept alive.

உமிச்சிரங்கு, *s.* A superficial troublesome kind of itch. See நமைச்சிரங்கு.

உமித்தவிடு, *s.* Bran mixed with fine or broken chaff given to cows, coarse bran.

உமிநகம், *s.* Very thin nails.

கூருமி, *s.* See உமிக்கூர்.

குற்றுமி, *s.* Broken husk.

உமி, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* [*probably a contraction of* உமிழ்.] To spit. 2. *v. a.* [*prov.*] To suck, உறிஞ்ச. 3. To rinse the mouth, கொப்பளிக்க.

மாம்பழத்தையுமிய. To suck the juice of a mango.

கரும்பைச்சப்பியுமிய. To chew and suck sugar-cane.

அவனைப்பேயுமிந்துபோட்டது. A devil has sucked out the juices of his body, emaciating him.

முலையுமிந்துகுடிக்க. To suck the breast.

உமி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To become chaff, பதராக. 2. To become insipid, be spoiled as food, சாரமற. 3. To decay as flesh, dead bodies, the timbers of a house, &c., அழிய. This word is used chiefly in the past tense.

வாழைப்பழமுமித்துப்போயிற்று. The plantains are become tasteless.

வீட்டுவளிச்சுவரெல்லாமுக்கியுமித்துப்போயிற்று..... The house is totally decayed.

இந்தமீனுக்குப்புப்போடாதிருந்தாலுமித்துப்போம். If you do not salt this fish, it will become tainted.

சோறுமித்துப்போயிற்று. The boiled rice is become insipid.

உமிழ், கிறேன், ந்தேன், வேன், உமிழ, *v. n.* To cast (a liquid) from the mouth, கொப்பளிக்க. 2. To spit, உமிய. 3. (*p.*) To vomit, retch, puke, eject from an over charged stomach, கக்கிவெளிக்க. 4. To emit poison—as from the fangs of a snake; to discharge as arrows; to eject as sparks of fire, to emit as rays; to cast forth as the flower does odor; to yield honey as flowers, to emit sound, சொரிய.

நஞ்சுமிழ்வேலினான். He whose dart emits poison.

பரிமளையுமிழ்சீர். A secretion which the elephant casts.

வெங்கணையுமிழ்வில். The bow that discharges the fiery arrows.

தழலுமிழ்கிறுகண்யானை. Elephants with eyes of fire. (ஸ்டந்த.)

உமிழ்நீர், *s.* [*impr.* உமிநீர்.] Spittle, saliva, துப்பல்.

உமிழ்நீர்குடிக்க—உமிழ்நீரூற, *inf.* To have the mouth water for things, to covet after.

உமிழ்வு, *v. noun.* Casting from the mouth, spitting, துப்புகை. 2. *s.* (*fig.*) Any thing cast from the mouth—as spittle, secretion, vomit, &c., உமிழ்நீர்.

உமை, *s.* Parvati, wife of Siva, பார்ப்பதி. Wils. p. 162. Uma. (*p.*)

உமாகுரு, *s.* The Himalaya mountains. Wils. p. 162. Umaguru.

உமாசகிதன், *s.* Siva—as united with உமை who forms his left side, or according to the mystical philosophy, by means of whom he carries on his operations, சிவன்; [*ex* சகிதம், cohabiting.]

உமாசுதன்—உமைமகன், *s.* Son of Parvati, as Ganesa, Skanda, or Veerapattra, உமையின்புதல்வன். Wils. p. 162. Umasuta.

உமாபதி—உமைகேள்வன், *s.* Siva, சிவன். Wils. p. 162. Umapati.

உமையாள்—உமையவள், *s.* Parvati, பார்ப்பதி. (*p.*) 2. Soap, சவுக்காரம். 3. A peacock's feather as resembling Parvati in color, மயிலிறகு. (*M. Dic.*)

உம். A connective particle variously used, ஓரிடைச்சொல். 1. எதிர்மறையும்மை, the use of உம் with an affirmative, or negative expressing probability, possibility, &c., and implying the possibility, &c., of the contrary—as, சாத்தன்வருதற்குமுரியன், Sattan may perhaps come; அவன்வரவுங்கூடும், It is possible that he may come. 2. சிறப்பும்மை, the உம் of speciality, including உயர்வுசிறப்பும்மை, or superiority and இழிவுசிறப்பும்மை, or inferiority—as, ஞானிகளுமறியார்கள்சித்திராநதிமூலம், Even the sages are unacquainted with the source of the சித்திரம் river; இவ்வூர்ப்பூனையும்புலாறின்னாது, Even the cats of this place will not eat flesh (so sacred is it, so vile is the practice); பார்ப்பானுங்கள்ளுண்டான், Even a Brahman has been drinking toddy; இவனைநாயுந்தேடாது, Even a dog will not regard him. 3. ஐயவும்மை, the உம் in doubt, uncertainty, indecision, equivocal forms, probability, possibility—as, அவர்பத்தாயினுந்தருவார்பதினைந்தாயினுந்தருவார், Perhaps he may give ten or he may give fifteen; மழைபெய்தாலும்பெய்யும், It may perhaps rain; பத்தாறுமெட்டாறுங்கொடு, Give ten, or eight, ten would be preferred, but eight may do; வரினும்வருவான், It is probable that he may come. The உம் is often suppressed. 4. எச்சவும்மை, இறந்ததுதழீஇயவெச்சவும்மை, எதிரதுதழீஇயவெச்சவும்மை, the use of உம் implying another person, thing, or event, understood, and meaning *likewise*, *too*, *even*—as, அவனும்வந்தான், He also is come (implying that another is come or expected); நாம்பாடவும்வேண்டும், We must *sing* also (as well as dance, &c.); கேட்டும்படிக்கவேண்டும், By inquiry also we must learn (as well as by other means). 5. முற்றும்மை, indicating the whole of a number or series, universality, totality—as, ஒருவருக்குஞ்சந்தேகமில்லை, None can doubt; எங்குமில்லை, no where; இருகண்ணுஞ்சிவந்தன, both eyes reddened; எவ்விடமும், every where; இரண்டையுங்கொண்டுவா, Bring them both; எல்லாரும், எவரும், ஆரும்வந்தார், all, whoever, &c. came; மிகுந்தநாலுபணத்தையுந்தா, Give me the remaining four fanams; மூவரும், all the three persons. 6. எண்ணும்மை, a numeral connective, corresponding with, and commonly repeated with each word of the series; நீயுமவனும்வந்தீர்கள், you and he came. The particle is sometimes joined to the last only—as, சாத்தன், கொற்றன், பூதனும் வந்தார்கள், Sattan, Kottan and Poodan came. Sometimes it is wholly omitted, and a pronoun including the series used instead—as, சாத்தன்கொற்றன்பூதனிவர்கள்வந்தார்கள். Sometimes the last noun in the series is used in the plural—as, சாத்தன்கொற்றன்பூதர்கள்வந்தார்கள். 7. தெரிநிலையும்மை, the உம் of ascertainment, clear perception, or decision, used of three or more things concerning which doubt has been entertained, but which is now cleared up—as, ஆணுமன்றுபெண்ணுமன்று, It is neither male nor female (but an hermaphrodite); அவனுணவுசோறுமன்று, பணிகாரமுமன்று, சாகமூலபலாதிகள், His food is neither rice nor cakes, but leaves, roots and fruits, &c. 8. ஆக்கவும்மை, உம் expressive of a change of state—as, பாலுமருந்தாயிற்று, This milk became medicine also; வலியனுமாயினான், He has become even a strong man. The above eight are given in நன்னூல். 9. உம் joined to an infinitive implies விரைவு, the immediate occurrence of the event—as, துரைகட்டளையிடவுங்காரியமுஞ்செய்யப்பட்டது, As soon as the magistrate gave the order, the thing was done; அவர்சொல்லவுமுலகங்களுண்டாம், As soon as he speaks worlds appear. The உம் is often omitted, but then it is less expressive—as, நானிதைச்செய்யெனச்செய்கிறான், I say this and he does it. 10. உம் added to a verbal noun in poetry, sometimes gives it a gerund-like succession of the event—as, காண்டலுமிதுவேசொல்வான், Seeing him he spoke thus; வருதலுந்தழுவிக்கொண்டான், As soon as he came he embraced. 11. உம் is associated to the social ablative with the same meaning—as, கடுங்கணைதொடுத்தலோடும், As soon as the swift arrows were shot. 12. உம் added to the infinitive serves for optative, especially in epistolary usage but not in good style—as, தாங்கள்மறுமொழியனுப்பவும், May you please to send an answer; இப்படிச்செய்யவும், May you do so, I wish you to do so. 13. உம் added to the following forms of a verb, செய்து, செய்யின், செய்தால், has the force of though, although—as, அவனறிந்தும்வரவில்லை. Though he knew, he did not come; சொல்லினும் or சொன்னாலும்அவன்கேளான், Though you may tell him he will not listen. 14. உம் added to இல் or இன் forms of the fifth case gives the force of the comparative degree—as, கந்தனினும்வலியனே, He is even stronger than Skanda. 15. A token of reproof, menace, anger, &c., also of attention, assent, doubt, non-compliance, &c., (see ஊம்)—as, உம்மெனத்தெழித்தாப்ப, He reproved his rashness by uttering the menacing sound உம் (ஸ்காந்தம்); கதைசொல்லுகிறேன்உம்கொட்டிக்கேள், I am going to tell you a story, show that you listen by saying உம்; உம்மெனுமார்பைத்தட்டும், The guilt of Brahmanicide manifested in a phantom threatened by saying உம் and striking on its breast (திருவிளையாடல்). 16. A termination of the imperative plural, முன்னிலைப்பன்மைவிகுதி—as, நீவிர்சொல்லும், say ye. It is often used honorifically in imperative singular—as, கடவுளேகிருபைசெய்யும், God be merciful. 17. A termination of verbs third pers. pres. or fut. tense sing. number, also of neut. plurals—as அவன்செய்யும், He does or will do it; சிங்கங்கள்முழங்கும், The lions roar, or will roar, செய்யுமென்முற்றுவிகுதி. 18. A modification of the pronoun நீர் when it is declined in the different cases—as, உம்மை, உம்மால், &c. 19. The termination of the future relative participle, எதிர்காலப்பெயரெச்சவிகுதி—as, உலகாளும்அரசர், Kings who govern the world.

உம்பர், *adj*. On, upon, above, மேல். 2. *s*. The sky, the visible heaven, ஆகாயம். 3. Height, elevation, உயர்ச்சி. 4. [*ex* உ, that.] That place (intermediate), that region, உவ்விடம். 5. The celestials, the inferior gods, வானோர். 6. (*fig.*) Brahmans, the superior caste, பார்ப்பார். (*p.*)

உம்பரான்முனிவரால். By celestials and sages.

உம்பரான், *s*. The divine cow, காமதேனு; [*ex* ஆன், cow.] 2. A celestial being or personage, உயர்ந்தோன்.

உம்பருலகு, *s*. The heavenly world.

உம்பல், *s*. An elephant, யானை. 2. The male of beasts in general, விலங்கின்ஏறு. 3. A ram, ஆட்டுக்கடா. 4. A male elephant, ஆண்யானை. 5. A bull, எருது. 6. A male buffalo, எருமைக்கடா. 7. Mounting on a beast or vehicle, getting up, rising, எழுச்சி. 8. Power, strength, வலிமை. 9. Tribe, family, கோத்திரம். 10. Usage, custom, முறைமை. (*p.*)

உம்பளம், *s*. A present of land, &c. by a king, இராசாவினாற்கிடைத்தவெகுமதி.

உம்பி, *s*. Your younger brother, தம்பி (a contraction of உன்றம்பி). (*p.*)

உம்பிளிக்கை, *s*. Land granted rent free, in consideration of the performance of certain services, மானியம்.

உம்பிளிக்கைக்கிராமம், *s*. A village granted on similar conditions.

உம்பிளிக்கைவிடுதல், *v. noun*. Giving one a field or village to enjoy it freely.

உம்மாண்டி, *s*. [*prov. vul.*] A bugbear, வெருட்டுஞ்சொல்.

உம்மை, *s*. The last birth, கழிபிறப்பு. 2. The coming birth, வருபிறப்பு. 3. The name of the particle உம். (*p.*)

உயக்கு, கிறேன், உயக்கினேன், வேன், உயக்க, *v. a*. To afflict, வருத்த. (*p.*)

உயக்குநரகு, *s*. A tormenting hell. (சித்தியார். 509.)

உயங்கு, கிறேன், உயங்கினேன், வேன், உயங்க, *v. n*. To suffer, be in distress, be pained whether in body or mind, வருந்த. (சூ. 21.) (*p.*)

உயக்கம், *v. noun*. Suffering, distress, pain, grief, வருத்தம். (*p.*)

உயத்தி, *s*. A kind of arsenic in its natural state, வெள்ளைப்பாஷாணம்.

உயரம், *s*. Height, elevation, eminence, altitude, loftiness, sublimity, உயர்ச்சி. 2. [*in astronomy.*] Altitude, உச்சம். 3. Increase, மிகுதி.

உயரங்காட்ட, *inf*. To stand up—as a little child in its first attempts.

உயரி, *s*. That which is tall as a palmyra, cocoanut or other palm tree, or a tall person.

உயர், *s*. A twining plant—as குன்றி, Abrus precatorius, *L*. (*Rott.*)

உயர்—உயரு, கிறேன், உயர்ந்தேன், வேன், உயர, *v. n*. To rise, become high, tall, elevated, to grow, or rise high, வளர. 2. To rise as water; to ascend as a paper kite; to rise towards the meridian as a heavenly body, மேலெழ. 3. To become proud, vain, self-conceited, consequential, to be elated, இறுமாக்க. 4. To be excellent, exalted, eminent, dignified, மேன்மையுற. In neuter forms it is found chiefly in the past tense. 5. To be raised or lifted up, உன்னதப்பட.

உயரப்பறந்தாலுமூர்க்குருவிபருந்தாமோ? Though it soars high, will the sparrow become a hawk?

ஓதற்றொழிலுரித்துயர்மூவருக்கும். The study of the vedas belongs to the three superior castes.

வரம்புயரநீருயருநீருயரநெல்லுயருநெல்லுயரக்குடியுயருங்குடியுயரமுடியுயரும். As the banks are raised, the water will rise, as the water increases, so will the rice, rice will increase population, and as the population increases, so will the dignity of the crown.

உயரநினைப்பவன்தாழ்வான். He who is intent to rise will fall.

தானியமுயர்ந்துவிற்கிறது. Grain sells cheap.

மாற்றுயர்ந்தபொன். Gold of a superior quality, high standard.

உயரவிருந்துவிழ, *inf*. To fall down from above.

உயரக்கட்ட, *inf*. To build a structure higher.

உயரக்கிளம்ப, *inf.* To rise—as a bird from the ground, &c.

உயரப்பார்க்க, *inf.* To look upward. 2. To seek to rise, aspire, seek dignity, &c.

உயரப்போக, *inf.* To go up.

உயரவெறிய, *inf.* To fling up.

உயரவேற, *inf.* To ascend, rise, to mount up.

உயர், *rel. part.* High, elevated, eminent.

உயரில்லறம், *s.* High domestic virtue.

உயர்குலம்—உயர்ந்தகுலம், *s.* A high caste.

உயர்குலத்தோர், *s.* Persons of high caste or family.

உயர்திணை, *s.* [*in grammar.*] The superior or rational class. See திணை.

உயர்தினம், *s.* A high day, a festival, பெருநாள்.

உயர்நிலம், *s.* High land, a hillock, a hill, மேடு. 2. The world of the inferior gods, தேவலோகம். 3. An upper room or terrace, உப்பரிகை.

உயர்நிலத்தோர், *s.* The gods, the celestials, வானோர்.

உயர்நிலை, *s.* Swerga, சுவர்க்கலோகம். 2. An upper room, மேன்மாடம்.

உயர்ந்தசரக்கு, *s.* Valuable commodities, choice articles. 2. [*in sarcasm.*] A great person—as, அந்தவுயர்ந்தசரக்குவரமாட்டாது, That precious piece of goods (great personage) will not deign to come hither.

உயர்ந்ததமிழ், *s.* High poetic Tamil, above the comprehension of the vulgar.

உயர்ந்தகுளச்சி, *s.* A kind of prepared arsenic, பவளப்புற்றுப்பாஷாணம்.

உயர்ந்தபாறை, *s.* A high rock.

உயர்ந்தமனுஷன், *s.* A tall man. 2. A man of high station.

உயர்ந்தவயசு, *s.* A great age, advanced age.

உயர்ந்தோர், *s.* The great, the learned, the renowned, the exalted in piety, virtue, austerities, &c., sages, ascetics, சான்றோர். 2. High caste persons, உயர்குலத்தோர். 3. The celestials, வானோர். 4. Brahmans, பார்ப்பார்.

உயர்மலை, *s.* A high mountain.

உயர்ச்சி, *s.* [*impr.* உயர்த்தி.] Height, elevation, loftiness, altitude, eminence, sublimity, உயர்வு. 2. Excellency, superiority, dignity, moral worth, exaltation, மேன்மை.

உயர்த்திதாழ்த்திபார்த்தல். Regarding the honors of one's caste, rank, property, &c., fastidiously.

உயர்ச்சிகாட்ட, *inf.* To show one's superiority. 2. To exhibit one's real dignity.

உயர்பு—உயர்வு, *s.* Height, loftiness, elevation, உயர்ச்சி. 2. Dignity, greatness, excellence, மேன்மை. 3. Increase, விர்த்தி.

உயர்விக்க, *inf.* To elevate the character of any one, to improve the disposition, increase learning, moral worth, to exalt, dignify, promote, உயர்த்த. 2. To raise the price, increase expenditure, numbers, &c., அதிகப்படுத்த. 3. To raise, lift up, elevate, எடுப்பிக்க.

உயர்த்து, கிறேன், உயர்த்தினேன், வேன், உயர்த்த, *v. a.* To lift up, elevate, raise higher—as a wall in building, a heap, &c., உயரச்செய்ய. 2. To raise (the price), increase (expenditure), அதிகப்படுத்த. 3. To promote to higher office, to make great, to exalt, ennoble, dignify, aggrandize, மேலாக்க. 4. To extol, magnify, praise, கனப்படுத்த. 5. To receive one with honors, show respect, treat in a dignified manner, உபசரிக்க. 6. To raise the voice in singing, speaking, &c., to lift up the heart, affections, thoughts, &c., எழுப்ப. 7. To raise an arm, a leg, a weapon, &c., to raise the head above water, raise the head when in a lying posture, மேலெடுக்க. 8. To improve one's character, improve one's dignity, moral worth, raise one's self to a higher degree in preparation for a future state, ஒழுக்கத்திலுயர்த்த. 9. To assume, elevate one's self, make much of one's powers, பெருமைப்படுத்த.—*Note.* Instances of உயர்த்தல், in the past are found in verse, but in the present and future it seems to be seldom or never found.

நாகந்தன்படத்தையுயர்த்திக்காட்டும். The cobra raises its hood and exhibits it.

சேவலையுயரியதேவநாயகன். The leader of the gods (skanda) who has exalted the cock as his banner.

வலனுயர்த்தவண்ணலஞ்சேல். The lofty carp banner which has exalted victory to view. (நைடதம்.)

உயர்த்திப்பேச, *inf.* To dignify, speak of one with high respect.

உயர்த்தியாய்க்கேட்க, *inf.* To bid high in an auction, &c.

உயல், *v. noun.* [*a poetic contraction of* உய்யல்.] Living.

உயவல்—உயவு, *s.* [*sometimes* உய.] Distress, affliction, pain, suffering, வருத்தம். (*p.*)

உயவர், *s.* Persons in distress, வருந்தினர். (*p.*)

உயவை, *s.* A species of wild creeper, the காக்கணங்கொடி, Clitoria ternatea, *L.* 2. A cloud, மேகம். (பிங்கலந்தை.)

உயா, *s.* Distress, suffering, &c.—as உயவு.

உயிர், *s.* Life, soul, vitality, animal or vegetable life, சீவன். 2. Wind, காற்று. 3. A vowel, உயிரெழுத்து. 4. A living being, human, brute, or vegetable; an animal, ஓரறிவுயிர்முதலியசீவராசி.

உயிருமுடலும்போல. As closely united as the soul and body.

உயிர்போய்விட்டது. Life is gone.

மன்னுயிர்க்கிரங்குகிறது. To be compassionate to other living creatures.

உயிரடங்க, *inf.* To be in a state of insensibility, be in a swoon, to be suspended as the vital powers.

உயிரடைய, *inf.* To revive, to be reanimated.

உயிரளபு—உயிரளபெடை, *s.* The lengthening of a vowel in verse. See அளபெடை.

உயிரறுதியும். Till the very end of life.

உயிருதவி, *s.* Aid in a fatal juncture. 2. Aid by sacrificing life for another.

உயிரெடுக்க, *inf.* To take away life.

உயிரெழுத்து, *s.* A vowel, ஆவி.

உயிரொடுங்க, *inf.* To be reduced as the powers before death, உயிரடங்க. 2. To die, சாவ.

உயிரொளிக்க, *inf.* [*prov.*] To feign great weakness, sickness, inability, &c., in order to gain or effect an object, உயிர்மறைக்க.

உயிரொளித்தகள்ளன், *s.* A cringing deceiver who though rich and strong makes pretensions to the contrary.

உயிரோம்ப, *inf.* To support life, maintain, உயிர்காக்க.

உயிர்கலக்க, *inf.* To revive, to be diffused—as life through the body in one that has been swooning, &c. 2. To reunite as the soul with the body in one restored to life. 3. (*fig.*) To be relieved from anxiety, &c.

உயிர்குடிக்க, *inf.* To devour life, kill (a war term), also used of demons and ferocious deities, கொல்ல.

உயிர்கொள்ள, *inf.* To take the life of an antagonist—as in battle, &c., உயிர்வாங்க.

உயிர்க்கட்டை, *s.* The body, உடம்பு.

உயிர்க்கணம், *s.* One of the four auspicious feet with which to begin a poem consisting of three நேர்—as தே, மாங், காய். 2. Vowels, உயிரெழுத்து. See கணம்.

உயிர்க்கருணேசம், *s.* The power of affection which is friendly to life, இச்சாசத்தி.

உயிர்தருமருந்து, *s.* A restorative, a cordial, an elixir, மிருதசஞ்சீவினி.

உயிர்த்தறுவாய், *s.* A great emergency, a critical juncture, extreme danger. See பிராணத்தறுவாய்.

உயிர்த்தானம், *s.* The seat of life, any vital part of the body, உயிர்நிலை.

உயிர்த்துணை, *s.* A friend in extremity, ஆபத்திற்சகாயஞ்செய்பவன். 2. A friend dear as life, பிராணசிநேகன். 3. (*p.*) A wife, மனைவி. 4. A husband, கணவன். 5. God, கடவுள்.

உயிர்த்துணைவன், *s.* A very dear friend, உயிரையொத்தசிநேகன். 2. (*p.*) A husband, கணவன்.

உயிர்த்துணைவி, *s.* A wife, மனைவி. 2. A lady's choice female friend, உயிர்த்தோழி. 3. Sarasvati the consort of Bramah, சரச்சுவதி. (*p.*)

உயிர்த்தோழமை, *s.* Intimate friendship.

உயிர்த்தோழன், *s.* A very trusty or bosom friend, a friend dear as life, பிராணசிநேகன்.

உயிர்த்தோழி, *s.* A lady's choice female companion, உயிர்ப்பாங்கி.

உயிர்நிலை—உயிர்நிலையகம், *s.* The body as the seat of life, or station of the soul, உடல். 2. The vital parts essential to life, உயிர்த்தானம்.

உயிர்பிழைக்க—உயிருய்ய, *inf.* To survive a calamity, escape from, or live through a time of peril, தப்பிப்பிழைக்க. 2. To live, maintain life, subsist, உயிர்வாழ.

உயிர்போக, *inf.* To expire, to die.

உயிர்ப்பழி, *s.* The guilt of murder, உயிர்க்கொலை. 2. Vengeance, divine or human, persuing the murderer to death, regarded as the ghost of the murdered person, பிரமகத்தி.

உயிர்ப்பிராணி, *s.* [*vul.*] A living creature, a brute, an inferior animal, சீவபிராணி.

உயிர்மாய்க்க, *inf.* To destroy one's self, commit suicide, தன்னுயிரைப்போக்க. 2. To murder, kill, கொலைசெய்ய.

உயிர்மெய்—உயிர்மெய்யெழுத்து, *s.* An animated consonant, a consonant combined with a vowel, ஒரெழுத்து; (*lit.*) a living body.

உயிர்வாங்க, *inf.* To take away life, உயிரெடுக்க.

உயிர்வாழ்க்கை, *s.* The enjoyment of life, சீவிக்கை.

உயிர்வாழ, *inf.* To live—as men or brutes, சீவனோடிருக்க. 2. To enjoy life, be happy, prosperous, சுகமாகவாழ.

உயிர்வேதனை, *s.* Causes of pain or distress, of which twelve are given, viz.: 1. அனல், heat or fire. 2. சீதம், cold. 3. அசனி, thunder-bolts. 4. புனல், water. 5. வாதம், wind. 6. ஆயுதம், weapons. 7. நஞ்சு, poisons. 8. மருந்து, medicines. 9. பசி, hunger. 10. தாகம், thirst. 11. பிணி, disease. 12. முனிவுறுமை, malice. (*p.*)

உள்ளுயிர், *s.* The life within; i. e. God, கடவுள். (*p.*)

மன்னுயிர்க்கிரங்க, *inf.* To be kind to living creatures. (*p.*)

உயிர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To live, revive, come to life—as one dead; to be restored to life or feeling—as a benumbed or injured limb, to be reanimated, &c., உயிரடைய. 2. (*p.*) To breathe, respire, மூச்செறிய. 3. To blow or move—as a soft wind; to become diffused—as odors, வீச. 4. *v. a.* To issue, emit fragrance, &c., exhale, eject, discharge, set at liberty, விடுக்க. 5. To give birth to, yield, produce, ஈன. 6. To smell, மோக்க.

அவள்கருவுயிர்த்தாள். She has borne a child.

மருவுயிர்க்குநறுந்துளவு. The fragrant Tulasi (Ocimum sanctum), which emits odor. (பாரத.)

உயிர்த்தெழ, *inf.* To rise to life, to be restored to life, be reanimated, உயிரடைந்தெழ.

உயிர்ப்பன, *s.* Living creatures, சுவாசமுடையன.

உயிர்ப்பிக்க, *inf.* To cause to live, raise, or restore to life, to revive, reanimate, resuscitate, பிழைப்பிக்க.

உயிர்ப்பு, *v. noun.* Reanimation, revival, உயிர்க்கை. 2. *s.* Breath, respiration, சுவாசம். 3. Wind, air, காற்று. 4. (*fig.*) Good smell, சுகந்தம். (*p.*)

நெட்டுயிர்ப்பெறிய—நெட்டுயிர்ப்புவிட, *inf.* To fetch a long breath, to sigh.

உயிறு, *s.* The இலாமச்சை grass, Andropogon muricatum. (*M. Dic.*)

உய், கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To live as man, beast, or vegetables; to subsist, survive, revive or flourish—as trees, plants, &c., சீவிக்க. 2. (*p.*) To obtain benefits, privileges, &c.; to be blessed, to be happy, to prosper, flourish, to be relieved from distress, oppression, suffering, &c., உயிர்வாழ. 3. To obtain heavenly bliss, to gain exemption from transmigration, ஈடேற. 4. To escape from dangers, wild beasts, &c., to flee from, தப்ப.

உய்கதியால்—உய்தடி, *s.* A live hedge-stick.

உய்தவம், *s.* Austerities leading to bliss.

உய்பயிர், *s.* Thriving crops, trees, &c. 2. (*fig.*) A person in thriving circumstances.

உய்வனவு, *v. noun.* [*prov.*] Flourishing or reviving as a tree, செழிப்பு. 2. Living, subsistence, maintenance, சீவனம். 3. *s.* Means of attaining eternal bliss, ஈடேற்றம். This word properly must be உய்வு.

உய்விக்க, *inf.* To save alive, cause to live, prosper, flourish, &c. This is the causative of உய்.

உய்வு—உய்தி, *v. noun.* Enjoyment of life, prosperity, felicity, உயிர்வாழ்வு. 2. Bliss, salvation, ஈடேற்றம். 3. Living, life as spoken auspiciously, உயிர்க்கை.

ஒருவன்செய்நன்றிகொன்றார்க்குய்தியில்லெனவறம்பாடின்றே. The divine laws declare that to the ungrateful there is no happiness here or hereafter. (புறநானூறு.)

உய், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To put in motion, cause to go, discharge, let go, let fly, send, emit, cast, throw, செலுத்த. 2. To ride, drive a carriage, &c., வாகனமூர. 3. To effect, accomplish, bring about, collect, gather together, காரியத்தைமுடிக்க. 4. To carry on, conduct literally, or morally, lead an army, &c., to manage, guide, direct, influence, operate, நடத்த. 5. To place, put in, shoot in, throw or cast in, plunge into, அமிழ்த்த. 6. To cause to arrive at, சேர்க்க. 7. To place, வைக்க. 8. To enjoy, experience, அனுபவிக்க. (*p.*) (குறள்.)

உய்த்துச்சொரியினும்போகாதம. That which is apportioned by fate, though rejected, will not leave. (*p.*) (குறள்.)

காதலகாதலறியாமையுய்க்கிற்பின். If (a king) enjoy the objects of his desire, (his foes) being unacquainted with those desires—(குறள்.)

உய்த்துணர, *inf.* To discern, to distinguish, exercise thought, &c., ஆராய்ந்தறிய.

உய்த்துணரவைப்பு, *s.* The use of such terms, descriptions, or definitions in a written work, as may require the exercise of thought, reference to other parts, &c., in order to comprehend them, ஆராய்ந்தறியவைக்கை—one of the thirty-two உத்தி in நன்னூல்.

உய்த்தலில்பொருண்மை, *s.* Poetry composed in such terms only as are necessary to express the author's meaning, கருதியபொருள்தோன்றப்பாடப்படுவது.

உய்ப்பு, *v. noun.* Discharging, emission, accomplishment, &c., including all the meanings of the verb, உய்க்கை.

உய்மணல், *s.* Black sand, கருமணல்.

உய்யக்கொண்டான், *s.* [*as* எருமைமுல்லை.] A plant, Jasminum, *L.* 2. [*as* கொய்யா.] A tree, Psidium pyriferum, *L.*

உய்யானம்—உய்யானனம், *s.* A flower-garden, a flower-grove, பூந்தோட்டம். 2. A garden, சோலை. 3. A royal garden, a royal forest, சிங்காரவனம். (*p.*)

*உரகம்—உரங்கம்—உரங்கமம், *s.* A snake, serpent, பாம்பு. Wils. p. 162. URAGA and URANGA, also URANGAMA. (*p.*)

உரகபந்தம்—உரகபந்தனம், *s.* One of the curious kinds of poems called மிறைக்கவி. See நாகபந்தம்.

உரகமல்லி, *s.* The நாகமல்லி plant, Justicia nasuta, *L.*

உரகர், *s.* [*as* நாகர்.] Snakes, serpents. 2. Samanar, or Jainas, a sect of Hindus, சமணர். (*p.*)

உரகன், *s.* The chief of the நாகர் serpents said to have a thousand heads and to be the couch of Vishnu; the earth is represented as supported on one of its heads, ஆதிசேஷன். (*p.*)

உரகாரி, *s.* Garuda, கருடன். Wils. p. 162. URAGARE.

உரகாதிபன்—உரகேந்திரன், *s.* The chief of the serpents, ஆதிசேஷன்.

உரசு, கிறேன், உரசினேன், வேன், உரச, *v. a.* To rub, உரிஞ்ச.

உரண்டம், *s.* A crow, காக்கை. (சது.) (*p.*)

உரபடி—உரபிடி, *s.* [*prov. vul.*] Coarseness, roughness, strength, உரப்பு.

உரபிடியானமனிதன், *s.* A firm-built man.

உரப்பு, கிறேன், உரப்பினேன், வேன், உரப்ப, *v. n. and a.* To whoop, vociferate inarticulately or otherwise—as in driving cattle, scaring away birds, beasts, or human beings, to menace or intimidate by shouts, to bluster, shout, call, அதட்ட. 2. To urge forward beasts of burden with shouts, துரத்த. 3. (*p.*) To pronounce with aspiration, as the second letter in each of the five series of Sanscrit gutterals, உரத்தொலிக்க.

ஆனையையுரப்பிவிடு. Frighten away, or drive the elephants along.

ஒருவரேயெதிரினிக்கனுரப்பியேதுரப்பர். If but one should oppose them, he may rout them all merely by a menacing shout.

உரப்பிப்பார்க்க, *inf.* To use menace, boisterousness, &c., in order to try the courage of any one to beat him down, &c.

உரப்பியடிக்க, *inf.* To attempt, overcome by boisterous talk, overcome in whole, or in part.

உரப்பு, *v. noun.* Bluster, shout, vociferation, whoop, call, அதட்டுகை.

உரம், s. Strength, firmness, hardness, compactness, coarseness, aspiration, force of voice, expression, meaning, &c., வலி. 2. Energy, spirit, exertion, determination, resolution, fortitude, firmness of mind, ஊக்கம். 3. (p.) The breast, chest, மார்பு. 4. Wisdom, knowledge, spiritual knowledge, ஞானம். 5. Velocity, force, missile or projectile force, வேகம். 6. The solid part of timber, வயிரம். 7. Hardness, induration, obduracy, திண்மை. 8. A surrounding wall, மதில்.

கடலுரமாயிருக்கிறது. The sea is high, rough.
காற்றுரமாயிருக்கிறது. The wind is high, boisterous.

உரகடல்—உரசமுத்திரம், s. A boisterous sea, a sea generally rough.

உரங்குத்த, inf. [prov.] To pound and harden the earth around trees newly set, பலமுறச்செய்ய.

உரங்கொள்ள, inf. To thrive, grow strong—as the wind; to get strength, become boisterous—as the sea, பலங்கொள்ள. 2. To exert strength, &c., வலியுண்டாக. 3. To be hardened, indurated, obdurate, கடினமுற.

உரங்கொண்டெறிந்து. Throwing with force.

காய்ச்சலுரங்கொண்டெரிகின்றது. The fever rages and burns.

உரஞ்செய்ய, inf. To exert influence, take effect, produce, effect—as arguments, பலஞ்செய்ய. 2. To grow strong, வலியுற. 3. To thrive—as vegetables, &c., பலப்பட.

அவரெடுத்தகாரியங்களிலொன்றுமுரஞ்செய்யவில்லை. He has been successful in nothing that he has undertaken.

உரஞ்சொல்ல, inf. To animate, to encourage.

உரமண், s. Hard, ungenial soil.

உரமாய்நிற்க, inf. To stand fast, immovable.

உரமாய்ப்பெய்கிறமழை, s. A heavy rain.

உரமானசத்தம், s. A loud sound.

உரமெடுக்க, inf. To remove a particular ailment incident to infants.

உரம்போட, inf. To manure land, எருப்போட. 2. To fasten, make firm, உரப்பிக்க.

உரம்விழ, inf. To get a particular ailment by rolling on the ground—applied only to a child not twelve months old.

உராதரம், s. A woman's breast, முலை.

உரேந்திரன், s. A hero, a soldier, வீரன்.

உரோருகம், s. A woman's breast, முலை; [ex உருகம், birth, origin.]

கடலுரம், s. Roughness of the sea.

உரக்க, inf. To become intense, grow strong, firm, hard, &c., to increase in strength, intenseness, loudness, &c., to rage, increase in violence, vehemence, heat, malignity, &c., பலமடைய.

உரத்துப்படி. Read out.
உரத்துப்பாடு. Sing loud; sing louder.
காய்ச்சலுரத்துக்காய்கிறது. The fever rages intensely.

உரக்கக்கூப்பிட, inf. To cry aloud.

உரக்கப்பேச, inf. To speak loud.

உரத்தகடல், s. A boisterous sea.

உரத்தகடுதாசி, s. Thick, coarse paper.

உரத்தகாய்ச்சல், s. A vehement fever.

உரத்தகாற்று, s. A violent wind.

உரத்தகுதிரை, s. A powerful horse.

உரத்தசத்தம், s. A strong, harsh voice, a loud noise.

உரத்தசரீரம், s. A firm constitution, a strong compact body.

உரத்ததருக்கம், s. A sharp contest, a violent controversy.

உரத்தநிலம், s. Firm soil.

உரத்தவெயில், s. A hot sun.

உரப்பிக்க, inf. To make firm, to harden, indurate, confirm.

உரப்பு, v. noun. Intenseness, force, strength, firmness, compactness, வலி. 2. Coarseness, thickness, roughness—as of cloth, paper, leaves, &c.; stiffness, hardness—as of rice not well boiled, or of the stomach when overcharged, or when food does not digest, திண்மை.

உரப்பானநிலம், s. Firm, hard (ungenial) land—as உரத்தநிலம்.

உரப்பானபுடைவை, s. Thick, coarse cloth.

நெஞ்சுரப்பானவன், s. A hard-hearted man.

உரல், s. A mortar, large or small, நென்முதலியகுற்றுமுரல். 2. A mould for making pastry, இடியப்பவுரல்.

உரலாணி, s. A pestle, a rice-pounder, உலக்கை. 2. [prov.] A piece of block inserted in a mortar, when the bottom is worn away, உரலடிக்கிடுமோவாணி.

உரலிடித்தல், v. noun. Pounding in a mortar.

அவலைநினைத்துரலையிடிக்கிறது. To beat the empty mortar, thinking of the flattened rice. [prov.]

உரலுமுலக்கையும். The pestle and the mortar. 2. (fig.) The glottis and the uvula of the throat.

உரற்கட்டை, s. A mortar formed of a block of wood—a term applied metaphorically to a stout short man.

உரற்கட்டை—உரற்குற்றி, s. A wooden block for a mortar, உரற்காணமரத்துண்டு.

உரற்குழி, s. A hole in the floor in which a rice mortar is fixed.

பாக்குரல், s. A small mortar made of wood, stone, or metal, in which betel and areca nut are bruised to facilitate mastication.

உரவு, s. Strength, force, firmness, hardness, வலி. (p.)

உரவுச்சினவேந்தன். The formidable king. (அகப்பொருளுரை.)

உரவன், s. A strong man, வலியன். 2. A learned man, an ascetic, அறிஞன். 3. Argha, அருகன். (p.)

உரவோர், s. The wise, the learned, அறிஞர். 2. Persons of respectability, gravity, age, &c., chief persons, முத்தோர். (p.)

உரவுநீர், s. The sea in motion, the sea, sea-water, உவர்நீர்; [ex உரவு, a change of உலவு, ct நீர்.] (p.)

உரவுநீர்க்கருங்கடலுடுத்தமாநிலத்து. Upon the sea-girt earth (lit.) on the earth enclosed by the blue ocean of moving water.

உரறல், s. Great anger, the state of being heated with vehement wrath, பெருங்கோபம். (p.)

உரறு, கிறேன், உரறினேன், வேன், உரற, v. n. To sound, ஒலிக்க. (p.)

உரற்று, கிறேன், உரற்றினேன், வேன், உரற்ற, v. n. To sound, resound, make a loud noise, ஒலிக்க. (p.)

உரற்றியகன்மழையும்பரிற்குந்தென. As if a heavy rattling shower of hail had filled the sky. (ஸ்காந்தம்.)

உதிர்ந்தனதிசைகொருமுரற்றியவே. He scattered the things which, when they fell, caused the whole hemisphere to resound. (ஸ்காந்தம்.)

உரற்றல், v. noun. Loud noise, thundering sound, பேரொலி.

உரன், s. Power, strength, firmness, வலி. 2. Strength of mind, fortitude, energy, bravery, ஊக்கம். 3. Knowledge, spiritual or profound knowledge that may induce self-restraint, அறிவு. (p.)

உரனென்னுந்தோட்டியான். By strength of mind as a hook which guides the elephant — (குறள்.)

உராய், கிறேன், ந்தேன், வேன், உராய, v. n. To rub against a thing, உடலுருஞ்ச. (பிங்.) 2. To rub against one another—as trees, உரிஞ்ச.

உராய்போதல், v. noun. Rubbing in a crowd, jungle, &c., in passing, உரிஞ்சிப்போதல். 2. Rubbing one's self against a thing, உரைதல். (p.)

உராய்ஞ்சு, கிறேன், உராய்ஞ்சினேன், வேன், உராய்ஞ்ச, v. a. [vul.] To rub, உரைக்க.

உரி, s. A small dry or liquid measure, அரைப்படி, marked thus, உரி. 2. (p.) Rind, peel, bark (of some trees), a skin stripped off, either raw, dried, tanned, dressed or otherwise, தோல். 3. Coriander, கொத்துமல்லி, Coriandrum sativum, L. 4. The root of the abstract noun உரிமை, propriety, peculiarity. 5. One of the four general divisions of words, including adjectives and adverbs, also all words expressive of abstract qualities, உரிச்சொல்.

உரிச்சீர், s. A kind of metrical foot. See சீர்.

உரிச்சொல், s. One of the four classes of words. See உரி.

வினையுரிச்சொல், s. Adverb.

பெயருரிச்சொல், s. Adjective.

உரிநெல், s. A half measure of paddy.

உரிப்பொருள், s. The third division of அகப்பொருள், denoting the intercourse of the sexes.

உரியரிசி, s. A half measure of rice. (நன்னூல்.)

உரியாழாக்கு, s. Five-eighths of a measure; marked உரிழு.

மரவுரி, s. A kind of dress made of the bark or rind of a tree, used by wild tribes and ascetics, சீரை.

உரி, கிறேன், ந்தேன், வேன், ய, v. a. To strip off clothes, one's own, or another's, to divest, களைய. 2. v. n. [impers.] To become stripped off—as clothes; to become peeled, scaled, barked, excoriated, flayed off—applicable to the skin, or bark of trees, &c., rather than to the body, கழல.

உரிந்துகொள்ளுதல், v. noun. Plundering, stripping one.

உரிந்துபோக, inf. To be flayed, stripped off.

உரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To skin, strip off, flay, peel, excoriate, bark, பட்டைமுதலியவுரிக்க. 2. To slough off the skin—as a serpent, கழற்ற.

அவனையுரித்துவைத்தாற்போலேயிருக்கிறான். He exactly resembles him, (lit.) as if wearing the same skin.

உரித்தகோழி, s. A fowl stripped of its feathers.

உரிசை, s. [prop. உருசி.] Taste, relish, சுவை. (c.)

உரிசைகண்டபூனையுறியையுறியைத்தாவுகிறது. The cat that has tasted sweets will leap on the shelf. [prov.]

உரிசைகண்டவன், s. One who has known the taste of any thing, one who has tasted any thing.

உரிசைபார்க்க, inf. To taste, to try by tasting.

உரிஞு—உரிஞ்சு, கிறேன், உரிஞினேன்—உரிஞ்சினேன், வேன், உரிஞ—உரிஞ்ச, v. n. and a. To rub one's self, rub as beasts, chafe, உராய. 2. To become rubbed or grazed against a thing, to be bruised, excoriated, grazed off, &c., தேய. 3. To rub against one another—as trees, உரோச. 4. To rub away, wear away by rubbing, grind away—as sandal, to triturate, அரைக்க. (p.)

நறுங்குறடுரிஞ்சபூந்தேய்வை. The soft paste produced by triturating the fragrant sandal wood. (நைட.)

உவாமதியுடலுரிஞ்சுதலாற்பின்னைவெண்மதியாதனன்றென்பபெரிதுவக்கும். The full moon grazing his body (in passing through the window) wished himself young again. (நைட.)

உரிமை, s. Propriety, peculiarity, proprietorship, appropriateness, property or quality of a person or thing, உரியதன்மை. 2. Heritage, inheritance, hereditary and unalienable rights, சுதந்திரம். 3. Relationship, the ties of consanguinity, இனம். 4. Natural or correlative duty, obligation, கடமை. 5. Love, affection, intimacy, tender regard, friendship, சிநேகம். 6. Liberality, privilege of familiarity, freedom taken or permitted on the ground of relationship, friendship, acquaintance, &c., இஷ்டம். 7. Claim, right, உரித்து. 8. (p.) A wife, மனைவி.

உரித்து. A symbolic verb used as a noun with meanings similar to those of உரிமை, being peculiar to a person, or thing—as duty, obligation, property, quality, &c., உரியது. 2. s. Relative duty and care as of a child to his parents, the teacher to his pupils, the Guru to his disciples, the husband to his wife, and vice versa, கடமை. 3. Affection, பட்சம்.

உரித்தாக்கிக்கொள்ள, inf. To appropriate to one's self, procure a right in, to make one's own, உரிமையாகச்செய்ய. 2. To secure the friendship of one, நட்பாக்கிக்கொள்ள.

உரித்தாளி—உரித்தானவன், s. Proprietor, owner, heir, சுதந்திரன். 2. One near of kin, இனமானவன்.

சபைக்குரித்தானவன். A person entitled to a place in an assembly.

என்னுடைமைக்குரித்தானவன். The heir of my property.

உரிமைக்கஞ்சி—உரிமைச்சோறு, s. Food prepared for the relations of a deceased person on the day of his death. 2. [prov.] Rice-water poured into the mouth of a dying person as the last token of respect.

உரிமைக்கடன், s. The duties and obligations of near relations to perform funeral rites, and to show respect to a deceased person, பிரேதத்திற்குரியவர்கள் செய்யுங்கடமை. 2. The duty of a child to support his father in sickness or other extremity, &c., புத்திரன்பிதாவுக்குச்செய்யுங் கடமை. 3. Obligations of the heir to pay the debts of a deceased person, அவனவன்செய்யவேண்டியகடமை.

உரிமைக்கட்டு, s. Consanguinity allowing a marriage connexion, இனக்கட்டுப்பாடு. 2. Preservation of one's rights as a relative.

உரிமைக்கலியாணம், s. Marriage within the prescribed degrees of consanguinity.

உரிமைக்காணி, s. Inherited land.

உரிமைக்காரர், s. Heirs, சுதந்திரர். 2. Natural guardians, responsible relatives, உரியவர்கள்.

உரிமைசெய்ய, inf. To discharge correlative duties, கடமைசெய்ய. 2. To perform funeral rites, கருமாதிசெய்ய.

உரிமைத்தத்துவம், s. [prov.] Right or letters of administration to the estate of a deceased person, சுதந்திரதத்துவம். 2. Right of guardianship in a case of minority, lunacy, &c., பாத்தியம்.

உரிமைபாராட்ட—உரிமைகொண்டாட, inf. To own the obligations one is under to another, on the ground of consanguinity, friendship, religion, country, &c., and to act accordingly, சுதந்திரங்கொண்டாட. 2. To converse with another on the ties of friendship, consanguinity, &c., common between them either to show that such ties exist, or for social enjoyments, சம்பந்தங்கொண்டாட.

உரிமைபேச, inf. To urge one's rights, claims, &c. on the ground of consanguinity, usage, occupation, previous services, acquaintance or otherwise, சுதந்திரங்காட்டிப்பேச.

உரிமைப்பங்கு, s. Share of an inheritance, சுதந்திரப்பங்கு.

உரிமைப்பாடு, s. Relative authority, obligation, &c., உரியகடமை.

உரிமைப்பிள்ளை, s. An adopted child entitled to the property of the adopter, சுவீகாரபுத்திரன்.

உரிமைப்பெண், s. A female in the proper degree of consanguinity to be taken in marriage, விவாகஞ்செய்வதற் குரித்தானவள்.

உரிமைமண், s. [prov.] Earth thrown on a corpse at its burial, by the near relatives, பிரேதக்குழியிலுரியவர்கள்போடுமண்.

உரிமையாட்சி, s. Possession or right of possession of property devolving on a child, which, had the parents been living, would have belonged to them, சுதந்திரவாட்சி.

உரிமையின்மை, s. Want of right or privilege.

உரிமையெடுக்க, inf. To take possession, to enjoy or claim one's share of an inheritance, produce, &c.

உரிமைவழி, s. Consanguinity, lineage, ancestral connection, சம்பந்தமுறை. 2. Inheritance or right of possession from ancestors, தொன்றுதொட்டுவருஞ்சுதந்திரம்.

உரிமைவிட, inf. To give freedom to, to manumit a slave.

சொல்லுரிமை, s. A fine emphatic expression.

உரியது, s. That which is proper to, peculiar to, tending to, liable to, exposed to, deserved, deserving, worthy of, appropriate to, obnoxious to, உரித்தானது.

இதற்குரியசொல். This is the appropriate word for it.

உரியதண்டனை, s. Condign punishment, deserved chastisement.

உரியபொருள், s. The primary meaning of a passage, உரியவர்த்தம். 2. Property in which one has a peculiar right, சுதந்திரமானதிரவியம்.

உரியர்—உரியார்—உரியோர், s. Proprietors, உடையவர்கள். 2. Heirs, சுதந்திரர். 3. Near or responsible relations, சம்பந்த முடையார். 4. The learned, அறிஞர்.

அன்பிலாரெல்லாந்தமக்குரியர்அன்புடையார்என்பு முரியர்பிறர்க்கு. Those destitute of love live only to themselves, whereas they who possess it are ready to give up their lives (lit. bones) for others. (குறள்.)

உரியவன்—உரியன்—உரியோன், s. Proprietor, owner, உடையவன். 2. Heir, சுதந்திரன். 3. A near relation, இனத்தான். 4. One worthy of, deserving of, தக்கவன். 5. (p.) Husband, கணவன்.

கொலைக்குரியவன், s. One who is worthy of death.

இழவுக்குரியவன், s. One whose duty it is to perform funeral rites.

உள்ளாட, *inf.* To have intercourse with an enemy in order to effect an object, உள்ளேபயில.

உள்ளாடுசத்துரு, *s.* An enemy in the camp, a snake in the grass, a treacherous companion, உட்பகைஞன்.

உள்ளாந்தரங்கம், *s.* Internal secrets, private matters.

உள்ளாயிருக்க, *inf.* To be engaged or concerned in an affair, to be one of a party, உடன்பாடாயிருக்க.

உள்ளாராய்வு, *s.* Deep research, thought, insight, a disposition to investigate profoundly, உள்ளாராய்ச்சி.

உள்ளாள், *s.* One who belongs to a particular party, or family—a domestic.

உள்ளிட, *inf.* To include, comprise, உள்ளடக்க.

தொல்காப்பியனையுள்ளிட்டபன்னிருவர். The twelve including Tolkappiar.

உள்ளிடை, *s.* Private affairs, intellectual concernments, உட்காரியம்.

உள்ளிடைபார்க்கவந்துநிற்கிறான். He has come to pry into our secrets, and to ascertain our private affairs.

உள்ளிடையானவன், *s.* One of our compact, party, &c.

உள்ளிட்டார், *s.* Brothers and sisters of an elder brother in a joint contract, inheritance, &c., தாயத்தார்.

சாத்தனையுமவனுள்ளிட்டாரையுஞ்சேர்ந்தகாணி... Land acquired in the name of Sattan and his brothers and sisters.

உள்ளிந்திரியம், *s.* The intellectual powers. See இந்திரியம்.

உள்ளிருப்பு, *s.* Hoarded treasure chiefly in money, வைத்திருக்குமாஸ்தி.

உள்ளின்மாசு, *s.* Corruption of the mind. See உபமலம்.

உள்ளீடு, *s.* What is within, உள்ளாயிருக்கிறது. 2. A bond, உள்ளுடன்படிக்கை; [*ex* இடு.]

உள்ளீட்டுக்காரியம், *s.* A secret thing.

உள்ளுக்குக்கொடுக்க, *inf.* To administer medicine which is to be taken inwardly.

உள்ளுக்குச்சாப்பிட, *inf.* To take internally—as medicine.

உள்ளுக்குச்செலுத்த, *inf.* To administer medicine, poison, &c., by force. 2. To insert, inject, to thrust in. 3. (*fig.*) To give a bribe secretly.

உள்ளுக்குள், *adv.* Internally.

உள்ளுக்குள்ளாயிருந்துமோசம்பண்ணினான். He deceived me under pretence of intimacy.

உள்ளுக்குள்ளானகாவல். An inner prison.

உள்ளுக்குள்ளேபகையுண்டாகிறது. To arise—as discord, &c. among relatives. 2. To cherish hatred in the heart.

உள்ளுடன், *s.* [*prov.*] Ingredients inclosed in the interior of a cake, tart, &c., உட்பொதிந்திருப்பது. 2. The matter within, the hidden meaning.

உள்ளுடைய, *inf.* To be heart-broken, to be greatly grieved, to be contrite, மனமுறிய. 2. To decline or fail in energy, ஊக்கமழிய.

உள்ளுடைவு, *v. noun.* Interior, or deep-seated grief, sorrow, contrition, மனக்கலக்குகை.

உள்ளும்புறமும். Internally and externally, அகமும்புறமும்.

உள்ளும்புறமுஞ்சரியானவன். One whose heart and conduct are alike, a sincere person.

உள்ளுயிர், *s.* Inner life, God.

உள்ளுயிர்க்குன்று, *s.* A snail, நத்தை.

உள்ளுறுத்த, *inf.* To put in, insert, include, instil—as principles, உள்ளிட.

உள்ளுறை, *s.* Secrets of the mind, inward thought, real opinion, உட்கருத்து. 2. Internal, or hidden meaning, மறைபொருள். 3. A word or theme given by which to commence a poem, பாடும்படிபுலவர்க்குக்கொடுக்குஞ்சமிசை.

உன்னுள்ளுறையேதனைச்சொல்லு. Say what you mean.

உள்ளுறையுவமம், *s.* A species of simile brought in by the by, rather indistinctly, and without the usual terms of comparison—opposed to வெளிப்படையுவமம்.

உள்ளூர், *s.* The interior of a town, or country, ஊர்நடு. 2. One's own country, town—spoken of when residing in it, one's home, சொந்தவூர்.

உள்ளூரிலும்பிறவூரிலும். At home and abroad.

உள்ளூர்ச்சரக்கு, *s.* Commodities or productions of one's own country—spoken of while in the country.

உள்ளே. In, within, between.

அதற்குள்ளே. [*vul.*] In the mean time.

உள்ளேபோட, *inf.* To get into one's power, get over to one's interests, உள்ளாகவைக்க.

உளளோசை, *s.* Internal sounds unheard by others—as beating of the heart, roaring in the ear, or rumbling of the bowels, &c., அகவொலி.

உள். The root of a symbolic verb signifying being, which, in poetic usage is complete in its inflections—as உளேன், or உள்ளேன், I exist, &c. 2. The third person singular of the inferior class (see உண்டு), and the participle with its appellatives are the only parts in common use. —*Note.* The participle and its derivations are joined to nouns to form adjectives and appellatives and to show the possession of the quality indicated—as உள்ளகாரியம், a real thing, fact.

உளர். They are—as அவருளர்.

உள்ள, *rel. part.* Existing, which exists, is real, genuine, essential.

உள்ளகதை, *s.* A real story, an authentic narrative, a fact, a reality.

உள்ளது, *appl. n.* The truth, it is true, உண்மை. 2. That which exists, உண்டானது.

உள்ளதற்குள். Among the few there are.

உள்ளதற்குள்ளேயிவன்சமர்த்தன். He is the most competent among them. 2. He is tolerably clever.

உள்ளதுசொல்லு. Speak the truth.

உள்ளதுரியதெல்லாம். The whole of one's property to the last mite.

உள்ளதைமறையாதே. Conceal not the truth.

உள்ளதோஇல்லதோ? Is it true or not?

உள்ளநாளுள்ளமட்டும். All this time, or always—a phrase indicating dissatisfaction.

உள்ளபடி. Truly, really as to right, according to the actual state.

உள்ளபடிமுடியும். It will end right.

உள்ளபணிவிடைசெய்வேன். I will do whatever service you have.

என்றுயிருள்ளநாள்மட்டும். As long as I live.

உள்ளபசுமை, *s.* Real truth, ஐயமற்றஉண்மை. 2. Real prosperity, மெய்வாழ்வு.

உள்ளபிள்ளை, [*vul. prov.*] A child of rich parents—the opposite to வறியபிள்ளை.

உள்ளமை, *s.* [*prov. prop.* உண்மை.] Truth, reality, sincerity, probity.

உள்ளவன், *s.* A moneyed man, a rich person, பொருளுடையவன். 2. A proprietor, உரியவன்.

குணமுள்ளமனிதன், *s.* A man of good disposition.

பணமுள்ளவன், *s.* A man of money.

உள்ளளவும், [*prop.* உள்ளவளவும்.] For ever, as long as aught shall be, the whole period of the world's existence, இருக்குமட்டும்.—*Note.* In this and similar sentences formed with this word, terms of universality are implied.

நானுள்ளளவுமும்மைப்பிரியேன். I will not forsake you as long as I live.

உள்ளார், *s.* Those who are (present, &c.), இருப்போர்.

மண்ணுள்ளார், *s.* Terrestrial inhabitants.

விண்ணுள்ளார், *s.* The celestials.

உள்—உள்ளு, உள்ளுகிறேன், உள்ளினேன், உள்ளுவேன், உள்ள, *v. a.* To think, think of, consider, bear in mind, to remember, நினைக்க—as one of the ten அவத்தை. 2. To revolve, intend, எண்ண. (*p.*)

கயந்தன்னிலைவைதுதையுள்ளிவிடும். The mean person will think of the reproach cast on him. (குறள்.)

உள்ளல், *v. noun.* Thinking.

உள்ளார், *s.* Foes, enemies, பகைஞர். (*p.*)

உள்ளிய, *rel. part.* Esteemed.

உள்ளியதெல்லியாரவிறுமூழ் வினைபையநுழைந்துவிடும். Though he be a man held in esteem, his destiny will quietly insinuate itself into his circumstances. (ஔவைகுறள்.)

உள்கு, கிறேன், உள்கினேன், வேன், உள்க, *v. a.* To think, நினைக்க. (ஞா. 75.) (*p.*)

உள்ளமுடையான், *s.* A book on Astronomy and Astrology, ஓர்சோதிடநூல்.

உள்ளம், *s.* The mind, hea t—as the seat of the passions, மனம். 2. Thought. intention, கருத்து. 3. (*p.*) Ene.gy, purpose, will, முயற்சி. 4. Meaning of a word or passage, வாக்கியத்தின்கருத்து.

உள்ளக்களிப்பு, *s.* Heart-felt joy, மனமகிழ்ச்சி.

உள்ளக்குறிப்பு, *s.* The secret thought or desire of a person not expressed in words, அகக்குறிப்பு. 2. Meaning, or intention of a speaker or writer, not evident from his words, உட்கருத்து. 3. The secret or special object which one has in view, உண்ணோக்கம்.

உள்ளத்திலேவைக்க, *inf.* To conceal in the mind, to keep secret.

உள்ளத்துறைவோன், *s.* God, கடவுள். (*p.*)

உள்ளத்துறைவாயுணர்கிற்றிலையே. Oh! thou who possessest my heart, thou hast not noticed my pangs. (நைட.)

உள்ளப்புணர்ச்சி, *s.* Imaginary gratification of lust, கருத்துப்புணர்ச்சி—opp. to மெய்யுறுபுணர்ச்சி.

உள்ளமிகுதி, *s.* Energy, determination, resolution, courage, joy, உள்ளக்கிளர்ச்சி.

உள்ளல், *s.* A kind of snipe—as உள்ளான்குருவி, Scolapax. (*Rott.*) (*p.*)

உள்ளாளனம்—உள்ளானம், *s.* A variety in dancing, or part of a dance, கூத்தின்விகற்பம். (*p.*)

உள்ளான், *s.* A small kind of snipe, உள்ளல், Scolapax, *L.*

தடிமூக்குள்ளான், *s.* Snipe whose bill resembles a stick.

துடுப்புள்ளான், *s.* Snipe whose bill resembles a paddle.

குத்தாட்டியுள்ளான், *s.* A species of snipe which, while walking is continually shaking its tail, a water wagtail.

கீரியுள்ளான், *s.* Snipe resembling an ichneumon.

கோரையுள்ளான். Scolapax Madraspatana, *L.*

சட்டித்தலையுள்ளான், *s.* Snipe whose head resembles a pan.

கோழியுள்ளான், *s.* Scolapax gallinago, *L.*

உள்ளி, *s.* Garlic, வெள்ளைப்பூண்டு, Allium sativum. 2. [*sometimes.*] Onion, வெங்காயம்.

உள்ளிப்பல், *s.* A clove of garlic, or onion.

உள்ளிப்பூடு, *s.* A root of garlic, onion, &c.

ஈருள்ளி, *s.* Onion, வெங்காயம், Allium cepa.

வெள்ளுள்ளி, *s.* Garlic, வெள்ளைப்பூண்டு.

உள்ளியர், *s.* [*prop.* ஒள்ளியர்.] The learned, those worthy of being honored, அறிவுடையோர். (*p.*)

உற, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* To seize—as by the throat, to pinch, press hard, press matter from a boil, &c., பிதுக்க. 2. To press out pulp, juice, &c., press out wholly, பிழிய. 3. To milk thoroughly, drain off, கறக்க. 4. [*prov.*] To strain to the last farthing, முற்றுங்கவர. 5. To nip, to pinch off, கிள்ளியெடுக்க.

உறக்குந்துணையதோராலம்வித்து. The seed of the banian tree so small as to be nipped with the finger and thumb.

உறந்துகுத்து. Press the pimple.

உறந்துபிழி. Press it all out.

காய்ச்சலவனிரத்தமெல்லாமுறந்துபோட்டது. The fever has reduced his system.

அவன்கைப்பொருளெல்லாமுறந்துபோட்டாள். She has inveigled away all his property.

ஊட்டியையுறந்துபோட்டான். He has pressed (the creditor) by the throat.

கன்றுக்குவிடாமலுறந்துபோட்டான். He has drawn all the milk leaving none for the calf.

உறப்பு, *v. noun.* [*prop.* உரப்பு.] Thickness, closeness—as of trees, &c.

உறக்கு, *s.* Sleep, நித்திரை. (*p.*)

உறக்கிடைநீத்து. Leaving her asleep—(சிலப்பதி.)

உறக்கு, கிறேன், உறக்கினேன், வேன், உறக்க, *v. a.* To put a child to sleep—as a mother, &c., துயிற்ற. (*p.*) 2. To destroy, to ruin, நாசப்படுத்த.

என்குடியையுறக்கிப்போட்டான். He has ruined my family.

உறங்கு, கிறேன், உறங்கினேன், வேன், உறங்க, *v. n.* To sleep, slumber, நித்திரைசெய்ய. 2. To become closed—as flowers, leaves, &c., by the absence of the sun, ஒடுங்க. 3. To become reduced, sluggish, drowsy, &c.—as by a journey, disease, want of food, &c., சோர.

தையுமாசியும்வையகத்துறங்கு. In the months of January and February sleep in a house thatched with straw.

உறக்கம், *v. noun.* Sleep, slumber, drowsiness, நித்திரை. 2. Suspension of the faculties whether by sleep, fainting, or otherwise, ஒடுக்கம். 3. Death, மரணம்.

ஐயுமாலுடனுறங்குமுலகுதந்தவனுறக்கம். The fainting of Brahma through weariness and confusion of mind.

உறக்கத்தைத்தள்ள, *inf.* To avoid sleep.

பொய்யுறக்கம், *s.* Slight sleep, gentle slumber.

சோற்றுறக்கம், *s.* Sleep not deep or sound, such as may be experienced after taking food.

உறட்டு, கிறது, உறட்டினது, ம், உறட்ட, *v. a.* To dry, wither, reduce, emaciate, வறட்ட.

உறட்டல், *v. noun.* Making thin, withered, dried, உலர்த்தல்.

உறட்டலன், *s.* A thin, lank person, உலர்ந்துபோனவன்.

உறட்டல்மண், *s.* Dry, ungenial soil.

உறட்டற்களி, *s.* Sterile, clayey soil.

உறட்டற்சரீரம், *s.* A withered constitution.

உறட்டு, *s.* [*prov.*] Rugged, uneven ground—as dried mud which hurts the feet, கரட்டுநிலம்.

உறட்டை, *s.* [*prov.*] A bad smell, stench, offensive smell—as of a dead carcass, bugs, &c., துர்க்கந்தம்.

உறட்டைநாற்றம்—உறட்டைமணம், *s.* Stench, stink, offensive effluvia.

உறட்டையடிக்க—உறட்டைவீச, *inf.* To diffuse itself as an offensive, or disgusting fume, துர்க்கந்தம்வீச.

உறண்டு, *s.* [*prov.*] A rough or rugged disposition, முரட்டுக்குணம்.

உறண்டுபண்ணல், *v. noun.* Annoying, harassing, displeasing, முரண்டு செய்தல்.

உறண்டு, கிறேன், உறண்டினேன், வேன், உறண்ட, *v. n.* To become reduced, or emaciated by journeying, want of suitable food, or by disease, &c., வறள.

சாப்பாடில்லாமல வுருறண்டிப்போனூர். He is greatly reduced by want of food.

உறண்டை, *s.* Opposition, dissension, முரட்டுத்தனம். 2. Annoying, harassing, vexing; mischievous, or offensive, sport—as pinching, pushing, &c., தொந்தரவு செய்கை. 3. A kind of offensive smell—as of bugs, some kind of fish, rancid ghee, &c., துர்க்கந்தம். (*c.*)

உறண்டைக்குநிற்க, *inf.* To disagree, dissent.

உறண்டைத்தனம், *s.* A gross, sour disposition, முரண்டுத்தனம்.

உறண்டைநாற்றம், *s.* Stink, stench, offensive effluvia—as of dry fish, any thing rancid, &c.

உறண்டையடிக்க—உறண்டைவீச, *inf.* To smell offensively—as dried fish, &c., துர்க்கந்தம்வீச.

உறண்டையாட—உறண்டையிட, *inf.* To annoy, harass, vex, அலைக்கழிவு செய்ய.

உறவி, *s.* A spring, a fountain, ஊற்று. 2. A well, கிணறு. 3. An emmet, எறும்பு. 4. Relationship, சுற்றம். 5. Life, soul, உயிர். 6. A smith's forge, உலைக்களம். 7. A moth, ஓர்புழு, Varrata Port. (சது.) (*p.*)

உறவியொன்றுடகக்கற்குழித்து. An emmet perforating the golden mountain— (சேதுப்.)

உறவு, *s.* Contact, nearness, பொருத்தம். 2. Arrival, accession, சேர்கை. 3. Affinity, relationship, சம்பந்தம். 4. (*fig.*) A relation, சுற்றம். 5. Friendship, love, good terms (with one), நட்பு. 6. Reconciliation, ஒற்றுமை. 7. Union, connexion, intercourse, intimacy, acquaintance, ஐக்கம்.

எனக்கவனுடனேபகையுமில்லையுறவுமில்லை. I am neither on bad nor good terms with him—often used to show a want of cordiality.

உறவர்—உறவோர், (*sing.* உறவன், வோன்.) Relations, சுற்றத்தார். 2. Friends, நண்பர்.

உறவாக, *inf.* To become reconciled, ஒருமைப்பட. 2. To become related, கேண்மையாக.

உறவாக்க—உறவுகட்ட—உறவுசெய்ய—உறவுபண்ண, *inf.* To reconcile parties, to make peace with one, ஒருமைப்படுத்த.

உறவாட, *inf.* To be social, to act friendly, exercise the duties of friendship, நட்புச்செய்ய. 2. To treat one as a relation, to caress, entertain, &c., உறவு கொண்டாட.

உறவின்முறையார்—உறவுமுறையார். Relations, kindred, சுற்றத்தார்.

உறவுகூட, *inf.* To become friends, become intimate, சிநேகங்கூட.

உறவுகொண்டாட, *inf.* To entertain, or welcome relations or friends, to show civilities, உறவாட. 2. To reciprocate affection, civilities, &c.—as relations, or friends, உறவுபாராட்ட.

உறவுகொள்ள, *inf.* To make a friend of one, to cultivate friendship, நட்புக்கொள்ள.

உறவுபாராட்ட, *inf.* To show marks of regard on account of relationship, to talk of old affinities, connections, &c., நட்புப்பாராட்ட.

உறவுமுரிய, *inf.* To fall out—as friends, to become disunited, நட்புக்கெட.

தூரவுறவு, *s.* A distant relation.

கிட்டினவுறவு—நெருங்கினவுறவு, *s.* A near relative.

உறழ், கிறேன், ந்தேன், வேன், உறழ, *v. a.* [*in arithmetic.*] To multiply, பெருக்க. 2. To hate, counteract, பகைக்க. 3. *v. n.* [*in grammar.*] To be interchangeable with—as letters in combination, to be permutable, விகற்பமாக. 4. To be contrasted with, to rival, to vie with, எதிராக. 5. To cope with, to join in battle, to attack, make onset, இகல. 6. To be similar to, to be assimilated, உவமையாக. (*p.*)

லகரமல்வழிக்கண்ணேறகரத்தோடுறழும். In அல்வழி combination, ல் is interchangeable with ற்.

துறக்கமோடுறழச்செய்த. Made so as to resemble the celestial world—

மகரவிறுதியஃறிணைப்பெயரினகரமோடுறழும். ம் final in some nouns of the inferior class is exchangeable for ன்.

காருறழ்கந்தரக்கடவுள். The god (Siva) whose neck resembles the clouds.

எட்டைப்பத்தாலுறழவெண்பதாம். Eight multiplied by ten make eighty.

உறழ்ச்சி, *v. noun.* Similitude, resemblance, &c. See உறழ்வு.

உறழ்வு, *v. noun.* Likeness, resemblance, comparison, ஒப்பு. 2. Equilibrium, equality, சமம். 3. [*in grammar.*] The state of being interchangeable, விகற்பம். 4. Contrast, rivalry, competition, vying, எதிர். 5. Joining in battle, combating, போர். 6. Hatred, enmity, animosity, variance, பகை. 7. Multiplication of numbers, எண்பெருக்குகை. 8. Perception, உணர்வு.

உறி, *s.* A bow or hoop, in which to place a pot suspended by a string from the roof of the house, from the hand, or at the end of a pole carried on the shoulder, தூக்கு.

உருசைகண்டபூனையுறிக்கையுறியைத்தாவுகிறது. The cat which has tasted nice things will continually jump on the shelf; i. e. stolen goods are sweet.

உறிக்கலயம்—உறிச்சட்டி, *s.* Different kinds of kitchen utensils suspended in the hoop.

உறிபோட, *inf.* To construct such a net work of rope or ratan.

உறியடி—உறியடித்திருநாள், *s.* The pot breaking—a ceremony performed at the close of a festival among the worshippers of Vishnu in honor of Krishna who is reputed to have stolen butter, ghee, &c., from suspended pots, ஓர்திருவிழா.

உறியடிக்க, *inf.* To perform the ceremony of breaking pots.

உறியடுக்குச்சட்டி, *s.* A number of kitchen utensils hung up.

உறியிற்சமணர், *s.* Ascetics of the Jaina sect who sit in swings that they may not destroy insect life, சமண்முனிவரிலோர்பாலார்.

உறி, கிறேன், ந்தேன், வேன், ய, *v. a.* To snuff up by the nose, &c.—as உறிஞ்ச. 2. To sip up, suck up, to take in by draughts.

உறிஞ்சு, கிறேன், உறிஞ்சினேன், வேன், உறிஞ்ச, *v. a.* To sip, suck up, draw into the mouth (as hot liquids or as from spoons, &c.), வாய்க்குள்ளிழுக்க. 2. To snuff up, sniff, inhale forcibly through the nose, ஆக்கிராணிக்க. 3. (*fig.*) To imbibe, absorb as a spunge, as the earth does rain, &c., உள்ளேயிழுக்க.

நன்குறிஞ்சிப்பேய்த்தனஞ்சுவைத்தார். Sucking well he has fed on the breast of a female vampire. (வேங்கட.)

இந்த மருந்துபுண்ணிற்கள்ளத்தையுறிஞ்சியெடுத்துப்போடும். This medicament will absorb the noxious humors.

மூக்கினுலுறிஞ்ச, *inf.* To snuff up any thing.

மூக்குறிஞ்ச, *inf.* To snuff for the purpose of retaining the mucus.

உறு, *adj.* Very much, abundant, copious, great, intense, மிகுதியான.

உறுசூது, *s.* Great guile.

உறுபசி, *s.* Extreme hunger.

உறு, கிறேன், உற்றேன், வேன், உற, *v. n.* To be, to exist, உண்டாக. 2. To feel, experience, suffer, enjoy, experience sensations—as heat, cold, பரிசிக்க. 3. To be in contact, to join closely, unite with, combine, கூட. 4. To happen, occur, befall—as a good, or evil, சம்பவிக்க. 5. To accrue—as riches, சேர. 6. To profit, turn to account, பயனுற. 7. To obtain, கிடைக்க. 8. To arrive at, reach, வர. 9. To belong to peculiarly, to be appropriate, பொருந்த. 10. To be situated at, or be in a place, இருக்க. 11. To dwell, reside, தங்க. (*p.*)—*Note.* This word is often joined to verbals or verbal roots to form new verbs, and the infinitive and other parts are used adverbially to express intensity, entireness, &c.—as சூழ்ந்தது, it surrounded; ஊடுறச்சென்றது, it pierced, or penetrated.

உறச்சிவந்தது. It is become very red.

உறவளைக்கும்வில். A bow bent to the utmost.

சுகமுறுநித்திரை. Refreshing sleep.

கிலேசமுற்றேன். I became sorrowful.

விருப்பமுற்றேன். I have conceived a desire.

இன்பமுற்றேன். I was rejoiced.

பயமுற்றேன். I grew frightened.

நோயுறும்போது. When sickness befalls—

பாவியருறும்பழி. The evil endured by the wicked for their sins. (இராமா.)

சொல்லலுற்றேன்—சொல்லுற்றேன். I said, I have treated on—a formal or dignified mode of expression among authors.

மிதழிதழுறப்பம்மப்பிறக்கும். The letters ப and ம are produced by the contact of the upper and lower lips. (நன்.)

முந்தினோர்பின்னுறக்கடுகவோடினன். He ran so swiftly that all who started before him were left behind.

உறவற்ற, *inf.* To dry up entirely.

உறுந்தருணம்—உறுந்தறுவாய், *s.* Emergency, exigency, particular juncture.

உறுவதுகூறல், *v. noun.* Giving an indirect answer to a question, எவ்வகைவிடையிலொன்று.

உற்ற, *rel. part.* Uncommonly devoted, trusty.

உற்றசெய்தி, *s.* True report, true news.

உற்றது, *appel. n.* The thing as it is, the whole of it.

உற்றதுசொல்ல, *inf.* To speak the truth.

உற்றதுசொல்லஅற்றதுபொருந்தும். By telling the truth, misunderstandings are adjusted; truth is the surest resource through life.

உற்றபண்புரைப்போர், *s.* Messengers, தூதர். (*p.*)

உற்றமனிதன், *s.* A fit or proper person to transact an affair, one who can be trusted.

உற்றவன், *s.* A friend, a relation, உறவோன்.

உற்றவிசேஷம், *s.* A proper or suitable expression.

உற்றளவு, *s.* An accurate, genuine, fair measure, சரியளவு. 2. Genuine state of things, real news, உண்மைச்செய்தி.

உற்றறிய, *inf.* To feel by the touch, be sensible to touch—as plants, &c., பரிசித்தறிய. 2. To experience, to know by experience, பரிச்சித்தறிய.

உற்றுன்மை, *s.* [*prov. prop.* உற்றவுரிமை.] Interest as among near relatives and friends. 2. Close or intimate friendship, attachment.

உற்றுன்மைபேச, *inf.* To speak for—as a near relative, or friend interested in one's welfare.

உற்றுராய, *inf.* To investigate deeply, attentively, minutely, &c.

உற்றார்—உற்றோர், *s.* Relations, உறவோர். 2. Friends, சிநேகர்.

உற்றிடம், *s.* An emergency, exigency, ஆபத்து. (*p.*) 2. (*Rott.*) A refuge, அடைக்கலம்.

உற்றிடத்துதவ, *inf.* To help on an emergency.

உற்றுக்கேட்க, *inf.* To listen attentively.

உற்றுப்பார்க்க, *inf.* To look steadfastly. 2. To examine minutely.

உற்றுழி, *s.* Emergency, exigency, time of expected evil, imminent danger, &c., வருத்தமானகாலம்.

புலம்புற, *inf.* To utter lamentation.

பயமுற, *inf.* To be afraid.

கையுறாப்பொருள், *s.* A thing which does not come near to hand; i. e. which is obtained with great difficulty.

உரனுற, *inf.* To obtain strength or force.

உறல், *v. noun.* Being near, coming, approaching.

உறுபு, *v. noun.* Costiveness, thickness, narrowness, செறிவு. 2. Abundance, plenty, மிகுதி.

உறுவிக்க, *inf.* To cause to be, &c.

உறுகண், *s.* Suffering, affliction, distress, sorrow, துன்பம். 2. Disease, நோய். 3. Poverty, தரித்திரம். 4. Fear, அச்சம். (*p.*)

உறுகண்ணாளர், *s.* The poor, the destitute, the diseased, the afflicted, வறுமையுடையோர்.

உறுக்கு, கிறேன், உறுக்கினேன், வேன், உறுக்க, *v. a.* To reprimand, chide, scold, reprove, rebuke, கடிந்துகொள்ள. 2. To menace, denounce, threaten, either by words or gesture, பயமுறுத்த. 3. To speak with harshness, severity, anger, &c., குரோதமாய்ப்பேச. 4. (*p.*) To leap over, pass over, கடக்க. 5. To jump, குதிக்க.

உறுக்கிக்கேட்க, *inf.* To interrogate in a threatening tone or manner.

உறுக்கிச்சொல்ல, *inf.* To speak or declare with authority, to speak in a threatening tone.

விரலானுறுக்க, *inf.* To rebuke by raising or shaking the forefinger.

உறுக்கல், *v. noun.* A jump, குதிப்பு. 2. *s.* Anger, கோபம். 3. Sign of anger, சினக்குறிப்பு.

உறுக்கு—உறுக்காட்டம்—உறுக்காட்டியம், *v. noun.* Rebuking, threatening, severe reprimand, vehement command, உறுக்குதல்.

அவனுடையஉறுக்காட்டியத்தைப்பார். See how ostentatiously he rebukes.

உறுக்காட்டியம்பண்ண, *inf.* To exercise authority, &c.

உறுசன்மேகம், *s.* A kind of arsenic, அவுபலபாஷாணம். (*M. Dic.*)

உறுதி, *s.* Firmness, strength, solidity, stability, திடம். 2. Power, energy, force, வலிமை. 3. Goodness, benefit, நன்மை. 4. Moral instruction, good advice, &c., tending to salvation, சன்மார்க்கவுபதேசம். 5. Certainty, assurance, confidence, decision, நிச்சயம். 6. Corroboration, confirmation, திடப்படுத்துகை. 7. Firm hold, firm attachment, steadfastness, தளராமை. 8. A bond, title deed, voucher, ஆட்சிப்பத்திரம். 9. Literature, science, erudition, கல்வி. 10. Validity in law, வழக்கின்திடம். 11. Heartiness, energy, earnestness, பிடிவாதம்; [*ex* உறு, urgent.]

உறுதிகொள்ள, *inf.* To be confirmed.

உறுதிசெய்ய—உறுதிபண்ண, *inf.* To confirm, corroborate, benefit, &c., பலஞ்செய்ய. 2. To execute a title deed, bond, &c.—as a contracting party, உடன்படிக்கையெழுத. 3. To believe firmly, persuade one's self, நிச்சயிக்க.

உறுதிசொல்ல, *inf.* To assure, speak firmly, pledge one's word, &c., திடமாகச்சொல்ல. 2. To inspire hope, to console, நம்பிக்கைசொல்ல. 3. To give good moral advice, admonish, நற்போதனைசெய்ய.

உறுதிச்சீட்டு—உறுதிப்பத்திரம், *s.* A bond, a written contract, a title deed.

உறுதிச்சுற்றம், *s.* The principal attendants on a king; they are five, viz.: நட்பாளர், அந்தணாளர், மடைத்தொழிலர், மருத்துவக்கலைஞர், நிமித்திகப்புலவர்.

உறுதிச்சொல், *s.* A word of assurance, நிச்சயமொழி. 2. A word of advice, நல்லுபதேசம். 3. An admonition, a warning, கண்டிப்பு.

உறுதிபண்ண, *inf.* To confirm, to corroborate.

உறுதிபூசுதல், *s.* The sacrament of confirmation among the Romanists.

உறுதிபெறுதல், *v. noun.* Obtaining firmness of mind.

உறுதிப்பட, *inf.* To be confirmed, assured, to be firmly established in a course of conduct, திடப்பட.

உறுதிப்படுத்த, *inf.* To confirm in a religious sense, to corroborate, establish, பலப்படுத்த. 2. To make a verbal or written promise, உடன்படிக்கைசெய்ய.

உறுதிப்பாடு, *s.* Firmness, fortitude, decision, திடம். 2. A promise, pledge, assurance.

உறுதிப்பொருள், *s.* The Supreme Being, கடவுள். 2. The four chief ends of intelligent creatures. (See பொருள்.) 3. Wisdom, or good conduct, such as may profit the soul, ஞானம். 4. The real meaning, or essence of a passage, நிச்சயார்த்தம்.

உறுதிமுடிக்க, *inf.* [*prov.*] To execute a title deed, or bond.

உறுதியர், *s.* Messengers of state, confidential agents, தூதர்.

உறுதியற்றதாக்க, *inf.* To disannul.

உறுதியாய்க்கேட்க, *inf.* To solicit urgently. 2. To inquire accurately.

உறுதியாய்த்தாக்க, *inf.* To beat severely.

உறுதியாய்ப்பிடிக்க, *inf.* To insist upon, to show no indulgence.

உறுதியானவார்த்தை, *s.* Forcible language. 2. A sure promise, a statement. 3. Moral or religious advice, admonition. 4. Positive declarations or language.

உயிருக்குறுதி, *s.* Instruction or other means tending to the salvation of the soul.

பேருறுதி, *s.* Unshaken confidence.

உறுத்து, கிறேன், உறுத்தினேன், வேன், உறுத்த, *v. a.* To cause to be, to originate, உண்டாக்க. 2. To form, constitute, ஏற்படுத்த. 3. To insert, introduce, சேர்க்க. 4. To render, produce, வருவிக்க. 5. To erect, construct, நாட்ட. 6. To bring in contact, clap together, make an impression on the mind, தாக்க. 7. To cause smarting irritation, &c.—as dust in the eye, a rough or uneven surface to one sitting, or lying down from the protrusion of his bones, வருத்த. 8. To produce mental pain—as by a sarcastic remark, &c., மனதிலுறுத்த.—*Note.* The meanings of this word are commonly determined by the noun prefixed to it, and it may generally be construed by the form *to cause to be*, &c. See எலும்புறுத்த, below.

புரவிபண்ணுறுத்திடுவார். They equipped the horse. (நைட.)

மருங்கினிற்கச்சியாப்புறுத்தான். He bound the girdle about his waist. (சேதுப.)

காலிலேகல்லுறுத்துகின்றது. The pebbles hurt my feet.

உறுத்திப்பேச, *inf.* To speak so as to make an impression on the mind. 2. To speak with energy, earnestness, &c.

எலும்புறுத்த, *inf.* To cause a smarting irritation—as the bones by being protruded.

துன்புறுத்த, *inf.* To cause suffering. For many words compounded with this verb, such as கண்ணுறுத்த, பயமுறுத்த, மனமுறுத்த, வற்புறுத்த, &c., see in their respective places.

உறுத்தை, *s.* A squirrel, அணில். (*p.*)

உறுபு, *s.* One of the musical modes, பாலையாழ்த்திறம். (*p.*)

உறுப்பு, *s.* A limb, or member of the body, parts, features, அவயவம். 2. Body, உடல். 3. Part (of a whole) component part, member, subdivision, department, section, பங்கு. 4. Just proportion, symmetry, அங்கலட்சணம். 5. Abundance, மிகுதி. 6. Bough, மரக்கொம்பு. 7. Closeness, narrowness, நெருக்கம். 8. A copy of single letters set for a child to imitate, மேல்வரிச்சட்டம். 9. Title deed, registry, &c. of land, காணியாட்சிப்பத்திரம்.

அந்தக்காணிக்கோருறுப்புமில்லை. There is no security, title, &c. for that land.

உறுப்படக்கி, *s.* A tortoise, a turtle—from the contraction of its limbs, ஆமை; [*ex* உறுப்பு, *et* அடக்கி, from அடக்கு contraction.]

உறுப்பணங்கெட்டவன். [*prop.* உறுப்பினங்கெட்டவன்.] An ill-shaped, maimed, ugly person. 2. (*Rott.*) உறுப்பினங்கெட்டவன், A foolish, a witless fellow.

உறுப்பற்றவன்—உறுப்புக்குறைந்தவன். An ill-formed, or deformed person, அவயவவீனன். 2. An ill-bred person. ஒழுக்கமில்லான்.

உறுப்பில்பிண்டம், *s.* The embryo. See எச்சம.

உறுப்புக்குறைவிசேடம், *s.* [*in rhetoric.*] A species of the figure called விசேடம்

உறுப்புத்தோல், *s.* A species of deer-skin which, according to the shasters, the Brahman should fasten to his sacred cord, நூலிற்கட்டியமான்றோல்.

உறுப்புநலனழிதல், *v. noun.* Decaying or withering—as the beauty of a female, on account of the absence of her lover, அங்கத்தழகுகெடுதல்.

உறுப்புமயக்கம், *s.* A prodigy, a monster, one whose limbs are redundant, defective, &c. See எச்சம்.

உறுப்புள்ளவன், *s.* A vigorous, well-formed man, அங்கலட்சணமுடையவன். 2. A man of enterprising character, qualified for business, திறமையுடையான். 3. A man of good conduct, அறத்துறுப்புடையான். 4. A man of good manners, ஒழுக்கமுள்ளவன்.

காணிக்குறுப்புப்பண்ண, *inf.* To get a title deed passed for land.

அகத்துறுப்பு, *s.* The constituent parts of virtue; they are eight in number. 1. ஐயப்படாமை, Freedom from doubt and uncertainty. 2. விருப்பின்மை, Liberation from the desires of the senses. 3. வெறுப்பின்மை, Freedom from antipathy, prejudice, &c. 4. Exemption from illusion, confusion of mind, error, ignorance, &c. 5. பழியைநீக்கல், Freedom from evils. 6. அழிந்தோரைநிறுத்தல், Restoring the ruined or apostate. 7. அறம்விளக்கல், Expounding or elucidating the nature of virtue. 8. பேரன்புடைமை, Great kindness, or benevolence to all sentient creatures.

நூலுறுப்பு, *s.* One of the members or component parts of a treatise.

மதிலுறுப்பு, *s.* The component parts of a fortification.

திருவுறுப்பு, *s.* A jewel worn by bridegrooms upon their foreheads—a sign of the goddess இலக்குமி.

செய்யுளுறுப்பு, *s.* The constituent parts or elements of poetry, as given in காரிகை, they are six, viz.: 1. எழுத்து, Letters forming thirteen classes. 2. அசை, Metrical syllables of two kinds. 3. சீர், Metrical feet of thirty kinds. (See. சீர்.) 4. தளை, Combination of feet one with another, of seven kinds. 5. அடி, Metrical lines determined by the number of feet of which they are composed, five kinds are given. 6. தொடை, Rhyme, forty-three species are enumerated.

சீட்டினுறுப்பு, *s.* The style or different parts of a writ, or deed, &c.

உறுமாலா—உறுமாலை—உறுமால், *s.* (*For.*) A kind of large-cornered head-dress of Hindus, தலைச்சாத்து. 2. Handkerchief, அஸ்தபாவாடை.

உறுமாலைகட்ட, *inf.* To tie such a cloth round the head.

சந்திரகாவியுறுமாலை, *s.* A handkerchief dyed red.

பொன்னுறுமாலை, *s.* A handkerchief interwoven with gold.

உறுமு, கிறேன், உறுமினேன், வேன், உறும, *v. n.* To growl, grumble, &c., முறுமுறுக்க. 2. To growl—as a bear, tiger, dog or monkey in rut; to gnarl—as a cat, முறுக. 3. To grunt—as a pig, பன்றியுறும. 4. To thunder with a growling noise, மேகமுழக்க. 5. To sound as the உறுமி drum. 6. To show anger, சினக்க. 7. To rise, be stirred up, எழும்ப.

முகிலுறுமுகிறது. The clouds emit a growling noise.

உறுமிப்பார்க்க, *inf.* To look grimly with a growling noise.

உறுமி, *s.* A kind of drum that causes a murmuring sound, a tabor, தண்ணுமை.

உறுவல், *s.* Suffering, affliction, distress, துன்பம். (*p.*)

உறுவன், *s.* An ascetic, a Muni, முனிவன். 2. Argha, அருகன். (*p.*)

உறுவை, *s.* A Tamil authoress. See ஔவை. (*p.*)

உறை, *s.* A sheath, scabbard, case, quiver, படைக்கூடு. 2. A cover, a pillow-case, &c., கௌசனை. 3. A receptacle for grain, a kind of sack, பண்டம்பெய்யுறை. 4. A reserve of curds for curdling milk, பாலிடுபிரை. (*c.*) 5. Place of residence, appropriate, customary place for a person or thing, இருப்பிடம். 6. Rain drops, துளி. 7. Rain, மழை. 8. Washerman's lye, ஆடையழுக்ககற்றுநீர். 9. Pungency, corrosiveness, caustieness, காரம். 10. Food of brutes, food, விலங்குணவு. 11. Medicine, medicament, மருந்து. 12. Life-time, வாழ்நாள். 13. Length, நீளம். 14. Height, உயரம். 15. An earthen ring used for the construction of a well, கிணற்றுறை. 16. Marks or symbols in numbering—as one for ten, &c., in measuring, weighing, இலக்கக்குறி. 17. A snake's poison bag, பாம்பின்விஷப்பை. 18. Bell-metal, வெண்கலம. (*p.*)

உறையிலேயிருக்கிறார். He is at home, out of employ—a kind of burlesque.

பொழுதுறையிலேவிழுந்தது. The sun is set, *lit.* gone to its place.

உறைகாரர், *s.* Sheath-makers. See கரோடர்.

உறைகாலம், *s.* Life-time, வாழ்நாள். 2. The rainy season, மழைகாலம்.

உறைகுத்த, *inf.* To curdle milk, to cause it to coagulate.

உறைக்கிணறு, *s.* A well formed of earthen rings one placed upon another

உறைத்துளி, *s.* Rain drops.

உறைமோர், *s.* Sour milk used to curdle other milk, பிரைமோர்.

தலையணையுறை, *s.* A pillow-case.

நாலுறை, *s.* Forty measures.

நெல்லுறை, *s.* A mark used in measuring paddy. 2. A receptacle for paddy.

உறை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To abide, lodge, inhabit, sojourn, வாசஞ்செய்ய. 2. To be, or to dwell in a natural, appropriate place, or element—as men in houses, villages, &c.—fishes in water—birds in the sky, &c., இருக்க. 3. To haunt, frequent, infest, retire to—as birds to the grove—bees to their hive—snakes to their holes, &c., சஞ்சரிக்க. 4. To thicken, congeal, curdle, coagulate, freeze, இறுக. (*c.*) 5. (*p.*) To be close, thick or clustered—as trees in a forest, செறிய.

உறைந்தபனி—உறைபனி, *s.* Hoar frost, ice.

உறைந்தமழை—உறைமழை, *s.* Snow.

உறைபதி, *s.* One's place of residence, வசிக்குமூர்.

உறையிடம்—உறைவிடம், *s.* A place of residence; an inner apartment.

உறையுள், *s.* Abode, appropriate abiding place for human beings, or other creatures, தங்குமிடம். 2. A house, வீடு. 3. A village, town, ஊர். 4. A country, a district, நாடு. 5. A bed, a sleeping place, a dormitory, மக்கட்படுக்கை. 6. A village or town in an agricultural district, மருதநிலத்தூர். 7. Lifetime, ஆயுள். (*p.*)

உறையூர், *s.* Villages, towns, &c., in cultivated districts, மருதநிலத்தூர். (*p.*)

பேயுறைந்தகாடு, *s.* A jungle haunted by demons.

மெய்யுறைகின்றநா, *s.* A truthful tongue.

வௌவாலுறைந்தவீடு, *s.* A house frequented by bats.

உறைவு, *v. noun.* Abiding, dwelling, தங்குகை. 2. Coagulation, இறுகுகை. 3. *s.* Natural situation for persons, animals, or things, இருக்குமிடம்.

உறை, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To be pungent, biting, sharp, காரிக்க. 2. To burn—as the body from exposure to the sun—the mouth, or a sore from any thing pungent—the back after flogging, &c., எரிய. 3. To affect acutely, cut to the quick—as a blow, rebuke, a sarcasm, &c.; to impress, தாக்க. 4. To become firm, fast, steadfast, decided—as the mind, அழுந்த.

உறைக்கமழைபெய்தது. It rained effectively.

என்மேலேவெயிலுறைக்கிறது. The heat burns or scorches me.

நாணுறைப்ப. So as to be touched with shame. (சீதெரி.)

உப்புறைக்கிறது. It is very salt.

சொன்னதொன்றுங்காதிலேயுறைக்கவில்லையா..... Has nothing that I said affected you? *lit.* your ears.

என்மனதிலேயுறைக்கிறது. It touches me to the quick.

நான்சொன்னதுஅவன்மனதிலேயுறைத்தது. What I said made an impression on his mind.

புளியுறைக்கிறது. It is very sour.

கறியுறைக்கிறது. The curry is hot.

வெயிலுறைக்கிறது. The sun scorches intensely.

சாறுறைக்கிறது. The broth is pungent.

உறைக்கஅடிக்க, *inf.* To strike so as to produce feeling.

உறைக்கச்சொல்ல, *inf.* To speak effectively.

உறைக்கப்பார்க்க, *inf.* To look intently.

உறைத்துக்கொள்ள, *inf.* To become strengthened in mind.

வாயுறைக்க, *inf.* To burn as the mouth through eating hot spices.

உறைப்பு, *v. noun.* Sharpness, pungency, acrimony, காரம். 2. Severity, tartness, harshness in language, &c., கொடுமை. 3. Smarting, &c. of the mouth from eating pungent spices, எரிவு. 4. Painful sensations of body or mind, தாக்குகை. 5. Intensity, acuteness, severity, உக்கிரம். 6. Impressiveness, positiveness, பதிவு.

உறைப்பானபேச்சு, *s.* Pointed language, cutting reproof, a biting sarcasm, a caustic remark. 2. Impressive speech.

உறைப்பானமழை, *s.* An efficacious or fertilizing rain.

உறைப்புக்காட்ட, *inf.* To be pungent. 2. To add pungent ingredients to curries, &c. 3. To be impressive, poignant, &c.—as a discourse.

உறையல், *s.* [*as** பிணக்கு.] Rancor. (*Rott.*)

உறையூர், *s.* The town of king Sola. See சோழி. (*p.*)

*உற்கடம், *s.* An elephant in rut, மதம்பிடித்தயானை. 2. Intoxication, pride, செருக்கு. 3. Sarsaparilla, நன்னாரி, Hemidesmus Indicus. Wils. p. 139. UTKADA. (*p.*)

*உற்கடிதம், *s.* One of the five modes of beating time, பஞ்சதாளத்திலொன்று. (*p.*)

*உற்கம், *s.* A fire-brand, கடைக்கொள்ளி. 2. A body of fire, தீத்திரள். 3. The last fire, ஊழித்தீ. (*p.*)

*உற்காரம், *s.* Vomiting, disgorging, discharging, வாந்திசெய்கை. Wils. p. 148. UDGARA. 2. Vociferation, அதிர்ச்சி. 3. Winnowing corn, தூற்றுந்தானியம். (*p.*)

உற்காரகுலை, *s.* A species of arthritic disease.

உற்கரிக்க, *inf.* To vociferate with vehemence and rage, கோபத்தோடுபேச. (சிலப்பதி.) (*p.*)

*உற்கிருஷ்டம், *s.* Excellence, greatness, மேன்மை. 2. Excessiveness, மிகுதி. Wils. p. 140. UTKRUSHTA.

*உற்குரோசம், *s.* A kind of water-bird—the osprey, நீர்வாழ்பறவை. 2. Clamor, proclamation, சத்தம். Wils. p. 140. UTKROSHA.

*உற்கை, *s.* A fire-brand, கடைக்கொள்ளி. 2. A meteor, விண்வீழ்கொள்ளி. Wils. p. 163. ULKA. 3. A star, விண்மீன். (*p.*)

*உற்சர்க்கம், *s.* Abandonment, rejection, கைவிடுகை. Wils. p. 144. UTSARGA.

உற்சர்க்கத்தலம், *s.* The fundament, மூலாதாரம்.

*உற்சர்ப்பிணி, *s.* A Jaina division of time, a long period described as ten crores of crores of oceans of years; this period alternates with one of similar duration. Wils. p. 144. UTHSARPIN'EE. 2. A period of time symbolized by the waxing of the moon and distinguished by longevity and abundance, opposed to அவசர்ப்பிணி, symbolized by the waning of the moon and distinguished by shortness of life and want, உலகம், வாணாள், போகம்முதலிய வைகளால் வளர்பிறைபோற் பெருகுங்காலம்.

*உற்சவம், *s.* A religious festival, a public festivity, திருவிழா. 2. (*p.*) Wedding, விவாகம். (நிகண்டு.) 3. (*St.*) Great desire, ஆசைப்பெருக்கம். Wils. p. 144. UTSAVA.

உற்சவவிக்கிரகம், *s.* The idol used in processions—as distinguished from the மூலவிக்கிரகம், or the stationary idol, எழுந்தருளும்விக்கிரகம்.

*உற்சாகம், *s.* [*impr.* உற்சாயம்.] Effort, perseverance, strenuous and continued exertion, முயற்சி. 2. Promptitude, resolution, determination, the first impulse of the mind toward actions, ஊக்கம். 3. Spontaneousness, alacrity, willingness, மனப்பூரிப்பு. 4. Happiness, சந்தோஷம். Wils. p. 145. UTSAHA.

உற்சாகங்கொண்டுமெச்சைத்தாவுகிறான். He is transported with joy.

உற்சாகங்கொடுக்க, *inf.* To encourage, to excite, to embolden.

உற்சாகசத்தி, *s.* Energy, application. (*p.*)

உற்சாகஞ்செய்ய, *inf.* To make great efforts.

உற்சாகப்பட, *inf.* To be energetic, have an impulse of mind for the performance of actions, to resolve, முயற்சிப்பட.

உற்சாகப்படுத்த, *inf.* To excite one to action.

உற்சாகப்பலி, *s.* [*in Christ. usage.*] Free-will offering.

உற்சாகப்பிழை, *s.* Averseness, unwillingness, backwardness.

உற்சாகமாய்க்கொடுக்க, *inf.* To give freely.

உற்சாகமாய்ச்செய்ய, *inf.* To do willingly, freely.

மனோற்சாகமாய், *adv.* Voluntarily, freely, spontaneously.

*உற்பத்தி—உற்பவம், *s.* Birth, origin, derivation, development, evolution, பிறப்பு. 2. Conception, கருவுண்டாகுகை. Wils. p. 143. UTPATTI.

உற்பத்திக்கிரமம், *s.* Genealogy, வமிசவரிசை. 2. The different gradations of animated beings from men of five senses to the vegetable of one, பிறப்புவகை.

உற்பத்திஸ்திதிநாசம்—உற்பத்திஸ்திதிலயம், *s.* The origin or evolution, continuance and destruction, or involution (of things). (உப. 252.)

சீவோற்பத்தி, *s.* Animation, the act of enlivening. 2. Nativity.

உற்பலசாரணன், *s.* Assafœtida, பெருங்காயம்.

*உற்பலம், *s.* A blue water-lily, நெய்தல், Nymphæa cærulea. 2. The red water-lily, செங்குவளை, Nymphæa rubra. 3. A water-lily in general, குவளை. Wils. p. 143. ULPALA.

அரத்தோற்பலம். *s.* The red lily.

நீலோற்பலம், *s.* The blue lily.

*உற்பவம், *s.* Birth, production, &c., பிறப்பு. See உற்பத்தி.

உற்பவமாக, *inf.* To be born, to have origin, come into existence, பிறக்க.

உற்பவமாலை, *s.* A poem describing the ten incarnations of Vishnu, ஓர் பிரபந்தம்.

உற்பவி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be born, to originate, to have origin, come into existence, to be evolved—as natural productions from primitive matter, பிறக்க. 2. To be conceived, கருப்பட.

உற்பவிப்பு, *v. noun.* Birth, production, origin, பிறப்பு. 2. Conception, கருப்படுகை.

*உற்பனம்—உற்பன்னம், *s.* Birth, production, origin, பிறப்பு. Wils. p. 143. ULPANNA. 2. Excellence, exquisiteness. உத்தமம். 3. Reality, genuineness, உண்மை 4. Visible manifestation—as of a deity, of the power of incantation; occular proof of medicinal virtue, &c., தோற்றம். 5. [*vul. for* விற்பன்னம்.] Learning, கல்வி. (*Rott.*)

உன்வியாதிக்குஇதுஉற்பனம். This is the proper medicine for your disease.

உற்பனமாகக்கிரகிக்கிறது. To comprehend well, to understand easily.

அவரிடத்திலுற்பன்னமானகாரியங்களுண்டு. He possesses extraordinary skill, he is a virtuoso, skilled in the arts.

உற்பன்னமானமருந்து, *s.* Medicine of extraordinary qualities.

*உற்பாதம், *s.* A portent, an evil omen—as a prodigy, or preternatural phenomenon, துர்க்குறி. 2. Any public calamity—as an earth-quake, hurricane, கொடுமை. Wils. p. 144. UTPADA. 3. [*vul.*] Sometimes used for deep research, great discrimination, நுண்ணறிவு. (*p.*)

ஒருவனிருவருதாத்துமுடனுற்பவித்தஉற்பாதம்வெருவி. Dreading the portentous birth of the same infant from two different mothers, partly from one and partly from the other.

உற்பாதபிண்டம், *s.* Great wit.

உற்பாதமாய்நினைக்க, *inf.* To meditate on a thing deeply.

*உற்பிரேட்சை, *s.* One of the figures of speech in which a writer according to his fancy attributes to objects qualities not belonging to them, ஓரலங்காரம். Wils. p. 144. UTPREKSHA.

*உற்பீசம், *s.* That which is produced from the earth—as vegetables—one of the four kinds of productions. See தோற்றம்.

உன்—உன்னு, உன்னுகிறேன், உன்னினேன், உன்னுவேன், உன்ன, *v. a.* To think, consider, exercise volition, to be anxious, நினைக்க. 2. To exert force—as in rising, leaping, &c., விரைந்தெழும்ப. 3. To pull, இழுக்க. 4. [*prov.*] To propel a swing by the joint effort of two persons stationed on opposite sides, உந்த.

குதிரையுன்னிப்பாய்ந்தது. The horse sprang and leaped.

பேசவுன்னுகிறான். He is just on the point of speaking (his mouth open, the words on his tongue, &c.).

உன்னிப்படிக்க, *inf.* To sing in a high key.

உன்னிப்பார்க்க, *inf.* To look attentively, to observe. 2. To consider.

உன்னிமுக்க, *inf.* To strain as in going to stool, in childbirth, &c.

உன்னிவலிக்க, *inf.* To press on the oar, to row hard.

ஊஞ்சலையுன்ன, *inf.* To propel a swing.

உன், *v. noun.* [*prov.*] Spring, effort, tug, impulse, &c., இழுப்பு.

எருதுஇரண்டுன்னிலேகயிற்றையிழுத்துப்போடும். The ox will break the rope at two tugs.

உன்னிப்பு, *v. noun.* Taking particular notice, observing, கவனிப்பு. 2. Acuteness of mind, discernment, ஊகிப்பு. 3. A sign by which a place or person is known, குறிப்பு. 4. Height, உயர்வு. 5. Exertion, முயற்சி.

இருட்டிலுமுன்னிப்பாகவெடுத்துப்போட்டான்... Though it was dark he took it, knowing the place by marks.

மனவுன்னிப்புக்குவெடிவைத்தான். He shot by guess (having before noticed the situation of the object).

உன்னிப்பானபேச்சு, *s.* Dignified speech.

உன்னிப்பானமலை, *s.* A lofty mountain.

உன்னிப்பானவிலை, *s.* A high price.

உன், *pron.* The genitive of நீ; which see.

உனக்கெனக்கென்றுசண்டைகொடுக்கிறது. To quarrel about the right of possession with regard to any thing.

*உன்மணி, *s.* A superior gem, உயர்ந்தமணி.

*உன்மத்தகி, *s.* The குறிஞ்சா creeper, Tylophora asthmatica, *L.*

*உன்மத்தம், *s.* Frenzy, delirium, delusion, insanity, infatuation, illusion, பைத்தியம். 2. Stupor induced by drugs or incantations, மயக்கம். 3. A narcotic and deleterious plant, the thorn-apple, or ஊமத்தை. Wils. p. 151. UNMATHTHA. 4. One of the five arrows of Kama, மன்மதன்கணையுளொன்று.

உன்மத்தர், *s.* Deranged persons, பித்தர். 2. Infatuated, or intoxicated persons, வெறியர். 3. Persons under the power of illusion, மயக்கமுடையோர். (தி. 328.) Wils. p. 151. UNMUTTA.

ஊமத்தம்பயன்றுய்த்தார்போலுன்மத்தனாயிருந்தான். He was as intoxicated as one who had eaten the fruit of the thorn-apple. (ஸ்காந்.)

உன்மத்தை, *s.* The ஊமத்தை plant, Datura alba.

*உன்மனை, *s.* [*in the Yoga practice.*] The mind, or soul in the lower or descending அவத்தை, &c.—the converse of சமனை. (உப. 160.)

*உன்முகம், *s.* Looking upwards, அண்ணாந்துபார்க்கை. Wils. p. 152. UNMUKHA. 2. Intentness in a pursuit, ஒன்றிற்கருத்தாயிருக்கை; [*ex* உன்.]

உன்முகி, *s.* A person looking upwards, one intent on an object.

சூதிலேயுன்முகனாயிருக்கிறான். He is set on nothing but gambling.

*உன்னதம்—உந்நதம், *s.* Height, elevation, tallness, loftiness, உயர்ச்சி. 2. Eminence, dignity, sublimity, மேன்மை. Wils. p. 151. UNMATA.

உன்னதஸ்தானம், *s.* An elevated or high place.

உன்னதமாயிருக்க, *inf.* To be high, eminent.

உன்னம், *s.* Thought, நினைவு. 2. Mind, மனம். 3. A swan, அன்னம். 4. Aquatic birds in general, நீர்வாழ்பறவை. 5. Pincers for tearing off the flesh, தசைபிடுங்குங்குறடு. (*p.*)

*உன்னயம்—உன்றயம், *s.* (*St.*) Raising, elevating, உயர்த்துகை. Wils. p. 151. UNNAYA.

*உன்னயனம்—உந்நயனம், *s.* (*St.*) Deliberation, reasoning, தியானம். Wils. p. 151. UNNAYANA.

உன்னலர், *s.* Enemies, பகைவர். (*p.*)

உன்னி, *s.* A horse, குதிரை. (*p.*)

*உன்னியம், *s.* What is ours, or on our side.

உன்னியர், *s.* Relations.

ஊ

ஊ, *s.* One of the long vowels, நெட்டுயிரெழுத்திலொன்று. 2. A termination of the gerund in poetry, வினையெச்சவிகுதி—as உண்ணூ. 3. Flesh, meat, தசை. (*p.*) 4. (*c.*) An exclamation—as of pain, ஓரொலிக்குறிப்பு.

ஊகடன், *s.* The Morunga tree, முருங்கை, Moringa pterygosperma. (*M. Dic.*)

ஊகம், *s.* Thought, penetration, deliberation, discernment, நினைவு. 2. A monkey, குரங்கு. 3. Silent meditations as of a yogi, தியானம். 4. The division of an army, படைவகுப்பு. 5. A tiger, புலி. (*p.*)

ஊகவான்படை, *s.* A great army consisting of divisions.

காருகம், *s.* A black monkey. (*p.*)

*ஊகனம், *s.* Reasoning, inferring, concluding, நியாயஞ்சொல்லுகை. Wils. p. 167. OOHANAM.

*ஊகனி, *s.* A broom, துடைப்பம். Wils. p. 167. OOHANEE.

ஊகி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To consider well, deliberate, discern clearly, reason well, நினைக்க. 2. To conjecture, guess, infer, உத்தேசிக்க. (*p.*)

ஊகித்துணராது, *neg. ver. part.* Without thinking deliberately.

ஊகிப்பு, *v. noun.* A guess, conjecture.

ஊகை, *s.* As யூகை, which see.

ஊக்கம், *s.* Spirit, energy, resolution, முயற்சி 2. Impulse, promptitude, excitement, effort, உள்ளத்தின்மிகுதி. 3. Force, strength, power, வலி. 4. Perseverance, constancy, confidence, உற்சாகம். 5. Height, elevation, உயர்ச்சி. (*p.*)

ஊக்கமதுகைவிடேல். Persevere unceasingly. (ஔவை.)

ஊக்கமுடைமை, *s.* Unceasing perseverance.

ஊக்கமுடைமையாக்கத்திற்கழகு. Perseverance is preferable to riches. (ஔவை.)

ஊக்கு, *s.* Spirit, energy, முயற்சி, &c.—as ஊக்கம்.

ஊக்கொடுபோலெனவுருமுப்பற்றுமால். Pecking with spirit at the thunder-bolt, as if it had been a pebble— (வ்காக்.)

ஊக்கு, கிறேன், ஊக்கினேன், வேன், ஊக்க, *v. a.* To commence with spirit, முயல. 2. To execute with energy, முயன்றுசெய்ய. 3. To excite to action, rouse, to direct, எழுப்ப. 4. *v. n.* To ascend, ஏற. (*p.*)

நுனிக்கொம்பரேறினாரஃதிறந்தூக்கி னுயிர்க்கிறுதியாகிவிடும். If one who has already ascended to the extremity of a bough, goes beyond, his life will be at an end. (குறள்.)

அறவினையூக்கி. Entering with energy on the practice of virtue. (நாலடி.)

உடைத்தம்வலியறியாரூக்கத்திநூக்கி. With spirit commencing (war), ignorant of their own strength— (குறள்.)

நல்லாற்றினூக்கின். If one turn (them) into the right way— (சிறுபஞ்.)

ஊங்கு, *s.* Abundance, greatness, importance, மிகுதி. 2. There, that place (intermediate), உவ்விடம். (*p.*)

அறத்தினூங்காக்கமுமில்லையதனைமறத்தலினூங்கில்லைக்கேடு. There is no greater source of good than the practice of virtue, nor a greater source of evil than the forgetfulness of it.

ஊசல், *s.* A swing, commonly ஊஞ்சல்; which see. 2. Moving, shaking, அசைதல். 3. A song sung when the idol is swung at the end of a festival, ஓர்பிரபந்தம். 4. A subject of பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ்ப்பேறுப்பு.

ஊசலாட, *inf.* [*commonly* ஊசாட.] To frequent, go about, அடிக்கடிபோக்குவரத்தாயிருக்க.

ஊசல்நாட்ட, *inf.* To fix posts for a swing.

ஊசற்பாட்டு, *s.* A song used in swinging.

ஊசற்போட, *inf.* To fix a rope to be used as a swing.

ஊசா, *s.* A shrub, மூக்குத்திக்கொடி.

ஊசாடு, கிறேன், ஊசாடினேன், வேன், ஊசாட, *v. n.* [*prop.* ஊசலாட.] To frequent, to go about.

ஊசாட்டம், *v. noun.* Prop. ஊசலாட்டம்.

ஊசி, *s.* A needle, இழைவாங்கி. 2. A pin—as spike, குண்டூசி. 3. Tongue or index of a balance, நிறைகோலின்முள். (See under நாக.) 4. Gnoman of a dial, கடிகாரத்தின்முள். 5. A style, எழுத்தாணி.

கொல்லர்தெருவிலேவூசிவிற்கவந்தான். He is come to sell needles in the street of the smiths.

ஊசிக்கண்—ஊசிக்காது—ஊசித்துளை, *s.* The eye of a needle.

ஊசிக்காந்தம், *s.* Loadstone, magnet, இரும்பிழுக்குங்காந்தக்கல்.

ஊசிக்கார், *s.* A kind of paddy, thin and long, ஓர்வகைநெல்.

ஊசிக்கால், *s.* Uprights in a building set on beams to support the ridge-beam, மச்சுக்கால்.

ஊசிக்கூடு, *s.* A needle-case, a tin-case.

ஊசிப்பாலை, *s.* A species of பாலை plant.

ஊசிப்புல், *s.* A kind of grass, ஓர்வகைப்புல்.

ஊசிமல்லிகை, *s.* A kind of jasmine, ஓர்வகைமல்லிகை.

ஊசிமிடறு, *s.* A narrow throat like a needle, சிறுதொண்டை.

ஊசிமிடறுந்தாழிவயிறும். A throat like a needle and a belly like a washerman's caldron—a glutton.

ஊசிமுனை, *s.* The point of a needle, ஊசிநுனி.

ஊசிமுனைநாட்டுமிடமாகிலும்நான்கொடுக்கிறதில்லை. I will give no ground, not even to fix the point of a needle upon.

ஊசிமுனையிலேநிற்கிறான். He cannot endure to stay; *lit.* he stands on the point of a needle.

ஊசியோட, *inf.* To pass the needle and thread through any thing, to sew.

துன்னூசி, *s.* A nail which fastens the ploughshare to the plough.

ஊசு, கிறேன், ஊசினேன், வேன், ஊச, *v. a.* To sew, join two, தைக்க. 2. *v. n.* [*used with the* அஃறிணை *terminations.*] To become stale, sour, rank, insipid, &c.—as food by keeping, சுவைகெட. 3. To decay, become putrid—as flesh; to corrupt, putrefy—as a corpse, அழுக.

ஆசைப்பட்டகாரியமூசிப்போயிற்று. He has not got the thing he desired.

முள்ளினூசித்துன்னமூசியவாடை. A garment sewed together with thorns instead of needles. (சிந்தா.)

ஊசிப்போனசதை, *s.* Meat past eating, spoiled.

ஊசுமுடல், *s.* The vile body. (அரிவாணக்கதிதி.)

ஊசல், *v. noun.* Becoming stale, rank. 2. *s.* That which is stale, rancid, spoiled by age, பதனழிந்தது.

ஊசுநம், *s.* [*as* பயம்.] Fear. (*Rott.*)

ஊஞ்சல், *s.* A swing, ஊசல். (*c.*)

ஊஞ்சலாட, *inf.* To swing, to be swung.

ஊஞ்சலாட்டு, *v. noun.* Swinging the images of the gods and goddesses—a ceremony at the close of the annual festival; also swinging the bridegroom and bride the day after the marriage.

ஊடகம், *s.* A species of fish, ஓர்மீன், Teus monopterigus. (*Rott.*)

*ஊடரம்—ஊஷரம், *s.* Earth impregnated with soda, உவர்மண். Wils, p. 167. Ooshara.

ஊஷரக்கல், *s.* Limestone, சுக்கான்கல்.

ஊஷரத்திராவணம், *s.* Nitre, வெடியுப்பு.

*ஊடல், *s.* Feigned dislike—as of a woman to her husband, பிணக்கு. 2. Difference, variance, பிரிவு. (*p.*)

ஊடலாயிருக்க, *inf.* To be in a state of discord, at variance.

ஊடலொழித்தல்—ஊடனீக்கல், *v. noun.* Removing the feigned dislike of a wife.

ஊடறீர்தல், *v. noun.* Re-union of husband and wife.

ஊடான், *s.* A kind of fish, ஓர்மீன்.

ஊடு, *s.* [*as* உள்.] The inside, that which is intermediate, between, நடு. (சத. 18.) 2. [*vul.*] Wool, thread woven across the warp, தார்நூல்.—*Note.* Commonly ஊடு as an affix governs the dative—as அவர்களுக்கூடேவந்தான், he came between them.

இந்தஅலுவல்களுக்கூடேயிதையெப்படிச்செய்வேன். How can I possibly do this in the midst of so much business?

கனவூடும். Even in a dream— (பார.)

கருநாக்கு, s. A tongue with dark spots on its surface; the words of which are thought ominous, கறுத்தநாக்கு.

கருநாரை, s. A kind of crane, ஓர்நாரை.

கருநார், s. Black palmyra fibre, பனையின்கறுத்தநார்.

கருநார்ப்பெட்டி, s. A basket made of good black fibre.

கருநார்மட்டை, s. Black stems of palmyra leaves.

கருநாள், s. An inauspicious day, கெட்டநாள்.

கருநிமிளை, s. Black antimony. See நிமிளை.

கருநிலம், s. Sterile land in mountainous, marshy or jungly districts, பயன்படாநிலம்.

கருநெய்தல், s. The dark நெய்தல், a water-plant.

கருநெல்லி, s. A tree, ஓர்நெல்லிமரம்.

கருநெறி, s. Fire, தீ. (p.)

கருநொச்சி, s. A plant, dark leaf ever green, planted in gardens by the side of walks, ஓர்நொச்சிச்செடி, Gendarussa vulgaris.

கருநோய், s. [prov.] A kind of mange in cattle, மாட்டுக்குவருமோர்நோய்.

கருந்தகரை, s. A variety of தகரை plant, Cassia toza.

கருந்தனம், s. Gold, wealth, treasure, மிகுசெல்வம்.

கருந்தனங்கைத்தலத்தவுய்த்து. Carrying the wealth which one has—

கருந்தாது, s. Iron, இரும்பு.

கருந்தாரை, s. A black streak in an ox.

கருந்திடர், s. Rising ground, hillock, hill, பெரியமேடு.

கருந்தினை, s. Dark millet, ஓர்வகைத்தினை.

கருந்துகில், s. Black cloth.

கருந்துகிலோன், s. Balabhadra—as Vishnu in his eighth incarnation, பலபத்திரன். (p.)

கருந்துவரை, s. A plant, ஓர்துவரை, Hedysarum biflor. 2. A tree, ஓர்மரம், Dalbergia latifolia.

கருந்துளசி, s. Dark tulasy, கறுப்புத்துளசி, Ocimum sanctum.

கருந்தோழி, s. The Indigo plant, அவுரி, Indigofera tinctozia.

கருமகள்—கரும்பிள்ளை, s. Crow, காக்கை. (p.)

கருமட்டி, s. The large edible oyster, ஓர்மட்டி.

கருமணி, s. The dark circle in the pupil of the eye, the retina.

கருமயிர், s. A bear, கரடி. (p.)

கருமலை, s. A mountain containing iron.

கருமா, s. A hog, பன்றி. 2. Elephant, யானை. (p.)

கருமான், s. A hog, பன்றி. (p.)

கருமுகில்—கருமேகம், s. Black or raining clouds, நீருண்டமேகம்.

கருமுகில்வண்ணம், s. A prepared arsenic, நீமுறுகற்பாஷாணம்.

கருமுகிற்சிலை, s. The load stone, காகச்சிலை.

கருமுகிற்பாஷாணம் — கார்முகிற்பாஷாணம், s. A kind of arsenic.

கருமுதல், s. A kind of fish, ஓர்மீன்.

கருமுரடன், s. An obstinate person, மிகுமுரடன்.

கருமுரல், s. A kind of blackish sea-fish.

கரும்பருந்து, s. A dark colored hawk, கறுப்புப்பருந்து.

கரும்பனையன், s. A kind of snake, ஓர்பாம்பு.

கரும்பாம்பு, s. Ragu the ascending node regarded as a planet, இராகு.

கரும்பித்தம், s. Black bile, ஓர்பித்தம். 2. Madness, derangement, &c., பைத்தியம்.

கரும்பிறை, s. Black limestone, marble, கருஞ்சுக்கான்.

கரும்புசம்—கரும்புள், s. A black beetle, Apis violacea.

கரும்புளிக்க, inf. [a corruption of களிம்புபற்ற.] To become spoiled—as acid food kept in a brass vessel, களிம்படிக்க. 2. To taste—as food thus spoiled, to taste like copperas, கெட்டுப்போக.

கரும்புள்ளிக்கல், s. A kind of stone containing metal, கானகக்கல்.

கரும்புறம், s. A palmyra tree, பனை. (பிங்.) (p.)

கரும்புறு, s. A kind of dove, turtle-dove.

கரும்பேன், s. [prov.] Black spots in cloth caused by damp, சீலையினூறல்.

கரும்பேன்பிடிக்க, inf. To form as black spots in new cloth by moisture.

கரும்பொன், s. Iron, இரும்பு. (p.)

கருவண்டு, s. A black beetle used in medicine, கறுத்தவண்டு.

கருவரி, s. Dark, darkness, இருள். (p.)

கருவழலை, s. A kind of snake. See வழலை.

கருவளைச்சுக்கான், s. Black limestone, கருஞ்சுக்கான்.

கருவாலி, s. [vul.] A tree, ஓர்மரம். 2. A bird, ஓர்புள்.

கருவாழை, *s.* A dark red plantain, ஓர்வாழை.

கருவிழி, *s.* The apple of the eye, கண்மணி.

கருவிளா, *s.* A tree, ஓர்மரம், Ægle marmeclos.

கருவூமத்தை—கரூமத்தை, *s.* A species of the ஊமத்தை plant, the thorn-apple, or Datura fastuosa, *L.*, sometimes smoked for asthma.

கருவேம்பு, *s.* A tree with a fragrant leaf used to give flavor to curries, ஓர்மரம், Bergera konigii.

கருவேப்பிலை, *s.* The leaf of கருவேம்பு.

கருவேல், *s.* A kind of tree, Acacia arabica. (Mat. Ind.) See வேல்.

கருவேலம்பட்டை, *s.* The bark of the கருவேல், a valuable drug used as a tonic.

கருவேலம்பிசின், *s.* A gum sometimes substituted for gum arabic.

கருவெளவால், *s.* A kind of fish.

கரும்பு, *s.* Sugar-cane, கன்னல், Saccharum officinarum. 2. (*p.*) The seventh lunar asterism, புனர்பூசம்.

கரும்புதின்னக்கைக்கூலியா. Is it necessary to bribe a person to eat sugar-cane?

கருப்பஞ்சாறு, *s.* Sugar-cane juice, கரும்பிரசம்.

கருப்பஞ்சாற்றுக்கடல், *s.* One of the seven seas, that of sugar-cane juice, ஓர்கடல்.

கருப்பஞ்செத்தை, *s.* Dry sugar-cane stalks, leaves, rubbish, &c., கரும்பினுலர்ந்தஇலை.

கருப்பஞ்சோலை, *s.* A sugar-cane plantation, கரும்புச்சோலை.

கருப்பநீர், *s.* Sugar-cane juice, கரும்பிரசம். 2. [*prov.*] Sweet toddy, பதநீர்.

கருப்பம்பாகு, *s.* Sugar-cane treacle, medicated molasses, சருக்கரை.

கருப்புக்கட்டி, *s.* Jaggary, வெல்லக்கட்டி. 2. Sugar-candy, கண்டு.

கருப்புவில், *s.* The sugar-cane bow of Kama, மன்மதன்வில்.

கருப்புவில்லி, *s.* Hindu Cupid, மன்மதன். (*p.*)

கரும்பாலை, *s.* A sugar-cane press, கரும்பாடும்யந்திரம்.

கரும்புக்கட்டி, *s.* [*prop.* கருப்பங்கட்டி.] Jaggary.

கருவடம், *s.* A town or country surrounded by mountains and rivers, மலையுமாறுஞ்சூழ்ந்தவூர். 2. The chief of four-hundred towns, தலைமையானவூர். Wils. p. 272. KARUVADA.

கருவம், *s.* Fœtus, embryo, கருப்பம். (*p.*)

கருவா, *s.* [*vul.*] The cinnamon tree, இலவங்கமரம், Cinnamomum aromaticum.

கருவாத்தைலம், *s.* Cinnamon oil.

கருவாப்பட்டை, *s.* Cinnamon.

கருவாடு, *s.* [*vul.*] Salted and dried fish, காய்ந்தமீன்.

கருவாட்டுவாலி, *s.* [*com.*] A kind of bird with a tail like that of a fish, வலியான், Corvus balicapius, *L.*

கருவி, *s.* An instrument, tool, weapon, implement, ஆயுதப்பொது. 2. Organs, faculties, either of body or mind, அகக்கருவிபுறக்கருவிகள். 3. Means, materials—as for a sacrifice, உபகரணம். 4. (*p.*) Armor, coat-of-mail, கவசம். 5. A saddle, குதிரைக்கல்லணை. 6. An assembly, கூட்டம். 7. Connexion, concatenation, cohesion, தொடர்பு. 8. Clouds, மேகம். 9. A guitar, யாழ். 10. A lute, வாச்சியம். 11. Friendship, நட்பு. 12. Musical instruments, பஞ்சகருவி, in general applicable to the five kinds, viz.: (1.) தோற்கருவி, instruments made of skins. (2.) துளைக்கருவி, wind instruments. (3.) நரம்புக்கருவி, stringed instruments. (4.) கஞ்சக்கருவி, instruments of metal—as cymbals, bells, &c. (5.) மிடற்றுக்கருவி or கண்டக்கருவி, the animal throat—as of men, birds, &c. 13. Every thing belonging to a lute, வீணைக்கருவி.

கருவியுங்காலமும். Means and opportunity.

கருவிகரணங்கள், *s.* The faculties, senses and intellectual powers.

கருவிகரணாதிகள், *s.* The powers and faculties of the soul and body.

கருவிகழலல், *v. noun.* Being greatly exhausted, wearied, &c.

கருவிகாண்டம், *s.* A primer.

கருவிகுறைய, *inf.* To be reduced—as the powers of the body and mind near death.

கருவிநூல், *s.* Elementary books.

கருவிப்புட்டில், *s.* A scabbard or other sheath for instruments, ஆயுதவுறை.

கருவிப்பை, *s.* A barber's bag or instrument case, அடைப்பம்.

குதிரைவாய்க்கருவி, *s.* The bridle of a horse.

மயிர்க்கருவி, *s.* A brush.

உரையறிகருவி, *s.* A touch-stone.

நிறையறிகருவி, *s.* Balance.

கருவிலி, *s.* [*prov.*] A class of snakes, பாம்பு, of which are கண்டங்கருவிலி and சவர்க்கருவிலி—perhaps a change of கருவழலை.

கருவிளம், *s.* A winding creeper, காக்கணங்கொடி. 2. [*in poetry.*] A technical word applied to a foot consisting of two நிரை, கருவிளங்கனி. (See சீர்.) 3. A technical term in poetry applied to a foot that contains three நிரையசை.

கருவிளங்காய், *s.* [*in poetry.*] A technical word applied to a foot consisting of two நிரையசை, and one நேரசை.

கருவிளநறுநிழல், *s.* [*in poetry.*] A word applied to a foot of four நிரையசை.

கருவிளநறும்பூ, *s.* A term applied to a metrical foot of four syllables, the last being நேரசை.

கருவிளந்தண்ணிழல், *s.* A term applied to a metrical foot of four அசை, the third அசை being நேர்.

கருவிளந்தண்பூ, *s.* A term applied in poetry to a foot of four அசை; the two first being நிரை, and the others நேர்.

கருவிளை, *s.* A wild creeper with dark blue flowers—as காக்கணம், Clitoria ternatea, *L.*

கருவூர், *s.* A town of king Sara, சேரனூர்.

கருவூலம், *s.* Treasure—as கருகூலம்.

கருவை, *s.* A town so called, ஒரூர். 2. (*p.*) Straw of வரகு grain, வரகுவைக்கோல். (சது.)

கருள், *s.* Darkness, இருள். 2. Black, blackness, கறுப்பு. 3. Superior kind of cloth, நல்லாடை. (*p.*)

கருனை, *s.* A fry, any thing fried, பொரிக்கறி. (*p.*)

*கரேணு, *s.* A male or female elephant, யானை. Wils. p. 194. KAREN'U. (*p.*)

கரை, *s.* The natural bank, or shore of a sea, river, tank, &c., கடல்முதலியவற்றின்கரை. 2. Border, extremity of a field, &c., வயல்வரம்பு. 3. Border, edge of a cloth, &c., சீலையின்விளிம்பு. 4. Boundary, limit, எல்லை. (தத். 100.) 5. End, முடிவு. 6. (*p.*) Word, speech, வார்த்தை.

கரைகடக்க, *inf.* To overflow its bank—used of a tank or river.

கரைகட்ட, *inf.* To make a bank. 2. To make the selvedge of cloth.

கரைகட்டுபட்டாடை, *s.* Silk cloths for women with colored borders.

கரைகாண, *inf.* To see the end, to reach the destined port. 2. To understand a book, science, &c., thoroughly.

கரைகண்டவன், *s.* One who is skilled in business.

கரைகாணாதது, *appel. noun.* That which is inexplorable, incomprehensible, unascertainable.

கரைகாணாப்பேரொளி, *s.* The infinitely great light; i. e. God.

கரைக்கல்லோலம், *s.* The sponge, கடற்பாசி.

கரைக்காற்று, *s.* Breeze on the sea-shore, long-shore wind.

கரைக்கேற்றபங்கு — கரைக்கேற்றவீதம்—கரைக்கொத்தவிழுக்காடு, *s.* Land apportioned to the respective householders in a village.

கரைதுறை, *s.* A landing place. 2. The end, முடிவு.

கரைதுறைகாவற்காரன், *s.* A tide-waiter. 2. A master attendant.

கரைபட, *inf.* To be divided by lots. (*Besch.*)

கரைபிடிக்க, *inf.* To arrive at a port, &c., கரையடைய.

கரைபிடித்தோட, *inf.* To sail coastwise.

கரைபுரள, *inf.* To overflow, as a river.

கரைபோட, *inf.* To cast lots. 2. To divide land. 3. To erect a bank to a tank.

கரைப்பட, *inf.* To get to shore—as a vessel, to make the shore.

ஆற்றுக்கக்கரைப்பட்டுவிட்டார்கள். They have gone to the other side of the river.

கரைப்படுத்த, *inf.* To convey to the shore. 2. To land one on the shores of bliss—the office of a Guru or spiritual guide.

கரைப்பாதை—கரைவழி, *s.* Journeying by land, land travel.

கரைப்போக்கு, *s.* The sea-coast, கரையோரம். 2. A way by land, கரைவழி. 3. [*vul.*] A bastard gem, போலிமணி. 4. [*vul.*] Any thing base or inferior, இழிவானது.

கரைப்போக்குக்கல்—கரைப்போக்குப்பொடி, *s.* A bastard gem found in alluvial soil.

கரைப்போக்குமனிதன், *s.* The same as அறுவோமன்.

கரையடுக்க, *inf.* To get near the shore, கரையைக்கிட்ட. 2. To become near —as the shore, கரைகிட்ட.

கரையார், *s.* A respectable caste of fishermen, வலைஞர்.

கரையாளன், *s.* One of the proprietors of a village.

கரையிட, *inf.* To assign portions of land to be cultivated.

கரையேற—கரைசேர, *inf.* To get ashore, to land, to be landed, கரையையடைய. 2. To be rescued from the sea of transmigrations, to be saved, நற்கதியடைய. 3. To attain an object of desire, விரும்பியதடைய. 4. To rise from distress, sickness, indigent circumstances, &c., to be re-established in life, to become thrifty after poverty, or embarrassment, வருத்தத்தினின்றுநீங்க. 5. To get well married—as a poor girl, வாழ்வடைய.

கரையேற்ற, *inf.* To save, rescue, restore, redeem, கதியிற்சேர்க்க. 2. To raise one from indigence, reinstate, or re-establish one in good circumstances, துன்பத்தினின்றுநீக்க. 3. To emancipate from births, பிறவியொழிக்க. 4. To marry and settle a destitute girl, விவாகம்பெறச்செய்ய.

கரையேற்றம், *v. noun.* Salvation, rescue, deliverance, either from temporal, or eternal evils, கதியடைகை. 2. Attainment of a desired good, விரும்பியதடைகை. 3. Establishment in, or a restoration to prosperous circumstances after poverty, துன்பத்தினின்றுநீங்குகை. 4. The marriage of a destitute girl, விவாகப்பேறடைகை. 5. The final deliverance of the soul, பிறவியொழிகை.

ஒருகாலத்திலுங்கரையேற்றமில்லாதநரகத்திற்கிடப்பான். He will lie in hell from which there is no possibility of escape.

கரையோரம், *s.* Coast, brink, edge of the shore or bank.

கரையோரத்திலேபோக, *inf.* To go along shore.

கரைவலை, *s.* [*prov.*] A drag-net, a draw-net.

கரைவலைக்காரர், *s.* Persons who fish with the drag-net.

கரைவலைத்தோணி, *s.* A dhoney for fishing with a drag-net.

கரைவலையிழுக்க, *inf.* To drag a net in fishing.

கரைவழி, *s.* A road along the shore..

கரைவழித்தீர்வை, *s.* Land custom.

கரைவழித்தீர்வைச்சாவடி, *s.* Land custom house.

கரைவாடை, *s.* North-west wind.

கரைவீதம், *s.* The same as கரைக்கேற்றபங்கு.

செய்கரை, *s.* A balk or small causeway in a field of rice, corn, குரம்பு.

கரை, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To dissolve, melt—as salt, sugar, &c.; to be macerated in water, reduced to a liquid or slime; to relax in consistency by moisture, கரைந்துபோக. 2. To waste away as earth by rain, &c., to be washed away, மண்கரைய. 3. To be emaciated—as the body, இளைக்க. 4. To sound, make a noise, பெரிதொலிக்க. 5. To weep, cry—as a child, whine, cry aloud, அழ. 6. To call, shout, அழைக்க. 7. To tell, speak, சொல்ல. 8. To be over-ripe—as fruits, to be well ripe, become mellow, பழம்பதனழிய.

அவன்கையிலிருந்தபணமெல்லாங்கரைந்துபோயிற்று. The money he had is all wasted away.

கனமழைபெய்ததினலேசுவரெல்லாங்கரைந்துபோயிற்று. The whole wall has been washed away by the heavy rain.

மகன்பட்டதைக்கண்டுமனங்கரைந்துநொந்தான்..... When he saw the sufferings of his son, he pined away through grief.

கட்டிகரைந்துபோயிற்று. The tumor is reduced by external applications.

ஈறுகரைகின்றது. The gum is wasting away.

கரைகன்று, *s.* A slink calf.

கரைகுட்டி, *s.* A slink production.

கரைந்தபழம், *s.* A mellow ripe fruit.

கரையப்பாடம்பண்ண, *inf.* To learn—as a lesson, &c., perfectly.

சரீரங்கரைந்துபோக, *inf.* To waste —as the body, to be emaciated.

செல்வங்கரைந்துபோக, *inf.* To waste—as riches.

கரைதல், *v. noun.* Dissolution, melting. 2. Calling, அழைத்தல். 3. A clamor, ஆரவாரம். 4. Pity, இரங்கல். 5. Sounding, ஒலித்தல். 6. Speech, சொல்லுதல். 7. A great cry, பேரொலி.

கரையல், *v. noun.* Melting, dissolving, dissolution, solution, solvency, கரைதல். 2. Any thing dissolved, emaciated, reduced, &c., கரைந்தது.

கரையல்நூல், *v. noun.* Loose yarn that easily parts.

கரையற்பனங்கட்டி, *s.* Jaggary softened by damp.

கரைவு, *v. noun.* Dissolving, tenderness of mind.

கரை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To dissolve, melt solubles by water, damp, &c., to reduce to a liquid or slimy state, to macerate, liquify, dilute, உருக்க. 2. To wash away by water, கரையச்செய்ய. 3. To reduce a tumor, &c., by drawing it, கட்டியைக்கரைக்க. 4. To melt the heart, cause commiseration, மனதையுருக்க.

கூட்டுக்கரைக்க, *inf.* To dissolve a lump of ground spices for curry.

புளிக்கரைக்க, *inf.* To dissolve tamarind fruit for curry.

கரைத்தல், *v. noun.* Indistinct or inarticulate sound, a buzzing, எழுத்தில்லாவோசை. 2. Sound, சொல்லாலெழுமொலி.

கரைஞ்சான், *s.* A tree called அகில்.

*கரோடம், *s.* The bones of the skull, தலையோடு. Wils. p. 194. KARODA.

கரோடி, *s.* Suture, or joining of the skull, தலையோட்டுப்பொருத்து. (*Anat.*) 2. A garland for the head, a wreath, முடிமாலை. (*p.*)

கரோடிகை, *s.* A garland for the forehead, சூட்டுமாலை. 2. A wreath for the head, முடிமாலை. 3. An ass, கழுதை. (*p.*)

*கரோருகம், *s.* A finger-nail, நகம்.

*கர்க்கடகம், *s.* One of the twelve signs, Cancer, ஓரிராசி. 2. (*p.*) A crab, நண்டு. Wils. p. 194. KARKATA or KARKATAKA.

கர்க்கடகசந்திரன், *s.* The moon in Cancer—indicative of rain.

கர்ச்சி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To roar—as a wild beast, முழங்க—also written கருச்சிக்க and கெர்ச்சிக்க.

மேகங்கர்ச்சிக்கின்றது. It thunders.

கர்ச்சிதம், *s.* An elephant in rut. 2. The muttering of the clouds or rolling of distant thunder. Wils. p. 284. GARJIDA.

கர்ச்சிப்பு, *v. noun.* The roaring of a lion, &c., thunder.

*கர்ச்சூரம், *s.* A shrub called கழற்சிக்கொடி, Guilandina bonduc. Wils. p. 195. KARCHURA. 2. Date tree, பேரீந்து, Phœnix dactylifera.

கர்ணு, *s.* A musical instrument, ஓர்வாச்சியம்.

*கர்த்தபம், *s.* An ass, கழுதை—written also கருத்தபம், கத்தபம். Wils. p. 284. GARDDAB'HA.

கர்த்தவியம்—கருத்தவ்வியம், *s.* That which ought to be done, duty, obligation, செய்யத்தக்கது.

*கர்த்தன்—கத்தன், *s.* A doer, a maker, an agent, செய்வோன். 2. The Supreme Being, the lord—used for Siva, Brahma, &c. 3. A chief, the principal, the master, தலைவன். 4. [*in grammar.*] The active noun, the nominative case, எழுவாய்.

தகப்பன்தேடக்கர்த்தன்பிள்ளையழிக்கக்கர்த்தன். That which the father gathers, the son squanders.

கர்த்தத்துரோகம், *s.* High treason.

கர்த்தத்துரோகி, *s.* One who is guilty of high treason.

கர்த்தத்துவம், *s.* Agency, the act or property of an agent, the power of creating—one of the attributes of the Supreme Being, இறைமைத்தன்மை. 2. Lordship.

*கர்ப்பம்—கருப்பம், *s.* The embryo, the fœtus, the young in the womb, சினை. 2. (*Met.*) The womb, கருப்பாசயம். 3. Pregnancy or fecundation, கருக்கொள்கை. 4. The inside of any thing, உள். Wils. p. 284. GARB'HA. See உபரிடதம். (*Rott.*)

கர்ப்பகோளகை, *s.* The womb, கருப்பாசயம்.

கர்ப்பக்கல், *s.* A quadrangular stone used to quicken child-birth.

கர்ப்பக்கிரகம், *s.* The sanctuary, the adytum, that part of a temple in which the idol is placed and where the brahman officiates, மூலஸ்தானம். Wils. p. 289. GARB'HAGRAHA.

கர்ப்பக்குழி, *s.* Matrix, womb.

கர்ப்பங்கலைந்துபோக—கர்ப்பங்கலங்க—கர்ப்பமழிய—கர்ப்பம்விழுந்துபோக, *inf.* To be miscarried—as the fœtus, commonly by thunder, &c., கருக்கலைய.

கர்ப்பங்கொள்ள—கர்ப்பமுண்டாக, *inf.* To conceive, to be impregnated, கருக்கொள்ள.

கர்ப்பசூலை, *s.* Obstruction of the menses and consequent swelling of the abdomen operating as a preventive to pregnancy, இரத்தசூலை. See சூலை.

கர்ப்பநாசம், *s.* Destruction of the embryo or fœtus.

கர்ப்பந்தரிக்க, *inf.* To conceive, to be impregnated, கருவுண்டாக.

அவளுக்குக்கர்ப்பந்தரித்தது. She has conceived.

கர்ப்பப்பரிசம், *s.* Conception.

கர்ப்பப்பை, *s.* The womb, கருப்பாசயப்பை.

கர்ப்பவதி—கர்ப்பஸ்திரி—கர்ப்பிணி, *s.* A pregnant woman. Wils. p. 285. GARB'HAVATEE.

கர்ப்பவாதை—கர்ப்பவேதனை, *s.* The pangs of child-birth, சூலின்வருத்தம்.

கர்ப்பவாயு, *s.* Flatulency in the womb, causing hysterics.

கர்ப்பவோட்டம், *s.* The southern passage of the clouds from about December 13th till December 27th, carrying away the surplus water as a reserve for the following months, கருக்கொள்ளுமேகவோட்டம்.

கர்ப்பாசயம், *s.* The womb, the uterus, கர்ப்பப்பை. Wils. p. 285. GARB'HASAYA.

கர்ப்பாதானம், *s.* Ceremony to promote conception, ஓர்சடங்கு. Wils. p. 285. GARB'HATH'ANA.

*கர்ப்பூரம்—கருப்பூரம், *s.* Camphor, சூடன், Camphora officinarum. Wils. p. 197. KARPURA. 2. (*p.*) Gold, பொன். 3. One of the five perfumes—crude camphor, பஞ்சவாசத்தொன்று.

கர்ப்பூரங்கொளுத்த, *inf.* To ignite camphor to be waved in a temple, &c.

கர்ப்பூரசிலாசத்து, *s.* A medical drug, ஓர்மருந்து.

கர்ப்பூரதீபம்—கர்ப்பூரவிளக்கு, *s.* Lighted camphor to be waved before an idol.

கர்ப்பூரதைலம், *s.* Camphor oil used medicinally, ஓர்தைலம்.

கர்ப்பூரத்துளசி, *s.* A plant that diffuses the fragrance of camphor, ஓர்துளசி.

கர்ப்பூரநீர், *s.* Camphor in solution, ஓர்நீர்.

கர்ப்பூரப்புல்—கருப்பூரப்புல், *s.* A fragrant grass, lemon grass, ஓர்வாசனைப்புல், Andropogon scaenanthus.

கர்ப்பூரமரம், *s.* Camphor tree.

கர்ப்பூரவள்ளி, *s.* A kind of odoriferous plant, ஓர்வாசனைச்செடி, thick leaved lavander, Lavandula carnosa, *L.*

கர்ப்பூரவில்வம், *s.* A species of வில்வம், very fragrant, ஓர்வில்வம்.

கர்ப்பூரவெற்றிலை, *s.* Odoriferous betel, வாசனைவெற்றிலை.

பச்சைக்கர்ப்பூரம், *s.* Crude camphor.

கிண்ணிக்கர்ப்பூரம், *s.* [*as* இரசகர்ப்பூரம்.] A kind of arsenic; it is so called from its having the form of a cup after preparation, sublimate of mercury.

ஆரதிகர்ப்பூரம்—தீபகர்ப்பூரம், *s.* A kind of camphor used to burn in temples as incense.

கர்வடம், *s.* [*as* கருவடம்.] A town surrounded by mountains and rivers, மலையுமாறுஞ்சூழ்ந்தவூர். 2. The principal of four-hundred villages, நானூறுகிராமத்துக்குத்தலைக்கிராமம். Wils. p. 199. KARVATA. (*p.*)

*கர்வம்—கருவம், *s.* Insolence, haughtiness, arrogance, pride, செருக்கு. Wils. p. 285. GARUVA. (*c.*) 2. A number, one billion, இலட்சங்கோடி. 3. One of Kuvera's treasures, குபேரனுடையநிதியிலொன்று. Wils. p. 272. GARVVA.

கர்வநடை, *s.* Arrogant behavior, over-bearing conduct.

கர்வமாயிருக்க, *inf.* To be proud, arrogant.

கர்விக்க, *inf.* To be insolent.

கர்விதன், *s.* An arrogant fellow.

கர்வாலியுமரம், *s.* The name of a tree. (*Rott.*)

கர்ணம், *s.* See கன்னம்.

கர்ணன்—கருணன், *s.* One of the seven second class liberal men. See கன்னன்.

கல, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* and *n.* To mix, commix, intermix, mingle, blend, combine, join, unite, compound, incorporate, amalgamate, கூட்ட. 2. To adulterate, debase, dilute, கலப்பாக்க. 3. To mix in friendship, hold intercourse, to be intimate, to associate with, be kind, to commune, ஒற்றுமையுற. 4. To form marriage or other alliances, சம்பந்தங்கலக்க. 5. To copulate, cohabit, புணர. 6. To mingle in battle as opposing armies, to come to close combat, போர்கலக்க. 7. To coalesce, join—as flame, to flame, &c.; to become absorbed—as the soul in the deity; to flow together, combine—as sounds; to unite—as vowel sounds in forming diphthongs, &c., சேர. 8. (*p.*) To sound inarticulately, எழுத்தின்றியொலிக்க.

மனங்கலந்தநட்போர். Intimate friends.

நல்லுறவிலேநஞ்சுகலந்தது. Poison is mixed with intimate friendship.

கலந்தவர்—கலந்தார், *s.* Lovers, அன்பர். 2. Relations, உறவினர். (*p.*)

கலந்துகட்டிப்பரிமாற, *inf.* To mix promiscuously in a feast without reference to caste, rank, &c. 2. To use ornaments or other property in common.

கலந்துபோக, *inf.* To be mixed, be reconciled.

கலந்துபோட, *inf.* To mix.

கைகலக்க, *inf.* To come to close engagement.

சம்பந்தங்கலக்க, *inf.* To form family alliances.

அன்புகலக்க, *inf.* To reciprocate affection, to cultivate mutual friendship.

போர்கலக்க, *inf.* To engage in battle.

உறவுகலக்க, *inf.* To intermarry in new families.

கலத்தல், *v. noun.* Copulation, mixture. 2. Inarticulate sound, எழுத்திலாவோசை.

கலப்பு, *v. noun.* Mixture, commixture, compound, combination, amalgamation, கலக்கை. 2. Friendship, intercourse, intimacy, உறவாகுகை. 3. Debasement, adulteration, alloy, a thing adulterated, a mongrel, சங்கரம். 4. Copulation, புணர்ச்சி.

கலப்பாக்க, *inf.* To mix, commix, intermix.

கலப்பிடம், *s.* Mixture.

கலப்பில்லாதபால், *s.* Unadulterated milk.

கலப்பில்லாதபொன், *s.* Pure gold.

இரத்தக்கலப்பு, *s.* Consanguinity, affinity.

சம்பந்தக்கலப்பு, *s.* Marriage alliance.

சாதிக்கலப்பு, *s.* Intermarriage of different castes.

தானியக்கலப்பு, *s.* The mixture of the nine kinds of grain, நவதானியக்கலப்பு.

கலவை, *v. noun.* A mixture, a compound, கலப்பு. 2. A compound perfumed ointment, பரிமளச்சேறு 3. Lime and sand mixed for mortar, சாந்து. 4. Promiscuous arrangement, miscellany, சங்கீரணம்.

பாலுந்தேனுங்கலந்தகலவை. A composition of milk and honey. (குறள்.)

கலவைச்சேறு, *s.* A compound odoriferous ointment.

கலவைத்தசை, *s.* Complex muscle.

கலப்பிக்க, *inf.* [*causative of* கலக்க.] To cause to mix, to distribute, கலக்கச்செய்ய.

அன்னசாரத்தைக்கலப்பிக்க, *inf.* To distribute or diffuse the essence of the food or chyle through the blood vessels—as the office of the வியானவாயு. See வாயு.

*கலகம், *s.* Insurrection, commotion, rebellion, sedition, இராசகலகம். 2. Uproar, tumult, disturbance, noise, clamor, பேரொலி. 3. War, fighting, storming, attacking, போர். 4. Discord, strife, quarrel, wrangle, bickering, eager dispute, சண்டை. Wils. p. 201. KALAHA. (*c.*)

கலகந்தெளிந்தது. The tumult has ceased.

கலகம்பிறந்தால்நியாயம்பிறக்கும். Justice is obtained by agitation.

கலகக்காரர், *s.* Insurgents, seditious persons, கலகஞ்செய்பவர். 2. Quarrelsome persons, wranglers, bickerers, சண்டைசெய்வோர்.

கலகக்குருவி, *s.* [*prov.*] A sky-blue bird with dark brown head and large beak, சிச்சிலி, king-fisher, *lit.* the screamer.

கலகப்பிரியன், *s.* A seditious, rebellious, turbulent man.

கலகமாய்க்கிடக்க, *inf.* To be in a state of rebellion and disturbance, to be out of order.

கலகமாய்க்கிடக்கிறதேசம், *s.* A country that is in a disturbed condition.

கலகமுண்டாக, *inf.* To rise as an insurrection.

கலகமுண்டாக்க—கலகமிட—கலகம்பண்ண, *inf.* To make an uproar, to cause sedition, to rebel, wrangle, bicker, dispute eagerly.

கலகவாயன், *s.* A noisy person, a clamorer, சண்டைக்காரன்.

கலகலக்க—கலகலென, *inf.* To reiterate in sound, to rustle—as dry leaves, சரசரக்க. 2. To tinkle—as little bells, ankle-rings, கிலுகிலுக்க. 3. To chink—as money, to clink—as chains, clank, கணீரென. 4. To rattle—as small stones in a shell, கல்கலென. 5. To talk much and loudly, to clack, clatter, சளசளென. (*c.*)

வற்றியவோலைகலகலக்கும். Dry leaves rustle; i. e. a man of little learning or wealth makes a great noise. (நாலடி.)

கலகலக்கக்காய, *inf.* To dry—as green olas, boiled paddy, &c.

கலகலத்தவாய், *s.* Clacking, talkativeness.

கலகலென்றுசத்திக்க, *inf.* To tinkle.

கலகலத்தல்—கலகலவெனல்—கலகலப்பு, *v. noun.* Rustling, tinkling, chinking, ஒலிக்குறிப்பு.

*கலகலம், *s.* Chirping noise, &c., of birds, பறவைக்குரல். 2. The confused noise of a crowd, இரைச்சல். Wils. p. 200. KALAKALA.

கலக்கம், *s.* Distress, affliction, adversity, துன்பம். 2. Noise, shouting, ஆரவாரம். 3. Perplexity, embarrassment, discomposure, bewilderment, anxiety, தெளிவின்மை. 4. Fear, dread, அச்சம். 5. Grief, sadness, sorrow, dejection, சஞ்சலம்.

கலக்கங்கொள்ள, *inf.* To be sad.

கலக்கந்தீர, *inf.* To be relieved from fear. 2. To be removed as a cause of fear—as famine, war, pestilence, &c.

கலக்கு, கிறேன், கலக்கினேன், வேன், கலக்க, *v. a.* To stir, mix, mix up liquids (not generally by shaking), agitate, perturb, ruffle, stir, shake, mix, &c., so as to make the liquid or matter all alike or equal in consistence, to puddle, குழப்ப. 2. To disconcert, discompose, disturb, disquiet, confuse, confound, perplex, embarrass, embroil, cause disturbance, tumultuate, கலங்கச்செய்ய. 3. To frighten, intimidate, distress, grieve, depress, abash, agitate, dismay, dishearten, dispirit, daunt, அஞ்சுவிக்க. 4. To bewilder, distract, திகைக்கச்செய்ய.

குளத்தைக்கலக்கிப்பருந்துக்கிரைகொடுக்கவோ..... Why stir up a tank, and give its fish to the hawks? i.e. why take pains to ruin a poor man for the sake of enriching others, or why labor and not look after the profit.

கலக்கிக்குடிக்க, *inf.* To mix and drink; i. e. stir up the sediment, wash off what adheres to the cup, &c.—as medicines.

கலக்கிக்குடிக்கிறபதத்திளநீர். Cocoanut of an age proper to mix the kernel and drink it.

கலக்கிவிட, *inf.* To beat one in dispute, to confute. 2. To threaten, intimidate. 3. To stir up, agitate—as water. 4. To cause a disturbance, uproar, tumult, &c.

வயிற்றைக்கலக்க, *inf.* To feel uncomfortable in the bowels, inclined to go to stool.

பேச்சிலேகலக்க, *inf.* To confound, perplex, puzzle one in controversy.

கலங்கு, கிறேன், கலங்கினேன், வேன், கலங்க, *v. n.* To be stirred up, be agitated—as water, to ruffle, நீர்கலங்க. 2. To be confused, be perturbed, disconcerted, agitated, confounded, abashed, disturbed, discomposed, embroiled, குழம்ப. 3. To be embarrassed, perplexed, bewildered, distracted, மயங்க. 4. To be frightened, intimidated, depressed, daunted, cowed, dismayed, disheartened; to fear, dread, அஞ்ச. 5. To weep, அழ. 6. To be sad, to grieve, sorrow, to be depressed, துன்பமுற.

கலங்கச்செய்ய, *inf.* To bewilder, distract, embroil.

கலங்கடிக்க, *inf.* To discomfit, perplex, intimidate, cause consternation.

கலங்காதநெஞ்சு, *s.* An undaunted heart.

கலங்காதவீரன், *s.* A bold undaunted hero.

கலங்காவரிச்சு, *s.* Rods tied along a roof at some distance from each other.

கலங்கிப்போக, *inf.* To be perplexed or frightened. 2. To be troubled—as water.

கலங்கியிருக்க, *inf.* To be vexed, troubled.

கண்ணீர்கலங்க, *inf.* To swim—as the eyes through grief. 2. To have the eyes suffused with tears.

கலங்கல் — கலங்குதல், *v. noun.* Weeping, அழுதல். 2. Perturbation, கதுவுதல். 3. *s.* Muddy water, கலங்கனீர். 4. Fear, அச்சம்.

கலக்கம், *v. noun.* Confusion, perturbation, disquietude, disorder, embarrassment.

காரியமெல்லாங்கலக்கமாயிருக்கிறது. The whole affair is in a state of confusion.

கலக்கம்பண்ண, *inf.* To trouble, disturb, agitate.

கலக்கமாயிருக்க-கலக்கமுற்றிருக்க, *inf.* To be troubled, confused in the mind.

கலக்கமாய்ப்பேச, *inf.* To speak confusedly, indistinctly.

மனக்கலக்கம், *s.* Perturbation of mind.

கலக்கடி, *s.* [*prov.* கலக்கம்.] Confusion, perturbation, trouble.

கலக்கடிப்பட, *inf.* To be in confusion, trouble, consternation, &c., to be confounded.

கலக்கடிப்படுத்த—கலக்கடிபண்ண, *inf.* To confuse, trouble, perturb, perplex, bewilder, embarrass, &c. 2. To alarm, put in fear. 3. To agitate, distress.

கலங்கொம்பு, *s.* [*prov.*] A stag's horn, கலைமான்கொம்பு.

*கலசம், *s.* A little earthen pot, குடம். Wils. p. 201. KALASHA. 2. (*p.*) Milk, பால்.

கலசம்நிறுத்த, *inf.* To invoke the presence of a deity by certain ceremonies.

கலசப்பானை, *s.* A spittoon. (சது.) 2. A censer. (*Rott.*)

கலசமுனி, *s.* Agastya, அகத்தியன்—as born in a water-pot. (*p.*)

தூபகலசம், *s.* A censer in which incense is burned.

தண்ணீர்க்கலசம், *s.* A water-pot.

பாற்கலசம், *s.* A little pot used for milking.

கலணை, *s.* A horse-saddle, குதிரைக்கல்லணை. (*p.*)

கலணைக்கரடு, *s.* The pommel of a saddle.

கலணைவார், *s.* The girth of a saddle.

கலதி, *s.* The goddess of misfortune, மூதேவி. (*p.*)

கலதை, *s.* Confusion, disturbance, tumult, quarrel, கலக்கம். (*p.*)

கலந்தை, *s.* Greatness, பெருமை. (*p.*)

கலபம்—கலவம், *s.* The tail of a peacock, மயிற்றோகை. (*p.*)

கலப்பை, *s.* A plough, உழுபடை. (*c.*) 2. (*p.*) The parts of a plough, உழுபடையினுறுப்பு. 3. A weapon shaped something like a plough, அலாயுதம். 4. Sundry materials required for a sacrificial fire, உபகரணங்கள். (ஸ்காந்.)

கலப்பைக்கிழங்கு, *s.* A plant called கார்த்திகைக்கிழங்கு, Gloriosa superba. (*Phy. Dic.*)

கலப்பைசேர்க்க, *inf.* To construct a plough.

கலப்பைச்சக்கரம், *s.* A diagram in astrology in the form of a plough to determine on the best day for beginning the ploughing of the season.

கலப்பைப்படை, *s.* A kind of weapon, அலாயுதம்.

கலம், *s.* A vessel, a hollow utensil—as a cup, plate, &c., பாத்திரம். 2. An eating vessel, commonly brass, உண்கலம். 3. An earthen ware, a vessel, மட்கலம். 4. A dry or liquid measure, ஓரளவு. (*c.*) 5. (*p.*) Ornaments, jewels, ஆபரணம். 6. A boat, a vessel, கப்பல். 7. A guitar, யாழ். 8. The twenty-seventh or last lunar asterism. See இரேவதி.

கலந்தருநர், *s.* Potters, goldsmiths, braziers. (*p.*)

கலப்பற்று, *s.* [*prov.*] Calking for a vessel, படகினீக்கலடைப்பது.

கலப்பற்றடிக்க — கலப்பற்றுப்பார்க்க, *inf.* To calk.

கலப்பற்றுக்காரன், *s.* A calker.

கலப்பற்றுத்தோணி, s. A calked dhoney, the seams of which are formed by the joining of the planks without lapping.

கலமர், s. Guitar players, the caste, பாணர். (p.)

கலவர், s. Navigators, sailors, கப்பற்காரர். (p.)

கடற்குட்டம்போழ்வர்கலவர். Navigators cleave the depth of the ocean. (நாலடி.)

கலவடை, s. The mouth of a broken pot or a platted coil of straw used for resting water-vessels, &c., புரிமனை. 2. A stone formed to fit the mouth of a mortar to keep the grain within, உரலடை.

தொட்டிக்கலவடை, s. The foot of a laver.

அருங்கலம், s. A valuable jewel.

பழங்கலம், s. Used or old vessels, a row of old vessels.

கலம்பகம், s. Mixture, compound, medley, கலப்பு. 2. A kind of poem composed of various metres, ஓர்பிரபந்தம். 3. Compound perfumed ointments, சாந்து. 4. Miscellaneous sundries, miscellany, கலவை. (p.) 5. [vul.] Confusion, tumult, disturbance, outcry, clamor, war, &c., கலக்கம்.

கலம்பகமாலை, s. A poem formed of different kinds of verse. See பன்மணிமாலை.

கலம்பம், s. [as தாலம்பபாஷாணம்.] A kind of native arsenic.

கலயம், s. An earthen pot, கலசம்.

கலர், s. Inferiors, the vulgar, கீழ்மக்கள். (p.)

கலவகம், s. A crow, காக்கை. (Phy. Dic.)

கலவரம், s. (Tel.) Perturbation, confusion of mind, கலக்கம். (c.)

கலவரிக்க, inf. To be confused, perturbed.

கலவர், s. Warriors, படைவீரர். (சது.) (p.)

கலவல், s. Inarticulate sounds, எழுத்திலாவோசை. (p.)

கலவாங்கட்டி-கலவோடு, s. [prov.] A small potsherd, உடைந்தவோடு.

கலவாசு, s. [prov.] A cracker in fire-works, டபாசு.

கலவாய், s. A fish, ஓர்மீன்.

கலவி, s. Copulation, cohabitation, புணர்ச்சி. (p.)

கலவு, கிறேன், கலவினேன், வேன், கலவ, v. a. To mix, கலக்க. (c.)

கலவல் — கலாவல்—கலாவுதல், v. noun. Mixture.

கலவை, s. See under கல.

கலனை, s. A plough, கலப்பை. 2. The parts of a plough, கலப்பையுறுப்பு. 3. A weapon shaped like a plough, ஆயுதம். (p.)

கலன், s. A vessel, utensil, &c., பாத்திரம். 2. A dry measure of twelve marcals, ஓரளவு. 3. Ornaments, jewels, ஆபரணம். 4. A navigating vessel, a boat, &c., மரக்கலம். 5. A guitar, யாழ். (p.) 6. [prov.] Difference, altercation, debate, dispute, வழக்கு.

இதற்குயாதொருகலனுமில்லை. There is no dispute about it.

கலனேதுாணி, s. A கலன் and one-third.

கலனேத்தீர்த்துத்தர, inf. To indemnify.

கலன்கழிமடந்தை, s. A widow, a woman divested of her bridal jewels and other ornaments, கைம்மை. (p.)

கலாங்கம்—கலாங்கன், s. A kind of arsenic in its natural state, தத்தபாஷாணம்.

கலாசு, s. (For.) Shipping.

கலாசுகாரன்—களாசுகாரன், s. A native seaman, a native gunner who labors in an armory, &c.

கலாதி, s. [vul.] Uproar, clamor, commotion, agitation, stir, கலகம். 2. Disturbance, tumult, quarrel, scuffle, squabble, brawl, wrangle, சண்டை.

கலாதிபண்ண, inf. To make an uproar.

*கலாநிதி, s. See under கலை.

*கலாபம், s. A zone of beads for a woman's waist consisting of sixteen strings, பதினறுகோவையுள்ளமணி. 2. A belt or girdle, அரைப்பட்டிகை. 3. A zone of any number of strings of beads or bells, &c., சரமணிக்கோவை. 4. A peacock's tail, மயிற்றோகை. 5. A peacock, மயிலினன். 6. An umbrella made of the feathers of a peacock's tail, பீலிக்குடை. Wils. p. 201. Kalapa. (p.)

கலாபம், s. [prop. கலகம்.] Uproar, tumult, disturbance, insurrection.

கலாபப்பட்டிருக்க, inf. To be in a state of war. (Rott.)

வேதக்கலாபம், s. Persecution for religion's sake.

ஊர்க்கலாபம், s. An insurrection.

கலாபனை, s. [vul.] Uproar, clamor, கலகம்.

*கலாபி, s. A peacock, ஆண்மயில். (சது.) Wils. p. 201. Kalapin. (p.)

கலாம், s. Vehemence, கொடுமை. 2. Displeasure, anger, சினம். 3. Rage, fury, கோபம். 4. Quarrel, enmity, hatred, பகை. (p.)

கலாம்பூரம், s. A kind of drug, ஓர்மருந்து. (M. Dic.)

கலி, s. Noise, clamor, sound, ஒலி. 2. The கலிப்பா species of verse and its varieties. (See பா.) 3. Sea, ocean, கடல். 4. Battle, war, போர். 5. Deceit, fraud, வஞ்சகம். 6. Strength, force, வலி. (p.) 7. Misery, misfortune, disaster, calamity—also misery, personified as a deity, சிறுமை. 8. The fourth age of the world or that of vice, misery, deterioration, &c. See கலியுகம்.

கலிக்குப்புதுமையானகாரியமாயிருக்கிறது. It is a strange thing in this age.

கலிகாலம், s. A time of misery, bad times—as resulting from the present age, கொடுமையானகாலம்.

கலிதீர்த்தான். He who put an end to misery.

கலித்தளை, s. Mode of connexion of metrical feet in கலிப்பா. See தளை.

கலித்தாழிசை, s. A class of verse, கலிப்பாவினத்திலொன்று.

கலித்துருமம், s. The தான்றிமரம்—a tree yielding a nut much used in medicines, it is said in கைடதம் that Kali, the god of the iron age, once concealed himself in the fruit of this tree, Terminalia bellerica. (p.)

கலித்துறை, s. A class of verse including several species, கலிப்பாவினத்திலொன்று.

கட்டளைக்கலித்துறை, s. A class of கலித்துறை verse.

கலிப்பா, s. A verse of which there are ten kinds, viz.: 1. நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா. 2. அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா. 3. தரவு கொச்சககலிப்பா. 4. தரவிணைக்கொச்சகக்கலிப்பா. 5. சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா. 6. பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா. 7. மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா. 8. ஒருபோகு கொச்சகக்கலிப்பா. 9. வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா. 10. வெண்கலிப்பா.

கட்டளைக்கலிப்பா, s. A species of கலிப்பா verse.

கலியர், s. Soldiers, warriors, combatants, படைவீரர். 2. The poor, destitute, தரித்திரர். (p.)

கலியாத்தம்—கலியாப்தம், s. Any year of the கலிவருஷம்.

கலியுகம்—கடையுகம்—நாலாம்யுகம், s. The present iron age being the last of the four Yugas or great ages of the world. Wils. p. 202. Kaliuga.—Note. Its commencement is placed about three-hundred years anterior to the Christian era. Its years are four hundred and thirty-two thousand, at the expiration of which the golden age returns.

கலிவிருத்தம், s. A class of verse, கலிப்பாவினத்திலொன்று.

கலிவெண்பா, s. A kind of வெண்பா.

கலி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To grow luxuriantly, flourish, increase, பொலிய. 2. To sprout, தழைக்க. 3. To sound, clamor, roar, ஒலிக்க. 4. To rise, எழ. (p.)

கலித்தல், v. noun. Elevation, எழுச்சி. 2. Sounding, ஒலித்தல். 3. A clamor, ஆரவாரம். 4. Sprouting, தழைத்தல். 5. Increase, பொலிவு.

கலிப்பு, v. noun. Abundance, plenty, increase, copiousness, மிகுதி. 2. Height, surpassing intensity, எழுச்சி.

கலிகம், s. Arsenic, ஓர்பாஷாணம்.

*கலிகை-களிகை, s. Tender flower-buds, இளம்பூவரும்பு. Wils. p. 202. Kalika. 2. A shrub, நாகமல்லி, Justicia nasuta, L. (p.)

கலிக்கம், s. A very pungent eye-salve applied as a stimulant in apoplectic stupor or apathy of the system, கண்ணிலிடு மருந்து. (c.)

கலிக்கம்போட — கலிக்கமிட, inf. To apply pungent eye-salve.

பூதகலிக்கம், s. A kind of collyrium used by magicians to drive away evil spirits from persons said to be possessed by them.

அஞ்சனக்கலிக்கம், s. A magic ointment rubbed on the eyes, or palms of one who wishes to discover any thing lost.

*கலிங்கம், s. The name of a country and its language—one of the eighteen, supposed to extend from below Cuttack to the vicinity of Madras, ஓர்தேசம். Wils. p. 202. Kalinga. 2. A sparrow, ஊர்க்குருவி. 3. A lark, வானம்பாடி. 4. A horse, குதிரை. 5. Cloth, சீலை. 6. A plant, வெட்பாலை, Wrightia antidysenterica, L. (p.)

கலிங்கத்துப்பரணி, s. A poem of which king Sola is the hero.

கலிங்கல்—கலிங்கு, s. [vul.] A sluice, ஏரிநிறைநீர்போம்வழி. 2. A dam or bank of stones, அணைக்கட்டு. (Rott.)

கலிசம், s. The வன்னி tree, Prosopis spicigera, L. (p.)

கலிதம், s. Agreement as in figures, &c., பொருத்தம். (p.) 2. Flowing, emission, பாய்கை.

கலிதி, s. Long-pepper, திப்பிலி. (Phys. Dic.)

கலிபணம், s. [prov.] An ancient copper coin, ten of which made a பொன். The word is now used only in boys' copies, ஓர்வகைப்பணம்.

கலிபலி, s. [com. கலிபிலி.] (For.) Quarrel, wrangle, turmoil. 2. Uproar, disturbance, hubbub, ஆரவாரம்.

கலிபலிப்பட, inf. To quarrel, wrangle.

கலிப்பு, s. A mixture of copper and tin, தரா.

கலிப்புமலை, s. A mountain of the above metal, அந்தகன்பீடம். (Rott.)

கலியன், s. The male of twins, the other being a female, இரட்டைப்பிள்ளையிலாண் —considered ominous of evil to the country. 2. Saturn, சனி.

கலிச்சி, s. The name applied to a female twin when the other is a boy.

கலியாணகிருதம், s. A kind of compound medicament, ஓரௌஷதம்.

*கலியாணம், s. Good fortune, happiness, prosperity, felicity, சுபம். Wils. p. 208. Kalyan'a. 2. Marriage, nuptials, wedding, wedlock, matrimony, விவாகம். (c.) 3. Festivity, conviviality, a joyful celebration, கொண்டாட்டம். 4. Gold, பொன்.

கலியாணக்காரர், s. Nuptial guests. 2. People at a wedding house. 3. Guests, or a household where a marriage festival is taking place. 4. A married couple, husband and wife.

கலியாணக்கால், s. [prov.] One of the new posts put up in the wall of a new-built house over against the கன்னிக்கால், dressed as a male.

கலியாணக்கோலம், s. Wedding attire, &c.

கலியாணங்கூற, inf. To publish the banns of marriage.

கலியாணசம்பிரமம், s. Nuptial pomp.

கலியாணச்சடங்கு, s. The celebration of a marriage ceremony, or the putting on of ear-rings by a young man.

கலியாணஞ்சொல்ல, inf. To bid or invite to a wedding.

கலியாணப்பந்தல், s. A temporary shed lined with cloth for marriage guests.

கலியாணபுத்தகம், s. A district marriage register.

கலியாணப்பூ, s. [prov.] The most plentiful fall of the flowers of the இருப்பை tree which occurs during the season.

கலியாணப்பொருத்தம், s. The contract of betrothing in which the parties or their friends bind themselves under penalty to consummate the marriage.

கலியாணமண்டபம், s. A hall for a splendid marriage ceremony.

கலியாணமுடிக்க, inf. To marry.

கலியாணமெழுத, inf. [prov.] To register a marriage.

கலியாணம்பண்ண, inf. To marry, solemnize a wedding. 2. [prov.] To celebrate the festivity of a girl's arriving at puberty, or of a young man's putting on ear-ornaments. 3. To make a feast for the sake of obtaining presents from the guests—done in case of reduced or involved circumstances.

கலியாணவாழ்த்து, s. Nuptial congratulation.

கலியாணவீடு, s. A wedding house. 2. A house in which a கலியாணம் festival is being celebrated.

கலியாணவோமம், s. The sacred fire kindled at a wedding, sacred to the god of fire who is invoked as a witness to the transaction.

பஞ்சகலியாணி, s. A horse, whose four feet and forehead are white.

நித்தியகலியாணன், s. A happy or prosperous person. 2. God.

கலியாணி, s. One of the Ragas or musical modes, ஓரிராகம். 2. (p.) Parvati, பார்ப்பதி.

கலிவிராயன்—கலிவிராயநெல், s. A kind of rice, ஓர்நெல்.

கலினம், s. Bridle, reins, கடிவாளம். (p.)

கலினப்புரவி, s. A bridled horse.

கலினி, s. Long-pepper, திப்பிலி. (சது.) 2. Widow, கைம்பெண். (p.)

கலினை, s. Pepper, மிளகு. (p.)

கலீரென—கலீர்கலீரென, inf. To sound as small bells, &c.—as a brass vessel, a key struck in falling; to clink, sound as a bald head when struck, ஒலிக்குறிப்பு.

கலீரெனவிழுந்தது. It fell with a clinking noise.

மணிகலீர்கலீரெனவொலித்தது. The bells tinkled.

கலுக்குப்பிலுக்கு, s. [com.] Attractive and tinkling sounds, made by a woman or children decked with ornaments, tinkling, clinking, ஆபரணத்தாலெழுமொலி.

கலுக்குப்பிலுக்குப்பண்ண, inf. To make ornaments tinkle by design, as is done by dramatic personages.

*கலுடம்—கலுஷம், s. Turbid, foul, muddy water, கலங்கனீர். 2. Sin, vileness, பாவம். Wils. p. 202. Kalusha. (p.)

கலுமொலென, inf. To chatter, clack, converse privately or in a low tone, ஒலிக்குறிப்பு.

கலுவடம், s. A flower-bud, பூவரும்பு. (p.)

கலுவம், s. A small grinding stone, or mortar used for grinding drugs. (c.)

கலுழம், s. Turbid or muddy water, கலங்கனீர். (p.)

கலுழன், s. The brahmany kite, கருடன். (p.)

கலுழக்கல், s. The same as கருடக்கல்.

கலுழி, s. Muddy water, puddle, கலங்கனீர். 2. Jungle rivers, கான்யாறு. (p.)

கலுழ், கிறேன், ந்தேன், வேன், கலுழ, v. n. To become turbid—as water, கலங்க. 2. To weep, shed tears, அழ. (p.)

கலேல்—கலேர், s. An imitative sound, ஒலிக்குறிப்பு.

*கலை, s. A digit or one-sixteenth of the moon's diameter, a phasis, சந்திரன்பங்கு. 2. A minute portion of time equal to thirty காட்டை, or about eight seconds, காலநுட்பம். 3. The sixtieth part of a பாகை, or of one-thirtieth of a zodiacal sign or one Indian hour, ஓர்பாகையிலறுபதிலொன்று. Wils. p. 200. Kala. 4. A specific power of any of the superior deities as manifested in an incarnation, or in the assumption of a form, human or other, for any specific purpose, the manifestation of a deity, forms of the female energy of deity as they appear in nature, வித்தியாதத்துவமேழிலொன்று. 5. The arts and sciences of which sixty-four are enumerated. (See கலைஞானம்.) 6. Learning, erudition, literature, philosophy, வித்தை. 7. A treatise, a book, நூல். 8. (p.) A male deer, a stag, ஆண்மான். 9. Cloth, சீலை. 10. The manifestation of a demon in a person temporarily possessed, பேயாட்டம். 11. Any one of the eight parts of a வண்ணம் ode. 12. A shark, சுறுமீன். 13. Capricornus of the zodiac, மகரவிராசி. 14. The male of the red monkey, ஆண்முசு. 15. Breath passing from the nostrils, இடைகலைபிங்கலை. 16. The branch of a tree, மரக்கொம்பு. (சது.) 17. The solid part of timber, வைரம். 18. A girdle, அரைப்பட்டிகை. 19. A woman's exterior girdle, consisting of seven strings of jewels, மேகலை. 20. Brightness, splendor, பிரகாசம். 21. Tissues, சவ்வு.

கலாநிதி, s. The moon, சந்திரன்.

கலைகுறைய, inf. To decrease as divinity in an idol by the neglect of pujah, &c. 2. (fig.) [in contempt.] To be cashiered, degraded, to lose office, decrease—as prosperity.

கலைக்கொம்பு, s. Stag's horn—also called கலங்கொம்பு.

கலைஞர், s. Poets, bards, philosophers, the literati, புலவர்.

கலைஞானம், *s.* Philosophy, literature, universal knowledge, கல்வியுணர்வு. 2. The arts and sciences, being sixty four, viz.: 1. அக்கரவிலக்கணம், the knowledge of spelling and reading, orthography, the science of reading. 2. இலிகிதம், caligraphy, penmanship. 3. கணிதம், the art of computation, arithmetic, the science of numbers. 4. வேதம், the Hindu Veda or law. 5. புராணம், a class of sacred books comprising the whole body of Hindu theology. 6. வியாகரணம், grammar. 7. நீதிசாத்திரம், jurisprudence. 8. சோதிடசாத்திரம், astronomy, including astrology. 9. தருமசாத்திரம், ethics, moral philosophy, code of laws. 10. யோகசாத்திரம், the knowledge of abstract or silent devotion, rules for religious and abstract meditations. 11. மந்திரசாத்திரம், a division of the Vedas in the first or practical part; it includes prayers and hymns addressed to particular deities and used at particular sacrifices, and it also comprehends incantations in religion, magic, medicine, and every other art or practice in which enchantments are used. 12. சகுனசாத்திரம், the science of prognosticating by omens and augury. 13. சிற்பசாத்திரம், architecture and mechanics, symmetry, shapes in general, including sculpture, painting features, lines, hair, &c., of the human system, and their various effects on life. 14. வைத்தியசாத்திரம், science of healing, physic, pharmacy and surgery which may include restoration to life of the dead, the reunion of severed limbs, &c. 15. உருவசாத்திரம், physiognomy, the art of discovering the temper and foreknowing the fortune by the features of the face, metoposcopy, chiromancy, the art of foretelling the events of life by inspecting the hand, சாமுத்திரிகம். 16. இதிகாசம், history, traditional accounts of former events, heroic history—as found in the Bharata and Ramayana. 17. காவியம், epic poetry—as சிந்தாமணி, நைடதம், &c. 18. அலங்காரம், science of rhetoric. 19. மதுரபாடணம், eloquence. 20. நாடகம், dramatic science. 21. நிருத்தம், the art of dancing. 22. சத்தப்பிரமம், directions for the modulation of sounds. 23. வீணை, the art of playing on the lute or stringed instruments. 24. வேணு, the art of playing on the flute or pipe. 25. மிருதங்கம், the art of beating the tambourine. 26. தாளம், the art of beating the cymbals. 27. அத்திரபரிட்சை, archery, the art of throwing darts. 28. கனகபரிட்சை, the art of an assayer in gold, &c. 29. இரதபரிட்சை, the art of driving chariots, charioteering. 30. கசபரிட்சை, the knowledge of the marks of an elephant. 31. அசுவபரிட்சை, the knowledge of the marks of a horse. 32. இரத்தினபரிட்சை, the art of examining and choosing gems, knowledge of precious stones. 33. பூமிபரிட்சை, the knowledge of the different kinds of soil, rules for determining by the surface, the nature and depth of soils, underneath which water is to be found, &c. 34. சங்கிராமவிலக்கணம், military art, tactics. 35. மல்லயுத்தம், wrestling, pugilism, gymnastics, athletic art, boxing. 36. ஆகருடணம், the art of calling or summoning by enchantment. 37. உச்சாடணம், exorcism, dislodging devils or exciting them to injure others. 38. வித்துவேடணம், exciting hatred between parties by magical spells—one of the eight performances of enchantment. 39. மதனசாத்திரம், erotics, modus coeundi. 40. மோகனம், libidinous fascinations occasioned by enchantment. 41. வசீகரணம், the art of subduction by magic, the art of bringing one over to another's side or interest by enchantment. 42. இரசவாதம், alchymy and chemistry. 43. காந்தருவவாதம், the knowledge of the condition of the celestial choristers. 44. பைபீலவாதம், the language of brute creatures from emmets upwards. 45. கவுத்துகவாதம், the art of restoring pleasure to a sorrowful mind. 46. தாதுவாதம், the knowledge of the pulse. 47. காருடம், charms, incantations against poison. 48. நட்டம், information respecting any thing lost obtained by astronomical calculations. 49. முட்டி, information respecting any thing concealed in the palms of the hand (*lit.* in the fist). 50. ஆகாயப்பிரவேசம், the art of entering into the air and becoming invisible. 51. ஆகாயகமனம், the art of walking in the air. 52. பரகாயப்பிரவேசம், the power of leaving one's own body and entering another lifeless body or substance at pleasure. 53. அதிரிசயம், the power of making one's self invisible. 54. இந்திரசாலம், the art of conjuring, juggling, &c. 55. மகேந்திரசாலம், the art of performing wonders in heaven and earth. 56. அக்கினித்தம்பம், restraining the action of fire. 57. சலத்தம்பம், the art of counteracting the yielding quality of water so as to be able to walk on its surface. 58. வாயுத்தம்பம், the art of restraining the power of the wind. 59. திட்டித்தம்பம், the art of fascinating the eyes. 60. வாக்குத்தம்பம், the art of fascinating the mouth. 61. சுக்கிலத்தம்பம், the art of restraining the semen virile. 62. கனனத்தம்பம், the art of preventing the discovery of things concealed. 63. கட்கத்தம்பம், the art by which the power of the sword or any other weapon is nullified. 64. அவத்தைப்பிரயோகம், the power of stationing the soul at pleasure, in any of the five stages in full energy by virtue of abstract devotion for converse with the deity. See அவத்தை.

கலைநாதன், *s.* Argha, a divinity of the Jainas.

கலைநாயகன், *s.* Budha, புத்தன். (திவாக.)

கலைமகள்—கலைமடந்தை, *s.* Sarasvati—as the patroness of the arts, சரச்சுவதி. (*p.*)

கலைமலைவு, *s.* Any thing contrary to the shasters, சாஸ்திரவிரோதம்.

கலைமான், *s.* A stag.

கலையானத்தி—கலையூர்தி, *s.* Durga, துர்க்கை. (*p.*)

கலையினன், *s.* The moon, சந்திரன். (*p.*)

கலையுணர்த்துவோன்—கலையுணர்புலவன், *s.* Skanda, கந்தன். (*p.*)

கலையேற, *inf.* To increase as divinity in an idol with the increase of pujah, incantations, &c. 2. [*in reproach.*] To become arrogant by prosperity, promotion, &c.

கலையோத, *inf.* To learn science, to acquire knowledge, நூலோத.

கலைவல்லோர், *s.* Poets, philosophers, the learned, புலவர்.

வடகலை, *s.* The Sanscrit language.

தென்கலை, *s.* The Tamil language.

கலை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To disperse—as an assembly, a defeated army, a herd pursued by dogs—as birds, clouds, &c.; to become separated from a company, &c.; to decamp, withdraw, quit, desert, குலைய. 2. To jar, to be discordant—as a noise, musical string or instrument, இராகமயங்க. 3. To be frustrated, to fail in accomplishment, எண்ணங்கலைய. 4. To slide from one tune into another by mistake, to go out of tune—as an instrument, இராகங்கலைய.

மனவெண்ணங்கலைந்துபோக, *inf.* To be absent in mind. 2. To be distracted, disturbed, &c.—as the mental powers.

கலைவு, *v. noun.* Dispersion, scattering, disorder, being broken up, குலைவு. 2. Separation, பிரிவு.

கழுவல்—கழுவுதல், *v. noun.* Washing, cleansing.

கழை, *s.* The bamboo, மூங்கில், Bambusa arundinacea. 2. Sugar-cane, கரும்பு. 3. The seventh lunar asterism, புனர்பூசம். (*p.*)

கழைக்கூத்து, *s.* Pole-dancing, வேழம்பர்கூத்து.

கழைக்கூத்தர், *s.* Pole-dancers, வேழம்பர்.

கழைக்கூத்தாடி, *s.* A pole-dancer.

கள, *s.* A thorny shrub, களாச்செடி. (*p.*)

*களகண்டம், *s.* The Indian cuckoo, குயில்—also written காளகண்டம். Wils. p. 200. KALAKANTA. (*p.*)

களகம், *s.* The mountain rat, பெருச்சாளி. (*p.*)

*களகம்பளம், *s.* A bull's dewlap, the excrescences on a goat's neck, அலைதாடி. Wils. p. 285. GALAKAMBALA. (*p.*)

களகளப்பு, *s.* Din, roar, gurgling, wambling, &c., ஒலிக்குறிப்பு. (*c.*)

*களகளம், *s.* A loud and confused noise—as the din of a bazaar, the roaring of water, &c., பேரொலி. Wils. p. 200. KALAKALA.

களகளெனல்—களகளவெனல், *s.* Tingle, flow with a gentle sound, chatter, &c., ஈரடுக்கொலிக்குறிப்பு. (*c.*)

களகளவெனக்கொதிக்க, *inf.* To sound—as water in boiling.

களகளவெனவிரும, *inf.* To sound—as phlegm in the chest.

களகளவெனவொலிக்க, *inf.* To roar—as water, multitudes.

களகளவென்றுசிரிக்க, *inf.* To laugh, making a noise.

களகொளெனல், *s.* Mumbling, ஒலிக்குறிப்பு. (*c.*)

களகொளென்றுவயிறிரைய, *inf.* To wamble—as the bowels.

களக்கர், *s.* Inferiors, புலையர். 2. Hunters, a caste living by the chase, வேடர். (*p.*)

களங்கட்டி, *s.* A kind of fish, ஓர்மீன்.

களங்கம், *s.* A spot, a mark, a sign, a token, அடையாளம். (*p.*) 2. (*c.*) A stain, a blot, a tarnish, a blemish, soil, மாசு. 3. Fault, defect, moral or ceremonial defilement, குற்றம். 4. Black, கறுப்பு. 5. Blue, நீலம். 6. Rust, verdigris, any thing that deteriorates, களிம்பு. 7. A kind of arsenic in its natural state, சிதாங்கபாஷாணம்.

களங்கசத்துரு, *s.* Fountain containing lead, ஈயமணல்மலை.

களங்கமற, *inf.* To be free from defects.

களங்கமற்றிருக்க, *inf.* To be spotless, sincere, pure.

களங்கமில்லாதநடக்கை, *s.* Pureness of living.

களங்குள்ளவன், *s.* One whose character is sullied. 2. A knave, a fraudulent person.

நிஷ்களங்கம், *s.* Purity.

களங்கன், *s.* The moon, சந்திரன், *lit.* the spotted. (*p.*)

களங்கு—களங்குமுறை, *s.* A compound of metallic bodies prepared with mercury and made into pills, பலலோகங்களாலுண்டாக்கியஇரசகுளிகை. (*Rott.*)

களஞ்சி, *s.* A kind of arsenic, சூதபாஷாணம்.

களஞ்சியம், *s.* A granary, a barn, தானியமிருக்குமிடம். 2. A store room, a repository, a treasury, a magazine, பொக்கசசாலை. (*c.*)

களஞ்சியத்திலேபோட, *inf.* To put into a barn.

*களதவுதம்—களதூதம்—களதௌதம், *s.* Silver, வெள்ளி. Wils. p. 200. KALADOUTA. (*p.*)

*களத்திரம், *s.* A wife, மனைவி. 2. Family, race, குடும்பம். Wils. p. 200. KALATRA. (*p.*)

களத்திரகாரகன், *s.* The planet regarded as the ruler of the seventh sign from the rising sign at birth, சுக்கிரன்.

களத்திரதானம், *s.* The seventh from the rising sign at the moment of birth, portending the person's circumstances in respect of the wife (if it predict any), her disposition, wealth, longevity and other properties, ஏழாமிடம்.

களத்தூர்—களந்தை, *s.* A town near Chingleput, ஓரூர்.

களந்துரி, *s.* The fruit of a தான்றி tree, Terminalia bellerica, *L.* (*M. Dic.*) (*p.*)

*களபம், *s.* A young elephant, யானைக்கன்று. 2. An elephant, யானை. 3. Fragrant ointment, perfumery, கலவைச்சாந்து. 4. A mixture, கலப்பு. 5. Mortar, cement, சட்டசாந்து. Wils. p. 200. KALAB'HA. (*p.*)

களப்பன்னை, *s.* A shrub, ஓர்செடி.

களப்பு, *s.* Shallow sea, shallows at sea, கடலினாழமில்லாவிடம்.

களமூர், *s.* A town near Madura, ஓரூர்.

களம், *s.* Place, locality, open space, area, a wide extent, expanse, இடம். 2. Black, dark, கறுப்பு. 3. Poison, venom, விடம். 4. Neck, throat, மிடறு. 5. A wife, மனைவி. 6. Barren or brackish ground, களர்நிலம். (*p.*) 7. (*c.*) A threshing floor or place in a field for treading corn, நெற்களம். 8. The place or site of a battle, a field of battle, போர்க்களம். 9. Shallow shelf of rocks at sea, bank under water, sand-bank, shoal, &c., கடலின்மேடு.

களத்திலேதோணிபொறுத்துப்போயிற்று. The dhoney is aground on a shoal.

களப்பலி, *s.* A human sacrifice, that of valiant men to Doorga, the goddess of war, previous to battle to secure victory, யுத்தகளத்திலிடும்பலி.

களப்பலியிட—களப்பலியூட்ட, *inf.* To offer human sacrifice.

களப்பாட்டு, *s.* Threshing floor songs, போரடிப்போர்பாடும்பாட்டு.

களப்பாய், *s.* A mat spread on the floor to tread out grain, களத்தில்விரிக்கும்பாய்.

களப்பிச்சை, *s.* Alms given to religious mendicants at a threshing floor, களத்திலிடும்பிச்சை.

களப்பேச்சு, *s.* Auspicious terms, language, &c., of the threshing floor, களபரிபாஷை.

களப்பேறு, *s.* [*prov.*] The portion of grain, distributed at a threshing floor among religious mendicants, also given to a washerman, barber, and other dependent castes, நெற்களத்திற்பெறும்பலன்.

களமதி, *s.* Estimation of the quantity of grain upon a threshing floor.

களமளக்க, *inf.* To measure at the threshing floor, களத்தினெல்முதலியனவளக்க.

களமர், *s.* Husbandmen, agriculturists, உழுநர். 2. The பூவைசியர், or one of the divisions of the வைசியர் caste. 3. Inhabitants of agricultural districts, மருதநிலமாக்கள். 4. The Sudra caste, சூத்திரர். (*p.*)

களம்விடாமலொட்டடிக்க, *inf.* To sweep clean the threshing floor.

களவழிநாற்பது, *s.* A poem in forty stanzas descriptive of a field of battle. (*Rott.*)

களவாரம், *s.* [*com.* களவாசம்.] The portion of grain given from the threshing floor to the workmen, களத்திற்கொடுக்கும்வாரம்.

உலைக்களம், *s.* A forge.

கொலைக்களம், *s.* A place of execution.

யுத்தகளம்—படுகளம், *s.* A field of battle.

படுகளத்திலொப்பாரியா. Are relationships observed in the battle-field?

களரவம், *s.* A dove, pigeon, புறா. (*p.*)

களை, *s.* Tares, grass, weeds, &c., among corn, or other vegetables, பயிர்க்களை. 2. Weariness, அயர்வு. 3. Splendor of countenance, glow, lustre, shining, காந்தி. 4. Beauty, handsomeness, அழகு. (*c.*) 5. (*p.*) Dross, refuse, defect, fault, குற்றம். 6. One of the ten தாளம், or rules for keeping time, தாளப்பிரமாணம்பத்திலொன்று.

களைகட்ட, *rel. part.* Weeded as corn, &c.

களைகொத்த, *inf.* To weed.

களைகொள்ள, *inf.* To begin to shine—as the countenance from the influence of the deity.

களைகொட்டு — களைக்கோல், *s.* A weeding hook, களைகளையுங்கோல்.

களைச்சத்தகம், *s.* [*prov.*] A hooked kind of paddle for weeding corn, களைகளையுமாயுதம்.

களைஞர், *s.* The base, villains, wretches, rogues.

களைதீர—களைதெளிய — களையாற, *inf.* To recover from fatigue, languor, &c., அயர்வுநீங்க.

களைபறிக்க—களைபிடுங்க-களைவெட்ட, *inf.* To weed corn, &c., களைகளைய.

களையாற்ற, *inf.* To revive one from fainting, இளைப்பாற்ற.

களையேற, *inf.* To shine as the face of a person or idol, from the influence or indwelling of a deity, பிரகாசமதிகரிக்க. 2. To increase, as the phases of the moon, சந்திரகலைவளர.

களைவாரி, *s.* A tool for weeding, களைபறிக்குங்கருவி.

முகக்களை, *s.* Lustre of countenance.

சூரியகளை, *s.* Brightness of the sun.

தெய்வகளை, *s.* Lustre of countenance, supposed to result from the indwelling of the deity, விஷ்ணுகளை.

களை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. a.* To strip or put off clothes, to reject clothes or jewels, &c., சீலைமுதலியகளைய. 2. (*p.*) To weed, pull up, extirpate, eradicate, களைபிடுங்க. 3. To exterminate, extirpate a family, foes, &c., to kill, destroy, கொல்ல. 4. To remove, expel, extrude, separate, reject, lop off; to shave the hair, the beard, &c., to pare the nails, &c., to cut or pull the hair, &c., to molt—as birds, அகற்ற. 5. [*in arith.*] To subtract, கணக்குக்கழிக்க.

வன்சொற்களைந்து. Avoiding offensive speech—

புடவைக்களைய, *inf.* To cast off dirty or impure clothes. 2. To put off clothes—as ceremonially impure from catamenia. 3. To be subject to catamenia; i. e. not pregnant.

களைதல்—களைவு, *v. noun.* Extirpation, weeding, plucking, stripping off.

களை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be fatigued, be exhausted with hunger, running, hard labor, from the heat of the sun, being flogged, &c., to be languid, to flag, droop, இளைப்புற. 2. To faint, swoon, சோர.

களைத்தல்—களைப்பு, *v. noun.* Fainting.

களைகண், *s.* Support, succor, protection, ஆதரவு. 2. A protector, a succorer, one to whom recourse may be had for relief, உதவி. (*p.*)

கள், *s.* Toddy, vinous liquor, மது. 2. The plural termination of nouns, pronouns and verbs, பன்மைவிகுதி. 3. (*p.*) Honey of flowers, தேன். 4. Stealing, theft, களவு. 5. Lying, falsehood, deception, பொய்.

கள்ளுக்குடியன் — கள்ளுண்ணி—கள்ளுண்ணி, *s.* A drinker, a tippler, a toddy-drinker, கள்ளுண்போன்.

கள்ளுச்சேர்க்க, *inf.* To gather toddy from the tree, கள்ளிறக்க.

கள்ளுண், *s.* A beetle, a bee, வண்டு, *lit.* a honey-bibber. (*p.*)

கள் — கள்ளு, கிறேன், கட்டேன், வேன், கள்ள, *v. a.* To steal, rob, திருட. 2. To be treacherous, insidious, to entertain furtive designs, வஞ்சிக்க. (*p.*)

கள்ளல்—கள்ளுதல், *v. noun.* Stealing, திருடல்.

கள்ளாமை, *neg. v. noun.* The duty of avoiding theft.

கள்வன், *s.* A thief, a robber, a rogue, திருடன். 2. (*p.*) A black or dark person, கரியன். 3. A crab, நண்டு. 4. Cancer of the zodiac, கர்க்கடகவிராசி. 5. A monkey, குரங்கு. 6. The red monkey, முசு. 7. An elephant, யானை. (சது.)

கள்ளம், *s.* Guile, treachery, deception, imposition, dissimulation, insidiousness, roguery, villany, knavery, turpitude, spuriousness, counterfeitness, perfidy, depravity, வஞ்சகம். 2. Stealing, robbery, fraud, embezzlement, shuffling, tricking, cheating, circumvention, intrigue, களவு. 3. Lying, falsehood, பொய். 4. Fault, crime, guilt, defect, blemish, குற்றம். 5. Morbid matter concealed in a boil, or lodged in the system and causing irritation, புண்ணினுட்கள்ளம். 6. Unlawful, illicit acts, slyness, trickishness, sinister views, under-hand way of doing things, covert, கபடம்.

கள்ளவெயிலுங்கள்ளமழையும். Alternate rain and sun-shine when neither can be relied on.

கள்ளஒப்பம், *s.* A forged signature.

கள்ளக்கடை, *s.* A shop or bazaar for the reception of stolen goods.

கள்ளக்கப்பல், *s.* A piratical vessel, திருட்டுக்கப்பல்.

கள்ளக்கப்பற்காரன், *s.* A pirate.

கள்ளக்கயிறு, *s.* A kind of double string for opening and closing a book or purse.

கள்ளக்கவறு, *s.* False dice, கள்ளச்சூதாடுகருவி.

கள்ளக்கவி, *s.* Flagrant plagiary, சோரகவி.

கள்ளக்காசு — கள்ளநாணயம் — கள்ளப்பணம், *s.* Base or counterfeit coin, செல்லாக்காசு.

கள்ளக்காய்ப்பட, *inf.* To fail as fruits in the process of ripening by smoke.

கள்ளக்கிடை, *v. noun.* Lying deceptively, shamming sickness, sleep, or death, வஞ்சனையாகப்படுத்திருக்கை.

கள்ளக்குணம், *s.* A false, insidious, deceptive disposition, திருட்டுக்குணம். 2. Insidiousness in boils, diseases, &c., deceptiveness, changeableness in weather, wind, the sea, &c., கள்ளத்தோற்றம். 3. Tricks, vices, &c., in beasts, கபட்டுக்குணம்.

கள்ளக்கையெழுத்து, *s.* A false signature, a forgery.

கள்ளச்சத்தியம், *s.* A false oath, perjury.

கள்ளச்சரக்கு, *s.* Smuggled or contraband goods.

கள்ளச்சாதி, *s.* The Kallar tribe, a caste in South India.

கள்ளச்சி, *s.* [*prop.* கள்ளி.] A female thief, திருடி.

கள்ளச்சீட்டு, *s.* A forged bond, note, draught, &c.

கள்ளச்சொல், *s.* Lie, falsehood, பொய். 2. Pretence, pretext, திருட்டுப்பேச்சு.

கள்ளஞானம், *s.* Hypocrisy in religion.

கள்ளஞ்செய்ய, *inf.* To commit fraud, to embezzle, களவுசெய்ய.

கள்ளத்தனம், *s.* Cunning, craftiness.

கள்ளத்திறவுகோல், *s.* A false key, a picklock.

கள்ளத்தீன், *s.* Sweet-meat, cakes, &c., eaten by stealth instead of regular food, திருட்டுணவு.

கள்ளத்துறை, *s.* Ports where exports and imports are prohibited, ஆயத்துறைக்குமாறுயதுறை.

கள்ளத்தோணி, *s.* A kind of dhoney, sailing to different places from Point Calimere, &c.; this species of boat is so called because formerly employed in robbing the pearl banks.

கள்ளநடத்தை, *s.* Illicit intercourse of the sexes.

கள்ளநீர், *s.* Morbid humor in the body preventing the healing of ulcers, &c., புண்ணில்வடியுநீர்.

கள்ளநேரம், *s.* Irregular seasons for doing things, seasons for illicit acts when detection may not occur. 2. A little before daylight, தூங்குநேரம்.

கள்ளப்பசி, *s.* Deceptive feelings of hunger.

கள்ளப்பாடம், *s.* Lessons omitted, slipped over, &c., being unlearnt, deceiving the master.

கள்ளப்பார்வை, *v. noun.* Thievish, designing looks. 2. Sly looks of lovers, or libidinous persons, அன்பினுேனுக்குநோக்கம்.

கள்ளப்பிள்ளை, *s.* An illegitimate child, a bastard, சோரத்திற்பெற்றபிள்ளை.

கள்ளப்புணர்ச்சி, *s.* Illicit intercourse of the sexes.

கள்ளப்புத்தி, *s.* Deceitful sagacity, cunning.

கள்ளப்புருஷன், *s.* A paramour, a gallant, சோரநாயகன்.

கள்ளப்பெண்சாதி—கள்ளஸ்திரி, s. A concubine.

கள்ளப்பேச்சு, s. Insincere expressions, false assurances.

கள்ளமயிர், s. False hair.

கள்ளமயிர்த்தொப்பி, s. A wig.

கள்ளமனம், s. Deceitful mind.

கள்ளமாடு, s. Cattle that intrude and graze by stealth, a cow or bullock prone to stray, or to be mischievous, திருட்டுமாடு. 2. An ox that refuses to work, கரவுள்ளமாடு. 3. Stolen cattle, திருடினமாடு.

கள்ளமார்க்கம், s. False religion. 2. A sally port.

கள்ளமுத்திரை, s. A false stamp, திருட்டுமுத்திரை.

கள்ளம்பண்ண, inf. To be idle in work, to be dull, slow, &c.—as a beast in the absence of the whip. 2. To play truant. 3. To work deceptively, to use alloy, cheat, act the rogue, dissemble, sham, pretend.

கள்ளவறை, s. A concealed room which no one would suspect, பிறர்காணக்கூடாதஅறை.

கள்ளவாசாரம், s. Mock modesty, feigned politeness, திருட்டாசாரம்.

கள்ளவாயில், s. A trap-door, கள்ளவழி.

கள்ளவொழுக்கம், s. Hypocrisy, dissimulation, திருட்டுநடத்தை.

கள்ளன், s. (plu. கள்ளர், fem. கள்ளி.) Thief, robber, rogue, vagabond, villain, knave, criminal, felon, depredator, திருடன். 2. One of the Kallar tribe, கள்ளச்சாதியான்.

கள்ளர்பற்று, s. The district of the Kallars.

வேசிக்கள்ளர், s. Whore-mongers.

ஆசாரக்கள்ளர், s. Persons insincere, incomplaisant. 2. Hypocrites in religion.

திருநீறுகுழைக்குங்கள்ளர். Those who put on appearances of piety.

கும்பிடுகள்ளர்—தொழுகள்ளர், s. Hypocrites, those insincere in religion, or in courtesy.

அழுகள்ளர், s. Weeping rogues, dissimulators, impostors.

மாசாலக்கள்ளி, s. A dissimulating, unfaithful woman.

கள்ளி, s. A genus of plants embracing several species, ஓர்மரம். 2. Milk hedge or Indian tree spurge, Euphorbia tirucalli, L.

இலைக்கள்ளி, s. The pricklypear, sometimes planted round forts, &c.—as a defence, Cactus.

கள்ளிக்காக்கை, s. A red bird, செம்புகம்.

கள்ளிப்பால், s. The pungent milk of the கள்ளி shrub.

கள்ளிப்பூக்கிரந்தி, s. A kind of venereal disease with clustered broken eruptions, supposed to resemble the pricklypear.

கள்ளிமடையான்—கள்ளிமுளையான்—கள்ளிமந்தாரை—பெருங்கள்ளி, s. A kind of plant, ஈழத்தலரி, Plumiera acuminata, L.

கள்ளிமேடு, s. Calli hill, a promontory, Point Calimere.

திருகுகள்ளி—ஆட்டாங்கள்ளி, s. Euphorbia antiquorum.

நாகக்கள்ளி, s. A kind of கள்ளி that grows leaf upon leaf.

பலகைக்கள்ளி—படற்கள்ளி, s. A plant, Opuntia dillenii, L.

கொடிக்கள்ளி, s. The milky shrub.

சதுரக்கள்ளி, s. The square stemmed கள்ளி.

மான்செவிக்கள்ளி—முயற்செவிக்கள்ளி, s. A shrub, Cacalia Kleinii, L.

கள்ளு, s. Toddy, மது. (c.)

கள்ளுவெறி, s. Drunkenness.

கற, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, v. a. To extract milk, to milk, பால்கறக்க. 2. (fig.) To appropriate another's property, to extort, engross, கவர. 3. v. n. [with impers. terminations.] To give milk—as a cow, பசப்பால்கொடுக்க.

கறந்தமேனியாயிருப்பது. That which is pure, unadulterated.

அவன்ஊரிலேகறந்துபோடுவான். He will extort from the country.

இந்தமாடுமூன்றுபடிபால்கறக்கும். This cow will give three measures of milk.

கறத்தல்—கறப்பு, v. noun. Act of milking.

கறவை—கறவைப்பசு—கறவையான், s. A milch cow, பாற்பசு.

கறகறெனல், v. noun. Importuning, பேச்சினுலலட்டல். 2. Rattle, &c., ஒலிக்குறிப்பு. 3. Rattling in the throat—as a dying person or from phlegm.

கறகறென்றுபல்லுடனேபல்லைக்கடிக்கிறான். He gnashes his teeth.

கறகறென்றோடுகிறான். He runs with a rustling noise, very fast.

காற்றாடிகறகறென்றுசுற்றுகிறது. The wind-whirl rattles.

கறகறப்பு, v. noun. [prop. கரகரப்பு.] Importunity, teazing, மனங்கொள்ளாமை. 2. Reiterative sound, rattling, &c., ஒலிக்குறிப்பு.

கறங்கல், s. A devil, vampire, பேய். 2. A curved club, a cudgel, வளைதடி. (p.)

கறங்கு, s. A child's toy, a wind-whirl, காற்றாடி. 2. Whirling, gyration, சுழற்சி. (உப. 194.) (p.)

கறங்கோலை, s. A wind-whirl.

கறங்கு, கிறது, கறங்கினது, ம், கறங்க, v. n. To whirl, சுழல. 2. To sound, ஒலிக்க. (p.)

கறங்கல், v. noun. Sounding, ஒலித்தல். 2. Whirling, சுழலல்.

கறல், s. Firewood, fuel, விறகு. (p.)

கறளை, s. [vul.] A dwarf, குள்ளன். 2. A beast, fowl, tree, &c., stunted in its growth; any thing dwarfish, வளராதமரமுதலியன. 3. Fruit not come to perfection, பருக்காதகாய்.

கறள், s. [prov. corruption of கறை.] Rust, dross, stain, blood, &c.

கறட்பற்று, s. Formation of rust, &c.

புகையிலைக்கறள், s. The soot of the tobacco concreting in the stomach inducing cough, &c. 2. The blackening of teeth by tobacco smoke.

கறு, s. The chirp of a quail, காடைக்குரல். (சது.) (p.)

கறார், s. (Hin.) [also கரார்.] Certainty, நிதானம்.

கறாரானபேச்சு, s. Decisive language, stipulation, &c.

கறுளி, s. Intractableness, அடங்காமை.

கறுளிக்குதிரை, s. (local.) An intractable horse.

கறி, s. A spiced mixture with fish, meat, or vegetable—eaten with boiled rice, பதார்த்தம். (c.) 2. (p.) Pepper, மிளகு.

கறிக்குடலை, s. A doubled leaf for carrying curry in the hand.

கறிக்கூட்டு, s. Curry condiments ground together.

கறிச்சுரை, s. A class of gourds, any of the edible species, சுரை.

கறித்தும்பை, s. A plant so called because it is esculent.

கறித்தூள், s. Curry powders.

கறித்தேங்காய், s. A cocoanut suitable for curry.

கறிபதார்த்தங்கள், s. Things proper to form the main ingredients in curries, not the curry seeds.

கறிப்பாலை, s. A plant, ஓர்பாலை.

கறிமசாலை, s. The ingredients of curry.

கறியுப்பு, s. Culinary salt, உப்பு.

கறிவடகம், s. Curry condiments ground together and dried in cakes to be kept for use.

மரக்கறி, s. Curry of vegetables.

இலைக்கறி, s. A dish of greens or pot herbs, அடகு.

புளிங்கறி, s. A sour curry.

துவட்டற்கறி, s. A sort of curry without any gravy.

கறி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To bite, nibble, கடிக்க. 2. To eat by biting or nibbling—as biscuits, &c., புசிக்க. (p.)

கறித்தல், v. noun. The act of eating, புசித்தல். 2. The act of biting, கடித்தல்.

கறிப்புடல், s. A kind of beetle, சாதவண்டு, (Rott.)

கறு, s. [prop. கறுவு.] Anger, rage, malice, கோபம். (சது.) (p.)

கறு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To grow black, to darken, கருமையாக. 2. (p.) To become impure, polluted, to contract moral defilement, கறைப்பட. 3. To show signs of anger, to look black, to scowl, சினக்குறிப்புக்காட்ட. 4. To be angry, கோபிக்க.

கறுத்தகம்பளி, s. A black hair cloth.

கறுத்தசாமை, s. A dark kind of grain. See சாமை.

கறுத்தவன், s. A dark or black person.

கறுப்பு, *s.* Blackness, darkness, கருமை. 2. (*p.*) Indications of anger, frown, scowl, சினக்குறிப்பு. 3. Anger, displeasure, சினம். 4. A spot, taint, pollution, moral defilement, &c., கறை. 5. (*M. Dic.*) Ambergris, மீனம்பர்.

பார்ப்பானிற்கறுப்பும்பறையனிற்சிவப்புமாகாது. A black skin in a Brahman and a light brown skin in a Pariar are equally bad.

கறுப்பன், *s.* A black person or animal, கரியன். 2. A demigod or ferocious deity, பதினெட்டாம்படிக்கறுப்பன். 3. A dark kind of rice, கார்நெல்.

கூர்க்கறுப்பன்—மொட்டைக்கறுப்பன், *s.* Different kinds of dark rice.

கறுப்பி, *s.* A black woman, கரியள்.

கறுப்புக்காஞ்சொறி, *s.* A kind of plant, ஓர்செடி.

கறுப்புக்கொள்ள, *inf.* To take umbrage, to frown, கோபங்கொள்ள.

கறுப்புப்படர, *inf.* [*prop.* கருமேகம்படர.] To grow or spread—as a black spot on the skin.

மனக்கறுப்பு, *s.* Hatred, enmity.

கறுப்பி, *s.* Salt-petre, எவக்ஷாரம். 2. A black beetle, கருவண்டு. 3. A kind of bismuth, காகதிமிலை.

கறுமுறெனல்—கறுமொறெனல், *v. noun.* Showing signs of anger, speaking angrily, murmuring, சினக்குறிப்பு.

கறுவல், *s.* A black or dark person, கரியன். 2. [*vul.*] A black or dark animal of the larger kind, கரியது. 3. Black color, கருநிறம். 4. (*p.*) Signs of anger, சினக்குறிப்பு.

கறுவு, கிறேன், கறுவினேன், வேன், கறுவ, *v. a.* To exhibit signs of displeasure, to frown, look sternly, சினக்குறிப்புக்காட்ட. 2. To be angry, enraged, displeased; to be furious, சினக்க. 3. To entertain malice or implacable hatred, சலஞ்சாதிக்க. (*p.*)

கறுவு, *v. noun.* Signs of anger, சினக்குறிப்பு. 2. Anger, rage, wrath, fury, சினம். 3. Malice, implacable hatred, சலஞ்சாதிக்கை.

கறுள், *s.* A bridle, reins, கடிவாளம். (*p.*)

கறேரென்றிருக்க, *inf.* To be very black, கறுப்பாயிருக்க.

கறை, *s.* Rust, spot, stain, tarnish, blemish, மாசு. 2. Fault, defect, impurity, defilement, pollution, physical, moral or ceremonial, குற்றம். 3. Blackness, darkness, கறுப்பு. (*c.*) 4. (*p.*) Blood, இரத்தம். 5. A mortar for pounding, உரல். 6. Ebony, கருங்காலி. (பிங்.) 7. Tribute, poll-tax, குடியிறை. 8. Color, hue, tinge, நிறம். (சது.)

கறைதீர்தல், *v. noun.* Being free from tarnish or pollution.

கறைநீக்க, *inf.* To expel pollution or tarnish, to cleanse, purify.

கறைப்பட, *inf.* To be spotted, stained, polluted, defiled; to contract defilement, to become impure, physically, morally, or ceremonially.

கறைப்படுத்த, *inf.* To stain, taint, tarnish, pollute, defile, soil, blur.

கறைப்பட்டமனம், *s.* A polluted mind.

கறைப்பல், *s.* Discolored teeth.

கறைப்பிடிக்க, *inf.* To become rusty, to form—as rust. 2. To be stained or soiled with rust, verdigris, &c. 3. To collect—as blood in inflammations, &c.

கறைமிடற்றிறை—கறைமிடற்றோன், *s.* Siva as black-throated, from taking poison into his throat at the churning of the sea of milk, சிவன்.

கறையடி, *s.* An elephant, யானை.

கறையாயிருக்க—கறைகறையாயிருக்க, *inf.* To be full of spots.

இரத்தக்கறை, *s.* A stain of blood in cloth, &c.

கறையான், *s.* White-ants, Temio fatale, செல்.

கறையானரிக்க, *inf.* To gnaw or consume—as white-ants.

கறையான்கட்ட, *inf.* To form mould—as white-ants. 2. To mar—as white-ants.

கறையான்புற்று, *s.* White-ant hills.

கறையான்புற்றுவைக்கப்பாம்புகுடியிருக்கும்....... White-ants make the cells, and snakes occupy them. [*prov.*]

தாய்க்கறையான்—பெருங்கறையான், *s.* A large white-ant found in every nest, regarded as procreative of the whole; when removed, the nest perishes.

நிலக்கறையான், *s.* The common kind of white-ants.

பெருந்தலைக்கறையான், *s.* A large-headed species of white-ants.

கருங்கறையான், *s.* A black kind of white-ants.

மேய்ச்சற்கறையான், *s.* [*prov.*] A large kind of white-ant that consumes rapidly, but makes no avenue.

கற்கசர், *s.* Low base people, the vulgar, கீழ்மக்கள். (*p.*) 2. Severe, precise, illiberal or tenacious persons, கொடியர்.

கற்கடகசிங்கி, *s.* A kind of drug, கடுக்காய்ப்பூ.

*கற்கம், *s.* Drugs pounded and steeped in oils or other liquids to form decoctions, tinctures, medicinal oils, &c., பலவகைக்கூட்டுமருந்து. 2. The residuum or sediment of decoctions, oil, ghee, &c., கஷாயவண்டல்முதலிய. 3. The flower of the Bassia longifolia, இலுப்பைப்பூ. 4. Medicinal drugs in general, கடைமருந்து. (*p.*)

*கற்கரி, *s.* A ewer, a small pitcher, a water-pot which may or may not have a nose like a tea-pot, கரகம். 2. A large pot for churning, தயிர்கடைதாழி. (*p.*)

கற்கா, *s.* One of the twelve districts where the கொடுந்தமிழ் is spoken.

கற்கி, *s.* A horse, குதிரை. 2. Vishnu in his tenth incarnation as a destroyer, when he assumes the shape of a horse to destroy the wicked; this is yet future, விட்டுணுஅவதாரத்திலொன்று. 3. A temple, தேவாலயம். (சது.) (*p.*)

*கற்கிச்சா, *s.* Equation for the second inequality of a planet when its position is within six signs of aries. 2. Table of these equations, the annual parallax of the orbits of planets, given when their place in the heavens is from cancer to capricornus, கற்கிசக்காபரிதி; [*ex* கற்கி, cancer, சா, sign], meaning the signs of commutation from cancer to capricornus, which is equal to the annual parallax.

கற்பகக்கரம், *s.* A kind of arsenic, கோழித்தலைக்கந்தகம்.

கற்பகம்—கற்பகவிருக்ஷம், *s.* One of the five miraculous trees of Swerga yielding whatever is desired, பஞ்சதருவிலொன்று. This name is sometimes used for the five species.

கற்பகச்சோலை, *s.* Grove of Devendra in Swerga.

*கற்பம், *s.* The period of Brahma's life or one-hundred of his days and nights, பிரமனாயு. (சது.) 2. The periodical destruction of the world at the end of Brahma's day, also of his life, உலகமுடிவு. 3. [*in pharmacy.*] Medical powders to prolong life, secure immortal youth, சித்தர்களமருந்து. 4. Renovating influence on the system from the use of the powders, மூப்புவாராமற்செய்யுமருந்து. (*c.*) 5. (*p.*) A day and night of Brahma, a period of 4,320,000,000 solar, siderial years, or years of mortals measuring the duration of the world, and as many, the intervals of its annihilation, பிரமனோர்நாள். 6. Swerga, the world of the devas, தேவலோகம். 7. A number—ten thousand millions, ஆயிரகோடி. 8. [*in sacred science.*] Treatises on the incarnation by which the deities respectively are invoked in worship, மந்திரசாஸ்திரம். 9. One of the six அங்கம், or parts of knowledge; that which treats of incantations, வேதாங்கமாறிலொன்று. 10. One of the nine Nidhis of Kuvera, நவநிதியிலொன்று. Wils. p. 202. KALPA.

கற்பகாலம், *s.* The period of Brahma's day, or of his age, a kalpa.

கற்பஞ்சாதிக்க — கற்பஞ்சாப்பிட, *inf.* To inure the body to hardship—as ascetics, strengthening it with medicaments and by other means for promoting longevity, கற்பந்தின்ன.

கற்பநாள், *s.* A kalpa of time.

கற்பமுடிவு, *s.* The end of a kalpa.

கற்பாந்தம், *s.* The end of a kalpa, கற்பமுடிவு. (See கற்பம்.) 2. Stability, that which lasts long, உறுதியாயிருப்பது.

*கற்பனை, *s.* Elegance in poetry or explanation, புனைந்துரை. Wils. p. 203. KALPANA. 2. Teaching, instruction, கற்பிப்பு. (*c.*) 3. (*p.*) Learning, study, கல்வி. 4. Directions, instructions, commands, orders, கட்டளை. 5. Appointment, destiny, divine ordinance, விதிப்பு. 6. Purpose, decision, determination, நிருணயம். 7. Skill, dexterity, சாதுரியம். 8. Revery, imagination, fancy, பாவனை.

கற்பனைக்குட்பட, *inf.* To submit to, or obey the law.

கற்பனைதள்ள—கற்பனைவிலக்க, *inf.* To violate a command, to disobey.

இராசகற்பனை, *s.* Royal commands, the order of a king or other ruling power.

குருகற்பனை, s. The precept of a Guru regarded as sacred, to be observed with undeviating scrupulosity.

தெய்வகற்பனை, s. A divine precept.

கற்பாரியம், s. A work on architecture, சிற்பநூலிலொன்று. (p.)

கற்பாலவணம், s. (For. கடற்பாலவணம்.) Sea-salt, சிந்துலவணம்.

கற்பி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To teach, instruct, instil knowledge, படிப்பிக்க. 2. To create, make, fabricate, construct, invent, compose a term, poem, &c., உண்டாக்க. (c.) 3. (p.) To direct, command, issue orders, order, charge, கட்டளைகொடுக்க. 4. To appoint, destine, decree, ordain, assign, விதிக்க. 5. To purpose, determine, நியமிக்க. 6. To figure in the mind, imagine, fancy, form a vain project, to build castles in the air, பாவனைசெய்ய. 7. To appoint to an office, invest with office, to grant, confer, தொழிலில்ஸ்தாபிக்க.

கற்பிக்குமுறைமை, s. Order in teaching.

கற்பித்தசொல், s. Verbal instructions. 2. A newly-invented form of expression, new-made word.

கற்பித்தபணிவிடை, s. Duties commanded, commissions.

கற்பித்துச்சொல்ல, inf. To fabricate stories, &c. 2. To invent, frame new forms of speech, to use words in a new sense for the occasion.

கற்பித்தோன், s. A teacher, instructor.

கற்பித்தல், v. noun. Teaching, instructing, commanding.

*கற்பிதம், s. An elephant, armed or caparisoned for war, போர்யானை. 2. Appointment, determination, purpose, நியமம். 3. Destiny, decree, divine ordinance, விதிப்பு. 4. Command, direction, order, கட்டளை. 5. Fancy, revery, பாவனை. 6. Being made, fabricated, artificial, composed, invented, அலங்கரிப்பு. Wils. p. 203. Kalpita.

கற்பு, s. Female virtue, conjugal fidelity, chastity, constancy, the virtue of a good wife, மகளிர்கற்பு. 2. (p.) Propriety, fitness, முறைமை. 3. Learning, study, knowledge, literature, information, intelligence, கல்வி. 4. Destiny, divine ordination, விதி. 5. A raised area within a fortification, மதிலுண்மேடை. 6. A surrounding wall, a fortification, மதில். 7. The முல்லை flower shrub, regarded by poets as an emblem of female chastity. 8. Justness, equity, moral rectitude, நீதிநெறி. 9. An ordinance, command, கற்பனை.

கற்பலங்காரி, s. A chaste virgin or woman.

கற்பழிக்க—கற்புக்குலைக்க, inf. To defile, corrupt chastity, to deflour.

கற்புக்குலைக்கிறவன், s. A ravisher, a deflourer.

கற்பழிந்தபெண், s. A defloured woman.

கற்பழிய, inf. To be defloured.

கற்பழியாதபெண், s. A virgin, an undefiled woman, கன்னி.

கற்பாட்டி—கற்பினள்—கற்புடையாள், s. A chaste woman, கற்புடையவள்.

கற்புடைமகளிரத்தியாயம், s. The chapter which treats of the qualities of a chaste woman, contained in the book காரிகாண்டம்.

கற்பியல், s. A branch of அகப்பொருள், which treats of female chastity, கற்பொழுக்கங்கூறுமியல்.

கற்பிலக்கணம், s. The rules of chastity and housewifery.

கற்புடைமை, s. Female chastity and virtue.

கற்புநெறி, s. Female chastity (a pleonastic form).

கற்புவலிமை, s. The power of female chastity and virtue. 2. The miraculous efficacy of female chastity, which, when possessed in a high degree, is considered capable of counteracting the order of nature.

கற்று, s. A cow with a young calf, கன்றையுடையபசு. (p.)

கற்றை, s. A collection of hair, &c., மயிர்த்தொகுதி. 2. A handful of straw, &c., வைக்கோற்கற்றை. 3. Turf, புற்கற்றை. 4. A collection of rays, கதிர்க்கற்றை. 5. Cocoanut leaves braided like ropes—as bandages for hedging, தென்னோலைக்கற்றை. (c.)

ஊத்தைகற்றைகற்றையாய்க்கழன்றது. The dirt came off in flakes.

மயிர்கற்றைகற்றையாய்ப்போயிற்று. The hair is all in tangles.

பிடித்தாற்கற்றை, விட்டாற்கூளம். If settled now, it will be in order; if left, it will be deranged.

கற்றைசொருக—கற்றைபோட, inf. To thatch.

கற்றைபிடிக்க, inf. [prov.] To braid cocoanut bandages. 2. To fasten bandages to a hedge. 3. To fasten a bandage—as to thatch on the roof of a house.

கற்றைவைத்துக்கட்ட, inf. [prov.] To tie a hedge with bandages. 2. To build with a handful of mud, cement.

விழுக்கற்றை, s. A handful of tank grass.

கன, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To be heavy, to become heavy, massive, solid, thick, hard, indurated, பாரமாயிருக்க. 2. To be thick, close, crowded, numerous, பருக்க. 3. To be abundant, copious, to outweigh, &c., அதிகரிக்க; the infinitive used adverbially expresses very much.

கனக்கக்கொடுத்தான். He gave plentifully.

கனத்தவுடைமைக்கனர்த்தமில்லை. Solid property will not soon be injured.

காரியங்கனத்துக்கொண்டது. The matter has become more serious.

குற்றங்கனத்துக்கொண்டது. The crime is aggravated.

குரல்கனத்துப்போயிற்று. The voice is become heavy, hoarse—as of one who has reached manhood, one who drinks liquor, &c.

கனத்தஆக்கினை, s. Severe punishment.

கனத்தகுடி, s. An illustrious and noble family.

கனத்தசமுசாரம், s. A numerous family.

கனத்ததோல், s. Thick skin—as that of a beast or of the hand, &c., hardened and thickened by labor.

கனத்தநாள், s. A critical day in diseases—as the day of new or full moon, &c., when the influence of the planets is unusually powerful, aggravating disease, &c. On such days it is deemed improper to bathe, take medicine, &c. (c.)

கனத்தபயிர், s. A thick crop.

கனத்தபனி, s. A heavy dew.

கனத்தமனிதன், s. A large heavy man.

சரீரங்கனத்துக்கொள்ள, inf. To become heavy—as the body, by disease, humors, corpulency, &c.

தலைகனத்துக்கொள்ள, inf. To grow heavy—as the head through cold.

வயிறுகனத்துக்கொள்ள, inf. To have indigestion. 2. To eat a belly-full, to be well stuffed. 3. To become gravid; sometimes in this meaning, spoken in contempt, of pregnancy from illicit intercourse.

கனப்பு, v. noun. [vul.] Thickness, becoming thick, கனம். 2. Weight, heaviness, solidity, gravidity, பாரம். 3. The hardness of a swelling, அழுத்தம். 4. Stoutness, lustiness, grossness, கொழுப்பு. 5. Pride, self-importance, இறுமாப்பு.

உன்கனப்பெடுத்துப்போடுவேன். I will reduce you.

சரீரக்கனப்பு, s. Heaviness of the body—as in plethora, &c.

தலைக்கனப்பு, s. Heaviness in the head.

வயிற்றுக்கனப்பு, s. Heaviness of the system from indigestion, constipation, &c.

கனகதப்பட்டை, s. A small kind of tabor, ஓர்வாச்சியம்.

கனகதம், s. A camel, ஒட்டகம். (p.)

கனகதர், s. Rogues, base persons, சண்டாளர். 2. Low caste people who eat flesh, புலையர். (p.)

*கனகம், s. Gold, பொன். Wils. p. 186. Kanaka. (p.)

கனகக்கொடியோன், s. A name of a king, having a golden banner. See கன்னன். (சது.)

கனகசபை, s. The golden hall, one of the sacred apartments of Chithambram temple, பொன்னம்பலம்.

கனகதண்டிகை—கனகபல்லக்கு, s. A palankeen studded with gold, பொற்சிவிகை.

கனகதண்டிகைவேந்தர்—கனகபல்லக்குத்துரை, s. A gentleman or king worthy to ride in a golden palankeen—used by Pariars in flattery.

கனகபரீட்சை, s. Acquaintance with precious metals—one of the sixty-four கலைஞானம்.

கனகமாரிபொழிய, inf. To bestow liberally, lit. to rain gold.

கனகமாரிபொழிந்ததுபோலே. As bountiful as if it rained gold.

கனகன், s. An Asoor, இரணியன்.

கனகாசலம், s. Mount Meru, மேருமலை. Wils. p. 186. Kanakachala.

கனகாசனம், s. A golden seat, throne, &c., பொன்னாசனம்.

கனகாபிஷேகம், s. Pouring out gold on the head of an idol or otherwise, in imitation of anointing, சொர்ணாபிஷேகம்.

இப்படிச்செய்தாற்கனகாபிஷேகம்பண்ணுவாரா. If I did so, would he shower gold on me?

கனகாமிர்தம், s. Silver.

கனங்காய், s. A tree whose flowers are fragrant, Artabotrys odoratilysinica.

கனசாரம், s. Camphor, கருப்பூரம். (p.)

கனதி, s. Thickness, பருமை. 2. Heaviness, ponderosity, gravity, பாரம். 3. [vul.] Pride, haughtiness, இறுமாப்பு.

கனத்தி, s. One of the thirty-two kinds of prepared arsenic, வைப்பரிதாரம்.

கனநயதேசியங்கள், s. Various modes of singing, இராகபேதம்.

*கனம், s. Heaviness, weight, gravity, பாரம். 2. Thickness, பருமை. 3. A solid, a cube, கனத்தவடிவு. 4. Honor, dignity, respectability, moral worth, பெருமை. 5. Gravity, solemnity, பாரசிந்தனை. 6. Abundance, plenty, copiousness, much, excessiveness, மிகுதி. 7. Sonorousness or depth of musical sounds, இசைவிகற்பம். Wils. p. 308. G'HANA. (c.) 8. (p.) Density, closeness, செறிவு. 9. Hardness, solidity, வன்மை. 10. Width, breadth, extension, அகலம். 11. A multitude, assemblage, quantity, number, crowd, கூட்டம். 12. Clouds, மேகம். 13. Gold, பொன். 14. The thick root of கோரை grass, கோரைக்கிழங்கு. 15. A circle, வட்டம். 16. Dignity, elegance, சீர்மை.

கனகனசங்கலிதம், s. Adding the cubes of the natural numbers with the sum of their roots.

கனகோபம், s. Great rage.

கனங்கொள்ள, inf. To become heavy, ponderous, cumbrous. 2. To become serious, important, momentous.

கனசங்கலிதம், s. [in arithmetic.] The summing up of a series of the cubes of numbers in the same order, ஒரெண்பெருக்கு. See சங்கலிதம்.

கனசனம், s. Numerous people, a great crowd.

கனசாமர்த்தியம், s. Great talents, skill, dexterity.

கனதடிப்பு, s. Bulkiness, heaviness.

கனதுணிவு, v. noun. Great boldness, a daring exploit.

கனபத்தி, s. Distinguished piety.

கனபத்தியானபொருத்தனை. A solemn vow.

நற்கிரியைகளுக்குக்கனபத்தியானசனம். A people zealous of good works.

கனபலம், s. The contents of a solid, ஓரளவை. Wils. p. 308. G'HANAPHALA.

கனமழை, s. Heavy rain.

கனமாயிருக்க, inf. To be heavy, thick, to be of great weight, importance.

கனமாயெண்ண—கனமாய்வைக்க, inf. To esteem, value highly, greatly.

கனமாரி, s. Heavy and continued rain, அதிகமழை.

கனமானஉபதேசம், s. Weighty or solemn instruction.

கனமானகாரியம், s. A serious matter, a weighty affair.

கனமின்மை, s. Want of gravity, or weight, disrespect.

கனமுள்ளவன், s. An eminent person.

கனமூலம், s. Cube root, ஓரெண்.

கனம்பண்ண — கனப்படுத்த, inf. To honor, respect, esteem.

கனம்பாட, inf. To sing with a full deep voice.

கனம்பார்க்க inf. To estimate by weight, to consider one's condition, external circumstances.

கனயோகம், s. Very good luck or fortune.

கனயோகசாலி, s. A very fortunate man.

கனரசம், s. Rain, மழை. 2. Water, நீர். Wils. p. 308. G'HANARASA.

கனருசி, s. Lightning, மின்னல்.

கனவான், s. A respectable man, கனமுடையவன்.

கனவிமரிசை, s. Strict examination, investigation.

கனவிருள், s. Thick darkness.

கனவீனம், s. Dishonor, disgrace, மகிமைக்குறைவு. 2. Lightness, பாரக்குறைவு.

கனோபலம், s. Hail, ஆலாங்கட்டி. Wils. p. 309. G'HANOPALA.

கனலி, s. The sun, சூரியன். 2. Fire, நெருப்பு. 3. Hog, பன்றி. (திவா.) (p.)

கனலு—கனல், கிறேன், கனன்றேன், வேன், கனல, v. n. To be hot, to glow—as fire, fever, the sun in a slight degree, சிக்கனல. 2. To burn, எரிய. 3. To be angry, to be displeased, to show signs of anger, கோபிக்க. (p.)

காய்ச்சல்கனன்றுகொண்டிருக்கிறது. There is a little fever (as when it begins or abates).

கனறல், v. noun. Being hot, swift, கடுப்பு. 2. Anger, கோபம்.

கனற்சி, v. noun. Heat, glow, வெப்பம். 2. Anger, சினம்.

கனல், s. Fire, நெருப்பு. (p.)

கனல்நிறக்கல், s. A ruby, செம்புக்கல்.

கனல்பேதி, s. A kind of ochre, சகஸ்திரபேதி

கனவட்டம், s. A horse, குதிரை. 2. A horse of Pandian, பாண்டியன்குதிரை. (p.)

கனவிரதம், s. Water, நீர். (p.)

கனவு, s. A dream, கனா. 2. Sleep, நித்திரை. 3. Stupor, drowsiness, bewilderment, மயக்கம்.

கனவிலுங்காக்காய்மலந்தின்னக்காணும். The crow even dreams of feeding on excrement.

கனவிலுந்தீங்குநினையான். He will not think evil even in his dreams.

கனவிலும்பொய்சொல்லான். He will not falsify even in his dreams, he will not dream of falsifying.

கனவிற்கண்டபொருள்கானலிற்கண்டபுனல். The substance of a dream is like the mirage of the arid desert.

ஊமைகண்டகனவுபோல். Like the dreams of the dumb that cannot be disclosed—spoken of things improper or impossible to disclose.

கனவின்பலன், s. The accomplishment of a dream. 2. The interpretation of a dream.

கனவின்பலனைச்சொல்ல. To interpret dreams.

கனவுகாண, inf. To dream.

கனவுநிலையுரைத்தல், v. noun. The relation of dreams.

கனவுநூல், s. A treatise which prescribes rules to interpret dreams.

தீக்கனவு, s. A bad dream, either ominous or inauspicious in its character.

நற்கனவு, s. A good dream.

கனற்கூர்மை, s. Glass-gall, வளையலுப்பு.

கனற்சிலை, s. A kind of ore, மந்தாரச்சிலை.

கனற்பு, s. Hearth, அடுப்பு.

கனற்று, கிறேன், கனற்றினேன், வேன், கனற்ற, v. n. To heat gently, to impart heat (by direct rays, &c.), not applicable to heating in a vessel, &c., சுட. 2. v. n. To burn, எரிய. (p.)

வெயில்பிள்ளையைக்கனற்றியது. The sun has made the child a little hot.

கனற்றல் — கனற்றுதல், v. noun. Heating.

*கனனம், s. Burying, hiding, புதைப்பு. (p.)

கனனத்தம்பம், s. One of the sixty-four கலைஞானம்—preventing the discovery of things concealed.

கனன்றல், s. Another form of கனலுதல். 2. Showing signs of anger, சினக்குறிப்பு. (p.)

கனா, s. A dream, கனவு.

கனாக்காணுதல், v. noun. Dreaming.

*கனி, s. A mine for jewels, for precious metals, பொன்முதலியனபிறக்குமிடம். (p.)

கனி, s. Fruit, பழம். 2. Fruit ripe, mellow fruit, முதிர்ந்தபழம். 3. (p.) Sweetness, தித்திப்பு.

கனிகாலம், s. The fruit season from April to July inclusive.

கனியுங்காயும், s. Fruits ripe and unripe, such as are eaten without cooking.

கனிவகை, s. Various kinds of fruits.

முக்கனி, s. The three principal fruits. See பழம்.

கனி, கிறது, ந்தது, யும், ய, v. n. To ripen—as fruits, to grow ripe, to be ripe, mellow, luscious, sweet, பழுக்க. 2. To be over-ripe, நைய. 3. To be in flames, to glow, பழுக்கக்காய. 4. To grow tender, to melt, be soft—as the heart by affection, sexual love, devotion, &c., கரைய. 5. To be melted, to be in a state of fusion, உருக. 6. (p.) To be cheerful, be glad, மனங்களிக்க. 7. To be excessively enraged, கோபிக்க. 8. v. a. To bury, conceal, hide, புதைக்க.

கிழங்குகனியவெந்தது. The yams are well boiled.

கனிந்தசொல், s. Sweet words.

கனிந்தபழம், s. Ripe fruit.

கனிந்தபாடம், *s.* A well-learnt lesson, verse, &c., well committed to memory.

கனியப்பண்ண, *inf.* To cause to grow tender—as fruits, or the heart. 2. To pacify, conciliate, win over.

கனியப்பழுக்க, *inf.* To ripen to mellowness.

கனியவெந்தஇரும்பு, *s.* Red-hot iron.

கனியவைக்க, *inf.* To force the ripening of fruits.

மனங்கனிய, *inf.* To melt—as the heart, with love, devotion, &c.

அவன்மனதையொருபடிகனியப்பண்ணிப்போட்டாள். She has contrived to gain his affections.

கனிதல், *v. noun.* Vehement anger, பெருங்கோபம். 2. Tenderness, pity, இரங்கல். 3. The act of burying, புதைத்தல். 4. State of being over-ripe, நைதல்.

கனிவு, *v. noun.* Ripeness, maturity, mellowness, lusciousness in fruits, முதிர்வு. 2. Tenderness of mind, softness, melting of heart, இரங்குகை. 3. Connubial love, mutual affection, அன்பு.

கனிவாயிருக்க, *inf.* To be in the enjoyment of mutual happiness, mirth, delight.

கனிகரம், *s.* [*vul.*] Affection, love, அன்பு.

*கனிட்டம்—கனிஷ்டம், *s.* Smallness, சிறுமை. 2. The little finger, கடைவிரல். Wils. p. 186. KANISHTA.

கனிட்டன், *s.* (*plu.* கனிட்டர்.) A younger brother, தம்பி. Wils. p. 186. KANISHTA. 2. An inferior, கீழ்மகன்.

கனிட்டிகை, *s.* The little finger, கடைவிரல்.

*கனிட்டை, *s.* The little finger, கடைவிரல். Wils. p. 186. KANISHTA. 2. A younger sister, பின்பிறந்தாள்.

*கனித்திரம், *s.* A hoe, மண்வெட்டி. Wils. p. 271. KHANITRA. (*p.*)

கனியாமணக்கு, *s.* A species of the ஆமணக்கு shrub. 2. Pawpaw tree, பப்பாமரம், Carica papaya.

கனுக்கு, கிறேன், கனுக்கினேன், வேன், கனுக்க, *v. a.* [*prov.*] To shake the voice in singing, quaver or flourish, குலுக்கியிசைக்க. 2. To reduce the system by disease, by labor; to train, inure, keep closely engaged, employed, &c.; to mature or mollify by training, to cause to grow mellow, by heat, by reiterated pressure, &c., கசக்கப்பண்ண.

என்மனதைநாளுக்குநாள்கனுக்கிப்போட்டான். He has at length got me to consent.

காய்ச்சலவனைநாளுக்குநாள்கனுக்கிப்போட்டது..... The fever has gradually reduced him.

கனுக்குப்பினுக்கென, *inf.* To be overjoyed, மிகக்களிப்பாயிருக்க. 2. To be convivial, அன்பாயிருக்க. 3. To be in a bustle, &c., ஒலிக்குறிப்பு.

கனை, *s.* Sound, roar, resonance, acclamation, ஒலி. 2. Closeness, thickness, செறிவு. 3. Fulness, intensity, நிறைவு. (சது.) (*p.*)

கனைகதிர்ச்செல்வன், *s.* The prince of thick-set rays—the sun, சூரியன். (காசிகா.)

கனையிருள், *s.* Thick darkness. (நன்னூலுரை.)

கனைவரிவண்டு, *s.* A large humming beetle.

கனை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* (*generally used with the impers. terminations.*) To sound, roar—as the sea, a drum, &c., ஒலிக்க. 2. To neigh—as horses; to whinny, bray—as asses; to bellow—as buffaloes; to bleat—as he-goats in rut, குதிரைமுதலியகனைக்க. 3. To make a mock laugh, to hem at one in contempt, or ridicule, கொக்கரிக்க. 4. To sound the fourth letter in each class of Sanscrit letters, கனைத்தொலிக்க.

கனைக்குதல்—கனைத்தல், *v. noun.* The act of sounding, ஒலித்தல். 2. Clamor, ஆரவாரம்.

கனைப்பு, *v. noun.* Sound, roar, ஒலிப்பு. 2. Neighing, braying, bellowing of buffaloes, குதிரைமுதலியவற்றின்கனைப்பு. 3. Laughter, horselaughter, கொக்கரிப்பு.

கன், *s.* The pan of a pair of small scales, சிறுதராசுத்தட்டு. (நன்னூல்.) 2. Work in brass, கன்னார்தொழில். (*p.*)

கன்னத்தட்டு, *s.* [*as* கன்.] The pan or dish of a balance, சிறுதராசுத்தட்டு.

கன்னார், *s.* Braziers, bell-founders, copper-smiths, &c., கஞ்சகாரர்.

கன்பாயாநாடு, *s.* Cambay in the kingdom of Guzerat.

*கன்மடம்—கல்மஷம், *s.* Sin, பாவம். 2. Dirt, foulness, அழுக்கு. 3. Dross, scoria, கறை. 4. Lead, because black, ஈயம். Wils. p. 203. KALMASHA.

*கன்மம், *s.* Moral actions, especially in their effects—as the cause of transmigrations and their accompanying joys and sorrows, pleasure and pains, intelligence or stupidity, &c., சஞ்சிதகன்மம். 2. Actions, செய்தொழில். 3. Evil actions, evil, vice, தீவினை. (See கருமம்.) 4. Fate, destiny, the fruits, retributions, &c., of actions in former births, பிராரத்தகன்மம். Wils. p. 198. KARMMAN. In the Agamas, actions and their effects are of three classes, viz.: 1. ஆகாமியம், moral actions, good and evil of the present life, considered as the source of future births with their suffering and enjoyment. 2. சஞ்சிதம், the accumulated actions of the soul in former births, the retributions of which are to be experienced in future transmigrations. 3. பிராரத்தம் or பிராரத்துவம், the enjoyment and sufferings apportioned to the soul in the present state—as the retributions of actions in former births.

அவனைக்கொல்லாதேகன்மம்பிடிக்கும். Do not kill him, if you do, the action will seize you.

கன்மங்கட்டுப்பட, *inf.* See கருமங்கட்டுப்பட.

கன்மகாண்டம், *s.* A medical book treating of diseases, as caused by the sins of former births, and the means necessary to remove them, so that medicines may prove effectual, ஓர்வைத்தியநூல்.

கன்மசண்டாளன், *s.* See கருமசண்டாளன்.

கன்மசாந்தி, *s.* A ceremony for the expiation of the evil of former deeds, கருமநிவர்த்தி.

கன்மஞ்செய்தகுடி, *s.* A family guilty of wicked actions in former births, now made manifest by their sufferings.

கன்மத்தியாகம், *s.* Expiation of the evil of a former birth.

கன்மத்துரோகி, *s.* A wicked wretch, a criminal, சண்டாளன்.

கன்மநிவர்த்தி—கன்மநிவாரணம், *s.* See கருமநிவர்த்தி.

கன்மந்தொலைய, *inf.* To become extinct, to be worked or eaten out and terminated—as former evil deeds.

கன்மபந்தம், *s.* [*as* கருமபந்தம்.] The bond or connexion between the sins of former births and their subsequent punishment.

கன்மபரிபாகம், *s.* Ripening, or expiration of the accumulated merit of the actions of former births, கன்மவொழிவு.

கன்மபாதகம், *s.* A heinous crime.

கன்மபாதகன், *s.* One guilty of some heinous crime, கொடியபாதகன்.

கன்மபூமி, *s.* The earth as the theatre of moral actions, or place where virtue and vice are practised, and their respective merit and demerit accumulated, பூலோகம்.

கன்மம்பிடிக்க, *inf.* To attend, follow, or pursue—as the guilt of crimes personified.

கன்மம்புசிக்க, *inf.* To experience the good or evil of former actions.

கன்மவலை, *s.* The net of moral actions, கன்மபாசம்; i. e. the entanglements of births, or actions and their result, in subsequent transmigrations.

கன்மவாதனை, *s.* See கருமவேதனை.

கன்மரோகம்—கன்மவியாதி, *s.* See கருமவியாதி.

கன்மவுடம்பு, *s.* Bodies assumed, as a result of former deeds, கன்மசரீரம்.

கன்மாதி, *s.* Funeral rites, &c., for deceased ancestors, கர்மாதி.

கன்மி, *s.* A heinous sinner, a perpetrator of crimes, கருமி.

கன்மேந்திரியம், *s.* The five organs of action, தொழிற்கருவி. See இந்திரியம்.

கன்று, *s.* A calf, colt, &c., the young of the buffalo, cow, mare, camel, bos graven, bos grunniens, elk, deer, and elephant, எருமை, ஒட்டை, கடமை, கவரி, காட்டா, குதிரை, பசு, மரை, மான், யானையிவற்றின்குட்டி. 2. Sapling, a young tree in general, இளமரம். (*c.*) 3. (*p.*) A small thing, a trifle, a particle, அற்பம். 4. A bracelet, கைவளை.

கன்றுந்தாயும், *s.* A cow and calf.

இளமையிற்பயிராக்கப்படும்விருக்ஷத்தின்கன்றுகள். Plants grown up in their youth.

கன்றுகாலி, *s.* Cattle, old and young, of the bovine species.

கன்றுகொல்லி, *s.* A disease in cows causing the death of their calves, மாடுகளுக்குவரும்ஓர்நோய்.

கன்றுக்குட்டி, *s.* [*vul.*] A calf.

கன்றுதாய்ச்சி, *s.* A cow great with young, சூற்பசு.

கன்றுபட, *inf.* To be in calf.

கன்றுபோட—கன்றீன, *inf.* To calve.

கன்றூட்ட, *inf.* [*prov.* கன்றுக்கூட்ட.] To suck, as calves.

கன்றூட்டவிட, *inf.* To let the calf suck after milking, in order to get an increased supply, which otherwise is retained. 2. To allow the calf to suck—the act of the cow.

கடாரிக்கன்று, *s.* A cow-calf.

வாழைக்கன்று, *s.* Plantains, the sucker or shoot, Musa paradisiaca.

சேங்கன்று, *s.* A bull-calf.

மாங்கன்று, *s.* A shoot of the mango tree.

இளங்கன்று, *s.* A young calf.

ஊட்டுகன்று, *s.* A sucking calf.

ஊட்டுமறந்தகன்று, *s.* A weaned calf.

முதுகன்று, *s.* A grown calf.

மான்கன்று, *s.* A fawn.

கன்று, கிறேன், கன்றினேன், வேன், கன்ற, *v. a.* To become sore—as with a blow; as the feet with walking; the hands with first using a tool, &c., காயத்திலூறுகன்ற. 2. To be burnt with the sun, வெயிலிலுலுழ கங்கன்ற. 3. To grow hard and unfit for use—as fruits by injury in their growth—as plantains by the application of too much heat, in smoking or forcing them, வைய. 4. To grow hard and unrelishable—as vegetable curries, through failure of heat in cooking, பதனழிய. (*c.*) 5. (*p.*) To have the feelings wounded, to be aggrieved, விசனப்பட. 6. To be violent, enraged, கடுங்கோபங்கொள்ள.—*Note.* போதல் is commonly joined with the gerund of this verb.

கன்றும்வயவேந்தர். Violent kings that are enraged.

அவன்கைகன்றிப்போயிற்று. His hand is hurt, bruised, &c.

கன்றினகுரல், *s.* Harshness of voice, deep or gutteral voice.

கன்றுகாமம், *s.* Headstrong lusts.

கன்றுசினம், *s.* Violent anger.

கன்றல், *s.* Anger, கடுப்பு. 2. Sign of anger, சினக்குறிப்பு. (*p.*)

கன்றுதல், *v. noun.* The state of being over-ripe, கைதல். 2. Pitying, இரங்கல். 3. Rottenness, பதனழிவு.

கன்றுபுக்கான், *s.* An herb, Commelina communis, *L.* (*Rott.*)

கன்னகம், *s.* An instrument for housebreaking, கன்னக்கோல். (*p.*)

கன்னங்கரியது, *s.* A thing very black, மிகக்கரியது. (*c.*)

கன்னங்கரியர், *appel. n.* Very black people, மிகக்கரியர்.

கன்னங்கரேரென்றிருக்க, *inf.* [*vul.*] To be excessively dark or black, மிகக்கருமையாயிருக்க.

கன்னங்கரேரென்றிருக்கிறவிருள். Pitch darkness.

கன்னங்கரேரென்றிருக்கிறான். He is very dark.

*கன்னடம், *s.* [*impr.* கன்னாடம்.] The Canarese country, ஓர்தேசம். 2. The Canarese language, ஓர்பாஷை. 3. One of the forty-two new Hindu tunes, an evening melody, ஓர்ராகம். Wils. p. 196. KARN'ADA.

கன்னடகவுளம், *s.* A kind of tune, ஓர்ராகம்.

கன்னடியம், *s.* [*prop.* கன்னடம்.] The Canarese language and country.

கன்னடியர், *s.* [*prop.* கன்னடர்.] The Canarese people.

*கன்னம், *s.* Cheeks, கதுப்பு. 2. An instrument for breaking into houses, கன்னக்கோல். (*c.*) 3. (*p.*) Ear, காது. Wils. p. 195. KARN'A. 4. An elephant's ears, யானைச்செவி. 5. Nerves, நரம்பு. 6. Hypothenuse of a right angled triangle, or the diagonal of a tetragon, அக்ஷகன்னம். 7. True distance of a planet from the earth, கிரகமார்க்கவளவு. 8. A goldsmith, பொற்கொல்லன். (சது.) 9. The scale or dish of a balance, தராசுத்தட்டு.

கன்னகடூரம், *s.* Harsh, grating, dissonant sound, uncouth to the ear.

கன்னக்காரன், *s.* A burglar, கன்னமிடுபவன்.

கன்னக்கிரந்தி — கன்னப்புற்று, *s.* A swelling in the cheek from the venereal disease, கன்னத்திலவரும்மேகரோகம்.

கன்னக்கோல், *s.* An implement for breaking through the walls of houses, கன்னகம்.

கன்னக்கோல்வைக்க—கன்னமிட, *inf.* To commit burglary by breaking through a wall.

கன்னசூலை, *s.* A tumor in the region of the cheek, one of the arthritic class of diseases. See சூலை.

கன்னத்தட்டு, *s.* [*as* கன்னம்.] The dish of a balance, நிறைதராசுத்தட்டு.

கன்னத்திலேயடிக்க — கன்னத்திலேயறைய—கன்னத்திற்போட, *inf.* To slap the face, to box the ears.

கன்னபரம்பரைஞானம்—கன்னபாரம்பரியம், *s.* Tradition, oral transmission of intelligence, history, news, meanings, &c., பரம்பரைக்கேள்வியால்வந்தஞானம்.

கன்னபாகம், *s.* The ear, காது.

கன்னபூரம், *s.* A kind of ear-ornament, காதணியிலொன்று. 2. The ear, காது.

கன்னபூஷணம், *s.* Ear-ornaments, காதணி.

கன்னப்பரிசை, *s.* The whiskers or beard on the cheek.

கன்னப்பள்ளம், *s.* The hollow of the cheek.

கன்னப்பிளவை, *s.* A cancer or scirrous affection in the cheek—as கபோலப்பிளவை.

கன்னப்பூ, *s.* A kind of female ear-ornament, காதணியிலொன்று.

காதணி, *s.* An ear-ornament; of this there are sixteen kinds: *viz.*, கடிப்பிணை, கம்பி, கன்னப்பூ, கன்னூசற்கம், குணுக்கு, குண்டலம், குழை, கொட்டை, செவிமலர், தாடங்கம், தூக்கம், தோக்கல், தோடு, மகுரிகை, வல்லிகை, வேடம்.

காதற—காதறுந்துபோக, *inf.* To have the perforated part of the ear cut or torn off.

காதறுக்க, *inf.* To rend the ear by tearing off the ear-rings. 2. To cancel a bond, commonly by mutilating it.

காதறுத்தகூலிகைகொலே. Tearing the ear and getting booty; i.e. doing injustice and getting money.

காதறுப்பான், *s.* A sore that appears round the ear, காதைச்சுற்றிவரும் இரணம்.

காதறை, *s.* One whose ear has been cut off, or mutilated. 2. The cavity of the ear.

காதற்றமுறி, *s.* A cancelled ola bond.

காதார, *adv.* With one's own ear.

காதாரக்கேட்க, *inf.* To hear with one's own ears.

காதாரக்கேட்டசாட்சி, *s.* An ear-witness.

காதிலேசொல்ல, *inf.* To whisper in the ear.

காதிலேயடிபட, *inf.* To be uttered in one's hearing.

காதிலேயோத, *inf.* To whisper in the ear. 2. To initiate a disciple by whispering a மந்திரம் in the ear. 3. To give private advice.

காதிலேவிழ, *inf.* To reach the ears, to be heard.

காதுகடிக்க, *inf.* To whisper, to buzz in the ear.

காதுகுத்த, *inf.* To bore, perforate or pierce the ear.

நீயெனக்குக்காதுகுத்துகிறாயா. Do you pierce my ear? (Do you teach me?)

காதுகுளிர, *inf.* To be gratifying to the ear—as good news, a good voice, sweet music, &c.

காதுகேளாதவன், *s.* A deaf man.

காதுகொடுக்க *inf.* To give ear, to hearken, to listen, to give attention.

என்சொல்லுக்குக்காதுகொடுத்தான். He has given ear to my words.

காதுக்கின்பமான. Pleasing to the ear.

காதுக்குடைச்சல், *s.* An itching, tingling sensation in the ear.

காதுக்குத்து—காதுநோய், *s.* Ear-ache.

காதுக்குறும்பி, *s.* Ear-wax, cerumen.

காதுச்சோணை—காதுத்தண்டு, *s.* The lobe of the ear.

காதுதூர, *inf.* To close the perforation of the ear.

காதுத்துவாரம்—காதுத்துளை, *s.* A perforation or hole in the ear intended for jewels.

காதுப்பூ, *s.* A flower-shaped ear-ornament, for females.

காதுப்பூச்சி, *s.* [*prov.*] A small kind of centipede, said to be very dangerous if it get into the ear, செவிப்பாம்பு.

காதுமடல், *s.* The gristles of the ear, காதின் இதழ்

காதுமந்தம், *s.* Dullness of hearing, காதடைப்பு.

காதுமந்தன், *s.* A person dull of hearing.

காதுமுருந்து, *s.* [*prov.*] The hard gristles of the ear.

காதுவளர்க்க, *inf.* To promote the proper growth of the lobe of the ear for wearing jewels.

காதுவிடாய், *s.* Weakness or lassitude in hearing, occasioned by hunger or sickness.

காதுவெட்ட—காதுநறுக்க—காதுகிள்ள, *inf.* [*prov.*] To tear or nip off the stamped part of an ola bond, or otherwise to mutilate it as an indication of its being cancelled, உடன்படிக்கையின் காதறுக்க.

காதெழுச்சி, *s.* A sore in the ear, காதில் வரும் ஓர்நோய்.

காதைநெறிக்க, *inf.* To prick up the ears.

காதைப்பொத்த, *inf.* To stop the ear.

காதோதி, *s.* A malicious whisperer.

காதோலை, *s.* An ear-ornament, often a rolled ola, colored red; used also to enlarge the perforation, whence the name, காதுக்கிடும் ஓலை.—*Note.* A person is considered naked with nothing in the ear.

இல்லிக்காது, *s.* Ears with the hole very small—opposed to தொள்ளைக்காது.

கீழ்க்காது, *s.* The lower part of the ear.

சோணைக்காது—சோணை பெருத்த காது, *s.* Large ear-laps, not perforated.

தொள்ளைக்காது—வடிகாது—வார்காது, *s.* Ears with the hole much enlarged.

மேற்காது, *s.* The upper part of the ear.

வடிகக்காது, *s.* Large ear-laps artificially made.

காது, கிறேன், காதினேன், வேன், காத, *v. a.* To kill, slay, murder, destroy, கொல்ல. 2. To divide, dissect, compart, கூறுசெய்ய. 3. To cut, தறிக்க. 4. To break, snap, முறிக்க. (*p.*)

காதல், *v. noun.* The act of cutting in pieces, தறித்தல். 2. The act of killing, கொல்லல். 3. The act of breaking, snapping, முறித்தல். 4. *s.* [*as* எதிராப்பு] a peg for driving out nails. (*Rott.*)

காது, *v. noun.* Murder, கொலை. (*p.*)

*காதை, *s.* A story, a narrative, சரித்திரம். 2. Word, message, errand, news, செய்தி. 3. Uttering, declaring, telling, சொல்லுகை. (See கதை.) 4. Killing, murder, கொலை. (*p.*)

காதைகரப்பு, *s.* A stanza so composed, that, beginning with the first letter of the last word, and reading backwards every alternate letter only, a new stanza is formed, மிறைக்கவியிலொன்று. (*p.*)

காத்தவராயன்—காத்தான், *s.* A god or demon, the foster son of Kali, காளியால் வளர்க்கப்பட்டவன்.

*காத்தியாயனம், *s.* One of the thirty-two உபநிடதம். 2. One of the eighteen தருமநூல்.

*காத்தியாயனர், *s.* The name of a celebrated lawgiver and divine sage, ஓர் முனிவன். 2. An appellation of the poet Vararuchi, வரருசி. Wils. p. 209. Katyayana.

*காத்தியாயனி—காத்தியாயினி, *s.* Durga, துர்க்கை. Wils. p. 209. Katyayanee.

காத்திரம், *s.* Displeasure, கோபம். 2. Anger, fury, சினம். 3. The ichneumon, mungoose, கீரி. (சது.)

*காத்திரம், *s.* Body, உடல். 2. A limb, a member, உறுப்பு. 3. The fore-leg of an elephant, யானையின் முன்கால். 4. Thickness, solidity, கனம். 5. Corpulence, பருமம். 6. Importance, consequence, முக்கியம். Wils. p. 287. Gatra.

ஒரு முழவகலத்திலே மூன்று முழ நீளத்திலே நாலு விரல் காத்திரத்திலே ஒரு பலகைவேண்டும். I want a board one cubit broad, three cubits long, and four fingers thick. (*Rott.*)

காத்திரமானகல், *s.* A gem of a large size.

காத்திரமானவன், *s.* A corpulent man. 2. A wealthy man, a man of respectability.

காத்திரன், *s.* A stout, corpulent man, பருத்தவன்.

*காத்திரவேயம்—காத்திரவேயன், *s.* Snake, serpent; also, a serpent of the race that is fabled to live in one of the lower regions, பாம்பு. Wils. p. 209. Kadraveya.

காத்திரி, *s.* The mungoose, கீரி. 2. Weapons, படைக்கலம். (*p.*).

காத்திரை, *s.* Instrument, ஆயுதம்.

காத்தொட்டி—காத்தோட்டி—காத்தட்டி, *s.* A climbing plant, ஆதொண்டை, Capparis horrida, *L.*

*காந்தம், *s.* The magnet, load-stone, magnetic iron-stone, அயக்காந்தம். அரக்குக்காந்தம், உருளைக்காந்தம், ஊசிக்காந்தம், பலகைக்காந்தம், கற்காந்தம், தகட்டுக்காந்தம், are different varieties of magnet. 2. A class of mineral stones—as the சூரியகாந்தம், சந்திரகாந்தம். 3. (*p.*) Beauty, loveliness, agreeableness, அழகு. Wils. p. 209. Kanta. 4. [*in rhetoric.*] eulogy, commendation or praise within proper bounds; one of the ten particulars of the வைதருப்பம் mode of description, வைதருப்பநெறியில் ஒன்று. (தண்டி.)

காந்தமும் ஊசியும்போல். As closely united as the load-stone and the needle.

காந்தக்கல், *s.* The magnet or load-stone, அயக்காந்தம்.

காந்தசத்துரு, *s.* That which counteracts the magnetic power—as blue-vitriol, sal-ammoniac, salt-petre, காந்தத்தின் சத்துருச்சரக்கு.

காந்தபஸ்மம், *s.* Medicinal powders made of load-stone by a chemical process.

காந்தபாஷாணம், *s.* A kind of arsenic.

காந்தப்பெட்டி, *s.* The mariner's or surveyor's compass, திசையறிகருவி.

காந்தமணி, *s.* A magnetic stone, காந்தக்கல்.

காந்தமண், *s.* Red earth, செம்மண்.

காந்தமலை, *s.* A mountain or rock far north, regarded as the centre of attraction to the magnet; the magnetic pole, காந்தக்கன்மலை.

காந்தம்பிடிக்க—காந்தம்வலிக்க, *inf.* To attract—as the magnet.

காந்தஊசி, *s.* The magnetic needle, the steel pointer of the compass, காந்தத்திற் செய்த ஊசி.

*காந்தம்—ஸ்காந்தம், *s.* A purana, the Skanda purana, கந்தப்புராணம்.

*காந்தன், *s.* A king, an emperor, அரசன். 2. A husband, a ruler, a chief, a head-man, தலைவன். 3. A lord, a nobleman, எப்பொருட்குமிறைவன்.

காந்தை, *s.* A wife, mistress, a beloved or lovely woman, காதலி. 2. Woman in general, பெண்.

*காந்தருவர், *s.* Celestial choristers, a class of supernals, கந்தருவர். Wils. p. 288. Gand'harva.

காந்தருவப்புணர்ச்சி, *s.* Sexual intercourse by mutual consent, in anticipation of marriage.

காந்தருவமணம், *s.* Marriage by mutual consent, without the knowledge or consent of relations.

காந்தருவம், *s.* One of the eight kinds of marriage, காந்தருவமணம். (See மணம்.) 2. [*in Hindu philosophy.*] One of the two-hundred and twenty-four புவனம்.

காந்தருவவாதம், *s.* One of the sixty-four கலைஞானம். See கலைஞானம்.

காந்தருவவேதம், *s.* The science of music, a musical composition, கீதசாஸ்திரம்.

காந்தள், *s.* The November-flower plant, கார்த்திகைப்பூ, Gloriosa superba, *L.* 2. [*in love poetry.*] The wearing of the காந்தள் flower by a disappointed lover. (See மடலூர்தல்.) 3. Soap, சவக்காரம். (*M.Dic.*) (*p.*)

காந்தள்போலியகரம். Hands resembling in form the காந்தள் flower.

செங்காந்தள், *s.* The red species of காந்தள்.

வெண்காந்தள், *s.* The white species of காந்தள்.

*காந்தாரம், *s.* The name of a country; Kandahar, between northern India and Persia, ஓர்தேயம். 2. Melody, music, இசைப்பாட்டு. 3. A kind of tune or mode of singing, ஓர்பண். 4. A kind of guitar, குறிஞ்சியாழ்த்திறம். Wils. p. 288. GAND'HARA. 5. Jungle, forest, wood, காடு. Wils. p. 209. KANTARA.

காந்தாரி, *s.* The daughter of the country of Kandahar, the mother of Duryod'hana. 2. (*fig.*) A hard-hearted, cruel woman, கொடியவள்.

காந்தாரிமைந்தன், *s.* Duryod'hana, the son of காந்தாரி.

*காந்தாரி, *s.* One of the ten நாடி veins or nerves, said to extend from the navel to the throat, தசநாடியில் ஒன்று. (சது.) Other authorities say—from சுழிமுனை to the eyes. 2. A tune, ஓர்பண். 3. A kind of salt of a burning and acrid nature, சத்திசாரம்.

காந்தாளம், *s.* [*local.*] Anger, கோபம்.

*காந்தி, *s.* Brightness, lustre, light, glare, ஒளி. 2. Beauty, அழகு. 3. Rays, கிரணம். Wils. p. 209. KANTI. 4. Hotness, heat, உஷ்ணம். 5. Ochre, காவிக்கல். 6. The cat's eye, வைடூரியம். 7. A stone used as a medicine, கிலாசத்து. (*M. Dic.*)

காந்திகொடுக்க, *inf.* To give out lustre, or appear brilliant; to shine, to sparkle.

காந்திகொள்ள, *inf.* To contract heat—as the system from neglect of bathing, from taking hot medicine, &c.

காந்தியதிகமேனி, *s.* Ochre, காவிக்கல்.

காந்தியாயெறிக்க, *inf.* To emit rays of light; to be shining, resplendent, பிரகாசிக்க.

காந்தியானசரீரம், *s.* A body of hot temperament—applied to persons in whose system the bilious humor is predominant.

காந்தியானபூமி, *s.* A hot climate.

காந்தியானமருந்து, *s.* Hot medicines—as sulphur, calomel, &c., from their effects on the system.

காந்தியெறிக்க, *inf.* To strike—as the heat of the sun, &c. 2. To fly to, or affect the head or other part—as ardent spirits, hot medicines, &c.

காந்தியோனி, *s.* A kind of arsenic, ஓர்பாஷாணம்.

காந்துகம், *s.* The white காந்தள் flower. (சது.) (*p.*)

காந்து, கிறேன், காந்தினேன், வேன், காந்த, *v. n.* To shine, give out lustre, emit rays, பிரகாசிக்க. 2. To be scorched, singed, reduced to a cinder, கருகிப்போக. 3. To be heated gently—as a vessel on the fire, காய. 4. To be hot with indignation, to be enkindled, மனம்வேக. 5. To feel hot as the body, by warm weather, fever, or hot medicines, வெப்பமுற. 6. To heat, burn, smart, as a sore, எரிய. 7. To burn with envy, பொறாமைகொள்ள. 8. *v. a.* [*prov.*] To absorb water, rain, &c.—as hot vessels, parched earth, &c., சுவற்ற. 9. To heat, to make hot, சுட. 10. [*prov.*] To bite off, scoop or scrape out with the upper teeth—as a cocoanut, பல்லினாற்கோத.

கண்டுகாந்துகிறாள். She envies one.

விளக்கிலெண்ணெயைக்காந்தியது. The lamp has absorbed the oil.

வயிறுகாந்த, *inf.* To be pinched with hunger.

காந்தல், *v. noun.* Burning, floating flakes of straw, olas, paper, &c.; cinders, ஓலைமுதலியவற்றின காந்தல். 2. Any thing over-dried or scorched by fire, முதிரக்காய்ந்தது. 3. Anger, சினக்குறிப்பு. 4. (*fig.*) Growing grain greatly burnt by the sun, காய்ந்தபயிர்.

காந்தலாய்ப்போக, *inf.* To be reduced to cinders. 2. To be greatly scorched.

காந்தற்சோறு, *s.* Parched, boiled rice.

*காபாலம், *s.* One of the three dances of Siva; the other two being கொடுகொட்டி and பாண்டரங்கம்; சிவன்கூத்து. (*p.*)

காபாலன்—காபாலி, *s.* Siva, சிவன்.

காபாலிகம், *s.* One of the sects of Saivism, சைவமதத்திலொன்று.

காபரா, *s.* (*Hind.*) Disturbance, bustle, confusion, perplexity, சந்தடி.

காபி, *s.* One of the forty-three modern tunes, ஓரிராகம்.

காபிலகாலயூபம், *s.* One of the thirty-two works on architecture, சிற்பநூலில்ஒன்று.

காபினி, *s.* Sal-ammoniac, நவச்சாரம்.

காப்பியம், *s.* [*as* காவியம்.] An epic poem, containing particulars relating to அறம், பொருள், இன்பம், and வீடு, having a hero, and depicting exploits, &c., being of two kinds, the major and minor, viz:—

பெருங்காப்பியம், *s.* An epic poem complete in its parts, especially in அறம், பொருள், இன்பம், வீடு. (தண்டி.)

சிறுகாப்பியம், *s.* An epic poem, deficient in one or more of the four main parts. The name காப்பியம் is generally given to this. (தண்டி.)

காப்பியன், *s.* The planet Venus, சுக்கிரன். (சது.)

காப்பிரி, *s.* A Kaffir, or Negro of Africa. (*c.*)

காப்பிரிக்கோழி, *s.* A fowl with a peculiar kind of feather having a tendency to curl up.

காப்பிரிசல்லாது, *s.* A plant, Endive, Cichorium, *L.*; [*ex* காப்பிரி, *et* சல்லாது, salading.]

காப்பிரிமிளகாய், *s.* A species of cayenne pepper, in pods; the chilly.

காப்பு, *s.* Guard, protection, &c. See under the verb கா.

காமக்கோட்டம், *s.* The name of a town or *Kotam* where the Kurumba tribes once flourished, குறும்பர்கோட்டத்தொன்று.

காமக்கோட்டத்தி — காமக்கோட்டி, *s.* The goddess Parvati, as worshipped in the temple at Kamakotam.

*காமபாலன், *s.* Balab'hatra or Vishnu in his eighth incarnation, பலபத்திரன். Wils. p. 211. KAMAPALA. (*p.*)

காமம், *s.* Town, village, ஊர்; [*ex* கிராமம்.] 2. Habitation, குடி. (சது.)

*காமம், *s.* Amorousness, love of the sexes; sexual desire, ஆசை. 2. Libidinousness, lasciviousness, concupiscence, lust, காமநோய். It is one of the six உட்பகை. 3. Love, desire, அன்பு. 4. Semen virile, வீரியம். Wils. p. 210. KAMA.

காமகமனம், *s.* A lascivious life, காமத்தின்வழியேநடக்கிறநடக்கை.

காமகலிதம், *s.* Emission of semen.

காமக்கவலை, *s.* Lasciviousness. 2. Sexual desire.

காமக்காய்ச்சல், *s.* A venereal fever, Febris alba, chlorosis.

காமக்கிருமி, *s.* [*prov.*] Animalculæ in the female pubic region causing itching, venereal feelings, &c.

காமக்கிழத்தி, *s.* A kept mistress; a concubine, being the daughter of a குலப்பரத்தை.

காமக்குறிப்பு, *s.* Signs of love, amorous gestures.

காமசலம்—காமோதகம், *s.* Semen virorum et mulierum.

காமதேனு, *s.* The fabled cow in the world of the gods which supplies every want, தெய்வப்பசு.

காமத்துப்பால், *s.* The third part of the Cural, which treats of love and its sufferings.

காமத்துப்பாலோர், *s.* The lascivious, தூர்த்தர்.

காமத்துரோகி, *s.* One who hates lasciviousness, an ascetic, காமங்கடிந்தோன்.

காமநாசன், *s.* Siva as the mortifier of passions, சிவன்.

காமநீர், *s.* Semen virile, venereal secretions, venereal humours.

காமநூல், *s.* Erotics—one of the sixty-four கலைஞானம், மதனசாத்திரம்.

காமநோய், *s.* Love-sickness, மதனநோய்.

காமபோகி, *s.* A lascivious person.

காமப்பற்று, *s.* Libidinous propensities, காமவிருப்பு.

காமப்பால், *s.* The third section of the Cural—as காமத்துப்பால்.

காமப்பூ, *s.* A flower which excites venery, மதன காமேசுரப்பூ, Pergularia tomentosa.

காமப்பேய், *s.* A wanton person, காமாதுரன்.

காமப்பைத்தியம், *s.* Love-sickness, fascination and absence of mind from love, காமப்பித்தம்.

காமமரம், *s.* A palm tree, ஓர்மரம், Cycas circinalis.

காமரூபி, *s.* The ஓந்தி lizard, the chameleon, பச்சோந்தி, Lacerta chameleon, *L.* 2. One able to assume any form at pleasure, வேண்டியவுருவங்கொள்பவன்.

காமலீலை, s. Libidinous sporting of the sexes together to excite or gratify sexual desire.

காமவல்லி, s. A plant said to climb the Kalpa tree in the world of Indra, கற்பகத்திற்படர்கொடி.

காமவிகாரம், s. Irregular sexual desires, lasciviousness, lust. 2. Sexual love.

காமவிகாரமாயிருக்க, inf. To be lustful, lecherous.

காமவிகாரன்—காமவிகாரி, s. A lascivious person.

காமவிடாய், s. Vehement sexual desire.

காமவெறி, s. Venereal infatuation.

காமன், s. Kama, the Indian Cupid, மன்மதன். Wils. p. 210. Kama.

காமதகனன், s. Siva, as the burner of Kama, சிவன். (p.)

காமற்காய்ந்தோன், s. Siva, as the consumer of Kama, சிவன். 2. Argha, அருகன்.

காமன்மைத்துனன், s. Ganesa, as the maternal cousin of Kama, விநாயகன்.

காமன்றிருநாள்—காமன்பண்டிகை, s. A festival to Kama, celebrated in some places in March, மன்மதோற்சவம்.

காமாக்கினி, s. The fire of lust, venereal desire, the venereal principle seated and operative in the body, as one of the three fires of the animal system, காமத்தீ. Wils. p. 211. Kamagni.

காமாட்சி—காமாக்ஷி, s. A name of Parvati, as having fascinating eyes, பார்வதி; [ex காமம், et அக்ஷி.]

காமாதுரன், s. (Fem. காமாதுரி.) A libidinous person, காமி. Wils. p. 211. Kamatura.

காமாந்தகன், s. Siva, as the destroyer of Kama, சிவன். 2. A lascivious person, one blinded by love, காமமிக்குடையோன்.

காமாரி, s. Siva, as the enemy of Kama, சிவன். (p.)

காமி—காமியன், s. A lascivious person, a voluptuary, காமாதுரன்.

காமுற, inf. To desire, wish for, விரும்ப. 2. To love sexually, ஆசைப்பட. 3. To lust for, to be lascivious, மோகமுற. (p.)

காமரசி, s. A plant, நெருஞ்சில், Tribulus terrestris, L.

காமரம், s. A fire-place for cooking, அடுப்பு. 2. The thirteenth lunar asterism, அத்தநாள். 3. Songs, singing, இசைப்பாட்டு. 4. Music, melody, இசைப்பொது. 5. A beetle, வண்டு. 6. A grove—as மரக்கா. 7. The aquila tree, அகில். (M. Dic.) 8. Banian tree—as கான்மரம். (p.)

காமரி, s. A plant, புளிநறளை, Cissus vitiginea, L.

காமரீசம், s. A parasitic plant, புல்லுருவி, Loranthus pentandrus, L.

காமர், s. Beauty, அழகு. 2. Ornament, or artificial beauty, அலங்காரம். 3. Great or surpassing beauty, பேரழகு. 4. Brightness, lustre, splendour, ஒளி. 5. Desire—as காமம். (p.)

காமனா, s. A plant, சிறுசிறுங்கு, Plectranthus rugosus. (Nob.)

காமனா, s. A beetle, வண்டு. 2. Long-pepper, திப்பிலி. (p.) See under காமம்.

காமாட்டி, s. (Tel. ..., Brown, p. 216.) A digger of earth, one who works with a spade, &c., மண்வெட்டுவோன். 2. (fig.) A fool, an idiot, மூடன். (c.)

காமாரலகை, s. The top board around the side of a boat, மரக்கலத்திலேருபலகை.

காமாலை—காமாளை, s. A disease characterized by bloatedness of the system, paleness of the skin, general languor, and loss of appetite; jaundice, of which there are several varieties—as ஊது-பித்த-மஞ்சள்-வறட் காமாலை; which see.

காமாலை பிடித்தவன், s. One who has the jaundice.

காமி, s. Fuller's earth, உவர்மண். 2. Gold-colored antimony, பொன்னிமிளை. See under காமம்.

காமி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To desire, விரும்ப. 2. To desire sexually, இச்சிக்க. 3. To lust for, to be lascivious, மோகமுற. (p.)

காமிகம், s. One of the twenty-eight Agamas of the Saivas, சைவாகமத்தொன்று.

*காமியம், s. A thing desired, an object of desire, that which is done for some particular object—as religious ceremonies, &c.—opposed to நிட்காமியம். Wils. p. 212. Kamya. 2. One of the three evil passions, the principle of lust, &c. See காண்மிகம்.

காமியகன்மம், s. Works done to obtain some benefit, பயனை விரும்பிச் செய்யுங் கிரியை.

காமியக்கல், s. One of the nine precious stones, கோமேதகம்.

காமியமரணம், s A voluntary death; suicide by plunging into the Ganges, &c., forbidden to the Brahman, but meritorious in the other castes.

*காமுகர், s. Lascivious persons, gallants, தூர்த்தர். Wils. p. 212. Kamuka. 2. Inhabitants of cities, நகர்வாழ்வோர். (சது.) 3. Fashionable, gay, polite persons; polished people, நாகரீகர்.

காமுருகி, s. A lizard, the blood-sucker, ஓந்தி.

*காம்பிலி, s. Name of a country in northern India; also its capital, ஓர்தேசம். Wils. p. 212. Kampili.

*காம்பீரம்—காம்பீரியம், s. Triumph, exultation, transport of joy, கம்பீரம். 2. Deepness, profundity, depth, ஆழம். 3. Importance, seriousness, முக்கியம்.

காம்பு, s. A foot-stalk, a pedicle, a foot-stem, புஷ்பமுதலியவைகளின் தாள். 2. A handle of a straight kind, a shaft, a haft, கைப்பிடி. 3. Bamboo, மூங்கில். 4. A flower-stalk, a peduncle, மலர்க்கொம்பு. 5. Silk cloth, பட்டுச் சீலை. 6. A kind of gourd, பூசணி, Cucurbita.

காம்பரய—காம்புகிள்ள, inf. To nip off the stalks of vegetables for cooking, &c.

காம்புகால்போர். The wind rushing against the bamboos. (இராமா.)

காம்புச்சத்தகம், s. [prov.] An iron-handled curved knife, used in basket-making, ஒலைவாருகிறகத்தி.

குடைக்காம்பு, s. The handle of an umbrella.

முலைக்காம்பு, s. Teat, nipple of a woman's breast.

*காம்போசம், s. The Kamboja country, ஓர்தேசம். Wils. p. 212. Kamboja. 2. One of the eighteen languages. (See பாஷை.) 3. (Rott.) A tree, Rottleria tinctoria. (Roxb.)

காம்போதி, s. One of the thirty-two kinds of old tunes, ஓரிராகம்.

*காயகம், s. Singing amorous songs, பாடுகை. Wils. p. 288. Gayaka. 2. (fig.) Delusion in love, imaginary belief of the presence of a lover, காமப்பிராந்தி. 3. Libidinous fascination, மோகமயக்கு.

காயகம்பண்ண, inf. To allure, fascinate, excite libidinously.

காயகர், s. Singers, பாடுவோர். Wils. p. 288. Gayaka. 2. Fascinators, libidinous wheedlers, மயக்குவோர்.

காயக்கம், s. Libidinous fascination. See காயகம்.

*காயத்திரி, s. The Gayatri—the most sacred verse of the Vedas, recited mentally as an incantation, ஓர்மந்திரம். 2. (p.) Gayatri, a goddess or personification of the sacred verse, காயத்திரி சுருபியாயிருப்பவள். 3. A name of Sarasvati, சரச்சுவதி. Wils. p. 288. Gayatri. 4. Ebony, கருங்காலி.

பிரமகாயத்திரி, s. The Brahma Gayatri, recited by brahmans of whatever sect, in their daily worship.—Note. The use of this Gayatri was probably established in some remote age when the worship of Brahma was practised. This has long been discontinued except in this form of the Gayatri. It is said to be addressed to the sun. Compare சாவித்திரி.

சிவகாயத்திரி, s. The Siva Gayatri.

காயம், s. Assafœtida, பெருங்காயம். 2. (p.) Ether, the ethereal regions. (See ஆகாயம்.) 3. Pungency, காரிப்பு. 4. Pepper, மிளகு. 5. Onion, வெண்காயம். 6. A composition of vegetable stimulants, given to women after child-birth, காயமருந்து. 7. Condiments, seasonings, கறிக்கிடுங்காயம். 8. (c.) Wound, hurt, bruise, contusion, ஊறு, புண்.

காயக்காரன், s. A wounded person.

காயங்கட்ட, inf. To dress a wound.

காயங்கொடுக்க, inf. To give a stimulating compound to a lying-in woman.

காயப்பட, inf. To be wounded. 2. To be stained, soiled.

காயம்பட்டகுரங்குபோல். Like a wounded monkey.

காயப்படுத்த, inf. To wound. 2. To stain, to taint, to blot, to soil.

அடிக்காயம், s. A wound inflicted by a stroke.

The ஐங்காயம் or five stimulants used as medicines are: 1. பெருங்காயம், assafœtida. 2. மிளகு, pepper. 3. சுக்கு, dry ginger. 4. வெள்ளுள்ளி, garlic. 5. கடுகு, mustard.

சாவுகாயம், s. A mortal wound.

பிழைகாயம், s. A wound that is not mortal.

*காயம், s. The body, உடல். Wils. p. 212. Kaya.

காயகற்பம், s. Medicines for strengthening the body, சரீரத்தைப்பலப்படுத்துமருந்து.

காயசித்தி, *s.* The power of securing the body by magical medicaments against age and its effects—as loss of teeth, gray hairs, decay of mental or corporal powers, &c., சரீரத்தை நெடுநாளிருக்கச்செய்யுஞ் சித்தி. 2. The art of reducing the body to an atom, or enlarging it at pleasure, அணிமாமகிமாசித்தி.

காயசித்திக்கடியான், *s.* Load-stone, காந்தக்கல். (*M. Dic.*)

காயசித்திசுண்ணம், *s.* Crystalized or foliated gypsum used as a medicine, கருப்பூரசிலாசத்து. (*M. Dic.*)

காயசித்தியானோன், *s.* One who has obtained the power of காயசித்தி. 2. A kind of prepared arsenic, குதபாஷாணம். (*M. Dic.*)

காயசித்தியுப்பு, *s.* Urine salt, அமரியுப்பு.

காயத்தையிருத்தி, *s.* Washerman's earth, பூவழலை.

காயத்தையுருக்கி, *s.* Iron ochre, அஸ்திபேதி.

காயப்பெண். *s.* மோகினி who appears in dreams.

காயவேகம், *s.* [*prov.*] Anger, spleen, fretfulness.

காயாபுரி—காயாபுரிபட்டணம், *s.* The body as the tabernacle or dwelling of the soul; also considered a city in miniature.

சூக்ஷமகாயம், *s.* The spiritual and invisible body. See சூக்ஷமதேகம்.

வச்சிரகாயம், *s.* A robust body, indestructible body.

ஸ்தூலகாயம், *s.* The gross material body.

காயலா, *s.* (*Hind.*) Sickness, ill-health, நோய்.

காயல், *s.* A small river or arm of the sea, கழி. 2. The mouth of an ebbing brook, கழிமுகம். 3. Salt-pans, உப்பளம். (*p.*) 4. *v. noun.* A form of காய்தல்.

காயா—காயாமரம், *s.* A shrub or dwarfish tree bearing purple flowers, காசாமரம், Memecylon tinctorium.

காயாம்பூ, *s.* The flowers of the காயா.

காயாம்பூமேனியன், *s.* Vishnu, whose colour resembles that of the காயா flower.

காயிதா, *s.* (*Ar.*) Custom, rule.

காய், *s.* Unripe fruits; fruits, that do not grow mellow by ripening—as grains, nuts, &c., கனிக்காய். 2. (*c.*) A callous tumour, an excrescence, a wart, a corn, a cicatrice from a wound, காய்ப்பு. 3. An unripe boil, &c., காய்ப்பரு. 4. A piece at chess, a die, சொக்கட்டான்காய்.

கட்டியின்னங்காயாயிருக்கிறது. The tumour is not yet ripe.

காயவியல், *s.* A curry carelessly prepared with unripe fruits.

காய்கறி, *s.* Fruits, vegetables and the like for preparing curry.

காய்காய்க்க, *inf.* To form as fruit; to produce fruit, to bear fruit.

காய்காய்க்கிறமரம், *s.* A tree that bears fruit, not a barren tree.

காய்க்கடுக்கன், *s.* [*prov.*] An ear-ring with a sacred seed fastened in it, for a bead, from which, if water fall on the body, in bathing, &c., it is deemed very meritorious, உருத்திராட்சக்கடுக்கன்.

காய்க்குலை, *s.* A bunch of unripe fruits.

காய்ச்சீர், *s.* [*in prosody.*] Any of the four metrical feet ending in காய்; also, a metrical foot equivalent in measure to a foot in காய். See சீர்.

காய்த்தானியம், *s.* The nine kinds of grains, called முதிரை, நவதானியம். 2. A shrub, கம்பளிகொண்டான், Morus Indica.

காய்பறிக்க, *inf.* To pluck unripe fruits

காய்மடி, *s.* The thick, hard udder of a cow unfit for milk.

காய்மடை, *s.* [*prov.*] An offering of fruits, commonly to a ferocious deity, கனிவர்க்கநிவேதனம்.

காய்ம்பனை, *s.* [*prov.*] A fruit-bearing palmyra tree, as distinguished from young trees and males. காய்க்கும்பனை.

காய்வள்ளி, *s.* See வள்ளி.

காய்வெட்டிக்கள், *s.* [*prov.*] Toddy from a Palmyra tree, the young fruits of which are cut off that the juice may flow from the stalk, காயைவெட்டி இறக்குங்கள்.

கருக்காய், *s.* Grain almost ripe.

கருங்காய், *s.* Dark betel-nuts, not yet turned red.

செங்காய், *s.* Fruits or grain turning yellow when ripening.

பசுங்காய்—இளங்காய், *s.* Fruits just formed, tender grain. 2. Immature fruit or grain.

காய், கிறேன், ந்தேன், வேன், காய, *v. n.* To be heated, boiled, cooked, &c., as liquids by fire, நீர்முதலியனகாய. 2. To be warmed, heated, &c., by fire or the sun; to be withered, tanned, &c., slightly—as vegetables by the sun; to become parched—as the lips or mouth; to be dried and hardened—as the ground; to dry, உலர. 3. To warm one's self, to become warm, குளிர்காய. 4. To be hot—as in a fever; to heat—as the fever, சுரங்காய. 5. To shine, to emit rays, பிரகாசிக்க. 6. To be dried—as the humors of the body; to become emaciated, to suffer from hunger, மெலிய. 7. To dry up, to begin to heal—as a sore, a wound, a boil, &c.; to cicatrize, புண்ணுற. 8. To be displeased, indignant, provoked; to show signs of anger, கோபிக்க. 9. To be distressed by love-sickness caused by the moon, the warm season, &c., காமத்தால்சோர. 10. To be furious, சினக்க. 11. *v. a.* To speak sharply; to reprove, scold, reprimand, கடிய. 12. To emit, to shed, to pour forth, கால. 13. To dislike, to offend, வெறுக்க. 14. To cut, sever, வெட்ட. 15. To burn, consume, எரிக்க.

காய்ந்தாருந்தெய்வமுங் கையொத்துநிற்கிறது. The deity sides with my enemy against me.

ஆலங்காய்வெண்மதி. The pale moon emitting poison.

எல்லாருஞ்சும்மாகாய்கிறார்கள். They are all at variance with me for nothing.

தூதுவரைக்காய்ந்தான். He scolded the messengers.

நிலா நன்றாய்க்காய்கிறது. The moon shines very brightly.

மனிதர்மேற் காய்ந்துவிழுகிறான். He falls foul of persons.

காய்ஞ்சுபோக—காய்ந்துபோக, *inf.* To grow dry, become parched.

கறிகாய, *inf.* To boil, or be cooked—as curry.

குளிர்காய—நெருப்பிற்காய, *inf.* To warm one's self at the fire.

சரீரங்காய, *inf.* To be emaciated—as the body, by fever, hunger, labour, journeying, &c.

நிலங்காய, *inf.* To be dry—as the ground after rain.

நிலாக்காய, *inf.* To shine—as the moon; to have moon-light.

வாய்காய, *inf.* To be dry—as the mouth, lips, &c.

வாய்வயிறுகாய, *inf.* To be parched—as the mouth, and heated as the stomach; to suffer with hunger.

வெயில்காய, *inf.* To bask in the sun, to warm one's self in the sun.

வெயில்காய்கின்றது. The sun shines hot.

காய்கை, *v. noun.* Heat, drying, scolding, &c.

காய்ப்பு, *v. noun.* Dislike, displeasure, disgust, வெறுப்பு. (சது.) 2. [*prov.*] Hard, inferior iron, இழிந்த இரும்பு.

காய்வு, *v. noun.* Drying, dryness, காய்கை. 2. Heating, warming with fire or the sun; warmth, heat, நெருப்புமுதலியவற்றிற்காய்கை. 3. Boiling, வெப்பமுறுகை. 4. Withering—as the body; emaciation, மெலிவு. 5. Starving, starvation, பசிவாட்டம். 6. Anger, irritation, indignation, pique, umbrage, கோபம். 7. Shining, ஒளிபெறிக்கை.

காய், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To bear fruit; to yield, produce, form—as fruit, காய்காய்க்க. 2. To form hard bunches, callous parts, knots, warts, excrescence, &c., on the body—as from wounds, walking, using tools, &c., தழும்புண்டாக. 3. To grow callous, காய்ப்புக்காய்க்க.

கைகாய்த்தாற்கமுகுகாய்க்கும். If the hands become callous with watering it, the areca will bear fruit; i. e. constant application will produce the intended result.

நடந்துநடந்து காலெல்லாங் காய்த்துப்போயிற்று.... From continual walking, the feet have grown callous.

தோள்காய்த்துப்போயிற்று. The shoulder is become callous by carrying, &c.

காய்க்கும்பருவம், *s.* The period of yielding fruit. 2. Age of child-bearing.

காய்த்தமரம், *s.* A tree that has borne fruit. 2. A tree loaded with fruit.

காய்த்தமரங்கல்லெறியுண்ணும். Stones will be thrown at the tree which is loaded with fruit; i. e. parents and persons of wealth, influence and responsibility have many causes for vexation.

காய்ப்பு, *v. noun.* Produce of a tree, &c., a crop of fruit or grain, காய்க்கை. 2. Callosity, callousness, thick skin, தடிப்பு. 3. A scar, தழும்பு.

காய்ச்சல், *v. noun.* [*substantively.*] Heat, warmth, dryness, காய்கை. 2. Fever, inflammatory state of the system, சுரம். 3. Enmity, hatred, rancor, பகைமை. (*c.*)

காய்ச்சலாய்க்கிடக்க, *inf.* To have a fever, to be ill of fever.

காய்ச்சலாய்விழ, *inf.* To fall ill of a fever.

காய்ச்சற்கட்டி, *s.* Enlargement of the spleen, after a chronic fever, சுரக்கட்டி.

காய்ச்சற்காரன், *s.* A person with fever, சுரநோயுடையவன்.

அகோரக்காய்ச்சல், *s.* A violent fever.

அச்சரக்காய்ச்சல், *s.* Fever arising from or accompanying the thrush, Aphtha, Febris aphthosa. (*M. Dic.*)

அஸ்திக்காய்ச்சல், *s.* Fever affecting the bones.

உட்காய்ச்சல், *s.* An internal fever, Febris leipyrias or intestinali.

கணைக்காய்ச்சல், *s.* A symptomatic fever, connected with a disease in children called கணம்.

காமக்காய்ச்சல், *s.* A venereal fever, Febris alba, chlorosis.

குளிர்காய்ச்சல், *s.* An ague.

சிலேஷ்மக்காய்ச்சல், *s.* Phlegmatic fever.

சுரக்காய்ச்சல், *s.* A burning fever.

தோஷக்காய்ச்சல், *s.* A malignant fever.

நாவறட்சிக்காய்ச்சல், *s.* A fever which parches the tongue.

பித்தக்காய்ச்சல், *s.* Bilious fever, Febris autumnalis, or biliosa.

பெருவாரிக்காய்ச்சல், *s.* Pestilential fever.

மந்தக்காய்ச்சல், *s.* Fever from indigestion.

முறைக்காய்ச்சல் — மாறற்காய்ச்சல், *s.* A tertian ague, Febris intermittens tertiana, returning after an interval of about forty-eight hours.

வறைக்காய்ச்சல், *s.* Fever attended with great dryness and thirst.

வாதக்காய்ச்சல், *s.* Fever arising from rheumatism.

விடுங்காய்ச்சல், *s.* An intermittent fever, Febris intermittens.

விஷக்காய்ச்சல், *s.* Malignant, dangerous fever.

வைசூரிக்காய்ச்சல், *s.* A variolous or small-pox fever, Febris variolosa.

காய்ச்சு, கிறேன், காய்ச்சினேன், வேன், காய்ச்ச, *v. a.* [*caus. of* காய்.] To boil, prepare by boiling; to cook, காயச்செய்ய. 2. To heat—as iron, &c., by fire, இரும்புமுதலியன காய்ச்ச. 3. To heat—as the sun, கனற்ற. 4. To dry, warm, &c.—as in the sun, or by putting near fire, உலர்த்த. 5. To scold, to reprove, கண்டிக்க. 6. [*prov.*] To dye, to tinge, as a cloth.

துரை அவனை நன்றுய்க் காய்ச்சிப்போட்டார். The magistrate has sharply reprimanded him.

காய்ச்சுக்கட்டி—காய்ச்சுண்டி, *s.* The juice of young betel-nuts inspissated by boiling, and then dried, காசுக்கட்டி. (*c.*) (*Ains.* v. 1, p. 65.)—*Note.* காய்ச்சுக்கட்டி, and காசுக்கட்டி may be from the foreign word Catechu, and not necessarily from காய்ச்சு the Tamil verb. காய்ச்சுண்டி is from the Portuguese, கச்சுண்டி.

காய்ச்சுக்கல், *s.* A dyed or tinged stone, a counterfeit gem.

காய்ச்சுப்பு—காய்ச்சுலவணம், *s.* Salt obtained by boiling down salt water.

காய்ச்சு, *v. noun.* Heating metal, stone &c.; boiling any liquid, இரும்புமுதலியனகாய்ச்சுகை.

இரண்டுதரம்காய்ச்சிப்போட்டான். He has already heated the metal twice.

இரும்புகாய்ச்ச, *inf.* To heat a piece of iron.

கஞ்சிகாய்ச்ச, *inf.* To boil or prepare rice-water.

கஷாயங்காய்ச்ச, *inf.* To prepare a decoction.

காய்ச்சுக்குப்பி, *s.* [*impr. for* காசகுப்பி.] A glass vessel used in sublimation; an alembic, a still, திராவகக்குப்பி. Wils. p. 207. KACHAKUPEE.

காய்மகாரம் — காமகாரம் — காய்மை, *s.* Action under the impulse of selfishness; *hence* envy, jealousy, பொறாமை.

காய்மைகரிக்க, *inf.* To envy.

காய்மைகாரி, *s.* An envious person.

காய்ஞ்சொறி, *s.* A kind of nettle, ஓர்செடி, Tragia involucrata, *L.*

காய்ச்சிரக்கு—காய்ச்சுரை—காய்ச்சுறுக்கு, *s.* A sour herb, புளிச்சற்கீரை.

காட்டுக்காய்ச்சுரை, *s.* Wild sour greens, Hibiscus surattensis, *L.*

காய்வேளை, *s.* See வேளை.

காரகம், *s.* Burning heat of the body, வெப்பம்.

பித்தகாரகம், *s.* Heat caused by bile.

மேககாரகம், *s.* Venereal heat of the body.

*காரகம், *s.* Agency, causality, causation, காரணத்துவம். 2. Means, instrument, expedient, &c., to accomplish an action, கருவி. 3. A doing, an action, செயல். 4. [*in grammar.*] The agent, the subject of a verb, வினைமுதல். 5. The cases of nouns depending in construction on verbs, and not on nouns, வினைகொண்டுவேற்றுமை முடிவது. Wils. p. 213. KARAKA. The six grammatical காரகம் are: 1. கருத்தாகாரகம், nominative case to a verb—as சாத்தன்சேர்ந்தான். 2. கருமகாரகம், objective case, governed by a verb—as சாத்தனைச்சேர்ந்தான். 3. கருவிகாரகம், instrumental ablative, followed by a verb—as வாளால்வெட்டினுன். 4. கோளிக்காரகம், dative case, depending on a verb—as சாத்தனுக்குக்கொடுத்தான். 5. அவதிக்காரகம், ablative of motion—as சாத்தனிற்பிரிந்தான். 6. இடக்காரகம், local ablative—as சாத்தனிடஞ்சென்றுன்.

காரகக்கருவி, *s.* Any of the காரகவேது, in operation, as distinguished from ஞாபகக்கருவி.

காரகத்துணைக்கருவி, *s.* Instruments, &c.—as the wheel of the potter, தொழிற்றுணைக்காரணம்.

காரகநிமித்தக்கருவி, *s.* The agent of an action, செய்கையின்நிமித்தகாரணம்.

காரகமுதற்கருவி, *s.* The proximate cause—as the clay for a pot, செய்கையின்முதற்காரணம்.

காரகவேது, *s.* The three causes in the performance of an action, as காரகக்கருவி. 2. [*in rhetoric.*] Assigning extraordinary causes in accounting for an event; one of the two kinds of ஏதுவலங்காரம், the other being ஞாபகவேது.

காரகன், *s.* [*in grammar.*] The agent, a doer, an operator, செய்பவன். Wils. p. 213. KARAKA.

காரடம்—காரடவித்தை, *s.* (*Tel.* గారడము.) Juggling, tricks.

காரடன், *s.* A juggler, a double-dealer.

காரணம், *s.* A word or appellative derived from the origin of the class, காரணம்பற்றிவருஞ்சொல்—as சைவன், மலையன். 2. A story, a narrative—as காரணச்சொல். (*p.*)

*காரணம், *s.* Cause, origin, source, தோற்றத்துக்கு மூலம். 2. Principle, essential element, மூலம். 3. Instrument or means, கருவி. 4. [*in logic.*] Cause, reason, the ground of an assertion or argument, ஏது. 5. Reason, motive, object, design, purpose, occasion, நோக்கம். Wils. p. 213. KARAṆA. 6. One of the twenty-eight Agamas, ஆகமம் இருபத்தெட்டிலொன்று. According to the *Hindu Philosophy*, காரணம் is three fold, viz.: முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம், முதற்காரணம், material, proximate cause—as clay from which pottery is made, or the primitive Maya out of which the universe was produced. துணைக்காரணம், secondary, instrumental, or co-efficient cause—as the wheel used by a potter, or the Sakti (energy) of the god Siva. நிமித்தகாரணம், the efficient cause or the agent—as the potter, in the manufacture of wares, or the god Siva in the production of worlds.

சர்வத்துக்குமாதிகாரணமானவர். The first cause or creator of all things.

காரணகர்த்தா — காரணகடவுள், *s.* The Supreme Being—the Chief Agent in all things, முதற்கடவுள். 2. Any supposed miracle-working deity, அற்புத கடவுள்.

காரணகாட்சி, *s.* Demonstration "*a priori*", or from an axiom. (*Rott.*) 2. A pleasing and marvellous sight.

காரணகாரியம், *s.* Cause and effect, காரணமுங்காரியமும்.

காரணகுரு, *s.* A guru whose sole object is the spiritual benefit of his disciples, மெய்க்குரு—opposed to காரியகுரு.

காரணக்குறி, *s.* [*in gram.*] Derived names or appellatives, as one of the classes of nouns—opposed to இடுகுறி, காரணப்பெயர். 2. Presage, omen, prognostic, a sign showing beforehand what is to happen, முன்னறிகுறி.

காரணங்காட்ட, *inf.* To affirm a cause, to ascribe or show reasons, ஏதுகாட்ட.

காரணகேவலம், *s.* Absolute unconsciousness of the soul during its involution in காரணமாயை. It is one of the three காரணவஸ்தை.

காரணசகலம், *s.* Conscious state of the soul during its manifestation in the world, and consequent subjection to births and deaths; one of the three காரணவஸ்தை.

காரணசரீரம், *s.* The most subtile embryo of the body, as originally and eternally existing with the soul. (See சரீரத்திரயம்.) In the *Vedantic philosophy*, the original principle of spiritual ignorance, in which the soul is enveloped during the period of its non-absorption in Brahm.

காரணசுத்தம், *s.* Complete liberation from பாசம், and the attainment of perfect purity and happiness; one of the three காரணவஸ்தை.

காரணச்சிறப்புப்பெயர், *s.* [*in grammar.*] Derived names limited in their application—as முடி, a crown, so called because it is put on முடி, the head, ஒன்றற்குரியகாரணப்பெயர்.

காரணச்சொல், *s.* A story, a narrative, கதை. (*p.*) 2. A derived word.

காரணப்பெயர், *s.* [*in grammar.*] Derivative names.

காரணப்பொதுப்பெயர், s. [*in grammar.*] Derived names extending to various classes—as அணி, jewel; so called because it embraces various kinds of jewels, which are worn, பலவற்றிற்குரியகாரணப்பெயர்.

காரணமாயிருக்க, *inf.* To be the author of a thing.

காரணமாயை, s. Maya as the primitive, original substance from which all the manifestations of matter and spirit are evolved, and into which they are again resolved at the destruction of the universe, அதிலொடுக்கும் வித்தானமாயை. See மாயை.

காரணமுகாந்திரம், s. Motive.

காரணவணு, s. According to some *atheistical* schools, primitive or original atoms, by the fortuitous combination of which, the worlds were originated.

காரணவாகுபெயர், s. Names in which the cause is, by way of metonymy, used for the effect—as in திருவாசகம்.

காரணவிசேஷம், s. Chief or principal things. (*p.*)

காரணவிடுகுறி, s. A name which, though given originally as descriptive of a class of objects, is applied to individuals of the class, though destitute of the qualities which it describes—as மறவன், சறுகு.

காரணவிலக்கணை, s. [*in rhetoric.*] Metonymy of a cause for the effect.

காரணவிலக்கு, s. [*in rhetoric.*] Negation of effects from the absence of a cause, ஓரலங்காரம்.

காரணன், s. The first cause, நிமித்தன். 2. The Supreme Being, கடவுள். 3. Any deity supposed to work miracles, அற்புதகடவுள். 4. A king, அரசன். 5. The name of a kind of arsenic, மிருதபாஷாணம்.

காரணாவத்தை—காரணாவஸ்தை, s. The three principal, causative states or அவத்தை of the soul—கேவலம், சகலம் and சுத்தம்—as distinguished from காரியாவத்தை.

காரணானுமானம், s. [*in logic.*] *A priori* reasoning; inference from cause to effect—opposed to காரியானுமானம். (சிவ. சி.)

மூலகாரணம், s. The primeval cause.

மொழிமுதற்காரணம், s. The first principle of a word.

காரணி, s. Parvati, பார்வதி. (*p.*)

காரணிக்கம், s. History, சரித்திரம். 2. [*in Roman Catholic usage.*] Prayers to the Virgin, fifteen in number, alluding to different points in her history.

*காரண்டம்—காரண்டவம், s. The water-crow, நீர்க்காக்கை. Wils. p. 213. Karandava. (*p.*)

காரம், s. Pungency, acrimony, any thing hot or biting, உறைப்பு. 2. An expletive to express the names of the vowels, and of certain compound letters—as அகரம், ஐகாரம், மகாரம். 3. Gold, பொன். 4. The hard or solid part of trees, மரவயிரம்.

காரசாரம், s. Pungency, stimulancy; the quality of being pungent and palatable.

காரசாரமானகறி, s. Hot and palatable curry.

காரசாரமானபுகையிலை, s. Strong tobacco.

காரமான, *adj.* Sharp, pungent, corrosive.

*காரம், s. A caustic; a corrosive of any kind; an escharotic, காரப்புப்பு. 2. Alkali, soda, potash, &c.; impure carbonate of soda, சாம்பலுப்பு. (*Mat. Ind.*) 3. Washerman's lye, lixivium, சீலையழுக்குவாங்குங் காரம். 4. A mordant; an alkaline preparation for fixing colours, சாயமேற்குங்காரம். Wils. p. 263. Kshara. The காரம் are five in number, viz.: சவக்காரம், soap. 2. சீனக்காரம், alum. 3. பொரிகாரம், another kind of alum. 4. வெண்காரம், borax. 5. சாடிக்காரம், lunar caustic. 5. (*p.*) Act, acting, doing, agency, காரியம். 6. A termination denoting action, agency—as உபகாரம். Wils. p. 213. Kara.

காரக்கல், s. A kind of caustic mineral, விஷக்கல்.

காரங்கட்ட, *inf.* To strengthen the blue die by adding other ingredients. 2. To prepare caustics with various ingredients.

காரங்கூட்ட, *inf.* To prepare dyer's lye, காரஞ்சேர்க்க.

காரச்சீலை, s. A corrosive plaster, a blister, புண்ணுக்குப்போடுமொருமருந்துச்சீலை.

காரத்திரி, s. A kind of seton with a corrosive or caustic preparation on it, inserted in an abscess, &c., காரச்சீலைத்திரி.

காரநீர், s. Dyer's lye made of alum, rust, &c., காரமாயசாயநீர்.

காரப்பசை, s. A cement or solder of குன்றிமணி seeds and alum, used by gold or silver smiths, காரமானபசை.

காரம்போட, *inf.* To apply alkali, caustic, &c.

காரம்போட்டுவெளுக்க, *inf.* To whiten cloth, &c., with lye or alkali.

காரம்வைத்துப்புண்ணாக்க, *inf.* To make a sore by applying a corrosive, for reducing a tumour, &c.

காரம்பூச, *inf.* To imbue cloth with alum—as a dyer, that it may retain the colour.

காரலவணம், s. A corrosive preparation.

காரன். As a masculine termination of certain nouns, it means doer, possessor, &c.—as வேலைக்காரன், பணக்காரன்; [*ex* காரம், doing.] 2. s. A kind of prepared arsenic, கௌரிபாஷாணம்.

காரர், s. [*A contraction of* காதரர், *the plural of* காதரன்.] Fearful persons, அச்சமுள்ளோர். (சது.)

காரல், s. A small kind of fish, ஓர்மீன்.

காரவல்லி, s. [*Contraction of* ஏகாரவல்லி.] A kind of plant, a pot-herb, a certain vegetable, பாகல், Momordica charantia, *L.*

*காராக்கிரகம், s. A prison-house, a dungeon, சிறைச்சாலை; [*ex* காரா, prison, *et* கிரகம்.]

காராமணி, s. A kind of lentil or pulse, ஓர்பயறு. (*c.*)

பெருங்காராமணி—சிறுகாராமணி, are different varieties of காராமணி.

*காராமயம், s. The evils of imprisonment, the sufferings of prison, சிறைச்சாலைத்துன்பம்; [காரா prison, *et* ஆமயம்.]

காராம்பசு, s. A fabulous cow in the world of Indra with the face of a woman and the wings of a bird, ஓர் தெய்வப்பசு. 2. A black cow with a black tongue and udder, being considered a superior kind, கரும்பசு.

காராம்பி, s. A basket for irrigation, இறைகூடை. 2. A kind of hydraulic machine, ஓர்சலயந்திரம். (*p.*)

காரி, s. Blackness, கறுப்பு. 2. A kind of black bird. (See கரிக்குருவி.) 3. A crow, காக்கை. 4. The planet Saturn, சனி. 5. Venom, poison, நஞ்சு. 6. Indra, இந்திரன். 7. Eiyanar, ஐயனார். 8. Bhairava, வயிரவன். 9. Worn-out, brackish land, களர்நிலம். 10. A parrot, கிளி. 11. One of the seven men of the third class of liberal kings, கடையேழுவள்ளலிலொருவன். 12. A workshop, தொழில்செய்யிடம். 13. The name of a shrub, ஆவிரை, Cassia auriculata, *L.* (*M. Dic.*) 14. As a feminine termination of certain nouns, காரி means a doer, owner, &c.—as வேலைக்காரி, a female servant.

காரிதாய், s. The mother of Bhairava, வடுகி.

காரிப்பிள்ளை, s. A black bird. See காரி, *supra.*

காரிகம், s. Red ochre, red dye, காவிக்கல்.

காரிகை, s. Beauty, fairness, gracefulness, அழகு. 2. A woman, a lady, பெண். 3. A species of கலிப்பா verse, கலித்துறை. (See பா.) 4. A book on prosody composed in கலித்துறை verse by அமுதசாகரன், ஓர்யாப்புநூல்.

*காரிகை, s. A kind of poetry in Sanscrit, ஓர் ஆரியச்செய்யுள்.

காரிக்கம், s. Unbleached, unprinted new cotton-cloth mostly imported from foreign countries, சலவைசெய்யாத வெள்ளைப்புதுப்புடவை.

காரிக்கூடன், s. A kind of mushroom, ஓர் காளான், Agaric, Boletus ignarius, *L.* (*Mat. Med. Ains.*)

காரிமை, s. A plant, கொடிவேலி, Plumbago, *L.*

காரியக்கடுசு, s. A kind of arsenic in its natural state, சற்பாஷாணம்.

*காரியம், s. Affair, thing, business, concern, matter, subject, occurrence, circumstance, incident, topic, event, transaction, சமயம். 2. An action, operation, a deed, process, செய்கை. 3. Object, purpose, design, விஷயம். 4. Effect, result, product, issue,—as opposed to காரணம், பயன். Wils. p. 215. Karyya. 5. Expediency, fitness, profitableness, இலாபம்.

காரியக்கருமமில்லாதவன். One not concerned about any thing, not troubled with business.

அதனாலுனக்குக்காரியமல்ல, நீயேன்பேசுகிறாய். You have nothing to do with it, why do you speak?

அதுகாரியமல்ல, இதுவே உனக்குக் காரியம். That is not expedient, but this will be profitable for you.

காரணத்தைக்காரியங்காட்டுகிறது. The effect shows or implies the cause.

காரியகேவலம், s. Transient unconsciousness of the living soul during its station in any of the five அவஸ்தை.

காரியசகலம், s. Imperfect knowledge of the living soul during its station in any of the five அவஸ்தை.

காரியசுத்தம், s. Clear and distinct perception of the living soul during its station in any of the five அவஸ்தை.

காரியகர்த்தா, *s.* A maker, an accomplisher—as in educing, sustaining and destroying worlds, &c. 2. An agent, a superintendent.

காரியகாரன், *s.* An agent, a commissioner, காரியம்பார்க்கிறவன். 2. An attorney, an advocate, காரியதுரந்தரன். 3. A man of business, one clever in business, வேலையிலே சாதுரியன்.

காரியகுரு, *s.* A guru who seeks his own interest, whose living is his chief object—opposed to காரணகுரு.

காரியக்கெட்டி, *s.* A man successful in his undertakings, adopting proper means; a business-like man.

காரியசாதகம், *s.* Perseverance in an undertaking, காரியத்தில்முயலுகை. 2. Accomplishing an object, காரியசித்தி. Wils. p. 215. KARYASAD'HKA.

காரியசாதனம், *s.* Means of effecting an object; instruments, implements, aid, காரியத்தைமுற்றுவிக்கும் ஏது.

காரியசித்தி, *s.* Success in an undertaking, accomplishment, காரியங்கைகூடுகை.

காரியதரிசி, *s.* Secretary, superintendent, manager, காரியத்தலைவன்.

காரியத்தலைவன், *s.* A superintendent, a manager.

காரியதுரந்தரன் — காரியஸ்தன், *s.* A competent manager, superintendent, agent, one who conducts business, காரியத்தில்வல்லவன்.

காரியத்தடை, *s.* An impediment or obstacle to business, கருமவிடையூறு.

காரியத்தவறு, *s.* Failure in a business, வேலைத்தவறு. 2. Ill success, கைகூடாமை.

காரியத்தாழ்ச்சி, *s.* Ill success, கைகூடாமை. 2. Loss, காரியநஷ்டம்.

காரியத்தாழ்ச்சிவராமற்பார்க்க, *inf.* To see that there be no failure of success.

காரியத்துக்குத்தக்கதாய்ப்பேச, *inf.* To speak as the nature of a thing requires.

காரியத்துக்குவர, *inf.* To answer the purpose; to be expedient, profitable; to be prosperous.

காரியநிருவாகி, *s.* A manager, a superintendent, an advocate.

காரியபாகம், *s.* Good management, frugality, economy, judicious or prudent direction.

காரியபேதம், *s.* Disappointment in an affair, காரியம்வேறுபடுகை.

காரியப்பட, *inf.* To be effected; to be produced, wrought or operated on, காரியமுண்டாக. 2. To succeed, to avail, கைகூட.

காரியப்படுத்த, *inf.* To effect, to accomplish, காரியமுடிக்க. 2. To transact, to manage, காரியநடத்த.

காரியப்பாடு, *v. noun.* Effect, result, production.

காரியப்பிழை. Failure in an undertaking, காரியவழு. 2. Ill success, கைகூடாமை.

காரியப்பொறுப்பு. Responsibility.

காரியாகாரியம், *s.* What is and what is not the matter. 2. Circumstances, affairs.

காரியமாயிருக்க, *inf.* To be busy; to be useful.

காரியமாய்ப்பேச, *inf.* To speak of a thing as important.

காரியமாய்ப்போக, *inf.* To go on an errand.

காரியமானபேச்சு, *s.* Important conversation; a speech well adapted to the occasion.

காரியமுடிக்க, *inf.* To accomplish, to execute.

காரியமுடிப்பு, *s.* The sum and substance of a business, an affair, &c.

காரியமுடிய, *inf.* To be accomplished—as an object; to terminate—as one's life, &c.

காரியம்பலிக்க, *inf.* To succeed, காரியஞ்சித்திக்க.

காரியம்பார்க்க, *inf.* To do a business, to manage a business.

காரியம்பெற, *inf.* To attain one's object.

காரியம்பேதிக்க, *inf.* To change or alter—as an affair. 2. To be thwarted.

காரியவாகுபெயர், *s.* Names in which the effect is, by metonymy, used for the cause, as in அலங்காரம்.

காரியவிசாரணை, *s.* Superintendence, supervision.

காரியவிரோதம், *s.* Opposition in an undertaking, rivalry.

காரியவிலக்கணை, *s.* [*in rhetoric.*] Metonymy of an effect for the cause.

காரியவிலக்கு, *s.* [*in rhetoric.*] The negation of a thing or event by the nonexistence of the effect, &c., or by the presence of contrary effects, ஓரலங்காரம்.

காரியாவத்தை — காரியாவஸ்தை, *s.* Subordinate, minor states or அவத்தை of the living soul, being five in காரியகேவலம், five in காரியசகலம், and five in காரியசுத்தம், and thus constituting fifteen காரியாவத்தை. (சிவப்.)

காரியானுமானம், *s.* [*in logic.*] *A posteriori* reasoning; inference from effect to cause—opposed to காரணானுமானம். (சிவ. சி.)

காரிரத்தம்—காருன்னி, *s.* A plant, ஆடுதின்னாப்பாலை, Aristolochia, *L.*

*காருகபத்தியம், *s.* One of the three sacred fires—that which is maintained by the householder as received from his father and transmitted to his descendants or successors, from which fire is taken for sacrificial purposes, வேதாக்கினி மூன்றிலொன்று. See தீ. Wils. p. 288. GARHAPATYA.

*காருகம், *s.* Manufacture, the act of manufacturing silk or cotton cloth, the process of preparing cotton or silk; spinning and weaving, நெய்யுந்தொழில். 2. Menial service, servile labour or toil—as carrying burdens, &c., கைங்கரியமானவேலை. 3. A form of religion—the worship of fire, அக்கினியைவணங்குஞ்சமயம்.

காருகத்தொழில்—காருகவினை, *s.* Manufacture, spinning, weaving, நெய்தற்றொழில். 2. The work or employment of weavers. 3. Menial service, toil, கைங்கரியவேலை.

காருகர், *s.* Weavers, நெய்வோர். 2. Sculptors, painters, artists, ஓவியர்.

காருச்சிவல். *s.* Sponge, கடற்பாசி. (*M. Dic.*)

காருடம், *s.* The plant மருக்காரை. 2. A kind of gourd, கறிப்புடோல். (*M. Dic.*) 3. Juggling, *erroneously* for காரடம்.

காருடவித்தை, *s.* Legerdemain, *properly*, காரடவித்தை.

காருடன், *s.* [*prop.* காரடன்.] A juggler.

*காருடம்—காரூடம், *s.* Charms, incantations, &c., against poison (addressed to Garuda); one of the sixty-four கலைஞானம். Wils. p. 288. GARUDA. 2. The Garuda Purana, one of the eighteen, பதினெண்புராணத்தொன்று. 3. One of the thirty-two உபநிடதம், ௩௨. உபநிடதங்களுளொன்று. (*p.*)

*காருணியம் — காருண்ணியம், *s.* Grace, mercy, compassion, கிருபை; [*ex* கருணை.] Wils. p. 214. KARUNYA.

காருணிகன், *s.* A kind, benevolent person.

காருணியப்பிரயோசனம், *s.* The blessings of divine grace.

காருண்ணியன், *s.* A kind, benevolent person.

குடுமி, *s.* Men's hair, ஆண்மயிர். 2. A man's single lock of hair, tied in a knot and never shaven off, சிகை. 3. The crown of the head, உச்சி. 4. The summit of a mountain, மலையுச்சி. 5. Victory, success, வெற்றி. 6. [*prov.*] The corner pin of a door fitted into a hole or cavity in the sill, thereby serving the purpose of a hinge, கதவின்குடுமி. 7. The handle of a plough, மேழிக்குடுமி. 8. [*vul.*] A snake-catcher, and dealer in antidotes for the bite of snakes, பாம்புபிடிப்பவன்.

குடுமிமுடிய, *inf.* To tie the hair in a knot.

குடுமிவாங்க, *inf.* To shave off one's hair-lock; i. e. to divest one of office, power, &c.

உச்சிக்குடுமி, *s.* A lock or tuft on the crown of the head.

முன்குடுமி, *s.* A lock nearer the fore-head.

பின்குடுமி, *s.* A lock on the hinder part of the head.

கன்னக்குடுமி, *s.* [*prov.*] Side lock of hair.

குடுமிக்கதவு, *s.* A door or shutter that turns with a pin at the upper and lower corners.

குடுமிதட்டுதல், *v. noun.* Beating the tuft of hair—as a preliminary of quarrelling, contending, &c. 2. [*prov.*] Striking off the top of a measure of grain, தானிய அளவிற்றலைவழித்தல்.

கீழ்க்குடுமி, *s.* The lower pin of a door.

மேற்குடுமி, *s.* The upper pin of a door.

குடுமிப்பருந்து—குடுமியன், *s.* [*prov.*] The crested kite, ஓர்வகைப்பருந்து.

*குடும்பம், *s.* A family, including the man, his wife, his sons and his sons' wives, ஒருகுடியிலுள்ளார். 2. Relations, kindred, connexions, உறவின்முறையார். 3. Race, family, house, குடி. Wils. p. 226. KUT'UMBA.

குடும்பங்கலைக்க, *inf.* To divide or scatter a family by sowing dissension, &c.

குடும்பசம்ரக்ஷணை, *s.* The maintenance of a family; the act of providing for and preserving a family.

குடும்பத்தானம், *s.* The sign next to the rising sign at the moment of one's birth, portending good or evil, wealth or otherwise, to the family, according to the character of the signs, &c. See தானம்.

குடும்பபாரம், *s.* The burden and responsibility of a family.

குடும்பபாரஞ்சுமக்க, *inf.* To support a large family.

குடும்பப்பிரதிட்டை, *s.* The founding of a family.

குடும்பமாயிருக்கிறவன், *s.* One with a large family.

குடும்பவழிசோற்பத்தி, *s.* Lineage, generation by families.

*குடும்பி, *s.* A householder, the father of a large family, குடும்பத்தலைவன். Wils. p. 226. KUT'UMBI.

*குடும்பினி, *s.* The wife of a householder, a mistress, a matron, the mother of a family, குடும்பத்தலைவி. Wils. p. 226. KUT'UMBINEE.

குடும்பன், *s.* (*fem.* குடும்பி.) The title of a chief among the Paller people, பள்ளர்தலைவன்.

குடும்பு, *s.* A bunch or cluster of fruits, flowers, &c., பூமுதலியவற்றின்கொத்து. (நிக.)

குடுவை, *s.* A small earthen pot, சிறுகலசம்.

குடை, *s.* Umbrella, parasol; canopy—as one of the twenty-one symbols of royalty and victory, ஆதபத்திரம். 2. The knob of a sandal, பாதகுறட்டின்குமிழ். 3. A tree with very large thorns, the குடைவேல், Mimosa, *L.* 4. The dance of Skanda, குமாரனடல்.

குடைகவிக்க—குடைபிடிக்க, *inf.* To bear an umbrella.

குடைக்காம்பு, *s.* See under காம்பு.

குடைக்காரன், *s.* An umbrella-bearer.

குடைநிழற்ற, *inf.* To afford shade—as an umbrella.

குடைக்காளான், *s.* A kind of mushroom, ஓர்காளான்.

குடைக்கொள்ள, *inf.* [*prov.*] To rise in a body—as milk over the fire, as some cakes in frying, &c. 2. To rise or be puffed up—as a cloth, &c. 3. To capsize, to be upset—as a cart.

குடைச்செவி, *s.* Ears pricked up and bent forward—as those of an elephant, tiger, horse, &c., in attack, surprise, or rage, குடைக்காது.

குடைப்பனை, *s.* Talipot Fan-palm, தாலபத்திரப்பனை, Corypha umberaculifera, *L.*

குடையாணி, *s.* A pin or nail with a round head—as distinguished from சடையாணி.

வெண்கொற்றக்குடை, *s.* The white canopy of royalty—as a symbol of victory.

குடை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. a.* To scoop; to work out a hollow; to bore a tube—as a turner, கடைய. 2. To perforate or form holes—as beetles in wood, துளைக்க. 3. To work in flowers, to gather honey, pollen, &c.—as insects, தாதுகுடைய. 4. To wash, bathe in water; *lit.* to scoop out tank, குளிக்க. 5. To produce a tingling pain or itching in the body, ears, &c.; to work or gnaw—as worms; to cause smarting, &c.—as caustic on a sore, சொவுபடுத்த. 6. (*fig.*) To annoy, to cause great grief, heart-breaking, மனதைவருத்த.

குடைந்தெடுக்க, *inf.* To excavate, to scoop out.

குடைந்துபோட, *inf.* To eat—as a canker. 2. To scoop out; to hollow; to excavate.

குடைந்துகொண்டிருக்க, *inf.* To ache in the limbs or bones. 2. To gnaw, corrode; to eat by degrees.

குடைகரி, *s.* A concave piece of charcoal for melting very small piece of gold or silver.

குடைவண்டு, *s.* Perforating beetles, துர்வண்டு.

காதுகுடைய—காதைக்குடைய, *inf.* To clear the ears of wax. 2. To have itching or tingling pain in the ears.

நீர்குடைய-சுனைகுடைய, *inf.* To bathe. (*p.*)

குடைதல், *v. noun.* Excavation, தோண்டல். 2. A washing, குளித்தல்.

குடைவு, *s.* Hollow, a cavity, குகை. 2. *v. noun.* Excavation, &c.

குடைச்சல், *v. noun.* [*prop.* குடைதல்.] Pain imagined to resemble scooping.

கைகால்குடைச்சல், *v. noun.* Pain in the arms and legs.

சூலைக்குடைச்சல், *v. noun.* Pains in certain arthritical diseases.

குடைக்கிழங்கு, *s.* A plant, சிற்றரத்தை, Alpinia galanga minor.

குடைப்புல், *s.* A kind of grass, ஓர் புல், Andropogon barbatum.

குடோரி, *s.* A slit, scarification, கீற்று. 2. [*in medicine.*] Scarifying the skin of the skull and inserting a mercurial or other medical pill, over which is placed a pot of live coals, in cases of syncope, coma, epilepsy, &c., in order to revive suspended animation, மருந்துக்குடோரி. (*Sans. Kuttara, cutting.*) 3. Lead ore, வங்கமணல். 4. Borax, வெங்காரம். 5. Mercurius sublimatus, வெள்ளைப்பாஷாணம். (*M. Dic.*)

குடோரிபண்ண—குடோரியாட - குடோரியிட—குடோரிவைக்க, *inf.* To perform the குடோரி operation of healing.

குட்டம், *s.* Depth; hollow, hole, ஆழம். 2. [*a change of* குண்டம்.] A tank, or pond, குளம். 3. One of the twelve districts in which vulgar, unpolished Tamil is spoken, கொடுந்தமிழ் நாட்டிலொன்று. 4. A plant, கோட்டம், Costus, *L.* 5. [*a change of* குள்ளம்.] The condition or state of being small, little, young, சிறுமை.

குட்டக்குறடு, *s.* [*prov.*] A kind of brazier's pincers, சிறுகுறடு.

*குட்டம்—குஷ்டம், *s.* Leprosy in general, embracing many kinds, தொழுநோய். Wils. p. 236. Kusht'a.

குட்டக்கரப்பன், *s.* A white scabby eruption or scurf spreading over the whole surface of the body.

*குட்டநாசனம், *s.* White mustard, வெண்கடுகு. Wils. p. 236. Kusht'anasana.

குட்டம்பிடிக்க, *inf.* To come on—as the leprosy; to be afflicted with leprosy. 2. To be covered with a scabby eruption.

குட்டம்பிடித்தவன்—குட்டரோகி—குட்டன், *s.* A leper.

நீர்க்குட்டம், *s.* Watery leprosy.

வெண்குட்டம், *s.* The white leprosy.

*குட்டாரி, *s.* A hill or mountain, மலை. (சது.) Wils. p. 227. Kut't'ara.

குட்டன், *s.* An infant, a babe, குழந்தை. 2. A son, மகன். 3. A kid or lamb, ஆட்டுக்குட்டி; [*ex* குட்டம், little.]

குட்டான், *s.* [*prov.*] A little ola-case, basket or sheath, of various forms and uses, சிறுஓலைப்பெட்டி; [*ex* குட்டம், little.]

குட்டான்கட்ட, *inf.* To tie a basket round a fruit to defend it from birds, &c.

கிலுகிலுப்பைக்குட்டான், *s.* A basket-rattle for children.

சுண்ணாம்புக்குட்டான், *s.* A toddy-man's chunam-basket.

பனங்கட்டிக்குட்டான், *s.* A small jaggery-basket.

பிடியரிசிக்குட்டான், *s.* A deep, little ola-basket in which handfuls of rice are daily deposited for the temple, or for other charitable purposes.

பூக்குட்டான், *s.* A small kind of cocoa-leaf flower-basket.

குட்டி, *s.* The young of elephants, horses, asses, goats, sheep, dogs, jackals, cats, swine, tigers, lions, bears, deers, elks, hares, monkeys, snakes, alligators, ichneumons, sloths, armadillos, sharks, &c.; also, the young of plantain-trees, and sometimes (*local*) the young of mango-trees, margosa-trees, cocoanut-trees, and jack-trees, ஆடுமுதலியவற்றின்குட்டி. 2. A little girl, சிறுபெண்பிள்ளை. 3. A child, in fondness, *especially* the youngest, குழந்தை. 4. [*in gambling.*] An additional coin or seed set down as a stake by a person who hits a wrong seed, coin, &c., ஓர்விளையாட்டில் அதிகமாகக்கட்டுங்காசு. 5. [*prov.*] An additional sum claimed or allowed on a debt—as a share of the net profit, &c., ஆதாயம்; [*ex* குட்டம், little.]

குட்டிக்கழுதை, *s.* A young ass.

குட்டிக்கரடி, *s.* The whelp of a bear.

குட்டியாடு, *s.* A kid, a lamb.

குட்டியாடுகொழுத்தாலும்வழுவழுப்புத்தீராது...... Though a kid fattens, its lubricious quality does not cease; though a youth perform notable actions, they are commonly imperfect.

குட்டிபோட, *inf.* To bring forth—as brutes; to calve, to cub, to whelp, to foal, to kitten, to lamb, to litter, குட்டியீன. 2. [*prov.*] To put down a forfeited seed or coin in gambling at stakes to be played for, விளையாட்டிலதிகபந்தயமிறுக்க.

குட்டியிட, *inf.* To bring forth—as cats, dogs and bears.

குட்டியுண்டாயிருக்க, *inf.* To be big with young—as brutes.

குட்டிக்காளங்கெளிறு, *s.* A young காளங்கெளிறு fish.

குட்டிக்கிழங்கு, *s.* Small esculent roots growing about a large one, சிறியகிழங்கு.

குட்டித்தக்காளி, *s.* A kind of Physalis angulata, சிறுதக்காளி.

குட்டிப்பலா, *s.* A small jack-tree. 2. A species of jack-tree.

குட்டிவிளா, *s.* A kind of tree, ஓர்விளாமரம். 2. A shrub.

குட்டித்தாய்ச்சி, *s.* [*vul.*] A pregnant animal.

குட்டியப்பன், *s.* The father's younger brother, சிறியதகப்பன்.

குட்டிச்சாத்தன், *s.* (*fem.* குட்டிச்சாத்தி.) An elf, imp, a little goblin, invoked in performing juggling tricks, குறளி.

குட்டிச்சாத்திக்காரன், *s.* An enchanter, sorcerer; one who is supposed to have power over a familiar spirit.

குட்டிப்பல், *s.* An extra or dwarf tooth.

குட்டிவிரல், *s.* A sixth or extra finger or toe, smaller than the proper size, ஐந்திற்கதிகமானவிரல்.

குட்டிச்சுவர், *s.* A short piece of wall adjoining a large building, சிறுசுவர். 2. (*fig.*) A worthless fellow, மடையன்.

காரியங்குட்டிச்சுவராய்ப்போயிற்று. The thing has dwindled away, is come to nought.

குட்டிக்கம்பு, *s.* A small stick which children use in play.

குட்டிக்கொக்கான், *s.* [*prov.*] A kind of play with pebbles, ஓர்விளையாட்டு.

குட்டிபடல், *v. noun.* [*prov.*] Striking a wrong coin or seed in games. 2. Becoming pregnant—as a sheep, goat, or dog, சினைப்படல்.

குட்டியடிக்க, *s.* [*prov.*] To strike another coin, or seed than the one indicated.

குட்டிவைக்க, *inf.* [*prov.*] To hit the wrong coin, &c.—as குட்டியடிக்க. 2. To forfeit a coin, seed, &c., in gambling.

*குட்டிமம், *s.* Ground smoothed and plastered; floor plastered or paved, பதித்தபூமி. Wils. p. 227. Kut't'ima.

*குட்டியம், *s.* A wall, சுவர். Wils. p. 227. Kud'hya.

குட்டியிடுக்கி, *s.* A plant, சிற்றரத்தை, Alpinia galanga-minor, *L.* (*M. Dic.*) 2. A plant, கோட்டம், Costus, *L.* 3. A kind of grass or weed in rice fields, பயிருடன் முளைக்குமோர்புல்.

குட்டினம், *s.* A plant, கருஞ்சீரகம், Nigella sativa. (*M. Dic.*)

*குட்டினி, *s.* A short hump-backed, mischievous woman; one who sows discord, வசவி. 2. A bawd, a procuress, சக்கம்வாக்குபவள். Wils. p. 227. Kut't'inee.

குட்டு, *s.* Honor, மானம். (*Rott.*)

குட்டு, கிறேன், குட்டினேன், வேன், குட்ட, *v. a.* To cuff on the head, தலையிற்குட்ட. 2 (*fig.*) To cheat, overcome by fraud, எத்த.

குட்டுப்பட்டாலும் மோதிரக்கையிலேபட வேண்டும். If cuffed at all, let it be with a jeweled hand; i. e. reproof from a worthy character is profitable.

வியாபாரத்திலேயவனைக்குட்டிப்போட்டார்கள்..... They have injured him in traffic.

காகம்வந்துதலையிலேகுட்டிப்போட்டது. The crow has cuffed him on his head.

காகக்குட்டிவிளையாடுகிறார்கள். The boys play crow-cuffing (a play in imitation of the cuffing of crows).

குட்டிக்கும்பிட, *inf.* To cuff the head, three times or more, and then raise the hands closed in worship.

குட்டு, *v. noun.* A blow with the fist on the head; a buffet, a cuff, தலையிற்குட்டுங்குட்டு.

குட்டுண்ண, *inf.* To be buffeted, cuffed, குட்டுப்பட.

குட்டுணி, *s.* An untractable, shameless fellow, cuffed about by every one, குட்டுண்பவன்.

குட்டல், *v. noun.* The act of cuffing.

குட்டுவன், *s.* A king of the ancient Séra dynasty. See சேரன்.

குட்டை, s. Shortness, dwarfishness—as of a person, குள்ளம். 2. A pool or pond, சிறுகுளம். 3. A handkerchief, a small shawl, கைக்குட்டை. 4. [*prov.*] Stocks, either for the legs, or the hands, தொழுமரம். 5. A white scabby eruption, considered contagious, ஓர்குட்டரோகம்.

குட்டையன், s. (*fem.* குட்டைச்சி.) A short man. 2. A person affected with the குட்டை eruption.

குட்டையாக்க, *inf.* To cut short, to curtail.

குட்டையாயிருக்க, *inf.* To be short.

குட்டைபோட — குட்டைமாட்ட, *inf.* To put in the stocks.

குட்டைபிடிக்க, *inf.* To be covered with the குட்டை eruption.

குணகண்டி, s. A winding plant, சிவதை, Convolvulus, *L.*

*குணகம், s. [*in arith.*] The multiplier, பெருக்குந்தொகை. Wils. p. 291. GUN'AKA.

*குணகாங்கியம், s. A work on Sanscrit grammar, ஓர்ஆரியநூல்.

*குணகாரம், s. (*Sans. Gun'ahara.*) Multiplication, பெருக்குக்கணக்கு.

குணாகு, s. [*a change of Sans. Kun'apu.*] A devil, a goblin, பிசாசம்.

குணக்கு, s. Crookedness, flexture, curvature, கோணல்; [*ex* குட, crooked.] 2. Thwartness, opposition, thwarting, எதிரிடை. 3. The east, கிழக்கு.—*Note.* In the last sense, the word becomes குண to convey an adjective signification—as in குணகடல், குணதிசை, குணகாடு.

குணக்குப்பண்ண, *inf.* To thwart an undertaking; to cause difficulties in business, to throw obstacles in the way.

குணக்கெடுக்க, *inf.* To straighten a crooked thing.

நாயின்வாலைக் குணக்கெடுக்கலாமா. Is it possible to divest a dog's tail of its curl?

குணக—குணங்க, *inf. v. n.* To become bent or crooked, வளைய. 2. To sink, faint, fade, droop, சோர. 3. To be dejected; to feel uneasy; to be vexed, மனங்தளர.

குணக்க, *inf. v. a.* To bend, to incurvate, வளைக்க.

குணகோளார்த்தம், s. Eastern hemisphere; [*ex* கோளம், sphere, *et* அர்த்தம், half.]

குணட்டு, s. [*prov.*] Ear of corn. See கிளுட்டு.

குணட்டு, கிறது, குணட்டினது, ம், குணட்ட, *v. n.* [*prov.*] To wanton, to wheedle, to speak amorously—as a courtezan, மயக்கிப்பேச. 2. To whine in jest; to speak saucily—as petted children, செல்லக்கொஞ்ச. 3. To caper about—as a dog, துள்ளிவிளையாட.

*குணபம், s. A dead body, a corpse, a carcass, பிணம். Wils. p. 227. KUN'APA. 2. A goblin or ogre, supposed to haunt cemeteries, and animate dead bodies, பிசாசம். (*p.*)

குணபவுணர், s. Rakshas, பிசிதவுணர்.

குணபாசி, s. [*prop.* குணபாசி.] A spirit, an imp, a goblin, பிசாசம்; [*ex* குணபம், *et* அச, eating, carcass-eater.]

குணபலம், s. A medicinal root, used for dysentery, அதிவிடையம்.

*குணம், s. Quality, attribute, property, பண்பு. 2. Disposition, temper, nature, தன்மை. 3. Good quality, moral or physical; proper temperament, virtue, நற்குணம். 4. Attribute, perfection, excellence—as of a deity, இலட்சணம். 5. Grace, beauty—as of a style or composition; merit, freedom from fault or defect—opposed to குற்றம், மேன்மை. 6. Wholesomeness, healthfulness, சுகம். 7. Soundness of intellect; normal state of the mental feelings, சொஸ்தபுத்தி. 8. Indication, symptoms—as of a disease, வியாதியின்குறி. 9. Color—as a quality, நிறம். 10. Smoothness, சிக்கை. 11. Properties; functional powers or principles in nature, operative in all sentient beings; the sources of the disposition, &c., தத்துவம். 12. Thread, cord, string, &c., நூல், கயிறு. 13. A bow-string, நாணி. 14. Property of a thing—as proved by experiments; primitive, constitutional property, essence, original principle, சத்து. 15. [*in physics.*] Varieties, functional variations, products of bodies, உடற்குணம். Wils. p. 291. GUN'A. 16. A water-pot, a pitcher—as குடம்.

குணத்தைமாற்றக் குருவில்லை. No guru can change the temper.

குணத்தோடேகேள். Hear me with a right spirit and patience.

குணநாடிக்குற்றமுநாடி. Having examined the excellencies and faults—as of a style, a speech, &c.

குணமதுகைவிடேல். Hold to what is good and proper; cease not to show a good disposition.

குணமென்னுங்குன்றேறிநின்றார்வெகுளிகணமேயுங்காத்தலரிது. It is hard to divert, even for a moment, the anger of those who stand upon the mountain of virtue; i. e. who excel in virtue. (குறள்.)

அதிலுமிதுகுணம். This is better than that.

அவனுக்குத்தாய்தகப்பன்குணம்பிடிபடுகிறது. His parents' disposition and temper begin to be visible in him.

குணகுணி, s. [*in gram. and log.*] Attribute and subject—as in செந்தாமரை, where செம்மை is the attribute, குணம், and தாமரை the subject, குணி.

குணகுணிப்பெயர்கள், s. [*in gram.*] Abstract noun and subjective noun. (நன்.)

குணக்குன் — குணகுருன், s. A pleasant, good-natured, agreeable person; one of an excellent disposition, நற்குணமுள்ளவன். Wils. p. 291. GUN'AG'N'A.

குணக்குன்று, s. A virtuous man; *lit.* a mountain of excellent qualities.

குணக்கேடு, s. Bad temper, bad disposition; disobliging, unkind, கெட்டகுணம். 2. Fatal symptoms in diseases, அசாத்தியக்குறி.

குணக்கேடன் — குணங்கெட்டவன் — குணமில்லாதவன், s. An ill-natured person.

குணங்காட்ட, *inf.* To exhibit natural characteristic qualities, dispositions or propensities. 2. To betray symptoms—as diseases; to indicate good or bad weather—as seasons. 3. To betray mean descent, low caste, &c., by mean behavior.

குணங்குறி, s. Disposition, features, characteristics, குணமுங்குறியும்.

குணங்குறியறிய, *inf.* To know one's disposition and character.

குணங்குறியுள்ளவன், s. A man of good disposition, and other good characteristics.

குணசந்தி, s. [*in gram.*] A form of combining words of Sanscrit origin—as சுர and இந்திரன், make சுரேந்திரன், வடமொழிச்சந்தியிலொன்று.

குணசாலி, s. A good-natured man or woman; one of an excellent disposition.

குணசீலன், s. One abounding in excellent qualities.

குணசுபாவம்—குணப்பிரகிருதி, s. Natural disposition.

குணஷேடை, s. Delinquency, defect, flaw, குணதோஷம். 2. Difficulty, trouble, தொந்தரை.

குணத்தன்மை, s. [*in rhet.*] Description of qualities, one of the four subdivisions of தன்மையலங்காரம்.

குணத்திரயம், s. The three properties in nature—purity, passion and darkness. Wils. p. 291. GUN'ATTRAYA. See முக்குணம்.

குணத்துக்குவர, *inf.* To grow better, to amend, to reform. 2. To recover from illness. 3. To be reconciled, இணங்க.

குணத்தொகை, s. See பண்புத்தொகை.

குணத்தொனி, s. The twang or sound of a bow-string.

குணநிதி, s. A benevolent, kind person, நற்குணநிறைந்தவன். 2. The Deity, கடவுள்.

குணபத்திரன், s. The Deity, கடவுள். 2. The name of the preceptor and guru of மண்டலவன் the author of Nighandu. 3. Argha, அருகன்.

குணபேதம், s. Change of disposition for the worse, degeneracy, குணவேற்றுமை. 2. Unfavorable symptoms in a disease, வியாதிவேற்றுமைக்குணம். 3. Abnormal state of the mental powers—as idiocy, insanity, &c.; derangement, மாறுபாடான குணம்.

அவன்குணம்பேதித்திருக்கிறது. He is changed for the worse.

குணப்பட, *inf.* To come to a right state, temper, disposition, &c.; to be changed for the better, to become tractable, docile, சீர்ப்பட. 2. To recover from sickness, to get well, சுகமடைய. 3. To improve—as crops, &c., to recover strength, to grow, to thrive, திறப்பட. 4. To reform, to amend in morals, to improve in disposition, character or habits, நடைதிருந்த. 5 [*in Christian usage.*] To be converted, to repent, to be penitent, மனந்திரும்ப.

குணப்படுத்த, *inf. v. a.* To improve, to make better, to correct, to reform, to restore to a good state, to health, &c.; to remedy, சீர்திருத்த. 2. To convert, மனந்திரும்பச்செய்ய.

குணப்பட்டவன், s. [*in Christian usage.*] One who has repented; a convert.

குணப்பண்பு, s. [*in gram.*] Sensible qualities of objects—as bitterness, whiteness—as distinguished from குறிப்புப்பண்பு, ideal quality, and தொழிற்பண்பு, acting quality. See பண்பு.

குணப்பிழை, s. Ill nature, bad temper or disposition, குணக்கேடு. 2. Ill success, பயனின்மை. 3. Unfavorable signs in disease, &c., அசாத்தியம்.

குணப்பெயர், s. [in gram.] Names of qualities; abstract nouns; denotative nouns signifying attributes only—as கருமை, அழகு—opposed to குணிப்பெயர்; பண்புப்பெயர். 2. Names either concrete or connotating, derived from abstract nouns—as கரியன், அழகன்.

குணமணி, s. One of an excellent disposition.

குணமறிய, inf. To know one's disposition. 2. To understand or ascertain the symptoms of a disease.

குணமாக்க, inf. v. a. To cure, heal; to restore to health. 2. To reform, to amend, to correct.

குணமாயிருக்க, inf. To be whole, well, sound; to be well-conditioned. 2. To be gratifying, pleasing, palatable.

குணம்மாற, inf. To change—as temper, disposition, character, symptoms, either for the better or worse.

குணமுங்குற்றமும், s. Good and bad, virtues and vices, beauties and defects, commendation and censure, &c.

குணமுடையவன்—குணமுள்ளவன், s. A kind-hearted, good-natured, generous man. 2. A well-bred man.

குணமுற்றவன், s. A good-natured man. குணமுற்றவன் மணமுற்றவன்; குணமற்றவன் மணமற்றவன். A good-natured man will be praised; but an ill-natured man, despised.

குணரத்நாகரன், s. One whose benevolence is like the sea; [ex இரத்நாகரம்.]

குணவதி, s. A very good-natured person. Wils. p. 292. Gun'avati.

குணவந்தன்—குணவான், s. A well-disposed person; one of a good disposition.

குணவவநுதி, s. [in rhet.] A kind of அவநுதி figure, in which a property or quality universally predicated of an object is apparently denied, by affirming the opposite, either ironically or ambiguously.

குணவாகடம்—குணபாடம், s. A treatise on the signs and symptoms of diseases, ஓர்வைத்தியநூல்.

குணவாகுபெயர், s. [in gram.] Names of qualities or attributes, used by metonymy for objects possessing those qualities or attributes—as in நீலஞ்சூடினன்.

குணவாக்கு, s. Peculiar temper or habit.

குணவிலக்கு, s. [in rhet.] Negation of a property or quality in a person or thing from the presence of its opposite, ஓரலங்காரம்.

குணவுவமம்—குணவுவமை, s. [in rhet.] A species of simile; similitude of qualities and properties. See பண்புவமை.

குணன், s. A man of good qualities, generally found in compounds—as in அறுகுணன், சற்குணன்.

குணாதீதம், s. Freedom from all properties, குணங்கடந்திருக்கை.

குணாதீதன், s. God, He who is above all attributes; He whose attributes and perfections transcend our comprehension, கடவுள். Wils. p. 292. Gun'atee'ta.

குணாலயன், s. The deity—as the seat and source of all perfections, கடவுள்.

இனியகுணம், s. A pleasant temper or disposition.

நிர்க்குணன், s. The deity—as void of all properties, கடவுள். Wils. p. 474. Nirgun'a.

சத்துவகுணம், s. The first of the three principles, or properties in nature. 2. Nobleness of mind; magnanimity. 3. The exalted disposition of an ascetic's mind by which he disdains worldly delights, greatness, honors, &c.

சற்குணம்—சுகுணம்—நற்குணம், s. A good disposition, kindness, benevolence, virtue.

சற்குணன்—சற்குணி, s. A virtuous person; a good-natured person.

சாத்தியகுணம், s. [in medi.] The condition or state of being curable; favorable symptoms; hopeful case.

குணி, s. One endowed with good qualities, a good-tempered person, நற்குணமுடையான். 2. [in gram.] A subject, any thing which possesses attributes or qualities—as distinguished from குணம்; also, the names of such things, பண்பி. 3. [ex குணம், bow-string.] A bow, வில். (சது.)

குணிப்பெயர், s. [in gram.] Concrete or subjective noun; a denotative name which signifies a subject only and not an attribute or quality—as மனிதன், தாமரை—opposed to குணப்பெயர்.

துர்க்குணம்—தீக்குணம், s. Bad disposition, ill-nature, vice.

நாய்க்குணம், s. Doggedness, rudeness, cynicalness.

பேய்க்குணம், s. Devilishness, foolishness.

மழைக்குணம், s. Sign or appearance of rain.

நாற்குணம், s. The four prevalent or prominent human qualities. These are subdivided, and four are ascribed to each sex. I. ஆடூஉக்குணம், the masculine: 1. அறிவு, knowledge, intelligence, clear perception. 2. நிறை, equanimity, self-control. 3. ஓர்ப்பு, fortitude, firmness, decision. 4. கடைப்பிடி, confidence, full persuasion, perseverance. II. மகடூஉக்குணம், the feminine: 1. நாணம், shyness, coyness, bashfulness—with regard to the other sex. 2. மடம், simplicity, weakness of intellect, want of clear perception. 3. அச்சம், timidity, fear, diffidence. 4. பயிர்ப்பு, delicacy; modesty; shrinking from what is mean or vile.

முக்குணம், s. The three principles in nature, *Satva*, *Raja*, and *Tama*, which are the ultimate source of all quality or character in man, and may be indefinitely developed and expanded. The more generic and prominent development is three-fold, making nine *gunas*. *Satva-guna*—goodness, produces illumination and mildness in thought, word and deed. Operating in these directions, it becomes an "unfailing and perfect light to the soul, arousing it and making it ready to eat the fruit of its own doings." *Raja-guna*—passion, produces for the soul the propensity to excessive occupation in thought, word and deed, and asperity in the same. By these means it prepares the soul to receive pleasure and pain, according to its *karmma* or the law of its fate. *Tama-guna* brings forth arrogance, that egotistic *guna* which says "there is none like me," &c., and wilfulness or depraved will. By these means it welcomes all sensual objects and brings them to the soul. The first stage in the soul's spiritual progress is a degree of self-knowledge by which it has a view of these *gunas* and its relations to them. To each of these *gunas* belong certain peculiar qualifications. I. சத்துவகுணம் or சாத்துவிகம். 1st. ஞானம், wisdom. 2d. அருள், grace. 3d. தவம், penance. 4th. பொறை, patience. 5th. வாய்மை, veracity. 6th. மேன்மை, greatness, excellence. 7th. மௌனம், silence, taciturnity. 8th. ஐம்பொறியடக்கல், restraint of the five senses. The *Satva* principle is the source of truth, and the predominance of it renders its possessor virtuous, gentle, devout, charitable, chaste, honest, &c. II. இராசகுணம் or இராசதம். 1st. மனவூக்கம், mental exertion. 2d. ஞானம், discretion. 3d. வீரம், fortitude. 4th. தவம், penance. 5th. தருமம், charity. 6th. தானம், liberality. 7th. கல்வி, erudition. 8th. கேள்வி, inquiry, instruction. The *Raja* principle is the source of sensual desire, worldly covetousness, pride and falsehood, and is the cause of pain. III. தமகுணம் or தாமதம். 1st. பேருண்டி, rioting or banqueting. 2d. நெடுந்துயில், long sleep. 3d. சோம்பு, sluggishness. 4th. நீதிவழு, deviation from justice. 5th. ஒழுக்கவழு, deviation from virtue. 6th. வஞ்சம், deceit. 7th. மறதி, forgetfulness. 8th. பொய், lying, falsehood. 9th. கோபம், anger. 10th. காமம், lust, lasciviousness. 11th. கொலை, murder. The *Tama* principle is the source of folly, ignorance, mental blindness, worldly delusion, &c.—*Note.* These three *gunas*, according to the Agama school, are developed from Prakruti (மூலப்பிரகிருதி,) and constitute all those physical and psychical aspects, which, under the determining power of the will, form the functional qualities of an organized soul. (சிவ-சி.) In the Vedantic, idealist philosophy, the *gunas* are the ideal attributes of Mula-Prakruti which, in its turn, is but an illusion or mistaken representation of Brahm.

அறுகுணம்—இச்சுரன்முக்கியகுணம், s. The principal attributes of Isvara or God are six in number. 1. சர்வஞ்ஞத்துவம், omniscience. 2. சர்வேசுரத்துவம், supremacy. 3. சர்வநியந்திருத்துவம், pre-ordination. 4. சர்வாந்தரியாமித்துவம், omnipresence. 5. சர்வகற்பிதத்துவம், unlimited creative power. 6. சர்வசத்தித்துவம், almightiness. (சது.) Another enumeration is—1. தன்வயத்தனாதல், self-existence. 2. முதலிலனாதல், eternity. 3. உடம்பிலனாதல், immateriality. 4. எல்லாநலமுளனாதல், benevolence. 5. எங்கும்வியாபகனாதல், omnipresence. 6. எவற்றிற்குங்காரணனாதல், being the Creator of all things.—*Note.* The latter enumeration is found in Roman Catholic writings.

எண்குணம், s. The eight attributes of the deity. Authors differ in their enumerations and definitions of them. The enumeration of பரிமேலழகர், the commentator of the Cural, as agreeing with the Agamas, is:—1. தன்வயத்தனாதல், self-existence, independence. 2. தூயவுடம்பினனாதல், immaculateness. 3. இயற்கையுணர்வினனாதல், intuitive wisdom. 4. முற்றுமுணர்தல், omniscience. 5. இயல்பாகவே பாசங்களினீங்கிநிற்றல், freedom from the snares and illusions to which a derived intelligence is exposed. 6. பேரருளுடைமை, unbounded

kindness. 7. முடிவிலாற்றலுடைமை, omnipotence. 8. வரம்பிலின்பமுடைமை, infinite happiness. Another enumeration, as given in Jaina books, is—1. கடையிலாஞானம், infinite wisdom. 2. கடையிலாக்காட்சி, omniscience. 3. கடையிலாவீரியம், omnipotence. 4. கடையிலாவின்பம், boundless happiness. 5. நாமமின்மை, being nameless. 6. கோத்திரமின்மை, without descent. 7. ஆயுவின்மை, without age; eternal. 8. அந்தராயமின்மை, unobstructed.

குணலி, *s.* A plant, சிந்தில், Menispermum, *L.* (*M. Dic.*)

குணலை, *s.* A warrior's shout of triumph, joy, valor, or defiance, வீரகோஷத்தாற்கொக்கரிக்கை. 2. (*Sans. Gun'ani.*) A dance with shouting, ஜர்க்கூத்து.

குணலைக்கூத்தாட, *inf.* To dance with shouting.

குணலையிட, *inf.* To shout, கொக்கரிக்க. 2. To shout with dancing, கூத்தாட.

*குணனம், *s.* [*in arith.*] Multiplication, பெருக்கல். 2. Description, enumeration, விவரம். Wils. p. 291. GUN'ANA.

*குணனீயம், *s.* [*in arith.*] Multiplicand, பெருக்கப்படும்தொகை. Wils. p. 291. GUN'ANEEYA.

குணும்பு, *s.* Merry sayings, drollery, idle jokes, கோமாளம்.

குணும்பு, கிறேன், குணும்பினேன், வேன், குணும்ப, *v. n.* To speak officiously, to insult, to taunt, to use invective, irony, sarcasm, &c., பகிடிபேச.

குணும்பி, *v.* A ludicrous, comical, droll fellow; a buffoon.

குணுலை, *s.* Dance with shouts—as குணலை.

*குணி, *s.* A lame person, a cripple, முடவன். (நிக.) Wils. p. 227. KUN'Y. See under குணம்.

குணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* (*from Sans. Gun'a, multiply.*) To multiply, எண்பெருக்க. 2. To estimate, to calculate, to compute, to reckon in general, கணிக்க. 3. To conjecture, to guess, உத்தேசிக்க.

குணித்தறிகோடி. You can compute and find it. (*p.*)

கிரகணங்குணிக்க, *inf.* [*local.*] To calculate eclipses.

குணித்தல், *v. noun.* The act of estimating, valuation, மதித்தல். 2. Multiplication, எண்பெருக்கல்.

குணிப்பு, *v. noun.* Estimation; conjecture on some ground or data; supposition, நினைப்பு.

குணிப்பானபொருள். The best thing or subject.

குணிப்புக்குமுப்பதுகாணும். At a guess there may be thirty.

குணிப்பானவன், *s.* A respectable person.

*குணிதம், *s.* [*in arith.*] The product, பெருக்கிக்கண்டபலம். 2. Times, turns, fold, மடங்கு. Wils. p. 292. GUN'ITA.

இருநாற்குணிதப்பட்டழுங்கும். It will suffer eight times as much. (சிவதன்மோ.)

குணில், *s.* A drum-stick, பறையடிக்குந்தடி. 2. A short stick or cudgel, குறுந்தடி. 3. Sling, கவண். (*p.*) (*from Sans. Kun'a, sounding &c.*)

குணு, *s.* A worm, a maggot, புழு. (சது.)

குணுகுணெனல்-குணுகுணுக்க-குணுகுணுத்துப்பேச, *inf.* To utter nasal sounds, ஒலிக்குறிப்பு. 2. (*p.*) To whine, complain; to mutter, to grumble, முணுமுணெனல்.

குணுகுணென்று பேசுகிறான். He speaks through his nose.

குணுக்கு, *s.* An ear-ornament for females, மாதர்காதணியிலொன்று. 2. A ring of lead or brass suspended in the ears to enlarge the perforation, குதம்பை. 3. Lead for a fish-net, வலையில்தொடுத்திருக்குமீயக்குண்டு. 4. (*M. Dic.*) Silver, வெள்ளி.

குணுக்குத்தடி, *s.* A club or a heavy stick with an iron ferrule.

குணுங்கர், *s.* The base, the vile, low castes, சண்டாளர். 2. Workers in skin, dressers of leather, தோல்வினைஞர். 3. (சது.) Drummers, தோற்கருவியாளர்.

குணுங்கு, *s.* A devil, an imp, பிசாசம்.

*குண்டகன், *s.* A son born in adultery, the son of a woman by another man while the husband is living, சோரபுத்திரன். Wils. p. 228. KUN'D'AHA.

குண்டக்கிரியம்—குண்டக்கிரியை, *s.* A kind of tune, one of the thirty-two new tunes of the Hindus, ஓரிராகம்.

குண்டணி, *s.* [*vul.*] Backbiting, slander, calumny, குறளை.

குண்டணிக்காரன், *s.* Calumniator.

குண்டணிசொல்ல, *inf.* To backbite.

*குண்டம், *s.* A small pot, குடுவை. 2. A large pot, பானை. 3. A pool, well, &c., especially consecrated to some sacred purpose or person, குளம். 4. A deep hole, a pit, குழி. 5. A hole in the ground for receiving or preserving sacrificial fire, &c., ஓமகுதவியகுண்டம். Wils. p. 228. KUN'D'A.

குண்டமண்டலம், *s.* The mystic diagram about the sacred hole in the சிவபூசைவித்தி instruction, &c.

குண்டம்பாய—குண்டம்மிதிக்க, *inf.* To walk on fire—as persons under the influence of religious frenzy, in fulfilment of a vow, &c.

யாககுண்டம்—வேள்விக்குண்டம், *s.* A hole for sacrificial fire.

குண்டவண்டன், *s.* [*prov.*] A short, thick person.

குண்டோதரன், *s.* A short Bhuta with a large round belly in the army of Siva, பூதகணத்திலொன்று. 2. [*in burlesque.*] A great-bellied glutton, பெருந்தீனிக்காரன்.

குண்டோதரன்போலிருக்க, *inf.* To be full-fed, stuffed up; to have one's lap full.

குண்டலகேசி, *s.* An epic poem, being one of the five ancient classic poems in Tamil, ஓரிலக்கியநூல். See under காவியம்.

*குண்டலம், *s.* A kind of ear-ring, குழை. Wils. p. 228. KUN'D'ALA. 2. A ring, a circle, வட்டம். 3. Sky, the heavens, வானம். 4. Atmosphere; ether, ஆகாயம். (சது.)

குண்டலக்கடுக்கன், *s.* Large ear-rings.

குண்டலந்தரிக்க—குண்டலமணிய, *inf.* To put on the குண்டலம் ear-rings.

குண்டலன், *s.* Balapatra, wearing one ring, பலபத்திரன். 2. One who wears the குண்டலம் ear-rings, குண்டலந்தரித்தவன்.

*குண்டலி, *s.* A snake, பாம்பு. 2. A thorny kind of shrub, சிந்தில், Menispermum glabrum, *L.* 3. The posteriors, மூலாதாரம் 4. Kali, a form of Durga, காளி. 5. The mystic ஓம். Wils. p. 228. KUN'D'ALI. 6. A thorny shrub, இசங்கு.

குண்டலிசத்தி, *s.* Sakti, a form of Durga—as குண்டலி. 2. The goddess of the posteriors.

குண்டனி, *s.* A short, crooked and wicked woman, வசவி. (சது.)

குண்டன், *s.* [*local.*] A son born in adultery—as குண்டகன், 2. A slave, அடிமை.

குண்டாணிக்கொடி — குந்தாணிக்கொடி, *s.* A winding plant, ஓர்கொடி, Ipomœa bracteata, *L.*

*குண்டா, *s.* (*Tel.*) A shallowish water-pot with a small mouth, பானை. (*Sans. Kun'd'a.*)

குண்டாச்சட்டி, *s.* An earthen pan with a large mouth.

குண்டான், *s.* [*prov.*] An earthen pot of a particular size, ஒருவிதபானை. (*Sans. Kun'd'a.*)

குண்டான்சட்டி. *s.* An earthen pan with a broad mouth.

குண்டி, *s.* The buttocks, backside, fundament, seat, rump of an animal; any rump-like protuberance, ஆசனபக்கம். 2. The kidney, சிறுக்கம். 3. The heart, இருதயம். 4. The roe or spawn of a fish, மீன்சினை. 5. The lower end of fruits, nuts, &c.; that opposite the stalk, பழத்தின்கீழ்ப்புறம்.

குண்டிகழுவ, *inf.* To wash after passing excrements.

குண்டிகழுவாதவர்கள், *s.* Those who do not wash themselves; a term of reproach given to Europeans—the practice being regarded as filthy.

குண்டிக்காய், *s.* Kidneys, சிறுக்கம்.

குண்டிக்குப்பின்னேபேச, *inf.* To backbite, to speak ill of one behind his back; *low, and in anger.*

குண்டிக்கொழுப்பு, *s.* Pride, wantonness, arrogance, sauciness, insolence.

குண்டிச்சீலையைப்போட்டுக்கடக்க, *inf.* [*prov.*] To take an oath by stepping over the cloth taken from the waist; as practised by the lower castes.

குண்டிமண்ணைத்தட்டிவிட்டோட, *inf.* [*prov.*] To leave, renounce or desert a person, thing, &c.; *lit.* to wipe off the dust of the buttocks and run away, விட்டுவிட. 2. To outwit, to out-scheme, to out-do another in cheating, &c., தந்திரத்திலேவெல்ல.

குண்டியடிபடவிழ, *inf.* To fall on the buttocks from a height.

குண்டியும்வாயும்பொத்த, *inf.* To stand in great awe of a person; to be much afraid; *lit.* to stop the mouth by one hand and put the other behind to save a kick, &c.

குண்டியெலும்பு, *s.* The os sacrum, ஆசனவெலும்பு.

குண்டிவற்ற, *s. inf.* [*prov.*] To be reduced as the mettle, arrogance; *lit.* the buttocks to be dry, பெருமையடங்க.

*குண்டிகை, s. The student's or ascetic's water-pot, கமண்டலம். Wils. p. 228. KUN'D'IKA.

குண்டியம், s. Slander, குறளை. 2. Exposure of secrets, இரகசியங்களைத்தூற்றல். 3. (Rott.) Falsehood, lying, பொய்.

குண்டில், s. A small field or lot, சிறுசெய். 2. The back, முதுகு.

குண்டிலேற, inf. [prov.] To ride on another's back—as in certain plays among boys.

*குண்டினம்—குண்டினபுரம், s. The city of Damayantee (தமயந்தி), the heroine of நைடதம்; the modern Condavir, ஓர்நகரம். Wils. p. 228. KUN'D'INA.

குண்டு, s. A ball of stone, wood or metal; any thing globular and heavy, திரண்டவடிவு. 2. A cannon-ball, a bullet, &c., பீரங்கிக்குண்டு. 3. A bolus of bang or other narcotic drug, கஞ்சாமுதலியவற்றிற்செய்ததிரளை. 4. Depth; deep water, ஆழம். 5. A sinking in, a hollow; lowness, தாழ்வு. 6. A stone, or the testicles of beasts, விதை. 7. A stallion, குண்டுக்குதிரை. 8. [prov.] A small field or lot—as குண்டில், சிறுசெய்.

குண்டாய்த்திரட்ட, inf. To make globular, or round as a ball.

குண்டடித்தல், v. noun. Playing with cannon-balls; a play among young men. 2. Taking bang.

குண்டுபட, inf. To be wounded with a ball.

குண்டுக்காயம், s. A gun-shot wound.

குண்டுபோட, inf. To fire a ball from a cannon. 2. To fire a cannon.

குண்டுபோட்டுச்சுட, inf. To fire with a ball.

பீரங்கிக்குண்டு, s. Cannon-ball.

விடிகுண்டு, s. Morning-gun.

வெடிகுண்டு, s. A bomb.

குண்டுக்குழல் — குண்டுக்குழாய், s. A small cannon. 2. A kind of blunder-buss, a gun for bullets, a fusee.

குண்டுக்கிராமம், s. A village within gun-shot.

குண்டுப்பொலிஸ், s. Town-police, whose authority extends to places within gun-shot.

குண்டுங்குழியுமாயிருக்க, inf. To be uneven.

குண்டுமருந்து, s. Bullet and gun-powder.

குண்டுச்சம்பா — குண்டைச்சம்பா, s. A kind of round paddy, சொரிகுறும்பை நெல்.

குண்டுரோசனை — குண்டோசனை, s. An odoriferous root, growing in circular masses, used as a drug, ஓர்மருந்துக்கிழங்கு.

குண்டுச்சுழி, s. The crescent-like prefix, ெ, used in certain compound characters —as in கெ, கொ.

குண்டூசி, s. A pin; lit. needle with a round head.

குண்டெழுத்து, s. A full, round hand.

குண்டெழுத்தாணி, s. A style with a knob at the top, as a weight to assist the writer.

குண்டுக்கட்டு, v. noun. Binding one's neck and heels like a ball.

குண்டுப்பிணையல், v. noun. [prov.] A kind of hinge.

குண்டுக்குதிரை, s. A stallion—as குண்டு.

குண்டுக்கழுதை, s. A he-ass.

குண்டுக்காளை, s. [local.] A fat, stone bullock.

குண்டுச்சட்டி, s. A deep, earthen vessel for the kitchen. 2. A kind of chatty-pan.

குண்டுவட்டில், s. A deep dish of brass, tin, &c.

குண்டடியன், s. A male panther; a leopard.

குண்டேறு, s. A kind of fish, ஓர்மீன்.

*குண்டு, s. [a change of குண்டம்.] A pool, a basin of water, நீர்த்தடாகம். 2. A pit, a hole in the ground, குழி.

குண்டை, s. A bull, an ox, எருது. 2. Taurus of the zodiac, இடபவிராசி. 3. [prov.] An earthen-pot, a chatty, சட்டி. 4. The நளை creeper.

இடதுகுண்டை, s. The near-ox, the ox on the left side.

முன்னேர்க்குண்டை, s. The foremost yoke of oxen.

வலதுகுண்டை, s. The off-ox, the ox under the right side of the driver.

குண்டைச்சட்டி, s. See குண்டுச்சட்டி.

*குண்ணியம், s. Multiplicand, பெருக்கப்படுந்தொகை. 2. Nature, quality, property, disposition, பொருட்டன்மை. Wils. p. 292. GUN'YA.

குதக்கு, கிறேன், குதக்கினேன், வேன், குதக்க, v. a. To stuff the mouth with food, to mumble victuals.

குதக்கேடு, s. [prov. vul.] Inferiority; insipidness; immorality, குதலைக்கேடு. See குதளம்.

குதட்டு, கிறேன், குதட்டினேன், வேன், குதட்ட, v. a. To chew, மெல்ல. 2. To turn food about in the mouth—as calves or old persons; to munch, குதப்ப.

குதட்டுகை, v. noun. Munching, chewing—as a beast.

குதப்பு, கிறேன், குதப்பினேன், வேன், குதப்ப, v. a. [vul.] To move about food in the mouth, to mumble, munch, champ, குதட்ட. Compare the verb உதப்பு.

குதம், s. Onion, வெங்காயம். 2. [prov. for.] Go-down, store, கிடங்கு. 3. Plenty, abundance, மிகுதி.

*குதம், s. The anus, பாயுவ். Wils. p. 293. GUDA. 2. Sacrificial grass, தருப்பை, Saccharum, L. Wils. p. 229. KUTHA.

குதம்பு, கிறேன், குதம்பினேன், வேன், குதம்ப, v. a. [prov.] To wash cloth gently, causing the water to bubble up, துணியலச. 2. To wash the fibres, skin, &c., of palmyra fruits, to get out the remaining pulp, பனங்கோரலைச. 3. v. n. To boil up, to bubble up—as boiling water, கொதிக்க. 4. (fig.) To be enraged, to be furious, சினக்க.

குதம்பை, s. An earthen ear-ring, worn to enlarge the perforation, காதிடுசெடை. 2. A kind of ear-ring, ஓர்காதணி.

குதம்பைபோட—குதம்பையிட, inf. To put earthen rings in the ears to enlarge the perforation.

குதம்பைச்சித்தர், s. One of the சித்தர்.

*குதரம், s. A hill, a mountain; lit. sustainer of the earth—as பூதரம். (அமரகோ.)

குதர், கிறது, ந்தது, குதரும், குதர, v. a. To separate, to adjust, to disentangle—as the birds their feathers, பிரித்தக்கோத. (p.)

குதர், s. Separation, பிரிவு.

குதர்செய்ய, inf. To lay open, to tear open; to separate, dishevel, scatter.

குதர்செல்ல, inf. To deviate, to miss the way. (இவியகாற்பது.)

*குதர்க்கம், s. Unfair argumentation; disputation, cavilling, sophistry, முறைகேட்டதர்க்கம்; [ex கு, bad. et தர்க்கம், dispute.] 2. [local.] Impediment in business, embarrassment, குந்தக்கேடு.

குதர்க்ககாரன்—குதர்க்கி, s. An unfair disputant, a caviller, a sophist, a wrangler.

குதர்க்கம்பண்ண—குதர்க்கம்பேச, inf. To cavil, to wrangle, to use sophistry.

குதலை, s. Lisping or prattle of children, மழலைச்சொல். 2. Soft talk, pleasant prattle—as of females, மாதருடையமொழி. 3. A simpleton, a weak-minded person, an ignorant fellow, மூடன். (பாரதிபம்.) 4. [prov.] Unreasonable objection, எதிரிடை.

குதலைகொஞ்ச, inf. To prattle, to lisp or talk imperfectly.

குதலைவார்த்தை, s. Prattling words; lisping. 2. Altercation.

குதறு, கிறேன், குதறினேன், வேன், குதற, v. a. [prov.] To dig up and scatter, to tear or scratch up and scatter abroad—as fowls, சிதற. 2. To stir up, to loosen, to hollow —as earth about plants, &c., கிண்ட. 3. v. n. To become loose, rough, deranged, dishevelled—as the hair, &c., குலைய.

கிண்டிக்குதறிப்போட்டான். He has dug up and scattered the earth.

குதனம்—குதனை—குதனைக்கேடு, s. [prov.] Negligence, carelessness; slovenliness, clumsiness, awkwardness, dirtiness, filthiness, துப்புரவின்மை. 2. Want of dexterity, or address, சாதுரியமின்மை.

குதாவிடை, s. [vul.] Embarrassment, impediment in business, தடை.

காரியங்குதாவிடையாயிருக்கிறது. The business lies undone, or is embarrassed.

குதானன், s. A creeper, தாளி, Convolvulus, L. (M. Dic.)

குதி, s. Heel—as of the foot, a shoe, &c., காலின்குதி. See under the verb குதி.

குதிகால் — குதிக்கால் — குதிங்கால், s. The heel, காற்குதி.

குதிங்காலிலேதைக்க, inf. To run through the heel—as a thorn.

குதிங்காலிலேபட, inf. To wound the heel; to pierce the heel.

குதிங்காற்சிப்பி, s. [local.] The heel-bone.

குதிங்கால்தறிக்க, inf. To deprive one of his heels; i. e. to debilitate, enervate.

குதிப்பிளவை—குதிக்கள்ளன், s. [prov.] A boil on the heel, குதியில்வருந்தீர்புண்.

குதிமுள், s. A spur, குதிரைமுள்.

குதியாணி, s. A corn on the heel, குதிங்காலிலுண்டாகுமாணி.

குதிவாதம்—குதிங்கால்வாதம், s. Neuralgia in the heels.

குதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To jump, leap, spring, bound, skip; to leap from, to rebound, பாய. 2. To spirt out, splash up—as water; to spring, to be brisk or active—as quicksilver, இரசமுதலியனகுதிக்க. 3. (*fig.*) To be boisterous, frolic, haughty, arrogant, பெருமையிலேதுள்ள. 4. *v. a.* To pass over, to leap over, கடக்க. 5. To surpass, overcome; to escape from, கடந்துபோக.

குதித்துக்குதித்துமாவிடித்தாலும்புழுக்கைக்கொருகொழுக்கட்டையே. Though the poor maidservant beat flour ever so hard and briskly, she will have but a small கொழுக்கட்டை cake.

குதித்துப்பாய, *inf.* To leap over, to leap down from a carriage, &c. 2. (*fig.*) To be insolent or wanton, to be unjust, cruel, &c.

குதித்துவிழ, *inf.* To jump into, to plunge, to dive. 2. To jump down from a height.

குதி, *v. noun.* A jump, a leap, jumping, குதிப்பு. 2. Energy, exertion, முயற்சி.

குதிகொள்ள, *inf.* To frisk, to leap, to play about, to revel, sport, frolic, &c., through intoxication or excessive mirth; to be jolly, high-spirited, ஆனந்தக்கூத்தாட. 2. To dwell and sport with one—as the goddess of prosperity; to abound—as prosperity, felicity, செல்வமுதலியதேக்க. 3. To be excessive, to exceed bounds, to overflow, அளவுகடக்க.

கூற்றங்குதித்தலுங்கைகூடும். It is possible even to overcome the god of death. (*p.*)

குதிப்பு—குதியன், *v. noun.* Jumping, leaping; a jump. குதிக்கை. 2. (*fig.*) A display of haughtiness and arrogance.

மற்றையர்க்கெல்லாம் வெஞ்சமற் குதிப்பரிது..... Others will find it difficult to escape from the cruel Yama.

குதிப்பு, *s.* A kind of fish, ஓர்மீன். See under the verb குதி.

குதிரை, *s.* A horse, பரி. 2. Timbers, used in cable-making, கயிறுமுறுக்குங்கருவி. 3. The bridge of a violin or other stringed instrument, யாழின்ஓருறுப்பு. 4. Cock of a gun, துப்பாக்கியிலோருறுப்பு. 5. The prop of an embankment, கீரையடைக்குமரம். 6. A wooden frame, for casks, &c., குதிரைமரம். 7. The sparrow, ஊர்க்குருவி. 8. The mango tree, மாமரம். குதிரை is employed to denote a mango tree, because its synonym, கொக்கு is a synonym of மாமரம். This is sometimes allowed in poetry.

மண்குதிரையைநம்பியாற்றில்இறங்கலாமா? Can one mount a clay-horse and descend into a river?

குதிரைக்கடிவாளம்-குதிரைவாய்க்கருவி, *s.* A bit; a bridle for a horse.

குதிரைக்கல்லணை—குதிரைச்சேணம், *s.* Saddle for a horse.

குதிரைக்கழுத்துவட்டவார், *s.* Harness or trace for a horse. (*Rott.*)

குதிரைக்கௌசனை—கவிசனை, *s.* A horse-cloth or caparison.

குதிரைச்சம்மட்டி—குதிரைச்சவுக்கு, *s.* A horse-whip.

குதிரைவாய்வட்டம், *s.* A horse's head-stall or head-rope—as குசை.

குதிரைப்பிடரிமயிர், *s.* The mane of a horse.

குதிரையிலத்தி—குதிரைலத்தி—குதிரைவிட்டை, *s.* Horse-dung.

குதிரைவாய்நுரை, *s.* The foam of a horse.

குதிரைக்குளம்பு, *s.* A horse's hoof. 2. A kind of plant, நீர்க்குளிரி. (*M. Dic.*)

குதிரைமட்டம், *s.* [*vul.*] A spirited kind of pony.

குதிரைமறி, *s.* A filly, குதிரைக்குட்டி. 2. A mare, பெட்டைக்குதிரை.

கோளிகைக்குதிரை—பெட்டைக்குதிரை, *s.* A mare. See கோளிகை.

வரிக்குதிரை, *s.* A horse that is not saddled, சேணம்போடாதகுதிரை.

வெள்ளைக்குதிரை, *s.* A white horse. 2. [*in burlesque.*] Lice in clothes, சீலைப்பேன். 3. Toddy, கள்.

குதிரைநடை, *s.* The pace of a horse.

குதிரையோட்டம், *s.* The race of a horse, குதிரைநடை. 2. The fleetness of the horse, குதிரைவேகம்.

குதிரைப்பாய்ச்சல், *s.* A horse's gallop.

குதிரைவேகம், *s.* Swiftness of a horse.

குதிரைமசாலை, *s.* A mash; a composition of certain ingredients, used as medicine for horses.

குதிரைச்சாலை — குதிரைமால் — குதிரைலாயம், *s.* A horse-stable.

குதிரைச்சீட்டு, *s.* [*prov.*] A lottery ticket, a raffling ticket, பந்தயச்சீட்டு.

குதிரைப்படை, *s.* Cavalry—as one of the four constituents of a complete army.

குதிரைப்பந்தயம், *s.* A horse-race.

குதிரைப்பந்தி, *s.* A row or stud of horses; also, the place where they are kept.

குதிரைப்பரீட்சை, *s.* Training of a horse for war. 2. Practice of horse-riding.

குதிரைமார்க்கம், *s.* A horse-course, a path for horses.

குதிரைவையாளிவீதி, *s.* A place or street in which horses are trained.

குதிரைக்காரன், *s.* A horse-keeper, a groom. 2. The owner of a horse. 3. A cavalier, a horseman.

குதிரைச்சாணி, *s.* Horse-dung, குதிரைவிட்டை, 2. A horse-keeper, குதிரைக்காரன். 3. A horse-doctor, a farrier, குதிரைவைத்தியன்.

குதிரைமாறி, *s.* A petty horse-dealer. 2. (*fig.*) An underhand dealer.

குதிரையாளி, *s.* A cavalier, trooper. 2. (*Rott.*) Bhairava, வைரவன். See கருங்குதிரையாளி.

குதிரைராவுத்தன், *s.* A horse-man, a trooper.

குதிரைவீரர், *s.* (*pl.*) Cavalry, troopers, cavaliers.

குதிரைமாற்ற, *inf.* To relieve horses by taking a relay.

குதிரைமேலேபோக—குதிரையேறிப்போக, *inf.* To ride on horse-back.

குதிரையேற, *inf.* To ride a horse. 2. To ride on another, in play.

குதிரைவிட, *inf.* To race with horses. 2. To set off in a gallop or trot.

குதிரைவிலை, *s.* An enhanced price; *lit.* horse price.

குதிரையிலக்கணம், *s.* A description of the nature, properties, classification, marks, &c., of horses.

குதிரைவலி—குதிரைவலிப்பு, *s.* A kind of spasmodic affection, attended with severe convulsions sometimes attacking women after childbirth.

குதிரைப்பட்டை, *s.* [*local.*] A beam, placed under the roof of a house to support the tiles.

குதிரைமுகம், *s.* The prop of an embankment. 2. (*Rott.*) The shin-bone, நளகம்.

குதிரைப்பற்பாஷாணம், *s.* Red orpiment, or realgar arsenic.

குதிரைப்பயிரி — குதிரைப்பசிரி, *s.* A plant, Trianthema crystallina, *L.*

குதிரைப்பிடுக்கன், *s.* The name of a tree, ஓர்மரம், Sterculia fœtida, *L.*

குதிரைகொல்லி, *s.* A plant, ஓர்பூடு, Convolvulus tridentatus, *L.*

குதிரைமசாலி, *s.* A kind of tree, தேன்மரம்.

குதிரைவாலி, *s.* A creeping, spreading plant, Convolvulus tridentatus, *L.*

குதிரைவாலிச்சம்பா, *s.* A kind of paddy, ஓர்சம்பாநெல்.

குதிரைவாலிச்சாமை, *s.* A corn, the seeds of which are eaten, Panicum semiverticillatum. (*Nob.*)

குதிரைவாலிப்புல், *s.* A grass, Panicum brizoides, *L.*

குதிரைச்சில்லு, *s.* [*prov.*] A play among boys, in which the winning party ride on the losing party.

குதிர், *s.* A large rice-vessel, made of clay and dried, நெல்முதலியவைக்குங்கூடு.

ஐயாகதிர்ப்போலேஅம்மாகுதிர்ப்போலே. The man is as thin as a spike, but the wife as big as a jar.

குதிர்தல் — குதிர்படுதல், *v. noun.* [*vul. prov.*] Being rectified, put in order, settled, செவ்வைப்படுதல்.

*__குதுகலம்—குதூகலம்__, *s.* [*vul.* குதுகுலம்.] Joy, transport of joy, அகக்களிப்பு. Wils. p. 228. KUTOOHALA.

குதுகலங்கொள்ள, *inf.* To have satisfaction of mind, to be pleased.

குதுகலிக்க—குதுகுலிக்க, *inf.* To express signs of joy or approbation, களிக்க.

குதுகுதெனல், *v. noun.* Feeling feverish, and having a slight shivering.

குதும்பகர், *s.* A plant, தும்பை, Phlomis Indica, *L.* (*M. Dic.*)

குதுவை, *s.* (*Tel.* కుదవ, Brown, p. 213.) A pawn, mortgage, அடகு.

குதுவைவைக்க, *inf.* To pawn, to mortgage.

குதை, *s.* A bow, a loop, a running knot, a button or clasp for bracelets, &c., பணிப்பூட்டு. 2. The notch at the end of a bow to secure the loop of a bow-string, விற்குதை. 3. The bottom of an arrow, அம்பின்குதை.

குதையாணி, *s.* [*in jewelry.*] A fastening pin or bolt.

குதைமணி, *s.* A kind of button.

குதைமுடிச்சு, *s.* The button for a running knot or noose.

குதைபோட—குதைமாட்ட—குதையிட, *inf.* To button, to fasten with a button.

குதையவிழ்க்க, *inf.* To loose the button.

*குதை, *s.* Hunger, பசி. Wils. p. 266. Kshutha.—*Note.* This word is, by some mistake, defined in some books, பாசி (moss) instead of பசி.

குத்தகை, *s.* A contract, job; farming out, lease, rent, கவுல். 2. (*fig.*) Monopoly, sole possession or right of use, பாத்தியமில்லாமை.

குத்தகைக்காரன், *s.* A contractor, a renter; a lessee.

குத்தகைக்காணி-குத்தகைநிலம், *s.* Land taken by lease.

குத்தகைச்சரக்கு, *s.* Contracted goods.

குத்தகைப்பணம், *s.* Money, collected, or paid by a government-renter.

குத்தகைவேலை, *s.* Work by the job or contract.

குத்தகைச்சீட்டு, *s.* A bond of lease, rent, &c.

கள்ளுக்குத்தகை, *s.* Toddy-rent.

சாராயக்குத்தகை, *s.* Arrack-rent.

குத்தகைகொடுக்க-குத்தகைக்கடைக்க-குத்தகையாய்க்கொடுக்க, *inf.* To let out, to farm or lease out land.

குத்தகைகொள்ள — குத்தகையெடுக்க, *inf.* To purchase government-rents, &c.

குத்தகைபேச-குத்தகையாய்ப்பேச, *inf.* To treat for a lease, a job, &c.

குத்தகையாய்வாங்க — குத்தகைவாங்க, *inf.* To take by paying rent; to take a piece of ground or any thing, at a stipulated rate.

குத்தகைமாற, *inf.* To close—as the period of rent, lease, &c.

குத்தகைவிற்க, *inf.* To sell the government-tithes, ferries, revenues, &c., commonly by auction.

குத்தகைபொருந்த-குத்தகையாகப்பொருந்த, *inf.* To contract for work by the job.

குத்தரசம், *s.* Assafœtida, பெருங்காயம். (*M. Dic.*)

குத்தாலம், *s.* A tree, காட்டாத்தி, Bauhinia parviflora, *L.* (*M. Dic.*)

குத்தாலா, *s.* A medicinal plant, கடுரோகிணி, Helleborus niger, *L.*

குத்தி, *s.* A log of wood, &c. See குற்றி. 2. *adj.* [*prov.*] Thick, plump; short and stout, குத்தியான.

*குத்தி, *s.* Restraint, check, repression, அடக்கம். Wils. p. 293. Gupti. 2. Earth, ground, soil, மண்; [*ex* கு. earth.] 3. A cruet or vial for oil, ointments, &c., சிறுகுடுவை; [*ex* Kutee, oil bottle.]

எண்ணெய்க்குத்தி, *s.* A cruet, or a small brass-pot, for oil.

குத்திக்கொல்லர், *s.* [*prov.*] A class of persons, armed with the சிங்காணி bow, employed to carry treasure, பணங்கொண்டுபோகிறவர். Compare குத்திக்கொல்வோன் under the verb குத்து.

*குத்திரம், *s.* Deceit, guile, dis-ingenuity, insincerity, craftiness, subtility, knavery, வஞ்சகம். 2. Lying, falsehood, பொய். Wils. p. 229. Kudra. 3. Cruelty, inhumanity, குரூரம். Wils. p. 266. Kshudra. 4. A hill, a mountain, மலை. Wils. p. 229. Kudhra. 5. [*vul.*] Sarcasm, irony, any cutting remark, insinuation, or allusion, சுடுசொல். 6. (சது.) Celerity, speed; intensity, சீக்கிரம். 7. Hemp, சணல். (*M. Dic.*)

குத்திரக்காரன்—குத்திரமுள்ளவன்—குத்திரன், *s.* A knave, a crafty fellow; one who uses sarcasm.

குத்திரப்பேச்சு — குத்திரமானவார்த்தை, *s.* Sarcastic language.

குத்திரவித்தை, *s.* Craftiness, subtleness, knavery. 2. Sorcery, magic.

குத்திலி—குத்துணி, *s.* [*vul. for.*] A kind of striped silk, ஓர்பட்டுச்சீலை.

குத்து, *s.* Hemp—as குத்திரம், சணல். (*M. Dic.*) See under the verb குத்து.

குத்து, கிறேன், குத்தினேன், வேன், குத்த, *v. a.* To puncture, prick, penetrate; to bore, perforate, ஊசிமுதலியவற்றாற்குத்த. 2. To stab, to thrust, to pierce, ஈட்டிமுதலியவற்றாற்குத்த. 3. To pound in a mortar, to comminute, உலக்கையாற்குத்த. 4. To crack, to crush, smash, நெரிக்க. 5. To strike with the fist; to cuff, buffet, box, கையினாற்குத்த. 6. To efface a writing by dotting it with a style, &c., கிறுக்கிக்குத்த. 7. To drop; to pour out a small quantity, எண்ணெய்முதலிய குத்த. 8. To gore, கொம்பினால்முட்ட. 9. To pick or strike—as a stork, a crow, &c., பறவைகுத்த. 10. To mark by pricking, dotting, &c.; to dot, to point, புள்ளிகுத்த. 11. To stamp, to impress, முத்திரைமுதலியகுத்த. 12. To dig, dig up, dig out, கிண்ட. 13. (See the verb குறு.) To pluck, பறிக்க. 14. To ram down—as in a gun, துபாக்கியைக்கெட்டிக்க. 15. To bury in the ground—as certain seeds, விதையூன்ற. 16. To plant, set, place, நட, நிறுத்த, வைக்க. 17. To use sarcastic allusions, to employ invectives, சுடுவார்த்தைபேச. 18. To thwart, to defeat—as a design; to oppose—as a measure or scheme, தடங்கற்செய்ய. 19. [*vul.*] To coagulate milk, பிரைகுத்த. 20. *v. n.* To throb, to ache, வயிறுமுதலியகுத்த.

குத்தாமற்குத்திப்போட்டான். He has indirectly made a sarcastic allusion to me.

அவன்கையைக்கொண்டே யவன் கண்ணிற் குத்தினான். He has taken hold of his neighbor's hand, and thrust it into his eyes; i. e. he has employed his neighbor's means to injure him.

குத்தித்தைக்க, *inf.* To sew through and through.

குத்துக்கோல், *s.* A horse or ox goad, தாற்றுக்கோல். 2. A pike-staff, முட்கோல்.

குத்துமுள், *s.* A spur, குதிரைமுள்.

குத்துவாள், *s.* A dirk, a hand-dart or bayonet, உடைவாள்.

குத்தீட்டி, *s.* A poniard.

குத்துவல்லயம், *s.* A hand-javelin—opposed to எறிவல்லயம்.

குத்தூசி, *s.* A kind of wooden needle, for roofing or hedging.

அம்மைகுத்த, *inf.* To vaccinate.

பச்சைகுத்த, *inf.* To tattoo; *lit.* to puncture and insert a blue dye.

பல்லுக்குத்த, *inf.* To pick the teeth.

மூக்குக்குத்த, *inf.* To perforate the nose.

குத்திக்கொல்வோன், *s.* One who kills another by stabbing, an assassin.

குத்துக்கொம்பு, *s.* [*prov.*] Perpendicular horns.

குத்துக்கரணம், *s.* A somerset.

நிலைக்குத்த, *inf.* To be set in or fixed—as the eyes of one just breathing his last.

சாந்துகுத்த, *inf.* To pound chunam or mortar.

நெல்லுக்குத்த, *inf.* To pound paddy.

பேன்குத்த, *inf.* To crack or crash lice.

குரும்பைகுத்த, *inf.* [*prov.*] To pluck young cocoanuts, &c.

அள்ளிக்குத்த, *inf.* [*prov.*] To give liquid food stintingly. 2. To drop a little water on plants, &c.

குத்துவலி—குத்துக்குடைச்சல், *v. noun.* Throbbing or pinching pain, stitches.

குத்திப்பேச, *inf.* To make a cutting remark.

குத்தியள்ள, *inf.* To take up grain, &c., by thrusting the hands in perpendicularly.

குத்தல், *v. noun.* Puncturing, pricking—as one of the eight kinds of impressions perceived by the sense of feeling. 2. Ramming; thrusting, stabbing, &c.

குத்தார்க்கு, *s.* [*local.*] Withe, cord, &c., inserted in the hole of a குத்தூசி needle.

குத்து, *v. noun.* Pounding in a mortar, உரலிற்குத்துகை. 2. A blow with the fist, a cuff, a buffet, a box, கைக்குத்து. 3. A thrust, a stab; a puncture, a prick, an incision, a goading, ஈட்டிமுதலியவற்றாற்குத்துகை. 4. The peck of a stork, மூக்கினாற்குத்துகை. 5. An acute, throbbing, twinging pain, ஓர்நோய். 6. A dot, a point, a tittle; a spot—commonly with a pointed instrument, புள்ளி. 7. A double handful of grain, &c., the hands being thrust in perpendicularly. 8. [*prov.*] A handful, ஓர் கையளவு. 9. Perpendicularity, steepness—as in செங்குத்து.

குத்துண்டுபோவாய் — குத்துண்பாய். May you be stabbed—*an imprecation.*

ஒருகுத்துச்சோறு. A double handful of boiled rice, with the hands thrust in perpendicularly.

குத்துமி, *s.* Husk—as separated from rice by pounding.

குத்துவெட்டு, *s.* Stabbing and maiming—either in scuffles, robbery or war. 2. Dots and strokes—as erasures, பிழைபட்டதைக்கிறுக்கித்தள்ளல்.

குத்துப்பாடு, *v. noun.* Censuring or charging one with a fault; violent contention; *lit.* piercing, retortion.

அந்தவேலைமேற்குத்துப்பாடுசொல்லுகிறான். He finds fault with the work.

குத்துக்காயம், *s.* A wound by a stab; a stab.

அடப்புக்குத்து, *s.* [*prov.*] Stabbing in the ribs, விலாக்குத்து.

தலைக்குத்து—மண்டைக்குத்து, *s.* Piercing pain in the head; head-ache.

முலைக்குத்து, *s.* Piercing pain in the breast.

முலைக்குத்தைஅறியுமாசவலைப்பிள்ளை. Does the babe know the mother's breast-ache?

குத்துண்ண, *inf.* To be beaten, pierced, stabbed, &c., குத்துப்பட.

குத்துணி, *s.* One stabbed, குத்துண்டவன். 2. A mean, vagabond, shameless fellow.

குத்துப்பட்டுவிழ, *inf.* To fall, or drop down pierced.

குத்துக்குநிற்க, *inf.* To stand on points, each urging his own reasons; to contend, to oppose—as rivals. 2. To haggle in dealing.

குத்துகால் — குத்துக்கால், *s.* The uprights of a frame—as of a car; a piece of furniture, support, தாங்குகால்.

குத்துக்காலிட, *inf.* To sit or lie with bent legs; [*ex* குந்து.]

குத்துக்கால்நாட்ட, *inf.* To fix or plant the uprights.

குத்தாய்நிற்குமலை, *s.* A mountain standing perpendicularly.

குத்துவிளக்கு, *s.* Standing lamp, a brass candlestick.

குத்துக்கல் — குத்தாங்கல், *s.* A perpendicular stone.

குத்துக்கல்லாய்வைக்க, *inf.* To build with bricks set upon the edge.

குத்துக்குளம்பு, *s.* The hoof of oxen, horse, &c., falling perpendicularly, not spreading—regarded as a good species for speed.

குத்துப்பாறை, *s.* Small, perpendicular heaps of stones in the vicinity of a rock. 2. [*local.*] The horizontal part of a rock where women pound paddy.

குத்துப்போர், *s.* The first layer of sheaves of corn in a stack, placed with the ears uppermost, நிறுத்திட்டமாய் வைக்குங் குவை. 2. Boxing, fisticuffs, மற்போர்.

குத்துப்புள், *s.* [*prov.*] The place where the புள் stick falls perpendicularly in the கிட்டிப்புள்ளு game.

குத்தெனவிழ, *inf.* [*prov.*] To fall headlong, தலைகீழாய்விழ. 2. To fall in a perpendicular position, நிறுத்திட்டமாய்விழ.

செங்குத்தானமலை, *s.* A perpendicular hill; a precipice.

மூங்கிற்குத்து, *s.* A cluster of bamboos, consisting of some parent stems and saplings.

குத்துச்செடி, *s.* Any low shrub.

குத்துக்கரந்தை, *s.* See under கரந்தை.

குத்துக்காரை, *s.* See under காரை.

குத்துக்கோரை, *s.* A grass, ஓர்கோரை, Cyperus compressus, *L.*

குத்துத்திராய், *s.* An edible herb, ஓர் கீரை, Mollugo stricta, *L.*

குத்துப்பகன்றை, *s.* A plant, ஓர்செடி, Lechea verticillata, *L.*

குத்துப்பசளி, *s.* A species of பசளி.

குந்தகம் — குந்தக்கம், *s.* [*vul.*] Hinderance, obstacle, obstruction, தடை.

அந்தக்கலியாணங்குந்தகப்பட்டது. The wedding has been obstructed.

நினைத்தகாரியத்துக்குக்குந்தகம்வந்தது. An obstacle occurred to the performing of the intended work.

வேலைகுந்தகமாய்ப்போனது. The work has been delayed.

குந்தம், *s.* Disease, நோய். 2. A disease of the eye, gutta-serena; also, a tubercle on the cornea of the eye, ஓர்கண்ணோய். (*from Sans. Kuntha.*) 3. A horse, குதிரை. 4. A tree—as குருந்தம். 5. A kind of arsenic, கற்பாஷாணம். 6. Another kind of arsenic, கௌரிபாஷாணம். 7. Also, a third kind of arsenic, தாலம்பபாஷாணம்.

குந்தம்புறப்பட, *inf.* To rise—as a tubercle on the cornea.

*குந்தம், *s.* One of the Kuvéra's nine treasures, நவநிதியிலொன்று. 2. Gum olibanum—as குந்துருகம். Wils. p. 229. Kunda. 3. A kind of pike with an angular head, சவளம். 4. A small kind of lance, கைவேல். 5. A large kind of lance, பெருஞ்சவளம். Wils. p. 229. Kunta.

குந்தலிங்கம், *s.* Frankincense.

*குந்தளம், *s.* Women's hair, பெண்மயிர். 2. Hair in general, மயிர்ப்பொது. 3. A kind of hair-knot or curls, மயிர்க்குழற்சி. 4. The name of a country, Kuntala, ஓர்தேசம். Wils. p. 229. Kuntala.

குந்தனம் — குந்தனவேலை, *s.* Enchasing or setting precious stones, பணியில்மணி பதித்தல்.

குந்தா, *s.* [*prov.*] Stock of a gun, துப்பாக்கியின்அடி. 2. The stern of a vessel, கப்பலின்பிற்பக்கம்.

குந்தாணி, *s.* [*prov.*] A large mortar, பெருவுரல். 2. A kind of disease in the eye—as குந்தம்.

அவள்ஒருகுந்தாணிபோலிருக்கிறாள். She is like a mortar—said in ridicule of a short, fat woman.

குந்தாணிப்பீரங்கி, *s.* A kind of mortar for throwing bombs, &c., ஓர்பீரங்கி.

குந்தாலி — குந்தாலம், *s.* [*prov.* குந்தாலி.] A pick-axe with one prong, கிணறுவெட்டுங்கருவியிலொன்று. (குறுங்கை.)

குந்தாலிவெட்டு. Cutting or digging stones, wells, &c., with குந்தாலி.

குந்தாளி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To leap for joy. Compare கும்மாளம்.

குந்தாளித்துத்திரிய — குந்தாளித்துவிழ, *inf.* To dance and skip for joy.

குந்தாளிப்பு, *v. noun.* Exultation, leaping for joy.

குந்தாளிப்பாயோட, *inf.* To bound, to skip—as a deer, calf, &c., வையாளிபோட.

*குந்தி, *s.* The mother of the three elder Pàndava princes, பாண்டவர் மூவரின் தாய். Wils. p. 229. Kunti. 2. Toddy, fermented liquor, கள்ளு.

குந்திபுதல்வன் — குந்திமைந்தன், *s.* Yudhisht'ra—the son of Kunti; also, any of the other sons of Kunti.

குந்திமுதற்புதல்வன், *s.* Karna, the eldest son of Kunti during her pretended maidenhood, கன்னன்.

குந்திரா — குந்திராத்தீவு, *s.* The Maldive Islands, மாலைதீவு.

குந்திராத்தோணி, *s.* Dhoney of the Maldive Islands, constructed wholly from the cocoa-tree.

குந்து, *s.* A hop, a tip-toe, [*vulgarly,* கிந்து.] 2. [*prov.*] Fibres in fruits—as in the mango and palmyra; also, in roots, சக்கை. Probably a change of உந்தல். See under the verb குந்து.

அவர்களிலொருகுந்துங்கூடஇல்லாமற்போய்விட்டது. There is not one of the family left—not even a fibre.

குந்துகாலி, *s.* A hobbling or limping female.

குந்துதடி, *s.* [*prov.*] A stick with several prongs, or a similar contrivance to take out the fibre from palmyra pulp.

குந்து, கிறேன், குந்தினேன், வேன், குந்த, *v. n.* To sit; to sit on the legs, to squat, குந்தியிருக்க. 2. To stand on the end of the toe, காற்படக்குந்த.

குந்துகாலிலேநிற்க, *inf.* To stand on tip-toe. 2. To wait impatiently—as anxious to go. 3. To tarry but a moment—as one in haste.

சுவர்குந்துகாலிலேநிற்கிறது. The wall inclines, ready to fall.

குந்தினபடியிருக்கிறான். He is still sitting; i. e. still resolved on obtaining his demand.

குந்துதிண்ணை, *s.* A step used as a seat, at the front margin of the verandah, or ends. See ஒட்டுத்திண்ணை.

குந்து, *v. noun.* A squatting posture, குந்துகை. 2. The margin of a raised verandah or of a raised floor, serving as a seat, திண்ணைக்குந்து.

*குந்துரு — குந்துருகம் — குந்துருக்கம், *s.* [*sometimes* குந்திருக்கம்.] The Olibanum tree and gum; frankincense. Wils. p. 229. Kunduru, Kunduruka. (Ainslie, v. 1, p. 136.)

குபசபா, *s.* A tree, எட்டி, Strychnos, *L.* (*M. Dic.*)

*குபலம், *s.* Weakness, அபலம். 2. Loss, detriment, கெடுதல்.

குபீர்குபீரெனல் — குபீல்குபீலெனல், *v. noun.* Moving or rushing with suddenness, or vehemence, விரைவுக்குறிப்பு. 2. Flowing with force; spinning out—as blood from a vein.

குபீரென — குபீரென்று — குபீலென — குபீலென்று, *adv.* Suddenly, abundantly, vehemently; in small streams.

குபேரகம், *s.* A shrub, சின்னி, Acalypha betulina, *L.* (*M. Dic.*)

*குபேரன், *s.* Kuvéra, once a rich king, now regent of the North, and guardian of riches, தனதன். (See திக்குப்பாலகர்.) Wils. p. 230. Kubera, and 235. Kuvera. 2. The moon, சந்திரன்; [*ex* கு, deformed, *et* பேர், body—alluding to the deformity of the two.]

குபேரசம்பத்து, *s.* The riches of Kuvéra; i. e. abundant riches.

குபையம், *s.* A plant, சிறுபுள்ளடி, Hedysarum, *L.* (*M. Dic.*)

குப்பம், *s.* [*a change of* கும்பம்.] A village of small houses and huts—as of fishermen, &c., கிராமம். 2. (*Rott.*) A kind of coin from Acheen, அச்சினாணயம்.

குப்பக்காடு, *s.* A village where many huts are gathered.

குப்பக்காட்டான், *s.* A குப்பம் man, a rustic, a clown, காட்டுப்புறத்தான்.

குப்பங்குடியேற்ற, *inf.* [*prov.*] To establish a குப்பம் village.

குப்பல், *s.* [*vul. from* குப்பம்.] A heap or collection—as of manure, &c., குவியல். 2. A multitude, a company, கூட்டம்.

குப்பல்குப்பலாய், *adv.* In crowds; in torrents.

குப்பல்குப்பலாய்க்கட்ட — குப்பல்குப்பலாய்க்குவிக்க, *inf.* To heap up, to lay on heaps.

குப்பல்விளையாட்டு, *s.* A play of children in sand.

*குப்பாயம், *s.* A cloak, a coat, a bodice; a jacket with short sleeves, worn next the body, especially by women; also. a cuirass or quilted jacket, worn as armor, கவசம். Wils. p. 232, and 239. KURPPASA.

குப்பாயசம், *s.* The body—as covered with a குப்பாயம் coat, சரீரம். (*p.*)

*குப்பி, *s.* A phial, a flask, a bottle, ஓர்விதகுடுவை. Wils. p. 239. KUPEE. 2. A small golden ornament, worn on the hair of women, மாதர்சிரசணியுமொன்று. 3. The screw of a lute, யாழின்குப்பி. 4. A ferrule or knob at the end of a scabbard, bullock's horns, elephant's tusk, spout of a kettle, &c., பூண். 5. [*prov.*] An ear-ring of a particular shape, குப்பிக்கடுக்கன்.

காசிக்குப்பி, *s.* A phial containing holy water from the Ganges at Benares.

குப்பிமுடிக்க, *inf.* To fasten the குப்பி ornament in the hair-tuft.

குப்பிச்சாரம், *s.* A mineral salt, காசிச் சாரம்.

குப்பிலவணம், *s.* A medicinal salt, வளையலுப்பு, Fel vitri, *L.*

குப்பிவைப்பு, *s.* The process of chemical preparation in an alembic. 2. The materials for the chemical preparation.

குப்பிக்குட்சமைந்தகன்னி, *s.* A kind of arsenic, பஞ்சபட்சிபாஷாணம்.

குப்புழாய்—குப்புழை, *s.* [*prov.*] A kind of creeper, the leaves of which serve as food for cattle.

குப்புறு, கிறேன், குப்புற்றேன், வேன், குப்புற, *v. n.* To fall prostrate, on the face and front of the body, முகக்குப்புறவிழ. 2. To incline the face downwards, தலைகுனிய. 3. To pass over, to leap over, கடக்க. 4. To jump down, பாய.

பிள்ளைகுப்புற்றுக்கொள்ளுகிறது. The child lies with the face downwards.

குப்புறத்தள்ள, *inf.* To throw one down upon the face.

குப்புறப்படுக்க—குப்புறக்கிடக்க, *inf.* To lie, or sleep, on the face.

குப்புறப்பிடிக்க, *inf.* To hold—as an infant—with the face downwards.

குப்புறவிழ-குப்புற்றுவிழ, *inf.* To trip and fall forward, to fall flat on the face —generally involuntarily.

குப்புறவிழுந்துபடுத்துக்கொண்டான். He lay flat on his face, obstinately refusing to rise.

குப்பை, *s.* A collection, a heap, குவியல். 2. A clump, a group, கூட்டம். 3. A hillock, மேடு. 4. Sweepings, rubbish, fragments, கூளம். 5. A dunghill, a hillock of sweepings and other refuse, குப்பைமேடு. 6. Dung; excrement, human dung—in decent language, கஷ்டம்.

பணக்குப்பை, *s.* Abundance of money.

குப்பைமேடு, *s.* A heap or hillock of sweepings or rubbish.

குப்பையாகவிருக்க, *inf.* To be in confusion—as goods, &c. 2. To be crowded, or thick—as herbage. 3. To be abundant, plentiful—as money, &c.

குப்பைபோட — குப்பைவைக்க, *inf.* To cast peel, parings, refuse, &c., on the floor. 2. To manure with sweepings, rubbish, &c.

குப்பைகிளைக்க—குப்பைசீக்க, *inf.* To tear or scratch up a dunghill, a heap of sweepings, &c.—as a hen.

குப்பைகூட்ட — குப்பைபெருக்க, *inf.* To sweep up rubbish.

குப்பைக்காரன், *s.* (*fem.* குப்பைக்காரி.) A sweeper of the streets, a scavenger.

குப்பைவாரி, *s.* A garden-rake, வாருகோல். See குப்பைக்காரன்.

குப்பைக்கீரை, *s.* A kind of weed. See under கீரை.

குப்பைப்பருத்தி, *s.* A plant, ஓர்பருத்தி. See under பருத்தி.

குப்பையன், *s.* (*fem.* குப்பைச்சி.) A sloven, in contempt, அழுக்கடைந்தவன்.

குப்பைமேனி, *s.* A kind of plant, a vermifuge, an antidote to poisonous bites —also used for food, ஓர்பூடு, Acalypha Indica, *L.*

குமஞ்சம்—குமஞ்சான், *s.* Frankincense, தூபவர்க்கம், viz.: 1. ஆண்குமஞ்சான் or குங்கிலியம். 2. பெண்குமஞ்சான் or சாம்பிராணி. (*Rott.*)

குமடு, *s.* [*vul.*] The cheeks, கன்னம்.

குமட்டு, *s.* Nausea, keck; loathsomeness, ஓக்காளம்.

குமட்டு, கிறது, குமட்டினது, ம், குமட்ட, *v. n.* To feel nausea, to keck, to retch, வாய்குமட்ட. 2. To loathe, அரோசிக்க.

அவனுக்குத்தின்றது குமட்டுகிறது. What he ate is coming up. 2. He is wanton, frolicsome, &c., through high living.

குமட்டிக்கொண்டிருக்க, *inf.* To be nauseous, kecking, retching.

குமட்டியெடுக்க — குமட்டியெடுத்துப்போட, *inf.* To puke, vomit.

நெஞ்சைசக்குமட்டல், *v. noun.* Retching, heaving of the stomach.

குமட்டல், *v. noun.* The act of retching, kecking.

*குமதி, *s.* A fool, a stupid fellow, புத்திகேடன்; [*ex* கு, bad, *et* மதி.]

குமஸ்தா, *s.* (*Hind.*) A writer; a clerk.

குமரகண்டம், *s.* A kind of disease, attended with convulsions, contortions, &c., ஓர்வலிப்பு.

குமரம், *s.* Beasts without horns, கொம்பில்லாவிலங்கு.

*குமரம், *s.* An ancient and lost work on Tamil grammar, by a Jaina, குமரமென்னுமிலக்கணநூல்.

*குமரன், *s.* A young man, one of sixteen years old, பாலியன். 2. A man in his prime from sixteen years to thirty-two, கௌமாரன். 3. A youthful son, புதல்வன். 4. Skanda, முருகன். 5. Bhairava, வயிரவன். —*Note.* The gods and celestials are described as remaining permanently youthful, and enjoying juvenile vigor. Wils. p. 230. KUMARA.

குமரதானம், *s.* [*in versification.*] The second of the five arbitrary divisions of letters, for the beginning of a poem, எழுத்துத்தானத்திலொன்று. See under தானம்.

*குமரி, *s.* A girl, arrived at maturity and unmarried; a lass, பருவமுடையவள். 2. A virgin, a maid, கன்னிகை. 3. A youthful daughter, புதல்வி. 4. The name of the daughter of Bharata, to whose share the southern division of Bharatavarsha or India fell, and from whom the southern extremity of the peninsula was called *Cape Comorin* or Kumari, பரதன்மகள். 5. Unfadingness, imperishableness, unchanging youthfulness, அழிவின்மை. 6. The wild aloe. (See கற்றாழை.) 7. The Kumari river near Cape Comorin, where it is said Parvati did penance; one of the seven sacred rivers, கன்னியாகுமரி. 8. Kali, காளி. 9. Durgha, considered as one of the seven matrons. See கௌமாரி. Wils. p. 230. KUMAREE.

குமரியிருட்டு, *s.* Darkness just before day-break.

குமரிவாழை, *s.* Young, thriving plantain trees.

குமரிஞாழல், *s.* An ever-green ஞாழல்.

குமரிமாமதில், *s.* Imperishable fortress, or walls.

குமரியாறு, *s.* The Kumari river.

குமரிகண்டம், *s.* A portion of Southern India, named after the queen குமரி, by whom it was first governed.

குமரிச்சேர்ப்பன், *s.* Any king of the Pándian dynasty, as the owner of the lands, along the banks of the குமரி river.

குமர், *s.* [*a change of* குமரி.] A virgin, மணமுடியாதவள். 2. The unmarried state, கன்னிமை.

குமல், *s.* A sickle, அரிவாள்.

குமளம்பாசு, *s.* The name of a fish, அறக்குளாமீன் and சுறாமீன்.

குமாரத்தி, *s.* A daughter, commonly young—auspiciously spoken, புத்திரி. 2. A king's youthful daughter, a princess; a young woman of royal or exalted birth, இராசகுமாரி.

*குமாரன், *s.* A son, புத்திரன். 2. A young man of sixteen years old, பாலியன். 3. A man in the prime of youth from sixteen to twenty-four, or according to some, from sixteen to thirty-two. (See பருவம்.) 4. The son of a king's minister; a prince, இராசகுமாரன். 5. [*in theatrical language.*] A prince, the heir-apparent and an associate in the government of the empire, நடகத்தில்வருங்குமாரன். 6. An adult son—a term of respect or flattery, விடலை. 7. Skanda, as enjoying eternal youth, முருகன். Wils. p. 230. KUMARA.

குமாரப்பல்லக்கு, *s.* A small palankeen.

குமாரவர்க்கம், *s.* Lineage, progeny.

தேவகுமாரன், *s.* The son of a deity.

குமாரதளவாய், *s.* A prime-minister to the king of Madura.

*குமாரி, *s.* A girl, arrived at puberty, குமரி. 2. A youthful daughter, புதல்வி. 3. Durga, துர்க்கை. Wils. p. 230. KUMAREE. 4. A solvent or menstruum which dissolves gold, சுவர்ணபேதி.

*குமார்க்கம், *s.* Irreligion; heresy, அமார்க்கம்.

குமி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To over-beat—as rice, மிகக்குத்த. 2. To accumulate, to heap up, to gather, குவிக்க.

குமிகை, *s.* White sesamum, வெள்ளெள்ளு. (நிக.)

குமிடக்கல், *s.* Iron-dross, இட்டக்கல்.

குமிட்டி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*vul. local.*] To swell; to form—as a tumor, a flower-bud, &c., குமிழ்போலாக.

குமிதிகம், *s.* The teak-tree, தேக்கு.

குமிலம், *s.* A great noise, roaring of the sea, &c.; acclamation, shout, பேரொலி. (சது.)

குமிழி, *s.* A water-bubble, நீர்க்குமிழி. 2. [*prov.*] A boss; a knob—as of wooden slippers, மிதியடிக்குமிழ்.

நீயேகுமிழி நீயேசாட்சி. O thou bubble! thou alone art my witness (supposed to be said by a person maliciously and privily drowned).

குமிழிகொள்ள—குமிழிவர, *inf.* To bubble up; to form—as bubbles.

குமிழ், *s.* Bubble, blubber, நீர்க்குமிழி, 2. A knob—as of wooden slippers; a stud, a pommel, any thing round or convex—as the head of a nail, the chapter of a column, &c., திரண்டவடிவம் 3. A kind of thorny tree, Gmelina tomentosa, from which torches are made for travellers, ஓர்மரம். In poetry, the nose is often compared to the red குமிழ் flowers. 4. A reed, நாணல். (*M. Dic.*) 5. The hump of an ox, எருத்துத்திமில். 6. A swelling or protuberance in the sole of the foot, உள்ளங்காற்கட்டி.

குமிழெழும்ப, *inf.* To form—as bubbles.

குமிழாயிருக்க, *inf.* To be globular, bubble-like, spherical.

• குமிழாணி, *s.* A knob or stud. 2. A round-headed nail.

குமிழங்கழி, *s.* A stick or staff of the குமிழ் tree.

குமிழஞ்சூழ்-குமிழஞ்சுழுந்து, *s.* Torches of the குமிழ் splinters or branches, used by travellers.

செங்குமிழ், *s.* The red குமிழ் shrub, Gmelina Asiatica.

நிலக்குமிழ், *s.* A low species of the குமிழ் shrub.

பெருங்குமிழ், *s.* The குமிழ் tree.

குமிழ், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To grow into a conical shape; to be spherical, globular; to form—as bubbles, திரள.

குமிழ்ப்பு, *v. noun.* Bubbling up, குமிழ்க்கை. 2. Momentary swelling at the root of the hairs of the body, accompanied with horripilation, புளகம்.

குமிழ்வண்டு, *s.* A perforating beetle. See குடைவண்டு.

குமிளி, *s.* [*local. vul.* குமுளி.] A bubble, நீர்மேற்குமிழி.

குமிளிக்கண், *s.* The fountain or opening of a spring, ஊற்றுக்கண்.

குமிளி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To bubble; to rise in bubbles, pustules, &c.

குமுகுமெனல், *v. noun.* [*local.*] To spread—as odor; to be very fragrant. 2. To fall in torrents.

குமுகுமென்றுமணக்கிறது. It is very fragrant; it spreads a strong odor.

குமுக்கு, *s.* Whole, total, the lump or gross; wholesale, மொத்தம். 2. A large or considerable quantity, number, &c., பெருந்தொகை. 3. [*local.*] A band, a clan, a crowd, a faction, கூட்டம், சேர்க்கை. 4. (*Hind.*) Aid, assistance, help, உதவி.

குமுக்கிலேவாங்க—குமுக்காய்வாங்க, *inf.* To buy in the lump.

குமுக்குப்பண்ண — குமுக்குச்செய்ய, *inf.* To render assistance.

குமுணன், *s.* One of the seven liberal men of the first class. See வள்ளல்.

குமுதகம்—குமுதம், *s.* [*in architecture.*] A kind of moulding, ஓர்சித்திரக்கம்பி.

குமுதம், *s.* A cooking fire-place, அடுப்பு. 2. Roaring, acclamation, பேரொலி. 3. [*properly* குலுமம்.] A division of an army, being treble of a சேனுமுகம், படையிலோர்தொகை. 4. Sacrificial grass, தருப்பை. 5. A kind of native arsenic, வயிக்கிராந்தபாஷாணம். 6. Another kind of native arsenic, வெள்ளைப்பாஷாணம். 7. A disease of the eye, கருவிழிநோயிலொன்று. 8. [*prov.*] Abundance—as of produce, income, &c., மிகுதி.

***குமுதம்**, *s.* The white water-lily, வெள்ளாம்பல். 2. The red water-lily, செவ்வாம்பல். 3. The elephant of the south west, as supporting the earth, தென்மேற்றிசையானை. Wils. p. 230. Kumuda.

குமுதசகாயன்—குமுதநண்பன்—குமுதபதி—குமுதேசன், *s.* The moon—as the friend and lord of the lily, expanding during the night and closing during the day time, சந்திரன்.

***குமுதன்**, *s.* One of the chiefs of the monkey force of Ràma, குரங்குப்படைத்தலைவரிலொருவன்.

குமுந்தம், *s.* A kind of native arsenic, கற்பாஷாணம்.

குமுலி, *s.* A sacred plant among the Hindus, துளசி, Ocymum sanctum, *L.* (*M. Dic.*)

குமுறு, கிறது, குமுறினது, ம், குமுற, *v. n.* To thunder, மேகமுழங்க. 2. To sound, to roar; to bellow, to resound, to rumble, to emit a roaring hollow sound, இரைய. 3. To bubble in boiling, to effervesce, கொதிக்க. 4. To sound—as the noise of a multitude, பேசலாலொலிக்க.

குமுறிவிழுகிறுன். He is bellowing, vociferating; is wanton and mettlesome.

உலைகொதித்துக்குமுறுகிறது. The water (for rice, &c.), is boiling up with a rumbling noise, &c.

முலையிற்பால்குமுறிக்கொண்டிருக்கிறது. The milk in the breast, or udder, is working up to gush out, or to distend the vessels.

குமுற இடிக்க, *inf.* To pound forcibly in a mortar, in beating out the grain, &c.

குமுறக்காய, *inf.* To be boiling hot—as oil; to boil up; to be heated to a high degree.

குமுறிப்பாய, *inf.* To gush or spring out—as a roaring torrent.

குமுறப்பிழிய, *inf.* To press out hard—as juice, &c.

குமை, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To be over-boiled or boiled soft, or to a mash—as greens, &c., குழையவேவ. 2. To be in a state of confusion, மயங்க. 3. To faint or droop—as one in a swoon, சோர. 4. [*local.*] To be hot, sultry, வெப்பத்தாற்புழுங்க. 5. [*fig. in poetry.*] To be destroyed, அழிய.

எல்லாம் ஒன்றுய்க் குமைந்துபோய்க்கிடக்கின்றன. The property of several persons, ancestors, &c., has all settled upon one. 2. The things are all in confusion. 3. Several things are mixed together.

குமைந்துகுமைந்துமெலிந்துபோகிறுன். He faints every time he is taken up.

கண்குமைகிறது. The eye-lids close together (from a predominance of heat in the system).

குமைந்துபோக, *inf.* To be boiled into a mash.

குமை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To over-boil, boil soft, to reduce to a mash by boiling, குழையவேவிக்க. 2. To tread down, to tread out into a mash, துவைக்க. 3. [*in poetry.*] To destroy, அழிக்க. 4. To beat or bruise in a mortar, உரலிற்குத்த.

குமைஞ்சான், *s.* Frankincense. See குமஞ்சான்.

***கும்பகம்**, *s.* Stopping the breath by shutting the mouth and closing both nostrils with the fingers of the right hand, சுவாசபந்தனம். As a religious exercise among ascetics, it is the power of suspending respiration, thereby securing the attention, as the Hindu metaphysicians think, to the contemplation of divine and super-human things. Wils. p. 231. Kumbhaka. 2. A native arsenic, தொட்டிப்பாஷாணம். 3. Another kind of arsenic, சாலாங்கபாஷாணம.

***கும்பகன்னன்—கும்பகர்ணன்**, *s.* The gigantic brother of Rávan'a, whose ears were like a jar. He is said to have performed austerities to obtain immortality, நித்தியத்துவம்; but, under the evil influence of the supernals, who dreaded his power, he was made to falter in his words and to say, நித்திரைத்துவம் (sleepiness), and he was thenceforward given up to sleep. Wils. p. 231. Kumbhakarn'a.

கும்பகர்ணப்படலஞ்சேவிக்கிறுன். He sleeps long and soundly; *lit.* he serves in the department of Kumbhakarn'a.

***கும்பகாம்போதி**, *s.* A tune or class of tunes, a species of காம்போதி—one of the thirty-five.

***கும்பகோணம்**, *s.* The town of Combaconum, கும்பகோணம். 2. [*fig. vul.*] Fraud, humbug, wiles, trick, மோசம்.

கும்பஞ்சான், *s.* The Jalap plant, சிவதை, Convolvulus turpethum, *L.*

***கும்பம்**, *s.* An earthen pot, a water-pot, கலசம். 2. A large sacrificial pot filled with water, used on sacred occasions; also, a sacred pot painted with mystic diagrams, adorned with leaves, flowers, &c., and sometimes carried in procession, கரகம். 3. A zodiacal sign, Aquarius, கும்பராசி. 4. The frontal globe of an elephant's forehead, which swells during the rutting season, யானைமத்தகம். Wils. p. 231. Kumbha. 5. The forehead, நெற்றி. 6. [*prov.*] The top of the back about the nape, பிடரிக்கும்பம். 7. [*prov.*] Round, prominent back of the shoulders, தோட்கும்பம். 8. A heap—as of rice, sand, &c., குவியல். 9. (*Rott.*) As கும்பஞ்சான். 10. A kind of arsenic, பலண்டுறுகம். 11. A kind of native arsenic, தாலம்பம்.

கும்பகலசம், *s.* A small pot of water, wound round with thread and otherwise ornamented, placed on heaps of grain, deified temporarily by incantations, and worshipped as the representative of a deity—as many pots being set as there are deities invoked on the occasion, மந்திரகும்பம்.

கும்பசலம், *s.* The water in the sacred pot, afterwards sprinkled on the people, or sipped by them, as possessing mystic virtue to cure disease, to expiate sin, &c., மந்திரகும்பநீர்.

கும்பவஸ்திரம், *s.* The cloth with which the sacrificial pot is adorned.

கும்பஸ்தாபனம், *s.* Setting up sacred pots for worship, religious ceremonies, &c.

கும்பதக்கணை-கும்பதட்சிணை, *s.* Money for the sacrificial pot as an offering to the gods, and taken by the officiating priest.

கும்பாபிஷேகம், *s.* The consecration of an idol, a king, &c., by pouring water from the sacrificial pots with appropriate ceremonies, &c., கும்பநீராபிஷேகம்.

கும்பமெடுக்க, *inf.* To carry in procession the sacred pot with appropriate ceremonies.

கும்பம்நிறுத்த—கும்பம்வைக்க—கும்பம் ஸ்தாபிக்க, *inf.* To set up a sacrificial pot for worship.

கும்பம்போட-கும்பங்கொட்ட, *inf.* To perform a ceremony to the goddess Durga, after recovery from small-pox; also sometimes in fulfilment of a vow.

கும்பகாரன், *s.* A potter, குயவன். Wils. p. 231. Kumbhakara.

கும்பசம்பவன்—கும்பசன், *s.* A name of Agastya, அகஸ்தியன். Wils. p. 231. Kumbhasambhava. 2. A name of Dron'a, a priest, celebrated in Bhàrata, துரோணசாரியன்; [*ex* கும்பம், a pot, *et* சன், born, the pot-born.]

கும்பமுனி, *s.* •Agastya, அகஸ்தியன். See கும்பயோனி.

கும்பயோனி, *s.* A name of Agastya, அகஸ்தியன். 2. A name of Vasisht'a, வசிட்டன். 3. A name of Dron'a, துரோணசாரியன். Wils. p. 231. Kumbhayoni; [*ex* கும்பம், pot, *et* யோனி, birth, the pot-born.]

கும்பச்சுரை, *s.* A species of gourd.

கும்பஞ்சரிய—கும்பஞ்சாய, *inf.* [*prov.*] To hang or droop—as the கும்பம் and head of a person while near death.

கும்பஞ்செய்ய, *inf.* To make a hillock over a grave, சமாதியின்மேல்மண்குவிக்க. 2. To inter the dead, especially such as died of cholera.

கும்பப்பிளவை, *s.* A cancerous disease on the top of the back, ஓர்பிளவை.

கும்பவாதம், *s.* One of the eight disorders of flatulence. (*M. Dic.*)

கும்பாரம், *s.* [*prov. vul. prop.* கும்பாசாரம்.] A large heap, a pile, &c., அம்பாரம்.

கும்பல், *s.* [*a change of* கும்பம்.] A heap, குவியல். 2. A clump, a cluster, a tuft, திரள். 3. A company, கூட்டம்.

கும்பல்கும்பலாயிருக்கிறார்கள். They are in small groups.

கும்பலாய்க்கூட—கும்பலாயடைய, *inf.* *v. n.* To flock into a crowd.

கும்பலாய்க்கூட்ட, *inf. v. a.* To crowd, to gather up, collect.

கும்பளம், *s.* A kind of gourd, பூசணி, Cucurbita Indica, *L.*

கும்பளமோசு, *s.* The சூரை fish, cut and dried, brought from the Maldives, மாலதீவின்மீன்.

கும்பளா, *s.* A kind of fish, ஓர்மீன், the rock-cod.

*கும்பன், *s.* The name of a Ráksha, the nephew of Rávan'a, ஓர்இராட்சதன்.

குமபா, *s.* (*for.*) An urn-shaped brass basin to eat from, ஓர்கலம்.

கும்பி, *s.* Mud, mire; a slough, சேறு. 2. Heated ashes, or ashes in fire for baking, &c., சுடுசாம்பல். 3. The belly, paunch, pot-belly, வயிறு. 4. A heap, குவியல்.

கும்பிக்கிரைதேடியலையல். Taking great pains in search of food for the belly.

ஒருசாண்கும்பிக்குப்பாடுபடுகிறான், *inf.* He is toiling for the belly, which is but one span long.

அடுப்புக்கும்பி, *s.* The heated ashes of the oven.

கும்பிடுசட்டி, *s.* [*prop.* கும்பியிடுசட்டி.] A gold-smith's vessel in which he keeps fire. 2. A pot in which fire is kept for warming in cold weather; a chafer, கணப்புச்சட்டி.

*கும்பி, *s.* An elephant, யானை. Wils. p. 231. Kumbhee. 2. Hell, நரகம். Compare கும்பிபாகம்.

கும்பி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To suppress the breath, to suspend the respiration—as a yogi. See கும்பகம்.

கும்பிடு, கிறேன், கும்பிட்டேன், வேன், கும்பிட, *v. a.* To join the two hands conically, கைகுவிக்க. 2. To worship, make obeisance with the hands joined and raised, கைகுவித்துவணங்க. 3. (*fig.*) To reverence, adore, worship, ஆராதிக்க. 4. To beg, solicit, crave, entreat, கெஞ்ச.

கும்பிடப்போனதெய்வங்குறுக்கேவந்ததுபோல் நீவந்தாய். I met you, as if I had met the god whom I was going to worship.

கும்பிடப்போனவன்தலையிலேகோயிலிடிந்துவிழுந்தாற்போல. As if the temple had fallen on the head of him who repaired to it for worship; said of occurrences quite opposite to expectation.

கும்பிடுகள்ளன், *s.* A hypocritical worshipper; a cunning person.

கையெடுத்துக்கும்பிட, *inf.* To worship or make obeisance, by raising the joined hands.

கோயில்கும்பிட, *inf.* To raise the hands in worship, at a temple, either in passing by, or as an attendant worshipper.

கும்பிட்டகைக்குக்கொடுக்க, *inf.* To make a present to the bridegroom or bride, and sometimes to others, when they raise their hands in reverence to their superiors on the day of marriage, &c., or to a girl on becoming marriageable.

கும்பிடாதவனைக்கும்பிட, *inf.* To be obliged to serve or ask favors of a mean person.

கும்பிடரி, *s.* [*local.*] A bundle of sheaves given to the chief of the village or to the temple.

கும்பிடுகிளிஞ்சில், *s.* A species of cockle, a bivalve shell.

கும்பிடுபூச்சி, *s.* [*prov.*] A class of insects bordering on the vegetable kingdom, whose feelers resemble hands raised in worship.

கும்பிடு, *v. noun.* Worship, obeisance by raising the hands, வணங்குகை.

கும்பிடுபோட, *inf.* To venerate; to worship by raising the joined hands.

*கும்பிபாகம், *s.* One of the seven, chief hells, எழுநரகத்திலொன்று. Wils. p. 231. Kumbheepaka.

கும்பு, *s.* [*vul.*] A crowd, a collection, a group, கூட்டம்.

சனங்கும்புகும்பாய்ப்போகிறது. The people are passing in companies or crowds.

கும்பு, கிறது, கும்பினது, ம், கும்ப, *v. n.* [*vul.*] To become smoky in a slight degree—as food, கும்பிப்போக.

கும்பலடிக்கிறது. It smells smoked.

கும்பற்சாதம், *s.* Smoked rice (when boiled without a proper addition of water).

கும்பிப்போனகறி, *s.* Smoked curry.

கும்மட்டம், *s.* (*Hind.*) A globe-lantern of paper, &c., விளக்கேற்றக்காகிதமுதலியவற்றாற்கட்டுங்கூடு. 2. The cupola or dome of a pagoda, &c., கோவிலின்குபி. 3. (*Rott.*) Arch, vault, arched roof, வளைவு. 4. A kind of small drum, ஓர்வாத்தியம்.

கும்மட்டி, *s.* [*prov.*] Romping, jumping about, leaping, moving about; often, a kind of rustic dance, குதிகொண்டுவிளையாடல். (*a corruption of* கும்மாளம்.) 2. A drum—as கும்மட்டம்.

கும்மட்டிகுத்த — கும்மட்டியடிக்க, *inf.* To jump and romp about.

கும்மட்டிக்கூத்து, *s.* The கும்மட்டி dance.

கும்மலி, *s.* [*prov.*] A corpulent, stout girl, பருத்தவள்.

கும்மாயம், *s.* [*local.*] Lime, mortar, சுண்ணம்பு.

*கும்மாளம், *s.* Jumping, romping, moving about—as children, calves, &c.; often, a kind of rustic dance, குதித்துவிளையாடுகை. Wils. p. 230. Kumala.

கள்ளுவயிற்றிலேகும்மாளங்கொட்டுகிறது. The toddy in his stomach is fermenting (causing him to jump and romp about).

வயிறுகும்மாளங்கொட்டுகிறது. The bowels are rumbling (indicating indigestion or a disordered state of the stomach).

கும்மி, *s.* [*probably a corruption of* கொம்மை.] Dancing, especially among young women—accompanied with the clapping of hands to a tune sung by all, ஓர்விளையாட்டு. 2. A species of poem in which the verses are of the same metre as that sung in the கும்மி dancing, ஓர்வகைப்பாட்டு.

கும்மியடிக்க, *inf.* To play the கும்மி dancing.

கும்மிப்பாட்டு, *s.* Songs, sung to the கும்மி dance. 2. Stanzas of the கும்மி poem.

சாஸ்திரக்கும்மி, *s.* [*in Christian usage.*] A satirical poem, censuring the superstitions of the Hindus, ஓர்நூல்.

கும்மு, கிறேன், கும்மினேன், வேன், கும்ம, *v. a.* [*vul.*] To wash—as fine linen, &c., gently working and pressing with the hands, சீலைகும்ம.

கும்மிப்பிழிய, *inf.* To wash and press fine linen.

கும்மிப்பிசைய, *inf.* To knead—as dough.

கும்மல், *v. noun.* Pressing and washing, அடித்தல். 2. *s.* A sickle—as குமல், அரிவாள்.

கும்மெனல், *v. noun.* A word expressing surprise, or a sense of greatness—as of excessive darkness; also, a sound in the ears when partly stopped with water, &c.
கருங்கும்மென்றிருக்கிறது. It is very dark.

குயக்காலம், *s.* A shrub, திலக்கடம்பு, Justicia, *L.*

குயத்தினலகை, *s.* A plant, திலவாகை, Cassia, *L.*

குயபீசகம், *s.* A tree, எட்டி, Strychnos, *L.*

குயமயக்கு, *s.* Intricacy, im-methodicalness, confusion. In சித்தர்பாடல். See குசமசக்கு.

*குயம், *s.* Female breast, முலை. Wils. p. 225. Kucha. 2. Juvenility, youthfulness, இளமை. (Compare கயம்.) 3. A sickle, a reaping hook, a curved knife; wrought iron, கொடுவாள். 4. Sacrificial grass, தருப்பை. Wils. p. 235. Kus'a.

குயவரி, *s.* A tiger, புலி. Compare கொடுவரி.

குயவர், *s.* Potters; [*ex* கு, earth.] See குசவர்.

குயவன்மணை—குசவன்மணை, *s.* The foot of a potter's wheel.

குயவிரி—குயவிரிவு, *s.* [*prov.*] Unevenness of surface, or a flaw in a potter's vessel, as it comes from the kiln.

குயவு, *s.* Car; coach, தேர். (நிக.)

குயா, *s.* A kind of cotton tree, கோங்கு. (*M. Dic.*)

குயிலாயம், *s.* [*a change of* குலாயம்.] A bird's nest, பறவைக்கூடு. 2. A pottery, potter's work-shop, மட்கலம்வனையுங்கூடம். 3. A partition or cavity in a wall, சவறை.

குயிலு — குயில், கிறேன், குயின்றேன், வேன், குயில, *v. a.* To make, form, execute, or work in general; *hence*, to enchase, or set—as precious stones, இரத்தினம்பதிக்க. 2. To utter, tell, சொல்ல. 3. To call, invite, கூப்பிட. 4. To shape, effect, form, செய்ய. 5. To plat, braid, intwine, பின்ன. 6. To build, construct, &c., கட்ட. 7. To bore, perforate, துளைக்க. 8. *v. n.* To be thick, close, crowded, நெருங்க.

குயிறல். A form of the verbal of குயில்.

குயிலுவம்—குயிலுவத்தொழில், *s.* Playing on stringed instruments, drums, tabrets, clarionets, &c., நரம்பு முதலிய கருவித்தொழில்.

குயிலுவர், *s.* (*pl.*) Lute-players, fiddlers and other players on stringed instruments; also, players on drums, tabrets, clarionets, horns, &c., நரம்புமுதலியகருவியாளர். 2. Workers in skins, leather drums, &c., தோல்வினைஞர்.

குயில், *s.* Words; declamation, சொல். 2. The Koil or Indian cuckoo, a bird celebrated in Indian poetry for the sweetness of its notes, ஓர்பறவை. It is said to lay its eggs in a crow's nest, and leave them to be hatched and the young reared. There are two species; the black and the striped; [*ex* குயில், to utter.] (See கருங்குயில், புள்ளிக்குயில், or வரிக்குயில்.) 3. A tube, pipe, a hollow cylinder, துளையுடைப்பொருள்.
அவள்பாடுகிறதுகுயில்கூவுகிறதுபோலிருக்கிறது.... She sings as a cuckoo.

குயில்கூவ, *inf.* To sing, to warble—as the குயில். 2. [*prov.*] To present a pleasing, thriving aspect—as growing corn.

குயின்மொழி — குயில்மொழி, *s.* Soft, sweet speech, like the notes of a Koil bird. 2. (*fig.*) Licorice, அதிமதுரம். (*M. Dic.*)

குயிலன், *s.* Indra—as having assumed the disguise of a Koil bird, during the flight from his paradise to Srekáli in Southern India, இந்திரன்.

குயிற்று, கிறேன், குயிற்றினேன், வேன், குயிற்ற, *v. a.* [*a form of the verb* குயில்.] To enchase, to set stones, பதிக்க. 2. To make, construct, form, செய்ய. 3. To utter, tell; to express, declare, சொல்ல.

குயின், *s.* [*improp.* குயில்.] A cloud, மேகம். (நன்.)

*குயுத்தி, *s.* False wit; false argument, கெட்டயுத்தி.

குய், *s.* Spicy, rich, seasoned curries, தாளித்தகறி. 2. (*p.*) Burnt odors; incense, odoriferous smoke, நறும்புகை.

*குய்யகர், *s.* A class of demigods in the service of Kuvéra, to whose custody his treasures were committed, ஓர்தேவகணம். Wils. p. 294. Guhyaka. (காசி.)

குய்யகலோகம், *s.* The region next above the earth, being the haunt of the Guhyaka demigods. (காங்.)

*குய்யம், *s.* That which is secret, mystical, hidden or private, மறைவு. 2. Pudendum muliebre, பெண்குறி. 3. Genitale virile, ஆண்குறி. 4. The anus, அபானவாயில். 5. Dissimulation, deceit, hypocrisy, கபடம். Wils. p. 294. Guhya.

குய்யபீசகம், *s.* The எட்டி tree, See குயபீசகம்.

*குரகதம், *s.* [*ex* குரம், hoof, *et* கத, going.] A horse, குதிரை. (Compare துரகதம்.) 2. A kind of native arsenic, குதிரைப்பற்பாஷாணம். (*M. Dic.*)

குரகம், *s.* A talking bird, the நாகணவாய்ப்புள், or jackdaw, (*Hind.*) Mainate; Gracula, *L.* 2. (சது.) Water birds, நீர்வாழ்பறவை.

குரகர், *s.* A race of people said to inhabit Saka Dwipa, சாகதீவார். (காங்.)

குரக்கன், *s.* [*prov.*] A kind of red millet, raggy, கேழ்வரகு, Eleusine coracana, *L.*

குரக்கனட, *inf.* To transplant the குரக்கன் plants from the nursery or otherwise.

குரங்கம், *s.* The எட்டி tree, Strychnos. (*M. Dic.*)

*குரங்கம், *s.* A deer, an antelope, மான். Wils. p. 232. Kuranga. 2. An animal in general, விலங்கின்பொது. In this sense, not குரங்கம், but குராகம். Wils. p. 274. Khuraka.

குரங்கன்சுறு, *s.* A species of the சுறு fish.

குரங்கி, *s.* The moon; *lit.* the anteloped—the dark figure in the moon being likened to an antelope, சந்திரன்.

குரங்கு, *s.* [*adjectively* குரக்கு, *in poetry.*] A monkey, வானரம். 2. A climbing plant, முசுமுசுக்கை. 3. An animal in general—as குரங்கம், குராகம்.

குரங்கின்கைப்பூமாலை. A flower-garland in the hands of a monkey; i. e. a thing of value with one who knows not its use.

குரங்குக்குந்தன்குட்டிபொன்குட்டி. Even to a monkey her young is as gold; i. e. one thinks highly of his own.

குரங்குதன்குட்டியின்கையைக்கொண்டுபதம்பார்க்கிறதுபோலப்பார்க்கிறான். He tests it by another, as a monkey does a new object by the hand of her young.

குரக்குமனம், *s.* A monkey-mind, retaining its grasp, notions, &c., without inquiry, or discrimination.

குரக்குமுகம் — குரங்குமுகம் — குரங்குமூஞ்சி, *s.* A monkey face.

குரக்குவலி—கொறுக்குவலி, *s.* A kind of disease with which monkeys are commonly said to be affected.

குரங்காட்டம், *s.* Apishness; apish tricks, antics, &c. 2. *v. noun.* Harassing, annoying, treating one as a mere monkey.

குரங்காட்டமாட—குரங்காட்டங்கொள்ள—குரங்காட்டம்பண்ண, *inf.* To annoy, to treat one as a monkey.

குரங்குகடியன், *s.* [*prov.*] A cocoanut, injured at the top, as if by a monkey, squirrel, &c., பழுதுற்றதேங்காய்.

குரங்குச்சம்பந்தம், *s.* The mode of a monkey's hold, grasp, &c., to which the hold of the soul on God is sometimes compared.—*Note.* The hold of God on a soul is compared to that of a cat on its young.

குரங்குச்சேட்டை - குரங்குச்சேஷ்டை, *s.* Mean, monkeyish tricks—as scratching and eyeing carefully; apish imitation.

குரங்குச்சேட்டைபண்ண, *inf.* To play apish tricks; to act meanly; to mimic, in a low manner.

குரங்குப்பிடி, *s.* A firm grasp—as that of a monkey. 2. Dogmatism in opinion, பிடிவாதம். 3. Urgency, importunity.

குரங்குவலி, *s.* Numbness and pain in the limbs with shivering; a spasmodic affection, incident to puerperal women, ஓர்நோய்.

குரங்கு, கிறது, குரங்கினது, குரங்கும், குரங்க, *v. n.* To bend, bow, incline, stoop, propend; to be prone—as beasts, குனிய. 2. To be curved, to curl and hang down, வளைந்துதாழ. 3. To bow, to make an obeisance, to render adoration, வணக்கஞ்செய்ய. 4. To relent, grieve, pity; feel sorry, இரங்க. (சது.) This word is sometimes pronounced குறங்கு.

குரங்குளை, *s.* The curled mane. (*p.*)

குரங்கல், *v. noun.* Humiliation, தாழ்தல். (*Rott.*)

குரங்கு; *v. noun.* Bent knee; the lap; the thigh, தொடை. (See குறங்கு.) 2. [*in jewelry.*] A hook, clasp, link, கொளுக்கி.

குரங்குதல், *v. noun.* Mercy, இரங்கல். 2. Reverence, வணங்கல். (*Rott.*)

*குரச்சை, *s.* A horse's hoof, குதிரைக்குளம்பு. (*from Sans. Khura,* "a horse's hoof.") Wils. p. 274.

குரஞ்சி, *s.* A kind of tune, ஓரிராகம்.

நாட்டைக்குரஞ்சி, *s.* A tune. See நாட்டை.

மேகக்குரஞ்சி, *s.* A tune which, when sung, is supposed to produce rain.

*குரண்டகம், *s.* A species of மருதோன்றி, with green flowers, Lawsonia, *L.* Wils. p. 232. Kuran't'aka.

*குரண்டம், *s.* A stork, கொக்கு. (நிக.) Probably from *Sans. Kurankara,* "the Indian Crane." Wils. p. 232.

*குரத்தம், s. Noise, clamor, acclamation, ஆரவாரம். (சது.) from *Sans. Kurava*, a bad or harsh sound. Wils. p. 232.

குரத்தி, s. (*fem. of* குரவன்; see குரவர்.) A mistress, a matron, the lady of the house, தலைவி. 2. Wife of a priest, குருவின் மனைவி. 3. A mother, or any venerable, elderly woman, ஐயை.

குரப்பம், s. (*Tel.* ಗೊರಪಮು.) A curry-comb, குதிரைதேய்க்குங்கருவி.

குரப்பமிட, *inf.* To curry a horse.

குரமடம், s. Assafœtida, பெருங்காயம். (*M. Dic.*)

*குரம், s. A horse's hoof; also, a hoof in general, குதிரைமுதலியவற்றின் குளம்பு. Wils. p. 274. KHURA. 2. Sacrificial grass—as குசம், தருப்பை. 3. A cow—as குடம், பசு. (சது.) 4. A creeping plant, பாகல், Momordica, *L.*

குரம்பு, s. An artificial bank or dam, a causeway, செய்வரம்பு. 2. Ridges, banks in rice-fields, or garden-beds, செய்கரை.

குரம்பை, s. Body, உடல். 2. A hut, hovel, shed, சிறுகுடில். 3. A bird's nest, பறவைக்கூடு. 4. (சது.) An egg, முட்டை. Compare குடம்பை.

குரல, s. (*from Sans. Kura*, to sound.) Voice, the voice of one person as distinguished from another, மிடற்றுப்பிறக்கும் இசை. 2. A good or clear voice; a singing voice, சந்தம். 3. The voice of birds, beasts, &c., sound; musical sound, tone, ஓசை. 4. (சது.) The throat; trachea, windpipe, மிடறு. 5. The first of the seven musical tunes, produced from the throat, மிடற்றிசை. (See இசை.) 6. The same tune on the lute or guitar, யாழ்நரம்பிஞேரோசை. 7. The first or lowest string of the guitar, யாழின் ஓர்நரம்பு. 8. A tree, பாதிரிமரம். (*M. Dic.*)

குரல்காட்ட, *inf.* To cry aloud, to whoop, roar, bellow, &c. 2. To call a person. 3. To crow—as a cock; to screech—as an owl, &c.

குரல்மாறிப்பேச, *inf.* To speak with a feigned voice.

குரல்கம்ம—குரல்கம்மியிருக்க, *inf.* To be hoarse—as the voice.

குரல்கனக்க, *inf.* To become thick, heavy, masculine, &c.—as the voice. 2. To become hoarse or thick—as the voice by drinking, &c.

குரலடைப்பு, *v. noun.* Hoarseness.

குரல்வித்தியாசம், s. Difference in voice. 2. Change in a person's voice.

பறவைக்குரல், s. The chirping of birds.

நெடுங்குரல், s. A long clamor.

நெடுங்குரல்பாய்ச்சியழ — நெடுங்குரல்விட்டழ, *inf.* To utter long and mournful cries—as at funerals.

வெடித்தகுரல், s. A rough, coarse, dissonant voice. 2. A loud thundering voice.

வேற்றுக்குரல், s. A strange voice. 2. A sound (of an animal, &c.), that has not been heard before.

கூக்குரல், s. A great or loud noise, clamor. See under கூ.

குரல்நயம், s. A good, singing voice.

குரலோசை, s. The vocal sound, the voice.

குரலெடுத்துப்பாட, *inf.* To lift up the voice and sing.

குரலெழும்ப, *inf.* To rise—as the voice to higher notes, or to a higher pitch.

குரல்தெளிய, *inf.* To become clear—as the voice in singing.

குரல்விட்டுப்படிக்க, *inf.* To sing out, to give vent to the voice in singing or reciting.

குரல்குளிற, *inf.* To jar—as instruments out of tune.

நல்லகுரல், s. A fine voice.

குரல்வளை, s. The windpipe, the trachea, தொண்டை; [*ex* வளை, orifice.]

குரல்வளையைநெரிக்க, *inf.* To squeeze one's throat.

குரல்வளையையறுக்க, *inf.* To cut the throat.

*குரல், s. A curl, a lock of hair, மயிர்ச்சுருள். Wils. p. 232. KURALA. 2. (சது.) Women's hair, பெண்மயிர். 3. Feathers, plumage; wings, இறகு. 4. (*Tel.* ಗೊರಲು.) Millet, தினை. 5. Ears of corn, spike, கதிர்.

*குரவகம், s. A plant, whose flower changes not its color in withering, வாடாக்குறிஞ்சி. 2. A flowering tree, one of the மருதோன்றி. Wils. p. 232. KURAVAKA.

குரவம், s. The date-tree, பேரீந்து. 2. A plant from which a medicinal drug is extracted, கோட்டம். 3. The குரவு shrub. 4. Perfume—as குரவு.

குரவரம், s. A winding plant, குறிஞ்சா. (*M. Dic.*)

குரவர், s. (*sing. mas.* குரவன். *fem.* குரத்தி.) Elders; persons qualified by age, family connexion, respectability, knowledge or authority to give advice and exercise control—as parents, kings, statesmen, senators, &c., பெரியோர். 2. Gurus; religious preceptors, ministers or teachers, குருக்கள்.

ஐங்குரவர், s. The five superiors to be venerated and obeyed. See under ஐந்து.

குரவன், s. (*sing. of* குரவர்.) Brahma—as the father or progenitor of all, பிரமன். See குரவர்.

குரவு, s. A shrub, usually found in barren lands, ஓர்செடி, Webera corymbosa, *Willd. L.* 2. Perfume, a gratifying odor, நறுமணம்.

*குரவை, s. A dance, கூத்து. (சது.) 2. A rural, noisy sport, accompanied with dancing hand in hand—especially among females of the ploughman's caste (*vulgarly* குலவை), கைகோத்தாடல். 3. A harsh sound; a loud cry, ஒலி. Wils. p. 232. KURAVA. 4. Sea, கடல்.

குரவைக்கூத்து, s. The குரவை dance of females.

குரவையாட, *inf.* To dance the குரவை dance.

குரவையிட, *inf.* To make a loud cry; to bawl.

குரா, s. The குரவு shrub.

குராசாணி, s. A medical plant, ஓர்பூடு, Heliotropium Ceylanicum, *L.*

குராசாணியோமம், s. Black Henbane, Hyosciamus niger, *L.*

குரால், s. A dun, tawny color, கபிலநிறம். 2. A cow, பசு. (compare குரம்.) 3. A kind of owl, கோட்டான். (நிக.)

குரிகிற்றூளி, s. [*local.*] A kind of root, ஓர்கிழங்கு.

குரிசில், s. A person of dignity, respectability, &c., பெருமையிற்சிறந்தோன். 2. A king, அரசன். 3. A man, ஆண்மகன்.—*Note.* For the orthography, compare பரிசில், அடிசில், இளிஞ்சில், இடிஞ்சில்.

குரீஇ, s. A small bird. See under குருவி. (*p.*)

குழாயிலடைக்க, *inf.* To deposit in a bamboo or other tube—as silk, &c., for preservation—as amulets, &c.

குழாயில்வார்க்க, *inf.* To fill a tube; to pour or cast in a tube.

குழாய்மூங்கில், *s.* A hollow, tubular bamboo.

குழாயோடு, *s.* [*local.*] A kind of tubular tile, ஓர்வகையோடு.

குழி, *s.* A pit, a hole, a hollow, a cavity, a dimple, a depression, an excavation, பள்ளம். 2. [*local.*] A square foot, சதுரஅடிக்குழி. 3. A cubic foot, கனவடிக்குழி. 4. [*prov.*] A square of twelve feet, *in land-measure*, பன்னிரடிச்சதுரக்குழி. 5. A well, கிணறு. 6. A tank, குளம். 7. The belly, வயிறு. 8. [*prov.*] A cavity at the bottom of a well from which to fill the basket when the water gets low, பட்டைக்கிடங்கு. 9. A grave, usually in composition—as பிரேதக்குழி.

குழியிலேபோவாய். May you go to the grave; i. e. may you be ruined, *a curse.*

குழிக்குத்து, *s.* [*prov.*] A hole, made for plants in transplanting.

குழிக்குத்துக்கோல், *s.* A short stick, used in making the குழிக்குத்து.

குழிபறிக்க—குழிதோண்ட, *inf.* To make a hole or a pit.

குழிதிறக்க, *inf.* [*local.*] To open the sacred pit, with appropriate ceremonies, preparatory to the Mohurrum feast.

குழிமூட, *inf.* To fill up the sacred pit. See குழிதிறக்க.

குழியிற்புதைக்க, *inf.* To bury; to conceal. 2. To bury the dead, to entomb.

குழிவிழ, *inf.* To form—as dimples or hollows in the cheeks, ulcers, &c. 2. To form, to be worn, &c.—as hollows in floors, or other surfaces.

குழியில்விழ, *inf.* To fall into evil, vice, &c; *lit.* into the pit.

குழியடிக்க, *inf.* To make holes in stones—as a stone-cutter.

குழிக்கிட்டி, *s.* [*local.*] A kind of கிட்டிபுள்ளு game among boys, ஓர்விளையாட்டு.

குழிச்சட்டி, *s.* A kind of earthen pan with hollow cavities for frying cakes.

குழிப்புண், *s.* An ulcer in which holes are formed.

குழியச்சு, *s.* Moulds for making gold beads.

குழியம்மி, *s.* A hollow grind-stone. See under அம்மி.

குழித்தைலம், *s.* Pit-oil; i. e. oil extracted in a pit.

குழிநரி, *s.* A fox, ஓர்நரி.

குழிமுயல், *s.* A rabbit, a coney, ஓர்முயல்.

குழிப்பிள்ளை, *s.* A cocoanut, planted deep—not to be transplanted.

எத்தனைகுழி. How many square feet, or how many குழி?

குழிக்கணக்கு, *s.* Square measure, reckoning by square feet, &c.

குழிமாற, *inf.* [*in arith.*] To square; also, to multiply a number into another, குழிபெருக்க.

குழிமாற்று, *v. noun.* [*in arith.*] Table of squares; also, of multiplication, குழிப்பெருக்கம்.

பெருங்குழி, *s.* [*in arith.*] The squaring, or multiplication of integral numbers.

சிறுகுழி, *s.* [*in arith.*] The squaring, or multiplication of fractional or mixed numbers.

குழிவெட்டி, *s.* A grave-digger, பிரேதக்குழிதோண்டுகிறவன்.

அட்டைக்குழி, *s.* A pit of leeches, especially, a pit in hell, said to be infested with leeches.

குழி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To be formed—as a pit, a hole, a cavity; to be worn hollow.

குழிந்தகண், *s.* Sunken eyes.

குழிந்தெடுக்க, *inf.* [*prov.*] To scrutinize, to be very inquisitive, ஆராய்ந்துபார்க்க.

குழியவிட, *inf.* [*prov. in jewelry.*] To form the halves of hollow gold-beads, which are afterwards soldered together.

குழிவு, *v. noun.* Hollowness, depression, cavity, குழிதல்.

குழி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*vul.*] To form pits, hollows, &c.; to hollow, excavate; to make holes, to depress, to sink, to form cavities, குழியாக்க.

குழிப்பு, *v. noun.* Forming pits, hollows, &c., குழிசெய்கை. 2. Hollowness; a hollow, a depression, தாழ்வு.

குழித்தாமரை, *s.* A water-plant, ஆகாசத்தாமரை, Pistia, *L.*

குழிநாவல், *s.* A species of the நாவல் tree.

குழிசி, *s.* A pot, பானை. 2. A large water-pot, மிடா. (*p.*)

குழிப்பு, *s.* (See under the verb, குழி.) A peculiar harmonic rhythm in verse, in which the மோனை rhyming of the metrical feet are discarded, but the correspondence of the letters, or syllables, ending each foot and beginning the next forms a pleasing harmony—as in the following:

அணியுடன்றபரி, பரியுடன்றகரி, கரியுடன்றகொடி, யணியுதேர்—மணியுடன்றதனு. தனுவுடன்றகணை, கணையுடன்றகணை, மலிதரப்—பிணியுடன்றவம, ரமருடன்றவுட, வுடலுடன்றவுயிர், பிரிதரப்—பணியுடன்றகுய, வுயருடன்றபடை, படையுடன்றமறை, யரசனுல்.

The horses chafed on their bits—The elephants were rendered impetuous by the horses—The cars, decked with flags, were violently propelled by the elephants—The bows tinkled with their bells—The arrows were shot forth from the bows—The blood gushed from the arrows' wounds—The battle fiercely raged—The bodies were sore smitten in the battle—The souls separated and fled from the bodies. Thus the pious chief (Joshua), high raised on his jewel-decked chariot, vanquished the opposing hosts.

Here, the feet are not regarded, but குழிப்பு forms the harmony. The variety used is தனதனந்ததன—தனதனந்ததன—தனதனந்ததன—தனதனு. (*Besch. Shen. Tam. Gram.*)

குழிமி, *s.* [*local.*] A sluice, மதகு. 2. The snout of a vessel, பாத்திரத்தின்மூக்கு.

குழிமிட்டான், *s.* A plant, நத்தைச்சூரி, Spermacoce, *L.*

குழியம், *s.* Rotundity, globularness; cylindricity, திரட்சி. (*from Sans. Gulèe.*) (*p.*) 2. A kind of curved bludgeon. See பாராவலயம்.

குழு, *s.* Class, society, band; company of the same trade, profession, &c., கூட்டம். 2. A lady's female retinue or companions; a company of females, மாதர்கூட்டம். 3. Flock, herd, swarm, shoal, ஆடுமாடுமுதலியவற்றின்கூட்டம். 4. (*Sans. Ghusha.*) Wit, ingenuity; witty expressions, fanciful or shrewd intimations, விரகு.—*Note.* In Jaffna, this word is sometimes used for கொழு—as in குழுக்கடா, குழுக்காலி, &c.

குழுவன், *s.* An attendant on a fowler, குறவனின்பாங்கன். (See குருவன்.) 2. A witty person, விரகுடையவன்.

குழுவிட, *inf.* To use witty or humorous expressions or mimicking gestures, &c.

குழுமுரல், *s.* [*prov.*] A thick kind of needle-fish, commonly முரல், ஓர்மீன்.

குழுமு, கிறேன், குழுமினேன், வேன், குழும, *v. n.* (*from Sans. Kula.*) To collect or flock together—as men, animals, &c., கூட.

குழுமல், *v. noun.* Collecting, associating, &c. 2. Crowd, multitude, கூட்டம்.

குழுவு, கிறது, குழுவினது, குழுவும், குழுவ, *v. n.* (*from Sans. Kula.*) To collect, to flock together, கூட. 2. To associate, or unite with, சேர. In the gerund it becomes sometimes குழீஇ—as in ஐவரொடுகுழீஇ, having associated with the five Pàndavas.

குழுவல், *v. noun.* A crowd, கூட்டம்.

குழூஉ, *s.* [*a poetic form of* குழு.] Class; company; flock, கூட்டம்.

குழூஉக்குறி—குழூஉக்குறிச்சொல், *s.* A cant or conventional term, peculiar to a class or body of men, ஒவ்வொரு[illegible]ட்டத்தார்தம்மில்வழங்குஞ்சொல்.

குழூஉப்பெயர், *s.* [*in gram.*] A noun of multitude. 2. A noun denoting a particular class—as அமண்; also, a derivative from such a noun—as அமணர்.

குழை, *s.* Young leaves, sprouts, foliage, boughs, twigs, தளிர். 2. Soft, well trodden mud; slime, சேறு. 3. Ear-jewels, குண்டலம். 4. (சது.) A tube, துளையுடைப்பொருள். 5. The நெய்தல் plant.

மரங்குழைமண்டிப்போயிற்று. The tree abounds with thick foliage.

குழைக்காடு, *s.* [*prov.*] The country—as distinguished from the city; a jungle, compared with more cultivated parts—as பட்டிக்காடு.

குழைக்காட்டான், *s.* A rustic; a clown.

குழைநாற்றம் — குழைவீச்சம், *s.* An unpleasant, leafy or grassy smell.

குழைமறைவு, *v. noun.* Foliage, shrubbery, trees, &c., intercepting vision. 2. Sculking, &c., from creditors.

குழைபிடிக்க, *inf.* [*prov.*] To obstruct an affair—from the practice of the Kandians, holding a bough before a person, as a sign of protestation, or of forbidding him to proceed.

குழையடிக்க, *inf.* To recite incantations while shaking and drawing a handful of Margosa twigs over a sick or possessed person or animal, or one bitten by a snake. Mesmeric effects, similar to those occasioned by drawing the fingers in a particular way over the face of a patient, are sometimes produced by the above process, and ignorant people attribute them to the power of the incantations. 2. To wheedle; to use artful means in order to secure the interest of a person.

குழை, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To be soft, mashed, pulpy, slimy, &c., சோறுமுதலியனகுழைய. 2. To become tender—as the mind by love, friendship, pity, &c., மனமிளக. 3. To be social, and friendly, sometimes with a clandestine purpose in view, சேர்ந்துசெறிய. 4. To fade, shrink; to become spoiled—as flowers, or twigs by use in the hand, மலர்முதலியனவாட. 5. To become discouraged, dismayed, தைரியங்குறைய. 6. To be bent—as a bow; to be curved, to be coiled up, வளைய.

மோப்பக்குழையுமனிச்சமுகந்திரிந்து நோக்கக்குழையும்விருந்து. The Anicham flower fades in being *smelt;* and the feast fades on a *change* of countenance (of host or guest).

இழையத்தீட்டிக்குழையவடித்தல். Beating the rice well and straining it when it is boiled to a pap.

குழைந்துபரிமாறுகிறார்கள். They live in mutual harmony.

குழைகறி—குழைந்தகறி, *s.* Mashy vegetable curry.

குழைசாந்து, *s.* Coarse mortar—as used in building walls, or rough plastering.

குழைசுண்ணம்பு, *s.* Lime for plaster, white-washing, &c.; macerated lime.

குழைசேறு, *s.* Soft mire, slime.

குழைந்தசோறு, *s.* Rice over-boiled.

குழைந்தமனம், *s.* A relenting, tender mind, இளகியமனம்.

குழையல், *v. noun.* Any thing mixed or mashed, &c., குழைந்தது.

குழையற்கறி, *s.* Mashy or pulpy curry. 2. Curry over-boiled.

குழையற்சாதம், *s.* Rice over-boiled.

குழையற்பனாட்டு, *s.* [*prov.*] Dried palmyra pulp grown mashy.

குழைவு, *v. noun.* Mashy state, குழைகை. 2. Tenderness of mind, pity, உருக்கம். 3. Fading, languishing, &c., வாட்டரவு.

குழைவிக்க, *inf.* To mash; to cause to be mashy or pulpy by over-boiling. 2. To make tender, or susceptible of feeling.

குழை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To macerate, mash; to reduce to pulp, to make soft, to reduce consistency by mixing, குழையச்செய்ய. 2. To bend—as a bow, வளைக்க. 3. *v. n.* To send out sprouts, to sprout, தளிர்க்க.

காரியங்களையொன்றாய்க்குழைக்கிறான். He is mixing up different affairs.

குழைத்துச்சாப்பிட, *inf.* To mix (the rice and curry well) and eat. 2. To mix medicines and take them.

குழைத்துத்தீற்ற — குழைத்தூட்ட, *inf.* To mash food and feed a child.

சாந்துகுழைக்க, *inf.* To temper or macerate mortar.

மண்குழைக்க, *inf.* To work clay or other soft earth into a mass.

விபூதிகுழைக்க, *inf.* To mix up sacred ashes into a thin paste for marking the body.

குழைப்பு, *v. noun.* Mashing, macerating. 2. Tempering mortar, &c.

குழைச்சு—குழைச்சி, *s.* [*prov. in Madras,* குளசு.] A bow, a loop; a bight in a string, cord or rope, கயிற்றின்குளசு. 2. A joint of the body, an articulation; *especially*, a socket or hinge joint—as in the arms, legs, &c., யாக்கைப்பூட்டு. 3. The eye or socket of a hoe, adze, &c.—as bent or doubled in, ஆயுதக்குளசு. 4. A knot, முடிச்சு.

குழைச்சுப்பட்டுப்போக, *inf.* To be coiled or looped—as a bight in a rope.

குழைச்சுமண்வெட்டி, *s.* A hoe with a socket to receive the handle.

குழைச்சுவிட்டுப்போக, *inf.* To be disjointed, dislocated, &c. 2. To be broken—as the socket of a hoe, &c.

குளகம், *s.* A corn measure, மரக்கால். 2. One-eighth of a measure or நாழி, ஆழாக்கு.

***குளகம்**, *s.* One of the four species of poems; that in which the connection of a subject and its finite verb, or predicate, is not expressed in the same stanza but in one following, பலபாட்டொருவினைகொள்ளுஞ்செய்யுள். 2. A curious poem consisting of short letters only, குற்றெழுத்துத்தொடர்ந்தசெய்யுள். 3. Protraction of the government of the noun or verb through several stanzas, instead of giving the terminal word in each, பலபாவிற்செல்லும்பொருட்டொடர்பு. Wils. p. 233. KULAKA.

குளகன், *s.* Skanda, சுப்பிரமணியன். (காந்.) See குழகன்.

குளகு, *s.* Herbs, grass, leaves, &c., the food of graminivorous animals, இலையுணும்விலங்குணவு. 2. Leaves, pot herbs—as vegetable food, இலைக்கறி.

குளுகுளென—குளுகுளுத்துப்போக, *inf.* To grow soft—as jaggery; to become pulpy, rotten or putrid, நெகிழ்ந்துகெட்டுப்போக.

குளுகுளென்றுபோகும். It will become soft.

குளுகுளென்றழுகிப்போயிற்று. The fruit is grown rotten.

குளுகுளென — குளக்கட்டியென, *inf.* To gurgle, to sound—as water when squirted, &c.

குளுகுளுவென்றுகொதிக்க, *inf.* Said of the noise of boiling water, தளபிளென.

பார்ப்பான் குண்டிகையிருந்தநீரும் குளுகுளுகொதித்ததன்றே. (When Raman touched the string of his bow), the water in the Brahman's ewer sounded as if it were boiling.

குளக்கோட்டன், *s.* A former king in the northern part of Ceylon, celebrated for constructing and repairing temples and tanks.

குளசு—குளச்சு, *s.* As குழைச்சு.

குளஞ்சி, *s.* [*vul.*] Orange, கிச்சிலி.

*குளம், *s.* A tank, a pond, தடாகம், ஏரி. Wils. p. 239. Koola. 2. Jaggery or coarse sugar, molasses, வெல்லம். Wils. p. 294. Gula. 3. The frontal part, the forehead, நெற்றி. Wils. p. 233. Kula.

குளமுடைந்துபோகும்போதுமுறைவிதமா? When the bank of a tank has given way, men do not stop to dispute about each one's share (of the work); i. e. when suffering evils, we should seek first to remove them.

குளக்கட்டு, *v. noun.* Constructing the walls or banks of a tank, குளத்தின்கரைக்கட்டு. 2. The artificial bank of a tank.

குளக்கரை—குளங்கரை - குளத்தங்கரை —குளத்தாங்கரை—குளத்தோரம், *s.* The margin or banks of a tank.

குளக்கால், *s.* [*local.*] A channel from a river to feed a tank.

குளத்துள்வாய், *s.* The deep part of a tank near the flood-gate.

குளத்துக்குப்போக, *inf.* To go to the tank; i. e. to stool.

குளக்கொட்டு, *s.* [*local.*] A kind of small hoe or spade.

குளக்கொட்டி, *s.* A plant found in tanks with a bulbous root.

குளக்கோரை, *s.* A kind of tank-grass.

குளநண்டு, *s.* Tank-crabs.

குளநெல்லு — குளச்செந்நெல், *s.* A species of barbed rice growing spontaneously near tanks, or in marshy places.

குளப்பயறு, *s.* A kind of pulse planted in tanks in the dry season.

குளப்பாகல், *s.* A species of பாகல் creeper.

குளப்படுகை — குளப்பாடு, *s.* [*prov.*] Lands adjacent to tanks, and often flooded.

குளப்பொருக்கு, *s.* [*prov.*] Chapped mud in a tank, used for manure.

குளமழிதல், *v. noun.* [*local.*] The tank being free of access—as when any may go and fish in it.

குளமீன், *s.* Tank-fish.

குளவடம்பு, *s.* A creeper in tanks.

குளவட்டை, *s.* Various small kinds of leeches, சிறட்டை.

குளவரகு, *s.* A kind of வரகு.

குளவாழை, *s.* A kind of barbed rice, ஓர்நெல்.

குளவிதைப்பு, *v. noun.* Sowing in tanks.

குளவெள்ளரி, *s.* Cucumbers planted in tanks.

குளாம்பல், *s.* The tank lily, Nymphœa, *L.*

குளபாகம், *s.* [*in rhet.*] An easy, flowing style, இலளிதபாகம்.

குளம்பு, *s.* [*probably a change of* குரம்.] A beast's hoof, விலங்கின்காற்குளம்பு.

குளம்புகிள்ள — குளம்புவெட்ட, *inf.* To nip off the edge of a calf's hoof as soon as calved.

ஒற்றைக்குளம்பு, *s.* An undivided hoof—as of a horse.

குளவி, *s.* A kind of hornet or wasp, வேட்டுவன். 2. The மலைப்பச்சை tree. 3. (*Rott.*) A shrub, the காட்டுமல்லிகை.

குளவிபுழுவைத்தன்னிறமாக்குகிறதுபோல. As the wasp changes the grub, or worm, to its own likeness.

குளவிக்கூட்டிலேகல்லுவிட்டெறிகிறதா. Would one stone a hornet's nest?

குளவிகொட்டல், *v. noun.* The stinging of a hornet or wasp.

குளவிமண், *s.* Mud of which the wasp makes its nest.

குளவிந்தம், *s.* A kind of turmeric, used medicinally, ஓர்மஞ்சள்.

குளறு, கிறேன், குளறினேன், வேன், குளற, *v. n.* To stammer, through anger, confusion of mind, &c., உளற. 2. To howl, to yell, to make a hideous noise—as jackals, &c., நரிபேய்முதலியகுளற.

கன்னுபின்னுவென்று குளறுகிறான். He speaks nonsense.

குளறுவாயன், *s.* A stammerer.

குளறுகை, *v. noun.* Stammering.

குளறிப்போக, *inf.* To jar—as a voice in singing, or to cry out for pain.

குளறிப்போட, *inf.* To entangle, to bring to confusion.

குளறியடிக்க, *inf.* [*prov.*] To roar and beat the breasts through grief.

குளறியடித்துக்கிடக்க, *inf.* To lie in a great confusion.

குளறுபடி, *s.* Confusion in business.

குளறுபடியாய்க்கிடக்கிறது. It remains unsettled, irregular.

குளன், *s.* A tank. (*p.*) As குளம்.

*குளிகன், *s.* One of the eight serpents that support the earth, அஷ்டநாகத்தொன்று. Wils. p. 234. Kulika. 2. One of the seven invisible planets, said to be the son of Saturn, காணப்படாதஓர்கோள். See கோள்.

*குளிகை—குடிகை, *s.* A pill, a bolus, மாத்திரை. Wils. p. 294. Gulika, and 291. Gud'ika.

தம்பிகுராசகுளிகைபார்க்கும். He seems like one who has taken a magical pill.

குளிகாசித்தி, *s.* The power of magic by means of mercurial or other pills, enabling persons to pass through the air instantaneously.

குளிகைகட்ட, *inf.* To make, by a chemical process, pills, common or magical. 2. To consolidate—as mercury, &c., இறுகச்செய்ய. 3. To tie a pill about the body —as an amulet, or medical preventive against poisonous bites. 4. To fasten a magical pill on the body in order to obtain supernatural power, சித்திக்குளிகைகட்ட.

குளிகையிட, *inf.* To insert a pill in an incision made in the body; to check or counteract the influence of poisonous bites, &c., or to communicate supernatural powers.

குளிகையுருட்ட, *inf.* To roll pills.

குளிகைவார்க்க, *inf.* To give a dissolved pill.

சித்தர்குளிகை, *s.* A magical pill by which one is supposed to be enabled to fly where he may please, and perform supernatural feats.

தம்பனக்குளிகை, *s.* A magical pill by which one is supposed to be enabled to suppress, or stop, the natural course of things.

குளி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To bathe, exclusive of the head; to wash, to bathe, நீராட. 2. To dive for pearls, &c., முத்துசங்குமுதலியனகுளிக்க. 3. (*fig.*) To set, descend below the horizon—as the sun, அஸ்தமிக்க. 4. (*fig.*) To plunge or bathe, to be daubed or covered with, மூழ்க. 5. (*Rott.*) To hide, to be hid, மறைய.

முக்காலுங்காகமுழுகிக்குளித்தாலும் வெள்ளைக்கொக்காகுமோ? Will a crow by bathing three times become a white crane?

அவன்பால்தயிரிலேகுளித்துக்கொண்டிருந்தவன்.... [*prov.*] He was brought up to eat (bathe in) milk and curds.

குளிக்கவார்க்க, *inf.* To pour water on another for bathing.

குளிப்பாட்ட, *inf.* To bathe or wash a child, &c., except the head; to wash animals, &c.

குளிசீலை, *s.* The fore-lap or under-cloth, principally used in bathing, கோவணம்.

குளிப்பு, *v. noun.* Washing, bathing, &c.

குளி, *v. noun.* Diving for pearls or chanks, முத்துக்குளி, சங்குக்குளி.

குளிகாரன்—குளியாளன், *s.* A diver for pearls, chanks, &c.

குளிசங்கு, *s.* Chanks fished in the sea.

குளியோட, *inf.* To seek for pearls, chanks, &c., in the water.

சங்குகுளிக்க, *inf.* To dive for chanks.

தீக்குளிக்க, *inf.* To bathe in the fire, to be burnt—as a widow at her husband's death. 2. To bathe in or be covered with coals of fire—as some women to defend their chastity.

மஞ்சட்குளிக்க, *inf.* To daub with a thin paste of turmeric—as women in bathing.

புழுதிகுளிக்க, *inf.* To become covered with dust—as children in play, or persons in a dust storm.

குளிகுளிக்க, *inf.* [*local.*] To be delivered of a child, பிள்ளைப்பெற.

குளிதோஷம், *s.* A disease of infancy, குழந்தையைப்பற்றிஓர்வியாதி.

குளிப்பிடப்பாறுகள், *s.* [*prov.*] The banks of a pearl fishery.

குளிசம், s. [vul.] A thin piece of metal, with magical characters, worn as a charm against evil spirits or disease, இரட்சாபந்தனம். 2. A root tied round the finger of a snake-charmer or poison-charmer—as an amulet, விஷமேறுமற்கட்டுங்குளிசம். 3. [prov.] A charm inserted at the root of a tree, to make it productive, மரத்துக்குக்கட்டுங்காப்பு.

குளிசங்கட்ட, inf. To tie an amulet on the finger, &c.

அழகுகுளிசம், s. [local.] A kind of amulet, worn as an ornament on the neck.

குளிப்பச்சை, s. A curious green stone, one of the one-hundred and twenty kinds of minerals, ஆற்றுப்பச்சை.

குளியம், s. A ball, a globe, உருண்டை. (See குளிகம்) (Sans. Gulee.) 2. A tiger, புலி. (சது.)

குளிரி, s. A fan made of peacock's feathers, மயிலிற்குஞ்சம். (சது.) 2. A kind of flowering water-plant, நீர்க்குளிரி, Damasonium Indicum, L. 3. (Rott.) A knife for cutting the stems of betel leaves, வெற்றிலையரிகத்தி. See குளிர்.

குளிர், s. Coldness, chilliness, frigidness, குளிர்ச்சி. 2. Ague, cold fits, சரக்குளிர். 3. A dewy, chilling wind, பனிக்காற்று. 4. A white umbrella, வெண்குடை. (திக.) 5. A sling, கவண். 6. A battle-axe, மழு. 7. A trident, சூலம். 8. A shoal or school of fishes, மீனெழுங்கு. 9. A kettle-drum, முழவு. 10. As குளிரி, 3. 11. An instrument for nipping the stems of leaves, இலைமூக்கரிகத்தி. (திக.) 12. Shivering, trembling, shuddering—as with fear, அச்சக்குறிப்பு.

அவனுக்குக்குளிர்விட்டுப்போயிற்று. Fear has left him; he is without fear.

குளிர்காய, inf. To warm one's self.

குளிர்காய்ச்சல், s. Ague, cold fits.

குளிர்குளிர்ந்துபோக, inf. [prov.] To be benumbed from cold and wet. 2. To become very cold—as a dying person from the absence of animal heat.

குளிர்கொண்ண—குளிர்கொள்ள, inf. To be affected with cold. 2. To become cold—as the body in an attack of apoplexy, cholera, &c., சீதளமடைய.

குளிர்நடுக்க, inf. To shiver with cold.

குளிர்பிடிக்க, inf. To feel cold; to be affected with cold.

*குளிர், s. A crab, a lobster, நண்டு. 2. Cancer, a sign of the zodiac, கர்க்கடகராசி. Wils. p. 234. Kulira.

குளிர்—குளிரு, கிறது, ந்தது, குளிரும், குளிர, v. n. To be cold, chilly, frigid; to be cold to the touch; to be moist, damp, குளிர்கொள்ள. 2. To be cool, to be refreshed, குளிர்ச்சியுற. 3. To be refreshing, gratifying, pleasant, cheering to the touch, sight or hearing; to be engaging, attractive, benignant—as the countenance, இதமாக. 4. To be appeased, consoled, comforted, சாந்தமுற. 5. To die—spoken of death in time of epidemics, when fear of the avenging goddess prevents the use of the proper word, வகுளிறுதலியவியாதியாலிறக்க.

அப்பாவென்றால்உச்சிகுளிருமா. Will merely saying அப்பா afford relief? i. e. not mere words, but actions are necessary.

அவனொருகுளிர்ந்தகொள்ளி. He is a cold-blooded person; a man of fair speech, but an enemy at heart.

இப்பொழுதெனக்குமனங்குளிர்ந்தது. I am now refreshed, satisfied, gratified, appeased, &c.

உச்சிகுளிர்ந்தது. The head has been cooled or refreshed—as on hearing joyful intelligence, &c.

எனக்குக்குளிருகின்றது. I feel cold.

என்வயிறுகுளிர்ந்ததுபோல உன்மாளிகையும்குளிரவேண்டும். May you and your family be refreshed as I have been—an expression of thanks for favors received.

சரீரமெல்லாங்குளிர்ந்தது. The whole body is refreshed.

குழந்தைஅம்மைவார்த்துக்குளிர்ந்துபோயிற்று. The child has died of small-pox.

குளிரப்பண்ண—குளிரவைக்க, inf. To cool wines, spirits, &c. 2. To refresh, to satisfy the appetite, the mind, &c.; to regale, to oblige, to appease.

கண்குளிரப்பார்த்தான். He feasted his eyes with a gratifying sight.

காதுகுளிரக்கேட்டேன். My ears were refreshed by hearing.

நிலங்குளிரமழைபெய்தது. It rained abundantly so as to cool the earth.

மனங்குளிரக்கொடுத்தேன். I gave him as much as he desired.

குளிர்ந்தகிரணம், s. A gratifying light, lustre, &c.—as of the moon, a gem, &c.

குளிர்ந்தகுரல், s. A pleasant voice in singing.

குளிர்ந்தசரீரம், s. A cool temperament of body.

குளிர்ந்தநிழல், s. Refreshing shade.

குளிர்ந்தநிறம், s. A gay, cheerful, fine color.

குளிர்ந்தநீர், s. Cool water. 2. Cooled water after boiling, &c. 3. Good water in gems.

குளிர்ந்தபார்வை, s. Engaging, attractive, benignant looks.

குளிர்ந்தமுகம், s. Benignant expression of countenance.

குளிர்ந்தபூமி, s. A cool climate.

குளிர்ந்தபேச்சு — குளிர்ந்தவசனம் — குளிர்ந்தவார்த்தை, s. Pleasant, comforting, gratifying language.

குளிர்ந்தவாசனை, s. Refreshing odors.

குளிர்ந்தமனம், s. A calm, composed mind. 2. A benevolent mind. 3. A pleasant temper, an obliging disposition.

குளிர்ந்தபரிமளம், s. A kind of native arsenic, சீதாங்கபாஷாணம்.

குளிர்ந்தகொள்ளி, s. A cold-blooded person.

குளிர்ந்துகிடக்க—குளிர்ந்துபோக, inf. To become cold—as water after boiling. 2. To become cold—as a dying person. 3. To die—used auspiciously in time of epidemics.

குளிர்ச்சி, v. noun. [imp. குளிர்த்தி. vul. குளுத்தி.] Coolness, refrigeration, சீதளம். 2. That which is refreshing, pleasant, gratifying, appeasing; cooling offerings, திருத்திகரம்.

கண்ணுக்குக்குளிர்ச்சி. Refreshing to the eyes.

தெய்வத்துக்குக்குளிர்த்திசெய்தான். He gave cooling fruits to appease the goddess or demon.

குளிர்ச்சிப்பண்டம் — குளிர்மைப்பண்டம், s. Any thing that is cooling, refrigerative.

குளிர்ச்சியானசாப்பாடு - குளிர்மையானசாப்பாடு, s. Refreshing or cooling kinds of food.

குளிர்ச்சியாயிருக்க, inf. To be cool, refreshing to the system.

குளிர்ப்பிக்க—குளிர்விக்க, inf. v. a. To cool, to refrigerate; to refresh with water, perfumes, &c.; to gratify the mind, sight, &c., குளிரச்செய்ய.

குளிர்மை, s. [imp. குளுமை.] As குளிர், s. 1, 2, 3. 2. Kindness, benevolence, அன்பு.

குளுமை மூடிக்கொண்டது. Coldness has supervened—as in a dying person, being a sign of death.

குளிர்மைகொள்ள—குளிர்மையேற, inf. To feel chilly—as on the approach of disease.

குளிர்மைக்கட்டி, s. Mumps.

குளிர்மையில்லாதவர், s. Unkind persons; the unaffectionate, அன்பில்லாதவர்.

குளிர், adj. [by dropping மை.] Cold, frigid, chilly.

குளிர்காற்று, s. Cold wind.

குளிர்காலம், s. The cold season.

குளிறு, s. Roar; vociferation, ஒலி.

குளிறு, கிறேன், குளிறினேன், வேன், குளிற, v. n. To roar, to clamor; to vociferate, பேரொலிசெய்ய. 2. To utter inarticulate sounds; to buzz, to hum, இரைய. 3. (Rott.) To sound, ஒலிக்க.

குளீரம், s. A crab, நண்டு. Wils. p. 234. Kuleera.

குளுகுளுக்க, inf. v. n. [vul.] To become pale, sallow, wan and bloated—as in jaundice, &c.; to become weak through a morbid state of body, சோகைபற்ற. 2. [prov.] To become rotten, putrid—as fruits, அழுகிப்போக.

அவன்முகங்குளுகுளுத்திருக்கிறது. His face is swollen.

குளுகுளுப்பை, v. noun. The state of being pale and bloated in countenance; a kind of jaundice, ஓர்நோய்.

குளுவன், s. A head man in fowler tribes. 2. An attendant on a fowler. (குறவஞ்சி.)

குளோச்சு, s. [prov. in cant numbers.] A quarter, கால்.

இரண்டேகுளோச்சு, s. Two and a quarter.

*குள்ளம், s. Shortness in stature, குறள். 2. Wickedness, mischievousness, cruelty, கொடுமை. 3. Fraudulent dexterity, craft, cunning, தந்திரோபாயம். Wils. p. 274. Khulla.

குள்ளன், s. (fem. குள்ளி.) A short man, குறளன். 2. An artful, cunning fellow, தந்திரக்காரன். 3. A cruel, mischievous person, கொடியன்.

குள்ளனைக்கொண்டாழம்பார்க்கிறான். He attempts to find out the depth (of water) by sending (into it) a dwarf—said of one who employs a person unfit for his business.

கள்ளன்பின்போனாலும் குள்ளன்பின்போகப்படாது. Better is it to follow a thief than a dwarf—meaning it is a bad omen.

குள்ளக்கெண்டை, s. A kind of fish.

சித்திரக்குள்ளன், s. A dwarf. 2. A cunning fellow, தந்திரி.

குறங்கு, *s.* Thigh; lap, தொடை. 2. A clasp, a catch or link, கொளுவி.

குறங்கொட்டி, *s.* [*prov.*] A short piece or clump of wood, attached to the lower end of a well-sweep, or rafter, or to the broken leg of a chair.

குறஞ்சனம், *s.* Borax, வெண்காரம், (*M. Dic.*)

குறஞ்சி, *s.* A plant, செம்முள்ளி, Barleria prionitis, Thorny Barleria. (Ains. vol. 2. p. 376.)

குறடு, *s.* Pincers, tongs, forceps, &c., கம்மியர் குறடு. 2. A small block or clump of wood, மரத்துண்டு. 3. A raised floor or verandah, திண்ணை. 4. The edge of a verandah floor, திண்ணைக்குறடு. 5. (சது.) Plank, board, பலகை. 6. A hook for hanging up school-boys' books, புத்தகத்தூக்குக்கயிற்றுக்குறடு. 7. A crab. நண்டு. (*M. Dic.*) 8. The jutting out or cornice on a wall or column, புடைப்பு. (*Rott.*); [*ex* குறு, short or small.]

குறட்டாலிடுக்க, *inf.* To grasp or take up with a pair of pincers.

குறடுகாய்ச்சிப்பிடுங்க—குறடுவைத்துப்பிடுங்க, *inf.* To pinch any one with red-hot pincers.

சிறுகுறடு, *s.* A gold-smith's pincers.

குறட்டுப்பாக்குவெட்டி, *s.* Betel-nut-crackers with a forked mouth.

குறடுகட்ட, *inf.* To make the edges of the raised floor of the verandah.

திண்ணைக்குறடு, *s.* A lower part of a verandah to sit on.

சந்தனக்குறடு, *s.* Blocks of sandal wood.

பாதகுறடு, *s.* Wooden sandals. 2. Shoes, slippers.

குறட்டுச்செருப்பு, *s.* [*prov.*] A kind of shoe or sandal, with a loop to admit the great toe.

குறட்டுவாதம், *s.* A kind of spasm, ஓர்வலிப்பு. See குறண்டல்வாதம்.

குறட்டாரியம், *s.* [*prov.*] Complaint, murmur, expression of dissatisfaction or discontent, குறைகூறல்.

குறட்டாரியம்பண்ணுகிறான். He bears a grudge.

குறட்டை, *s.* Snoring, snorting, நித்திரையில்விடுமொலிமூச்சு. 2. A creeper bearing a red fruit; a gourd, காக்கணங்கொவ்வை, Trichosanthes palmata. (*Rox.*) (Ains v. 2. p. 85.) கார்க்குறட்டை, பீனிசக்குறட்டை, பெருங்குறட்டை, சிறுகுறட்டை, as different species of the குறட்டை creeper, see these.

குறட்டைவிழுக்க — குறட்டைவாங்க— குறட்டைவிட, *inf.* To snore.

குறண்டி, *s.* A mode of singing, ஓர்பண். (சது.) 2. [*local.*] A kind of thorny shrub, ஓர்முட்செடி.

குறண்டு, கிறேன், குறண்டினேன், வேன், குறண்ட, *v. n.* [*prov.*] To be crooked, bent, crumpled, &c.—as horns, fingers, limbs, fruits, &c., வளைய. 2. To be convulsed; to have spasms, குறண்டிவிழுக்க. 3. To coil itself up—as a small reptile, &c., சுருண்டுகொள்ள.

அவர்குறண்டிப்போனார். He is grown crooked, bent, hump-backed.

குறண்டிப்பிடிக்கிறான். He is close-fisted.

குறண்டற்கிழவன், *s.* A crooked, old man, கூனற்கிழவன்.

குறண்டல்வாதம், *s.* A kind of rheumatic affection attended with spasms.

கால்கைகுறண்ட, *inf.* To have spasms in the arms and legs—as in cholera, &c.

குறம், *s.* The tribe of the குறவர், குறச்சாதி. 2. Palmistry, as practised by the women of this tribe, குறத்திசொல்லுங்குறி. 3. A kind of song, poem, குறத்திப்பாட்டு.

குறக்கூடை, *s.* A kind of basket.

குறக்கூத்து, *s.* The dance of the குறவர் tribe.

குறச்சாதி, *s.* The tribe of basket-makers, mountaineers, fowlers, foresters, snake-catchers, &c.

குறத்தி, *s.* A fortune-telling female of the குறம் tribe.

குறத்திப்பாட்டு, *s.* A poem in which a குறதி is the heroine. See பிரபந்தம்.

குறமாயம், *s.* The tricks of a fortune-telling குறத்தி; gypsyism.

குறவஞ்சி, *s.* A kind of poem, ஓர்பிரபந்தம். 2. A woman of the குறவர் tribe, a fortune-teller, &c., குறப்பெண்.

குறவர், *s.* (*mas.* குறவன். *fem.* குறத்தி.) Tribes who live by the chase; mountaineers, foresters, hunters, fowlers, snake-catchers, basket-makers, &c., குறச்சாதியார்.

குறவழக்கு, *s.* Intricate and difficult proceeding in a law-suit.

பச்சைக்குறவன்—படுகுறவன், *s.* [*prov.*] A knavish, trickish fellow.

குறவேஷம், *s.* The manners and habits of the குறவர் people.

குறவணவன், *s.* [*prov.*] A very large, white grub, found in dung heaps, &c., ஓர்புழு.

குறவன், *s.* Mercury, இரதம். See குறவர்.

குறவை, *s.* A kind of fish, ஓர்மீன், Ophicepshalus punctatus, *L.*

குறளை, *s.* Dwarfishness, குள்ளம். 2. Tale-bearing, divulging secrets; aspersion, backbiting, slander, கோள். 3. [*prov.*] Sarcastic expressions, slanderous accusations, நிந்தனை; [*ex* குறு.]

குறளைக்காரன், *s.* A tale-bearer, an exposer of secrets.

குறளைச்சொல், *s.* Tale-bearing. 2. Sarcastic expressions.

குறளைபேச, *inf.* To tattle, to expose secrets. 2. To revile, vilify, ridicule.

குறள், *s.* Shortness, conciseness, abridgment, சிறுமை. 2. An imp or goblin, பூதம். (நிக.) 3. A metrical line of two feet. இருசீரடி. 4. A distich, or couplet of short lines, the first of four, and the second of three feet of இயற்சீர் and வெண்சீர், குறள்வெண்பா. 5. A celebrated poetical work by திருவள்ளுவர், in three parts; viz.: அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால். 6. Shortness in stature, dwarfishness, குள்ளம்; [*ex* குறு.]

குறளடி, *s.* A line consisting of two metrical feet.

குறளடிவஞ்சிப்பா, *s.* A kind of வஞ்சி verse, consisting of three or more lines of two metrical feet each, together with a detached foot and an அகவற்சரிதகம்.

குறள்வெண்பா—குறட்பா, *s.* A distich of two metrical lines. See குறள்.

குறள்வெண்செந்துறை, *s.* A verse consisting of two equal metrical lines of four or more feet each.

குறட்டாழிசை—குறளினத்தாழிசை, *s.* A verse of two unequal metrical lines of five or more feet each.

குறளன், *s.* A short person, a dwarf.

குறளி, *s.* A dwarfish woman. 2. A short, wicked shrew. 3. A kind of devil. 4. (*Rott.*) A prostitute.

குறளிவித்தை, *s.* Magical tricks, legerdemain, juggling.

குறு, கிறது, குறுவினது, ம், குறுவ, *v. n.* [*vul.*] To shrink, to contract—as the body by cold, the face by shame, &c., சுருங்க. 2. To become reduced, lean—as a person, animal, &c., மெலிய. 3. To sink—as the spirits by disappointment, hunger, &c., சோர. 4. To heal—as a sore; to cicatrize, வடுவாக. 5. To droop—as plants by drought, வாட.

குறுவிப்போக, *inf.* To grow lean, to grow sad.

குறுவுதல், *v. noun.* Leanness, sadness, dejection, &c.

குறுள், *s.* [*local.*] A young ewe, or she-goat, குறுளாடு.

குறி, *s.* Mark, sign, stamp, symbol, token, emblem, indication, அடையாளம். 2. Idea, notion, intention, suggestion, hint, insinuation, குறிப்பு. 3. Omen, presage, prognostic, forerunner, சகுனம். 4. Personal qualities, character, குணம். 5. A time, a turn—as in ஒருகுறி, once, தரம். 6. Time, days, season—as in இக்குறி, now-a-days, காலம். 7. [*in gram.*] A word, a term; appellation, designation—as in இடுகுறி, காரணக்குறி. 8. Assertion of a speculative truth—as matter of fact, in contradistinction to செய்கை, a practical precept, இவைஇன்னனவெனமனத்தாற்றெளிந்துரைப்பது. 9. The sexual emblems, ஆண்பெண்குறி. 10. Mark to shoot at, இலக்கு. 11. [*in gram.*] A short letter. (See குறில்.) 12. [*prov.*] Stripes, lashes, அடி.

அகப்பைக்குறி, *s.* Prognostication by observing the position and direction of a ladle let fall perpendicularly—as commonly practised by women.

ஆடைக்குறி, *s.* A line across the ends of a cloth.

கைக்குறி, *s.* Omens by lines on the palms; palmistry.

முகக்குறி, *s.* Indications from the face.

துர்க்குறி, *s.* A bad sign, a bad omen.

நற்குறி, *s.* A good sign, a good omen.

மரணக்குறி, *s.* Signs of death; omens of death—as pointed out by the shastras.

குறிகண்டுநோதல், *v. noun.* [*in parturition.*] Labor pains after the discharge of liquor amnii, or the first presentation.

குறிகாண, *inf.* To appear—as signs, or symptoms. 2. To forebode, to betoken, to typify. 3. [*in parturition.*] To have slight discharges at or before the presentation.

குறிபோட — குறியிட, *inf.* To mark, sign, line, rule, &c.

குறிசுட, *inf.* To brand marks upon cattle.

குறிக்கோள், *v. noun.* Strenuous perseverance in any one pursuit; attachment to one object, பராயணம். 2. Union, unity, congruity, ஒற்றுமை. 3. The act of comprehending or understanding, கிரகித்தல். 4. The state of being distinguished or illustrious, மேன்மைப்பாடு.

குறிக்கொள்வோர், *s.* Persons who have their heart and mind on one pursuit or object. (நிக.) See பராயணர்.

குறிக்கொள்ள, *inf.* To conceive, comprehend, understand, கிரகித்துக்கொள்ள. 2. To be remarkable, distinguished above mediocrity, மேன்மைப்பட.

குறிகேட்க, *inf.* To consult a fortune-teller, a diviner, &c.

குறிசொல்ல, *inf.* To tell one's fortune, to divine, to presage.

குறிபார்க்க, *inf.* To observe signs; to prognosticate.

குறிபார்த்துச்சொல்ல, *inf.* To tell people their fortunes.

குறிகெட்டவன், *s.* A dishonest and shameless man; an unprincipled man.

குறியானவன்—குறியுள்ளவன், *s.* A principal man. 2. A respectable, honest, upright man; a man of principle.

குறிகாரன்—குறிப்புக்காரன், *s.* A good marks-man.

குறிதப்ப, *inf.* To miss the mark. 2. To fail—as events foretold by fortune-tellers.

குறிதப்பாமற்போட்டான். He shot at the mark without missing it; he hit the mark.

குறிபார்த்துச்சுட, *inf.* To shoot at a mark, to aim at a goal.

குறிபிழைக்க, *inf.* To fail—as signs of rain, &c. 2. [*in love poetry.*] To fail or prove deceptive—as a token, a letter, குறிபிழைபட்டுவிடுமோ.

குறிச்சூத்திரம், *s.* [*in gram.*] Rules or sutras containing terms, definitions, &c. See under சூத்திரம்.

குறி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To design, intend; to contemplate, consider, think, கருத. 2. To imagine, to conceive, மதிக்க. 3. To appoint, determine, decree, விதிக்க. 4. To note down; to make the first draught in writing; to sketch an outline in painting, to trace, குறித்துக்கொள்ள. 5. To refer to, to denote, suggest, specify, சுட்டிக்காட்ட. 6. To designate, to characterize, to denominate, to name, பெயர் குறிக்க. 7. To address one's self—as in prayer; to have reference to—as a procuring cause, சேர்க்க. 8. To foretell, to presage, to prognosticate by astrology, palmistry, augury, &c., முன்னறிவிக்க. 9. To blow—as a chank, &c., ஊத.

செவிடன்காதிலேசங்குகுறித்தாற்போல. Like blowing a chank to a deaf man—it being useless.

அதைக்கனவிலுங்குறிக்கவில்லை. I did not even dream of it.

இதிலேஅவர்குறிக்கிறதென்ன. What does he mean by it?

குறிக்குங்கால். If we consider. (வைரா.)

குறித்துக்கொள்ள—குறித்துவைக்க, *inf.* To note down.

எழுதுகோலாலேகுறித்துக்கொண்டான். He formed with a graving tool. (*Rott.*)

குறித்தகள்வன், *s.* A notorious thief.

குறித்தகாரியம், *s.* The particular thing. 2. The business in hand.

குறித்தகாலம், *s.* The appointed time. 2. The proper season.

குறித்ததொகை, *s.* The sum specified.

குறித்தபோகங்கள், *s.* Destined enjoyments. 2. The proper harvests.

குறித்தழைக்க, *inf.* To invoke a deity by name to appear. 2. To call or beckon one out of an assembly, &c. 3. To call upon one for protection.

குறித்துச்சொல்ல, *inf.* To tell particularly; to define, specify, describe, suggest.

குறித்துப்பார்க்க—குறிப்பாய்ப்பார்க்க, *inf.* To look steadfastly, intently, significantly.

உத்தியோகங்குறிக்க, *inf.* To confer an office on one.

குறித்து. [*gerund of* குறி.] Concerning, about, touching, respecting, for the sake of, with regard to, &c.

உம்மைக்குறித்து. Concerning you.

பிரமனைக்குறித்துத்தபசுபண்ணி. Performing austerities in reference to Brahma to obtain a boon, &c.

புண்ணியத்தைக்குறித்து. With regard to virtue.

போர்செய்யக்குறித்துவந்தவர்கள். Those who came to fight.

குறிப்பிக்க, *inf.* [*causative of* குறி.] To signify, imply, intimate, குறிப்பினாற் காட்ட. 2. To get written or noted down, எழுதுவிக்க.

குறிச்சி, *s.* Village, a small town, கிராமம். 2. A small village, a hamlet, a tithing, சிறுகிராமம். 3. (சது.) A village of foresters, mountaineers, &c., குறிஞ்சிநிலத்தூர்.

குறிஞ்சா, *s.* A name of an edible and medicinal creeper, of two kinds, சிறுகுறிஞ்சா, Periploca sylvestris. *Willd.*, and பெருங்குறிஞ்சா, Asclepias vomitoria, *L.* vomiting swallow wort. (Ains. v. 2. p. 83.)

குறிஞ்சி, *s.* A species of large tree in hilly districts, குறிஞ்சிமரம். 2. Thorny shrubs growing in marshes, the செம்முள்ளி. 3. The மருதோன்றி shrub. 4. A tract of land in a hilly country, one of the five kinds of திணை, மலைச்சார்நிலம். 6. Classes of tunes peculiar to agricultural districts, மருதநிலத்திரேர்வகையிசை. 7. Tunes peculiar to hilly tracts, குறிஞ்சிநிலத்திராகம். 8. Lutes peculiar to agricultural districts, மருதயாழ்த்திறம். 9. A tune, melody, ஓர்பண் (சது.) 10. [*in love poetry.*] Illicit intercourse. (See திணை.) 11. (*Rott.*) The ஈந்து palm.

குறிஞ்சிக்கருப்பொருள், *s.* Men, beasts, birds, vegetables, employments, &c., indigenous and peculiar to hilly tracts; viz.: 1. குறிஞ்சித்தலைவர், chiefs, heads and superiors—as பொருப்பன், வெற்பன், and சிலம்பன் with their females. 2. குறிஞ்சித்தெய்வம், the god, Skanda. 3. குறிஞ்சித்தொழில், employments—as sowing mountain paddy, watching the millet, collecting honey, digging up roots, &c. 4. குறிஞ்சிநீர், mountain streams—as அருவி and சுனை. 5. குறிஞ்சிப்பண், melody, known by the name of குறிஞ்சிப்பண். 6. குறிஞ்சிப்பறை, drum—as தொண்டகம். 7. குறிஞ்சிப்புள், birds—as parrots and peacocks. 8. குறிஞ்சிப்பூ, flowers—as November-flower, &c. 9. குறிஞ்சிமரங்கள், trees—as வேங்கை, a kind of Pterocarpus, குறிஞ்சிமரம்; சந்தனம், sandal-tree; தேக்கு, teak; அகில், Aquila; அசோகு, Ashoka; புன்னை, Calophyllum inophyllum. 10. குறிஞ்சிமாக்கள், inhabitants—as குறவர், கானவர், குறத்தியர். 11. குறிஞ்சியாழ், lute, known by the name of குறிஞ்சியாழ்த்திறம். 12. குறிஞ்சியுணவு, food—as bamboo rice, மூங்கிலரிசி; mountain rice, ஐவனநெல்; another hill-rice, தோரைநெல்; millet, தினை; bulbous roots, கிழங்கு; honey, தேன், &c. 13. குறிஞ்சியூர், villages—as சிறுகுடி. 14. குறிஞ்சிவிலங்கு, beasts—as the tiger, bear, elephant, lion, &c.

குறிஞ்சிக்காலம், *s.* The months of October and November, December and January, in குறிஞ்சி tracts.

குறிஞ்சிமுதற்பொருள், *s.* As முதற்பொருள் under அகப்பொருள், describing the soil, the season of the year, &c., of hilly places.

குறிஞ்சியுரிப்பொருள், *s.* As உரிப்பொருள் under அகப்பொருள், describing sexual intercourse. See அகப்பொருள்.

குறிஞ்சித்தேன், *s.* Mountain honey, celebrated for its sweetness.

குறிஞ்சிவேந்தன், *s.* Skanda—as lord of the hilly country, முருகன்.

குறிஞ்சிலைக்கல், *s.* A red stone, இரக்கல். (*M. Dic.*)

குறிஞ்சில், *s.* A kind of prepared arsenic, தொட்டிப்பாஷாணம்.

குறிப்பு, *s.* Intention, wish, internal desire, அபிப்பிராயம். 2. Concord, ஒருமை. 3. Allusion, hint, intimation, indication; a significant look, word, &c., சைகை. 4. The occult and real meaning of a speaker or writer, in distinction from the apparent meaning; figurative expressions—as irony, &c., உட்கருத்து. 5. [*in gram.*] Implication; that which is implied or understood, metaphorical, metonymical, &c.—opposed to வெளிப்படை. 6. Mark, sign, signature, அடையாளம். 7. Memorandum, memento, ஞாபகக்குறிப்பு. 8. Summary, abstract, epitome, பொழிப்பு. 9. Description, representation, delineation; distinguishing marks or characteristics, காரியவிவரம். 10. Symbolic terms, constructions, short-hand writing, abbreviations, குறிப்புக்குறி. 11. Aim, direction; mark aimed at, இலக்கு. 12. Sketch in painting, outlines, traces, உருவக்குறிப்பு; [*ex* குறி, intend, &c.]

முகக்குறிப்பு, *s.* Expression of the countenance.

குறிப்பறிய, *inf.* To know one's particular intention, wants, desires, &c.; to understand the special object intended; to possess a knowledge of physiognomy.

குறிப்பாகச்சொல்ல, *inf.* To give descriptive marks, signs, or hints; to allude to, to intimate concerning.

குறிப்பறிந்துகொடுக்க, *inf.* To anticipate a person's wants and supply them.

குறிப்பாளி, *s.* One capable of drawing a right inference from appearances. 2. A person of quick discernment; a good counsellor; a genius.

குறிப்பாய்க்கேட்க, *inf.* To inquire particularly into a thing. 2. To listen to, to hearken with attention. 3. To hear distinctly.

குறிப்பானபார்வை, *v. noun.* A significant expression; a fixed or steadfast look.

குறிப்பானபேச்சு, *s.* A figurative, or sarcastic remark. 2. A hint.

குறிப்பிடம், *s.* [*among Romanists.*] Images representing the sufferings of the Saviour, &c. 2. A summary, compendium; an epitome.

குறிப்புக்கட்டை, *s.* A water-mark—as a post or block at a ford, in sign of danger from a hole or quick-sand.

குறிப்புக்கண்டுநடக்க, *inf.* To act agreeably to another's mind, ascertained by inference.

குறிப்புக்காட்ட, *inf.* To give a hint, to intimate, allude to. 2. To represent by a symbol. 3. To exhibit signs, indication, symptoms, &c.

குறிப்புக்குவைக்க, *inf.* To set or keep for a sign, token, memorandum—as images, statues, pictures, relics, &c.

குறிப்பெழுத்து, *s.* Abbreviations, contractions, &c.—as the initials or finals of names, words, &c. 2. Any particular letter.

குறிப்பெழுத, *inf.* To write notes, memorandums, characters, short-hand, &c. 2. To note down the date, hour, &c., of a child's birth.

குறிப்பேடு, *s.* An ola-day-book, the items of which are transferred to the ledger or பேரேடு; a memorandum book.

குறிப்போலை, *s.* An ola-memorandum, &c. 2. An ola-memorandum of the hour of a child's birth, so as to cast its nativity.

குறிப்புப்பண்பு, *s.* [*in gram.*] Ideal, abstract qualities, properites or attributes—as ஞானம், பாவம், as distinguished from குணப்பண்பு, and தொழிற்பண்பு.

குறிப்புச்சொல்—குறிப்புமொழி, *s.* [*in gram.*] Words or terms, used figuratively, metaphorically, &c.

குறிப்புவினை, *s.* [*in gram.*] A symbolic verb, without variation of tense. See வினை.

குறிப்பெச்சம், *s.* [*in gram.*] Ellipses in metonymical expressions, &c.

குறிப்புவினையெச்சம், *s.* [*in gram.*] A symbolic verb in an incomplete form, being either a பெயரெச்சம் or வினையெச்சம். 2. Incomplete symbolic verbs terminating with other verbs. See வினை.

குறிப்புவினைமுற்று, *s.* [*in gram.*] A finite symbolic verb—as மலையேன்.

குறிப்புவினையாலணையும்பெயர், *s.* A symbolic verb used as an appellative noun—as in இம்மலையேன்.

குறிப்புவினைப்பெயரெச்சம், *s.* A symbolic relative participle.

குறில்—குறிலெழுத்து, *s.* [*in gram.*] A short letter, either a short vowel—as அ, இ, உ, எ, or ஒ, or a short compound letter,—as க, கி, து, &c., opposed to நெடில்.—*Note.* The word is sometimes contracted into குறி; [*ex* குறு, short.]

குறிலிணை, *s.* A syllable of two short letters; the union of two short letters—as in அறி, குறி.

குறிநெடில், *s.* A syllable consisting of one short and one long letter; the union of a short letter and a long one—as in இரா, பலா.

குறுகு, கிறது, குறுகினது, ம், குறுக, *v. n.* To grow short; to be dwarfish, குள்ளமாக 2. To shrink, contract; to lessen, to be reduced, to become scanty; to decrease, diminish, to be brought low, to decline, சுருங்க, குறைய. 3. (*p.*) To approach, approximate, arrive at, come in contact with, அணுக. 4 [*in gram.*] To shorten—as a long vowel, &c., மாத்திரையிற்குறைய.

குறுக, [*used adverbially.*] Near, short, close.

குறுகப்பண்ண, *inf.* To shorten.

குறுகப்பிடிக்க, *inf.* To make short. 2. To curtail (expenses), to retrench. 3. To shorten (a story &c.). 4. To hold nearer, closer, &c.

குறுகக்காய்ச்ச, *inf.* [*prov.*] To boil liquor or water away—as சுண்டக்காய்ச்ச.

குறுகல். *v. noun.* [*substantively.*] A thing that is short, dwarfed or stinted, குறுகிய பொருள். 2. Shortening, &c.

குறுகலாயிருக்க, *inf.* To be short. 2. To be near.

குறுகல்முத்து, *s.* [*prov.*] A double pearl.

குறுகலர், *s.* Enemies, foes— as அடையலர்.

குறுவித்துப்பார்க்க, *inf.* To look steadfastly, intently. 2. To scowl, to frown.

குறுக்கம், *v. noun.* Abridgment, abbreviation, contraction, epitome, summary, சுருக்கம். 2. Shortness, brevity, succinctness, compendiousness, declension, reduction, குறுமை. 3. [*local.*] A certain quantity of land, in land measure.

ஆறுகுறுக்கம், *s.* The six abbreviations of letters, viz.: குற்றியலிகரம், abbreviated இ—as in நாகியாது, எஃகியாது, வரகியாது, கொக்கியாது, குரங்கியாது, தெள்கியாது, கேண்மியா, சென்மியா. 2. குற்றியலுகரம், abbreviated உ—as நாகு, எஃகு, வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு. 3. ஐகாரக்குறுக்கம், abbreviated ஐ—as ஐப்பசி, இடையன், குவளை. (See under ஐ கான்.) 4. ஔகாரக்குறுக்கம், abbreviated ஔ—as கௌவை. 5. மகரக்குறுக்கம், abbreviated ம்—as போன்ம், for போலும், மருண்ம் for மருளும், தரும்வளவன். 6. ஆய்தக்குறுக்கம், abbreviated ஃ—the changes of ல் or ள் before த் into ஃ or ஆய்தம்—as கஃறீது for கல்தீது, முஃடீது for முள்தீது.

குறுகுத்தாளி, *s.* A palm tree, சிறுதாளி, Convolvulus gemellus, *L.* (*M. Dic.*)

குறுகுறுத்தல்—குறுகுறுப்பு, *v. noun.* Muttering in displeasure, அசந்தோஷக்குறிப்பு.

குறுகுறுப்பை—குறுகுறுப்பு, *s.* Snoring stertorous breathing, குறட்டை.

குறுகுறெனல், *v. noun.* Showing signs of haste, விரைவுக்குறிப்பு. 2. Tingling—as the ears, காதுதின்னல். 3. Muttering in token of displeasure, அசந்தோஷக்குறிப்பு.

குற்றமுள்ளநெஞ்சுகுறுகுறென்னும், குறும்பியுள்ளகாது தினவுதின்னும். A guilty conscience causes melancholy, and a dirty ear itches.

குறுகுறென்றுநடக்க, *inf.* To walk with quick, short steps.

குறுகுறென்றுமிழிக்க, *inf.* [*prop.* விழிக்க.] To have a look of fear, to have a thievish countenance.

குறுக்கம், *s.* A native arsenic, கௌரிபாஷாணம். See under குறுகு.

குறு, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To become short; to contract, diminish, shrink—as குறுகு.

குறுக்கு, *s.* That which is athwart, across, transverse, in a cross direction, திரியக்கு. 2. Diameter; intersection; transit, விட்டம். 3. Frustration; check, hinderance, எதிர். 4. Shortness, briefness, சுருக்கம். 5. Intervention, இடையீடு. 6. The hips, the loins, இடுப்பு.

குறுக்கிடாகப்போக, *inf.* To go across.

குறுக்குக்கட்டுக்கட்ட, *inf.* To tie the cloth a little above the breasts, and around the trunk—as women often do.

குறுக்குக்கேள்வி—குறுக்குவிஞ், *s.* Cross questioning, cross examination. 2. Irrelevant questions.

குறுக்குச்சட்டம், *s.* A cross piece in a frame. 2. Braces to connect the pairs of rafters. 3. A cross beam.

குறுக்குச்சார், *s.* [*prov.*] A short or cross side of a native house; a raised floor on the outside or inside of the shorter wall of a native house.

குறுக்குப்பாடு, *v. noun.* Lying across, or in a transverse direction, குறுக்கிடம். 2. A transverse direction, குறுக்கு.

குறுக்குப்பாதை — குறுக்குவழி, *s.* A cross path, a short cut.

குறுக்கும்மறுக்கும்—குறுக்குநெடுக்கும், *adv.* Cross-wise, transversely, passing through and through in every direction.

குறுக்கே, *adv.* Cross-wise, transversely, athwart. 2. Between, intermediately. 3. In opposition or contradiction.

குறுக்கேதடுக்க, *inf.* To interpose and prevent—as a by-stander. 2. To meet a person, stop him and forbid his proceeding. 3. To check, prevent, obstruct, stop, interrupt.

குறுக்கேபோக, *inf.* To go across; to go a short way. 2. To cross one's track, or path—as a cat, &c., considered a bad omen. 3. To pass between persons or things. 4. To die prematurely and in the prime of life. 5. To transgress one's commands; to go or act against one's wishes, counsel, &c.

குறுக்கிட, *inf.* To come across—as animals of bad omen. 2. To interfere.

குறுக்களவு, *s.* Dimension across; thickness; the diameter. 2. The extent or measure of any line or direction parallel with the diameter.

குறுக்கடி, *s.* A precipitate step or measure; a rash course; a contrary or contradictory procedure. 2. A short, hasty, abrupt or crabbed answer; an assertion without due deliberation. 3. A stroke at one's loins.

குறுக்கடிநியாயம், *s.* Abrupt, inconclusive reasoning.

குறுக்கடியாயடிக்க, *inf.* To speak, pronounce, conclude, &c., too hastily; to be precipitate, or rash. 2. To be too summary in a proceeding—*little used.*

குறுக்குப்புத்தி, *s.* [*prov.*] Headiness, rashness, கோணற்புத்தி.

குறுக்குச்சூத்திரம், *s.* A formula, theorem or rule expressing the shortest method of performing a calculation, &c.; a brief, comprehensive rule.

குறுக்கேமடக்க, *inf.* [*prov.*] To confute or refute at once; to stop one's mouth by short answer.

குறுக்கேமுறிக்க, *inf.* To break into two. 2. To break off in the midst of a business; to leave a work unfinished. 3. To leave a company in displeasure.

குறுக்கேவிழ—குறுக்கேவர, *inf.* To interfere, intermeddle.

குறுக்கு, கிறேன், குறுக்கினேன், வேன், குறுக்க, *v. a.* To shorten, curtail, reduce, contract, lessen, retrench, குறைக்க. 2. To abbreviate, abridge, epitomize, abstract, சுருக்க.

கையைக்குறுக்க, *inf.* To retrench expenses. 2. To be close-handed; to give sparingly.

குறுக்கல், *v. noun.* [*in gram.*] Shortening, contraction—as of a long letter.

குறுக்கையர், *s.* The name of a celebrated devotee, who belonged to a certain division of the வெள்ளாளர் caste, திருநாவுக்கரையர்.

குறுங்குடியாள், *s.* Orpiment, தாளகம்.

குறுணி, *s.* A nominal dry-measure, in quantity equal to the மரக்கால்.

கொழுது, கிறது, கொழுதினது, ம், கொழுத, *v. a.* To dig into, hollow out—as beetles in wood and flowers, கோத. (*p.*)
வண்டுகொழுதியவரி செய்குழன்மடவீர். Oh, ye whose lock of hair is hollowed by beetles.

கொழுநன், *s.* A husband, கணவன். 2. A master, a lord, இறைவன்.

கொழுந்தன்-கொழுந்தனார், *s.* (*vul.*) The husband's brother, commonly younger brother, புருஷனின்சகோதரன்.
கொழுந்தி — கொழுந்தியாள், *s.* The wife's sister, commonly younger sister.

கொழுந்து, *s.* Tender twigs, leaves, shoots, sprouts, இளந்தளிர். 2. Flame, சுவாலை. 3. [*prov.*] The betel-plant, வெற்றிலைக்கொடி. 4. Cuttings or slips planted for growth, நடுகொழுந்து. 5. A tender, cartilaginous part of the body, மெல்லியது—as in மூக்கான் கொழுந்து, நெஞ்சாங்கொழுந்து, &c.
கொழுந்திலை, *s.* A tender leaf.
கொழுந்துக்கால், *s.* Sticks, stakes, &c., set to support betel-runners, கொடிக்கால்.
கொழுந்துகிள்ள, *inf.* To nip or cut off the shoots of plants, when too rank, to make them productive; also, to injure or destroy them. 2. (*p.*) To destroy the young heir of a family.
கொழுந்துநட, *inf.* To plant betel, and other cuttings.
கொழுந்துபதிக்க, *inf.* To insert pumpkin creepers, &c., in the earth, that they may strike new roots, &c.
கொழுந்துவிட்டெரிய, *inf.* To burn in a flame, to flame up.
உலக்கைக்கொழுந்து, *s.* See உலக்கை.
குலக்கொழுந்து, *s.* See under குலம்.
பிறைக்கொழுந்து, *s.* The crescent moon. (*p.*)
மருக்கொழுந்து, *s.* Southern-wood. See மரு.
மூக்காங்கொழுந்து, *s.* See மூக்கு.

கொழுந்து, கிறது, கொழுந்தினது, ம், கொழுந்த, *v. n.* To flame, to burn in a flame; to be kindled—as fire, கொழுந்தெரிய. 2. To be burnt, scorched—as by the sun, வெய்யிலிற்கருக. (*p.*)
கொழுந்தியகொழுந்தழற்கொழுந்து. The intense flame of fire which was kindled. (*பார.*)

கொழுப்பு, *v. noun.* [*substantively.*] Fat, grease, lard, நிணம். 2. Plumpness, fullness, corpulency, fleshiness, புஷ்டி. 3. Rank or exuberant growth in vegetation, luxuriance, செழுமை. 4. Excessive richness or fertility in a soil, நிலவளம். 5. Pride, sauciness, impudence, impertinence, wantonness, செருக்கு; [*ex* கொழு, fatten, &c.]

உன்கொழுப்பெடுத்துப்போடுவேன். I will reduce your pride.

கொழுப்பாய்ப்பேசுகிறவன். One who speaks petulently or saucily.

கொழுப்பானபூமி, *s.* A rich, fertile soil.

கொழுப்பிறக்க, *inf.* To reduce one's pride.

கொழுப்புக்காட்ட, *inf.* To be saucy, impertinent, wanton.

கொழுப்புக்குடல், *s.* The small intestines of sheep or goats.

கொழுப்பேற, *inf.* To grow proud, insolent, &c.

வாய்க்கொழுப்பு, *s.* Impertinent language; sauciness, insolence.

கொழுப்புக்கல், *s.* A soft red stone.

கொழுமிச்சை, *s.* See கொழுஞ்சி.

கொழுமை, *s.* Plumpness, fullness, exuberance, luxuriance, richness, fertility, கொழுப்பு. 2 Riches, wealth, வளமை. 3. Color, good color, நிறம். The final மை is dropped to form adjectives.

கொழுங்கண், *s.* A well-formed eye; a wanton look. (*p.*)

கொழுநீர், *s.* Highly fermented liquor—as toddy, &c. (*p.*)

கொழுமணி, *s.* A rich gem.

கொழுமதி, *s.* Self-conceit. (*p.*)

கொழுமையாய்வளர்க்க, *inf.* [*loc.*] To nourish a child luxuriously.

கொழும்புகை, *s.* Odoriferous smoke, நறும்புகை. (*p.*) (சது.)

கொழும்பு—கொளும்பு, *s.* A town in Ceylon, Colombo, ஊர்.

கொழும்புவேர், *s.* Colomba root, used medicinally.

கொளகொளெனல், *v. noun.* Sounding repeatedly; rumbling, gurgling, ஈரடுக்கொலி.

கொளஞ்சி, *s.* As கொழுஞ்சி.

கொளுக்கி—கொளுவி, *s.* [*prov.*] A hook, a clasp, a hasp; a staple, the bow of a key, &c., an eye for a hook; [*ex* கொளுவு.]

கொளுத்து, *s.* Joints of the body, articulation, சந்து. 2. Linking, jointing, knitting, மூட்டு. (சது.)

கொளுத்து, கிறேன், கொளுத்தினேன், வேன், கொளுத்த, *v. a.* To kindle a light; to set on fire; to inflame, ignite, தீப்பற்றுவிக்க. 2. To instigate quarrels; to enkindle strife, சண்டைமூட்ட. 3. To play the lute or other stringed instrument, வீணைமுதலியன வாசிக்க. (*p.*) 4. To impart, instil, or infuse knowledge, to form the mind, அறிவுகொளுத்த. (*p.*) 5. To light or fire a rocket, பாணங்கொளுத்த. 6. To spread a rumor, தூற்ற. 7. To reprove sharply, கண்டிக்க. 8. *v. n.* (*fig.*) To burn, to scorch—as the sun, வெயிற்கொளுத்த.

வெயிற்கொளுத்துகிறது. The sun is scorching.

பாணத்தைக்கொளுத்தினன். He has lighted [fired] a rocket.

அவன் என்னுடைய குற்றத்தையெல்லாங் கொளுத்திவிட்டான். He has blazed abroad my faults.

என்மனமெரியும்படிகொளுத்திவிட்டான்...... He made my mind to burn [with anger.]

நான்அவனைநன்றாய்க்கொளுத்திவிட்டேன். I gave him a sharp, severe reprimand.

கொளுத்திவைக்க, *inf.* To light, kindle, set on fire.

நரம்புக்கருவியைக்கொளுத்த, *inf.* To play on stringed instruments. (*p.*)

விளக்குக்கொளுத்த, *inf.* To kindle a light.

வீடுகொளுத்த, *inf.* To set a house on fire.

கொளுவு, கிறேன், கொளுவினேன், வேன், கொளுவ, [*vul.*] *v. a.* To hook, clasp, buckle, latch on a nail, to hook on; to grapple, பூட்ட. 2. To entangle and ensnare, to take in, to entrap, inveigle, அகப்படுத்த. 3. To take into partnership, கூட்டுச்சேர்க்க. 4. To contrive, to manage by artifice, contrivance or scheming, தந்திரஞ்செய்ய. 5. [*prov.*] To put on shoes, sandals, &c., செருப்புமுதலியதொடுக்க. 6. *v. n.* To be engaged—as in an employment; to be ensnared or entrapped, &c., கொளுவுண்ண. 7. To make an impression—as on the mind, பற்ற. 8. [*prov. impersonal.*] To have cramp, stitches, &c., in the bowels or side, &c., குடல்தூக்கிக்கொள்ள.

அந்தவேலையிலே கொளுவினபின்பு. Since he was engaged in the business.

கொளுவிக்கொள்ள, *inf.* To hook, to engage, to eutangle.

சங்கிலிகொளுவிக்கொண்டது. The chain has become entangled.

கொளுவிப்பிடிக்க, *inf.* To entangle, catch, to ensnare a man—as a lewd woman. 2. (*Rott.*) To prosecute a law suit. 3. To hook in, &c.

கொளுவியிழுக்க, *inf.* To challenge one, or provoke one to a quarrel. 2. To bring one into trouble, difficulty, &c.

கொளுவிவிட, *inf.* To fasten on ear-rings, &c. 2. To engage one in trade, an office, &c. 3. To marry a woman to one in low life. 4. To set people quarrelling.

கொளுவிவைக்க, *inf.* To adjoin. (*R.*)

கொளுவுகயிறு, *s.* [*prov.*] The loop of the string in an ola book, by loosening which the leaves may be taken apart.

சண்டைகொளுவ, *inf.* To pick a quarrel.

வேலிகொளுவ, *inf.* [*loc.*] To hedge; to enclose with a fence of wood.

கொளை, *s.* A melody; a song, chant, இசைப்பாட்டு. (அகப்.)

கொள்—கொள்ளு, *s.* Gram, horse-gram—as காணம்.

கொள்ளாட்டு, *s.* A leguminous plant, Dolychos ciliatus, *Nob.*

கருங்கொள், *s.* See under கருமை.

கறுப்புக்கொள்—கார்க்கொள், *s.* Black gram, used medicinally, Cassia absus, *L.*

காட்டுக்கொள், *s.* Wild gram, Glycine suaveolens, *L.*

செங்கொள், *s.* Common horse-gram.

கொள்—கொள்ளு, கிறேன், கொண்டேன், வேன், கொள்ள, *v. a.* To take, receive with the hand, வாங்கிக்கொள்ள. 2. To contain, hold, comprehend, have, comprise, embrace, அடக்கிக்கொள்ள. 3. To buy, purchase, விலைக்குக்கொள்ள. 4. To accept, approve of, admit, அங்கீகரிக்க. 5 To take a wife, to marry, பெண்கொள்ள. 6. To take—as food, medicine, sleep, rest, &c., உணவுமுதலியகொள்ள. 7. To conceive—as in the womb, in the mind or in the heart. 8. To get, to acquire, பெற்றுக்கொள்ள. 9. *v. n.* To be contained in, அடங்க. As an auxiliary to other verbs, கொள் denotes, continuation, certainty, &c., of the action, and that the fruit of it reverts to the agent—as படித்துக்கொள்ளுகிறன். He continues to study. குதிரையைவாங்கிக்கொண்டேன். I bought a horse for myself. The verb is generally found in composition with other words—as வாங்கிக்கொள்ள, பெண்கொள்ள, உட்கொள்ள, &c., and very rarely in the personal finite forms in common usage, except in the third meaning.

கொள்வாருமில்லைக்கொடுப்பாருமில்லை.... There are none who receive, none who give.

கொண்டிருந்துகுலம்பேசுகிறதா? Would it be proper to twit a family after you have taken a wife from it?

கொண்டான், *s.* A husband, புருஷன். 2. A play as கொண்டல். See under கொண்டு, for other words.

கொண்டுபோக, *inf.* To carry, to convey; to take away.

கொள்க, [*optative.*] May take, accept, or may understand.

உமதுசித்தத்தின்படிகொள்க. You may take it as you please.

கொள்கலம், *s.* A vessel, a salver, a dish; a receptacle for sandal-paste, or other ointments, or for ornaments, &c., சாந்துமுதலியபெய்கலம். 2. A cup of palm leaf, or bamboo to eat from, பிழா. (சது.) A beggar's dish, இரப்போர்கலம்.

கொள்கை, *v. noun.* The act of taking, getting, &c. See, கொள், *v.* 2. Quality, nature, habit, state, குணம். 3. Liking, fondness, regard, attachment, intimacy, சிநேகம். 4. Opinions, tenets, belief, கோட்பாடு. 5. Knowledge, instruction, அறிவு.

அவருக்குமிவருக்குமிகுந்தகொள்கை. [*prov.*] They two are very intimate.

கிழவியிவனோடேமிகுந்தகொள்கையாயிருக்கிறள். The old woman is very fond of him.

கொள்கொம்பு, *s.* A prop for supporting vines. (*R.*)

கொள்வனை—கொள்வனவு—கொள்வினை, *v. noun.* Buying, borrowing; taking, receiving, வியாபாரக்கொள்ளுகை. 2. Marrying a wife, பெண்கொள்ளுகை.

கொள்வனைகொடுப்பனை, [*v. noun.*] Borrowing and lending. 2. Giving and receiving in marriage. 3. [*vul. loc.*] Taking, receiving; buying, borrowing, கொள்ளுகை.

கொள்விலை—கொள்கிரயம், *s.* The first or prime cost, the sum paid for a thing exclusive of profit, &c., கொண்டவிலை. 2. [*prov.*] Purchase, purchased land or property, விலைக்குக்கொண்டது. 3. One of the three species of real property. See சீதனம் and பிதிரார்ச்சிதம்.

கொள்விலைக்காணி, *s.* [*prov.*] Land attained by purchase, as distinguished from lands by dowry and inheritance.

கொள்விலைக்காரன், s. The purchaser of land, &c.

கொள்வோன், s. One who buys, or one who accepts any thing. 2. (நன்.) a pupil, student, learner, கற்போன்.

கொள்ள, [*adverbially.*] While, when—as நான்வரக்கொள்ள, while I was coming. 2. Since, therefore, because, as இருக்கக்கொள்ள, since it is so. ஆகக்கொள்ள, in the phrase நாளைவவன்வருவானாகக்கொள்ள, he will come tomorrow, therefore, [*tarry.*] 3. (*Rott.*) as கொள்க in the phrase கொள்ளாதநோய்கொள்ள, may you be seized with an insupportable disease—*a malediction.* 4. [*prov.*] More, further on, in or under—as கொஞ்சங்கொள்ளவார், pour out a little more; also in கொள்ளக்கொடு, insert a lever, or hand, further in, further under, &c., or let a pair of scissors or pincers take a good hold; and in கொள்ளப்பிடி, take hold further in measuring cloth.

கொளல்வினா, s. [*in gram.*] One of the six kinds of interrogation, implying a desire to obtain the thing mentioned—as அரிசியுண்டோ, have you got any rice? wishing to buy some.

கொள்ளல்—கொளல், v. noun. Taking, receiving, obtaining, buying, &c.

கொள்ளற்பாடு, [*prov.*] Estimation, worth, honor, மேன்மை.

கொள்ளாதசெய்கை, s. A flagrantly wicked, unbearable act.

கொள்ளாததிறை, s. One assiduous as a slave—spoken of an affectionate, faithful wife, or a dependent.

கொள்ளாதபுகழ், s. Unbounded praise.

கொள்ளாமை, v. noun, (*neg.*) Excessiveness, transcendency, pre-eminence in good or evil. 2. Disagreement, discordance, enmity, பகை.

வாய்கொள்ளாப்பேச்சு. Language not proper to be used.

கொள்ளார், s. Haters, enemies, பகைவர். (சது.)

இரட்டித்துக்கொள்ள, *inf.* See இரட்டிக்க.

அர்த்தங்கொள்ள, ஆசைகொள்ள, தலைக்கொள்ள, துயர்கொள்ள, நாட்கொள்ள, நிலைகொள்ள, நீர்கொள்ள, பைத்தியங்கொள்ள, மேற்கொள்ள, வேர்கொள்ள, are some of the compounds.

கொள்ளம், s. Mud, slime, குழைசேறு.

கொள்ளி—கொள்ளிக்கட்டை, s. A fire-brand, நெருப்புவிறகு.

கொள்ளிக்கெதிர்போனாலும், வெள்ளிக்கெதிர்போகலாகாது. You may oppose yourself to a fire-brand, but not to the planet Venus—said in reference to going East-ward when Venus is the morning star or West-ward when it is the evening star.

குடியிருந்தவீட்டிலேகொள்ளிவைக்கிறவன். An incendiary who sets fire to a house where he has received hospitality, i. e., one who returns evil for good.

கொள்ளிக்குடம்—கொள்ளியுங்குடமும், s. The fire-brand and water-pot which are carried by the chief mourner three times round the funeral pile previous to its being ignited.

கொள்ளிக்கண்ணன், s. A fierce-eyed man. 2. One whose looks are blighting. 3. [*prov.*] A horse or bull with red eyes, deemed ominous.

கொள்ளிக்கரப்பன், s. A kind of blain in children resembling scars from burning. See கரப்பன்.

கொள்ளிக்காற்குதிரை, s. [*prov.*] A horse with one white leg.

கொள்ளிக்கொட்டான் — கொள்ளியெறும்பு—கொள்ளிவாலெறும்பு—கொள்ளிவாயெறும்பு, s. An ant that stings. See எறும்பு.

கொள்ளிசொருகுதல், v. noun. [*prov.*] To insert a brand in the roof of a house—as an incendiary. 2. To cause or bring about another's ruin.

கொள்ளித்தேள், s. [*prov.*] A scorpion whose sting is very severe, ஓர்தேள்.

கொள்ளிவட்டம், s. A circle described in the air with a fire-brand by boys in play (*p.*)

கொள்ளிவாய்ச்சர்ப்பம்—கொள்ளிவாய்விரியன், s. A serpent whose bite causes burning smart.

கொள்ளிவாய்ப்பிசாசு—கொள்ளிவாய்ப்பேய், s. Ignis fatuus, or jack-with-a-lantern, (*lit.*) a fire-mouthed-devil.

கொள்ளிவாலி, s. [*prov.*] A cow or dog with the body black and tail white.

கொள்ளிவைத்தல், v. noun. Setting fire in general. 2. Lighting the funeral pile,—as done by the chief mourner. 3. Injuring or ruining a person, a family, &c.

கொள்ளிவைத்துக்குடமுடைத்தல், v. noun. Setting fire to the funeral pile and breaking a pot full of water, a funeral ceremony.

கொள்ளி, s. The oleander-leaved Cacalia, எருமைநாக்கி. (*M. Dic.*)

கொள்ளிடம், s. The river Coleroon,—as கொல்லிடம், இராது.

கொள்ளியம், s. The உமரி plant. 2. The புன்கு tree. (*M. Dic.*)

கொள்ளு, s. Gram—as கொள்.

கொள்ளுக்காய்வேளை s. A plant. See காய்வேளை.

கொள்ளை, s. Robbery, plunder, pillage; devastation, depredation, sacking, பிறர்பொருளைக்கவர்கை. 2. Excess, abundance, copiousness, plenty, மிகுதி. (சது.) 3. An epidemic, a pestilence, a plague, பெருவாரிநோய்; [*ex* கொள்.]

கொள்ளைக்கடிக்கப்போனேன். [*prov.*] I have been working without pay, for that bad man—spoken as an imprecation.

கொள்ளைக்கும்வெள்ளைக்குந்தப்பு. Flee from devastating armies, and from epidemics.

கொள்ளைக்குப்போனாலுங் கூட்டாகாது. One who intends to pillage, should not associate with others.

கொள்ளாகொள்ளை, s. [*prov.*] Great abundance, plenty.

கொள்ளைகொடுக்க, *inf.* To be plundered. 2. To allow plunder—as a general to his troops.

கொள்ளைகொள்ள, *inf.* To plunder, to ravage, to spoil. 2. To usurp, to monopolize. 3. (*p.*) To engross the mind, affections, desires, &c.

கொள்ளைக்காய்ச்சல், s. Epidemic fever.

கொள்ளைக்காரர், s. Plunderers, murderers.

கொள்ளைநோய், s. As கொள்ளை. 3.

கொள்ளைபோக — கொள்ளையாய்ப்போக, *inf.* To be plundered.

கொள்ளையடிக்க — கொள்ளையாட—கொள்ளையிட—கொள்ளையெடுக்க, *inf.* To rob, plunder, sack, pillage, devastate. 2. To commit burglary.

கொள்ளையாய்க்காய்க்க, *inf.* To yield abundantly—as trees, &c. (*c.*)

கொள்ளையாய்க்கிடக்க, *inf.* To be in a state of devastation—as a town. 2. To be abundant.

கொள்ளையுடைமை - கொள்ளைப்பொருள், s. Booty, spoil.

ஒருகொள்ளை, s. A great abundance, or great number. See ஒரு.

கொறடா, s. (*Hind.*) A horse-whip, குதிரைச்சவுக்கு.

கொறி, s. A sheep, செம்மறியாடு. 2. Aries of the Zodiac, மேடவிராசி.

கொறி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To work or force off the husks from grains of rice with the fore-teeth—as persons, or with the beak—as birds; to bite or nibble grain, &c., பல்முதலியவற்றுற் கொறிக்க. 2. (*fig.*) To pick, eat but little; to piddle, கொஞ்சங்கொஞ்சமாயுண்ண. 3. [*prov.*] To make a ticking, clucking sound, கட்டுவிட்டொலிக்க. 4. To chirp—as a lizard, &c., பல்லிமுதலிய கொறிக்க.

கொறிநெற்பதமாயிற்று. The paddy is grown so ripe that the husk can be easily forced off.

அவன் என் தலையைக் கொறிக்கப்பார்க்கிறான். He attempts to nibble my head, i. e., to injure me.

என்சும்மாகொறிக்கிறாய்? [*prov.*] Why do you chatter in vain?

கொறித்துப்பார்த்தல், v. noun. Trying rice that has been boiled for husking, by biting, to ascertain whether it is dry enough. 2. Looking staringly with impudence.

கொறிப்பு—கொறித்தல், v. noun. The act of nibbling or nipping.

கொறிதலை, s. A medicinal plant, சிலவேம்பு. (*M. Dic.*)

கொறு, s. A wicker basket for the mouth of a calf to prevent it from sucking.

கொறுக்கச்சி, s. The எருவை reed.

கொறுக்காய், s. The gorga tree; the fruit of which is used for acidifying curries, இரம்பம், Garcinia gambogia.—*Note.* It does not produce the true Gamboge.

கொறுக்காய்புளி, s. The acid pulpy rind of Gorga fruit, cut in pieces and dried—an article of export.

கொறுக்கை, s. A species of reed or rush, கொறுக்கச்சி. 2. A fish, ஓர்மீன். 3. Snoring, குறட்டை.

கொற்கை, s. The name of an ancient town near Madura, ஓர் நகரம்.

கொற்கையாளி—கொற்கைவேந்தன், s. A race of Pandian kings in கொற்கை town, பாண்டியன். (*p.*)

கொற்றம், s. Victory, success, வெற்றி. 2. Power, strength; ability, வல்லமை. 3. Royalty, kingly government, அரசியல். 4. (சிக.) A limit—as கொற்றம்.

கொற்றக்குடை, s. The Canopy of royalty. (*p.*)

கொற்றவன்னே, s. Devastation of a country by a hostile army.

கொற்றவன், *s.* A king, a monarch, அரசன். 2. A valiant, victorious man, வெற்றிசிறந்தோன். (*p.*)

கொற்றவை, *s.* Durga—as the goddess of war and victory, துர்க்கை.

கொற்றி, *s.* Durga, the goddess of war—as கொற்றவை. 2. The goddess, காடுகாள்.

கொற்றியாருக்குப்படைத்தல், *v. noun.* Making offerings to the goddess கொற்றியார்.

கொற்றியாரைவழிவிடுதல், *v. noun.* Dismissing the goddess on the 5th day after child birth, the midwife carrying away the mat on which the woman lay with a little of each kind of food she has eaten, to some open place or jungle.

கொற்றியார், *s.* [*prov.*] The goddess of parturition.

கொற்றவன், *s.* The முடக்கொத்தான் plant. (*M. Dic.*) See கொற்றம்.

கொற்றன், *s.* A proper name used as an example, under கொற்று in grammar, ஓர் சிறப்புப்பெயர். 2. See under கொற்று.

கொற்றி, *s.* A young calf, பசுவிளங்கன்று. 2. Female of கொற்றன். See under கொற்றம்.

கொற்று, *s.* [*a contraction of* கொல்லற்று.] Masonry, கொற்றுத்தொழில். 2. Masons, bricklayers, கொற்றர்.

கொற்றன், *s.* Mason, bricklayer.

கொன், *adv.* In vain, uselessly, to no profit—as in கொன்னேகழித்தீர், you have spent it in vain, பயனின்றி. 2. In due time, seasonably—as in கொன்வரல்வாடை, the north wind coming in its season, பருவகாலத்திலே. 3. Dreadfully, terribly—as is கொன்முனையிரவூர், a village terribly pinched by poverty, அஞ்சும்படியாய். 4. Almost, entirely, all—as in கொன்னூர்துஞ்சினும், though the town is all asleep, முற்றும். (*p.*)—Note. The word is sometimes an adjective—as in கொன்னூர், the great town. 5. *s.* (நாலடி.) Hell, நரகம்.

கொன்றை, *s.* [*improp.* கொன்னை.] A genus of flower trees, கடுக்கை. Cassia, *L.*

சரக்கொன்றை, சிறுகொன்றை, செழுமலர்க்கொன்றை, திருக்கொன்றை, புலிநகக்கொன்றை, பெருங்கொன்றை, பொற்கொன்றை, மயிர்க்கொன்றை, முட்கொன்றை, are varieties of கொன்றை. See those words.

கொன்றைக்காய், *s.* The pods of the Cassia fistula—are sold as a drug, the pulp of them is taken as an electuary for costiveness, the flowers are also used medicinally. [Ainslie vol. 1. p. 66.]

கொன்றைசூடி, *s.* Siva—as crowned with கொன்றை flowers; similar compounds—as கொன்றைவேணியன், கொன்றைமாலையன், கொன்றைத்தாரான், &c., mean the same.

கொன்றைவேந்தன், *s.* [*prop.* கொன்றைவேய்ந்தன்.] A Tamil school book commencing with the words, கொன்றைவேய்ந்தன் by Aviar, ஔவைநீதிச்சொல்.

கொன்னு, கிறேன், கொன்னினேன், வேன், கொன்ன, *v. n.* [*vul.* probably a corruption of கொஞ்சு, *v.*] To speak indistinctly, to stammer, articulate imperfectly, கொன்னையாகப்பேச. Used commonly in the gerundial form—as கொன்னிக்கொன்னிப்பேசுகிறான், he stammers, speaks indistinctly, falters in his words.

கொன்னை, *v. noun.* [*vul. prov.*] Indistinct speaking, stammering, lisping, imperfect articulation, சொற்றிருந்தாமை.

கொன்னைவாயன், *s.* [*fem.* கொன்னைவாய்ச்சி.] One who speaks indistinctly, a stammerer.

கொன்னெச்சன், *s.* [*prov.*] A kind of gad-fly in cattle, ஓர்வகைஈ.

கொன்னை, *s.* [*loc.*] A cup made of leaves—as தொன்னை.

கோ

கோ. A letter compounded of க் and ஓ. 2. A vocative particle, அழைப்புக்குறி. 3. An exclamation of success, victory, &c., கொய்யோக்குறி.

கோகோவென்றழ, *inf.* To weep loudly.

கோ, *s.* A king, அரசன். 2. A man in his prime, ஆண்மகன். 3. Greatness, superiority, மேன்மை. (சது.) 4. (*M. Dic.*) The jujubee tree, இலந்தை.

கோக்கள், *s.* Nobles, gentlemen, இறைவர். 2. Kings, அரசர்.

இளங்கோக்கள், *s.* The third class or caste of Hindus; the class next below the kings, வைசியர். (திவ.)

கோமகன், *s.* A prince, a king's son, இராசகுமாரன். 2. A king, அரசன்.

கோமகள், *s.* Princess, இராசகுமாரத்தி. 2. A mistress, a lady, தலைவி.

கோமாள், *s.* A lady, a mistress, தலைவி.

கோமான், *s.* A king, an Emperor, அரசன். 2. A superior, a lord, தலைவன். 3. A guru, a priest, குரு. 4. An elder; a person of dignity, respectability, estimation, &c., மூத்தோன்.

கோமாட்டி, *s.* A lady, a mistress.

கோவியல், *s.* Kingly quality, regality.

கோவில், *s.* A temple, church. See கோயில்.

கோவேறுகழுதை, *s.* A mule, வேசரி.

கோன், *s.* A king, a monarch, அரசன். 2. A master, a lord, இறைவன்.

*கோ, *s.* A cow, பசு. 2. A bull, எருது. 3. Air, ஆகாயம். 4. Swerga or paradise, heaven, சுவர்க்கம். 5. The earth, பூமி. 6. Water, நீர். 7. A point of the compass, region, quarter, திசை. 8. An arrow, அம்பு. 9. Thunderbolt, the weapon of Indra, வச்சிராயுதம். 10. An eye, கண். 11. Any of the five sentient organs, பொறி. W. p. 297. Gô. 12. Hill, mountain, மலை.

கோகத்தி—கோவதை, *s.* The murder of cows, or the guilt consequent on it, பசுக்கொலை; [*ex hatya, killing.*]

கோசலம், *s.* Cow's urine in ceremonial purifications, &c.

கோதனம்—கோதன்னம், *s.* A calf, பசுவின்கன்று; [*ex* தன்னம், a calf.]

கோதானம், *s.* The gift of a cow.

கோபதி, *s.* A bull, (*lit.*) lord of cows, இடபம். 2. Indra—as king of Swerga, இந்திரன். W. p. 299. Gôpati.

கோபாலர், *s.* [*pl.* of கோபாலன்.] Herdsmen, cow-herds, இடையர். 2. Kings, அரசர்; [*ex* பாலர், protectors.] W. p. 299 Gôpala.

கோபாலன், *s.* Krishna, கிருஷ்ணன்.

கோமட்டி, *s.* [*prop.* கோமுட்டி.] A caste of merchants.

கோமயம், *s.* Cow-dung, சாணி. 2. The properties or peculiarities of a cow; any thing cow-like whether in appearance, make, smell or otherwise, ஆவிற்குரியதன்மை; [*ex* மயம், likeness.] W. p. 300. Gômaya. 3. [*vul.* also கோமியம்.] Urine of the cow, ஆநீர்.

கோமாமிசம், *s.* Beef, மாட்டிறைச்சி.

கோமாரி, *s.* A disease of cows, மாட்டுக்குவருமுழிநோய்.

கோவர்த்தனர்—கோவலர்—கோவர்—கோவிந்தர், *s.* Herdsmen, cow-herds, இடையர்.

கோவைசியர், *s.* A class of வைசியர் who are cow-herds.

இரத்தக்கோமாரி, *s.* See under இரத்தம்.

கோகண்டம், *s.* The நெருஞ்சில் shrub.

*கோகநதம்—கோகநகம் *s.* The lotus; also the red lotus, செந்தாமரை. W. p. 250. Kôkanada.

கோகநதை—கோகநகை, *s.* Lukshmi, the lotus—seated—as சலசை.

கோகந்தம், *s.* A kind of arsenic, கந்தகபாஷாணம். (*R.*)

*கோகம், *s.* A large carnivorous red bird, the Brahmany or ruddy goose, சக்கரவாகப்புள். 2. A red ferocious animal, செந்நாய். (W. 250. Kôka, a wolf.) 3. Dried flowers, உலர்ந்தபூ. (*M. Dic.*)

கோகரணம், *s.* An art, ஓர்வித்தை. (*c.*)

*கோகர்ணம்—கோகன்னம், *s.* A celebrated place of pilgrimage on the Malabar Coast, sacred to Siva, ஓர்சிவஸ்தலம். W. p. 297. Gôkarna.

கோகலி, *s.* The கடம்பு tree. (*M. Dic.*)

கோகழி, *s.* A place sacred to Siva, ஓர்சிவஸ்தலம்.

கோகனம், *s.* An herb, the கையாந்தகரை. 2. Another herb, the நிலக்கடம்பு. (சது.)

*கோகிலம், *s.* The Koil bird, or Indian cuckoo, which is often referred to in poetry, as its note is supposed to inspire tender emotions, குயில். 2. The wall lizard, பல்லி. W. p. 250. Kôka. 3. (திவ.) A monkey, குரங்கு; [*ex Sa. Kuka*, take, seize.] 4. The சிறுகுறிஞ்சா creeper. (*M. Dic.*)

கோகிலாட்சம், *s.* The நீர்முள்ளி plant. 2. The கொம்மட்டிமாதுளை tree. (*M. Dic.*)

கோகு, *s.* An ass, கழுதை. (திவ.) Compare. (*Sa. Kôka.*)

கோகுத்தம், *s.* The மல்லிகை shrub. (*M. Dic.*)

கோகுலம், *s.* A monkey, குரங்கு. 2. A tube, any thing tubular, துளையுடைப்பொருள். (சது.)

கோ, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*com.* கோர்க்க.] To string—as beads, flowers, ola leaves, &c., to file, கோவைசெய்ய. 2. To insert and draw—as a string, thread, ratan, &c., in a hole, a mesh, a braid, &c., to thread a needle, &c., கயிறுமுதலியனகோக்க. 3. To compose, compile, arrange, to reduce to order, or system, தொடையாக்க. 4. To clasp or join—as the hands, &c., to lock—as the arms, தொடுக்க, பிணைக்க. 5. To fabricate, as stories, malicious reports, கதைகோக்க.

சரங்கோத்ததுபோலேகோத்துவிட்டார். He arranged it as nicely as a string of flowers.

கோத்திழைக்க, *inf.* [*prov.*] To mend a hole or rent in a mat, a basket, &c.

கோத்துக்கொடுக்க, *inf.* To thread a needle in hedging, roofing, matting, &c., and pass it through to another person. 2. (*fig.*) To present in an unfavorable light—as the wrong, injury, &c., done to one by his adversary and thereby to aggravate the enmity.

கோத்துச்செய்ய, *inf.* To reduce a theme to system and make a poem. (*p.*)

கோத்துப்பின்ன, *inf.* To braid, to lace shoes, stays, &c.

கோத்துவாங்க, *inf.* To turn back the shuttle in weaving so as to exclude the border that it may be of a different color.

கோத்துவிட, *inf.* [*prov.*] To bring into difficulties. 2. To sow discord, to excite enmity.

அத்திரங்கோத்துவிடுதல், *v. noun.* Setting arrows in the bow and discharging them. (*p.*)

நூலில்லாமற்கோத்தல், *v. noun.* Fabricating a story without any foundation; (*lit.*) to string without thread.

கோப்பு, *v. noun.* Stringing, inserting, threading, arranging, methodizing. 2. Gaudiness, showiness, gaiety, parade, இடம்பம். 3. (*Rott.*) Jest, sport, பகிடி.

அவன்நல்லகோப்பாயிருக்கிறன். [*prov.*] He is a rich man.

கோப்புகொடுக்க, *inf.* To prepare all kinds of food. (*R.*)

கோங்கம், *s.* The நெல்லி tree. (*M. Dic.*)

கோங்கு—கோங்கிலவு, *s.* A kind of cotton tree—the silk cotton, கன்னிகாரம், Bombax gossypinum, *L.*

கோசமம், *s.* The பீர்க்கு plant.

கோசம், *s.* Nutmeg, சாதிக்காய். (*M. Dic.*)

***கோசம்**, *s.* Egg, முட்டை. 2. Penis; also the scrotum, ஆண்குறி. 3. Sheath, scabbard, case, receptacle, உறை. These sheaths are five, one within the other. 4. Treasures, stores—as gold or silver plate, jewelry, &c., பலபண்டம். 5. A store house, a treasury, பண்டசாலை. 6. A treatise, a book, especially a dictionary, or vocabulary, புத்தகம். W. p. 252. Kôsha 7. (சது.) Covered or ornamented parts of a fortress-wall, மதிலுறுப்பு. 8. Street, வீதி. (*p.*) 9. [*in Hindu philosophy.*] A covering or case for the organised soul, கவசம். Cases supposed to invest the soul are five; 1. அன்னமயகோசம்; the body sustained by food. W. p. 40. Annamayakôsha. 2. பிராணமயகோசம்; the vital, external organs. W. p. 586. Pranamayakôsha. 3. மனோமயகோசம்; the mental organs with the faculty of thought, (மனம்,) operating through the senses. 4. விஞ்ஞானமயகோசம்; the supposed organs of intellectual perception with the faculty of intellect (புத்தி). 5. ஆனந்தமயகோசம்; supreme felicity in which the soul is so entirely absorbed as to be unconscious of everything else. W. p. 113 Anandamayakôsha.

கோசரம், *s.* The மகிழ் tree. (*M. Dic.*)

***கோசரம்**, *s.* An object of sense—as sound, color, &c., விடயம். 2. Sensation, perception; comprehension, உணர்வு. 3. A country, district, ஊர். 4. [*in astrol.*] The presence of a planet in one's natal sign or one reckoned from it. W. p. 298. Gôchara. 5. (சது.) Restriction, restraint, confinement—as சங்கோசம், அடக்கல். (*from Sa. Kucha.* W. p. 225.)

கோசரபலம்—கோசரபலன், *s.* [*in astrol.*] The influence of a planet in one of the above signs.

***கோசலம்**, *s.* The city of Ayôdhyâ, or Oude, and the adjacent district to the south; forming one of the fifty-six countries of India, அயோத்தியாதேயம். W. p. 252. Kôsala. 2. One of the eighteen languages, பதினெண்பாடையிலொன்று. 3. See under கோ, *Sa.*

***கோசலை**, *s.* The கோசலம் country. 2. The mother of Rama, இராமன்றாய். (இராமா.)

***கோசனை — கோசணை**, *s.* A great noise, roar, பேரொலி. (நிக.) W. p. 311. Ghôshan'a. Compare கோடணை.

கோசன், *s.* A kind of native arsenic, சிர்பந்தபாஷாணம். (*R.*)

கோசா, *s.* (*Hind.*) Eunuch, கிலீவன்.

கோசாங்கம், *s.* A reed, நாணல்.

கோசாமி, *s.* [*vul.*] A holy man, a devotee of the fourth or highest class, one who has subjected the passions, துறவி. 2. A naked devotee, திருவாணதவத்தி.

கோசாயி, *s.* (*Hind.*) Go'sa'in—as கோசாமி.

***கோசாரம்**, *s.* [*in astrol.*] As கோசரம்.

கோசாரி, *s.* The பீர்க்கு plant. (*M. Dic.*)

***கோசான்**, *s.* [*vul. prov.*] Membrum virile—as கோசம்.

***கோசிகம்**, *s.* Cloth, சீலை; silk cloth—as கௌசிகம், பட்டுச்சீலை. (*Sa. Kosika.*) 2. The third Veda, the சாமம். (சது.) Compare கோடிகம், கௌசிகம்.

***கோசிகன்**, *s.* The anchoret, விசுவாமித்திரன், son of the sovereign காதி. See கௌசிகன்.

கோசு, *s.* A ko's, a measure of distance—two Indian miles—as குரோசம், ஓரெல்லையளவு. 2. (சது.) A street—as கோசம், வீதி. 3. The lower front rope of the sail of a dhoney, the clew line, தோணிப்பாயின்முற்புறத்தின்கயிறு. See தாமான். 4. [*prov.*] A voyage, a trip; a term, a time, ஓர்தடவை. 5. Defeat, frustration, loss, overthrow, பிரதிகூலம். 6. [*loc.*] Affairs, concern, cause, காரியம்.

கோசிலேவர—கோசிலேபிடித்துவர, *inf.* To hold the rudder so as to keep close to the wind; to luff.

அவன்இதிலேகோசுபோய்விட்டான். [*prov.*] His object was defeated in the case.

அவன்கோசுக்குப்போகாதே. Do not interfere in his affairs.

கோசுகால், *s.* [*prov.*] Attenuation in growth—as the stalks of pot-herbs, நெடுங்கால்.

***கோஷணை—கோஷம் — கோடம்**, *s.* As கோடணை, 1, 2.

***கோஷி**, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To sound, to hum—as bees, ஒலிக்க. 2. To roar, thunder; to mutter—as clouds, முழங்க. *Sa. Ghôsha.*

***கோஷை**, *s.* Sound, thunder, சத்தம். W. p. 311. Ghôshâ. 2. [*Rott. prop. Goshtee.*] Discourse, dialogue, சம்பாஷணை.

கோடகசாலை, *s.* [*vul.* கோடாசாலை.] A kind of plant, ஓர்பூடு, Justicia procumbens, *L.*

கோடகம், *s.* A ewer, குண்டிகை. 2. The ornamental curves of a crown being one of its five parts. (See முடியுறுப்பு.) 3. A place where four ways meet, நாற்றெருக்கூடுமிடம். (See சிருங்காடகம்.) 4. Newness, recency—as கோடி, புதுமை. (சது.)

***கோடகம்**, *s.* A horse, குதிரை. W. p. 311. Ghôt'aka.

கோடங்கி, *s.* [*loc.*] A diviner, soothsayer, வருங்காரியஞ்சொல்வோன். Sometimes கோடாங்கி.

கோடங்கிபார்க்க, *inf.* To consult, &c., a diviner.

கோடங்கிழங்கு—கோடைக்கிழங்கு, *s.* The சிற்றரத்தை plant. (*M. Dic.*)

***கோடணை**, *s.* Sound, hum, ஒலி. 2. Noise, roar, thunder, பேரொலி. W. p. 311. Ghôshan'a. 3. Instruments of music in general or drums, வாச்சியப்பொது. 4. Cruelty, கொடுமை. (சது.)

கோடதரம், *s.* The dried root of ginger, சுக்கு. (*M. Dic.*)

கோடம், *s.* Border, limit, எல்லை. (சது.) 2. As செங்கருங்காலி. (*M. Dic.*)

கோடரம், *s.* The branch of a tree, மரக்கொம்பு. 2. (*Sa. Kut'hâra.*) A tree in general, மரப்பொது. 3. A grove, a garden, சோலை. 4. A monkey, குரங்கு. 5. The எட்டி tree.

***கோடரம்**, *s.* The hole or hollow of a tree, மரப்பொந்து. W. p. 250. Kôt'ara. 2. The knob on the top of a car, தேர்மொட்டு. 3. (*Sa. Ghôt'a.* W. p. 311.) A horse—as கோடகம், குதிரை. 4. Fragrant hair-ointment, pomatum, மயிர்ச்சாந்து.

கோடரி, *s.* [*a change of* குடாரி.] An axe, கோடாலி.

கோடல், *v. noun.* Taking, receiving, buying, &c., [a form of கொள்ளுதல்.] 2. Bending, curving, &c.; breaking, snapping, [a form of கோடுதல்.] 3. *s.* The white species of the Gloriosa flower, வெண்காந்தள்.

***கோடவதி**, *s.* A vina or Indian lute, வீணை; [*ex* கோடம், கோஷம், sound.] (சது.) W. p. 311. Ghôshavatee.

கோடா, *s.* [*prov.*] The dregs of an inferior kind of arrack, சாராயவண்டல்.

கோடாவடிக்க, *inf.* To dissolve the dregs in water.

கோடாங்கி, *s.* [*loc.*] A masquerade, வேஷக்கூத்து. 2. Women's cloth, மாதராடை. 3. A soothsayer—as கோடங்கி.

கோடாசுழி — கோடாசூரி, *s.* A medicinal plant, கோடகசாலை. 2. A pill or dose of medicine from the plant, கோடகசாலை மாத்திரை.

கோடாசொரி, *s.* A kind of arsenic, தீப்பாஷாணம்.

கோடாய், *s.* One of the five nurses, she that carries the child, செவிலித்தாய்; [*ex* கொள், carrying, *et* தாய்.] See தாய்.

கோடாலி, *s.* [*a change of* குடாரி.] An axe. (*c.*)

கோடாலிக்காம்பு, *s.* The axe-handle.

கோடி, *s.* Newness, recency, புதுமை. 2. [*loc.*] New cloth, unbleached cloth, புதுச்சீலை. 3. (நிக.) Cloth in general, சீலை. 4. (*c.*) A collection of twenty, a score—as of precious stones, &c., இருபது. 5. One of the five parts of a crown—as கோடகம், முடியுறுப்பு.

கோடிமுடிய, *inf.* [*prov.*] To tie a piece of money in the corner of another's new cloth, to oblige him to give an invitation to a feast.

கோடிப்பருவம்-கோடிவயது, *s.* Youth. (*R.*)

கோடியுடுக்க, *inf.* To put on a new cloth.

கோடியுடம்பு, *s.* [*prov.*] A tender body.

கோடியெடுக்க, *inf.* To buy a new set of cloths, as yearly practiced at தீபாவளி.

கோடிவெள்ளை, *s.* The whiteness of a cloth after the first washing.

***கோடி**, *s.* A crore, or ten millions, நூறுலட்சம். 2. End, tip, point, projection, முனை. 3. Cape, headland, promontary, தரைமுனை. 4. Nook, corner; the exterior of an angle, மூலை. 5. [*in Mathemat.*] The complement of an arc or angle to 90°, correlative of புசை. W. p. 250. Kôt'i, 6. [*loc.*] Back side or backyard of a house—as புறக்கோடி.

கோடிகண்டால்விடுவானோ. If he get a hint will he not find it out?

கோடாகோடி, *s.* [*com.* கோடானகோடி.] A number—a hundred billions, பதுமம். 2. An immense, indefinite number, அளவின்மை.

கோடிகாண்பிக்க, *inf.* [*loc.*] To touch slightly on a thing, to hint.

கோடிக்கரை, *s.* Point Calimere.

கோடிக்கல், *s.* A corner stone in a building.

கோடிச்சா, *s.* [*in Mathemat.*] The cosine.

கோடீமான்—கோடீஸ்வரன், *s.* A man of crores, one worth 10 millions of pagodas or rupees.

கோடிதீர்த்தம், *s.* A sacred bathing place near Ramisseram. 2. A bathing place near Point Calimere.

கோடிதூங்க, *inf.* [*prov.*] To be idle about another's house, to loiter about.

கோடிதூங்கி, *appel. n.* A loiterer about other's houses.

கோடிப்பாம்பு, *s.* [*loc.*] A full grown cobra snake.

கோடியன், *s.* [*prov.*] The first and last in a set of palenkeen bearers. 2. The out side ox in a row going round a treading floor,—the inside one being called உள்ளான்.

கோடிகம், *s.* A jewel casket, அணிகலச்செப்பு. 2. Ewer, or pot with a spout, கெண்டிகை. 3. Cloth,—as கோடிச்சீலை. 4. A salver for presenting flowers, பூந்தட்டு.

கோடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*loc.*] To make a vow, பிரார்த்திக்க. (*R.*)

கோடியர், *s.* (*fem. Sa. Gôsht'ee*, dramatic composition.) Comedians, dancers, கூத்தர். (நிக.) Compare காகோடியர்.

கோடிரவம், *s.* The சதுரக்கள்ளி tree. (*M. Dic.*)

கோடிலம், *s.* The கோஷ்டம் tree. See குரா.

***கோடீரம்**, *s.* Long entangled hair—as worn by ascetics in imitation of Siva's matted hair, சடை. (நிக.) 2. A crest, a diadem, முடி. (சது.) W. p. 251. Kôt'ee'ra.

***கோடு**, (Gen, ட்டின்,) *s.* Crookedness, flexture, obliquity, a crooked thing, வளைவு. W. p. 250. Kôta. 2. A diagram or figure, as a square, a circle, an ellipse, &c., வடிவம். 3. Dividing or describing lines, கீற்று. 4. A chank, சங்கு. 5. The horn or tusk of a beast, விலங்கின்கொம்பு. 6. The horn or chank for blowing, ஊதுகொம்பு. 7. The symbol of the எ, ெ, or ே, எழுத்தின்கொம்பு. 8. A branch, மரக்கொம்பு. 9. The summit of a hill, மலையினுச்சி. 10. Shore, bank of a river, margin of a tank or well, &c., நீர்க்கரை. 11. Ridge, dam, bank in rice-fields, வரம்பு. 12. (*Sa. Kota.*) A strong hold, a fort, a fortified place, அரணிருக்கை. 13. Guile, deceit, வஞ்சனை. 14. Crowd, numbers, multitude, திரள். (பிங்.) 15. Side, பக்கம். (பிங்.) 16. A cusp, the horn of the crescent moon, &c., பிறைக்கோடு. 17. [*loc. for.*] Court of justice, நீதிஸ்தலம்.

கோடுகீற—கோடுகிழிக்க, *inf.* To draw lines; to make diagrams, figures, &c.

நீர்கிழித்தகோட்டுக்குள்ளடங்கியிருக்கிறேன். I am within the line you drew, i. e., I obey your order.

கோடுகீறிமறிக்க, *inf.* To draw a circle on the ground round a debtor, adjuring him not to pass it till the debt is paid. 2. To draw a circle round one in order to extort a promise from him. 3. To draw a magic line in order to stop a wild beast, தடைகட்ட.

கோடுபோட, *inf.* To rule a paper to write (*c.*)

கோட்டிலக்கம், *s.* [*in arith.*] Magic squares. [*limited usage.*]

கோட்டில்வாழ்விலங்கு, *s.* Animals that live on trees as squirrels, monkeys, &c.

கோட்டுநீறு, *s.* Shell-lime, conch-lime. (*p.*)

கோட்டுப்பூ, *s.* One of the four kinds of flowers; those on branches. See பூ.

கோட்டுமலை, *s.* Elephant. (*p.*)

கோட்டுமா, *s.* [*lit.* the tusked animal.] Elephant, யானை. 2. Hog, boar, பன்றி.

ஒருகோட்டன், *s.* Ganêsa—as the single tusked, விநாயகன். (*p.*)

வடகோடு, *s.* The northern cusp of the moon. (*p.*)

தென்கோடு, *s.* The southern cusp of the moon. (*p.*)

கோடு, கிறேன், கோடினேன், வேன், கோட, *v. n.* (*Sans.* Kôt'a, crooked). To be crooked, oblique; to bend, வளைய. 2. To swerve, to deviate, to diverge, கோண. 3. To be partial, biased, நடுவுநிலைகோண. 4. To be envious, displeased, to take umbrage, to have antipathy, வெறுப்புற. 5. *v. a.* To break, to snap off, முறிக்க. (*p.*)

கோடாதகோல், *s.* A right sceptre, just government.

கோடாதமனம், *s.* A liberal mind, a benevolent mind. 2. A mind free from envy, guile, bias, &c.

கோடாதமொழி, *s.* Unfailing promises. (*p.*)

கோடாமை, *s.* Straight forwardness, unbiasedness, &c.

கோட்டம், *v. noun.* Crookedness, bent, flexture, வளைவு. 2 Grudging, malice, envy, அழுக்காறு. 3. Partiality, swerving from rectitude, injustice, obliquity, கோணல். 4. [*prov.*] Lines, figures, diagrams made of rice-flour, &c., on the floor in religious ceremonies, மாக்கோலம்; (*ex* கோடு.)

முகங்கோடுதல், *s. v. noun.* Making a wry face through discontent, dissatisfaction, umbrage, sorrow, &c.

சொற்கோட்டமில்லதுசெப்பமொருதலையாவுட்கோட்டமின்மைபெறின். Freedom from obliquity of speech is rectitude, if there be a (corresponding) freedom from bias of mind. (குற.)

முகக்கோட்டம், *v. noun.* A sad, dejected countenance. 2. A look of reluctance or unwillingness.

கோடை, *s.* The hot season, வேனிற்காலம். 2. The wind of the hot season, the land-wind, the west wind, மேல்காற்று. 3. (நிக.) Wind in general, காற்று. 4. Sunshine, வெயில். 5. The செங்காந்தள் plant. 6. The வெண்காந்தள் plant. See காந்தள். 7. A kind of plant, the mealy root of which is used by the weaver for sizing warp. See கோடங்கிழங்கு.

கோடைகாலம், *s.* The hot season.

கோடைக்காற்று, *s.* West wind. As கோடை. 2.

கோடைக்கிழங்கு — கோடங்கிழங்கு, *s.* The mealy root of the கோடை plant.

கோடைக்குவாடான், *s.* A Medicinal shrub, ஆவிரை.

கோடைச்செய்கை, *s.* Preparation of land in the dry season for the next rain.

கோடைப்புரோசனம் — கோடைப்போகம், *s.* [*loc.*] Crop grown in the hot season. 2. The produce of cultivation in the hot season.

கோடைமழை, *s.* Rain in the hot season, deemed pernicious. (*c.*)

***கோடை**, *s.* A horse. W. p. 311. Ghôt'a.

கோட்டகம், *s.* A tank or pond—as கோட்டம், குளம். (சது.) 2. A temple—as கோஷ்டம், கோவில்.

கோட்டம், *s.* Place, இடம். 2. A burning place, சுடுகாடு. 3. A country, a cultivated district, நாடு. 4. Agricultural towns or villages, மருதநிலத்தூர். 5. Rice fields, வயல். 6. A tank, குளம். 7. A kind of shrub. See குரா. See under கோடு, *v.*

*கோட்டம்—கோஷ்டம், s. A cow-pen; a cowstall, ஆன்கொட்டில். 2. A herd of cows, பசுக்கூட்டம். 3 An assembly, a crowd, கூட்டம். W. p. 302. GOSHT'HA. 4. Swerga, the world of the Devas—as கோ, தேவலோகம். 5. A temple, கோயில். 6. A medicinal plant, Arabian costus; of which there are two kinds; viz: 1. வெண்கோஷ்டம். 2. செங்கோஷ்டம். 7. A perfume, or odoriferous substance, வாசனைப்பண்டம். 8. (*Sa. Ghosha*, sound.) Boisterousness of the sea, rushing of the wind, &c., ஆரவாரம். (*c.*) 9. A kind of Indian lute or Vina, வீணை.

கோட்டரவு, *v. noun.* [*prov.*] Sadness, pensiveness, lowness of spirits, dejection of mind, மனவிசாரம்; [*ex* கோடு, *v.*]

கோட்டாலை, s. Distress, suffering, torment, vexation, harassing, teasing, துன்பம். (நிக.) (*c.*) 2. (*Sa. Kotta'ra.*) Wanton sports, amorous gestures, lewd jokes, mockery, சரசம்.

அவனைப்பிடித்தகோட்டாலையிப்படியிருக்கிறது...... Such is his foolish behavior.

கோட்டாலைகொள்ள—கோட்டாலைபண்ண, *inf.* To vex, trouble, harass, tease, try one. 2. To play the fool.

கோட்டாலைக்காரன், s. A troubler. 2. A scoffer, a buffoon.

கோட்டான், s. The large hooting-owl, கூகை. 2. The small screech owl. 3. [*prov.*] A bird of the bittern kind, of which there are several varieties.

கோட்டான்போலேவிழிக்கிறன். He looks as an owl, i. e. stupid.

கோட்டி, s. Beauty, அழகு. (சது.) Compare தோட்டி. 2. (*c.*) Trouble, vexation, annoyance, துன்பம் 3. (*Rott.*) The larger stick in the game of trap-stick. Compare கிட்டி.

கோட்டிகொள்ள, *inf.* To annoy, vex. 2. To jeer, banter, mock.

என்னைக்கொள்ளாதகோட்டியெல்லாங்கொண்டான். He has treated me very ignominiously.

*கோட்டி—கோஷ்டி, s. Assembly, meeting, company of learned or respectable persons, சபை. 2. Multitude, collection, கூட்டம். W. p. 302. GOSHT'EE. 3. The gate of a tower, கோபுரவாயில். 4. Pleasantry, jest, joke, பகிடி. 5. [*loc.*] Ignominy, reproach, நிந்தை.

தரித்திரருக்குவிஷங்கோஷ்டி. Joking is hurtful to the poor.

பிராமணகோஷ்டி, s. An assembly of brahmans.

கோட்டியாழ், s. One of the four species of guitar. (சது.) See செங்கோட்டியாழ், under யாழ்.

கோட்டு, இறேன், கோட்டினேன், வேன், கோட்ட, *v. a.* To bend, inflect, crook; to make crooked, வளைக்க. (*Sa. Kot'a.*) 2. To write, delineate, to draw pictures, &c., சித்திரமுதலியவரைய. (*p.*)

கோட்டுவான், s. [*vul.*] As கோட்டான். 2. (*R.*) A water-bird.

கோட்டை, s. [*loc.*] A measure of grain from twenty-one to twenty-four marcals, முகத்தலளவைக்கோட்டை. 2. A quantity of grain, pepper, &c., stored in a straw covering for export, &c., நென்முதலியவற்றின் கோட்டை.

கோட்டைகட்டிவைக்க, *inf.* To inclose grain, &c., in straw.

கோட்டைப்போர், s. A heap of straw.

*கோட்டை, s. A fort, a castle, a strong hold, அரண். 2. A fortified town, அரணிருக்கை. W. p. 251. KOTTA. 3. A halo, பரிவேடம். (*c.*) 4. [*loc.*] The wards of a lock, பூட்டிநெருறுப்பு.

கோட்டைகட்ட, *inf.* To construct a fort.

கோட்டைகட்டிப்போட்டாரோ. Has he saved much; (*lit.*) made a fort [through niggardliness.]

கோட்டைபிடிக்க, *inf.* To take a fort.

*கோட்பதம், s. A cow or ox's hoof, மாட்டுக்குளம்பு. 2. The impression of a hoof, குளம்பின்சுவடு; [*ex* கோ, *et* பதம், foot.] W. p. 302. GOSHPADA.

கோட்பறை, s. The drum of maritime districts beaten when fishing, நெய்தனிலப்பறை; [*ex* கோள், taking.]

கோட்பாடு, *v. noun.* [*Substantively.*] Tenets of a religious sect, faith, belief, doctrines, sentiments, opinions, &c., professed, or maintained, கொள்கை. 2. Distinguishing tenets or doctrines; the opinions of the founder of a system and his followers as differing from those of another, மதவொழுங்கு. 3. Reception, possession, comprehension, capacity, கொள்கைத்திறம்.

கோட்பு, *v. noun.* Taking, receiving, &c., கொள்ளுதல். (*p.*)

கோணங்கி, s. A merry-an-drew, the harlequin of a play, who alone wears a mask, உடற்கோணியாடுவோன். 2. An eccentric person, a droll fellow, கோமாளி.

கோணங்கிக்கூத்து, s. The dancing of a harlequin. 2. Irregular, indecent, improper actions, conduct, dress, &c.

கோணங்கிகாட்ட—கோணங்கியாட, *inf.* To play as the கோணங்கி.

கோணங்கிக்குல்லா, s. A buffoon's cap.

கோணங்கித்தாசன், s. [*commonly* கோணங்கித்தாசரி.] A harlequin—as கோணங்கி.

கோணங்கிப்பல்லு, s. [*loc.*] Unusually large teeth offensive to the sight.

கோணங்கியம்மை, s. A disease in which the limbs are contracted. (*Rott.*)

கோணங்கிவேஷம், s. The dress or mask of a harlequin.

கோணமலை—கோணமலை, s. A seaport in Ceylon, Trincomalie—as திருக்கோணமலை.

*கோணம், s. An angle, a corner, மூலை. 2. An intermediate point of the compass, or any of its sixteen divisions, பதினறுகோணத்தொன்று. W. p. 251. KON'A. 3. A remote, obscure place, எட்டாக்கை. 4. A curve, curvature, வளைவு. 5. A curved sword, வளைந்தவாள். 6. An elephant hook, யானைத்தோட்டி. 7. A narrow lane, connecting two streets, a narrow turn, or nook of a lane, முடுக்குத்தெரு. 8. W. p. 311. GHON'A. Nose, snout, nostril, மூக்கு. 9. A horse, as கோடம், குதிரை.

அந்தக்கோணமிடிந்தது. [*prov.*] That quarter is fallen, i. e. the great man is dead and the place has lost its lustre.

முக்கோணம், s. A triangle, a triangular figure.

முக்கோணசக்கரம், s. A triangular figure. 2. [*vul.*] Pudendum muliebre.

முக்கோணசாத்திரம், s. Trigonometry.

நாற்கோணம், s. A quadrangular-figure, a tetragon.

ஐங்கோணம், s. A pentagon, a quinquangular-figure. See ஐ.

நவகோணம், s. A nonagon.

*கோணன், s. A crooked or hump-backed man, கூனன்; [*ex* கோணம்.]

கோணமுகம், s. [*prop.* கோணமுகம்.] According to some, a maritime district surrounded by salt marshes; according to Wilson and others, "the capital of a district, being the chief of four hundred villages," குழ்கழியிருக்கை, பேரிருக்கை. (நிக.)

கோணாய், s. A wolf, தோண்டான். 2. A male jackal, ஆணரி. (சது.) See கோநாய்.

*கோணி, s. A boar, hog, (*lit.*) the smart animal, பன்றி. W. p. 311. GHO'NEE. 2. (*c.* also கோணியல்.) Sackcloth, gunny cloth, ragged clothes, சாக்குக்கந்தை. 3. A sack, a bag, சாக்கு. W. p. 298. GON'EE. 4. A number, a trillion, பதினாயிரங்கோடாகோடி.

கோணிப்பட்டை—கோணியற்பட்டு, s. The coarse cloth of which sacks are made.

கோணிப்பை—கோணிகை, s. Sacks made of coarse gunny cloth, gunny bags.

கோணு, கிறது, கோணினது, ம், கோண, *v. n.* (*Sa. Kon'a*, crooked.) To be crooked, bent, curved, angular, serpentine, வளைய. 2. To be or become awry, oblique, aslant, askant, கோணலாயிருக்க. (*c.*) 3. To deviate, diverge, or turn out of the proper course, நெறிபிறழ. 4. To be warped or discouraged in mind; to be changed—as circumstances, மாறுபட.

முதற்கோணினல் முற்றுங்கோணும். If the beginning goes wrong, all will be wrong. This is superstitiously believed.

கோணிக்கோணிகொடுப்பதிலுங் கோணமற்காணிகொடுப்பதுஉத்தமம். It is better to give a little (காணி) with a good will than much (கோணி) with reluctance.

கோணக்கோண இழுக்க, *inf.* To distort the limbs, features, &c., as cramps, convulsion, &c.

கோணிக்கொடுக்க, *inf.* To give unwillingly. (*c.*)

முகத்தைக்கோணவைக்க, *inf.* To avert the countenance. 2. To make a wry face.

முகங்கோண, *inf.* To look sour, harsh.

கோணல், *v. noun.* Crookedness, wryness, obliquity, deviation, deflection, வளைவு. 2. A hump; a hump-backed person, கூனர். 3. Obliquity of mind, deceit, guile, மாறுபாடு. (சது.)

கோணல்குணங்கல், *v. noun.* Uneasiness of mind. (*c.*)

கோணல்வாசல்—கோணவாசல், s. A winding gate. (*c.*)

கோணல்வாயன், s. (*fem.* கோணல்வாய்ச்சி.) A wry mouthed man.

கோணை, s. Imperishable, unfading, eternal youth, அழிவின்மை. 2. Severity, cruelty, ferocity—as கோடை, கொடுமை. 3. [*loc.*] Crookedness, defectiveness, வளைவு.

கோணைக்களிறு, s. A young, vigorous elephant. (*p.*)

கோணைக்கத்தி, *s.* Crooked knife.

கோணைக்கம்பு, *s.* Crooked stick. (*c.*)

கோணைப்பேச்சு, *s.* [*loc.*] A foreign language or speech.

கோணைமாதம், *s.* [*in astrol.*] The unpropitious month, December, மார்கழிமாதம்.

கோணையெயில், *s.* A strong, indestructible rampart. (*p.*)

கோண், *s.* Crookedness, defectiveness, வளைவு. 2. Unjust government; injustice, கொடுங்கோன்மை. 3. Obliquity of disposition, subtlety, மாறுபாடு. 4. (*Sa. Ghon'a.*) The spout or projecting mouth of a vessel, பாத்திரத்தின்மூகரு. (*p.*)

கோணெடுக்க-கோணலெடுக்க, *inf.* To rectify a crooked thing, to correct an irregularity.

கோண்விழ — கோணல்விழ, *inf.* To become crooked.

கோண்டம், *s.* The குறிஞ்சா shrub.

***கோண்டை**, *s.* (as கொண்டை.) The jujube tree, இலந்தை. 2. The fruit of a jujube, இலந்தைக்கனி. (சது.) W. p. 311. Ghon't'a.

***கோதண்டம்**, *s.* A bow, the weapon; *emphatically*, the bow of Rama, வில். W. p. 251. Kodan'd'a. 2. A rope or swing used in schools in the infliction of punishment, பள்ளிச்சிறுவர்கண்டனையிலொன்று. (*c.*)

கோதண்டபாணி, *s.* Rama, as armed with the கோதண்டம் bow, இராமன்.

கோதண்டம்போட, *inf.* To hang up a child by the rope and not allow him to loosen it. (*c.*)

விசயகோதண்டம், *s.* A victorious bow. (*p.*)

கோதந்தி, *s.* [*loc.*] The cheek, கன்னம். 2. The jaws, தாடை. (*R.*)

***கோதமநதி**, *s.* The river Godavery—as கோதாவிரி. (*Sa. Gotama.*)

கோதமம் — கோதமதீவு, *s.* An island, ஓர்தீவு. (சது.) (*R.*) Pegu.

***கோதமன்**, *s.* A name of Gaudama the sage. See கௌதமன். W. p. 298. Gotama.

கோதம், *s.* A kind of native arsenic, சிதாங்கபாஷாணம்.

கோதல், *v. noun.* That which is decayed or not firm and solid—as decayed wood, chips, fruit, shells, &c.; [*ex* கோது, *v.*]

***கோதனம்**, *s.* A calf, See under கோ. (*Sa.*)

***கோதா**, *s.* A guana, உடும்பு. W. p. 299. Godha.

கோதாரி, *s.* [*prov.*] Spasmodic cholera, வாந்திபேதி. 2. Any epidemic, a pestilential disease—as small-pox, scarlet fever, &c., கொள்ளைநோய்.

கோதாரிக்கழிச்சல், *s.* Epidemic diarrhœa; cholera.

கோதாரிக்காய்ச்சல், *s.* An epidemic fever.

***கோதாவரி — கோதாவிரி**, *s.* The Godavery river, விருத்தகங்கை. W. p. 299. Godavari'.

கோதி, *s.* Wheat, கோதுமை. (திக.)

கோது, *s.* Covering or capsula, (*from Sa. Godh*, surround, encompass) *hence.* Refuse, waste, empty kernels of grain, &c., lees, residuum, leavings, fibre, &c., சக்கை. (*c.*) 2. Fault, blemish, defect, error, குற்றம். 3. Deviation, deflection, தவறு. (*p.*)

கோதாய்ப்போக, *inf.* To become hollow, empty, or mere chaff, &c.

புளியங்கோது, *s.* The refuse of tamarind fruit.

வெறுங்கோது, *s.* Complete refuse; chaff, &c. 2. (*fig.*) One shallow-witted, &c.

கோதாட்டு — கோதாட்டம், *v. noun.* Vexing, ill-treating one. 2. Deceit, guile, fraud. (*p.*)

கோதுபட, *inf.* To be in fault. (*p.*)

கோது, கிறேன், கோதினேன், வேன், கோத, *v. a.* To adjust feathers with the beak—as birds; to tear tender leaves in strips, பறவை மூக்கினுற்கோத. 2. To disentangle the hair with the fingers; to brush, comb, மயிர்கோத. (*c.*) 3. [*loc.*] To piddle, to pick food in eating, taking small quantities—as birds; also as sickly or dainty children, bashful persons, &c., சிறிது சிறிதாகவுண்ண. 4. [*prov.*] To hollow, excavate, scoop out, குழாயாக்க. 5. (*R.*) To kiss, to suck the lips, இதழ்கோத.

கோதிக்கொண்டிருக்க, *inf.* To pick food daintily, &c.

கோதிக்கட்ட—கோதிமுடிக்க, *inf.* To disentangle and tie the hair.

கோதிவிட—கோதிவாங்க, *inf.* To allow another to adjust the hair.

சிறகுகோத, *inf.* To pick at feathers—as birds.

மயிர்கோத, *inf.* To adjust the hair knot.

***கோதுமை**, *s.* [*vul.* கோதும்பை.] Wheat, ஓர்தானியம். W. p. 299. Godhuma.

கோதும்பைமணி, *s.* A grain of wheat.

கோதும்பையரிசி, *s.* Wheat when husked.

கோதை, *s.* A flower garland, பூமாலை. 2. Women's hair, பெண்மயிர். 3. (*Meta.*) A woman, பெண். 4. Any of the kings of the Seran dynasty, சேரன். 5. Order, regularity; row, series, ஒழுங்கு. 6. (திக.) Wind, காற்று. 7. Rice in stalk sufficient for a man's load, நெற்சுமை. (*p.*)

கோதையோடுகோதைதாழ. The dishevelled hair with a flower garland. (நைட.)

***கோதை**, *s.* A leathern glove worn by archers on the left fore-arm to defend it from the rebounding of the bowstring, முன்கைத்தோற்கட்டு. W. p. 299. Godha. 2. The Godavery river, கோதாவரியாறு. W. p. 298. Goda.

***கோத்தனி**, *s.* The vine, முந்திரிகைக்கொடி. (சது.) 2. W. p. 302. Gostanee. The grape, திராட்சப்பழம்; [*ex* கோ, cow, *et* ஸ்தனம், teat.]

***கோத்தனிகை**, *s.* The vine, முந்திரிகை; [*ex* கோத்தனி.] (திக.)

கோத்திரம், *s.* A shrub, ஓர் செடி. Aeschynomene, *L.* 2. A kind of grain—as கோத்திரவம், வரகு. (*M. Dic.*)

***கோத்திரம்**, *s.* Tribe, race, caste, lineage, ancestry, parentage, குலம். (*c.*) 2. A class, genus, species, வர்க்கம். 3. The earth, பூமி. 4. A mountain, a hill, மலை. W. p. 298. Gotra.

கோத்திரமறிந்து பெண்கொடு பாத்திரமறிந்து பிச்சையிடு. Know one's parentage, and then give a girl in marriage; know one's desert and then give him alms.

கோத்திரங்கூற—கோத்திரஞ்செப்ப, *inf.* To proclaim another's parentage—usually in disparagement.

சடாபாரம், *s.* The heavy tangled locks of Siva, or of his devotees. (*c.*)

சடாமகுடம்—சடாமுடி, *s.* The entangled hair of Siva formed into a crown. (*c.*)

சடாமகுடன், *s.* Siva, whose entangled lock of hair forms his crown, சிவன்.

சடாமுனி, *s.* [*in metempsychosis.*] The soul of a Brahman in a Muni wearing clotted hair. See பிதுமாட்சை. (*c.*)

சடைக்கஞ்சா, *s.* The female of the கஞ்சா plant. See கஞ்சா.

சடைக்கந்தகம், *s.* Sweet flag, வசம்பு. (*M. Dic.*)

சடைச்சி, *s.* A kind of cork tree from which toys are made, நெட்டி. Aeschynomene, *L.* 2. An aquatic plant, பாசி. Ceratophyllum demersum, *L.* (சது.) 3. A plant, சிறுபுள்ளடி. 4. A mineral, பொன்னிமிளை, Bismuth pyrites.

சடைச்சிவேர், *s.* A plant, Achyranthes corymbosa, *L.*

சடைத்தேங்காய், *s.* [*prov.*] A cocoanut whose husk abounds with fibres.

சடைநாகம், *s.* A kind of ornament worn by women on the hair, நாகாபரணம்.

சடைநாய், *s.* A shaggy dog. (*c.*)

சடைபற்றிப்போக, *inf.* To grow bushy, shaggy, rough, as hair. 2. To become thick, as branches.

சடைபில்லை—சடைப்பில்லை, *s.* A kind of round golden ornament for the head of women. Madras usage. In other places, ராக்கடி.

சடைபின்ன, *inf.* To plait the hair.

சடைப்பயறு, *s.* A kind of grain.

சடைப்பாசி, *s.* A kind of moss—as சடைச்சி, 2.

சடைப்புல், *s.* A kind of grass. See புல்.

சடைப்பூச்சி, *s.* [*loc.*] A species of bushy caterpillar. (*R.*)

சடைமுடி, *s.* The சரக்கொன்றை tree.

சடைமுடியோர், *s.* Ascetics who wear entangled hair in imitation of Siva, தாபதர்.

சடையன், *s.* (*fem.* சடைச்சி.) One who wears an entangled plait of hair.

சடையாணி, *s.* A flat-headed nail. (*c.*)

சடையாண்டி, *s.* A religious mendicant with matted hair.

சடையோன், *s.* Siva, the god who wore dishevelled hair. 2. Veerapatra. (சூ.)

சடைவளருதல், *v. noun.* Growing of entangled locks.

சடைவிழ, *inf.* To become formed, as entangled hair.

முறுக்குசடை, *s.* Matted, curly hair.

சடை, கிறேன், ந்தேன், வேன், சடைய, *v. a.* To flatten the head or point of a nail by repeated blows; to clinch, batter down, ஆணிமுதலியனதலைதட்ட. 2. [*prov.*] To stop the progress of a thing, to interrupt, check, prevent, hinder, தடுக்க. 3. *v. n.* [*loc.*] To become weary, disheartened, dispirited, &c., சோர. 4. To be shut in—as the heart of a tree; to be stinted in growth—as trees, and plants, பயிர்கெட.

சடைவு, *v. noun.* Wearisomeness, depression of spirits, dejection, மனத்தளர்வு.

*சட், *s.* Six, six-fold—as சடு, ஆறு. W. p. 870. SHAT'.

சட்கருமம், *s.* The six duties of Brahmans. See தொழில்.

சட்குணம், *s.* The six attributes of the Deity, அறுகுணம். See குணம்.

சட்கோணம், *s.* A hexagon, a hexangular figure, அறுகோணம்.

சட்சமயம், *s.* The six religious systems. See சமயம்.

*சட்சு, *s.* The eye, கண். W. p. 314. CHAKSHUS. See சக்கு.

சட்சுதிட்சை, *s.* Spiritual illumination imparted to a disciple by the look of a Guru. (*p.*) See திட்சை.

சட்டகப்பை, *s.* [*prov.*] A long flat ladle for taking a baked rice-cake from the chatty, தட்டகப்பை. (*Limited.*)

*சட்டகம், *s.* Shape, figure, image, வடிவு. 2. Body, உடல். 3. Bed, couch, &c., for sleeping, மனுடர்படுக்கைப்பொது.

கடவுளைக்காட்டுஞ்சட்டகம். An image representing the deity. (*p.*)

சட்டகல்வி—சஷ்டகல்வி, *s.* Chattering, babbling, talking vain things without reference to any special object, as lisping children, வீண்பேச்சு. (*c.*)

சட்டமுனி, *s.* [*prop.* சட்டைமுனி, which see.] A celebrated author.

சட்டம், *s.* A wooden frame, மரச்சட்டம். 2. Rule, order, regulation, *especially* written rule, &c., ஏற்பாடு. 3. A copy, commonly a double ola, either written or intended for writing, எழுதுஞ்சட்டம். 4. Exactness, precision, accuracy, neatness, nicety, propriety, திட்டம். 5. Formula, plan, model, delineation, projection, மாதிரிச்சட்டம். 6. Bag in the civet cat, புனுகுசட்டம். (*c.*)

இப்பொழுது புதுச்சட்டமாய் நடக்கிறது. Matters are now ordered according to a new rule.

இது சட்டமாயிருக்கிறது. This is neat and fine.

சட்டப்பலகை, *s.* [*prov.*] Board frames. 2. A flat ruler.

சட்டந்தைக்க, *inf.* To frame, to put or nail on a frame.

சட்டந்திருத்த, *inf.* To correct writing. (*R.*) 2. To amend an act, a regulation, &c.

சட்டங்கட்ட, *inf.* To regulate. 2. To appoint one to manage a thing.

சட்டதிட்டம், *s.* Accuracy, preciseness. 2. Code of regulation. (*c.*)

சட்டங்கொழிக்க, *inf.* [*loc.*] To talk in a high strain. (*R.*)

சட்டம்பண்ண, *inf.* [*prov.*] To legislate, regulate, order, &c.

சட்டம்பார்க்க, *inf.* To inspect the school boy's ola copies.

சட்டம்பியார், *s.* [*prov.*] A pedagogue, school master, உவாத்தியார்.

சட்டமாய், [*adverbially.*] Handsomely, properly, freely, &c.

சட்டமாய்ப் பேசலாம், You may speak whatever you like.

சட்டம்பிள்ளை—சட்டாம்பிள்ளை-சட்டம்பிப்பிள்ளை, *s.* A monitor, an usher. (*c.*)

சட்டவட்டம், *s.* Accuracy, neatness, fineness, &c. (*c.*)

சட்டவளை, *s.* [*prov.*] Cross beams connecting the wall plates.

சட்டவாள், *s.* [*prov.*] A large saw fixed in a frame.

சட்டவிளக்கு, *s.* [*loc.*] Rows of lamps in a square frame in a temple, opposite the door, so as to be seen outside.

சட்டந்தட்ட, *inf* To extract the oil from the dried bag of the civet cat.

இருப்புச்சட்டம், *s.* An iron bar. 2. [*prov.*] The iron-plate around a wheel.

அதிகாரச்சட்டம், *s.* The regulations, acts, &c., of the Government.

தேசசட்டம், *s.* Law of the country.

சட்டவர்க்கம்—சட்டுவர்க்கம், *s.* [*prop.* சடுவருக்கம்.] The aggregate of six flavors, சடிரசம். (*c.*) 2. The six astrological divisions of the rising sign at the time of one's birth.

சட்டாட்டம், *s.* [*vul.*] [*corruption of* சண்டியாட்டம்.] Contention, contest, dissension, வாதாட்டம்.

சட்டி, *s.* A cooking vessel or pan, ஓர் பாத்திரம்.

சட்டிபானை, *s.* Chatties and pots; pans; crockery.

அருக்கன்சட்டி, *s.* A flat pan. (*R.*)

சருவச்சட்டி, *s.* A copper vessel.

குண்டிச்சட்டி, *s.* See under குண்டி.

தளச்சட்டி — பதலைச்சட்டி — பெருஞ்சட்டி, *s.* A large pan. (*R.*)

போகணிச்சட்டி, *s.* A brass or tin pan.

பொரிக்குஞ்சட்டி, *s.* A frying pan.

சட்டியுருட்ட, *inf.* To gamble with balls in a brass pan. 2. (*fig.*) [*loc.*] To equivocate, quibble, வாயாலுருட்ட.

சட்டியொட்டி, *s.* A small sea-fish full of bones. See பொருவாய். (*R.*)

சட்டித்தோசை, *s.* A large round cake. [*Madras usage.*]

சட்டியப்பம், *s.* [*prov.*] A large rice cake made of the remains of the flour.

சட்டிப்பீரங்கி, *s.* A mortar for throwing bombs, shells, &c. (*c.*)

சட்டிப்புல், *s.* [*prov.*] Bushy kind of grass. See புல்.

சட்டிவட்டு, *s.* [*prov.*] The round root of கப்பல்வள்ளி yams, which is cut out and planted for sprouting.

சட்டித்தலை, *s.* A jolt-head, a pot-head.

சட்டித்தலையன், *s.* (*fem.* சட்டித்தலைச்சி.) A big headed fellow.

சட்டித்தலையுள்ளான், *s.* A kind of snipe. See உள்ளான்.

சட்டித்தலைப்பாகை, *s.* [*loc.*] A kind of large turban. (*Limited.*)

*சட்டி—சஷ்டி, *s.* The 6th lunar day, either in waxing or waning, ஆறுக்திதி. 2. Sixty, அறுபது. W. p. 870. Shast'hee.

சட்டிவிரதம், *s.* A fast on the day of 6th phasis of the moon in her increase.

சட்டிபூர்த்திசாந்தி, *s.* The ceremony of a renewed marriage when a man is sixty and his first wife is still alive—a "golden wedding."

*சட்டி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To destroy, to injure, அழிக்க. 2. To kill, கொல்ல. (*p.*) (*Sa. Shat't'a.*)

சட்டினி—சட்னி, *s.* (*Hind.*) Chetnee, a kind of condiment, ஓர்வகையுணவுல். (*c.*)

*சட்டு, *s.* Destruction, injury, waste, அழிவு. W. p. 869. Shat't'a.

சட்டுப்பண்ண—சட்டுப்பார்க்க, *inf.* To destroy, kill, waste, injure, devour, consume, &c. (*c.*)

சட்டுவம், *s.* A ladle, அகப்பை. 2. [*prov.* சட்டகப்பை] A metal spatula for taking up a cooked cake from the pan.

சட்டுவங்கறிச்சுவையறியுமோ. Does the ladle know the taste of the curry?

சட்டுவஞ்செலுத்த, *inf.* [*loc.*] To lade out. 2. (*fig.*) To use hospitality, விருந்தோம்ப.

சட்டை, *s.* A made garment, jacket coat, gown, cloak, trousers, &c., தைத்தவுடை. 2. The skin or slough of a snake, பாம்புச்சட்டை (*c.*) 3. (*fig.*) Bodily shape assumed by the soul, or by deity; [*ex* சடம், body.] See மானுடசட்டை. Compare அங்கி and மெய்ப்பை. 4. [*vul.*] Esteem, regard, honor, respect, கனம். 5. (*R.*) A pack, or sack, for a beast of burden, பொதி. 6. (*M. Dic.*) The தைவேளை plant.

அரைச்சட்டை, *s.* A jacket, a short coat, a waist-coat.

கட்டுச்சட்டை, *s.* [*loc.*] A jacket with strings.

நெடுஞ்சட்டை, *s.* A gown or robe.

தெறிச்சட்டை, *s.* [*prov.*] A jacket with buttons.

சட்டைகழற்ற, *inf.* To take off the jacket. 2. To cast the skin—as a snake. (*c.*)

சட்டைக்காரன், *s.* One in European dress, a Portuguese; a Eurasian. (*c.*)

சட்டைச்சாக்கு, *s.* A pocket. (*Modern.*)

சட்டைச்சாம்பு, *s.* [*loc.*] Cloth seventy-two cubits in the piece; long-cloth. (*Limited usage.*)

சட்டைநாதன்; *s.* [*com.* சட்டநாதன்,] A name of Siva—as Bhairava.

சட்டைபண்ண, *inf.* To esteem, regard, honor. (*c.*)

சட்டைமுனி, *s.* [*com.* சட்டமுனி.] A celebrated author of works on medicine, &c., regarded as a சித்தன்.

*சட்பம் *s.* The அறுகு grass—as சடபம். 2. Young plants or grass; growing crops. இளம்பயிர். (*p.*) W. p. 835. Sashpa. 3. (*R.*) (*Tel.*) pubertas—hair round the privities.

*சட்பிதாபுத்திரிகம், *s.* One of the five modes of beating the cymbal, &c. See தாளம்.

சணகம் — சனகம், *s.* A medicinal plant, புளியாரை. (*M. Dic.*)

சணப்பு, *s.* [*loc. vul.*] Flax, hemp, as சணல்.

சணப்பநார், *s.* Fibres, or strings of flax.

சணப்பன், *s.* A flax-dresser.

சணப்பன்வீட்டுக்கோழிதானேவிலங்குமாட்டிக்கொண்டது. The hemp dresser's hen has entangled itself by scratching in the hemp—said of a person who involves himself in difficulties through his own folly.

சணப்புத்திரி, *s.* A hempen wick or match. (*Limited.*)

பூஞ்சணப்பு, *s.* A luxuriant plant of Indian hemp.

*சணம், *s.* A short space of time, a moment—as கணம். (*c.*) (*Sa. Kshan'a.*) 2. A token of preference—as a spire or two of sacrificial grass to a brahman, கண்ணியக்குறி. *Sa. Shan'a.*

சணம்பித்தம்சணவாதம். (*lit.*) The predominance of பித்தம் in one moment and that of the வாதம் in the next moment, i. e. varible and opposite symptoms in a disease; changeableness of circumstances, the vicissitudes of the present state.

சணப்பொழுது—சணநேரம், *s.* A moment, moment's time.

*சணல், s. Indian hemp, flax, ஓர்பூண்டு. Erotalaria juncea, L. W. p. 826. S'AN'A.

சணற்புடவை, s. Linen, hempen cloth.

சணற்கயிறு—சணற்புரி, s. Flax cord, string, &c.

சணனார், s. Fibres of hemp.

சணுப்பக்க, inf. [vul. loc.] As சணைக்க. 2. To yield to passion or lust, காமங்கொள்ள.

சணை, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. [vul. prov. a change of சடைக்க or சினைக்க.] To grow luxuriant—as trees, &c., to grow stout, as persons, &c., கொழுக்க.

*சண்டம், s. Fierceness, vehemence, impetuosity, violence, severity, cruelty, கொடுமை. W. p. 314. CHAND'A. 2. Speed, rapidity, swiftness, velocity, விரைவு. 3. A eunuch, hermaphrodite, &c., பேடு. See சண்டன். (சது.) 4. The womb, uterus, கருப்பம். (p.)

சண்டப்பிரசண்டம், s. Exceeding fierceness or impetuosity. (c.)

தட்டிப்பேசவாரில்லாவிட்டால் தம்பிசண்டப்பிரசண்டம். If there be no one to check him, the young man is excessively impetuous.

சண்டமாருதம், s A hurricane, a storm, பெருங்காற்று. (c.)

அம்புகளைச்சண்டமாருதமாய்ப்பொழிந்தான். He sent a storm of arrows.

சண்டமாருதமாய்ப்பேச, inf. To speak eloquently and forcibly. (c.)

சண்டமாருதம்போலக்கவிபாட, inf. To sing loudly. (Limited.)

சண்டமாருதசிந்தூரம், s. A kind of சிந்தூரம் preparation used medicinally.

சண்டவேகம் s. [vul.] Great velocity, vehemence, excessive fierceness, indignation, fury, மிகுவேகம்.

சண்டப்பை, s. Uterus—as சண்டம், 4.

சண்டப்பைக்குள்ளிருந்தாயருந்தத்தானருந்தும் - அண்டத்துயிர்பிழைப்பதாச்சரியம். The fœtus in the womb is nourished by the food which the mother eats, but how is the life of an animal continued which is enclosed in an egg?

*சண்டன், s. The minister of Yama, காலன். W. p. 314. CHAN'D'A. 2. Yama, the god of death, சமன். 3. A violent or quick person, துடிதுடித்தவன். 4. The sun, as the source of heat, சூரியன். 5. Siva—as the wrathful, சிவன். 6. W. p. 827. SAN'D'HA.) A eunuch; an impotent man; also a hermaphrodite, பேடு. (நிக.)

*சண்டாளம், s. Lowness, baseness, meanness, barbarism, இழிவு. 2. A base creature, a vile wretch, நீசன்; [ex Sa. Chan'd'hala.] 3. (R.) A demon, பேய். (p.)

மிருகசண்டாளங்கருத்தபம். An ass is the basest of animals. (p.)

சண்டாளத்துரோகி—சண்டாளப்பாவி, s. A barbarous or vile wretch. (c.)

சண்டாளப்பிராயச்சித்தம், s. Expiation of defilement from contact with a murderer, or other base wretch, or from the intrusion of such a one into a sacred shrine, &c.

சண்டாளன்—சண்டாளி, s. A low degraded man, a villain, இழிஞன். 2. A man of low and degraded caste, a flesh eater, &c., புலைஞன். (c.) 3. An apostate who has forfeited the privileges of his religion, caste, &c., பதிதன். 4. One born of a Brahmani and a Sudra father, பார்ப்பனஸ்திரியிடத்திற்சூத்திரனுக்குப்பிறந்தோன்.

*சண்டி, s. A person lost to all sense of honesty and principle, a rogue, a stubborn, shameless person, நாணமில்லோன்; [from Sa. Chan'd'ha.] (c.) 2. W. p. 314. CHAN'D'HEE. An incarnation of Durga, to destroy Mahishásura, துர்க்கை. (p.) 3. A kind of tree, the leaves of which are medicinal; also used for food, ஓர்மரம்.

சண்டித்தனம், s. Shamelessness, foolhardiness, obstinacy.

சண்டிப்பயல், s. A roguish fellow, a stubborn, fool-hardy fellow.

சண்டிமாடு, s. A lazy untractable bullock or cow. 2. (fig.) A person as obstinate as a bullock.

சண்டிக்கார், s. A kind of paddy which cannot be easily husked off. (R.)

சகசண்டி, s. See under சக.

*சண்டிகை, s. Durga, துர்க்கை. 2. Kali, காளி. W. p. 315. CHAN'D'HIKA.

சண்டிவாளம், s. (for) Money given to dissolve a bargain, or to redeem any thing.

சண்டு, s. [loc.] An empty husk, பதர். 2. [prov.] A kind of insect said to infest growing crops, ஓர்வண்டு. (Limited.)

சண்டை, s. Quarrel, strife, contention, altercation, bickering, சொற்போர். 2. Battle, conflict; quarrel, போர். (c.)

சண்டைகொடுக்க, inf. To fight the enemy.

சண்டைக்கப்பல், s. A war ship, frigate, privateer, &c.

சண்டைக்காரர், s. Quarrelsome persons. 2. Soldiers of the foe, an invading army.

சண்டைக்குநிற்க, inf. To fight a duel, to fight in single combat. 2. To offer to fight, to seek a quarrel, to be quarrelsome.

சண்டைபண்ண — சண்டைபிடிக்க — சண்டைபோட, inf. To quarrel, to fight, scuffle, struggle.

சண்டைமூட்ட — சண்டையெழுப்ப, inf. To stir up strife. 2. To excite to battle.

சண்டைமூண்டது. A quarrel arose.

சண்ணு, கிறேன், சண்ணினேன், வேன், சண்ண, v. a. [vul.] To do, in any way; to perform, execute, produce, effect, &c.—used in burlesque, and as indicating failure, by saying the thing is done.

அவர்சண்ணுகிறதைப்பார்போம். Let us see if he can, after all, effect any thing.

*சண்பகம், s. [a change of சம்பகம்.] A very fragrant large yellow flower tree, செண்பகமரம், Michelia champaca, L.

சிறுசண்பகம், s. A shrub with smaller flowers than the fragrant champaca.

*சண்பனி, s. The name of an attendant on Kali, யோகினி. Compare சன்மினி.

சண்பை, s. The town of Sheally, சீகாழி. (p.)

*சண்மதம், s. The six religious sects—as சட்சமயம்.

*சண்முகன், s. A name of Skanda, குமரன்; [ex சஷ, six, et முகம், face.] W. p. 870. SHAN'MUKHA.

சதகம், s. A tree, the தான்றிமரம். (R.)

*சதகம், s. An aggregate of one hundred—as a cent, century, &c.; a poem of hundred verses often moral or religious, ஓர்பிரபந்தம். W. p. 827. S'ATAKA.

சதகுப்பி—சதகுப்பை, s. Dill, ஓர்பூடு. Anethum sowa, L. Bishop's-weed.

சதக்கல் — சதுக்கல் — சதுவல், s. [vul.] Bog, marsh, mire, fenny ground, இளகனிலம்.

சதங்கை, s. [com. சலங்கை.] Small silver or gold bells for the feet or waist of children; little bells for the feet of dancers, &c., ஓர்காலணி.

சதங்கைமாலை, s. A string of bells tied to the necks of oxen, horses, &c.

சதங்கைப்பூரம்-சதங்கைப்பூரான், s. A large species of centipede, ஓர்வகைப்பூரான். (R.)

சதசதப்பு, v. noun. Being soft, miry—as the ground, சதுவல். (c.)

*சதசு, s. An assembly, more especially of Brahmans, பிராமணசபை. W. p. 886. SADAS.

*சததம், s. Eternity, everlastingness, perpetuity, நித்தியம். W. p. 884. SATATA. Often contracted into சதம்.

சததளம்—சதபத்திரம், s. The lotus, தாமரை; [ex தளம், பத்திரம், petal.]

சதபத்திரி. s. The ஆடுதின்னாப்பாளை plant. 2. The lotus, தாமரை; [ex பத்திரம், petal.] 3. (R.) The leaf of the lotus, தாமரையிலை.

*சதபுட்பம், s. A variety of dill—as சதகுப்பி. W. p. 827. S'ATAPUSHPA.

*சதம், s. A hundred, நூறு. W. p. 827. S'ATA. 2. W. p. 333. CH'HADA. A leaf, இலை. 3. A wing, a feather, இறகு. 4. W. p. 829. S'ADA. Grain, vegetables, &c., cropped to prevent over-growth, அறுபடுபயிர். (p.) 5. [com. a contraction of சததம்.] Perpetuity, eternity, நித்தியம், நிலைமை. (சது.)

நாமென்னசதமோ? What! are we eternal?

சதமானவாழ்வா. Is this an everlasting life?

சதமல்ல. Not durable; perishable. (p.)

சதகோடி, s. A number, a thousand millions, நூறுகோடி. 2. A diamond weapon of Indra having a hundred sides; the thunderbolt, வச்சிராயுதம்.

சதகோடிசங்கம், s. [com. சகாகோடிசங்கம்.] A very numerous assembly.

சதமுனை, s. Thunder-bolt, as சதகோடி, 2.

சதக்கிரது— சதக்கிருதன் — சதமகன்—சதமகத்தான், s. Indra—as the performer of a hundred sacrifices, இந்திரன்.

சதசுலோகம், s. A work on Materia Medica in a hundred verses, ஓர்நூல்.

சதஞ்சீவி, s. A long lived person, as சிரஞ்சீவி.

சதஞ்சீவியாயிரு. Long live—an expression of blessing.

சதமாயிருக்க, inf. To be perpetual, durable.

சதேசன், s. A chief of hundred villages.

சதர், s. (Hind.) Principal, chief, சிரேஷ்டம்.

சதர்மீன், s. Sudder Ameen.

சதவீரியம், s. The வெள்ளறுகு grass. (M. Dic.)

சதவீருு, s. The மல்லிகை shrub. (M. Dic.)

*சதயம் — சதயநாள், s. The 24th lunar asterism or nacshatra, or the time in which the moon traverses the nacshatra, ஓர்நட்சத்திரம்.

*சதளம், s. A multitude, கூட்டம்; [ex ச, collective, et தளம், quantity.]

சதளக்காரன், s. A man of a large family. (R.)

சனசதளம், s. A multitude of people.

*சதனம், s. A leaf, இலை. 2. A feather, a wing, இறகு. W. p 334. Ch'hadana. 3. A house, வீடு. W. p. 886. Sadana. (சது.)

சதா, s. A canoe or other vessel for navigation, மரக்கலம். (சது.) 2. [prov.] Defect in timber, rottenness, decay in fruit, &c., பழுது. (Limited.) 3. [loc.] Delay, procrastination, as of a business, தாமதம்.

அதைச்சதாவிலேவிடாதே. Do not delay the matter.

*சதா, adj. Continual, perpetual, எப்பொழுதுமுள்ள. W. p. 886. Sad'a.

சதாகாலமும். Eternally, everlastingly, for ever and ever.

சதாஸ்து. Always be thus, Amen, i. e. live long, &c., a term of salutation; [ex அஸ்து, be thus.] (p.)

சதாகதி, s. Air, wind—as the constant mover, காற்று. (p.) 2. Perpetual motion, equable motion, மாறுதலவனம்.

சதாசிவம், s. Eternal felicity, முடிவில்லாவின்மை. 2. Deity or Siva in the exercise of benevolence towards sentient beings, the highest of பஞ்சகர்த்தாக்கள்; also the state of Siva, when designing the salvation of souls before he assumed visible forms for that purpose, சதாசிவதத்துவம். See பஞ்சகிருத்தியம், under கிருத்தியம். Sa. S'adasiva.

சதாசிவன், s. Sadasiva; the first and the highest of the five forms assumed by Siva; [ex சிவம், auspicious.]

சதானந்தம், s. Eternal beatitude, நித்தியானந்தம்.

சதானந்தன், s. The supreme Being, கடவுள். 2. Brahma, பிரமன். 3. The name of a Rishi, ஓர் ரிஷி.

*சதாபட்டம்—சதாபுட்டம், s. [correctly சதாபுட்பம்.] The எருக்கு plant. W. p. 887. S'adapushpa.

*சதாபதி, s. A kind of millipedes, living in trees, மரவட்டை. [ex சதம், et பதம், foot.] W. p 827. S'atapadee.

*சதாபலம், s. The lime tree, எலுமிச்சை. W. p. 887. Sadaphala.

*சதாபுசம், s. A beetle, or a humming insect, வண்டு. (சது.)

சதாப்பு, s. [Hind.] A plant, ஓர்பூடு. Trifolium Indicum, L.

சதாப்பிலை, s. The leaves of சதாப்பு supposed to possess talismanic virtue, and tied to the arms of babes, &c.

*சதாமூர்க்கம், s. [correctly சதாவரி.] A plant which cures the bite of snakes, பாம்புகொல்லி. W. p. 828. Satavaree.

*சதாமூலம்—சதாவேரி, s. A kind of medicinal creeper, and its roots, தண்ணீர்விட்டான்.

சதி, s. Treachery, perfidy, stratagem, wiles, craftiness, insidiousness, வஞ்சனை. (c.) [Sa. Ch'hady, cloak, deceit.] 2. A circle, periphery, வட்டம். 3. The 4th lunar asterism, உரோகிணி. 4. Equal time in music and dancing, தாளவொத்து. 5. Boiled rice, சோறு. (நிக.) 6. [vul. prov. a contraction of சடிதி.] Haste, speed, quickness, சீக்கிரம்.

சதிகாரன், s. A treacherous person, an assassin.

சதிசெய்ய — சதிபண்ண, inf. To act treacherously; to surprise by lying in wait. 2. To disappoint, betray or injure by treachery.

சதிப்போர், s. A combat with stratagems. (R.)

சதிமானம், s. Treachery. (B.)

சதிமோசம், s. Dangerous deceit.

சதிகொலை, s. Assassination.

சதியோசனை, s. Treachery, perfidy.

சதியாய்வா. Come quickly. [prov.]

*சதி, s. A chaste woman; a faithful wife, கற்புடையாள். 2. The goddess, Parvati, பார்வதி. 3. Sutti, voluntary concremation of a widow on the funeral pile of her deceased husband, அநுமரணம். W. p. 884. Satee. (p.)

சதிபதி, s. Siva, as lord of Parvati.

சதிபுருஷநியாயம், s. The right and privilege of man and wife. (R.)

சதிமகள், s. Wife of Indra, இந்திராணி.

சதிரம், s. A kind of cucumber, ஓர்கக்கரி. (M Dic.) 2. [impr. vul. for சரீரம்.] Body, தேகம். (c.)

*சதிரிசம், s. Resemblance, similarity, comparison, உவமை. (சது.)

சதிர், s. [vul.] Cheapness, குறைந்தவிலை. 2. Amelioration, இலகு. 3. [also சதுர் and சதர்.] An assembly to witness a play, or the performances of dancing girls, நாட்டியசபை. (c.) 4. [loc.] Boundary, limit, எல்லை.

சதிராய்க்கொள்ள, inf. To buy cheap.

சதிர்வைக்க—சதுர்வைக்க, inf. To have a dancing party.

சதிர்க்கிராமம், s. [loc.] A frontier town.

சதினகம்—சதினம், s. Pulse, பயறு. (M. Dic.)

*சது, s. The number four, நான்கு. W. p. 315. Chatur.

சதுமுகன், s. Brahma, பிரமன். 2. Argha, அருகன்; [ex சது et முகம்.]

*சதுக்கம்—சதுஷ்கம், s. An aggregate of four—as in கூட்டசதுக்கம், நான்குகூடியது. 2. A place where four ways meet, நாற்தெருகூடுமிடம். 3. A square, a quadrangle, சதுரம். 4. [prov. corruptly, சவுக்கம்] Square cloth, a large handkerchief for the head, தலைஉறுமால். (c.) W. p. 316. Chatushka.

சதுக்கல், v. noun. [impr. for சறுக்கல்.] Slipperiness, வழுக்கல்.

சதுங்கம், s. Bird, பறவை. (R.) Compare சகுந்தம்.

*சதுஷ்டயம்-சதுட்டயம், s. Four, four-fold, an aggregate of four, நான்கு—as in சாதனசதுஷ்டயம்.

*சதுஷ்பாதம்—சதுட்பாதம், s. [lit. four-footed.] A quadruped, நாற்கால்மிருகம். 2. [prov.] A dog, நாய். 3. One of the astrological கரணம் called also, நாய்க்கரணம். W. p. 316. Chatushpad.

சதுப்பு—சதுப்புநிலம், s. A bog or marshy ground, சதக்கல்.

சதும்பை, s. A plant, பேய்மருட்டி.

*சதுரம், s. A square, சரிசதுரம். 2. Parallelogram, நீண்டசதுரம். 3. A quadrangle, நாற்கோணவடிவம். (c.) W. p. 315. Chatur. 4. Sagacity, discretion, விவேகம். 5. Dexterity, cleverness, திறமை. 6. Propriety, polished manners, நாகரிகம். W. p. 315. Chatura.

சதுரகிரி, s. The Chatagherry mountains, near Trevandrum.

சதுரக்கள்ளி, s. A species of கள்ளி shrub, the prickly pear, Euphorbia antiquorum; Triangular Spurge.

சதுரக்கள்ளிப்பால், s. The milky juice of the கள்ளி hardened and sold as a drug.

சதுரப்பட, inf. To become, or be made square.

சதுரப்பாடு, v. noun. Discretion, &c., as சதுரம். 2, 3, 4. 2. [prov.] Being four sided, square or oblong, சதுரம். (Limited.)

சதுரர், s. [pl.] Inhabitants of a large city; the polite, the polished, நகரபுரிவாழ்வோர். 2. Clever, sagacious, eloquent persons, திறமுடையோர். 3. Fashionable persons, நாகரீகமுள்ளவர்.

சதுரன், s. [fem. சதுரி. sing. of சதுரர் as above.] [loc.] A covetous person, அர்த்தலோபி. (R.)

சதுரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To cut or make a square figure, சரி சதுரமாக்க. 2. [in arith.] To square a number, எண்ணைச்சதுரிக்க. (c.)

*சதுர், s. (Sa. Chatur.) Four-fold. 2. [vul.] A party to witness dancing, &c.—as சதிர். 1, 3. 3. Sagacity, &c.—as சதுரம். 2, 3, 4. 4. Propriety, suitableness, good, நன்மை. (p.)

சதுரகராதி, s. A dictionary consisting of four divisions viz. 1. பெயரகராதி, the different signification of words. 2. பொருளகராதி, containing words of the same signification. 3. தொகையகராதி, containing collective nouns or generic words. 4. தொடையகராதி, a rhyming dictionary.

சதுரங்கம், s. The aggregate of the four constituents of an army, elephants, horse, chariots and infantry, கசரததுரகபதாதி. 2. The game of chess, consisting of figures representing the four kinds of force in an army, ஓர்விளையாட்டு; [ex அங்கம், member.] (c.)

சதுரங்கத்துக்கடியூர்க்க, inf. To think or speculate at chess how to win, &c. 2. [loc.] To use various stratagems. 3. Met. To deliberate, யுத்திக்க. (R.)

சதுரங்கசேனை—சதுரங்கதானை, s. As சதுரங்கம் 1.

சதுரங்கதாரணை, s. One of the தாரணை. See நவதாரணை.

சதுரங்கபட்டணம் —சதுரை, s. The town of Sadras, ஓரூர்.

சதுரங்கபந்தம், s. Verses arranged in fanciful figures. See மிறைக்கவி.

சதுரங்கமாட, inf. To play at chess.

சதுரங்கக்காய், s. Chess-men.

சதுரங்கபலம் — சதுரங்கதளம், *s.* A force composed of the four military constituents of an army. See சதுரங்கம்.

சதுரங்கயுத்தி—சதுரங்கவெத்து, *s.* Stratagem at chess.

சதுர்முகன்—சதுரானன், *s.* Brahma, பிரமன்.

சதுர்க்காலம், *s.* The four different seasons of the year in northern countries.

சதுர்க்கோணம், *s.* Quadrangular figure, a tetragon.

சதுர்த்தசம், *s.* Fourteen, பதினாலு; [*ex* தசம், ten.]

சதுர்த்தசபுவனம், *s.* The fourteen worlds.

சதுர்த்தசி, *s.* The 14th day of the moon. See திதி.

சதுர்த்தர், *s.* Sudras—the fourth caste of the Hindus, சூத்திரர்.

சதுர்த்தி, *s.* The fourth day after the new or full moon. See திதி.

சதுர்ப்பலன், *s.* Privilege, a good fortune. (*p.*)

சதுர்ப்பாகம், *s.* Four parts. 2. The fourth part.

சதுர்ப்பாடு, *v. noun.* [*prov.*] Eloquence, skill, excellence. See சதுரப்பாடு.

சதுர்ப்புயன், *s.* The god Vishnu, the four armed.

சதுர்யுகம்—சதுரியுகம், *s.* A Maháyuga, being the aggregate of the four yugas or 4,320,000 years.

சதுருபாயம்—சதுர்விதோபாயம், *s.* The four kinds of expedients for overcoming an opponent. See உபாயம்.

சதுர்வருணம், *s.* The four castes.

சதுர்வேதம், *s.* The four vedas. See வேதம்.

சதுராச்சிரமம், *s.* The four orders or states of religious life. See ஆச்சிரமம்.

சதுரானவிலை, *s.* A low, cheap price.

சதுர்காண, *inf.* To be cheap, to be obtained at a low price. (*R.*)

சதுர்விளையாட, *inf.* To dance as a dancing girl before an assembly. (*Rare.*)

சதுர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க. *v. a.* To daub, besmear, clap on as ointment, mortar, &c., அப்ப. (*Little used.*)

சதுர்கூடலி, *s.* The ஆவிரை shrub.

சதேகரு, *s.* Cinnamon, இலவங்கப்பட்டை. (*R.*)

சதை, *s.* [*for* தசை, *by transposition of the letters.*] Flesh, மாமிசம். 2. The pulpy part of fruit, பழத்தின்சதை. (*c.*) 3. The முன்னை tree. 4. The பாலை tree. 5. [*Tel.*] A pair, a set, சோடு, ஒத்தது.

சதையுள்ள இடத்திலே கத்தியாடும். The knife will be directed to the fleshy parts, i. e. rich folks are generally looked to for help, &c.

சதைப்புஷ்டி — சதைக்கொழுப்பு, *s.* Fatness, lustiness, stoutness.

சதைபுரள, *inf.* To be sprained. (*R.*)

சதைவளர, *inf.* To cicatrize. 2. To form or grow, as flesh.

சதைப்பொருத்தி, *s.* A water-plant, (*lit.*) the flesh joiner, ஓரிப்பூடு.

சதைகழப்புணித்தனம், [*prov.*] Slothfulness; declining to exert one's self.

சதை, கிறது, ந்தது, யும், ய. *v. n.* [*loc. vul. prop.* சிதை.] To be bruised or crushed, நெரிய.

சதை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க. *v. a.* [*prov. prop.* சிதை.] To crush, bruise, mash, நெரிக்க. 2. *v. n.* To grow fat, stout, புஷ்டியாக. (*Limited.*)

சதோகநாதர், *s.* One of the nine சித்தர், நவசித்தரிலொருவர்.

சதோகரு—சதோகுரு, *s.* The cinnamon bark, இலவங்கப்பட்டை. See சதேகரு. (*R.*)

சத்தகம், *s.* [*prov. a change of* சத்திரம்.] A curved knife, a small bill, ஓர்கத்தி—*Note.* காம்புச்சத்தகம், கொக்கைச்சத்தகம், புல்லுச்சத்தகம், பன்னச்சத்தகம், are different kinds. See these.

*சத்தகம், *s.* An aggregate of seven, எழுகூடியது; [*ex* சத்தம்.]

சத்தசிப்பி, *s.* [*prov.*] Shell-fish, கிளிஞ்சில்.

சத்தபருணி, *s.* A tree, as ஏழிலைம்பாலை. (*M. Dic.*)

*சத்தம், *s.* Sound in general, clamor, ஒலி. 2. Tone in music, இசை. 3. Voice, குரல். (*c.*) 4. A word, a vocable, மொழி. 5. Inspired or revealed sayings, பெரியோர்மொழி. [உபசி.] 6. The declension of Sanscrit nouns. W. p. 829. S'ABDA. 7. [*vul. loc.*] Cartage, cart hire, &c., மாடுமுதலியவற்றிற்குக்கொடுக்குங்கூலி.

சத்தபரிசரூபரசகந்தம். Sound, touch, form, taste, smell—as the objects of the five senses. See தன்மாத்திரை.

சத்தங்காட்ட, *inf.* To give a signal with the voice, &c., to call, to halloo. 2. To cry out, clap hands, &c., in order to scare away snakes, wild beasts, &c. 3. To cry, make a noise with the voice, &c. 4. To cry out, as a signal in cases of danger.

சத்தங்கேட்க, *inf.* [*loc.*] To propose a price for cartage.

சத்தசங்கிரகம், *s.* A combination of of sounds. 2. A glossary. (*p.*)

சத்தசாத்திரம், *s.* Philology; especially the Etymology of Sanscrit words. 2. Phonics, acoustics.

சத்ததன்மாத்திரை, *s.* The archetype of sound. See தன்மாத்திரை.

சத்தப்பட, *inf.* To sound, &c., ஒலியுண்டாக. 2. To clang, tinkle, sound, ஒலிக்க. 3. To be uttered—as the sound of a letter, எழுத்தொலியுண்டாக.

சத்தப்படாமல். Without noise. 2. Without one's knowledge.

சத்தப்பிரதி, *s.* [*prov.*] Knowing only by hearsay. (*Limited.*)

சத்தப்பிரமம், *s.* Inspired writings, the Vedas as the voice of deity. 2. The system which maintains that sound is god, சத்தமேபிரமமென்கை. 3. Directions for the modification of sound; one of the sixty-four கலைஞானம்; which see.

சத்தப்பிரமமுள்ளிருக்கத்தொள்ளைச்செவியனுணருஞ்சத்தப்பிரமமென்றேதுஞ்சளப்பேய். While the holy divinity dwells within, there are certain cavilling fools (devils) who teach that sound perceived by the ears is Brahm.

சத்தப்பிரமவாதம், *s.* A system which regards the Vedas as deity, or sound as god.

சத்தப்பிரமாணம், *s.* Inspired sayings, as one of the eight laws of ascertaining truth. See பிரமாணம்.

சத்தமாய், *adv.* Audibly or aloud.

சத்தம்பறிய, *inf.* To make a loud report—as of a cannon.

சத்தமிட—சத்தம்போட—சத்தம்வைக்க, *inf.* To make a noise. 2. To cry out. (*c.*)

சத்தார்த்தம், *s.* The literal meaning of a word; [*ex* அர்த்தம்.] (*p.*)

சத்திக்க, *inf.* To sound, make a noise, ring, ஒலிக்க. (*p.*) 2. See under சத்தி.

சத்தித்தல், *v. noun.* Sounding.

*சத்தம், *s.* Seven, seven-fold, ஏழு. W. p. 892. SAPTA.

சத்தகன்னிகை—சத்தமாதர்கள், *s.* The seven famous goddesses, or Saktis. See மாதர். (*c.*)

சத்தகம், *s.* A funeral ceremony, giving seven kinds of things—as rice, clothes, money, &c., to seven brahmans, ஓர்மரணகன்மம்.

சத்தகுலாசலம், *s.* The seven distinguished mountains in India: மகேந்திரம், மலயம், சகியம், சத்திமான், இருட்சம், பாரிபாத்திரம், மாவிந்தம்; (காசி.) also seven mountains which are fancied to exist in each of the seven Dwipas.

சத்தசாகரம்—சத்தசமுத்திரம், *s.* The seven circumambient seas. (See கடல்.) 2. *Met.* Abundance.

சத்தசாகரமாய்ப்பெய்தது. It rained abundantly, (*lit.*) as it were the seven seas.

சத்தசுரம், *s.* The seven musical tones or notes, represented by the letters ச, ரி, க, ம, ப, த, நி. See சுரம்.

சத்ததாது, *s.* The seven constituent parts of the body. See தாது.

சத்ததாரணை, *s.* One of the தாரணை. See தாரணை.

சத்ததாளம், *s.* The seven modes of beating drums. See தாளம்.

சத்ததீர்த்தம், *s.* The seven sacred rivers. See நதி.

சத்ததீவு, *s.* The seven circumambient Dwipas. See தீவு.

சத்ததேவத்திரவியானுமானம், *s.* [*R. Catholic usage.*] The seven sacraments.

சத்தநரகம், *s.* The seven hells. See நரகம்.

சத்தபாதாளம், *s.* The seven patalas or abysses, fabled to be the abodes of Titans, Nagas, and Rakshas.—*Note.* These are different from the Puranic hells. See பாதாளம்.

சத்தபுரி, *s.* The seven sacred cities. See புரி.

சத்தமண்டலம், *s.* The seven regions or worlds. See மண்டலம்.

சத்தமருத்துக்கள், *s.* The seven kinds of winds. See மருத்துக்கள்.

சத்தமி, *s.* The seventh day after the new or full moon, ஓர்திதி.

சத்தமேகம், *s.* The seven kinds of clouds. See மேகம்.

சத்தராசிகம், *s.* Rule of seven, a compound rule of proportion in which seven terms are employed, ஓரெண்வகை. (*Modern.*)

சத்தரிஷிகள்—சத்தவிருடிகள், *s.* The seven famous Rishis, viz; அங்கிரன், அத்திரி, கிரது, மரீசி, புலகன், புலத்தியன், வசிட்டன். 2. Ursa major or Great Bear, in the heavens, to which the seven Rishis are fabled to have been transferred. See முனிவர்.

சத்தலோகம், *s.* The seven metals. See உலோகம்.

சத்தவருக்கம், *s.* The seven vegetable medicines—as நெல்லிமுளி, வெட்டிவேர், இலாமிச்சம்வேர், சடாமாஞ்சி, இலவங்கபத்திரி, ஏலம், திராட்சம்.

சத்தவாரம், *s.* The seven days of the week. See வாரம்.

சத்தாவத்தை, *s.* The seven stages of the soul, from ignorance and self-delusion, to the knowledge of Brahm, and consequent felicity; viz. 1. அஞ்ஞானம். 2. ஆவரணம். 3. விட்சேபம். 4. பரோட்சம். 5. அபரோட்சம். 6. சோகநிவர்த்தி. 7. ஆனந்தம். (உபநிட.)

*சத்தன், *s.* Applied to Siva—as considered the true and all-pervading god, சிவன். (சிவ. சி.) (*from Sa. Sat.*)

சத்தார், *s.* [*for.* and *loc.*] An oblique or slanting, sloping direction, சாய்வு.

சத்தி, *s.* A trident, சூலம். 2. The flag of a chariot or car, தேரிடக்கியம். 3. A banner as a badge of honor, விருதுக்கொடி.

*சத்தி, *s.* Matter disgorged, கக்கல். 2. Vomiting, puking, கக்குகை. W. p. 334. CHHARDI. (*Limited.*) 3. The கொம்மட்டி creeper. 4. The பேய்ப்புடல் creeper. 5. The நீர்முள்ளி plant. (*M. Dic.*)

சத்திகுன்மம், *s.* Vomiting, கக்குகை. (*R.*) 2. A kind of குன்மம் disease attended with vomiting.

சத்தியெடுக்க, *inf.* [*prov.* also சத்திக்க.] To vomit, to puke.

*சத்தி, *s.* Ability, power, strength, energy, prowess, வல்லமை. 2. The female energy or active power of deity in all the operations of creating, preserving, destroying, &c., பராசத்திமுதலியன.—*Note.* Each form of the deity is represented as having a distinct சத்தி described as his consort. 3. A name of பார்வதி. 4. The female organ, as the counter part of the phallic emblem of Siva, ஆவிடையார். 5. An iron spear or dart, கைவேல். W. p. 824. SAKTI. 6. Sulphur, கந்தகம். 7. Soap, சவக்காரம். 8. Bismuth pyrites, நிமிளை. 9. [*for* சத்திரம்.] An umbrella or parasol, குடை. 10. The white parasol as a badge of royalty, வெண்குடை. 11. Pursuit after works, ceremonies, &c., as one of the five சிவதத்துவம்.—*Note.* The three saktis are, 1. இச்சாசத்தி. 2. ஞானசத்தி. 3. கிரியாசத்தி, which see. To these are added சிற்சத்தி, and பராசத்தி. Others add 1. திரோதானசத்தி. 2. மாயாசத்தி. 3. விந்துச்சத்தி.

சத்திக்குத்தக்கதாய்ச்செய். Do according to your ability.

அதெனக்குச்சத்தியாய்க்கிடைக்கும். I shall eventually get it.

சத்திகுறைய, *inf.* To be wanting in strength.

சத்திசெலுத்த, *inf.* To authorise. (*p.*)

சத்திபூசை, *s.* The puja-worship of the வாமர் sect, performed in secret with raw flesh, ardent spirit, &c. The object of worship being the privities of a naked woman, in personification of the fecundating and operative principle of deity in nature.

சத்தியுள்ளவன், *s.* A rich man, a man of influence. (*c.*)

சத்தியில்லாதவன், *s.* An incompetent person, a weak person. (*c.*)

சத்திவிளங்க, *inf.* [*loc.*] To become manifest as power, a miraculous power.

அருட்சத்தி, *s.* [*in* சிவஞானபோதம்.] The active energy of deity which is said to enlighten the soul and to be a source of benefit to all animated beings.

சிவசத்தி, *s.* Sakti, or active power considered in its inseparable connection with Siva. (சிவ. சி.) 2. (*R.*) The consort of Siva, பார்வதி. 3. Siva and his consort.

திரவியசத்தி, *s.* Pecuniary ability.

மந்திரசத்தி, *s.* The force or virtue of incantations.

சரீரசத்தி, *s.* Bodily power, vigor of body.

பிரபுத்துவசத்தி, *s.* Princely dignity, power of rank, &c.

வீரசத்தி, *s.* Valor.

*சத்திகம், *s.* A horse, குதிரை. (சது.) W. p. 893. SAPTIKA.

சத்திகர், *s.* [*Rom. Cath. usage.*] Those who have power to work miracles—as சத்துவகர். (சது.)

சத்திகுருநாதன், *s.* The கஞ்சா plant.

சத்திக்கூற்றேன், *s.* Sal-ammoniac, நவச்சாரம். (*R.*)

சத்திக்கொடி, *s.* The கொம்மட்டி creeper—as சத்தி. *sa.*

சத்திசாரணை, *s.* A plant, ஓர்விதசாரணை. Borehavia procumbens, Spreading Hogweed. மூக்கிரட்டை. Ains. v. 2. p. 205.

சத்திச்சாரம், *s.* One of the 25 bodies containing acid salts, காந்தாரி.

*சத்திநாதம், *s.* Golden color, பொன்னிறம். 2. (*M. Dic.*) Bismuth of a golden color, பொன்னிமிளை. Compare சத்தி. 3. Mica of a yellow color, ஏமாப்பிரகம்.

*சத்திநிபாதம், *s.* [*in the agamas.*] The degree of spiritual advancement in which there is an utter mortification of self, and self-energizing principles, and a ripening of the soul for union with the deity; [*ex* சத்தி, self energy, *et* நிபாதம், prostration.]

சத்திநிபாதர், *s.* Those in whom self will is subdued, and who tend toward the deity, மனதையடக்கித் தெய்வம்வழிபடுவோர்.

*சத்தியபாமை, *s.* One of Krishna's wives, கிஷ்ணன்மனைவிகளிலொருத்தி.

*சத்தியம், *s.* Truth, veracity, sincerity, உண்மை. 2. An oath, swearing, சபதம். W. p. 885. SATYA. 3. Trial by ordeal, சத்தியசோதனை. 4. (*R.*) The குறிஞ்சா plant.

சத்தியமேகொல்லுஞ்சத்தியமேவெல்லும். Truth is great and will prevail.

சத்தியக்கடுதாசி, *s.* [*prov.*] An affidavit. (*Limited.*)

சத்தியங்கெட்டவன், *appel. n.* An alien to truth.

சத்தியங்கேட்க, *inf.* To put one on his oath. (*c.*)

சத்தியசம்பன்னன், *s.* A man of veracity. See சம்பன்னம்.

சத்தியஞ்செய்விக்க, *inf.* To administer an oath.

சத்தியந்தப்ப, *inf.* To swerve from truth; to become insincere, to fail in one's promises.

சத்தியதரிசனி, *s.* The title of the author of the சிவஞானபோதம் in Tamil—as மெய்கண்டான்.

சத்தியநாதர், *s.* The first of the சித்தர்.

சத்தியநிருவாணம், *s.* Entire liberation from births, &c., and consequent supreme bliss. (*p.*)

சத்தியப்பிரமாணம்—சத்தியப்பிரமாணிக்கம், *s.* Veracity: pure, unmixed truth. 2. A true oath. (*c.*)

சத்தியம்பண்ண, *inf.* To take an oath, to swear.

சத்தியம்பண்ணிக்கொடுக்க, *inf.* To take an oath in order to remove another's suspicions.

சத்தியயுகம், *s.* The first of the four yugas, the age of truth, the golden age, கிரேதாயுகம்.

சத்தியலோகம், *s.* The highest of the seven upper worlds said by some to be the abode of Brahma, and by the Saivas to be that of Siva, ஓர்லோகம்.

சத்தியவசனம்—சத்தியவாக்கு—சத்தியவாசகம், சத்தியவாய்மை, *s.* A true saying or assertion; an infallible truth.

சத்தியவதி, *s.* The mother of Vyasa, வியாசன்றாய்.

சத்தியவந்தன்—சத்தியவாசகன்—சத்தியவாக்கி—சத்தியவாதி—சத்தியவான், *s.* A person of veracity, a faithful person.

சத்தியவிரதன், *s.* One who scrupulously adheres to the truth. 2. One who has taken a vow always to speak the truth. 3. A name of the eldest of the five Pandavas. 4. The twenty-fifth king of the Solar dynasty in the second age. (*Sa. Satyavrata.*)

சத்தியவேதம், *s.* The true Veda, or holy writings. 2. [*in christian usage.*] The holy scriptures, the Bible. 3. [*in Rom. Catholic usage.*] The Christian religion.

சத்தியவேதக்காரர், *s.* Christians, also the Romanists. (*c.*)

*சத்தியோசாதம், *s.* One of the five faces of Siva, indicative of production, or reproduction, சிவனைம்முகத்திலொன்று.

*சத்திரம், *s.* An alms-house where food is given to travellers, brahmans, mendicants, &c.; a choultry, அன்னசாலை. (*c.*) 2. A sacrifice,—especially an oblation on the field of battle, to secure the aid of the goddess of victory, யாகம். W. p. 884. SATTRA. 3. A weapon used in close combat—as a sword, spear, &c.; one of the two classes of hand weapons, கைவிடாப்படை. (Compare அத்திரம்.) 4. (*c.*) A surgeon's knife or lancet, சத்திரக்கத்தி. 5. A lance, கைவேல். W. p. 854. S'ASTRA. 6. Surgery, இரணவைத்தியம். 7. An arrow, பாணம். 8. W. p. 333. CH'HATRA. A parasol, an umbrella, குடை. 9. A white parasol, an emblem of royalty, வெண்குடை. 10. The தும்பை plant. 11. The கவிழ்தும்பை plant.

சத்திரக்கத்தி, s. (in surgery.) A lancet.

சத்திரசாலை, s. An alms-house — as சத்திரம், 1. 2. An arsenal, ஆயுதசாலை. (p.)

சத்திரஞ்செய்ய— சத்திரமிட — சத்திரம் வைக்க, inf. To make an incision, to open a tumor, &c.

சத்திரப்பிரயோகம், s. Surgical operation. (p.)

சத்திரயாகம், s. A sacrifice-as சத்திரம்,2.

சத்திரவிதி, s. A treatise on surgery. 2. The art of surgery, surgical rules. (Modern.)

சத்திரவித்தை — சத்திரவைத்தியம், s. [prov.] Surgery.

சத்திராட்சி, s. The medicinal shrub, அரத்தை. (M. Dic.)

*சத்திரியன், s. [plu. சத்திரியர்.] The second of the four general divisions of castes, the royal or military class, அரசர். See சுதி. W. p. 261. K'SHATTRIYA.

சத்திரியப்பிராமணர், s. Brahmans of Kshattriya origin. (c.)

சத்திரியகாமி, s. The royal antidote to the வசநாபி poison.

*சத்து, s. Truth, reality, உண்மை. 2. Virtue, goodness, morality, moral excellence, நன்மை. 3. (c.) Power, strength, essence (as of medicines or of poisons); the principle in animals and vegetables, essential to life and strength, சாரம். 4. The real universal spirit, whether in deity or in separate souls. 5. Sentient knowledge, அறிவு. 6. A person of moral worth, virtue, great learning, &c., a sage, ஞானி. 7. Permanent existence—as distinguished from transitory, உள்ளது. W. p. 884. SAT. (p.)

சதசத்து, s. Good and evil, reality and illusion, entity and nonentity, &c.

சதசத்துஞானம், s. Knowledge of good and evil.

சத்துக்கொடுக்க, inf. To communicate power, strength, tone, &c.

சத்தெடுக்க—சத்துவாங்க, inf. To reduce one's strength, power, pride, &c.. 2. To extract the virtues of medicinal drugs, சாரத்தைக்கிரகிக்க.

சத்துமத்து, s. The essence of a future germination, contained in the seed or primitive principle, &c. 2. The seed or original principle, as comprising the embryo of the future production. (p.)

சத்துமொத்து, s. [loc.] A repeated sound, commonly made by kicking, pounding grain, &c., ஒலிக்குறிப்பு.

*சத்துரு, s. [improp. சத்துராதி.] A foe, an enemy, an adversary, an antagonist, பகைவன். W. p. 828. S'ATRU.

சத்துருத்தனம், s. Hostility, enmity. (c.)

சத்துருசயம், s. Destruction of foes. (p.)

சத்துருசங்காரன், s. A destroyer of enemies. (p.)

சத்துருமித்துரு, s. Enemies and friends. (c.)

சத்துருத்தானம், s. [in astrol.] The unfavorable position of a planet at the time of one's birth being the sixth from the rising sign. See தானம்.

சத்துருபாஷாணம், s. A drug, being an antidote to the poison of snakes, and used in apoplexy, &c., நிர்விஷம்.

*சத்துவம், s. Strength, power, ability, vigor, வலி. 2. Nature, natural quality or disposition, essence, essential principle, சுபாவகுணம். (c.) 3. The first of the three principles in nature, முக்குணத்திலொன்று. 4. Indicative qualities or signs of qualities—as tears to express sorrow, or the erection of the hairs on the body from delight, ஓர்விசேஷகுணம். See குணம். W. p. 885. SATVA.

அவ்வளவு சத்துவமுனக்கில்லையோ. Hast thou not so much strength?

சத்துவக்குறிவிளக்கம், s. Rhetorical description to the life, ஓரலங்காரம்.

சத்துவங்கெட்டவன், s. An unskilful person. 2. A weak person. (c.)

சத்துவகர், s. [in Roman Catholic usage.] Celestials who are gifted with the power of performing miracles, being angels of the second order—as சத்திகள்.

சத்துவாரி, s. [loc. vul.] Dimness of sight, சாலேசரம்.

*சத்தை, s. Being, existence, entity, இருப்பு. 2. Sap, essence—as சத்து, 2, 3. (Limited.) W. p. 884. SATTA.

அத்தசத்தையேபிரமம். The real and absolute entity is Brahm alone.

சத்தையில்லை. It has no effect, no power.

சத்தையிறக்க, inf. [loc.] To distil, to draw off the volatile or essential part of a substance, to extract tar, &c., by heat.

சந்த, adj. [from the Latin Sanctus.] Saint, as in சந்தப்பாப்பு, சந்தந்தோனி. (Rom. usage.)

சந்தகம், s. [for.] A kind of pastry cooked in steam—as இடியப்பம்.

சந்தகை, s. A mould or cullender for the இடியப்பம் pastry. (R.)

சந்தகைப்பணிகாரம், s. As சந்தகம்.

சந்தகைப்பலகை, s. A mould—as இடியப்பவுரல்.

*சந்தசு, s. Sanscrit prosody; also the metres of the Vedas, ஆரியயாப்பிலக்கணம். W. p. 334. CH'HANDAS.

சந்தடி, s. [from Sa. Sand'ha, joining.] Thick crowding of people going and coming, a throng, mob, சனத்திரள். 2. Bustle, stir, clamor, tumultuousness, confused noise, hubbub, uproar, இரைச்சல். (c.)

கலியாணச் சந்தடியிலே தாலிகட்ட மறந்தாப்போல். As if one had forgotten, in the bustle of the wedding, to tie the tali-badge; i. e. lost sight of the main point.

சந்தடிகலைகின்றது. The crowd is dispersed.

சந்தடியடங்குகின்றது. The noise abates.

சந்தடியாக, inf. To grow turbulent or noisy. (c.)

சந்தணி, s. [a change of சந்தனம்.] Sandal—either the tree, the wood, or the fragrant paste. (சது.)

*சந்ததம், adv. Always, perpetually, eternally, forever, எப்பொழுதும். W. p. 888. SANTATA.

சந்ததமங்கலம். Everlasting felicity. (c.)

*சந்ததி, s. A son, மகன். 2. Offspring, progeny, issue, பிள்ளை. 3. Race, family, lineage, pedigree; generation as limited to a family or tribe, descent, succession, வமிசம். 4. Descendants, posterity, சந்தானம். W. p. 888. SANTATI.

சந்ததிக்கழகு வந்திசெய்யாமை. It is an ornament to a family that there be no case of barrenness in it.

சந்ததிதழைக்க. May you be blessed with children.

சந்ததியார், s. Descendants.

சந்ததிவழி, s. Lineage, a line of descendants.

*சந்தப்பாணம், s. [prov. vul. but correctly சந்தர்ப்பணம், from Sa. Santarpan'a, emollient, soothing.] A kind of salve applied to boils or tumors, ஓர்மருந்துச்சேர்வை.

சந்தமாமா, s. Uncle-moon, children's talk, used in dramatic language; [ex Chanda, the moon.] (c.)

*சந்தம், s. Metre in poetry, — also musical flow or harmony in verse, resembling the metre of the Greeks and Romans, கவிவண்ணம். W. p. 334. CH'HANDAS. 2. Shape, form, likeness, வடிவு. 3. Color, hue, நிறம். 4. Beauty—as அந்தம், அழகு. (c.) 5. (a contraction of சந்தனம்.) Sandal. 6. [prov.] Manners, habits, பழக்கம்.

ஆள்அழகு சந்தமில்லாதவன். His is not a handsome person.

சந்தங்கெட—சந்தஞ்சிதைய, inf. To strike a wrong note. 2. (p.) To lose beauty and symmetry.

சந்தப்பா, s. A kind of verse in which twenty-six letters make a stanza of four lines, ஓர்விதப்பா.

சந்தமறியாதவன், s. An inferior poet.

சந்தமாய்ப்படிக்க, inf. To sing melodiously.

சந்தவிகற்பம்—சந்தபேதம், s. Discord in music.

சந்தவிதி, s. The art of poetic harmony.

சந்தவிருத்தம், s. A stanza of a pleasing kind of metre, ஓர்விருத்தம்.

சந்தவாக்கு, s. [prov.] Low habits, meanness of disposition or manners as in persons of low descent. (Limited.)

சந்தயம்—சந்தையம், s. [prop. சந்தேகம் which see.] (R.)

*சந்தர்ப்பம், s. [Sa. Sandarbha.] Season, opportunity, time, சமையம். (c.) Sometimes written சந்தற்பம்.

சந்தர்ப்பமாயிருக்க — சந்தர்ப்பப்பட, inf. To be favorable, convenient.

*சந்தனம், s. Sandal—either the tree, its wood, or the fragrant paste or ointment made from it, சந்தனமரம். Santalum album. (c.) W. p. 316. CHANDANA. 2. A chariot, a car, இரதம். (பார.) W. p. 959. SYANDANA.

சந்தனக்கட்டை — சந்தனக்குறடு, s. Sandal logs or blocks.

சந்தனக்கல், s. A stone for triturating sandal perfume.

சந்தனக்காப்பு — சந்தனாபிஷேகம், s. Anointing an idol with the fragrant sandal paste.

சந்தனக்கிண்ணம்—சந்தனக் கும்பா, s. A brass or silver cup, for sandal perfume.

சந்தனக்குடம், s. [prov.] A pot of sandal paste, as carried in the religious processions of some Mussulmen.

சந்தனக்குழம்பு—சந்தனச்சேறு, s. Macerated sandal.

சந்தனக்குறடு, *s.* A cubical or parallelopiped piece of sandal wood on which are marked the four numbers, 3, 12, 10, 100, one on each side. This is thrown and the number which turns up is looked for in a book.

சந்தனக்கூட்டு, *v. noun.* [*prov.*] Perfumery ground with sandal.

சந்தனஞ்சாத்த, *inf.* To anoint an idol, a great person, &c., with sandal.

சந்தனத்தயிலம், *s.* Sandal oil.

சந்தனத்திரி, *s.* [*prov.*] A wick or சீக்கு, coated with sandal or other perfumed paste, for diffusing odour while burning.

சந்தனத்திரளை, *s.* A lump of sandal paste, commonly offered to an idol.

சந்தனத்தூள் — சந்தனப்பொடி, *s.* Sandal wood powder.

சந்தனப்பொட்டு, *s.* A spot of sandal paste—as worn on the forehead.

சந்தனமிழைக்க—சந்தனமுரைக்க, *inf.* To triturate sandal.

சந்தனம்பூச, *inf.* To anoint one's self with sandal.

சந்தனவில்லை, *s.* A small cake of perfumery, impregnated with sandal essence.

சந்தனக்கோரை, *s.* [*prov.*] A kind of grass, ஓர்புல்.

சந்தனாதி, *s.* [*prov.*] Sandal and other perfumes. 2. A fragrant oil.

சந்தனாதித்தயிலம் – சந்தனாதியெண்ணெய், *s.* Medicinal and fragrant oil in which sandal is the chief ingredient.

சந்தனாதியுண்டை, *s.* A medicinal pill, of which sandal paste forms the principal constituent.

சந்தனாசலம், *s.* The பொதியம் or Malaya mountain, called the sandal mountain from its superior sandal trees; [*ex* அசலம், mountain. (*p.*)

*சந்தனு, *s.* [*the Sa. pronunciation is* சாந்தனு.] A famous king of the lunar race, the 21st sovereign in the line, and father of Bishma, வீடுமன்றந்தை. W. p. 837. S'ANTANU. (*p.*)

சந்தனுமுன்மகன்—சந்தனுமைந்தன், *s.* Bishma as the eldest son of Sàntanu.

*சந்தாபம், *s.* Heat, ardency, fervor, வெப்பம். (சது.) 2. Distress, affliction, துன்பம். 3. [*R. Cath. usage.*] Repentance, contrition, penitence, மனஸ்தாபம். W. p. 888. SANTAPA. (*p.*)

சந்தாயம், *s.* [*loc.*] Management by the proprietors themselves, as சஞ்சாயம்.

*சந்தானகரணி, *s.* A medicament for reuniting and healing limbs cut off or broken, அற்ற உறுப்புகளைப்பொருத்துமருந்து. W. p. 889. SANDHANAKARAN'EE. 2. (*R.*) The அறுகு grass. 3. The பெருமருந்து, a medicinal plant.

*சந்தானசருவோத்தம், *s.* One of the twenty-eight Agamas, ஓர்சைவாகமம்.

*சந்தானதீபிகை, *s.* A work on astrology, ஓர்சோதிடநூல்.

*சந்தானம், *s.* Offspring, progeny, issue, சந்ததி. 2. Race, descent, lineage, family, pedigree, line, வமிசம். (*c.*) 3. Series, consecutive series, regular succession, concatenation, தொடர்பு. 4. Succession of an order—as of a priesthood, &c., குருபாரம்பரை. 5. One of the five trees of Swerga, that yield whatever is desired, ஐந்தருவிலொன்று. W. p. 888. SANTANA.

சந்தானகுரு, *s.* The family Guru.

சந்தானந்தழைக்க, *inf.* To increase and prosper as a family, used in compliment, benediction, &c., மங்கலமொழி.

சந்தானபாரம்பரை, *s.* Genealogy, family, lineage.

சந்தானமற்றவன், *s.* A man without issue, one who has no son to perform the monthly and annual funeral rites; which is a thing greatly deplored, and evidence of sins in the present or some former birth. *A term of reproach.*

சந்தானலட்சுமி, *s.* The gift of a numerous offspring. (*c.*)

சந்தானவிரதம், *s.* A fast observed to obtain offspring.

சந்தானவழி, *s.* Lineage either ascending or descending. (*p.*)

சந்தானவிருத்தி, *s.* Family increase and succession.

புத்திரசந்தானம், *s.* A male issue, a son. (*c.*)

*சந்தானவுவமை, *s.* A comparison formed on the ambiguity of terms, ஓரலங்காரம். See சிலேடையுவமை. (*p.*)

சுளுந்து, *s.* A kind of shrub, the கோரான். 2. A torch for travelling made of dry sticks of this shrub, சுள். 3. A kind of censer in which coals are placed and waved round, சுற்றுஞ்சுளுந்து. (*c.*)

சுளுந்துக்கட்டை, *s.* As சுளுந்து, 2.

சுளுந்துபிடிக்க, *inf.* To hold torches.

*சுளுவு, *s.* (*corrup. of Sulab'ha, also Tel.*) Easiness, facility, that which is easy of attainment, சுலபம். 2. Lightness, இலேசு. 3. Abatement, தணிவு. (*c.*)

சுளுவாய்க்கிடைக்க, *inf.* To obtain easily.

சுளுவானவழி, *s.* A short cut, சுருக்கமானபாதை. 2. Easy method or schemeful measures, இலேசானவழி.

சுளுவுபார்க்க — சுளுவிலேபார்க்க, *inf.* To seek at a reduced price.

சுளுவுபண்ண, *inf.* To abate, to diminish, குறைக்க.

சுளுவானசுமை, *s.* A light load.

சுளை, *s.* The pulp of jack-fruit, the divisions of a wild pine; the receptacles for juice in the orange, pine, custard apple, &c., பலாமுதலியவற்றின் சுளை. (*c.*)

சுளையெடுக்க, *inf.* To take out the pulp.

சுளைசுளையாய்ப்போக்க, *inf.* To remove the pulp gradually.

தோலிருக்கச்சுளைவிழுங்கி. One who extracts the pulp leaving the skin whole; —applied to a person who artfully embezzles leaving no marks.

சுள்—சுள்ளு, *s.* Pungency, உறைப்பு. 2. Dried salt-fish, கருவாடு. 3. *adj.* (*in combin.*) Little, small, slender, அற்ப. (*c.*)

சுள்ளைச்சுட்டுக்கொண்டுகள்ளைக்குடிக்கிறது. Roasting salt-fish and drinking toddy.

சுள்ளக்காய் — சுள்ளாக்காய், *s.* [*prov.*] Chilly, மிளகாய்.

சுள்ளாணி, s. A small nail. See ஆணி.
சுள்ளெறும்பு, s. See எறும்பு.

சுள்ளக்கம், s. Anger, fury, கோபம். 2. Insolence, மேட்டிமை. (c.) 3. [prov.] Prickly heat, வேர்க்குரு.
சுள்ளக்கமடங்க, inf. To desist from anger. 2. To be cooled, குளிர.
சுள்ளக்கன், s. [prov.] An angry person; a fiery bullock or horse. (c.) 2. (R.) A base, dishonest man, போக்கிரி.

சுள்ளம், s. See சுள்ளக்கம். (R.)

சுள்ளல், s. [prov.] Tenderness, flexibleness, மென்மை.
சுள்ளலி— s. (mas. சுள்ளலன்.) A slender woman, மெலிந்தவள். 2. A thin tree, மெல்லிதானமரம்.
சுள்ளற்கோல், s. A flexible stick or rod, வளைகிறதடி.

சுள்ளாபி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To be hot, to be burning, as the sun between showers, சுள்ளாப்புக்காட்ட. 2. To be quick in movements, work, &c., தீவிரிக்க. 3. To warm, to heat slightly, காய. 4. To be cutting, sarcastic in speech, பேச்சுறைக்க.

சுள்ளாப்பி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. [prov.] To beat, lash, strike, அடிக்க. 2. To scatter and shake sheaves in threshing, கதிரடிக்க.

சுள்ளாப்பு, v. noun. [com.] Piercing heat of the sun after rain, மழையினுறுதிகாட்டும் குறிப்பு. 2. Pungency, poignancy, உறைப்பு. 3. A stroke, cut, அடி. 4. Cutting sarcasm, பழிச்சொல். 5. Hastiness, quickness, தீவிரம்.
சுள்ளாப்பெல்லாம்பொல்லாப்பு. Cutting sarcasm is bad.
வெய்யில்சுள்ளாப்பாயெரிக்கிறது. The sun is too hot.
சுள்ளாப்புக்காட்ட — சுள்ளாப்புப்போட, inf. To shine fiercely—as after rain.

சுள்ளி, s. Dry sprays, commonly for fuel, சிறுவிறகு. (c.) 2. [prov.] A small stick, ratan, &c., சிறுகோல். 3. The அனிச்சம் tree. 4. The ஆச்சா tree. 5. The ஞாழல் tree. 5. 6. The mango-tree, மாமரம். 7. The மயிர்க்கொன்றை tree.
சுள்ளியாய்ப்போனான். He has become lean (thin) as a spray.
சுள்ளிபொறுக்க, inf. To gather up dry sprays.
சுள்ளிக்கம்பு, s. The sprays in a tree.
வயற்சுள்ளி, s. A small plant, பொரிப்பூண்டு.

சுள்ளிடு, கிறது, சுள்ளிட்டது, ம், சுள்ளிட, v. n. [prov.] To prick, hurt, twinge, smart—as with the stroke of a rod, a pungent taste on the tongue, the piercing heat of the sun, &c., உறைக்க. 2. To be stung with remorse, மனம்வருந்த; [ex சுள், pungency.] (c.)
சுள்ளிடுவான், appel. n. [prov.] Pepper, chilly, &c., மிளகாய்முதலியன. 2. [vul.] A kind of insect, ஓர்பூச்சி.
சுள்ளிடப்பேச, inf. [prov.] To speak so as to hurt one's feelings, சுழியப்பேச.

சுள்ளு, s. See சுள்.

சுள்ளுசுள்ளெனல், v. noun. Pricking, twinging, throbbing. See சட்சுள்ளெனல்.
சுள்ளுசுள்ளென்று முகத்தைக்காண்பிக்கிறான். He shows an angry countenance.
சுக்கும்பாக்கும்வெட்டித்தாறேன் சுள்சுள்ளென்றுவெயில் எறி. (Boys say to the sun,) I will cut and give pieces of ginger and areka-nut, shine briskly and be hot.

சுள்ளுப்பூச்சி, s. [prov.] A cricket, ஓர்வண்டு. Compare தெள்ளுப்பூச்சி.

சுள்ளை, s. [com. சூளை.] A potter's kiln, மட்கலஞ்சுடுஞ்சூளை. (சது.) 2. A kiln, a furnace in general, காளவாய்.
சுள்ளைபோட, inf. To put up the earthen wares in the kiln.

சுறட்டு, s. [prov. vul. for துறட்டு.] Stubbornness, pertinacity, obstinacy, contumaciousness, மூர்க்கம். 2. Cynicalness, quarrelsomeness, தொந்தரை. 3. Difficulty, intricacy, சிக்கு. 4. Meddling, interference, தலையிடுகை.
சுறட்டன், s. An obstinate person, one that makes difficulty, தொந்தரைகாரன்
சுறட்டுப்பிடி, v. noun. Stubbornness, tenaciousness, முரட்டாட்டம்.
சுறட்டுவலி, s. A kind of cramp in the limbs. 2. Stubbornness.

சுறணம், s. A bulbous plant, கருணை. (R.)

சுறண்டு, கிறேன், சுறண்டினேன், வேன், சுறண்ட, v. a. (improp. for சுரண்டு.) To scratch, abrade, scrape off with a finger-nail, or an instrument, நகமுதலியவற்றுற்சுறண்ட. See சுரண்டு for the compounds.

சுறவு, s. The சுறா fish, மகரமீன். (p.)

சுறவை, s. [loc.] Fieriness, fierceness, vehemence, சுள்ளக்கம்.

சுறா, s. A genus of fishes—squalus Carcharias—including sharks, the sword fish, &c., probably all the cartilaginous class, சுறவு. (c.) 2. Capricorn of the Zodiac, மகராசி. 3. [loc. vul.] The filth or dirtiness of the body, தேகஅழுக்கு.
சுறாப்பிடித்திருக்கிறது. It is dirty or filthy.
சுறாக்கவடி, s. [prov.] A kind of play, prison-bars, ஓர்விளையாட்டு. (c.)
சுறாக்களிறு — சுறாவேறு, s. A male shark.
சுறாக்குட்டி, s. A young shark.
சுறாக்கொம்பு, s. The blade of the sword fish.
சுறாச்சிறை, s. Shark-fins—an article of commerce.
சுறாமுள், s. Shark-bones, sometimes of monstrous size.
ஓங்கிற்சுறா, s. Tunny-fish, which swims leaping, Thynnus.
குரங்கன்சுறா, s. Simiolus Carcharias. See குரங்கம்.
கொம்பன்சுறா, s. The sword fish. See கொம்பு.
பாற்சுறா, s. An edible சுறா.
மட்டிச்சுறா, s. A round and edible shark.
வழுவன்சுறா, s. A smooth kind, not edible.
வேளாச்சுறா, s. A grampus, cetaceus Carcharias, L.

சுறாளம், s. [vul.] Anger, கோபம். 2. Swiftness, a gallop, வேகம். Compare சாளம்.

சுறீரெனல், v. noun. Smarting excessively—as from the sting of a wasp, snuff in the nose, &c., கடுத்தல். 2. Hissing as water in contact with fire, சுறுசுறெனல். 3. [prov.] Being struck with fear or horror, அச்சக்குறிப்பு. (c.)
சுறீரென்றுமுள்ளுத்தைத்தது. A thorn penetrated quickly into the foot.
எறும்புசுறீரென்றுகடித்தது. The ant bit me very severely.
சுறீரென்றுவலிக்க, inf. To feel a smarting pain.

சுறுக்கு, s. Quickness, haste, celerity, fleetness, nimbleness, velocity, விரைவு. 2. Activity, diligence, briskness, expedition, வேகம். 3. Quickness, irritableness, impatience, ஆத்திரம். 4. Sharpness, keenness in perception or execution, கூர்மை. 5. Asperity, pungency, poignancy, காரம். (c.)
சுறுக்கன்—சுறுக்குக்காரன், s. [prov.] A quick, active, or diligent person. 2. A quick, irritable person, கோபக்காரன்.
சுறுக்காய், adv. Quickly.
சுறுக்காய்ப்படிக்க, inf. To read readily.
சுறுக்காய்நடக்கிறவன், appel. n. A swift-footed person.
சுறுக்காய்ப்போக, inf. To go quickly, with speed. 2. To go too fast, gain on time—as a watch, &c.
சுறுக்கில்லாதவன், appel. n. (neg.) A slow man.
சுறுக்குக்காட்ட, inf. To use sharpness—as with a ratan on a lazy servant.
கொஞ்சஞ்சுறுக்குக்காட்டவேண்டும். You must be severe.
சுறுக்குத்தாக்க, inf. To show rigor.
சுறுக்குப்பண்ண, inf. To hasten, expedite, facilitate. 2. To be quick in operation—as poison, or a fatal disease.

சுறுக்கெனல், v. noun. Being quick, severe, &c., கடுப்பின்குறிப்பு. (c.)
சுறுக்கென்றுசொல்லாதே. Do not speak so as to irritate.
சுறுக்குச்சுறுக்கென்றுவலிக்க, inf. To feel acute pain from the bite of a venomous reptile.

சுறுசுறுத்தல், v. noun. [prov.] Bustling, hurrying, being in a hurry, being busy, ஆத்திரப்படல்.

சுறுசுறுப்பு, v. noun. Bustling, hurrying, தீவரிப்பு. 2. Diligence, activity, industry—oppo. to அசமந்தம், சாக்கிரதை. (c.)
சுறுசுறுப்பாயிருக்க, inf. To be diligent, fervent, ardent, zealous.
சுறுசுறுப்போடேசெய்ய, inf. To do a thing diligently.
சுறுசுறுப்படங்க, inf. To grow less fervent, active, &c.

சுறுசுறெனல், v. noun. Hissing as water in contact with fire, ஒலிக்குறிப்பு. 2. Rising quickly as anger, or spreading rapidly as fire, or as poison in the system, வேகங்கொள்ளல். 3. Penetrating instantly as a thorn, முள்ளேறல். (c.)
விளக்குச்சுறுசுறென்றணைந்துபோயிற்று. The lamp, sputtering, went out.
தீசுறுசுறென்றுபற்றுகிறது. The fire, crackling, kindled.

சுறுசுறென்றேற, *inf.* To spread quickly in the system, as poison; to run in, as a thorn.

சுறுதி, *s.* Swiftness, quickness, alacrity, &c., சுறுசுறுப்பு. (*Beschi.*)
  சுறுதியாயோடு. Run swiftly.

சுறை, *s.* A plant, கொத்தான். (*M. Dic.*)

சுற்பம், *s.* Copper, செம்பு. (சது.) 2. [*vul. for* சொற்பம்.] A little, a trifle.

சுற்றம், *s.* Kindred, relations collectively or individually, family connections, உறவு. 2. Adherents, attendants, உற்றோர். (*c.*)
  சுற்றத்துக்கழகுசூழவிருத்தல். It is beautiful for relations to dwell together. (*Avv.*)

சுற்றத்தார், *s.* Relations, kindred. 2. Attendants, auxiliaries. 3. Trusty servants, household dependents.—*Note.* Royal dependents are five: 1. நட்பாளர், intimate friends, confidential adherents, companions. 2. அந்தணாளர், priests, brahmans. 3. மடைத்தொழிலர், cooks, confectioners. 4. மருத்துவக்கலைஞர், doctors, physicians. 5. நிமித்திகப்புலவர், soothsayers, augurers, prognosticators.

சுற்றந்தழால், *v. noun.* Living in harmony with relations, சுற்றந்தழுவுதல். (குற.)

தந்தைவழிச்சுற்றம், *s.* Relationship by the father's side. See ஞாதி. (*c.*)

தாய்வழிச்சுற்றம், *s.* Maternal consanguinity. (*c.*)

சுற்று, *s.* Circuit, compass, range, limit, சுற்றளவு. 2. Sphere, circle, circumference, periphery, வட்டம். 3. A circuitous run, சுற்றோட்டம். 4. A round about way, சுற்றுவழி. 5. A winding coil, a wrapper, an envelope, நூன்முதலியவற்றின்சுற்று. 6. The girth of the foot-end of a tree, as a measure of its contents, மரச்சுற்று. 7. The felly of a wheel, உருளையின்சுற்று. 8. The surrounding wall of a fortification, சுற்றுமதில். 9. The circuit of a fortification, மதிற்சுற்று. 10. A roll, a scroll; a cigar, புகையிலைச்சுற்று. 11. [*in combination.*] A ring, விரற்சுற்று. 12. A whitlow, நகச்சுற்று. See சுற்று, *v. n.*
  எங்கள்சுற்றிலே. In our quarter or circle.

சுற்றளவு, *s.* The extent of a circumference, the periphery; perimeter.

சுற்றுக்கடுக்கன், *s.* A kind of earring. See under கடுக்கன்.

சுற்றுக்கட்டு, *v. noun.* A house with verandas, &c., all round. Also சுற்றுக்கட்டுவீடு. 2. Fabrication, fiction, கட்டுக்கதை. 3. Bribery, பரிதானம்.

சுற்றுக்கால், *s.* Neighborhood, an adjacent place, அயல். (*c.*)
  சுற்றுக்காலில்விசாரிக்கத்தெரியும். It can be known by inquiry in the neighborhood.

சுற்றுக்காலிடுதல், *v. noun.* Dancing attendance on a court, &c.

சுற்றுக்காலிட்டுக்கொண்டுதிரிய, *inf.* (*fig.*) To importune, கெஞ்சித்திரிய.

சுற்றுக்கோட்டை, *s.* A circular fortification.

சுற்றுத்தேவதை, *s.* A circle of idols.

சுற்றுக்கோயில், *s.* Smaller temples around the larger.

சுற்றுச்சுழல் — சுற்றுச்சுழற்சி, *v. noun.* Meanderings of a labyrinth. 2. Intricacy of an affair. 3. Involution in style; an intricate form of expression. 4. Circumlocution, paraphrase, &c. 5. Reverse or intricate arrangement of ideas in the construction of verse. (*c.*)
  இந்தச்சுற்றுச்சுழல்கள்எனக்குத்தெரியாது. I don't understand this round about way of proceeding.

சுற்றுப்படாகை — சுற்றுவட்டகை, *s.* The country or villages round about.

சுற்றுப்பலி—சுற்றுப்பூசை, *s.* [*prov.*] Offerings placed on the ground round a temple in the direction of the eight cardinal points, for the guardian regents. 2. (*fig.*) Bribing all persons in authority, இலஞ்சங்கொடுக்கை.

சுற்றுப்பட்டு—சுற்றுப்புறம், *s.* Place or region round about. See பட்டு.

சுற்றுப்பட்டுக்கிராமம், *s.* Suburbs, villages adjoining a town.

சுற்றுப்பிரகாரம், *s.* The circular area around a temple. 2. An outer court.

சுற்றுமதில், *s.* A surrounding wall, commonly of a temple.

சுற்றுமுற்றும், *adv.* [*prov.* சுற்றும்மிற்றும்.] All about, all round. (*c.*)

சுற்றுமுற்றும்பார்க்க, *inf.* To look on all sides.

சுற்றுவழி, *s.* As சுற்று, 4. 2. Circumvention, getting money by tricks, தந்திரஞ்செய்தல்.

சுற்றிலும், [*ablative of* சுற்று.] (*adverbially.*) Round about, all about.

சுற்றுவேலி, *s.* A surrounding hedge.

நகச்சுற்று—உகிர்ச்சுற்று, *s.* A whitlow round the finger-nail.

ஒருசுற்று, *s.* One turn round. 2. The girth of the foot-end of timber. See சுற்று, 6.
  ஒருசுற்றுத்துணியுமில்லையே. I have not even a single winding of cloth.

சுற்றுவளையம், *s.* A hoop.

சுற்றுவீதி, *s.* A winding street.

சுற்று, கிறேன், சுற்றினேன், வேன், சுற்ற, *v. n.* To go or pass round, revolve, circulate, turn, வட்டமாயோட. 2. To go or move about here and there, wander, அலைய. 3. To take a circuitous or indirect course, சுற்றிப்போக. 4. To be circuitous, meander, wind about—as a river, road, &c., ஆறுமுதலியசுற்ற. 5. To whirl, spin round, turn about, இராட்டினஞ்சுற்ற. 6. To be giddy, be dizzy, தலைசுற்ற. 7. To be coiled, to curl round, to kink, to twine, நூன்முதலியசுற்ற. (*c.*)
  சுற்றியுஞ்சுகத்திலேபோ. Seek a good result even circuitously.

சுற்றிக்கொள்ள, *inf.* To become coiled, entangled. See சுற்று, *v. a.*

சுற்றிச்சுழற்றி, *Gerund.* (*adverbially.*) Altogether, ஒருமிக்க.

சுற்றிச்சுற்றி, *Gerund.* (*used adverbially.*) Round and round. 2. Circuitously, repeatedly—as திரும்பத்திரும்ப.

சுற்றிச்சுற்றிப்பேச, *inf.* To talk in a round about way.

சுற்றித்திரிய, *inf.* To go round about, perambulate. 2. To ramble or stroll about, to roam.

சுற்றிப்பிடிக்க, *inf.* To have a cholic, சுற்றிவலிக்க. See சுற்று, *v. a.*

சுற்றியடிக்க, *inf.* To whiffle, shift—as the wind.

சுற்றியலைந்துதிரிய, *inf.* To ramble about.

சுற்றியலைந்துபோக, *inf.* To take a circuitous course.

சுற்றியாட, *inf.* To whirl in dancing. 2. To dance round the area.

சுற்றியெடுக்க, *inf.* [*prov.*] To wave cakes, &c., round an idol, a new married couple, &c., to dispel fascinations. Compare திஷ்டிசுற்ற.

சுற்றிவந்துகும்பிட, *inf.* To raise the hands and turn round towards the eight points, worshipping their guardians. 2. To worship with raised hands passing round a temple, &c.

சுற்றிவர, *inf.* To pass round a temple in worship, singly, or in procession. 2. To pass about a village turning to the right, as in marriage processions, &c.

சுற்றிவலிக்க, *inf.* As சுற்றிப்பிடிக்க.

நாடோறும்வந்துசுற்ற, *inf.* To come for a thing day after day. 2. To hang about in order to steal, திருடப்பார்க்க.

சுற்றிக்கொத்த, *inf.* To dig up and loosen the earth round about a plant, &c. (*c.*)

சுற்று, *v. noun.* Passing round in an orbit, revolving, circulation, வட்டமாயோடல். 2. Whirling on an axis, revolution, சுழற்சி.

சுற்று, கிறேன், சுற்றினேன், வேன், சுற்ற, *v. a.* To surround, encompass, environ, encircle, envelope, சூழ. 2. To wind about, enwrap, wreathe, பாம்புமுதலியனசுற்ற. 3. To twine about, சுற்றிப்படர. 4. To dress one's self, invest, to gird, சேலைசுற்ற. 5. (*in cant usage.*) To circumvent, get by trickery, வஞ்சிக்க. 6. To whirl, twirl, brandish, சுழற்ற. (*c.*)
  எல்லாவற்றையுஞ்சுற்றிக்கொண்டுபோய்விட்டான் ... He has stolen every thing.
  என்னைவந்துவந்துசுற்றுகிறான். He continues to come around me, (importuning.)
  காலைச்சுற்றினபாம்புகடியாமல்விடாது. The snake, coiled around one's foot will not leave without biting; i. e. evil contact will bring injury.

சுற்றிக்கட்ட, *inf.* To wind round and tie, to gird; girt. 2. [*prov.*] To make the curls of a letter in writing. 3. To wrap a cloth, &c., round the head or body. 4. (*fig.*) To fabricate, form a conspiracy. 5. To bribe.

சுற்றிக்கொள்ள, *inf.* To coil round a thing or person—as a snake, &c. 2. (*fig.*) To extort money, &c., by stratagem, &c., வஞ்சித்தெடுக்க.

சுற்றிப்பிடிக்க, *inf.* To entangle. 2. To intwine the hand in one's lock of hair. 3. To take hold of a person, apprehend him. See சுற்று, *v. n.*

சுற்றிப்போட, *inf.* As சுற்றிக்கொள்ள, 2.

சுற்றியெறிய, *inf.* To sling round and throw.

சுற்றிலை, *s.* The wrapper or outer leaf of a cigar, சுருட்டுச்சுற்றுமிலை.

சுற்றிவலிக்க, *inf.* [*prov.*] To extort by stratagem. See சுற்று, *v. n.*

சுற்றிவளைக்க, *inf.* To surround, environ. 2. To lead round the oxen in the threshing floor.

சுற்றிவளைத்துக்கொண்டுவர, *inf.* To go round one another as wrestlers watching to grip, or as in prison-bar.

சுற்றல், *v. noun.* Enwrapping, encircling, &c.

கோழிசுற்றிவிட, *inf.* To wave a new bought hen three times round the fire place to domesticate her and prevent her from running away. (*c.*)

கடுக்கன்சுற்ற, *inf.* To wind an ear-ring (with gold wire.)

தலைப்பாசுற்ற, *inf.* To wrap a turban round the head.

சுற்றுவாரி, *s.* An academy of learning, கல்லூரி. 2. Beams projecting out of a wall to form a veranda, சுவர்ப்புறத்துநீண்டவுத்திரம். (*p.*)

*சுனகன், *s.* A dog, நாய். W. p. 852. S'UNAKA.

சுனக்குடம், *s.* A shrub, சதுரக்கள்ளி. (*M. Dic.*)

*சுனம், *s.* Garlic, வெள்ளுள்ளி. (*R.*)

*சுனாசீரன்—சுனாசு, *s.* Indra, இந்திரன். W. p. 931. SUNASEERA.

சுனாயாசமாய், *adv.* (*Tel.* సునాయాసముగా.) Without difficulty, இலகுவாய்.

சுனாவணி, *s.* (*Hind.*) Readings of petitions, commonly official, விண்ணப்பம்வாசிக்கை. (*c.*)

*சுனி, *s.* A bitch, பெண்ணாய். W. p. 852. S'UNEE.

சுனுக்கு, *s.* As சுனக்குடம். (*R.*)

சுனை, *s.* A small reservoir of water on a mountain, a hill-tank, மலைச்சுனை. (சது.) (*c.*) 2. [*prov.*] Verdant pastures with tanks and shade-trees, பசும்புற்றரை. 3. [*improp. for* சுணை.] Roughness, sharpness, &c.

சுனைத்தண்ணீர், *s.* (*fig.*) Water from a boil, புண்ணீர்.

சுனைக்கரந்தை, *s.* A plant. See கரந்தை.

சுனை, கிறது, ந்தது, சுனையும், சுனைய, *v. n.* To become soft, to be macerated, குழைய. 2. To fade, wither, வாட. (சது.) (*p.*)

சுனைவு, *s.* Rock-water; [*ex* சுனை.] (*R.*)

சுன், *s.* Saturn, the planet, சனி. 2. Cipher in arithmetic, பூச்சியம். 3. As சுன்னை. 4. Whiteness, வெண்மை. (மயூர.)

சுன்னச்சி, *s.* An acrid salt, சத்திச்சாரம். (*M. Dic.*)

சுன்னத்து, *s.* (*for.*) [*probably from Sa. Sunvat, a sacrifice.*] Circumcision, விருத்தசேதனம்.

சுன்னத்துக்கலியாணம், *s.* Ceremony of circumcision.

சுன்னத்துப்பண்ண, *inf.* To circumcise.

சுன்னத்துப்பெற்றவன், *appel. n.* One circumcised.

சுன்னம், *s.* A cipher, பூச்சியம். 2. As சுன்னை.

சுன்னிதம், *s.* [*loc.*] (*Tel.* సున్నితము.) Delicacy, minute accuracy, correctness, நுண்மை.

இந்தத்தராசு வெகு சுன்னிதமாயிருக்கிறது. The scales are very correct.

சுன்னுக்கட்டி, *s.* [*loc.*] (*Tel.*) Cheese, பாற்கட்டி; [*ex* கட்டி, *Tam.*]

*சுன்னை, *s.* (*Tel.* సున్న.) A dot, a cipher, a circlet indicating the nasal sound in Grantham and other letters, விந்து. Browne p. 1076.

சூ

சூ, A syllabic letter compounded of ச் and ஊ, ஓரெழுத்து.

சூ, *s.* Setting on dogs, நாயை ஏவுமொலி.

சூக்காட்ட—சூவிட, *inf.* To set on dogs. 2. [*prov.*] To drive away dogs, cattle, &c., by a sound, வெருட்ட. (*c.*)

*சூகம், *s.* Beard or awn of a spike of rice, barley, &c., நெல்வால். W. p. 853. S'OOKAM. 2. Creeping things, reptiles, ஊர்வன. (சது.)

*சூகரம், *s.* A hog, பன்றி. (சது.) W. p. 854. S'OOKARA. (*p.*)

சூகை, *s.* A kind of emmet, சூகையெறும்பு. (*c.*) 2. [*loc.*] The back part of a house, வீட்டின்பின்புறம். 3. (சது.) An elephant, யானை. 4. [*prov.*] Swimming of the head, dizziness, தலைசுற்றல்.

என் சூகையோரத்திலே வந்திருந்தது தெரியாதா? Do you not know that you have lived upon my bounty?

சூகைக்கண், *s.* [*prov.*] A kind of near sightedness, causing one to keep the eyes nearly shut.

சூகையாட, *inf.* [*prov.*] To be dizzy.

சூகைமொய்க்க, *inf.* To swarm as the சூகை ants.

சூகையொண்டிக்கேட்டல், *v. noun.* Listening at the back of the house, as an eaves-dropper.

*சூக்கம், *s.* Skill, address, ingenuity, expedient, minuteness, சூட்சம். (*p.*)

சூக்காய், *s.* [*prov.*] An inferior kind of crab, ஓர்நண்டு.

*சூக்குமம்—சூக்ஷுமம், *s.* One of the twenty-eight Agamas, சிவாகமத்தொன்று. 2. Minuteness, subtility, &c., as சூட்சமம்.

சூக்குமசரீரம்—சூக்குமதேகம், *s.* The subtile or ethereal body formed of spiritual elements, the immediate vehicle of the soul and capable of reduction ad libitum. Also written, சூட்சமசரீரம்.

சூக்குமபுத்தி, *s.* See சூட்சமபுத்தி.

சூக்குமபூதம், *s.* A spiritual or subtle class of elements, corresponding in character and number (being five) with the grosser or material class. See பூதம்.

சூக்குமமாக, *inf.* To be minute.

சூக்குமில், *s.* A spider's nest, சிலந்திப்பூச்சிக்கூடு; [*probably a contraction of* சூக்குமம், *et* இல்.] (*R.*)

*சூக்குமை, *s.* One of the four வாக்கு, or elements of sound, வாக்குநாலிலொன்று. (சது.)

சூக்குளி, *s.* Betel-leaf, வெற்றிலை. (*M. Dic.*)

சூசகவாயு, *s.* As சூசிகாவாயு. (*R.*)

*சூசகன், *s.* A spy, an informer, ஒற்றன். 2. A teacher, உவாத்தி. W. p. 939. SOOCHAKA.

சூசம், *s.* A ram of the துருவாடு species, துருவாட்டேறு. (சது.)

*சூசனை — சூசனம், *s.* Information, teaching, describing, showing, போதனை. 2. Accuracy, exactness, quickness of apprehension, கூர்மை. 3. Intimation by signs, gesture, wink, &c, குறிப்பு. W. p. 939. SOOCHANA. (*c.*)

சூசனைக்காரன், *s.* A sharp person.

சூசனைப்புத்தி, *s.* Quickness of perception.

சூசனையாய்ச்செய்ய, *inf.* To do a thing accurately.

சூசனையாய்ப்பார்க்க, *inf.* To look narrowly into a thing.

*சூசி—சூசிகை, *s.* A needle, ஊசி. 2. An index, catalogue, குறிப்பு. W. p. 939. SOOCHI. (*p*)

சூசிக்கல், *s.* The mariner's needle, காந்தவூசி.

*சூசிகாபாணம், *s.* A sharp kind of arrow, ஓர்பாணம்; [*ex* சூசிகை.]

*சூசிகாவாயு, Hysterics, as சூதகவாயு.

*சூசியம், *s.* Roasted and hot meat, சூட்டிறைச்சி. (சது.)

*சூசுகம், *s.* The orifice of a teat, முலைக்கண். (சது.) W. p. 330. CHOOCHUKA.

சூச்சான். *s.* [*prov. vul.*] A kind of play of boys with sticks. See கிட்டிபுள்ளு.

சூச்சூ, *s.* A repeated sound to produce silence, அமைத்தற்குறிப்பு. (*c.*)

*சூடகம், *s.* A bracelet, கைவளை. (சது.)

*சூடம், *s.* Crown of the head, உச்சி. (*Sa. Chooda.*)

சூடன் – சூடன்கருப்பூரம் – சூடன்சாம்பிராணி, *s.* [*com.* சூடம்.] A preparation of camphor, ஆரதிகருப்பூரம்.

*சூடாமணி, *s.* One of the two gems of Swerga which gives every thing desired, ஓர்மணி. 2. W. p. 330. CHOOD'AMAN'I. A jewel in a crest or diadem, முடிமணி. 3. The name of a celebrated epic poem, ஓர்நூல்.

சூடாமணிநிகண்டு, *s.* [*also* சூளாமணிநிகண்டு.] The name of the most celebrated Tamil poetic lexicon, the நிகண்டு of மண்டலவன்.

சூடாலைக்கல், *s.* A kind of stone, ஓர்கல். (*R.*)

சூடி, *s.* Cloth, சீலை. 2. (*in combin.*) One wreathed with, &c.—as கொன்றைசூடி. See சூடு, *v.*

*சூடிகை, *s.* A crown, tiara, a diadem, முடி; [*ex* சூடம்.] (சது.) Compare சடிகை.

சூடிக்கயிறு, *s.* [*prov.*] Twines of choir. See under சூடு. (*c.*)

சூடிச்சி, *s.* Salt-petre, or nitrate of potassa, எவக்ஷாரம். (*M. Dic.*)

சூடிணார், *s.* The கோங்கு tree. (*R.*)

சூடு, *s.* (*Gen.* சூட்டு.) Heat, warmth, burn, scald, வெப்பம். 2. Brand, scar from a burn, or scald, சடுகுடு. 3. Fomentation, அனல்; [*ex* சடு, to burn.] 4. Stack of rice-sheaves, or other grain-ricks, நென்முதலியவற்றின்போர். 5. A sheaf of corn given to the washerman, barber, carpenter, &c., அரிக்கட்டு; [*ex* சூடு, *v.*] (*c.*)

நீர்சூடாயிருக்கிறது. The water is hot.

அவனுக்குச் சூடு கண்டிருக்கிறது. He has got strangury. His system is much irritated.

சூட்டிலுண்டானது. That which is produced by heat (in the body).

சூட்டோடேசூடு. Repeated, as hot applications. 2. While the thing is fresh.

சூடடிக்க, *inf.* To thrash the sheaves.

சூடுகாட்ட, *inf.* To apply fomentations, to foment. 2. To hold near the fire. 3. To warm, to heat; to air—commonly at a fire. 4. To appear hot—as fever.

சூடுகாண, *inf.* To become warm, as after a cold fit.

சூடுகொள்ள, *inf.* To become heated, as the system by neglect of bathing; by working in chunam, in the sun, &c. 2. To become a little feverish.

சூடுசுட, *inf.* To apply fomentations, to heat by external applications. 2. To brand animals. 3. To cauterize by fire.

சூடுண்க—சூடுண்ண, *inf.* To be burnt. 2. (*fig.*) To be scolded.

சூடுண்டபூனையடுப்பங்கரைசேராது. A burnt cat will not come near the hearth.

சூடுண்டுமவனுக்குவெட்கமில்லை. Although he has been scolded, he has no shame.

சூடுதாவுதல், *v. noun.* The striking of heat from fire.

சூடுநிற்க, *inf.* [*prov.*] To continue hot, remain feverish.

சூடுபறிய—சூடுபோக, *inf.* To be moderated, as heat in the body by bathing, &c. (*c.*)

சூடுபிடிக்க, *inf.* To become hot. 2. To burn, as the sun's rays. 3. To become heated as the system by neglect of bathing, &c.

சூடுபிறக்குதல், *v. noun.* The arising of heat (by friction, &c.) (*c.*)

சூட்டெண்ணெய், *s.* Margosa-oil extracted from the seeds by heat. 2. An oil-preparation used to cool one's system.

சூட்டடி, *v. noun.* Beating sheaves (for the first time).

சூட்டடுப்பு, *s.* See அடுப்பு.

சூட்டிறைச்சி, *s.* See இறைச்சி.

கைச்சூடு, *s.* Heat of the hand. 2. [*prov.*] The sheaf given to the reapers.

நகச்சூடு, *s.* The degree of heat in warm water, commonly ascertained by putting one's finger into it.

சூட்டுக்கோல், *s.* A branding, cauterizing iron. See குலக்குறடு.

சூட்டுவலி, *s.* The pains of a pregnant woman before delivery. (*c.*)

சூடுசுள்ளாப்பிக்க, *inf.* [*prov.*] To loosen, shake, and scatter in the threshing floor the sheaves of a stack, preparatory for treading out the corn.

சூடுஉதற, *inf.* To separate the corn from the threshed straw. 2. As சூடுசுள்ளாப்பிக்க.

சூடுமிதிக்க, *inf.* [*prov.*] To tread corn from the sheaves—as சூடடிக்க.

சூடுவைக்க—சூடுபோட, *inf.* To brand cattle, &c. (*c.*)

சூடுவேய — சூடுமேய, *inf.* To heap up the stacks or sheaves.

சூடு, கிறேன், சூடினேன், வேன், சூட, *v. n.* To wear, commonly on the head, அணிய. (*c.*) 2. To be crowned, crested, to adorn one's self, கிரீடஞ்சூட. (*p.*) 3. To bear, sustain, be invested with a name, நாமஞ்சூட. 4. *v. a.* (*coast usage.*) To brand cattle, brand as a medical operation, மாடுமுதலியவற்றைச்சுட.

சூடினமாடு, *s.* A branded animal. (*R.*)

கொண்டைக்குப்பூச்சூட, *inf.* To deck a woman's tuft of hair with flowers.

மாலைசூட, *inf.* To put on a garland. 2. To marry, விவாகம்பண்ண.

சூடி, *appel. noun.* (*with the thing.*) One crowned—as பிறையதுசூடி, Siva adorned with the crescent—கொன்றைசூடி. One adorned with கொன்றை wreath.

சூடுகயிறு, *s.* [*com.* சூடிக்கயிறு.] A twine made of choir used for tying the bamboo வரிச்சல் for a house to be tiled.

சூடல்—சூடுதல், *v. noun.* Putting on jewels, &c. 2. Branding.

சூடை—சூடைமீன், *s.* [*vul.*] A small kind of fish like a sardel. (*c.*)

சூடைப்பொடி, *s.* [*prov.*] As சூடைமீன். (*c.*)

*சூட்சம், *s.* [*prop.* சூக்ஷமம்.] Skill, address, dexterity, ingenuity, inventiveness, tact, யூகம். 2. Curiosity, as displayed in a piece of workmanship, அதனம். 3. Device, contrivance, expedient, உபாயம். 4. [*a contraction of* சூட்சமம்.] Minuteness, subtility, fineness, நட்பம். 5. Comprehensiveness, conciseness, சுருக்கம். 6. Artful scheming, dishonest cunning, தந்திரம். (*c.*) 7. A clue to a subject; a rule in science, சூத்திரம்.

சூட்சத்திலேமோட்சமா. Is it easy to gain heaven?

சுண்ணாம்பிலேயிருக்கிறதுசூட்சம். The principal virtue is in the chunam; (to make the mouth red in chewing betel.)

சூட்சத்தில்முடித்துக்கொண்டுவாரும். Have the business done with little cost.

சூட்சக்காரன், *s.* A skilful, ingenious person. 2. A cunning, artful person.

சூட்சபுத்தி, *s.* Great ingenuity, superior invention, genius.

சூட்சமாகப்பண்ண, *inf.* To act skilfully, display ingenuity, perform extraordinary deeds, to subtilize. 2. To practise stratagems, உபாயம்பண்ண.

சூட்சமானவேலை, *s.* Nice, ingenious, skilful workmanship.

சூட்சம்பண்ண, *inf.* To manage economically.

நீசெலவைச்சூட்சம்பண்ணவேண்டும். You must curtail your expenses.

சூட்சவழி, *s.* A short, skilful method in art or science. 2. A good, moral system, நன்னெறி. 3. A short road, சுருக்கவழி. See சுருவானவழி.

சூட்சக்கயிறு, *s.* The concealed strings of a puppet.

சூட்சத்தைத்தட்ட—சூட்சந்தட்ட, *inf.* To give a tap to the working machine.

சூட்சமறிய, *inf.* To get a clue to a subject, &c.

சூட்சமானசெலவு, *s.* Economical expense. (*c.*)

சூட்சம்போட, *inf.* To make a contrivance for the equilibrium of a kite in the air.

சூட்சம்வைக்க, *inf.* To make some contrivance in mechanical adjustments, &c.

சூட்சமாய்ப்பிழைக்க, *inf.* To be frugal in domestic expenditure. 2. To live at small expense. (*c.*)

சூட்சமாயிருக்க, *inf.* To be artful or cunning. 2. To be very little, கொஞ்சமாயிருக்க.

சூட்சவிலை, *s.* A low price.

சூட்சாதிசூட்சம், *s.* Great contrivance, past human conception—as in the construction of the human frame, &c., minute nicety. (*c*)

சூட்சானுசூட்சம், *s.* Concatenation of intricacies, niceties, mechanical adjustments, &c.

சூட்சி, *s.* [*improp. for* சூழ்ச்சி.] Deliberation, stratagem, &c., உபாயம்.

*சூட்சுமம், *s.* Minuteness, subtility, fineness, delicateness, நட்பம். 2. The atomic or spiritual body, சூட்சுமசரீரம். 3. Fraud, தந்திரம். W. p. 939. Sookshmam.

சூட்சுமஅவத்தை, *s.* A stage of life which சூக்குமதேகி experiences.

சூட்சுமமானகாரியம், *s.* A slight affair, a trivial matter.

சூட்சுமக்காரன்—சூட்சுமதாரி, *s.* A cunning man, தந்திரி.

சூட்சுமதேகம், *s.* As சூக்குமதேகம்.

சூட்சுமதரிசனம் — சூட்சுமதரிசனை, *s.* Quick perception, sharp sightedness, acuteness, intelligence, நட்பபுத்தி.

சூட்சுமமாயிருக்க, *inf.* To be fine or small, நுணுக்கமாயிருக்க.

சூட்சுமதிஷ்டி, *s.* Penetration, quick perception—as சூட்சுமதரிசனம். 2. Penetrative mental sight, intuition, supernatural perception. (*p.*)

சூட்சுமவேலை, *s.* A cunning work, எத்துவேலை.

சூட்சுமபுத்தி, *s.* As சூட்சபுத்தி.

சூட்சுமபோதம், *s.* Penetration, keenness of intellect, perception of minute differences, நட்பஆராய்வு. (*p.*)

சூட்சுமவாதி—சூட்சவாதி, *s.* As சூட்சக்காரன்.

சூட்சுமவார்த்தை, s. A recondite expression, கருகலானசொல்.

சூட்சுமாதிசூட்சுமம், *s.* As சூட்சாதிசூட்சம். (*R.*)

எழுத்துச்சூட்சுமம், *s.* Abbreviation—as உம், for உதாரணம், &c.

சூட்டிக்கை, *s.* (*Tel.*) Ingenuity, sharpness, quickness of understanding, கூர்மைப்புத்தி. (*c.*)

சூட்டிக்கையாய்ப்பேச, *inf.* To speak considerately.

சூட்டு, *s.* (*Tel.* జూటు.) Acuteness, sagacity, கூர்மை. (*c.*)

சூட்டுக்காரன், *s.* A witty person.

சூட்டு, *s.* A chain for the forehead of women, நுதலணி. 2. A pendent ornament for the forehead, நுதலணிமாலை. 3. A wreath, a garland, or chain, மாலை. (சது.) 4. A peacock's crest, &c., மயின்முதலியவற்றின்சூட்டு. 5. The prominence on a snake's head, பாம்பின்சூட்டு. (*p.*) See under சூட்டு, *v.*

சூட்டுமாலை, *s.* A garland put on over the shoulders, கரோடிகை.

சூட்டு, கிறேன், சூட்டினேன், வேன், சூட்ட, *v. a.* To crown, wreath, decorate with a chaplet, diadem, tiara, &c., அணிய. 2. To adorn with garlands, chains, மாலையணிய. 3. To confer a name, title, &c., to invest with honors, office, dignity, &c., நாமஞ்சூட்ட. 4. To impute to, charge with, establish by conspiracy, குற்றஞ்சாட்ட. 5. To select a lover, as a lady from a number of suitors, by placing a garland on him, according to ancient usage, மணமாலைசூட்ட. (Compare சுயமரம்.) 6. To exhibit in the presence of a prince, &c., a poem made to his praise; (*lit.*) to invest him with a wreath of poetry, பாமாலைசூட்ட. 7. [*prov. in complaint.*] To appoint, destine, நியமிக்க. 8. To attribute or ascribe to, father upon, சுமத்த.

தாளிணைதலைமேற்சூட்ட. To crown the disciple with his feet, as a guru, &c., implying the display of grace.

ஒருவனுக்குச்சூட்டிவிட, *inf.* [*prov.*] To give a girl to one in marriage, விவாகஞ்செய்துகொடுக்க. 2. To appoint or destine to one. 3. To assign property, &c., to one, ஒப்படைக்க.

மகுடஞ்சூட்ட—முடிசூட்ட, *inf.* To crown.

சூட்டல், *v. noun.* As சூட்டு.

சூட்டு, *v. noun.* Investing, adorning with a crown, head-dress, &c., தரித்தல். 2. (*fig.*) Imputing, bringing about, establishing by conspiracy, குற்றச்சாட்டு.

*சூதகசத்துரு, *s.* Magnet, காந்தம். (*M. Dic.*)

*சூதகம், *s.* Birth, delivery, பிறப்பு. 2. (*c.*) Uncleanness, ceremonial impurity of a woman from catamenia, மகளிர்தொடக்கு. W. p. 940. Sootaka. 3. Ceremonial impurity of a person from the death of a relative, rendering him incompetent to perform certain rites; that from the father's side being greater, the mother's less, மரணசூதகம். 4. Ceremonial uncleanness in general, as of a person, house, clothes, &c., from a death, from menstruation, childbirth, miscarriage, touching a corpse or carcass; from shaving; contact of the finger, &c., with the spittle or any part of the mouth; touching one of low caste, or bathing in a tank of his village; or weeping, lamenting, &c., for a deceased acquaintance, தீட்டு. 5. Oldness, antiquity, பழமை.—*Note.* According to some, the causes of ceremonial impurity are five, viz: 1. சனனசூசம், or சாதகாசூசம், childbirth. 2. மரணசூசம், or மிருதாசூசம், death. 3. சண்டாளரைச்சீறிறேய்தல், bathing in the waters used by low castes. 4. சுராபானம்பண்ணல், drinking toddy or ardent spirits. 5. பொய்கூறல், lying. The last seems but little regarded, also the fourth by many. Instead of the last three, the following are named by some; இருது சூதகம், menstruation. உச்சிட்டசூதகம், being spitten upon. சண்டாளபரிசசூதகம், contact with one of low caste.

சூதகக்காரன், *s.* One ceremonially impure.

சூதகக்காரி—சூதகஸ்திரி, *s.* A woman ceremonially unclean, by catamenia, or otherwise.

சூதகக்கிராணி, *s.* A disease attending the childbirth, from wind or flatulency.

சூதகங்கழிக்க, *inf.* To remove impurity by the prescribed means.

சூதகங்காக்க, *inf.* To keep from society, abstain from venery, from shaving, &c., after a death, till the performance of the funeral rites.

சூதகசன்னி, *s.* A disease of females from sexual intercourse during menstruation. See சன்னி.

சூதகத்துக்குடையவர்கள், *appel. n.* Heirs of one deceased.

சூதகமலடு, *s.* One of the six forms of barrenness. See மலடு.

சூதகமாக, *inf.* To have the monthly course as a woman. (*c.*)

சூதகமுட்டு, *s.* Suppression of the menses. See கருப்பகுலை under கர்ப்பம்.

சூதகவாயு — சூசிகாவாயு, *s.* Hysterics, &c.—from irregularities of the monthly course, and other complaints connected with pregnancy. (*c*)

*சூதநதி, *s.* A river on the south western coast of India, பொருந்தநதி. (சது.)

சூதநோக்கல், *s.* Sulphuret of antimony—as நீலாஞ்சனக்கல். (*R.*)

*சூதமகாமுனி — சூதமாமுனி, *s.* The reputed disciple of Vyasa and deliverer of the Puranas to the forty-eight thousand Rishis who committed them to writing, ஒருரிஷி.

*சூதம், *s.* The sour mango-tree, புளிமா. 2. W. p. 330. Choota. The common mango, மாமரம். 3. The mango-flower, as one of the five arrows of the Indian cupid. (See மன்மதன்கணை.) 4. W. p. 940. Soota. Quicksilver, mercury, பாதரசம். 5. A chariot, இரதம். 6. A kind of fragrant, reddish flower-tree, பவளமல்லிகை. 7. A bee, beetle, வண்டு. 8. Conical pieces in the play of draughts, சூதாடுகருவி. 9. Gambling, சூது.

சூதத்தைப்பொன்னாக்கி, *appel. n.* A kind of native arsenic; (*lit.*) that which makes mercury gold, நாகபாஷாணம்.

சூதபாஷாணம், *s.* A kind of arsenic prepared from mercury, ரசபாஷாணம்.

*சூதர், *s.* (*sing.* சூதன்.) Bards, encomiasts, புகழ்வோர். 2. Charioteers, coachmen, தேர்ப்பாகர். 3. Singers, flute players, a caste, பாணர். W p. 940. Soota. 4. The chief disciple of Vyasa, and the communicator of the eighteen Puranas which he received from him, வியாசர்மாணாக்கர். 5. [*ex* சூது.] Gamblers, players at draughts, சூதாடுபவர். (*p.*)

சூதர்பாணிருபன்சீர்கேட்டு. Being informed of the beauty of the king (நளன்) from the bards. (நைட.)

சூதவஞ்சனம், *s.* As சூதநோக்கல். (*R.*)

சூதவம், *s.* A beetle, a bee, வண்டு. (சது.) Compare சூதம்.

*சூதன், *s.* See சூதர், and சூது.

*சூதானம், *s.* [*prop.* சுஸ்தானம்.] Caution, care, circumspection, எச்சரிப்பு. (*c.*)

சூதானத்துக்கழிவில்லை. There is no detriment from cautiousness.

சூதானப்படுத்த - சூதானம்பண்ண, *inf.* To deposit in a safe place, to take care.

சூதானமான இடம், *s.* A safe place.

*சூதிகை, *s.* [*prov.*] A lying-in woman, பிரசவித்தவள். W. p. 940. Sootika.

சூதிகாக்கிரகம், *s.* A house where a child has recently been born, பிள்ளைபெற்றவீடு; [*ex* கிரகம்.]

சூதிரிமான், *s.* [*improp.*] A caste. See சுதர்மான்.

சூது, *s.* Lotus, தாமரை. (சது.) 2. Lotus with one flower leaf, ஓரிதழ்த்தாமரை. (*R.*)

*சூது, *s.* (*probably a change of Sa. Dyootaha.*) Conical pieces in the play of draughts, to mark the progress of each player, சூதாடுகருவி. 2. The play of dice or draughts, சூதாட்டு. 3. Gaming, gambling of all kinds including cock-fighting, &c., பலவகைச்சூது. 4. Trick, deception, guile, circumvention, வஞ்சகம். (*c.*)

சூதடி, *v. noun.* [*loc.*] Deception, tricks, பித்தலாட்டம்.

சூதன்—சூதுக்காரன், *s.* A deceitful person. 2. A gambler.

சூதாடுகிறவன், *appel. n.* A gambler.

சூதுவிளையாட, *inf.* To gamble.

சூதாடல், *v. noun.* Gambling, playing at any game of chance.

சூதாடுவோர், *s.* Gamblers.

சூதாட்டம், *v. noun.* Gambling by two parties. 2. Tricks, தந்திரம்.

சூதுபண்ண, *inf.* To deceive, to play a trick.

சூதுபோர், *s.* Gambling. 2. Playing at dice, சூதாட்டு.

சூதும்வாதும்வேதனைசெய்யும். Gambling and disputing causes trouble.

இவனுக்குச்சூதங்கபடமுந்தெரியாது. He practises no tricks.

சூத்தி — ஜூத்தி, *s.* (*Hind.*) Shoes, slippers, பாதரட்சை. (*c.*)

*சூத்திரம், *s.* Machine, engine, any piece of mechanism; mechanism of the body or otherwise; the spring in a machine; that which gives impulse, momentum, effect, &c.—as the helm of the ship, the lock of a gun, &c., இயந்திரம். 2. Ingenious contrivance, puzzle, குட்சவேலை. 3. Stratagem, artifice, artful trick, உபாயம். 4. Point, gist, hinge, substance of a thing, அரும்பொருளடக்கம். 5. A secret, a mystery, இரகசியம். 6. Rule, canon, definition, precept, axiom, formula, இலக்கணச்சூத்திரம். 7. W. p. 940. Sootra. Guide, clue, directory, key, index, குறிப்பு. 8. Proposition, doctrine, predicated dogma, கொள்கைச்சூத்திரம். 9. Thread, yarn, twine, line, cord, பஞ்சிநூல்.—*Note.* Rules in Grammar or other works are of six kinds: 1. பிண்டச்சூத்திரம், the opening of a subject by giving an abstract of the work. 2. தொகைச்சூத்திரம், a synopsis, the divisions in brief, their number, &c., a general rule. 3. வகைச்சூத்திரம், an analysis with general divisions; particular rules. 4. குறிச்சூத்திரம், definitions, &c., demonstrative rules. 5. செய்கைச்சூத்திரம், directory, as in grammar, for permutation, elision, &c., connective rules. 6. புறனடைச்சூத்திரம், supplementary rules to obviate objections; give reasons, explanations, &c., respective rules. These are sometimes reduced to two, குறிச்சூத்திரம் and செய்கைச்சூத்திரம்.

சாத்திரத்தைச்சுட்டுச் சதுமறையைப் பொய்யாக்கி சூத்திரத்தைக்கண்டுசுகம்பெறுவதெக்காலம். When shall the shastras be burnt, the four Vedas proved false, and I, through a knowledge of the mystery, be made happy?

சூத்திரக்காரன், *s.* An ingenious or curious artist, an engineer, சூட்சவேலைக்காரன். 2. A man of fine parts, of quick perception, ready wit, &c., சூட்சபுத்தியுள்ளவன். 3. A man of good tact, management, economy, கெட்டிக்காரன்.

சூத்திரக்கயிறு, *s.* The concealed strings of a puppet. 2. The strings of a purse, a bag, &c. (Compare சூட்சக்கயிறு.) 3. Any thing that puts a machine in motion. 4. The unseen line or spring of creature-action, as moved by the divine hand in every event of life, கடவுளது சூட்சம்.

சூத்திரதாரி, *s.* The man who manages the springs, strings, &c., of a puppet, பதிமையாட்டி. 2. God—as moving all things, கடவுள். (*p.*)

சூத்திரநிலை, *s.* The arrangement of rules in grammar, or other scientific or literary works; being of four kinds: 1. ஆற்றொழுக்கு, rules following each other in a regular order. (See ஆறு.) 2. சிங்கநோக்கு, rules having reference to those preceding and following. (See சிங்கம்.) 3. தவளைப்பாய்த்து, a rule referring to the next but one preceding or succeeding. (See தவளை.) 4. பருந்தின்வீழ்வு, a rule referring to several other rules distant from each other. See பருந்து.

சூத்திரப்பா, *s.* [*com.* நூற்பா.] A simple, easy kind of metre, a species of அகவல், being of a didactic or prosaic metre, adapted to treatises of instruction.

The நன்னூல், திவாகரம், பிங்கலந்தை and other works are written in this style.

சூத்திரப்பதிமை—சூத்திரப்பாவை—சூத்திரப்பிரதிமை, *s.* A puppet moved by springs, strings, &c. 2. Creatures—human especially—as influenced by the Supreme Being in all their actions.

சூத்திரப்பதிமையாட்டுகிறவன், *appel. n.* A puppet player. 2. (*fig.*) A subordinate who having gained the mind of his superior directs it at his own pleasure.

சூத்திரப்புறனடை, *s.* Note appended to a rule, &c., in a literary or scientific work.

சூத்திரப்பெட்டி, *s.* A box whose lock is a puzzle.

சூத்திரமாட்ட, *inf.* To put the machine in operation. (*c.*)

சூத்திரமாயிருக்க, *inf.* To be in the form of a rule, a text, a mystery or contrivance.

சூத்திரமானகளவு, *s.* Ingenious theft, artful fraud.

சூத்திரர், *s.* Artificers, mechanics, engineers, architects, carpenters, &c., தச்சர் முதலானோர். 2. See சூத்திரன்.

சூத்திரம்வைக்க, *inf.* To contrive plans.

சூத்திரவேலை, *s.* An ingenious piece of mechanism. See சூட்சமானவேலை.

சூத்திரவிருத்தி, *s.* An explanation of a part of the தொல்காப்பியம்.

சூத்திரி, *s.* A mechanist. (*p.*)

சூத்திரன், *s.* The topaz, புஷ்பராகம். 2. The cat's eye, a precious stone, வைடூரியம். (*M. Dic.*)

*சூத்திரன், *s.* (*plu.* சூத்திரர்.) The last of the fourfold divisions of castes, the servile tribe, said to have sprung from the feet of Brahma. See சாதி. W. p. 854. Sudra.

சூத்திரநாகம், *s.* One of the four high castes of the நாகம் snakes. See நாகம்.

சூத்திரநாபி, *s.* An antidote for the poison of வச்சநாபி. See நாபி.

சூத்திரச்சி—சூத்திரிச்சி, *s.* A female of the Sudra caste, நான்காம்வருணப்பெண். (*c.*)

சூத்திரர்தொழில்-சூத்திரவிருத்தி, *s.* The duties of the servile castes. See தொழில்.

சூத்திரான், *s.* (*plu.*) People of the fourth caste, சூத்திரர். (*Colloq.*)

சூத்திரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To construct rules of grammar, &c., சூற்குவிதிகட்ட; [*ex* சூத்திரம்.] (*p.*)

*சூத்து, *s.* The anus, குதம். W. p. 330. Chooti, and 856. S'rud'hu. *A vulgar term.* (*c.*)

சூத்தாங்கரடு, *s.* [*prov.*] Roughness of the anus or perineum.

சூத்தின்மேலடிக்க, *inf.* To flog the breech.

சூத்தாட்டியுள்ளான், *s.* A kind of snipe. See உள்ளான்.

சூத்தடிக்க, *inf.* To commit sodomy.

சூத்தாட்ட, *inf.* To do eye-service; (*lit.*) to move the anus. (*Colloq.*)

சூத்துக்காட்டித்தனம், *s.* Gaining the minds of a superior by cringing and unfair means. (*c.*)

சூத்தும்வாயுமூட, *inf.* (*fig.*) To be much afraid. See குண்டியும்வாயும்பொத்த.

சூத்தை, *s.* [*prov. loc.* சொத்தை.] That which is decayed—as tooth, &c. (*c.*)

சூத்தைப்பல், *s.* A carious tooth.

சூத்தைக்கத்தரிக்காய், *s.* Blasted brinjals.

சூத்தைப்பாக்கு, *s.* A worm-eaten areka-nut.

சூத்தையரிக்க, *inf.* To be decayed, or worm-eaten.

சூந்துமம், *s.* A plant, இலந்திநாயகம், which see. (*M. Dic.*)

சூபம், *s.* A kind of pulse, ஓர்பயறு.

சூப்பி, *s.* (*Hind.*) The prepuce or foreskin, நுனித்தோல்—*a low expression.* 2. See சூப்பு, *v.*

சூப்பிக்கலியாணம் — சூப்பியறுக்கிறகலியாணம், *s.* The ceremony or festival of circumcision, சுன்னத்து.

சூப்பியறுக்க, *inf.* (*Mohammedan usage.*) To circumcise.

சூப்பு, *s.* (*Eng.*) Soup, கறிரசம். (*c.*)

சூப்புவைக்க, *inf.* To have soup made.

சூப்பு, கிறேன், சூப்பினேன், வேன், சூப்ப, *v. a.* To suck, extract by sucking, to suck up, to sip, as a bee honey, வாயாற் சூப்ப. (*c.*)

முலைசூப்ப, *inf.* To suck the breasts.

சூப்பிப்போட, *inf.* To throw away the skin, &c., after sucking the juice.

அவன்ஒருசூப்பிப்போட்டபனங்கொட்டை.... He is a useless fellow; (*lit.*) a sucked palmyra-nut.

சூப்பி, *s.* [*vul.*] A toy suspended to the neck of an infant for it to suck, ஓர்சிற்றுண்டி. 2. [*prov. in combination with* வீடு, *in reproach.*] One who sponges on others, திரிந்திரந்துண்ணி.

சூம்பு, கிறது, சூம்பினது, ம், சூம்ப, *v. n.* To wither as a limb, &c., to be blighted, as fruit, &c., வாடிப்போக. 2. To be shrunk, as the countenance by sorrow, முகஞ்சூம்ப. 3. To dry up, as an ulcer, blister, pustule, பருச்சூம்ப. (*c.*) Compare கூம்பு, *v.*

சூம்பினகை, *s.* A withered hand.

சூம்பிப்போனகாய், *s.* A withered unripe fruit.

சூம்படைந்தவன், *appel. n.* A gloomy looking person. 2. One whose hopes have been blasted. (*c.*)

சூரசூதன், *s.* Mercury the planet, புதன். (சது.)

*சூரசூதன், *s.* The charioteer of the sun, அருணன்; [*ex* சூரன், *et* சூதன்.] (சது.)

*சூரசேனம், *s.* A country, the region round the northern Mathura in Bengal, ஓர்தேசம். W. p. 854. Soorasena.

சூரசேனன், *s.* The grandfather of Krishna.

சூரடிக்க, *inf.* [*prov.*] To emit a smell of burning hair, wool, &c., மயிர்க்கருகலடிக்க.

*சூரணம், *s.* Powders, commonly medicinal, தூள். W. p. 330. Choorn'a. (Compare சுண்ணம்.) 2. An esculent plant and root, the கருணைக்கிழங்கு. W. p. 854. S'ooran'a.

பொடிசூரணமாக்க, *inf.* To destroy utterly; (*lit.*) to grind to dust.

பொடிசூரணப்பட, *inf.* To be entirely ruined.

சூரணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To reduce to powder, commonly medicine, தூளாக்க. (*p.*)

*சூரணிகை, *s.* A comment, a gloss written in verse, கருத்துப்பொருள்; [*ex Sa. Choorn'ika.*]

*சூரத்து, *s.* (*Hind.*) Heroism, bravery, சூரம். W. p. 854. Soorata. 2. Surat, the name of a country, ஓர்தேசம். (*c.*)

சூரத்துக்காட்ட, *inf.* To display one's valor.

சூரத்துக்கெண்டை, *s.* A lace. See கெண்டை.

சூரத்துநிலவாரை, *s.* Senna from Surat, in distinction to that of this country.

*சூரபன்மன்-சூரபதுமன்-சூரபற்பன், *s.* A king of the Asuras who was cut in two by Skanda in battle. The two parts still living, came against the victor, who seized and transformed them into a cock and peacock, making the former his banner, and the latter his vehicle, சூரன்.

*சூரம், *s.* Valor, bravery, heroism, ardor, strenuousness, power, force, வீரம். W. p. 854. Soora. 2. A kind of grain, the கடலை. 3. Fear, terror, அச்சம். (சது.)

சூரத்துவம்—சூரத்தனம்—சூரகுணம், *s.* Heroism, bravery, valor. (*c.*) See சூரத்து.

சூரபுத்தி—சூரமானகருத்து, *s.* [*prov.*] Ingenuity, great power of mind, யூகம்.

சூரப்புலி, *s.* A bold person—commonly used in irony for a coward; (*lit.*) a fierce tiger. (*Colloq.*)

சூரமானநாய், *s.* A courageous dog.

சூரமானமருந்து, *s.* [*prov.*] A powerful medicine. Compare காரம்.

சூரன், *s.* (*plu* சூரர்.) A veteran, warrior, a man of valor, a person of heroic fortitude, படைவீரன். 2. See சூரபன்மன்.

சூரல், *s.* Ratan-cane, பிரம்பு. (ஸ்கந்.)

*சூரன், *s.* The sun, சூரியன். 2. A hero, வீரன். 3. The grandfather of Krishna, கிருஷ்ணன்பாட்டன். W. p. 854. SOORA. 4. (சது.) Fire, தீ. 5. (*c.*) A dog, நாய். 6. An Asura, the சூரபன்மன். 7. (*M. Dic.*) A fowl, கோழி. 8. A kind of prepared arsenic, கௌரிபாஷாணம். See சூரம்.

சூரசம்மாரம்—சூரசங்காரம், *s.* See சம்மாரம்.

சூரி, *s.* (*Tel.*) A small sharp knife, ஓர்கத்தி. (*c.*)

சூரிக்கத்தி, *s.* See கத்தி.

சூரிக்கிளிஞ்சில், *s.* A conch. See கிளிஞ்சில்.

சூரி, *s.* A poet, a learned man, புலவன். W. p. 941. SOORI. 2. Kali, the goddess, காளி. 3. A malignant goddess, mother of Bhairava, and inflictor of epidemics, காடுகாள். 4. (*R.*) A heroine, வீரி.

கொடுசூரி—கொடுஞ்சூரி, *s.* See கொடுமை.

*சூரியன், *s.* The sun, regarded as a deity, சூரியபகவான். W. p. 941. SOORYYA. 2. The sun, as a planet, ஞாயிறு. 3. Any king of the Solar dynasty, சோழன். (சது.) 4. (*M. Dic.*) A shrub, செவ்வெருக்கு. 5. A mountain containing copper, செம்புமலை.

சூரியகடிகாரம் — சூரியகடியாரம், *s.* A sun-dial.

சூரியகணம், *s.* One of the four inauspicious feet, in poetry. See அட்டகணம் under கணம்.

சூரியகதி, *s.* The progress of the sun in his orbit, daily, monthly or annually.

சூரியகரந்தை, *s.* A plant. See கரந்தை.

சூரியகலை, *s.* Breath of the right nostril. (See சந்திரகலை.) 2. (*fig.*) The right nostril, பிங்கலை.

சூரியகளை, *s.* The sun's brightness. See களை.

சூரியகாந்தச்சிலை, *s.* As சூரியகாந்தம்.

சூரியகாந்தம், *s.* A kind of gem, crystal, lens, or burning glass; the sunstone; said to emit fire when placed in the sun's rays, சூரியகாந்தச்சிலை. W. p. 941. SOORYYAKANTA. 2. [*prop.* சூரியகாந்தி.] The sun-flower.

சூரியகாந்தக்கண்ணாடி, *s.* A burning glass—as சூரியகாந்தம, 1.

சூரியகாந்தஆமணக்கு, *s.* [*prov.*] The plant Ricinus viridis, ஓராமணக்கு. (*R.*)

சூரியகாந்தி, *s.* The sun-flower, சூரியகாந்திப்பூ, Helianthus annuus, *L.* 2. The splendor or heat of the sun, சூரியஒளி. W. p 941. SOORYYAKANTI. 3. As சூரியகாந்திப்பட்டு.

சூரியகாந்திப்பட்டு, *s.* Velvet, so called from its shining properties.

சூரியகிரகணம்—சூரியகிராணம், *s.* An eclipse of the sun. See கிரகணம்.

சூரியகிரணம், *s.* Rays of the sun. See கிரணம்.

சூரியகும்பம், *s.* A water-pot dedicated to the sun.

சூரியகுலம் — சூரியவமிசம், *s.* The Solar dynasty, originally reigning in Oude—one of three governing families, for many generations, the two others being சந்திரகுலம் and அக்கினிகுலம்.

சூரியசங்கிரமம் — சூரியசங்கிராந்தி, *s.* The transit of the sun from one sign to another. W. p. 942. SOORYYASANKRAMA.

சூரியசந்திரர்முதலியோர்வீதி, *s.* The arc of the horizon which comprehends the northern and southern declinations of the sun, moon, &c., being of three divisions called மேடவீதி, இடபவீதி, and மிதுனவீதி. See சூரியவீதி.

சூரியசரம், *s.* As சூரியகலை, 1.

சூரியசித்திரம், *s.* [*in astrol.*] A subdivision of சூரியபுத்தி.

சூரியசித்தாந்தம், *s.* An astronomical work, ஓர்கணிதநூல். See சித்தாந்தம்.

சூரியதிசை, *s.* The reign of the sun, as a planet. See திசை.

சூரியதீக்ஷணம் — சூரியதேசசு, *s.* The radiance or heat of the sun, கடுவெயில். (*p.*)

சூரியநமஸ்காரம் — சூரியநமற்காரம், *s.* The worship of the sun. 2. Adoration of the sun by sick persons, especially for diseases in the eyes. See நமஸ்காரம்.

சூரியபகவான் — சூரியநாராயணமூர்த்தி, *s.* The sun—as a deity.

சூரியபுத்தி, *s.* [*in astrol.*] A division in சூரியதிசை, consisting of three months and eighteen days. 2. [*in astron.*] Sun's daily motion.

சூரியபுடம், *s.* The drying of medicines in the sun. 2. [*in astronomy.*] Sun's longitude.

சூரியபுத்திரன் — சூரியதனயன்—சூரியகுமாரன், *s.* Karna, கன்னன். 2. Sugreeva, ally of Rama, சுக்கிரீவன். 3. Saturn, சனி. (*p.*)

சூரியபுராணம், *s.* A Purana extolling the sun as deity, one of the eighteen Puranas. See பிரமவைவர்த்தம்.

சூரியபூசை, *s.* Worship of the sun either by Saivas competent to perform பூசை, or such as belong to the சூரியவாதம்.

சூரியப்பலகை, *s.* [*prov.*] A plank placed at the transom, or lintel over a door. (*c.*)

சூரியப்பிரபை—சூரியப்பிரவை, *s.* The radiance or splendor of the sun, சூரியகாந்தி. 2. An ornament of gold set with jewels worn on the head by females on special occasions, with another called சந்திரப்பிரபை. 3. [*loc.*] A seat or throne with a circlet like the sun, for an image, on festival occasions, விருத்தகேடகம்.

சூரியப்பிறை, *s.* [*com.*] As சூரியப்பிரபை, 2.

சூரியமண்டலம், *s.* The orb or disc of the sun. 2. The region of the sun. 3. One of the mystic circles on the body, regarded as a lotus flower, and assigned in worship, to three of the female energies of the deity, ஞானசத்தி, கிரியாசத்தி and இச்சாசத்தி, under the emblems of the sun, moon and fire.

தற்புகழ்ச்சி, *s.* Self-praise, self-applause, self-complacency.

தற்புணர்ச்சி, *v. noun.* Self-pollution, onanism, சுயபுணர்ச்சி.

தற்பொழிவு, *v. noun.* Self-interest.

தற்போதம், *s.* Self-knowledge, knowledge of the soul and deity, தன்னையுங்கடவுளையும் அறியுமறிவு. 2. Intuitive knowledge, inherent and eternal knowledge as possessed by the deity, தன்னறிவு.

*தற்கம், s. [improp.] Disputation, controversy, debate. See தருக்கம்.

*தற்கரன், s. A thief, a robber, கள்வன். See தஸ்கரன்.

தற்காலது, s. An offer. See தர்காலது.

தற்கி, க்கிறேன், த்தேன், ப்பேன், தற்கிக்க, v. n. To argue, to reason, to dispute.

துரைதற்கித்துக்கேட்டார். The magistrate cross-questioned him. [prov.]

தற்கோலம், s. [prop. தக்கோலம்.] A drug.

*தற்சமம், s. See under தற், Sa.

*தற்சனி, s. The fore-finger, சுட்டுவிரல். (சது.) See தர்ச்சனி.

*தற்பணம், s. [prop. தருப்பணம், which see.] A ceremony.

தற்பம், s. (probably a change of தல்பம்.) Bed, couch, or other convenience for sleeping, மக்கட்படுக்கை. 2. Mattress, bedding, மெத்தை. 3. Wife, மனைவி. 4. Upper room, மேனிலை. (சது.)

*தற்பம், s. Arrogance, haughtiness, self-importance, அகந்தை; [ex தத்.]

*தற்பவம், s. See under தற், Sa.

*தற்புருடம், s. One of the five faces of Siva, indicative of his attributes as preserver, and invoked by incantations in the daily worship called தற்புருடயாகம், சிவனைம்முகத்தொன்று.

*தற்மம், s. [improp. for தர்மம்.] Charity, duty, equity. (R.)

தனகு, கிறேன், தனகினேன், வேன், தனக, v. n. [prov. for குலுகு, v.] To wanton, dally, to take improper liberties, சரசஞ்செய்ய. 2. To be jolly, mirthful, merry, உல்லாசங்களிக்க. (See தனகு.) 3. To pick a quarrel, to be out of humor, as a brother with a sister-in-law, பொர. (Jaffna usage.)

தனகித்தனகிவருகிறாள். She comes taking liberties with me.

தனக்காரர், s. [prov.] A caste whose ancestors are said to have been elephant keepers, ஓர்சாதியார்.

*தனஞ்செயன்—தனஞ்சயன், s. A name of அருச்சுனன். 2. Fire, அக்கினி. 3. One of the ten vital airs, supposed to remain after death, causing the body to swell, and on the third day parting the sutures of the skull, and thus leaving, உடலைவீங்கச்செய்து தலையைக்கிழித்தகலும்வாயு. W. p. 436. Dhananjaya.

*தனதன், s. See under தனம்.

தனது, s. Friendship, amity, சினேகம். (c.) 2. See தன்.

தனதுபண்ண, inf. To cultivate one's friendship.

*தனத்துருவம், s. [in astron.] The epoch longitude of a planet, or its apsis which is to be added in astronomical calculations.

தனம், s. (Tel.) Nature, state, quality, disposition, தன்மை—as பெரியதனம், greatness. 2. A termination of nouns applicable to persons, expressing state—as குடித்தனம், துரைத்தனம், &c.

*தனம், s. Gold, wealth, substance, property, ஆஸ்தி. (c.) 2. [in numbers.] Affirmation, quantity, plus, எண்ணிலேறாவுடையாளம். W. p. 436. Dhana.

தனதன், s. A liberal person, இசையாளன். 2. A name of Kuvêra a bestower of wealth, குபேரன்.

தனதானியம், s. [in Almanacs.] Gold and grain.

தனபதி, s. The god of wealth, குபேரன். 2. Any wealthy king.

தனபதித்துவம், s. An opulent state; also beneficence, liberality.

தனரேகை, s. [in palmistry.] Lines indicating wealth to the possessor, கையிரேகையிலொன்று.

தனலக்குமி—தனலட்சுமி, s. Lukshmi, the goddess of wealth, one of the eight இலட்சுமி.

தனவந்தன்—தனவான், s. A very opulent man, செல்வன். (c.)

தனவைசியன், s. A merchant.

தனுட்டியன், s. [loc.] (fem. தனுட்டி.) A rich man.

தனநிகிருதன், s. (St.) A treasurer, பொக்கசக்காரன்.

தனுதிபன்—தனேசன், s. The god of wealth, குபேரன்.

தனார்ச்சனம், s. The acquirement of wealth, பொருள்சம்பாதிக்கை; [ex அர்ச்சனம்.]

*தனம், s. Female breasts or bosom, முலை. See ஸ்தனம்.

தனபாரம், s. As ஸ்தனம்; used in poetry as a term of beauty, or dignity.

தனபோகம், s. Enjoyment of woman, மைதுனபோகம்.

*தனயன், s. (sometimes தநயன்.) (fem. தனயள் or தனயை.) A son, புத்திரன். W. p. 364. Tanaya.

தனவறு, s. The ஆச்சா tree. (R.)

*தனவைசியர், s. The first of the three divisions of the வைசியர் caste—as செட்டிகள், the mercantile caste; [ex தனம்.]

*தனவையாதம், s. A plant, சிறுகாஞ்சொறி. See காஞ்சொறி.

தனுது, s. A poetic form of தனது.

தனி, [impers. used adverbially and as an adjective.] Alone, solitary, sequestered, secluded, distinct, separate, detached, insulated, தனிமையான். 2. Sole, single, only, individual, ஒன்று. 3. Unique, matchless, unparalleled, ஒப்பில்லாத. 4. Unlike, without an equal, one of a pair—the other being wanting, ஒற்றையான. 5. Independent, absolute, entire, சுவாதீனமான. 6. Pure, simple, unadulterated, unalloyed, genuine, கலப்பில்லாத. 7. Deserted, forsaken, forlorn, helpless, ஏதுமற்ற.—Note. க், ச், த், ப், are doubled after தனி. (c.)

தனிக்கடவுள், s. Absolute deity, the matchless deity.

தனிக்காட்டுராசா, s. A sole sovereign in a jungle. (c.)

தனிக்காப்பு, s. An invocation, comprized in a single verse.

தனிக்குடி, s. (also ஒன்றிக்குடி.) A solitary family. 2. One family of a caste, living among other castes. 3. Keeping house separately, as distinguished from living under the paternal roof.

தனிக்குடை, s. The umbrella of an autocrat; (fig.) absolute sovereignty, தனியரசாட்சி.

தனிக்குடைநிழற்ற. To spread the imperial umbrella, to govern. (p.)

தனிக்குறில்—தனிக்குற்றெழுத்து, s. A single short consonant.

தனிக்கோலான், s. He whose government is incomparable, the Supreme Being, கடவுள். 2. An independent sovereign. (p.)

தனிச்சமையல், v. noun. Cooking for a single person, for one's self only, &c.

தனிச்செய்கை, v. noun. Cultivating land alone, not jointly with others.

தனிச்சொல், s. (Bab. Gram. p. 80.) A detached foot in வெண்பா and other verse, between two lines, தனிச்சீர். 2. A single or uncombined word.

தனித்தனியே, adv. Individually, separately, each one singly, each alone.—Note. The ஏ is often added whether தனி be repeated or not—as தனியே.

தனித்தாட்டான், s. [prov.] A large monkey that keeps distinct from, or goes before, the drove.

தனித்தியல்பிற்குறிப்பெயர், s. A specific name, including many individuals, or some varieties.

தனித்தேட்டம், s. Amassing wealth alone, without the burden of a family.

தனிநிலை, s. Solitariness, தனித்துநிற்கை. 2. [in gram.] The letter ஃ, ஆய்தவெழுத்து.

தனிப்பட, inf. [adverbially.] To be alone, to be left alone, to be forsaken. 2. To be solitary. 3. To be kept alone as witnesses and prisoners, or apart, detached—as persons, or animals. (c.)

தனிப்படச்சொல்லுகிறேன். I will tell you in secret.

தனிப்பட்டு, s. A single or distinct fold, plait, strand or string, one out of several folds of a necklace. 2. (c.) Silk only, all silk.

தனிப்பயணம், s. Travelling alone, as தனிவழி.

தனிப்பன்றி, s. A wild boar alone, as more ferocious and dangerous than others.

தனிப்பாடு, v. noun. Loneliness, solitude, தனிமை. 2. Bearing the whole labor, responsibility, &c., alone, முழுப்பொறுப்பு. (c.)

தனிப்பாட்டு, s. A single verse unconnected with a series, விருப்பாட்டு.

தனிப்பால், s. Pure, unadulterated milk. (c.)

தனிப்புரக்க, inf. To reign alone, to be an autocrat, தனியரசாள. (p.)

தனிப்புறம், s. A solitary place, or state. (c.)

தனிப்பூடு, s. An onion, or other bulbous root not divided.

தனிப்பெற, inf. [adverbially.] To be alone, to be placed alone, apart, distinct, insulated. (c.)

தனிப்பெறவெடுத்துக்கொண்டான். He took the whole to himself.

தனிப்போர், s. A single combat. 2. [in card playing.] One of the players, winning all the cards, கடிதமாடுவோரிலொருவர்வெல்லுகை. 3. [in trade.] An individual monopolizing all the profits, தன்வசமாக்குகை.

தனிமுதல், s. Trading alone, with one's own capital. 2. (p.) The matchless and only God, absolute deity, கடவுள்.

தனிமொழி, s. A simple uncompounded word.

தனியரசாட்சி, s. Universal sovereignty.

தனியன்—தனியான், s. A single man or woman, one unmarried, living alone; a wild beast detached from the herd, and thus rendered ferocious, ஒன்றி. 2. A solitary animal, tree, fruit, &c., தனித்தது. 3. As தனிப்பாட்டு.

தனியிருக்க—தனியேயிருக்க, inf. To be alone, to be alone at home.

தனியுவமம், s. Using a word in a figurative sense, as கன்னெஞ்சு, a stony heart.

தனியெழுத்து, s. Single letters, in distinction from கூட்டெழுத்து, compound letters.

தனிவழி, s. A lonely way. 2. Travelling alone.

தனிவீடு, s. A solitary house. 2. A house with one square only. (Compare சுற்றுக்கட்டு.) 3. (p.) Heaven, மோட்சம்.

தனிவெள்ளி, s. Pure, unalloyed silver. 2. A single star, apart from others.

*தனிகம்—தனிகா, s. Coriander seed, கொத்தமல்லி. Coriandrum sativum, L. W. p. 437. Dhanika.

*தனிகன், s. A rich man, தனவான்; [ex தனம்.]

தனி, க்கிறேன், த்தேன், ப்பேன், தனிக்க, v. n. To be alone, single, solitary, தனியாயிருக்க. 2. To be detached from company, ஒன்றியாக. 3. To have no mate, fellow, equal or match, ஒட்டாதிருக்க. 4. To be deserted, forsaken, helpless—as by the departure, or death of friends, அந்தரிக்க. (c.)

தனிக்க, inf. [adverbially.] Alone, apart, &c., as தனிப்பெற.

தனித்தஇடம், s. A solitary place.

தனித்தகுடி, s. A solitary family. 2. A destitute, forlorn or helpless family.

தனித்தாள், s. (a contraction of தனித்த and ஆள்.) A single person, as a bachelor, widow, &c. 2. A helpless, forlorn, destitute person; also தனியாள்.

தனித்திருக்க, inf. (as தனிக்க.) To be alone; to be single, unmarried; to be alone, as a recluse.

தனித்துக்கொள்ள, inf. [vul. prop. தனித்திருக்க.] To be left, forsaken, detached, to be alone—by banishment or otherwise—to be helpless, forlorn.

தனித்துப்பேச, inf. To speak privately to any one.

தனித்துப்போக, inf. To go alone, to go by one's self.

தனிசு, s. [vul. used with கடன்.] Debt, as கடன்தனிசு.

*தனிட்டை, s. The twenty-third lunar asterism, அவிட்டநாள். (Sa. Dhanishtha.)

*தனிதம், s. A roaring sound, முழக்கம். W. p. 449. Dhwanita.

தனிமை, s. Singleness, loneness, solitude, ஒன்றி. 2. Seclusion, retirement, ஒதுக்கம். 3. Forlorn state, helplessness, உதவியின்மை. 4. Incomparableness, உவமையின்மை. (c.)

தனிமையாற்றல், v. noun. One of the eight qualities of the merchant, வணிகரெண்குணத்தொன்று.

*தனியா, s. [improp. for தனிகா.] Coriander seed. (Tel. usage.)

தனிவலிப்பெருமாள், s. The குப்பைமேனி plant. (R.)

தனு, s. [prov.] (probably a change of தொனு.) Bellowing of a bull, முக்காரம். 2. Stress of voice, accent, emphasis in speaking, ஊன்றிப்பேசுகை.

*தனு, s. A bow, வில். 2. Sagittarius of the Zodiac, தனுவிராசி. W. p. 437. Dhanu. 3. Smallness, minuteness, delicateness, subtleness, சிறுமை. 4. Body, either of creatures or as assumed by the deity. உடல். (Sa. Danu.) 5. Daughter of Daksha, wife of Casyapa, and mother of the Danavas, தக்கன்மகள். (p.)

தனுக்கோடி—தனுஷ்கோடி, s. A sacred bay at Ramisseram, said to have been opened by Rama with his bow, சேதுதீர்த்தம். (c.)

தனுசாத்திரம், s. The art of using the bow or weapons in general.

தனுசாரி, s. A name of Indra, இந்திரன். 2. (also தானவாரி.) Vishnu, திருமால்.

தனுரசம், s. Perspiration, வியர்வு.

தனுரணம்—தனுவிரணம், s. A pimple, சினைப்பு.

தனுவித்தை—தனுர்வித்தை, s. The art or practice of archery.

தனுவேதம்—தனுர்வேதம், s. Archery, as தனுசாஸ்திரம்.

தனுவிருட்சம்—தனுவிருக்கம், s. The ஆச்சா tree. See தனவனு.

*தனுசர், s. (sing. தனுசன், also written தானவன்.) Danavas, Asuras, அசுரர்.

*தனுசன், s. (fem. தனுசை.) A son, குமாரன்; [ex தனு, body et சம், one born.] 2. See தனுசர்.

தனுசாரி, s. See தனு.

*தனுசு, s. A bow, வில். 2. Sagittarius of the Zodiac—as தனு. (Sa. Dhanus.)

*தனுத்திரம், s. A coat of mail, கவசம்.

*தனுர்வாதம், s. A contraction of the muscles, ஓர்வாயு.

*தனேசன், s. Kuvêra, குபேரன்; [ex தனம், wealth.]

*தனையன், s. (also தனயன்.) A son, குமாரன். W. p. 364. Tanaya.

*தனையை—தினையள், s. A daughter, மகள்.

தனை, s. A particle used as an affix to express the number or quantity—thus, அத்தனை, that much; இத்தனை, this much, so many, so far, so much, so great; எத்தனை, how many? how much? how great?

தனையும், (affixed to a future participle.) So long as, thus சாகுந்தனையும், till death; போகுந்தனையும், till he go.—Note. தனீறும், is sometimes used for தனையும், but is vulgar.

தன், (oblique of தான்.) His, hers, its. 2. A poetic expletive, commonly annexed to nouns of the 3rd person, but sometimes to the other persons, அசைச்சொல்—as மரத்தனைக்கண்டேன், I saw the tree.

தனது, (sing. gen. of தான்.) His, hers, its.

தன்காரியம், s. One's pursuits, self-interest.

தன்காரியப்புலி. One who cares only for himself, a self-interested person.

தன்காலம், s. Its own appropriate season, time of a person's power, or prosperity; or the period when a thing prevails, as rain in the monsoon, தன்னுடையகாலம்.

தன்குலம்வெட்டி, appel. n. Destroyer of his own family, தனதுவமிசத்தைக்கெடுக்கிறவன். 2. (fig. as a riddle.) The handle of an axe, கோடரிக்காம்பு.

தன்கொண்டி, s. Self-will, one's pleasure, without consulting subordinates.

தன்படுவன் s. [prov.] Natural formation, as of salt, in distinction from artificial, விளையுப்பு.

தன்பாடு, v. noun. Attending to one's own business, going on in one's own way.

தன்பாட்டிலேபோகிறான். He is going on quietly, without interfering with others.

தன்பால், s. (com. தனிப்பால்.) Pure milk. 2. See பால்.

தன்பிடி, s. One's opinion, religious or other. 2. Religious confidence.

தன்பொருட்டனுமானம், s. [in log.] Inference from experience or observation applied to one's own benefit, as opposed to பிறர்பொருட்டனுமானம்.

தன்பொறுப்பு, v. noun. Personal responsibility.

தன்மயம், s. His own nature, தற்சுபாவம். (p.)

தன்மனம், s. Uncontrolled, at liberty. 2. Self-will—as தன்கொண்டி.

தன்மூப்பு, v. noun. Youthful arrogance, forwardness, self-will, இறுமாப்பு. 2. His own master, தன்னிஷ்டம்.

தன்மூப்பானவன் — தன்மூப்பாய்நடக்கிறவன், appel. n. An assuming, arrogant youth; an upstart. 2. One who acts on his own responsibility.

தன்மூப்புச்செலுத்த — தன்மூப்புப்பண்ண, inf. To act on one's own responsibility.

தன்மேம்பாடு, v. noun. One's abilities, greatness, influence, தன்பெருமை.

தன்மேம்பாட்டுரை, s. [a figure in rhetoric.] Declaration of one's greatness, abilities, &c., ஓரலங்காரம், அஃதுதற்புகழ்ச்சி.

தன்வசம், s. In one's power. (c.)

தன்வசப்படுத்த, inf. To take under charge, to appropriate a thing to one's own use.

தன்வயத்தனாதல், *v. noun.* Independence or self-existence—one of the eight attributes of God, கடவுளெண்குணத்தொன்று. (*p.*)

தன்வழி, *s.* One's parentage, or ancestry, one's relations, தன்மரபோர்.

தன்வழிப்படுத்த, *inf.* To bring to one's party, interest or religion; to proselyte. 2. To connect another family with one's own, by marriage.

தன்விருத்தி, *s.* One's own employment. 2. One's daily occupation.

தன்வினை, *s.* One's innate depravity, தன்னிருதயத்தின்கேடு. 2. Evil actions as resulting in future sufferings, ஊழ்வினை. 3. [*in gram.*] The intransitive or neuter verb, as பிறவினை is active.

தன்வினைதன்னைச்சுடும். One's own devices prove his ruin.

தன்வேதனை, *s.* Self-experience, self-perception, self-knowledge, சுயபரிட்சை. (*p.*)

தன்வேதனைக்காட்சி, *s.* Perception by experience, &c. See காட்சி.

தன்னடக்கம், *s.* Modesty, in regard to learning, wealth, &c. 2. Self-restraint, self-denial. 3. Self-possession, self-command. 4. Self-abasement.

தன்னயம், *s.* Self-interest, one's own benefit, profit; self-indulgence. 2. Selfishness.

தன்னரசு, *s.* Want of just administration of government, a state of anarchy.

தன்னரசுநாடு, *s.* A country whose government is democratic or republican.

தன்னரண்காத்தல், *v. noun.* One of the eight kinds of victory. See வெற்றி.

தன்னவன், *s.* One nearly related or of the same party.

தன்னறிவு, *s.* Consciousness, self-knowledge, சுயவறிவு. 2. Sobriety, recollection, self-possession, தன்னினைவு. 3. One's own knowledge, தனக்குரியவுணர்ச்சி.

தன்னாணை, *s.* An oath upon one's self, person, life or soul.

தன்னாரவாரம், *s.* One's own pleasure, free choice, preference.

தன்னாலேதான்கெட, *inf.* To be ruined by one's own folly.

தன்னிச்சை — தன்னிஷ்டம், *s.* Free will, one's own choice, சுவேச்சை. 2. Self-will, independence, தன்கொண்டி. 3. Freedom, liberation from slavery, ஆளப்படாமை.

தன்னிளமீட்டல், *v. noun.* One of the eight kinds of victory. See வெற்றி.

தன்னிலை, *s.* One's proper standing, nature, or state, சுபாவநிலை. 2. Equilibrium or proper state of the numerous parts of the system, சமநுபரிநிறகை.

தன்னிறமாக்கி, *appel. n.* A kind of hornet or wasp that changes a grub to its own likeness.

தன்னிறம், *s.* The color of red ochre, காவி.

தன்னீங்கல், *v. noun.* Liberty. 2. Independence, தன்னிஷ்டம். 3. Unconnectedness, சேராமை.

தன்னுடையவன், *appel. n.* A client, a friend, a relation.

தன்னெடுப்பு, *v. noun.* [*prov.*] Arrogance, self-importance, அகந்தை. 2. Determined perseverance in a thing undertaken for credit's sake, தன்முயற்சி.

தன்னைக்கட்ட, *inf.* [*vul.* தன்னக்கட்ட.] To be just sufficient for one's support. 2. *v. a.* To defend one's self by incantations, while going in the dark, in danger of wild beasts, &c. See கட்டு, *v.*

செலவுக்குத்தன்னைக்கட்டும். It will be just sufficient for his expenses.

தன்னைக்கட்டிநடக்கிறவன், *appel. n.* A frugal person, one who keeps within his income.

தன்னைத்தாழ்த்த, *inf.* To humble or to abase one's self.

தன்னைப்புகழ்தல், *v. noun.* Praising one's self.

தன்னைப்புகழ்தலுந்தகும்புலவோர்க்கே. It becomes a poet to praise himself.

தன்னையறிதல், *v. noun.* A girl becoming marriageable, பருவம்வாய்ப்புறல். 2. Knowing one's self; i. e. knowing the power of the soul—as the ascetic, ஆன்மநிலையையுணர்தல்.

தன்னையறியாதசன்னதமில்லை. There is no want of self-possession; spoken of one supposed to be possessed by an evil spirit, yet retaining his cunning.

தன்னையறிந்தவன்தலைவனையறிவான். He who knows himself will know God.

தன்னைமறந்தவன், *appel. n.* A self-renouncing person, as an ascetic or a ஞானி.

தன்னைமறுத்தல், *v. noun.* Self-denial.

தன்னைவாட்டுதல் — தன்னையொறுத்தல், *v. noun.* Mortifying one's self.

தன்னைவியக்க, *inf.* To admire one's self.

தன்னொழுக்கம், *s.* Conduct suitable to one's age, rank, caste, religion, தன்னிலைக்குத்தக்கநடை.

தன்கு, *s.* Jollity, mirth, களிப்பு. (சது.)

*தன்மணி, *s.* A charitable person, தருமஞ்செய்வோன். (*Sa. Dharmminee.*)

உலகதன்மணி, *s.* One accustomed to alms-giving.

சிவதன்மணி, *s.* One religiously charitable.

*தன்மம், *s.* Justice, equity, நீதி. 2. Virtue, merit, நன்மை. 3. Charity, அறம். See தருமம்.

தன்மப்பயிர், *s.* A great benefactor; (*lit.*) a plant producing charity.

தன்மராசா, *s.* A name of Yud'his-thi'ra. 2. (*R.*) A tree, பாலைமரம், Mimusops, *L.*

தன்மன், *s.* Yama, இயமன். See தருமன்.

தன்மன், *s.* Long-pepper, திப்பிலி. (*R.*) 2. See தன்மம்.

*தன்மாத்திகாயம், *s.* A suitable body assumed by the soul at death, for future joys or sufferings, புண்ணியபாவசரீரம்; [*ex* தன்மம், *et* அத்தி and காயம்.]

*தன்மாத்திரை, *s.* The archetypes or subtile rudiments of elementary matter, the five elements being resolved into the rudimentary elements of the five senses, as earth, into that of smell, &c., பூதங்களினுறி. W. p. 365. TANMATRA. 2. First principles or grounds of knowledge; or perception by means of the senses, ஐம்பொறிகளின்மூலம்—as இரசதன்மாத்திரை, உருவதன்மாத்திரை, கந்ததன்மாத்திரை, சத்ததன்மாத்திரை, பரிசதன்மாத்திரை. (சிவ. சித்.)

தன்மானி, *s.* Misery, poverty, எளிமை. (*R.*)

தன்மை, *s.* Nature, essence, property, inherent, or abstract quality, சுபாவம். 2. State, condition, position, circumstances, நிலவரம். 3. Manner, method, kind, character, description, order, மாதிரி. 4. Temper, spirit, disposition, principle, constitution, குணம். 5. Decorum, decency, மரியாதை. 6. Consistence, temperament, இயல்பு. (*c.*) 7. One's self, himself, itself, self, personality, identity, சுயம். 8. [*in gram.*] The first person, மூவிடத்தொன்று. 9. (*in rhet.*) Description, the first of the thirty-five figures embracing four varieties—as குணத்தன்மை, சாதித்தன்மை, தொழிற்றன்மை, பொருட்டன்மை.

*தன்வந்தரி, *s.* (*also* தன்வந்திரி.) A famous physician of the gods, produced at the churning of the sea of milk, தேவர்மருத்துவன். 2. Siva, சிவன். 3. Sun, சூரியன். W. p. 438. DHANVANTARI.

தன்னந்தனி, *s.* (*an intensitive of* தனி. *prov.* தட்டத்தனி.) Quite alone, in absolute solitude, மிகுதனி. (*c.*)

என்னைத் தன்னந்தனியே விட்டுப்போனான். He departed this life, leaving me in despair.

தன்னமை, *s.* [*prov.*] (*Com.* தனது.) Acquaintance, friendship, amity, familiarity, சினேகம். 2. Connection, party, &c., இணக்கம்.

*தன்னம், *s.* Smallness, minuteness, as சன்னம், சிறுமை. (See தனு.) 2. A calf, பசுவின்கன்று. 3. A fawn, மான்கன்று.

தன்னமதி. The crescent moon. (*p.*)

*தன்னியத்துவம், *s.* The possession of riches, செல்வமுடைமை; [*ex* தனம், wealth.]

*தன்னியம்—ஸ்தன்னியம், *s.* Milk, முலைப்பால்; [*ex* தனம், woman's breast.]

*தன்னியன், *s.* One free from the effects of தீவினை, a virtuous man, தீவினையினீங்கினோன். 2. A wealthy man, தனவான்.

*தன்னியாசி—தன்யாசி, *s.* A tune, ஓரிராகம்.

தன்னினி, *s.* A tree, the வேங்கைமரம், Pterocarpus, *L.*

தன்னு, கிறேன், தன்னினேன், வேன், தன்ன, *v. a.* [*prov.*] To take from a heap, &c., by little and little, to unlade a vessel a little at a time, கொஞ்சங்கொஞ்சமாகக்கொண்டுபோக. 2. To move a vessel by degrees, தோணிதள்ள; [*ex* தள்ளல்.]

தன்னை, *s.* Mother or (*by contraction* of தன் and அன்னை) any one's own mother, தாய். 2. [*ex* தன் *et* ஐ.] An elder sister, தமக்கை. (திவா.) 3. An elder brother, தமையன். (*p.*)

தா

தா. A syllabic letter of த் and ஆ combined.

தா, s. Hostility, பகை. 2. Pain, distress, affection, வருத்தம். 3. Decay, destruction, கேடு. 4. Strength, force, வலி. 5. Fault, defect, blemish, குற்றம். 6. Attacking, jumping at, towards, upon, over, &c., தாண்டுகை. (p.)

தாவிலை. It is faultless, uninjured, not defective, unobjectionable; [ex இலை= இல்லை.]

தா, தருகிறேன், தந்தேன், தருவேன், தர, v. a. To give as equals, ஒப்போனுக்குத்தா. 2. To give, in general not to a third person, கொடுக்க. 3. To grant, to bestow, அருள. 4. To yield, produce, bring forth, கனி கொடுக்க. 5. To apportion, distribute, allot, assign, appropriate, பகிர்ந்துகொடுக்க. 6. To convey a meaning, to mean, as words, பயன் தா. 7. To create, make; to form, construct, படைக்க. 8. To beget, generate, procreate, மகவைப்பெற. 9. To produce, as an author, [illegible] 10. To impart, to furnish, to supply, சேகரிக்க. 11. To emit, to give out, ஊற.—*Note.* தரல், in poetry is, as an auxiliary, joined to the root of other verbs—as புறந்தரல், turning the back before an enemy, &c., எழுதரல், for எழுந்திருத்தல், rising up, போதரல், for போதல், going; பின் றரல் for பின்றல், withdrawing, retiring.

தருகிறவன்ஒருவன்இருக்கிறான். There is one providing God.

தந்தவன், *appel. n.* A father. (p.)

தருமதி, s. [prov] A due, in money, goods, &c., commonly a balance or remainder.

*தாகம், s. Thirst, நீர்வேட்கை. 2. Desire, eagerness, appetency, ஆசை. (c.) 3. One of the punishments of the soul, உயிர்வேதனையிலொன்று. (*Sa. Dàha.*)

அதிலேஅவனுக்குத்தாகமில்லை. He has no desire for it.

இவன்பணத்தின்மேல்தாகமாயிருக்கிறான். He is greedy after money.

தாகசாந்தி, s. Allaying thirst, விடாய் தணிக்கை.

தாகசுரம், s. (*St.*) Fever attended with great thirst, inflammatory fever, தாபசுரம்.

தாகந்தீர்க்க—தாகந்தணிக்க, *inf.* To allay or slake thirst.

தாகப்புளி, s. An acid drink to quench thirst, விடாய்தணிக்கும்புளிப்புள்ளநீர். 2. An acid preparation to be eaten for thirst, தவனப்புளி.

தாகமெடுக்க, *inf.* To become thirsty, to thirst.

பசிதாகம், s. Hunger and thirst.

தாகி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To be thirsty, to thirst, நீர்வேட்கைகொள்ள. (*Colloq.*)

தாகித்துவிழுந்தான். He became faint from thirst.

தாக்கணங்கு, s. Lukshmi; (*lit.*) whose beauty excels all others, இலட்சுமி; [ex தாக்கு, et அணங்கு, beauty.] (p.)

தாக்கணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. [as தார்க்கணிக்க.] To demonstrate, to prove by evidence, திருட்டாந்தப்படுத்த.

அதுஉண்டென்றுதாக்கணிப்பேன். I will prove it.

தாக்கணித்துக்கொடுக்க—தாக்கணித்துப் பேச, *inf.* To prove a thing; to demonstrate a proposition.

தாக்கம், s. [*prov.*] Reaction, counteraction, எதிர்தாக்குகை. 2. Force, strength, power—as of a blow, medicine, the sun, fire, reflected impetus or momentum, வேகம். 3. Pressure, onerousness, heaviness, கனப்பு. 4. Preponderance, அதிபாரம்; [ex தாக்கு, v.]

தாக்கமாயிருக்க, *inf.* To throb, as a boil.

பசித்தாக்கம், s. Gnawing of hunger.

தாக்கல், s. (*Arab.*) Inserting a sum of money in an account. 2. The act of removing one to another corps. 3. A reference—as தகவல். (c.)

தாக்கல்செய்தாயா. Did you take it in your account? [illegible]

தாக்கல்பண்ண, *inf.* To enlist, to register.

தாக்கலில்லாதபேச்சு, s. A bare statement.

தாக்காட்டு, கிறேன், தாக்காட்டினேன், வேன், தாக்காட்ட, v. a. [*prov.*] To allure an animal, as by offering food. 2. To divert a child by objects, real or pretended, பராக்குக்காட்ட. 3. To put off from day to day, to tantalize, ஏமாற்ற. (c.) 4. To help, afford relief to the needy, உதவிசெய்ய.

நான்வருமட்டுந்தாக்காட்டிக்கொண்டிரு. Better detain him till I come.

அவன்என்னைத்தாக்காட்டிக்கொண்டுவருகிறான். He is tantalizing me.

தாக்கீது, s. (*Hind.*) Command, strict order, கட்டளைப்பத்திரம். (c.)

தாக்கு, s. Beating, percussion, concussion, dash, blow, a fight, clashing, dashing, twitching, impinging—as steam, or a blast of wind, &c., அடி. 2. A rest, prop, support, சார்வு. 3. Attack, assault, invasion, போர். 4. Preponderance, அதிபாரம். 5. Reaction, rebound, reflection, எதிர்தாக்குகை. 6. A rice field, நெல்வயல். 7. *adj.* (*with person.*) Corpulency, புஷ்டி. 8. Place, இடம். 9. Vault, நிலவறை. 10. Application, சாதிப்பு. 11. Purchase of a lever, impetus, வேகம். 12. [*in arith.*] Multiplication, குணனம். 13. Affecting one's mind, உள்ளத்திற்றைக்கை.

ஆள்தாக்கிலேதாழ்ச்சியில்லை. He is robust.

தாக்காயிருக்க, *inf.* To have a grave look. 2. To be competent.

தாக்கற்று, [*adverbially.*] Independently.

தாக்காய்ச்சொல்ல, *inf.* To speak with authority. (*Old Dic.*)

தாக்குப்பொறுத்தவன், *appel. n.* A robust person, able to carry a load, &c. 2. One with the charge of a large family. 3. One able to afford expenses. (c.)

மேட்டுத்தாக்கு, s. A rising ground.

பள்ளத்தாக்கு, s. A valley. 2. Low places in fields, lands adjacent to tanks and easily flooded. (c.)

தாக்கு, கிறேன், தாக்கினேன், வேன், தாக்க, v. n. and v. a. To strike, beat, hit, dash against, beat down; to jerk, to twitch, அடிக்க. 2. To butt, as beasts, முட்ட. 3. To press heavily, as a burden, a responsibility, an expense, கனக்க. 4. To attack, assault, aggress; to butt, அழுத்த. 5. [*in arith.*] To multiply, பெருக்க. 6. To interfere, தலையிட்டுக்கொள்ள. 7. To preponderate, out-weigh, அதிபாரங்கொள்ள. 8. To influence an actor; to affect one's interests, health, &c., தைக்க. 9. To come in contact with, to collide, to strike as a vessel against a rock or another vessel, மோத. 10. To be severe, in remonstrance or reproof, as through some pique or grudge, கடுமையாயிருக்க. 11. To rest or depend on, பற்றியிருக்க. 12. To involve, as a cause, or event its consequences, பலிக்க. 13. To touch, strike, or come in contact with, as smoke, steam, heat, flame, sunshine; to burst on the sight, as lightning; to beat against, to penetrate as a sting. 14. To [illegible] cold, motion, force, sound, a passing ball, &c., பாவித்தாவ. 15. To react, rebound, அதைக்க. 16. To transfer the loss or gain of one account to another, to increase the profits on an article, to make up for loss in others, &c., சரிக்கட்ட. 17. To spring, as an animal, பாய. 18. To avenge, to revenge, பழிவாங்க. 19. To fall heavily on one, as charges, expenses, profits, &c., on goods coming upon the last buyer, சுமத்த. 20. To hobble, to limp, நெளிக்க.—*Note. Most of the meanings are used in cant.*

மனதிலேதாக்கவில்லை. This has not reached the mind.

பழையகோபமெல்லாம்வைத்துத்தாக்குகிறார். Keeping in mind all his old grudges, he is now revenging himself.

சரீரத்திலேதாக்கும். It will have lasting effects on the body.

செலவிலேதாக்கும். Expenses will increase. 2. The expense will be heavy.

நிறையத்தாக்கிவிட்டான். He is quite intoxicated; (*lit.*) full of liquor.

தாங்கல், s. A natural reservoir, a pond, குளம். 2. See under தாங்கு.

தாங்கு, கிறேன், தாங்கினேன், வேன், தாங்க, v. a. To bear up, to support, தாபரிக்க. 2. To endure, to sustain, சகிக்க. 3. To press heavily, அழுத்த. 4. To ward off, to avert, விலக்க. 5. To carry, சுமக்க. 6. To maintain, sustain by food, ஆதரிக்க. 7. To protect, to guard, காக்க. 8. To pole a boat, தோணி தள்ள. 9. To treat tenderly, with great kindness, as a child or a friend, பராமரிக்க. 10. To solicit cringingly, கெஞ்ச. 11. To press against, to strike, to graze a boil so as to cause pain, ஊன்ற. 12. To maintain, to have—as a disposition, சாதிக்க. 13. To tolerate, suffer, permit, இடங்கொடுக்க. 14. To wear, to be invested with, தரிக்க. 15. To assist one in rising, in raising or carrying a burden, or climbing a tree, தூக்க. 16. To bear with a light hand, as when beating, ploughing, &c., கைதாங்க. 17. To halt in speaking or walking, நிறுத்த. (c.)

இந்தப்போசனம்சீவனத்துக்குத்தாங்காது. This food will not support life.

காற்றுக்குத்தாங்காது. It will not bear the wind.

என்னாலேஅவ்வளவுகொடுக்கத்தாங்காது. I cannot afford to give so much.

அவன்அடிதாங்குவான். He can endure blows.

அவனுக்குச்சாப்பாடுகொடுத்துத்தாங்காது. No one can afford to feed him.

காலைத்தாங்கித்தாங்கிவைக்கிறது. The animal limps in walking.

அவனையேதாங்கிக்கொண்டுதிரிகிறன். He pleases him, to gain his own purpose.

அவன்கையைத்தாங்கு. Ward off his hand, his blow, &c.

மறுமொழிசொல்லித்தாங்காது. There is no end of answering such questions. [prov.]

சரீரந்தாங்காது. The constitution will not bear it.

தாங்கித்தாங்கிப்பேசுகிறன். He speaks haltingly.

மாடுகால்தாங்கித்தாங்கிவைக்கிறது. The bullock hobbles (by pain in the hoof).

தாங்கத்தாங்கத்தலையிலேறு. To become the more arrogant, the more kindness is shown. 2. To be supercilious on account of humble applications.

மலையை மலை தாங்கவேண்டும் மண்ணாங்கட்டிதாங்குமா. One mountain supports another, can a clod of earth do it?

விஞ்சையிற்றுங்கினான் சடையன் வெண்ணெயிற் றஞ்சமென்றோர்களைத்தாங்குந்தன்மைபோல். (Nalan) [illegible] (the mountain) [illegible] Sadaiyan of Tiruvennamanur supported those who came to him for refuge. (இராம.)

தாங்கமாட்டான். One unable to endure.

தாங்குகோல், s. [prov.] A boat-man's pole, தோணிதாங்குகோல்.

தாங்கிக்கொண்டிருக்க, inf. To bear in mind, to brook. 2. To sustain sickness, adversity, &c.

தாங்கிக்கொண்டுபோக, inf. To carry in the arms. 2. To receive and treat very civilly or politely. 3, To escort or conduct, as a lady by the arm. 4. To solicit very urgently.

தாங்கிக்கொள்ள, inf. To bear. 2. To ward off, to screen, &c. 3. To maintain, to support. 4. To endure, சகிக்க.

தாங்கித்தடுக்கிட, inf. To treat very tenderly; (lit.) to bear one up and spread a mat for him. (c.)

தாங்கிவெட்ட, inf. To cut or hew lightly.

கைதாங்கியடிக்க, inf. To beat or strike lightly.

கைதாங்கியுழ, inf. To plough lightly.

தாங்கல், v. noun. Bearing, supporting, சுமத்தல். 2. A grievance, விசனப்படுகை. 3. Displeasure, regret, umbrage, மனக்குறை. (c.)

அவர் உன்மேலே மெத்தவுந்தாங்கலாயிருக்கிறார். He is much grieved with you.

மனத்தாங்கல், v. noun. Want of cordiality.

தாங்கல்வருத்துவிக்க, inf. To offend one.

தாங்கி, appel. n. A support, prop, defence, ஆதாரம், as கைதாங்கி, சுமைதாங்கி, நீத்தாங்கி, மண்டாங்கி, which see. 2. A ferrule, பூண். 3. A golden ferrule put on the end of an elephant's tusk, கிம்புரி. 4. A fastening for an ornament, பணிப்பூட்டு.

குடிதாங்கி. One who supports his family or others.

தாங்கு, v. noun. [prov.] Bearing, supporting, as தாங்கல். 2. A support, as தாங்கி. 3. A staff of pike, ஈட்டிக்காம்பு.

*தாசநந்தினி, s. (also சத்தியவதி.) The mother of Vyasa, வியாசன்தாய்.

*தாசரதி, s. Rama, இராமன்.

தாசரி, s. [vul.] A Vaishnuva mendicant, as தாசன், 3.

தாசரிப்பாம்பு, s. A large snake, a rock-snake, commonly brought by தாசரி.

தாசனுப்பொடி, s. [prop. தசனப்பொடி.] A dentifrice. (c.)

*தாசன், s. (plu. தாசர்.) A servant, ஊழியக்காரன். 2. A slave, அடிமை. 3. A religionist of the Vaishnuva sect, as தாதன். 4. A fisherman, வலையன். 5. One of the fourth caste, சூத்திரன். W. p. 407. DASA.

அடியேன்தாசன். I am your servant. (an address of a disciple to a guru.)

தாசர்தங்குலத்துக்கதிபதியளித்ததையல்.........The female (Parimalacandi) reared by a chief of the fishermen. (பார.)

தாசத்துவம், s. Servitude, bondage, அடிமை.

தாசநம்பி, s. As சாத்தாதவன்.

தாசபாலனம், s. Preservation from servitude.

[illegible] A servant of deity, a minister.

விஷ்ணுதாசன், s. A devotee of Vishnu.

தாசா, s. (Hind.) Animation, vivacity, &c.

*தாசி, s. A dancing girl, being the slave of the temple, devoted to the god from her youth, and commonly of loose character, நாடகக்கணிகை; properly தேவதாசி. (c.) 2. A maid servant, வேலைக்காரி. 3. A maid slave, அடிமைப்பெண். 4. The second lunar asterism, பரணிநாள். 5. A species of Henna shrub with sky blue flowers, ஓர்மருதோன்றி.

*தாசியம், s. Slavery—as தாசத்துவம்.

தாசு, s. (for.) A brass plate to strike the hour, நாழிகைவட்டில். 2. An hour, இரண்டரைநாழிகைகொண்டநேரம். 3. Conical piece in the play of draughts, தாயக்கட்டை.

*தாசு, s. An affix to proper names, implying devotedness, as இராமதாசு, worshipper of Rama.

*தாசேரகம், s. (a change of Sa. Dasera.) A camel or dromedary, ஒட்டகம்.

*தாசோகம், s. Profession of homage, by the Vaishnuvas, as your servant, அடியேன்.

தாச்சி, s. [vul.] See தாய்ச்சி.

*தாடகை, s. [in mythol.] A Rakshasa female, a savage, இராக்கி. 2. (fig.) A bold, immodest woman, மானங்கெட்டவள்.

தாடகைத்தனம், s. Immodesty in a female. (c.)

தாடகைவதைப்படலம், s. A chapter in Ramayanam.

*தாடங்கம், s. A female ear-ornament. (See தோடு.) 2. Another kind of ornament, காதணி. W. p. 371. TAT'ANKA.

*தாடனம், s. Patting, tapping, தட்டுதல். 2. Whipping, அடித்தல். W. p. 371. TAD'ANA.

தாடனஞ்செய்ய, inf. To beat, to whip.

பாததாடனம், s, Kicking with the foot, உதைத்தல்.

தாடா, [vul. imperative. fem. தாடி.] Give; used by superiors to inferiors and among equals; [ex தா et அடா.]

தாடாண்மை, s. [prov.] Energy, indefatigable application, and perseverance, as தாளாண்மை. (p.)

தாடாளன், s. A person of great energy and application, முயற்சியுள்ளோன். (p.)

தாடாற்றி, s. [prov.] Mitigation, relaxation of intensity or severity; quieting, appeasing, ஆற்றுதல். (p.)

தாடாற்றிபண்ண, inf. To relax, to mitigate, to relieve, to pacify, ஆற்ற.

*தாடி, s. (a contraction of Sa. Dadhika.) Beard, மோவாய்மயிர். 2. The chin, மோவாய். 3. Dewlap, அலைதாடி. 4. Hanging excrescence under a cock's neck, சேவற்கழுத்திற்றெங்குவது. (c)

தாடியாட்டிப்பார்க்க. To mind no one, to encounter an enemy fearlessly, to brave opposition; (lit.) to shake the beard.

தாடிக்காரன், s. One with a long beard.

தாடிமுளைத்தல், v. noun. Sprouting of the beard.

தாடியன், s. [prov.] An animal with a dewlap. 2. As தாடிக்காரன்.

தாடிவளர்த்தல், v. noun. Letting the beard grow—as some religionists, or as a husband during his wife's pregnancy.

நீண்டதாடி—கொடுங்கைத்தாடி, s. A long beard.

குஞ்சுத்தாடி, s. [prov.] A short beard.

*தாடிமஞ்சம், s. A kind of creeping plant. See சத்திக்கொடி.

*தாடிமம், s. A kind of pomegranate bearing full flowers but no fruit, தாதுமாதளை. W. p. 604. DAD'IMA.

தாடை, s. Mandibles, jaws, chops, cheeks, கன்னம். Compare தவடை.

தாடையிலேபோடு. Give him a blow on the jaws.

தாடையிலேபோட்டுக்கொள்ள. To strike on the cheeks with both hands, in grief.

தாடையெலும்பு, s. The jaw-bone.

தாட்கோரை, s. A long kind of grass for mats, ஓர்புல்; [ex தாள்.]

*தாட்சணம்—தாட்சணியம்—தாட்சிணை—தாட்சண்ணியம், s. Mercy, benignity, compassion, இரக்கம். (c.) See தாட்சிண்ணியம்.

*தாட்சம், s. St. for தக்கம், which see.

*தாட்சம், s. [prop. திராட்சம்.] The vine, also used for grapes, கொடிமுந்திரிகை.

*தாட்சிணியம்—தாட்சிணை—தாட்சிண்ணியம்—தாக்ஷிணியம்—தாக்ஷிணை—தாக்ஷிண்ணியம், s. Kindness, courtesy, benignity, kind feelings toward a friend, மரியாதை. W. p. 404. DAKSHIN'YA. 2. Outward politeness, உபசாரம். 3. Partiality, கண்ணோட்டம். 4. Mercifulness, compassion, இரக்கம்.

தாட்சிணியம்பார்க்க, inf. To regard persons kindly; to exercise mercy.

தாட்சிணியவார்த்தை, s. Kind, civil or obliging discourse.

தாட்டன், s. (fem. தாட்டி.) A fellow, a certain one, as தானன். (Disrespectfully.) 2. [prov.] A person of fancied importance, பெருமைக்காரன். (Not used in direct address.) 3. A he-monkey, தலைமைப்பட்ட ஆண்குரங்கு.

*தாட்டாந்தம், s. [in log.] A proposition, or doctrine, to be proved, ascertained, determined (a correllative of திருட்டாந்தம்); திருஷ்டாந்தத்தைக்கொண்டது.

தாட்டான், s. A chief, a master, தலைவன். 2. [prov.] A husband, கணவன்.

தாட்டி, s. [loc. vul.] Times, number; for once, twice, &c., தடவை.

நாலுதாட்டி. Four times.

*தாட்டி, s. (a change of தாட்டிகம்.) Cleverness, skill, சாமர்த்தியம். 2. Without impediment; having fluency in speaking or reading, வாசகத்தாட்டி. 3. [prov.] A clever woman of frugality, address, management, கெட்டிக்காரி. 4. A masculine woman, ஆண்மாரி. (See தாட்டன்.) 5. (Sa. Dha'ti.) Confronting an enemy, தைரியம்.

*தாட்டிகம்—தாஷ்டிகம்—தாஷ்டீகம், s. Strength, power, authority, பலம். 2. Insolence, pride, superciliousness, haughtiness, இறுமாப்பு. (Sa. Dha'shtika.) (c.)

அவன்தாஷ்டிகமுடையவன். He is a proud man.

தாஷ்டிகமாய்ப்பேச, inf. To speak with courage.

தாஷ்டிகவான், s. A powerful, influential man. 2. An eloquent person, வாய்ச்சாலகன்.

தாட்டு, கிறேன், தாட்டினேன், வேன், தாட்ட, v. a. [in combin.] To throw one down, விழத்தாட்ட. (Beschi.) 2. To remove, to transplace, கடத்த. (c.) 3. To confute, மறுக்க. (R.)

தாட்டுப்பூட்டெனல், v. noun. Rebuking, being angry, கோபித்தல். (c.)

தாட்டுப்பூட்டென்றுகுதிக்கிறான். He is now enraged.

தாட்டோட்டம் — தாட்டோட்டு, s. Trick, fraud, deception, எத்து. (c.)

தாட்டோட்டக்காரன், s. One who deceives with vain promises.

தாட்டோட்டக்காரனுக்குத்தயிருஞ்சோறும் — விசுவாசக்காரனுக்குவெந்நீரும்பருக்கையும். A vain boaster gets rice with curds; an upright man, rice with warm water; i. e. flatterers are favored.

தாட்பணை, s. A gallinaceous fowl, கோழி. (p.)

தாட்பாள்—தாழ்ப்பாள், s. (com. தாப்பாள்.) Bolt, bar, பூட்டு. 2. Bar of a pair of stocks, தொழுவின்தாட்பாள். 3. Door of a rat trap, எலிப்பொறியின்தாழ்.

தாட்பாள்போட, inf. To bolt a door, &c.

தாட்பாட்கட்டை, s. A bar of wood.

தாட்பாட்கட்டைமரம், s. A catch of wood to receive a bolt.

தாணி, s. [prop. தான்றி.] A large fruit tree. See தான்றிமரம்.

தாணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, [vul. தான்றிக்க.] v. a. To ram down, to make firm, as earth round a tree; to hammer down, to fasten, அமுக்க. 2. To charge a gun, கெட்டிக்க. 3. To ply hard, as in churning, விரைவிற்கடைய. 4. To confirm, to strengthen, உறுதிப்படுத்த. 5. (fig.) To accuse falsely and skilfully, so as to succeed, குற்றமேற்ற. (c.)

தாணித்துவைக்க, inf. To load a gun and keep it ready.

தாணிப்பு—தாணித்தல், v. noun. Ramming down, making firm, &c., as தாணி, v.

*தாணு—ஸ்தாணு, s. Firm or fixed state, stability, நிலைபேறு. 2. Shelter, புகலிடம். (c.) 3. Post, pillar, தூண். 4. Mountain, hill, மலை. 5. Siva, சிவன்.

இருக்கிறதற்குநல்லதாணு. This is a good place for shelter, resort, &c.

தாணுவாயிருக்கிறவன். A patron, protector.

தாணையம், s. (Hind.) A garrison, கோட்டைக்குள்ளிருக்கும்படை. (c.)

தாணையக்காரர், s. Soldiers in garrison.

தாணையமிறங்க, inf. To become settled in a garrison.

தாணையமுறிய, inf. To put a garrison to flight.

தாணையம்போட, inf. To garrison. 2. To become settled in a garrison. 3. (fig.) To tarry too long in a place.

*தாண்டகம், s. (an elongation of தண்டகம்.) A poem, the lines of which consist of more than twenty-six letters, which is of two kinds—as அளவழித்தாண்டகம், அளவியற்றாண்டகம், இருபத்தாறெழுத்தின்மிக்கஅடியான்வருபா.

*தாண்டவம், s. Dance, கூத்து. 2. Dancing with violent gesticulations, applied to the frantic dance of Siva and his votaries, சிவன்கூத்து. W. p. 371. Tandava. 3. [mystically.] The operations of the deity in sentient beings, supplying them with bodies, and acting through these in all their movements, திருக்கூத்து.

தாண்டவமாட - தாண்டவம்பண்ண, inf. To dance, as Siva, or to carry on divine operations.

தாண்டவராயன்—தாண்டவன், s. An appellation of Siva, சிவன்.

*தாண்டி, s. Any treatise on dancing, நடனசாஸ்திரம். (Sa. Ta'ndi.)

தாண்டு, s. A leap, a jump, குதி. 2. (fig.) Assuming airs in giving an apology.

வெகுதாண்டுதாண்டுகிறான். He plays the pedant.

ஒருதாண்டாகத்தாண்டினான். He leaped over at once.

தாண்டு, கிறேன், தாண்டினேன், வேன், தாண்ட, v. a. To leap, to bound, to jump over, to cross, to pass over, கடக்க. 2. To stride over, to step or skip over, நீட்டியடிவைக்க. 3. To dance, skip, jump, துள்ளிக்க. 4. To overcome, வெல்ல. (c.)

தாண்டிப்பாய, inf. To leap over. 2. To play at leap-frog. 3. To be rash, disobedient, head-strong.

தாண்டிப்போக, inf. To surpass, to out-do, to overcome.

தாண்டிமண்டலம்போட, inf. [prov.] To spring, or run at one with rage, as a ferocious animal, an enraged warrior, &c.

தாண்டல், v. noun. Jumping over, crossing over, பாய்தல்—used in all the meanings of the verb.

*தாதகி, s. A tree, ஆத்திமரம். W. p. 442. Dhatakee.

*தாதன், s. A slave, அடிமை. 2. A devotee of Vishnu, தாசன். (சது.) 3. (fem. தாதச்சி.) A religious mendicant of the Vaishnuvas, வைஷ்ணவபரதேசி. (See தாசன்.) 4. One of the lowest or சரியை order of Saivas, சரியையுடையான். 5. A kind of vagrant dancer, கூத்தாடி. (c.)

தாதக்கூத்து, s. A kind of dancing by strolling dancers, தாதராட்டம்.

தாதமணி, s. A necklace worn by Vaishnuva pilgrims to Tripaty.

தாதமார்க்கம், s. The religious practice of the lowest of the four orders in the Saiva religion, as சரியை. (See மார்க்கம்.) 2. The religion of the Vaishnuvas.

தாதவேஷம், s. A masquerade dress like a Vaishnuva's.

தாதா, s. (Tel.) Grandfather, பாட்டன்.

*தாதா, s. A liberal donor, as அன்னதாதா, தருமதாதா, நகையாளன். (Sa. Da'ta, under Da'tru.) 2. A father, தந்தை. 3. Brahma of the Triad, பிரமன். W. p. 442. Dhatra.

*தாதாத்மியம் — தாதான்மியம், s. Identity, unity, sameness, ஒற்றுமை. W. p. 371. Tatatmya.

சகதாதான்மியம், s. Earthly connections, worldliness, secularity.

ஈசுரசெகதன்னியதாதான்மியம், s. Entire union or identification with the deity.

*தாதி, s. A foster-mother, a nurse, செவிலித்தாய். (Sa. Dha'tree.) 2. A female companion of a lady, a lady's maid, தோழி. (c.) 3. A female devotee of the சரியை order, as தாசி.

தாதிப்பெண்கள், s. Attendants of a mistress.

தாது, s. (Hind.) A hearing, கேள்வி.

தாதுமில்லைப்பிராதுமில்லை. There is no pleading or hearing—no tribunal.

*தாது, s. (Sa. Dha'tu.) A principle, constituent or elementary part in nature, பூதவனு. 2. (c.) Artery, nerve, pulse, muscle in common, நாடி. 3. Any of the seven constituent parts of the body, இரசமாதியேழு. 4. Any one of the five elements, மண்ணுதிலைந்து. 5. The filaments of a flower, பூந்தாது. 6. The தாதுமாதுளை tree. (சது.) 7. Red ochre, காவிக்கல். 8. The root of a word in Sanscrit, சொற்பகுதி. 9. Any of the seven metals, பொன்னுதியேழு. (See உலோகம்.) 10. Mineral, a fossil, கிரசவஸ்து. 11. Semen, சுக்கிலம். 12. The tenth year of the Hindu cycle, ஓராண்டு. 13. Arsenic in its natural state, in distinction from that which is prepared. See சரக்கு.—Note. The seven constituents of the body, or சத்ததாது, are: 1 இரசம், serum. 2. இரத்தம், blood. 3. சுக்கிலம், semen. 4. மூளை, brains, marrow. 5. தசை, flesh. 6. எலும்பு, bone. 7. தோல், skin.

தாதாட, inf. To dive into the pollen of flowers, as insects; [ex ஆட.] (p.)

தாதுகட்ட, *inf.* To bind or cause absorption, or extinction of the seminal principle in the system, as ascetics; or to promote longevity.

தாதுகவிக்க, *inf.* To be emitted as semen.

தாதுநஷ்டம், *s.* Nocturnal pollution in sleep, by disease, &c. See சுக்கிலம்.

தாதுபார்க்க, *inf.* To feel the pulse.

தாதுபுஷ்டி—தாதுவிருத்தி, *s.* A healthy state of the semen. (*c.*)

தாதுமாதளை, *s.* A flowering pomegranate without fruit, பூமாதளை.

தாதுமூலசீவன், *s.* [*in divination.*] A three-fold division of nature, தாது denoting the mineral, மூலம், the vegetable and சீவன், the animal kingdoms, one of which is sent by an applicant to the diviner.

தாதுரோகம், *s.* Scanty flow, or morbid state of the semen.

தாதுவாதம், *s.* Mineralogy, one of the sixty-four கலைஞானம்.

தாதுவாதி, *s.* An assayer of metals.

தாதுவிழுந்துபோதல், *v. noun.* Ceasing of the pulse. (*c.*)

தாதுவைரி, *s.* Sulphur, கந்தம். W. p. 442. DHATUVAIRI. 2. Nutgall, கடுக்காய். 3. Cardamum, ஏலம்.

*தாதுவாதம், *s.* [*loc.*] Fraud, a lie, as தாந்திருவாதம். 2. See தாது.

தாதுவாதக்காரன், *s.* A liar, one full of guile.

*தாதை, *s.* A father, தந்தை. 2. A grandfather, பாட்டன். 3. Brahma, பிரமன். (*p.*) See தாதா.

தாதைதந்முதை—தாதைதாதை, *s.* A grandfather.

*தாத்திரம், *s.* An axe, கோடரி. (சது.) —In Wilson's Dic. a large knife.

*தாத்திரி, *s.* Earth, பூமி. W. p. 442. DHATREE. 2. The நெல்லி tree.

*தாத்திரியம், *s.* [*prov.*] Poverty, exigency, தரித்திரம்.

தாத்திரியப்பட, *inf.* To suffer poverty, to be poor.

*தாத்திருவாதம், *s.* [*prov.*] A cheat, fraud, trick, கபடம். 2. Lie, பொய்.

தாத்து, இறேன், தாத்தினேன், வேன், தாத்த, *v. a.* [*vul. for* தூற்று.] To winnow, and sift—as grain, கொழிக்க. 2. To shift off bad articles for good, இழிந்ததையுயர்ந்ததற்கு மாற்ற. 3. [*prov.*] To conceal stolen bullocks in some place out of sight, ஒளித்து வைக்க. (*c.*)

தாத்திப்போட்டான். He sifted the grain; also, he got rid of damaged goods.

*தாத்துரு, *s.* One of the twelve suns, so called, பன்னிரண்டாதித்தரிலொருவன். (சது.)

*தாந்திரிகம், *s.* Belonging to the Tantras, தந்திரசாஸ்திரத்துக்குரியது. 2. Cunning, artfulness, உபாயம். W. p. 371. TANTRIKA.

*தாபகம்—ஸ்தாபகம், *s.* Establishment, settlement, foundation, நிலைநிறுத்துகை. See தாபனம்.

*தாபதம், *s.* Abode of an ascetic, முனிவர்வாசம். (சது.)

தாபதநிலை, *s.* A widow's entering on a course of austerities at the death of her husband, விதவைதவம்புகல்.

தாபதர், *s.* (*Hon.*) An ascetic with tangled locks, சடைமுடியர். 2. An ascetic of the Jaina sect, சமணமுனிவர்.

*தாபநீயம், *s.* One of the Upanishads, உபநிடதத்தொன்று.

*தாபந்தம், *s.* (*a change of* தாபம்.) Distress, straits, &c. See தாவந்தம்.

*தாபம், *s.* Heat, ardor, ferver, burning, உட்டணம். 2. Sorrow, distress, anguish, துன்பம். W. p. 371. TAPA. 3. A jungle, forest, காடு.

கோபதாபம், *s.* Heat of anger. See கோபம்.

பச்சாத்தாபம், *s.* (*R. Catholic usage.*) Contrition, repentance.

மனஸ்தாபம்—மனத்தாபம், *s.* Grief, sorrow of heart, regret; remorse, compunction.

விரகதாபம், *s.* Violence of sensual appetite, lust. See விரகம்.

தாபசுரம், *s.* A burning fever. See சுரம்.

தாபத்திரயம், *s.* (*also* துக்கத்திரயம்.) The three kinds of distress, according to their sources: 1. தெய்வீகம், affliction from the divine hand. 2. ஆன்மீகம், affliction from creatures. 3. பௌதிகம், afflictions caused by the elements.

தாபமாயிருக்க, *inf.* To be full of desire. 2. To suffer inconvenience, or pain, from heat.

*தாபரம், *s.* Shelter, support, &c. See தாவரம்.

தாபரன், *s.* The deity, கடவுள். (சது.)

தாபரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To protect, preserve, support, shelter. See தாவரி.

*தாபனம்—ஸ்தாபனம், *s.* Establishing, founding, நிறுத்துகை. 2. Settlement, establishment, institution, நிலை. 3. Fixing or concentrating the thoughts upon the objects of meditation, நினைவைநிலைபெறுத்துகை. —There are as அட்சரஸ்தாபனம், கும்பஸ்தாபனம், தெய்வஸ்தாபனம், பாஷாணஸ்தாபனம், மந்திரஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், which see in their places.

தாபனமூர்த்திரை, *s.* Libations of water, and sacrificial grass, to an image, &c., as அருக்கியம்.

தாபனம்பண்ண, *inf.* To fix, to place.

*தாபிஞ்சம், *s.* A tree. See தமாலம். W. p. 372. TAPINJA. 2. Castor plant, ஆமணக்கு.

*தாபிதம், *s.* Heat, fervor, ardency, சூடு. W. p. 372. TAPITA. 2. Establishment, &c. See ஸ்தாபிதம்.

தாபி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To place, plant, establish; to determine, to prove, &c. See ஸ்தாபி.

தாபே, *s.* (*Arab.*) A dependent, follower, சார்ந்தவன். 2. Charge, custody, வசம்.

தாப்பணிவார், *s.* A girth for a saddle, கல்லணைக்கச்சை. 2. (*fig.*) A scourge, கசை. (*Used in the south.*)

தாப்பாள், *s.* [*prop.* தாழ்ப்பாள்.] A bolt. (*c.*)

தாப்பிசை—தாப்பிசைப்பொருள்கோள், *s.* (*a compound of* தாம்பு *and* இசை.) One of the eight methods of constructing verse, by which a word in the middle is connected both with the end and beginning, from the idea of a swing—as உண்ணாமையுள்ளதுயிர்நிலை ஊனுண்ண அண்ணாத்தல் செய்யாதளறு, if not eaten, the bodies of some animals will retain their lives. The hell that swallows a flesh eater will never open its mouth to let him out. Here ஊன், is the connecting word, ஓர்பொருள்கோள்.

தாப்பு, *s.* [*loc.*] The expected moment, the wished for occasion, குறித்தசமயம்.

தாப்புக்கொள்ள, *inf.* To lurk and wait for, to watch an opportunity.

*தாமசம்—தாமதம், *s.* One of three qualities or principles in nature—that of darkness, ignorance, delusion, sluggishness, முக்குணத்தொன்று. (See குணம்.) W. p. 372. TAMASA. 2. Dilatoriness, tardiness, drowsiness, தூக்கம். 3. Delay, detention, தடை. 4. Slowness, dullness, sluggishness, inactivity, மந்தகுணம். 5. Reluctance, backwardness, unwillingness, பிரியமின்மை. (*c.*)

சொல்லுகிறதற்குத்தாமசம். You no sooner direct than he complies.

தாமசசிருட்டி, *s.* The creation of evil or powers of evil.

தாமசபதார்த்தம், *s.* Variety of food and drinks, மதுமாமிசமுதலியன.

தாமசபுராணம், *s.* A Purana with *tamasa* imperfections.

தாமசப்பிரகிருதி, *s.* One of a bad disposition, also a sluggard, சோம்பன்.

தாமசவேளை, *s.* A time of anger or passion. 2. As தாமதவேளை.

தாமசன்—தாமதக்காரன், *s.* A slow, inactive person.

தாமதப்பட, *inf.* To be delayed, to be detained. 2. To linger, to be tardy, to be reluctant.

தாமதப்பல்லி, *s.* A lizard chirping in such a direction in the house as to denote delay, obstruction, misfortune. See வரத்துப்பல்லி.

தாமதம்பண்ண, *inf.* To delay, to detain, to prolong, to retard.

தாமதவேளை, *s.* [*in astrology.*] The division of the day—it being in three parts—which is most unfavorable for enterprize.

*தாமணி, *s.* (*sometimes* தாவணி.) A rope for tying cattle together, மாட்டைப்பிணிக்குந்தாம்பு. (*c.*) 2. A string, a rope in general, கயிறு. W. p. 405. DAMAN'I.

தாமணியாகக்கட்டிவெட்டிப்போட்டான். He tied (criminals, or captives), in a row and cut off (their heads)—practised by some Hindu sovereigns.

*தாமதம், *s.* See தாமசம்.

தாமதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* (*sometimes* தாமசி.) To delay, to loiter, to be tardy, பொழுதுபோக்க. 2. To be detained, hindered, தடைபட. 3. To be reluctant, backward, unwilling, பிரியமின்மையிருக்க. (*c.*)

*தாமநிதி, s. The sun, சூரியன்; [ex தா மம், light et நிதி, fulness.]

*தாமம், s. Rope, cord, string, as அரை ஞாண் கயிறு. 2. A string to tie oxen together, as தாமணி. 3. A flower, பூ. 4. Wreath, flower garland, chaplet, பூமாலை. 5. Necklace of beads, மணிக்கோவை. 6. A woman's waist ornament, consisting (according to நிகண்டு) of sixteen or eighteen zones of beads, ஒன்பது கோவையுள்ளதாகிய மேகலை. (Sa. Da'ma.) 7. House, abode, dwelling, வீடு. 8. Place, location, position, இடம். 9. Birth, transmigration, பிறப்பு. 10. Body, உடல். 11. Light, lustre, brilliancy, radiance, ஒளி. 12. City, town, நகரம். 13. Fame, celebrity, புகழ். W. p. 443. DHAMA. 14. The கொன்றை tree. 15. Row, order, ஒழுங்கு. 16. Ornaments of a crown, முடிப்புறுப்பு. 17. Health, ease, pleasantness, gratification, சுகம். 18. Mountain, மலை.

தீர்க்கவசனம், s. Decisive language.

தீர்க்கவைரம், s. Continued, cherished hatred.

தீர்க்காயுசு, s. Long life, longevity. (*c.*)

தீர்க்காயுஷியம், s. Length of days; *a salutation.*

தீர்க்காயுதம், s. A spear or lance.

தீர்க்காலோசனை, s. Mature consideration.

தீர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To finish, complete, conclude, முடிக்க. 2. To settle, decide, determine, predestinate, தீர்மானிக்க. 3. To adjust a quarrel, bargain, marriage contract, &c., திட்டஞ்செய்ய. 4. To arbitrate, decide a law-suit, pass sentence as a judge, தீர்ப்புச்செய்ய. 5. To remove moral or ceremonial defilement, to expiate, நீக்க. 6. To remove affliction, sorrow, pain; to terminate births, as the Deity, விடுக்க. 7. To satisfy hunger, desire, revenge, lust, &c., திருத்தியாக்க. 8. To accomplish, effect, fulfil, consummate, perfect, பூர்த்தியாக்க. (c.)

தீர்த்தறுத்துக்கொள்ள, *inf.* To drop acquaintance, terminate intercourse or dealings.

தீர்த்துக்கொடுக்க, *inf.* To settle the price and give up the commodity.

தீர்த்துக்கொள்ள, *inf.* To settle an account.

தீர்த்துப்போட—தீர்த்துவிட, *inf.* To settle a difference between parties. 2. To pay off.

தீர்த்தல், v. noun. A causing to leave or to quit, போக்குதல். (நீதிநெறிவிள.)

தீர்ப்பு, v. noun. Settlement, conclusion, completion, termination, consummation, முடிப்பு. 2. Decision, award, judgment, decree, sentence, நியமம். 3. Determination, resolution, தீர்மானம். 4. Clearance, removal, liquidation, remission, நிவிர்த்தி. 5. Antidote, atonement, expiation, பரிகரிப்பு.

தீர்ப்பானபேச்சு, s. A decision, conclusion.

தீர்ப்பானவிலை, s. A settled price—as தீர்மானமானவிலை.

தீர்ப்புக்கட்ட, *inf.* To make a decision, settle a business, to finish, decide, fix. 2. To form an opinion, judgment, &c.

தீர்ப்புக்காண, *inf.* To find out the result of a law-suit, &c. 2. To terminate, come to an issue—as a law-suit.

தீர்ப்புச்சொல்ல, *inf.* To speak decidedly. 2. To pass sentence, pronounce judgment. 3. To suggest a remedy, antidote, &c., or counteraction of a curse.

தீர்ப்புநகல், s. Copy of a decision.

தீர்ப்பெழுத, *inf.* To record a sentence, award, &c., as a judge.

*தீர்த்தகர் — தீர்த்தகரர், s. Rishis among the Jainas, சமணமுனிவர். W. p. 379. TEERTHAKARA.

*தீர்த்தம், s. (*Sa. Teertha.*) Ceremonial purity, சுத்தம். 2. Sacred rivers, or waters at a place of pilgrimage, or as brought from such place, புண்ணியதீர்த்தம். 3. Consecrated water used for washing an idol, which is afterward brought out and given to the people, especially on the last day of the festival, either to be drunk by them, or taken home for the sick to dispel diseases, திருமஞ்சனநீர். 4. Water consecrated for the sick, ஓதியிறைக்கும்நீர். 5. The merit of bathing on an auspicious day, புண்ணியகாலஸ்நானசத்தம். 6. A temple festival or procession, திருவிழா. 7. Water in common, நீர். 8. Water given by the brahman in court, in administering an oath, துளசிதீர்த்தம். (c.)—*Note.* The seven sacred rivers are the following, 1. கங்கை, Ganges; 2. யமுனை, Jumna; 3. சரச்சுவதி, Sarasvati which is northward of Delhi; 4. நருமதை, Nurbudha; 5. காவேரி. Kavery; 6. குமரி, Kumari at Cape Comorin; 7. கோதாவிரி, Godavery.

தீர்த்தங்கொடுக்க, *inf.* To distribute water, in which the idol has been washed.

தீர்த்தசேவை, s. Pilgrimage to holy bathing places.

தீர்த்தமாட, *inf.* To bathe in sacred waters. 2. To bathe as a part of the daily religious duties.

தீர்த்தயாத்திரை, s. Pilgrimage to a holy place for the purpose of bathing.

தீர்த்தர், s. (*plu.*) Devas, celestials, inhabitants of Swerga, கடவுளர். (சது.)

தீர்த்தவாசி, *appel. n.* A pilgrim.

தீர்த்தன், s. Argha of the Jainas, அருகன். 2. Siva, சிவன். 3. Guru, குரு. 4. A teacher, especially of the Vedas, உபாத்தியாயன்.

*தீர்த்திகை, s. A river, ஆறு; [*cx* தீர்த்தம்.]

தீர்ப்பு, v. noun. See தீர், *v. a.*

தீர்மானம், s. Decision, determination, resolution, நியமம். 2. Settlement, conclusion, completion, முடிவு, 3. Decree, sentence, award, judgment, தீர்ப்பு. 4. Conclusion of the interlude, sung, played, &c., between stanzas, தாளத்தீர்ப்பு. 5. [*prov.*] Absoluteness, entireness, completeness, முழுமை. (c.)
தீர்மானக்கறுப்பு. Entirely, exclusively or absolutely black.

தீர்மானப்பட, *inf.* To be determined, decided, settled.

தீர்மானப்படுத்த—தீர்மானம்பண்ண, *inf.* To decide, settle, determine, finish.

தீர்மானமாய், *adv.* Definitively, positively, expressly, absolutely, entirely.

தீர்மானமானவிலை — தீர்மானவிலை, s. Fixed or settled price.

தீர்மானி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To determine, resolve, decide, நிருணயிக்க. 2. To conclude, finish, settle, bring to an issue, முடிக்க. 3. To appoint, fix, designate to an office, நியமிக்க. 4. To finish the interlude performed between stanzas in music, &c., தாளந்தீர்க்க. (c.)

தீர்மானிப்பு, v. noun. Determination, decision, conclusion, settlement, முடிப்பு. 2. Termination of the interlude performed between stanzas, தாளத்தீர்ப்பு.

தீர்வை, s. Decision, நியாயத்தீர்ப்பு. 2. Conclusion, issue, result, முடிவு. 3. Custom, duty, excise, toll, tax, impost, சுங்கம். 4. Divine judgment, fate, விதி. (c.) 5. [*loc. also* தீர்வைக்காரியம்.] Funeral obsequies, கருமாந்தம். 6. (சது.) A mungoose, கீரி.

தீர்வைகொடுக்க, *inf.* To pay duty.

தீர்வைச்சரக்கு, s. Customable goods.

தீர்வைதிர, *inf.* To lay duty on goods.

தீர்வைத்துறைமுகம், s. A port where duty is received.

தீர்வைப்பணம், s. Toll-money, money paid for duty.

தீர்வையில்லாதசரக்கு, s. Goods not chargeable with duty.

தீர்வையெடுக்க, *inf.* To levy or receive duty. 2. [*prov.*] To obtain the copy of a decree from the court.

தீர்வைவிழ, *inf.* [*prov.*] To be passed as a decree, தீர்ப்பாக.

தீர்வு, v. noun. See தீர், *v. n.*

*தீவகம், s. Lighted lamp, flame, luminousness, தீபிகை. 2. [in rhet.] A word once used and then understood in the other parts of a sentence; embracing several varieties, but especially three, 1. முதனிலைத்தீவகம், a word used in the beginning of a sentence and understood in other parts; 2. இடைநிலைத்தீவகம், a word so used in the middle of a sentence; 3. கடைநிலைத்தீவகம், a word thus used at the end of a sentence. See தீபகம்.

தீவட்டி, s. [prop. தீவர்த்தி.] See தீ.

*தீவரம், s. [prop. தீவிரம், which see.] Haste, &c.

தீவர்த்தி, s. A flambeau, எரிபந்தம்.

தீவாணம், s. (Arab.) Government, a court of justice, நியாயஸ்தலம். See திவானி.

*தீவாளி, s. The lighting of lamps at the Deepâli feast in October. See தீபாவளி. (c.)

*தீவாந்தரம், s. See தீவு, Sa.

தீவான், s. (Pers.) A deevan, Mohammedan officer; also திவான்ம். 2. See தீவு.

தீவி, s. A tiger, புலி. (சது.)

*தீவிகை, s. A lamp, as தீபிகை.

தீவிதிராட்சம், s. (for தீவுதிராட்சம், prop. திராட்சம்.) A vine, கொடிமுந்திரிகை. (R.)

*தீவிரம், s. Speed, celerity, haste, expedition, சீக்கிரம். 2. Fury, rage, great anger, பெருங்கோபம். 3. Intensity, severity, கொடுமை. 4. Pungency, corrosiveness, sharpness; being biting, or piercing as the smell of hartshorn, &c., உறைப்பு. 5. (சது.) Ray of the sun, சூரியகிரணம். 6. Hell நரகம்.

தீவிரக்காரன், s. A person in a hurry.

தீவிரதர, adj. More rapid; [ex தர, comparative degree affix.]

தீவிரதரம், s. Rapidness, instantaneousness.

தீவிரபுத்தி, s. Ready wit.

தீவிரம்பண்ண, s. To hasten, to speed.

தீவிரி, க்கிறேன், த்தேன், ப்பேன், v. a. To hasten, speed, expedite, accelerate, quicken, சீக்கிரம்பண்ண. (commonly தீவிரப்படுத்த.) 2. v. n. To be intense, poignant, severe, fierce, &c., கொடுமையாயிருக்க.

தீவிளங்கும்வைரம், s. Ambergris, as மீனம்பர்; [ex தீ.] (R.)

தீவிளி, s. Immature fruit, காய். (நிக.)

தீவு, s. Lusciousness, deliciousness, sweetness, இனிமை. (p.) 2. See தீ, v.

தீவியகனி, s. [prov.] Sweet, luscious or delicious fruit.

தீவியதாட்சம் — தீவியதிராட்சம், s. A luscious grape.

தீவியது, appel. n. Any thing sweet or delicious, இனிப்பானது.

*தீவு, s. An island, கடலிடைக்குறை. 2. (for தீபம்.) Any one of the seven islands, or continents, supposed to form the world in which we dwell. They are most of them named from the trees said to grow in them; 1. நாவலந்தீவு, the continent on which we live, from the நாவல் or சம்பு tree, said to abound in it, south of மகாமேரு. 2. இறலித்தீவு, the next adjacent circumambient continent, named from that species of fig tree, Ficus, L. 3. குசைத்தீவு, named from குசை or Darb'ha grass. 4. கிரவுஞ்சம், from the bird அன்றில், inhabiting it. 5. புட்கரத்தீவு, from the lotus, said to be there. 6. தெங்கந்தீவு, as having many cocoa-nut-trees. 7. கமுகந்தீவு, abounding in the areca. In Sanscrit, Jambu, Kusa, Plaksha, Salmali, Krauncha, Saka, and Pushkara.

தீவாந்தரம், s. Foreign islands, அன்னியதீவு. 2. (com.) A remote island, தூரதீவு.

தீவான், s. (pl. தீவார்.) An islander.

தீவுக்குருவி, s. A foreign bird. (R.)

தீவுச்சரக்கு, s. Foreign merchandise.

தீவுதிராட்சம், s. A foreign vine.

தீழ்ப்பு, s. Uncleanness, meanness, &c., சீசத்துவம். (c.) See தீட்டு.

தீற்று, கிறேன், தீற்றினேன், வேன், தீற்ற, v. a. [vul. தீத்த.] To feed with the hand, to insert by small mouthfuls, ஊட்ட. 2. To put on an outer coat of mortar or clay, to clay, also to rub and polish plaster, மெழுக. 3. To insert mortar or clay in a hole or crevice, வெடிப்புமாற்ற. 4. To rub and smooth the folds of cloth after folding, சக்கட. 5. To glue or stiffen a strong cord, &c., with glue, &c., to prevent its untwisting, to smooth it, &c., கயிறுதீற்ற. 6. To clean the teeth, பல்துலக்க. (c.)

தீற்றிப்போட, inf. As தீற்ற. 2. (fig. prov.) To give advice by stealth, secretly, &c.

தீற்றுக்கல், s. A stone with which to rub and polish plastered floor, மணியாசக்கல்.

தீற்றுப்பலகை, s. A board for polishing the plaster of a wall, மணியாசப்பலகை.

*தீனம், s. Poverty, indigence, need, distress, குறை. W. p. 410. Deena. 2. Cruelty, injustice, severity, harshness, குரூரம்.

தீனபந்து, s. Deity, கடவுள். (Vaishnuva usage.)

தீனன், s. (pl. தீனர்.) Beggar, mendicant, இரப்போன்.

தீன், s. (com. தீனி.) Food, victuals, a meal, உணவு.

தீன்பண்டம், s. Eatables, as தின்பண்டம்.

பெருந்தீனிக்காரன், s. A glutton.

து

து. A syllabic letter compounded of த் and உ.

து. Termination of interrogatives, impersonal pronouns, and appellatives, in the singular, வினாமுதலிய வற்றோடிணைந்த அஃறிணை ஒருமை விகுதி, as எது, which thing, இது, this thing, கரியது, that which is black. 2. Termination of the verb, in the first person singular, தன்மை ஒருமை வினை விகுதி, as யான் வருது, I will come. 3. A termination of verbs in the neuter gender, third person, singular number, அஃறிணையொருமைப் படர்க்கை வினைவிகுதி, as மாவெந்தது, the cow came.

து, s. (Hind.) A sign of displeasure, இகழ்ச்சிக்குறிப்பு.

து, த்தேன், ப்பேன், v. a. (imperfect, used in the past and future.) To eat, take food, make a meal, உண்ண. 2. To enjoy by means of the senses, பொறிகளாலனுபவிக்க. 3. To experience pleasure or pain, suffer or enjoy the result of actions, அநுபவிக்க. (p.)

அதிதிகள்துத்தசேடம் அமிழ்தினுமினியவாகும். The food refused by the guests is more tasteful than ambrosia.

துப்பு, v. noun. Provisions, food, உணவு. 2. Experience, enjoyment, fruition, fruit of former deeds, அனுபவம். 3. Drink, beverage, பானம்.

துப்பார்க்குத்துப்பாயதுப்பாக்கி. Furnishing agreeable articles of food to those who eat. (குறள்.)

துகள், s. Dust, a particle of dust, புழுதி. 2. (p.) Fault, moral defect, flaw in character, conduct, &c., குற்றம். 3. Pollen, farina of flowers, பூந்தாது. (சது.)

துகடீர்பெருஞ்செல்வம். Riches not acquired by unfair means. (நாலடி.)

துகள்பறக்க, inf. To fly as dust. (c.)

துகிரிகை, s. Sandal paste, cement, சாந்து. 2. A picture, painting, சித்திரம். (சது.)

துகிர், s. Red coral, பவளம்.

துகிலிகை, s. A painter's pencil, எழுதுகோல். 2. A picture, as துகிரிகை. (சது.)

துகில், s. [vul. துயில்.] Cloth, clothes, dress, சீலை. 2. A banner as a badge of honor, விருதுக்கொடி. (சது.)

துகிற்கொடி, s. Flag, as துகில்.

துகிலின்பீசம், s. The seed of the cotton shrub. (R.)

செந்துகில், s. Ochre-colored vestments.

பொற்றுகில், s. Gold cloth, as பீதாம்பரம்.

துகினம், s. Dew, பனி. (சது.)

துகை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To pound moist things, medicines, &c., in a mortar; to mash, இடித்துக்குழைக்க. 2. To tread down, trample on, bruise or destroy by treading, உழக்க. 3. To vex, வருத்த. See துவை.

துகையல், v. noun. A seasoning for food. See துவையல்.

துக்கடி, s. (Hind.) A division of a district, தண்டெபட்டது. (c.)

*துக்கம், s. Sorrow, distress, grief, sadness, regret, dejection, விசனம். 2. Pain, anguish especially of the mind, உபத்திரவம். (c.) W. p. 413. DUHKHA. 3. Hell, நரகம். 4. Defect, fault, natural or moral, குற்றம்.—*Note.* துக்கத்திரயம், three species of sorrow are mentioned, for which see தாபத்திரயம்.

துக்கஉடுப்பு, s. A mourning dress.

துக்ககன், s. One who is sad, one who is of a melancholy temper. (*R.*)

துக்கக்காரன், s. A mourner.

துக்கக்கோலம், s. A mourning state.

துக்கங்கொண்டாட—துக்கங்காக்க, *inf.* To mourn, express sorrow by exterior marks, to lament.

துக்கசாகரம், s. A sea of grief.

துக்கசாகரத்தில்முழுகினான். He is overwhelmed with grief.

துக்கநிவாரணம் — துக்கநிவிர்த்தி, s. Comfort, removal of affliction.

துக்கமாயிருக்க, *inf.* To be sorrowful.

துக்கமுகம், s. A sorrowful, dejected, down-cast countenance.

துக்கராகம், s. A mournful tune.

துக்கவீடு, s. A house of mourning, a funeral house.

துக்காணி, s. (*Tel.*) A copper coin of ten cash. (*c.*)

துக்கி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To sorrow, regret, mourn, grieve, விசனப்பட. 2. To be in affliction, distress of mind, &c., வருந்த. (*c.*)

துக்கிப்பு, v. *noun.* Sorrow, grief, distress, விசனப்படுகை.

*துக்கிதன், s. A mourner, துக்கிக்கிறவன்.

பாதுக்கதுக்கிதன். One who mourns with those who mourn.

துக்கு, s. (*Tel.*) Meanness, worthlessness, கீழ்மை. 2. (*fig.*) A useless person or thing, உதவாதது. 3. Rust, துப்பு.

துக்குப்பிடித்தவன், *appel. n.* A worthless person.

துக்குடி, s. See துக்கடி.

துக்குணி, s. [*vul.*] A little, அற்பம்.

துக்குணிபோதும். A little will do.

துக்கை, s. Menstruation, சூதகம். (*R.*)

துக்கைச்சி, s. A menstruous woman.

*துங்கதை, s. [*prov. for* துங்கம்.] Height, elevation, உயர்ச்சி. 2. Dignity, greatness, பெருமை.

*துங்கபத்திரி—துங்கபத்திரை, s. A river in the Mysore country, ஓர்நதி. W. p. 379. TUNGABHADRA.

*துங்கம், s. Height, elevation, upward tendency, உயர்ச்சி. 2. Dignity, exaltedness, neatness, பெருமை. (சது.) 3. Superior apsis, the apogee or aphelion of a planet, மந்தோச்சம். W. p. 379. TUNGA.

துங்கப்பீலிக்குடை, s. An umbrella from the feathers of the lofty peacock.

துங்கமந்தோச்சம், s. [*in astron.*] Aphelion of a heavenly body; [*ex* மந்தம், anomaly, *et* உச்சம், the meridian.]

துங்கமத்திமபுத்தி, s. Mean daily motion of moon's apogee.

துங்கன், s. An eminent man, உயர்ந்தோன். 2. (*in Hindu astronomy.*) The apogee of the moon, practically, the longitude of the apogee. As such, it is an element for equating the moon's place, மந்தோச்சம்.

*துங்கரிகம், s. Red ochre, காவிக்கல். (*probably from* துங்கம் *et* ரிகம், *heart*, the stone being red like that.) See கைரிகம்.

*துசகம், s. Pomegranate, மாதளை.

துசம், s. A kind of resin, குங்குலியம்.

*துசம், s. Banner, flag, கொடி, (*contraction of* துவசம்.) 2. (*Sa. Dvija.*) What is twice born, as an oviparous animal, இருபிறப்புள்ளது. 3. A tooth, as twice produced, பல்.

துசங்கட்ட, *inf.* To engage in an enterprise with great energy, from the practice of hoisting a standard for battle, விடாமுயற்சிப்பட (*c.*)

துசன், s. A brahman, பார்ப்பான்.

துச்சம், s. Water melon, கொம்மட்டி. 2. A kind of melon, பேய்க்கொம்மட்டி.

*துச்சம், s. Lowness, meanness, vileness, அற்பம். 2. Emptiness, வெறுமை. W. p. 379. TUCHCHHA.

துச்சன், s. A mean, worthless fellow, அற்பன்.

*துச்சவனன், s. Indra as attacking the giant Chavana, இந்திரன். W. p. 417. DUSCHYAVANA.

*துச்சாதனன் — துச்சாசனன், s. The brother of துரியோதனன், துரியோதனன்தம்பி. W. p. 417. DUSS'ASANA.

துச்சி, s. [*prov.*] Eating, feeding, புசிப்பு. 2. Experience, fruition, good or evil as the result of actions—as துப்பு.

துச்சிமை, s. (*a change of* துச்சம்.) Meanness, baseness, கீழ்மை.

துச்சில், s. Place of retreat, shelter, resort, seat, ஒதுக்கிடம். 2. A crest, குட்டு. (சது.) 3. (*fig.*) The body as a temporary abode of the soul, சரீரம். (குறள்.) [*ex* துஞ்சு *et* இல்.]

துஞ்சற, *adv.* [*prov.*] Absolutely, entirely, wholly, altogether, quite, perfectly, முழுமையும்.

துஞ்சு, கிறேன், துஞ்சினேன், வேன், துஞ்ச, v. n. To sleep, doze, drowse, slumber, உறங்க. 2. To be drowsy, sluggish, dull, மந்தமாயிருக்க. 3. To die, spoken auspiciously, சாவ. 4. To droop as persons or vegetables, faint away, சோர. 5. To abide, stay, be settled, continue, endure, நிலையுற.

பயிர்துஞ்சிப்போயிற்று. The crop is drooping.

துஞ்சினின்றான்மிஞ்சியுண்ணான். He who sleeps much will have little appetite.

துஞ்சுமன், s. An indolent fellow, சோம்பன். (*R.*)

*துஷ். A change of துர், a Sanscrit prefix implying, evil, ill, &c. as துஷ்கருமம் for துர்க்கருமம், or improp. துற்கருமம். See துர்.

துடக்கம், s. [*prop.* தொடக்கம்.] Beginning, entering on an enterprise, &c.

துடக்கறுப்பான், s. A kind of plant, கொத்தான்கொடி, Cassyta, *L.*

துடக்கு, s. [*prop.* தொடக்கு.] Entanglement, tying, binding, contracting, தொந்தம். 2. Connection, concern, தொடர்ச்சி.

துடக்குகளைத்தீர்த்துப்போட்டான். He has cut off all connexion with us.

துடக்கு, s. Ceremonial impurity of child-birth, catamenia, death, &c., மகளிர் சூதகம். (*c.*)

துடக்குக்கழிக்க, *inf.* To dispel ceremonial uncleanness.

துடக்குக்காரர், s. Persons ceremonially unclean by a birth, death, &c.

துடக்குவீடு, s. A house ceremonially unclean.

துடக்கு, v. a. [*prop.* தொடக்கு, *which see.*] To tie, entangle, &c.

துடங்கு, s. [*prop.* தொடங்கு.] Shackles.

துடங்கு, v. a. [*prop.* தொடங்கு, *which see.*] To begin, &c.

துடப்பம், s. [*prop.* துடைப்பம்.] A broom, விளக்குமாறு.

துடரி, s. A kind of thorn-bush. See தொடரி.

துடர், s. A chain. See தொடர்.

துடர்ச்சி, v. *noun.* [*prop.* தொடர்ச்சி.] Continuation.

துடர்தல், v. *noun.* [*prop.* தொடர்தல்.] Following after.

துடவை, s. Enclosed, cultivated field, உழவுகொல்லை. 2. Flower garden or grove, பூந்தோட்டம். (சது.)

துடி, s. Dance of the god Skanda, குமரனாடல். 2. Dances of the seven virgin goddesses, சத்தகன்னிகைகளாடல். (See மாதர்.) 3. Drum of hilly tracts, குறிஞ்சிநிலப்பறை. 4. Drum of barren tracts, பாலைநிலப்பறை. 5. The உடுக்கை drum. (See திமிம்.) 6. A small portion of time, a minute, காலநுட்பம். 7. Cardamum, ஏலம். 8. The அகில் tree. 9. The கூதாளி shrub. (சது.) 10. The இசங்கு shrub. 11. Lip, உதடு. 12. Superiority, முதன்மை; [*ex* துடி, v.]

துடியடி, s. A young elephant, யானைக்கன்று; (*lit.*) the துடி drum footed. (*p.*)

துடியிடை, s. A female waist as slender as the middle of the துடி drum, பெண்ணிடை. 2. (*met.*) A female, பெண்.

துடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To quiver, shake, throb, flutter, palpitate, flounder as a fish thrown ashore, அசைய. 2. To be rude, mischievous, giddy, roguish, குதிக்க. 3. To be anxious through suspense; to be eager, to be in great agitation, தத்தளிக்க. 4. To shine, glitter, coruscate, lighten, மின்ன. 5. (*fig.*) To suffer by the gnawings of hunger, பசியினால்வருந்த. (*c.*)

துடித்துப்பதைத்துவந்தான். He came in extreme anxiety, and agitation.

பெற்றகுடல்துடிக்கிறது. The mother yearns over her child; (*lit.*) her bowels yearn.

அரணைவால்துடிக்கின்றது. The tail of the lizard (cut off) leaps.

பிள்ளைதுடிக்கிறது. The child is fidgety, rude, &c.

கண்துடிக்க, *inf.* To quiver or throb as the eye, supposed to be indicative of good or ill, to the person or his relations.—*Note.* If the right eye or other right part of a man throb, it is deemed a good sign, but of a woman it is bad and vice versa.

மனந்துடிக்க, *inf.* To be agitated, as the mind, through anxiety, anger, disappointments.

துடி, *v. noun.* Quivering, palpitating, dancing, &c.

துடிசாத்திரம்—துடிநூல், *s.* The art of determining events by the quivering of different parts of the body, also works treating on the art, ஓரிமித்தநூல்.

துடிதுடிக்க, *inf.* To quiver, throb, flutter, பதைபதைக்க. 2. To be rude, fidgety, mischievous, கடுகடுக்க. (*c.*)

துடித்தல் — துடிப்பு — துடிதுடிப்பு, *v. noun.* Quivering, throbbing, fluttering, பதைபதைப்பு. 2. Rudeness, mischief, கடுகடுப்பு. 3. Great anxiety.

சரீரந்துடித்தல், *v. noun.* Quivering of the body, supposed to occur of itself in case of the sickness of a relative, also at the sight of one suffering, or through anger.

துடியானவன், *appel. n.* A strong, robust man, பலவங்கடன்.

துடியாருஞ்சி, *s.* The இசங்கு shrub.

துடுக்கு, *s.* Rudeness, insolence, surliness, uncouthness, churlishness, wickedness, குறும்பு. 2. Quickness, expedition, activity, விரைவு. (*c.*)

அவனுக்குவாய்த்துடுக்குமெத்த. He is very impertinent in his remarks.

துடுக்கன்—துடுக்குக்காரன், *s.* A rude, uncivil, wicked person, a churl, துஷ்டன்.

துடுக்குப்பண்ண, *inf.* To act rudely, be hasty, impatient, eager, rash. 2. To be active, quick, expeditious.

துடுப்பாற்றி, *appel n.* A sea-fish, ஓர் மீன். (*R.*)

துடுப்பு, *s.* A spatula, மருந்துதட்டவுங்கருவி. 2. A small ladle, சருவை. 3. An oar, paddle, வலிதண்டு. (*c.*) 4. A cluster of flowers, பூங்கொத்து.

துடுப்பேயுன்னைக்கொடுப்பேன். (You fool) spatula, I give you up; i. e. to death.

துடுப்புப்போட்டுத்துழாவ, *inf.* To stir with a ladle.

நெய்த்துடுப்பு, *s.* A spatula used especially in burnt offerings.

துடுப்புக்கீரை, *s.* A plant. See கீரை.

துடுப்புள்ளான், *s.* A kind of snipe. See உள்ளான்.

துடுமெனல், *v. noun.* Sounding imitatively, roaring, ஒலிக்குறிப்பு. (சது.)

துடுமெனப்பாய்ந்தது. (The sea) rolled with a tremendous roar. (*p.*)

துடுவை, *s.* A ghee-ladle of wood, used in burnt sacrifices, &c., நெய்த்துடுப்பு. Compare சருவை.

துடை, *s.* A block built into a wall to support a beam, சுவர்க்கட்டை. 2. A beam projecting from a wall, சுவர்ப்புறத்தூணிண்டத்திரம். 3. A long cross beam, விட்டம். 4. [*improp. for* தொடை.] The thigh.

துடை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To wipe, wipe off, clean by wiping, rub, scour, scrub, தேக்க. 2. To sweep, brush, பெருக்க. 3. To efface, obliterate, erase, expunge, அழிக்க. 4. To clear away, dispel, remove, expel, நீக்க. 5. To clear off a stain from one's character, வடுநீக்கற. 6. To destroy, do away, annihilate, as a world, நிர்மூலமாக்க. 7. To relinquish, desert, கைவிட. (*c.*)

துடைத்துக்கொண்டுபோய்விட்டான். He has carried off every thing.

அழுகிறவன்முகத்தைத்துடைக்கவேணும். (One) should comfort the mourner.

எங்களைத்துடைத்துத்தள்ளிப்போட்டான். He has utterly deserted us—married another, &c.

துடைகாலி, *s.* (*masc.* துடைகாலன்.) A woman causing bad fortune. (*c.*) See நீக்காலி.

இரந்துடைக்க, *inf.* To wipe off moisture from the body, &c. See ஈரந்துடைத்தல்.

கறையானைத்துடைக்க, *inf.* [*prov.*] To clear away white ants. (*c.*)

துன்பந்துடைக்க, *inf.* To dispel affliction. (*p.*)

துடைப்பு, *v. noun.* Wiping, rubbing, scouring, brushing, clearing away. 2. Extirpation, annihilation, obliteration.

துடைப்பம், *s.* Broom, brush, mop, வாருகோல்; [*ex* துடை, *v.*] (*c.*)

துடைப்பக்கட்டை, *s.* An old and worn besom; *also used in abuse.*

துடைப்பத்தாற்கூட்ட—பெருக்க—விளக்க, *inf.* To sweep.

துடைப்பப்புல், *s.* A grass used for making brooms, Aristida setacea, *L.*

துடைவாசி, *s.* The plant, விஷமூங்கில்.

துட்கு, கிறேன்,துட்கினேன்,வேன், துட்க, *v. n.* To be struck with fear, be alarmed, அச்சங்கொள்ள. (*p.*) See திட்கு.

துட்கல்—துட்கெனல், *v. noun.* Being struck with fear, அச்சக்குறிப்பு.

*துட்டம்—துஷ்டம், *s.* Wickedness, vileness, atrocity, heinousness, flagitiousness, தீங்கு. 2. Wildness, savageness, fierceness, ferocity, கொடுமை. 3. Violence, virulence, malignancy, மூர்க்கம். W. p. 418. DUSHT'A.—*Note.* This word is often used adjectively, as துஷ்டமனிதன்.

துஷ்டகண்டகன், *s.* A barbarous savage, a vile wretch, மிகுதுஷ்டன்.

துஷ்டகுணம்—துஷ்டத்தனம், *s.* Wickedness, fierceness, ferocity, barbarity, கெட்டகுணம்.

துஷ்டசதுர்த்தர், *s.* Four ferocious persons celebrated in *Mahabharat*, துரியோதனன், துச்சாதனன், கன்னன், சகுனி.

துஷ்டசிரோமணி—துஷ்டசித்தன், *s.* A very wicked person.

துஷ்டதேவதை, *s.* A malignant deity.

துஷ்டத்தொழில், *s.* A barbarous or ferocious act.

துஷ்டநடை — துஷ்டமார்க்கம், *s.* A wicked life.

துஷ்டநிக்கிரகம், *s.* Destruction of the wicked; commonly as an attribute of a good king—oppos. to சிஷ்டபரிபாலனம்.

துஷ்டமிருகம், *s.* A wild beast.

துஷ்டவித்தை, *s.* The black arts, as witchcraft, magic, &c., when employed for injury, or destruction.

துஷ்டவினை, *s.* As துஷ்டவித்தை. 2. Evil effects of witchcraft, on the person against whom it is intended.

துஷ்டன், *s.* (*plu.* துஷ்டர்.) A wicked man, a savage. 2. A scorpion, தேள்.

துட்டவி, *s.* A shrub bearing an edible fruit, ஓர்செடி, Rhamnus circumcissus, *L.*

துட்டாட்டம் — துஷ்டாட்டம்; *s.* [*prov.*] A wicked life. 2. Savageness, barbarity, ferocity; [*ex* துஷ்டு.]

துட்டாப்பு, *s.* [*prov.*] A pole with a load, &c., carried on the shoulders between two persons, திட்டைமரம், as distinguished from கா, for one. 2. Carrying a load with a pole between two persons, சுமத்தல். 3. [*prov.*] Indigestion in children, மந்தம். (*c.*)

துட்டாப்புப்போட்டுக்காவ, *inf.* To fasten a burden with a pole and carry it.

துட்டு, *s.* (*Tel.*) A small copper coin, செப்புநாணயம். 2. Money, நாணயம்.

துட்டடிக்க, *inf.* To coin copper money.

துட்டுக்காசு-துட்டுதுக்காணி, *s.* Copper money.

துட்டுவட்டி, *s.* Interest at the rate of a துட்டு to the Rupee for a month.

*துட்டு—துஷ்டு, *s.* Evil, vileness, wickedness, savageness, ferocity, தீமை. (சது.) W. p. 418. DUSHT'HU.

துட்டுக்கட்டை — துட்டுத்தடி, *s.* (*Tel.* దుడ్డు.) A short club, குறுந்தடி.

துட்டுவம், *s.* [*prov.*] A very little, அற்பம்.

*துட்டை—துஷ்டை, *s.* (*masc.* துஷ்டன்.) A vicious, bad woman, வசவி. 2. A ferocious female; [*ex* துஷ்டம்.]

துணங்கறல், *s.* Darkness, இருள். 2. Temple festival or procession, திருவிழா. (சது.)

துணங்கு, *s.* Darkness, இருள். (*R.*)

துணங்கை, *s.* Dancing of devils, or of persons imitating them, striking the elbows on the sides, the hands being raised upright, இருகையுமுடக்கிப் பழுப்புடைமொற்றியாடல். 2. Temple festival or procession, திருவிழா. 3. Dancing, dance, கூத்து. (சது.)

துணர், *s.* A flower, a blossom, பூ. 2. A bunch, or cluster of flowers, பூங்கொத்து. 3. Filaments of flower, பூந்தாது. (*p.*)

துணர், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To form as buds, முகைக்க. (சது.)

துணர்த்தமௌவல். The clustered jasmine.

துணவு, *s.* Quickness, celerity, suddenness, சீக்கிரம். (சது.) 2. A tree, மரம்.

துணி, *s.* A piece of cloth, a rag, a clout, கந்தை. 2. Cloth diminutively, சீலை. (*c.*) 3. A piece, slice, chop, fragment, bit, morsel, துண்டம். 4. Pendent ornaments, hangings, commonly of cloth, தூக்கங்கள். 5. The fifteenth lunar asterism, சோதிநாள். 6. Light, ஒளி. 7. The flag of an idol car, தேர்க்கொடி. (சது.) 8. Ascertainment, certainty, determination; the thing or doctrine assumed or taken as true, தெளிவு.

துணிகட்ட, *inf.* To put on, or wear clothes (*diminutively*).

துணிபிடுங்கி, *appel. n.* A shrub on which are hung small pieces of cloth as an offering to some goddess.

துணிமணி, *s.* Clothes and jewels. (*diminutively spoken.*) (*c.*)

துணிகரம், *s.* Boldness, intrepidity, confidence, assurance, தைரியம். 2. Venturesomeness, daring, presumption, temerity, துணிவு. (*c.*)

துணிகரக்காரன், *s.* A bold, resolute, daring person.

துணிகரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* (*incorrect.*) To be bold, daring, intrepid, to dare, துணிய.

துணி, கிறேன், ந்தேன், வேன், ய, v. n. To be sundered, cut, severed, துண்டாக. 2. v. a. To resolve, determine, purpose, design, எண்ண. 3. To identify, recognize, தெளிய. 4. (c.) To dare, venture, risk, hazard, presume, துணிகரமாக. 5. To attempt, to aim, to endeavor, முயல. 6. To ascertain, form an opinion about, நிச்சயப் படுத்த.

துணிந்தார்க்குத்துக்கமுண்டோ. Will those who have made up their minds to an attempt, regard the consequences?

துணிந்தகம்பம். A daring person; (*lit.*) a post *in surprize or contempt.*

துணிநர், s. (*plu.*) Persons holding undeniable truths. (*p.*)

துணிந்தமனம், s. A bold, daring mind, as of a rash person.

துணிந்தவள், *appel. n.* (*mas.* துணிந்த வன்.) An insolent, forward woman. (*Beschi.*)

துணிந்துசொல்ல, *inf.* To have the boldness to say; to venture to say. 2. To speak with confidence, declare boldly, affirm. 3. To speak with clear and certain knowledge.

துணிந்துநிற்க, *inf.* To be bold, to stand to, persist in, maintain.

துணிந்துமணியங்கட்ட, *inf.* [*prov.*] To persist in a foolish purpose (*in contempt*). 2. To persevere with energy.

துணிபொருள்—துணிவுப்பொருள், s. A thing known and advanced with certainty and confidence. 2. A thing assumed and presumed upon. (*p.*)

துணிபு, *v. noun.* Ascertainment, judgment, determination, conclusion, தெளிவு. 2. Opinion, theory, sentiment, assumption, தீர்ப்பு.

துணிவு — துணிகை — துணிதல் *v. noun.* Confidence, assurance, boldness, தைரியம். 2. Presumption, temerity, audacity, rashness, துணிகரம். (*c.*) 3. Ascertainment, certainty, determination, conclusion, decision, தெளிவு. 4. Opinion founded on facts, knowledge, evidence, &c., தீர்ப்பு. 5. Purpose, design, aim, endeavor, நோக்கம். 6. Sundering, parting, separation, dividing, பிரிவு.

இதேதுணிவு. This is certain, evident, determined.

துணிவுரை, s. One of the fourteen subdivisions of விருத்தியுரை. See உரை.

துணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To cut in pieces, detach, வெட்ட. 2. To saw, sunder, அறுக்க. (*p.*)

துணிக்கை, *v. noun.* Cutting. 2. s. A small piece, slice, &c., துண்டு. (*c.*)

துணிச்சல், s. As துணிகரம். (*R.*)

துணுக்கம், s. Fear, terror, tremor, alarm, அச்சம். 2. Internal sound, as of the beating of the heart, through fear, &c., உள்ளோசை. (சது.)

துணுக்கு, s. Fear, startle, sudden terror, பயங்கரம். (*c.*)

துணுக்கிட, *inf.* To be startled, திடுக்கிட. (*R.*)

துணுக்குத்துணுக்கெனல், *inf.* To be startled, be alarmed.

மனந்துணுக்குத் துணுக்கென்கிறது. The heart palpitates.

துணுக்குற, *inf.* To be startled, struck with fear, பயப்பட.

துணுக்கெறிய, *inf.* To start, startle, as infants, &c.; to jump.

துணுக்கொனல், *v. noun.* Being startled, afraid, அச்சக்குறிப்பு.

துணுக்கை, s. [*improp. for* துணிக்கை.] A piece, a slice, துண்டு. (*c.*)

துணை, s. Escort, convoy, attendant, உதவி. 2. Aid, help, succor, support, resource, சகாயம். 3. Protection, guidance, safe-guard, defence, patronage, ஆதரவு. (*c.*) 4. [*in combination.*] Measure, extent, degree, quantity, number, அளவு. 5. Comparison, parallel, similitude, resemblance, ஒப்பு. 6. Point of a weapon, சல்லியம். 7. Couple, brace, pair, two, இணை. (சது.)

பெரியாரைத்துணைக்கொள். Seek the aid of the great. (*Avv.*)

சாந்துணையுஞ்சஞ்சலமே. There will be trouble till death.

எத்துணை. How much? (நீதிநெறி.) 2. As எத்தனை, how many?

துணைக்கருவி—துணைக்காரணம், s. Means to an end, medium. 2. Implements, tools, instruments. 3. The faculties of the body and mind as organs of the soul in the performance of actions, acquisition of ideas, or knowledge.

துணைசெய்ய, *inf.* To help, succor, support. 2. To patronize, promote, subserve.

துணைச்சொல்—துணைமொழி, s. A word, address, speech, &c., of support, aid, &c., seconding, supporting a previous speaker, &c.

துணைத்தாள், s. Both feet, two feet.

துணைநிற்க, *inf.* To help one in need—as the deity unseen, or a person unexpectedly.

துணையிருக்க, *inf.* To bear one company as the protector of a marriageable girl, that she may not be defiled by demons; of a woman in child-birth; of a new-married couple, &c.

துணைவர், s. (*plu.*) King's ministers, மந்திரிமார். 2. Brothers, friends, near relations, &c.—For the eight classes composing the escort of a king, see எண்வகைத்துணைவர், under எட்டு.

துணைவன், s. A husband, தலைவன். 2. A friend, a confederate, a companion, தோழன். 3. A king's minister, மந்திரி, (சது.) 4. A helper, assistant, convoy, escort, உதவிசெய்வோன்.

துணைவி, s. A wife, மனைவி. 2. A female assistant, a lady's maid, உதவிசெய்பவள். 3. (*R.*) A sister, சகோதரி.

துணைவிட—துணையனுப்ப, *inf.* To send an escort.

துணைவினை, s. Auxiliary verb.

உசாத்துணை, s. One who assists with advice.

உயிர்த்துணை, s. An intimate friend. 2. The wife, மனைவி.

வழித்துணை, s. A fellow traveller, a companion on a journey.

துணைமை, s. Aid, help, resource, &c., உதவி. (நீதிநெறி.)

துணைவு, s. [*prop.* துனைவு.] Quickness, celerity, swiftness, சீக்கிரம். (*R.*)

துண்டம், s. Piece, fragment, bit, துணிக்கை. (*c*) 2. A piece of cloth cut off, துணி. (சது.) 3. Division, compartment, பிரிவு. 4. [*prov.*] A small channel, வாய்க்கால். See கண்டம்.

துண்டமும்பிண்டமும்போதும். A strip of cloth, and a lump of rice will suffice.

துண்டந்துண்டமாய், *adv.* In pieces, parcels, compartments.

துண்டப்பட, *inf.* To be cut or broken in pieces.

துண்டமிழுக்க, *inf.* To make small channels in garden beds, &c. 2. To make a channel.

துண்டம்போட, *inf.* To cut in pieces.

*துண்டம், s. Face, முகம். W. p. 379. Tuṇḍ'a. 2. Nose. மூக்கு. 3. Beak, bill, பறவைமூக்கு. 4. Elephant's trunk, யானைத்துதிக்கை. 5. A rat-snake, சாரைப்பாம்பு. (சது.)

துண்டரிக்கம் — துண்டிரிக்கம், s. (*Tel.* తుంటరికము.) Oppression, குரூரம். 2. Quarrelsomeness, தொந்தரவு.

துண்டரிக்கக்காரன், s. A stiff-necked, quarrelsome person.

துண்டரிக்கம்பண்ண, *inf.* To be obstinate, quarrelsome. 2. To oppress.

துண்டாயம், s. A gold fanam, பொற்பணம். 2. Gold sand, பொன்மணல். (*R.*)

துண்டி, s. [*prov.*] A detached piece of high land, left waste or land surrounded by fields, துண்டுநிலம். 2. A small arm of the sea, கழி; [*ex* துண்டி, *v.*]

துண்டியாயடைக்க, *inf.* To inclose or part off a piece of ground.

துண்டி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To sunder, sever, slice, அறுக்க. 2. To cut, piece, hack, mince, நறுக்க. 3. To tear up, to shred, துண்டுதுண்டாக்க. 4. To cut short one's words, speak in short sentences, or unconnectedly, சொல்லைத்துண்டிக்க. 5. To divide, to parcel out, பிரிக்க. 6. To rebuke sharply, to interrogate pointedly, கடிய. 7. To dispute, question, disprove, மறுக்க; [*ex Sa. Tunna,* cut.] (*c.*)

துண்டித்துக்கேட்க, *inf.* To ask or interrogate sharply or pointedly.

துண்டித்துப்பிடிக்க, *inf.* To interrupt one in speaking, and question him as to his statements. 2. To press one to give reasons for his conduct.

துண்டித்துப்பேச, *inf.* To speak sharply. 2. To speak in short sentences. 3. To speak unconnectedly, incoherently.

துண்டிப்பு, *v. noun.* Sundering, severing, shredding.

துண்டி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. 2. To be cut off, detached, broken, insulated, வெட்டுண்ட. (*c.*) 3. [*prov.*] To swell as the skin from a bite, துண்டுதுண்டாகவீங்க.

துண்டித்துப்போக, *inf.* To be severed.

*துண்டிவிநாயகன், s. Ganesa, as worshipped at Benares, காசிக்கணபதி. See W. p. 361. D'hund'hi.

துண்டீரன், s. A king, இராசன்.

துண்டீரபுரம், s. Conjeveram, as formerly governed by துண்டீரன்.

துண்டு, *s.* Piece, bit, fragment, slice, scrap, morsel, துணிக்கை. 2. Section, division, strip, பங்கு. 3. A chit, billet, ticket or small note, சீட்டு. 4. A little piece of cloth, துணி. (*c.*) 5. [*prov.*] A bale of tobacco, consisting of four small or two large சிப்பம், இரண்டுசிப்பம்புகையிலை. 6. [*in burlesque.*] Loss in trade, or bargaining, from the figure of cutting off, நஷ்டம்.

துண்டாட—துண்டாடிப்போட, *inf.* To cut a board, &c., in pieces.

துண்டுக்காணி, *s.* A piece or strip of land. See துண்டி.

துண்டுச்சீலை, *s.* A strip or piece of cloth.

துண்டுபோட, *inf.* To cut into pieces.

துண்டுபோட்டுத்தைக்க, *inf.* To patch a piece to a tattered garment.

துண்டுப்பலகை, *s.* A board, slab, slate, &c.

துண்டுருட்டி, *s.* Roundness of trunk, &c. 2. A large belly, பெருவயிறு.

துண்டுருட்டிக்காளை, *s.* A fattened bull; sometimes குண்டுக்காளை.

துண்டுவாசிகூட்ட—துண்டுவாசிகூட்டி வாங்க, *inf.* To recover what was lost.

துண்டுவிழ, *inf.* To be cut into pieces, broken into fragments. 2. [*in burlesque.*] To happen or befall as a loss in trade, as a theft, &c.

அந்தமரம்மூன்றுதுண்டுவிழும். That tree will form three pieces.

துண்டுகத்திரி, *s.* A venomous kind of worm, ஓர்விஷப்புழு. Compare கத்திரி.

துண்ணிட, *inf. v. n.* To start, be struck with fear, திடுக்கிட.

துண்ணென, *inf.* To startle, be frightened.

துண்ணெனத்துறக்க. To relinquish worldly things in alarm. (*p.*)

***துதம்**, *s.* Motion, vibration, oscillation, agitation, அசைவு. W. p. 445. DHUTA.

துதமுகம், *s.* One of the thirty-two gestures, moving the head to the right and left; refusal, வேண்டாமைக்கு இடம்வலம் தலையாட்டல். (See முகம்.) (சது.) 2. Shaking or trembling of the head, through age, தலையாட்டம். 3. Motion of the hooded serpent's head, நாகந்தலையசைக்கை.

***துதி — ஸ்துதி**, *s.* Praise, eulogy, panegyric, தோத்திரம். (*c.*)

துதிசெய்ய — துதிசொல்ல, *inf.* To praise, to thank.

துதிசெலுத்த, *inf.* To render thanks.

துதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To praise, eulogize, flatter, தோத்திரிக்க. 2. [*vul.*] To think, நினைக்க.

கனவிலும்அதைத்துதிக்கமாட்டேன். I do not think of it, even in dreams.

துதித்துக்கொண்டாட, *inf.* To celebrate.

துதிநிந்தை—நிந்தாஸ்துதி, *s.* Irony, இகழாஇகழ்ச்சி.

துதித்தல்—துதிப்பு, *v. noun.* Praising, eulogizing, ஸ்தோத்திரிக்கை.

துதிக்கை, *s.* Elephant's proboscis, தும்பிக்கை. 2. *v. noun.* As துதித்தல்.

துதியம், *s.* The pulp of Tricosanthes palmata, சவரிலோத்திரம். (*R.*)

***துதியை**, *s.* The second day of the moon, இரண்டாந்திதி. W. p. 433. DVITEEYA.

துதை, *s.* Closeness, a crowded state, நெருக்கம். (*p.*)

துதை, இறது, ந்தது, யும், ய, *v. n.* To be close or crowded, நெருக்க. 2. To be copious, to abound, to be intense, மிகுதிப்பட.

துதை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To straiten, to press together, நெருக்க.

துத்தம், *s.* Tenor, in music, மத்திமநாதம். 2. The second tone of the gamut, or ரி modulated by the tongue, நாவிறுப்பிறக்குமிசை. (See இசை.) 3. String in the guitar corresponding to the ரி tone, யாழினரம்பு. 4. Dog, நாய். 5. Belly, வயிறு. 6. A grass, நாண்முகப்புல், Sacchar.

துத்தநா, *s.* A kind of grass, முசற்புல்.

***துத்தம்**, *s.* Milk. 2. A collyrium of either blue or white vitriol, கண்மருந்து. (சது.) W. p. 380. TUTHA.

வெள்ளைத்துத்தம். White vitriol, sulphate of zinc. (See also பாற்றுத்தம், மடற்றுத்தம், and மயிற்றுத்தம்.)

துத்தநாகம்—துத்துநாகம், *s.* A kind of metal, spelter, or impure zinc, நவலோகத்தொன்று.

துத்தநாகபஸ்பம், *s.* Flowers of zinc.

துத்தநாகமணல், *s.* Sand containing zinc.

துத்தந்துருசு, *s.* Blue and white vitriols.

துத்தபாஷாணம், *s.* A kind of natural arsenic.

துத்தாஞ்சனம், *s.* A collyrium, as துத்தம்; [*ex* அஞ்சனம்.]

துத்தி, *s.* An eatable, any thing proper to be eaten, உண்டற்குரியன; [*ex* து, *v.*] 2. The ornamented spots on the neck of the cobra, பாம்பின்படப்பொறி. 3. Yellow, or tawny spreading spots on the skin. (See தேமல்.) 4. A plant, a species of mallow, ஓர்செடி, Indian marshmallow, Sida Mauritiana. (*Ains.* v. 1, p. 205.)—*Note.* There are different kinds, as எலிசெவித்துத்தி, Evolvus emarginatus; ஐயிதழ்த்துத்தி, of five petals; ஒட்டுத்துத்தி, Urena sinuata; ஒரிலைத்துத்தி, கண்டுதுத்தி, Sida acuminata; காட்டுத்துத்தி, Sida hirta; கொடித்துத்தி, Sida montana, சிறுதுத்தி; செந்துத்தி, Hibiscus obtusifol, *Willd*; நாமத்துத்தி, Sida cristata; நிலத்துத்தி, Sida cordifolia; பணிகாரத்துத்தி; பெருந்துத்தி, Sida Asiatica; பொட்டகத்துத்தி, Hibiscus Abelmoschus; also இரட்டகத்துத்தி; வயற்றுத்தி, and வட்டத்துத்தி.

துத்திப்பூக்கிரந்தி, *s.* An eruption. See கிரந்தி.

***துத்தியம்—ஸ்துத்தியம்**, *s.* Eulogy, panegyric, applause, commendation; thanksgiving, துதி. 2. Worship, homage, veneration, வணக்கம். (*c.*)

துத்தியம்பண்ண, *inf.* To eulogize, applaud. 2. To worship.

துத்து, *s.* Stuffing of wool, or goat's hair into seats, couches, or saddles, &c., சேணப்பஞ்சு. (*Beschi.*) 2. (*Old Dic.*) A lie, பொய்.

துத்தன்—துத்துக்காரன், *s.* A fraudulent fellow, கபடன்.

துக்துக்கம்பளி, *s.* A blanket.

துத்துமாற்று, *v. noun.* [*prov.*] Artifice, guile, knavery, chicanery, தந்திரம்.

துத்துப்போடுதல், *v. noun.* [*vul. for* தூர்த்தல், which see under தூர், *v.*]

***துந்துமாரி**, *s.* One of the seven of the first class of kings famed for liberality, முதலெழுவள்ளலிலொருவன். (சது.)

துந்துமி, *s.* [*prov.*] (*contracted from* தூவுந்துமி.) Small, drizzling rain, மழைத்தூவி.

***துந்துமி**, *s.* (*St.* துந்துபி.) A large kettle-drum, பேரிகை. (*c.*) 2. A drum in general, பறைப்பொது. 3. An Asura famous in Hindu mythology, ஓரசுரன். 4. The fifty-sixth year of the Indian cycle, ஓர்வருடம். W. p. 414. DUNDUBHI.

துந்துமிமுழங்க, *inf.* To sound, like a large drum.

துந்துமியாட்டம், *s.* A great noise, bustle, clamor, பேரொலி. (*Old Dic.*)

துந்துருபாவை — துந்துருமாலை, *s.* [*prov.*] A fidgety woman, a busy-body, துடிப்புள்ளவள்.

துபாக்கி—துப்பாக்கி, *s.* (*Hind. in Jaffna,* தவக்கு.) Firelock, fusil, musket, gun.

துபாக்கிகெட்டிக்க, *inf.* To load a gun.

துபாக்கிக்காது—துபாக்கிவர்த்திவாய், *s.* Touch-hole of a gun.

துபாக்கிக்குண்டு, *s.* A musket-ball.

துப்பாக்கிக்குழல், *s.* The barrel of a musket.

துபாக்கிக்குதிரைநிமிர்த்த, *inf.* To fix the cock of a gun for a discharge.

துப்பாக்கிக்குந்தா—துபாக்கிப்பிடங்கு, *s.* The butt end of a musket.

துபாக்கிமருந்து, *s.* Gun-powder.

துபாக்கிரவை, *s.* Small shot.

***துபாசி—துபாஷி—துப்பாசி**, *s.* (*Hind.*) An interpreter, இருபாஷையறிந்தோன். (*Sa. Dvibhashi.*) 2. A dubash, a servant, உத்தியோகஸ்தன். (*c.*)

துப்பாசித்தனம், *s.* Interpreting.

துப்பாசித்தனம்பண்ண, *inf.* To interpret.

துப்பகம், *s.* (*a change of* துப்பு.) Ghee, நெய். (சது.)

***துப்பட்டா—துப்பட்டி**, *s.* (*Hind.*) A large kind of cloth, a sheet, a table-cloth, a cloak consisting of two cloths joined together, ஓர்சீலை. (probably *Sa. Dvipat'a.*)

துப்பட்டிப்போர்வை. Covering one's self with a spread cloth.

துப்பரவு, *s.* (*for* துப்புரவு.) Purity, excellence, &c. (*c.*)

துப்பறவு, *s.* As துப்பரவு. (*R.*)

துப்பாக்கி, *s.* Gun. See துபாக்கி.

துப்பிரசம், *s.* A plant and its root, கருஞ்சொண்டி.

துப்பு, *s.* Provision, food, உணவு. 2. Experience, enjoyment, &c., அநுபவம். (See து, *v.*) 3. Ghee, clarified butter, நெய். 4. Drink, beverage, பானம். 5. Copiousness, abundance, மிகுதி. 6. Vigor, strength, valor, வலி. 7. Aid, assistance, help, சகாயம். 8. Means, துணைக்காரணம். 9. Weapons in general, ஆயுதப்பொது. 10. Cleanness, purity, சுத்தம். 11. Intellect, intelligence, அறிவு. 12. Red, சிவப்பு. 13. Red wax, gum-lac, அரக்கு. 14. Red coral, பவளம். 15. Beauty, excellence, பொலிவு. 16. Hatred, பகை. 17. Ability, dexterity, expertness, address, சாமர்த்தியம். 18. Investigation, search, ஆராய்ச்சி. 19. Guilt, mistake, குற்றம். 20. A means, an instrument, துணைக்கருவி. (சது.) 21. [*prov.*] Rust, as துக்கு. (*c.*)

துப்புக்கெட்டநடத்தை, *s.* Uncomely or indecent conduct, uncleanness.

துப்புக்கெட்டவன்—துப்பற்றவன், *appel. n.* A person of no address, one who does nothing expertly, an unhandy person. 2. An indecent person.

துப்புத்துருவிசாரிக்க — துப்புத்துருப்பிடிக்க, *inf.* To spy out, act the part of a spy. 2. To pry into, inquire all about one, &c.

துப்புப்பார்க்க, *inf.* To trace one's footsteps, track a thief. (*Beschi.*)

துப்பு, கிறேன், துப்பினேன், வேன், துப்ப, *v. n.* To spit, eject from the mouth, spit out from the mouth, உமிழ. (*c.*)

அவனைக்காறித்துப்புகிறார்கள். They utterly reject or execrate him.

துப்புண்ணி, *appel. n.* One fit to be spit upon.

துப்பல், *v. noun.* Spitting, saliva, spittle, உமிழ்நீர். 2. [*in play.*] A word calling for a short respite or cessation, விளையாட்டைநிறுத்தமோர்குறுஉக்குறி. (*c.*)

துப்பல்விட்டேன். I have closed the respite.

துப்பற்காளாஞ்சி — துப்பற்படிக்கம், *s.* A spitting pot.

துப்பு, *v. noun.* Spittle.

துப்புரவு, *s.* Enjoyment of the senses, gratification, ஐம்பொறிநுகர்ச்சி. 2. Experience, fruition, fruit of actions, அநுபவம். 3. Great beauty, அலங்காரம். 4. Established custom, order, propriety of conduct, முறைமை. 5. (*c.*) Purity, cleanness, சுத்தம். 6. Entireness, முழுமை. 7. Excellence, மேன்மை.

துப்புரவாயில்லை. None at all.

துப்புரவாக, *inf.* To be clean, pure. 2. To be clean gone, removed, extirpated, &c.

துப்புரவாக்க, *inf.* To clean, cleanse, purify.

துப்புரவாயழிய, *inf.* To be entirely destroyed, perish utterly.

துப்புரவானவன், *s.* (*fem.* துப்புரவானவள்.) A clean or cleanly person. 2. An upright, sincere, chaste man; one of good caste, attentive to religious duties, &c.

துப்புரவானவேலை, *s.* Neat, finished or perfect work.

துமாலா—துமால், *s.* (*Hind.*) Granting land free of taxes, இறைவாங்காமை.

துமாலா, *s.* (*Hind.*) The last process in lengthening gold or silver threads, கடைமிழுப்புச்சரிகை.

துமானம், *s.* A casket for jewels, ஆபரணப்பெட்டி. (சது.)

துமி, *s.* Rain drops, மழைத்துளி. 2. Light, drizzling rain, சிறுதிவலை. (சது.)

துமிதுமிக்க—துமிவிழ, *inf.* To fall as light rain.

துமி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To be cut off, severed, sundered, வெட்டுண்ணை. 2. To be dispelled, as ignorance, மடமையற. (*p.*)

துமி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To drizzle, rain softly, தளிக்க. (*c.*)

துமிப்பு, *v. noun.* Drizzling, sprinkling as rain, தளிப்பு.

துமி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To cut, cut off, வெட்ட. 2. To sunder, sever, அறுக்க. (*p.*)

துமிப்பு, *v. noun.* Cutting, severing, வெட்டுகை.

துமிதம், *s.* Drop, flirting drop, particle of water, &c., சீர்த்துளி. (*p.*)

தும், *s.* Dust, துகள். (*Tel. loc.*) 2. An affix of the first person plural, உளப்பாட்டுத்தன்மைப்பன்மைவிகுதி.

தும்பறக்கஅடித்தான். He beat him so that the dust flew.

தும்பகா, *s.* A plant, தும்பை, Phlomis, *L.*

*தும்பரம், *s.* (*a contraction of* உதும்பரம்.) The அத்தி tree, Ficus, *L.*

*தும்பராஷ்டகம், *s.* A medicinal root, கோஷ்டம், Alpinia, or Costus, of Roxb.

*தும்பன், *s.* (*fem.* தும்பி *or* தும்பிச்சி.) A wicked person, தீயவன்; [*ex Sa. Tumpha,* to hurt.] Compare அம்பன். [*prov.*]

தும்பல், *s.* Sneezing, தும்மல். (*R.*)

தும்பால், *s.* (*Hind.*) Grant of land free from taxes, துமால்.

*தும்பி, *s.* A long gourd, bottle-gourd, சுரைக்கொடி, Cucurbita lagenaria, *L.* W. p. 380. Tumbi.

தும்பி, *s.* Elephant, யானை. 2. Dragon-fly, கருவண்டு. 3. Bee, beetle, வண்டு. 4. A male bee or beetle, வண்டினாண். (சது.) 5. [*prov.*] A kind of fish, ஓர்மீன். 6. A sugar cane, கரும்பு. 7. A plant, கொத்தான். 8. (*for.*) A tree whose fruit yields a strong glue, பனிச்சைக்காய், Embryopteris glutinifera. (*Ains.* v. 2. p. 278.)

தும்பிக்கை, *s.* Elephant's trunk, (*lit.*) elephant's arm, துதிக்கை; [*ex* கை.]

தும்பிபறத்தல், *v. noun.* A girl's play in imitation of a beetle's flying.

தும்பிமீன், *s.* A kind of fish.

தும்பியூத, *inf.* To breathe with a shrill sound, as one senseless from a fall or blow. 2. To blow up bubbles from the mouth, or with soap in water. 3. To make a singing noise, or buzz.

தும்பிலி, *s.* A tree whose fruit is eatable, ஓர்மரம், Diospyros melonoxylon, *Ains*; [*ex* தும்பு *et* இலி.]

தும்பு, *s.* Fibre of vegetables, நார். 2. A rope for tying beasts with, ஓர்கயிறு. (*c.*) 3. Spot, blemish, defect. (See வம்பு.) 4. A button or ball to fasten a dress. 5. [*loc.*] Dust, as தும், துகள். 6. [*prov.*] A kind of fringe to a shawl, சிம்பு.

சீலைகிழிந்துதும்புதும்பாய்ப்போயிற்று. The cloth is torn into threads.

ஏசித்தும்புபிடுங்குகிறார்கள். They abuse and tear out the fibres; i. e. taunt each other with blemishes in character. [*prov.*]

தும்புக்கயிறு, *s.* A rope of cocoa, palmyra or other fibres.

தும்புச்சால்வை, *s.* A shawl with a fringe.

தும்புபோட, *inf.* To twist or make a rope for tying beasts.

தும்புவாங்க, *inf.* To strip off fibre.

தும்பு, *v.* [*prop.* தும்மு.] To sneeze.

*தும்புரு, *s.* One of the celestial musicians, who, as நாரதன், is famed for his skill on the lute, ஓர்கந்தருவன். W. p. 380. Tumburu. 2. A kind of lute or guitar, as தம்புரு, நரம்புக்கருவியினொன்று.

தும்பை, *s.* A flowering shrub of several species, ஓர்பூடு. 2. A creeper with edible fruit, called also கறித்தும்பை. (*c.*) 3. One of the eight kinds of garlands worn by warriors in battle, போர்செய்வோர் அணியும் மாலை. 4. [*prov.*] A fish of two species, one large, the other small, ஓர்மீன். 5. (சது.) Assemblage, assembly, crowd, கூட்டம். 6. Betel-leaf, வெற்றிலை. 7. War, fighting, போர்செய்தல்.—The species of the flowering தும்பை are; கவிழ்தும்பை, Borago Ind. *L*; கழுதைத்தும்பை, Borago Zeylan, *L*; காசித்தும்பை, பேய்த்தும்பை, Phlomis Zeylanica, *L.* Of the running தும்பை, there are two species, கறித்தும்பை or காய்த்தும்பை, a fruit bearing தும்பை and பூத்தும்பை, a flowering creeper.

தும்பைப்பூப்போலேசாதம். Rice as white and fine as தும்பை flowers.

தும்பைக்காய், *s.* The edible fruit of the தும்பை.

தும்பைக்கொடி, *s.* The தும்பை creeper.

தும்பைப்பாளை, *s.* The large தும்பை fish.

தும்பைமாலைசூட, *inf.* To wear the தும்பை garland. 2. A panegyric on one who being crowned with a wreath of தும்பை, fought the enemy. See பிரபந்தம்.

தும்பைமீன், *s.* The தும்பை fish.

தும்மட்டி—தும்முட்டி, *s.* A plant whose seeds are medicinal, callous leaved Bryonia, ஓர்செடி. See முட்டி.

தும்மு, *s.* A gnat, கொசுகு. (சது.) 2. See தும்மு, *v.*

தும்மு, கிறேன், தும்மினேன், வேன், தும்ம, *v. n.* To sneeze. 2. To arise, revive, உயிர்க்க. 3. *v. a.* To emit, let go, leave, விட. (*c.*)

தும்மல்—தும்மு, *v. noun.* Sneezing, தும்முதல்.

தும்மல்வருகிறது. Sneezing comes.

தும்மற்காதல், *s.* A prognostic from sneezing.

தும்மற்சாத்திரம், *s.* The art of divination by sneezing.

துயக்கம்—துயக்கு, *s.* Fatigue, reduction of strength or courage, தளர்வு. (*p.*)

துயக்கு, கிறேன், துயக்கினேன், வேன், துயக்க, *v. a.* To slacken, relax, தளர்த்த.

துயங்கு, கிறேன், துயங்கினேன், வேன், துயங்க, *v. n.* To be reduced, fatigued, to faint, தளர. See தயங்கு. (*p.*)

*துயம், *s.* A pair, a couple, இரண்டு. (See த்வயம்.) 2. A banner, a flag, கொடி. See துசம், துவசம்.

துயரம், *s.* Sorrow, grief, sadness, trouble, துக்கம். 2. Compassion, பரிதாபம். 3. Calamity, உபத்திரவம். (*c.*) 4. Pain, distress, affliction, நோவு.

துயரந்தீருதல், *v. noun.* Being freed from sorrow.

துயரப்பட, *inf.* To commiserate. (*c.*)

துயரு — துயர், கிறேன், துயர்ந்தேன், வேன், துயர, v. n. To grieve, sorrow, lament, துக்கிக்க. 2. To be in a state of suffering, துன்பப்பட. 3. [improp. for தொடரு.] To follow, to prosecute, &c.

துயர், s. Affliction of mind or body, துன்பம். (c.)
துயரடி, v. noun. [prov.] Fatigue, drooping, fainting, as தியரடி, சோர்வு.
துயருறுவோன், appel. n. A poor, afflicted person.

துயலு—துயல், கிறது, துயன்றது, துயலும், துயல, v. n. To move, wave, vibrate, shake, அசைய. (p.)
துயல்வர, inf. To shake, vibrate, vacillate, wave, அசைய—used in reference to a few inanimate things, as a swing, flag, &c.

துயவு, s. Misapprehension. See துய்.

துயிலு — துயில், கிறேன், துயின்றேன், வேன், துயில, v. n. To sleep, உறங்க. (p.)
துயிலார் — துயிலாதார், appel. n. (pl.) The gods, the sleepless ones, தேவர்.
துயிலாதாராலயம், s. Maha Meru, (lit.) the temple of the sleepless ones.
துயிலிடம், s. A sleeping contrivance, as a bed, couch, mat; a sleeping place, a dormitory, மக்கட்படுக்கை. (சது.)
துயில்வோன், appel. n. A sleepy person, உறங்குவோன். (நன்.)
துயிலல்—துயில்வு, v. noun. Sleeping, நித்திரைசெய்கை.
துயில்தல்—துயிறல். As துயிலல்.

துயில், s. Sleep, நித்திரை. (p.)
துயிலுணர, inf. To awake, arouse from sleep.
துயிலெடை, v. noun. Rousing one from sleep.
துயிலெடைநிலை, s. A poem sung to rouse a great person from sleep, ஓர்பிரபந்தம். See பிரபந்தம்.
துயில்கூர, inf. To sleep.

துயிற்று, கிறேன், துயிற்றினேன், வேன், துயிற்ற, v. a. To put one to sleep, நித்திரைசெய்விக்க. (p.)

துயுலி, s. A kind of greens, தொய்யில், Achyranthes polygonoides, Retz.

துய், s. The soft fibre of cotton next to the thread, as drawn out in spinning, நூற்கும்பஞ்சிற்றொடர்ந்தநுனி. 2. Misconception, misapprehension, அறிவின்றிரிபு.—Note. துயவு is given in திவாகரம், for the last meaning.

துய், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To spin out, நூற்க. 2. (சது.) To eat, feed, take a meal, உண்ண. 3. To enjoy by means of the senses, ஐம்பொறியால்நுகர. 4. To experience, enjoy or suffer as the fruits of actions, வினைப்பயன்அநுபவிக்க. Compare து, v.
காமந்துய்க்க, inf. To enjoy the pleasure of love.
துய்ப்பு—துய்த்தல், v. noun. Eating, enjoyment, experience. See துப்பு.

துய்ய, adj. Pure, clear, holy, சுத்தமுள்ள.
துய்யது, appel. n. That which is clean, unadulterated, சுத்தமுள்ளது. 2. What is transparent, lucid, limpid, தெளிவானது.
துய்யதாய், adv. Purely, neatly, intelligibly.
துய்யசோதி, s. A clear light. 2. Deity, கடவுள்.
துய்யபால், s. Unadulterated milk.
துய்யவெள்ளை, s. Pure white.
துய்யவன்—துய்யோன், s. A holy person, as தய்யன், 1.
துய்யன், s. A pure or sacred person, பரிசுத்தன். 2. Sand containing silver, வெள்ளிமணல்.
துய்யனோரவியாக்கி, appel. n. A kind of prepared arsenic, பவளப்புற்றுப்பாஷாணம்.
துய்யாள், s. A spotless, fair woman, சுத்தமுடையாள். 2. Sarasvati, சரசுவதி.

துர, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, v. a. To send away, cause to go, shoot arrows, &c., செலுத்த. (p.)
பகைவனைத்துரந்தான். He repulsed the enemy.
துரப்பு—துரத்தல், v. noun. Driving, causing to go, செலுத்துகை. 2. Discharging, emission, விடுகை. 3. Dispelling, chasing, scaring away, அகற்றுகை.

*துரகம்—துரகதம்—துரங்கம், s. A horse, குதிரை. W. p. 380. TURAGA, TURANGA. 2. A kind of natural arsenic, குதிரைப்பற்பாஷாணம்.
துரககதி, s. Speed of the horse, குதிரைப்பாய்ச்சல். 2. Paces of the horse, குதிரைநடை. There are five; viz.: 1. மல்லகதி, the jumping pace of a wrestler, a gallop. 2. மயூரகதி, the even pace of the peacock. 3. வானரகதி, the pace of the monkey; 4. விடபகதி, the short trotting pace of the bull, or according to some, சசகதி, the pace of the hare. 5. வியாக்கிரகதி, the swift bounding pace of the tiger—according to some, சரகதி, the flight of the arrow.—Five other paces are given; viz. 1. தௌரிதகம், a quick pace. 2. ஆக்கிராந்திகம், a rough trot. 3. வல்கிதம், an amble. 4. இரேசிதம், a canter. 5. புலுதம் or முழுவோட்டம், a full gallop.

துரத்து, கிறேன், த்தினேன், வேன், துரத்த, v. a. To drive or chase away, scare off beasts, birds, &c., beat away flies, &c., செலுத்த. 2. To dismiss, reject, expel a servant, &c., தள்ளிவிட. 3. To run after in order to catch, as a thief, or game, தொடர. 4. To dispel, remove, அகற்ற. (c.)
துரத்திப்பிடிக்க, inf. To run after and catch one.
துரத்திவிட, inf. To chase or fray away.

*துரந்தரன், s. One who has assumed a responsibility, charge of a business, a family, a kingdom, &c., பாரஞ்சுமப்போன். 2. One heartily and actively engaged in a pursuit, முயன்றுநிற்போன்; [ex துரம் et தரன், who has.]
காரியதுரந்தரன், s. An attorney, agent, procurator, steward. See காரியம்.
நியாயதுரந்தரன், s. A lawyer, a vakeel. See நியாயம்.

*துரபிமானம், s. Dishonor, disgrace, discredit, வீண்பெருமை; [ex துர், evil.]

துரப்பணம், s. (also துறப்பணம்.) A centre bit or drill, தச்சர்கருவியிலொன்று. (c.)

*துரம், s. A charge, a trust, burden, weightiness, பொறுப்பு. W. p. 445. DHUR'A.
துரக்காரர்—துரந்தரர், s. Those entrusted by others with important concerns.

துரவு, s. An unwalled well or reservoir, a hole or excavation to get water, கூவம். 2. A large or deep well, கிணறு. (c.)
துரவுச்சட்டம், s. A wicker-work—curb at the bottom of a well.
துரவுமுழுக, inf. [loc.] To sink a well by gradually lowering a curb.

*துராகதம் — துராகிருதம், s. Misconduct, misbehaviour, irregular or wicked action, தீத்தொழில்; [ex துர், evil.] (c.)
துராகிருதஞ்செய்கிறவன். One who misconducts himself.

துராலேபம், s. A medicinal plant, சிறுகாஞ்சொறி, Fragia, L.

துரால், s. A chip, a straw, a blade of grass, a trifle, செத்தை. 2. Affliction, distress, sorrow, துன்பம். (சது.)

துரிசு, s. Sorrow, affliction, distress, துன்பம். (சது.) 2. Fault, defect, குற்றம். 3. [improp. for துசு.] Verdigris, &c.

துரிஞ்சில், s. A bat, வௌவால். (c.) 2. The உசிலமரம். (சது.)

*துரிதம் — துருதம், s. Haste, speed, quickness, swiftness, velocity, expedition, சீக்கிரம். W. p. 394. TVARITA. 2. The quickest movement in music, or dancing, ஓர்தாளம். 3. Vice, wickedness, sin, turpitude, பாவம். (Sa. Durita.) 4. Destruction, ruin, annihilation, கேடு. 5. Agitation of mind, perturbation, confusion, கலக்கம். 6. Affliction, sorrow, distress, துன்பம்.
துரிதமடிக்க, inf. [prov.] To beat drums to the quickest movement.
துரிதம்பண்ண, inf. To hasten, hurry, move or act with expedition.
துரிதம்போட, inf. To dance with a quick step. 2. [prov.] To persist in an improper request.

*துரியம், s. Bearing, carrying, being fit or able to bear, சுமத்தல். 2. A beast of burden, பொதியெருது. W. p. 445. DHUREEJA, DHURYYA. 3. The fourth of the five அவத்தை, or stations of the soul. (See அவத்தை.) 4. The highest degree of the சுத்தம் state, that in which the ascetic attains entire quiescence, &c. (See சுத்தநிலை.) 5. The Divine Being or universal spirit, பரமாத்துமா.
துரியர், s. (plu.) Souls in the highest degree of the சுத்தம் state, சுத்தாத்துமாக்கள்.
துரியாதீதம், s. The fifth and last state of the soul. (See அவத்தை.) 2. The highest state of souls when superior to, or completely free from corporeal entanglements, ஆன்மாக்கள்மிகத்தூய்மையாய்நிற்கும்நிலை; [ex அதீதம்.]

*துரியோதனன், s. Dury'od'hana the eldest of the hundred sons of திரிதராட்டிரன், a king famous in the wars of Mahabharata, சுயோதனன்.

*துரி, s. A brush or fibrous stick used by weavers to clean and separate the threads of the woof, பாவாற்றி. W. p. 381. TUREE.

துரீல், s. Suddenness, சடிதி. (R.)
துரீலென்றுள்ளேபுகுந்தான். He came suddenly.

துரு, s. Rust, இரும்புக்கறை. 2. Verdigris, களிம்பு. (c.)

துருப்பிடிக்க, *inf.* To rust, gather rust. 2. [*for* துருவிப்பிடிக்க.] To search out. See துப்புத்துருப்பிடிக்க.

*துருகம், *s.* As துருக்கம், *Sa.* (*R.*)

துருக்கம், *s.* Musk-cat, கஸ்தூரிமிருகம். 2. The குங்குமமரம், an aromatic tree. 3. Perturbation, confusion of mind, கலக்கம். (*in* திவா. தருமம்.) 4. Desert, forest, காடு. (சது.)

*துருக்கம், *s.* A mountain fortress, stronghold, fastness, மலையின்மேற்கோட்டை. (சது.) W. p. 415. DURGA.

துருக்கல், *s.* A kind of red stone, Laterite, செம்புறைக்கல். See கல்.

*துருக்கு, *s.* (*St.* துருஷ்கம்.) Turkisthan, the original country of the Turks, துருக்கர்தேசம். W. p. 381. TURUSHKA. 2. The caste or race of Moors, or Mohammedans, மிலேச்சசாதி. 3. Language of the Moors, ஓர்பாஷை.

துருக்கர், *s.* (*com.* துலுக்கர்.) (*pl.*) Turks, one of the classes of Mohammedans of Hindustan.

துருக்கி, *s.* A large Turkish horse, துருக்கதேயத்துக்குதிரை. 2. (*modern.*) As துருக்கு.

துருசி — துரிசு, *s.* Verdigris, copperas, sulphate of copper or blue vitriol, மயிற்றுத்தம். 2. Spot, dirt, blemish, stain, defect, மாசு.

துருசுபட, *inf.* To become spotted, stained, defective.

துருசு, *s.* Haste, speed, சீக்கிரம். 2. See துருசி. (*c.*)

துருசுபண்ண, *inf.* To hasten, hurry.

துருஸ்து, *s.* (*Pers.*) Repair, mending, பழுதுபார்த்தல். (*c.*)

துருஸ்தாக்க — துருஸ்துசெய்ய — துருஸ்துபண்ண, *inf.* To repair, amend.

*துருதம், *s.* Quickness, &c. See துரிதம்.

துருதுரு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be fidgety, restless, to make idle motions or gestures, குடுகுடுக்க. 2. To quiver, as the lips or tongue through desire to speak, or the hand itching to strike, துடிதுடிக்க. 3. To be in too great haste, ஆத்திரப்பட. (*c.*) [*ex Sa. Dru*, to move, to hurt.]

துருதுருத்தகை, *s.* An itching hand, ready for mischief.

துருதுருத்தபிள்ளை, *s.* A fidgety child.

துருதுருத்தவாய், *s.* Pertness, impertinence, an unrestrained tongue.

துருதுருபாவை, *s.* [*prov.*] A restless, fidgety girl. See துந்துருபாவை.

துருதுருப்பு, *v. noun.* Restlessness, impatience, அமைவின்மை.

துருதுரெனல், *v. noun.* Being restless, impatient, uneasy, always in motion.

துருதுரும்பை, *s.* A child's play, ஓர்பிள்ளைகள்விளையாட்டு. (*R.*)

*துருதை, *s.* Itching, தினவு. 2. (*fig.*) An itching desire, eagerness, சுறுசுறுப்பு.

*துருத்தி, *s.* A bellows, உலைத்துருத்தி. 2. A leathern bag or bottle for carrying water, &c., நீர்த்துருத்தி. 3. A kind of leather squirt for sprinkling perfumed water, &c. (See மட்டுத்துருத்தி.) (*c.*) W. p. 420. DRUTI. 4. (சது.) Islet, spots of dry land in a river, ஆற்றிடைக்குறை.

துருத்திக்கழுத்து — துருத்திக்குழற்பண்ணை — துருத்திக்குழாய் — துருத்திமூக்கு, *s.* The nose of a bellows made of a sheep skin, being the neck of the skin.

துருத்திப்பாணம், *s.* A leathern bag filled with gun powder used as a rocket, or to blow open a gate. &c.

துருத்தியூத, *inf.* To blow a bellows.

*துருத்தூரம், *s.* The ஊமத்தை or thorn apple-plant, Datura, *L.* called also Stramonium. See தூர்த்தூரம்.

துருந்து, கிறேன், துருந்தினேன், வேன், துருந்த, *v. a.* To enlarge a hole or cavity, துளைபருக்கப்பண்ண. 2. To explore, examine, ஆராய.

*துருபதன், *s.* King of Panchala and father of Dropadi, துரோபதைதந்தை.

துருபவருணி, *s.* A shrub, காட்டாமணக்கு, Jatropha, *L.*

துருப்பணம், *s.* (*com.* துரப்பணம்.) The carpenter's bit or drill, தச்சர்கருவியிலொன்று.

துருப்பிடிக்க, *inf.* [*improp. for* துருவிப்பிடிக்க.] To trace out a thief, to search for a thing stolen, &c., தேடிபார்க்க. (*c.*) See under துரு.

*துருமம், *s.* Tree in general, மரப்பொது. (சது.) W. p. 430. DRUMA. 2. Perturbation of mind, மனக்கலக்கம். (திவா.)

*துருமோற்பலம், *s.* The கோங்கு tree. (சது.) W. p. 430. DRUMOTPALA.

துரும்பு, *s.* A straw, rush, splinter, sliver, திரணம். 2. [*in card play.*] The *trump.* (*c.*) 3. [*loc.*] A token of divorce.

துரும்புபோலேபோனான். He is greatly emaciated.

துரும்பைத்தூணாக்குகிறான். He exaggerates the fault; (*lit.*) he makes a pillar of straw.

துரும்பன், *s.* [*prov.*] A man of the lowest caste, formerly required to wear a rattling ola to give notice of his approach, and to hide himself on meeting a person of good caste; he is the washerman of other low castes, ஈனன்.

துரும்பாட்டம், *s.* Meagerness, thinness, like a rush; [*ex* ஆட்டம், likeness.] 2. *v. noun.* Playing with the *trump* in cards. 3. A play of girls in sand, with a splinter.

துரும்புகொடுக்க, *inf.* To give a straw to a wife in token of divorce. (*Beschi.*)

துரும்புவாங்க, *inf.* To take the straw; i. e. accept the divorce.

*துருவண்ணம், *s.* Silver, வெள்ளி. W. p. 417. DURVVARNA. (சது.)

*துருவம், *s.* Immutability, steadiness, stability, அசையாமை. 2. The north pole-star, துருவநட்சத்திரம். 3. The pole of any great circle of the sphere, particularly either of the celestial poles, பூசக்கரத்தின்முனை. 4. A measure in music. (See சத்ததாளம்.) 5. Distance of a planet from the beginning of the siderial Zodiac, கிரகபுடம். 6. One of the twenty-seven astrological yogas, நித்தியயோகத்தொன்று. W. p. 448. D'HRUVA. 7. Longitude of aphelion or apogee. 8. Epoch longitude of a planet, especially in combination with மூலம், as மூலத்துருவம். 9. The fraction of the week remaining at the commencement of the year, which is to be added to the numbers in சக்கிரமவாக்கியம் for the beginning of the months. 10. [*improp. for* துருக்கம்.] A hill fort. 11. [*prov.*] Dexterity in accomplishing a thing, a stratagem, device, உபாயம்.

துருவங்கட்ட, *inf.* To invent a method for finding out an eclipse, or other astronomical phenomenon, கிரகணமுதலியனஅறிதருகருவியாக்க. 2. To form a rule for any mathematical calculation, &c., குட்சுமவழியுண்டாக்க. 3. To construct a rule for forming mystical or magical circles, &c. 4. (*fig.*) To devise means or expedients, உபாயந்தேட.

துருவாக்ஷரம் — துருவாட்சரம், *s.* [*in Hindu astron.*] The longitudinal distance of the sun, or a planet, from the first of Aries, at the end of synodic periods, as found in சோதிடவாக்கியம்.

துருவன், *s.* [*in mythol.*] Dhruva the grandson of மனு and son of உத்தானபாதன். 2. The pole star, personified by the demigod Dhruva, துருநட்சத்திரம். 3. One of the eight demigods, அஷ்டவசுக்களிலொருவன். W. p. 448. D'HRUVA.

துருவச்சக்கரம், *s.* The wheel of துருவன், the pole star, with which he turns the heavens causing the diurnal motions, சிஞ்சுமாரசக்கரம்.

துருவமண்டலம் — துருவமதம், *s.* Region of Dhruva, regent of the pole star.

துருவமாய்நடப்பிக்க, *inf.* To act firmly. (*R.*)

*துருவாசன், *s.* A Rishi given to anger, ஒருரிஷி. Compare தூர்வாசன்.

துருவாடு — துருவை, *s.* A sheep, செம்மறியாடு.

துருவாட்டேறு, *s.* A ram of fleecy sheep.

துருவு, கிறேன், துருவினேன், வேன், துருவ, *v. a.* To bore, drill, perforate, தொளைக்க. 2. To scrape out the interior of a cocoa-nut, a gourd, &c., to scoop out, scrape, தேங்காய்துருவ. 3. To seek, inquire into, search out, trace, pursue, தேடிப்பார்க்க. (*c.*)

துருவலகு, *s.* A cocoa-nut scraper, as துருவுபலகை.

துருவிப்பிடிக்க, *inf.* (*com.* துருப்பிடிக்க.) To hunt out a thief or theft, or to explore any thing very difficult.

துருவுபலகை — துருவுமணை, *s.* A cocoa-nut scraper, தேங்காய்துருவி.

துருவல், *v. noun.* A turning, hollowing, &c.—as the verb.

துருவு, *v. noun.* Scraping, scooping, boring, துருவுகை. 2. Hole, தொளை.

துருஷ்கம், *s.* Frankincense, குங்கிலியம். (*R.*)

துரை, *s.* (*Tel* దొర.) Gentleman, master, nobleman, prince, சீமான். 2. Magistrate, governor, any officer of government, civil, military or judicial, அதிகாரி. (*c.*)

துரைசாணி — துரைச்சி — துரைப்பெண் — துரைமகள், *s.* [*vul.* துரைசாணி.] A lady, princess, matron.

துரைமகன், *s.* Gentleman, prince.

துரைமக்கள், *s.* (*plu.*) Gentlemen. 2. Great person's children, princes.

துரைத்தனம், *s.* Government, authority, magistracy.

துரைத்தனம்பண்ண, *inf.* To govern, reign.

துரைச்சி, *s.* A kind of ore, லோகதிமிளை. (*R.*) 2. See துரை.

*துரோகம், s. Crime, wickedness, trespass, heinous offence, wrong, sin, பாதகம். 2. Perfidy, treachery, treason, rebellion, இரண்டகம். W. p. 431. DROHA. —*Note.* There are reckoned five kinds of treason, இராசதுரோகம், treason against the king; சுவாமிதுரோகம், sin against God; குருத்துரோகம், sin against a priest; இனத்துரோகம், treachery towards relatives; பிதிர்துரோகம், sin against one's ancestors.

துரோகசிந்தை — துரோகசிந்தனை, s. Malice prepense, treacherous designs.

துரோகம்நினைக்க, *inf.* To intend or design evil to one.

துரோகம்பண்ண, *inf.* To practice treachery, to betray, to act perfidiously.

துரோகி, s. (*masc. and fem.*) A betrayer, a treacherous person, a traitor, a sinner, கொடும்பாவி. 2. A merciless, cruel, hard-hearted person, இரக்கமற்றவன்.

*துரோட்டி, s. (*com.* துறட்டி.) Elephant's hook. (See தோட்டி.) 2. A gardener's crook, துரட்டுக்கோல்; [*ex Sa. Trot'i,* the beak of bird.]

*துரோணம், s. Crow, raven, காக்கை. 2. One of the seven classes of clouds. (See மேகம்.) W. p. 430. DRON'A. 3. பதக்கு, a measure equal to two marcals. 4. The feigned eight-legged bird, எண்காற்புள். 5. A bow, வில். 6. Sagittarius of the Zodiac, தனுவிராசி. 7. The தும்பை shrub. 8. An artificial channel for water, தலைவாய். (*R.*)

துரோணன் — துரோணாசாரி — துரோணாசாரியன், s. Teacher in archery of the Pandavas and Kurus, ஓர்வில்லாசிரியன். W. p. 430. DRON'ACHARIYA.

*துரோபதை, s. Wife of the five Pandava princes, பாண்டவர்மனைவி, called also பாஞ்சாலி, as daughter of Drupada king of the Panchala country. W. p. 431. DRAUPADEE.

*துர், s. A prefix used in combination signifying evil, ill, bad, deficient; it is often changed to ற், before the hard letters, to ன் before the soft, as துன்மார்க்கம். Before இடையினம், there is no change. Sometimes ர் is dropped and the relative letter takes its place—as துச்சரிதம், துருபசர்க்கை. (See துஷ்.) W. p. 414. DUR.

துரதிஷ்டம், s. Ill luck. (*c.*)

துராசாரம், s. Wickedness, depravity, perversity, a vicious life, தீயொழுக்கம். 2. Indecorum, indecency, immodesty, அவமரியாதை.

துராசாரன் — துராசாரி, s. One who violates the rules of his religion, caste, country, &c., a vicious person of vile character.

துராசை, s. Evil desires, lust, covetousness, &c.

துராத்துமா, s. An evil person, a wretch, rascal, scoundrel, villain, தீயன்.

துராலோசனை, s. Bad counsel, prejudicial or evil advice.

துரிச்சை, s. Evil desire. See இச்சை.

துர்க்கதி, s. A wicked life, bad course, கெட்டநடை. 2. (*also* துற்கதி.) Hell, நரகம்.

துர்க்கந்தம், s. (*also* துற்கந்தம்.) Offensive smell, stink, கெட்டநாற்றம்.

துர்க்கருமம் – துர்க்கன்மம் – துஷ்கருமம், s. Evil actions either in performance, or as accumulated and attaching to the soul.

துர்க்கன்மபரிபாகம் — துஷ்கன்மபரிபாகம், s. Ripening or exhaustion of the evil actions of former births.

துர்க்கீர்த்தி, s. Ill fame, infamy.

துர்க்குணம், s. (*also* துற்குணம்.) Bad disposition, ill humor, a vicious course, தீக்குணம்.

துர்க்குணன், s. A vicious, wicked man, தீயன்.

துர்க்குறி, s. Evil omen, bad sign, unfavorable symptom, ominous gesture.

துர்ச்சரிதம், s. (*more properly,* துச்சரிதம்.) Evil practice, evil courses.

துர்ச்சனம், s. Badness, viciousness, maliciousness, mischief, வன்மம். 2. Lewdness, lasciviousness, wantonness, மோகலீலை. 3. Insubordination, refractoriness; rebellion of a youth or dependant, &c., செருக்கு.

துர்ச்சனநடத்தை — துர்ச்சனவியோகம், s. Vicious conduct, a vicious course.

துர்ச்சனன், s. A petulant or insolent man.

துர்ச்சனனைக்கண்டாற்தூரவிலகு....... Abstain from an insolent person.

துர்ச்செய்கை, s. Evil action.

துர்ச்சொப்பனம், s. [*also* துச்சொப்பனம்.] A bad or ominous dream.

துர்த்தேவதை, s. A malignant demon.

துர்ப்பலம், s. Weakness, feebleness, thinness, emaciation, பலவீனம். 2. (*fig.*) The state of being reduced in circumstances, சிறுமை.

முன்னமேதுர்ப்பலஅதிலுங்கர்ப்பிணி. Before weak, and now also pregnant; or poor, and under a heavy fine.

துர்ப்பலன், s. Ill result as predicted in astrology, அமங்கலப்பயன். 2. Bad fruit, ill consequence.

துர்ப்பாக்கியம் — தௌர்ப்பாக்கியம், s. Evil, calamity, ill-luck, misery, நிர்ப்பாக்கியம்.

துர்ப்பிட்சம் — துர்ப்பிக்ஷம், s. Famine, பஞ்சம். See பிட்சம்.

துர்ப்பீசம், s. An illegitimate child, வம்புப்பிள்ளை. See பீசம்.

துர்ப்புத்தி, s. Folly, presumption, foolhardiness, infatuation, wickedness, evil propensity; கெடுமதி. 2. Ill-advice, bad counsel, துராலோசனை.

துர்ப்போதனை, s. Bad instruction, ill-advice, கெட்டஉபதேசம்.

துர்மனம், s. An evil mind.

துர்மார்க்கம், s. (*com.* துன்மார்க்கம்.) An evil life.

துர்மாமிசம், s. (*also* துன்மாமிசம்.) Proud flesh in a wound, &c.

*துர்க்கம், s. [*vul.* துற்கம்.] A hill fort. See துருக்கம். (சது.)

*துர்க்கை, s. (*also* துற்கை.) A terrific goddess, consort of Siva, கொற்றவை. 2. The eleventh Nacshatra, பூரட்டாதிரம். W. p. 415. DURGA.

துர்க்காபூசை — துர்க்கைபூசை, s. Worship of Durga. 2. Worship of Durga on the நவராத்திரி, together with Sarasvati and Lukshmi, three days to each, but especially to Durga.

*துர்த்தூரம், s. (*also* துருத்தூரம், which see.) The plant ஊமத்தை. (சது.)

*துர்ப்பரிகம், s. A plant, சிறுகாய்ஞ்சொறி, Tragia, *L.*

*துர்லபம், s. Rarity, dearness, excellence, as துல்லபம், அருமை. W. p. 417. DURLLABHA.

துலக்கம், s. Shining, lustre, brightness, splendor, பிரகாசம். 2. Polish, finish, gloss, பளபளப்பு. 4. Clearness, limpidness, transparency, தெளிவு; [*ex* துலங்கு. *v.*] (*c.*)

துலக்கமானஎழுத்து. A legible and neat hand-writing.

துலக்கமானகண்ணாடி. A clear mirror.

துலக்கமானபேச்சு. Perspicuous language, or style.

துலக்கம்பண்ண, *inf.* To explain, lay open. 2. To divulge secrets.

துலக்கு, கிறேன், துலக்கினேன், வேன், துலக்க, *v. a.* To polish, furbish, burnish, மினுக்க. 2. To cause to shine; to brighten, illumine, enlighten, பிரகாசிக்கப்பண்ண. 3. To explain, illustrate, clear up a thing, தெரியப்படுத்த. (*c.*)

காரியத்தைத்துலக்க, *inf.* To explain a thing.

துலக்கு, *v. noun.* Lustre, gloss, polish, மினுக்கு.

துலங்கு, s. [*prov. prop.* தொடங்கு.] Stocks, தொழுமரம். See விலங்கு.

துலங்கு, கிறது, துலங்கினது, ம், துலங்க, *v. n.* To shine, corruscate, glitter, radiate; to be bright, splendid, பிரகாசிக்க. 2. To be polished, burnished, furbished, துலக்கப்பட. 3. To be illustrious, conspicuous, தோன்ற. 4. To be clear, perspicuous, evident, distinct, தெளிய. 5. To be excellent, to be splendid, சிறக்க. (*c.*)

நீதுலங்கவேமாட்டாய். You will never prosper. (*a curse.*)

துலங்கியெரிய, *inf.* To burn brightly, clearly.

*துலம், s. Heaviness, gravity, ponderousness, கனம். 2. Weight of a scale, as துலாநிறை. (சது.) 3. The சீர்முள்ளி plant. 4. A grass, கோரை.

*துலவம், s. (*a contraction of* தூலம், *or Sa. Tulaka.*) A cotton, பஞ்சு. (சது.)

*துலா, s. Balance, steelyard, scales, beam of scales, நிறைகோல். W. p. 381. TULA. 2. [*vul.* தொலா.] A well-sweep, or lever for drawing water, picotta, ஏற்றமரம். (*c.*) (சது.) 3. Single shaft of a carriage, bullock-cart, &c., பண்டிஏர்க்கால்.

துலாகோடி, s. (*St.*) A weight.

துலாக்கட்டை, s. [*loc.* திராவி.] Cross beams used for a terraced house.

துலாக்கொடி, s. [*prov.*] A rope or pole attached to the well-beam.

துலாக்கோல், s. Balance, beam of scales.

துலாபாரம் — துலாவாரம், s. A weight in gold equal to that of a person, presented to a brahman, as an atonement for sin; or a deed of merit.

துலாபாரந்தூங்க — துலாபாரமேந்த, *inf.* To get into scales as a person to make up a weight of gold equal to himself.

துலாப்படி, s. Steelyard. 2. A large weight for a balance.

துலாப்பட்டை, s. A well-basket attached to the lever for irrigation. 2. [*loc.*] The trunk part of a split palmyra.

துலாமரம், s. A well-sweep.

துலாமிதிக்க, *inf.* To tread the well-beam in drawing water.

துலாயனம், *s.* Autumnal, equinoctial point. 2. *(R.)* The apparent course of the sun from North to South.

துலாராசி, *s.* Libra of the Zodiac.

துலாவீடு—துலாவிஷுவம்—துலாவிடுவம், *s.* Autumnal point.

அடித்துலா, *s.* The butt end of the well-beam.

*துலாகோடி, *s.* An ornament to the feet, காலணியிலொன்று. 2. A hundred millions, or ten crore, பத்துக்கோடி.

*துலாந்து, *s.* [*prov.*] A loft, rack or frame in a room for setting things on; also cross beams, ஓர்வகைப்பரண்.

*துலாம், *s.* Balance, steelyard, scales, நிறைகோல். 2. Libra of the Zodiac, துலாராசி. 3. A well-sweep, a well-beam, ஏற்றமரம். 4. A weight equal to one-hundred பலம். In some places two-hundred பலம் or five vis, ஓர்நிறை. (*c.*)

*துலாம்பரம், *s.* Clearness, limpidness, brightness as of a lamp, gem, or mirror, துலக்கம். 2. Being evident, plain, perspicuous, conspicuous, தெளிவு. 3. Publicity, coming abroad, being known, பகிரங்கம். (*c.*)

துலாம்பரமானகாரியம், *s.* A plain or evident thing known to all.

*துலிதம், *s.* Shaking, waving, vacillation, அசைவு. 2. Equality, ஒப்பு. See அதுலிதம்.

துலுக்கப்பூ, *s.* A kind of flower, yellow, ஓர்பூ, Tagetes, *L.*

*துலுக்கு, *s.* (*a change of* துருக்கு.) The Moorish caste, language, custom, &c.

துலுக்கச்சி, *s.* (*masc.* துலுக்கன்.) A Moorish female.

துலுக்கச்செவ்வந்தி, *s.* A species of செவ்வந்தி; which see.

துலுக்கபாஷை, *s.* The Moor's language, Hindustani.

துலுக்கர், *s.* (*plu.*) Moors, Mohammedans, Moslems, Turks. 2. A class of Moors, the other being சோனகர்.

துலுக்காணம், *s.* The original country of the Moors, Turkisthan, as துருக்கு. 2. Any thing Moorish, *commonly,* a kind of chess, ஓர்வகைச்சதுரங்கவிளையாட்டு.

துலுக்காணத்துச்சட்டம், *s.* The manners and customs of the Moors.

துலுக்காணியம்—துலுக்காணம், *s.* The Turkish dominions. (*R.*)

துலுக்கு, கிறேன், துலுக்கினேன், வேன், துலுக்க, *v. a.* To shake or toss the head, to make affected gestures, to affect a proud gait; also குலுக்க. 2. To wag the head in scorn, defiance or ridicule, அசைக்க. 3. To carry one's self proudly, குலுக்கிநடக்க; [*ex Sa. Dula,* to shake.]

துலுக்கி, *s.* A woman giving herself airs, displaying her ornaments, &c.

துலுக்கு, *v. noun.* Shaking, gesticulation, commonly of the head or body, குலுக்கு.

*துலை, *s.* Steelyard, &c., as துலா, 1. 2. Libra of the Zodiac, துலாராசி. 3. Picotta, as துலா, 2, நீரிறைக்குந்துலா. 4. (*c.*) Reservoir for receiving water from a well to distribute, துலைமுகம். 5. Defined weight, equilibrium, கனம். 6. Resemblance, ஒப்பு.

துலைக்கிடங்கு—துலைமுகம்—துலைவாய், *s.* Reservoir near a well. See துலை.

துலைக்குழி — துலைப்பள்ளம், *s.* The hole or pool whence the water is drawn for irrigation.

துலைத்தட்டு, *s.* A balance.

துலை, *s.* [*prop.* தொலை.] Distance, great distance, தூரம்.

துலை, கிறது, ந்தது, யும், ய, *v. n.* [*prop.* தொலை.] To be exhausted, to terminate, &c.

துலை, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*prop.* தொலை.] To be distant. 2. *v. a.* To exhaust, kill, &c.

துலோபம், *s.* A medicinal root, கருஞ்சுண்டி.

*துல்லபம், *s.* (*St.* துர்லபம்.) That which is difficult of attainment, &c., excellence, eminence, rareness, அருமை.

*துல்லம், *s.* Din, roar, great sound, பேரொலி. (சது.)

*துல்லியம், *s.* [*vul.* துல்லிபம்.] Similitude, resemblance, equality, உவமை. W. p. 381. Tulya. 2. Purity, சுத்தம்.

துல்லியபக்கம், *s.* [*in log.*] Analogous doctrines suited to the subject, views agreeable to truth and reason. See பக்கம்.

துல்லியபானம், *s.* Drinking together.

துல்லியோகிதாலங்காரம், *s.* [*in rhet.*] Enumeration or assemblage of similarities, in order to heighten description, ஒப்புமைக்கூட்ட அணி.

துவக்கம், *v. noun.* See துவங்கு.

துவக்கு, *s.* Tie, physical or mental attachment, சம்பந்தம். 2. A chain, சங்கிலி. 3. Difference, dispute, பிணக்கு. (சது.) 4. [*for. prov.*] Gun, firelock, musket, துப்பாக்கி.

*துவக்கு, *s.* Skin, தோல்; also written தொக்கு. (*Sa. Tvak.*) 2. Body, உடல்.

துவக்கூசி, *s.* [*prov.*] Shoemaker's awl, செருப்புத்தைக்கும் ஊசியிலொன்று.

துவக்கு, கிறேன், துவக்கினேன், வேன், துவக்க, *v. a.* To begin, enter upon, commence, ஆரம்பிக்க. 2. To tie, bind, entangle, engross the senses or affections, கட்ட. (சது.)

*துவங்கிசம், *s.* Loss, injury, detriment. See தொங்கிசம். W. p. 449. D'hvamsa.

துவங்கு, கிறேன், துவங்கினேன், வேன், துவங்க, *v. a.* and *n.* To commence, begin, enter upon, ஆரம்பிக்க. (*c.*)

துவக்கம், *v. noun.* Beginning, commencement, ஆரம்பம்.

துவக்கமுமுடிவும். The beginning and end.

*துவசம், *s.* Banner, flag, streamer; banner in token of rank, விருதுக்கொடி. 2. Ensign, colors, flag, escutcheon, விலோதனம். 3. Sign, அடையாளம். W. p. 449. D'hvaja.

துவசங்கட்ட, *inf.* (*com.* துசங்கட்ட.) To hoist a flag. 2. To erect a banner, as a hero in challenge, defiance, or in token of what he resolves to accomplish. 3. To set about a thing with the utmost zeal, and energy.

துவசாரோகணம், *s.* Hoisting the temple flag, with prescribed ceremonies, for the annual festival; [*ex* ஆரோகணம்.]

*துவசர், *s.* Toddy sellers, dealers in spirituous liquors, கள்விற்போர். (சது.) [*ex Sa. D'hvajavat.*]

துவசல், *s.* [*prov.*] Connection, mutual concern, intercourse, தொடிசு.

துவசல்தீர்த்துக்கொண்டார். He has settled the business with us.

துவட்சி, *v. noun.* See துவள்.

துவட்சிகை, *s.* [*prop.* துவர்ச்சிகை.] The germ or very young nut of the Terminalia, கடுப்பிஞ்சு.

*துவட்டர், *s.* Carpenters, தச்சர். 2. Artificers, smiths, கம்மாளர்; [*ex* துவஷ்டா.]

துவட்டல், *v. noun.* (*substantively.*) A sort of curry without gravy, துவட்டற்கறி. 2. See துவட்டு, *v.* (*c.*)

*துவட்டன், *s.* One of the twelve suns so called, துவாதசாதித்தர்களிலொருவன்.

*துவட்டா—துவஷ்டா, *s.* A carpenter, especially Visvakarma the architect of the gods, விசுவகருமன். W. p. 394. Tvashtru.

துவட்டாநாள், *s.* The fourteenth lunar asterism, சித்திரைநட்சத்திரம்.

துவட்டு, கிறேன், துவட்டினேன், வேன், துவட்ட, *v. a.* To wipe off moisture after bathing, &c., துடைக்க. 2. To boil or stew with little water so as to make the food thick, கறிதுவட்ட. 3. To boil meat, நெருப்பிற்புலர்த்த. 4. To cause to adhere, தோயச்செய்ய; [*ex* துவள், *v.*] (*c.*)

துவட்டிக்கொண்டுசாப்பிட்டுவிடலாம். The curry is so good that, to eat the rice, it is only necessary to dip into it the tip of the finger.

துவட்டல் — துவட்டுதல், *v. noun.* Wiping, stewing, &c., as the verb.

*துவந்தம், *s.* (*St. for* தொந்தம்.) Quality, closeness, &c.

*துவந்துவம், *s.* Two, a pair, a couple, a brace, இரண்டு. 2. Two united, இரட்டை. W. p. 431. Dvandva.

*துவந்தனை, *s.* Hinderance, தடை. 2. Vexation, அலைவு.

*துவம், *s.* Fixedness, immutability, immobility, permanence, அசையாநிலை. (*a change of* துருவம்.) 2. An affix to Sanscrit words, expressive of quality, nature, character, &c., தன்மை, as தேவத்துவம், divinity; கோத்துவம், the nature of a cow.

*துவயம், *s.* Two, doubleness, duality, இரண்டு. W. p. 431. Tvaya.

துவயார்த்தம், *s.* (*St.*) Ambiguity, a double meaning, உபயார்த்தம்.

*துவரம், *s.* Astringency, துவர்ப்பு. (சது.) W. p. 382. Tuvara.

துவரி *s.* The saffron color of a Sanniyasi's dress, காவிநிறம்.

*துவரை, *s.* A species of grain or lentil, ஓர்பயறு, Cytisus cajan, *L.* (*c.*) (*Sa. Tuvara.*)

துவரமலார், *s.* A twig of the துவரை.

துவரம்பருப்பு, *s.* The pea of the துவரை, often called dholl.

கருந்துவரை, *s.* A plant, Hedysarum biflor. (*Willd.*) 2. A tree, Dalbergia latifolia.

காட்டுத்துவரை, *s.* A plant, Glycine parviflora, *L.*

காவியாந்துவரை, *s.* [*prov.*] A wild kind of துவரை.

மலைத்துவரை, *s.* Another variety of this plant.

*துவரை, *s.* (*com.* துவாரகை.) One of the seven sacred cities, நரபுரி. (*p.*)

துவரைமல்லி, *s.* (*Tel. prop.* தோரைமல்லி.) A kind of amethyst, புஷ்பராகத்தரிப்பு.

துவர், *s.* Enmity, hatred, hostility, பகை. 2. Red, சிவப்பு. 3. Red coral, பவளம். 4. Fire-wood, விறகு. (*சூ.*)

*துவர், *s.* Astringency. See துவரம். 2. Astringents used as applications to the head before bathing, to take out oil, சியக்காய்முதலியன.—*Note.* Ten astringents are given, as used in medicine. 1. நாவல், bark of the நாவல்; 2. கடுக்காய், fruit of the கடு, Indian gall-nut; 3. நெல்லி, fruit of the நெல்லி; 4. தான்றிக்காய், fruit of the தான்றி; 5. ஆல், buds of the banyan; 6. அரசு, buds of the அரசு; 7. அத்தி, bark of the அத்தி; 8. இத்தி, bark of the இத்தி; 9. முத்தக்காசு, root of the கோரை; 10. மாந்தளிர், tender leaves of the mango tree. (*சூ.*)

அவனுடம்பிலேதுவரேறியிருக்கிறது. He is in high spirits.

துவரெண்ணெய், *s.* A medicinal astringent oil used for sores.

துவர்க்கட்டி, *s.* Decoction of areca-nut with spices, as காய்ச்சுக்கட்டி.

துவர்க்காய், *s.* Areca-nut, பாக்கு.

துவர், கிறது, ந்தது, துவரும், துவர, *v. n.* To divide, separate as the hair, பிரிய. 2. To be separate, clear, distinct, தெரிய. (*p.*)

துவரத்தோன்றாது. It does not appear to be distinct.

துவர், கிறேன், ந்தேன், வேன், துவர, *v. a.* To smear, திமிர. (*p.*)

துவர், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To be astringent. (*c.*)

துவர்த்தல், *v. noun.* Rubbing on, பூசுதல். 2. As துவர்ப்பு. (*R.*)

துவர்ப்பு, *v. noun.* Being astringent in taste or quality, astringency as one of the six flavors, அறுசுவையுளொன்று. (See சுவை.) 2. (*R.*) Harshness of disposition. 3. Affections of the soul.

துவர்ச்சிகை, *s.* Very young gall-nuts, கடுக்காய்ப்பிஞ்சு. See துவட்சிகை.

துவலு — துவல், கிறது, துவன்றது, ம், துவல, *v. n.* To drop as water, to emit or scatter drops, to rain, துளிக்க. 2. To be quick, rapid, to move with celerity, தீவிரிக்க. (*p.*) 3. (*R.*) To be full, thick; to die, &c. See துவன்று, *v.*

துவலை, *s.* Watery particle, drop, திவலை. 2. Fine rain, sprinkling rain, மழைத்துவல்; [*ex* துவலு.] (*சூ.*)

*துவல், *s.* Haste, celerity, rapidity, diligence, சீக்கிரம். W. p. 393. Tvara.

துவள — துவளு, கிறது, துவண்டது, துவளும், துவள, *v. n.* To waver, shake, move, vacillate, to be agitated, அசைய. 2. To be flexible, slender, weak, unable to sustain a weight—as a tender tree, or (*fig.*) a lady's waist, &c., மெல்லியதாயிருக்க. 3. To fail, faint, droop under a load, &c., திவள. (See சவளு.) 4. To wrap, bend, shrink, twist, as boards in the sun, &c., நெளிய. 5. To become thick and dry as curry, இறுக. 6. To become rumpled, deprived of gloss, as a new-cloth, கசங்க. 7. (*in an impersonal sense.*) To stick to, adhere, as oil, thick liquid, dust, or coloring matter, to the hand or a cloth; to stain, blot, color, soil, daub, smear, ஒட்ட. 8. To become dry, as plants under a scorching sun, வாட. (*c.*)

குழந்தைஅல்லித்தண்டுபோலத்துவண்டுகிடக்கிறது. The child is weak as the stalk of a lily.

அவனாமற்காரியம்பார்க்க. To manage another's business without deriving any profit to one's self. 2. To get business done without expense.

பாலைத்துவளக்காய்ச்சினான். He boiled the milk until it was thick.

துவணீர், *s.* Filth, slimy matter about a new born infant; [*ex* நீர்.]

துவளச்சமைக்க, *inf.* To make curry thick.

துவட்சி — துவளல், *v. noun.* Being thin, slender, flexible, shaking as unable to bear a weight, &c., மெலிவு.

*துவறல், *s.* Raining, துவலைவிழுதல். 2. Swiftness, haste, விரைவு. (*சூ.*) (*Sa. Tvara.*)

*துவனி, *s.* Sound, noise, clamor. See தொனி. W. p. 449. Dhvani.

துவன், *s.* A plant, வட்டத்திருப்பி, Cissampelos, *L.*

துவன்று, கிறேன், துவன்றினேன், வேன், துவன்ற, *v. n.* To be full, to fill up, நிறைய. 2. To be thick, close, crowded, நெருங்க. 3. To abound, increase, மிக. 4. To die, சாக. (*சூ.*)

துவன்றல், *v. noun.* Being full, &c., as the verb.

*துவா, *s.* [*in cant numbers.*] Two, இரண்டு. See துவி.

துவாப்புலு, *s.* [*prov.*] Twenty, இருபது.

*துவாதசம், *s.* Twelve, பன்னிரண்டு; [*ex* தசம், ten.] W. p. 432. Dvadasan.

துவாதசாங்கிசம், *s.* [*in astrol.*] A division of the rising sign into twelve parts, for horoscopic calculations. See இலக்கினம்; [*ex* அங்கிசம்,அமிசம்.]

துவாதசாதித்தர் — துவாதசாதித்தியர், *s.* [*in mythol.*] The twelve suns governing the twelve months of the year, or more properly the presiding deity of the sun for each month, beginning with சித்திரை, in the sign Aries. The twelve ஆதித்தர், are: 1. தாத்துரு. 2. சக்கரன். 3. அரியமன். 4. மித்திரன். 5. வருணன். 6. அஞ்சுமான். 7 இரணியன். 8. பகவான். 9. திவாச்சுவான். 10. பூடன். 11. சவித்திரு. 12. துவட்டன்.—*Note.* Each of these names is applied to the sun as he passes its sign in the Zodiac.

துவாதசாந்தம், *s.* The place of the twelfth and last அவஸ்தை, or station of the soul in the practice of the motionless ascetic, பன்னிரண்டாமவஸ்தை; [*ex* அந்தம், end.]

துவாதசான்மா, *s.* The sun as having twelve names, as above; (*lit.*) the twelve-souled. (*சூ.*)

துவாதசி, *s.* The twelfth phasis of the moon, either in the increase or decrease, திதி. W. p. 432. Dvadasa.

*துவாந்தம், *s.* Darkness, obscurity, gloom, இருள். 2. Hell, நரகம். (*சூ.*)

*துவாபரம்—துவாபரயுகம், *s.* The third Yuga or age of the world, consisting of 864,000 years. W. p. 432. Dvapara.

*துவாரகை—துவாரகாபுரி, *s.* One of the seven sacred cities, சத்தபுரியிலொன்று. W. p. 432. Dvaraka.—*Note.* This city is said to be now submerged by the sea, and to be represented by a small island on the north part of the Malabar coast.

துவாரகேசன், *s.* (*St.*) Vishnu, விஷ்ணு; [*ex* ஈசன், lord.]

*துவாரம், *s.* A hole, aperture, perforation, தொளை. 2. Passage, avenue, thoroughfare, opening, outlet, வழி. 3. A gate-way, or main entrance, வாயில். 4. Any of the passages, apertures, or pores of the body. See நவத்துவாரம். W. p. 432. Dvara. (*c.*)

துவாரபாலகர், *s.* (*St.*) Door-keepers, warders. 2. Gigantic figures, or images placed at the gate of a heathen fane.

துவாரமடைக்க, *inf.* To stop up a hole.

துவாரம்பண்ண, *inf.* To make a hole.

துவாரம்விட, *inf.* To leave holes or openings in a building.

துவாரம்விழ, *inf.* To form an orifice of itself, as a tumor.

சிறுதுவாரம், *s.* [*in astron. or bot.*] Capillary tube.

துவாலை, *s.* Flow of blood, as in the menses or parturition, உதிரப்பெருக்கு. 2. [*prov.*] Lochial discharges, தீட்டு. 3. Anointing the whole body, as in case of a poisonous bite, பூச்சு. 4. Liniment for medical anointing, பூச்சுமருந்து. 4. (*Eng.*) Towel, தண்ணீர்த்துணி. (*c.*)

துவாலைச்சீலை — துவாலைப்புடைவை, *s.* Cloths worn by women in child-birth, in lochial discharges, &c.

துவாலையிட, *inf.* To rub a medical oil, or liniment, on the whole body.

துவாலையிறைக்க, *inf.* To flow excessively as lochial discharges, flooding, or excessive flow of menses.

துவாளிக்க, *inf. v. a.* [*prov. for* தவாளி, which see.] To groove, to flute, to channel, குடைய.

*துவி, *adj.* Two; double; *used only in composition with other words,* இரண்டு. W. p. 432. Dvi.

துவிகுளம், *s.* A cloven footed creature, கவைக்குளம்புள்ளது.

துவிசன், *s.* A brahman, as twice-born; the investiture with the sacred thread being regarded as a second birth, இருபிறப்பாளன். W. p. 432. Dvija.

துவிசாதி, *s.* (*St.*) The twice-born, as முட்டையிற்பிறப்பன. 2. A brahman, பார்ப்பான்.

துவிபாதசெந்து, *s.* A two-footed animal, a biped, இருகாலுள்ளது.

துவிவசனம், *s.* (*St.*) The dual in Grammar.

துவிகபா, *s.* A plant, வட்டத்திருப்பி, Cissampelos, *L.*

துவிகாயாசின், *s.* A kind of red Murunga, செம்முருக்கை.

*துவிதம், s. Doubleness, duality, இரண்டு. 2. A sect, called also மத்துவம், at the head of which was Mad'hvacharya, who taught that the deity is distinct from the soul, and all creatures—oppos. to அத்துவிதம், the followers of Sancharacharya, who believe god and the soul to be one.

துவிதகேந்திரம் — துவிதியகேந்திரம், s. [in astron.] Twice equated argument of anomaly.

துவிதியபுடம், s. [in astron.] Twice equated longitude.

துவிதபாவனை, s. [in the mystic philos.] Making distinctions, as between the operations or works of deity and the deity himself, viewing things as distinct from the deity instead of regarding them as parts or developments of himself, இரண்டாகப்பாவிக்கை.

*துவிதாத்துமகம், s. Nutmeg, சாதிக்காய். W. p. 434. Dvidhatmaka.

துவியம், s. [Pers.] A second, a deputy, இரண்டாவது.

துவியங்கணக்கு, s. Account prepared a second time. (Govern. usage.)

*துவிருத்தி, s. Tautology, repetition, கூறியதுகூறல். W. p. 434. Dvirukti.

*துவீபம், s. An island, தீவு, as தீபம்.

*துவேஷம்—துவேசம், s. Aversion, dislike, loathing, antipathy, disgust, hatred, பகை. W. p. 435. Dvesha.

அன்னத்துவேஷம், s. Aversion to food.

துவேஷி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To dislike, be averse to, பகைக்க.

துவை, s. Flesh, meat, இறைச்சி. 2. Sound, clamor, resonance, ஒலி. 3. Food proper to be drunk, sipped or taken with a spoon, பருகுதற்குரியன. 4. Acid curry, புளிக்கறி. 5. Residuum of nuts, fruits, &c., after extracting oil, commonly eatable, பிண்ணாக்கு. (சது.)

துவை, கிறது, ந்தது, யும், ய, v. n. To be dipped as a cloth in dye, தோய. 2. To be moistened with starch, பசத்தோய. 3. To be turned or curdled as milk, பால்தோய. 4. To be tempered as steel, ஆயுதத்துவையலிட. 5. To be trodden out as corn by cattle, மிதிக்கப்பட. 6. To be pounded in a mortar, as green things for their juice; to be mashed, இடிக்கப்பட. (c.)

துவையல், v. noun. Seasonings for food, commonly mashed; chopped, or pared fruits—as cocoa-nuts, onions, chillies, சண்டாங்கி. 2. Tempering, as தோய்ச்சல். 3. Washing clothes. (c.)

துவை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To dip in, soak, தோய்க்க. 2. To beat clothes, &c., in washing. 3. To curdle milk by runnet, &c., பால்தோய்க்க. 4. To temper iron, ஆயுதந்தோய்க்க. 5. To beat moist or green things in a mortar, to mash, &c., நசுக்க. 6. To beat as clay or mortar, இடிக்க. 7. To tread under foot, as when cattle tread out the corn, அரிக்கட்டுத்துவைக்க. (c.) 8. (சது.) To sound, resound, clamor, ஒலிக்க. 9. To beat a drum, sound any loud instrument, வாச்சியமுழக்க.

துவைத்துப்பிழிய, inf. To dip and wring out a cloth, in water or a dye.

துவைத்தல், v. noun. Used in all the meanings of the verb.

துவைப்பு, v. noun. Pounding or bruising moist things in a mortar, இடிப்பு.

*துவைதம், s. [as துவிதம்.] Duality, duplication. W. p. 435. Dvaita.

*துவைபாயனன், s. Vyasa, as born on an island, வேதவியாசன்; [ex துவீபம்.]

துவ்வாமை, s. Disgust, dislike, வெறுப்பு; [ex துவ்வு, v.]

துவ்வு, s. Food, உணவு. 2. Fruition, enjoyment, அநுபவம். 3. Gratification of the senses, ஐம்பொறிநுகர்ச்சி. See துய்ப்பு. (p.)

துவ்வு, கிறேன், துவ்வினேன், வேன், துவ்வ, v. a. To take food, eat, புசிக்க. 2. To enjoy by means of the senses, ஐம்பொறியால் நுகர. 3. To suffer, enjoy the fruits of actions, experience, அநுபவிக்க. (See து, v.) —Note. This word is more properly து, it forming like a negative.

துவ்வாதார் — துவ்வார், appel. n. The poor, the indigent, தரித்திரர்.

துவ்வல், v. noun. Eating, புசித்தல்.

துழ, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, v. a. To mix, mingle, mash food with the hand, &c., குழைக்க. (p.)

துழவு, கிறேன், துழவினேன், வேன், துழவ, v. a. [contraction of துழாவு.] To mix, mingle, &c.

துழவை, s. [prov.] A split bambu used by natives to steer a small boat, முங்கிற்பற்றை; written by Beschi, துளவை. (c.)

துழவைதொடுக்க, inf. To paddle a canoe.

துழனி, s. Sound, noise, ஒலி. (See துவனி.) 2. Chirping of flocks of birds, &c., பறவைக்கூட்டத்தொலி. (சது.) (p.)

துழாய், s. The Tulasi herb. (See துளசி.) 2. Verbal participle of துழாவு. (p.)

துழாய்மௌலி, s. Vishnu crowned with the garlands of Tulasi, விஷ்ணு.

துழாய்வனம், s. A garden where Tulasi is grown. 2. Tulasi plant.

துழாவாரம், s. [prov.] Long and useless talk about others' affairs, வீண்பேச்சுப்பேசுகை.

துழாவு, கிறேன், துழாவினேன், வேன், துழாவ, v. a. To mix, mingle, கலக்க. 2. To stir with a ladle; stir up paddy, spread in the sun, கிளற. 3. To feel, grope, search for with the hands stretched, தடவ. 4. To inquire, ஆராய. 5. To row a boat, &c., தண்டுவலிக்க. (c) 6. (சது.) To cut, வெட்ட.

துழாவிப்பிடிக்க, inf. To feel for and grasp with the hands—as the elephant with its trunk—in cropping leaves, &c.

புழுங்கல்துழாவ—நெல்துழாவ, inf. To stir boiled paddy as it dries in the sun.

துடுப்பினால்துழாவ, inf. To stir up with a ladle, &c. See துடுப்பு.

துழாவல், v. noun. Stirring up, &c., as the verb.

துளக்கம், s. Brightness, splendor, shining, gloss, lustre, as துலக்கம், ஒளி. 2. Fear, dread, அச்சம். 3. The fifteenth lunar asterism, சோதிநாள். (சது.) 4. Shaking, waving motion, அசைவு. 5. Agitation of mind, perturbation, anxiety, கலக்கம்; [ex துளங்கு.] (p.)

துளக்கு, கிறேன், துளக்கினேன், வேன், துளக்க, v. a. To move, shake, agitate, அசைக்க. 2. To polish, விளக்க. See துலக்கு.

துளக்கல்—துளக்கு, v. noun. Shaking, moving, அசைவு. 2. Polishing.

துளங்கு, கிறேன், துளங்கினேன், வேன், துளங்க, v. n. To move, shake, be agitated, அசைய. 2. To be agitated as the mind, to be in perturbation, கலங்க. 3. To be moved by rebuke, advice, fear, &c., அஞ்ச. 4. (சது.) To shine, be bright, luminous; to radiate, துலங்க. 5. (fig.) To appear evident, வெளிப்பட. (p.)

துளங்காதமனம், s. An unshaken mind.

துளங்கொளி, s. Great splendor, மிகும்ஒளி. 2. (சது.) The eighteenth lunar asterism, கேட்டைநாள்.

துளங்கல், v. noun. Shining bright.

*துளசி, s. Tulasi, a fragrant herb held in great veneration by the Hindus; holy basil, which is said to be a female metamorphosed, துளவம், Ocymum sanctum. W. p. 381. Tulasi.—Note. There are three kinds especially sacred to Siva, viz:. வெண்டுளசி, நிறுதுளசி, சிவதுளசி, Ocymum tenuiflorum. There are others appropriated to Vishnu who claims also those of Siva, viz.: இராமதுளசி, கரியமால்துளசி, செந்துளசி, கருந்துளசி, விஷ்ணுதுளசி, பெருந்துளசி, Ocymum gratissimum. There are still other varieties, as கர்ப்பூரத்துளசி, which see; also காட்டுத்துளசி, Ocymum adscendens; நாய்த்துளசி, dog's basil, oppos. to நல்லதுளசி; நிலத்துளசி, Ocymum prostratum. (c.)

துளசிதீர்த்தம், s. Tulasi leaves and consecrated water, taken in making oath in court, or, as a token of adherence to Vishnu on entering his temples.

துளசிமணி, s. (also தாதமணி.) Beads made of the white Tulasi root, or branch, worn by devotees of the Vishnu sect.

துளசிமாடம், s. A raised place for Tulasi plants, instead of a flower pot.

துளசிமாலை, s. A necklace made of Tulasi, whether leaves or beads.

துளம்பிக்கிரி, s. A shrub, as ஆதொண்டை.

*துளவம்—துளவு, s. [a change of துளசி.] The Tulasi plant. (p.)

துளவன், s. Vishnu as adorned with the Tulasi, திருமால். 2. (R.) A kind of prepared arsenic, சோரபாஷாணம்.

துளவை, s. Hole, orifice, துளை. 2. [for துழவை.] An oar of split bambu.

துளி, s. Rain-drop, globule of water, tear, &c., திவலை. (c.) 2. Rain, மழை.

துளித்துளியாய்வடிய, inf. To dribble.

துளித்துளியாய்விழ, inf. To fall in drops, flow as tears, drop as rain, honey, &c.

*துளி, s. Female tortoise, பெண்ணாமை. W. p. 417. Duli.

துளி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To drop, fall in drops, as rain, tears, or honey, to trickle down, தேன்முதலியதிவலிக்க. 2. To rain, மழைபெய்ய.

துளிமழை, s. Light rain.

துளிப்பு, v. noun. Dropping, falling in drops, dribbling, dripping.

துளிர், *s.* Bud, sprout, germ, young leaf, tender foliage, தளிர். (*c.*)

துளிர்விட, *inf.* To bud.

நாக்குத்துளிர், *s.* Tip of the tongue.

துளிர், க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*com.* துளுக்க.] To bud, sprout, shoot, put forth leaves, vegetate, தளிர்க்க. 2. (*fig.*) To begin to thrive as a person, செழிக்க. (*c.*)

இவன்துளிர்த்திருக்கிறான். He is flourishing.

துளிர்ப்பு, *v. noun.* Budding, sprouting.

துளும்பு, கிறது, துளும்பினது, ம், துளும்ப, *v. n.* To shake, be agitated, அசைய. 2. To rise into opposition, &c., எழும்ப. 3. To sparkle, glitter, coruscate, shine, சொலிக்க. 4. (சது.) *v. a.* To smear, திமிர.

துளும்பல், *v. noun.* Wavering, shining, &c., as the verb.

*துளுவம், *s.* The name of a country on the western coast between Canara and the Concan, ஓர்தேசம். 2. The language of the country, one of the eighteen, பதினெண்பாஷையிலொன்று.

துளுவபாஷை, *s.* The Tuluva language.

துளுவப்பிராமணர், *s.* (*plu.*) Brahmans of the Tuluva country, of whom, the head of the துவிதம் sect, Mad'hvacharia, was one.

துளுவவேளாளன், *s.* An agriculturist of the country.

துளுவன், *s.* An inhabitant of the Tuluva country.

துளை, *s.* [*also written,* தொளை.] Hole, orifice, aperture, perforation, துவாரம். (*c.*) 2. Gateway, passage, thoroughfare, opening, வாயில். 3. The hollow of a tube, உட்டுளை. 4. Bambu, மூங்கில். See தூம்பு.

துளைக்கருவி, *s.* Wind instruments, one of the five kinds.

துளைக்கை, *s.* Elephant's trunk, தும்பிக்கை. 2. See துளை, *v. a.*

துளைச்செவி, *s.* Ear of an animal that has no external ear, உட்செவி. 2. An animal with the internal ear only, without any auricle; one of the two great classes of animals according to the Hindus, உட்செவியுள்ளது.

துளைபோட—துளையடிக்க—துளையிட, *inf.* To make a hole, commonly with a chisel and mallet, to punch.

துளை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* [*prov.*] To play or dive in water, to roll in the sand, &c., மூழ்க. 2. *v. a.* To enjoy, have fruition of, அநுபவிக்க.

துளை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* (*also* தொளை.) To make a hole, bore, drill, punch, துவாரஞ்செய்ய. 2. To perforate, pierce, pierce with arrows, &c., ஊடுருவ.

துளைப்பு, *v. noun.* Boaring, drilling, perforating.

துள்ளல், *s.* Dance, dancing, கூத்து. 2. Goat, sheep, ஆடு. 3. A small fly, gnat, கொசுகு. 4. Melody or movement of the கலிப்பா class of verse, கலிப்பாவிசைை. (சது.) 5. One of the four kinds of movements in verse or singing, being lively or quick, விரைந்தபாடுமிசை. 6. See துள்ளு, *v.*

துள்ளி, *s.* [*for* துளி.] A drop. (*c.*)

துள்ளு, *s.* A leap, jump, spring, frisk, commonly without progress, குதிப்பு. (*c.*)

துள்ளடங்க, *inf.* [*in burlesque.*] To be reduced, as arrogance, &c.

துள்ளாட்டம், *v. noun.* Sprightfulness, arrogance, haughtiness, assumption, overbearing airs.

துள்ளாட்டம்பண்ண, *inf.* To be arrogant, overbearing, unruly, refractory.

துள்ளுக்காளை, *s.* An ungovernable person; (*lit.*) untamed bullock.

துள்ளுப்பூச்சி, *s.* A kind of leaping insect destructive to grain.

துள்ளு, கிறேன், துள்ளினேன், வேன், துள்ள, *v. n.* To spring up, leap up, jump up, frisk in play, commonly not proceeding forward; to leap out of water, as fishes, குதிக்க. 2. To trip along in a frolicksome way, குதித்துச்செல்ல. 3. [*in burlesque.*] To be haughty, arrogant, கருவிக்க. (*c.*)

துள்ளித்தொப்பென்றுவிழுகிறான். He is very insubordinate; (*lit.*) capers and falls.

துள்ளுகிறமாடுபொதிசுமக்கும். An unruly bullock throwing off its load will have a greater burden, *that is,* disobedient persons will not escape punishment.

துள்ளுகுட்டி, *s.* A frisking, young animal. 2. A young animal, plump, strong, and lively. 3. (*fig.*) A stout, lively boy. (*c.*)

துள்ளல், *v. noun.* Frisking, leaping, குதித்தல்.

துறக்கம்—துறக்கநாடு, *s.* Swerga or the paradise of the inferior gods, சுவர்க்கம். (சது.)

துற, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* To leave, relinquish, desert, reject, discard, கைவிட. 2. To renounce matrimony, and secular things, for an ascetic life, இல்லறந்துறக்க. 3. To neglect, dispense with, omit, avoid, தவிர்க்க. (*p.*)

தாய்சொற்றுறந்தால்வாசகமில்லை. There is no excuse for slighting a mother's word, (*Avv.*)

அதைத்துறந்து, *v. participle.* Leaving this, besides this.

துறந்துதள்ள, *inf.* To renounce one's relations.

துறந்தார்—துறந்தோர், *s.* (*plu.*) Ascetics, recluses, those that have renounced the world for an ascetic life, sannyasis, நீத்தோர்.

துறப்பு—துறவு, *v. noun.* Relinquishment, rejection, விடுகை. 2. Renunciation of matrimony and social life, for a life of austerities, of wandering and dependence on charitable gifts for support; or retirement to the desert, சன்னியாசம். 3. The principles of abstraction, or renunciation of secularities, as seated and operative in the mind of the devout ascetic, leading to corresponding actions.

துறவர் — துறவோர், *s.* [*plu.*] Munis, ascetics, recluses, முனிவர்.

துறவறம், *s.* Celibacy of the recluse, or of the strict devotee, in the வானப்பிரஸ்தம் state—oppos. to இல்லறம். (See ஆச்சிரமம்.) 2. See அறம்.

துறவி, *appel. n.* An ascetic, a recluse, சன்னியாசி.

துறவுநிலை, *s.* The standing, degree, profession or state of the ascetic.

துறவுபூண, *inf.* To become an ascetic.

துறவொழுக்கம், *s.* The proper course and rules of ascetic life.

*துறட்டி — துறடு, *s.* An iron crook, an elephant goad, அங்குசம். 2. An entanglement, சிக்கு. See தொரட்டி.

துறட்டிலேமாட்டிக்கொண்டான். He entangled himself.

துறட்டிச்செடி, *s.* A shrub with crooked thorns, ஓர்முட்செடி, Pisonia, *L.*

துறட்டிப்பழம், *s.* Its fruit.

துறட்டிரும்பு — துறட்டூமுள், *s.* A crooked iron or hook fastened in the integuments of the back of those who swing in the air at the செடில் festival.

துறட்டுக்கோல், *s.* An iron crook fixed at the end of a pole to pluck fruits.

துறட்டுப்பிடி—துறட்டுவாதம், *s.* Urgency, compulsive request, pressing one, &c., obstinacy in maintaining one's opinion, பிடிவாதம்.

துறப்பணம்—திறப்பணம், *s.* [*vul.*] A drill. See தாப்பணம்.

துறவி. See துற, *v.*

துறு, *s.* Iron-stone, laterite, செம்பூரான் கல். (சது.)

துறுகல், *s.* As துறு. 2. See துறு, *v. a.*

துறு, கிறேன், துற்றேன், வேன், துற, *v. a.* To eat, take food, உண்ண. (*Sa. Truda.*)

துறு—துற்றல், *v. noun.* Eating, taking food, உண்டல்.

துறு, கிறது, துற்றது, ம், துற, *v. n.* To be thick, crowded, full, நெருங்க. 2. To be closed, குவிய. (*p.*)

துறுபடை, *s.* A squadron, or troops, in close order.

துறு, *v. noun.* Thickness, closeness, crowdedness, நெருக்கம்.

துற்றல், *v. noun.* A closing up, குவிதல். 2. Being full, நிறைதல்.

தேவதாயோக்கியம், s. Divine excellence, as applied either to the celestials or holy men; also to any thing superexcellent in savor, beauty, &c., worthy of the gods, திவ்வியமேன்மை. Used also in irony.

*தேவதை, s. [pl. தேவதைகள்.] A goddess, தேவி. 2. A deity, தேவன்.—Three are in common use, as கிராமதேவதை, கூடித்திரிதேவதை, and பரதேவதை, which see.

தேவதைக்குறை, s. A disease, chiefly in women and children, supposed to result from possession by an evil spirit.

தேவதைத்தொடர்ச்சி, s. Possession by a demon. See தொடர்ச்சி.

*தேவமணி, s. Siva. சிவன். 2. The jewel of Krishna. கிருஷ்ணாபரணம். 3. (c.) A fortunate curl of hair on a horse's breast, குதிரைமார்புச்சுழியிலொன்று. W. p. 423. Devamaṇi.

*தேவம், s. Deity, Godhead. See தெய்வம். 2. Fate; used only adjectively.

தேவகங்கை, s. The celestial Ganges, ஆகாயகங்கை.

தேவகடாட்சம், s. Divine favor.

தேவகட்டளை, s. Divine injunction, command of God.

தேவகணம், s. The class of the inferior gods, or celestials. See கணம்.

தேவகாந்தாரி, s. A kind of tune, இசைப்பண். See காந்தாரி.

தேவகானம், s. Divine melody, tune, &c., தெய்வப்பண்.

தேவகிரி, s. A place sacred to Skanda near the Himalaya range, ஓர்மலை.

தேவகிருபை, s. Divine grace, mercy, compassion.

தேவகுமாரன்—தேவசுதன், s. The son of a deity. 2. [in Chris. usage.] Jesus Christ.

தேவகுரு, s. The planet Jupiter, or its regent, priest of the celestials, வியாழன்.

தேவகுருவஞ்சம்—தேவகுருவம், s. A place of bliss, one of the போகபூமி, which see. (சது.)

தேவகுலம், s. The race of gods, தேவசாதி. 2. (சது.) A temple, கோயில்.

தேவகூத்தியர், s. (plu.) Courtesans of the gods of Swerga, தேவகணிகையர்.

தேவகோட்டை, s. Name of a town in the Madura District, the principal residence of நாட்டுக்கோட்டையார்.

தேவக்கிரியை, s. The providence of God, தெய்வச்செயல். 2. One of the thirty-two tunes in singing. See இராகம்.

தேவசபை, s. The divine presence, &c., as தேவசமுகம். 2. The assembly in the temple. See சபை.

தேவசமுகம், s. Divine presence, the presence of a deity, idol, &c., spoken in reverence of the interior of a temple.

தேவசன்னிதானம் — தேவசன்னிதி, s. The divine presence. 2. A temple as the abode of a deity. See திருமுன்.

தேவசாயுச்சியம், s. Beatification. See சாயுச்சியம்.

தேவசாட்சி, s. An oath, ஆணை. (சது.)

தேவசித்தம், s. Divine will. See திருவுளம்.

தேவசிந்தனை, s. Divine meditation. See சிந்தனை.

தேவசிநிருதம், s. That which belongs to God, தேவசம்பந்தமுடையது. (Beschi.)

தேவசுபாவம், s. Nature, attributes, qualities of the Deity.

தேவசேவை, s. Attendance at the temple, ministering to and worshipping the idol, தெய்வவணக்கம். 2. Having the appearance of the deity, his vision, his form, &c., தெய்வதரிசனம்.

தேவசேனாபதி, s. Skanda, as general of the Devas in the expedition against the Asuras, கந்தன்.

தேவடியாள், s. A dancing woman of the temple. (c.) See தேவதாசி.

தேவடியாள்மகன், s. A bastard; spoken in contempt.

தேவதச்சன்—தெய்வத்தச்சன், s. The architect of the gods, Visvakarma, விச்சுவகர்மன்.

தேவதத்துவம், s. Divine power.

தேவதரு, s. See தேவதாரம்.

தேவதலம் — தேவஸ்தலம் — தேவஸ்தானம், s. A sacred shrine, a temple, &c., கோயில்.

தேவதாசன், s. A devotee, a servant of a deity, தெய்வத்தொண்டன். 2. The son of Arichandra, one of the six monarchs of India, அரிச்சந்திரன்மகன்.

தேவதாசி, s. (St.) A dancing and singing girl of a temple, commonly a courtesan, தேவடியாள்.—Note. The courtesans of the gods are உருவசி, மேனகை, திலோத்தமை and அரம்பை.

தேவதாரம், s. Any of the five famous trees in Swerga, ஐந்தருவிலொன்று. 2. A medicinal, fragrant tree, செம்புளிச்சை. 3. A kind of pine tree, ஓர்மரம், Erythroxylon aureolatum, L.

தேவதாரி—தேவதாரு, s. A kind of pine tree, as தேவதாரம், 3.

தேவதாருவனம், s. A forest celebrated in the Skanda Purana, in which forty-eight thousand Rishis resided.

தேவதாளி, s. A kind of plant, a Convolvulus, a kitchen herb, ஓர்பூண்டு.

தேவதுந்துமி, s. The drums of the gods, தெய்வப்பறை.

தேவதூஷகன்—தேவதூஷணக்காரன், s. A blasphemer, one who reviles God, or sacred things.

தேவதூஷணம், s. Blasphemy.

தேவதூதன், s. [fem. தேவதூதி.] A divine messenger. 2. [in Chris. usage.] An angel. See தூதன்.

தேவதேவன், s. Deity, the Supreme Being—applied by each one to the object of his highest worship.

தேவஸ்தானம், s. See தேவதலம்.

தேவஸ்திரி, s. Divine females of Swerga.

தேவத்தொண்டு, s. Service to a deity, temple, &c., திருப்பணி.

தேவத்தொண்டன், s. A devotee, as தேவதாசன்.

தேவத்தன்மை, s. Divine nature.

தேவத்துவம், s. Divinity; as தெய்வத்துவம்.

தேவநகர், s. A temple, கோயில். (சது.) 2. The city of the gods, தேவர்நகரம்.

தேவநாகரம், s. [sometimes தேவநாகரி.] The Nagari character of the Sanscrit language, சமஸ்கிருதத்தோர்வகையட்சரம்.

தேவநாயகன், s. The Supreme Being, கடவுள். 2. Any superior deity, தேவர்த்தலைவன்.

தேவநாயகன்பட்டணம், s. A town near Cuddalore.

தேவநிலம், s. The proper site of a house determined by divination, being one-sixth of a square plot divided and apportioned to the several deities.

தேவநீதி, *s.* Divine justice.

தேவபதம், *s.* Heaven, the firmament, ஆகாயம். 2. Royal presence, இராசசமுகம்.

தேவபதி—தேவராசன், *s.* Indra, இந்திரன்.

தேவபாஷை — தேவபாஷை, *s.* The Sanscrit language as that of the celestials, சமுஸ்கிருதம்.

தேவபூசை, *s.* Puja as offered to an idol.

தேவபூமி, *s.* The region or mansion where the gods dwell, தேவர்வாழிடம்.

தேவபோதனை, *s.* Divine instruction.

தேவப்பிறப்பு, *s.* A birth entitling a soul to the rank of a god. See தெய்வப்பிறப்பு.

தேவப்பிரமா, *s.* A name of the Muni Narada, நாரதன்.

தேவப்பிராமணன், *s.* A divine Brahman.

தேவயோனி, *s.* Divine birth or origin, தெய்வப்பிறப்பு. (*p.*)

தேவரூபி, *s.* [*also* தேவசொரூபி.] A divine person, as தேவதாசொரூபி.

தேவப்பெண், *s.* A goddess.

தேவமாதா—தேவமாதுரு, *s.* Mother of the gods, as அதிதி. 2. [*R. C. usage.*] The Virgin Mary, கன்னிமரியாள்.

தேவயத்தினம், *s.* [*sometime* தேவேத்தினம்.] Divine providence.

தேவயாத்திரை, *s.* A pilgrimage to some fane. 2. An idol procession.

தேவயானம்—தேவரதம், *s.* (*St.*) A car or vehicle of a god, திவ்வியவிமானம்.

தேவயானி, *s.* (*St.*) Daughter of சுக்கிரன், teacher of the Asuras, சுக்கிரன்புத்திரி.

தேவரம்பை, *s.* Females of Swerga, தெய்வப்பெண். 2. One of the courtesans of the gods, தேவதாசிகளிலொருத்தி.

தேவரனுசரிப்பு, *s.* Supplication. (*R.*)

தேவராசன், *s.* Indra, இந்திரன்.

தேவராதன், *s.* A king of Mit'hila.

தேவராளன், *s.* [*fem.* தேவராட்டி.] One supposed to be possessed so as to utter oracles, சன்னதக்காரன்.

தேவரிஷி, *s.* A Rishi of the celestial class.

தேவரீர், Your lordship, (2*d person plu. of a symbolic verb.*)

தேவருணவு—தேவருண்—தேவவுணவு, *s.* Nectar, ambrosia, amrita, அமுதம்.

தேவர்—தேவர்கள், *s.* [*pl. of* தேவன்.] Gods, celestials, deities, objects of worship, gods of Swerga or any other inferior class, சுரர். 2. Honorable persons, as a guru or priest, உயர்ந்தோர்.—*Note.* According to the Saiva sect the superior gods, or forms of the first order assumed by the Deity are five, viz.: 1. Brahma, பிரமா. 2. Vishnu, விட்டுணு. 3. Rudra or Siva, உருத்திரன். 4. Mayesvara, மயேசுரன். 5. Sathasiva, சதாசிவன். These are called, பஞ்சமூர்த்திகள்; the five Murtis, or பஞ்சகர்த்தாக்கள், five lords.

தேவர்கோயில், *s.* A temple, தேவாலயம்.

தேவர்கோன்—தேவேந்திரன், *s.* Indra.

தேவர்க்காடல், *v. noun.* Demoniac possession, dancing after certain sacrifices to devils, as சன்னதம், which see.

தேவர்வகை, *s.* The gods of Swerga, 330,000,000, are divided into four classes, with a chief for each கோடி or 10,000,000, as follows. 1. துவாதசாதித்தர், the twelve *Adityas.* ஆதித்தர், (*lit.*) the twelve suns, chiefs of their class numbering with them, 120,000,000. 2. ஏகாதசருத்திரர், the eleven *Rudras,* உருத்திரர், lords of their companies, comprising in all, 110,000,000. 3. அஷ்டவசுக்கள், the eight *Vasus,* their classes, including themselves, containing 80,000,000. 4. மருத்துவர், the two *Asvinis,* அச்சுவினிகள், the two physicians, the whole class being 20,000,000.

தேவலகன், *s.* A brahman who attends on an idol, அர்ச்சகப்பிராமணன். W. p. 423. DEVALAKA.

தேவலோகம், *s.* World of the gods, Swerga, the third of the seven upper worlds, of which Indra is king, the lowest heaven of mortals, who assume the form of gods for a residence in it. The enjoyments are all sensual, and the period of their continuance depends on the merit of the persons while on earth. When this is exhausted, they return for another period of probation; or go to a place of suffering for the expiration of previous demerit. This is the only heaven presented to the hope of the multitude, and generally the highest bliss they anticipate, சுவர்க்கம்.

தேவவசனம்—தேவவாக்கு, *s.* The word of God, the divine word, கடவுள்வாக்கு.

தேவவசீகரம், *s.* [*R. Cathol. usage.*] Transubstantiation. See வசீகரணம்.

தேவவருஷம் — தேவவருடம், *s.* A year of the gods. See தேவாண்டு.

தேவவிரதன், *s.* (*St.*) Bishma, வீடுமன். 2. A pious or religious person, கடவுளை வழிபடுவோன். W. p. 434. DEVAVRUTA.

தேவவிருட்சம், *s.* Any of the five species of trees in Swerga, பஞ்சதரு. W. p. 424. DEVAVRUKSHA.

தேவவெளிப்படுத்தல், *s.* [*Chris. usage.*] Divine revelation.

தேவவைத்தியம், *s.* Superior medical preparations requiring a knowledge of chemistry, and regarded as of divine origin. See வைத்தியம்.

தேவன், *s.* A Deity, a god, a divine being, கடவுள். W. p. 421. DEVA. 2. A title given to அகம்படியர் caste. 3. A title given to some among Maravars. 4. (சது.) The name of Argha, அருகன்.

தேவாங்கம், *s.* Silk cloth, பட்டுச்சீலை.

தேவாசனம், *s.* [*in Chris. usage.*] The throne of god, an altar, கடவுளிருக்கை.

தேவாசுவம்—தேவாஸ்வம், *s.* The horse of Indra, இந்திரன்பரி; [*ex* அசுவம்.]

தேவாண்டு—தேவஆண்டு, *s.* A year of the gods of Swerga, being three hundred and sixty-five years of mortals, திவ்வியவருஷம்.

தேவாதாயம் — தேவதாயம், *s.* Allowance for the support of heathen temples.

தேவாதி, *s.* God, கடவுள். (சது.)

தேவாதிதேவன், *s.* The God of gods.

தேவாதியர், *s.* [*com.* தேவாதிகள்.] The gods of Swerga and other celestials.

தேவாதீனம், *s.* Properties, peculiar rights, prerogatives, &c., of a deity. 2. Divine providence. See தெய்வாதீனம்.

தேவாத்திரம்—தேவாஸ்திரம், *s.* A divine missile-weapon from the gods.

தேவாமிர்தம் — தேவாமுதம், *s.* The ambrosia of the gods, the food of immortality, தேவருணவு.

தேவாரம், *s.* Divine praises, songs, &c., chanted by an assistant of the priest or others, after the performance of the *puja* in the Saiva temples. They were made by the three celebrated servants of Siva, அப்பர், சம்பந்தர் and சுந்தரர், and are called the Tamil Veda, being considered divine.

தேவாலயம், *s.* A temple, a place of worship, any sacred shrine, கோயில். W. p. 424. DEVALAYA. 2. (சது.) The golden mountain Maha Meru, as the favorite resort of the gods, மேருகிரி. See ஆலயம்.

தேவாலயத்தினுடைமை, *s.* Temple property, கோயிற்சொத்து.

தேவானுட்டிப்பு, *v. noun.* Religious practice, duties, exercises, worship, &c.; [*ex* அனுஷ்டிப்பு, observance.]

தேவி, *s.* A goddess. 2. Parvati, பார்வதி. 3. Durga, துர்க்கை. 4. Kali, காளி. 5. A queen, the wife of a prince, or nobleman, a term of respect to a married woman, சீமாட்டி. 6. A wife, மனைவி—as அண்ணன்தேவி, elder brother's wife.

தேவிகோட்டம், *s.* Any temple of Kali, காளிகோயில்; [*ex* கோட்டம்.] 2. A town, ஒரூர். W. p. 424. DEVIKOD'D'A.

தேவிபட்டிணம், *s.* The town of Devipatam, ஒரூர்.

தேவீகம் — தேவிகம், *s.* [*com.* தெய்வீகம்.] Divinity.

தேவேந்திரன், *s.* Indra, இந்திரன்.

தேவோக்கித்தம்—தேவோக்தம், *s.* Divine revelation, தேவவெளிப்படுத்தல்; [*ex Sa. Ukta,* spoken.] (*Beschi.*)

தேவோத்தியானம், *s.* A flower-garden for the gods, also a garden to produce flowers for the idols; [*ex* உத்தியானம்.]

தேவளம், *s.* (*Tel.* దేవళము.) A temple, கோயில்.

*தேவன்—தேவி. See under தேவம்.

*தேவீராம், *s.* (*St.*) The 248 longitudinal arcs registered in the Table of பஞ்சாங்கவாக்கியம்; [*ex* தேவீராம்=தேடீர்வான்=248.]

தேவை, *s.* Need, necessity, want, exigency, வேண்டுவது. (*Colloq.*) 2. A name of a town, Ramnad, இராமநாதபுரம்.

தேவையில்லை. It is not needed, not necessary, it is of no consequence. 2. [*elliptical.*] There is nothing wanting or objectionable in it; it will do.

அவன்பாயத்தியமெனக்குத்தேவையில்லை.......His assistance is not necessary to me.

அதைக்கொண்டவனுக்குத்தேவையில்லை. That is no concern of his.

தேளி, *s.* A kind of fish, ஓர்மீன், Scorpœna, *L.* (*c.*) 2. A red kind of cocoa-nut, கேளித்தேங்காய்.

தேள், *s.* A scorpion, தெறுக்கால். *(c.)* 2. Scorpio of the Zodiac, விருச்சிகராசி. 3. The seventeenth lunar asterism, அநுடநாள்.

தேள்கொடுக்கு—தேட்கொடுக்கு, *s.* The sting of a scorpion.

தேள்கொட்ட, *inf.* To sting as a scorpion.

தேள்கொட்டப்பாம்புக்குமந்திரிக்கிறதா. Should one apply the antidote for a snake-bite to a scorpion's sting?

தேறகம்—தேறை, *s.* [*prov.*] A small kind of fish, தேறைமீன்.

தேறலர்—தேறலார், *s.* Enemies, &c. See தேறு, *v.*

தேறல், *s.* Toddy, vinous liquor, கள். (சது.) 2. Honey, தேன். 3. See தேறு, *v.*

தேறு, *s.* A piece, துண்டு, as of ginger, turmeric, calamus, &c., மஞ்சள்முதலியவற்றின்தேறு. 2. [*com.* தேற்று.] The clarifying nut-tree, Strychnos, *L.* 3. *(p.)* Clearness, தெளிவு. 4. Certainty, நிச்சயம்.

சுக்குத்தேறு, *s.* A piece of dry ginger.

மஞ்சள்தேறு, *s.* A root of saffron.

வசம்புத்தேறு, *s.* A piece of calamus.

தேறு, கிறேன், தேறினேன், வேன், தேற, *v. n.* To recover strength, vigor, &c.,—as persons, beasts, plants; to grow well—as vegetation; to thrive, improve, செழிக்க. 2. To recover from swooning, intoxication, drooping, தெளிய. 3. To be comforted, consoled, solaced, soothed; to recover from fear, to cheer up, take courage, தைரியங்கொள்ள. 4. To make proficiency, arrive at perfection in a lesson, or in an art, &c., அதிகரிக்க. 5. To be thorough, accomplished, celebrated, perfect, mature, clear as the mind, to come to perfection, maturity, முதிர. 6. To prove, to result, to amount to—as profit, to turn out clear, பலிக்க. *(c.)* 7. To become stiff, hard, &c., as boiled rice, fruits, &c., when cold, சோறு முதலியவிறைக்க. 8. To stay, abide, தங்க. (சது.) 9. *v. a.* To form an opinion, to ascertain, to arrive at certainty, நிச்சயிக்க. 10. To confide, trust in, நம்ப.

ஒருமுழந்தேறும். There will be one cubit clear.

தேறலர்—தேறலார், *s.* Foes, enemies, பகைவர். 2. Ignorant persons, அறியாதார்.

தேறவிசாரிக்க, *inf.* [*also* திரவிசாரிக்க.] To investigate thoroughly so as to be certain.

தேறுமை, *v. noun.* *(neg.)* Uncertainty, unfruitfulness, unsteadiness.

தேறார், *appel. n.* As தேறலர்.

தேறின எழுத்து, *s.* A finished handwriting. See under எழுத்து.

தேறினகட்டை, *s.* *(fig. in cant.)* An experienced person.

தேறினகாய், *s.* A nearly ripe fruit.

தேறினபயிர், *s.* Thriving vegetation.

தேறினபுத்தி, *s.* Improved intellect. 2. Good parts.

தேறினவன், *appel. n.* A man well versed in an art, a man of experience.

தேறுகடை, *s.* Settlement, finishing, தீர்மானம்.

தேறுகடைபண்ண, *inf.* To make a settlement, come to a decision.

தேறுசூடு *s.* [*prov.*] Branding cattle to promote their fattening, தெளிவுசூடு. 2. Brand on cattle.

தேறுதலை, *s.* [*vul.*] Courage, தைரியம். 2. Comfort, ஆறுதல்.

தேறுநர், *s.* The learned, கற்றோர். 2. Trust-worthy persons, நம்பத்தக்கவர். *(p.)*

படிப்பிலேதேற, *inf.* To make great proficiency in learning, to excel in study.

மனந்தேற, *inf.* To be comforted, consoled, &c. 2. To become sure, certain.

தேறல்—தேறுதல், *v. noun.* Certainty, நிச்சயம். 2. Determination, finishing of a business, துணிவு. 3. Staying, standing, தங்கல். (சது.) 4. Relief from sickness, குணமாதல். 5. Comfort, consolation, solace, ஆறுதல்.

தேறுதல்சொல்ல, *inf.* To comfort, console, cheer. *(c.)*

தேற்றம், *v. noun.* Certainty, assurance, &c., as தேறல், 1, 2. (சது.) 2. Clearness, தெளிவு. 3. [*in gram.*] An emphatic, ஏ, or மன்ற, as expressive of certainty, emphasis, &c., தேற்றக்குறிப்பு. 4. Recovery from sorrow, &c., as தேற்றரவு. 5. Comfort, as தேறல், 6. Thriving, firmness, good growth, செழிப்பு.

ஆள்தேற்றமாயிருக்கிறான். The person has gained strength, flesh, &c.

தேற்றக்குறிப்பு — தேற்றப்பொருள், *s.* See தேற்றம்.

தேற்றங்கொடுக்க, *inf.* To comfort, console, encourage. 2. To gain or recover strength, grow stout and firm, to thrive as persons, beasts, plants, &c. 3. To recover from dejection, to be cheerful as தெளிவுகொடுக்க.

தேற்றஞ்செய்ய — தேற்றம்பண்ண, *inf.* To comfort, console, encourage.

தேற்றமாய்ப்பேச, *inf.* To speak comfortably.

தேற்றமானபயிர், *s.* A reviving and thriving crop. See தேறினபயிர்.

தேற்றமானவன், *appel. n.* A courageous person. 2. One gaining strength, after weakness.

தேற்றரவு, *v. noun.* Relief from sorrow or fear; consolation, comfort, solace, தெளிவு. *(c.)*

தேற்றரவாளன் — தேற்றரவாளி, *s.* A comforter, consoler, encourager, திடப்படுத்துவோன். 2. [*in Chris. usage.*] The Holy Spirit.

தேற்றரவுசொல்ல, *inf.* To comfort, to cheer.

தேற்று, *s.* The water-clearing-nut tree, இல்லம், Strychnos potatorium, *L.*—*Note.* The grated nut thrown into a pot of turbid water clarifies it by precipitation.

தேற்றங்கொட்டை, *s.* The தேற்று nut.

தேற்றங்கொட்டைக்குளிகை, *s.* Medicinal pills made of the தேற்று nut.

தேற்றங்கொட்டையிலேகியம், *s.* An electuary made of the nut.

தேற்றங்கொட்டையுரைக்க, *inf.* To grate the தேற்று nut.

தேற்றம்பொடி, *s.* Medicinal powders of the nut.

தேற்றார், *s. (plu.)* The ignorant, அறிவிலார். 2. Foes, enemies, பகைவர்; [*ex* தேற்ற.]

தேற்று, கிறேன், தேற்றினேன், வேன், தேற்ற, *v. a.* To comfort, to console, ஆற்ற. 2. To recover one from fear, swooning, weakness or dejection, குணமாக்க. 3. To convince, assure, relieve from doubt, மெய்ப்படுத்த. 4. To communicate strength, to nourish, cherish, invigorate, பலமுண்டாக்க. 5. To clear, clarify, refine, purge, சுத்திகரிக்க. *(c.)* 6. To clear up, to decide, தீர்க்க. 7. *(for* தேறு.) To know, to know certainly, அறிய. *(p.)*

தேனார், *s. (plu.)* Thieves, robbers, திருடர். [*ex* தேனு.] (சது.)

தேனு, *s.* Stealth, stealing, robbery, களவு. (சது.)

***தேனு—தேநு**, *s.* A milch-cow, one that has lately calved, பாற்பசு. W. p. 447. Dhenu. 2. A cow, பசு. 3. The cow of Swerga, தெய்வப்பசு. (See காமதேனு.) 4. A buffalo, எருமை. 5. A horse, குதிரை. (சது.)

***தேனுகன்**, *s.* A Rakshasa, ஓரசுரன்.

தேனுகாரி, *s.* Krishna, as an enemy of தேனுகாசுரன், whom he destroyed in battle, கிருட்டிணன்; [*ex* அரி.]

தேன், *s.* Honey, மது. *(c.)* 2. Toddy, கள். 3. Fragrance, odor, வாசனை. 4. A beetle, வண்டு. 5. Female bee, பெண்வண்டு. —*Note.* There are some varieties of honey; குறிஞ்சித்தேன், wild honey from the hills; கொசுத்தேன், பொந்தத்தேன், சிறுதேன், honey of a very small bee; பெருந்தேன், good honey from the hills produced by large bees; கொம்புத்தேன், honey from a bunch of a tree in a comb; செந்தேன், red honey of high flavor.

தேன்கூட்டிலேகல்லெறியலாமா. Would one stone a bee's nest?

தேனெடுத்தோர்கையைநக்காரோ. Will not those who handle honey lick their fingers?

தேனும்பாலும்போலே. United as closely and sweetly as honey and milk.

தேனிறால், *s.* [*vul.* தேனிருட்டு.] Honey-comb, தேன்கூடு.

தேனீ, *s.* A bee, தேன்கூட்டிபீ. *(c.)*

தேனூற, *inf.* To flow with honey, to be mellifluous. 2. To be pleasant, gratifying.

தேனூறுமலர். The honey-forming flower.

தேனெறும்பு, *s.* The largest kind of emmet, fond of sweets, பெரியஎறும்பு.

தேனொழுகல், *v. noun.* Drops of honey.

தேன்கடல், *s.* One of the seven seas, the sea of honey, ஓர்கடல்.

தேன்கதலி, *s.* A sweet kind of plantain, ஓர்வாழை.

தேன்குழல்—தேன்குழாய்—தேங்குழல், *s.* A kind of pastry fried in ghee, fritters, ஓர்பணிகாரம்.

தேன்குழலுரல், *s.* A mould for making this pastry.

தேன்குழற்கம்பி, *s.* A piece of pastry.

தேன்கூடு, *s.* A bee's nest or hive, தேனீக்கூட்டம். 2. Cells in a bee's nest, தேன்கூட்டிலுள்ளறை. 3. Honey-comb, தேனிறால்.

தேன்தோடை—தேன்றோடை, *s.* [*prov.*] The orange tree or fruit. See தோடை.

தேன்பூச்சி, *s.* As தேனீ. *(R.)*

தேன்வதை, *s.* [*prov.*] Honey-comb, தேனிறால்.

தொ

தொ. A compound letter of த் and ஒ.

தொகம், *s.* An estimate, a total, மதிப்பு.

தொகக்காரன், *s.* One who estimates.

தொகம்பார்க்க, *inf.* To value the produce of a field. (*Gov. usage.*)

தொகு, கிறது, தொக்கது, தொகும், தொக, *v. n.* To assemble, to collect, or be collected together, to accumulate, கூட. 2. To form as a whole, an aggregate, a lump, திரள. 3. To be summed up, to be brought into a total, தொகையாக. 4. To become concentrated, or united in one, to be brought to a focus, to converge as rays, குவிய. 5. To be omitted, as a particle in the combination of words, வேற்றுமையுருபுமுதலியமறைய. 6. To be contracted, as a word; to be omitted, as a letter, or letters in the beginning or end of a word, சுருங்க.

தொகப்படுவது, *appel. n.* Ellipsis or contraction.

தொகல், *v. noun.* Collection, assemblage, joining, கூடல்.

தொகாநிலை—தொகாநிலைத்தொடர், *s.* [*in gram.*] The connexion of a word with its பயனிலை, or that with which it makes sense, without ellipsis, contraction, &c., வினை உருபுமுதலியவிரிந்துநிற்றல்.—It embraces nine varieties; 1. முற்று, finite verbs with their nominatives, as வந்தான்சாத்தன், Sattan came. 2. பெயரெச்சம், relative participle, and its noun, as வந்தசாத்தன், Sattan who came. 3. வினையெச்சம், verbal participles with their finite verb, &c., as வந்துபோனான், he came and returned. 4. எழுவாய், the nominative and its verb, as சாத்தன்வந்தான், Sattan came. 5. விளி, the vocative and its verb, as, சாத்தாவா, come Satta. 6. இரண்டாவதுமுதலிய ஆறு வேற்றுமையின் உருபு, the six oblique cases (the vocative excepted), with their பயனிலை, as சோற்றையுண்டான், he ate the rice; மகனொடு சென்றான், he went with his son; சாத்தற்குமகன், son to Sattan; மலையின்வீழருவி, cataract falling from the hills; சாத்தனதுகை. Sattan's hand; குன்றத்தின்கட்கூகை, owl in a hill. 7. இடை, particles with their nouns, or verbs, as பொன்னன்னகுதிரை, A horse like gold. 8. உரி, adjectives or adverbs with their nouns or verbs, as மாயிருஞாலம், very glorious world, சாலப்பகை, great enmity. 9. அடுக்கு, the repetition of the same word for emphasis, &c., as பாம்புபாம்பு, snake, snake; தீத்தீ, fire, fire, &c.

தொகுதி, *s.* A series or class of persons, things, &c., கூட்டம். 2. A society, association, மக்கட்குழு. 3. A flock, herd, swarm, &c., விலங்கின்குழு. 4. Genus, aggregate, பிண்டம். 5. A quantity, collection, accumulation, திரட்சி. (*p.*)

தொகுதிப்பெயர், *s.* A noun of multitude, குழூஉப்பெயர்.

தொகு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To assemble, to collect together, to accumulate, கூட்ட. 2. To classify, to arrange in class, வகுக்க. 3. To sum up, to reduce to a total, to abridge, to abbreviate, தொகைசெய்ய. (*c.*) 4. To omit a letter or letters in the beginning, middle, or end of a word. முதலிடைகடைகுறைக்க. 5. To estimate, மதிக்க.

தொகுத்துக்காட்ட, *inf.* To give the sum or substance of a thing, or transaction.

தொகுத்துச்சுட்டல், *v. noun.* Mentioning, or opening a subject about to be treated of; one of the thirty-two உத்தி.

தொகுத்துச்சொல்ல, *inf.* To state in brief, to give a summary. 2. To mention particularly, to particularize.

தொகுத்துப்பார்க்க, *inf.* To view things in the aggregate, as a whole, &c.

தொகுத்துரை, *s.* A free rendering of the text. See உரை.

தொகுப்பு, *v. noun.* The sum, total, தொகை. (*c.*)

தொகை, *s.* Assembly, collection, கூட்டம். 2. Sum, amount, total, தொகுதி. 3. Property, stock, money, பணஇருப்பு. 4. Summary, aggregate, epitome, compend, substance of a narrative, abstract of a subject; genus, as including species; general subjects combined, whether analytically or synthetically, சுருக்கம். 5. Assortment, இணைமடைப்பு. 6. Article, item, particulars of an account, &c., எண்ணிறுப்பு. (*c.*) 7. [*in gram.*] Omission of a particle in the combination of words, as தொட்டனைத்து, for தொட்டஅனைத்து, as far as day, தொகுத்தல்விகாரம். 8. Elliptical combination of words, as பொன்கொணர்ந்தான், for பொன்னைக்கொணர்ந்தான், he brought the gold. (See தொகைநிலை.) 9. The main division of a treatise, as distinguished from வகை or விரி, அறுவகைச்சூத்திரத்தொன்று.

தொகைபிசகிப்போயிற்று. The calculation is erroneous.

தொகைகட்ட, *inf.* To finish, to conclude, to bring to an end. 2. To deliver up, to make over, as money, &c., to make a final payment. 3. To sum up, to make a total, to make out the total, to cast up.

தொகைகாட்ட, *inf.* To give a written account. 2. To state a particular number or sum. 3. To make a sum appear large, to magnify. 4. *v. n.* To appear large, as an amount.

தொகைகூட்ட, *inf.* To add up.

தொகைக்காரன், *s.* A man of considerable property, தனவான். (*c.*)

தொகைச்சூத்திரம், *s.* One of the six kinds of rules for composition. See சூத்திரம்.

தொகைதைக்க, *inf.* To make out the grand total of an account. See தை, *v.*

தொகைநிலை, *s.* A summary, contraction, ellipsis, &c., சுருங்கிநிற்கை. 2. [*in gram.*] The connection of a word with the பயனிலை by omitting a particle, வேற்றுமையுருபுமுதலியதொக்குநிற்றல்.—It embraces six varieties; 1. வேற்றுமைத்தொகை, the omission of the sign or form of the case, as பொன்கொடுத்தான், for பொன்னைக்கொடுத்தான். 2. வினைத்தொகை, a verb without the sign of the tense. combined with a noun, as கொல்புலி for கொன்றபுலி, கொல்கின்றபுலி, கொல்லும்புலி. 3. பண்புத்தொகை, omission of the adjective sign ஆகிய or ஆய in combining the qualifying epithet with the noun, as கருங்குவளை for கருமையாகியகுவளை, or two nouns in apposition, as ஆதிபகவன். 4. உவமைத்தொகை, the combination of two words with the omission of the sign of comparison, as பான்மொழி for பால்போலுமொழி. 5. உம்மைத்தொகை, omission of the particle உம், as கபிலபாணர் for கபிலனும்பாணனும்; also இராப்பகல் for இராவும், பகலும். —*Note.* In this combination, there is commonly no reduplication. 6. அன்மொழித்தொகை, a metonomy or omission of a word, commonly the name of a person, immediately after any of the five preceeding ellipses, as பொற்றொடி for பொற்றொடியையுடையாள், the golden bracelet-damsel.

தொகைநிலைச்செய்யுள், *s.* A poem consisting of a fixed, even number of verses, ஓர்பிரபந்தம்.

தொகைநிலைத்தொடர்மொழி, *s.* As உவமைத்தொகை. (*R.*)

தொகைநிலையுருவகம், *s.* [*in rheto.*] A perfect metaphor, ஓரலங்காரம்.

தொகைபடுவது, *appel. n.* Contraction of words, as தொகப்படுவது.

தொகைபார்க்க, *inf.* To sum or cast up the amount. (*c.*)

தொகைபூட்ட, *inf.* [*prov.*] To balance accounts, to strike a balance, கணக்குச்சரிக்கட்ட. 2. As தொகைதைக்க.

தொகைப்படுத்த—தொகையாக்க, *inf.* To make up an even number. 2. To make a large sum. 3. To sum up; to reduce to head

தொகைப்பிசகு — தொகைமோசம், *s.* An error in a reckoning. 2. (*fig.*) A mistake, a blunder.

தொகைப்பொருள், *s.* Recapitulation; peroration, விரித்தபொருளின்அடக்கம்.

தொகைமோசம், *s.* See தொகைப்பிசகு.

தொகையகராதி, *s.* One of the four divisions of சதுரகராதி, which see.

தொகையுருவகம், *s.* As பண்புத்தொகை. (*R.*)

தொகையுவமம், *s.* Contraction of metaphor. See உவமைத்தொகை.

தொகையேற்ற, *inf.* To make a large sum, by the addition of many small items, commonly as a debt. 2. As தொகைகூட்ட. (*c.*)

தொகையேறுதல், *v. noun.* Swelling to a large sum by the addition of many items. 2. Forming a total, an amount.

தொகைவகை, *s.* Head and divisions of a subject.

தொகைவகைவிரி, *s.* Heads of a subject, its general divisions, and discussion, &c.

தொகைவிரி, *s.* Head of subject and the discussion.

தொக்க, *rel. parti.* Joined, united, சேர்ந்த; [*ex* தொகு, *v. n.*] (*p.*)

தொக்கமனிதர், *s.* Assembled men.

தொக்கடம், *s.* (*Tel* తొక్కుడు.) Pressing, pounding, treading down, மிதித்தல்முதலியன.

தொக்கடம்போட, *inf.* To squeeze the limbs in order to remove pain. 2. To express the juice of leaves by squeezing, கசக்கிச்சாறுபிழிய.

தொக்கடவு, *s.* [*prov.*] A cross-way, a shorter way than the common road, குறுக்குவழி. (*c.*)

தொக்கடி—தொக்கட்டி, *s.* [*prov.*] A kind of basket made of olas to protect fruit on the tree, ஓலைக்குடலை. 2. A small ola-basket for fruit, சிறுகடை. 3. A small hut for watchers in a field, காவற்குடிசை.

தொக்கடை, *s.* (*Tel.*) Poverty, want, வறுமை.

தொக்கடைப்பட, *inf.* To suffer want.

தொக்கம், *s.* (*For.*) A law-suit, வழக்கு.

தொக்கக்காரன், *s.* A litigious man.

தொக்கம், *s.* Any thing eaten adhering to the bowels. See தொங்கல். [*ex* தொங்கு.]

குழந்தைவயிற்றில்தொக்கம்நிற்கிறது. Something sticks in the child's bowels.

தொக்கிடம், *s.* Pressing the body, in anointing before bathing. (*O. Dic.*)

தொக்கார், *s.* [*plu.*] People assembled, assembly, company. 2. Friends, adherents, தோழர்; [*ex* தொகு, *v.*] (*p.*)

தொக்கு, *s.* A small matter, அற்பம், (*c.*)

தொக்காய்ப் போகாது—தொக்கிலேபோகாது. It will not be trifling, it will not pass with impunity.

தொக்குத்தொடிசுவைக்காமலெடுத்துப்போடு....... Take it all away, leave nothing.

தொக்குக்கண்டுகொள்ள, *inf.* To disregard, to treat one meanly.

***தொக்கு**, *s.* (*St.* துவக்கு.) Skin, cuticle, surface of the body, as one of the five organs of sense, தோல். (*Met.*) raiment. (See அக்குத்தொக்கில்லாதவன்.) W. p. 393. Tvak. 2. The bark of a tree, மரப்பட்டை. 3. (சது.) Body, சரீரம்.

தொக்கிந்திரியம், *s.* The sense of feeling.

தொக்குத்தொக்கெனல், *v. noun.* The creaking of shoes, &c., சரடுக்கொலிக்குதிப்பு. (*c.*)

தொக்குத்தொக்கென்றுநடக்க, *inf.* To walk, making a noise—as with shoes. 2. To walk fast and with a rocking motion, as a corpulent person, &c.

தொக்குநிற்றல், *v. noun.* Being omitted or understood as a particle, &c., in language or combination. See தொகைநிலை. [*ex* தொகு, *v.*]

தொங்கணி, *s.* A pendent ornament, தூங்கணி; [*ex* தொங்கு, *et* அணி.]

தொங்கல், *s.* Any thing pendent, hanging, &c., தொங்குதல். 2. A pendent part of an ornament, ஆபரணத்திற்றொங்கணி. 3. End or corner of a woman's cloth, either hanging or brought up round the neck; end of a man's cloth thrown over the shoulder, முன்றானை. 4. [*prov.*] Any thing stuck or hanging, ready to fall, ஒட்டுப்பற்றியிருத்தல். 5. A thing eaten adhering to the bowels, தங்கல். 6. An ear-ornament in general, காதணி. 7. Hangings or fringes of cloth, shawl, &c., தூக்கங்கள். (*c.*) 8. A flower garland, பூமாலை. 9. Tail of a peacock, மயிற்றோகை. 10. A bunch of peacock's feathers, for a fan or parasol, பீலிக்குடை. 11. A white umbrella, being an emblem of royalty, வெண்குடை. 12. End, extremity, projection, cape, headland, promontory; end of a street, முனை. 13. Men's hair, ஆண்மயிர். (சது.)

தொங்கலுக்குத்தொங்கல். At every corner.

தொங்கலிலேமுடிய, *inf.* To tie up in the end of a cloth.

தொங்கலுக்குப்பார்க்க, *inf.* To try to remove an obstruction in the bowels by magic.

தொங்கல்போட — தொங்கல்விட, *inf.* [*prov.*] To put the end of the cloth over the shoulder, as a woman.

தொங்கன், *s.* [*fem.* தொங்கி.] A thief, a rogue, கள்ளன்; [*ex* *Tel.* దొంగ.]

***தொங்கிசம்**, *s.* (*St.* துவங்கிசம்.) Loss, destruction, damage, detriment, injury, கேடு. (*c.*)

அவன்மெத்தவுந்தொங்கிசப்படுகிறான்.......He is much straitened.

தொங்கு, கிறேன், தொங்கினேன், வேன், தொங்க, *v. n.* To hang, to be suspended, to hang down, to stick, or hang, ready to fall; to dangle, தூங்க. 2. To adhere as any thing to the bowels, தங்க. 3. (*fig.*) To remain long with one, as another's property, நிலைவைப்பட. (*c.*) 4. To move with leaps—as a child skipping, or a beast galloping, குதிக்க. 5. [*in burlesque.*] To run away, to slip off (to die) with விடுதல், or போகுதல்; குழூஉக்குறி.—Most of the compounds are limited to Jaffna.!

தொங்காரப்பாய்ச்சல், *v. noun.* A jolting pace, jumping movement, gallop of a horse, குதிரையோட்டம்.

தொங்கிப்பாய, *inf.* To rise high in walking, to gallop, to skip. 2. (*fig.*) To be haughty, to assume airs.

தொங்கிப்போக, *inf.* To be lodged and lost as a thing thrown. 2. (*fig.*) To be in another's possession, to be lost, to be unjustly appropriated—as a deposit, to become burdensome as a debt. 3. To tarry in the road from fatigue. (*c.*) 4. [*in cant.*] To die. 4. [*prov.*] To run away.

தொங்கிவிழ, *inf.* To jump and tumble down. 2. To be haughty, to be exposed to fall.

தொங்குகாது, *s.* Hanging ears. (*c.*)

தொங்குபறிவு—தொங்குபொறி—தொங்குபொறிவு, *v. noun.* [*prov.*] Hanging just ready to fall; to slip off; to turn over, ஒட்டியுமொட்டாதிருத்தல். 2. (*fig.*) Ready or waiting for a pretext to leave a company, விலகுதற்கேதுப்பார்த்தல்.

தொங்குகிழவன், *s.* A decrepit, old man. (*R.*)

தொங்குபுளுகன், *s.* [*prov.*] A vain person, who walks with a conceited springing gait, பெரும்புளுகன்.

தொடக்கம், *s.* Beginning, commencement, origin, ஆதி. (சது.) 2. Undertaking, entrance upon, தொடக்குகை. 3. Means for an end, எத்தனம்; [*ex* தொடக்கு, *v.*] (*c.*)

இத்தொடக்கத்தன. And so forth. (*p.*)

தொடக்கஞ்செய்ய, *inf.* To begin, to commence, to enter.

தொடக்கு, *s.* The uncleanness of a woman in her menses and in child-bed, மகளிர்சூதகம். (See துடக்கு.) 2. Entanglement, tying, binding, கட்டு. 3. Connexion, concern, பற்று. *Sometimes* துடக்கு. 4. (*R.*) A kind of ornament, தொடக்குவடிவு.

தொடக்கு, கிறேன், வேன், தொடக்க, *v. a.* [*also* துடக்கு] To tie, கட்ட. 2. To entangle, சிக்குப்படுத்த. 3. [*vul.*] To begin, தொடங்க. 4. To make to agree, பொருத்த.

தொடங்கு, *s.* [*prov.*] [*also* துடங்கு.] Stocks for confinement, விலங்கு. 2. A jewel for the foot, காலணி.

தொடங்கு, கிறேன், தொடங்கினேன், வேன், தொடங்க, *v. a.* and *v. n.* [*improp.* துடங்கு.] To begin, to commence, to originate, ஆரம்பிக்க. 2. To undertake, to enter upon, to engage in, முயல. (*c.*)

தொடரி, *s.* (*also* துடரி.) A shrub. See தொடர், *v.*

தொடர், *s.* Yarn, cotton thread, பஞ்சினூல். 2. Gum, glue, பிசின். 3. Flower garland, பூமாலை. 4. Chain, சங்கிலி. 5. Fetter, விலங்கு. 6. (*fig.*) Love. (*Beschi.*) 7. Antiquity, lineal succession, பழமை. 8. Following, succession, connection, series, பின்சேறல். 9. Phrase, sentence, words forming a complete idea, சொற்றொடர்.

தொடர்ச்சொல்—தொடர்மொழி, *s.* A compound word; also a phrase, clause, sentence.

தொடர்ச்சொற்புணர்த்தல், *v. noun.* Combining or giving rules for the composition of words; one of the thirty-two உத்தி.

தொடர்ப்பாடு, *v. noun.* Connexion, attachment, சம்பந்தம்.

தொடர், கிறேன், ந்தேன், வேன், தொடர, *v. a.* To succeed each other reciprocally as the tree and seed, the body and its actions, and *vice versa*, பீசவிருட்சநியாயமாத்தொடர. 2. To proceed or succeed each other—as letters in the formation of words, &c., எழுத்துமுதலியதொடர. 3. To follow continually, to continue, இடையறுதவர. 4. To insist, to engage with energy, முயல. 5. To follow, to attend as on a great man, to pursue, பின்செல்ல. 6. To seek, to go in quest of, to apply to from day to day, தேட. 7. To follow in order, in unbroken succession, &c., தொடர்ந்துநிற்க. 8. To prosecute, to claim in law, to sue, வழக்காட. (*c.*) 9. To connect, to tie, to bind, கட்ட. 10. To assail, to attack, தாவ.

கருமத்திற்றொடர்ந்திருக்கிறான். He perseveres in his undertakings.

தொடராமுறி, s. A deed of renunciation or relinquishment, an agreement not to prosecute in law, விடுதலைப்பத்திரம். (c.)

தொடரி, appel. n. A kind of thorny shrub whose fruit is edible, Rhamnus circumcissus, L. See முள்ளொடரி and பின்றொடரி.

தொடரெழுத்து, s. A letter elided or changed in the combination of words according to the rules of permutation, தொடர்ந்திற்குமெழுத்து, as அவனிருந்தான், for அவன் இருந்தான், and வந்தடித்தான்—for வந்து அடித்தான்.

தொடர்நிலைச்செய்யுள், s. A poem in which several connected actions are related, epic poetry, ஓர்வகைச்செய்யுள்.

தொடர்ந்தஅன்பு, s. Continued love. (R.)

தொடர்ந்தார்—தொடர்ந்தோர், appel. n. (plu.) Friends, companions, மித்திரர்.

தொடர்ந்துதிரிய, inf. To be constantly about with one. 2. To pursue an object with unremitted application. (c.)

தொடர்ந்துபழிசெய்ய, inf. To injure one without provocation.

தொடர்ந்துபிடிக்க, inf. To overtake. 2. To seek diligently and find.

தொடர்ந்துபேச, inf. To continue speaking.

தொடர்ந்துபோக, inf. To pursue, follow after one.

தொடர்ந்தேற்றி, s. [prov.] Perseverance, persistence, repetition, விடாமுயற்சி.

தொடர்ச்சி, v. noun. Pursuit, continuance. (met.) effect or consequence. (Beschi.) 2. Claim in law-suit, வழக்குத்தொடர்ச்சி. 3. Cluster of flowers, bunch of flowers, பூங்கொத்து. 4. Perseverance, முயற்சி. 5. Demoniacal possession, பேய்த்தொடர்ச்சி. For other meanings, see தொடர்பு. (c.)

எனக்கும்அவருக்குமொருதொடர்ச்சியுமில்லை. I have no connexion with him, I have no claim on him.

தொடர்ச்சிக்காரன், s. [in law.] A claimant, a prosecutor, a plaintiff.

தொடர்ச்சிபண்ண, inf. To prosecute in law, to claim, to sue.

தொடர்ச்சியானகாரியம், s. An actionable matter.

தொடர்ச்சியாய்ச்செய்துவர, inf. To persevere in an undertaking.

தொடர்பு—தொடர்வு, v. noun. Continuance, succession, தொடர்ச்சி. 2. Series, tissue, train, range, chain, சங்கிலித்தொடர். 3. Friendship, constancy in friendship, attachment, சிநேகம். 4. Relationship, connexion by consanguinity, or affinity, உறவு. 5. Antiquity, hereditary succession. 6. Lineal descent, பரம்பரைத்தொடர்பு. 7. Regular succession following one another, முறைமை. 8. Reciprocal succession, as the tree and its seed, and the contrary, பீசவிருட்சநியாயமாய்த்தொடர்கை. 9. Connexion, as of liquid particles, &c., ஒட்டுகை. (c.) 10. Verse, poetry, பா.

தொடர்மொழி, s. Compound words. See தொடர்ச்சொல்.

தொடலை, s. A garland, மாலை; [ex தொடு, v.] 2. Females' play, மகளிர்விளையாட்டு. 3. Play in general, விளையாட்டு. (சது.)

தொடி, s. A bracelet or bangle, கைவளை. 2. Another kind of arm-ring, கங்கணம்; [ex தொடு, v. a.] 3. A weight, the பலம். (சது.)

பைந்தொடி—பொற்றொடி. A lady with golden bracelets. (p.)

தொடிசு, s. Connexion, concubinage, sexual intercourse, சம்பந்தம். See தொடுசு.

தொடித்தலைவிழுத்தண்டினார், s. One of the forty-nine professors of the Madura college, whose encomiastic stanza on the Cural has preserved his name from oblivion, சங்கப்புலவரிலொருவர்.

தொடு, s. Garden, தோட்டம். 2. Field, tilled land, agricultural land, மருதநிலம். 3. Deceit, guile, வஞ்சம். (சது.)

தொடுகடிக்க, inf. [prov.] To graze, to crop off the tops of grass, மேற்கடியாகக்கடித்துமேய. 2. To pick out food, to eat daintily, வேண்டாவெறுப்பாயுண்ண.

தொடுக்கம், s. Gold, பொன். (சது.)

தொடுசு, s. (Tel. తొడుసు.) Connexion, ஒட்டு. 2. Concubinage, சம்பந்தம். (c.)

இவளுக்குஅவன்தொடுசு. She is his concubine.

தொடு, கிறேன், தொட்டேன், வேன், தொட, v. a. To touch, to come in contact with, to feel, to perceive by the touch, பரிசிக்க. 2. To handle, to take hold of, to finger, to use, பிடிக்க. 3. To be connected or united, to be joined, &c., பொருந்த. 4. To begin, தொடங்க. (c.) 5. To discharge an arrow or other missile weapon, அம்பெய்ய. 6. To eat, உண்ண. 7. To dig, to scoop out, to excavate, தோண்ட. 8. To put on shoes or a garment, தரிக்க.

தொட்டாற்றோழன்விட்டால்மாற்றான். A friend if persevered in, and a foe if neglected; *spoken of an art.*

தொடப்படாது. I cannot give you; (*lit.*) cannot touch.

தொட்டுக்கண்ணிலே யொற்றிக்கொள்ள.......To touch the feet of an idol or great person and then apply the fingers, to the eyes; as if saying, "I worship your feet." 2. [*in contempt.*] To be too obsequious, or submissive.

ஆகாசத்தைத் தொட்டுக்கொண்டுநிற்கிறது. The top of trees, &c., touches the sky.

தோஷந்தொட்டுநிற்கிறது. Fatal symptoms have appeared (as in cholera, &c., before death).

நிலந்தொட்டுவைத்தார்கள். They rubbed the sand in which they had written (on their forehead, eyes, and breast).—*Note.* This is done in homage to Ganesa or Sarasvati.

சனியன் தொட்டுக்கொண்டது. Saturn has begun to exert his malign influence.

செருப்புத்தொட்டுக்கொண்டுநடக்க, inf. To walk with sandals.

தொடுகழல், s. A pair of Indian slippers, as தொடுசெருப்பு. (p.)

தொடுகழன்மறவர், s. (plu.) Heroes who wear ankle rings. 2. Huntsmen with sandals. (p.)

தொடுகை, s. Touch, பரிசம். 2. v. noun. Digging, தோண்டுகை.

தொடுதிலும், [prov.] At all, in any wise, &c., used with a negative verb, ஒருபொழுதும்.

தொடுசெருப்பு, s. As தொடுகழல். (c.)

தொடுபதம், s. Boiled rice, சோறு. (சது.)

தொடுவாய், s. [prov.] Confluence or junction of two rivers, or of a river with the sea, தண்ணீர்கள்சந்திக்குமிடம்.

தொடுவான், s. [prov.] The horizon, அடிவானம்; [ex வான், the heavens.]

தொடல், v. noun. Being close, சார்தல். 2. Touching, தீண்டல். 3. Digging, தோண்டல். 4. Catching, பிடித்தல். 5. Eating, புசித்தல்.

தொட்டடி, s. [properly தொட்டஅடி.] The beginning line—oppos. to விட்டடி.

தொட்டப்பன், s. [prov.] A godfather.

தொட்டாய்ச்சி, s. A godmother. (*Chris. usage.*)

தொட்டல், v. noun. Digging, தோண்டல்.

தொட்டு, [*verbal participle.*] Touching, concerning, in reference to. (See சுட்டி.) 2. Beginning with, from, since; used as பற்றி and குறித்து to express relation. (c.)

அதைத்தொட்டு. Concerning that.

இளமைதொட்டு. From youth up.

அன்றுதொட்டு. From, or since, that day. 2. From former times.

தொன்றுதொட்டு. From time immemorial. (p.)

தொட்டுக்கொண்டிருக்க — தொட்டுக்கொண்டுநிற்க, inf. To be in contact with, contiguous.

தொட்டுக்கொண்டுபோக, inf. To pretend to carry a load, with others. 2. To touch the bier, as near relations, in a funeral procession. 3. To bear a pall at a funeral.

தொட்டுத்தலைமேல்வைக்க, inf. To touch the feet of a great person; also to put the hands on the head, in token of veneration.

தொட்டுத்தெளிக்க, inf. As தொட்டுத்தெறிக்க. 2. See தெளி, v. a.

தொட்டுத்தெறிக்க, inf. To dip the finger in a liquid and sprinkle it on a new married couple, or an idol, as in ஆலாத்தி. See தெறி, v.

தொட்டுப்பார்க்க, inf. To ascertain by the touch.

தொடு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To connect, to join, to communicate with, சேர்க்க. 2. To bind, to fasten, to tie; to link or tie together; to attach; to continue a series, கட்ட. 3. To set in, to fix, to place, as the arrow in the bow; to discharge arrows, அம்புதொடுக்க. 4. [*prov.*] To exercise love, hatred, &c., to cherish, to foster, மனதில்வைக்க. 5. To set on foot, to commence, to enter on, தொடங்க. 6. To join slightly—as boards or threads; to do work superficially; to put on clothes negligently; to put on a garment or ornament, இலேசாய்த்தொடுக்க. 7. [*in burlesque with* விட.] To bring together a man and woman, *commonly clandestinely*, பொருத்த. 8. To put on or wear sandals, slippers or clogs, செருப்புத்தொடுக்க. 9. To carry on a licentious intrigue, பெண்ணோடுசம்பந்தஞ்செய்ய. (c.) 10. To frame, to form, உருவாக்க. 11. To fabricate, to forge, to form a false story, கட்டுக்கதைகட்ட. 12. To make verses, to compose poetry, பாத்தொடுக்க. 13. To bend, வளைக்க.

அன்றுதொடுத்து. From, or ever since, that day.

அவ்விடந்தொடுத்து. From that place.

தொடுகயிறு, *s.* A rope used in ploughing.

தொடுதோல், *s.* Sandals, slippers, as தொடுசெருப்பு.

தொடுத்தபேச்சு, *s.* Connected speech, a sentence connected with the context.

தொடுத்துக்கட்ட, *inf.* To fasten together, as beasts, &c. (*c.*) 2. To fabricate a story, கதைகட்ட.

தொடுத்துவிட, *inf.* To fasten beasts together. 2. To unite persons irregularly in marriage. 3. To put out an apprentice, &c.

தொடுத்துவைக்க, *inf.* To tie or fasten slightly.

தொடுவழக்கு, *s.* An unjust claim, an unjust prosecution, அநியாயவழக்கு. (*c.*)

தொடுவான்—தொடுவான்கயிறு, *s.* [*prov.*] A rope attached to a pole, with a swivel, in the threshing floor, to which the inner yoke of oxen is tied; the others being all tied ox to ox, பிணையடிமாட்டிலுள்ளணைக்கட்டுங்கயிறு.

தொடுவிலங்கு, *s.* Fetters confining two persons to each other, இருவரைத்தளைக்கும்விலங்கு.

சண்டைதொடுக்க, *inf.* To pick quarrels.

வழக்குத்தொடுக்க, *inf.* To institute a law-suit. 2. To sue one on false grounds.

தொடுப்பு, *v. noun.* A tie, bandage; fastening, joining, கட்டு. 2. Linking, joining by links, சங்கிலியிடுகை. 3. A loose joining, தளரக்கட்டுகை. 4. Illicit intercourse between the sexes; coupling persons in marriage, &c., clandestinely, தொடுசு. 5. Close intimacy, keeping company with, சேர்க்கை. 6. Pursuit, prosecution, தொடர்ச்சி. 7. Implements for ploughing, கலப்பைமுதலியன. (*c.*) 8. A fabrication, forgery, கட்டுக்கதை. 9. Slander, aspersion, வெறும்புறங்கூறல். 10. Sandals, பாதரட்சை.

தொடுப்பெங்கே. Where is your paramour?

தொடுப்புக்கத்தி, *s.* A sword with an iron guard to cover the arm up to the elbow, ஓராயுதம். (*Old Dic.*)

தொடுப்புக்காரன், *s.* [*fem.* தொடுப்புக்காரி.] A lecherous person.

தொடுப்புண்டாயிருக்க, *inf.* To have illicit intercourse.

தொடுசு, *s.* See தொடிசு.

தொடுவு, *s.* A paddock, a lawn; inclosed ground near a house, கொல்லை. (சது.)

தொடுவை, *s.* [*prov.*] A thing joined or appended to another, தொடுத்திருக்கிறது. 2. A tame elephant to which a wild one is fastened to tame it, புதியயானையைப்பயிற்றும்யானை. 3. [*in burlesque.*] An associate, a crony, பாங்கன். 4. A man and woman living in illicit intercourse, as தொடுசு. (*Jaffna usage.*)

தொடுவைவள்ளம், *s.* A boat attached to a dhoney.

தொடை, *s.* The thigh; in which sense, for butcher's meat, are, பெருந்தொடை, the upper part of the thigh; பின்னந்தொடை, a hind-quarter; முன்னந்தொடை, a fore-quarter of a sheep, &c. 2. Flower-garland, பூமாலை. 3. Bow-string, நாண். 4. Arrow, அம்பு. 5. Surrounding wall, bulwark, fortification, மதிற்சுற்று. 6. Block projecting from a wall to support a beam, சுவர்ப்புறத்துநீண்டவுத்திரம். 7. A bunch of flowers, பூங்கொத்து. 8. Verse, poetry, பாட்டு. 9. A series, train, connexion, succession, tissue, composition, commonly poetic, தொடர்ச்சி. 10. Rhyme in poetry, செய்யுளுறுப்பினொன்று; [*ex* தொடு, *v.*]—There are five classes of rhyme, each containing eight varieties, and three single ones, making forty-three in all. The five classes are: I. மோனை, மோனைத்தொடை, the rhyming of the initial letter of the line or foot through the stanza. The varieties of this class are: 1. அடிமோனை, முதன்மோனை, rhyming of the initial in the foot of each line. 2. இணைமோனை, of the first two feet in each line. 3. பொழிப்புமோனை, of every other foot. 4. ஒரூஉமோனை, of the first and fourth foot. 5. கூழைமோனை, of all the feet in the line but the last. 6. மேற்கதுவாய்மோனை, in every foot but the second. 7. கீழ்க்கதுவாய்மோனை, of all the feet but the penultimate. 8. முற்றுமோனை, in every foot. II. இயைபு, இயைபுத்தொடை, the rhyming of the last feet or letters in the lines. The varieties are: 1. அடிஇயைபு, முதலியைபு, rhyming of the last letter of the first foot in each line. 2. இணையியைபு, of the last letter of the first two feet. 3. பொழிப்பியைபு, of the last letter of every other foot. 4. ஒரூஉவியைபு, of the last letter in the first and fourth. 5. கூழையியைபு, of the last letter in each foot except the last. 6. மேற்கதுவாயியைபு, in the last letter of every foot but the second. 7. கீழ்க்கதுவாயியைபு, of the last letter in every foot but the penultimate. 8. முற்றியைபு, of the last letter in all the feet. III. எதுகை, எதுகைத்தொடை, rhyming of the second letter of every line in the stanza, comprising, 1. அடியெதுகை, முதலெதுகை, rhyming of the second letter of the first foot in each line. 2. இணையெதுகை, in the second letter of the two feet. 3. பொழிப்பெதுகை, that of every other foot. 4. ஒரூஉவெதுகை, that of the first and fourth. 5 கூழையெதுகை, that of all but the last. 6. மேற்கதுவாயெதுகை, that of all but the second. 7. கீழ்க்கதுவாயெதுகை, that of all but the penultimate. 8. முற்றெதுகை, in the second letter of all the feet. IV. முரண், முரண்டொடை, a kind of poetry consisting of words taken in contrast, or by antithesis, as இருள்பரந்தன்னமாநீர்மருங்கின், நிலவுகுவிந்தன்னவெண்மணலொருசிறை, by the side of the waters, dark as the wide spread nocturnal gloom, the white sand appeared, as if the moonlight had formed itself into heaps. Of this there are eight varieties, as 1. அடிமுரண், முதன்முரண், contrast in the first foot of the lines, with one another. 2. இணைமுரண், that in the first two feet of the lines. 3. பொழிப்புமுரண், that in every other foot of the lines. 4. ஒரூஉமுரண், that in the first and fourth. 5. கூழைமுரண், contrast in all but the last. 6. மேற்கதுவாய்முரண், in all but the second. 7. கீழ்க்கதுவாய்முரண், in all but the penultimate. 8. முற்றுமுரண், in all the feet. V. அளபெடைத்தொடை, rhyme formed by அளபெடை or lengthening a letter for a verse, which are of eight varieties, as 1. அடியளபெடை, முதலளபெடை, forming of rhyme by அளபெடை, in the first foot of each line. 2. இணையளபெடை, in the first two feet. 3. பொழிப்பளபெடை in every other foot. 4. ஒரூஉவளபெடை, in the first and fourth. 5. கூழையளபெடை, in all but the last. 6. மேற்கதுவாயளபெடை, in all but the second. 7. கீழ்க்கதுவாயளபெடை, in all but the penultimate. 8. முற்றளபெடை, in all the feet. VI. அந்தாதி, அந்தாதித்தொடை, rhyme by the occurrence of the last syllable, word or words in the stanza as the first of the succeeding. VII. இரட்டைத்தொடை, by the repetition of the same in every foot through the line. VIII. செந்தொடை, poetry of numbers without rhyme, a kind of blank verse. For further particulars, see these in their respective places.

தொடைமுறியஅடிக்க, *inf.* To break one's thigh in beating him.

தொடைமேல்தொடைபோட, *inf.* To sit with one thigh on the other (*deemed impolite.*)

தொடைதட்டிவெள்ளாழர், *s.* [*in burlesque.*] Barbers.

தொடையகராதி, *s.* A division of சதுரகராதி, which see.

தொடையிலேதட்ட, *inf.* To strike the thigh in token of bravery, defiance, admiration, surprize, &c.

தொடையைதிமிண்ட, *inf.* To pinch the thigh as a punishment of a school boy, &c.

தொடைவாழை, *s.* A tumor on the thigh near the groin. 2. [*prov.*] A shrub whose leaves are used to cure the tumor.

தொடைவாழைபுறப்பட்டுக்கிடக்கிறான். He lies sick of the thigh-tumor.

தொடைவிகற்பம், *s.* The different species or varieties of rhyme.

தொடையல், *s.* Garlands tied together, தொடுத்தமாலை. 2. A flower garland, பூமாலை. 3. A garland thrown over the head of an idol or great person, வாசிகை. (சது.) [*ex* தொடு.]

தொட்டம், *s.* [*prov.*] A little piece of ground. See துண்டு.

*தொட்டா, *s.* See துவட்டா.

தொட்டாட்டுமெணியம் — தொட்டாட்டுவேலை, *s.* [*prov.*] Little jobs, easy employments given to a waiting servant, &c., குற்றேவல்.

தொட்டாய்ச்சி, *s.* [*prov.*] A godmother, ஞானத்தாய். See தொடு, *v.*

தொட்டி, *s.* A trough, manger, crib, பத்தல். 2. A cistern, reservoir, நீர்த்தொட்டி. 3. A square building with an open space in the centre, தொட்டிக்கட்டு. 4 [*loc.*] An enclosure for selling timber, fire-wood, &c., மரம்விறகுமுதலியனவிற்குமிடம். 5. [*prov.*] A small enclosure for selling oysters at the pearl-fishery, சிப்பிவிற்குமிடம். 6. A fence, a yard, a pound, வேலியடைப்பு. 7. (*R.*) Default of workmen, அபராதம்.—*Note.* There are different combinations with தொட்டி, as மண்தொட்டி, of earth; இருப்புத்தொட்டி, of iron; செப்புத்தொட்டி, of copper; பொற்றொட்டி, of gold; கல்தொட்டி, of stone; மரத்தொட்டி, of wood; சுண்ணாம்புத்தொட்டி, a trough for macerating chunam.

தொட்டிக்கலவடை, *s.* See கலவடை.

தொட்டிக்கால், s. A bandy-leg, படப்புக்கால்.

தொட்டிக்காலன், s. A bandy-legged person.

தொட்டிப்பணம், s. A fine for default of workmen. (Beschi.)

தொட்டிவயிறு, s. A paunch belly.

புற்றொட்டி, s. A crib for grass or hay; [ex புல்.]

தொட்டிச்சி, s. A female of the தொட்டியர் caste. (c.)

தொட்டிப்பாஷாணம், s. Red arsenic, orpiment, ஓர்பாஷாணம்.

தொட்டியம், s. A treatise on magic, witchcraft or legerdemain, ஓர்வித்தை. 2. The name of a country in the Coimbatore district, ஓர்தேயம்.

தொட்டியக்கரு — தொட்டியவித்தைக்கரு, s. Articles used in witchcraft.

தொட்டியர், s. [sing. தொட்டியன், fem. தொட்டியச்சி—தொட்டிச்சி.] A class of people from the west of India, who stroll about practising witchcraft and magic.

தொட்டியவித்தை, s. The art of witchcraft, as taught in the தொட்டியம்.

தொட்டில், s. A cradle, crib or swinging cot, for a child, சிறுகட்டில். (c.) 2. [prov.] As தொட்டி, 1.

*தௌரிதகம்—தௌரிதம், *s.* A horse's trot in a circle, குதிரைநடை. W. p. 448. Dhowritaka. See தவுரிதகம்.

*தௌரிதம், *s.* Speed. See துரிதம்.

தௌவு, கிறேன், தௌவினேன், வேன், தௌவ, *v. n.* To leap, to spring, &c. 2. To perish. See தவ்வு.

தௌவல், *v. noun.* Perishing, &c., as தவ்வல்.

தௌவை, *s.* Elder sister, மூத்தாள். 2. The goddess of misfortune, &c., as மூதேவி. See தவ்வை.

ந

ந். A consonant, the eighth in number and fourth of the soft. It is initial, sometimes medial, rarely final; and of the same class with த் being often written before it, as கந்தம், odor; சந்தம், melody.

ந. A syllabic letter compounded of ந் and அ.

*ந. A Sanscrit prefix, meaning good or excellent, as நக்கிரன், excellent கிரன்; நப்பின்னை, Lukshmi, as a good younger sister. It is sometimes a negative, as நபட்சணம், not eating; நபுஞ்சகம், not male.

*நகங்கிருதி, *s.* Humility, or the feeling that one can act only as acted upon by the deity; one of the seven virtues. See புண்ணியம்.

நகட்டு, கிறேன், நகட்டினேன், வேன், நகட்ட, *v. a.* To pound, or grind by attrition, அரைக்க. 2. (*fig.*) To eat all up with avidity, சாப்பிட்டுப்போட. 3. [*causative of* நகர்.] To cause to creep, நகரச்செய்ய. (c.)

நகதா, *s.* See நகது.

நகதி, *s.* (*Arab.*) A monied man, ரொக்கக்காரன்.

நகதிகுமஸ்தா, *s.* A subordinate in a treasury.

நகது—நகதா, *s.* (*Arab.*) Ready money, cash, உரொக்கம்.

நகதுஜாமீன், *s.* Security for money.

நகபத்து—நகபொத்து, *s.* A kind of drum, as நகரா. (c.)

*நகம், *s.* Finger or toe nail, உகிர். W. p. 450. Nakha. 2. A talon, a claw, பறவைநகம். (c.) 3. The extremity or lower part of a hoof, அடிக்குளம்பு. 4. W. p. 451. Naga. Mountain, மலை. 5. Earth, பூமி. 6. Tree, மரம்.

நகக்கண், *s.* The margin of the nail where it joins the finger.

நகக்காளான், *s.* A kind of fungus said to spring from nail parings.

நகக்குறி—நகரேகை, *s.* Marks, or indents of the nails; *used in erotics.*

நகச்சிராய், *s.* [*prov.*] Splinter of the nail, rising on the sides, &c.

நகச்சுற்று, *s.* A whitlow. See சுற்று.

நகச்சூடு, *s.* Heat of water bearable by the finger. See சூடு.

நகநுதி, *s.* The sharp edge of the nails.

நகம்வளர்க்க, *inf.* To let the nails grow long, as ascetics.

நகம்வாங்கி—நகம்வெட்டி, *appel. n.* A barber's instrument for cutting the nails.

நகரேகை, *s.* [*improp.* நகலேகை.] As நகக்குறி.

நகவிஷம், *s.* Poisonous quality of the nail, inducing inflammation from scratching.

நகவுளி, *s.* A barber's instrument as நகம்வாங்கி. 2. A carpenter's tool.

நகாயுதம், *s.* (*St.*) A lion, (*lit.*) the talon-armed, சிங்கம். 2. A tiger, புலி. 3. A cock, சேவல். 4. Any beast or bird having talons, நகமுள்ளவை; [*ex* ஆயுதம்.]

நகேசன், *s.* The personified Hymalaya mountain, இமயகிரி; [*ex* ஈசன், lord.]

*நகரம், *s.* A city, a town, a fortified town, a metropolis, பட்டணம். W. p. 451. Nagara. 2. A town or village in an agricultural district, மருதநிலத்தூர். 3. A royal palace, இராசமனை. 4. The letter ந.

நகரத்தார், *s.* (*plu.*) Citizens, inhabitants of a town.

நகரப்பதிவாணர்—நகரப்பதிவாழ்நர், *s.* Townsmen, citizens. 2. The polite, well bred. (*p.*)

நகரமாக்கள்—நகரவாசிகள், *s.* People of the city.

நகரவாயிற்கோபுரம், *s.* A tower or building over the gate-way or entrance of a city.

நகரா, *s.* (*Hind.*) A kind of drum, ஓர் பறை. (c.)

*நகரி, *s.* A city, a fortified town, பட்டணம். 2. A metropolis, a capital, இராசமாநகரம். (*p.*) 3. The name of a town north-west of Madras, ஓரூர்.

நகரிகாவலர், *s.* [*plu.*] The city guard, patrole, watchmen.

நகரிசோதனை, *s.* [*appel.* நகரிசோதனைக்காரர்.] Secret examination of city affairs by night, by the king, or by his orders. (*c.*)

நகரிசோதனைக்குப்புறப்பட. To go on such an errand.

நகரிப்பழக்கம், *s.* City manners, or habits, urbanity.

நகரிவலம்வர, *inf.* To make a procession through a city. 2. As ஊர்க்கோலம்வர.

நகரு—நகர், கிறது, நகர்ந்தது, நகரும், நகர, *v. n.* To creep, as an infant or a reptile; to crawl; to move along in a prone or sitting posture, as a cripple, &c., தவழ. 2. To steal away, leave a place secretly, மறைவாய்ப்போக. (c.)

நகர்ந்துதிரிய, *inf.* To move about by creeping.

நகர்வு, *v. noun.* Crawling, creeping, ஊர்தல்.

நகளா, *s.* [*prov.*] A small kind of fish, ஓர்மீன். 2. A kind of tree, ஓர்மரம். 3. [*vul.*] A kind of rice, ஓர்வகையரிசி.

*நகர், *s.* As நகரம், 1, 2. 3. House, abode, வீடு. 4. A temple, a sacred shrine, கோயில். (*p.*)

நகர்படுதிரவியம், *s.* Productions of a city. See திரவியம், டு.

நகர்வளம், *s.* Productions, luxuries, and embellishments of a city.

நகர்த்து, கிறேன், நகர்த்தினேன், வேன், நகர்த்த, v. a. [*causative of* நகர்] To push with difficulty, to shove along, to propel a little, தள்ள. 2. To pilfer, to steal little by little, கொஞ்சங்கொஞ்சமாய்க்கொண்டுபோக. (c.)

நகர்த்தஇலக்குப்பார்க்கிறான். He watches an opportunity what move he can make.

வீட்டைநகர்த்திக்கட்டவேண்டும். We must remove the house a little farther.

சுவரையிடித்துநகர்த்திவிட்டான். He tore down and removed the wall.

அவனைநன்றுநகர்த்திப்போட்டார்கள். They gave him a good drubbing.

நகல், s. (*Arab.*) Copy, duplicate—oppos. to அசல். 2. See நகு, v.

நகரு—நகர், கிறேன், நகர்ந்தேன், நகருவேன், நகர, v. n. [*corrupt. of* நகரு.] To creep, crawl along. (c.)

நகாசு, s. (*Hind.*) Fine work, நுண்ணியசெய்கை.

நகாசுதீர, *inf.* To complete the work with நகாசுவேலை.

நகாசுவேலை, s. Exquisite workmanship; that which is shining or dazzling. Compare போகனைவேலை.

*நகாயுதம், s. Lion. See under நகம்.

*நகிலம் — நகில், s. Female breast, முலை. (சது.)

நகு, கிறேன், நக்கேன், வேன், நக, v. n. To shine, glitter, coruscate, ஒளிவிட. 2, To laugh, to smile, to smile in approbation or delight of heart, புன்னகைகொள்ள. 3. To deride, to laugh at, to ridicule, இகழ. (சது.) 4. To bloom, as a flower, மலர. (*p.*)

இலங்கையுங்குலுங்கநக்கான். He laughed until the island of Lauka (Ceylon) shook.

நகல் — நகுதல், v. *noun.* Shining, deriding, smiling, &c.

*நகுடம், s. The nose, மூக்கு. W. p. 450. Nakut'a.

*நகுடன்—நகுஷன், s. A king of the Lunar race, who offered a hundred horses in sacrifice, but, by a curse of Agastya was transformed, for a time, into a serpent, சந்திரகுலத்தரசரிலொருவன். W. p. 458. Nahusha.

நகுதா, s. (*Hind.*) The master of a vessel, மாலுமி.

நகுத்தம், s. A tree, ஓர்மரம், Dalbergia arborea. (*Willd.*)

*நகுலம், s. The Viverra Ichneumon, or Mungoose, கீரி. W. p. 450. Nakula.

*நகுலன், s. The fourth of the five Pandavas, பஞ்சபாண்டவரிலொருவன். 2. (*fig.*) A clever horse-rider or jocky—as குதிரைக்குநகுலன், பரிமாவுகைப்போன்.

நகை, s. A splendid jewel, commonly set with precious stones; jewels, trinkets, ஆபரணம். 2. A metal article, commonly of a superior kind, உடைமை. (*c.*) 3. Laughter, smile, சிரிப்பு. 4. Contemptuous laughter, sneer, grin, ridicule, derision, scorn, இகழ்ச்சி. 5. Hilarity, mirth, களிப்பு. 6. Delight, gratification, pleasure, joy, இன்பம். 7. Brightness, splendor, coruscation, பிரகாசம். 8. The gums, ஈறு. 9. Teeth, பல். 10. Flower bud, பூமொட்டு. 11. Blossoming of flowers, மலருதல். (*p.*)

நகைகொள்ள—நகைபுரிய—நகையாட, *inf.* To smile, to laugh.

நகைகொட்ட, s. To laugh heartily.

நகைசெய்ய, *inf.* To make a jewel. (*c.*) 2. To smile, to laugh. 3. To deride, to ridicule.

நகைச்சொல், s. Ridicule, derision, a giggle, a sneer. 2. Pleasantry, joking humor.

நகைநாணயம், s. Wealth, treasure; property in jewels.

நகைரசம், s. Emotion of laughter.

நகைவகை, s. Jewels of various kinds.

நகை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. and *a.* To laugh, to smile, சிரிக்க. 2. To laugh at, to deride, to ridicule, to laugh contemptuously or sarcastically, பரிகாசிக்க. 3. To scoff, to giggle, to taunt, நிந்திக்க. (*c.*)

நகைமுகம், s. A smiling countenance.

நகைப்பு, v. *noun.* Smiling, derision, &c., *as the verb.*

நகைப்புக்கிடமாயிருக்க, *inf.* To be ridiculous.

நகையால், s. A plant, பகன்றைச்செடி, Ruellia, *L.* (*R.*)

நக்கபாரம் — நக்கவாரம், s. (*for.*) The Nicobar islands, சிலதீவுகள்.

நக்கபாரி — நக்கவாரி, s. A native of the Nicobars. 2. One who trades for ready money.

நக்கவாரக்கச்சவடம்— நக்கவாரவியாபாரம், s. Nicobar traffic; i. e. money in one hand and goods on other; traffic where one does not trust another.

நக்கவாரப்பட, *inf.* To be in pinching poverty or straitened circumstances.

நக்கவாரப்பேச்சு, s. Talk betraying mistrust.

நக்கவாரமாய்ப்போக, *inf.* To become very poor and indigent.

நக்கவாரம்பிடிக்க, *inf.* To become poor.

நக்கவாரி, s. A dwarf cocoanut tree, or stinted grain, குள்ளமானது. (*R.*) 2. See நக்கபாரி.

நக்கரி—நக்கரை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. [*vul.*] To shift along in a sitting posture, as a lame or sick person, நகர. 2. To linger on a sick bed, படுகிடையாக. 3. To creep as a child, or wounded reptile, &c., தவழ; [*ex* நகரு, v.]

நக்கரிப்பு, v. *noun.* Shifting along, crawling, &c., *as the verb.*

நக்கல், s. Things eaten by licking, நக்கியுண்பது. 2. An electuary taken up with the tongue, a tincture, இலேகியம். 3. [*in contempt.*] Leavings, scrapings, as eaten by a poor or mean person, எச்சில். See நக்கு.

*நக்கனத்துவம் — நக்கனம், s. Nakedness, nudity, திருவாணம். See நக்கினம்.

நக்கனரூபம், s. A state of entire nudity, as of an ascetic, &c.

*நக்கனப்பிரசாதனம், s. Gift of a cloth to a brahman in the name of a deceased relative, வஸ்திரதானம்.

*நக்கன், s. A naked person, especially a mendicant, திருவாணி. 2. Siva, சிவன். 3. Argha, அருகன். (சது.) 4. A fox, நரி.

நக்கிப்பூ, s. A plant, தேட்கொடுக்கி, Heliotropium Indicum. (*R.*)

*நக்கினம், s. Nakedness, as நக்கனம். W. p. 451. Nagna.

*நக்கினிகரணம், s. Stripping naked, making naked, திருவாணமாக்குகை; [*ex* கரணம், making.] (*Sa. Nagnîkaran'a.*)

*நக்கீரர் — நக்கீரன், s. [*sometimes* நற்கீரன்.] Narkiren, a poet at the head of the Madura College in the ninth century A. D. He appears to have belonged to the class of chank-cutters. He was the author of an epic poem, சிரிகருணிப்புராணம், and of a hymn, திருமுருகாற்றுப்படை, in honor of Skanda; [*ex* ந, excellent, *et* கீர், word.]

நக்கு, கிறேன், நக்கினேன், வேன், நக்க, v. a. To lick, to lap, one of the four kinds of eating. See உண்டி. (*c.*)

நக்கி, *appel. n.* A licker (*in contempt*), as பலவீடுநக்கி, one who eats in any one's house.

நக்கிக்கொண்டுதிரிய, *inf.* To sneak about, in quest of food, to spunge from others.

நக்கல், v. *noun.* Licking, lapping, நக்குதல்.

நக்கு, v. *noun.* A lick, lap, lapping.

நக்குணி, *appel. n.* A lapper, a mean skulker for food, நக்குவோன்.

நக்குணி, s. [*prov. vul.*] A small kind of snake, ஓர்பாம்பு. 2. A little boy, சிறுபிள்ளை. 3. See நக்கு, v.

நங்கணவாய்ச்சி, s. [*prop.* நங்கணவாய்.] The name of a bird, ஓர்பறவை.

நங்கு, s. (*Tel.*) Derision, mockery, பரிகாசம். (*c.*)

நங்குகாட்ட, *inf.* To deride.

நங்குரம் — நங்கூரம், s. (*for.*) An anchor. See இலங்கர்.

நங்கூரங்கொத்திவிட, *inf.* To cut or slip the cable. (*R.*)

நங்கூரந்தூக்க — நங்கூரம்வலிக்க, *inf.* To weigh anchor. See தூக்கு, v.

நங்கூரப்பல், s. The fluke of an anchor, நங்கூரத்தின்கொளுவி.

நங்கூரம்போட, *inf.* To cast anchor.

நங்கூரவளையம், s. Ring of an anchor.

நங்கூரவாடகை — நங்கூரவாடை, s. Anchorage.

நங்கை, s. A lady, a woman of quality or distinction, பெண்ணிற்சிறந்தாள். (சது.) 2. A plant, ஓர்பூடு.—There are two kinds, as சிறியாணங்கை, Polygala glabra; பெரியாணங்கை, Polygala telephioides.

நங்கைநாச்சி, s. A lady of distinction.

நசநச, v. To be damp, &c. See நசுநசு.

நசபிச, v. To waver &c., as நசுபிசு.

நசல், s. [*prop.* நைதல்.] Sickness, disease, a chronic disease, வியாதி. (*c.*)

நசலாளி—நசற்காரன், s. A person in ill health, நோயாளி.

நசல்பிடிக்க, *inf.* To become ill.

நசனை—நசினை, s. (*Tel.*) A whitish color in the ruby, being a defect, செம்மணியின்குற்றத்தொன்று. (*R.*)

நசிஹத், s. (*Arab.*) Admonishing, reprimand, புத்திசுறபித்தல்.

நசி, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To be crushed, bruised, mashed; to be broken, as a boil; frayed, as cloth deprived of smoothness or lustre; to be crumpled, as paper, &c., நசுங்க. 2. To be destroyed, அழிய. 3. To be palliated, extenuated, குறைவுகாண. 4. To be kept back, to be spoken indistinctly or with hesitation, திக்க. 5. To be frayed, to be almost worn through, as cloth, தேய. 6. To be reduced in circumstances, செல்வஞ்சுருங்க. (*c.*) [*ex Sa. Nasa.* to perish, decay, &c.]

நசிந்தபுடவை, *s.* A worn cloth.

நசிந்துகொடுக்க, *inf.* [*prov.*] To yield, as a boil or fruit, to the touch. 2. To yield to one, to concede. (*c.*)

நசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To perish, to be destroyed, annihilated, consumed, சாக. 2. To be reduced, as a body, to its primitive elements, உருவழிய.

நசிப்பு, *v. noun.* Perishing, involution, &c., *as the verb.*

நசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*prov.*] To crush, bruise, mash, to crumple, அரைக்க. 2. To demolish, destroy, consume, அழிக்க. 3. To squeeze, to press, கசக்க. 4. To make light of, to treat as a small matter, தணிக்க. 5. To suppress, conceal, to connive at, &c.; to keep back, to speak with hesitation, அடக்க.

காரியத்தைநசித்துப்போட்டான். He has treated it as a little matter.

நசிப்பு, *v. noun.* Crushing, bruising, mashing, நெரிவு.

நசிவு, *v. nown.* Bruise, contusion, நெரிவு. 2. Perished, injured, கெடுகை. 3. Reproach, disparagement, நிந்தை.

நசிவானஎழுத்து, *s.* Ill-proportioned, ill-formed or indistinct letters, in writing. 2. A writing in equivocal terms.

நசிவானபுடவை, *s.* Damaged cloth.

நசிவுகாண, *inf.* To be injured or bruised, as ripe fruit. 2. To be shy or discordant as friends. 3. To be in risk, as one's office.

***நசியம்**, *s.* A medicine taken by the nose, a sternutatory. W. p. 458. NASYA.

நசியம்பிழிய, *inf.* To press out the juice of some medicinal herbs for a snuffing dose. (*c.*)

நசியல், *v. noun.* [*substantively.*] Any thing crushed or mashed, as over-ripe or decayed fruit; any thing pressed, or bent, as a jewel, &c., நசிந்தது. 2. Any thing tough or yielding, நசுநசுத்தது.

நசியலன், *s.* A person who practises evasion, or does not answer directly.

நசிரூணி — நசிரூண்டி, *s.* [*prov.*] A vexatious, teasing person, தொந்தரவுசெய்வோன். 2. As நசுவல்.

நசினை, *s.* A defect. See நசனை.

நசீப், *s.* (*Arab.*) Fate, destiny, விதி. 2. Good luck, fortune, &c., அதிஷ்டம்.

நசுகுணி, *s.* [*prov.*] A stunted person, மெலிந்தோன்.

நசுக்கான், *s.* [*vul.*] A small one, சிறியது; [*ex* நசுக்கு, *v.*]

நசுக்கான்பையன், *s.* A little boy.

நசுக்கு, கிறேன், நசுக்கினேன், வேன், நசுக்க, *v. a.* To squeeze, to press with the hand, கசக்க. 2. To bruise, squash, crumple by pressing, as a letter or parcel, நசுங்கச்செய்ய. 3. To keep a matter back, to tell it indistinctly, இழுத்தால்போல்பேச. 4. To object to, to rebut, to try to defeat, தடுக்க. 5. To reduce, as pride, &c., கீழ்ப்படுத்த. (*c.*)

ஒருவனைநசுக்கிவைக்க. To reduce one in circumstances, &c. 2. To keep one back in growth, progress, &c.

நசுக்கிச்சொல்ல, *inf.* To speak indistinctly, to clip words.

நசுக்கிப்பிழிய, *inf.* To press and squeeze out juice.

நசுக்கிவிட, *inf.* As நசுக்கு, 3.

நசுக்கு, *v. noun.* A bruise, நெரிவு.

நசுக்குத்துர்ச்சனம்பண்ண, *inf.* To be mettlesome. (*R.*)

நசுக்குணி, *appel. n.* [*prov.*] A stunted person, மெலிந்தவன். 2. A loitering, delaying person, பின்னிடுவோன். 3. As நசுக்கான்.

நசுக்குநசுக்கெனல், *v. noun.* Glueiness, stickiness; sticking to the teeth, &c., ஒட்டுந்தன்மை. (*c.*)

நசுங்கு, கிறேன், நசுங்கினேன், வேன், நசுங்க, *v. n.* To be squeezed, pressed, crowded, பிதுங்க. 2. To be mashed, crushed, bruised, நசுக்கப்பட. 3. To be crumpled, folded, bent, as a cloth, letter, paper, &c., கசங்க. 4. To be suppressed, dropped as an affair, to fall through, to become hushed, to die away, as a rumor, காரியங்கெட. 5. To be reduced in circumstances, pride, &c., பெருமைகுறைய. (*c.*)

நசுங்கடிக்க, *inf.* [*prop.* நசுங்கஅடிக்க.] To crush, to bruise, நொறுக்க. 2. To reduce, to discomfit, to beat to pieces, சதைக்க.

நசுங்கச்சப்பி, *appel. n.* [*prov.*] A stingy person, a niggard, உலோபி.

நசுங்கலன்—நசுங்கலான், *s.* One who speaks or acts with indecision, misgiving, hesitation. 2. As நசுக்குணி.

மனம்நசுங்கப்பேச, *inf.* To speak so as to wound one's feelings.

நசுநசு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* [*used com. in the 3rd person neuter.*] To waver, to be undecided in speech or action, தடுமாற. 2. To be continually drizzling, தூறிக்கொண்டேயிருக்க. 3. To be damp as a floor, ஈரிக்க. (*c.*) 4. [*prov.*] To be yielding to the touch, as நசிந்துகொடுக்க.

நசுநசுத்தகுணம், *s.* Illiberal disposition.

நசுநசுத்தபதம், *s.* A state of adhesiveness and softness.

நசுநசுத்தபேச்சு, *s.* A hesitating speech.

நசுநசுப்பு—நசுநசெனல், *v. noun.* Being damp, tough, wavering, drizzling, &c., *as the verb.*

நசுநசென்றதடிசுறுக்கிலறுபடாது. A tough stick is not easily cut.

நசுபிசு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*com.* நசபிச.] To waver, be undecided in speech or action, be unsettled, &c., as நசுநசு.

நசுபிசெனல், *v. noun.* Being damp, as நசநசெனல்.

நசுவல், *s.* [*prov.*] A stingy person, a miser, உலோபி. (*c.*) 2. A stunted or emaciated person, or beast, மெலிந்தது. 3. A person without energy, முயற்சியற்றவன்.

நசை, *s.* Desire, eagerness, avarice, lust, &c., ஆசை. 2. Love, affection, fondness, அன்பு. 3. Regularity of conduct, consistency, ஒழுக்கம். 4. Fault, defect, குற்றம். (*p.*) 5. [*cor. of* நகை.] Derision, பரிகாசம். 6. (*R.*) Dampness, moisture, ஈரம்.

மண்ணசையாயிருக்கிறது. The ground is damp.

நசைகாட்ட, *inf.* To allure. 2. To deride.

நசைபண்ண, *inf.* To deride, to ridicule, to scorn.

நசைவினை, *s.* A good career—oppos. to வசைவினை.

நசையுரை, *s.* Amorous talk.

நசை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. a.* To love, அன்புற. 2. To desire, விரும்ப. (*p.*)

நசைதல், *v. noun.* Desiring, hankering for, lusting after, craving, விரும்புகை.

நசைகுநர் — நசைநர் — நசையுநர், *s.* Friends, lovers. 2. Well-wishers. (*p.*)

நசைவு, *s.* Moisture of the earth, as நசை. (*R.*)

நச்சறுப்பாய்ஞ்சான் — நச்சறுப்பான், *s.* A medicinal creeper whose juice is used as an antidote to cutaneous disease, கழுதைப்பாலை; prolific swallow wort, Asclepias prolifera, ஓர்கொடி; [*ex* நஞ்சு.]

நச்சி, *s.* A female gossip. (*R.*)

நச்சினார்க்கினியார், *s.* The name of a commentator, of whose life very little is known. His commentaries on தொல்காப்பியம் and திருமுருகாற்றுப்படை, are masterly productions, ஓர்உரையாசிரியர்; [*ex* நச்சு.]

நச்சினி, *s.* A kind of millet, raggy, கேழ்வரகு. (*R.*)

நச்சு, *s.* Desire, lust, hankering, craving, &c., ஆசை. (சது.) 2. Babble, தொணுப்பு. [*Tel. usage.*] 3. *adj.* Little, small, சிறிய. 4. [*oblique of* நஞ்சு, *as an adjec.*] Poisonous, venomous, baneful.

நச்சுக்கண், *s.* A poisonous eye, that blights whatever it looks upon.

நச்சுக்கத்தி, *s.* A poisoned knife. 2. (*fig.*) A very wicked person, கெட்டவன்.

நச்சுக்காற்று, *s.* An unhealthy wind. See காற்று.

நச்சுக்குழல், *s.* [*vul.*] A long tube for shooting birds with clay pellets, புட்படெக்குங்குழல். 2. A telescope, தூரதிஷ்டிக்கண்ணாடி.

நச்சுக்கொடி, *s.* The after-birth, secundines, as நஞ்சுக்கொடி. (*c.*)

நச்சுக்கொடிச்சுண்ணம், *s.* A medical powder made of the after-birth, administered in cholera, விஷபேதிச்சூரணம்.

நச்சுச்சொல், *s.* Blighting words, தீச்சொல். 2. Malicious, envious or sarcastic language, கடுஞ்சொல். 3. A malign word in poetic composition supposed to be injurious to the hero, வசைச்சொல்.

நச்சுத்தானம், *s.* [*in erotics.*] Parts of the female body which if touched by men on certain days of the moon, are supposed to produce disgust, அமுதநிலைக்கேழாமிடம்.

நச்சுநீர், *s.* Poisonous water, விஷநீர்.

நச்சுப்படைக்கலம், *s.* Poisoned weapons. (*p.*)

நச்சுப்பல், *s.* The poisonous fang of a snake. (*c.*)

நச்சுப்பல்லி, *s.* A spotted kind of wall-lizard, whose excrement is used in witchcraft. 2. The chirp of a lizard from a direction which prognosticates evil, and causes one leaving home to turn back. 3. A woman whose words are malignant.

நச்சுப்பல்லிபோலேதடுக்கிறான். He stops one like an ominous lizard.

நச்சுப்பார்வை, *s.* Bewitching, amorous, libidinous looks, ogling, மோகப்பார்வை. (*p.*) 2. A blighting, ominous look, கண்ணேறு. 3. An angry, malicious appearance, கோபப்பார்வை.

நச்சுப்பால், *s.* The poisonous milky juice of the spurge-class of shrubs, கள்ளிப்பால். 2. First thick milk of a woman or beast, சீம்பால். 3. Milk that does not agree with the young, இணங்காதபால்.

நச்சுப்புகை, *s.* Poisonous smoke or fumigation from burning poisonous reptiles or vegetables.

நச்சுப்பூடு, *s.* A poisonous herb.

நச்சுப்பொடி, *s.* A poisonous powder, விஷத்தூள். 2. A small-fish, ஓர்சிறுமீன்.

நச்சுப்பொய்கை, *s.* Poisonous water of a tank. (*p.*)

நச்சுமரம், *s.* A poisonous tree, எட்டி, Strychnos, nux-vomica, *L.*

நச்சுமரமாயினும்நட்டவன்வெட்டுவனோ .... Though the tree be poisonous will the planter cut it up; i. e. though a man be evil, his patron is not the one to reject him.

நச்சுமருந்து, *s.* Poisonous medicine.

நச்சுமழை, *s.* An unhealthy or pernicious rain being untimely, not plentiful, &c., காலந்தப்பியமழை.

நச்சுவாக்கு, *s.* Malign words of some particular poets.

நச்சுவாய், *s.* The mouth of one whose words are blighting, விஷவாக்கு.

நச்சுவிறகு, *s.* Poisonous fuel, used in witchcraft, &c.

நச்செண்ணெய், *s.* A kind of poisonous oil, for curing sores, விஷதைலம்.

நச்செலி, *s.* A kind of rat whose bite is poisonous, sometimes fatal. (*c.*)

நச்செழுத்து, *s.* Letters which may be so placed, in poetic composition, as to be considered ominous; as in the first word of the poem, or other important places, they are, ய, ர, ள, யா, யோ, ரா, லா, லோ, also உயிரளபெடை, ஒற்றளபெடை, மகரக்குறுக்கம், and ஆய்தக்குறுக்கம்.

நச்சு, கிறேன், நச்சினேன், வேன், நச்ச, *v. a.* To desire, long for, to love, be enamored with, விரும்ப. 2. (*com.*) To babble, to prate, அலப்ப. 3. To tease, vex, அலட்ட.

நீயென்னைநச்சாதே. Do not trouble me.

நச்சுவாய், *s.* A chattering babbling mouth. (*c.*) 2. See நச்சு.

நச்சுவாயன், *s.* A babbler.

நச்சுவிக்க — நச்சுறுத்த — நச்சுறுவிக்க, *inf.* To excite desire, or love, to fascinate, to enamor, ஆசைப்படுத்த.

நச்சுநச்செனல், *inf.* To importune, to trouble or tease by continual urging, வருந்த. 2. A repeated sound of smacking, மெல்லுஞ்சூறிப்பு. 3. To chirp as the wall-lizard, பல்லிசத்த. (*c.*)

நச்சுநச்சென்றலட்டுகிறாய். You are continually teasing.

நச்சுநச்சென்றுதின்கிறான். He smacks his lips while eating.

நச்சும்பிச்சும். Insignificant things, trifles, nonsense, வீண்காரியங்கள்.

நச்செள்ளையார், *s.* A poet famous in the ancient Madura college, ஓர்புலவர்; (*lit.*) the good செள்ளையர்; [*ex* ந.]

நஞ்சம், *s.* Poison, venom—as நஞ்சு. (*p.*)

நஞ்சு, *s.* Poison, venom, விஷம். (சது.) (*c.*) 2. [*adjectively in combin.*] Malignant, baneful, pernicious, fatal, தீமை. 3. (*fig.*) The after-birth, as நஞ்சுக்கொடி.

நஞ்சுடனேஒருநாளும்பழகவேண்டாம். Never keep company with a malignant person.

அவன்படுநஞ்சு. He is rank poison.

நல்லுறவில்நஞ்சுகலக்க. To sow discord among friends.

நஞ்சன், *s.* A malignant person.

நஞ்சுகக்க, *inf.* To eject or infuse poison, as a snake, &c., விஷங்கக்க.

நஞ்சுகரந்தஅமுதம், *s.* Something good covering what is bad. 2. (*fig.*) One with pleasant words, but a malevolent heart.

நஞ்சுகரையல், *v. noun.* Dissolving of the secundines without parturition, which is fatal to the mother.

நஞ்சறுப்பான், *s.* A medicinal creeper. See நச்சறுப்பான்.

நஞ்சிட, *inf.* To mix or infuse poison into food, &c. 2. To poison a person or animal. 3. To imbue a weapon with poison. 4. To do evil to one secretly.

நஞ்சிட்டுக்கொல்ல, *inf.* To kill one by giving him any mixture of poison.

நஞ்சுகலந்தஅமுதம், *s.* [*sometimes* நஞ்சுபொதிந்தஅமுதம்.] Nectar impregnated with poison; i. e. fair professions with malicious designs.

நஞ்சுகழலல், *v. noun.* Exuding as the poison of a snake from its fangs.

நஞ்சுக்கொடி, *s.* The cord of the secundines. 2. After-birth, secundines. (*c.*)

நஞ்சுங்கொடியும், *s.* The funicle and secundines.

நஞ்சுடைமை, *s.* Having poison. (மூதுரை.)

நஞ்சுண்டோன்—நஞ்சுண்ணி, *appel. n.* Siva, as swallowing poison. See ஆலகண்டன்.

நஞ்சுதின்ன, *inf.* To take poison.

நஞ்சுதின்றுசாக, *inf.* To die by poisoning one's self. (*c.*)

நஞ்சுபற்றுதல், *v. noun.* The taking effect of poison in the body; attack of poison on the brain, விஷமேறுதல். 2. The producing of ill effects by retention of the after-birth.

நஞ்சுமுறிக்க, *inf.* As நஞ்செடுக்க.

நஞ்சுமுறிச்சான், *appel. n.* [*vul.*] A நஞ்சறுப்பான்.

நஞ்சுவிழுதல், *v. noun.* The coming away of the after-birth. (*c.*)

நஞ்சுவைக்க, *inf.* To insert poison, for killing, &c., as நஞ்சிட.

நஞ்சூட்ட, *inf.* To imbue with poison as a weapon.

நஞ்செடுக்க, *inf.* To counteract poison, neutralize its effects.

நஞ்சை, *s.* [*corruption of* நன்செய்.] Wet cultivation, paddy fields, கழனி. (*c.*)

நட, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. n.* To walk, go, pass, proceed; to go on foot, செல்ல. 2. To happen, to occur, to ensue, to take place as actions, to be exercised as the passions or affections, சம்பவிக்க. 3. To prevail as war, to be rife as disease, to subsist as influence, to be progressive, to proceed, or go on, வழங்கிவர. 5. To be in progress as a performance or a transaction, நிகழ்ந்துகொண்டிருக்க; (*c.*) [*ex Sa. Nat'a*, to move slightly.]

நடக்கிறதுநடக்கட்டுந்தெய்வமிருக்கிறது.......Let happen what will, God exists.

அவனுக்குநன்றாய்நடக்கிறது. He has great influence. 2. He is hospitably entertained.

எங்கும்அப்படிநடந்துவருகிறது. It is so every where.

நடந்துஅடிபட்டிருக்கவேணும். We must be practised in any thing.

நடக்கிறகாலம், *s.* Time of prosperity or influence, செல்காலம்.

நடந்தகாரியம்—நடந்தசமாசாரம்—நடந்தசெய்தி, *s.* [*sometimes* நடந்தகதை.] Events, facts, transactions, authentic accounts.

நடந்தநடக்கை, *s.* Proceedings. 2. Deportment.

நடந்துகொள்ள, *inf.* To behave well or ill, commonly toward a superior.

நடந்துவர, *inf.* To come walking. 2. To occur at all times.

நடந்தேற, *inf.* To be accomplished, executed, performed, to come to pass, சம்பவிக்க. 2. To be perfected, completed, நிறைவேற.

நடந்தேறப்பண்ண, *inf.* To manage a thing for its success.

நடபடி, *s.* [*sometimes* நடைபடி.] Act, conduct.

நடப்பன, *appel. n.* (*plu.*) Those which walk, all moveable things—oppos. to நிற்பன, immoveable objects. (*p.*)

நடக்கை, *v. noun.* Walk, behaviour, conduct, deportment, manners, செய்கை. 2. Course, career, ஒழுக்கம். (*c.*)

நல்லார்பொல்லாரைநடக்கையாலறியலாம். The good and bad may be known by their conduct.

நடத்தல், *v. noun.* Walking, behaving, &c.

நடப்பு, *v. noun.* Going and coming, போக்குவரவு. 2. Behaviour, conduct, demeanour, நடக்கை. (*c.*) 3. [*prov.*] Influence, prosperity, செல்வாக்கு. 4. [*loc.*] Taking the badge of marriage from a widow, திருவாங்குகை.

அவனவன்நடப்புக்குத்தக்கதுகிடைக்கும். Each one will get the fruit of his doings.

நடப்பானகாலம், *s.* Time of prosperity.

நடப்பானவழி, *s.* A frequented way. (*c.*)

நடப்புக்காரன், *s.* [*prov.*] A man of influence or prosperity. 2. A customer.

நடவாதகாரியம், *s.* An unusual thing. 2. An impossibility. (*c.*)

நடவாதநடத்தை, *s.* Unprecedented conduct, action, folly, &c. 2. Immoral conduct.

நடத்து, கிறேன், நடத்தினேன், வேன், நட த்த, *v. a.* To cause to walk, to lead a child, a horse, &c., நடக்கச்செய்ய. 2. To take one in company, to escort, to accompany, கூட்டிக்கொண்டுபோக. 3. To lead, to conduct, to guide, வழிநடத்த. 4. To carry on, to transact, manage, perform, execute, administer, superintend, direct; to carry on operations, as the deity; to regulate, நடப்பிக்க. 5. To drive a beast, a vehicle, &c., ஓட்ட. 6. To deal with, to treat, to act toward. செய்ய. (*c.*)

கர்த்தர்எங்களைஅதிசயமாகநடத்திவருகிறார். God deals wonderfully with us.

அவரெங்களுக்குச்சாப்பாட்டுக்குநடத்திவருகிறார்.... He supplies us with food.

நடத்தை, *s.* (*Tel.* నడత.) Walk, conduct, behaviour, deportment, demeanour, character, இயற்கை. 2. Course, career, நடை. 3. Prosperity, influence, management, வாழ்வு. (*c.*)

நடத்தைக்காரன், *s.* A man of influence, one in prosperous circumstances.

நடத்தைக்காரி, *s.* [*in cant.*] A woman of loose conduct, விபசாரி.

*நடத்தைத்தப்பிதம் — நடத்தைப்பிழை, *s.* Immoral conduct.

நடபாவி, *s.* (*Tel.* నడబావి.) A well with steps leading down, நடைகிணறு.

நடப்பிக்க, *inf.* [*causative.*] To cause to go; to manage, transact, perform, direct, superintend; to behave toward, செய்விக்க. 2. To economize, to husband, திருவாகம்ப ண்ண. (*c.*)

நடப்பிப்பு, *v. noun.* Management, administration, superintendence. 2. Direction, economy.

நடமாடு, கிறேன், நடமாடினேன், வேன், நடமாட, *v. n.* To go about, move about as after sickness, imprisonment; to be at large, to frequent as people, உலாவ. 2. To be energetic after recovering from depressed circumstances; to rise from poverty, வர்த்திக்க. 3. To prevail, as epidemics; to haunt, or frequent, as evil spirits; to infest, as beasts, or reptiles, சஞ்சரிக்க. 4. To circulate as coin, or a report, வழங்க. (*c.*) 5. [*ex* நடம்.] To dance, கூத்தாட.

நடமாட்டம், *v. noun.* Going about, prevalence, haunting, circulation; improvement of circumstances, *as the verb.* 2. Activity, energy, as of middle age, முயலுகை. 3. Influence, செல்வாக்கு. 4. Care and diligence in any affair, பழக்கம். (*Beschi.*) 5. Stage-play, or dancing, நடனம்.

*நடம், *s.* Dancing, pole-dancing, as an actor; dancing or operations of Siva; dancing of devils, கூத்து. 2. Dancing to time as beaten, or to music, தாளமொத்திருக்கநடிப்பது. 3. A kind of tune, ஓர்பண். (*சது.*) (*p.*) See W. p. 451. NAT'A.

நடநாடகசாலை, *s.* A dancing woman, நாடகப்பெண்; *a dramatic term.*

நடநாயகன், *s.* Siva, சிவன். 2. A kind of green precious stone, கருப்பச் சைக்கல்.

நடன், *s.* [*plu* நடர்.] A dramatist, comedian, a dancer in general, கூத்தன். (*p.*)

நடி, *s.* A dancing woman, நாடகக்க ணிகை.

நடேசன்—நடேச்சுரன், *s.* Siva, சிவன்.

நடலம், *s.* [*vul.*] Vanity, ostentation, assumption, insolence, ஓய்யாரம். 2. Abuse of property, recklessness, squandering, assumption as to rank, irreverence, derision, scoffing, செருக்கு. 3. Fastidiousness, squeamishness, overniceness in food, நாக ரீகக்காட்டல்.

நடலமழிந்துநட்டாற்றிலேபோவாய்.......Mayest thou with all thy insolence be cast in the midst of the river; *a curse.*

நடலக்காரன், *s.* A reckless, vain person, ஓய்யாரக்காரன்.

நடலம்பண்ண — நடலம்அடிக்க, *inf.* To be proud, vain, reckless; to act above one's rank, circumstances, or age.

நடலை, *s.* Trembling, நடுக்கம். 2. Distress, suffering, affliction, துன்பம். 3. Guile, வஞ்சனை. 4. Deception, falsehood, பொய். (*சது.*) 5. (*c.*) Petulancy, insolence, &c., as நடலம்.

நடல்—நடவு, *v. noun.* Planting, transplanting. See under நடு, *v.*

நடவடி-நடவடிக்கை, *s.* (*Tel* నడవడి.) Conduct, as நடபடி.

நடவு, கிறேன், நடவினேன், வேன், நடவ, *v. a.* To cause to go, to drive, to lead on, to conduct, செலுத்த. 2. To manage, administer, direct, transact, perform, நடத்த. (*p.*)

நடவை, *s.* Path, road, way, வழி. 2. Turnstile, as கடவை. (*சது.*) 3. The extent of country, where a language prevails, வழங்குமிடம்; [*ex* நட.] 4. A transplanted tree, plant, grain, நடப்பட்டது; [*ex* நடு.] 5. A tree, தணக்குமரம், Gyrocarpus jacquine.

*நடனம், *s.* Dancing in general, dramatic dancing, acting, &c., கூத்து. W. p. 451. NAT'ANA. 2. For நடலம். (*c.*)

நடனஞ்செய்ய — நடனம்பண்ண—நட னம்புரிய, *inf.* To dance, to act on the stage. 2. To be vain, proud, reckless, as நடலம்பண்ண.

நடனர், *s.* (*plu.*) Dancers, stage-actors, கூத்தர்.

*நடன், *s.* A dancer. See நடம்.

நடாத்து, கிறேன், நடாத்தினேன், வேன், நடாத்த, *v. a.* (*poetic form of* நடத்து.) To cause to go, to drive, to lead on, to despatch, to give direction to in going, ஓட்ட. 2. To transact, to manage, to perform, to superintend, காரியம்நடத்த.

நூனடாத்த, *inf.* To write a treatise, a scientific work, &c.; [*ex* நூல்.]

நடாவு, கிறேன், நடாவினேன், வேன், நடாவ, *v. a.* To cause to go, &c., as நடவு. (*p.*)

நடி, *s.* Greatness, dignity, பெருமை. (*சது.*) 2. A dancing girl. See under நடம்.

நடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To dance, to act on the stage, கூத்தாட. 2. To assume manifestations, or forms of existence, as the deity, பலவேஷங்கொள்ள. 3. (*fig.*) To act improperly, முறைகெட் டொழுக. 4. To affect importance, நாகரீகம் பண்ண. (*c.*) 5. [*in the language of ascetics.*] To be active, busy, engaged in secularities, இல்லிகளைவாழ. 6. *v. a.* To cause changes, and transmutations, as the deity, விகாரப்படுத்த. 7. To operate as the deity in creating, &c. See திருத்தியம்பண்ண.

நடிப்பு, *v. noun.* Dancing, affecting importance, &c., *as the verb.*

நடு, *s.* The middle, இடை. 2. Centre, centricity, midst, மத்தி. 3. Intermediate as to place or time, that which intervenes, இடையானது. 4. Equity, impartiality, justice, uprightness, நீதி. 5. Medium, moderation, மிதம். 6. The waist, இடுப்பு 7. Law-suit, வழக்கு. 8. The state, capacity, office, &c., of a judge or umpire, நியா யாதிபதித்துவம். (*c.*) 9. (*சது.*) Earth, பூமி.—This word is commonly used நட்டு in combination—as நட்டாறு, the midst of the river, நட்டுச்சி, exactly the meridian.

நடுக்கடல், *s.* The mid-sea.

நடுக்கடற்போனாலும்மறுப்படாமல்வருக்கடவீர் ... Even though you go into the midst of the sea, may you return without harm.

நடுக்கட்ட, *inf.* [*prov.*] [*com.* பொதுக் கட்ட.] To sequester property.

நடுக்கட்டு, *s.* A girdle. See under கட்டு.

நடுக்கண்டம், *s.* The central portion of a continent. 2. The middle piece.

நடுக்காரர், *s.* [*prov.*] Arbitrators, judges, umpires.

நடுக்கிளி, *s.* The head player in a square. See under கிளி.

நடுக்குடி, *s.* A house-hold in the midst of others, as being safer than if alone. 2. A family of middling circumstances, rank, &c. 3. [*prov.*] The head-family of a tribe or class.

நடுக்கேட்க, *inf.* To hear a case in law. 2. To refer a case for decision.

நடுக்கொண்டவீடு, *s.* [*prov.*] The middle house. (*c.*)

நடுக்கொள்ளைக்காரன், *s.* One who plunders without regard to either party.

நடுச்சாமம், *s.* Midnight, the middle watch from 12 o'clock till 3.

நடுச்சுவர், *s.* A partition wall.

நடுச்சொல்ல, *inf.* To decide a case, to mediate.

நடுத்தரம், *s.* That which is middling. See தரம்.

நடுத்தலை, *s.* Crown of the head, உச்சி.

நடுத்தீர்க்க, *inf.* To give, or pass judgment in a case.

நடுத்தீர்ப்பு—நடுத்தீர்வை, *s.* Judicial judgment. 2. The final judgment. 3. (*fig.*) Divine judgments—as pestilence and other calamities.

நடுத்தீர்ப்புநாள், *s.* The judgment day.

நடுத்தெரு, *s.* The middle street of a town or village.

நடுநாள், *s.* The fourteenth or middle lunar asterism, சித்திரைநாள். (*p.*)

நடுநியாயம், *s.* Equity, fair dealing, uprightness. 2. Impartiality, even-handed justice. 3. Law-suit, pleadings, arguments stated.

நடுநிலை, *s.* An intermediate state, degree, &c. 2. Strict justice, equity. 3. Arbitration, mediation. 4. One of the positions in the mystic worship of the Saiva system.

நடுநிலைத்தியானம், *s.* The mysticism of the நடுநிலை worship.

நடுநிலைமந்திரம், *s.* An incantation in the Saiva worship, the letters of which are mystic symbols of the forms of deity, or of the idol worshipped. The words are ஆம், ஊம், ஓம், சிவாயநம, in which ஆம் is அடி, basis; ஊம் is நடு, middle; ஓம் is முடி, top; சி is சிவம், formless deity; வா is சத்தி, the female principle; ய is ஆத்துமா, the soul; நம is திரோபவம், obscuration.

நடுநிலைமை, *s.* Mediocrity, middle circumstances in life.

நடுநிற்றல், *v. noun.* Becoming bail or security for one. (*not the law term.*) 2. Being upright, impartial.

நடுநீதி, *s.* Impartial justice, equity, &c., as நடுநியாயம்.

நடுப்பகல், *s.* Mid-day, noon. (*c.*)

நடுப்படுத்த, *inf.* As நடுக்கட்ட.

நடுப்பார்த்தல், *v. noun.* [*prov.*] Acting as an inspector, commissioner, delegate, &c., by order of a court, மத்தியஸ்தம்பார்க்கை.

நடுப்பெற, *adv.* [*vul.* நடுப்புற.] In the middle, in the centre; between, among.

நடுப்பெறஉருக்காரு. Sit in the middle.

நடுப்பேச, *inf.* To plead, as நடுச்சொல்ல.

நடுப்போர், *s.* [*prov.*] The midst of the work, operation, affair, &c., (*lit.*) the midst of the battle, இடைநடு.

நடுமதியம்—நடுமத்தியானம், *s.* Noon, mid-day.

நடுமையம், *s.* Middle, centre. 2. Zenith, meridian.

நடுராசி, *s.* Middling in quality, size, &c., moderate, நடுத்தரம்.

நடுவதுபாதி, *s.* That which is in the midst, intermediate.

நடுவதுபாதியிலேவந்தான். He came after the beginning of an affair when half of it was over; he came last.

நடுவத்தசாமம்—நடுவத்தொருசாமம், *s.* [*prov.*] Midnight.

நடுவயது, *s.* Middle age.

நடுவறுத்தல், *v. noun.* Judging, as an umpire, deciding, discerning, perceiving, comprehending, ascertaining, discussing a controversy.

நடுவறுத்தான், *appel. n.* The name of a plant, மூக்குரட்டைக்கொடி, Boerhavia diffusa, *L.*

நடுவழி—நடுப்பாதை, *s.* Mid-way.

நடுவன், *s.* Yama, the god of death, awarder of rewards and punishments, இயமன். (*p.*) 2. [*prov.*] A judge, arbiter, awarder, நியாயாதிபதி.

நடுவாந்தரம், *s.* Midst of a work, process, time, &c., intermediate, மத்தி. (*c.*)

நடுவாந்தரத்திலேபோய்விட்டான். He died prematurely.

நடுவிரல், *s.* The middle finger.

நடுவிலவன், *s.* [*prov.* நடுவிலான்.] A middle brother.

நடுவிலே. In the midst, amidst.

நடுவின்மை, *s.* Partiality, injustice, நீதியில்லாமை. (*p.*)

நடுவீடு, *s.* The middle or interior of the house where the idol is kept. 2. An obscene expression, *used in the south.*

நடுவீடுபெருவழியாயிற்று. The very interior of the house is become a public road; i. e., the family is ruined.

நடுவீட்டிலேயிருக்கிறது. It is in the middle. (*abusive.*)

நடுவீட்டுக்குநாயகமாய்வந்தான். He has come to lord it over us.

நடுவீதி, *s.* The midst of the street.

நடுவெலும்பு, *s.* The back bone, the spine, முதுகெலும்பு. (*c.*)

நடுவெளி, *s.* Midst of an open plain, space, &c., இடைவெளி. 2. Immensity of space, as filled by the deity, பரவெளி.

நடுவெளிக்கமலபாதம், *s.* The lotus-like feet of the deity, as filling all space. (*p.*)

நடுவேபேச, *inf.* To interrupt one who speaks. 2. To speak as a mediator.

நடுவேபொல்லாப்பாக, *inf.* To become detached in friendship. (*c.*)

நடுவேமுறிக்க, *inf.* To break in the middle. 2. To object or contradict in speaking.

நடு, கிறேன், நட்டேன், வேன், நட, *v. a.* To plant, to set trees, to place seeds, நாற்றுநட. 2. To set up a pillar, pole or mast; to erect, நாட்ட. 3. (*fig.*) To establish a person, as a patron, ஸ்தாபிக்க. (*c.*)

நடுகல் — நட்டகல், *s.* A sepulchral stone or monument; a pillar set up in token of victory, or other achievement.

நடுகூலி, *s.* See நடவுகூலி.

நட்டுக்கொண்டுநிற்றல், *v. noun.* Standing on the head. 2. Standing erect. 3. (*fig.*) Persisting improperly in a request or assertion. (*c.*)

நட்டுவிழல். Nodding, one of the five ungraceful positions, ஐங்குற்றத்தொன்று. 2. Standing on the head and tumbling, தலைகீழாய்விழுதல்.

நட்டுவைத்தல். Establishing one as a patron. 2. Setting up a stone, pillar, &c., for a mark or token.

நட்டுவைத்தவன், *appel. n.* A patron.

நட்டுவைத்தெலும்பு, *s.* The leg, thigh bone from the hip downwards. (ஞானவெட்டி.)

நடவு, *v. noun.* Planting, transplanting, as grain, நாற்றுநடுகை.

நடவுக்குத்தெளிநாலத்தொன்று. Rice sown yields but a fourth of that planted.

நடவுகாரிகள், *s.* (*fem.*) Planters of grain.

நடவுகாலம், *s.* Time for planting rice.

நடவுகூலி — நடுகூலி, *s.* Wages for planting.

நடவுநட, *inf.* To plant grain, to transplant.

நடவுபயிர், *s.* Transplanted corn, நட்டபயிர்.

நடல் *v. noun.* As நடுகை. 2. Fixing as of a stake or pile, ஊன்றல். (*Beschi.*)

நடுகை, *v. noun.* Planting of trees, &c., நாட்டுகை. 2. Transplanted grain, plants, &c., நடவுநடுகை.

நடுக்கம். See under நடுங்கு.

நடுக்கு, கிறது, நடுக்கினது, நடுக்கும், நடுக்க, *v. n.* To shiver, to tremble, நடுங்க. 2. *v. a.* To agitate, cause to quiver, அசைக்க. 3. To cause dizziness or sickness as betel, tobacco, &c., நடுக்கச்செய்ய. (*c.*)

எனக்குக்குளிர்நடுக்குகிறது. I shiver with cold.

நடுக்கல், *v. noun.* Trembling, quaking, அசைவு. 2. Palsy, நடுக்கல்வாதம்.

நடுக்கல்காண — நடுக்கலெடுக்க, *inf.* [*loc.*] As நடுக்கெடுக்க.

நடுக்கற்காய்ச்சல், *s.* Ague.

நடுக்கு, *v. noun.* Trembling, &c., as நடுக்கம்.

நடுக்குவாதம், *s.* As நடுக்கல்.

நடுக்கெடுக்க, *inf.* To begin to quake or shiver. 2. To become dizzy, இறுகிறுக்க.

நடுங்கு, கிறேன், நடுங்கினேன், வேன், நடுங்க, *v. n.* To shake, tremble, shudder, shiver, quiver; to quake as the earth, அசைய. 2. To tremble through fear, to be agitated, பதற. (*c.*)

நடுங்கநாட்டம், *s.* [*in love poetry.*] Inquiries put by the female companion to the young lady, so as to cause her to fear, அகப்பொருட்கிளவியிலொன்று. (*p.*)

நடுங்கலன், *s.* [*prov. fem.* நடுங்கலி.] A palsied man, one who shakes through palsy, நடுக்கல்வாதக்காரன்.

நடுக்கம், *v. noun.* Trembling, shaking, quaking, shivering, tremulousness, agitation, trepidation, கிறுகிறுப்பு. 2. (*fig.*) Great fear, அச்சம். (*c.*)

அவனுக்குஎன்பேரைக்கேட்டால்நடுக்கம். If he hears my name, he trembles.

நடுக்கங்கொள்ள — நடுக்கமடைய, *inf.* To tremble through fear.

நடுங்கல், *v. noun.* Trembling, &c., *as the verb.*

நடுநடுங்க, *inf.* [*intensive of* நடுங்க.] To tremble greatly through fear, &c., to quake. (*c.*)

நடுவு, *s.* Middle, midst, within, intermediate, இடை. 2. Equity, impartiality, uprightness, செம்மை. 3. Justice, நீதி. 4. The loins or waist of a woman, மாதரிடை.

நடுவுநிலைமை, *s.* Equity, justice, strict morality, impartiality, நியாயம். 2. Steadfastness, injustice, distributive justice, நிதானம். 3. Maintenance of a state of equality, செம்மை. (*p.*)

நடை, *s.* Walk, act of walking, நடப்பு. 2. Gait, mode of walking or going, pace, ஒயில். 3. Journey, voyage, பிரயாணம். 4. Turn, time or bout, as once, twice, &c., முறை. 5. Entrance to a house, commonly between two raised verandahs, நடைகூடம். 6. Conduct, behavior, course of actions, career, good or bad manners, ஒழுக்கம். 7. Fluency in reading, வாசிப்பிளேட்டம். (*c.*) 8. Succession, series of letters in a word, words in a sentence, எழுத்துநடைசொல்நடை. 9. Style or usage in language, idiom, பாஷைநடை. 10. Custom, usage, fashion, வாடிக்கை. 11. Prosperity, influence, செல்வம். 12. Way, road, route, வழி. 13. A dance, கூத்து. 14. Course of a planet, கிரகநடை. 15. Passage, transit, progress, motion, செல்லுகை.

நடைநடையாய்வந்தான். He came without delay.

கால்நடையாய்ப்போனான். He went on foot.

வண்டி பாரமேற்றிக்கொண்டு மூன்றுநடை வந்தது. The wagon taking in a load went three times.

அன்னநடைநடக்கப்போய்க் காகந்தன்னடையுங்கெட்டது. The crow affecting the gait of the Swan lost even its own gait; i. e. affectation is ridiculous.

நடைகாயம், s. A composition of vegetable stimulants continued for some months by a woman after confinement. (c.)

நடைகிணறு, s. A well with steps down, as நடைபாவி.

நடைகுறைய, inf. To decrease as a person's activity in walking, &c. 2. To diminish, as prosperity, influence, &c.

நடைகூடம் — நடைக்கூடம், s. As நடை, 5. 2. The vestibule of a palace.

நடைகூலி — நடைக்கூலி, s. Hire or pay for walking to a place (to do a work, &c.)

நடைக்காவணம், s. A shed with a flat roof into which the idol is taken to rest after passing round in procession.

நடைக்குநடை. From time to time, from turn to turn.

நடைசாரி, s. Gentle pace of a horse, குதிரையின்மந்தகதி. 2. [in burlesque.] Walking for pastime, உலாவல். 3. As நடைசாரி மேளம். See under சாரி, Sa.

நடைச்சலங்கு — நடைப்படகு, s. A small boat, usually accompanying one larger, for lading, &c.

நடைச்சாவடி, s. As நடைகூடம், 2. (R.)

நடைபடி, s. [com. நடபடி.] Act, conduct, behavior, one's life, history, &c., நடத்தை. 2. Manner, custom, வாடிக்கை. ஊர்நடைபடி. Manners, customs, doings, practices of a country.

நடைபடிபார்க்க, inf. To try one's conduct. (R.)

நடைபழக, inf. To learn to walk, as a child. 2. [ironically.] To walk too slowly, creeping along.

நடைபழக்குதல், v. noun. Breaking in a horse. (c.)

நடைநீர், s. Water flowing through a channel.

நடைபறிய, inf. [prov. impersonal, governing the dative.] To walk fast, விரைந்துநடக்க.

நடைபாவாடை, s. White cloth spread for a great person, a newly married couple, &c., to walk on, நிலப்பாவாடை. (c.)

நடைபாவாடைபோட, inf. To spread a நடைபாவாடை cloth.

நடைபிறழ, inf. To deviate from morality, prescribed rites, ceremonies, &c.

நடைப்பரிகாரம், s. Stores for travelling, பயணச்சாமான். (சது.)

நடைமருந்து, s. Medicine that does not prevent one's usual occupation or food.

நடைமுதல், s. The current year. (c.)

நடையறிய, inf. To know the customs, manners, &c., of the country.

நடையன், s. [in combin.] A walker, நடக்கிறவன். 2. A ploughing ox, riding horse, &c., உழவுமாடுகுதிரைமுதலியன. (c.) 3. [in cant.] Shoes, slippers, செருப்பு.

நடையில்விட, inf. To trot a horse at a moderate pace.

நடையுடைபாவனை, s. [prov. for உடைநடைபாவனை, which see.]

நடைவாவி—நடைபாவி, s. A well with steps. See நடபாவி.

நடைவீச்சு, s. Velocity or momentum of one's walk.

*நட்சத்திரம்—நக்ஷத்திரம், s. Star in general, தாரகைப்பொது. 2. Lunar constellations, நாண்மீன், of which there are twenty-seven, forming the lunar Zodiac, with an extra mansion, having no stars of its own, but which taking parts of the contiguous asterisms makes the number twenty-eight. This intercalary asterism occurs between the 21st and 22nd, and is used chiefly for astrological purposes. 3. The period during which the moon is passing through an asterism. W. p. 450. NAKSHATRA. The twenty-seven asterisms beginning with Aries are in order, as follows; 1. அசுபதி or அச்சுவினி. 2. பரணி. 3. கார்த்திகை. 4. உரோகிணி. 5. மிருகசீரிடம், or மிருகசீர்ஷம். 6. ஆதிரை, or திருவாதிரை. 7. புனர்பூசம். 8. பூசம். 9. ஆயிலியம். 10. மகம். 11. பூரம். 12. உத்திரம். 13. அஸ்தம் or அத்தம். 14. சித்திரை. 15. சுவாதி or சோதி. 16. விசாகம். 17. அனுடம் or அனுஷம். 18. கேட்டை. 19. மூலம். 20. பூராடம். 21. உத்திராடம். 22. திருவோணம். 23. அவிட்டம். 24. சதயம். 25. பூரட்டாதி. 26. உத்திரட்டாதி. 27. இரேவதி. Each asterism consists of thirteen degrees and twenty minutes of the Zodiac. There is a particular star in each called யோகம் which serves as an index to the mansion.

நட்சத்திரசக்கரம், s. The lunar asterisms collectively forming a lunar Zodiac. 2. Diagram for astrological calculations, as கலப்பைச்சக்கரம், &c.

நட்சத்திரசிரகம், s. A kind of cumin, star-anise. See அனிசு.

நட்சத்திரதீபம், s. A kind of lamp.

நட்சத்திரபதவி, s. The starry sky, as நட்சத்திரமண்டலம். 2. The visible heavens, as a place of bliss for those having a certain degree of religious merit.

நட்சத்திரப்பிரமாணம், s. The length of a nakshatra.

நட்சத்திரமண்டலம், s. The starry heavens.

நட்சத்திரமாலை, s. [in astrol.] A treatise on the lunar constellations, ஓர்சோதிடநூல். 2. The galaxy or milky way, regarded as a string by which துருவன் turns the heavens. 3. A table of the asterisms in the moon's path, the lunar Zodiac.

நட்சத்திரவாணம், s. A kind of rocket. See வாணம். (c.)

நட்சத்திரவீதி, s. The moon's path in the Zodiac.

நட்டணை, s. Abuse of things, waste, recklessness, rashness, எண்ணுமை. 2. The mimic gestures of one in a drama; mockery, ஆகடியம். 3. Fastidiousness, squeamishness, வெறுப்பு. 4. Excessive self-indulgence, the inconvenience or grief caused by another, disobliging conduct between persons bound to each other, as husband and wife, நடலம். (c.)

நட்டணைக்காரன், s. An insolent, overbearing man.

நட்டணைபண்ண, inf. To act wantonly, recklessly, fastidiously.

நட்டநடு, s. The very middle, சரிமத்தி.

நட்டநடுப்பெற, inf. [as an adverb.] Irreverentially. (c.)

நட்டபாடை, s. A kind of tune, ஓர் பண். (திவா.)

நட்டம், s. Erectness, uprightness, perpendicularity, as of a post, நிறுதிட்டம். (c.) 2. [prov.] Nakedness; i.e. with only the foreflap, அம்மணம். 3. (p.) Dance, dancing, நடனம். 4. Poetical form for நட்டோம்.

நட்டமேநிறுத்த, inf. To set up perpendicularly. 2. (fig.) To establish a person in life.

நட்டமேநிற்க, inf. To stand erect as a post, heedless of danger, unsusceptible of heat, cold, &c. 2. [prov.] To stand naked, without a sense of decency.

நட்டமேவர, inf. To come naked.

*நட்டம்—நஷ்டம், s. Loss, detriment, damage, injury, disadvantage, prejudice, சேதம். 2. Ruin, destruction, கேடு. W. p. 457. NASHT'A. (c.)

நஷ்டங்காண, inf. To experience loss in trade, &c.

நஷ்டப்படுத்த, inf. To cause damage, to involve in loss.

நஷ்டமிறுக்க, inf. [prov.] To pay the loss, make good, indemnify.

நஷ்டம்பொறுக்க, inf. To bear loss.

நட்டமுட்டிசிந்தனை, s. The three species of things, on which divination is exercised, also the kinds of divination, and a work treating on the art. The three things are, 1. நட்டம், loss. 2. முட்டி, the closed hand in reference to what is held at the time. 3. சிந்தனை, thought of the person, applied to the diviner.

நட்டவாளன்—நட்டவாளி, s. [prov.] One who sustains loss, a loser.

நட்டல், v. noun. Loving; [ex நன்று.] 2. Planting, as நடல். (சது.)

நட்டழிவு, s. Loss in cultivation after transplanting, நடவுசேதம். (c.)

நட்டாமுட்டி, s. [vul.] Any thing ordinary, middling, passable, common, நடுத்தரம். 2. Plebian, vulgar, இழ்மை; [ex நடு, middle.]

நட்டாமுட்டிகள், s. The common people.

நட்டார், s. [plu.] Friends, சிநேகிதர்.

நட்டோர், s. Relations, உறவோர். 2. As நட்டார். (p.)

நட்டாறு, s. The midst of the river, நடுஆறு. See நடு. (c.) என்னைநட்டாற்றிலேகைவிட்டான். He had forsaken me in the midst of the river; i. e. in utter ruin.

*நட்டி—நஷ்டி, s. Loss, detriment, as நஷ்டம். (c.)

நட்டு, s. One who beats the cymbal and directs the dancing, நட்டுவன். 2. A dancer, நாட்டியக்காரன். 3. [prov.] Lowness, baseness, inferiority, இழ்மை.

நட்டுக்கதை, s. Scoff, sarcastic, scornful remark.

நட்டுமுட்டு, s. Music and dancing. (c.)

நட்டுமுட்டுக்காரர், s. (plu.) Dancing masters, drummers, &c.

நட்டுமுட்டுநாடகசாலை, s. Performer, instruments and figurantes. (R.)

நட்டுவம், s. The office of one who trains dancing girls and directs their dancing, நட்டுவச்செய்கை.

நட்டுவர், s. [sing. நட்டுவன்.] Dancing and music masters. (c.)

நட்டுச்சி, *s.* The exact zenith, the meridian, நடுவுச்சி; [*ex* நடு.]

நட்டுவக்காலி — நட்டுவாய்க்காலி, *s.* A scorpion, நண்டுத்தெறுக்கால்; [*ex* நண்டு, crab, (*lit.*) lobster-legged.] (*c.*)

நட்பு, *s.* Friendship, amity, sociality, affection, சிநேகம். 2. Relationship, consanguinity, உறவு. 3. A bribe, பரிதானம். (*p.*)

நட்பாடல், *v. noun.* Being affectionate, keeping friendship.

நட்பாராய்தல், *v. noun.* Discerning friendship. (*p.*)

நட்பாளன், *s.* Trusty friend, நெருங்கியசிநேகன். 2. Confidant of a prince. See எண்வகைத்துணைவர்.

நட்புக்காட்ட, *inf.* To show kindness or friendship. 2. To present sweetmeats to children. 3. To bribe a person or make presents to gain his favor. (*c.*)

நட்புத்தானம், *s.* One of the five situations of a planet, viz: in a sign agreeable to itself, thus exerting a benign influence, also called நட்புக்கிரகம்.

நட்புவைத்தல், *v. noun.* Showing kindness, cultivating friendship.

நணர்ந்தம், *s.* A small plant, சணல், Crotolaria juncea, *L.* 2. A tree, புன்கு, Dalbergia arborea.

நணுகு, கிறேன், நணுகினேன், வேன், நணுக, *v. n. v. a.* To approach, draw nigh, arrive at; become attached to or united with. See நண்ணு. (*p.*)

நணுகலர்—நணுகார், *s.* (*plu.*) Enemies, பகைவர்.

நணுகிக்கொண்டிருக்க, *inf.* [*frequentative.*] To approach often.

நண்டல், *s.* [*vul.*] A macerated mass, rice bruised to a pap, பொங்கல். (*R.*)

நண்டலிண்ட, *inf.* To boil rice.

நண்டு, *s.* A crab, a lobster. See ஞெண்டு. (*c.*) 2. Cancer of the Zodiac, கர்க்கடகவிராசி. There are different kinds of crabs, as ஒருகால்நண்டு, a kind with one claw only, taken for the கிணை disease; கடல்நண்டு, sea crab, Pagurus; கடுக்காய்நண்டு—குக்காய்நண்டு, small crabs used in broth and taken for dropsical swellings as promoting urinary discharges; குளநண்டு, small tank crabs; செம்பாறைநண்டு—பெருநண்டு, a large red kind, தில்லைநண்டு, a black lobster found under the தில்லை tree on the sea shore; நீலக்காலிநண்டு, blue legged crab; பீநண்டு, common crabs found in the holes of moist grounds; வயல்நண்டு—கழனிநண்டு, fresh water crabs found in the fields; வெள்ளைநண்டு—பால்நண்டு, a whitish kind. The middle letter sometimes changes to ட். Such compounds are mostly of Jaffna.

நட்டுச்சினை — நண்டுச்சினை, *s.* Crab's spawn.

நட்டுச்சினைக்கல், *s.* A kind of stone in wells of the color of crab's spawn, indicative of a good supply of water.

நட்டுச்சினைமண், *s.* A kind of earth of the color of crab's spawn.

நட்டோடு, *s.* As நண்டோடு.

நட்டோட்டுக்கிட்டம், *s.* A crust or coat of dry mud formed over a brackish or moist soil.

நட்டோட்டுப்பார், *s.* A thin coat or lamina of rock that easily splits off.

நண்டின்பெருங்கால், *s.* The large claws of a crab.

நண்டுக்கல், *s.* A kind of petrified lobster used as a charm against poisonous bites, and in cases of strangury, &c.

நண்டுக்காற்கீரை, *s.* A kind of eatable greens, Bergera verticillata.

நண்டுக்காற்புல், *s.* A kind of grass, Ischæmum aristatum.

நண்டுக்கொடுக்கு, *s.* The forceps of a lobster.

நண்டுக்கோது, *s.* Refuse of lobsters, as the shell, &c

நண்டுத்தெறுக்கால், *s.* As நட்டுவக்காலி.

நண்டுச்சினை, *s.* See நட்டுச்சினை.

நண்டுருகால், *s.* Small legs of a crab.

நண்டோடு, *s.* A lobster shell.

நண்ணு, கிறேன், நண்ணினேன், வேன், நண்ண, *v. a.* or *v. n.* [*imperat also* நண்.] To approach, to approximate, draw nigh to one, கிட்ட. 2. To join to, or be combined with, ஒட்ட. 3. To adhere, be attached to or united with, பொருந்த. 4. To reside at, இருக்க. (*p.*)

நண்ணலர் — நண்ணார், *s.* [*plu.*] Foes, as நணுகலர்.

நண்ணுநர், *s.* Friends, adherents, மித்திரர்.

நண்பகல், *s.* Mid-day, broad-day, நடுப்பகல். 2. One of the divisions of the day, from 10 in the morning until 2 in the afternoon. See பொழுது; [*ex* நள், middle, *et* பகல்.] (*p.*)

நண்பு, *s.* Love, friendship, amity, attachment, அன்பு. (*p.*)

நண்பன், *s.* A friend, companion, associate, தோழன். 2. A husband, a lover, புருஷன். 3. A ruler of a mountainous district, குறிஞ்சிநிலத்தலைவன். 4. Hemp, சணல். (சது.)

*நதம், *s.* River, flowing westward as the Brahmaputra, the Indus, &c., which are regarded as males, மேற்கோடுமாறு, ஆணாறு. W. p. 452. NADA. 2. Zenith distance, east or west in time, உச்சத்திருந்தபொழுதுக்குள்ளபேதம். (*Sa. Nata.*)

நதபாகை, *s.* Zenith distance.

நதாதிபதி, *s.* Sea or ocean, கடல்.

நதோனபத்திரம், *s.* Degrees, minutes, &c., obtained by subtracting நதம் from twenty-four.

*நதி, *s.* Rivers flowing eastward, considered feminine, கிழக்கோடுமாறு, பெண்ணாறு. 2. River in general, ஆற்றின்பொது. (*Sa. Nadi.*) 3. Seven special rivers regarded as sacred or as goddesses. 1. கங்கை, Ganges. 2. யமுனை, Jumna. 3. சரச்சுவதி, Sarasvati. 4. நருமதை, Nerbudda. 5. காவேரி, Cavari. 6. குமரி, Comorin. 7. கோதாவரி, Godavari. Another classification makes eleven adding to the above. 8. சிந்து, Indus. 9. தாமிரவருணி. 10. துங்கபத்திரி. 11. கிருட்டிணை, Krishna.

நதிக்கரை, *s.* Bank of a river, ஆற்றங்கரை.

நதிசரம், *s.* (*St.*) An elephant produced on the banks of a river, ஆற்றுச்சார்பிற்பிறந்தயானை. (சது.)

நதிதீரம், *s.* (*St.*) As நதிக்கரை.

நதிபதி, *s.* Sea, as நதாதிபதி.

நதியாட, *inf.* [*com.* நதியிலேமுழுக.] To bathe in a river, commonly in a sacred river.

நது, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To extinguish, to quench, அவிக்க. (சது.) 2. To eclipse rays, &c., மறைக்க. 3. To destroy, கெடுக்க. (*p.*)

நத்தத்தனார், *s.* One of the learned professors of the Madura college, சங்கப்புலவரில் ஒருவர்.

*நத்தமாலம், *s.* A tree as நணர்ந்தம். W. p. 450. NAKTAMALA.

நத்தம், *s.* Chank, சங்கு. 2. Snail, நத்தை. 3. Town, village, ஊர். 4. Gnomon of a dial, கடிகாரஊசி.

நத்தமகன் — நத்தமக்கள் — நத்தமார், *s.* [*fem.* நத்தமகள்.] [*prov.*] A sub-division of the Vellalas, husbandmen, agriculturalists. (*c.*)

நத்தமாடி, *s.* [*fem.* நத்தமாடிச்சி.] Vellalas. (*c.*)

பாழ்நத்தம், *s.* A deserted village.

*நத்தம், *s.* Night, இரா. W. p. 450. NAKTA. 2. Darkness, இருள். 3. The புன்கு tree, as நத்தமாலம்.

நத்தார்வைத்தோட, *inf.* [*prov.*] To warp a vessel, கப்பலைக்கயிறுகட்டியிழுக்க.

*நத்து, *s.* A kind of owl, ஓர்கூகை.

நத்து, *s.* [*a change of* நந்து.] A chank, சங்கு. 2. (*Tel.*) A kind of nose-jewel, மூக்கணி.

நத்து, கிறேன், நத்தினேன், வேன், நத்த, *v. a.* [*a change of* நச்சு.] To desire, to long for, to hanker after, to love, விரும்ப. 2. To ingratiate one's self with another; to make friends, சிநேகங்கொள்ள. 3. To pursue with desire, ஆவலோடுபின்செல்ல. (*c.*)

இதைநத்திவந்தேன். I came longing to obtain this.

அவளைநத்தித்திரிகிறான். He is hankering after her.

நத்தாசை, *s.* [*prov.*] Wishfulness. (*c.*)

நத்தாசைகாட்ட, *inf.* To show a desire.

நத்தை, *s.* A snail, கருநந்து. (*c.*) 2. (*R.*) A parasitic plant, a creeper, Cassyta filiformis, *L.*

நத்தைக்கறி, *s.* A dish of snails.

நத்தைகுத்தி — நத்தைகொத்தி, *appel. n.* A white water bird, a gigantic crane; (*lit.*) *snail picker*, ஓர்புள்.

நத்தைகுத்திநாரை. *s.* A kind of heron.

நத்தைச்சுண்டி — நத்தைச்சூரி, *s.* A kind of sorrel, used as an herb.

நத்தைப்படுவன், *s.* [*prov.*] A boil in the eye, a kind of sty, கண்கட்டி.

நத்தையோடு, *s.* The shell of a snail.

*நந்தகம், *s.* The sword of Krishna, விஷ்ணுவாள். W. p. 453. NANDAKA.

நந்தகோபன், *s.* The cowherd Nanda, as நந்தன், 1.

நந்தகோபாலர், *s.* Cowherds—the caste, இடையர்.

*நந்தம், *s.* Musk, கஸ்தூரி. 2. (*R.*) A citron, Citrus aurantium. 3. A crow. See நாந்தம். 4. A chank, சங்கு. 5. W. p. 453. NANDA. One of Kuvera's nine inestimable gems, or treasures. See நிதி.

*நந்தம்—நந்தர், *s.* Cowherds, இடையர்.

நந்தல், *s.* Perishing, decrease, decay, declension, கெடல். 2. Reproach, slander, நிந்தை; [*ex* நந்து, *v.*]

*நந்தல், s. Increase, prosperity, ஆக்கம்; [ex Sa. Nanda.]

*நந்தவனம், s. [vul. நந்தவானம்.] A flower garden.

*நந்தனம், s. The flower garden of Indra, இந்திரன்பூங்கா. W. p. 453. NANDANA. 2. A flower garden, நந்தவனம். 3. [also நந்தன.] The twenty-sixth year of the Indian cycle, ஓர்வருஷம். (சது.)

நந்தனவருஷம், s. As நந்தனம், 3.

நந்தனவனம், s. A flower garden or grove.

*நந்தனன், s. [fem. நந்தனி, நந்தனை.] A son, குமாரன். W. p. 453. NANDANA.

*நந்தன், s. Nanda, foster father of Krishna, கண்ணன்தந்தை. 2. A son of மகா நந்தி, a prince, ஓரரசன். W. p. 453. NANDA. 3. The name of a shoe-maker who is reputed to have reigned as a king for three hours, and to have issued leather coin, அரசாண்டஒருசக்கிலியன்.

நந்தன்தோற்காசுவழங்குகிறது. The leather coin of நந்தன் is current; said when a bad custom prevails.

என்காரியமெல்லாம்நந்தன்படைவீடாய்ப்போயிற்று. My affairs are [ruined] like Nanda's camp.

*நந்தாவனம், s. As நந்தனம், 1, 2.

*நந்தி, s. A bull, as the vehicle of Siva, whose figure is often in front of the temples of this god, இடபம். 2. Taurus of the Zodiac, இடபவிராசி. 3. Nandi the chamberlain or chief attendant of Siva, having a bull's face, நந்திதேவன். 4. Siva, சிவன். 5. A king, ஓரரசன். 6. A small drum, சிறுபறை. 7. An oil-maker, செக்கான். 8. A hill famed in mythology, ஓர்குன்று. 9. One of the eighteen secondary Puranas, உபபுராணத்தொன்று.

நந்திகேசன்—நந்திகேசுரன்—நந்திகேச்சுரன், s. Siva, சிவன். 2. Nandi, the conveyance of Siva, சிவனூர்தி. (சது.) 3. As நந்தி, 3.

நந்திக்கலம்பகம், s. A lampoon on the king Nandi, which is said to have caused his death.

நந்திதேவன், s. As நந்தியம்பெருமான்.

நந்திப்பூசணி, s. A large kind of gourd, Cucurbita, as சாம்பற்பூசணி.

நந்தியம்பெருமான்—நந்தியம்பெருமான், s. A name of Nandi.

*நந்தியாவட்டம்–நந்தியாவட்டை, s. (St. நந்தியாவர்த்தம்.) A beautiful flowering shrub, ஓர்மலர்ச்செடி, Nerium coronarium, (Ait.) Tabernæmontena. (D.) There are two species, அவைக்குநந்தியாவட்டம், பெருநந்தியாவட்டம், bearing a large flower, called the eye-flower; ஒற்றைநந்தியாவட்டம், a single petaled flower. (c.)

நந்தியாவட்டத்தாமன், s. A name of அரியோதனன், as wearing a garland of the நந்தியாவட்டம் flower; [ex தாமம்.]

*நந்திச்சுரன், s. Siva, சிவன்.

நந்து, s. A chank, சங்கு. (See நத்து.) 2. A snail, நத்தை. (சது.)

நந்து, கிறேன், நந்தினேன், வேன், நந்த, v. n. To become dissolved, to perish, to decay, to waste, கெட. 2. To increase, prosper, விருத்தியாக. (சது.) 3. To be insulted, abused, நிந்திக்கப்பட. (p.)

நந்தாமணி, s. A precious stone, சிறந்தமணி. 2. An esculent medicinal plant, as உத்தாமணி. See உத்தமதாளி.

நந்துருணி, s. [vul.] A tale-bearer, a backbiter, புறங்கூறி. 2. A fool, a silly person, மதியீனன். (R.)

நந்துருணிப்பேச்சு, s. Back-biting, slander.

நந்தை, s. The கொத்தான் shrub. 2. Strychnos, தேற்றுமரம். 3. [prov.] A rope for fastening the yoke to the beam of the plough, கலப்பைநுகத்தொடுகயிறு.

*நந்தை, s. The first, sixth and eleventh day in either half lunar month, பிரதமை, சஷ்டி, ஏகாதசி. 2. [in mythol.] One of five cows produced from the sea of milk, பஞ்சதெய்வப்பசுவிலொன்று. W. p. 453. NANDA.

நந்நான்கு, s. By fours, in classes of four, or four to each, நான்குநான்காக. (c.)

*நபம், s. Sky, atmosphere, etherial regions, ஆகாயம். 2. August or ஆவணி month. W. p. 454. NABHAS.

நபர், s. (Hind.) An individual, a man, மனுஷன். (c.)

நபர்குடிபைசல், s. Settlement of lands by individual ryots.

நபர்ஜாமீன், s. Personal bail. See சாமீன்.

நபா, s. (Arab.) Advantage, profit, இலாபம்.

நபாபு—நபாப், s. (Hind.) The Nabob of the Mussulmen, துலுக்கஅரசன். (c.)

நபி, s. (Hind.) A prophet, இசலாமார்க்கத்தீர்க்கதரிசி. (c.)

*நபுஞ்சகம், s. An hermaphrodite, பேடு. See ந. W. p. 453. NAPUMSAKA.

நபுஞ்சகலிங்கம், s. Neuter gender. See திரிலிங்கம்.

நபுஞ்சகன், s. An hermaphrodite, பேடன். 2. A eunuch, an impotent man, ஆண்குறிவாங்கப்பட்டவன்.

*நபோமணி, s. (St.) The sun; (lit.) gem of the sky, சூரியன்; [ex நபம்.]

*நப்பின்னை, s. Lukshmi, இலட்சுமி; [ex ந.] (p).

நப்பாலத்தனார், s. One of the professors of the Madura college; nothing is known of him but his impromptu on the Cural, சங்கப்புலவரிலொருவர்.

*நம, s. Bowing, salutation, obeisance, வணக்கம். 2. A term used, with the name of a deity, in incantations, to signify veneration, மந்திரமுடிவிலேவருமொழி, as கணேசாயநம, salutation to Ganesa. W. p. 454. NAMAS.

நம—நமர், கிறது, த்தது, க்கும், க்க, v. n. To become damp, as paper in the rainy season, ஈரித்துப்போக. (c.)

நமக்காரி, s. A plant, ஆடுதின்னாப்பாலை. 2. A plant, வறட்சுண்டி.

நமஸ்கரி—நமற்கரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To bow or bend in reverence or worship, to worship, to adore, வணங்க.

*நமஸ்காரம்—நமற்காரம், s. A reverential bow; reverence, worship, or adoration by bowing or prostration, வணக்கம். W. p. 454. NAMASKARA. (c.)

நமஸ்காரம்பண்ண, inf. To revere; to worship by bending or prostration.

நமஸ்காரவந்தனம், s. Obeisance, homage by bowing.

நமத்தம், s. Indian spikenard. See சடாமாஞ்சி. (R.)

நமர், s. Our people, our relations, friends, company, &c.—oppo. to தமர், நம்மவர்.

நமர், v. See நம.

நமன், s. [fem. நமள்.] Our friend, relation, companion, நம்மவன். (p.)

*நமன், s. Yama. See இயமன், எமன்.

*நமுசி, s. A prince son of Maha Bali, மாவலியின்புத்திரன்.

நமுடு, s. A nit; also the larvae of insects, ஈர். 2. [vul.] Under-lip, கீழுதடு. 3. A crane, கொக்கு. (c.)

நமுடுகடிக்க, inf. To bite the under lip, as in serious thought, or anger.

நமுட்டுச்சிரங்கு, s. A kind of eruption. See சிரங்கு.

நமூது, s. (Pers.) Proof, evidence, testimony, சாட்சி.

நமூனா, s. (Pers.) Forms, specimen, pattern, மாதிரி. (Govt. usage.)

நமை, s. Itching, irritation, தினவு. (c.) 2. (சது.) A kind of tree, ஓர்மரம்.

நமை, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To itch, தினவுண்டாக. (c.)

நமைச்சல்—நமைப்பு, v. noun. Itching, prurience.

நமைச்சலெடுக்க — நமைப்பெடுக்க — நமையெடுக்க, inf. To itch.

நம், [genitive of நாம்.] Our. 2. Particle of declension used with எல்லாம், as எல்லாநம்மையுங்கண்டான், he saw us all.—Note. எல்லாம் is considered as the first person plu. and நம் in this connexion is expletive.

நம்மவன், s. [also நம்பிட்டவன், நம்முளவன்.] One of ours, an adherent.

நம்பன், s. One supremely desirable, an epithet of God, கடவுள். 2. Siva, சிவன்.

நம்பி, s. A superior person, a young man, a gentleman, a poetic term of respect, ஆணிற்சிறந்தோன். 2. [also நம்பியான்.] The son of a brahman by a mother of the military race, married in the இராக்கதம் mode, and a worshipper of Vishnu, அரசர்மாதைப் பார்ப்பான் இராக்கதமணஞ்செய்யப்பிறந்து விட்டுணுவையருச்சிப்போன். 3. A title of some Vaishnuva gurus. (c.)

நம்பியாண்டார்நம்பி, s. A brahman poet in the Carnatic. He wrote the கலித்துறையந்தாதி, treating of the legends of அறுபத்துமூவர். He was an enthusiastic admirer of சம்பந்தர், and wrote two poems in his praise, ஓர்புலவன்.

நம்பிக்கை, s. Hope, trust, confidence, credence, assurance, விசுவாசம். 2. An oath, a vow, ஆணை. 3. That which is confidential or entrusted in confidence, ஒப்புவிப்பு; [ex நம்பு.] (c.)

அதென்னம்பிக்கைக்கொப்புவிக்கப்பட்டது. It was entrusted to me.

நம்பிக்கையுண்டு. There is hope.

நம்பிக்கைகொள்ள — நம்பிக்கைவைக்க, inf. To believe, to trust, rely on, to have confidence.

நம்பிக்கைக்கிரண்டகம், *s.* As நம்பிக்கைத்துரோகம்.

நம்பிக்கைசெலுத்த, *inf.* To acquit one's self as an honest dealer, debtor, &c.

நம்பிக்கைத்துரோகம், *s.* Breach of trust, violation of confidence.

நம்பிக்கைபண்ண, *inf.* To assure, to give confidential assurance. 2. [*also* நம்பிக்கைபண்ணிக்கொடுக்க.] To make oath.

நம்பிக்கையிலேகொடுக்க, *inf.* To lend on trust; i. e. without legal security.

நம்பிக்கையுள்ளவன், *appel. n.* [*neg.* நம்பிக்கையற்றவன்.] A trust-worthy man. 2. A man possessing hope, trust, confidence.

நம்பிக்கையோலை, *s.* A passport. (*R.*)

நம்பிக்கையாயிருக்க, *inf.* To be certain.

நம்பு, *s.* Desire, hope, ஆசை. (சது.)

நம்பு, கிறேன், நம்பினேன், வேன், நம்ப, *v. a.* To hope, மெய்கொள்ள. 2. To trust, to confide in, to rely on, பற்றுவைக்க. 3. To credit, to believe, to have faith in, விசுவாசிக்க. 4. To desire, to long for, to desire intensely, விரும்ப. (*c.*)

அதைநம்பப்படாது. Don't believe it.

உன்னைநம்பிவந்தேன். I came trusting in you.

இன்றுவருவானென்றுநம்பாதே. Don't expect him to-day.

நம்பிக்கொள்ள, *inf.* To trust, to rely on, as நம்பு, *v.*

நம்பிமோசம்போக, *inf.* To be disappointed.

நம்பூரி, *s.* A class of high Malyalam brahmans, மலையாளப்பார்ப்பாரிலோர்வகையார். (*c.*)

நம்மாழ்வார், *s.* A poet of the Vellala caste who resided by the side of தாம்பிரவன்னி river. He was the author of four different poems in honor of Vishnu.

நயக்கன், *s.* A dog, நாய். (சது.)

நய, க்கிறது, த்தது *or* ந்தது, க்கும், க்க, *v. n.* To be cheap, மலிய. 2. To be advantageous, profitable, useful, பயன்பட. 3. To exceed, to surpass, to improve, விருத்தியாக; [*ex* நயம்.] (*c.*)

இவ்வருஷத்தானியம்நயத்தது. Grain is cheap this year.

அதற்கிதுநயமாயிருக்கின்றது. This exceeds or excels that.

நயத்தபொன், *s.* Good gold.

நயத்தவிலை, *s.* A cheap price.

நயந்தசொல், *s.* Civil, complimentary, or pleasing language.

நய, க்கிறேன், ந்தேன், ப்பேன் க்க, *v. a.* To love, to exercise affection, to profess and manifest love, to woo, to coax, நேசங்காட்ட. 2. To be kind, affectionate, friendly, civil, courteous, பிரியப்படுத்த. 3. To respect, to esteem, to show respect, மெச்ச. (*c.*) 4. (*p.*) To desire greatly, to long for, ஆசைகொள்ள.

நயவாதேநன்றிபயவாவினை. Desire not that which is injurious. (*p.*)

ஒருவரைநயந்துபிழைத்தல். Getting a living by pleasing one; i. e. by acting agreeably to one's wishes and getting his favor.

நயத்தகு, [*a change of* நயக்கத்தகு.] Pleasing; gratifying. (*p.*)

நயகுணம், *s.* Excellent disposition, நற்குணம். (*p.*)

நயகுணன், *s.* A good man, a man of excellent disposition.

நயச்சொல், *s.* Pleasantry, pleasing or humorous words with a smile, புன்னகைச்சொல். 2. Compliment, flattery, இச்சகம். 3. Complaisance, civility, affability, முகமன்வார்த்தை. 4. Wheedling, attractive or winning talk, இன்சொல்.

நயந்துகேட்க—நயந்துசொல்ல, *inf.* To solicit or request earnestly.

நயந்தோர், *s.* Friends, மித்திரர். (*p.*)

நயப்பு, *v. noun.* Cheapness, மலிவு. 2. Improvement, advancement, இலாபம். 3. Superiority, முதற்றரம். 4. Delight, pleasure, சந்தோஷகரம். 5. Desire, ஆசை. 6. Affection, love, அன்பு.

நயப்புணர்வு, *s.* Kindness, favorableness of disposition, grace, கண்ணோட்டம்; [*ex* உணர்வு.] (சது.)

நயப்பிக்க, *inf.* [*causa.*] To induce desire, விரும்பும்படிசெய்ய. 2. To persuade, to induce consent, compliance or approval, சம்மதப்படுத்த. 3. To render cheap, to cheapen, நயப்படுத்த. 4. To improve, to benefit, பயன்படுத்த.

நயமாலி, *s.* Red orpiment, மனோசிலை.

நயம், *s.* Cheapness, மலிவு. 2. Goodness, excellence, நன்மை. 3. Pleasure, gratification, delight, இன்பம். 4. Benefit, profit, advantage, gain, பயன். 5. Superiority, மேன்மை. 6. Preference in the touch of one kind of gold, or silver, over another, மாற்றுநயம். 7. Civility, attention, courteousness, உபசரிப்பு. 8. Propriety, decorum, decency, rectitude, equity, நீதி. 9. Attractiveness, இதம். 10. Abundance, மிகுதி. —Two excellencies or நயம் are requisite in a lecture or in a writing, as சொன்னயம், pleasingness of speech or words, and பொருணயம், excellence of meaning.

இளங்கிளியைப்போலேநயமாகப்பேசுகிறாள். She speaks as delicately as a young parrot.

நயங்காட்ட, *inf.* To coax.

நயநஷ்டம், *s.* Gain and loss, advantage and disadvantage.

நயபயம், *s.* Kindness, blended with reproof.

நயப்பாடு, *v. noun.* Advantage, profit, benefit, பலன். 2. Superiority, excellence, மேம்பாடு. (*p.*)

நயமாக, *inf.* To become cheap.

நயம்பண்ண, *inf.* To do a favor.

நயமாய்வாங்க, *inf.* To buy cheap.

நயமும்பயமுமாய், With alluring and threats.

நயம்பாட, *inf.* To sing sweetly.

நயம்பேச, *inf.* To speak pleasantly, courteously; also used for the sound of the strings of a guitar, &c.

நயவசனம்—நயவார்த்தை, *s.* [*sometimes* நயவசனிப்பு.] Enticing words.

நயவஞ்சகம், *s.* Fraud under guise of friendship.

நயவர், *s.* Friends, சினேகிதர்; [*ex* நய, *v.*]

*நயனம், *s.* Eye, கண். W. p. 455. Nayana.

நயனகஸ்தூரி, *s.* A medicine for the eye.

வார்த்தையிலேநயனகஸ்தூரியாயிருக்கிறான். His words are like medicine for the eyes; i. e. pleasant and refreshing.

நயனகாசம், *s.* A film over the eye.

நயனசைகை, *s.* Alluring by the eyes.

நயனதீட்சை, *s.* Occular illumination of an advanced disciple, by the guru, or deity. See தீட்சை.

நயனபாஷை, *s.* Language of the eyes, கண்பயில்.

நயனப்பார்வை, *s.* An amorous look. 2. Sight.

நயனப்பத்து, *s.* A poem in praise of the eyes of a lady, in ten verses, ஓர்பிரபந்தம்.

நயனரோகம்—நயனவியாதி, *s.* Disease of the eye.

நயனவிதி, *s.* The science that treats on diseases of the eye, their remedies, &c., கண்வைத்தியம்.

நயனவிதியெண்ணெய், *s.* [*prov.*] Oil with various ingredients for anointing the head before bathing; deemed good for the eyes.

நயனவீடு, *s.* Communicating sight to an idol, by prescribed rites with sacred fire, விக்கிரகத்துக்குக்கண்திறத்தல்.

நயன், *s.* [*poetic form of* நயம்.] Good profit, pleasure, joy, &c., as நயம். (சது.)

*நயிச்சியம், *s.* Lowness, inferiority, &c. See நைச்சியம்.

*நயிஷ்டிகம்—நயிட்டிகம், *s.* Very strict observance of rites. See நைஷ்டிகம்.

நயிந்தை, *s.* [*Malayalim.*] The master of a slave, among some castes, நாயன். 2. A title or term of respect among some castes, ஓர்பட்டப்பெயர்.

நயினார், *s.* [*a change of* நாயனார்.] A lord, a master, ஆண்டவன். 2. The master of a slave, a feudal lord, எசமானன். 3. (*R.*) The titular god, ஐயனார்.

*நரகம், *s.* Hell, the infernal regions, including 280 millions of places of torture of various description, பாதலம். (*c.*) 2. Abyss of the seven nether worlds, நிரயம். W. p. 455. Naraka.—The seven chief hells, are: 1. அள்ளல், a hell of mud. 2. இரௌரவம், a horrible hell. 3. கும்பிபாகம், a hell where persons are baked as pots. 4. கூடசாலம். 5. செந்துஸ்தானம், a hell of torture by worms. 6. பூதி. 7. மாபூதி.

நரகத்திலேவிழுவான். He will fall into hell. [*a curse.*]

நரகப்பிராப்தியானான். He is suffering the pains of hell.

நரககதி, *s.* One of the four races of beings, that of the nether worlds.

நரகக்குழி, *s.* The pit of hell. (*c.*)

நரகச்சுற்று, *s.* As நரகவட்டம்.

நரகபாதாளம், *s.* Hell as an abyss, ஆழ்நரகம்.

நரகப்பிறப்பு, *s.* As நரககதி. (*c.*)

நரகர், *s.* (*plu.*) Inhabitants of the nether world.

நரகவட்டம், *s.* The ranges of the seven different hells, each composed of a distinct element, 1. தமப்பிரபை, region of a pervading and an intense darkness. 2. இமப்பிரபை, region of intense cold. 3. தூமப்பிரபை, region of thick smoke. 4. வாலுகப்பிரபை, region of sand, or sand-baths. 5. சாகரப்பிரபை, region of perpetual wakefulness. 6. இரத்தப்பிரபை, region of blood. 7. அழற்பிரபை, region of fire.

நரகவாசிகள், *appel. n.* The inhabitants of hell.
நரகவாய், *s.* The mouth of hell, நிரய வாய். 2. [*for* நரகல்வாய்.] The anus, குதம்.
நரகவேதனை, *s.* The pains of hell. (*c.*)
நரகன், *s.* An inhabitant of hell, நர கத்திலுள்ளோன். W. p. 455. Naraka.

நரகல், *s.* Excrement, chiefly of men, dogs, cats, &c., மலம். 2. Any thing disgusting or offensive to the sight, அசுத்தம்; [*ex* நரகம்.] (*c.*)
கிண்டக்கிண்டநரகலும். If you stir excrements, they will give a bad smell.
நரகலிக்க, *inf.* [*prov.*] To lie in, or be defiled with, excrement, as a puking child or sick person, அழுக்குடைத்தாக.

*நரகன், *s.* The name of a Titan, இரா சுரன். 2. See நரகம்.
நரகாசுரன், *s.* As நரகன்.
நரகாந்தகன்—நரகாரி, *s.* Vishnu, விட்டுணு; [*ex* அந்தகன், or அரி, destroyer.]

நரகாலி, *s.* A disease in cattle, a kind of tumor in the intestines, extending to the liver, ஆமொரெருக்குவருமோர்நோய்.

நரகு, *s.* [*poetic form of* நரகம்.] Hell.

நரங்கு, கிறேன், நரங்கினேன், வேன், நரங்க, *v. n.* [*also* நாரங்கு.] To be deficient in growth, to decay, to grow lean—as a child; to fail, as business, concerns, a harvest, &c., தேய்கடையாக. (*c.*)
நரங்கடிக்க, *inf.* To destroy, cause to destroy.

நரந்தம், *s.* Fragrance, pleasant odor, வாசனை. 2. Musk-cat, கஸ்தூரிமிருகம். 3. Orange, நாரத்தை, Citrus aurantium. 4. A crow, காக்கை. (சது.)

நரம்பு, *s.* Vein, artery, any blood vessel, any duct of the body, இரத்தநரம்பு. 2. A cat-gut-string of a musical instrument, as of a guitar, fiddle, &c., தந்தி. 3. Tendon, ligament, muscle, nerve, தசைநார். 4. Fibre in some fruits, also between the husk and shell of a cocoanut, நார். 5. Fibre, filament of leaves, tendril of a vine, &c., இலைநரம்பு. 6. String of a bow or of a similar machine used to beat cotton for carding it, வின்னாண்முதலியன. 7. Continuation of the stem through the jack-fruit, custard-apple, &c., பழத்தினுள்நரம்பு. (*c.*) 8. (*R.*) The pulse, நாடி.—For the ten நரம்பு, see நாடி. As an adjective it is changed to நரப்பு in poetry.
நரம்பெழுபத்தீராயிரம். The arteries, veins, nerves, &c., are 72,000.
நரப்புக்கருவி, *s.* A stringed instrument, யாழ்முதலியன.
நரப்புக்கருவியாளர் — நரப்புக்கருவியை க்கொளுத்துவாக்கள், *s.* (*plu.*) Fiddlers, players on stringed instruments, lutists.
நரம்பன், *s.* [*fem.* நரம்பி.] An emaciated person whose veins stand out, நரம் பெழுமுடம்பன். 2. A thin, meagre person, மெலிந்தோன். (*c.*) 3. [*prov.*] Tobacco leaf in which the fibres are prominent, ஓர்வகைப்புகையிலை.
நரம்பினுதம் — நரம்பினோசை, *s.* The sound of the string of a musical instrument.
நரம்புக்கயிறு, *s.* Cords sewed into the seams of a sail-cloth. 2. As நரம்பு, 2.
நரம்புக்காய், *s.* A long thin fruit, as that of the முருங்கை.
நரம்புச்சிலந்தி, *s.* [*sometimes* நரப்புச் சிலந்தி.] A long slender worm between the skin and muscles, guinea worm, இர்புண். (*c.*) 2. Boil on a nerve.
நரம்புச்சுளுக்கு, *s.* Contraction of a ligament, or muscle. See சுளுக்கு.
நரம்புபற்ற, *inf.* To become meagre, emaciated.
நரம்புப்பிடிப்பு, *v. noun.* Cramp, spasm, convulsion, contraction of a muscle.
நரம்புபுடைத்தல், *v. noun.* Swelling of the veins, becoming prominent as the veins from straining or over-fulness as in singing, &c., or of a pregnant woman.
நரம்புமுடக்கம், *s.* Contraction of the nerves.
நரம்புவாங்க — நரம்பெடுக்க, *inf.* To take off the fibres from leaves, fruits. &c. 2. To cut the tendons of the feet; *used in anger.* 3. To oppress one. 4. To contract.
நரம்பிசிவு, *s.* A spasm of the nerves.

*நரர், *s.* [*pl. of* நரன், which see.] Men.

நரலு—நரல், கிறது, நரன்றது, நரலும், நரல, *v. n.* To sound, to roar, to rush, ஒலிக்க. 2. To sound as crows in cawing; to hum, பலர்கூடியொலிக்க. (*p.*)
நரல்வு, *v. noun.* Sound, roar, buzz, &c. 2. An internal sound of the bowels, &c., உள்ளோசை.

நரலை, *s.* Sea, as roaring, கடல்; [*ex* நரல், *v.*]

நரல், *s.* Dry rubbish, as straws, dead leaves, twigs, &c., செத்தை. (சது.) 2. [*prov. for* நர். *com.* நரர்.] People, சனம்.

நரவலி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* [*prov.*] To wait long under great weariness, சோர.

நரற்று, கிறேன், நரற்றினேன், வேன், நரற்ற, *v. n.* To sound; to produce a sound by striking or touching, ஒலிக்க. (சது.)

*நரன், *s.* A man, a human being, மனி தன் [*plu.* நரர், நரர்கள்.] 2. Arjuna, அருச்சுனன். W. p. 455. Nara.
நரகரி, *s.* Vishnu. See நரவரி.
நரசிங்கம்—நரசிங்கமூர்த்தி, *s.* Vishnu in his fourth incarnation as man-lion or Narasingha. See திருமாலவதாரம்.
நரசிங்கராச்சியம், *s.* The Narasingha country, whose capital was Vijayanagaram or Bisnagur.
நரசீவன், *s.* A human being. (*c.*)
நரசீவதயாபரர் — நரதயாபரர், *s.* The benevolent God, as gracious to men.
நரதுதி — நரஸ்துதி, *s.* Adulation of great men, மானிடப்புகழ்ச்சி.
நரதேவன் — நரேந்திரன், *s.* A king, a sovereign, அரசன். W. p. 455. Naradeva.
நரத்துவம், *s.* Human nature, மனுஷீ கம்.
நரநாராயணர், *s.* [*Hon.*] A name of Vishnu, in his incarnation as two sages, நரன் and நாராயணன், afterwards as Vishnu and Arjuna.
நரபதி, *s.* A king as lord of men. 2. (*R.*) A title of the king of Bisnagur.
நரபலி, *s.* A human sacrifice, regarded as peculiarly acceptable to Kali and other ferocious deities, மனிதபலி.
நரபாலன், *s.* A king, அரசன்; [*ex* பா லன், protector.]
நரப்பிரதிஷ்டை, *s.* One of the three species of consecration, that performed by men, மனிதர்செய்யும்பிரதிஷ்டை. See பிர திஷ்டை.
நரமடங்கல், *s.* Vishnu, as நரசிங்கம்; [*ex* மடங்கல், lion.]
நரமாமிசம், *s.* Human flesh.
நரமாமிசபட்சணம், *s.* Cannibalism.
நரமாமிசபட்சணி, *appel. n.* An eater of human flesh, a cannibal.
நரமேதம், *s.* (*St.*) A human sacrifice; [*ex* மேதம்.]
நரவரி, *s.* (*St.* நரஹரி.) Vishnu, as நரசிங்கம்; [*ex* அரி, lion.]
நரவாகனம், *s.* A palankeen as supported by men, சிவிகை. 2. A man as the vehicle of Kuvera, குபேரனேச்சுமப் போன்.
நரவாகனன், *s.* Kuvera, as borne by a man, குபேரன்.
நராதிபன், *s.* A king, அரசன்; [*ex* அதி பன்.]
நராயணன், *s.* Vishnu, விஷ்ணு. See நாராயணன்.
நராவதாரம், *s.* Incarnation in human form.
நரேசன்—நரேசுரன், *s.* A lord of men, a king, இராசன்.
நரேந்திரன், *s.* A king in general. See நரதேவன். 2. A particular king.

நரா, *s.* [*prov.*] Hardness in fruits through blight or injury, கன்றிப்போதல்.
நராப்பற்ற — நராப்பிடிக்க, *inf.* To become hard as an injured part of a fruit.

நராங்கு, *v. n.* [*prov.*] To be stunted—as a person, plant, &c. See நரங்கு.

நராந்தம், *s.* [*change of* நரந்தம்.] A crow, காக்கை. (சது.)

*நராபோகம், *s.* [*prov.*] Unexpected felicity happening to one, நினைத்திராதவாழ்வு பெறல்; [*ex* நரன்.]
நராபோகஞ்சிலாபோகம். Remarkable honor coming unexpectedly.

நராலை, *s.* Hell, நரகம்; [*ex* நரன் *et* ஆலை.] (சது.)

நரி, *s.* A jackal, a fox, ஓரி. 2. [*in cant,* குழூஉக்குறி.] A tiger, புலி; குட்டிநரி, a young jackal; குள்ளநரி; a short jackal; பெருநரி, a tiger; குழிநரி, நுழைநரி, வளைநரி, a fox.
நரிவாலைக்கொண்டோகிணறுழம்பார்க்கிறது. Can a well be fathomed with the tail of a jackal?
இவனுக்குஅவன்நரிகாட்டுகிறான். He acts the fox toward him.
எங்கும்நரிஓடுகிறது. It is over-run with jackals; i. e. desolate.
நரிநிறமாயிருக்கிறான். He is shy, insincere.
நரிக்காய்ச்சி, *s.* [*prov.*] A palmyra tree bearing fruit of a dim colour, ஓர்வ கைப்பனை.
நரிக்குழி—நரிவளை, *s.* A fox-hole.

நரிக்கொம்பு, s. Small bud-like horns in a jackal, of rare occurrence—said to be very efficacious in magic.

இவன்கையில்நரிக்கொம்பிருக்கிறது. He has in his hand a jackal's horn; i. e. he fascinates.

நரிக்கொன்றை, s. A shrub, Cassia javanica, L.

நரிப்பயம், s. Dread of a tiger.

நரிப்பயறு, s. A wild kind of pea, Paseolus trilobates, L.

நரிப்பய்யன், s. A little boy. (R.)

நரிப்பள்ளம், s. Holes in a river. 2. Pools in the bed of a river whose stream is dry.

நரிப்பாகல், s. A kind of winding plant with bitter fruit, Momordica charantia. See பாகல்.

நரிமருட்டி—நரிமெருட்டி, appel. n. A shrub, இருஇறுப்பை, Crotalaria.

நரிமிரட்டுதல், v. noun. Smiling as small babes in sleep, attributed to a jackal's diversion. (c.)

நரிமுருக்கு, s. An inferior kind of Erythrina. 2. A kind of paddy, நெல்.

நரியனொல், s. A kind of paddy, ஒரு வகைநெல்.

நரியன், s. A cunning fox, குதன். 2. A dwarf, குள்ளன்.

நரியிலந்தை, s. A tree, a variety of இலந்தை, Zizyphus.

நரிவாற்புல், s. A grass, Dactylis spicata, Koen.

நரிவிளா, s. [com. குட்டிவிளா.] A shrub, Feronia—as கிலவிளா.

நரிவெங்காயம், s. A plant, Erythronium Indica.

நரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To be startled, confounded, பிரமிக்க. 2. v. a. To deride, to despise, இகழ்க்க. (p.)

நரிப்பு, v. noun. Derision, contempt, இகழ்வு. (சது.)

நரிப்புறம், s. The fifth lunar mansion, மிருகசீரிடம். (சது.)

நரிவெருத்தலையார், s. One of the professors of the Madura College; nothing is known of him but his impromptu on the Cural, ஓர்சங்கப்புலவர்.

நருக்கல், s. Any thing crushed, bruised, mashed, broken to pieces, நசுக்கல். 2. [prov.] A severe and dangerous pain in the vitals, ஓர்வயிற்றுவலி; [ex நருக்கு.]

நருக்காணி, s. The state of being small and stunted, as a boy or girl, சசிவு. See நசுக்காணி. (c.)

நருக்கு, கிறேன், நருக்கினேன், வேன், நருக்க, v. a. To mash, to bruise, to crush or grind to pieces; to break with the teeth, நசுக்க. (c.)

நருக்கலாயிருக்க, inf. To be ill. (R.)

நருக்கற்குத்து, s. [prov.] Pain in the vitals, as நருக்கல்.

நருக்குப்பிருக்கல் — நருக்குப்பிருக்கு, s. That which is not entirely bruised, மசிந்தும்மசியாததுமானப்பு. (c.)

நருக்குப்பிருக்கென்றிருத்தல். Said of a house, or town, in which there is much sickness.

நருக்கெனல், v. noun. Suddenness, abruptness, promptness, விரைவுக்குறிப்பு. (c.)

நருக்கென்றுசெய். Make haste and do it at once.

நருங்கு, கிறேன், நருங்கினேன், வேன், நருங்க, v. n. To be mashed, bruised, crushed to pieces; to be ground or broken with the teeth, நசுங்க.

நருக்கித்தலை. Mash it well.

நருநருத்தல் — நறநறத்தல், v. noun. Feeling sand or grit in the mouth with food, as நெறநெறத்தல். (c.) 2. [prov.] Being slight, said of fever, &c., அற்பமாதல்.

நருநருத்தகாய்ச்சல், s. Slight fever.

நருநரெனல், v. noun. Having grit in the mouth with food, as நெறநெறவெனல்.

நருபிருத்தல் -நருபிரென்றிருத்தல், v. noun. Being dirty, filthy, disgusting, abominable, அசங்கியமாதல். 2. That which is not well bruised, இருவல்நருவலாயிருத்தல். (Jaffna usage.)

நருபிருத்தசாப்பாடு, s. Detestable, disgusting, unclean food.

*நருமதை, s. The Nerbudda river, ஓர் ஆறு. W. p. 456. Narmmada. See நதி.

நருமு—நரும்பு, கிறேன், நருமினேன், வேன், நரும, v. a. [also நறும்பு.] To gnash or grind the teeth, பற்கடிக்க. 2. To crush between the teeth, பல்லால்நசுக்க. (c.)

நருவல்நொருவல், s. [prov.] That which is coarsely broken, as grain; granulated, either in powder or in liquids, இரு வல்நருவல். 2. Being clotted, as stools, மலம்இறுகல்.

நருவாணி, s. [prov. for நருக்காணி.] Stuntedness.

நருவியுப்பு, s. A salt, ஒருப்பு.

நருள், s. [vul.] People, சனம். See நரல்.

நருள்பெருத்தஇடம். A place thick of people.

*நரேசன், s. A king. See நரன்.

நரை, s. Whiteness, an ash-color, greyness, வெண்மை. 2. Hoariness of age. See சரை. 3. Faintness of color, மங்கல்நிறம். (c.) 4. A bull; chiefly a white one, இடபம். 5. Taurus of the Zodiac, இடபவிராசி. 6. Chowrie or whisk of hair of the bos grunniens. See சாமரம். 7. A heron, நாரை.

பித்தநரை, s. Premature greyness occasioned by disease. See பித்தம்.

நரைகாணுதல், v. noun. The appearance of grey hairs.

நரைதிரை, s. Hoariness and wrinkles. See திரை.

நரைதிரையுப்பில்லாமை, v. noun. Exemption from wrinkles and hoary age.

நரைத்தலை—நரைமயிர், s. Hoary head.

படைகெட்டோடுகையில் நரைமயிர் பிடுங்குகிற தோ. When the army is fleeing before the foe, is it a time to pluck out grey hairs?

நரைமாடு, s. A greyish or ash-colored ox, cow, &c.

நரையன், s. [prov.] A person with white or sandy hair, நரைத்தவன். 2. A person prematurely grown grey, பருவ மின்றிநரைத்தவன். 3. A greyish beast, வெள் ளைமிருகம். 4. A kind of hawk, வல்லூறு.

நரை, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To grow grey, to become pale or whitish, மயிர்வெளுக்க. 2. To fade as standing corn or vegetables from drought, &c., வெளிற. 3. To be faint or pale in color, நிறம்வெளுக்க. (c.)

நான்நரைத்துப்போனேன் — எனக்குநரைத்துப்போ யிற்று. I am grown grey.

உமக்கென்னவயதுக்குநரைத்ததோ மயிருக்குநரைத்த தோ. Are you grey by age, or is your hair merely turned white?

நரைத்தகிழவன், s. A grey old-man.

நரைத்தவன், appel. n. A grey-headed man.

நரைத்ததலை, s. A hoary head.

நரைத்தபயிர், s. A faded crop.

நரைக்கொள்ளு, s. A kind of plant, சிக்சோழி, Dolichos, L.

நரைச்சல், s. [vul.] Faded color and quality of growing crops, vegetables, &c. not flourishing, வெளிறினதன்மை.

நரைச்சற்கீரை, s. Pale or faded greens.

நரைச்சற்பயிர், s. As நரைத்தபயிர்.

நரையான், s. A heron, செங்கானை. 2. [prov.] A small insignificant thing as a child, &c., சின்னது. [in derision.]

நரையான்கட்டிலேயகப்பட்டான். He was obstructed by the flight of a heron.—Note. The flight of a heron from right to left across the path of one setting out on a journey is thought inauspicious.

சாம்பல்நரையான், s. As சாம்பனை.

நல, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To become better, to take a favorable turn, நன்மையாக; [ex நலம்.] (p.)

நலப்பு—நலவு, v. noun. [prov.] Goodness, benefit, நன்மை. 2. Success, efficacy profit, சித்தி.

நலக்கு, கிறேன், நலக்கினேன், வேன், ந லக்க, v. a. To deprive of stiffness, or firmness, to make soft and pliant—as cloth, or paper by handling, கசக்கச்செய்ய. 2. To soil slightly; to sully, to tarnish, அழுக்காக்க. (c.)

நலங்கு, s. A ceremony of anointing the bride and bridegroom, the day before marriage, with oil, turmeric, the powder of பச்சைப்பயறு, and சீயக்காய், (with இடுதல்)—மணத்துக்கிடுநலங்கு; also நலங்குமா. (c.) 2. A macerated mass, அரைத்தகுழம்பு. 3. A medicine applied to the small-pox pustules, வைசூரிபுண்ணுக்கிடுமருந்து.

நலங்கிட, inf. To perform the ceremony of anointing with நலங்கு.

நலங்குபூச, inf. [prov.] To daub a mixture of ground margosa leaves, green turmeric, &c., on persons recovering from the small-pox.

நலங்கு, கிறேன், நலங்கினேன், வேன், ந லங்க, v. n. To lose stiffness, as cloth, &c. —as நலக்கு, v. 2. To grow faint as a child by the heat of the sun, பிள்ளைசோர. (c.)

நலம், s. A good, a benefit; efficacy, virtue, goodness—oppos. to இன்பம், நன் மை. 2. Beauty, fairness, handsomeness, அழகு. 3. Welfare, advantage, profit, utility, பயன். 4. Favor, kindness, உபகாரம். 5. Delight, pleasure, gratification, இன்பம். 6. Connivance, partiality, favoritism, indulgence, கண்ணோட்டம். (சது.) 7. (Beschi.) Testicle of a bull or buffalo, விலங்கின்விதை. 8. Excellence, உயர்வு. 9. Dried ginger, சுக்கு.

நலச்சூடு, *s.* Brand on a beast.

நலஞ்சுட, *inf.* To geld a bull and brand the lacerated part.

நலந்தட்ட—நலமெடுக்க-நலம்அடிக்க-நலம்நசுக்க, *inf.* To castrate in the Indian mode by mashing the testicles; to geld, emasculate.

நலப்பாடு, *v. noun.* [*prov.*] Goodness, excellence, நன்மை. 2. Advantage, profit, ஆதாயம். 3. Good fortune, அதிஷ்டம்.

நலப்புண், *s.* Sore of the brand, on a beast's testicles.

நலமாய்வாங்க, *inf.* To buy cheap, நயமாய்க்கொள்ள. 2. To get back what is lent, &c., without difficulty.

நலமானகாலம், *s.* A time of utility, profit, expedience.

நலமிளப்பம், *s.* Good and evil, whether natural or moral.

நலம்பொலம், *s.* Good and evil. (*c.*)

அரைநலவன், *s.* A bull partly castrated.

நலன், *s.* [*poetical change of* நலம்.] Good, &c.

நலி, *s.* Suffering, disease, நோய். (சது.)

நலி, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To waste, to pine away, மெலிய. 2. To yield before a foe, தோற்க. (சது.) 3. To slide, roll or fall down, சரிய. 4. To perish, அழிய. 5. To suffer, to be in distress, வருந்த. 6. *v. a.* [*vul.*] To afflict, to distress, வருத்த. அவன்குடும்பம் மெத்தவும்நலிந்துபோயிற்று. His family became impoverished.

நலிதல், *v. noun.* [*in gram.*] One of the three variations in the articulation of letters, viz. எடுத்தல், படுத்தல் and நலிதல். 2. A sliding, சரிதல். 3. Growing thin, மெலிதல்.

நலிதலோசை, *s.* The middle accent.

நலிவு, *v. noun.* Suffering, destruction, &c., *as the verb.*

நல்—நல்ல, *adj.* [*in combin. before* க, ச, த, ப, *changed to* ற் *and commonly before* ம *to* ன்.] Good, excellent, beneficial, eminent, நன்மையான. 2. Acceptable, desirable, agreeable, ஏற்ற. 3. Abundant, copious, மிகுந்த. 4. Much, intense, அதிகமான. 5. Auspicious, propitious, fortunate, நன்னிமித்தமுள்ள.—*Note* It is sometimes combined with words of bad meaning to show intensity, as நல்லகள்ளன், a consummate thief.

நல்லகாயம், *s.* Severe wound.

நல்லகாய், *s.* Abundant fruit, மிகுகாய். இந்தத்தடவைநல்லகாய். The crop of fruit this time is abundant.

நல்லகாலம், *s.* A propitious time; also நற்காலம்.

நல்லகுணம், *s.* Good temper, a benevolent, amiable disposition; also நற்குணம். நல்லகுணத்தோடேகொடு. Give, or pay freely.

நல்லசடம், *s.* A healthy constitution, சுகசரீரம்.

நல்லசமயம், *s.* A good season, a favorable opportunity.

நல்லசரக்கு, *s.* Superior goods, &c. See நற்சரக்கு.

நல்லசனனம், *s.* A good birth. (*Meton.*) One blessed with a tendency to freedom from transmigration, and who employs his birth to obtain salvation.

நல்லசா, *s.* A good or auspicious death; not untimely, &c.; also நற்சா.

நல்லசாமம், *s.* Midnight, dead of night, நடுச்சாமம்.

நல்லசெய்கை, *s.* A good, approved, or virtuous action.

நல்லஞாபகம், *s.* As நல்லநினைப்பு.

நல்லதண்ணீர்—நல்லசலம், *s.* Fresh, potable water.

நல்லதண்ணீர்க்கடல், *s.* The sea of fresh water.

நல்லதம்பிரான், *s.* [*prov.*] The hooded snake, regarded as a deity, நல்லபாம்பு.

நல்லதரம், *s.* The first quality.

நல்லதனம், *s.* Friendly words, mildness, &c.

நல்லதனம்பண்ண, *inf.* To pacify.

நல்லது, *appel. n.* [*pl.* நல்லவை.] That which is good, well, very well, நன்மையானது.

நல்லதுசொல்ல, *inf.* To speak in one's favor. 2. To speak kindly. 3. To bid farewell.

நல்லதுதீயது — நல்லதுபொல்லாதது, *appel. n.* Any thing good or evil.

நல்லதுபண்ண, *inf.* To reconcile, gain one's friendship, make friends with one, propitiate one.

நல்லதேட்டம், *s.* Acquisition of property by fair means, நியாயமானசம்பாத்தியம். 2. Seeking benefits for the soul, ஆத்துமார்த்தம்.

நல்லத்தை, *s.* Father's sister.

நல்லநடத்தை, *s.* Good deportment, virtuous conduct.

நல்லநாள், *s.* An auspicious day. நல்லநாள்பெருநாள். A great day, a holy day.

நல்லநினைப்பு, *s.* A good memory.

நல்லபழக்கம், *s.* Good customs, habits, &c.

நல்லபாம்பு, *s.* The female cobra-de-capella, a very poisonous snake; the male is called சாரை and is nearly harmless.

நல்லபிறப்பு, *s.* As நல்லசனனம்.

நல்லபுத்தி, *s.* Good state of mind, good sense, good feeling, good understanding; also நற்புத்தி. 2. Politics; prudential, discreet measures; good policy, விவேகம். 3. Good instruction or advice, சற்போதனை.

நல்லப்பன், *s.* [*prov.*] A paternal uncle, தகப்பனோடுகூடப்பிறந்தவன்; *a domestic term.*

நல்லமத்தியானம், *s.* Exactly noon.

நல்லமரணம் — நன்மரணம், *s.* See நல்லசா.

நல்லமழை, *s.* Plentiful rain.

நல்லமனம், *s.* A benevolent mind, நன்மனது. 2. Good temper, amiable disposition, a well disposed mind, நற்குணம். 3. Candor; தூயசிந்தை; also நன்மனம்.

நல்லமாரி, *s.* [*prov.*] A good, rainy season.

நல்லமுகங்காட்ட, *inf.* To show a friendly face.

நல்லமுட்டாள், *s.* A blockhead, மந்தன். 2. A hasty, peevish, irritable person, மடையன்.

நல்லமுருங்கை, *s.* Hyperanthera Moringa, whose leaves and fruits are edible.

நல்லமை, *s.* [*prov.*] Goodness, merit, virtue, சற்குணம். 2. Kindness, civility, friendliness. See நன்மை.

நல்லம்மாள், *s.* [*prov.*] A maternal aunt, தாயின்சகோதரி.

நல்லம்மான், *s.* A mother's brother, or maternal uncle.

நல்லம்மான்பச்சரிசி, *s.* A plant, Euphorbia hypericifolia, *L.*

நல்லவர், *s.* (*plu.*) Friends, மித்திரர். 2. The learned, the holy, சான்றோர்.

நல்லவழி, *s.* A good way; the way to heaven, மோட்சவழி. 2. Virtuous conduct, நன்னடக்கை. 3. Good parentage, family, descent, &c., நற்குலம்.

நல்லவளம், *s.* A good opportunity, a favorable time, வசதி.

நல்லவன், *s.* [*fem.* நல்லவள்.] A good man.

நல்லவாசனை, *s.* A fragrant smell, as நற்கந்தம்.

நல்லவார்த்தை—நல்வார்த்தை, *s.* Friendly words, இன்சொல். 2. Blessing, benediction, ஆசிவசனம். 3. A word of approbation, உவந்தசொல்.

நல்லவிளைவு — நல்லவிளைச்சல் — நல்விளைவு, *v. noun.* A good crop, an abundant harvest.

நல்லவுடம்பு—நல்லுடம்பு, *s.* A healthy constitution, a body adapted to different habits.

நல்லவெயில், *s.* A hot sun.

நல்லவெல்லம், *s.* Jaggery, கருப்பங்கட்டி.

நல்லவேளை, *s.* A fortunate hour, a lucky time, அதிஷ்டகாலம். 2. A fortunate occurrence, escape, &c., attributed to chance, or more properly divine interposition, நற்சமயம். 3. [*also* நல்வேளை.] A plant, Cleome pentaphylla, *L.*—oppos. to நாய்வேளை. நல்லவேளைதப்பித்துக்கொண்டாய்.........You escaped the danger at a lucky time.

நல்லவை, *s.* A learned assembly, நற்சவை; [*ex* அவை.] 2. (*plu.*) Good things.

நல்லவையோர், *s.* (*plu.*) The society of the good, virtuous, learned. (*p.*)

நல்லறம், *s.* Virtuous life, virtue, morality, நல்நடக்கை.

நல்லறிவு, *s.* Good sense, சுபுத்தி. 2. Pious disposition, ஒழுக்கம். 3. Good instruction, நற்போதனை. 4. The name of a small work of forty verses, ascribed to Avvyar, ஓர்நூல்.

நல்லன், *s.* As நல்லவன். (*p.*)

நல்லா—நல்லான், *s.* A good cow, நற்பசு. (*p.*)

நல்லாவின்கன்று, *s.* The calf of a good cow.

நல்லாங்கு, *s.* Moral good, good as done to another, நன்மை—oppos. to பொல்லாங்கு. (*R.*)

நல்லாடை, *s.* Superfine or costly cloth.

நல்லாப்பு, *s.* [*prov. vul.*] Good as done to another, நன்மை. Compare பொல்லாப்பு.

நல்லாய்ச்சி, *s.* [*prov.*] A maternal aunt, or wife of a paternal uncle.

நல்லார், *s.* (*plu.*) The good, the pious—oppos. to பொல்லார். 2. (*p.*) Women, the fair, மாதர். 3. Learned men, அறிஞர்.

நல்லாள்—நல்லி, *s.* A woman, one of the fair sex, அழகுடையாள். 2. A woman, பெண். (*p.*)

நல்லாறு, *s.* Good conduct, as நன்னெறி; [*ex* ஆறு, way.] (*p.*)

நல்லீரல், *s.* The liver, especially of sheep.

நல்லுறவு, *s.* Nearly related, but beyond the first degree.

நல்லெண்ணெய், *s.* Sesamum oil, as more conducive to health than any other. See under எள்.

நல்லெழுத்து, *s.* Good luck, fate or fortune; as destined by heaven. 2. A fair hand.

நல்லொழுக்கம், *s.* Moral conduct—oppos. to தீயொழுக்கம். See ஒழுக்கம்.

நல்லோர், *s.* The good, as நல்லார்.

நல்லோர்பெரியோர். The good are great.

நல்வழி, *s.* A small work by Avvyar, ஓர்நூல். 2. A good method; also நல்லவழி.

நல்வாழ்வு, *s.* Happy life. 2. Happily married, spoken of a woman, இல்லறமகிழ்ச்சி.

நல்விதி, *s.* Good destiny as நல்லெழுத்து.

நல்வினை, *s.* Good action; the merit of good works in a former birth, enjoyed in the present—oppos. to தீவினை.

நல்வினைதீவினை. Good and bad actions; good and bad fate.

நற்கதி, *s.* Bliss, heaven, absorption—oppos. to துர்க்கதி.

நற்கந்தம், *s.* Agreeable odor, as நல்லவாசனை.

நற்கருணை, *s.* [*Chris. usage.*] Sacrament of the Lord's Supper. See கருணை.

நற்கருணைகொடுக்க—நற்கருணைபரிமாற, *inf.* To administer the bread and wine at communion. 2. To administer the Lord's Supper.

நற்கருணையெடுக்க—நற்கருணைவாங்க, *s.* To receive the Lord's Supper.

நற்கருமப்பயன், *s.* [*in poetry.*] Auspicious actions, as ploughing, marrying, &c. See கருமபூமிக்குரிமை.

நற்கலிதம்—நற்சங்கலிதம், *s.* A series of numbers. See சங்கலிதம்.

நற்கனவு, *s.* A good dream.

நற்கிரியைகள், *s.* Good works.

நற்கீர்த்தி, *s.* Good fame, good report, a good name, &c.—oppos. to துர்க்கீர்த்தி,

நற்குணம், *s.* As நல்லகுணம். 2. Good qualities requisite for a person, of which ten are given in சதுரகராதி; four relating to the mouth, such as—speaking truth, &c.; three, to the body, as worship and penance; and three to the mind, as gratitude and self restraint.

நற்குலம்—நல்லகுலம், *s.* Good caste.

நற்குறி, *s.* As நற்சகுனம்—oppos. to துற்குறி, 2.

நற்கோள், *s.* Benign planets, viz. Mercury (not in conjunction with the sun), Venus, Jupiter, and the moon in her increase—oppos. to தீக்கோள்.

நற்சகுனம், *s.* A good omen, favorable augury.

நற்சமயம், *s.* Good opportunity.

நற்சரக்கு, *s.* Undamaged goods, &c. See சரக்கு.

நற்சலாபம், *s.* A lucrative pearl-fishery.

நற்சாந்து, *s.* Mortar as distinguished from clay, often used in building. 2. Fine plaster, stucco, நற்சந்தனம்.

நற்சார்பு, *s.* A virtuous or religious tendency. See சார்பு.

நற்சாளை, *s.* A superior kind of சாளை fish.

நற்சீந்தில், *s.* A sweetish kind of சீந்தில் creeper. See சீந்தில்.

நற்சீரகம், *s.* Good cumin, as distinguished from black.

நற்சீர், *s.* A good state.

நற்செங்கல், *s.* Yellow ochre, used for dying the garments of the Saiva devotee, மஞ்சட்காவிக்கல். (சது.)

நற்செய்தி, *s.* Auspicious tidings, event, &c.

நற்பிரியம், *s.* Good will. 2. (*R.*) A shrub, ஓர்செடி, Pharniaceum, *L.*

நற்பெண்டு, *s.* (*for* நல்லபெண்டு.) A good woman.

நற்பெண்டுக்கொருசொல் நன்மாட்டுக்கொருசூடு. One word to a good woman, one branding to a good cow.

நற்றாய், *s.* One's own mother, as பெற்றதாய். (*p.*)

நன்காடு, *s.* A burning ground, சுடுகாடு. (*p.*)

நன்குரல், *s.* A well omened sound.

நன்கொடை, *s.* Donation, gratuity, benefaction, present, உபகாரவீகை.

நன்செய், *s.* [*vul.* நஞ்சை.] A rice field, நெல்விளைபுலம்.

நன்சொல், *s.* Compliment, civility in words, இன்சொல். 2. Good advice, profitable discourse, words of comfort.

நன்மக்கள், *s.* Good children, virtuous offspring. 2. The good, the virtuous, the eminent, சான்றோர். (நீதிநெறி.)

நன்மச்சான், *s.* [*vul. fem.* நன்மச்சினி.] Son of a mother's brother.

நன்மச்சினி, *s.* A female cousin, *properly* the daughter of a maternal uncle or aunt.

நன்மருகன்—நன்மருமகன், *s.* A man's sister's son, or a woman's brother's son, சொந்தமருமகன்.

நன்மருகி—நன்மருமகள், *s.* A man's sister's daughter, or a woman's brother's daughter, சொந்தமருகி.

நன்மனம், *s.* As நல்லமனம். (*R.*)

நன்மாதிரி, *s.* A good example; a good pattern or specimen, &c.

நன்மாமன், *s.* A maternal uncle.

நன்மாமி, *s.* A paternal aunt.

நன்மார்க்கம், *s.* Virtue, virtuous conduct, morality.

நன்முகம், *s.* Benignity; cheerfulness of countenance, pleasant looks, as நல்லமுகம்.

நன்மைத்துனன், *s.* [*fem.* நன்மைத்துனி.] A male cousin, *properly* son of a maternal uncle or aunt, நல்லம்மான்புதல்வன்.

நன்னடை, *s.* Good conduct, நல்லொழுக்கம்.

நன்னயம், *s.* Gratifying words, affability, இன்சொல். 2. Civility, politeness, complaisance, உபசிரம். 3. Goodness, நன்மை. (See நயம்.) 4. Thought, நினைவு. (*p.*)

நன்னருக்கல்—நன்னெருக்கல், *s.* [*prov.*] Slight, internal pains, as in the first stages of pregnancy, first labor-pains; also from hunger, indigestion, fever, &c., சிறுநோ. (*Jaffna usage.*)

நன்னலம், *s.* Excellence, eminence, மேன்மை. 2. Beauty, அழகு. (*p.*)

நன்னிலம், *s.* Good land, நல்லபூமி. 2. A rice field, நன்செய்.

நன்னிலை, *s.* Observance of a proper and prescribed course of conduct, நல்லொழுக்கம். 2. Religious austerities, தவம். 3. The world, உலகம். (சது.)

நன்னிறம், *s.* White, as being the simplest or purest color, வெண்மை. (*p.*)

நன்னிறத்தியல்பெனநாடினர்கொளலே. It must be understood that it is the nature of white color.

நன்னுதல், *s.* A damsel, a lady; (*lit.*) beautiful forehead, பெண்; [*ex* நுதல்.] (*p.*)

நன்னுதால், [*voc.*] O lady!

நன்னூல், *s.* A good book, or moral system. 2. A Tamil grammar by Pavananti, ஓரிலக்கணநூல்.

நன்னெறி, *s.* As நல்வழி. 2. A moral book of forty stanzas composed by சிவப்பிரகாசன், ஓர்நீதிநூல்.

நன்னெறிவழாதுநோற்பாள். A female who will not swerve from the right way.

நல்கு, கிறேன், நல்கினேன், வேன், நல்க, *v. a.* To desire, to long for, to lust after, விரும்ப. 2. To bestow, to grant, to be liberal, கொடுக்க. 3. To favor, to be propitious, கடாட்சிக்க. (*p.*)

நல்குரவு, *s.* Poverty, indigence, destitution, வறுமை. (சது.)

நல்கூரு — நல்கூர், கிறேன், நல்கூர்ந்தேன், வேன், நல்கூர, *v. n.* To be poor, indigent, destitute, வறுமைப்பட. (நல்வழி.)

நல்கூர்ந்தோன், *appel. n.* A poor man, எளியவன்.

நல்கூர்வேள்வியார், *s.* One of the professors of the Madura college. He appears from his surname to have been a brahman, சங்கப்புலவரில்ஒருவர்.

நல்லம், *s.* Black, dark, கறுப்பு. (சது.)

நல்லரிவஞ்சம், *s.* One of the six divisions of Swerga. See போகபூமி.

நல்லாதனார், *s.* A poet who flourished in the Agastyan age of Tamil literature. His epigrams said to have been approved by the Madura college, are collectively called திரிகடுகம், ஓர்ஆசிரியர்.

நவசி, *s.* [*prov.*] A kind of cocoa-nut tree of which the fruit has a tender shell, part of it edible, and reddish, ஓர்தெங்கு. 2. A kind of areca-tree, the fruit of which is redder than that of others, ஓர்கமுகு. (*Jaffna.*)

*நவச்சாரம்—நவக்ஷாரம், *s.* [*com.* நவாசாரம்.] Sal-ammoniac, chloride of ammonium. 2. A solder, a metallic cement, நவச்சாரப்பற்று; sometimes நவசாரம்.

நவச்சாரஉண்டை, *s.* Pills, the chief ingredient of which is sal-ammoniac.

நவச்சாரக்கிராணம், *s.* Volatile sal-ammoniac.

*நவதை, *s.* Newness, novelty, புதுமை. W. p. 457. NAVATA.

நவத்தம், s. A kind of grass. See சடாமாஞ்சி.

*நவப்பிரீதி, s. Salt-petre, வெடியுப்பு.

நவம், s. The cloudy season, August and September as applicable to North India, கார்காலம். 2. Friendship, சிநேகம். 3. Relative affection, கேண்மை. 4. The earth, பூமி. (p.)

*நவம், adj. Nine, ninefold, ஒன்பது. W. p. 457. NAVAN.

நவகணம், s. The nine classes of gods.

நவகண்டம், s. The nine divisions of the known continent. See கண்டம்.

நவகோடிசித்தர், s. The ninety-millions of *Siddhar*.

நவகோணம், s. A nonagon.

நவக்கிரகம், s. The nine planets of Hindu astronomy. See கிரகம்.

நவசத்தி, s. The nine female energies. See சத்தி.

நவசித்தர், s. The nine special *Siddhars*. See சித்தர்.

நவசிராத்தம், s. (*St.*) The first series of offerings made to brahmans on the first, third, fifth, seventh, ninth and eleventh days after a person's demise.

நவதாரணை, s. The nine classes of things established by art. 2. The nine forms of worship by Saiva Yogis. See தாரணை.

நவதாளம் — நவசந்திதாளம், s. The nine modes of drumming. See தாளம்.

நவதானியம், s. The nine kinds of grain oblations. See தானியம்.

நவத்துவாரம்—நவவாயில், s. The nine apertures of the body, கண், the two eyes; காது, the two ears; நாசி, two nostrils; வாய், the mouth; குதம், the anus; குய்யம், urinary orifice. (*c.*)

நவநாகம், s. [*in mythol.*] The nine huge serpents including ஆதிசேஷன். See நாகம். 2. Sison or Bishop's weed, ஓமம்.

நவநிதி, s. The nine gems or jewels. See நிதி.

நவபுண்ணியம், s. The nine charitable actions performed to a sacred guest: 1. எதிர்கொளல், meeting him on his approach; 2. பணிதல், doing him homage; 3. ஆசனத்திருத்துதல், seating him; 4. தாள்கழுவுதல், washing his feet; 5. அருச்சித்தல், presenting flowers; 6. தூபங்கொடுத்தல், offering incense; 7. தீபங்காட்டல், waving lamps; 8. புகழ்தல், praising him; 9. அமுதமேந்தல், serving food, as an act of homage and provision.

நவபேதம், s. The nine forms or transmutations of Siva according to the சித்தாந்தம் system: 1. சிவம். 2. சத்தி. 3. நாதம். 4. விந்து. 5. சதாசிவம். 6. மகேசுரன். 7. உருத்திரன். 8. விஷ்ணு. 9. பிரமா.

நவப்பிரேதம், s. Nine demons, whose protection is invoked by incantations towards the eight cardinal points, and one over head.

நவமஸ்கந்தம்—நவமம், s. The ninth section of Bhagavat.

நவமணி — நவரத்தினம், s. The nine gems. See இரத்தினம்.

நவமணிமாலை, s. A poem of nine verses in the அந்தாதி connexion, (*lit.*) the nine gemmed chain. See பிரபந்தம்.

நவமி, s. The ninth lunar day after the new or full moon. See திதி. W. p. 457. NAVAMI.

நவமுகில், s. The nine classes of clouds; each raining a year. See மேகம்.

நவரசம்—நவரதம், s. The nine passions, as expressed in poetry, dramatic action, &c. See இரசம்.

நவரத்தினம், s. See நவமணி.

நவராசிகம், s. Rule of nine.

நவராத்திரி, s. Nine nights of strict fasting, chiefly to Durga, who is said to have fought with Durgan an Asura nine days, and to have slain him on the night of the last. The fast begins on the first phasis of the new moon in September.

நவராத்திரிபூசை, s. The puja offered to Durga, Sarasvati and Lukshmi, three days each, in the nine days' fast.

நவராத்திரிவிரதம், s. The fast of nine nights.

நவலோகம், s. The nine metals. See உலோகம்.

நவவாஞ்ஞோர்கணம், s. [*R. C. usage.*] Nine angelic companies in heaven.

நவவியாகரணம், s. The nine divisions of Sanscrit grammar, of which two are said not to be now extant, வடநூலிலொன்பதுவகையிலக்கணம்.

நவாங்கிசம்—நவாமிசம், s. [*in astrol.*] A division of the rising sign into nine equal parts. See இலக்கினம்.

*நவம், s. Newness, freshness, புதுமை. 2. Uncommonness. (*Sa. Nava.*)

நவமென்ன. What news?

நவநாணயம், s. [*com.* புதுநாணயம்.] A new practice, innovation.

நவபாண்டம், s. A new pot. (*c.*)

நவநீதம், s. Newness, புதுமை. (*c.*) 2. (சது.) Fresh butter, புதுவெண்ணெய்.

நவநீதபாகம், s. [*in poet. compos.*] A very easy style, செய்யுளிநேர்நடை.

நவநீதசோரன், s. Krishna, as butter-stealer, வெண்ணெய்திருடியகிருஷ்ணன்.

நவமானகாரியம், s. An extraordinary occurrence.

*நவரோசு, s. A kind of tune, ஓரிராகம். (சது.)

நவாடா, s. (*Pers.*) A boat, a dhoney, தோணி. Compare நவ்வு.

நவியம், s. An axe, கோடரி. 2. A heated iron used in ordeals, மழு. (சது.)

*நவியம், s. Newness, novelty, புதுமை. (சது.) 2. A new thing, புதியது.

*நவிரம், s. Men's tuft of hair, ஆண்மயிர். 2. Crown of the head, உச்சி. 3. The head, தலை. 4. Peacock, மயில். 5. Mountain, மலை. 6. The minor lute of agricultural districts, மருதயாழ்த்திறம். 7. Sword, வாள். 8. Inferiority, a trifle, புன்மை. (சது.)

நவிர், s. As நவிரம் 1, 6, 7, which see. 2. [*prov.*] Grass, திரணம்.

மாடொருநவிருமெடுக்கவில்லை. The cow has not cropped a single blade.

நவிலு—நவில், கிறேன், நவின்றேன், வேன், நவில, v. a. To say, to tell, to utter, to declare, to pronounce, சொல்ல. 2. To learn, to study, to read, peruse, கற்க. (*p.*)

நவிலுவர், *appel. n.* [*pl.*] Speakers.

நவின்றோர்க்கினிமை, s. Gratifying to the reader, one of the ten beauties of style. See அழகு.

நவிறல்—நவிற்சி, v. noun. Utterance, learning, *as the verb.*

நவிழ், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To extinguish, அவிக்க. (சது.)

நவிற்று, கிறேன், நவிற்றினேன், வேன், நவிற்ற, v. a. To say, to speak, to declare, to pronounce, சொல்ல. 2. To declare or pronounce with authority, அதிகாரத்தோடுரைக்க; [*ex* நவில்.] (சது.)

*நவீனம், s. Newness, novelty, புதுமை. W. p. 457. NAVÎNA.

நவுக்கர், s. (*Pers.*) A servant, வேலையாள்.

நவுதல் — நவுந்துபோதல், v. noun. [*prov.*] Becoming soft, becoming soddened by boiling; being wearied as the limbs by labor, தளர. 2. Being rotten, or decayed, as clothes, books, wood, மக்கிப்போக.

நவுரி, s. (*Tel.*) A trumpet, எக்காளம், (*R.*)

நவை, s. Blemish, defect, fault, crime, offence, evil, குற்றம். 2. Disgrace, meanness, இகழ்ச்சி. (சது.)

நவ்வல், s. The nâwel tree, Syzygium Jambolanum. See நாவல். (*c.*)

நவ்வி, s. A boat, a dhoney, தோணி. See நவ்வு. 2. Youth, tender age, இளமை. 3. Beauty, handsomeness, அழகு. 4. A deer, மான். 5. The thirteenth lunar asterism, அத்தநாள். (*p.*)

*நவ்வு, s. A boat, a vessel, a ship, மரக்கலம். W. p. 489. NAU. Gr. Naus; L. Navis; *hinc.* E. Navy.

நவ்வுசவ்வு, s. [*in combination, more prop.* நவைசவை.] Good and evil, good and evil results, இதாகிதம்; *also* நழுவுசளுவு.

நவ்வுசவ்வறியாதவன். One who knows not good or bad.

நழுக்கம், s. [*prov.*] Shallowness of a dent, an impression, furrow, &c., ஆழமின்மை. 2. Bluntness, as of a point, மழுக்கம்; [*ex* நழுக்கு.]

நழுக்கு, கிறது, நழுக்கினது, ம், நழுக்க, v. a. [*prov.*] To pound paddy or rice coarsely, அரிசியைநழுக்க. (*c.*) 2. To blunt, to dull, to level, மழுக்க. 3. To make a shallow furrow, dent or impression, குழிக்க.

நழுங்கு, கிறேன், நழுங்கினேன், வேன், ங்க, v. n. [*prov.*] To become blunted, as a point, to be dull, மழுங்க. 2. To be ploughed with shallow furrows, to be written or engraven with too faint an impression, குழிய.

நழுவு, கிறேன், நழுவினேன், வேன், நழுவ, v. n. To slip out of the hand, or from under the foot—as an oily or lubricous thing; to slip down, fall off, as a garment, வழுவ. 2. To come off, as hair, விழ. 3. To steal or skulk away; to elude, to escape, விலக. 4. (*fig.*) To evade, to shift, to give an indirect answer, to shuffle off, தப்பித்துக்கொள்ள. (*c.*)

நழுவல், v. noun. A slipping, evading, &c., *as the verb.*

காரியத்தைநழுவலிலேவிடாதே. Don't let the affair lie still.

நழுவலானபேச்சு, *s.* Shuffling talk.

நழுவி, *appel. n.* [*prov.*] One who gives an indirect answer, பிடிகொடாதவன்.

நழுவுவேன். I will escape—slip away.

*நள, *s.* The fiftieth year of the Indian cycle, as A. D. 1856. See வருஷம்.

*நளகூபரன், *s.* The son of Kuvera, குபேரன்மகன்.

நளம், *s.* [*prov.*] The நளவர் caste.

நளவன், *s.* [*fem.* நளத்தி.] A caste of toddy drawers, கள்ளிறக்குவோன். (*Jaffna.*)

நளம்பள்ளு, *s.* The நளவர் and பள்ளர் castes.

*நளம், *s.* The lotus, தாமரை. 2. One of the thirty-two சிற்பநூல். 3. Width, breadth, extent, அகலம். (சது.)

*நளன், *s.* One of the seven of the first class of kings famed for liberality; and hero of the Naishad'ha, முதலேழுவள்ளலி லொருவன். 2. A celebrated monkey, said to have built Adam's bridge for Rama and his monkeys to cross in going to Ceylon. W. p. 455. Nala.

நளபாகம், *s.* A dish well cooked, because நளன் cooked well.

நளி, *adj.* Thick, close together. 2. Broad. 3. Large, great.

நளி, *s.* Cold, frigidity, குளிர்ச்சி. 2. Closeness, thickness, as of leaves, செறிவு. 3. Crowd, multitude, கூட்டம். 4. Greatness, hugeness, பெருமை. 5. Width, breadth, extent, அகலம். 6. A scorpion, தேள். (சது.)

நளிர், *s.* Coldness, frigidness, குளிர். 2. A lobster, நண்டு. 3. Greatness, hugeness, largeness, பெருமை. (சது.) 4. Hatred, dislike,. பகை. 5. Ague, shivering fits, குளிர்காய்ச்சல்.

நளிர்சுரம், *s.* Fever and ague.

*நளினம். *s.* The lotus, Nelumbium speciosum, தாமரை. W. p. 456. Nalina. 2. (*c.*) Wit, pleasantry, jesting, joking, drollery, fun, இங்கிதம். 3. Irony, satirical language. நிந்தை. 4. Buffoonery, mocking, scoffing, ridicule, பரிகாசம்.

நளினக்கதை, *s.* Jesting, joking, fun. 2. Coaxing or flattering talk.

நளினக்காரன், *s.* A wag, a witty, humorous man. 2. A jester, a buffoon. 3. A mocker, a scoffer.

நளினச்சொல், *s.* Pleasantry, jocoseness, wit, drollery. 2. Ridicule.

நளினம்பண்ணுதல், *v. noun.* Joking, playing on words, punning. 2. Deriding, sneering, ridiculing, making sport of one.

நளினவார்த்தை, *s.* Wit, joking, ridicule.

*நளினி, *s.* Lukshmi, இலக்குமி. 2. A tank in which the lotus grows, தாமரைத் தடாகம். 3. A melody or musical mode, ஓர்பண்; [*ex* நளினம்.] (சது.)

*நளினை, *s.* Lukshmi, இலக்குமி.

நளுங்கு, *s.* The Armadillo, Manis brachyara, *L.* See அழுங்கு.

நளுத்தை, *s.* A class of tunes, ஓர்பண்.

நளுநொளுத்தல், *v. noun.* Being soft and mashy, to be yielding to the touch. See நொளநொளத்தல்.

நளை, *s.* The husk of the cardamom seed, ஏலத்தோல். (*R.*)

நள்—நள்ளு, *s.* The middle, medium, நடு. 2. Noon, மத்தியானம். 3. The twenty-second asterism, திருவோணம். (சது.) 4. A particle of intensity with words signifying darkness, used in poetry, மிகுதிப்பொரு டருமோரிடைச்சொல்.

நள்ளிருள், *s.* Thick darkness, midnight, மிகுந்தவிருள். 2. Midnight darkness, இடையாமத்தினிருள்.

நள்ளென்கங்குல், *s.* Deep night, thick darkness.

நள்—நள்ளு, கிறேன், நள்ளினேன், வேன், நள்ள, *v. a.* To contract or cultivate friendship, to love, to be friendly, as நட்க. (*p.*)

நள்ளுநர், *s.* [*plu.*] Friends, associates, adherents, allies, சினேகர்; also நட்பர், and நண்பர். (*p.*)

நள்ளலர்—நள்ளார், *appel. n.* Foes, enemies, பகைஞர். (சது.)

நள்ளாறு, *s.* One of the seven sacred places of Siva, ஓர்சிவஸ்தலம். (*p.*)

நள்ளி, *s.* A crab, நண்டு. 2. Cancer of the Zodiac, கர்க்கடகவிராசி. 3. Relationship, உறவு. 4. One of the last of the seven classes of liberal kings, கடையேழு வள்ளலிலொருவன். (சது.)

நள்ளு, *s.* See நள்.

நறநறெனல், *v. noun.* As நறுநறெனல்.

நறவம், *s.* Odor, fragrance, வாசனை. 2. Honey, தேன். 3. The ஞாழல் plant. 4. The குங்குமமரம், an aromatic tree. 5. A tree, the அனிச்சமரம். (சது.) 6. A small flowering tree, Cæsalpinia pulcherrima. (சது.)

நறவு, *s.* Odor, fragrance, வாசனை. 2. Honey, தேன். 3. Toddy, கள். 4. The குங்குமமரம், a tree. (சது.)

நறளை, *s.* A species of winding plant, Cissus vitiginea, *L.*—There are சிறுநறளை, a smaller of the same; புளிநறளை, a plant, Cissus acida; பெருநறளை, a larger species.

நறா, *s.* Odor, fragrance, வாசனை. 2. Toddy, கள். (சது.) 3. Honey, தேன்.

நறியது, *s.* Any thing good, pleasant, fragrant, &c., இதமானது; [*ex* நறுமை.]

நறு, *adj.* Fragrant, &c. See நறுமை.

நறுக்கு, *s.* A piece cut off, commonly of ola; a paring, துண்டு. 2. An ola-bond, or note of hand, சீட்டு. 3. Mouth-piece of a pipe or clarionet, நாகசுரத்தின்நாக்கு. (*c.*)

நறுக்குச்சீட்டு, *s.* An ola-bond.

நறுக்குத்திப்பிலி, *s.* A pepper stalk (piper dichotom) cut in small pieces, தேசாவரம்.

நறுக்குமூலம், *s.* The root thus cut, ஓர்சாக்கு. 2. The root called வெட்டிவேர்.

நறுக்குநெட்டி, *s.* The root of Aeschynomene aspera, cut to make toys.

தலைநறுக்கு, *s.* The head part of an ola cut off.

வால்நறுக்கு, *s.* The lower end of an ola cut off.

நறுக்கு, கிறேன், நறுக்கினேன், வேன், நறுக்க, *v. a.* To cut off, lop off; to prune, clip off, தறிக்க. 2. To mince, to chop, to cut in small pieces, துண்டிக்க. (*c.*)

நறுதடி, *s.* [*prov.*] A gold-smith's anvil, attached to a block, அடைகல்.

நறுதடிக்குற்றி, *s.* Anvil-block.

நறுநறுத்தல்—நறுநறெனல், *v. noun.* Grinding between the teeth as hard fibrous vegetables not well boiled, நரடிக் கொலிக்குறிப்பு.

நறுமா, *s.* (*For.*) Mean, poor, degraded, inferior; the lowest grade or rank, அற்பம். 2. A mean, or vile person, எளியவன்.

நறுமு, கிறேன், நறுமினேன், வேன், நறுமு, *v. a.* [*prov. also* நருமு.] To grind the teeth, to gnash, பற்கடிக்க. 2. To bruise or crush between the teeth, பல்லாற்கடிக்க.

நறுமுறுக்க—நறுமுறென, *inf.* To grumble, to mutter, to murmur, முறுமுறுக்க. 2. To growl, as cats, dogs, &c., eating, உறும. (*c.*)

நறுமை, *s.* Goodness, நன்மை. 2. Odor, scent, perfume, வாசனை. (சது.) 3. Fragrancy, perfume, சுகந்தவருக்கம். (*p.*)

நறுங்கரந்தை, *s.* Fragrant basil. See கரந்தை.

நறுநாற்றம்—நறுமணம், *s.* Fragrance, சுகந்தம்.

நறுநுதல், *s.* A perfumed forehead, மணங்கமழ்நெற்றி. 2. A lady, பெண்.

நறுநெய், *s.* Cow's ghee of the best quality, பசுநெய்.

நறுந்தாளி, *s.* A species of fragrant Convolvulus, வாசனைத்தாளி.

நறுந்தைலம், *s.* A fragrant balsam or oil.

நறுந்தொடை, *s.* A fragrant garland.

நறுமருப்பு, *s.* Green ginger, இஞ்சி.

நறுமலர், *s.* A fragrant flower.

நறுமலர்சாத்தல், *v. noun.* Putting on fragrant flowers—in worship.

நறும்பிசின், *s.* A kind of fragrant gum, a drug, சாதிசம்.

நறும்புகை, *s.* Sweet incense, perfume, வாசனைத்தூமம்.

நறுவியது, *s.* Any thing fragrant, good, palatable, good flavor, as நறியது. (*p.*)

நறுவிலி—நறுவீழி—நறுவுளி, *s.* A kind of tree, ஓர்மரம், Cordia obliqua, *L.* There are two kinds, சிறுநறுவிலி, giving small fruit; பெருநறுவிலி, bearing large fruits.

நறுவிலிப்பழம், *s.* The edible fruit of the Cordia.

நறும்பு, கிறேன், நறும்பினேன், வேன், நறும்ப, *v. a.* [*prov. also* நரும்பு.] To gnash, to grind the teeth, to crack or bruise with the teeth, to gnaw, to champ; to bite or crush to pieces with the teeth or beak, &c., பற்கடிக்க. (*c.*)

நறை, *s.* Fragrance, வாசனை. 2. Toddy, கள். 3. Fragrant smoke, நறும்புகை. 4. Fault, defect, குற்றம். (சது.) 5. Honey, தேன். (*p.*)

நறைபடுபுகை, *s.* As நறும்புகை.

நற்கீரன், *s.* Head of the Madura college. See நக்கீரன்.

நற்கோள், *s.* Jupiter, &c. See நல்.

நற்றத்தனார், *s.* One of the disciples of Agastya, who wrote a treatise on Prosody and versification, called after his name, நற்றம், now scarce, ஓரிலக்கண நூலாசிரியர்.

நற்றுளி, *s.* The gum of the fig-tree, அத்திப்பிசின்.

நனந்தலை, *s.* Middle, நடு. 2. Crown of the head; the zenith, உச்சி. (சது.)

நனவு, *s.* Real vision, sight, wakefulness, as opposed to கனவு, சாக்கிரம். 2. Width, breadth, அகலம். 3. Area, space, room, surface, place, இடம். (சது.)

நனி, *s.* Narrowness, நெருக்கம். 2. Greatness, பெருமை. (சது.)

நனி. A particle of intensity, prefixed as an adverb or adjective, principally the former, to verbs and nouns, meaning very greatly, intensely, copiously, &c., used in poetry, அதிக.

நனிதந்தான். He gave largely.

நனிநொந்தான். He was much pained.

நனிபேதை. A great dunce.

நனை, *s.* Toddy, கள். 2. Flower buds, பூவரும்பு. (சது.) 3. Honey of flowers, பூத்தேன்.

நனைத்தகொம்பர். A branch with flower buds. (*p.*)

நனை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To become wet, to be moistened, ஈரிக்க. (*c.*)

முற்றும்நனைந்தவர்களுக்கீரமேது. To those well drenched, what fear of a little wet? i. e. one often punished becomes hardened.

நனைவு, *v. noun.* Wet, moisture, humidity, ஈரம்.

நனை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To wet, to moisten, to soak, ஈரமாக்க. (*c.*)

இவன்வீட்டிலேகைநனைக்கிறதோ. Would I wash my hands. (i. e. eat) in his house?

நனைப்பு, *v. noun.* Wetting, making wet, ஈரமாக்குகை.

நன்கு, *s.* Good, goodness, benefit, நன்மை. 2. Beauty, அழகு. 3. Plentifulness, copiousness, abundance, மிகுதி. (சது.) [*ex* நல்.] (*p.*)

நன்குணர, *inf.* To know thoroughly.

நன்குணர்ந்தோர், *appel. n.* The wise eminent sages.

நன்குமதிக்க, *inf.* To esteem highly.

நன்மை, *s.* Goodness, benefit, benefaction, உபகாரம். 2. Utility, help, aid, உதவி. 3. Virtue, morality, சன்மார்க்கம். 4. Peace, concord, சமாதானம். 5. Auspiciousness, prosperity, welfare, சுபம். 6. Good nature, good temper, நற்குணம். 7. Good deeds of former births, as enjoyed in the present life, நல்வினை. 8. [*in comb. with* ஆக.] Puberty of a girl, as an auspicious event, பெண்நன்மையாக. 9. [*R. Cath. usage.*] The Eucharist, நற்கருணை; [*ex* நல்.] (*c.*)

உன்காரியம்நன்மையாகும். Your undertaking will prosper; *a prognostic.*

நன்மைகடைப்பிடித்தல், *v. noun.* Holding right principles firmly; one of the eight acts of beneficence. See தபாவிருத்தி.

நன்மைசெய்ய, *inf.* To do good.

நன்மைதிமை, *s.* Good and evil, prosperity and adversity. 2. The last words of a dying person aware of his state. 3. Festive and funeral occasions. (*c.*)

நன்மைதிமைக்கவனைஅழைக்கிறதில்லை. They do not invite him either to festivities or funerals.

நன்மைதிமையிரண்டுமில்லாதவன். A good natured, harmless person. 2. A simpleton.

நன்மைதிமைசொல்ல, *inf.* To praise and dispraise. 2. To utter the last words before death; *often used with* போட.

நன்மைப்பகுதி-நன்மைப்பேறு, *s.* Good deeds of former births bringing enjoyment in the present life, நல்வினைப்பயன்.

நன்மையானபெண், *s.* A marriageable girl, இருதுவானபெண்.

நன்றி, *s.* [*vul.* நண்ணி.] Goodness, நன்மை. 2. A good, a benefit, a kindness, a favor, பட்சம். 3. Gratitude, செய்நன்றி; [*ex* நல்.] (*c.*)

நன்றிகெட, *inf.* To be ungrateful.

நன்றிகெட்டவன்—நன்றியற்றவன்—நன்றியில்லாதவன், *appel. n.* An ungrateful man.

நன்றிகொல்லுதல்-நன்றிகோறல், *v. noun.* Being ungrateful, (*lit.*) slaying benefits, செய்நன்றிமறத்தல். (*p.*) See கொல், *v.*

நன்றிசொல்ல, *inf.* To acknowledge benefits, to thank.

நன்றிநினைக்க, *inf.* To remember benefits, to be grateful.

நன்றிமறத்தல், *v. noun.* Forgetting benefits.

நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல தன்றேமறப்பது நன்று. To forget a benefit is bad; to forget an injury is good.

நன்றிமறவேல். Forget not a benefit. (*Avv.*)

நன்றியறிதல், *v. noun.* Being grateful, நன்றியுணர்தல்.

நன்றியில்செல்வம், *s.* Riches not used in doing good. (*p.*)

நன்றியீனம், *s.* Ingratitude.

நன்றியுள்ளவன், *s.* A grateful man.

நன்று, [*appellative of a symbolic verb, or 3d per. neut. from* நல், *used substantively.*] That which is good, or beneficial, a good, நல்லது. 2. Virtue, morality, நன்மை. 3. Greatness, excellence, பெருமை. 4. Copiousness, abundance, மிகுதி. 5. Prosperity, welfare, வாழ்வு.

எல்லார்க்குநன்றும்பணிதலவருள்ளுஞ்செல்வர்க்கே செல்வந்தகைத்து. Doing good is becoming to all; to the rich it is added wealth.

நன்றாய், *adv.* Well, prosperously, beautifully, liberally.

எல்லாருக்குநன்றாய்க்கொடுக்கிறான். He gives liberally to all.

நன்றாயிரு. Farewell, prosper.

நன்றாயிருக்க, *inf.* To be good, well, beautiful, &c. 2. To prosper, flourish.

நன்றாய்க்காய்க்க, *inf.* To bear fruit plentifully.

நன்னிலை, *s.* Good manners, ஒழுக்கம். 2. Health, சுகம். 3. Penance, தவம்.

நன்னயம், *s.* A civil expression, உபசாரச்சொல். 2. See நல்.

நன்னர், *s.* A good, நன்மை. (*p.*)

நன்னலம், *s.* Excellence, great goodness, சிறந்தநலம். (நீதிநெறி.)

நன்னிலம், *s.* A rice-field. See நல்.

நன்னெறி, *s.* A good way, (morally) an honest course—oppos. to துன்னெறி. 2. See நல்.

நன்னாரி, *s.* A small fragrant herb, பாற்கொடி. Indian Sarsaparilla, Periploca Indica, *L.* (*c.*)

சிறுநன்னாரி, *s.* A plant.

நன்னி, *s.* (*Hind.*) A very small person, or thing, சிற்றுரு. (*c.*)

நன்னிநூல், *s.* The short end of threads in cloth badly woven.

நன்னிப்பையல், *s.* A small boy.

நன்னு, கிறேன், நன்னினேன், வேன், நன்ன, *v. a.* [*prov.*] To nibble, as rats, or squirrels, கடித்துநறுக்க. 2. To bite or nibble off any thing, to bite the nails, பல்லாற்கடிக்க.

நன்னூல், *s.* The name of a Tamil grammar made by *Pavanandi.* 2. See நல்.

நா

நா. A syllabic letter compounded of ந் and ஆ.

நா, *s.* Tongue, நாக்கு. 2. Clapper of a bell, மணிநா. 3. Index or tongue of a balance, துலைநா. 4. Bolt of a lock, பூட்டின்நா. 5. Wards of a key, திறவுகோலின் நாக்கு. 6. Mouth-piece of a musical instrument, நாகசுரத்தினுக்கு. 7. Flame, அக்கினிச்சுவாலை. 8. The middle, the centre, நடு. (திவா.)

நாவெடுக்கவில்லை. He did not presume to answer.

நாவெழவில்லை—நாவெழும்பவில்லை. My tongue did not move to retort.

எடுத்தநாபடித்துரைக்கவில்லை. He moved his tongue but spake not; i. e. was silenced (by my arguments).

தீயினாற்சுட்டபுண்ணுள்ளாறுமாறுதே நாவினாற்சுட்டவடு. The blister from a burn will heal, the brand of the tongue is indelible.

அவனுவசையநாடசையும். If he wag his tongue the whole country is moved.

யாகாவாராயினுநாகாக்க. Whatever else is unguarded, guard the tongue. (குற.)

நாதாங்கி, *appel. n.* Staple of a door, கதவுநிலைச் சங்கிலி; [*ex* நா *et* தாங்கி.]

நாத்தழும்பேற, *inf.* To have the tongue well trained to speak. See தழும்பு.

நாத்தாங்கி, *s.* [*vul.* நாராங்கி.] Staple of a door into which the bolt shoots, as நாதாங்கி. 2. A kind of கள்ளி, இலைக்கள்ளி.

நாத்தாங்கிப்பேச, *inf.* To speak respectfully to one, to restrain the tongue in answering a superior.

நாப்புற்று, *s.* A kind of excrescence, or cancerous disease, on the tongue.

நாமகள் — நாமடந்தை — நாமாது, *s.* Sarasvati, goddess of eloquence, poetry and the arts; said to be in the tongue, சரஸ்வதி.

நாவடக்கம், *v. noun.* Silencing one by magic. 2. Reservedness, silence, மௌனம்.

நாவடைக்க, *inf.* To become speechless from calamity, &c., a hyperbolical phrase, பேசக்கூடாதிருக்க. 2. (*fig.*) To refute one's objections.

நாவணம், *s.* The uvula, சிறுநாக்கு; [*ex* அண்ணம்.] (*p.*)

நாவரசர், *s.* [*com.* திருநாவுக்கரையர்.] A poet, one of the sixty-three devotees of Siva, அந்தரர். 2. Poets, புலவர்; [*ex* நா *et* அரசர், princes.]

நாவரணை, *s.* [*sometimes* நாவரளை.] A kind of pimple or ulcer on the tongue, as நாப்புற்று; [*ex* அரணை.]

நாவலர், *s.* Poets, orators, the eloquent, புலவர் 2. The learned, கற்றோர்; [*ex* வலம்.]

நாவறட்சி, *s.* Dryness of the tongue.

நாவாய்சித்தி, *s.* Influence superstitiously attributed to some person's words. See வாக்குச்சித்தி.

நாவாள், *s.* Sarasvati. See நாமகள்.

நாவிழுல், *v. noun.* Faltering of the tongue from disease, when near death, &c.

நாவிழுந்துபோயிற்று. The tongue has failed.

நாவுழலை, *s.* Thirst, great thirst, விடாய். 2. Faltering of the tongue, நாக்குழறல். 3. Blight from the tongue, நாவூறு.

நாவூறு—நாவேறு, *s.* Blight from the tongue, words of praise or admiration spoken by unlucky persons, supposed to produce evil, நாவால்வருந்தோஷம்.

நாகணம் — நாகந்தி, *s.* Croton seed, நேர்வாளம்.

நாகணவாய்—நாகணவாய்ப்புள், *s.* A kind of bird, trained to talk, a species of the Mina, ஓர்பறவை. See நாகுவம்.

*நாகம், *s.* The cobra-de-capella or hooded snake, நல்லபாம்பு 2. A naga, or demigod, having a human face, with the tail of a serpent, and the expanded neck of the cobra. The race is said to inhabit a region called Patala, or நாகலோகம், under the earth. 3. Lead, ஈயம். 4. Black lead, காரீயம். 5. The black monkey, கருங்குரங்கு. 6. Monkey in general, குரங்கின்பொது. 7. An elephant, யானை. 8. A tree. See புன்னை. 9. Fragrant herb, as ஞாழல். 10. A medicinal tree, ஓர் மருந்துமரம். 11. An astrological karna, ஓர் கரணம். W. p. 458. Naga. 12. (*Sa. Naka.*) The visible heavens, ether, sky, atmosphere, ஆகாயம். 13. Swerga or the Indian paradise, சுவர்க்கம். 14. A kind of prepared arsenic, நாகபாஷாணம். 15. A kind of precious stone, நாகப்பச்சை. 16. A mountain, மலை. See நாகு. 17. Fine cloth, நற்றுகில்.—*Note.* Of the நாகம் snakes there are said to be of different castes as among men; being four chief, and one inferior caste; which differ in form, motion, food and habits.

அஷ்டநாகம், *s.* The eight famed serpents of the nether world employed at the eight cardinal points to support the earth are: 1. வாசுகி. 2. அனந்தன். 3. தக்ஷகன். 4. சங்கபாலன். 5. குளிகன். 6. பதுமன். 7. மகாபதுமன். 8. கார்க்கோடன். To these the thousand headed ஆதிசேஷன், king of the race, supporting the earth at the centre is sometimes numbered as a ninth.

நாககள்ளி, *s.* A kind of recumbent shrub, ஓர்கள்ளி.

நாககன்னி—நாககன்னிகை, *s.* Female of the naga race, especially a wife of Arjuna.

நாகசாபம், *s.* Curse of the cobra, inflicted on a person for killing it. See நாகப்பிரதிஷ்டை.

நாகசின்னம்—நாகசுரம்—நாகஸ்வரம், *s.* [*com.* நாகசரம்] A kind of pipe or clarionet, one of the chief musical instruments, ஓர்துளைக்கருவி.

நாகதத்துவம், *s.* One of the qualities of women, ஸ்திரீகுணத்தொன்று.

நாகதம்பிரான்—நாகதேவன், *s.* [*prov.*] The cobra snake regarded as a god, properly applied to ஆதிசேஷன், the chief of the nether world. See நல்லதம்பிரான்.

நாகதாளி, *s.* A species of தாளி, the root of which is used by snake dancers—the snake drawing back its head, and retiring when it is presented; also deemed an antidote to snake bites, Cucumis anguinus, *L.*

நாகதாளிக்கள்ளி, *s.* A plant fed on by the silvestre or cochineal insect, Oblong Indian fig. (*Ains.*)

நாகதிசை, *s.* West point, மேற்கு.

நாகதீபம், *s.* A lamp in the form of a five headed cobra, ஐந்தலைவிளக்கு.

நாகதேவி—நாகம்மா, *s.* The cobra, as a goddess.

நாகநாதன் — நாகநாயகன், *s.* Indra, இந்திரன். 2. As நாகதேவன்.

நாகபடம், *s.* The spread and figured neck of the cobra, பாம்பின்படம். 2. [*com.* நாகவடம்.] An ear ornament in imitation of the spread neck of the cobra, ஓர்காதணி.

நாகபட்டணம், *s.* The town of Negapatam, ஓரூர்.

நாகபந்தம், *s.* One of the சித்திரகவி or curious kind of poems.

நாகபாசம், *s.* [*in mythol.*] A kind of snake-like rope, with a noose or knot, and having life. It is obtained of the gods by austerities; and in war sent to entwine itself about the foe, பாம்புருவமான படைக்கலம்.

நாகப்பச்சை, *s.* A precious stone. See ஆற்றுப்பச்சை.

நாகப்பற்று—நாகவாடை, *s.* Alloy of zinc in silver, துத்தநாகப்பிடிப்பு.

நாகப்பாம்பு, *s.* The cobra.

நாகப்பிரதிஷ்டை, *s.* The making of a five headed cobra and worshipping it, to expiate the sin of killing a cobra by the person or his ancestors, which it is supposed prevents offspring.

நாகப்பிரம்பு, *s.* A kind of rod in the shape of a snake, ஓர்பிரம்பு.

நாகப்பூ—நாகம்பூ, *s.* The flowers of the நாகம் tree, used medicinally; also called சிறுநாகப்பூ.

நாகப்பூச்சி, *s.* A worm, an earth-worm, also called பூநாகம், by native doctors, who make of it several preparations.

நாகமணல், *s.* Sand containing lead.

நாகமணி—நாகரத்தினம், *s.* The gem supposed to be found in the head of the cobra. See ஐந்தலைநாகம்.

நாகமரம், *s.* A kind of red tree.

நாகமல்லி—நாகமல்லிகை, *s.* A medicinal species of the மல்லிகை, used for dying black. The root forms a drug, White flowered justicia, Justicia nasuta, *L.*

நாகமோடி, *s.* [*with* வேஷ்டி or சேலை.] A cloth with serpentine stripes, ஓர்புடவை.

நாகம்பூ, *s.* See நாகப்பூ.

நாகராசா, *s.* The chief of the nagas, ஆதிசேடன்.

நாகலோகம், *s.* Swerga, தேவலோகம். 2. The world or region of the nagas under the earth, கீழுலகத்தொன்று.

நாகவடம், *s.* See நாகபடம்.

நாகவராளி, *s.* A kind of tune, ஓர்ராகம்.

நாகவல்லி — நாகவள்ளி, *s.* A betel plant, வெற்றிலைக்கொடி. 2. [*also* நாகவல்லி முகூர்த்தம்.] The finishing ceremony of a marriage on the fifth day, கலியாணச்சடங்கிலொன்று.

நாகவாடை, *s.* In gold coin, a slight alloy, supposed to be contracted from the metal of the mould, செம்பூறல்.

நாகவாய், *s.* An instrument used by turners, ஓர்கடைச்சற்கருவி.

நாகாசனன், *s.* The Brahmany-kite, whose food is snakes; [*ex* அசனம், food.]

நாகாத்திரம் — நாகாஸ்திரம், *s.* A dart, as நாகபாசம்.

நாகாந்தகன், *s.* Garuda, as the devourer of snakes, the vehicle of Vishnu, கருடன்; [*ex* அந்தகன்.]

நாகாபரணம், *s.* An ornament in form of a cobra, worn by Siva, சிவனணியிலொன்று.

நாகாபரணன், *appel. n.* Siva, சிவன்.

நாகாலயம், *s.* The inferior world or abode of the nagas.

நாகேந்திரன், *s.* The cobra—as a deity.

பைந்நாகம், *s.* A cobra. See பை.

பறவைநாகம், *s.* A winged serpent, a flying dragon.

*நாகரம், *s.* The Devanagri character or alphabet of the Sanscrit language, ஓர்லிபி. 2. Dry ginger, சுக்கு. W. p. 459. Nagara.

நாகரவண்டு, *s.* A kind of beetle, பொன்வண்டு.

*நாகரி, *s.* The குருக்கத்தி tree. (சது.)

*நாகரிகம் — நாகரீகம், *s.* Town or city manners, speech, address or dress, சாதுரியம். 2. Politeness, refinement of manners, civility, gentility, urbanity, உபசாரனை; [*ex* நகரம்.] 3. A favorable look, graciousness, kindness, கண்ணோட்டம். 4. Something new, a curiosity, விநோதம். 5. Affectation, foppishness, பிலுக்கு. (*c.*)

நாகரீகக்காரன்—நாகரீகமுள்ளவன், s. A genteel accomplished person.

நாகரீகமானநடைக்கை, s. Genteel manners.

நாகரீகமானபேச்சு, s. Refined speech, genteel address.

நாகரீகம்பண்ணுதல்-நாகரீகங்காட்டுதல், v. noun. Behaving genteely, acting politely or gracefully. 2. Being foppish, finical or precise.

நாகரீகர், s. [plu.] Citizens, townsmen, நகரப்புரிபோர். 2. Polite, genteel, accomplished persons, சதுரர். 3. Rakes, gallants, காமுகர்.

நாகலை, s. A plant bearing a very large edible pod, ஓர்செடி, Trichosanthes anguina, L.

நாகல், s. [vul. corrupt. of நாவல்.] The nawel tree.

*நாகவம், s. One of the eleven astrological karnas, as நாகம், ஓர்கரணம்.

*நாகன், s. One of the ten vital airs, supposed to assist in extending, and contracting the body, and in speaking. See வாயு. W. p. 458. Naga.

நாகு, s. Youthfulness, tenderness, juvenility, இளமை. 2. A chank, சங்கு. 3. A snail, sea-snail, நத்தை. 4. A she-buffalo, பெண்ணெருமை. 5. A female of the gayal or elk, பெண்மரை. 6. A female fish, a spawner, பெண்மீன். 7. A young tree. மரக்கன்று. 8. [prov.] A female calf, a heifer, பசுவின்பெண்கன்று.

நாகிளங்கமுகு, s. A very young palm. (p.)

நாகுகன்று, s. A heifer 2. [loc.] The young of a buffalo.

*நாகு, s. Ant-hill, புற்று. W. p. 458. Naku.

நாகூர், s. A native town near Negapatam, ஓரூர்.

*நாகேசுரம், s. A native town near Combaconam, called திருநாகேசுரம். 2. A shrub and its flower, சிறுநாகப்பூ, Mesua Ferria, L. (Ains.)

நாகை, s. A name of Negapatam, நாகப்பட்டணம். (p.)

நாக்கப்பாம்பு—நாக்கப்பூச்சி-நாக்கைப்பூச்சி, s. [vul. நாக்கணாம்பூச்சி.] An earth worm, a belly worm, நாங்கூழ்.

நாக்கியாக்கிரம், s. A thorny shrub or climber, Mimosa, ஓர்முட்கொடி. (R.)

நாக்கு, s. Tongue, &c., as நா, which see. 2. [prov.] Ear of corn, தானியக்கதிர். 3. (Beschi.) Blade of an oar, படகுவலிக்குந்துடுப்பு. For some of the compounds, see நா.

நாக்கழியப்படாது. One's word should never fail.

நாக்குப்புறப்படச்சுமந்தான். He carried a very heavy load; (lit.) so to cause him to thrust out his tongue.

நாக்கைப்பிடுங்கிக்கொண்டுசெத்துப்போவேன். I will pluck out my tongue and die.

நாக்கையறுத்துப்பாவாடம்போட்டுக்கொண்டான்.... He cut off his tongue, and laid it and himself before a temple—a very solemn and determined vow; often performed at Pulney festival; also used in love or affection.

அட நாக்குவிழுவான். You, whose tongue should fall down, being cut off; used in cursing by women.

நான்உம்முடையநாக்குக்குக்கீழ்ப்பட்டேனோ. Am I one to be insulted by you?

நாக்கிலேசுட, inf. To burn the tongue, for purification, or as a punishment.

நாக்குத்தடித்தல், v. noun. The tongue growing thick, and stiff. See தடி, v.

நாக்குத்தட்டுதல், v. noun. Stammering, stuttering. 2. Derangement of the bolt of a lock.

நாக்குத்தப்ப—நாக்குப்புரள, inf. To fail in a promise, பேச்சுத்தவற. 2. To speak falsely, பொய்சொல்ல.

நாக்குத்திருந்துதல், v. noun. The tongue becoming trained to speak. See திருந்து v.

நாக்குத்தெறிக்கப்பேச, inf. To insult a superior.

நாக்குநீட்ட, inf. To stretch out the tongue.

நாக்குப்புரள, inf. To fail in one's word. See நாக்குத்தப்ப.

நாக்குப்புறப்படல்—நாக்குத்தள்ளல், v. noun. The tongue being thrust out.

நாக்குப்புற்று, s. A kind of disease on the tongue. See நாப்புற்று.

நாக்குவழித்தல், v. noun. Scraping the tongue.

நாக்குவராங்கிப்போதல், v. noun. [prov.] Drawing in the tongue, to express amazement, as when asked an exhorbitant price, &c. 2. Being dry and parched in the tongue, through thirst. (c.)

நாக்குமீன், s. Sole-fish, ஓர்மீன்.

நாக்குழிஞ்சான், s. A plant, ஓர்செடி, Capparis maxima. (Roxb.)

நாக்குளிப்பாம்பு—நாக்குளிப்பூச்சி—நாக்கணாம்பூச்சி, s. [vul.] Worms, teres, earth-worms, நாக்கப்பூச்சி.

நாங்கள், pron. We, including the speaker, and those with him, but excluding all others. See நாம்.

நாங்கு, கிறேன், நாங்கினேன், வேன், நாங்க, v. n. [prov.] To shrink into one's self, to become spiritless, ஊக்கமின்றியொடுங்க; used in the phrase, தாங்கிநாங்கிப்போக.

நாங்குழு-நாங்கூழ், s. A belly-worm, as நாக்குளிப்பாம்பு. (p.)

*நாசம், s. Destruction, ruin, loss, damage, waste, அழிவு. 2. Dissolution, annihilation, death, மரணம். 3. Involution of matter, reduction to its primitive elements, ஒடுக்கம். W. p. 453. Nasa.

நாசகாலம், s. The closing period of a thing or person. 2. A time of fatality, to one from the influence of former deeds.

நாசமிலி, appel. n. The deity as the imperishable one. (சது.)

நாசகாலன், s. An atrociously wicked person like Yama. (a curse.)

நாசப்பட—நாசமாக, inf. To be destroyed.

நாசமோசம், s. [loc. மோசநாசம்.] Peril, jeopardy, danger of life.

நாசம்பண்ண, inf. To destroy.

நாசமறுவான்—நாசமறுவான்—நாசமற்றுப்போவான், appel. n. That cursed one; used in imprecation.

நாசயோகம், s. An inauspicious astrological yoga, மரணயோகம்.

நாசன், s. Yama, the god of death, இயமன்.

நாசோற்பத்தி, s. Periodical dissolution, and reproduction of worlds. 2. Succession of deaths and births, இறப்பும்பிறப்பும்; [ex உற்பத்தி.]

*நாசனம், s. (St.) Destruction, dissolution, extinction, &c., as நாசம்.

*நாசாக்கிரம், s. Tip of the nose—as நாசிகாக்கிரம்.

*நாசி, s. [contraction of நாசிகை.] Nose, மூக்கு. 2. Nostril, மூக்குத்துளை. (c.) 3. Upper timber of a door, கதவுநிலையின்மேற்சட்டம். 4. The passage through the arch of a drain, சலதாரையின்வாய்.

நாசிக்கனப்பு, v. noun. Heaviness of the nose from cold or mucus.

நாசித்தலை, s. [prov.] Figured head of the யாளி, or lion, on the walls of a temple or upper part of a tower.

நாசித்துவாரம், s. The nostrils.

நாசிப்பொடி, s. Snuff or other sternutatory powders, மூக்குத்தூள்.

நாசியடைத்தல்-நாசியடைப்பு, v. noun. [loc. மூக்கடைப்பு.] A stopping up of the nose.

நாசியரிக்க, inf. To itch in the nose from cold, &c.

நாசியைச்சிந்த, inf. To blow the nose; also மூக்குச்சிந்த. (c.)

*நாசிகை, s. The nose, மூக்கு. 2. The upper timber frame of a door, கதவுநிலையின்மேற்சட்டம் W. p. 463. Nasika.

நாசிகாக்கிரம், s. Tip of the nose, மூக்குநுனி; [ex அக்கிரம்.]

நாசிகாசூரணம், s. Snuff, as நாசிப்பொடி.

நாசிகாபீடம், s. [com. நாசியாபீடம்.] A tubercle in the nose, மூக்குள்வளருமோர்சதை.

நாசிகாமலம், s. (St.) Mucus of the nose, மூக்குச்சளி.

நாசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To perish, to be destroyed, அழிய. 2. To be reduced to primitive elements; also written நசிக்க; [ex நாசம்.] (p.)

*நாசியம், s. The rope passed through the gristle of a bullock's nose to guide it, மூக்காங்கயிறு. W. p. 463. Nasya.

நாசுவன், s. [prop. நாவிதன், fem. நாசுவத்தி.] A barber, அம்பட்டன். (c.)

*நாசோற்பத்தி, s. See நாசம்.

நாச்சி, s. [honorific நாச்சியார்.] A lady, a mistress. See நாய்ச்சி.

நாச்சிமார், s. [plu.] Ladies, mistresses. 2. A class of seven female deities, objects of worship, சத்ததேவிகள்.

நாஞ்சிநாடு, s. A place in the southern part of the peninsula, மலையாளத்திலோர்பகுதி.

நாஞ்சில், s. [also ஞாஞ்சில்.] A plough, கலப்பை. 2. Ornamental figures on the wall of a fortification, மதிலுறுப்பு. (சது.)

நாஞ்சிற்படையோன், appel. n. Bala-Rama, as using a plough for his weapon, பலபத்திரன்.

*நாடகம், s. Dramatic science, also a play, drama or comedy, கலைஞானமறுபத்துநான்கிலொன்று. 2. Dancing in a play or drama, கூத்து. W. p. 460. Nat'aka. (c.)

நாடகம், ம. s. Ten kinds of நாடகம்; 1. வாரம். 2. யாமிருகம். 3. அாட்டு. 4. சமுஸ்காரம். 5. பாணம். 6. வீதி. 7. சல்லாபம். 8. உத்திரட்டாங்கம். 9. விராகணம். 10. வியாயோகம்,—also ten in the அலங்காரம் mode of dancing. 1 செறிவு. 2. தெளிவு. 3. சமநிலை. 4. இன்பம். 5. ஒழுகிசை. 6. உதாரம். 7. உய்த்தலில்பொருண்மை. 8. காந்தம். 9. வலி. 10. சமாதி.

நாடகக்கணிகை, s. An actress, a dancing girl. See கணிகை.

நாடகசாலை, s. A dancing room, playhouse, theatre, நாடகம்பயிலிடம். 2. (c.) A dancing girl, நாடகக்கணிகை.

நாடகத்தமிழ், s. Dramatic Tamil.

நாடகத்தி, s. An immodest woman, அவிசாரி.

நாடகத்துறை, s. Any thing dramatic.

நாடகநடிக்க—நாடகமடிக்க, inf. To be very haughty or affected, to be immodest; *said of a woman in displeasure.*

நாடகப்பண், s. Dramatic tunes of melody, &c.

நாடகப்பெண், s. A dancing girl.

நாடகமாட—நாடகம்விளையாட, inf. To act a comedy.

நாடகர்—நாடகியர்—நாடகீயர், s. [plu.] Actors, players, comedians, dramatic performers, கூத்தாடுவோர்.

நாடகவழக்கு, s. Dramatic usages in languages. 2. Poetic embellishment including hyperbole, romance, &c., as differing from nature. (p.)

நாடகாங்கம், s. A gesture, pantomime, அவிநயம்; [ex அங்கம்.]

நாடர், s. [pl.] Countrymen, &c., as நாட்டார். (R.)

நாடன், s. The third lunar asterism, கார்த்திகைநாள். (சது.) 2. An epithet of the Chola kings, சோழராசர்களுடையபட்டப்பெயர்.

நாடன்பருத்தி, s. A cotton shrub, which lives three or four years. See பருத்தி.

நாடா, s. A weaver's shuttle, நாழி.

நாடா, s. (*Hind.*) Ribbon, tape, fillet, ஓர்கயிறு.

நாடான், s. [prov.] A term applied to the caste of toddy drawers, சாணருக்குரிய பட்டப்பெயர். (c.)

நாடி, s. [prov. for தாடி.] The chin.

நல்லவார்த்தைசொல்லிநாடியைத்தாங்கினன். He spoke peacefully and touched the other's chin.

*நாடி, s. W. p. 460. Nadi. Pulse especially at the wrist, sometimes at the foot, தாது. 2. An Indian hour of twenty-four minutes, நாழிகை. (c.) 3. An artery, a vein, tendon, sinew, muscle, nerve, ligament, நரம்பு. 4. String of a guitar, யாழ் நரம்பு. 5. Any thing tubular, a tube, pipe, tubularity, உட்டுளை. 6. Nose, மூக்கு. 7. A man's lock of hair, ஆண்மயிர். (சது.) 8. The hollow stalk of the lotus, தாமரைத்தாள்.—There are three varieties of pulse: 1. வாத நாடி, indicating acid humors, hypochondria, &c., and felt by the fore-finger. 2. பித்தநாடி, indicating bilious humors, felt by the second finger. 3. சிலேட்டுமநாடி, indicating phlegmatic humors, felt by the third finger.—*Note.* In healthy persons, each நாடி is supposed to be prevalent for ten நாழிகை, or four hours of the day and night alike, beginning from sunrise and from sunset; any derangement of these is regarded as indicative of disease.

தசநாடி, s. The ten nerves are: 1. சுழுமுனை, passing through the six ஆதாரம்; 2. இடை, beginning from the great toe of the right foot and passing up to the left nostril; 3. பிங்கலை, beginning from the great toe of the left foot, and passing up to the right nostril, crossing each other in five different places; 4. காந்தாரி, beginning at the navel and passing to the neck, where they assume a seven-fold form, being the sources of the seven musical tones of the human voice; 5. அத்தி; 6. சிகுவை, situated in the region of the eyes forming ten branches, as optical nerves; 7. அலம்புடை. 8. புருடன், in the region of the ears forming 120 branches or auditory nerves; 9. குகு, beginning at the navel and reaching to the verenda; 10. சங்கினி, situated in the verenda.—*Note.* There are said to be 72, 000 pulses in the body.

அவன் ஓடிப்பாடி நாடியிலடங்கினன். His power, and bustle, have come to an end; said of an extravagant person reduced to poverty.

நாடிக்குறி, s. Indication of the pulse.

நாடிதாரணை, s. The system of nerves and arteries with their ramifications.

நாடிநிலை, s. State of the pulse.

நாடிபார்க்க, inf. To feel the pulse. See தாதுபார்க்க.

நாடிபரீட்சை, s. Acquainted with the pulse.

நாடியறிய, inf. To be acquainted with the system of pulsation in its three-fold variety.

நாடியெழும்புதல், v. noun. Rising of the pulse.

நாடியொடுக்கம்—நாடிவிழுந்துபோதல், v. noun. Sinking of the pulse.

நாடியோட்டம், v. noun. The beating of the pulse, pulsation. 2. The state of the pulse.

நாடிவிதி, s. System of the arteries.

சாத்தியநாடி, s. A pulse indicating recovery.

அசாத்தியநாடி, s. A pulse indicating death.

*நாடிகேளம், s. A cocoa-nut, as நாரிகேளம். W. p. 460. Nadikela.

*நாடிமண்டலம், s. The celestial equator, சூரியனடுவீதி. W. p. 460. Nadimandala.

நாடு, s. [Gen. நாட்டின்.] Country, kingdom, state, realm, இராச்சியம். 2. Rural or agricultural country, as distinguished from city, மருதநிலம். 3. Populated country or district, as distinguished from forest tracts, தேசம். (c.) 4. (சது.) Place, room, space, area, பரப்பு. 5. Locality, situation, இடம். 6. Earth, land, as distinguished from sea, பூமி. 7. The world, உலகம். 8. Side, region, quarter, பக்கம்.—*Note.* The *five* principal countries of Southern-India, are: 1. தொண்டவளநாடு, Tonda; 2. சோழவளநாடு, Chola; 3. பாண்டிவளநாடு; Pandia; 4. கொங்குவளநாடு, Kongu; 5. மலைநாடு, Malyalam. Of districts are தொட்டியநாடு, Dottiya; நாஞ்சிநாடு, in Malyalam, and மறவநாடு, the Marava province.

நாடெங்கும்வாழக்கேடொன்றுமில்லை. When a country prospers, there is no insurrection. (Avv.)

திருநாடு, s. A name of Vaikuntha the paradise of Vishnu.

நாடுசார்நிலம், s. Ground adapted to the growth of rice.

நாடுபடிதல், v. noun. Obeying, submitting as a country to its rulers, நாட்டார்வசப்படுதல்.

நாடுபடுதிரவியம், s. Country productions. See திரவியம்.

நாடோடி, appel. n. A vagrant, a vagabond, a stroller, நிலையற்றவன்; also நாடோடியாய்த்திரிகிறவன். 2. [in comb.] Common to the country.

நாடோடியாய்வழங்குகிறது. It is common.

நாடோடிச்சொல்—நாடோடிப்பேச்சு, s. Words common in the country, provincial dialect, வழக்கச்சொல்.

நாடோடிப்பாஷை, s. The vernacular tongue, நாகரீகமற்றபாஷை.

நாட்டமைதி, s. The settled state of a country, தேசத்தினமைதி. 2. Things promoting the prosperity of a state, in six particulars: 1. செல்வம், wealth; 2. விளைநிலம், corn-fields; 3. செங்கோல், a good government; 4. நோயின்மை, freedom from epidemics; 5. வளம், fruitfulness; 6. குறும்பின்மை, exemption from crime. (சது.)

நாட்டவத்தனம், s. [prov.] Clownishness, rusticity, நாட்டுப்பாங்கு.

நாட்டவன்—நாட்டான், s. A countryman, a clown.

நாட்டாண்மை, s. [vul. நாட்டாமை.] Chieftaincy of a country, ஊராளுந்தன்மை.

நாட்டாண்மைக்காரன், s. Chief of a country or village; a Natamagar.

நாட்டாண்மைக்காரி, s. Wife of a Natamagar. 2. A proud forward woman.

நாட்டாண்மைபண்ண, inf. To manage the office of a Natamagar.

நாட்டார், s. [sing. நாட்டான்.] People of a country, தேயத்தார். 2. Countrymen, rustics, நாட்டுப்புறத்தார். 3. Chief persons among the Vellala caste.

நாட்டாள், s. [com. காட்டாள்.] A laborer, வேலைசெய்வோன்.

நாட்டாளுக்கொருசீட்டாளோ. Must a day laborer have a servant?

நாட்டுக்கணக்கன், s. A village accountant.

நாட்டுக்குற்றம், s. Things injurious to a country, pests, scourges, ஊருக்குள்ள தீங்கு.—One class is seven-fold: 1 தொட்டியர், strolling jugglers, wizards, witches; 2. திருடர், thieves, robbers; 3. யானை, wild elephants; 4. பன்றி, wild hogs; 5. விட்டில், insects; 6. கிள்ளை, parrots; 7. பெருமழை, excessive rain.—Another class is eight-fold: 1. விட்டில், locusts and insects; 2. தன்னரசு, anarchy; 3. வேற்றரசு, invasion by a foreign power; 4. யானை, elephants; 5. மிகுமழை, excessive rain; 6. மிகுகாற்று, high winds, tempests. 7. கிள்ளை, parrots; 8. நட்டம், dissipation or dancing. (சது.)

நாட்டுச்சந்தம் — நாட்டுப்பாங்கு, s. Slovenly or rustic habits of dress, behavior or talk.

நாட்டுச்சார்பு, s. Agricultural tracts, மருதநிலம்.

நாட்டுச்சிறப்பு, s. The excellencies, natural or artificial of a country, ஊர்வளம்.

நாட்டுப்புறம், s. Country parts.

நாட்டுப்புறத்தார், s. [pl.] Rustics, unpolished persons.

நாட்டுப்பெண், s. A daughter-in-law, மருமகள். (*Tanjore usage.*)

நாட்டுப்போங்கு — நாட்டுவழக்கம், s. The style, fashion, and manners of a country, ஊர்க்கடுத்தவிதம். 2. Rusticity, coarseness, அவிவேகவாடிக்கை.

நாட்டுமட்டம், s. A country pony not from Pegu.

நாட்டுவர்த்தமானம், s. The news of the Mofussil.

நாட்டுவளப்பம்—நாட்டுவளம், s. Fertility of a country, நாட்டின்சீர். 2. Good order of a country, as to its inhabitants, the animals, &c.

நாட்டுவெள்ளரி, s. The wild Cucumber, of native or spontaneous growth.

நாடு, கிறேன், நாடினேன், வேன், நாட, v. a. To seek, inquire after, or pursue, தேட. 2. To desire earnestly, விரும்ப. 3. To examine, to investigate, விசாரிக்க. 4. To scent, as dogs a hare, மணம்பிடிக்க. 5. (*fig.*) To reach, எட்ட. (c.)

இங்கேகாலூன்றவொட்டவில்லை. He does not permit (me) to put foot here.

கத்திநாடஇடமில்லை. There is no room to insert the lancet.

நாடி, *verb part.* Concerning, respecting, regarding, seeking.

உம்மைநாடிவந்தேன். I came to beg a favor; or I came on your account.

அவளைநாடிக்கொண்டுதிரிகிறான். He goes after her.

மழையைநாடி. On account of the rain.

நாடித்தேட, *inf.* To seek after.

நாட்டம், s. Desire, pursuit, aim, quest, விருப்பம். 2. Intention, நோக்கம். 3. Suspicion, ஐயம். 4. (சது.) Eye, கண். 5. A mode of singing or drumming, embracing several tunes, நிபண். 6. A sword, வாள்; [*ex* நாடு, *v.*]

அவன்பேரில்நாட்டமாயிருக்கின்றது. There is suspicion of him. (*R.*)

நாட்டமாயிருக்க, *inf.* To be in earnest about, to long for.

நாட்டியம், s. The inmost intention, design, object, கருத்து. 2. Aim, hint, allusion, reference, குறிப்பு. (சது.)

*நாட்டியம், s. Dancing, acting, dramatic art, கூத்து. (*Sa. Nat'ya.*) (c.)

நாட்டியக்காரன், s. A careless, reckless man, கூத்தன்.

நாட்டியக்காரி, s. A dancing girl.

நாட்டியப்பிரியன், s. An epithet of Siva, சிவன். 2. One fond of stage plays, நடனப்பிரியன்.

நாட்டியம்பண்ண — நாட்டியமாட, *inf.* To dance, as a dancing girl.

நாட்டு, s. A thing set up, a fixture, ஸ்தாவரம், as in கைநாட்டு.

நாட்டு, கிறேன், நாட்டினேன், வேன், நாட்ட, v. a. To set up, fix, plant, place in the ground—as a pole; to erect, insert, நட. 2. To establish law, customs, rules, to lay down, as a theory, opinion or assertion, ஸ்தாபிக்க. 3. To establish one in life, வாழ்விலிருத்த. 4. To establish fame, or reputation, கீர்த்திநாட்ட. (c.)

அவனோடேயெழுத்தாணிநாட்டமாட்டான். He could not set up writing styles with him; i. e. could not compete in writing.

இந்தக்கட்டியிலேகத்திநாட்டப்படாது. The lancet cannot be inserted in this tumor.

உலகத்தைநாட்டினவனார். Who established the world? (*poetic.*)

தண்ணீரிலேகாலைநாட்டவொட்டவில்லை.... The water will not allow the foot to touch the ground.

கல்யாணக்கால்நாட்டுதல், v. noun. Erecting the first pole of a nuptial booth. 2. Fixing the அரசாணிக்கால், in the middle of the booth, around which the parties must pass in certain ceremonies.

குடிநாட்ட, *inf.* To plant a colony.

வசைநாட்ட, *inf.* To bring one's name, family, &c., into ill-repute, to injure one's character.

நாட்டை, s. A mode of singing, drumming, &c., including several tunes, நிபண். 2. A tune, one of the thirty-two, இராகம்.

நாட்பு, s. [*also* ஞாட்பு.] Strength, vigor, force, பலம். (*p.*)

*நாணகம், s. [*com.* நாணயம்.] A coin or any thing stamped. W. p. 460. NANAKA.

நாணகபரீட்சை, s. Assaying.

நாணம், s. Delicacy, modesty, shyness, as one of the four feminine qualities. See நாற்குணம் under குணம். 2. Bashfulness of some relations toward each other, as of the mother-in-law toward her son-in-law, the father-in-law towards his daughter-in-law, &c., கூச்சம். 3. Slight embarrassment, in the presence of a stranger or a superior; delicate regard, esteem or respect, அச்சம். 4. Yielding, as a disease to its antidote; shying—as some beasts, or shrinking—as some plants from the touch, கூச்சம். (c.)

நாணங்கெட்டவன், *appel. n.* A man devoid of shame.

நாணக்கேடு, v. noun. Impudence, immodesty, shamefulness.

நாணப்படுதல், v. noun. Being shamefaced, bashful, modest, &c., வெட்கப்படுதல்.

அவருடையசொல்லுக்கு இவன்நாணப்படுவான். He has respect for the gentleman's word.

*நாணயம், s. A coin as stamped with an impression. See நாணகம். (c.)

நாணயவட்டம், s. A premium in the exchange of coin.

நாணயவைப்பு, s. Deposit of money.

நாணயம் — நாணையம், s. Uprightness, honesty, probity, honor, truth, punctuality, நேர்மை. 2. Trust, credit, a good name, superior worth or honor, உண்மை. 3. Extraordinary facts, or supposed facts, in nature, as of the tiger, when missing in a leap, not turning upon the object of his leap; the bos grunniens, when entrapped, making no effort to escape; a cobra retiring from the sight of the நாகதாளி root; the occurrence but once of the small pox, &c., கிருணயம். 4. Supposed virtue of an action, plant, &c., as the presenting of an herb to the eye as a cure of ophthalmia, தவறுமை. 5. [*prov. in combi.*] The perforation of the septum of a beast's nose for inserting a rope to guide it, or the rope thus inserted, மூக்குத்துளைத்தல். 6. That which is choice or rare as a commodity, உயர்ச்சி. (c.)

நாணயத்தால்கொடுக்கல்வாங்கல், v. noun. Dealing on trust.

நாணயக்கயிறு, s. Rope passed through a bullock's nose, to guide it.

நாணயக்காரன், s. An upright dealer.

நாணயங்காட்டுதல், v. noun. Acquitting one's self honourably.

நாணயங்குத்துதல், v. noun. Perforating the septum of a bullock's nose, மாட்டுக்குமூக்குத்துளைத்தல்.

நாணயஇல்லம், s. [*prov. vul.* இலம்.] Dishonesty, breach of trust.

நாணயச்சரக்கு, s. A commodity of value liable to depreciate from being kept.

நாணயஞ்செலுத்துதல், v. noun. Acquitting one's self honorably in business.

நாணயத்தப்பு, s. Dishonesty.

நாணயபங்கம், s. Loss of credit. 2. Disgrace, as to a woman in appearing before a court.

நாணயப்பணம், s. A good coin—oppo. to தேய்கடைப்பணம், one worn.

நாணயப்புடவை, s. Fine cloth.

நாணயவிலை, s. A fair and proper price.

நாணல், s. Reed, bulrush, நாணற்புல், Sacchorum spontaneum, *L.*; *perhaps as hanging its head.* 2. See நாணு, *v.*

நாணவந்தான், s. See நாணுவம்.

நாணுங்கள்ளி, s. A kind of milk weed as இலைக்கள்ளி, Euphorbia Nivulia, *L.* (*Beschi.*)

நாணி, s. A bow string, வின்னாரி. 2. See நாணு.

நாணித்தல், v. noun. [*improp. for* நாணுதல்.] [*prov.*] Being shy, bashful.

நாணு, கிறேன், நாணினேன், வேன், நாண, v. n. To feel bashful, to be modest, or coy, as a woman, கூச. 2. To be shy, to shrink back, as from a forbidding sight; to feel repugnance or dislike, பின்னிட. 3. To acquiesce or yield through regard, அடக்க. 4. To shrink from the touch, as some vegetables; to yield, as disease to medicine, வாட. 5. To be shy, and run away, as snakes, &c., are said to do when certain herbs or roots are shewn, அஞ்ச. 6. [*prov.*] To be influenced unfavorably as some trees or plants by nearness to the cocoa; to be uncongenial, to each other, as the red and white lotus, பிணங்க. (c.)

மாமியாரைக்கண்டுமருமகள்நாணுகிறதுபோலே...... As the daughter-in-law is embarrassed in presence of her mother-in-law.

நாணி, s. A modest person, நாணமுடையாள்.

நாணுகம், s. A horse, குதிரை. (சது.)

நாணுவம், s. [*com.* நாணவந்தான்.] A bird, *Port.* Martinho; நாகணவாய்ப்புள், Gracula tristis.

நாணையம், s. See நாணயம்.

நாண், s. [*also* ஞாண்.] String, கயிறு. 2. A bow-string, வின்னாரி.

நாணிறக்க, *inf.* To slacken the bow.

நாணேற்ற — நாணேறிட — நாண்பூட்ட, *inf.* To bend the bow.

நாண், *s.* Modesty, bashfulness, shame. 2. One of the four female qualities as நாணம்.

நாணுடைமை, *s.* Modest decorum, (குறள்.)

நாண்மீன், *s.* A lunar constellation, of which there are twenty-seven. See நட்சத்திரம்; [*ex* நாள்.]

*நாதம், *s.* Sound in general, சத்தம். 2. Musical sound, blast of a trumpet or chank, சங்கோசை. (*c.*) 3. A semicircular, or hieroglyphic, in mystic writings, மந்திரலிபியினரைவட்டம். W. p. 460. NADA. 4. Semen muliebre, சோணிதம். 5. In the Sidhanti system, one of the nine forms of deity, being the male linga or semen virile, which uniting with the semen muliebre, is the proximate cause of the subsequent forms of deity, and of all the varied forms of creation. See நவபேதம்.

நாதம்பறிந்துபோயிற்று. He is no more in power, (*lit.*) no more in tune.

நாதகீதம், *s.* Instrumental, and vocal music, a full concert of music.

நாதரூபம், *s.* The mode, form, or state of deity under the நாதம் character.

*நாதன், *s.* [*plu. and hon.* நாதர்.] The Supreme Being, கடவுள். 2. Siva, சிவன். W. p. 460. NATHA. 3. Argha, அருகன். 4. A guru, குரு. 5. A king, இராசன். 6. A master, a lord, a worthy person, எப்பொருட்குமிறைவன். 7. A husband, கணவன். 8. An elder brother, மூத்தவன். (சது.) 9. A great, eminent or holy person; a saint, a sage, முனிவன்.

சகநாதன், *s.* An epithet of Vishnu, as lord of the world. See சகம்.

நாதாக்கள், *s.* [*also* ஞாதாக்கள்.] Saints, sages, ஞானியர்.

நாதாக்கள் மூதாக்கள் நாட்களிலே. In the time of our ancestors and eminent men.

*நாதாந்தசோதி, *s.* The highest form of deity, as pure effulgence, கடவுள்.

நாதார், *s.* (*Pers.*) The poor; poor ryots, ஏழைக்குடிகள்.

நாதார்பாக்கி, *s.* Balance due by poor ryots.

நாதி, *s.* The son, or a near relative who performs the funeral rites. See ஞாதி.

பகர்ச்சி, *s.* Speech, utterance, word, சொல்; [*ex* பகர், *v.*] (*p.*)

பகர்ச்சிமடவார். The chitchatting women.

*பகல், *s.* Day, as distinguished from night, day time, பகற்காலம். 2. Mid-day, noon, மத்தியானம். (*c.*) 3. Light, radiance, splendor, பிரகாசம். 4. The sun, சூரியன். [*from Sa. B'haga.* W. p. 610.] 5. A period of two Indian hours, a *muhurta*, முகுர்த்தம். 6. Day of twenty-four hours, நாள். 7. Middle, நடு. 8. Middle or main peg in a yoke, நுகத்தாணி. 9. [*in combin.*] State, birth as முற்பகல், the former birth.

பகலைக்குமேலே. After mid-day; in the after-noon.

பகலுக்கு—பகலைக்கு. For the day or for noon, as food, &c.

பகலே. [ஏ, *emphatic.*] In the day time—as அவன் பகலேபோய்விட்டான்.

பகல்போலேநிலா. Moon-shine as clear as day.

பட்டப்பகலிலே. In broad day-light; at mid-day.

பகல்மார்—பகல்மாறு. In the day-time, daily.

சைனர்கள்பகல்மாறுசாப்பிடுவார்கள், இராமாறுசாப்பிடார்கள். The Jainas eat in the day-time, not at night.

பகலசனம்—பகற்சாப்பாடு, *s.* Dinner.

பகலவன், *s.* The sun, as author of the day, சூரியன். 2. The second lunar asterism, பரணிநாள்.

பகலோன், *s.* The sun as பகலவன்.

பகல்மானம்-பகன்மானம், *s.* [*in astron.*] Length of the day-time.

பகல்முகுர்த்தம், *s.* An hour deemed auspicious, occurring by day.

பகல்வத்தி-பகல்வர்த்தி, *s.* [*in pyrotechnics.*] Blue lights, made of saltpetre, brimstone, orpiment, indigo, antimony and camphor, making night appear as day.

பகல்விடுதி, *s.* Day-lodging.

பகல்வெளிச்சம், *s*, Day-light.

பகல்வெள்ளி, *s.* Stars seen by day.

பகல்வேஷம், *s.* Masking, or disguising one's self by day; being more difficult than by night.

பகற்கள்ளன்—பகற்றிருடன், *s.* A day-light-thief, a high-way-robber. 2. [*in reproach.*] One who takes another's property by force, asserting a false claim.

பகற்காலம், *s.* The day-time. 2. [*Chris. usage.*] The period of one's life.

பகற்குறி, *s.* [*in love poetry.*] Place chosen by lovers for meeting in private by day.

பகற்பாடு, *s.* The day time, பகற்காலம். 2. [*among the poor.*] Burden for the day.

கடும்பகல், *s.* Broad day. (நீதிநெறி.)

*பகவதி, *s.* The goddess of virtue, தருமதேவதை. 2. Parvati, பார்வதி. 3. Durga, துர்க்கை. [*from Sa. B'hagavati,* any goddess.]

பகவதிநாள், *s.* The eleventh lunar asterism, பூரநாள். (சது.)

*பகவன், *s.* The Supreme Being, கடவுள். 2. Argha, அருகன். 3. Siva, சிவன். 4. Vishnu, திருமால். 5. Brahma, பிரமன். 6. Buddha, புத்தன். 7. A Guru, குரு; [*ex* பகம்.] —*Note.* It is also applied to the regents of the planets, to the gods of the elements, and sometimes to sages, and *Rishis.*

பகவற்பத்தன், *s.* One devoted to the deity, being one of the six names given to such as are ripe for emancipation, தேவபத்தன்.

பகவற்கீதை, *s.* A section of the Mahabarata. See கீதை.

*பகவான், *s.* The Deity, the Supreme, கடவுள். 2. As an affix to the name of any of the superior deities. (*c.*) 3. One of the twelve supposed suns—as பகன். See துவாதசாதித்தர்; [*ex* பகம்.]

பகவு, *s.* Parting, division, separation, cleft, பிளப்பு. 2. A slice, a bit, துண்டு; [*ex* பகு, *v.*] (*p.*)

பகழி, *s.* An arrow, அம்பு. 2. Foot of an arrow, அம்பின்குதை. (சது.)

பகழிமாரி. A shower of arrows. (*p.*)

*பகன், *s.* One of the twelve suns, so called, or solar deities, as பகவான். W. p. 610. B'HAGA. 2. A giant, பகாசுரன்.

பகன்றை, *s.* The கிலுகிலுப்பை shrub, Crotalaria verrucosa, *L.* 2. The சிவேதை plant, Indian jalap. See சிவதை. 3. The சீந்தில் creeper. See சீந்தில்.

குத்துப்பகன்றை, *s.* A plant. See குத்து.

சிறுபகன்றை, *s.* Ruellia balsamica. (*R.*)

*பகாசூரவைரி, *s.* Bhîma, one of the Pandavas, வீமன். (சது.)

பகாப்பதம்—பகாப்பொருள். See under பகு, *v.*

*பகாலம், *s.* The skull, as கபாலம். W. p. 610. B'HAGALA.

*பகிடி, *s.* [*also* பகடி.] Jest, joke, wit, pun, repartee, விகடம். 2. Mockery, derision, scoffing, பரிகாசம். 2. A buffoon, a jester, a punster, பகிடிக்காரன். [*For the compounds, see* கேலி.] See B'had'i. W. p. 611.

பகிடியைப் பாம்புகடித்தாற்போலிருக்கிறது. It is like a jester bitten by a snake.

பகிடிக்கதை, *s.* A story told to excite laughter.

*பகிஷ்காரம், *s.* Expulsion, degradation. (*R.*)

பகிஷ்கரிக்க — பகிஷ்காரம்பண்ண, *inf.* To expel from a caste or sect, to degrade.

*பகிரங்கம், *s.* [*also* பயிரங்கம்.] Publicity, மறைப்பின்மை; [*ex Sa.* Bâhir, *an indeclinable particle meaning*, out, on the outside.] See W. p. 745. VAHIRANGA. (*c.*)

*பகிரண்டம், *s.* [*com. with* அண்டம்.] The surrounding universal space, firmament, heaven, அண்டத்தின்வெளி; [*ex* அண்டம்.]

பகிரு — பகிர், கிறேன், பகிர்ந்தேன், வேன், பகிர, *v. a.* To divide in shares, distribute, parcel out, apportion, பங்கிட. (*c.*) See வகிரு.

பகிர்ந்துகொடுக்க, *inf.* To distribute.

பகிர், *v. noun.* A piece cut off, a section, பங்கு.

பகிர்ச்சி, *v. noun.* Separation, division, பிரிவு.

*பகினி, *s.* A sister, உடன்பிறந்தாள். W. p. 610. B'HAGINI.

*பகினநேத்திரம், *s.* One of the thirteen kinds of apoplexy. See சன்னி.

*பகீரதன், *s.* A king whose austerities are fabled to have brought the Ganges from heaven, சூரியகுலத்தரசரிலொருவன். W. p. 610. B'HAGIRATHA.

பகீரதி, *s.* (*St.*) The river Ganges, கங்கை.

பகீரிடுதல் — பகீரெனல், *v. noun.* Being greatly terrified, அச்சக்குறிப்பு.

பகீரென்றுபற்றினான். He was suddenly inflamed.

வயிறுபகீரென்ன, *inf.* To be moved in the entrails through sudden fear.

*பகு, *adj.* [*Tamil* வெகு.] Many. W. p. 601. BAHU.

பகுவசனம், *s.* [*in gram.*] Plural number.

பகு, கிறது, [*p.* பக்கது.] ந்தது, ம், பக, *v. n.* To part, divide, separate into branches, to ramify, as a tree or a family, கிளைக்க. (குறள்.) 2. To be at variance, to be disunited, பிரிய—as இழைபகஅம்பெய்தான், he shot an arrow so as to split a thread. (*Beschi.*)

பகாப்பதம், *s.* [*neg.* பகா.] A primitive, indivisible word, as வில், a bow.

பகாப்பொருள், *s.* [*neg.* பகா.] An epithet of God, the indivisible.

பகுபதம், *s.* A compound word or one which may be divided—oppos. to பகாப்பதம்.—*Note.* It is of two kinds, பெயர்ப்பகுபதம், a compound noun as பொன்னன், and வினைப்பகுதம், a compound verb, as நடந்தான்.

பகுபதவுறுப்பு, *s.* The six constituent parts of a word: பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம், which see.

பகுவாய், *s.* A large mouth, an open mouth, அகன்றவாய். 2. A large mouthed vessel, தாழி. (சது.)

பகுவாய்க்கொள்கலம். A vessel with a large mouth.

பகுவாய்ப்பறை. A large drum.

பகு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To divide, distribute, apportion, allot, destine, பிரிக்க. 2. To give, ஈய. 3. To cut off, தறிக்க. 4. To cut in two, துண்டிக்க.

இன்னபடியென்றுபகுத்துப்போட்டான். He explained it distinctly.

பகுத்தறிய — பகுத்துணர, *inf.* To distinguish, discriminate.

பகுத்தறியுமறிவுடையஆத்துமா. The rational soul.

பகுத்தறிவு, *v. noun.* [*substantively.*] Reason, rationality, discriminating knowledge as possessed by men.

பகுத்தறிவுள்ளவன், *appel. n.* [*neg.* பகுத்தறிவிலான், பகுத்தறிவிலி, *masc. and fem.*] A judicious person.

பகுத்துப்பார்க்க, *inf.* To survey every part.

பகுப்பு, *v. noun.* Division, classification.

பகுதி, *s.* Portion, part, allotment, division, பங்கு. 2. Tax, tribute, திறை. 3. Division of an army, படை. (சது.)

பகுதிகட்ட, *inf.* To pay a tax.

பகுதிக்கால், *s.* The sign of உ in some characters. See கால்.

*பகுதி, *s.* Primitive nature, homogeneous matter, being the passive, generating cause, இயல்பு, as ஐம்பகுதி, the five genders. 2. The radical form of a word without the affixes, சொன்முதனிலை; [*from Sa. Prakruti.* W. p. 557.] (சது.)

*பகுவபஞ்சம், *s.* One of the thirty-two Upanishads. See உபநிடதம்.

பகுவாய். See பகு, *v. n.*

*பகுளம், *s.* The dark half of a lunar month, கிருஷ்ணபட்சம். W. p. 602. BAHULA.

பகுளசத்தமி, *s.* The seventh day after the full moon. See திதி.

பகை, *s.* Hatred, enmity, dislike, repugnance, abhorrence, வெறுப்பு. 2. A foe, an enemy, an opponent, a rival, a competitor, பகைஞன். 3. Disagreement, counteraction, heterogeneousness, contrariety, as of light to darkness, or of medicine to the disease, விரோதம். 5. One of the five situations of a planet. See கிரகநிலை. (*c.*)

முப்பகை, *s.* The three enemies are: பைசாசு, the devil; 2. உலகு, the world; 3. உடல், the body or flesh. (சது.)

உட்பகை, கு, *s.* The six internal foes attached to the soul: காமம், lust; 2. குரோதம், anger; 3. உலோபம், avarice; 4. மோகம், sensuality; 5. மதம், pride; 6. மாச்சரியம், envy or malice.

பகைமுன்னெதிரேறல். Facing an enemy.

பகைமேற்செல்லல். Going against an enemy.

முற்பகைசெய்யிற்பிற்பகைவிளையும். He who hates will be hated in return. (*Avv.*)

இருளுக்குச்சூரியன்பகை. The sun is the foe of darkness.

பகைசாதிக்க, *inf.* To gratify one's anger. See சாதி, *v.*

பகைஞர், *s.* [*sing.* பகைஞன்.] Enemies, foes. (சது.)

பகைத்தானம், *s.* One of the five situations of a planet. See தானம்.

பகைத்திறந்தெரிதல், *v. noun.* Knowing an enemy's strength. (குற.)

பகைத்தொடை, *s.* [*in gram.*] The composition of words of opposite meaning, as முரண்டொடை.

பகைபடல், *v. noun.* Being displeased with, being at variance.

பகைமன்னர், *s.* [*pl.*] Hostile kings.

பகையகம், *s.* Battle-field, போர்க்களம்; [*ex* அகம், place.] (சது.)

பகையாளி, *s.* A foe, an enemy. (*c.*)

பகையாளிக்குடியைஉறவாடிக்கெடுக்கிறது. Destroying the habitation of an enemy by feigning friendship.

பகைவர், *s.* [*sing.* பகைவன்.] Enemies.

பகைவர்அரண்வளைத்தல். Besieging an enemy's fort.

பகை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To hate, oppose, விரோதிக்க. (*c.*)

பகைமை, *s.* Hatred, enmity, variance, விரோதம்.

*பகோளம், *s.* [*also* ககோளம்.] The celestial sphere, வானவட்டம்; [*ex* பம்.] See கோளம்.

*பக்கணம், *s.* A village or street of hunters, வேடர்வீதி. W. p. 490. PAKKAN'A. 2. Town, village, ஊர். (சது.)

*பக்கணம் — பக்ஷணம், *s.* Eating, devouring, consuming. See பட்சணம். W. p. 610. B'HAKSHAN'A.

*பக்கம்—பக்ஷம்—பட்சம், *s.* Side, புறம். (See அக்கம்.) 2. Contiguity, nearness, அருகு. 3. Place, இடம். 4. Faction, interest, party, பிரிவு. 5. Affection, friendship, kindness, attachment, நட்பு. 6. The half of a lunar month or fortnight. See அபரபக்ஷம், பூர்வபக்ஷம். 7. An argument, thesis, proposition advanced, கோட்பாடு. 8. The wing or feather, புட்சிறகு. W. p. 490. PAKSHA—*Note.* பக்கம், [*in logic.*] A two-fold relation:—1. புறப்பக்கம், or புறத்துப்பக்கம், an inference regarding exterior or secular matters; 2. உட்பக்கம், or அகப்பக்கம், connected with mental or religious truths. Each of these is applicable to two species of comparison: 1. நிகர்பக்கம், துல்லியபக்கம், ஒப்பாம்பக்கம், or சபக்கம், *proper comparison,* or deduction from analogy; thus for புறப்பக்கம், there is smoke, therefore there is fire; and for உட்பக்கம், regarding moral actions, originated in the mind; analogy refers them to maya, மாயை, as their basis. The agreement between this doctrine and the experience of a person, is ground of rational deduction. 2. நிகராப்பக்கம், ஒவ்வாதபக்கம், or விபக்கம், *improper comparison* involving incongruity, absurdity, impossibility; thus for புறப்பக்கம், to say "there is fire in water" is an absurdity in affairs of common life; for உட்பக்கம், to say that the basis of Siva's knowledge is மாயை, is an absurdity. In spiritual things the mental faculties, as well as the senses, are referred to மாயை as their basis, and medium of acquiring knowledge. The சூக்கும body, the immediate source of consciousness, is referred to the same principle; and when the soul is liberated from births these are resolved into their original principles.

பக்கத்திலேவாங்கிக்கொள்ளுதல். Borrowing in the neighborhood, or of others besides the persons in question.

அவர்பக்கத்துக்காரியகாரன். He is his agent.

எனக்குப்பக்கத்திலேஇரு. Sit by me.

பக்கக்கிரகணம், *s.* Eclipse of the sun and moon, or the contrary, in succeeding changes of the moon.

பக்கக்குடுமி, *s.* [*loc.* சிலுப்பா.] Men's hair-locks left growing over the ears, and tied behind.

பக்கசூலை, *s.* A pain in the side, inflammation of the liver. See சூலை.

பக்கச்செடில், *s.* A self torture, by running iron sticks, through the sides, See செடில்.

பக்கச்சொல், *s.* A word in one's favor.

பக்கச்சொல்லாளி, *s.* A spokesman, a puffer, an advocate.

பக்கத்துக்கிளி, *s.* [*prov.*] The one who passes in கிளித்தட்டு play. See கிளி.

பக்கத்துணை, *s.* An aid, a companion, a supporter.

பக்கத்தெலும்பு, *s.* A side-bone.

பக்கபாதம், *s.* Partisanship, &c. See பட்சபாதம்.

பக்கப்பவுத்திரம், *s.* A fistula on either side of the privities. See பகத்திரம்.

பக்கப்பிளவை, *s.* A cancer or carbuncle in the side.

பக்கவளை, *s.* A beam in the side of a bungalow or house, &c. See வளை.

பக்கவாட்டு, *s.* That which is aside, or beside, as an irrelevant question, or subject. 2. Sidelong.

பக்கவாதம், *s.* Partial or lateral palsy. See வாதம். 2. As பக்கபாதம்.

பக்கவாயு, *s.* Sarcocele, with swelling in the side.

பக்கவெட்டுப்போட, *inf.* To tickle one in the side.

பக்கவேர், *s.* Side root of a tree, not shooting downward.

பக்கனா, *s.* A stirrup, அங்கவடி. (*திவா.*)

*பக்கர், *s.* Relations, kindred, இனத்தார்; [*ex* பக்கம்.] (சது.)

பக்கல், *s.* [*a change of* பக்கம்.] Side. 2. One's people, class, tribe, இனம். (*c.*)

எனதுபக்கலிலேவந்துசேர்ந்தான். He has come to me for support, protection.

பக்கறை, *s.* [*for* பற்கறை.] Artificial blackness of the teeth.

பக்கா, *s.* (*Hind.*) Largeness, greatness, பெரியது—oppos. to கச்சா. 2. [*in combin.*] Notoriety—as பக்காத்திருடன், a great thief.

பக்காச்சேர், *s.* A weight of twenty-four *palams.* See சேர்.

பக்காளி, *s.* (*Hind.*) One who carries water in a leather sack on a bullock.

பக்காளிமாடு, *s.* The bullock of பக்காளி; *also in contempt.*

*பக்கி—பக்ஷி, *s.* [*com.* பட்சி.] A bird, any winged fowl, பறவை; [*ex* பக்கம், feather.] —பக்கி is used to denote a particular species.

பக்கிராசன்—பக்ஷிராஜன், *s.* The Brahmany kite, as king of birds, கருடன்.

பக்கி—பக்ஷி, *v.* To feed, &c. See பட்சி.

பக்கிட, *inf.* To throb as the heart through fear, &c., திடுக்கிட. 2. To give way, to bilge, as a ship, to part, crack, split, வெடிக்க. 3. [*also* பக்குக்கட்ட.] To form a scab.

பக்கிரி—பக்கிரி, *s.* (*Pers.*) A Fakeer; *also in contempt*—as பக்கிரிப்பயல்.

பக்கு, *s.* Outer bark of a tree, மரப்பட்டை. 2. Scab of a sore, புண்ணசறு. 3. Tartar on the teeth, பற்பற்று. 4. The dried mucus of the nose, சளிப்பக்கு. 5. Scum formed on a prepared dish, பொருக்கு. 6. Fracture, break, crack, பிளப்பு.

பக்குவிடுதல், *v. noun.* Gaping, parting, splitting, cracking, as the ground. 2. Breaking as the skin by a blow of a ratan.

பக்குப்பக்கெனல், *v. noun.* Throbbing rapidly, as the heart through fear, அச்சக்குறிப்பு. 2. Being in excess, abounding, மிகுதிக்குறிப்பு. (*c.*)

பக்குப்பக்கென்றுசிரித்தான். He laughed excessively.

பக்குப்பக்கென்றுவயிறுபற்றுகிறது. The belly is throbbing greatly as by hunger or sorrow.

பக்குப்பக்கென்றெரிகிறது. It burns with a blaze.

*பக்குவம், *s.* Suitability, fitness for use, the right age, stage or degree, தகுதி. 2. Maturity that which is matured by nature or art, which is come to perfection, முதிர்ச்சி. 3. Ability, cleverness, competency, திராணி. 4. Maturity of the soul for absorption, ஆத்துமபரிபாகம். 5. Puberty of a girl, தெருட்சி. 6. (*Beschi.*) An excuse, an apology, போக்கு. W. p. 490. PAKVA. (*c.*)

பக்குவமாய்ப்பார்த்துக்கொள். Take good care.

பக்குவசாலி, *s.* A competent person. 2. One mature for emancipation, பரிபாகி.

பக்குவஞ்சொல்ல, *inf.* To make an apology. 2. To give directions concerning any work or business.

பக்குவப்பட, *inf.* To become mature, as the soul. 2. To arrive at puberty, as a girl.

பக்குவமாக, *inf.* To become fit, competent or suitable. 2. As பக்குவப்பட.

பக்குவமாய்ச்சமைத்தல், *v. noun.* Cooking well, cooking to one's taste.

பக்குவம்பார்க்க, *inf.* To watch a fit time.

பக்குவர், *s.* [*pl.*] Persons devoted to sacred things, of whom are three classes: 1. கருமகாண்டிகர், those engaged in ritual observance; 2. ஞானகாண்டிகர், those occupied in meditation; 3. பத்திகாண்டிகர், those absorbed in devotion.

பக்குவவாளி — பக்குவன் — பக்குவி, *s.* A competent person, &c., as பக்குவசாலி.

பக்குவாசயம், *s.* [*in phys.*] The stomach, one of the five receptacles of the body as ஆமாசயம்.

பக்குவாத்துமா, *s.* One fit for heaven as பக்குவசாலி.

பக்கெனல், *v. noun.* Sounding as sudden laughter bursting out, ஒலிக்குறிப்பு. 2. Throbbing as பக்குப்பக்கெனல். 3. Parting, giving way, bilging, splitting, cracking, வெடித்தல். 4. Being sudden, சீக்கிரக்குறிப்பு.

*பக்தன். See பத்தன்.

*பக்தி, *s.* Faith, belief. 2. Worship, service. See பத்தி.

*பங்கஜம்—பங்கசம், *s.* See பங்கயம்.

பங்கம், *s.* [*prov.*] Wager, பந்தயம்.

*பங்கம், *s.* Diversity, division, dislodgement, வேறுபாடு. 2. Defeat, discomfiture, disappointment, தோல்வி. 3. Indecency, shame, disgrace, வெட்கம். 4. Distortion, contortion of the limbs, &c., நெளிப்பு, முடம். 5. Violation, desecration, prostitution, profanation, ஈனம். 6. Injury, detriment to one's person, reputation, &c., மானபங்கம். 7. Wave, அலை. 8. A tank, குளம். 9. A piece, துண்டு. W. p. 611. B'HANGA. 10. Mire, mud, குழைசேறு. 11. Sin, பாவம். 12. Dust, புழுதி. W. p. 491. PANKA.

அவனையங்கபங்கமழிக்கிறான். He vexes him.

என்னைப்பங்கம்பேசினான். He reproached me.

அவன்பங்கப்பட்டுப்போனான். He was ignominiously treated.

பங்கக்கேடு, *s.* [*vul.*] Disgrace, ignominy.

பங்கங்கொள்ள, *inf.* To deride one. (*Beschi.*)

பங்கசாதம், *s.* The lotus, தாமரை as பங்கயம்; [*ex* சாதம், produced.]

பங்கப்பட, *inf.* To be treated disgracefully, ignominiously, &c., அவமானப்பட. 2. To fall into disgrace, சிறுமைப்பட. 3. To be violated, desecrated, ஈனப்பட.

பங்கப்படுத்த, *inf.* To treat disgracefully, put one to shame, expose one. 2. To violate, desecrate, profane.

பங்கம்அழிதல், *v. noun.* Becoming disgraceful; losing one's honor, credit, &c.

பங்கேருகம், *s.* Lotus, as பங்கசாதம்; [*ex* உருகம்.]

சமயபங்கம், *s.* An unseasonable time.

பங்கம்பாலை — பங்கம்பாளை, s. A kind of medicinal creeper. See ஆடுதின்னாப் பாலை, இருமிநாசம்.

*பங்கயம், s. (St. பங்கசம்.) The lotus, தாமரை; [ex பங்கம், mud et யம்=சம், produced.]
பாதபங்கயம். Lotus footed.

பங்கயத்தவன், s. Brahma as possessor of the lotus, பிரமன்.

பங்கயன், s. Brahma, as on the lotus, பிரமன். 2. The sun, which when rising, causes the lotus to bloom, சூரியன். (சது.)

பங்கயாசனன், s. Brahma as the lotus seated, பிரமன்.

பங்களா, s. (Hind.) Bungalow.

பங்கா, s. (Hind.) A punkah or large fan, காற்றசைக்குமோர்கருவி.

பங்காரு, s. [Tel. బంగారు.] Gold, பொன்.

*பங்காளம், s. Bengal. 2. A tune. See வங்காளம்.

பங்காளி, s. A Bengali. 2. See பங்கு.

பங்கி, s. A man's lock of hair, ஆண்மயிர். 2. Hair, மயிர். (சது.)

பங்கி, s. (for.) The கஞ்சா plant. [Eng. Bang.]

*பங்கி, s. A division, separation, பிரிவு, as திரிபங்கி. W. p. 611. B'hangi.

பங்கீடு. See பங்கு.

பங்கு, s. Share, portion, part, dividend, parcel, பகுதி. 2. Allotment, assignment, appointment, நியமிப்பு. 3. Moiety, half, பாதி. 4. Copartnership, கூட்டு. (c.)
நான் உன்பங்கிலிருக்கிறேன். I am on your side.

பங்காளன் — பங்காளி, s. A partner, a fellow-sharer, a share-holder, a consociate, a partaker, a participator, கூட்டாளி.

பங்கிக்க, inf. [prov.] To sever, cut off, part, separate, divide, பகுக்க.

பங்கிட, inf. To divide, parcel out, distribute, apportion. 2. To allot, destine.

பங்கிட்டநாள், s. A lunar asterism belonging to two Zodiacal signs.

பங்கீடு, v. noun. Dividing, sharing, allotting, parcelling, பங்கிடுகை. 2. Adjustment, settlement of strife, disposal of affairs, திட்டம். 3. Measures, means, உபாயம். (c.)

பங்குபங்காகப்பிரிக்க, inf. To divide into portions.

பங்குபட்டநாள், s. The moon's continuing in a lunar mansion through parts of two days.

பங்குபாகம், s. Share, portion, பங்கு; sometimes பங்குபகிர்ச்சி.

பங்குபாகம்பிரித்துக்கொள்ள, inf. To divide an estate, as heirs. See தாயாதி.

பங்குபிரிந்தவர்கள், appel. n. Those who have divided an estate, as heirs.

பங்குவீதம், s. Equal shares.

பங்குள்ளவன், appel. n. [with dative.] Sharer with one.

*பங்கு, s. A lame person, a cripple, நொண்டி. 2. Saturn the planet as lame (slow in progress,) as a punishment for attempting to kick his aunt, சனி. W. p. 492. Pangu.

பங்குசம், s. Head-dress, தலைக்கோலம். (சது.)

*பங்குனி, s. The name of a month, March into April, ஓர்மாதம். See பற்குனி. 2. The twelfth lunar mansion or asterism, உத்திரநாள். (p.)
பங்குனிமாதம்பகல்வழிநடந்தவன்பெரும்பாவி. He who travels by day in the பங்குனி month will suffer; i. e. from heat.
அவன்பங்குனியென்றுபருப்பதுமில்லைச் சித்திரையென்றுசிறுப்பதுமில்லை. He neither increases in March, nor decreases in April; i. e. he is always uniform.

பங்குனன், s. Arjuna who was born in பங்குனி, the twelfth lunar mansion.

பங்குனியுத்திரம், s. A special festival day occurring in பங்குனி month.

*பங்கேருகம், s. See பங்கம், Sa.

பசகள் — பசங்கள், s. [vul. for பயல்கள்.] Boys.

பச, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To become greenish, பசுமையாக. 2. To change in hue, complexion, color, as the skin through love-sickness; to turn sallow through affliction, துன்பத்தானிறம்வேறுபட. 3. To become dim, as the twilight, மங்கிப்போக.

பசப்பு, v. noun. Yellow or gold color, பொன்மை. 2. Greenness, &c. (சது.)
அவனிலேபசப்பில்லை. He is emaciated. 2. He is grown poor.

பசண்டை, s. Verdure, moisture, பசுமை. 2. [prov.] Easy circumstances, money at command.

பசந்து — பசுந்து, s. (Hind.) Any thing pleasing to the eye, refreshing to the sight, கண்ணுக்கழகு. 2. Elegance, beauty, attractiveness, சேர்த்தி. (c.)

பசந்தாயிருத்தல், v. noun. Being pleasing, attractive, engaging to the sight.

பசபசக்க, inf. To itch, தினவெடுக்க. (c.) 2. [prov.] To chatter or grumble in a suppressed tone, to mutter, முறுமுறுக்க.

பசபசத்தான், appel. n. A chatterer, a babbler, அலப்பன்.

பசபசெனல் — பசபசப்பு, v. noun. Feeling a crawling, itching, &c., as the verb.
பசபசென்றலட்டுதல். Teasing by continual talking.
பசபசென்றுதூறுதல். Drizzling as rain.
பசபசென்றுபேசுதல். Chattering a long story.
பசபசென்றுவிழித்தல். Staring through fear or shame.
பசபசென்றூருதல். Itching, crawling.

பசப்பு, கிறேன், பசப்பினேன், வேன், பசப்ப, v. n. To deceive; to allure, fascinate, gain the affections, எய்க்க. 2. To chatter, to talk too much; to tell idle stories, ஓயாமற்பேச. (c.)

பசப்பு, v. noun. Allurement, deceitful or flattering words, எய்ப்பு. 2. See பச.

பசமந்திரம், s. A kind of turmeric, மரமஞ்சள். (R.)

பசம்பை, s. A dove-tailing, in cabinet work. (R.)

பசலி, s. (Arab.) Fusly, a term designating the official revenue year of the Mohammedans, commencing on the twelfth of July. [Govt. usage.]

பசலை, s. Sallowness, greenishness of complexion, from love-sickness, or affliction, காமத்தாலுண்டாம்பசப்பு. 2. As பசளை.

பசலைநிறம், s. Sallow color from love-sickness.

பசளி, s. [prov.] Margin or head of a channel in irrigation, மடைமுகம். 2. See பசளை.

பசளை, s. [also பசலை, பயளை, prov. பசளி; poet. வயலை, or வயலைக்கொடி.] A class of plants, Spinage, portulaca oleracoa. 2. [fig.] An infant. 3. Manure, compost, எரு, vulgarly, பயளை. 4. Virtue of manure, எருவின்குணம்.—Of பசளை are: கொடிப்பசளை—வெள்ளைப்பசளை, a plant, Basella alba. L. செவப்புப்பசளை, Basella rubra; கொத்துப்பசளை, Basella lurida; சோழிப்பசளை, a variety of the same; பேய்ப்பசளை, a wild kind of Portulaca; வழுக்கைப்பசளை, Portulaca palimoides.

பசறு, s. (Tel.) The expressed juice of green herbs, பச்சிலைச்சாறு.

*பசனம், s. Cooking, சமையல்.

*பசனை — பஜனை, s. Worship, service. See சிவபஜனை. W. p. 611. B'hajana.

*பசாசு, s. [prop. பிசாசு or பிசாசம்.] A devil, vampire, goblin, demon, fiend; also பைசாசம்.

பசாசுபோலேதிரிதல், v. noun. Being melancholy, dejected; reckless. 2. Being avaricious. 3. Indulging vagrant habits.

பசாடு, s. [prov.] Film in the eye, speck in a gem, scums on the surface of water, &c., மாசு.

பசாடுபிடித்தல், v. noun. Forming as a film in the eye.

பசாடுரித்தல், v. noun. Taking a film from the eye.

பசாடை, s. [prov.] Scum, concretion on water, as பசாடு; not in good use.

பசாரி — பஜாரி, s. (Hind.) A harlot, a whore; a shrew, a scold. (c.)

பசாரித்தனம் — பசாரியாட்டம், s. The quarrelsomeness of a woman.

பசார், s. Native shoes, slippers; also called பைசார்.

பசார்ச்சோடு, s. A pair of slippers.

பசார் — பஜார், s. (Pers.) Bazaar.

பசானம், s. A kind of coarse paddy ripening late, ஓர்நெல்; also பிசானம். (Beschi.)

பசான், s. A kind of rice reaped in April or May as பசானர்.

பசி, s. Hunger, appetite, craving for food, one of the twelve causes of distress; burning from want of food in the stomach. See உயிர்வேதனை. (c.)
பசிருசிதேடாது. நித்திரைசுகந்தேடாது. Hunger seeks not dainties; drowsiness seeks repose.
பல்லாடப்பசியாறும். Hunger is lessened by having something between the teeth.
உம்முடையமுகத்தைப்பார்த்தாற்போலேபசிபோயிற்று. As soon as I saw your face, hunger left me, i. e. I lost all sense of trouble.

பசிகிடக்க, inf. [also பட்டினிகிடக்க.] To starve.

பசிகொள்ள, inf. To be hungry; to have a good appetite.

பசிக்கொடுமை, s. As பசிவருத்தம்.

பசிக்கொட்டாவி, *s.* Gnawing of hunger.

பசிச்சோர்வு, *v. noun.* Withering, through hunger.

பசிதாகம், *s.* Hunger and thirst.

பசிதணிக்க — பசிதீர்க்க — பசிமாற்ற— பசியாற்ற, *inf.* To appease hunger.

பசிதணியல் — பசிதீரல் — பசிமாறல்— பசியாறல், *v. noun.* Abating of hunger.

பசித்தாக்கம், *s.* As பசிவருத்தம்.

பசித்தீபனம், *s.* Appetite.

பசிபட்டினியாயிருத்தல், *v. noun.* Starving, being famished.

பசிபொறுக்க, *inf.* To endure hunger.

பசிபொறுதவன், *appel. n.* One who cannot endure hunger.

பசிமந்திக்க, *inf.* To lose one's appetite.

பசிமந்தித்துப்போயிற்று. The appetite is gone.

பசியறிந்துகொடுக்க, *inf.* To be mindful of another's hunger and feed him.

பசியிளைலேசாக, *inf.* To starve; to perish with hunger.

பசியின்மை, *s.* Want of appetite.

பசியெடுக்க, *inf.* To be hungry.

எனக்குப்பசியெடுக்கிறது. I am hungry.

பசியெழும்புதல், *v. noun.* Becoming hungry.

பசிவருத்தம், *s.* Gnawing or distressing hunger.

சிறுபசி, *s.* Slight hunger.

சிறுபசியாற்ற. To take tiffin, &c.

பசி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*impersonal.*] To be hungry, to have an appetite, பசியெழ. (*c.*)

புலிபசித்தாலும்புல்லைத்தின்னாது. Though a tiger be ever so hungry, he will not eat grass.

எனக்குப்பசிக்கிறது. I am hungry.

*பசியாத்தாபம், *s.* [*for* பச்சாத்தாபம், *which see.*] Contrition. (*R.*)

பசிரி — பசிரிக்கீரை — பயிரி, *s.* A garden herb used for curry, Portulaca quadrifolia, *L.* (*c.*)—It is of three kinds, குதிரைப்பசிரி, Trianthema crystallini; பெரும்பசிரி, Portulaca meridiana; and வறட்டுபசிரி, another variety.

பசு, *adj.* [*in combin.* பசிய, பச்சு, பச்சை, பாசு, பை.] Green, raw, &c. See பசுமை.

பசியமரம், *s.* Green tree.

பசுநரம்பு, *s.* [*com.* பச்சைநரம்பு.] Veins apparent in pregnant women, &c.

பாசடை, *s.* Green leaf.

பைங்கிளி, *s.* A green parrot.

பைந்தார், *s.* A green garland.

பைந்தினை, *s.* Yellow millet.

*பசு, *s.* A cow, பெண்பசு. [*the most common usage in Tamil.*] 2. A bull, எருது. 3. Taurus of the Zodiac, இடபஇராசி. 4. A living creature, சீவனுடையது. 5. A sacrificial ram, யாகத்துக்குரியஆடு. 6. Any animal, for sacrifice, மிருகம். 7. The soul, a sentient being or principle united with a body, or not; one of the three eternal uncreated principles called பசுபதிபாசம். W. p. 520. Pasu.

பசுத்தோல்போர்த்துப்புலிப்பாய்ச்சல்பாய்தல்....... Putting on a cow's skin and leaping like a tiger; i. e. assuming mildness, and using ferocity.

தன்னைக்கொல்லவருகிறபசுவைத்தான்கொன்றால்தோஷமில்லை. It is not a sin to kill a cow in self-defence.

பசுகரணம், *s.* Faculties of the soul.

பசுக்காத்தல், *v. noun.* One of the six occupations of Vaisyas; the care of flocks. See தொழில்.

பசுக்காவலர், *s.* [*pl.*] Cowherds—the caste, இடையர். 2. Any of the three divisions of the Vaisyas.

பசுஞானம், *s.* Nature, capacity or faculties of the soul. 2. Spiritual knowledge of the second degree, as distinguished from பதிஞானம் and பாசஞானம்; the former only being sufficient for salvation. 3. Limited knowledge of the soul as acquired by the senses. 4. The mode of existence of the soul, being itself intelligent, but subject to non-intelligence, by its moral evil, and connexion with matter.

காவேரிக்கரைப்பசுபோல்அலைகிறான். He wanders like a cow on the banks of the Kavery—discontented.

பசுத்தக்காளி — பசுவின்தக்காளி, *s.* A shrub, தக்காளி, Physalis.

பசுத்துவம், *s.* The nature, properties, &c., of the soul, ஆன்மதத்துவம்.

பசுநா, *s.* The பிராய் tree, (*lit.*) cow-tongue-leaved.

பசுநாகு, *s.* A female calf, a young cow, a heifer.

பசுபதி, *s.* (*St.*) Siva, as lord of souls, சிவன்; [*ex* பதி, lord.]

பசுபதிபாசம், *s.* The soul, deity and illusion or மாயை. See திரிபதார்த்தம்.

பசுபாசம், *s.* The entanglement of the soul with the body.

பசுபாவம், *s.* Sins against creatures, as murder and cruelty, in distinction from sins against God, உயிர்ப்பாவம்.

பசுபுண்ணியம், *s.* Meritorious deeds for the benefit of creatures.

பசுப்பட்டி–பசுமாட்டுப்பட்டி, *s.* A cow-fold.

பசுமந்தை, *s.* A herd of cows, பசுக்கூட்டம்.

பசுமாடு, *s.* A cow.

பசுமுன்னை, *s.* A tree, a variety of Premna integrifolia with small leaves.

பசுமோர், *s.* Butter milk, whey of cow's milk.

பசுவதி, *s.* [*prov.*] A good natured person, gentle as a cow; [*ex* வதி.]

பசுவதை, *s.* (*St.* கோவத்தி.) Slaughter of a cow, regarded as a great crime.

பசுவன், *s.* [*prov.*] A rennet bag.

பசுவின்கன்று, *s.* A calf.

பசுவின்தயிர், *s.* Curds of cow's milk.

பசுவின்நெய்—பசுநெய், *s.* Cow's ghee.

பசுவுக்குவாயுறைகொடுத்தல், *v. noun.* Feeding a cow; one of the thirty-two meritorious deeds.

பசுந்து, *s.* (*Hind.*) Pleasing to the eye, &c. See பசந்து.

பசுமை, *s.* Greenness, verdure, rawness, பச்சை. 2. Coolness, moistness, freshness, செழுமை. 3. Elegance, beauty, pleasantness, குளிர்ச்சி. 4. Essence, substance, essential part of a thing, சாரம். 5. A greenish yellow, as distinguishing one of the two kinds of gold, பொன்னிறம். 6. A Cashmere shawl, also பச்சைச்சால்வை. 7. (சது.) Reality, truth, honesty, உண்மை. 8. (*fig.*) Easy circumstances, prosperity, செல்வம். (*c.*)

உள்ளபசுமைசொல்லு. Speak to the point, declare the substance.

பசுங்கதிர், *s.* The moon as cool rayed, சந்திரன்கதிர். 2. See கதிர்.

பசுங்கதிர்த்தே. The moon, or the cool rayed deity. (சது.)

பசுங்கரந்தை, *s.* A plant. See கரந்தை.

பசுங்காய், *s.* Rice or other grain in the ear but not quite ripe. 2. An unripe fruit.

பசுங்காய்ப்பதம், *s.* A stage in the ripening of grain.

பசுங்கிளி, *s.* As பைங்கிளி, under பசு.

பசுங்குடி, *s.* A family of good extraction, of respectability. 2. See குடி.

பசுங்கொற்றான், *s.* A creeper.

பசுங்கோரை, *s.* A kind of grass.

பசுந்தரை, *s.* Grassy ground, verdant field, &c.

பசுமையுள்ளவன் —*பசையுள்ளவன், *appel. n.* A man in good circumstances.

பசும்பயறு, *s.* [*com.* பாசிப்பயறு.] A kind of lentils, as பச்சைப்பயறு.

பசும்பிடி, *s.* A species of ever-green, the பச்சிலை tree. See தமாலம். (சது.)

பசும்புல், *s.* Green grass, green sward. 2. (சது.) Growing corn, விளைபயிர்.

பசும்புற்றரை, *s.* As பசுந்தரை.

பசும்பொன், *s.* Fine gold. 2. Gold of a greenish yellow, as distinguished from செம்பொன்.

பச்சடி, *s.* A kind of seasoning for food, like pickles, தொக்கு. [*Tel.*] 2. [*prov.*] Prosperity, command of money, பாக்கியம்; [*ex* பசுமை.]—Of பச்சடி, are பாகற்காய்ப்பச்சடி, pickle of பாகல் fruit; மாங்காய்ப்பச்சடி, mango pickle; வாழைப்பூப்பச்சடி, pickle of plantain flowers.

பச்சடிகண்டால்ஒட்டடிமகளே. My daughter, if you see [your lover] prosperous, cling to him. [*spoken by a time-server.*]

பச்சடியன், *s.* [*prov.*] A white and black bull or cow.

பச்சரிசி, *s.* Rice hulled without boiling; for flour, &c. See புழுங்கலரிசி.

பச்சிலை, *s.* A kind of ever-green, the தமாலம், Xanthocymus pictorious. 2. A green fresh leaf, பச்சையிலை. 3. A medicament consisting of leaves, பசுமருந்து.

பச்சிலைக்கிச்சிலிக்கிழங்கு. The medicament, and கிச்சிலி, an aromatic root.

பச்சிலைச்சாறுபோலே. Hue of leaf-juice, a leaf juice green.

பச்சிலைப்பாம்பு, *s.* [*com.* பச்சைப்பாம்பு.] A kind of green snake.

பச்சிலைமருந்து, *s.* Leaves used medicinally.

பச்சிலையோணான், *s.* [*prov.* for பச்சோணான், *which see.*] The chameleon.

பச்சிறைச்சி, *s.* Raw meat, flesh, &c. 2. A raw sore, பச்சைப்புண்.

பச்சுடம்பு, *s.* The tender body of an infant, or of a woman after child-birth. 2. One still sore from small pox, &c.

பச்செனல், *v. noun.* Being green, verdant, tender, or beautiful.

பச்சென்றவுடம்பு. A tender and beautiful body—said of the female sex.

பச்செனவு, *v. noun.* Greenness, verdure, பசுமை. 2. Moistness, dampness, sap, juice, ஈரம். 3. Plumpness, fulness, பொலிவு.

பச்செனவானமரம். A verdant tree.

உடம்பிலேசற்றும்பச்செனவில்லை. There is no flesh, no plumpness on him.

பச்சோந்தன்—பச்சோந்தி, *s.* The green lizard, the chameleon; of which the flesh is used in magic as a philter, &c.

பச்சோலை, *s.* Green olas; also பச்சையோலை.

பசேலெனல், *v. noun.* Being quite green.—

பசேலென்றிருத்தல். [*commonly* பச்சைப் பசேர்.] Being very green.

பசை, *s.* Stickiness, tenacity, ropiness, adhesiveness, பற்று. 2. Glue, paste, cement, பிசின். [*Tel.* పస.] 3. Moisture, sap, juice of meat, ஈரம். 4. Animal or vegetable gluten, that which causes fulness, firmness, plumpness, &c., in animal or vegetable bodies; glutinous substance in fruits, roots, &c., சாரம். 5. Love, affection, compassion, அன்பு. 6. [*with* இரத்தம்.] Boldness, sanguineness, கொழுப்பு. 7. (சது.) Gain, profit, lucre, property, இலாபம். 8. Desire, விருப்பம். 9. Boiled rice, and other ingredients, applied to a drum-head to improve the sound, முழவின்மார்ச்சனை. (*c.*)

அதிலேபசையில்லை. There is no hope in the case, we shall be disappointed; There is no hope of his recovery.

உடம்பிலே பசையில்லை. He is greatly emaciated.

அவர்முகத்திலேரத்தப்பசையில்லை. His countenance is gloomy, he looks dejected.

பசைபூசுதல், *v. noun.* Putting பசை on the right side of a drum.

பசையடி, *s.* [*prov.*] The first washing of a new cloth, without starching.

பசையற்றவன், *appel. n.* A person without kindness, or compassion, அன்பில்லாதவன். 2. One impoverished. See பசுமையுள்ளவன். 3. A man destitute of property, வறியவன்.

பசையாயிருக்க, *inf.* To be glutinous. 2. To be advantageous, profitable, lucrative, for one's interest. 3. To be kind, affectionate, compassionate.

பசையொட்டுதல், *v. noun.* Gluing or pasting any thing.

பசை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. n.* To be compassionate, kind, affectionate, அன்புகொள்ள. 2. To be liberal, beneficent, benevolent, சாரமுள்ளதாக. 3. [*prov.*] To become glutinous, viscous, tempered — as clay, &c., இளக. 4. *v. a.* To temper clay so as to make it viscous—as done by potters, white-ants, or hornets; kneading dough, பிசைய. 5. To fill cracks in iron by beating, ஒட்ட.

பசைந்தார், *appel. n.* [*pl.*] Friends, சினேகிதர். (சது.)

பசைமட்டை, *s.* [*prov.*] A piece of palmyra stalk used by blacksmiths in tempering the heat of fire by water, இரும்பைப் பசையுமட்டை.

பசைவு, *v. noun.* Compassion, kindness, affection, attachment, அன்பு.

பச்சடி, *s.* A kind of seasoning. [*See* பசுமை, *for this and other similar compounds.*]

பச்சவடம், *s.* (*Tel.* பச்சடம்.) A pair of cloths of the same kind. (*c.*)

*பச்சாத்தாபம், *s.* After-sorrow, repentance, regret, compunction, அநுதாபம். 2. Compassion, pity, இரக்கம்; [*ex* பச்சாத், after *et* தாபம், sorrow.] W. p. 520. PASCHATTAPA.

*பச்சிமம், *s.* The west, மேற்கு. (சது.) 2. (*St.*) Behind, afterwards, பின். W. p. 520. PASCHIMA.

பச்சிமகாண்டம், *s.* The New Testament. See காண்டம்.

விப்பிரபச்சிமபுத்தி. The wit of a brahman comes afterwards.

பச்சை, *adj.* Green, tender, young, unripe, raw, cool; intense; [*ex* பசுமை.]

பச்சைக்கயர்—பச்சைக்கைப்பு, *s.* [*prov.*] Extremely astringent, exceedingly bitter.

பச்சைக்கருப்பூரம், *s.* A greenish kind of drug. See கருப்பூரம்.

பச்சைக்கல், *s.* Unburnt brick, சுடாத செங்கல். 2. See கல்.

பச்சைக்கள்ளன், *s.* [*prov.*] A desperate thief, cheat, rogue; a villain.

பச்சைக்காய், *s.* Green fruit, fruit unripe or uncooked.

பச்சைக்காய்ச்சி, *appel. n.* [*prov.*] A tree with green fruit.

பச்சைக்கிளி, *s.* Green parrot. 2. Green grasshopper.

பச்சைக்குங்கிலியம், *s.* Green resin.

பச்சைக்குழந்தை, *s.* A tender new born infant.

பச்சைக்கூடு, *s.* [*prov.*] The living body, ஸ்தூலதேகம்.

பச்சைக்கூட்டோடேகயிலாயஞ்சேர்வாய். You will attain *kylaya*, the lowest heaven (of Siva,) alive, with vigorous health.

பச்சைக்கொல்லன், *s.* [*prov. in burles.*] A clumsy blacksmith; i. e. beating cold iron.

பச்சைச்சடையன், *appel. n.* An epithet of B'hairava, a form of Siva.

பச்சைத்தடி, *s.* Green sticks, used in making a bier.

விறைத்துப்பச்சைத்தடியாய்ப்போயிற்று. He is grown cold and stiff as a stick; said of one in a fit, &c.

பச்சைத்தண்ணீர், *s.* Cold water, unboiled water.

பச்சைத்தாள், *s.* Green stalks, showing immaturity in the corn.

பச்சைத்தோல், *s.* A raw, untanned skin, a felt. 2. New skin formed on a healing sore.

பச்சைநஞ்சு, *s.* Strong poison. 2. [*prov.*] An atrocious villain, தீயன்.

பச்சைநாடன்பழம், *s.* A kind of plantain with greenish streaks. (*Beschi.*)

பச்சைநாபி, *s.* A strong, vegetable poison. See வச்சநாபி under நாபி.

பச்சைபழுக்காஅடைத்தல், *v. noun.* Painting green and yellow.

பச்சைப்பசேலெனல், *v. noun.* Being very green, all green, verdant, flourishing, மிகுபசுமையாயிருத்தல்.

மரகதம்பச்சைப்பசேலென்றிருக்கிறது........The emerald is very green.

தோட்டம்பச்சைப்பசேலென்றிருக்கிறது. The garden is all verdant.

பச்சைப்பட்டி, *s.* [*prov.*] Raw or undried manure, put on land shortly before sowing, எரு.

பச்சைப்பதம், *s.* Immaturity of grain, &c. 2. The state of not being well boiled.

பச்சைப்பயறு, *s.* A kind of pulse for taking the oil from the head.

பச்சைப்பாக்கு, *s.* Unripe or undried areca-nut.

பச்சைப்பாம்பு, *s.* A kind of green snake.

பச்சைப்பாலகன் — பச்சைப்பாலன்— பச்சைப்பிள்ளை, *s.* A new-born infant.

பச்சைப்பால், *s.* Raw milk.

பச்சைப்பானை, *s.* An earthen pot not burnt.

பச்சைப்பிள்ளைத்தாய்ச்சி, *s.* A woman immediately after child-birth.

பச்சைப்புண், *s.* A raw sore. 2. Sore, as the body through pain, hard labor in child-birth, &c.

சரீரமெல்லாம்பச்சைப்புண். My body is sore all over.

பச்சைப்புல், *s.* Green grass as plucked for cattle.

பச்சைப்புழு, *s.* Green caterpillars, the palmer worm.

பச்சைப்புளுகன், *s.* A great boaster. 2. A notorious liar.

பச்சைப்புளி, *s.* Exceeding sourness.

பச்சைப்புறா, *s.* A green pigeon, or dove.

பச்சைப்பெருமாள், *s.* A kind of paddy that comes to perfection in three months, ஓர்நெல். 2. Vishnu, விஷ்ணு.

பச்சைப்பொட்டு, *s.* A green spot on the forehead, made with a needle and colouring matter. 2. A green spot on the forehead, to which medical properties are ascribed. 3. [*fig. prov.*] A false show; pretension to wealth, learning, piety, &c., பகட்டு.

பச்சைப்பொய், *s.* A downright lie.

பச்சைமண், *s.* Moist earth. 2. Tempered clay, as in unburnt pots-oppos. to சுட்டமண். See ஒட்டு, *v.*

பச்சைமரம், *s.* A green or living tree. 2. Unseasoned timber.

பச்சைமரம்படப்பார்ப்பான். His look would blight even a green tree.

பச்சைமா, *s.* Flour not well prepared for paste, &c. 2. Raw dough, paste.

பச்சையிரும்பு, *s.* Mere iron. 2. Untempered iron. 3. Cold iron.

பச்சையீரம், *s.* Great dampness, as of soiled clothes, &c., அதிகஈரம்.

பச்சையுடம்பு—பச்சையுடல், *s.* The tender body of an infant, or of a woman after-child birth, மெல்லியஉடல். 2. The body of a person recovering from small pox or other disease that fills it with raw sores, புண்ணுளஉடல்.

பச்சையுப்பு, *s.* Unmixed salt.

பச்சையெண்ணெய், *s.* Oil not heated.

பச்சைவன்னம், *s.* Green color, green paint.

பச்சைவில், *s.* The rain-bow.

பச்சைவிறகு, *s.* Green or undried firewood.

பச்சைவெட்டு, *s.* Medicinal minerals used raw, not calcined, எரிபடாமருந்து.

பச்சைவெண்ணெய், *s.* Butter churned from unboiled milk.

பச்சை, *s.* Greenness, verdure, as பசுமை. 2. Rawness, that which is uncooked, or half cooked—as food; unseasoned—as timber, வெசாதது. 3. Unripeness, immaturity, freshness, இளமை. 4. Rawness of an ulcer, &c., உலராதது. 5. Obscurity, ribaldry, vulgar language, இடக்கர்மொழி. 6. The emerald, மரகதம். 7. Vishnu, விட்டுணு. 8. The planet Mercury, புதன். (சது.) 9. [*prov.*] Present to a friend, or a new married pair, consisting of fruits, or uncooked grain, உலுப்பை. 10. Offering of fruits to a deity, to avert disease, தெய்வமுதலியவற்றிற்குப்படைப்பது. 11. Indelible green marks in the skin, by puncturing, உடம்பிற்குத்தும்பச்சை. 12. A plant, பூண்டு. (*R.*) See அரத்துப்பச்சை, Cressa Indica. 13. [*fig. prov.*] Intensity, excessiveness, மிகுதி; [*ex* பசுமை.]

பச்சைகட்டு, *s.* [*prov.*] A trifling present of fruits, commonly to a head man, பரிதானக்கொடுக்கை. 2. (*fig.*) A mitigative medicine, a lenitive, சாந்திமருந்து. 3. A mitigation, temporary relief.

பச்சைகுத்துதல், *v. noun.* Making marks on the body with a needle and green coloring matter. See குத்து, *v.*

பச்சைகொடுத்தல், *v. noun.* Sending a present of fruits to a wedding house, &c.

பச்சைபாடி, *s.* [*prov.*] A present of vegetables, as பச்சை.

பச்சைபிடித்தல், *v. noun.* [*prov.*] Seizing on some of the fruits brought to a wedding house—as the barber, washerman, &c.

பச்சைப்படிகொடுத்தல், *v. noun.* [*prov.*] Giving raw fruits as presents to Brahmans, pandarams, &c.

பச்சையனுப்புதல், *v. noun.* [*prov.*] Sending presents, of vegetables, fruits, rice, &c., to a new married pair, &c.

பச்சை, *s.* Skin, தோல். 2. Fragrance, பரிமளம். 3. A fragrant plant, புதர். (சது.)

பச்சோரூன். See under பசுமை.

*பஸ்மம், *s.* [*com.* பஸ்பம், *also* பற்பம்.] Ashes, சாம்பர். W. p. 615. B'HASMAN. 2. Metal reduced to medicinal powder.

பஸ்மாசுரன், *s.* An Asura. [*For particulars see note of* ஐவிரலி.]

*பக்ஷி, *s.* A bird. See பட்சி, பக்கி.

*பஞ்ச—பஞ்சம், *adj.* Five, five-fold, ஐந்து. W. p. 493. PANCHAT or PANCHAN.

பஞ்சகச்சஞ்சொருக, *inf.* To tuck up the cloth in five ways. See சொருகு, *v.*

பஞ்சகச்சாயம், *s.* Five kinds of cakes.

பஞ்சகதி, *s.* The five paces of the horse. See தூரகதி.

பஞ்சகந்தம், *s.* The five aromatics. See கந்தம்.

பஞ்சகம், *s.* Any thing of five parts.

பஞ்சகம்மாளர், *s.* [*also* பஞ்சாளர்.] The five castes of mechanics. See கம்மாளர், under கம்.

பஞ்சகர்த்தாக்கள், *s.* The five deities, or forms of deity performing operations for the benefit of souls. 1. பிரமா, creator, or evolver of the universe; 2. விட்டுணு, preserver, who furnishes each soul with its allotted portion of joys, and sorrows, as the results of former actions; 3. உருத்திரன், destroyer, reducing souls and worlds to their primitive elements; 4. மகேசுரன், obscurer, darkening the understanding, that the soul may act, and work off its accumulation of moral evil, so as to become ripe for salvation; 5. சதாசிவன், enlightener or illuminator, who imparts divine grace, and prepares the soul for emancipation, and union with the deity. See பஞ்சகிருத்தியம், under கிருத்தியம்.

பஞ்சகலாத்தானங்கள், *s.* The five parts of the body touched by the gurus in giving திட்சை.

பஞ்சகலை, *s.* The five developments of the soul in its beatification are; நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதம். (தத்துவ.)

பஞ்சகல்யாணி, *s.* A horse whose feet and forehead are white. See கலியாணி.

பஞ்சகன்னியர், *s.* [*pl.*] The five famous women worshipped by females, as able to confer benefits. See கன்னிகை.

பஞ்சகாவியம், *s.* The five ancient classic poems. See காவியம்.

பஞ்சகிருத்தியம், *s.* The five operations performed by five பஞ்சகர்த்தாக்கள். See ஐந்தொழில், கிருத்தியம்.

பஞ்சகுரோசஎல்லை, *s.* The distance of five calls or குரோசம், around Benares, within which no foreign religionist, or other unclean person, should come.

பஞ்சகோசம், *s.* The five sheaths of the soul. See கோசம்.

பஞ்சகோணம், *s.* A pentagon. See ஐங்கோணம்.

பஞ்சகோலம், *s.* The mixture of five spices, சக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், and சித்திரமூலம்; [*ex Kola*, pepper.]

பஞ்சகௌடம், *s.* The five divisions of Bengal or the கௌடம் country. See கௌடம்.

பஞ்சகௌவியம், *s.* The five products of the cow, used in ceremonial purifications, viz. milk, curds, ghee, urine and dung, ஆனிடத்தைந்து.

பஞ்சகௌவியங்கூட்டித்தெளித்தல். Mixing the five ingredients and sprinkling the the floor, &c.—*Note.* The same mixture is administered to the woman after child-birth; also sprinkled on the child at the time of purification.

பஞ்சகௌவியப்பிராசினம். Eating the above compound as a purification.

பஞ்சசத்தி, *s.* The five *saktis.* See சத்தி.

பஞ்சசயனம், *s.* The five kinds of beds. See சயனம்.

பஞ்சசிகை, *s.* The five parts of the body which the Shastras forbid to be shaved; the crown of the head, the two eye-brows, and the arms from the elbow to the hand.

பஞ்சசுத்தி, *s.* The five purifications. See சுத்தி.

பஞ்சணை, *s.* [*com. for* பஞ்சசயனம்.] The five kinds of mattresses, filled with silk-cotton, red cotton, white cotton, hair, or feathers. 2. See பஞ்சு.

பஞ்சதந்திரம், *s.* [*in politics.*] The five means of accomplishing one's object; 1. மித்திரபேதம், sowing discord among friends; 2. சகிர்லாபம், associating with equals; 3. சந்திவிக்கிரகம், associating with a foe and ruining him; 4. அர்த்தநாசம், spending one's property to gain an object; 5. அசம்பிரெட்சியம், acting without inquiry, examination, &c.

பஞ்சதந்திரக்கதை, *s.* Panchatantra.

பஞ்சதம்—பஞ்சதை, *s.* Death, dissolution of the five elements of whose aggregate the body consists, மரணம்.

பஞ்சதரு — பஞ்சதாரு, *s.* The five trees in Swerga. See ஐந்தரு, தரு.

பஞ்சதன்மாத்திரை, *s.* The five grounds of knowledge by the senses. See தன்மாத்திரை.

பஞ்சதாது, *s.* The five elements, earth, water, fire, air, ether.

பஞ்சதாரை, *s.* (*Tel* పంచదార.) Sugar, சருக்கரை.

பஞ்சதிராவிடம், *s.* The five provinces of Southern India. See திராவிடம்.

பஞ்சதிரவியம், *s.* The five productions of the cow used in purification. See கௌவியம்.

பஞ்சநகம், *s.* An elephant. 2. A tortoise, ஆமை. W. p. 493. PANCHANAKHA.

பஞ்சநகக்கூர்மையோன், *s.* A tortoise as having five divisions in its claws.

பஞ்சநதி, *s.* The Punjaub having five rivers, as famous for sacred bathing.

பஞ்சநிம்பம், *s.* The five parts of the Neem, or Margosa tree; the flowers fruit, leaves, bark and root; [*ex* நிம்பம், margosa.]

பஞ்சபட்சி, *s.* The five birds for augury. See பஞ்சபட்சிக்காதல், under காதல். —The letters, அ, இ, உ, எ, and ஒ, are applied to the birds, and the following accidents, உண்டி, feeding, நடை, walking, அரசு, governing, தூக்கம், sleeping, and சாவு, dying.

பஞ்சபட்சிக்காதல், *s.* A treatise on augury.

பஞ்சபட்சிவேளை, *s.* Augury from the eating, sleeping, walking, governing and dying of the five birds, between the full and the new moon. 2. An auspicious hour, ascertained by augury.

பஞ்சபர்வங்கள், *s.* Five religious ceremonial days in each fortnight.

பஞ்சபாணம், *s.* [*also* ஐங்கணை.] The five arrows of Kama, consisting of five kinds of flowers: வனசம், lotus; 2. சூதம், mango; 3. அசோகு, ashoka; 4. முல்லை, jasmine; 5. நீலம், blue water lily.

பஞ்சபாணன், *s.* Kama, the god of love, as armed with the five arrows, காமன்.

பஞ்சபாணாவஸ்தை, *s.* The five effects produced by the arrows of Kama; சப்பிரயோகம், thinking and talking of the person loved; 2. விப்பிரயோகம், sighing and lamenting; 3. சோகம், heat or feverishness, nausea and languishing; 4. மோகம், weeping and bewilderment of the faculties; 5, மரணம், death or suspension of the natural powers.

பஞ்சபாணி, *s.* Parvati, as armed with five arrows, பார்வதி.

பஞ்சபாண்டவர், *s.* [*pl.*] The five Pandavas. See ஐவர்.

பஞ்சபாதகம், *s.* [*also* பஞ்சமாபாதம்.] The five heinous sins: கொலை, murder; 2. காமம், lust; 3. களவு, theft or fraud; 4. கள்ளுண், drinking intoxicating liquor; 5. குருநிந்தை, abuse of the Guru. (சது.) —*Some omit* காமம், *and others,* குருநிந்தை. *and give* பொய், *instead.*

பஞ்சபாதகன், *s.* One guilty of the five heinous sins. 2. One very oppressive, and unjust, as பஞ்சமாபாதகன்.

பஞ்சபாத்திரம், s. A kind of vessel of five plates collectively, or made of five metals, used by advanced religionists, to hold water for purification, பஞ்சலோக பாத்திரம். 2. (R.) The centre piece of this vessel.

பஞ்சபூதம், s. The five elements; earth, air, fire, water, and ether.

பஞ்சபூதஅணு, s. The five atomic bases. See பரமாணு under பரமம்.

பஞ்சப்பிராணன், s. The five vital airs constituting life—commonly reckoned ten. See வாயு.

பஞ்சமகதி, s. Final bliss, liberation from births and absorption in the deity—there being four other states, மோட்சம்.

பஞ்சமகாயக்கியம், s. The five special sacrifices or oblations. See யாகம்; [ex மகா et யக்கியம்.]

பஞ்சமம், s. One of the five musical modes, இசையின். 2. One of the seven musical notes, சத்தசுரத்தொன்று. W. p 493. Panchama. See நிஷாதம்.

பஞ்சமலம், s. The five evils attaching to the soul, ஐவகைமலம்.

பஞ்சமன், s. A low caste man; (lit.) a fifth man, one not belonging to either of the first four castes, ஐந்தாஞ்சாதியான்.

பஞ்சமாசத்தம், s. The five kinds of musical sounds; also the sources of the sounds. See கருவி.

பஞ்சமாபாதகம், s. The five heinous sins, as பஞ்சபாதகம்.

பஞ்சமாபாதகன், s. A grievous sinner, one guilty of the five heinous crimes, பஞ்சபாதகன். 2. A very oppressive, unjust or cruel man, துஷ்டன். (c.)

பஞ்சமி, s. The fifth day of the moon, either in her increase or decrease, ஐந்தாந்திதி. 2. The last five of the lunar days; a death occurring on the first of these is portentous of death to five others in the house, or its vicinity; on the second day to four others, &c., on which account, if the death occur on the first day, the corpse is carried out through a hole made in the wall, the house is vacated for months, and various ceremonies are performed to appease the incensed goddess, அவிட்டமுதலைந்துநாள், commonly தனிஷ்டாபஞ்சமி. 3. The goddess Durga, துர்க்கை.

அவிட்டபஞ்சமி. The last five lunar days, as பஞ்சமி, 2.

பஞ்சமிதேவதை — பஞ்சமிப்பேய், s. [prov.] The tutelary deity of the five unlucky days.

பஞ்சமியிற்செத்தவீடு, s. A house forsaken in consequence of a death occurring in one of the பஞ்சமி days.

பஞ்சமுகாஸ்திரம், s. A five pointed weapon; [ex முகம், et அஸ்திரம்.]

பஞ்சமூலம், s. Five kinds of medicinal roots, of which there are two classes. See மூலம்.

பஞ்சமூலகஷாயம், s. A decoction of five different medicinal roots. See கஷாயம்

பஞ்சயாகம் — பஞ்சவெச்சம், s. The five daily sacraments or oblations, as பஞ்சமகாயக்கியம். See எச்சம்.

பஞ்சரத்தினம், s. Five precious stones. 2. The name of a treatise, ஓர்பிரபந்தம்.

பஞ்சராசிகம், s. Rule of five, ஐந்தொகைவினா.

பஞ்சராத்திரம், s. A sect of Vaishnuvas.

பஞ்சலக்கணம், s. The five parts of Grammar. See இலக்கணம்.

பஞ்சலிங்கம், s. The five kinds of Linga, represented by the five elements. See இலிங்கம்.

பஞ்சலோகம், s. The five simple metals. See உலோகம். 2. A mixture of the five, ஐவகைலோகக்கலப்பு.

பஞ்சவர்தூதன், s. Vishnu, once employed as a messenger for the five பஞ்சவர், or Pandavas, விஷ்ணு.

பஞ்சவர்ணம், s. The five colors; white, black, red, yellow and green.

பஞ்சவர்ணக்கிளி, s. The finest species of parrot. See கிளி.

பஞ்சவாசம், s. The five aromatics or spices. See பஞ்சகந்தம்.

பஞ்சவிஷயம், s. The object of the five senses; the whole material world. See புலன்.

பஞ்சாக்கரம் — பஞ்சாக்ஷரம், s. The five lettered incantation, சிவாயநம, which see.

*பர்க்கன், *s.* The sun, சூரியன். 2. Vishnu, விஷ்ணு. 3. Siva, சிவன். 4. Brahma, பிரமன்; [*ex* பர்க்கம்.]

*பர்ணம், *s.* (*St.*) [*in combin. com.* பர்ணகம்.] A leaf. See பன்னம்.

பர்தரப், *s.* (*Arab.*) [*com.* வருத்துருப்பு.] Dismissal, discharge, தள்ளுதல்.

*பர்த்தா, *s.* Husband. See பத்தா.

பர்த்தி, (*Hind.*) Instead of, as பதில்.

*பர்ப்படாகம்—பர்ப்பாடகம், *s.* A medical plant, ஓர்மருந்துப்பூடு, Pharnaceum cerviana, *L.* W. p. 516. PARPAT'A.

*பர்வதம், *s.* Mountain, மலை. See பருவதம்.

பர்வாநா, *s.* (*Pers.*) An order, a pass.

பல, *adj.* Many, several, diverse, sundry, manifold, numerous, &c., ஒன்றல்லன. [*Compare Sa. Bahula.*]—In combin. பல், பற், பன், as பல்பொருள், பற்பல, பன்மணி.

பலதுளிபெருவெள்ளம். Many drops make a great flood; i. e. many small sums make a great amount.

பலதீட்டுக்கொருமுழுக்குப்போடுகிறது. One bathing for various pollutions; i. e. many difficulties settled at once.

பலகலப்பு — பலகலவை, *s.* Mixture of diverse things, miscellany.

பலகலப்பு ஒருசாதி. A caste of mongrels; (*lit.*) several mixtures in one caste.

பலகாயம், *s.* Different spices.

பலகாரியம், *s.* Various things or affairs.

/ பலகாலம், *s.* Many days, a long time.

பலகாலும். Various times, frequently, often.

பலகோசம், *s.* Land registered in the names of several. (*Govt. usage.*)

பலசந்தமாலை, *s.* A poetic treatise containing one hundred stanzas, in which the verses are not uniform, but various and diverse, ஓர்பிரபந்தம். See பிரபந்தம்.

பலசம்பத்து, *s.* Various acquisitions, various kinds of wealth.

பலசம்பாரம், *s.* Spices. 2. Different spices.

பலசரக்கு, *s.* Various commodities, grocery, drugs or spices.

பலசரக்குக்கடை, *s.* A grocer's shop. See கடை.

பலசோலி, *s.* Many business.

பலதரம், *s.* Sundry times, often. 2. Various kinds.

பலதாரம், *s.* Plurality of wives, பலமனைவி.

பலதிரட்டு, *s.* A compilation, as கலம்பகம்.

பலதிரட்டுவாகடம், *s.* A medical compilation.

பலதுறை, *s.* (*lit.*) Many ways, பலவழி. 2. (*fig.*) Sundry affairs, ways, &c., நானாபேதம்.

பலதுறைப்பட்டு விரிந்தசெய்யுள். An extensive poem consisting of a great variety of themes.

பலதுறையிலும் நடக்கிறார்கள். They are conducting themselves in various ways, religious or other.

பலநாட்செய்தி, *s.* Reports, narrations, annals, chronicles of olden time, written or spoken. See நாள்.

பலபட, *inf.* To become many, to be divided into many parts, to ramify. 2. To be various, diversified, multiform, பலவிதப்பட. 3. To be divided as a party into factions.

பலபட்டடை, *s.* People of various castes. See பட்டடை.

பலபட்டறை, *s.* As பலபட்டடை. 2. A storeroom, in which diverse articles of furniture are kept.

பலபட்டுக்கொள்ள, *inf.* To differ, dissent, to jar.

பலபண்டம், *s.* Provisions, stores, various articles. See பண்டம்.

பலபல — பலப்பல — பல்பல — பல்லபல—பற்பல, *adj.* Many, various, &c., distributively.

பலபாடு, *s.* Various forms of distress, நானாவருத்தம். 2. Various scenes of disgrace, பலநிந்தை. 3. Diverse kinds of business, பலதொழில்.—*Note.* With உம், it signifies, great variety of suffering, &c.

வயிறுவளர்க்கப் பலபாடும் படவேணும். It is necessary to make various exertions to procure a livelihood.

பலபாடும்பட்டுத்தேறியிருக்கிறேன். I am now at last quite easy and tranquil, after so many troubles and hardships.

பலபெயர்த்திரிசொல், *s.* Different obscure names denoting an object.

பலபொருளொருசொல், *s.* A word with different meanings.

பலபொருள்குறித்த ஒரிடைத்திரிசொல், *s.* A particle difficult to be understood, and capable of being applied to different things.

பலமுகம், *s.* Various sides, directions, ways, means, sources, points, பலபக்கம்.

பலமுகத்திலும்வந்தார்கள். They came in all directions. 2. They fell on him on all sides.

பலமுகமாயோடுமாறு. A river flowing in various directions.

பல்முகத்திலுஞ்செலவு. Expenses on all sides.

பலமுறை, *s.* Sundry times, as பலதரம்.

பலமுறையும். Many times, often times, frequently.

பலவகை, *s.* As பலவிதம்.

பலவகைத்தாது, *s.* The seven constituents of the body, as சத்ததாது.

பலவரி, *s.* A row of simple consonants, in the alphabet, ஒற்றின்வருக்கம்

பலவழித்தோன்றல், *s.* A nephew, மருமகன். (சது.)

பலவறிசொல், *s.* [*in gram.*] A word in the neuter plural, அஃறிணைப்பன்மைச்சொல்.

பலவிசை, *s.* As பலமுறை.

பலவிதம், *s.* Multiformity, multifariousness, நானாவகை.

பலவினீட்டம், *s.* A collection of many things. (*p.*)

பலவினைத்திரிசொல், *s.* A difficult verb expressing different subjects, பலவகைவினைத்திரிசொல்.

பலவின்கூட்டத்தற்கிழமை, *s.* An inseparable quality relating to a noun of multitude—as படையதுதொகுதி. 2. A number of armies; opposite of ஒன்றன்கூட்டம்—implying abundance of the same kind of things—as நெல்லதுகுப்பை, a heap of rice.

பலவின்பால், *s.* [*in gram.*] The neuter plural, அஃறிணைப்பன்மைப்பால்.

பலவும். And many things, and the rest, &c.

பலகணி, *s.* A kind of lattice-window, சாளரம்; [*ex* பல *et* கண்.] (சது.)

பல்கறை, *s.* Shells, cowries—used, in some places—as coins, கவடி. (*c.*)

*பலகாரம், *s.* Pastry, confectionery, அப்பவர்க்கம். 2. Stores, provisions for a journey, தின்பண்டமுதலியவை. (*c.*) 3. Seat for riding on an elephant, யானைமேற்றவிசு. 4. [*ex* பலம், fruit.] Dessert after food, of fruits, &c., last course at table, பழவுண்.

பலகாரபக்ஷணம், *s.* Eating cakes.

பலகாரம்பண்ண, *inf.* To eat pastries. 2. To bake cakes, &c.

அவன்எமனைப்பலகாரம்பண்ணுவான். He will make pastry of Yama.

*பலகை, *s.* Board, plank, slab, tablet, slate, மரப்பலகைமுதலியன. (*c.*) 2. Shield, buckler, கேடகம். 3. A forehead-bone, *os frontis*, நெற்றியெலும்பு. W. p. 595. P'HALAKA.

பலகைக்கள்ளி, *s.* A kind of கள்ளி plant. See கள்ளி.

பலகைக்காந்தம், *s.* A flat loadstone-bar.

பலகைத்தளை, *s.* Land smoothed by drawing a board over it.

பலகைப்பா, *s.* Any part of the floors of a car, இரதத்தோருறுப்பு.

பலகைமரம், *s.* A weaver's instrument, நெய்வார்கருவியிலொன்று.

பலகையடிக்க, *inf.* [*com.* பரம்படிக்க.] To smooth a rice-field with a board.

பலகையறுக்க, *inf.* [*prov.* பலகையரிய.] To saw a board.

பல, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* [*com.* பெல.] To be or become strong, robust, powerful, staunch, உறுதிப்பட. 2. To be heavy or severe—as rain, wind, disease, வன்மையாக. 3. To become prosperous, powerful, well established or defended, as a king by armies, forts, &c., அதிகப்பட.

பலத்த, *adj.* Strong, powerful.

பலத்தகள்ளன், *s.* A notorious robber.

பலத்தடிக்க, *inf.* To blow hard—as the wind. 2. To beat soundly.

பலத்தவன், *appel. n.* One who is strong.

பலத்துக்கொள்ள, *inf.* To gain strength.

*பலசூதனன், *s.* Indra as the destroyer of பலன், இந்திரன். (சது.)

*பலட்சயம், *s.* Weakness. See பலம்.

*பலண்டு, *s.* Onion. See பலாண்டு.

பலண்டுறுகம், *s.* A kind of arsenic, ஓர்பாஷாணம். (*R.*)

*பலதேவன்—பலபத்திரன்—பலராமன், *s.* Balab'hadra, the eighth incarnation of Vishnu. See திருமாலவதாரம்.

பலபலெனல், *v. noun.* Glowing, radiating, issuing progressively—as rays of light in the morning dawn; gleaming, இலகுதல். 2. Rustling as falling leaves, ஒலிக்குறிப்பு. (*Beschi.*)

பலபலென்றுபொழுதுவிடிகிறது. It begins to dawn.

பலபலென்றுதிர்ந்தன. The fruits were fallen.

பலபலென்றுவந்தார்கள். They rushed quickly.

பலபலென்றுபல்லிசொல்லுகிறது. The lizard chirps.

*பலபை, s. Equinoctial shadow of the gnomon at noon. W. p. 518. PALAB'HA.

பலப்பட, inf. To grow strong, hard and settled, ஸ்திரப்பட. 2. To become profitable, நயப்பட. 3. To be pregnant, said of beasts, குலாக; [ex பலம்.] (c.)

பலப்பம், s. (Tel.) A kind of soft stone used to write on wooden slates, ஓர்வகை மாக்கல்.

பலப்பிக்க, inf. To cause to be strong, to make firm, to strengthen, பலப்படுத்த.

பலப்பேற, inf. [prov.] To grow strong, powerful, mighty, உரப்பேற.

*பலம், s. Strength, power, might, vigor, வலி. 2. Force, momentum, impetus, velocity, வன்மை. 3. Army, strength of forces, படை. 4. Firmness, உறுதி. [commonly பெலம்.] W. p. 599. BALA. 5. A weight, thirteen of which make a trifle over a pound, ஓர்நிறை. 6. Weights in general, நிறைகல். 7. (Sa. Pala.) Unripe fruit, காய். 8. Ripe fruit, பழம். 9. Result, consequence, fruit of former actions, வினைப்பேறு. 10. Benefit, profit, as பலன். 11. Gold, பொன். 12. Esculent roots, கிழங்கு. 13. [in astron. calcul.] The quotient, பாசனவிருத்தி. W. p. 594. P'HALA. 14. Flesh, தசை. 15. Brow, forehead, நெற்றி. See பலகை.

பலக்கேடு, s. Weakness, as பலட்சயம்.

பலங்கெட்டவன், appel. n. An impotent person.

பலங்கொள்ள, inf. To be strengthened, invigorated. [used only in the gerundial form.] 2. To be strong, forcible, impetuous as wind, or a current.

பலசாலி, s. A strong man, a champion. See சாலி.

பலச்சேதம், s. Injuring of a crop. See சேதம்.

பலஞ்செய்ய, inf. To be strong, powerful.

பலஞ்செய்கிறமருந்து. Strong physic.

பலட்சயம், s. Loss or failure of strength, வலிகுறைவு.

பலதானம், s. Presents or offerings of fruits to promote conception, கருப்பதானம்.

பலத்தியாகம், s. Spending the strength, devoting the energies, வலியிழக்கை. 2. Wasting the profit, பயனிழக்கை.

பலபந்தம், s. Force, violence. See பலவந்தம்.

பலபராக்கிரமம், s. Valor, bravery, prowess.

பலபாகம், s. Recompense, கைம்மாறு. 2. Ripeness, maturity, கனிமுதிர்வு. 3. The time of producing fruits, first fruits, கனிகொடுக்கும்பக்குவம்.

பலமூலசாகாசனர், s. [pl.] Vegetable eaters, those living on roots, and leaves, as hermits; [ex மூலம், சாகம், அசனம்.]

பலமூலசாகாதி, s. Fruits, roots, &c., கனி, கிழங்கு, இலை, முதலியன; [ex மூலம், சாகம், ஆதி.]

பலவான், s. As பலசாலி.

பலவீனம், s. Weakness, as பலக்கேடு.

பலேந்திரன், s. As பலசாலி.

பலம்பூஸ்—பலம்போஸ், s. (Hind.) A checkered sheet for mattresses.

பலர், s. Plurality of persons—many, several, various persons, அனேகர். 2. (சது.) Assembly, meeting, society, சபை; [ex பல.] (c.)

பலரறிசொல், s. News publicly known, பிரசித்தவார்த்தை. 2. Calumny, அலர்மொழி. 3. The plural of persons, உயர்திணைப்பன்மைச்சொல்.

பலரறியப்பண்ண, inf. To divulge secrets.

பலர்பால், s. One of the divisions of பால், gender and number, as அவர், மக்கள், &c. See பால்.

பலர்முகம்பார்த்தல், v. noun. Associating with many, as an adulteress.

*பலர்க்கம், s. Cheek, கதுப்பு. (சது.)

*பலவத்தர், s. One of the nine classes of gods. See வானோர்கணம்.

*பலவந்தம், s. [also பலபந்தம்.] Force, coercion, violence, outrage, &c., கட்டாயம். (c.)

பலவந்தக்காரன் — பலவந்தன், s. An outrageous man.

பலவந்தம்பண்ண, inf. To force, to do violence.

பலவன், s. [prov.] A medicinal herb, of which are two kinds, வெடிப்பலவன், one species; பேய்ப்பலவன், a wild kind.

*பலவு, s. [poetic form of பலா.] A jack-tree.

*பலன், s. Produce, result; effect good or bad, வினைப்பயன். 2. Profit, advantage, emolument, efficacy, proceeds, இலாபம். 3. Result of a horoscope or configuration of the heavens, accomplishment of a dream, omens, &c., சகுனபலம். 4. Unripe fruit; ripe fruit, காய். See பலம்.

இந்தவருஷம்பலன்கொஞ்சம். The produce of the fields for this year is small.

பலனாக, inf. To become profitable, to be useful.

பலனானகாரியம். A profitable thing, affair, &c.

பலனெடுக்க, inf. To derive profit, to gain.

பலன்காட்ட, inf. To show influence, commonly good, as planetary aspects. 2. To yield, as land its produce.

பலன்காண, inf. To accrue, as profit.

பலன்கொடுக்க, inf. To yield profit. 2. To yield fruit, as trees, &c.

பலன்செய்ய, inf. To yield profit, to be useful, advantageous, to be of use.

பலன்சொல்ல, inf. To interpret planetary indications, omens, dreams.

பலன்பட, inf. To be profitable, efficacious, as பலன்செய்ய. 2. To obtain profit.

பலன்படாதசிறை. A useless, run-away slave.

பலன்படாதநிலம். Unprofitable land.

பலன்படச்செய்வான். He will serve you profitably [spoken of a slave.]

பலன்லபிக்க, inf. As பலன்பட.

*பலன், s. A Rakshasa said to have been killed by Indra, ஓர்இராக்கதன். 2. As பலதேவன். W. p. 599. BALA.

*பலா, s. Jaca, or jack-tree whose fruit is sweet and very pulpy when ripe. (c.)—Artocarpus integrifolia. (Ains.)—சிறுபலா or முள்ளுப்பலா, a kind of jack-tree; வருக்கைப்பலா, a jack with hard fruit; ஈரப்பலா or வேர்ப்பலா, another variety.

பலாக்கன்று, s. A young jack-tree.

பலாக்காய், s. Unripe jack-fruit.

பலாக்கொட்டை, s. Kernels, seeds, of the jack-fruit. 2. The young jack-fruit, பலாப்பிஞ்சு.

பலாக்கொட்டைச்சவ்வு, s. The film surrounding the stone of the jack-fruit.

பலாக்கொட்டையோடு, s. The crust of the kernel in jack-fruit.

பலாச்சுளை, s. The pulp of jack-fruit.

பலாபாகம், s. A style of poetry. See பாகம்.

பலாப்பழம், s. Jack-fruit.

பலாமரம், s. Jack-tree, jack-wood.

*பலாகம், s. [also வலாகம்.] A stork, paddy bird, கொக்கு. W. p. 600. PALAKA.

*பலாகாரம், s. Fruit, dessert, பழவுணா. (Old Dic.) See பலகாரம்.

*பலாசம், s. Green, verdure, பசுமை. 2. Leaf, இலை. 3. The முருக்கு tree. W. p. 518. PALASA. 4. Jack tree, பலா.

*பலாசனம், s. (St.) [also பலாதனம்.] Parrot, கிளி; [ex பலம் et அசனம்.]

*பலாசி, s. Tree in general, மரப்பொது. W. p. 518. PALASIN.

*பலாசு, s. Green color. 2. Leaf, இலை. 3. The புனமுருக்கு tree, a wild species of the Butea frondosa. 4. The முருக்கு tree. See பலாசம்.

*பலாட்டிகம்-பலாஷ்டிகம்-பலாட்டியம், s. Strength, as பலம். 2. Force, violence, as பலாற்காரம்.

அவன்அதிகபலாஷ்டிகன். He is a very strong man.

*பலாண்டு, s. [improp. பலண்டு] Onion, ஈரவெண்காயம். W. p. 518. PALAN'DU.

*பலாத்காரம், s. See பலாற்காரம்.

*பலாந்தம், s. A bambu, மூங்கில். W. p. 595. PALANTA. 2. A tree that dies after bearing once, ஒருமுறைகாய்த்துப்படுமரம்; [ex பலம் et அந்தம்.]

*பலாபலம், s. Strong and weak; [ex பலம் et அபலம்.]

*பலாபலம் — பலாபலன், s. The profit and loss from astrological influences; [ex பலம் et அபலம், unfruitfulness.]

பலாபலனறிதல், v. noun. Knowing bad and good fortune by astrology. 2. Knowing the result as to a person or thing.

பலாபலன்சொல்லுதல். Predicting good and ill results in astrological divination.

*பலாயனம், s. Flight, retreat, defeat, as of an army or force, புறங்காட்டுகை. W. p. 518. PALAYANA. 2. [fig.] Tottering condition, precarious state, நிலைகுலைவு.

சேனைபலாயனமாய்ப்போயிற்று. The army is defeated.

*பலாரி, s. [Tamil வலாரி.] Indra as பலகுதனன்; [ex அரி.]

பலாரெனல், v. noun. Dawning, விடிதற்குறிப்பு. [In Jaffna, பலார்பற்றல்.]

பலாரெனவிடிய, *inf.* To break, as the dawn of day.

*பலாலம், *s.* Straw, வைக்கோல். W. p. 518. PALALA.

*பலாற்காரம், *s.* (*St.* பலாத்காரம்.) Force, coercion, violence; also வலோற்காரம். W. p. 600. BALATKARA.

*பலி, *s.* Sacrifice of an animal, regarded as food for a ferocious deity, either propitiatory or to obtain favors. 2. A sacrificial animal or offering, பலிமிருகம். 3. Boiled rice or other food, as an oblation presented to the guardians of the cardinal points. See சுற்றுப்பலி. 4. Boiled rice cast as an offering to crows, in reference to the manes, and the planet Saturn, சோற்றுப்பலி. 5. Boiled rice, சோறு. 6. Boiled rice given to mendicants, alms in general, பிச்சை. 7. Offerings of flowers, &c., in the worship of the temple, the puja, பூசை. 8. Ashes, சாம்பல். 9. Calx, lime, நீறு. 10. [*in mythol.*] Mahabali, sovereign of Mahabalipura, tricked out of the dominion he had obtained over earth and heaven, by Vishnu, in the வாமனம், or dwarf incarnation, and left, in consideration of his merits, the sovereignty of the infernal regions, ஓர்சக்கிரவர்த்தி. W. p. 600. BALI.—*Note.* The annual lamp lighting in November is in reference to him. 11. Food of the gods, &c., derived from sacrifices, oblations, தேவருணவு. 12. A tree laden with fruit, காய்த்திருந்தமரம். (சது.) 13. A crow, காகம்.

பலிகொடுக்க — பலியிட — பலிபோட, *inf.* To sacrifice a victim, present offerings to a deity. 2. To kill.

பலிசெலுத்த, *inf.* To offer sacrifice.

பலிச்சக்கிரவர்த்தி, *s.* The sovereign Bali, *commonly* மகாபலி. See பலி.

பலிதானம், *s.* Offering of sacrifices, alms giving, பலிதருகை.

பலிபீடம், *s.* An altar.

பலிபுட்டம், *s.* A crow as nourished by fragments of food, காக்கை. Compare பரபுட்டம், அன்னியபுட்டம்.

பலியூட்ட, *inf.* [*v. noun.* பலியூட்டு.] To sacrifice to a deity. 2. To feed crows, &c., with rice, as representing some deity.

பலியெடுக்க, *inf.* To prey on the life of a person, or animal—as a demon, supposed to happen through exposure in a crossway, at midday, midnight, &c.

பலியேற்க, *inf.* To receive a sacrifice, an offering, &c. with pleasure, as a deity.

பலி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To take effect, to yield results or fruit, to succeed, வாய்க்க. 2. To produce good or evil, as trade, &c., as இலபிக்க; [*ex* பலம்.]

ஒன்றுயிரமாய்ப்பலிக்கும். One will produce a thousand.

மருந்துபலிக்கவில்லை. The medicine did not take effect.

பலித்தபயிர், *s.* A thriving crop.

பலித்தல்—பலிப்பு, *v. noun.* Advantage; good or bad result. 2. Profit, success, பயன். 3. Result of good or evil deeds as experienced in this life, நன்மைதிமைகளின்பலிப்பு.—*Note.* The compounds in common use are: கற்புப்பலித்தல், the taking effect of the curse of a chaste woman violated; சாபம்பலித்தல், taking effect of the curse of a devotee; குனியம் பலித்தல், witchcraft taking effect; நியாயம் பலித்தல், arguments approving and convincing.

*பலிதம், *s.* Fruitfulness, bearing fruit, பலிப்பது. 2. Advantageousness, profitableness, பயன்படுகை; [*ex* பலம்.] 3. Grey hairs, greyness, old age, நரை. W. p. 519. PALITA.

பலிதை, *s.* An old woman, கிழவி.

*பலித்தம், *s.* [*probably from* பலிதம்.] Fruit, emolument. (*Old Dic.*)

*பலினம், *s.* A tree loaded with fruit, காய்த்திருக்குமரம். W. p. 596. P'HALIN.

*பலினி, *s.* The கோங்கு tree. 2. The ஞாழல் plants, as Cassia and Jasmin. (சது.) W. p. 601. BALIN. 3. As பலினம்.

பலுகு, கிறது, பலுகினது, பலுகும், பலுக, *v. n.* [*com. for* பல்கு.] To multiply, increase; to be propagated, be fruitful, as creatures, வர்த்திக்க. [*from Sa.* P'hala.]

*பலேந்திரன். See பலம்.

*பலை, *s.* [*in combin.*] Unripe fruit of three kinds. See திரிபலை.

*பலோதயம், *s.* Profit, benefit, advantage, ஆதாயம். 2. Joy, pleasure, சந்தோஷம். 3. Power, strength, சத்துவம். 4. Heaven, bliss, மோட்சம்; [*ex* பலம் *et* உதயம்.]

*பலோற்காரம், *s.* Force. See பலாற்காரம்.

*பலோற்பத்தி, *s.* Mango-tree, மாமரம். W. p. 596. P'HALOTPATTI.

பல், *adj.* Many, several. See பல. (*p.*)

பல்கால். Many times, often times, frequently, அடிக்கடி.

பல்பகல், *s.* Many days, பல்நாள்.

பல்லவை, *s.* Diverse things, பலவகைப்பட்டவைகள். 2. Low or inferior things.

பல்லார், *s.* [*pl.*] Many people, பலர்.

பல்லூழி, *s.* Many ages, for ever, அனேகயுகம்.

பல்லூழிகாலம். The time of many ages.

பல்—பல்லு, *s.* Tooth, teeth, *எயிறு. 2. Fluke of an anchor, நங்கூரப்பல். 3. Cog of a wheel, tooth of a saw or sickle, a jagg, கருக்கு. 4. Tooth of a comb, சீப்பின்பல். 5. Scollop in the border of a garment, &c., indentation, notch, சேலையினருகு. 6. Bunch of garlic, onion, &c., a young sprout from the parent root, வெள்ளைப்பூண்டுமுதலியவற்றின்பல். 7. Fang of a snake. See நச்சுப்பல்—of பசு, tooth are அரிசிப்பல், கடைவாய்ப்பல், கோரப்பல், சொத்தைப்பல், மாட்டுப்பல், which see; also அடிப்பல், or கீழ்ப்பல்; மேற்பல், or அண்பல், கீக்குப்பல், சிங்கப்பல்.—*Note.* Before a nasal பல் becomes பன், as பன்னுனி, the tip of a tooth.

பல்லரணை—பல்லரனை, *s.* A kind of excrescence on the gums, gum-boil, ஓர்நோய்.

பல்லன், *s.* [*fem.* பல்லி.] A man with long or large teeth.

பல்லிடுக்கு, *s.* Partings between the teeth, in reference to food sticking in them.

பல்லுகட்ட—பற்கட்ட, *inf.* To fasten teeth [with gold.] 2. To make and place [artificial] teeth.

பல்லுகிட்டல் — பற்கிட்டல், *v. noun.* Chattering of the teeth from cold. 2. Closing together the jaws in convulsions; (*lit.*) approaching together of the teeth.

பல்லுக்காட்ட—பல்லைக்காட்ட—பற்காட்ட, *inf.* To grin from meanness or want of good manners. 2. To cringe, beg meanly, ask pardon in a cringing manner. 3. To laugh irreverently.

பல்லுக்குச்சி, *s.* As பற்குச்சி.

பல்லுக்குத்த-பற்குத்த, *inf.* To ache in the teeth. 2. To pick the teeth.

பல்லுக்குப்பதப்பட்டது, *appel. n.* Delicate food; *also used in contempt.*

பல்லுக்கெஞ்ச—பல்லைக்கெஞ்ச, *inf.* As பல்லுக்காட்ட, 2.

பல்லுக்கொழுக்கட்டை, *s.* A kind of pastry covered with roasted pulse or rice in imitation of teeth, made on the appearance of the child's first tooth.

பல்லுக்கொறிக்க, *inf* To grind the teeth together.

பல்லுதிரஅடிக்க, *inf.* To strike out one's tooth or teeth by a blow.

பல்லுத்தீட்ட — பல்லுத்தீற்ற, *inf.* To clean the teeth, தந்தசுத்திசெய்ய. 2. [*prov.*] To abuse one.

பல்லுநோவு, *s.* The tooth-ache.

பல்லுப்பட, *inf.* To be hurt by a bite. 2. To sprout out, as teeth in cattle.

பல்லுப்பிடுங்க—பல்லைப்பிடுங்க, *inf.* To draw a tooth.

பல்லுமினுக்க, *inf.* As பல்லுவிளக்க.

பல்லுமுளைத்தல், *v. noun.* Sprouting of teeth, teething.

பல்லுவலி—பல்வலி. Aching of the teeth.

பல்லுவேர், *s.* Root of the teeth.

பல்லுவேர்சாதல். Perishing of the teeth at the roots.

பல்லுளைவு, *v. noun.* Supposed distress of the teeth of a snake or beast. See உளைவு.

பல்லுவிளக்க, *inf.* To clean the teeth.

பல்லூத்தை, *s.* Uncleanness of the teeth.

பல்லையிளிக்க, *inf.* To show the teeth in grinning.

பற்கடிக்க, *inf.* To gnash the teeth.

பற்கறை, *s.* [*improp.* பக்கறை.] Tartar, or artificial blackness of the teeth.

பற்காவி—பற்காறை, *s.* A kind of black ochre, or composition of betel, &c., used to strengthen and color the teeth. See காவி.

பற்குச்சி — பற்குச்சு — பற்கொம்பு — பல்லுக்கொம்பு, *s.* A small stick used to clean the teeth. See குச்சு, தந்ததாவனம்.

பற்குத்தி, *appel. n.* A tooth-pick.

பற்குறி, *s.* See தந்தக்குறி.

பற்சிராய், *s.* Flake of tartar broken from the teeth. (*limited.*)

பற்பட, *inf.* To be bitten by a snake, as பல்லுப்பட.

பற்பேத்தை, *s.* [*prov.*] Gum boil, as பல்லரணை.

பன்னீக்கம்—பல்நீக்கம், *s.* Unevenness of teeth; [*ex* நீக்கம்.]

பல்கணி, *s.* A kind of lattice work. See பலகணி.

பல்காயனார், *s.* The name of a poet, ஓர் இலக்கணஆசிரியர்.

பல்கு, கிறது, பல்கினது, ம், பல்க, v. n. To multiply. (See பகு.) 2. To be extended as a discourse, to be multiplied as words—சொற்பல்குப்படிபேசினான், he multiplied words.

*பல்லக்கு, s. [com. பல்லாக்கு.] A palanquin or litter. (Tel. usage from Sa. Palyanka.)—For the compounds see சிவிகை, தண்டிகை.

பல்லக்குக்கட்ட, inf. To put down a palanquin.

பல்லக்குயோகம், s. The happy time of one's using a palanquin, or becoming rich.

பல்லக்கேற — பல்லக்குவிட, inf. To ride in a palanquin.

இரத்தினப்பல்லக்கு, s. A jeweled palanquin.

பல்லங்குழி — பல்லாங்குழி, s. A tablet with fourteen holes for play. See பன்னாங்குழி.

*பல்லணம், s. Saddle, pack-saddle, a pillion, குதிரைக்கல்லணை. W. p. 519. Palyayana.

*பல்லதி, s. Tune, melody, one of the thirty-two (melodies) tunes. See இராகம்.

*பல்லம், s. A bear, கரடி. 2. A kind of arrow, அம்பு. W. p. 614. B'halla. 3. Saddle, குதிரைக்கல்லணை. 4. A number, ஓரெண். (சது.) 5. A kind of tree, சேரான்மரம்.

*பல்லவம், s. Sprout, shoot, extremity of a bough, தளிர். W. p. 519. Pallava. 2. The name of a country, ஓர்தேயம். 3. As பல்லவி.

பல்லவதாரம், s. A branch, மரக்கொம்பு.

பல்லவர், s. Rakes, gallants, paramours, தூர்த்தர். 2. Low persons, the base, கீழ்மக்கள். 3. Many persons, பலர்; [ex பல்.]

*பல்லவி, s. Chorus of a song or ode, repeated after each stanza, இசைப்பாட்டின்றொடுப்பு; [ex பல்லவம்.]

பல்லவை, s. Meanness, கீழ்மை. 2. [pl.] Different things, பலபொருள். (p.)

பல்லன். See பல்.

*பல்லாக்கு. See பல்லக்கு.

பல்லாங்குழி. See பன்னாங்குழி.

பல்லாண்டு, s. A song or hymn of praise or adoration, ஓர்வகைவாழ்த்துக்கவி. 2. Benediction—as hail, long life, வாழ்த்து. 3. Many years, பலவருஷம். (p.)

*பல்லாதகி, s. The சே tree, சேரான்மரம். W. p. 614. B'hallataka.

பல்லார், s. Many persons, பலர். (p.)

*பல்லி, s. Newt, or wall-lizard, கௌளி. (Lacerta Gecko.) 2. A herdsman's village, சிற்றூர். (See பள்ளி.) W. p. 519. Palli. 3. Shoot or tendril from the joints of the betel-plant, கணுவிலெழும்பும்வேர். 4. See பல். For some compounds, see கெவுளி, கௌளி.

பல்லிபோல்தடுக்கிறான். He stops my going as abruptly and ominously as the chirp of a lizard.

பல்லிக்குஞ்சு, s. A young lizard.

பல்லிசொல்லுதல், v. noun. Chirping of lizards, a prognostication.

பல்லியெச்சம், s. Excrement of lizards.

பல்லிவிழுகுறி, s. An omen by the fall of a lizard, lucky or unlucky according to the direction whence it falls.

*பல்லிகை, s. A lizard, பல்லி. 2. Semicarpus anacardium, சேரான்கொட்டை. W. p. 519. Pallika.

பல்லிப்பூடு — பல்லிப்பூண்டு, s. A hurtful weed. See கொல்லைப்பல்லி.

பல்லியம், s. A concert of music, chiefly instrumental, சங்கீதம். 2. Drums in general, வாத்தியப்பொது; [ex பல=பல் et இயம்.]

*பல்லூகம், s. A bear, கரடி. W. p. 614. B'hallooka.

*பல்வலம், s. A tank, a small pond, குளம். W. p. 519. Palvala.

*பவ, s. The eighth year of the Indian cycle, ஓர்வருடம்.

பவணந்தி, s. Pavananti, the reputed author of the நன்னூல்.

*பவனை, s. Eagle, கழுகு.

பவந்தம், s. (Tel.) Vain show, ostentation, fiction. (Beschi.) 2. Deceit, சூது.

*பவமானன், s. Regent of the wind, வாயு. W. p. 519. Pavamana.

*பவம், s. State of being or existence, including any of the seven to which the soul is subject. See எழுபவம். 2. Birth, production, origin, பிறப்பு—as உற்பவம். W. p. 614. B'hava. 3. [contraction of பாவம்.] Sin. 4. Destruction, நாசம். See பாவம்.

பவநாசம், s. Place of resort for sacred bathing. See பாவநாசம்.

பவநாசன், s. The deity as the destroyer of births, sin, &c., and as without sin.

*பவரனை, s. The full moon. See பௌர்ணிமி, பூரணை.

*பவர், s. Split into two, கவர். 2. Thick, swarming, நெருக்குகை. 3. Covering, மூடுகை.

*பவர்க்கம், s. Hell, in contradistinction to சுவர்க்கம், நரகம்.

*பவழம். See பவளம்.

*பவளம், s. [improp. பவழம், vul. பகளம்.] Red coral, நவமணியிலொன்று. See திரவியம். [corrupt. of Sa. Pravala, coral.]

பவளக்காலி, s. A kind of bird, Erythropus longipes corallinus.

பவளக்குறிஞ்சி, s. A species of Lawsonia spinosa. 2. A plant, பெருபசி, இண்டியம்.

பவளக்கைக்கட்டு, s. [com. கைக்கட்டுப்பவளம்.] A string of coral beads for the wrist.

பவளக்கொடி, s. Red coral considered as a marine plant.

பவளக்கொடிமாலை, s. A work on marriage.

பவளக்கோவை, s. A string of coral beads.

பவளச்சோளம், s. [com. செஞ்சோளம்.] Red maize.

பவளத்துண்டம், s. A piece of red coral.

பவளநெடுங்குன்றயோன், appel. n. Bhairava, வைரவன்.

பவளபஸ்பம், s. A white calx made of red coral.

பவளப்புற்றுப்பாஷாணம், s. A kind of prepared arsenic.

பவளப்பூண்டு, s. A plant, Salicornia Indica.

பவளப்பூலா—பவளப்பூல், s. A shrub, Philanthus rhamnoides.

பவளமல்லிகை, s. A species of Jasmin, Nyctanthes tristis. See மல்லிகை.

பவளமஞ்சிகை, s. A medicine, Cinnabar, or sulphuret of mercury, ஓர்சரக்கு.

பவளவங்காரவாச்சி, s. A plant, ஓர்பூடு, Sesuvium Portulacastrum.

பவளவாய், s. Red mouth, used in poetry.

*பவனம், s. Air, wind, காற்று. 2. Winnowing grain, தூற்றுகை. 3. Heaving or drifting up, as the waves to the shore, ஒதுக்குகை. 4. Purity, holiness, பாவனம். 5. Flatulence, windiness, வாயுவின்பெருக்கம். W. p. 519. Pavana. 6. House, dwelling, abode, வீடு. 7. A royal palace, a fortress, அரண்மனை. 8. World, earth, பூமி. 9. The world or abode of Indra, தேவலோகம். 10. Nether world, or abode of Nagas, நாகலோகம். 11. Zodiacal sign or constellation, இராசிப்பொது. 12. A cat, பூனை. 13. Populated country or district, ஊர்.

பவனசக்கரம், s. Zodiac.

பவனவாசல்—பவனவாய், s. Anus, fundament as the passage for the wind.

பவனன், s. Wind, காற்று.

பவனாசனம், s. (St.) A snake whose food is air, பாம்பு; [ex அசனம்.]

பவனாத்துமசன், s. Name of the monkey Hanuman, as born of the wind, அநுமன். 2. Bhima, whose father was the god of wind, வீமன். 3, God of fire, அக்கினி; [ex ஆத்துமம் et சன், one born.]

பவனி, s. Procession, going in state, parade, &c., as a prince, deity, &c., உலாவிப்போதல். 2. Riding or going for recreation, exercise, &c, உலா. 3. Ramble, jaunt, excursion, trip, circuit, பயணம்.

பவனிக்காதல், s. A poem in which the beauties of a gentleman are praised by a lover, ஓர்பிரபந்தம்.

பவனிபுறப்பட—பவனிபோக—பவனிவர, inf. To parade, to go in procession, state, &c.

*பவனோதரம், s. An inner room, a recess, உள்வீடு. W. p. 614. B'havanodara.

*பவன், s. The self-existent, a name of Siva, தானாயுண்டானவன். W. p. 614. B'hava.

*பவாயனை, s. Ganges, கங்கை. W. p. 615. B'havayana.

*பவானி, s. Parvati, பார்வதி. W. p. 615. B'havanee. 2. A town in Coimbatore district, ஓரூர்.

*பவி, s. Thunder-bolt, as a weapon of Indra, &c., அசனி. W. p. 519. Pavi.

*பவிகம், s. Excellency, dignity, privilege, சிலாக்கியம். W. p. 615. B'havika.

*பவிசி — பவிஷி — பவிஷு, s. Prosperity. See பவுஷு. 2. Modesty, மானம்.

பவிசு—பவிஞ்சு, s. (Hind.) An army. See பவுஞ்சு.

*பவிடியம்—பவிஷியம், s. Wealth, prosperity, felicity, opulence, வாழ்வு. 2. Time to come, futurity, எதிர்காலம். 3. The prophetic Purana, பவிஷியபுராணம். W. p. 615. B'havishya.

*பவித்திரம், s. Cleanliness, purity—ceremonial or moral, சுத்தம். 2. A ring of sacrificial grass knotted together in a particular manner and worn on the fourth finger of the right hand in marriage, and in performing other rites, தருப்பைமோதிரம். 3. Finger-ring of gold, &c., பவித்திரமோதிரம். 4. A festival in August in honor of Vishnu, பவித்திரோச்சவம். W. p. 519. Pavitra.

பவித்திரங்கொடுத்தல், *v. noun.* Giving of the knotted grass-ring by the family priest.

பவித்திரமுடிச்சு, *s.* Two spires of sacrificial grass, knotted together in a particular way.

பவித்திரமோதிரம், *s.* A finger-ring.

பவித்திரம்பண்ண, *inf.* To clean, to purify.

பவித்திரவிரல், *s.* The பவித்திர ring-finger.

பவித்திரன்—பவித்திரவான், *s.* A cleanly man, சுத்தமுள்ளவன். 2. A man who observes ceremonial purity, ஆசாரக்காரன்.

பவித்திராரோபணம், *s.* Wearing the sacred thread across the shoulder and breast, பூணூலணிதல்.

*பவித்திரி, *s.* Sacrificial grass, தருப்பை.

பவுஞ்சு, *s.* [*for.*] Rank, file, battle, array, படைவரிசை. 2. Army, troops. See பௌஞ்சு.

பவுஸ்தார், *s.* (*Pers. Foujdar.*) A magistrate of a province.

*பவுஷி-பவுஷு-பவுஷ், *s.* [*contrac. of* பவிஷியம்.] Affluence, opulence, felicity, prosperity, வாழ்வு. 2. High style, eclat, equipage, state, show, parade, சம்பிரமம். (*c.*)

*பவுண்டரம், *s.* The shell of Bhîma, வீமனசங்கு.

*பவுண்டரிகம், *s.* A kind of sacrifice, ஓர்யாகம்.

*பவுதிகம், *s.* Of or belonging to the elements. See பௌதிகம்.

பவுத்தி, *s.* (*Arab.*) Death.

*பவுத்திரம், *s.* Fistula in ano—as பவுந்திரம். 2. [*improp. for* பவித்திரம்.] Purity.

*பவுத்திரர், *s.* [*as* பௌத்திரர்.] *s.* Grandsons, grand-children. W. p. 555. POUTRA.

*பவுந்திரம், *s.* A fistula in ano. See பகந்தரம்.—அண்டப்பவுந்திரம், கொடிப்பவுந்திரம், மூலபவுந்திரம், are different kinds.

*பவுரணை—பவுர்ணிமி, *s.* The day of full-moon. See பௌர்ணை.

பவுரணைவிரதம், *s.* Fasting till lamp lighting on the day of full-moon, for the benefit of the soul of a deceased mother.

*பவுராணிகம், *s.* Belonging to a Purana. See பௌராணிகம்.

*பவுரி, *s.* A dance, கூத்தின்விகற்பம். (சது.)

*பவோற்பவன், *s.* One of the eleven Rudras. See உருத்திரர்.

*பவ்வம், *s.* Day of full moon, பௌர்ணிமி. (See பருவம்.) 2. Ocean, கடல். 3. Water-bubble, நீர்க்குமிழி. 4. Froth, foam, spume, நுரை. (See பௌவம்.) 5. Knots, joints in a tree, மரக்கணு.

பவ்வத்து. By tens. See பப்பத்து.

பவ்வாதி. By halves.

பழ, *adj.* Old, ancient. [*For the compounds see* பழமை.]

பழகாடி, *s.* [*prov.*] A person initiated, trained, habituated, பழகினவன்; [*ex* பழகு.]

பழகு, கிறேன், பழகினேன், வேன், பழக, *v. n.* To practise, to become initiated, to be used to, to be habituated; to be trained—as the voice in singing or speaking; the hand in working; the feet in walking, பயில. 2. To become acquainted with men or things, to be familiar with, உறவுசெய்ய. 3. To become fitted, tempered, seasoned, as a utensil, tool, or garment, பதப்பட. 4. To become broken or trained, as a beast, to labor; to be tamed as a savage, a beast, a bird, &c.; to be domesticated, சாதுவாக. 5. To be suited to one—as a house, the climate, a servant, இணக்கமாக. 6. To be customary, common, familiar, வழங்க. (*c.*)

பாம்பொடுபழகேல். Play not with a snake.

பழகாதபழக்கம். Bad, improper or indecent habits.

பழகினமாடு. A trained ox inured to labor.

பழகினமுகம். A well known face.

பழகினவன். A familiar friend. 2. One accustomed to many things.

பழகினகத்தி. A knife improved by use.

பழகினசட்டி. A seasoned, or used cooking pot.

பழகப்பழகப்பாலும்புளிக்கும். Even milk may seem sour by constant use. [*Pro.*]

பழகிக்கொள்ள, *inf.* To learn by use, to habituate one's self to, &c. 2. A village suited to one's constitution, a place where one is acquainted.

பழகுவிக்க, *inf.* [*caus.*] To inure one.

பழக்கம், *s.* Habit, practice, custom, வழக்கம். 2. Initiation, training, exercise, use, அப்பியாசம். 3. Conversation, intimacy, intercourse, அறிமுகம். 4. Manners, education, cultivation, ஊட்டாட்டம். 5. Expertness, cleverness or dexterity acquired by use, சமர்த்து. 6. Tameness, domestication or gentleness, சாதுத்துவம். (*c.*)

பழக்கமில்லாதநூல். A science, or scientific work, in which one is not versed.

பழக்கங்காட்ட, *inf.* To betray bad education or mean habits.

பழக்கமாக, *inf.* To become acquainted with one.

பழக்கமானவன், *appel. n.* An acquaintance, a crony. 2. One practised, taught, acquainted, expert.

பழக்கம்பண்ண, *inf.* To habituate or accustom one's self to another. 2. To cultivate a science, பயிற்சிசெய்ய.

பழக்கு, கிறேன், பழக்கினேன், வேன், க்க, *v. a.* To train, habituate, to exercise one, to educate, to cultivate, பயிற்ற. 2. To season—as cooking utensils, to temper by use, பதமாக்க. 3. To domesticate, to reclaim from a savage, or wild state, to tame, to civilize, சாதுவாக்க. 4. To render common, to popularize, வழக்கப்படுத்த. (*c.*)

பழக்கிக்கொடுக்க, *inf.* To teach an art or exercise.

பழக்கிவிட, *inf.* To complete the teaching or training, of one.

பழக்கிவைக்க, *inf.* To train for one's own use.

பழங்கண், *s.* Distress, affliction, sorrow, vexation, துன்பம். 2. Reduction of strength or power, weariness, lassitude, இளைப்பு. 3. Emaciation, thinness, மெலிவு. (சது.) (*p.*)

பழங்கணுளர். Distressed persons.

பழசு—பழைசு, *s.* That which is old, injured, decayed or damaged by time, நாட்பட்டது. 2. That which is stale, vapid, spiritless, by keeping, சாரமற்றது. (*c.*)

பழசாக, *inf.* [*active* பழசாக்க.] To become old, worn, decayed, stale, flat.

பழசாய்ப்போக, *inf.* To grow old; to be worn out, as a garment.

பழமை, *s.* Oldness, ancientness, antiquity, பூருவம். 2. What is antiquated, obsolete, old fashioned, வழக்கொழிந்தது. 3. Staleness, vapidness, insipidness, சாரமின்மை. 4. An old saying, a proverb, முதுமொழி. 5. Old acquaintance, long established intimacy, வெகுநாட்பழக்கம். 6. Decay from age, சிதைவு. 7. Ancient history of a family, chronicle, பழங்கதை. 8. Long established usage or custom, மரபுபற்றிவருகை. (*c.*)

பழங்கஞ்சி, *s.* Congy kept over night.

பழங்கணக்கு, *s.* An old account, an account previously settled. 2. A thing out of use, obsolete, forgotten.

பழங்கதை, *s.* An ancient story. 2. A thing long passed by, disregarded, forgotten.

பழங்கந்தை, *s.* Old rags, tatters.

பழங்கலம், *s.* An old cup or plate.

பழங்காடி, *s.* Liquids soured by keeping as ஆறுமாதக்காடி.

பழங்காய்ச்சல்—பழஞ்சுரம், *s.* A chronic fever.

பழங்கிடையன், *s.* [*prov.*] Old commodities. See கட்டுக்கிடை.

பழஞ்சாதம்-பழஞ்சோறு, *s.* [*also* பழையசாதம், பழையது.] Boiled rice kept till next morning.

பழஞ்சீலை—பழந்துணி, *s.* An old or worn out garment.

பழஞ்சொல், *s.* As பழமொழி, 1.

பழந்தரை, *s.* Land long cultivated and worn out.

பழநிலுவை, *s.* Balance of a former account.

பழநெல், *s.* Old rice of the previous year.

பழமலம், *s.* [*com.* பழையமலம்.] Excrement lodged too long in the bowels.

பழமலை, *s.* A celebrated hill sacred to Siva, விருத்தாசலம்.

பழமனை, *s.* An old decayed house, பழையவீடு. 2. The site or ruins of a decayed house, இடிந்தகட்டடம்.

பழமைபாராட்ட, *inf.* To expatiate on former greatness and prosperity. 2. To extol one's ancestors.

பழமைபேச, *inf.* To talk of things, customs, usages, &c., of one's ancestry, to the disparagement of others; *used also in irony.*

பழமொழி, *s.* An old saying, a proverb, a maxim. 2. A law, தர்ம்நிதூல்.

பழம்பகை, *s.* Old or hereditary hatred as நெடுநாட்பகை. 2. Cherished enmity, as தொந்தப்பகை. 3. Inveterate, natural hatred, as between the kite and the snake, இயற்கைப்பகை.

பழம்பஞ்சாரம், *s.* That which is very old, as a bullock, horse, or garment. See பஞ்சாரம். 2. [*in contempt.*] A very old man or woman, மிகமுதியோர்.

பழம்பஞ்சுரம், *s.* A class of tunes, as பஞ்சரம்.

பழம்பாடம் — பழையபாடம், *s.* An old lesson. 2. [*fig.*] Old lesson-day, or the fourteenth of the month.

பழம்புகையிலை, *s.* Old tobacco improved by keeping.

பழம்புண், *s.* An old ulcer.

பழம்புண்ணாளி, *s.* An old patient. 2. [*fig.*] An experienced man.

பழம்பொருள், *s.* An old thing. 2. [*fig.*] The Eternal, கடவுள்.

பழம்போக்கு—பழையபோக்கு, *v. noun.* An ancient or antiquated style.

பழவடியார், *s.* Devotees of long standing. 2. Persons of an ancient family. 3. Freed slaves; [*ex* அடியார்.]

பழவினை, *s.* Long cherished malice, as பழம்பகை. 2. Deeds of former births, ஊழ்வினை.

பழவேற்காடு, *s.* The name of a town, Pulicat, from வேல், a tree, இருள்.

*பழம், *s.* Fruit, ripe fruit, கனி. See பலம். 2. [*fig.*] Result of actions, பலன். W. p. 594. P'HALA. 3. A very aged person, வயதுசென்றவன்—as அவன்பழுத்தபழம். 4. [*prov. in burlesqe.*] An intoxicated person, மிகு வெறிகொண்டோன். 5. Winning pieces in a game of tick-tack, ஆட்டத்தெலித்தல். 6. Success, அனுகூலம்—as பழமா காயா.

பழக்காய், *s.* A fruit nearly ripe. See செங்காய்.

பழத்தேங்காய், *s.* A ripe cocoa-nut.

பழப்பாக்கு, *s.* A ripe areca-nut.

பழப்புளி, *s.* Tamarind pulp formed into balls, for souring.

பழமெடுக்க, *s.* To win in dice or tick-tack.

பழம்பழுத்தல், *v. noun.* Ripening of fruit.

பழரசம், *s.* The juice of fruits.

பழம்பாசி, *s.* A running plant used as a cool application to the head before bathing, Sida humilis. See பாசி.

*பழனம், *s.* Agricultural land, மருதநிலம். 2. Rice fields, வயல். [*from Sa. Phalana,* fructifying.] (சது.)

*பழனி, *s.* [*vul.* பழனி.] One of the six places sacred to Skanda, Palney; also called திருவாவினன்குடி.

பழி, *s.* Blame, censure, reproach, as நிந்தை. 2. Fault, crime, sin, guilt, as குற்றம். 3. Complaint, imputation, charge, disparagement, குறை. 4. Falsehood, deceit, பொய். 5. Revenge, vengeance; vindictiveness, சலஞ்சாதிப்பு. 6. Quarrel, strife, bickering, விரோதம். 7. Slander, aspersion. See புறங்கூறுதை. (*c.*)

என்மேலேபழிபோ. Am I culpable?

பெரியபழிபாய்வந்திருக்கிறது. A great fault has been committed. 2. Retribution has followed.

பழிகட்ட, *inf.* [*prov.*] To pick a quarrel, சண்டைதொடுக்க. 2. To accuse unjustly, குற்றஞ்சாட்ட. 3. To sow discord, to cause contention, பகைமூட்ட. 4. To threaten in order to effect one's purpose, பயமுறுத்த. 5. To contract guilt, குற்றஞ்செய்ய.

பழிகாரன், *s.* An accuser, an avenger, *in contempt,* பழிகாரப்பயல். 2. A great sinner.

பழிகிடத்தல், *v. noun.* Sitting Durnha, or starving at one's door to make him comply with a demand.

பழிகூற, *inf.* To charge falsely. 2. To asperse, to slander.

பழிக்கஞ்சுதல், *v. noun.* Being weakly afraid of the displeasure of others.

பழிக்குடி, *s.* Families at variance from old time. 2. As எளியகுடி.

பழிக்குப்பயப்பட, *inf.* To fear to do evil. 2. To fear blame, censure.

பழிக்குப்பழிவாங்க, *inf.* To retaliate.

பழிக்குவிட, *inf.* [*prov.*] To abandon one to his evil ways; to leave a person or thing to ruin, அழியவிட.

பழிசுமக்க, *inf.* To bear reproach. 2. To suffer vengeance. 3. See சும, *v. n.* and *v. a.*

பழிசுமத்துதல், *v. noun.* Charging blame on, or imputing guilt to, another.

பழிசூழ்தல். Being involved in crime, பழியடைதல். 2. Thinking evil of another, பிறர்க்குத்தீங்குநினைத்தல்.

பழிசொல்லல். As பழிசுமத்துதல்.

பழிச்சொல்—பழிமொழி, *s.* Reproach, aspersion, as நிந்தனை.

பழிதீர்க்க—பழிமீட்க, *inf.* To take vengeance. 2. To expiate guilt, to atone, பாவந்தீர்க்க.

பழிதீர்தல், *v. noun.* Being expiated, atoned for. 2. Becoming reconciled, settled, as an old grievance.

பழிதூறல்—பழிதூற்றல், *v. noun.* Slandering, as தூற்றல்.

பழிதேட, *s.* To contract disgrace, or reproach.

பழிபாதகம், *s.* Fault and crime.

பழிபோட, *inf.* To blame one, to charge one with guilt.

பழிமுடிக்க, *inf.* To take vengeance.

பழிமுடிய, *inf.* To sow discord.

பழிமூளுதல், *v. noun.* Kindling of wrath.

பழியெடுக்க, *inf.* As பழிவாங்க, 2.

பழியேற்க, *inf.* To take on one's self the responsibility or guilt of an evil action.

பழிவாங்க, *inf.* To take vengeance, to avenge, to revenge, பகைசாதிக்க.

பழிவேலை, *s.* Work unwillingly done, compulsory labor.

பழிவைக்க, *inf.* As பழிபோட.

பழி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To disparage, to reproach, இகழ். 2. To contemn, to treat with contumely, நிந்திக்க. 3. To blaspheme, to revile, தூஷிக்க. 4. To rail at, to scold, to banter, இழிக்க. 5. To calumniate, to asperse, to abuse, தூற்ற.

பழித்துச்சொல்ல—பழித்துப்பேச, *inf.* To ridicule, contemn.

பழித்துப்போட, *inf.* To reject with scorn and abuse.

பழிப்பன, *appel. n.* Things despised, that ought to be rejected, பழிக்கப்படுவன. பழிப்பனபகரேல். Speak not insultingly.

பழித்தல், *v. noun.* Scolding, reviling. (சது.)

பழிப்பு, *v. noun.* Scorn, contempt, vituperation, blasphemy, *as the verb.*

பழிப்பானகாரியம். A disgraceful thing.

பழிப்புக்காரன், *s.* A blasphemer, a reviler. 2. A laughing stock.

பழிப்பாய்ச்சொல்ல, *inf.* To censure as பழித்துப்போட.

பழிச்சு, கிறேன், பழிச்சினேன், வேன், பழிச்ச, *v. a.* To adore the deity, தெய்வம்போற்ற. 2. To praise, as an act of worship; to extol, to eulogize, துதிக்க. (*p.*)

பழிச்சினர்ப்பரவல், *v. noun.* Praising devotees.

பழிச்சல், *v. noun.* Praising, துதித்தல். (சது.)

பழு, *s.* Round of a ladder, ஏணிப்பழு. 2. Side, விலா. 3. Rib, விலாவெலும்பு.

பழுவெலும்பு. Rib-bone.

பழுக்கா, *s.* Yellow, orange or gold color, ஒர்நிறம். (*Colloq.*)

பழுக்காஅடைக்க — பழுக்காவைக்க, *inf.* To color orange or yellow.

பழுக்காநூல், *s.* Yellow thread or yarn.

பழுக்காய், *s.* [*prov.*] Ripe areca-nut, பழப்பாக்கு. Compare துவர்க்காய்.

பழு, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To ripen, to mature, to arrive at perfection, as fruits, grain, &c., முதிர. 2. To suppurate, to ripen, as a boil, பருக்கனிய. 3. To become grey or hoary, நரைக்க. 4. To change color by age, as ivory or horn; to become pale or yellowish, as the body by disease; to become soiled as the teeth by disease, நிறமாற. 5. To grow mature in knowledge, science, piety; to become fit for bliss, பக்குவமாக. 6. To take a fine blooming color, as gold, பொன்பழுக்க. 7. To become flabby and weak, as the abdomen of a woman after childbirth, through want of stimulants, &c., வயிறுபழுக்க. 8. (*fig.*) To obtain success, அனுகூலப்பட; *also used in irony.*

அவனுக்குநரைத்துப்பழுத்தது. He is grown grey, from age.

பழுக்கச்சுட, *inf.* To color gold on the fire, by various ingredients, &c. See சுடு, *v.*

பழுக்கப்போட, *inf.* To force the ripening of fruits by covering them with straw, &c. 2. To wait the maturity of some great event.

பழுக்கவிட, *inf.* To let fruit ripen on the tree.

பழுக்கவைக்க, *inf.* To put fruits to ripen.

பழுத்தகதிர், *s.* A ripe ear of corn.

பழுத்தபழம், *s.* A yellow ripe fruit, முதிர்ந்தகனி. 2. (*fig.*) An aged person, முதிர்கிழவன். 3. One mature for liberation from births, பக்குவன். 4. [*prov.*] One well learned in all kinds of wickedness, &c., மிகுவஞ்சகன்.—*For the proverb, see* கொம்பு.

பழுத்துப்போக, *inf.* As பழு, *v.*

பழுப்பு, *v. noun.* Ripeness, yellowness of fruits, change of color, blooming or natural color in gold, *as the verb.*

பழுப்பரிசி, *s.* Rice turned yellow, or brown, by neglect in drying.

பழுப்புப்பொன், *s.* Gold of a bright yellow hue.

பழுப்பேற, *inf.* To be colored by the goldsmith's art.

பழுப்படைய, *inf.* To contract a yellowish color, as grain.

பழுது, *s.* Defect, blemish, flaw, இனம். 2. Any thing tainted, rotten, putrid, marred, பதனழிவு. 3. Damage, injury, சேதம். 4. Moral evil, turpitude, குற்றம். 5. Degeneracy, vitiation, சிதைவு. 6. A lie, பொய்.

பழுதற, *inf.* [*as adv.*] Without blemish.

பழுதற்ற, *participle.* Faultless.

பழுதாக, *inf.* [*active* பழுதாக்க, பழுது பண்ண.] To become decayed.

பழுதானவன், *appel. n.* A depraved man.

பழுதுபட, *inf.* To be damaged, spoiled. 2. To be injured in character; to degenerate.

பழுதுபார்க்க, *inf.* To repair, to mend.

பழுதை, *s.* A rope, cord, cable, கயிறு. 2. A thick twist of straw or fibre used as a rope, and to keep fire like a match, வைக்கோற்புரி. 3. (*fig.*) A snake, பாம்பு.

பழுதைகட்டிநாயனர், *s.* An epithet of a Sanyasi or mendicant, who used to tie a rope of straw on his leg.

பழுபாகல், *s.* A plant, the bulbous root of which forms a drug, Momordica divica, ஓர்பாகல்.

பழுப்பு, *s.* Yellow orpiment, அரிதாரம். 2. A leaf, &c., yellow by age, முதிர்ந்து மஞ்சணிறப்பட்டஇலை. See பழு, *v.*

பழுமரம், *s.* The banyan tree, ஆலமரம். (சது.)

பழுவம், *s.* Jungle; a forest of large trees, காடு. (சது.)

பழைது, *s.* [*com.* பழசு, *which see.*] That which is old, &c.

பழைமை, *s.* [*prop.* பழமை.] Oldness, antiquity; long established usage, &c., (சது.) [*For orthography, compare* இளமை.]

பழைய, *adj.* Old, worn out, &c.

பழையகட்டு, *s.* An old building, or structure—as a house, tank, dam, &c. 2. Old institutes, injunctions, &c.

பழையகோபம், *s.* Old grudge.

பழையதிட்டம், *s.* Usual measure, standard, degree, &c.

பழையது, *appel. n.* As பழஞ்சாதம். 2. That which is old, worn out, obsolete, &c.

பழையநாள், *s.* Former days or times.

பழையபடி. As formerly, as before.

பழையபாடல், *s.* An old well approved poem.

பழையமனிதன், *s.* An ancient, an old man. 2. [*in Chris. usage.*] The old man or corrupt nature.

பழையமாமூல், *s.* Customs handed down from antiquity.

பழையர், *s.* [*pl.*] Those of old. (சது.)

பழையவழக்கம், *s.* Old habits, former practices.

பழையவழக்கு, *s.* Ancient customs and usages. (*p.*) 2. An old lawsuit.

பழையவன், *s.* An old man. 2. The former person, the one previously in office, in place, &c.

பழையர், *s.* [*pl.*] Toddy-sellers, கள்விற்போர். (சது.) 2. See பழைமை.

*பளகம், *s.* A mountain, மலை. W. p. 600. Balahaka. 2. [*improp. for* பவளம்.] Coral.

பளகு, *s.* Guilt, குற்றம். (திருவாச.)

பளபளக்க, *inf.* To glitter, coruscate, shine as a well polished surface, as தளதளக்க. (*c.*)

பளபளப்பு, *v. noun.* Glittering, coruscation, lustre. 2. Radiance, பிரபை. 3. That which is dazzling, florid, showy, gorgeous, as some poetry, &c., செய்யுளின் பாகம்.

பளபளப்பானபாடல். A poem written in a florid style.

பளபளவெனல் — பளபளெனல், *v. noun.* Glittering, gleaming, glistering. 2. Sounding, ஒலிக்குறிப்பு.

பளபளென்றுபொரிகிறது. Sputtering as peas, &c., in frying.

பளபளென்றுபொரிகிறவன். A florid talker.

பளா—பளாபளா, *s.* (*Hind.*) [*com.* வளா.] Fine! bravo! &c., அதிசயக்குறிப்பு (*ironically.*)

பளாபளாநன்றாயிருக்கிறது. It is fine indeed! fie! fie!

*பளிங்கு, *s.* Crystal, glass, படிகம், [*from Sa. Puligha,* a glass vessel.] 2. A mirror, கண்ணாடி. 3. The planet Venus, சுக்கிரன். (சது.) 4. [*prov.*] 4. Back stay-rope, தோணிக்கயிறு.

பளிங்குக்கண்ணாடி, *s.* Crystal, glass.

பளிங்குநிறம், *s.* Crystal color.

பளிங்குப்பாத்திரம், *s.* A crystal vessel.

பளிங்குமண்டபம், *s.* A hall ornamented with crystal.

பளிங்குமாளிகை, *s.* Crystal palace.

பளிங்குவடம், *s.* A necklace of crystal beads.

பளிச்சிடுதல்-பளிச்செனல், *v. noun.* [*vul.* பளிச்சட்டியெனல்.] Gleaming, flashing, as பளபளவெனல்.

பளிச்சுப்பளிச்செனல், *v. noun.* Flashing, coruscating.

பளிச்சுப்பளிச்சென்றுபேசுதல். Speaking rapidly, promptly, decidedly, energetically, abusing one to the face.

பளிச்சுப்பளிச்சென்றுமின்னுதல், *v. noun.* Lightning vividly flash after flash.

பளிச்சென்றுவிளங்குதல், *v. noun.* Being understood instantly, as the meaning of a verse, &c. 2. Shining brightly.

பளிச்சென்றுவீசிவிட, *inf.* To give one a slap on the cheek suddenly. 2. To throw off any thing hostile.

பளிஞ்சி, *s.* [*in seamanship.*] A back-stayrope. See சின்னஞ்சான்.

*பளிதம், *s.* Camphor, [*in Wils. benzoin.*] கருப்பூரம். W. p. 519. Palita. 2. (சது.) A number, பலமென்னுமெண்.

பளீரிடுதல் — பளீரெனல், *v. noun.* As பளிச்செனல். 2. Sounding as falling glass, &c., cracking, ஒலிக்குறிப்பு; also as பளீர்பளீரெனல், *reiterated to express vehemence.*

பளீரென்றுவிழுதல், *v. noun.* Falling with a clanging noise.

பளீர்பளீரென்றுவிழுந்தது. It came down with a crack; *used in reference to a whip.*

பளுவு, *s.* (*Tel.*) Heaviness, பாரம். (*local usage.*)

பளுவுசளுவு. Heavy and light.

பளை, *s.* [*prov. improp. for* வளை.] Hole, den of a beast.

பள், *s.* The பள்ளர் caste, as பள்ளு— *In Jaffna it is used with its grammatical change, as* பட்குடி, &c.

பள்ளக்குடி, *s.* A family of the பள்ளர் caste.

பள்ளப்பயல், *s.* A பள்ளன். 2. [*in contempt.*] A slave, a fellow.

பள்ளப்பாட்டுபாடுதல், *v. noun.* Abusing, or calling one a பள்ளன்.

பள்ளப்பிள்ளை, *s.* A man or woman of the பள் caste.

பள்ளர், *s.* [*sing.* பள்ளன், *fem.* பள்ளி, பள்ளச்சி, பள்ளத்தி.] A low dependant caste employed in husbandry, &c., under their feudal lords, a peasant tribe dwelling in the south, *supposed to be a change of* மள்ளர்.

பள்ளர்சேரி — பள்ளச்சேரி, *s.* A village of the பள்ளர் caste.

பள்ளம், *s.* Lowness. See தாழ்வு. 2. Low land, a valley, தாழ்ந்தநிலம். 3. A hollow pit, a hole in the road, a ditch, &c. See குழி. (*c.*)

பள்ளக்காடு, *s.* Low புன்செய் land—oppos. to மேட்டாங்காடு.

பள்ளக்கை, *s.* Low land.

பள்ளத்தாக்கு, *s.* A valley, &c. See தாக்கு.

பள்ளந்தூர்க்க, *inf.* To fill up a hole. See தூர், *v.*

பள்ளமேடு — பள்ளமும்மேடும், [*com.* மேடுபள்ளம்.] Hill and dale. 2. Rises and falls, ups and downs as in a rough, rugged road, &c.

பள்ளம்பறிக்க — பள்ளந்தோண்ட, *inf.* To dig a hole.

பள்ளம்விழுதல், *v. noun.* Being hollow, dimpled. See குழிவிழ.

பள்ளயம், *s.* Offering to demons, &c. See பள்ளையம்.

பள்ளாடு, *s.* [*vul. for* பள்ளையாடு.] A goat. See பள்ளை.

*பள்ளி, *s.* A room, chamber, அறை. 2. A hermitage, cell of a recluse, முனிவர்வாசம். 3. A temple, a church, a place of worship, especially a Jaina temple, ஆலயம். 4. A school, as பள்ளிக்கூடம். 5. A sleeping place or bed, மக்கட்படுக்கை. 6. Sleep, நித்திரை. 7. An almonry. See அறச்சாலை. 8. A small village, சிற்றூர். 9. An agricultural village or town, மருதநிலத்தூர். 10. Name of a caste, ஓர்சாதி. (சது.) 11. An affix to words forming the name of a town, as திரிசிராப்பள்ளி. W. p. 519. Palli, Palla. 12. See பள்.

பள்ளிகொள்ள, *inf.* To take sleep, to sleep.

பள்ளிகொண்டபெருமாள், *s.* A name of Vishnu as sleeping.

பள்ளிக்கணக்கர், *s.* Pupils at school, scholars.

பள்ளிக்கணக்கன்புள்ளிக்கணக்கறியான். The mere student is not the practical accountant.

பள்ளிக்கிராமம், *s.* A village belonging to a fane by endowment.

பள்ளிக்குவிட, *inf.* To send a child to school.

பள்ளிக்குவைக்க, *inf.* To send one to school for the first time.

பள்ளிக்கூடம், *s.* A school-room, seminary, academy.

பள்ளிக்கூடம்வைக்க, s. To set up or establish a school.

பள்ளிச்சிநேகம், s. [com. பள்ளிக்கூடத்துச்சிநேகம்.] Friendship formed at school.

பள்ளிப்பழக்கம், s. School habits, good or bad. 2. School acquaintance, familiarity, friendship.

பள்ளிப்பாடம், s. Lesson, or the manner in which a verse is repeated as learnt at school.

பள்ளிப்பிள்ளை—பள்ளியிற்பிள்ளை, s. A scholar, a pupil, a student.

பள்ளிமண்டபம், s. A sleeping room, especially of gods.

பள்ளியறை, s. A bed chamber.

பாசபந்தர்—பாசபந்திகள்—பாசபெத்தர்—பாசபெந்தர், s. [*pl.*] Those engrossed, or bound by the entanglements of matter, the senses, &c.

பாசபாணி, s. Varuna, வருணன். 2. Messenger of Yama, இயமதூதன்; (*lit.*) the rope-armed. 2. Yama, the god of death, நமன்; [*ex* பாணி, hand.]

பாசமோசனம்-பாசவிமோசனம், s. Release of the soul from earthly entanglements.

பாசம்வீச, *inf.* To cast the noose, as Yama, to capture the soul at death; to cast a noose, on the foe in battle.

பாசவிருள், s. The darkness of illusion from மும்மலம், or the threefold defilements, ஆணவம், மாயை, and காமியம்.

பாசவைராக்கியம், s. Settled hatred of the principle of evil in the senses, leading to self-denial and rigid austerities, பாசத்தைவெறுக்கை.

பாசன், s. The soul as subject to births and mundane attachments, சீவன். (சது.) 2. Yama, நமன்.

பாசாங்குசன்-பாசாங்குசதரன், s. Ganesa as armed with a noose, and an elephant-hook, கணேசன்; [*ex* அங்குசம்.]

பாசறை, s. Encampment or tents of an army, a camp, பகைமேற்சென்றோருறைவிடம். 2. Suffering, distress, affliction, துன்பம். (சது.) 3. [*vul.*] A piece of board for smoothing new plaster, மணியாசப்பலகை.

பாசறைமுல்லை, s. [*in love poetry.*] The lover thinking of his lady when absent from her in the camp, பாசறைத்தலைமகன்றலைவியைநினைத்தல். (சது.) 2. A poem in which this subject is handled, ஓர்நூல். (*p.*)

*பாசனம், s. A pot or other vessel, பாண்டம். 2. An eating dish or plate, உண்கலம். W. p. 616. B'HAJANA. 3. Relations, kindred, consanguinity, சுற்றத்தோர். (*p.*)

பாசாங்கு, s. Dissimulation, hypocrisy, deception, மாரீசம். (*Colloq.*)

பாசாங்கடிக்க—பாசாங்குகாட்ட—பாசாங்குபண்ண, *inf.* To dissemble, to feign ignorance.

பாசாங்குக்காரன், s. [*fem.* பாசாங்குக்காரி, *in contempt,* பாசாங்குக்கள்ளி.] A hypocrite, a dissembler.

*பாசாங்குசன். See பாசம்.

பாசானம், s. Wet cultivation. (*Govt. usage.*)

பாசி, s. Mosses of various kinds, புல்லுருவி. 2. Sea-weed, கடற்பாசி. 3. Aquatic plants, சடைச்சி. 4. Green weeds or moss growing on standing water, duck-weed, நீர்ப்பாசி. 5. Green formations, as mouldiness on walls by damp, பூஞ்சு. 6. Variegated glass beads as a necklace for children, கரியமணிமுதலியன; [*ex* பசு, green.]—There are different kinds of பாசி as a weed; ஆற்றுப்பாசி, a river-plant, Caulinia Indica; இலைப்பாசி, a small water-plant, Lemna obcordata; கடற்பாசி, sea-weed; கற்பாசி, a moss or alga, Lichen rotundatus; கருக்குப்பாசி, கொடிப்பாசி, Serpicula verticillata; கொட்டைப்பாசி, கோரைப்பாசி, தோட்டுப்பாசி, பழம்பாசி, Sida humilis; (*R.*) கூந்தற்பாசி, a water-plant, Zannichellia Indica; நீர்ப்பாசி, Alga, moss; முட்டைப்பாசி, a water-plant, Utricularia stellaris, *L.*; வழுக்குப்பாசி, Vallisneria spiralis; (*R.*) வேப்பம்பாசி, [*vul.*] வேலம்பாசி. Chara corallina.

பாசிகோக்க, *inf.* To string beads.

பாசிக்குத்தகை—பாசித்தீர்வை, s. A tax on fish, மீன்குத்தகை. (*Govt. usage.*)

பாசிபடர்தல், *v. noun.* Spreading as moss.

பாசிபற்ற—பாசிபிடிக்க—பாசிபூக்க, *inf.* To grow or occur, as a mossy or mouldy formation.

பாசிபற்றினபல்—பாசிபிடித்தபல். Foul teeth. (*in contempt.*)

பாசிபிடித்தகிணறு. A well full of green moss.

பாசிப்படை, s. A storming party, or forlorn hope.

பாசிப்பயறு, s. A green species of pulse, Phaseolus radiatus. See பச்சைப்பயறு.

பாசிமணி, s. A string of small black beads, கரியமணி. 2. [*loc.*] A necklace of green earthen beads, பச்சைமணி.

பாசிவிலை, s. The price of fish, மீன்விலை. (*Beschi.*)

*பாசி, s. Varuna, as armed with a noose, வருணன்; [*ex* பாசம், rope.] 2. A dog, நாய். (சது.)

*பாசிதம், s. That which is divided, as a portion, a share, பிரித்தனது. W. p. 661. B'HAJITA. 2. [*in arith.*] Quotient, ஈவு.

பாசிபந்து, s. (*Hind.*) An ornament for the arm of men, commonly worn by Mahratta princes, ஓர்கைஅணி.

பாசிலை, s. A green leaf, as பாசடை. (சது.)

பாசு, s. Green, greenness, verdure, பச்சை. 2. A bambu, மூங்கில்; [*ex* பசு, *adj.*]

*பாசுபதம், s. The Saiva system, one of the six special Saiva sects, regarding Siva, or பசுபதி, as the lord of souls, சைவசமயத்தொன்று. W. p. 532. PASUPATA.

பாசுபதர், s. [*pl.*] Professors of the Saiva system.

பாசுபதாஸ்திரம், s. An arrow or weapon given by Siva to Arjuna, சிவாஸ்திரம்; [*ex* அஸ்திரம்.]

பாசுரம், s. A hymn, mystic poem, or chant, பாட்டு; [*ex* பா, a poem *et* சுரம்.] 2. The melody of a bambu pipe or flute வேய்ங்குழலோசை; [*ex* பாசு, a bambu *et* சுரம்.] 3. Saying, communication, declaration, *commonly in writing,* வசனம். 4. Form or tenor of a letter or writing, வாசகநடை. (*p.*)

பாச்சல், *v. noun.* Rising, ascent, எழுச்சி. (சது.) 2. [*for* பாய்தல்.] A jumping. 3. Butting. See பாய்ச்சல். (*c.*)

பாச்சா, s. Pasha. See பாட்சா.

பாச்சி, s. Milk, பால். [*children's usage.*] See சோச்சி.

*பாச்சி—பாச்சிகை—பாச்சிக்கை, s. (*Tel.* పాచిక.) A dice, a long kind of dice, கவறு, sometimes improperly, பாய்ச்சி, பாய்ச்சிக்கை. W. p. 531. PASAKA.

*பாச்சியம், s. Part, share, portion; allotment, destiny, பகுதி. 2. [*in arith*] Dividend, பிரிக்கப்படுந்தொகை. W. p. 616. B'HAJYA.

பாச்சு, v. To thrust into; to irrigate, &c. See பாய்ச்சு.

பாச்சை, s. A cricket. (*c.*)

பாச்சையடிக்க, *inf.* To be injured by the bite of crickets.

பாச்சொற்றி, s. A plant. See பாற்சொற்றி.

*பாஷணம், s. Speaking, &c. See பாடணம்.

*பாஷண்டம், s. [*also* பாசண்டம்.] Heresy, non-conformity to the orthodox doctrines of the Hindu faith, பாகியம். W. p. 532. PASHAN'DA.

பாஷண்டன்—பாஷண்டி, s. [*pl.* பாஷண்டர், பாஷண்டிகள்.] A heretic, male or female. 2. (*R.*) A vira-Saiva, வீரசைவன்.

*பாஷாணம்-பாடாணம், s. A stone, கல். W. p. 532. PASHAN'A. 2. Arsenic, including the different mineral poisons. —There are two classes, Native arsenic, பிறவிப்பாஷாணம், and Prepared arsenic, வைப்புப்பாஷாணம்; each having thirty-two varieties.

I. *Native arsenic.*—1. அஞ்சனபாஷாணம். 2. அப்பிரகபாஷாணம். 3. அவுபலபாஷாணம். 4. இலிங்கபாஷாணம். 5. கந்தகபாஷாணம். 6. கரட்டுத்தாளகம். 7. கற்கடகபாஷாணம். 8. சற்பரிபாஷாணம். 9. கற்பாஷாணம். 10. காய்ச்சற்பாஷாணம். 11. காந்தபாஷாணம். 12. கார்முகிற்பாஷாணம். 13. குதிரைப்பற்பாஷாணம் or கத்தருபம்; Arsenic realger or red orpiment. 14. கந்தகம் or அங்கிரமாதி. 15. கவுரிபாஷாணம். 16. கோளகபாஷாணம் or அங்கபாஷாணம். 17. சங்கபாஷாணம்.

18. சௌவீரம் or பறங்கிப்பாஷாணம். 19. சாகாண்டபாஷாணம் or அங்குசபாஷாணம். 20. சாலாங்கபாஷாணம் or கும்பகபாஷாணம். 21. சிலாமதம். 22. சிதாங்கபாஷாணம் or அகளங்கபாஷாணம். 23. சிர்பந்தபாஷாணம் or கபாலபாஷாணம். 24. குதபாஷாணம். 25. தகட்டரிதாரம். 26. தாலபம். 27. துந்தபாஷாணம். 28. தொட்டிப்பாஷாணம் or கும்பகபாஷாணம். 29. பலண்டுருகபாஷாணம். 30. மனோசிலை. 31. மிருதம் or அங்கணபாஷாணம். 32. வெள்ளைப்பாஷாணம் or எலிப்பாஷாணம், white Arsenic.

II. *Prepared arsenic* —1. அமாசிலைக்கந்தகம். 2. அயத்தொட்டி. 3. இந்திரபாஷாணம். 4. இரசிதபாஷாணம். 5. இரத்தபாஷாணம். 6. இலவணபாஷாணம். 7. எருமைநாத்தொட்டிப்பாஷாணம். 8. கருமுகிற்பாஷாணம். 9. காகபாஷாணம். 10. குங்குமபாஷாணம். 11. கோடாசொரிபாஷாணம். 12. கோழித்தலைக்கந்தகம். 13. கவுரிபாஷாணம். 14. சௌவீரம். 15. சாதிலிங்கம். 16. சூதம். 17. செப்புத்தொட்டி. 18. சோரபாஷாணம். 19. திமுருகற்பாஷாணம். 20. தத்தம். 21. தாரிசு. 22. தொட்டி. 23. நாகபாஷாணம். 24. நீலபாஷாணம் or நயக்குழவி. 25. பஞ்சபட்சிப்பாஷாணம். 26. பவளப்புற்றுப்பாஷாணம். 27. பூரம். 28. பொற்றொட்டி. 29. மிருதாரசிங்கி. 30. வாணகந்தகம். 31. வெள்ளை. 32. வைப்பரிதாரம், which see.

பாஷாணத்திலேகூட்டுகிறான். He prepares medicines, from arsenic.

பாஷாணக்கல், *s.* An antidote. 2. A snake-stone. See பாம்புக்கல் (*Beschi.*)

பாஷாணதாரகம்—பாஷாணதாரணம், *s.* (*St.*) A chisel for cutting stone, கல்லுளி.

பாஷாணத்தாபனம், *s.* Setting up a stone at the first funeral ceremony, to represent the deceased, whose soul is supposed to be brought into it, by incantations. It is afterwards cast into the Ganges, or other waters, சிலாஸ்தாபனம்.

பாஷாணமுத்தி, *s.* Bliss like that of a stone, annihilation—as taught by the Buddhists, கற்போற்கிடக்குமுத்தி.

*பாஷாண்டி, *s.* As பாஷண்டி, 2. (*R.*)

*பாஷாந்தரம். See பாஷை.

*பாஷிதம், *s.* Speech. See பாடிதம்.

*பாஷை, *s.* A language, tongue, speech. W. p. 619. B'HASHA. 2. Secret language; expressive signs or signals, as a mode of communicating ideas, குழூஉக்குறி. 3. Distinctive sounds of birds or beasts, regarded as their language, மிருகமுதலியவற்றின்ஒலிக்குறி. 4. A conditional curse, in which a person binds himself, by oath, to wreak vengeance on his foe, சபதம்.—The eighteen languages of India are: 1. அங்கம், Bengal proper; 2. அருணம், Agra; 3. கலிங்கம், the Northern circars, Telinga; 4. கௌசிகம், Cutch, or Carnataca; 5. காம்போசம், Camboja, in the north of India; 6. கொங்கணம், Konkan, on the Malabar coast; 7. கோசலம், Kowsali, or Oude; 8. சாவகம், Javanese, Malacca; 9. சிங்களம், Cingalese; 10. சிந்து, Sind, along the Indus; 11. சீனம், Chinese; 12. சோனகம், Hindustani; 13. திராவிடம். Tamil and its cognate languages. See திராவிடம். 14. துளுவம், the language spoken between the Konkan and Canara; 15. பப்பரம், Gujarathi and Babrea; 16. மகதம், Maghada, a country, South of Behar; 17. மராடம், Mahratta; 18. வங்கம், Bengali.

பாஷாந்தரம், *s.* A foreign language; [*ex* அந்தரம், difference.]

பாஷாந்தரமாக்க—பாஷாந்தரப்படுத்த, *inf.* To translate into another language.

பாஷைகூற—பாஷைசொல்ல, *s.* To swear, to pronounce an imprecation.

பாஷைக்காரர், *s.* [*pl.*] Europeans, chiefly Englishmen. 2. The owners of a language.

பாஷைபங்கம், *s.* [*prov.*] A threat of vengeance under oath.

பாஷைபடிக்க-பாஷையைப்படிக்க, *inf.* To learn a language.

பாஷைபேச, *inf.* To speak English. 2. To speak a foreign language. 3. To speak in an unknown tongue. (*colloq.*)

பாஷைப்படுத்த-பாஷையாக்க, *inf.* To translate.

பாஷைப்போக்கு, *v. noun.* Idiom or style of a language.

பாஷையறிந்தவன், *appel. n.* One who knows a foreign language.

பாஷையிட—பாஷைவைக்க, *inf.* As பாஷைகூற.

*பாஷ்பம், *s.* Tear. See பாட்பம்.

*பாஞ்சசத்திகம், *s.* Any musical instrument, வாத்தியப்பொது. W. p. 522. PANCHASABDIKA.

*பாஞ்சசன்னியம், *s.* The chank of Vishnu or Krishna, said to be surrounded when in the sea by thousands of வலம்புரிச்சங்கு with spirals to the right. If sounded it would, it is supposed, disturb the whole world, விஷ்ணுவையிற்சங்கு. W. p. 522. PANCHAJANYA.

பாஞ்சசன்னியதரன், *s.* Vishnu as the bearer of this conch; [*ex* தரம், holding.]

*பாஞ்சராத்திரம், *s.* [*also* பஞ்சராத்திரம்.] A system of the worshippers of Vishnu said to have been taught by him to Brahma in five nights of the deluge, வைஷ்ணவாகமத்திலொன்று. 2. A subdivision of the Vaishnuva system, விட்டுணுசமையத்திலோர்பகுதி. 3. One of the exterior sects according to the Saivas, சைவத்திற்குப்புறச்சமயத்தொன்று. See சமயம்.

பஞ்சராத்திரி—பாஞ்சராத்திரிகன், *s.* A religionist of the பாஞ்சராத்திரம் sect.

*பாஞ்சாலபுருஷன், *s.* A hero, a noble, இலக்ஷணமுடையோன். 2. As பாஞ்சாலன்.

*பாஞ்சாலம், *s.* The பாஞ்சாலம் country, one of the fifty-six, of Puranic geography, ஓர்நாடு. W. p. 522. PANCHALA.

பாஞ்சாலன், *s.* An inhabitant of Panchala, பாஞ்சாலநாட்டான். 2. The king of that country, பாஞ்சாலநாட்டரசன்.

*பாஞ்சாலி, *s.* A name of Duropathi, by turns, wife of the five Pandava princes, துரோபதை. W. p. 522. PANCHALI.

*பாடகம், *s.* A female foot-ornament, பாதகடகம். W. p. 532. PASHAKA. (*c.*)

*பாடகன், *s.* A panegyrist attending the prince in his movements, pronouncing his titles, and singing verses in his praise, புகழ்வோன். 2. Singer, பாடுவோன்; [*from Sa. Pat'aka*, a lecturer, public reader.]

*பாடணம்—பாஷணம், *s.* Speaking, speech, சம்பாஷணை. W. p. 619. B'HASHANA. 2. Lecturing, teaching, போதனை. See பாடணம்.

*பாடபம்—பாடவம், *s.* The deluge fire, வடவாமுகம். W. p. 603. BADABA. 2. Joy, exultation, animal excitement, சந்தோஷம்.

பாடம், *s.* Pressure, compression of a heap of tobacco, olas or skins, by a weight placed on them, அழுத்தம்; [*ex* பாடு, side.] 2. The artificial joining of precious stones, or chasing of gold, so as to reflect the desired colors, இரத்தினமுதலியவற்றிடுனொளி. (*c.*)

பாடஞ்சேர, *inf.* To be pressed down, or compressed by a weight.

பாடம்அடுக்க—பாடம்பண்ண, *inf.* To pile up things, as olas or tobacco.

பாடம்பாடமாயொளிவிடுகை, *v. noun.* Reflecting light differently, as a gem held in different positions.

பாடம்போட—பாடத்திலேவைக்க, *inf.* To put a thing down with a weight on it to flatten it.

புகையிலைபாடம்பண்ணினான். He piled up tobacco.

*பாடம், *s.* Study of the Vedas, one of the பஞ்சமகாயக்கியம் or sacrifices of the Hindus, வேதபாடம். 2. Reading, perusal, or study in general, படிப்பு. W. p. 522. PATHA. 3. Lesson as given to be learned, நியமித்தபாடம். 4. Lesson, as well-learnt, படித்தபாடம். (*c.*) 5. (*Sa. Pat'a.*) Breadth, expanse, evenness, extension, விரிவு. 6. A street, வீதி. 7. A street of herdsmen, இடையர்வீதி.

பாடங்கேட்க, *inf.* To learn lessons, a science, &c., under a tutor. 2. To hear lessons recited.

பாடங்கொடுக்க, *inf.* To give or recite a lesson.

பாடசாலை, *s.* A college, a hall in which students are taught.

பாடச்சுவடி, *s.* The class-book from which lessons are copied.

பாடஞ்சொல்ல, *inf.* To explain lessons to pupils, to teach. 2. To recite lessons.

பாடந்தட்ட—பாடந்திக்க, *inf.* To fail in the recitation of a lesson.

பாடமாக்க, *inf.* To get a lesson by rote.

பாடம்பண்ண, *inf.* To learn by heart.

பாடம்போற்ற, *inf.* To impress a lesson on the memory, to reflect, பாடம்ஞாபகப்படுத்த. (*p.*)

மனப்பாடம், *s.* Lesson retained in the mind.

மேற்பாடம், *s.* The original from which a lesson is taken.

வாய்ப்பாடம், *s.* Reciting without book.

*பாடலம், *s.* Pale red, pink, or rose colour, இளஞ்சிவப்பு. 2. The trumpet-flower and tree, பாதிரி, Bignonia chelonoides, *L.* 3. A horse, குதிரை. 4. The horse of king Sera, சேரன்குதிரை. (*சது.*) W. p. 522. PAT'ALA.

*பாடலி, *s.* Toddy, inebriating drink, கள். 2. (*St.*) The trumpet-flower and tree, as பாடலம்.

பாடல், *s.* A poem, large or small, பாட்டு. 2. See பாடுதல், singing. (*c.*)

மூவாயிரம்பாடல். A poem of three thousand verses.

அகஸ்தியர்பாடல். Agastya's poetry.

*பாடவம், *s.* Cleverness; health. W. p. 522. PAT'AVA. 2. Animal excitement, joy, களிப்பு. 3. The deluge-fire, வடவாமுகாக்கினி. (*சது.*) See பாடபம்.

*பாடவன்—பாடவை, *s.* Gemini, of the Zodiac, மிதுனவிராசி. (*சது.*)

*பாடனம், *s.* Lecturing, teaching, reciting, போதித்தல். W. p. 522. PAT'HANA. 2. Singing in concert. See மதுரபாடனம்.

பாடன்மகடூ—பாடன்மகள், *s.* A female of the பாணர் caste. (சது.)

*பாடாணம், *s.* A stone, &c. See பாஷாணம்.

பாடாண்டிணை, *s.* A class of external objects of perception, புறப்பொருட்டிணையிலொன்று.

பாடாவறுதி—பாடாவிதி. See பாடு.

பாடி, *s.* A district, ஊர். 2. Village, சேரி. 3. City, town, நகரம். 4. Village in a jungle tract, முல்லைநிலத்தூர். 5. Country, நாடு. 6. A tune, ஓர்ராகம். 7. Army, troops, சேனை. 8. Armor, coat of mail, கவசம். (சது.) 9. Encampment, பாசறை. 10. [*in combin.*] Various things. See பண்டம்பாடி. 11. [*ex* பாடு.] A songster, a warbler, &c., பாடுபவன். See கூழுக்குப்பாடி. 12. (*Beschi.*) [*among thieves.*] One sent to spy a village for plundering, உளவாளி.

பாடிக்கதை, *s.* [*prov.*] Idle talk, வீண்பேச்சு.

பாடிசொல்ல, *inf.* To expose secrets.

பாடிபரதேசி, *s.* A wandering ballad-singer. 2 Wandering beggar.

பாடியோடுதல் - பாடியோட்டம், *v. noun.* [*prov.*] Play of prison-bars, ஓர்விளையாட்டு.

பாடிவீடு, *s.* Soldier's quarters, when encamped against the foe, as பாசறை.

அங்குமிங்கும்பாடி, *appel. n.* He who first joins one party and then another secretly, in the time of contest.

*பாடிதம்—பாஷிதம், *s.* Speech, any thing spoken, declaration, பேச்சு. W. p. 619. B'HASHITA.

*பாடியம்—பாஷியம் — பாஷ்யம், *s.* Commentary, interpretation of verses, &c., உரை. W. p. 619. B'HASHYA.

*பாடிரம்—பாடீரம், *s.* A root, ஓர்கிழங்கு. 2. Sandal, சந்தனம். 3. Tin, தத்தநாகம். 4. A Cloud, முகில். 5. Bambu-rice, மூங்கிலரிசி. 6. Rheumatism, வாதம். W. p. 522. PAT'EERA.

*பாடிலம், *s.* Country, நாடு. (சது.)

*பாடினி, *s.* A female of the பாணர், or singing class; a songstress, பாடுவாள்; [*ex* பாடனம்.]

பாடு, *s.* Occurrence, event, circumstance, உண்டாகுகை. 2. Affliction, suffering, hardship, toil, drudgery, வருத்தம். 3. Experience, endurance, feeling, bearing, அநுபவிக்கை. 5. Ruin, waste, loss, injury, damage, disaster, detriment, அழிவு. 6. Work, labor, means of support, &c., வேலை. 7. Duty, obligation, accountability; a personal concern or affair, கடமை. 8. A capture, that which is caught or taken; a draught, of fishes, மீன்பிடிக்கை. 9. Nature, quality, attribute, property, disposition, temperament, குணம். 10. Greatness, eminence, superiority, பெருமை. 11. Place, location, situation, இடம். 12. Sign of the local ablative, ஏழாம்வேற்றுமையுருபு. 13. Side, பக்கம். 14. Sound, noise, tone, ஓசை. 15. [*in astrology.*] The seventh from the rising sign, உதயத்திற்கேழாமிடம். 16. [*in astron.*] The setting of a planet, the heliacal setting of a planet, அஸ்தமனம்; [*ex* படு, *v.*]—In some combinations it is doubled as பாட்டாளி, பாட்டிலே, &c.

அதிலேபாடில்லை. No trouble or no loss.

பாடுவந்தாற்றுங்கமாட்டேன். If damage come, I will not bear it.

இதுஉன்பாடுதான். This is your duty.

பாடெம்மாத்திரம். How much waste? (by melting, &c.)

அவரவர்பாட்டிலேபோங்கள். Let each one go to his work.

ஒருபாடு. One side.

தன்பாடாய். By his own exertions.

இன்றைக்குமீன்பாடில்லை. To-day there is no fish.

பாடாக, *inf.* To suffer injury; to perish, கெட.

பாடாயடிக்க, *inf.* To beat severely.

பாடாயழிய, *inf.* To be seriously damaged, to be ruined.

பாடாய்முடிய, *inf.* To turn out disastrously.

பாடாய்விழ, *inf.* To have a dangerous fall. 2. To sustain a heavy loss from a fall—as of a valuable tree, a field of grain, &c.

பாடாவறுதி—பாடாவாரி, *s.* [*prov.*] A very heavy or severe blow, a loss; confinement to a couch from a severe injury, மிகுபாடு.

பாடாவிதி, *s.* Troublesomeness, distress, disaster, கெடுவிதி; [*ex* விதி, fate.] (*Beschi.*)

காரியம்பாடாவிதியாய்முடிந்தது. The thing ended unhappily.

பாடுகாட்டிவிழ, *inf.* To lean or fall on one side, through weakness.

பாடுகாயம்—பாடானகாயம், *s.* A mortal wound, as படுகாயம்.

பாடுசேதம், *s.* Loss, waste in measuring or melting metals, &c.

பாடுபட, *inf.* To suffer, to endure hardship, pain, trouble. 2. To take pains, to labor hard, to try, to endeavor.

பாடுபடவிதித்தாயோதெய்வமே. O, God! hast thou doomed me to suffer thus?

பாடுபடுத்த, *inf.* [*causative.*] To afflict, to put to pain; to torture. 2. To set to hard labor, to keep one hard at work.

பாடுபடுத்திக்கேட்க, *inf.* To question by torture.

பாடுபட்டுத்தேட, *inf.* To get by labor.

பாடுபட்டுப்பிழைக்க, *inf.* To live by hard labor.

பாடுபட்டுப்பெற, *inf.* To bring forth with great suffering. 2. To attain an object with great labor.

பாடுபட்டுழைக்க, *inf.* To earn by great industry, or pains.

பாடுபறப்பு, *v. noun.* One's cares, anxieties, labor, hardship or drudgery.

பாடுபாடாய்விழ, *inf.* To fall again and again, first on one side and then on the other.

பாடுபார்க்க, *inf.* To attend to one's business, labor, or drudgery.

பாடுவாசி, *s.* Allowance for the waste produced by rubbing or melting gold.

அடிப்பாடு, *s.* Custom, path, &c. See in its place.

ஆசைப்பாடு, *s.* Cupidity.

உறுதிப்பாடு — பெரும்பாடு. See in their places.

பாட்டாளி, *s.* A laborious man, *neg.* பாட்டாளியல்ல. 2. See பாட்டு.

பாட்டாள், *s.* One capable of hard work. 2. [*prov.*] An idler, சோம்பன். 3. See பாட்டு.

பாட்டிலேபோக, *inf.* [*with possessive pron.*] To attend to one's own business. See தன்பாடு. 2. [*in astron.*] To set, as the moon, or other heavenly body.

பாட்டிலேவிழ, *inf.* To fall flat.

பாட்டுக்காணி — பாட்டுத்தரை—பாட்டுநிலம், *s.* [*prov.*] Waste land; sterile, stony ground. Compare செம்பாடு.

பாடு, கிறேன், பாடினேன், பாடுவேன், பாட, *v. a.* or *n.* To sing, to chant, to hymn; to warble as birds; to hum as bees or beetles, இசைபாட. 2. To make verses, to compose poetry, கவிபாட. 3. To sing verses from a book, வாசிக்க. 4. [*fig. vul.*] To abuse one, திட்ட. 5. [*prov.*] To sing in running at the play of prison-bars, பாடிபோட. (*c.*)

பாடிக்கறக்கிறமாட்டைப்பாடிக்கறக்கவேணும், ஆடிக்கறக்கிறமாட்டைஆடிக்கறக்கவேணும். A cow which requires singing or dancing, when milked, must be so dealt with; i. e. appropriate means to secure an end.

பாடிக்காட்ட, *inf.* To teach one to sing.

பாடிக்கொடுக்க, *inf.* To make a poem for another.

பாடிப்படிக்க, *inf.* To read and sing.

பாடிவைக்க, *inf.* To make a poem and give it to the world.

பாடுவன் — பாடுவான் — பாடுவோன், *appel. n.* [*fem.* பாடுவள், பாடுவாள்.] A singer.

பாடுவிச்சி, *s.* A songstress, as பாடுவாள்.

குரலைநெருக்கிப்பாட, *inf.* To chant with a compressed shrill tone.

குரலைவிரித்துப்பாட, *inf.* To chant in a full tone.

பாடல் — பாடுதல், *v. noun.* Singing, chanting. See ஆடல்பாடல்.

பாடற்கிலக்கணம், *s.* Versification.

பாடுவிக்க, *inf.* [*causative.*] To teach to sing and chant, பாடப்பயிற்ற. 2. To make one sing for amusement, பாடச்செய்ய. 3. To get one to make verses or a poem, ...ம, பாடச்செய்ய.

பாடை, *s.* A bier, ஆசந்தி. (*c.*) (சt; an ...கிராந்

பாடைகட்ட, *inf.* To construct a bi... for a funeral. ...ற்

பாடைகட்டுவோய். A bier will be made for you; a *curse.*

*பாடை, *s.* Language, as பாஷை.

*பாட்சா—பாத்ஷா, *s.* [*also* பாச்சா.] A Mohammedan officer, a Bashaw, தருக்கத்தலைவன்.

*பாட்சிகன், *s.* A bird-catcher, a fowler, பறவைவேட்டுவன்; [*ex* பட்சி.] W. p. 521. PAKSHIKA.

*பாட்டகம், *s.* [*corrup. of* ஸ்போடகம்.] Chicken-pox. (*Old. Dic.*)

*பாட்டகன், *s.* A singer, as பாடகன். (*Old. Dic.*)

*பாட்டப்பிரபாகரம்- பாட்டாப்பிரபாகரம், *s.* The religion of a sect who regard the Vedas as deity, வேதமேதெய்வமென்னுமதம்.

பாட்டம், s. A shower of rain, அச்சல்மழை. (c.) 2. (பிக்க.) Cakes, pastry, பலகாரம். Compare பிட்டம். 3. [prov.] A turn or time in the play of கிட்டிப்புள்ளு. 5. A part of the கிட்டிப்புள்ளு play.

மழைபாட்டம்பாட்டமாய்வந்தது. It rained, in slight showers, successively.

*பாட்டம், s. One of the six exterior systems of religion as பாட்டாசாரியம்.

பாட்டன், s. A follower of the பாட்டாசாரியம் system.

பாட்டன், s. [voc. பாட்டா, hon. பாட்டனார், pl. பாட்டன்மார், பாட்டாக்கள்.] A grand-father, மூதாதை. 2. A grand-father's or grand-mother's brother, பாட்டன்முறையானவன். (c.) 3. An ancestor, grand-sire—Of பாட்டன் are அப்பாட்டன், பெரியபாட்டன், great-grand-father; முப்பாட்டன், grand-father's grand-father; சற்பாட்டன், father of முப்பாட்டன்.

பாட்டன்பூட்டன்காலத்திலே. In the time of our ancestors.

*பாட்டாசாரியம், s. The system founded by Battacharya. See சமயம்.

பாட்டாசாரியர், s. [pl.] Followers of the above system.

பாட்டாசாரியன், s. The founder of the system.

பாட்டி, s. [hon. பாட்டியார்.] A grand-mother, மூதாய். 2. A grand-father's sister; grand-mother's sister. 3. A sow, a bitch, a she-jackal, and some other she-animals, ஒருசார்விலங்கின்பெண்பொது. 4. See பாட்டு.

பாட்டிமார், s. (Hind.) Small native coasting vessels on the Malabar coast.

*பாட்டியமி—பாட்டியம், s. The day next after a new or full moon. (c.)

பாட்டியல், s. A book on poetry, ஓர்நூல். 2. That part of Tamil grammar which treats of poetry, செய்யுளிலக்கணம். 3. The name of three different modes of singing, கனம், நயம், தேசிகம்; [ex பாட்டு.]

பாட்டில்—பாட்டீல், s. (Mahrat.) A kind of flat bracelet, worn by women or children, தட்டைக்காப்பு.

பாட்டு, v. noun. [used substantively.] Singing, chanting, பாடுதல். 2. A song, hymn, ode, poem, as sung or adapted to music, இசைப்பா. 3. A poetic verse or stanza, poetry, verse, செய்யுள். (சது.) 5. [in irony.] Abuse, வசைமொழி. 6. A word, a saying, சொல்; [ex பாடு, to sing.]

பாட்டாளி, s. A songster. 2. See பாடு.

பாட்டுக்காரன், s. A poet, the writer of the poem in question, கிரந்தகருத்தன். 2. A singer, பாடுவோன். 3. The chorister in dramatic performances, இசைவல்லான்.

பாட்டுக்கேட்க, inf. To hear, or attend to the singing of a singer. 2. To be abused.

பாட்டுடைத்தலைவன் — பாட்டுநாயகன், s. The hero of a poem.

பாட்டுப்படிக்க, inf. As பாட்டுப்பாட.

பாட்டுப்பாட — பாட்டுச்சொல்ல, inf. To sing a song. 2. To make verses, to versify, &c.

பாட்டுப்போக்கு, v. noun. Poetic style or diction.

பாட்டுமுறையும்—பாட்டும்பயனும்—பாட்டும்பொருளும். The verse and its commentary.

பாட்டுவாளி, s. [prov.] A singer; a strolling singer, உடுக்கைதட்டிப்பாடுவோன்.

பாட்டி, s. A singing woman, பாடுவள்.

*பாட்டை, s. (Tel.) A road, or way, வழி. W. p. 748. VAT'A.

பாட்டைசாரி, s. A traveller, one stopping on a journey, வழிநடப்பவன்; [ex சரி, to sojourn.]

*பாட்பம்—பாஷ்பம், s. Tear, கண்ணீர். W. p. 604. BASHPA.

*பாணபத்திரன், s. A minstrel at the court of வரகுணபாண்டியன், of Madura.

*பாணம், s. Arrow, dart, அம்பு. W. p. 603. BAN'A. 2. Rocket, fireworks. See வாணம். 3. A species of குறிஞ்சி tree that yields sky colored flowers, Lawsonia spinosa. 4. (திக.) Silk, பட்டு.

பாணகோசரம், s. The velocity of an arrow, சாகதி. W. p. 603. BAN'AGOSHARA.

பாணந்தொடுக்க, inf. To fix arrows in the bow. 2. To discharge arrows.

பாணந்தொடுத்தாற்போலே பேசுகிறான்......He pours forth words as arrows.

*பாணர், s. Lute players, lutists, the caste, பாடுவோர். [from Sa. Van'a, a lute.] 2. Panegyrists attending a prince, to pronounce his titles, and sing verses in his praise, புகழ்வோர்; [from Sa. Pan'a, praise.]

பாணன், s. [fem. பாணச்சி, பாணத்தி, பாணிச்சி.] A tailor, தையற்காரன்.

பாறு, s. (for.) A kind of large bellied-pot, வயிறுபருத்தபானை. 2. An earthen pan, பருத்தசட்டி. 3. Large testicles, பருத்தபீசம். 4. [also பாறுத்தடி.] A strong fencing stick.

பாறுவயிறு — பாறுப்போலேவயிறு. A large paunch.

பாறுது, s. [prov.] An unsuccessful fall in dice—four of the five dice, including a dotted one, being of a kind—oppos. to சோறுது, வீண்தாயம்; [ex பாழ், waste, et நாது.]—The change of ழ் in coalescence with ந, is irregular, but some examples of high authority are found.

பாணி, s. Toddy, கள். 2. Sweet juice, of certain fruits, பழரசம். 3. Thick sap or moisture of இருப்பை flowers, tobacco leaves, &c. 4. A chant with an accompaniment, சங்கீதம். 5. A song as sung, இசைப்பாட்டு. 6. Time, காலம். 7. Delay, procrastination, தாமதம். 9. A country, நாடு.

பாணிப்பிடிப்பு, v. noun. A sappy or juicy state, as in flowers, tobacco, leaves, &c.

பாணிப்பூ, s. Iluppy flowers in a sappy, or oily state.

*பாணி, s. Hand, arm, கை. 2. Groves around a town, or village—one of the four defences, ஊர்சூழ்சோலை. 3. Stores, provisions, பலபண்டம். W. p. 523. PAN'I. 4. Molasses, treacle, சருக்கரைக்குழம்பு. W. p. 596. P'HAN'I. 5. Word, declaration, sentence, speech, பேச்சு. [also வாணி.] W. p. 603. BAN'I. 6. Water, நீர். 7. A kind of dramatic entertainment with dancing, கூத்து.—*Most of the compounds are of Jaffna.*

பாணிகாய்ச்ச, inf. To make treacle by boiling sweet toddy, or by dissolving jaggery, or sugar, over the fire.

பாணிக்கிரகணம், s. Taking in hand, grasping, கைப்பற்றுகை. [not in use.] 2. Taking the bride's hand as a part of the marriage ceremony, கலியாணம்.

பாணிக்கிரகணம்பண்ண, inf. To take or join hands. 2. To marry.

பாணிப்பனாட்டு, s. Dried palmyra-jelly kept in molasses.

பாணிப்பதம், s. The proper consistence of பாணி. 2. A certain stage of boiling in medicinal oils.

பாணியாக, inf. To be dissolved, as sugar or jaggery.

பாணி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To delay, தாமதிக்க. (Colloq.)

பாணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To consider, imagine, conceive, பாவிக்க. 2. To conjecture, to estimate, to form an opinion, to value, நிதானிக்க. (Colloq.)

கையாலேபாணிக்க, inf. To value, to estimate the weight, or value of a thing by weighing it in the hand.

மனதிலேபாணிக்க, inf. To form an opinion of.

பாணிப்பு, v. noun. Consideration, imagination, பாவிப்பு. 2. Guess, conjecture, estimate, opinion, valuation, நிதானிப்பு.

*பாணினி, s. A famous Sanscrit grammarian, சமஸ்கிருதஇலக்கணஓராசிரியன். W. p. 253. PAN'INI.

பாணினியம்—பாணினீயம், s. A Sanscrit grammar by பாணினி, ஓர்வடமொழிஇலக்கணம்.

பாண், s. Singing, vocal music, as பண். 2. Toddy, கள். (சது.)

பாண்செய்ய, inf. To sing. (p.)

பாண்மகள், s. A singing woman of the பாணர் tribe, பாடினி.

பாண்மகன், s. A singer of the பாணர் tribe.

*பாண்டம், s. An earthen vessel, மட்கலம். 2. A vessel in general, a pot, cup, plate, &c., பாத்திரப்பொது. 3. (fig.) The body, உடம்பு. W. p. 616. B'HAN'DA.

உப்பிட்டபாண்டம், s. A salt-pot, as fit for nothing else. 2. A thing or body reduced, broken, or irrecoverable.

உப்பிருந்தபாண்டமும் உபாயமிருந்தநெஞ்சமும் தட்டியுடையாமற்றுனேயுடையும். A salt-pot and deceitful mind break, not by dashing against another, but of themselves.

*பாண்டரங்கம், s. Dancing of Siva, in his assemblies; or according to the mystic theology, the divine operations in creation, சிவன்கூத்து.

பாண்டரங்கன், s. Siva, as the dancer or actor in the universe, சிவன்.

*பாண்டரம், s. Whiteness, paleness, வெண்மை. W. p. 523. PAN'DARA.

பாண்டல், s. Staleness, rancidity, mustiness, rankness, fetidness, mouldiness, பழசுபட்டது. (c.)

பாண்டலடித்தல், v. noun. Stinking; having a musty or rancid smell.

பாண்டலரிசி, s. Spoiled musty rice.

பாண்டல்நாற்றம், s. An offensive smell.

பாண்டல்நெய், s. Rancid ghee.

பாண்டற்கருவாடு, s. Stale and dried fish.

பாண்டவர். See பாண்டு.

*பாண்டவேயன், s. A descendant of Pandu, பாண்டுவமிசத்தான். W. p. 523. Pan'daveya.

*பாண்டி, s. The ancient Madura kingdom, பாண்டியநாடு. 2. A tablet for a kind of play, பன்னாங்குழிப்பலகை. 3. A melody, ஓர்பண்.

பாண்டிமண்டலம்—பாண்டியம், s. The Pandu country; also பாண்டிவளநாடு.

பாண்டியன், s. Any king of Madura of the lunar dynasty, or any prince of that line.

பாண்டியாடுகை, v. noun. Playing the பாண்டி.

பாண்டிராசன், s. [also பாண்டியராசன்.] The king of Madura.

*பாண்டிகன், s. [also வைதாளிகன்.] A singer, one who chants early in the morning, to waken a god, or a great personage, from sleep, பள்ளியெழுச்சிபாடுவோன். W. p. 616. B'han'd'ika.

*பாண்டித்தியம், s. Scholarship, learning, கல்வித்திறம். W. p. 523. Pan'ditya.

*பாண்டியம். See பாண்டி.

பாண்டில், s. A circle, வட்டம். 2. A bowl, a shallow pot, cup, &c., அகல். 3. Cymbals, கைத்தாளம். 4. A carriage, cart, *a bandy*, பண்டி. 5. A bed-stead, கட்டில். 6. Bambu, மூங்கில். 7. Country, territory, நாடு. 8. A bull, எருது. 9. Taurus of the Zodiac, இடபவிராசி. (சது.)

*பாண்டில், s. A tree, வாகை, Mimosa. W. p. 611. B'hand'ila.

*பாண்டு, s. Whiteness, paleness, வெண்மை. 2. A kind of chronic jaundice, causing paleness and bloatedness of the body, ஓர்நோய். 3. A sovereign of ancient Delhi, the nominal father of the five Pandava princes, being a white man, பாண்டவர்தந்தை. W. p. 523. Pan'du.

பாண்டவர், s. [pl.] The five Pandava princes, famous in the B'harata, பாண்டுபுத்திரர்; also பஞ்சபாண்டவர்.

பாண்டவர்முன்பிறந்தோன், appel. n. Karna as the elder brother of the Pandavas, by the same mother, கன்னன். (சது.)

பாண்டுமைந்தர், s. [pl.] The Pandava princes, as reputed sons of பாண்டு.

பாண்டுரோகம்—பாண்டுவியாதி, s. The பாண்டு jaundice.

*பாண்டுரம், s. Whitness, paleness, வெண்மை. 2. Jaundice, ஓர்நோய். W. p. 524. Pan'dura.

பாண்டுருவன், s. [prov.] A large, huge, monstrous person or thing, *spoken in dispraise*, பெரியவுருவுள்ளது.

பாண்டை — பாண்டைநாற்றம், s. A bad smell, as of rotten fish, &c., கெட்டநாற்றம். [*For compounds see* பாண்டல்.] (c.)

பாண்டைநாறி, appel. n. A stinking woman; *in contempt*.

*பாதகம், s. [poet. பதகம்.] A grievous sin, a heinous crime, துரோகம். W. p. 524. Pataka.—*Note*. For the *five* பாதகம், or heinous sins, see பஞ்சபாதகம். Another classification is *seven-fold*, as given in சதுரகராதி, being apparently the venial sins of the Romanists; சித்தசமுன்னதி, or அகங்காரம், pride; 2. அருத்தலோபம், or உலோபம், avarice; 3. காமம், lust, lasciviousness; 4. வைஷம்மியம் or பகை, hatred, enmity; 5. அசனப்பிரியம், போசனப்பிரியம், gluttony; 6. கோபம் or காய்தல், anger, malice; 7. அநுஷ்டானம் or சோம்பல், idleness, laziness.

பாதகத்துரோகி, s. A perfidious villain, an infamous wretch, கொடும்பாவி.

பாதகன், s. [plu. பாதகர், fem. பாதகத்தி, பாதகி.] A vile, desperate sinner, துரோகி. பாதகன்முகத்திலேவிழிக்கப்படாது. Look not on a wicked person.

பாதல், (Arab.) Afterwards, பிற்பாடு.

*பாதஞ்சலம் — பாதஞ்சலியம், s. [also பதஞ்சலியம்.] The Agama philosophy taught by Pathanjali, a sage. See சாஸ்திரம், சமயம், பதஞ்சலி. W. p. 524. Patanjala.

*பாதபம், s. A tree. See பாதவம்.

*பாதம், s. Foot; the leg of a person, animal, article of furniture, &c., கால். 2. Line of a stanza, பாட்டடி. 3. A quarter part, a fourth, கால்பங்கு. 4. Quadrant of a circle, ninety degrees, வட்டத்தின்காற்பங்கு. W. p. 525. Pada. 5. Foot of a tree, மரத்தடி. 6. Base of a mountain or hill, அடிவாரம். 7. The four states of bliss, சரியை, கிரியை, யோகம், ஞானம்.

பாதகடகம், s. An ornament for the foot of a female, பாடகம். W. p. 525. Padakadaka.

பாதகமலம், s. Lotus-like-feet of a deity, or great person.

பாதகாணிக்கை — பாததட்சணை, s. A present to a great personage, laid at his feet.

பாதகுறடு, s. Sandals. See குறடு.

பாதகுறட்டின்குமிழ், s. A knob by which the sandals are kept on.

பாதக்காப்பு, s. Slippers, clogs, Indian shoes, செருப்பு.

பாதசரம், s. A kind of foot ornament, for females. (c.)

பாதசன், s. A man of the fourth or Sudra tribe, as born from the feet of Brahma, நான்காம்வருணத்தான்; [ex சன், one born.]

பாதசாகை, s. A toe, கால்விரல்.

பாதசாபவியம், s. As பாதத்தாடனம்.

பாதசாரம், s. Motion of the planets. See சாரம்.

பாதசாரி, s. A foot-man, a foot-soldier, காலாள். Compare பாட்டைசாரி.

பாதசாலம், s. Foot ornaments in general, காலணிப்பொது. (சது.)

பாதசுத்தி, s. Cleaning or purifying the feet. See கால்கழுவ.

பாதசேவை, s. Service, duty or work, for a god, an idol, or a guru, (*lit.*) *worshipping at the feet*, அடித்தொண்டு. தேவரீருடையபாதசேவை இடைக்கவில்லை.....I have not lately had the privilege of worshipping at your feet.

பாதச்சாயை, s. The shadow under the foot, அடிநிழல். 2. See சாயை.

பாததட்சணை, s. See பாதகாணிக்கை.

பாததரிசனம், s. Interview with a great person, (*lit.*) sight of the feet, பததெரிசனம்.

பாதத்தாடனம்—பாதப்பிரகாரம், s. (St.) Kicking with the foot, உதை.

பாததாமரை—பாதாரவிந்தம், s. As பாதகமலம்.

பாததீட்சை, s. A high kind of தீட்சை, or species of illumination. See திருவடித்தீட்சை.

பாததீர்த்தம் — பாதோதகம், s. Water in which the feet of an idol or guru have been washed. See உதகம்.

பாததூளி, s. Dust of the feet, *commonly* of a great person.

பாதத்திலேவிழ, inf. As பாதம்பணிய.

பாதபங்கயம் — பாதபதுமம் — பாதபத்மம்—பாதபற்பம், s. Lotus-feet of a holy, or great personage.

பாதபரிசம், s. Touching a superior's foot, திருவடிதீண்டுகை. 2. A kind of arsenic, கெந்தகபாஷாணம்.

பாதபீடம்—பாதபீடிகை, s. A footstool, as பாதாசனம்.

பாதபூசை, s. Worshipping with flowers, the feet of a Guru or other sacred person, as one of the rites of hospitality.

பாதப்பிரகாரம், s. As பாதத்தாடனம்.

பாதப்பிரட்சாளனம், s. Washing the feet, கால்கழுவுகை. See பிரட்சாளனம்.

பாதமயக்கு, s. A verse capable of transposition, as அடிமயக்கு. (p.)

பாதமுத்தி, s. Kissing the feet of a great person. 2. As சாயுச்சியம்.

பாதமுத்திரை, s. Sandals, &c., in which there is the print of a Guru's or other sacred person's foot; left with a disciple, in token of protection; and to be worshipped.

பாதமூலம், s. The ball of the foot, குதிக்கால். W. p. 525. Padamoola.

பாதம்பணிய, inf. To prostrate at one's feet.

பாதம்பாலிக்க, inf. To set the foot on the head of a prostrate worshipper, and bless him.

பாதரட்சணம்—பாதரட்சை—பாதரக்ஷ, s. Shoes, slippers, clogs, or sandals, (*lit.*) defence, or safe guard for the feet, தொடுதோல்.

பாதவந்தனம், s. Homage, reverence, worship, at the feet of a great person.

பாதாக்கிரம், s. The tip of the foot, end of the great toe, காலுனி; [ex அக்கிரம், point.]

பாதாக்கிராந்தன், s. [pl. பாதாக்கிராந்தர்.] A worshipper at the feet; an expectant, அடிவணங்குவோன்.

பாதாங்குட்டம், s. The great toe, காற்பெருவிரல்; [ex அங்குஷ்டம்.]

பாதாசனம், s. Footstool, பாதபீடிகை. 2. Sandals, பாதகுறடு.

பாதாதிகேசம். From foot to head. 2. s. A poem as கேசாதிபாதம். See கேசம்.

பாதாம்புயம்—பாதாரவிந்தம், s. Lotus feet as பாதபங்கயம்.

பாதார்த்தம், s. An eighth part, எட்டிலொன்று; [ex அர்த்தம், half.] An offering to a deity or sacred person, as பாதகாணிக்கை.

*பாதம், s. [in combin.] Falling, descending, prostration, வீழ்கை—as நிபாதம். 2. Happening, occurring, occurrence, சம்பவம்—as சேதபாதம், ruin occurring; உற்பாதம், an accidental occurrence.

*பாதரசம்—பாதரதம், s. Mercury or quick silver, குதம். (சது.)

*பாதராயணன், *s.* [*Tam. and com.* வாதராயணன், *which see.*] An epithet of Vyasa.

*பாதரோகணம், *s.* A tree, அரசமரம், Ficus religiosa, *L.* W. p. 525. PADAROHAN'A.

*பாதலம், *s.* [*com.* பாதாளம்.] The abyss, the infernal regions. (*p.*)

*பாதவம், *s.* [*St.* பாதபம்.] A tree in general, மரப்பொது. W. p. 525. PADAPA. 2. A garden, சோலை. 3. Hill, mountain, மலை. (சது.)

*பாதாக்கிரம் — பாதாங்குட்டம்— பாதார்த்தம். See under பாதம்.

*பாதாளம், *s.* The infernal regions under the earth, the supposed abode of Nagas, கீழுலகம். 2. A deep hole, pit, chasm, gulf, an abyss, பிலம். 3. Any of the nether worlds, especially the lowest, கீழேழுலகத்தொன்று. 4. Hell, நரகம். 5. [*in astron.*] The fourth sign from that in which the sun is present. W. p. 524. PATALA.

பாதாளத்திற்கொண்டுபோய்ப்பதுக்கிவிட்டான்....He has hid it in a very secret place.

பாதாளகங்கை, *s.* As பாதாளவாகினி.

பாதாளகிரகணம், *s.* An eclipse partly visible and partly invisible. 2. As காணாக்கிரகணம். See under கிரகணம்.

பாதாளநிலயம் — பாதாளபூமி, *s.* The lower regions, the abyss, கீழுலகம்.

பாதாளப்பணிக்கன், *s.* A deep, profound person. See பணிக்கன்.

பாதாளமூலம் — பாதாளமூலி, *s.* A variety of the cyperus grass; (*lit.*) whose root descends to the abyss, ஓர்புல்; the சீந்தில் creeper. 2. A kind of white ant, ஓர்கறையான்.

பாதாளலோகம், *s.* Any of the nether worlds. See உலகம். 2. The lowest of the nether worlds.

பாதாளவஞ்சனம், *s.* A kind of magic, by which things deep in the earth, are discovered; [*ex* அஞ்சனம்.]

பாதாளவயிரவன், *s.* Bhairava of the abyss, in reference to whom rice is boiled and sacrifice offered, in digging wells, and discovering hidden treasure, under ground.

பாதாளவழி, *s.* Subteraneous passage to the abyss.

பாதாளவாகினி, *s.* The Ganges of the abyss.

பாதாளவாசிகள், *s.* [*pl.*] Inhabitants of the nether worlds.

பாதாளவினையன், *s.* [*also* வினையளந்தபாதாளம்.] A deep scheming crafty man, மிகுசூதன்.

கிடுகிடுபாதாளம், *s.* Very deep, மிகுஆழம்.

பாதி, *s.* Half, moiety, middle, அரை. 2. Part, proportion, share, பங்கு. (சது.)

பாதிஆயிற்று. The work is half done.

முற்பாதி, *s.* Former half, first half.

பிற்பாதி, *s.* Latter half, last end.

படப்பாதி, *s.* Joined cabinet-work.

பாதிசெய்ய, *inf.* To halve.

பாதிச்சாமம், *s.* Midnight as அர்த்தராத்திரி.

பாதிப்பேச்சு, *s.* Broken language. 2. The midst of a dispute.

பாதிமதி, *s.* Half moon, அர்த்தசந்திரன்.

பாதியிரா—பாதியிராத்திரி, *s.* As பாதிச்சாமம்.

பதியிலேவிட்டுவிட, *inf.* To leave off in the midst; leave half done or unfinished.

பாதிவழி, *s.* Midway.

பாதிக்க, *inf.* [*only in poetry.*] To halve, to divide in halves, சரிபாதிசெய்ய.

பாதிட, *inf.* To apportion, to distribute, பங்கிட. 2. To narrow, to contract, நெருக்க. 3. To preserve, பாதுகாக்க.

பாதீடு, *v. noun.* Securing, keeping carefully, பாதுகாக்கை. 2. Division, sharing, பங்கிடுகை. 3. Compressing, நெருக்குகை.

*பாதித்தியம், *s.* Apostasy, as பதிதம்.

பாதிரி, *s.* The trumpet-flower-tree, as பாடலம், Bignonia chelonoides, *L.* 2. Bambu, மூங்கில். (சது.)

பாதிரிவேர், *s.* The root of the பாதிரி tree, in infusion, making a cooling drink for fevers.

பாதிரி, *s.* [*for. pl.* பாதிரிமார்.] Priest, European Missionary.

*பாதிவிர்த்தியம், *s.* Matronly chastity, as பதிவிரதைத்தனம்.

பாது, *s.* Preservation, protection, custody, காவல். 2. Dividing, sharing, பங்கிடுகை. 3. Compressing, நெருக்குகை.

பாதுகாக்க, *inf.* [*v. noun.* பாதுகாப்பு.] To protect, to defend, to guard, to preserve, காப்பாற்ற. To take care of, to cherish, to foster, பராமரிக்க. 3. To help, to assist, உதவிசெய்ய.

பாதுகாவல், *v. noun.* Protection, guard, காவல். 2. Helping, aiding, defence, உதவி. 3. (*Old Dic.*) Watch of a district, ஊர்க்காவல்.

பாதுகாவலன் — காவலாளி, *s.* A protector. 2. Watchman of a district.

*பாதுகம் — பாதுகை, *s.* Sandals, wooden slippers, defence for the foot, பாதகுறடு. W. p. 526. PADAKA.

பாதுகாகாரன், *s.* A shoe-maker, தோல்வினைஞன்.

பாதுகாசகஸ்திரம், *s.* A poem in praise of a god's sandals, ஓர்நூல்.

பாதுகாசித்தி, *s.* The power of passing at will through the sky to any distant place, by putting on a pair of magical sandals, அந்தரத்திலெழுதியடிமேல்நடத்தல்.

பாதுகைக்குமிழ், *s.* The knob of wooden sandals.

*பாதூனசந்திரன், *s.* [*in astron.*] Nodal distance of the moon.

*பாதேயம், *s.* Boiled rice or other provisions, put up for a journey, கட்டுச்சோறு; [*ex* பாதை.] W. p. 525. PAT'HAYA. (சது.)

*பாதை, *s.* A beaten way, a foot-path, அடிப்பாடு. 2. Way, road, வழி. 3. Method, manner, way, mode, முறை. W. p. 499. PAT'HIN. 4. A flat bottomed boat, மிதவை. 5. A navigating vessel in general, மரக்கலம். 6. Affliction, as சலபாதை. See வாதை.

ஒருபாதையிலேகாரியத்தைத்தீர்க்கவேண்டும். (We) must settle the business in some way or other.

*பாதோதகம். See பாததீர்த்தம்.

*பாத்தம், *s.* Colloquial dialect of the Sanscrit, &c., as பாகதம். See பிராகிருதம்.

பாத்தல்—பாப்பு, *v. noun.* [*def. v. see* பாத்து.] Dividing, distributing, sharing, apportioning, பங்கிடல். 2. Giving, கொடுத்தல்.

பழியஞ்சிப்பாத்தூணுடைத்தாயின். He who fears to do wrong and gives to mendicants.

பாத்தி, *s.* Division, share, part, portion, பங்கு. 2. Compartment, area, a garden-bed, salt-pan, &c., சிறுபுலம். [*Tel.* పొత్తు.] 3. Any small cultivated spot or patch, சிறுசெய். 4. House, dwelling, abode, வீடு. (சது.) 5. A bed of buried palmyra-stones, பனங்கிழங்குப்பாத்தி. Compare பத்தி, and பந்தி.

பாத்திகட்ட — பாத்திகோல, *inf.* To bank up or make garden-beds, salt-pans, &c.

பாத்திபோட, *inf.* To make a bed of palmyra stones.

கீரைப்பாத்தி, *s.* A bed of Amaranthus tristis.

கீரைப்பாத்திச்சேலை, *s.* A variegated cloth. (*R.*)

*பாத்தியம், *s.* Water for bathing the foot of an idol, or great person, கால்கழுவக்கொடுக்குநீர். W. p. 526. PADYA. 2. Bathing the feet of the idol, or of an holy person. See சோடசஉபசாரம்; [*ex* பாதம்.] 3. Bail, security, பிணை. 4. Part, share, portion, பங்கு. 5. Connexion, affinity, relation, agreement, சம்பந்தம். 5. [*Tel.* బాధ్యము.] Claim, right of possession, உரிமை.

பாத்தியஞ்சொல்ல, *inf.* To pledge one's self, to become bail. (*Old Dic.*)

பாத்தியஸ்தன்—பாத்தியன், *s.* A sharer, an heir, சுதந்தரமுடையான். 2. A bail, one who gives security, பிணையாளி.

பாத்தியப்பட, *inf.* [*appel. n.* பாத்தியப்பட்டவன்.] To be bound, to be under obligation.

பாத்தியா, *s.* [*among Musselmen.*] An annual funeral rite for a deceased parent &c., துலுக்கர்உத்தரகிரியை.

பாத்தியாகொடுக்க, *inf.* To perform that rite.

*பாத்திரபதம் — பாத்திரம், *s.* The month of September, புரட்டாசிமாதம். W. p. 617. B'HADRAPADA. B'HADRA.

*பாத்திரம், *s.* A vessel in general, a cup, pot, jar, plate, கொள்கலம். 2. A mendicant's vessel for alms, இரப்போர்கலம். 3. An eating vessel, உண்கலம். 4. (*fig.*) Fitness, worthiness, capacity, competency, merit, qualification, propriety, தகுதி. See தேசகாலபாத்திரம். 5. A worthy or qualified person, தகுதியுள்ளவன். W. p. 525. PATTRA.

பாத்திரசுத்தி, *s.* Cleanness of vessels.

பாத்திரச்சுரை, *s.* A kind of gourd, of which the shell is used as a vessel. See சுரை.

பாத்திரப்பிரவேசம், *s.* The entrance of the characters represented in a play, &c.

பாத்திரமறிந்துகொடுக்க, *inf.* To give according to desert.

பாத்திரமறிய, *inf.* To know another's worthiness.

பாத்திரமறிந்துபிச்சையிடு. Give alms to the deserving.

பாத்திரமானவன்—பாத்திரவாளி—பாத்திரவான், *appel. n.* A fit, competent, worthy person.

பாத்திரமுங்கையுமாய்த்திரிய, *inf.* To go a begging with a mendicant's vessel—*said of a rich man reduced to poverty.*

பாத்திராபாத்திரம், *s.* Worthiness, and unworthiness; [*ex* அபாத்திரம்.]

இந்தவேலைக்கவன்பாத்திரமல்ல. He is not fit for this work.

*பாத்திரீரம், *s.* An oblation, an offering, காணிக்கை. W. p. 525. Patreera.

*பாத்திரை, *s.* An earthen or other pot, used in begging, இரப்போர்கலம். (*Beschi.*)

பாத்தில், *s.* House, residence, வீடு. (சது.)

பாத்து, [*Ger. of a def. verb used only in the past tense.*] Dividing.

பாத்தேன். I divided.

*பாத்து, *s.* Boiled rice, சோறு. [*Hind. usage.*] 2. Rice gruel, congy, கஞ்சி; [*from Sa. B'hakta.* W. p. 610.] 3. Division, share, portion, part, பங்கு. 4. Half, moiety, middle, பாதி. (சது.) 5. [*in cant numbers.*] Four, நான்கு. See பரிஸ்.

பாத்துப்புது, *s.* Forty, நாற்பது.

*பாந்தம், *s.* Order, regularity, system, propriety, ஒழுங்கு; [*from Sa. Pánkta,* linear. W. p. 520.] 2. (*p.*) Termination of words in ப, பகரவீறு; [*ex* அந்தம்.]

பாந்தமாய்ப்பேச, *inf.* To speak submissively in order to gain an object.

*பாந்தவம்—பாந்தவியம், *s.* Affinity, relationship, பந்துத்துவம். W. p. 603. Band'hava.

பாந்தள், *s.* A snake, பாம்பு. 2. A mountain-snake, பெரும்பாம்பு. (சது.)

*பாந்தன், *s.* A passenger, traveller, வழிச்செல்வோன். W. p. 527. Pant'ha.

*பாந்து, *s.* [*corrup. of Sa. Prantara, the hollow of a tree.*] Corner, cavity, hollow in a well, &c., a deep hole, வளை. Compare பொந்து.

பாந்துக்கிணறு, *s.* A well with cavities in the sides.

பாந்துவிழ, *inf.* To occur as a cavity or cavern.

பாந்து, கிறேன், பாந்தினேன், வேன், பாந்த, *v. n.* To skulk, to hide, to slink away, பதுங்க.

பாந்தல், *v. noun.* Skulking, stooping to hide one's self.

பாந்தை, *s.* [*prov.*] As பாந்து.

*பாபத்தி — பாபார்த்தி, *s.* Hunting, fishing, the chase, வேட்டை. W. p. 527. Papardd'hi.

பாபத்து, *s.* (*Arab.*) An article, an item. (*Govt. usage.*)

*பாபம், *s.* [*com.* பாவம்.] Sin, crime, wickedness, vice, தீமை. 2. Vileness, demerit, accumulated stock of demerit from former births, தீவினை. W. p. 527. Papa. —*For the compounds see* பாவம்.

பாபக்கிரகம், *s.* [*in astrol.*] Any unfavorable or inauspicious planet—as Saturn, Mars, Ráhu, or Kethu. See சுபக்கிரகம்.

பாபசமனம், *s.* Removing sin, பாவப்பரிகாரம்.

பாபி, *s.* A sinner. See பாவி.

*பாபிஷ்டன், *s.* [*fem.* பாபிஷ்டை.] A wretch, a wicked person, துரோகி; [*ex* பாபம்.]

பாபு, *s.* (*Tel.*) A title equivalent to Esquire.

பாபுவாரி, (*Arab.*) Item by item, by division, பிரிவான.

பாபுவாரிக்கணக்கு, *s.* An account prepared item by item.

பாப்பாசு, *s.* [*for.*] Mussulmen's shoes, slippers, sandals in general; sometimes small shoes, for children, ஒர்தொடுதோல். (*c.*)

பாப்பான், *s.* [*com. for* பார்ப்பான், *fem.* பாப்பாத்தி.] A brahman.

பாப்பாரநாகம், *s.* A brahman-cobra. See பனைநாகம்.

பாப்பாரப்பூண்டு, *s.* A plant. Hedyotis herbacea.

பாப்பு, *s.* The Brahman race, *also* பார்ப்பு. 2. [*for.*] The Pope. 3. See பா, *v.*

பாப்புக்குமூப்பில்லை. With Brahmans seniority is nothing; i. e. the official performances of old or young has the same merit. 2. [*R. C. usage.*] The Pope has no earthly superior.

பாப்புசு — பாப்பூசு, *s.* (*Hind.*) As பாப்பாசு.

பாப்புரி, *s.* A moat or ditch around a fort, as பாம்புரி. (*p.*)

*பாமம், *s.* Anger, கோபம். 2. Light, lustre, பிரபை. W. p. 617. B'hama. 3. Itching, சிரங்கு. W. p. 527. Pama. 4. Extension, பரப்பு.

*பாமரம், *s.* Ignorance, stupidity, doltishness, idiotism, அறிவின்மை. 2. Wickedness, baseness, vileness, இழிவு. W. p. 527. Pamara.

பாமரவைத்தியன், *s.* An inexperienced physician, an empiric, a quack, அறுபவமில்லாதவைத்தியன்.

பாமரன், *s.* An ignorant, stupid person, an idiot, அறிவிலான். 2. A vile, low, base person, இழிமகன்.

*பாமன், *s.* Sun, சூரியன். 2. Cousin, or brother-in-law, மைத்துனன். W. p. 617. B'hama.

பாமாலை. See பா.

பாம்பன், *s.* A place, Paumban.

பாம்பு, *s.* A snake, a serpent, நாகம். 2. [*in combin.*] A belly worm; an earth worm, நாகப்பூச்சி. 3. The ninth lunar asterism, ஆயிலியநாள். 4. [*Govt. usage.*] Plaited grass, to protect the banks of a river, புல் பின்னல்.—*Note.* There are many different kinds of snake—as இல்லிப்பாம்பு, or கடற்பாம்பு, a sea-snake; சருப்பாம்பு, and செம்பாம்பு, Rahu and Kethu, which cause eclipses: இருதலைப்பாம்பு, a two-headed snake, amphisboena; (*R.*) சிரைப்பாம்பு, a small venomous snake; தேளைப்பாம்பு, a snake whose bite causes relaxation; மலைப்பாம்பு, or தாராமுக்கன்பாம்பு, a large mountain-snake, also the boa constrictor; and the following கண்குத்திப்பாம்பு, கீரிப்பாம்பு, சாரைப்பாம்பு, சருட்டைப்பாம்பு, செவிப்பாம்பு, தாசரிப்பாம்பு, நாகப்பாம்பு, தண்ணீர்ப்பாம்பு, பச்சைப்பாம்பு, புடையன்பாம்பு, மண்டலிப்பாம்பு, மண்ணுண்ணிப்பாம்பு, வழலைப்பாம்பு, விரியன்பாம்பு, which see in their places.

பாம்பரணை, *s.* A venomous kind of lizard. See அரணை.

பாம்பாட்ட, *inf.* To make a snake dance, especially the cobra. 2. (*fig.*) To trouble, to give annoyance.

பாம்பாட்டம், *s.* A serpentine, wavy, meandering, zigzag course or motion.

பாம்பாட்டி—பாம்புப்பணிக்கன், *appel. n.* A snake-dancer, கௌசிகன். [*Commonly of the* குறவர் *caste.*]

பாம்பாட்டிச்சித்தர், *s.* An author of the சித்தர் class.

பாம்புகடி, *s.* Bite of a snake.

பாம்புகண்டசித்தன், *s.* A bear, கரடி.

பாம்புகொல்லி, *v. noun.* A plant, ஓர்பூடு.

பாம்புக்கல், *s.* A stone said to extract, if duly applied, the venom from a poisonous bite. See பாஷாணக்கல்.

பாம்புக்குட்டி, *s.* A young snake. See குட்டி.

பாம்புக்குட்டிக்குப்பால்வார்த்து வளர்த்தாற்போலாகிறது. It is like nourishing a young serpent with milk; said of a benefit rewarded by evil.

பாம்புக்குத்தச்சன், *s.* White ants, கறையான்.

பாம்புச்சட்டை, *s.* A snake's slough. See சட்டை.

பாம்புதின்னி, *appel. n.* A kind of poisonous herb, the leaves of which are used with other ingredients to extract thorns—also called, முன்னையகி.

பாம்புபிடிக்க, *inf.* To catch snakes.

பாம்புபிடித்துக்கட்ட, *inf.* To twist long grass for the protection of the bank of a river during a flood.

பாம்புபிணைதல், *v. noun.* Adhering as snakes in copulation.

பாம்புப்புற்று, *s.* A snake's hole, *commonly* an old white ant's nest.

பாம்புப்பெட்டி, *s.* A basket for carrying snakes.

பாம்புமுட்டை, *s.* Snake's egg.

பாம்புமபடமுந்தானம்பண்ண, *inf.* To make gifts, to religious mendicants, in the form of a snake with a spread neck, at an eclipse, happening on the person's birth day, or at other critical periods.

பாம்புமொச்சை, *s.* An herb, ஓர்பூடு, Dolichos falcatus. (*R.*)

பாம்புவாய்வைத்தல், *v. noun.* Biting of a snake.

பாம்புவிரல், *s.* The middle finger, நடுவிரல்.

பாம்போர்டுவட்டி, *s.* [*prov.*] A young palmyra tree, with long stalks, இளம்பனை.

பாம்புரி, *s.* A moat, a ditch round a fort (as the skin surrounds the snake), அகழி. (சது.) 2. As பாம்புச்சட்டை.

*பாயசம், *s.* Rice boiled in milk, பாற்சோறு; [*ex* பயசு.] W. p. 527. Payasa. 2. A kind of shrub, பாற்சோற்றிச்செடி, Ruellia.

பாயல், *s.* A bed, or convenience for sleeping, மக்கட்படுக்கை. (சது.)

*பாயிரம், *s.* Preface, introduction, preamble, prologue, முகவுரை. 2. Synopsis, compend, syllabus, பொழிப்புரை. (வீரா.) 3. [*fig.*] Origin, history, account, வரலாறு. Preface is of two kinds.—I. பொதுப்பாயிரம்,

புளுகு, கிறேன், புளுகினேன், வேன், புளுக, *v. n.* To tell bare-faced lies, பொய் சொல்ல. 2. To boast, brag, swagger, வீம்புபேச. (*c.*)

கலகமேமெய்யானால்புளுகாதவன்பாவம். If there be sedition in the country every one exaggerates.

புள், *s.* A bird in general, பறவைப் பொது. 2. The twenty-third lunar asterism, அவிட்டம். 3. A trap-stick used by children in play, ஓர்விளையாட்டுக்கருவி. 4. A class of birds of the gull-genus, நீர்வாழ் பறவை. 5. A beetle, வண்டு. 6. An instrument of torture. See கிட்டி.

புள்ளடி, *s.* A bird's foot, or foot-step, புள்ளின்பாதம். 2. A cross or mark like a bird's foot-step +; used, like the caret to indicate the addition of something omitted in the writing, also புள்ளடிவடிவு. 3. A touch-stone, உரைகல். 4. A plant, Hedysarum gangeticum, ஓர்செடி.

புள்ளடிபோட, *inf.* To put a cross, or caret as above.

புள்ளரசு, *s.* Garuda, the vehicle of Vishnu, கருடன். 2. The large kite, king of birds, Falco Pondicherianus.

புள்ளீட்டம், *s.* A flock of birds, பறவைக்கூட்டம். (*p.*)

புள்ளொலி, *s.* Noise of birds, பறவையிரைலி.

புள்ளோச்சல், *v. noun.* Driving away birds or other winged creatures, பறவை துரத்தல். 2. [*in love poet.*] The lover's touching the body of his mistress, under pretence of driving beetles from the flowers on her locks.

புள்ளோப்பல். Guarding against birds, பறவைகளினின்றுகாத்தல். (*p.*)

புள்ளம், *s.* A large kind of hedging-bill, கொடுவாள். (சது.) 2. A kind of sickle, அரிவாள்.

புள்ளி, *s.* A small cipher, as a mark in writing, பொறி. 2. A dot, speck, point, jot, பொட்டுக்குறி. 3. A cipher in arithmetic or numbers, இலக்கப்புள்ளி. 4. A trader's private mark, indicating quality or value, மதிப்படையாளம். 5. Estimation, apprizement, மதிப்பு. 6. A round mark or circle set over an inanimate consonant, ஒற்றெழுத்துமேலிடும்புள்ளி. 7. An inanimate consonant, மெய்யெழுத்து. 8. The letter written ஃ, ஆய்தப்புள்ளி. 9. (*fig.*) A large sum, பெருந்தொகை. 10. (சது.) A lizard, பல்லி. 11. A crab, நண்டு.

கண்ணிலேபுள்ளிவிழுந்தது. A speck is grown in the eye. (*R.*)

புள்ளிக்கணக்கு, *s.* Method adopted by tradesmen in marking cloth. 2. Practical arithmetic, ciphering.

புள்ளிக்கணக்கன், *s.* One versed in the practical arithmetic of tradesmen. See பள்ளிக்கணக்கன்.

புள்ளிக்காரன், *s.* A rich man, as one of so many thousand ciphers added to a given number, பணக்காரன். 2. An accountant, கணக்கன்.

புள்ளிக்கால், *s.* See under கால்.

புள்ளிபாய, *inf.* To become spotted, or speckled.

புள்ளிபார்க்க, *inf.* To value the produce of a field, &c. (*Govt. usage.*) 2. To settle accounts.

புள்ளிபோட, *inf.* To note down the several articles, to compute. 2. To make a dot. 3. As புள்ளிபார்க்க.

புள்ளிப்பட்டு, *s.* A variegated silk stuff.

புள்ளிமான், *s.* The spotted deer or antelope.

புள்ளிமிருகம், *s.* Antelope, a kind of deer, கலைமான்.

புள்ளியினம், *s.* Punctuation. (*R.*)

புள்ளிரோகம், *s.* A kind of disease, ஓர்வியாதி.

புள்ளிவண்டு, *s.* A large kind of beetle, கழுதைவண்டு.

புள்ளிவராகன், *s.* A kind of gold coin.

புள்ளிவரி, *s.* A catalogue, இடாப்பு.

புள்ளு, *s.* A bird, &c., as புள். 2. [*with* சள்ளு.] Wrangle, as சள்ளுப்புள்ளு.

புள்ளுவம், *s.* Deceit, guile, craft, வஞ்சகம். (சது.)

புள்ளுவர், *s.* [*pl.*] The base, vile, wicked, இழிந்தோர். 2. Dwellers on a barren soil, பாலைநிலமாக்கள். (சது.)

புறக்கணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*also* பிறக்கணி.] To disregard, slight, neglect, turn away, வெறுப்புற்றுநோக்க. 2. To displease, to disdain, அசட்டைசெய்ய.

புறக்கணிப்பு, *v. noun.* Disregard, அவமதிப்பு. 2. Disdain, despite, as அசட்டை.

புறணி, *s.* Slander, aspersion, புறங்கூறல். 2. The outside of the bark of a tree—oppos. to அகணி, மேற்பட்டை; [*ex* புறம்.]

புறத்தி—புறத்தியம், *s.* Outside, &c. See புறம்.

புறப்படு, கிறேன், புறப்பட்டேன், வேன், புறப்பட, *v. n.* To set out, depart, start, வெளிப்பட. 2. To ooze out, issue out, be discharged, to exude, பொசிய. 3. To break out, as eruptions, &c., உண்டாக. 4. To start or jut out, rebound as a nail, protrude as a stone in a wall, புறத்தேஉருவ; [*ex* புறம்.] (*c.*)

அவன்பயணம்புறப்பட்டுவிட்டான். He has set out on his journey.

ஒருகிலந்திபுறப்பட்டிருக்கிறது. A venereal boil has broken out.

புறப்பாடு, *v. noun.* Setting out, departure. 2. Coming forth, sallying out, தோன்றல். 3. An eruption.

புறம், *s.* Side, part, face, surface, பக்கம். 2. Outside, exterior—oppos. to அகம். 3. Backside, behind, back ground, rear, பின்புறம். 4. Back of the person, முதுகு. 5. Place, இடம். 6. Side, party, interest, பட்சம். 7. Region, point of compass, quarter, tract or part of a country; district, &c., திசை. 8. That which is foreign, extraneous, அந்நியம். 9. Backbiting, aspersion, calumny, புறங்கூற்று. 10. A surrounding wall or fortification, சுற்றுமதில். 11. A form of the seventh case, the ablative of place, ஏழனுருபு. 12. Valor, bravery, வீரம்.

அதைப்புறத்திலேவை. Put that separately.

புறத்திலேசொல்லப்படாது. This is not to be spoken abroad.

உள்ளும்புறமுமொத்தவன். A sincere and upright man. (*lit.*) alike within and without.

புறக்கடல், *s.* [*in puran. geogra.*] The extreme circumambient sea.

புறக்கட்டு, *s.* Exterior apartments of an edifice.

புறக்கட்டுக்கட்ட, *inf.* To tie one's hands behind his back. (*R.*)

புறக்கண், *s.* Exterior of the eye-lids.

புறக்கதவு, *s.* The back door, பின்கதவு.

புறக்கந்து, *s.* [*prov.*] The ends of an axle of a cart. See கந்து.

புறக்காதுபடல், *v. noun.* [*prov.*] Being turned forward as the lobe of the ear by bad treatment after perforation.

புறக்காவல், *s.* Exterior guard. 2. External or physical protection, as distinguished from self-government.

புறக்காழ்—புறங்காழ், *s.* Hard timber in the outer part of a tree while the middle is soft, as the palmyra, வெளிவயிரம். See காழ்.

புறக்கூரை, *s.* Back part of the roof, பின்கூரை.

புறக்கை, *s.* Outwardness, turning outside, வெளிப்புறம். 2. The right side in turning, &c., வலப்புறம். 3. As புறங்கை.

புறக்கோடி, *s.* Back yard, புறக்கடை.

புறக்கோட்டை, *s.* An outer work of a castle, barbacan.

புறங்கடை, s. Out-side, outer gate, outer court, வெளிவாசல். (p.)

புறங்காடு, s. A place of cremation, சுடுகாடு. (சது.)

புறங்காட்ட, inf. To turn the back, *in contempt, or through incivility*, வெறுப்புக்காட்ட. 2. To turn the back when routed or defeated.

புறங்காண, inf. To defeat, put to flight, முறியஅடிக்க. (p.)

புறங்கால், s. Upper part of the foot. See கால்.

புறங்கான், s. Forest tract of country, முல்லைநிலம். (p.)

புறங்கூற, inf. [v. noun புறங்கூற்று.] To expose secrets, இராசியம்வெளிப்படுத்த. 2. To back-bite, asperse, slander.

புறங்கை, s. Back of the hand or arm. See கை.

புறங்கொடுக்க, inf. To turn the back, as புறக்காட்ட, 2.

புறச்சமயம், s. The six systems of religion regarded as heterodox by the Saiva sect. See சமயம்.

புறச்சாட்சி, s. External evidence, &c., See சாட்சி.

புறச்சுட்டு, s. [in gram.] The demonstrative prefixes அ, இ, and உ, when not a part of the word.—oppos. to அகச்சுட்டு.

புறச்சுவர்தீற்ற, inf. To plaster the outside wall. 2. [fig.] To aid strangers. See உட்சுவர்.

புறச்சுற்று, s. Parts about a country, as சுற்றுப்புறம்.

புறச்சேரி — புறஞ்சேரி, s. An outside village.

புறத்தவன், s. A name of Aiyanar, ஐயனார். (சது.)

புறத்தான், s. A foreigner, a stranger, one from without, அந்நியன்.

புறத்தி, s. That which is out-side, external, foreign, extrinsic, புறம்பு. (usage.)

புறத்திக்கிடம்பண்ண, inf. To expose a friend to reproach.

புறத்திணை, s. [as புறப்பொருள்.] Public or state affairs, reference to foreign powers as distinguished from அகத்திணை, domestic or love affairs. It is divided into eight branches: 1. பகைநிரைகவர்தல். 2. பகைவர்கவர்ந்ததன்னிரைமீட்டல். 3. பகைமேற்செல்லல். 4. வரும்பகைமுன்னெதிரூன்றல். 5. தன்னரண்காத்தல். 6. பொருதல். 7. போர்வெல்லல், which see. For the respective garlands worn by the soldiers in these different exercises, see வாகை.

புறத்திணை, ந. Three kinds of rhetorical rules to be followed in explaining and proving a doctrine; 1. ஒழுக்கப்புறத்திணை, from the customs and manners of great men; 2. நூற்புறத்திணை, from the Vedas or law-books; 3. கரிப்புறத்திணை, or சாட்சிப்புறத்திணை, from the writings and testimonies of the learned.

புறத்திண்ணை — புறந்திண்ணை, s. The outer திண்ணை.

புறத்தியம், s. As புறத்தி.

புறத்தியான்—புறத்திமனிதன், s. Another, a stranger.

புறத்துறுப்பு—புறத்தங்கம், s. Externals—as horses, property, influence, &c.

புறத்தே—புறத்தியிலே, adv. Outwardly, without, abroad.

புறநானூறு, s. A poem.

புறநிலை, s. An outer state or condition. 2. A poem invoking blessings on one's family. See பிரபந்தம்.

புறநிலையகத்திணை, s One of the அகப்பாட்டுறுப்பு, which see.

புறநிலைவாழ்த்து, s. Blessing, with an invocation. 2. See பிரபந்தம்.

புறநீங்கல், v. noun. Being at liberty, தன்னிட்டமாய்ப்போதல். 2. Being separated from others, விலக்கப்படல்.

புறநீங்கலாக. [as adv.] Exclusively.

புறநீர்மை, s. A song sung according to some metre, ஓர்பண். (சது.)

புறந்தர, inf. To protect, maintain, cherish, ஓம்ப. 2. As புறக்காட்ட. (p.)

புறந்தாள், s. Upper part of the foot, புறங்கால்.

புறப்பகை, s. Avowed hatred.

புறப்பக்கம், s. [in log.] An inference regarding secular matters. See பக்கம்.

புறப்பத்தியம், s. Diet, or regimen, observed after a course of medicine, as மறுபத்தியம்—oppos. to அகப்பத்தியம்.

புறப்பற்று; s. External attachments, or connexions—oppos. to அகப்பற்று.

புறப்பொருள், s. External or state affairs, especially such as relate to war, being a division of the subjects embraced in பொருள். See புறத்திணை.

புறமடை, s. An out-side channel for water. 2. Outer oblations, as flesh and spirits, presented to ferocious deities out-side the temple. See உண்மடை.

புறமட்டை, s. Out-side or back-side of a cocoa or palmyra branch.

புறமயிர், s. The hairs of the body, not of the head.

புறமறிவு, s. Regard for the welfare of others, benevolence, sympathy, பிறர்க்குநன்மைநினைக்கை.

புறம்பணை—புறவணி, s. A forest-tract of country, முல்லைநிலம். 2. A hilly or mountainous tract, as away from population, குறிஞ்சிநிலம். (சது.)

புறம்பு, s. Exterior, out-side, abroad, புறம். 2. Exclusion, separation, நீக்கம். 3. That which is apart, detached, distinct, exclusive, separate, by itself, தனியானது. 4. What is outer, or other, மற்றை. (c.)

புறம்பாக்க, inf. To exclude, excommunicate.

புறம்பாய்—புறம்பே, adv. Outwardly.

புறம்புக்குப்போக, inf. To go out to stool.

புறம்புபண்ண, inf. To set apart, தனிப்புறவைக்க. 2. As புறம்பாக்க.

புறம்புபுறம்பாய், adv. Distinctly, separately.

புறம்போக்கு, s. Part of a corn-field not cultivated; also புறம்போக்குத்தரிசு.

புறவடி, s. Upper part of the foot, as புறங்கால்; [ex அடி.]

புறவடை, s. A field given to other people to till.

புறவயிரம், s. Hard timber in the external part of a tree, வெளிவயிரம்.

புறவளையம், s. A medical application for sore eyes, &c., applied about the eye, கண்ணோவுமுதலியவற்றுக்குமருந்துபூசுகை.

புறவாயில், s. An out-side door.

புறவிசிவுச்சன்னி — புறவீச்சு — புறவீச்சுச்சன்னி, s. External convulsions, ஓர்சன்னி.

புறவிதழ், s. External petals of flowers.

புறவீதி, s. Outer court of a temple, &c.

புறவுரை, s. Preface, as outside of the main work; [ex உரை.]

புறவெட்டு, s. The outside slab in sawing timber. 2. Hewing the side of palmyra timber, மேல்வெட்டு. 3. Opposition, contradiction, எதிர்ப்பேச்சு. (Jaff.)

புறவெட்டானபேச்சு. Verbal opposition, contradiction.

புறவெளி, s. That which is external—oppos. to உள்வெளி.

ஒதுப்புறம், s. A solitary place. See ஒதுக்குப்புறம். For வலப்புறம், விலாப்புறம், முற்புறம், பிற்புறம், &c., look in their places.

புறவம்–புறவு, s. A forest tract, முல்லைநிலம். 2. A hilly tract, குறிஞ்சிநிலம். 3. Dove, pigeon, புறா. 4. A forest, wood, காடு. (சது.)

புறன், s. [poet. form of புறம்.] Outside, exterior, வெளிப்புறம். 2. The back, முதுகு. (சது.)

புறனடை, s. Explanatory remarks or notes on an author's work, being five-fold: 1. அதிகாரப்புறனடை, remarks on a chapter; 2. ஓத்துப்புறனடை, remarks following a section; 3. சூத்திரப்புறனடை, note appended to a rule; 4 நூற்புறனடை, notes at the end of the book; 5. பிண்டப்புறனடை, abstract, general remarks applicable to the points under discussion or other subjects; [ex நடை.]

புறனடைச்சூத்திரம், s. A supplementary rule. See சூத்திரம்.

புறா, s. [gen. புறாவின்.] A dove, pigeon. —There are different kinds, காட்டுப்புறா, தவிட்டுப்புறா, பச்சைப்புறா, பெரும்புறா, மணிப்புறா, மலைப்புறா, and மாடப்புறா, which see. (c.)

புறாப்பறந்ததுபோலே. Like the flying of a dove; i. e. suddenly gone.

புறாக்காலி, s. A kind of grassy plant, ஓர்பூடு.

புறாக்குஞ்சு, s. A young pigeon.

புறாமுட்டி, s. A plant, ஓர்பூடு.

புறாண்டு, v. a. To scratch, &c. See பிறாண்டு. (R.)

*புற்கசன், s. A low, vile and base man, சண்டாளன். (சது.)

புற்கம், s. Delusion, illusion, secularity, மாயம். 2. Fault, defect, குறைவு. (p.)

*புற்கலம், s. The body, சரீரம். W. p. 541. PUDGALA. (p.)

புற்கலன், s. Soul, life, ஆன்மா. (சது.)

புற்கு, s. A tawny color, dimness, கபிலநிறம். (சது.)

*புற்புதம், s. A water bubble, நீர்க்குமிழி. W. p. 606. BUDBUDA.

புற்புல்லெனல், v. noun. Breaking as the day, விடிதற்குறிப்பு. (p.)

புற்றாளி, s. The seventeenth lunar asterism, அனுடம். 2. Palmyra, பனை. (சது.)

புற்று, s. [vul. புத்து, Tel. పుట్ట.] Ant-hill, any hillock thrown up by animals. See கறையான். 2. Any thing scurvy, scrofulous, or cancerous, considered as resembling ant-hills, &c., as கன்னப்புற்று. 3. Hole of snakes, ants, rats, &c., வளை. (c.)

புற்றுப்புற்றுப்புறப்பட்டிருக்கிறது. He is covered with scrofulous eruptions.

புற்றிலேகிடந்தபுடையனெழும்பினதுபோல. As if a concealed beaver-snake should rush at one.

புற்றுஞ்சோறு — புற்றும்பழஞ்சோறு, *s.* White ants' nests, resembling a honey-comb, கறையான்கூடு.

புற்றுக்காளான், *s.* An edible kind of mushroom.

புற்றுமண், *s.* Earth thrown up by ants, &c., used for various rites and medicines.

புற்றுவைக்க — புற்றெடுக்க, *inf.* To throw up earth, as ants, புற்றுண்டாக்க.

*புனஸ்காரம், *s.* [*prop.* புரஸ்காரம்.] Adoration, worshipping, வணக்கம். W. p. 543. PURÁSKARA. (*c.*)

புனமுருக்கு, *s.* The பலாசு tree.

புனம், *s.* Land suitable for dry grain, commonly on hills. See தினைப்புனம். (சது.)

புனக்காவல், *v. noun.* Watching such cultivation against the wild animals.

புனமுருங்கை, *s.* A species of முருங்கை tree, Hedysorum sennoides, *L.*

புனரி — புனரித்தண்டு, *s.* A plant. See புனலி.

*புனர், *adv.* Again. W. p. 541. PUNAR.

புனராகமனம், *s.* Returning, coming back, retrograding, திரும்பிவரல்.

புனராவர்த்தம், *s.* A second time, that succeeding the first of any occurrence, மறுதரம்.

புனருத்தசன்மன், *s.* A brahman, as twice born; the second birth being the assuming of his distinguishing cord, in the seventh year of his age, பிராமணன்.

புனருக்தம்—புனருத்தம்—புனருத்தி, *s.* Repetition, tautology, கூறியதுகூறல்; [*ex* உத்தி, said.] (சது.)

புனர்செனனம், *s.* Reproduction, transmigration, as புனர்ப்பவம்.

புனர்ப்பவம், *s.* Second birth, regeneration, reproduction, மீண்டும்பிறக்கை. 2. A finger or toe nail, நகம்; [*ex* பவம், birth.] (சது.)

புனர்ப்பாகம், *s.* [*com.* புனப்பாகம்.] Cooking a second time what has been once cooked, சமைத்ததைச்சமைக்கை.

புனர்விவாகம், *s.* Marriage of widows.

*புனர்பூசம், *s.* (*St.* புனர்வசு.) The seventh lunar asterism. See புணர்பூசம். (*Beschi.*)

புனலி, *s.* A kind of plant. (*Old Dic.*) 2. A medicinal winding shrub, Dalbergia Lanceolaria—as புனரி.

புனலை, *s.* The soap-nut tree, as நெய்க்கொட்டான்.

புனல், *s.* Waters, நீர். 2. A river, ஆறு. (சது.)

புனல்முருங்கை, *s.* A plant, Indigofera arcuata.

புனல்வேந்தன், *s.* Varuna, as lord of the waters, வருணன். (சது.)

புனற்றிரை, *s.* Waves, billows, நீர்த்திரை.

புனனாடன், *s.* Any king of the solar race, as lord of புனனாடு, சோழன்.

புனனாடு, *s.* The Chola kingdom as watered by the Kávery, சோணாடு.

புனவர், *s.* Inhabitants of hilly tracts, குறிஞ்சிநிலமாக்கள்; [*ex* புனம்.] (சது.)

*புனிதம், *s.* Cleanness, pureness, சுத்தம். 2. Purity, purification, holiness and sanctity, பரிசுத்தம். 3. (சது.) The seventh lunar asterism, as புனர்பூசம்.

புனிதஸ்தலம், *s.* A place of sacred resort.

புனிதன், *s.* A pure or holy person, பரிசுத்தன். 2. Siva, சிவன். 3. Indra, இந்திரன். 4. Argha, அருகன். 5. Buddha, புத்தன். (சது.)—Also applied to other gods.

புனிறு, *adj.* Recently calved, yeaned, &c., ஈன்றணிமை. [*in combin.* புனிற்று.] 2. *s.* Ceremonial impurity, சூதகம். 3. Newness, recency, புதுமை. 4. Skin, தோல். (சது.)

புனிற்றா, *s.* A cow which has lately calved, இளங்கன்றுப்பசு. (*p.*)

*புனீதம், *s.* [*com.* புனிதம், *which see.*] Purity, &c.

புனுகு, *s.* Civet. See புழுகு.

புனை, *s.* Newness, recency, புதுமை. 2. Cloth, vestment, சீலை. 3. Fetters for the legs, shackles, கால்விலங்கு. (சது.)

புனை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. a.* To dress, to put on clothes, flowers, or jewels, தரிக்க. 2. To ornament, adorn, decorate, அலங்கரிக்க. 3. To use ornamental language, to embellish with similes or comparisons, அலங்கரித்துரைக்க. (*p.*)

புனைகுழல் — புனைகோதை, *s.* A lady as adorned with locks, பெண்.

புனைசுருட்டு, *s.* Artifice, underhand contrivance, plot, complotment, சூது. (*c.*)

புனைசுருட்டுப்பண்ண, *inf.* To complot.

புனைந்துரை, *s.* [*also* அணிந்துரை.] Preface, introduction, பாயிரம். (Compare தந்துரை.) 2. Ornamental language, rhetorical or poetic embellishment, magnifying or depreciating, அலங்கரித்துரைப்பது.

புனையிழை, *s.* A lady as having beautiful ornaments, பெண்.

புனைவர், *appel. n.* [*pl.*] Mechanics, artizans, கம்மாளர். (சது.)

புனைவில், *s.* A simile, a comparison, உபமானப்பொருள்.

புனைவிலிகவிற்சியணி, *s.* A rhetorical figure, or form of language, ஓர்அணி.

புனைவுளி, *s.* A subject which is rhetorically treated, வருணிக்கப்படும்பொருள்.

புனைவுளிவிளைவணி, *s.* A rhetorical figure, ஓரணி.

புனைதல், *v. noun.* Dressing, ornamenting, &c., *as the verb.*

புனைதல்செய்தான். He wrote the work in ornamental language. (நைடதம்.)

புன், *adj.* [*in combination for* புல்.] Defect. See புன்மை.

புன்கண், *s.* Affliction, distress, துன்பம். 2. Disease, நோய். 3. Meanness; emaciation, மெலிவு. 4. Poverty, adversity, தரித்திரம்; [*ex* புல்.] (சது.)

புன்கம், *s.* Boiled rice, சோறு. (சது.) 2. Food, உணவு. (*p.*)

புன்காலி, *s.* A tree, பாதிரிமரம், Bignonia Chelenoides. 2. A shrub, காசை or காயாமரம், Memecylon. (சது.)

புன்கு, *s.* [*vul.* புங்கு.] A kind of tree, புன்கமரம், Dalbergia arborea. 2. The புனமுருங்கை, which see.

புன்கமெண்ணெய் — புன்கெண்ணெய், *s.* Oil of the புன்கு tree. See under எள்.

புன்மை, *s.* [*in combin.* புன்.] Meanness, vileness, lowness, ஈனம். 2. Forgetfulness, oblivion, மறதி. 3. Smallness, diminutiveness, சிறுமை. 4. (சது.) A reduced, or suffering state, துன்பம். 5. Poverty, wretchedness, வறுமை; [*ex* புல்.]

புன்காய், *s.* Small fruits.

புன்சிரிப்பு — புன்னகை, *s.* A smile, smiling. (*c.*)

புன்சிரிப்புக்கொள்ளுதல் — புன்னகைகொள்ளுதல், *v. noun.* Smiling.

புன்செக்கர், *s.* Dusky evening, மாலைப்பொழுது. (*p.*)

புன்செய், *s.* [*vul.* புஞ்சை.] Sterile fields for dry grain. See செய்.

புன்செய்கை, *v. noun.* Cultivation of the dry grains.

புன்சொல், *s.* Low words, phraseology not honorable or dignified, அற்பவார்த்தை. (*p.*)

புன்பயிர், *s.* Young tender grains, as இளம்பயிர்.

புன்புலால், *s.* Putrid flesh, இழிவாகிய ஊன். (நீதிநெறி.)

புன்மரம், *s.* Any tubular shrub or tree, உள் வயிரமில்லாதது.

புன்மாலை, *s.* The dusky evening, அந்திப்பொழுது.

புன்முருக்கு, *s.* A plant, ஓர்பூடு. (*R.*)

புன்றுளி, *s.* Small drops, சிறுதிவலை.

புன்றொழில், *s.* Any vicious, base, or evil action, தீவினை. (*p.*)

புன்னெறி, *s.* A base or wicked course of conduct, ஈனவழி.

*புன்னாகம், *s.* The புன்னை tree. (சது.) 2. Another species, Rottlera tinctora.

*புன்னாகவராளி, *s.* A kind of tune, by which snakes are said to be charmed, ஓர்ராகம். Compare நாகவராளி.

புன்னை, *s.* A flowering tree, Alexandrian laurel. See பின்னை.

புன்னையங்கானல், *s.* A thicket of these trees. (*p.*)

பூ

பூ. A syllabic letter compounded of ப் and ஊ.

பூ, s. A flower, a blossom, மலர். 2. A leaf, இலை. 3. Beauty, fairness, அழகு. 4. Extent, expanse, greatness, dimension, பொலிவு. 5. Sharpness, keenness, point, கூர்மை. 6. Web, film or cataract on the eye, albugo, கண்ணில்விழும்பூ. See புஷ்பம். 7. The roughness on the wiry edge of a tool after grinding, ஆயுதப்பொருக்கு. 8. Fire spark, electrical spark, தீப்பொறி. 9. Flakes of scraped cocoa-nut, தேங்காய்ப்பூ. 10. Sparks from fireworks, வாணத்தில்விழும்பூ. 11. Concretions of fine powder or dust, நுண்பொடி. 12. Menstruation, catamenia, as in பூப்பகம். 13. The gills of a fish. (*Beschi.*) —Some of its compounds are as of புஷ்பம், which see.

பூ, ச. Four kinds of flowers. They are: 1. கொடிப்பூ, flowers of runners, creepers; 2. கோட்டுப்பூ, flowers of branches, i. e. trees; 3. நீர்ப்பூ, water-flowers; 4. புதற்பூ, flowers of grasses and herbs.

பூக்கஞ்சா, s. A species of narcotic. See கஞ்சா.

பூக்கட்ட, *inf.* To make garlands.

பூக்கந்தகம், s. Flowers of sulphur; sublimate of sulphur, புடமிட்டகந்தகம்.

பூக்காரர், s. [*pl.*] Flower-gatherers, garland-makers.

பூக்காலம், s. The season of flowering.

பூக்குஞ்சு—பூங்குஞ்சு, s. An unfledged chicken, pigeon, &c.

பூக்குடலை, s. [*prov.* பூக்குட்டான்.] A flower-basket. See குடலை.

பூக்குறடு, s. A raised place for garland-makers. (*p.*)

பூக்கொய்ய, *inf.* To crop flowers, as girls for pastime. 2. As பூவெடுக்க.

பூங்கதிர், s. Beautiful or great brightness.

பூங்கரும்பு, s. A tender and red kind of sugar cane.

பூங்கா — பூங்காவனம் — பூஞ்சோலை, s. A flower-garden, a pleasure-ground.

பூங்காரை, s. A shrub. See காரை.

பூங்காவி, s. A rose-like tinge in cloth. See காவி.

பூங்குறுநல் — பூங்குறுநொய் — பூநொய், s. Very fine grits.

பூங்கொடி, s. A very young tendril. 2. (*fig.*) A woman.

பூங்கொத்து, s. A bunch or cluster of flowers.

பூங்கோரை, s. A grass, Cyperus geminatus. See கோரை.

பூச்சட்டை, s. A garment of fine flowered muslin. 2. Ears of corn in blossom, குடலைக்கதிர்.

பூச்சல்லா, s. Fine flowered muslin.

பூச்சாத்த, *inf.* To adorn an idol with flowers.

பூச்சாரம், s. The essence of flowers, பூவினிரசம். 2. See பூ, *Sa.*

பூச்செண்டு—பூஞ்செண்டு, s. A nosegay of flowers strung together. See செண்டு.

பூச்சேலை, s. A woman's cloth with flowers printed, or wrought, throughout.

பூச்சொக்கா, s. A long jacket of fine flowered muslin.

பூச்சட்டி—பூஞ்சட்டி, s. A flower-pot.

பூஞ்சணற்பு, s. A thrifty kind of Indian hemp.

பூஞ்சாட்டி, s. See சாட்டி.

பூஞ்சாயம், s. Ruddy, dark color.

பூஞ்சிட்டு, s. A kind of little bird. See சிட்டு.

பூஞ்சுண்ணம், s. Farina of flowers, as பூந்தாது.

பூஞ்சிறகு, s. Down of young birds.

பூத்தட்டுதல், *v. noun.* Reducing melted wax to flakes by pouring it into water, in the process of whitening it, மெழுகைத்தகடாக்கல். (*Jaff.*)

பூத்திரி—பூவர்த்தி, s. A kind of fireworks or rocket, held in the hand while discharged, from which flowers drop, ஓர்வகைவாணம்.

பூத்தொடுக்க, *inf.* To string flowers, commonly by tying them together, in making garlands. 2. [*fig.*] To put up things very loosely so as to make an appearance of bulkiness. 3. To fabricate, to make a false story.

பூநீலம், s. A fine kind of Indigo, ஓர்நீலம்.

பூநொய், s. Fine grits.

பூந்தட்டம் — பூந்தட்டு, s. A flower-salver. See தட்டு.

பூந்தாது, s. Farina of flowers. 2. The filament of a flower.

பூந்தார், s. Flower garlands, மலர்மாலை.

பூந்துகள்-பூந்தூள், s. Pollen of flowers.

பூந்துணர், s. A cluster of flowers, பூங்கொத்து. (*p.*)

பூந்துளிர், s. Tender shoots.

பூந்தேர், s. A car made of flowers. See புஷ்பவிமானம்.

பூந்தேன், s. Honey gathered from flowers.

பூந்தோடு, s. Petal of a flower, மலரிதழ், மலரின்புறவிதழ்.

பூந்தோட்டம், s. A flower-garden.

பூப்படர, *inf.* To spread, as a cataract in the eye.

பூப்பந்தல், s. [*poet.* பூப்பந்தர்.] A shed adorned with flowers.

பூப்பறக்க, *inf.* To fly, as fire-sparks.

பூப்பறிக்க, *inf.* To pluck flowers, as பூக்கொய்ய, 1.

பூப்பலகை, s. A tree, ஓர்மரம், Sassafras.

பூப்போட, *inf.* To place flowers before an idol, or attach them to a garment.

பூப்பொட்டணம், s. A bundle of flowers.

பூமடல், s. Sheath or spathe of the plantain, areca, &c.

பூமடி, s. A soft udder of a cow.

பூமடிய, *inf.* To become wiry edged, as a razor.

பூமடை, s. [*with* காய்மடை.] Offerings of flowers.

பூமழை, s. Flowers strewed down, *as said*, by the gods. See புஷ்பமாரி.

பூமாதளை, s. The male pomegranate, *fruitless.*

பூமாலை, s. A flower-garland.

பூமிசைநடந்தோன் — புஷ்பத்தின்மேல் நடந்தோன், *appel. n.* Argha. 2. Buddha.

பூமுறிக்க, *inf.* To break the plantain blossom, that the fruit may grow larger.

பூமுறை, s. The season of flowering, in a tree, &c., பூக்காலம்.

பூமொட்டு, s. A flower-bud.

பூம்பட்டாடை, s. A fine silk-vestment.

பூம்பட்டு, s. Fine soft silk.

பூம்பந்து, s. [*com.* பூப்பந்து.] A ball of flowers.

பூம்பனை, s. The male palmyra, which yields nothing but flowers, ஆண்பனை.

பூம்பாளை, s. Tender spatha.

பூம்பிஞ்சு, s. [*com.* பூப்பிஞ்சு.] Young fruit resembling a flower.

பூம்பிடா, s. A flower basket, as பூக்குடலை. (*Jaff.*)

பூம்புகை, s. Smelling smoke, as நறும்புகை.

பூராசி, s. An abundance of flowers.

பூவணை—பூவமளி, s. A bed or a cot on which flowers are thickly spread for a nuptial couch, as one of the eight sensual enjoyments. See போகம்.

பூவந்தி, s. [*com.* பூந்தி.] The நெய்க்கொட்டான் tree, notch-leaved soap-nut, Sapindus emarginatus. (*Ains.*)

பூவம்பன், s. Kama as armed with flowers as his arrows, காமன்; [*ex* அம்பு.]

பூவரசு, s. The portia or tulip tree. See அரசு.

பூவாணம், s. A kind of rocket, that throws out flowers.

பூவாழை, s. A plant, Canna Indica. (*R.*)

பூவாளி, s. Kama, the Hindu cupid, மன்மதன். 2. One of the arrows of Kama, மன்மதபாணம்; [*ex* வாளி, arrow.]

பூவிதழ், s. Flower-petals, மலரேடு.

பூவில், s. The bow of Kama as adorned with flowers, மன்மதன்வில்.

பூவிழுதல், *also* பூவுதிர்தல், *v. n.* Clearing off, as roughness on an edge. 2. Forming of a speck in the eye. 3. Falling, in fire-works, like flowers.

பூவுதிராப்பிஞ்சு, s. Very young fruit, to which the flower still adheres.

பூவெடுக்க, *inf.* To crop flowers for the temple.

பூவெண்ணெய், s. A scented oil, an ointment, ஓர்நறுந்தைலம்.

*பூ, s. The earth, பூமி, a place. W. p. 622. B'HOO. 2. Birth, production, பிறப்பு.

பூகம்பம்—பூக்கம்பம்—பூக்கம்பனம், s. An earthquake, பூமியதிர்ச்சி. See கம்பம்.

பூகர்ணம்—பூகன்னம், s. Radius of the earth's equator. W. p. 622. B'HOOKARN'A.

பூகாமி—பூமிகாமி, s. A horse going well on land. See சலகாமி. (p.)

பூகோளம், s. The terrestrial globe, the earth. See கோளம்.

பூகோளசாஸ்திரம், s. Geography.

பூசுதன்—பூமகன், s. Mars; (lit.) son of the earth, செவ்வாய்.

பூசுதை—பூபுத்திரி, s. Sita the wife of Rama, சீதை; [ex சுதை, or புத்திரி.]

பூசுத்தி, s. Cleaning or smearing a place, ஸ்தலசுத்தி.

பூசுரர்—பூதேவர், s. [pl.] Brahmans as gods of earth, பிராமணர்; [ex சுரர்.]

பூச்சக்கரம், s. The earth. See சக்கரம். 2. (St.) The equinoctial line. 3. A kind of whirling rocket, சக்கரவாணம்.

பூச்சக்கரவாளம், s. A range of mountains supposed to encircle the earth. See சக்கரவாளம்.

பூச்சக்கரன், s. A king, a prince, அரசன்.

பூச்சாயை, s. The shadow of the earth, பூமிநிழல்.

பூச்சாரம் — பூசாரம், s. A mineral substance, as பூநீறு. 2. The quality or characteristic of a soil, நிலத்தன்மை.

பூநாகம், s. A worm, an earth-worm. 2. Snake, நாகம்.

பூநாதம், s. Salt-petre, or nitrate of potash, வெடியுப்பு.

பூநீர், s. Dew as the moisture of the earth, பனி.

பூநீறு — பூவழலை, s. Washerman's or fuller's earth, as நிலவீரம்.

பூநீற்றிலெடுக்கிறஉப்பு, s. Salt from the earth impregnated with soda.

பூபதி, s. A king, as lord of the earth, அரசன். 2. A kind of pill, ஓர்குளிகை. (சது.)

பூபரிதி, s. The equinoctial line. 2. The circumference of the earth. W. p. 624. B'HOOPARID'HI.

பூபன், s. A sovereign, one who protects the earth, அரசன். W. p. 624. B'HOOPA.

பூபாலன், s. [pl. பூபாலர்.] A king, a sovereign, அரசன் 2. An agriculturist, one who cherishes the earth, வேளாளன்; [ex பாலன்.]

பூப்பிரவேசம், s. Visiting one's field, &c. See பூமிப்பிரவேசம்.

பூமகள்—பூமின், s. The goddess of earth, பூமிதேவி.

பூமகண்மைந்தர், s. [pl.] Husbandmen, as belonging to the soil, வேளாளர்.

பூமண்டலம், s. The earth, the world, பூச்சக்கரம்; [ex மண்டலம்.]

பூருகம், s. A tree, as originating from the earth, மரம்; [ex ருகம் = உருகம், origin.]

பூருண்டி, s. A kind of sun-flower, ஓர்பூ. W. p. 625. B'HURUNDI.

பூவசியர் — பூவைசியர், s. Ploughmen, உழவர். 2. Farmers, களமர். (சது.)

பூவலயம்-பூவுலகம்-பூவுலகு-பூலோகம், s. The earth, the world.

பூவிந்துநாதம், s. Mica, அப்பிரகம்.

பூவிளம், s. Native arsenic, கற்பாஷாணம்.

*பூகதர், s. Panegyrists, as புகழ்வோர். (சது.)

*பூகம், s. The areca-nut tree, கமுகு. 2. Collection, quantity, multitude, திரட்சி. W. p. 547. POOGA. 3. A kind of palm. See கூந்தற்பனை. (சது.)

*பூக்கம், s. The areca-nut, as பூகம். 2. A town, ஊர். 3. A town in an agricultural district, மருதநிலத்தூர். (சது.)

பூ, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. To flower, to blossom, to put forth germs, மலர. 2. To be, to become, உண்டாக. 3. To gather mould, பூசணம்பூக்க. 4. To menstruate, இருதுவாக. 5. To fail as the eyes by looking, கண்பூக்க. 6. [fig.] To be prosperous, to flourish, சிறக்க. (c.)

பூத்துக்காய்த்தது. It put forth blossoms and bore fruit.

என்கண்பூத்துப்போகிறது. My eyes fail.

நெருப்புபூத்துப்போயிற்று. The fire is nearly extinguished.

பூத்தவள், appel. n. A woman in her courses. (p.)

பூவாமரம் — பூவாமற்காய்க்குமரம், s. A tree which produces fruit without flowering.—Note. Such trees are called by the generic term, கோளி.

பூவாமை, v. noun. [neg.] Not being produced, உண்டாகாமை. (நீதிநெறிவி.)

பூப்பு, v. noun. Menstruation, இருதுவாதல்.

பூப்பகம், s. The female pudendum, பெண்குறி. (சது.)

பூங்காரம், s. Shade, dimness, gloom, as cast by mist or passing clouds, மந்தாரம், [probably a change of புகர்.]—Note. For other similar words as பூங்கா, பூங்காவி, &c. See under பூ.

பூங்காரங்கட்ட — பூங்காரம்போட, inf. To be partially overcast.

*பூசகன், s. One who performs puja, பூசைசெய்வோன். W. p. 547. POOJAKA.

பூசணம், s. [loc. பூர்ணம்.] Mould, as formed on food, பூஞ்சு. (c.)

பூசணம்பூத்தது. It is moulded.

பூசணி, s. [sometimes பூசுணி.] A pumpkin-plant, a gourd, ஓர்கொடி. (c.)

பூசணிக்காய், s. A pumpkin.

பூசணிக்காய்அழுகினதுபோல். Like a decayed pumpkin; whole outside and rotten within.

*பூசம்-பூசநாள், s. The eighth lunar asterism, எட்டாம்நட்சத்திரம். W. p. 547. PUSHYA.

பூசல், s. Battle, போர். 2. Noise, roar, clamor, பேரொலி. (சது.) 3. See பூசு, v.

பூசாந்தப்படல்- பூசாந்தப்படலம், s. [prov.] A form, or resting place, for the சப்பரம் car.

*பூசனம்—பூசனை, s. Solemn ritual, worship, devotion, ஆராதனை. W. p. 547. POOJANA.

சிறப்பொடுபூசனைசெல்லாது. Worship will not be offered. (குறள்.)

*பூசாந்திரம், s. [also பூசாவந்தம்.] A kind of earring, காதணியிலொன்று. (c.)

பூசாந்திரக்கடுக்கன், s. An earring, or jewel, the small pieces of which are arranged like the five stars in the பூசம் asterism; also called பஞ்சபூசாவந்தம்.

நவபூசாவந்தம், s. A nine-faced earring.

*பூசாபலம்—பூசாமுகம். See பூசை.

*பூசாரி, s. [contrac. of பூசாசாரி.] A Sudra hierophant, in small temples, improperly பூசாலி. (c.)

பூசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To offer flowers, &c., in worship, to offer puja, அருச்சிக்க. 2. To reverence, to perform ritual ceremonies, வணக்க; [ex பூசை, a Sanscrit root with Tamil endings.]

பூசித்தல் — பூசிப்பு, v. noun. Worshipping, reverencing, revering.

*பூசிதம், s. Worship, adoration, வணக்கம்.

பூசிதபயங்கரம், s. Awe, reverence in performing ritual ceremonies.

பூசிதன், s. A person much venerated, பூசிக்கப்படுவோன். W. p. 548. POOJITA.

பூசிதனுக, inf. To become venerable, to be worshipped.

பூசு, s. A thin skin or pellicle, enveloping grains, கேழ்வரகுமுதலியவற்றின்பூசு.—Note. This word is sometimes improperly used for பூஞ்சு, cobweb, and for தூசி, dirt.

பூசு, கிறேன், பூசினேன், வேன், பூச, v. a. To daub, smear, spread on; to plaster, anoint, தடவ. 2. To wash, கழுவ. 3. (p.) To adorn, to ornament, அலங்கரிக்க.

கைபூசிவந்தான். He washed his hands, and came. (p.)

இந்தக்காப்புக்குத்தங்கம்பூசுவிக்கவேண்டும். I wish to get this bracelet gilded.

புடவைக்குக்கஞ்சிபூசினுன். He starched the cloth.

குற்றத்தைப்பூசிமெழுக, inf. To cover a fault, to palliate a crime.

பூசிப்புனைந்த, inf. To adorn with jewels or to perfume with sandal.

பூச்சு, v. noun. Daubing, smearing, anointing, plastering, painting, தடவுகை. 2 A coating, gilding, plating, tinning, மேற்பூச்சு. 3. External show, pretence, வெளிக்காட்சி. 4. Palliation, mitigation, குற்றமறைக்கை. 5. Starch stiffening, கஞ்சிப்பசை. (Old Dic.)

பூச்சுப்புடவை, s. Cloth stiffened with starch.

பூச்சுவேலை, s. Plated or tinned work. 2. Showy work, any thing superficial.

சாந்துப்பூச்சு, s. Plaster of lime-mortar.

பொற்பூச்சு, s. Gilding.

மேற்பூச்சு, s. Outward coat of plaster, &c. 2. (fig.) False appearance.

பூசை, s. A cat, பூனை. (p.)

*பூசை, s. Worship, homage to superiors, or adoration of the gods, with the proper ceremonies, ஆராதனை. W. p. 548. POOJA. 2. Food, eatables, given to religious mendicants, மயேசுரபூசை. 3. [ironically.] A good flogging, அடி.—Note. பூசை is two-fold: 1. அந்தரியாகபூசை, internal or mental worship; 2. பகிரியாகபூசை, external worship. The four special seasons for the கிரியாபூசை, at the temples are பிராதக்காலம், at dawn; 2. மாத்தியானிகம், at midday; 3. சாயங்காலம், at sunset; 4. அர்த்தசாமம், at midnight. Two other seasons are observed in some temples, at nine in the morning, and nine at night.

பூசாகாலம், *s.* Time of offering *puja*, ஆராதனைவேளை.

பூசாசாரி, *s.* A priest, one who offers *puja*, at small fanes not Brahmanical; an exorcist. See பூசாரி.

பூசாபலம்-பூசாபலன், *s.* Merit of *puja*.

பூசாபலன்பண்ணினவன், *appel. n.* One who receives in the present life, the reward of merit in a former state.

பூசாமுகம்—பூசைமுகம், *s.* Presence of the *puja*.

பூசாவிதி, *s.* A directory for *puja*.

பூசைகாண, *inf.* To attend on or be present at, the performance of *puja*.

பூசைகொடுக்க, *inf.* To give eatables to religious mendicants. 2. [*in irony.*] To give a good flogging.

பூசைத்திரவியம், *s.* Materials for *puja*.

பூசைநைவேத்தியம், *s.* *Puja* and oblations.

பூசைபண்ண, *inf.* To perform *puja*.

பூசைபுனர்சமஸ்காரம், *s.* A repetition of a ritual ceremony.

பூசைபோட, *inf.* To offer *puja* to the cruel gods or goddesses. 2. To give one a flogging. 3. To consume food, &c.

பூசைப்பரிசாரகன், *s.* An assistant to the officiating priest.

பூசைப்பெட்டி, *s.* A basket for *puja* utensils.

பூசைமணி, *s.* A hand bell, rung during the performance of *puja*.

பூசைமேடை—பூசைக்குறடு, *s.* A raised place for the idol when *puja* is performed.

பூசைவேளை, *s.* Time of offering *puja*.

பூச்சாண்டி, *s.* Something that causes an absurd or needless fright to children, a bugbear; also பூச்சியாண்டி. (*c.*)

பூச்சாண்டிகாட்டுதல், *v. noun.* Frightening, as above.

பூச்சி, *s.* An insect, beetle, worm or any small reptile, சிறுசெந்து. 2. [*in combin.*] Covering, &c. See கண்ணும்பூச்சி. (*c.*) 3. (*Tel.*) A ghost.

பூச்சிகாட்ட, *inf.* [*with the dative.*] To frighten children by distortion, grimace. 2. To frighten.

பூச்சிக்கடி, *s.* Ringworm, herpes, &c.

பூச்சிக்கூடு, *s.* A kind of jewel worn by women, காதணியிலொன்று. 2. A cage for insects.

பூச்சிபிடிக்க, *inf.* To breed worms.

பூச்சிபூச்சியெனல், *v. noun.* Crying பூச்சி, or feigning illness beyond the reality.

பூச்சியரிக்க, *inf.* To gnaw as worms and ulcers.

பூச்சியாண்டி, *s.* See பூச்சாண்டி.

*பூச்சியம், *s.* Venerableness, that which is worthy of worship, மேன்மை. 2. Honor, reputation, கீர்த்தி. 3. Ostentation, display, ஆடம்பரம். W. p. 548. POOJYA. 4. Emptiness, or scantiness, as an auspicious term in denying a thing asked, இன்மை. 5. A concealment of one's poverty or defects, and assuming appearances, குற்றமறைக்கை. 6. [*in astron.*] A cipher in calculation, as standing in the place of a real number, but of no value. Thus sixty-three divided by seven, the quotient is nine, and பூச்சியம். 7. Blank in lotteries, திருவுளச்சீட்டின்தோற்பு. 8. [*in calendar.*] That which is unlucky or unpropitiousness, அதிஷ்டமின்மை. 9. Rareness, uncommonness, அருமை.

சாப்பாட்டுக்குப்பூச்சியமாயிருக்கிறது. There is nothing to live upon.

வேலைபூச்சியம். Want of work or employ.

பூச்சியம்பண்ண, *inf.* To venerate, to esteem. 2. To conceal one's poverty, or defects. 3. To manage so as to get undeserved regard. 4. To make an old house or thing appear like new.

பூச்சியவார்த்தை, *s.* An expression of respect, or a compliment, உபசாரச்சொல்.

பூச்சியன், *s.* One deserving respect, பூசிக்கப்படுவோன். 2. [*prov.*] A dark bull, grey and white, கறுப்பும்வெள்ளையுமான மாடு.

பூச்சு. See under பூசு, *v.*

*பூஷணம்-பூடணம், *s.* Jewels, ornaments, அணிகலன். W. p. 625. B'HOOSHAN'A.

பூஷணலங்கிருதம், *s.* Being richly ornamented with jewels.

பூஷணை, *s.* Veneration, respectful attentions, உபசாரம்.

பூஷணம்பண்ண, *inf.* To treat one with excessive attention.

*பூஷிதம்—பூடிதம், *s.* Ornamenting, adorning, அலங்கரிப்பு. W. p. 625. B'HOOSHITA.

பூஷிதன், *s.* One adorned with jewels.

பூஞெ, *s.* A cat, பூனை. (*p.*)

பூஞ்சணம், *s.* [*vul.* பூஞ்சணவன்.] Mouldiness, mildew, cobweb and dust, as பூசணம், பூஞ்சு.

பூஞ்சல், *s.* [*prov.*] Brownness, பூஞ்சு. 2. Dimness of sight, as பூஞ்சை.

பூஞ்சனிறம், *s.* A dusky, or brown color, dimness—as of twilight.

பூஞ்சற்கண், *s.* Bleared eyes, பீளைக்கண். 2. Dim eyes, ஒளிமங்கியகண். 3. Small sunken eyes, குழிந்தகண்.

பூஞ்சு, *s.* Mouldiness; mildew, stain by damp, பூசணம். 2. Cobwebs and dust, as collected about a house, &c., ஒட்டடை. (*c.*)

பூஞ்சுகட்ட — பூஞ்சுபிடிக்க, *inf.* To mould, to form as mould, mildew, or cobwebs.

பூஞ்சை, *s.* Dimness, or dulness of sight, மங்கல்.

பூஞ்சைநிலம், *s.* Barren and uncultivated ground, பாழ்நிலம்.

*பூடன், *s.* One of the twelve suns. See துவாதசாதித்தர். W. p. 551. POOSHAN.

பூடு, *s.* [*as* பூண்டு.] Any herb or small plant, a vegetable. 2. [*in combin.*] A whole onion, garlic, &c., as உள்ளிப்பூடு. (*c.*)

அவனொருபூடு. He is a mighty valuable person. [*ironically.*]

பூட்கை, *s.* A shawl, mantle, scarf, cloak, மேற்கோள். 2. The skin, தோல்; [*ex* பூண் *et* கை.] 3. (சது.) An elephant, யானை. 3. Yali, a fabulous animal, யாளி. (*p.*)

பூட்சி, *s.* The body, உடல். 2. Putting on, wearing, பூணுகை. (சது.) 3. Right, propriety, title, உரிமை. (*p.*)

பூட்டகம், *s.* (*Tel.*) Flimsy work, any thing unsubstantial, இளப்பமானவேலை.

பூட்டகந்தெரியாமலிருக்கிறவன். A man without vain pretensions.

பூட்டகக்காரன், *s.* A vain boaster.

பூட்டகவேலை, *s.* As பூட்டகம்.

பூட்டன், *s.* Great-grand-father, பாட்டன்தகப்பன். (*c.*)

பூட்டு, *s.* A lock. 2. Clasp, hook, brace, catch, கொக்கி. 3. Bow-string, வின்ஞாண். 4. Machination, conspiracy, stratagem, entanglement, தந்திரம். 5. [*in anat.*] The joining of bones, articulation, joint, எலும்பின்பொருத்து. 6. [*in wrestling.*] Locking or entangling an antagonist's arms or legs, so as to deprive him of power, மல்லுக்கட்டு. 7. Tightness, as of a bow-string, இறுக்கம். 8. Shackles, manacles, fetters, விலங்கு. 9. See பூட்டு, *v.*

பூட்டுந்திறப்பும்போல. As lock and key; secure, or adapted one to the other.

பூட்டங்கம் — பூட்டிரங்கம், *s.* Entrapping, inveigling, ensnaring.

பூட்டாங்கயிறு, *s.* [*sometimes* பூட்டங்கயிறு, பூட்டுகயிறு.] A rope by which the bullock is fastened to the yoke, நுகக்கயிறு.

பூட்டுத்தைக்க, *inf.* To fasten a lock. 2. [*fig.*] To take effect, as a plot.

பூட்டுப்போட, *inf.* [*with the dat.*] To lock up.

பூட்டுவாய், *s.* A key-hole, திறவுகோல் புகுந்தொளை.

பூட்டு, கிறேன், பூட்டினேன், வேன், பூட்ட, *v. a.* To lock, fasten, button, hook, &c., அடைக்க. 2. To attach horses or bullocks, to a carriage; to yoke, harness, or tackle, பிணைக்க. 3. To fasten one in the stocks, தொழுவடிக்க. 4. To manacle, shackle, fetter, விலங்குமாட்ட. 5. To fasten on rings, jewels, அணிய. 6. To lock, or entangle one's arms or legs, as a wrestler, மற்கட்ட. 7. [*in combin.*] To make the different parts of a discourse agree, இணைக்க. 8. To entrap, inveigle, secure one in an engagement by artifice, அகப்படுத்த. 9. To fasten the string to a bow, நாணேற்ற. *10. To tighten, இறுக்க. 11. To fix arrows in the bow, அம்புதொடுக்க. (*c.*)

குதிரைகளையிரதத்திலேபூட்டினான். He attached the horses to the carriage.

தொகைபூட்டினான். He settled the account.

பூட்டிப்போட—பூட்டிவைக்க, *inf.* To lock up, fasten, secure for a time.

பூட்டியுழ, *inf.* To yoke the oxen and plough.

பூட்டு, *v. noun.* Locking, fastening, clasping, &c., *as the verb.*

பூட்டுவிற்பொருள்கோள், *s.* One of the eight modes of construction in poetry. See பொருள்கோள்.

பூட்டை, *s.* A machine for drawing water, ஏற்றமரம். 2. Water-works, hydraulics, காராம்பி. 3. An oil press, செக்கு. (சது.) 4. Basket for baling out water, இறைகூடை. 5. [*south usage for* பீட்டை.] Ears of maize or great millet, கதிர்.

பூட்டைவாங்குதல் — பூட்டைபறிதல், *v. n.* Shooting out ears of corn.

பூணாரம். See பூண்.

பூணி, *s.* A bullock, bull, எருது. 2. Taurus of the Zodiac, இடபவிராசி. (சது.)

பூணி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To allude to, refer to, சுட்ட. (*p.*)

பூணித்து, *v. part.* Concerning, referring to, குறித்து.

பூணை, *s.* Forest tracts, முல்லைநிலம். (சது.)

பூண், *s.* A ring, ferrule, cap, உலக்கை முதலியவற்றின்பூண். 2. An ornamental knob of an elephant's tusk, கிம்புரி. (*c.*) 3. A jewel, an ornament, ஆபரணம்.

புணாரம், *s.* Ornaments, jewels, ஆபரணம்; [*ex* ஆரம்.]

பூணாரவெலும்பு, *s.* Collar bone, as காறையெலும்பு. [*limited.*]

பூண்கட்ட — பூண்போட, *inf.* To fasten on a ferrule.

பூண்—பூணு, கிறேன், பூண்டேன், பூண்பேன், பூணுவேன், பூண, *v. a.* or *v. n.* To put on, have on; to be adorned with; to wear arms or the brahmanical string, தரிக்க. 2. To be fettered, manacled, shackled, மாட்டப்பட. 3. To be yoked, harnessed, &c., as பூட்டப்பட. 4. To take upon, undertake a business, a course of duties, &c., துணிய. 5. To become involved in, as blame, crime, guilt, குற்றப்பட. 6. To become entangled, as a lock, to be caught, as birds in snare, &c., சிக்கிக்கொள்ள. 7. To take a dye, சாயந்தோய்க்கப்பட. 8. To be got as learning, knowledge, அடைய.

விரதம்பூண, *inf.* To enter up on fasting, or the performance of any vow.

பூணுநூல்—பூணூல், *s.* The brahman's string.

பூணூற்கலியாணம், *s.* The ceremony of investing the young brahman with the sacred cord.

பூண்டி, *s.* A town, a village, a district, ஊர். (சது.)

பூண்டு, *s.* [*as* பூடு, *which see.*] Any small plant, &c.

*பூதகி—பூதனை, *s.* A female demon who assumed the form of Krishna's mother to kill him. She gave him poison through her breast. He rejected the poison and drew forth her life by sucking.

*பூதம், *s.* Any of the five elements. See பஞ்சபூதம். 2. A *Bhuta;* a goblin, ghost or malignant spirit, employed by magicians and supposed to haunt places where the dead are burnt or buried. Companies of them attend Siva, Ganesa, &c., They are described as dwarfish, with huge pot-bellies, and very small legs, &c., இருத்திமம். 3. A living being, life, animal power, சீவன். W. p. 623. B'HOOTA. 4. The second lunar asterism, as பரணி. 5. Past time, இறந்தகாலம். 6. The banyan tree, ஆல். 7. One of the five யாகம்.—*Note.* The elements are described as two-fold: 1. சூட்சுமபூதம், the spiritual or subtle class of elements, types or radicals of the grosser. See தன்மாத்திரை. 2. ஸ்தூலபூதம், the gross or visible elements, which like the former are five: பிருதிவி, or நிலம், earth; 2. அப்பு or நீர், water; 3. தேயு or தீ, fire; 4. வாயு or காற்று, air, or wind; 5. ஆகாசம் or விசும்பு, ether.

பூதம்போலே. Any thing great, monstrous, superhuman, &c.

பூதகணம் — பூதசேனை, *s.* Companies of *Bhutas.*

பூதகரப்பன்பட்டை, *s.* The medicinal bark of the நொறி tree.

பூதகலம்—பூதக்கலம், *s.* [*prov.* பூதாக்கலம்.] The giving of food by the bride to the bridegroom for the first time. See பரிமாறு.

பூதகாலம், *s.* Past time, past tense, இறந்தகாலம்.

பூதகலிக்கம், *s.* A kind of collyrium used by magicians. See கலிக்கம்.

பூதக்கண்ணாடி, *s.* A magnifier, a microscope.

பூதக்கால், *s.* The large leg, elephantiasis, as யானைக்கால். (*Old Dic.*)

பூதசாரம், *s.* Essence of the elements, formed of or belonging to the elements, elemental, பஞ்சபூதசத்து. 2. What is composed of or belonging to the primitive or spiritual class of elements.

பூதசாரசரீரம், *s.* Bodies composed of spiritual elements. See சூக்குமசரீரம் under சரீரத்திரயம்.

பூததயை, *s.* Benevolence to creatures, as சீவகாருண்ணியம்.

பூததாத்திரி, *s.* The earth as formed of the five elements; *more etymologically* as nourishing living beings, பூமி; [*ex* தாத்திரி.]

பூததானியம், *s.* Sesamum, எள்.

பூதநாடி, *s.* Irregularity in the pulse of one possessed by an evil spirit, பேய்பிடித்தவர்நாடி. 2. As மரணநாடி.

பூதநாதன்—பூதபதி, *s.* Siva, as lord of the *Bhutas*, சிவன்.

பூதநாயகி, *s.* Parvati, பார்வதி.

பூதபஞ்சாட்சரம், *s.* A five lettered incantation.

பூதபரிணமம், *s.* Modifications or changes of the elements. See பரிணமம்.

பூதபரிணமதேகம், *s.* Bodies formed of the gross elements. See பரிணமசரீரம் under சரீரத்திரயம்.

பூதபலி—பூதயாகம், *s.* One of the five kinds of sacrifices. See யாகம்.

பூதபிரேதபிசாசு, *s.* Three classes of vampires.

பூதபேதயோனிகள், *s,* Varieties of the productions of elemental combination.

பூதவாகனம், *s.* A vehicle in a temple in imitation of a *Bhuta*, to carry the image of Siva or any of his family.

பூதவாக்கு—பூதவார்த்தை, *s.* Obscene talk, கெட்டசொல். (*Beschi.*)

பூதவாதம், *s.* A religious belief, making the elements to be god, ஓர்சமயம்.

பூதவாத்துமா — பூதாத்துமா, *s.* Any living being, சீவாத்துமா.

பூதவிருட்சம், *s.* The banyan tree, ஆலமரம்.

பூதவிருள், *s.* The darkness of the elements without the light of the sun, மூலவிருள்.

பூதாதிஅகங்காரம், *s.* [*in the Agam.*] One of the three அகங்காரம் or evil principles. See தைசதம்.

பூதாஞ்சனம், *s.* One of the three species of magical ointments. See அஞ்சனத்திரயம்.

பூதேசன், *s.* Siva as generalissimo of the *Bhuta*-hosts, சிவன்; [*ex* ஈசன்.]

*பூதம், *s.* Cleanness, purity, truth, சுத்தம். W. p. 548. POOTA.

பூதாத்துமன், *s.* One who has entirely abandoned worldly desires, an ascetic, துறவி.

*பூதரம், *s.* Hill, or mountain, as supported by the earth, மலை. 2. Mount Meru, மேருகிரி; [*ex* பூ *et* தரம், holding.]

*பூதர், *s.* One of the eighteen classes of dependent supernals. See பதினெண்கணம்; [*ex* பூதம்.]

*பூதலம், *s.* The earth, பூமி; [*ex* பூ.] See தலம்.

*பூதவம், *s.* The banyan tree, ஆலவிருட்சம். 2. The மருது tree. (சது.)

*பூதனை, *s.* A female demon. See பூதகி.

பூதாக்கலம். See பூதகலம்.

*பூதாஞ்சனம்—பூதேசன். See பூதம்.

*பூதாரம், *s.* A hog, as tearing the earth, பன்றி. W. p. 624. B'HOODARA.

*பூதாரன், *s.* A king, as supporter of the earth, அரசன்; [*ex* தாரம்=தரம்.]

*பூதி, *s.* Atrocity, violence and power of Siva, கொடுமை. 2. Affluence, wealth, prosperity, success, செல்வம். 3. Ashes, சாம்பல். W. p. 624. B'HOOTI. 4. Sacred ashes, as விபூதி. 5. Dust, powder, புழுதி, 6. Stench, துர்க்கந்தம். 7. Hell, நரகம். 8. Flesh, meat, ஊன்.

பூதிப்பிடி, *v. noun.* Attacking a person unjustly. 2. Intermeddling with others' concerns, without reason.

அவனைப்பூதிப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டுபோனார்கள். They attacked him violently.

*பூதியம், *s.* The earth, பூமி. 2. Body, உடல். 3. [*com. for* பூதம்.] Any of the five elements.

பூது, கிறேன், பூந்தேன், வேன், பூத, *v. n.* [*impr. for* புகு.] To enter, &c.

பூதை, *s.* An arrow, அம்பு. (சது.)

பூத்தானம், *s.* Making much of, keeping too nicely, using very delicately, அருமைபாராட்டுகை. (*c.*)

*பூஸ்திதி, *s.* Estate or landed property, நிலசம்பத்து. (*c.*)

*பூத்திரம், *s.* (*St.*) Mountain, மலை; [*ex* பூ *et* திரம், firmness.]

பூத்துப்பூத்தெனல், *v. noun.* Puffing from running, இளைப்புக்குறிப்பு. 2. A sudden swelling of the body, &c., as பூர்பூரெனல்.

பூத்தப்பூத்தென்றூதுதல். Puffing and blowing as with hard labor.

பூத்தப்பூத்தென்றிளைத்தல். Puffing and blowing from running.

பூந்தி. See பூவந்தி, under பூ.

பூந்தை, *s.* [*contract. of* பூதன்தந்தை.] The father of one named பூதன். (*p.*)

*பூபன்—பூமன். See பூ, earth.

*பூபசாலை, *s.* A bazaar for confectionary, பணிகாரக்கடை. W. p. 548. POOPASALA.

*பூபாளம், *s.* A tune. See இராகம்.

பூப்பகம்—பூப்பு. See பூ, *v.*

*பூமான், *s.* Man, husband, புருஷன். See புமான். (*c.*)

பூமானும்பூவையும். The bride and bridegroom.

*பூமி, s. The earth, the world, பூவுலகு. W. p. 642. B'hoomi. 2. Land as distinguished from water, ground, soil, நிலம். 3. Any piece or plot of land, landed property, மண். 4. Country, district, தேசம். 5. A stage or degree in ascetic life, of which there are seven. See ஞானபூமி.

பூமிகாமி, s. A class of horses, as பூகாமி.

பூமிகொழுநன், s. Vishnu, as husband of the goddess earth, விஷ்ணு.

பூமிக்கூட்டை, s. Salt-petre, வெடியுப்பு.

பூமிசம், s. Produced of or on the earth. 2. Hell, நரகம். W. p. 624. B'homija.

பூமிசம்பவை, s. Sita the wife of Rama, சீதை.

பூமிசன், s. The planet mars, செவ்வாய். 2. An Asura, நரகாசுரன்; [ex சன், one born.] (சது.)

பூமிசாஸ்திரம், s. Geography.—*Note.* For this and similar derivatives, see பூ, earth.

பூமிசாரம், s. The fatness of the earth, as பூசாரம்.

பூமிதேவி — பூமிலட்சுமி, s. [*improp.* பூமதேவி, பூமாதேவி.] The goddess earth.

பூமிதைலம், s. A kind of mineral oil, Bitumen. See மண்தைலம்.

பூமியதிர்ச்சி—பூமிநடுக்கம், s. Earthquake, as பூகம்பம்.

பூமிஸ்நானம், s. (*St.* பூமஸ்நானம்.) One of the seven kinds of purification. See ஸ்நானம்.

பூமிநாதம், s. Salt produced from earth impregnated with soda, உருப்பு

பூமிபரீட்சை, s. Rules for determining the nature of soils, &c. See கலைஞானம்.

பூமிபாரம், s. A burden to the earth, as an overplus of inhabitants, wicked people, &c. 2. Responsibilities of a kingdom, as இராச்சியபாரம்.

பூமிபார்த்துப்பிறக்குதல், v. noun. Being born with the face downward, considered to be connected with benefits from the earth.

பூமிப்பிரவேசம், s. [*also* பூப்பிரவேசம்.] Visiting one's field, for the first time, on an auspicious day in the new year.

பூமியாள, inf. To reign over a country.

பூமிவேர், s. An earth-worm, as பூநாகம்.

பூம்பறியல், s. Scantiness of subsistence, குறைவு. (*Jaff.*)

*பூரகம், s. Filling, inhaling, பூரிப்பு. 2. A form of the yoga worship. See பிராணாயாமம், யோகம்.

*பூரட்டாதி, s. See புரட்டாதி.

*பூரணமி - பூரணமை - பூர்ணிமை, s. [*also* பௌர்ணமி.] Full moon. W. p. 549. Poorn'ama.

*பூரணம், s. Fulness, entireness, the whole, pervading, முழுமை. 2. Increase, augmentation, நிறைவு. 3. Consummation, accomplishment, பொலிவு. 4. Abundance, plenitude, சம்பூரணம். 5. Satisfaction, gratification, மனப்பூரணம். W. p. 549. Pooran'a. 6. One of the modes of using the hands in dancing. See கரலட்சணம்.

பூரணகருப்பம்—பூரணபிண்டம், s. Full pregnancy.

பூரணகலசம்—பூரணகும்பம், s. A full pot of water, used on auspicious occasions, நிறைகுடம்.

பூரணசந்திரன், s. Full moon.

பூரணசற்குணம், s. A perfectly virtuous disposition.

பூரணசாஸ்திரம்—பூரணநூல், s. A treatise ascribed to Agastya.

பூரணசூத்திரம், s. A work on medicines by Agastya, ஓர்நூல்.

பூரணதிசை, s. One of the states of breathing, in சரநூல். See இயங்குதிசை, under திசை.

பூரணபலன், s. Full reward.

பூரணப்பட, inf. [*trans.* பூரணப்படுத்த.] To be satisfied.

பூரணலேகியம், s. See பூரணாதிலேகியம்.

காப்பன்மொய்க்கிறது. The eruption is spread-ing.

தலைவிஷமேறிமொய்க்கிறது. The poison has reached the head. (p.)

ஒருவனைமொய்த்துக்கொள்ளுதல்......Reducing, impoverishing, or ruining one.

வெல்லப்பானையையீக்கள்மொய்த்துக்கொண்டதுபோ ல. As flies surround a pot of sugar.

மொய்ம்பு, s. The shoulder, தோள். 2. Strength, prowess, வலி. (சது.)

மொர, s. [indeclin.] An imitative sound.

மொரமொரெனல் — மொருமொரெனல் —மொறுமொறெனல், v. noun. Indicating an imitative sound, ஈரக்கொலிக்குறிப்பு.

இலைகாய்ந்துமொருமொரென்றுபோயிற்று....The dry leaves crumple.

மொலு—மொல்லு, s. [indeclin.] An imitative sound. 2. A noise made with the hands, or feet preparatory to a fight, இரைச்சல்.

மொலுமொலெனல், v. noun. Indicating an unceasing, troublesome talking; also scratching, ஒலிக்குறிப்பு. 2. Indicating a noisy clamor.

மொலுமொலென்றுபிடித்துக்கொள்ளுகிறது....... Attacking one with great noise and bustle.

மொழி, s. A word, a saying, சொல். 2. Speech, declaration, expression, வாக்கியம். தேவர்மொழி. An oracle, சானுக்கிரகம்.

மொழி, ௩. Three sorts of speech: 1. மெய்கூறல், speaking the truth; 2. புகழ்கூறல், panegyrising, or flattering; 3. பழிகூறல், calumniating or abusing.

மொழிதடுமாற, inf. To stammer in speaking, *naturally or otherwise.*

மொழிபிசக — மொழிபிறழ, inf. To fail in keeping one's word.

மொழிபெயர்ப்பு, v. noun. Translation, interpretation. See நாவியாப்பு.

மொழிமாற்று, v. noun. A transposition of words, as சுரையாழவம்மிமிதக்க, the gourd sinks, the grinding stone swims. [நன்னூல்.]

மொழிமாற்றுப்பொருள்கோள், s. One of the eight modes of constructing a verse. See பொருள்கோள்.

மொழிமுதலெழுத்து, s. Initial letters, proper to begin words. These are any of the twelve vowels, and க, ச, த, ப, ஞ, ந, ம, ய, வ, as animated consonants.—*Note.* Usually these consonants (as initials) may be animated by any vowel as well as அ, but ஞ, must have also a vowel prefix.

மொழிமுதற்காரணம், s. See காரணம்.

மொழிமை, s. An old word, பழஞ்சொல். (சது.)

மொழியிடையெழுத்து, s. Letters proper to follow inanimate consonants in the middle of a word. See *Nannûl.*

மொழியிறுதி—மொழியீறு, s. [*in gram.*] The termination of a word.

மொழியீற்றெழுத்து, s. Final letters. These are, the twelve vowels, and ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள், or animated by உ short, as found in குற்றியலுகரமொழிகள்.

மொழியொலிக்குறிப்பு, s. Tone, emphasis, or inflexion.

மொழியோசை, s. Pronunciation, உச்சரிப்பு.

மொழி, கிறேன், ந்தேன், வேன், ய, v. a. To say, to speak, சொல்ல. (p.)

மொழிவதறமொழி. Say what thou sayest rightly.

மொழிவதுமறுக்கினழிவதுகருமம். If the words of the ancients be forgotten, the business will not succeed.

மொழிதல், v. noun. Speaking.

மொழுக்கன், s. [*for* மழுங்கன்.] A jewel without engraving, a plain jewel.

மொழுக்கன்மோதிரம். A plain ring.

மொழுக்கதோலை. A plain ear-ring for a female.

மொழுப்பு, v. [*for* மழுப்பு.] To protract a business, delay a law-suit, or put off payment on frivolous pretences.

மொள்ளு, கிறேன், மொண்டேன், வேன், மொள்ள, v. a. To draw water, தண்ணீர்மொள்ள.

மொண்டாருகிறவீட்டிற் கொண்டாண்டாகிறையும். Does a house with drawn-water [from a well] need water bought?

மொறுமொறு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To evince anger, to murmur, as முறுமுறுக்க.

மொறுமொறெனல், v. noun. Crumpling—as overdone cakes, dried leaves or paper.

மோ

மோ. A syllabic letter compounded of ம் and ஓ.

மோ. An expletive [*affixed to the second person singular of verbs.*] as கேண்மோ, hear.

*மோகம், s. Fierce, ungovernable lust, lasciviousness, காமம். 2. Desire, affection, ஆசை. 3. Confusion of mind, bewilderment, fainting, உன்மத்தம். See under பகை, உட்பகை கூ., *also* மாயை ௫. and பஞ்சபாணவஸ்தை. W. p. 676. MOHA. 4. [*in comb.*] Barrenness. See அமோகம்.

மோகம்முப்பதுநாள்ஆசைஅறுபதுநாள். Venereal appetite continues thirty-days, desire for sixty; [*after marriage.*] *Prov.*

அவனுக்கதின்பேரிலேமோகம். He lusts after it.

மோகஇச்சை, s. Libidinous desire.

மோககவனம், s. Passionate desire, libidinous inclination; [*ex* கவனம்.]

மோகங்கொள்ள, inf. To grow libidinous.

மோகந்தீர, inf. To gratify lust.

மோகர், s. [*pl.*] Painters as fascinating people by their work, சித்திரக்காரர்.

மோகலீலை, s. Lascivious behaviour. See லீலை.

மோகவியாபாரி, s. A lascivious person, காமவிகாரி.

மோகன், s. Kama, the Hindu Cupid, மன்மதன். (சது.)

மோகாந்தகாரம், s. Mental darkness caused by sensuality.

*மோகரம், s. Confusion of mind, fascination; lasciviousness, மயக்கம். 2. Vehemence, ardor, fervency of mind, மோகவுக்கிரம்.

மோகரக்கணை—மோகரபாணம், s. A fiery dart.

மோகரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To be confused in mind, மயங்க. 2. To be inflamed with anger, கோபிக்க.

*மோகனம், s. Libidinous fascination by magic. See கருமம், கலைஞானம். 2. Confusion of mind, mental perturbation, giddiness, மயக்கம். W. p. 676. MOHANA.

மோகனக்கல், s. A flat stone as a lintel over the gate-way of a Hindu temple, உத்திரக்கல்.

சோற்றுக்கல்லெடுக்கமாட்டாதவன்மோகனக்கல்லைத்தாங்குவானா. Can one, not able to lift the stones in his rice, carry away the stone-lintel of a temple gate-way?

மோகனசாஸ்திரம்—மோகனநூல், s. See காமநூல்.

மோகனநாட்டியம், s. Lascivious dancing.

மோகனமாலை, s. The name of a hanging neck-ornament, ஓர்கழுத்தணி.

மோகனவித்தை, s. The art of fascinating by magic.

மோகனாங்கனை—மோகனாங்கினி, s. A fascinating female, as மோகினி; [*ex* அங்கனை.]

மோகனாஸ்திரம், s. An enchanted missile-weapon; [*ex* அஸ்திரம்.]

மோகனீயம், s. Subjection to the passions. See அஷ்டகுற்றம், under குற்றம்.

மோகி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To lust, to be lascivious, மோகங்கொள்ள; [*ex* மோகம்.]

மோகிக்கப்பண்ண—மோகிப்பிக்க, inf. To excite to voluptuous desires.

மோகிதன், s. An amorous man, காமங்கொள்வோன்.

மோகிப்பு, v. noun. Fascination, lusting. (உப. 405.)

*மோகினி, s. An attractive woman, மயக்குமுருவுடையாள். 2. A female incarnation of Vishnu, as *Mohini.* See திருமாலவதாரம்.

மோகினிப்பணம், s. Money given at a temple-procession when the god appears as a female, உற்சவவரிப்பணம். [*limited.*]

மோகினிரூபம் — மோகினிவடிவம், s. The form of a மோகினி.

மோகூப், s. [*Arab.*] Stopping; suspending, தள்ளுகை.

அவனைமோகூப்செய்திருக்கிறது. He is suspended.

மோகொரம், s. [*com.* மொகரம்பண்டிகை.] A Mohammedan festival in commemoration of the martyrdom of Hussan and Hosein [the grandsons of Mohammed,] who ruled at Medina; the former was imprisoned, and the latter slain in battle with Ayzed, king of Syria.

*மோக்கம்—மோக்ஷம்—மோட்சம், s. Heaven, eternal bliss, endless felicity, everlasting happiness, பரகதி. [*adopted use.*] 2. Liberation, from the body, release from transmigration, entire liberation, absorption, வீடுகை. W. p. 675. MOKSHA.

மோக்களா, *s.* [*Hind.*] Joviality, conviviality, ஆரவாரம்.

அவன்வீட்டிலேவெகுமோக்களாவாய்க்கிடக்கிறது... In his house are stir, and bustle.

மோ, க்கிறேன், ந்தேன், ப்பேன், க்க, *v. a.* [*com.* முகரு, மோரு.] To smell a thing, மணக்க. 2. [*for* முக.] To draw water, மொள்ள.

இவன்அவளைமோந்துகொண்டேயிருக்கிறன். He is scenting [following] her.

நான்மோரேவன். I will not smell.

குடமோக்கவில்லை. The pitcher does not take water.

மோந்துகொடுக்க, *inf.* To smell and give to another.

மோப்ப, *inf.* [*poet. form of* மோக்க.] To smell. See under குழை, *v.*

மோப்பு, *v. noun.* The sense of smell. See மோப்பம்.

மோசம், *s.* Treachery, deceit, cunning, வஞ்சனை. (சது.) 2. Danger, risk, detriment, accident, அபாயம்.

கனமோசம். Great danger.

நாசமோசம். Danger of life.

நம்பிமோசம்போகிறது. Being disappointed.

மோசக்காரன், *s.* A deceiver.

மோசத்துக்குட்பட, *inf.* To be exposed to danger.

மோசநாசம், *s.* Treachery, damage, villany, மிகுபுரட்டு.

மோசநாசங்கம்பளிவேஷம். Treachery will bring mean attire.

மோசப்பட — மோசம்போக, *inf.* To go wrong, to fall into danger; to be mistaken, to be deceived.

அவனெங்கேயோமோசம்போய்விட்டான். He is somewhere lost, [*through some woman.*]

மோசம்பண்ண — மோசம்போக்க, *inf.* To deceive.

மோசனம், *s.* A species of paddy, ஓர் வகைநெல். (சது.)

***மோசனம்**, *s.* Liberation, deliverance, the end of an eclipse, கிரகணம்விடுகை. 2. Expiation, abolition, விடுகை. W. p. 657. Mochana.

சாபமோசனம். Abolition of a curse.

பாவமோசனம்—பாபவிமோசனம். Expiation of sin.

மோசிகை, *s.* A tuft of hair on the crown of the head, உச்சிமுடி. (உப. 157.)

மோசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* [*prov.*] To err, to go into danger.

மோசுப்பா, *s.* [*Hind.*] Responsibility, security, பொறுப்பு.

மோரூல், *s.* [*Arab.*] A guard, காவல்.

மோடம், *s.* (*Tel.*) Cloudiness, மப்புமந்தாரம். 2. Stupidity. See மூடம்.

மோடன், *s.* An ignorant man, as மூடன்.

அவன்மோடனயிருக்கிறன். He is a blockhead.

மோடத்தனம், *s.* As மோட்டுத்தனம்.

மோடனம், *s.* [*Tel.*] Stupidity, as மோடு. 2. As மோடி, 3.

என்னைநீமோடனம்பண்ணலாமென்றுபார்க்கிறுயோ. Do you think to fool me?

மோடாமோடி, *s.* Haughtiness, ostentation, pomposity, பெருமோடி. (*Colloq.*)

மோடாமோடியாய்ச்செலவுசெய்கிறது......Living extravagantly.

மோடி, *s.* An exhibition, a show, வேடிக்கை. 2. Haughtiness, austerity, மேட்டிமை. [*Tel. usage.*] 3. A kind of craft or enchantment. See மகடி. (*c.*) 4. A love-quarrel, பிணக்கு. 5. A forest-goddess. See காடுகாள்.—For some compounds, see மகடி.

இராசமோடி. Royal grandeur.

இராணுவமோடி. The array of an army.

சேவகமோடி. Manners, habit, or bravery of a soldier.

அவன்மோடியாய்த்திரிகிறன்.........He is high-minded, or he looks moody.

ஏனிந்தமோடிபண்ணுகிறும். Why do you make such a show?

மோடியாய்வாங்குகிறது. Buying by whole sale.

மோடிக்காரன், *s.* An unfriendly, frowning man.

மோடிப்புடவை, *s.* Cloth all white, without variety of colors. (*R.*)

மோடு, *s.* Height, உயர்ச்சி. 2. A hill, an eminence, மேடு. 3. The top of a height, a hill, house, &c., as முகடு. 3. Greatness, பெருமை. 5. Belly, stomach, வயிறு. 6. Stupidity, ignorance, dullness of intellect, மடமை.—For the compounds, see முகடு, மேடு.

மோட்டுத்தனம், *s.* Stupidity, perverseness.

திருடன்மோட்டைப்பிறிவந்தான். The thief broke through the top of the house.

***மோட்சம்**, *s.* End; liberation. See மோக்கம்.

மோட்சகாலம்—மோட்சநாடி, *s.* Time when an eclipse ends, கிரகணம்விடுங்காலம்.

மோட்சசத்துரு, *s.* Obstacles or foes in the way to heaven, as given in the Agamas.

மோட்சசத்துரு, ௰௩. The thirteen hinderances to bliss. They are: 1. இராகம், passion; 2. த்வேஷம், hatred; 3. காமம், lust, sexual desire; 4. குரோதம், malice; 5. உலோபம், avarice; 6. மோகம், licentiousness; 7. மதம், presumption; 8. மாத்சரியம், envy; 9. ஈரிஷை, impatience; 10. அசூயை, calumny; 11. டம்பம், pomposity; 12. தற்பம், self-importance; 13. அகங்காரம், pride, individuality.

மோட்சசாம்பிராச்சியம், *s.* As மோட்சானந்தம். (*Beschi.*)

மோட்சஞ்சேர — மோட்சமடைய, *inf.* To go to heaven, to gain heaven.

மோட்சதீபம், *s.* Lights with attendant ceremonies for the dead, among the Lingavites, லிங்கதாரிகளுக்குள்வழங்குந்தீபம்.

மோட்சமண்டலம்—மோட்சலோகம், *s.* [*Chris. usage.*] The heavens.

மோட்சமித்துரு, *s.* Aids to heaven. They are, சிரத்தை, devotion; 2. பத்தி, piety.

மோட்சவாசம், *s.* Dwelling in heaven.

மோட்சவாசிகள், *s.* Beatified souls.

மோட்சவிளக்கு, *s.* [*R. C. usage.*] Lamps lighted for the dead; (*lit.*) *the light of glorification.*

மோட்சவிளக்குக்காட்டுதல், *v. noun.* Setting a light for eight days, when a வீரசைவன், or a Pandaram (who are not burned), is buried in a sitting posture. 2. Carrying a lamp or flambeau before a corpse, when taken out to be burnt.

மோட்சானந்தம், *s.* Heavenly felicity.

மோட்சோபாயம், *s.* Means for obtaining bliss; [*ex* உபாயம்.]

மத்தியமோட்சம், *s.* Mean end of an eclipse.

சுத்தமோட்சம், *s.* True end of an eclipse.

***மோதகம்**, *s.* A cake of a conical form, made of rice-flour filled with pulse, and boiled or steamed, அப்பவருக்கம். 2. A kind of cake called, தோசை. 3. Delight, agreeableness, சந்தோஷம். W. p. 676. Modaka.

மோதகப்பிரியன், *appel. n.* Ganésa or the belly-god, as fond of this cake, விநாயகன்.

மோதகமரம், *s.* [*com.* குதிரைப்பிடுக்கன்.] A tree, Sterculia.

***மோதம்**, *s.* Smell, scent, strong perfume, வாசனை. 2. Joy, rejoicing, gladness, சந்தோஷம். W. p. 675. Moda. 3. Intoxication, களிப்பு. 4. Bishop's weed, ஓமம்.

மோதர்பா, *s.* [*Arab. Mohtarpha, improp.* மோதரப்பா.] Taxes levied on the manufacturing and trading community, தொழில்வரி.

மோதிரம், *s.* A ring for the finger, விரலாழி.

மோதிரக்கன்னி, *s.* A shrub, Hugonia mystax, ஓர்செடி.

மோதிரமொளித்துவிளையாட, *inf.* To play by hiding a ring.

மோதிரம்போட, *inf.* To fasten a ring.

மோதிரவிரல், *s.* The ring-finger.

மோதிரவிளையாட்டு, *v. noun.* A marriage-ceremony in which the bride and bridegroom are required to pick out a ring from a pot of water.

உருட்டுமோதிரம், *s.* A plain gold-ring.

கணையாழிமோதிரம், *s.* A seal-ring.

பட்டாணிமோதிரம், *s.* Three rings, each one having, severally, an emerald, a ruby, and a diamond. (*R.*)

மோது, கிறேன், மோதினேன், வேன், மோத, *v. n. and v. a.* To beat against with force, to strike, to smite, அறைய. 2. To cover with clouds, or as an eagle a dead body, அப்ப.

காற்றுமோதிமோதியடிக்கிறது. The wind blows violently.

அலைமோதுதல், *a. noun.* Beating as waves against the shore. 2. [*fig.*] Being unsettled; wavering.

அலைமோதும்போதேதலைமுழுகுகிறது. Bathing in the sea among beating waves; *performing our duties in the midst of impediments.*

மோதிக்கொள்ளுதல், *v. noun.* [*freq. and reflex.*] Striking against, striking one's self against.

சுவர்க்குமண்மோத, *inf.* To put earth to a mud-wall in making repairs. (*R.*)

மோதல், *v. noun.* Beating, dashing against.

மோத்தை, *s.* The ram of a long legged species of sheep, வெள்ளாட்டுக்கடா. (சது.)

கருப்பிரதமோத்தையோகாட்டும். Can a ram discern the juice of sugar-cane? (*p.*)

மோப்பம், *s.* [*sometimes* மோப்பு.] Smelling, வாசனையறிகை; [*ex* மோ, *v.*]

மோப்பம்பிடித்தல், *v. noun.* Smelling, detecting a smell, as hounds on a track.

மோப்பி, s. [Tel. మోపి.] A widow, *disrespectfully*, கைம்பெண்—as முண்டைமோப்பி.

மோயன்—மோயின், s. [*Arab.*] Establishment.

மோயன்ஜாப்தா, s. A roll of the authorised establishment.

மோரா—மோரு, s. [*Hind.*] A gold-coin, gold-mohur of 15 Rupees; also மொகரா. 2. A stool for the feet, பாதப்படி.

மோரீசு, s. The island of Mauritius.

மோர், s. Butter-milk, மச்சிகை. 2. [*improp. for* மொகர்.] A seal.

மோர்பெருக்கிச்சாப்பிடவேணும். Butter-milk must be taken diluted with water.

மோர்க்குழம்பு, s. See குழம்பு.

நீர்மோர், s. Thin watery butter-milk. See நீர்.

மோர்—மோரு, v. [*com. for* மோ.] To smell.

மோவாய், s. The beard, தாடி. (சது.)

மோவாய்க்கட்டை, s. The chin. See கட்டை.

மோவாய்க்கட்டையெலும்பு. The jaw-bone.

மோழல், s. A swine, பன்றி. (சது.)

மோழை, s. A stump, a block, மொட்டை. [See மூ, v.] 2. Stupidity, மூடம். 3. A subterranean water-course, which, if it enters wells, destroys them, கீழாறு. 4. A beast without horns, கொம்பில்லாதவிலங்கு. 5. (சது.) Rice-gruel, கஞ்சி.

ஏழையைக்கண்டால் மோழையும்பாயும். Even a beast without horns will butt at a poor person. *Prov.*

கற்றறிமோழை, s. [*vul.* கத்தரிமோழை.] One who appears ignorant though learned, as கற்றறிமூடன்.

மோழைபுறப்படல், v. noun. Gushing out as water from a subterranean stream.

மோழைப்பசு, s. A cow without horns.

மோழைமாடு, s. Any bull without horns; *commonly*, the Genus bos.

மோழையாக்க, *inf.* To stupify.

மோறை, s. [*Tel.* మోర.] The chin.

நான்உன்மோறையைப்பேர்ப்பேன். I will break your chin.

*மோனம், s. Silence, muteness. See மௌனம்.

மோனர், s. [*pl.*] Sages, silent hermits, மௌனியர். (சது.)

மோனை, s. The beginning, ஆதி.—as முகனை. 2. [*in poet.*] A resemblance between the first letter of one சீர் or foot, and the first letter of one or more of the succeeding feet, in the same line. See தொடை.—*Note.* அ corresponds with ஆ, ஐ, ஔ; இ with ஈ, எ, ஏ; உ with ஊ, ஒ, ஓ; ச with த; ஞ with ந, &c.

மௌ

மௌ. A syllabic letter composed of ம் and ஔ.

மௌஜே, s. [*Arab.*] A town, a village.

மௌஜேவாரி–மௌஜேவார், s. Detailed account of towns.

*மௌஞ்சி, s. The girdle, or waist-cord of a brahman, made of three strings of munja grass, Saccharum spontaneum, நாணற்புல்லரைஞாண். W. p. 676. MOUNJEE.

*மௌட்டியம், s. Fanaticism; ignorance, folly, destitution of spiritual wisdom, மூடத்துவம். W. p. 676. MOUD'HYA.

மௌண்டிடரம், s. A Upanishad. See உபநிடதம்.

*மௌத்திகம், s. A pearl, as முத்து. [*Sa. Mouktika.*]

*மௌர்வி, s. A bow-string, வின்ஞாண். W. p. 678 MOURVVEE.

*மௌலி, s. A lock of hair on the head of men, as குடுமி. 2. A tuft of hair braided round the head, as மயிர்முடி. 3. A crown; a diadem, முடி. 4. The head, தலை. W. p. 676. MOULI. 5. (சது.) Palm-tree-sap. toddy, கள்.

மௌல்வி, s. [*Arab. com.* மோல்வி.] A learned Mohammedan teacher, *Moulvî.*

மௌவல், s. The wild Jasmine, வனமல்லிகை. (சது.)

*மௌனம், s. [*also* மோனம்.] Silence, taciturnity, muteness, பேசாமை. [*Sa. Mouna.*] —*For examples, see* மவுனம்.

*மௌனியர், s. [*sing.* மௌனி.] Hermits, silent devotees, மோனர். [*Sa. Mounee.*]

ய்

ய். The eleventh consonant and first medial, இடையினம்.

ய. A syllabic letter compounded of ய் and அ. It is a numeral, probably a corruption of ௰ the initial of Dasan=ten; a numeral before it is in the place of tens—thus ௩௰, is thirty.—Derivatives from Sa. roots generally have இ prefixed, or ய, changed to எ; as a middle letter for the Sa. ஜ.

யகரஉடம்படுமெய், s. [*in gram.*] The consonant ய் as a connecting letter.

*யக்கர், s. A class of demigods, as இயக்கர். W. p. 677. YAKSHA.

*யக்கியம், s. A sacrifice, யாகம். See எக்கியம்.

*யசசு, s. Glory, fame, praise, புகழ். W. p. 683. YASAS.

*யசமானன், s. Offerer of a sacrifice. 2. A master. See எசமானன், இயமானன்.

*யசனம், s. A sacrifice, யாகம். (சது.) —In *Wils.* offering sacrifices.

*யசுரு—யசுசு, s. The second Veda, Yajur, யசுரு having வேதம், always subjoined. See இயசுரு.

*யட்சிணி, s. A demoness. See எட்சிணி.

*யட்டி, s. A staff, a stick, ஊன்றுகோல். 2. A garland of pearls, முத்துத்தாழ்வடம். W. p. 683. YASHTI.

*யதா, [*Sans. prefix, adj. or adv. com.* எதா.] As, according to; proper, fit, right. W. p. 679. YATHA.

யதாஸ்து. Be it so.

யதாஸ்தானம், s. The proper place.

யதாப்பிரகாரம், s. In like manner.

யதார்த்தம், s. Truth, correctness. See எதார்த்தம்.

*யதி, s. A pause in music. See தாளப்பிரமாணம். 2. A sage, an anchoret, முனி. W. p. 679. YATI. 3. Alliteration, similarity of sound, as மோனை.

*யது, s. The name of a king, son of the fifth of the lunar line, and head of the Yadâva race, இராசன். W. p. 680. YADU.

*யதேஷ்டம், s. [*com.* எதேஷ்டம்.] As much as one wishes, satisfaction. W. p. 680. YATHESHD'A. 2. Profuseness, மிகுதி.

அதுஎதேஷ்டமாய்க்கிடக்கிறது. The article is often exposed for sale.

*யத்தனம்-யத்தினம், s. Preparation, &c. See இயத்தினம், எத்தனம்.

*யந்திரம், s. Machine, engine. See இயந்திரம் or எந்திரம்.

யந்திரசாஸ்திரம், s. Mechanics.

யந்திரஸ்தாபனம், s. Making figures upon a flat piece of metal to be used in *puja*, பூசிக்குஞ்சக்கரம்.

யந்திரஊர்தி, s. A conveyance artificially conducted.

*யமகண்டம், s. [*also* எமகண்டம்.] A composition of the poet காளமேகம், each stanza containing a description of two different things, ஓர்செய்யுள்.

*யமகம், s. A species of alliteration, the repetition of words or syllables of like sound but varying in sense, in the different parts of a stanza, as at the beginning, middle or end of each hemistich. Ten varieties are enumerated. W. p. 681. YAMAKA. One is here given.—

வடமலையப்பனகஞ்சேர்ந்தவனிடைமங்கைகொங்கை
வடமலையப்பனரும் போகந்துய்த்தவன்மாயன் கண்ணன்
வடமலையப்பனருள்போற்றியை வர்மயக்குகர
வடமலையப்பனிருநாமநாவின்மலக்குவமே—thus paraphrased, ஆலிலையிலும் திருப்பாற்கடலிலும்சேஷச

யனத்திலும்சேர்ந்தவன்பின்னைப்பிராட்டியின்கொங்கையில் தாழ் வடம்மலையப்பன்னரும்போகந் துய்த்தவன்மாயன் கண்ணனாகிய வடமலையப்பனுடைய அருளைப்பிரார்த்தித்து ஐம்புலன்களும்மயக்குகின்றகாலம்அலையப்பன்னிரண்டு நாமங்களையும்நாவினால்துதி செய்வோமாக.

*யமதக்கினி, *s.* A celebrated Rishi. See சமதக்கினி. W. p. 681. YAMADAGNI.

*யமம், *s.* A work on law. See தருமநூல். 2. One of the postures of a yogi. See இயமம்.

*யமளம், *s.* A couple, a brace, a pair, இரட்டை. W. p. 681. YAMALA.

*யமன், *s.* Yama, the god of death. See இயமன் or எமன்.

யமபகினி, *s.* The river Jumna as the sister of Yama, யமுனாநதி.

யமரதம், *s.* Male buffalo, as the conveyance of Yama, எருமைக்கடா.

*யமி, *s.* A sage; one self-restrained, முனிவன். W. p. 681. YAMIN.

*யமுனை, *s.* The river Jumna, rising near the Himalaya and entering the Ganges at Allahabad, காளிந்திநதி. W. p. 681. YAMUNA.

*யயாதி, *s.* The fifth of the lunar race, இராசன். W. p. 681. YAYATI.

*யவட்சாரம், *s.* Nitre, nitrate of potassa, salt-petre. See எவட்சாரம்.—*Note.* According to some commentators it is said to be prepared from burnt barley.

*யவம், *s.* Barley, வாற்கோதுமை. W. p. 682. YAVA.

*யவனம், *s.* A Mohammedan country, perhaps Bactria, or possibly Affghanistan. By late Hindu writers it is applied to Arabia. See தேசம். W. p. 682. YAVANA.

யவனர், *s.* [*pl.*] Moormen, artificers, sculptors. See இயவனர்.—According to Wilson it is applied to both the Mohammedan and European invaders of India, and often used for any barbarous race.

*யவ்வனம், *s.* [*also* யௌவனம்.] Adolescence. See எவ்வனம்.

யா

யா. A compound letter of ய் and ஆ.

யா, *s.* An interrogative letter as in யாவன், what man? 2. An interrogative in the neuter plural, அஃறிணைப்பன்மைவினா. 3. Doubt, suspicion, discrepancy, சந்தேகம். 4. An expletive, அசைச்சொல், as யாபன்னிருவரகத்தியனார்க்குமாணாக்கர், Agastya had twelve pupils. 5. A tree, ஓர்மரம்.

*யாகம், *s.* A sacrifice, an oblation, வேள்வி. W. p. 683. YAGA.

யாகம், ௫. Five oblations. See பஞ்சமகாயக்கியம்.

யாகம், உக. Twenty-one sacrifices: 1. அக்கினிஷ்டோமம்; 2. அத்தியக்கினிஷ்டோமம்; 3. உத்தியம்; 4. சோடசி; 5. வாசபேயம்; 6. அதிராத்திரம்; 7. அப்தோரியாமம்; 8. அக்கினியாதேயம்; 9. அக்கினிகோத்திரம்; 10. தரிசபூர்ணமாசம்; 11. சாதுர்மாசியம்; 12. நிருடபசுபந்தம்; 13. ஆக்கிரயணம்; 14. சௌத்திராமணி; 15. அட்டகை; 16. பார்வணம்; 17. சிராத்தம்; 18. சிராவணி; 19. ஆக்கிரகாயணி; 20. சைத்திரி; 21. ஆசுவயுசி.

யாகசமித்து, *s.* Wood and other combustibles for a sacrifice, as சமித்து.

யாகசாலை, *s.* A sacrificial hall.

யாகசேனன், *s.* *Panchala* the father of *Drobad'hi*, பாஞ்சாலன்.

யாகஞ்செய்ய, *inf.* To make an oblation.

யாகத்திரவியம், *s.* The ingredients burnt with a sacrifice, such as ghee, milk, cow's urine, cow-dung, mango-leaves, sandal-wood, &c.

யாகஸ்தம்பம், *s.* [*also* யூபஸ்தம்பம்.] A pest to which a goat, brought for sacrifice, is tied.

யாகபதி, *s.* One of the fifteen incarnations of Vishnu. See திருமாலவதாரம்.

யாகபோசனர், *s.* [*pl.*] Celestials, வானோர். (சது.)

யா, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To bind, கட்ட. (சது.) 2. To shut the mouths of others by strong arguments.

யாத்தல், *v. noun.* Binding.

*யாக்கியவற்கியம், *s.* A Upanishad. See உபநிடதம். 2. As யாஞ்ஞவற்கியம்.

யாக்கை, *s.* The body, as consisting of fibres and ligaments, as ஆக்கை. 2. Any thing bound or tied, a frame, a band, a tie, a system, கட்டு; [*ex* யா, *v.*] (*p.*)

யாக்கைக்குறுகுற்றம் – யாக்கைக்குறுபதினெண்குற்றம், *s.* The eighteen properties of the body: 1. பசி, hunger; 2. நீர்வேட்டல், thirst; 3. பயம், fear; 4. வெகுளி, anger; 5. உவகை, joy; 6. வேண்டல், desire; 7. நினைப்பு, thought; 8. உறக்கம், sleep; 9. நரை, hoariness; 10. நோய், pain; 11. மரணம், death; 12. பிறப்பு, birth; 13. மதம், passion; 14. இன்பம், pleasure; 15. அதிசயம், admiration; 16. வியர்த்தல், sweating; 17. கேதம், affliction; 18. கையறவு, incapacity for work.

யாங்கணம்-யாங்கண், [*interrogative.*] At what place? as யாங்ஙனம். (*p.*)

யாங்கு, [*interrog.*] Where? எங்கு.

யாங்ஙனம், [*interrog.*] Where; what place, as எங்ஙனம். 2. How, in what manner, of what nature? எப்படி. (*p.*)

*யாசகம், *s.* Begging; mendicity, இரப்பு. W. p. 683. YACHAKA.

யாசகம்பண்ண, *inf.* To practise begging, to seek alms.

யாசகர், *s.* [*sing.* யாசகன்.] Beggars, mendicants, இரப்போர். (சது.)

*யாசனம், *s.* The direction of a sacrifice, யாகஞ்செய்விக்கை. W. p. 683. YAJANA.

யாசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To beg, to ask alms, to solicit, இரக்க; [*ex Sa. Yacha.*] (சது.)

*யாஞ்ஞவற்கியம், *s.* A work on Hindu law called after its author, *Yagnavalkya.* See தருமநூல்.

யாடு, *s.* A goat, as ஆடு. (*p.*)

யாணர், *s.* Beauty, அழகு. 2. Carpenters, stone-cutters; architects, தச்சர். 3. A good, நன்மை. 4. Novelty, புதுமை. 5. Fertility, fruitfulness, prosperity, வளமை.

யாண்டு, *s.* Time, a year, காலம். 2. [*interrog.*] Where, in what place? எங்கு. (சது.) 3. When? எப்பொழுது. (நீதிநெறி.)

யாண்டும். Always. 2. Under all circumstances. 3. In all places. (*p.*)

யாண்டை, [*interrog.*] What place?—as யாங்கண். (சது.)

*யாதம், *s.* An elephant-goad, &c. See இயாதம். (*p.*)

*யாதனம், *s.* A raft, தெப்பம். 2. A boat, a ship, மரக்கலம். (சது.)

*யாதனை, *s.* [*com.* வாதனை.] Pain, anguish, agony, torment, துன்பம். 2. Punishment inflicted by Yama, or his ministers, இயமவாதனை. W. p. 684. YATANA. 3. The never ceasing pains of hell, நரகயாதனை.

யாதனாசரீரம். A body capable of unending suffering in hell; see சரீரத்திரயம்.

யாதாஸ்து—யாதஸ்து, *s.* [*Arab.*] A written memorandum, ஞாபகப்பத்திரம்.

யாதி, *s.* [*Hind.*] Memory, ஞாபகம். 2. Meditation, thought, சிந்தனை.

யாது, [*inter. pron.*] What, which?—an expression of doubt, *commonly* எது. 2. *s.* Palm-tree-sap, fermented, கள். (சது.) 3. [*com. for* யாதி.] Memory.

எனக்குயாதில்லை. I do not remember.

யாதாமொருவன் — யாதொருவன். Any body, one or the other.

யாதிற்குங்கடை. The last of all. (*p.*)

யாதெனில். If it be asked what; that is to say.

யாதொருபொருள் — யாதாகிலுமொன்று — யாதொன்று. Any thing.

யாதோ. There is doubt.

*யாது—யாதுதானர், *s.* A kind of *Rakshasa*; *in Wils,* a goblin or a demon. W. p. 684. YATU, YATUD'HANA.

*யாத்திரை, *s.* Pilgrimage to sacred places, தேவஸ்தலத்திற்குச்செல்லல். 2. Journeying, especially by sea, கப்பற்பயணம். (*c.*) 3. A festival with an idol procession, திருவிழா. W. p. 684. YATRA.

தேசயாத்திரைக்குப்போகிறது. Seeking for a livelihood. (*R.*)

கப்பல்யாத்திரை—சமுத்திரயாத்திரை. A sea-voyage.

கரையாத்திரை. A land-journey.

காசியாத்திரை. A pilgrimage to Benares.

யாத்திராகமம், *s.* [*Chris. usage.*] Exodus.

யாத்திரைக்காவி, *s.* Cloth dyed with red ochre, worn by pilgrims.

யாத்திரைபோக—யாத்திரைபண்ண, *inf.* To go on a pilgrimage. 2. To travel, or make a voyage.

*யாபாரம், *s.* Trade. See வியாபாரம்.

யாப்பண்டம், *s.* [*com. for* வயாப்பண்டம்.] Things longed for by a pregnant woman. See வயா.

யாப்பு, *s.* A bandage, a tie, கட்டு. 2. Poetry, செய்யுள். 3. [*fig.*] Prosody, or binding words together, செய்யுளிலக்கணம். [*ex* யா, *v.*] (*p.*)

யாப்பதிகாரம்—யாப்பிலக்கணம், *s.* That part of grammar which treats of versification, Prosody.

யாப்பருங்கலம், *s.* A treatise on Prosody, ஓர்யாப்புநூல்; [*ex* அருங்கலம்.]

*யாமம், *s.* Midnight, the middle watch of the night. 2. A watch of three hours. 3. Night-time. See சாமம். W. p. 684. Yama. 4. The south, தெற்கு; [*ex* யமன்.] See திக்குப்பாலகர். 5. A drum beaten with a stick and not the hands, இடக்கைமேளம். (சது.)

நான்யாமத்திலேவருவேன். I shall come at midnight.

யாமவதி, *s.* The night, இராத்திரி. [*Sa. Yamavati.*]

*யாமளம், *s.* Two, a couple, இரட்டை, as யமளம். W. p. 684. Yamala. 2. Green color, பச்சை.

யாமளை, *s.* Kali, காளி. (சது.)

*யாமிகன், *s.* One spying out a city in disguise, *incognito*, நகரிசோதனைக்காரன்; [*ex Sa. Yami*, night.] (சது.)

*யாமியம், *s.* The south, தெற்கு. W. p. 685. Yamya. 2. [*for* யமம்.] A work on Hindu law. (*R.*)

*யாமினி, *s.* The night, இராத்திரி; [*Sa. Yamninee.*]

*யாமினியம், *s.* The south, தெற்கு; [*ex Sa. Yamini.*] (சது.)

*யாமுனாசாரியர், *s.* A Vaishnuva devotee.

யாம், [*pers. pron. sing.* யான்; *com.* நாம்.] We. (*p.*)

யாரி, *s.* A door, கதவு. (சது.) 2. [*prov.*] An adversary, a rival, as எதிரி.

யார், [*inter. pron.*] Who or which, as ஆர்.

யார், *s.* [*prov.*] A kind of sorrel, as நத்தைச்சூரி.

யாலம், *s.* A tree, black-wood, as ஆச்சா.

*யாவச்சீவம், *s.* All that belongs to this life, சீவனுக்குரியசகலமும். [*ex Sa. Yavat*, as long as, *et* சீவம்.] 2. [*fig.*] All things, and secrets. W. p. 685. Yavajjeeva.

அவனுடையயாவச்சீவமும் அறிந்திருக்கிறேன்......I know all about him.

யாவத்தீவு—யாவம், *s.* The island of Java.

*யாவத்தும், *adv.* As much as, as many, as far as, அவ்வளவும். W. p. 585. Yavat.

யாவன், [*inter. pron.*] Who, or which man? as எவன்; [*ex* யா *et* அன்.]

யாவர், [*pl.*] Who?

யாவரும். All people.

யாவரையும், [*accus. of* யாவர் *with* உம்.] All people.

யாவும். All, the whole, எல்லாம்.

யாவை, [*inter. neut. pl.*] What or which things?

யாவையும். All things, எவையும்.

யாழ, [*an expletive.*] A poetic affix to the second pers. sing. as நீபேசெய்விளைமருக்கிற் செலவயர்ந்தியாழநின்னைகபுனைவில்லிஞாணிபே. By using the string of the ornamented bow, you will complete the business, முன்னிலையசைச்சொல்.

யாழல், *s.* The white ant, termites, கறையான். (சது.)

யாழ், *s.* A musical instrument, the lute, வீணை. 2. The first lunar mansion, as அச்சுவினி. 3. The sixth lunar mansion, திருவாதிரை. 4. Gemini in the Zodiac, மிதுனவிராசி. (சது.)

யாழோர்கூட்டம், *s.* Marriage by mutual consent, *synonymous with* காந்தருவமணம்.

யாழ்த்திறம், *s.* Different lutes, peculiar to the different soils, as குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை, முல்லை.

யாழ்நரம்பு, *s.* The strings of musical instruments.

யாழ்ப்பாணம், *s.* Jaffna.

யாழ்ப்பாணநாயனார், *s.* A blind minstrel of the Chola country, who being favored by the Singalese king, obtained possession of Jaffna, then uninhabited, and introduced there a colony of Tamil people.

யாழ்ப்பாணர், *s.* The people of Jaffna. 2. Players on the lute, யாழ்வாசிப்போர். (*p.*)

யாழ்வகை, *s.* The different species of lute. They are four. 1. பேரியாழ். 2. சகோடயாழ். 3. மகரயாழ். 4. செங்கோட்டியாழ், which see.

யாழ்வல்லோர், *s.* [*pl.*] Heavenly choristers, கந்தருவர். 2. Skilful players on the lute, வீணைவல்லோர்.

யாழ்வாசிக்க, *inf.* To play upon the lute.

யாளி, *s.* The lion, சிங்கம். 2. Leo, the Zodiacal sign, சிங்கவிராசி. 3. [*also* யாளியானை.] A fabulous animal like a lion with an elephant's proboscis; possibly the mammoth. See ஆளி. 4. A small vessel for casting water to wet the sail of a dhoney, or for lading out bilge water, இறைபட்டை.

யாளியூர்தி, *s.* Durga as lion-borne, காளி.

யாறு, *s.* A river. See ஆறு. (சது.)

*யானம், *s.* Any carriage or vehicle for conveyance, வாகனம். 2. A palankeen, சிவிகை. 3. A vessel, or ship, மரக்கலம். W. p. 684. Yana. 4. Palm-tree-sap, fermented, கள். (சது.)

யானை, *s.* An elephant. 2. The sign of Kuvêra, as regent of the north. 3. The Pepul tree. See ஆனை.

யானைகட்டக்கயிறுதானேஎடுத்துக்கொடுக்கும். The elephant gives the rope to tie itself; *said of those who bring trouble on their own heads. Prov.*

யானைக்கச்சை, *s.* An elephant's rope, or the string around his neck; also his girth.

யானைச்சார்வு, *s.* A place of rest for elephants, a stall for them, யானைதுயிலிடம். (சது.)

யானைத்தடிப்பு—யானைப்பிச்சான், *s.* A plant, Cissus acida.

யானைப்படுகுழி, *s.* A pit-fall for catching elephants.

யானைப்பெருங்காயம், *s.* See பெருங்காயம்.

யானைமாவுத்தன், *s.* An elephant-driver, as மாவுத்தன்.

யானைமீன், *s.* A very large fish so called. (*R.*)

யானைமீனைவிழுங்குமீன், *s.* A fish which swallows the யானைமீன்.

யானைமுகவற்கிளையோன், *s.* An epithet of Vîrabhadra, வீரபத்திரன். (சது.)

யானையீருரி, *s.* See ஈர், *v. a.*

யானையுரித்தோன், *appel. n.* An epithet of Siva, as having skinned an elephant. (சது.)

யானைவிச்சுளி, *s.* A kind of eagle, the ospray, ஓர்கழுகு. (*R.*)

யானைவிரிடல், *v. noun.* The trumpeting of an elephant.

யு

யு. A syllabic letter compounded of ய் and உ.

*யுகந்தரம், *s.* One of the fifty-six countries. See தேசம். 2. See under யுகம்.

யுகம், *s.* The earth, as உகம். (சது.)

*யுகம், *s.* An age of the world as உகம்; any one of the four yugas, in which sense it seems to be a primitive word, found in most of the ancient languages—in Heb. *Olim*; in Gr. *Aion*; in Lat. *Ævum*—like தேவம், which resembles the Greek Theos and Latin Deus. 2. A yoke, *commonly* நுகம். 3. A couple, a pair. See உகம். W. p. 686. Yuga.

யுகம், ச. The four Yugas, கிரேதாயுகம் or கிருதயுகம்; 2. திரேதாயுகம்; 3. துவாபரயுகம்; 4. கலியுகம். For particulars see the words.

யுகதருமம், *s.* The actions and characteristics of a particular Yuga. 2. The conduct prescribed in the *shastras* for any Yuga, and the events appropriate to it.

யுகந்தரம், *s.* The pole or shaft of a coach, plough, &c., which supports the yoke, ஏர்க்கால்; [*ex* தரம், holding.] (*Sa. Yugand'hara.*)

யுகபேதம், *s.* The difference of one age from another. 2. Any strange or anomalous occurrence supposed to result from the vices of the age.

யுகப்பிரளயம்-யுகாந்தப்பிரளயம், *s.* The final deluge.

யுகாதி, *s.* The beginning of a year. 2. An epithet of Argha, அருகன்.

யுகாதிபண்டிகை, *s.* A feast at the beginning of a year. (*Beschi.*)

யுகாந்தம், *s.* The end of the world, &c.—For similar compounds, see உகாந்தம்.

*யுகளம்—யுகளி, *s.* A pair, a brace, இணை. W. p. 686. Yugala.

*யுக்தம், *s.* (*St.*) Conclusion, as யுத்தம்.

*யுத்தநாதி, *s.* Precession of equinoxes at a given time.

யுத்தநாதிவாக்கியம், *s.* Table of the amount of precession for a given time.

*யுத்தம், *s.* Fitness, propriety, உசிதம். 2. Combination, closeness, union, சேர்மானம். 3. Any thing proved by inference or argument; equity, நியாயம். 4. Being engaged in or intent upon, as in நியுத்தன். W. p. 685. Yukta. 5. [*vul.* உய்த்தம்.] War, battle, a fight, போர். (*Sa. Yudd'ha.*)

அவருடையயுத்தப்படிசெய். Follow his advice.

உம்முடையயுத்தமென்ன. What is your opinion?

யுத்தங்கலந்தது. The battle was joined.

யுத்தத்தொடுக்கிறார்கள். They raise a war.

தர்மயுத்தம், *s.* A lawful war.

யுத்தகளம், *s.* Battle-field.

யுத்தசன்னத்தன், *s.* One prepared for battle, as சன்னத்தன். See சன்னத்தம்.

யுத்தசன்னியாசம், *s.* Renunciation of military life by vow.

யுத்தஞ்செய்ய—யுத்தம்பண்ண, *inf.* To war, to fight, to make war.

யுத்தமுகம், *s.* [*also* முனைமுகம், *lit. the face of battle.*] The middle or thickest of a fight; the front of the army.

யுத்தாங்கம், *s.* Divisions of an army in war; [*ex* அங்கம், part.]

*யுத்தி, *s.* Reasoning, argument, inference, யோசனை. 2. Counsel, advice; a specification of circumstances, or written evidence; the supplying of an ellipsis, a mystical expression; union, connexion, propriety, fitness, புத்தி. W. p. 685. Yukti. 3. An expedient, artifice, உபாயம். 4. Deliberation, ஆராய்வு. 5. Attention, discrimination, விவேகம். 6. Deduction from argument, reason, யூகை. See உத்தி.

யுத்திக்காரன், *s.* A man with keen intellect; a man of ready apprehension.

யுத்திசித்தி, *s.* Logical demonstration, logical deduction, rational conclusion.

யுத்திசொல்ல, *inf.* To give counsel.

யுத்திநியாயம், *s.* Argumentation.

யுத்தியாய்ப்பார்க்க, *inf.* To consider, to observe with attention.

யுத்தியுத்தர்—உத்தியுத்தர், *s.* Logicians, lawyers, தார்க்கிகர். (நி. 435. 437.)

யுபம், *s.* Means, practice, skill, art, சாமர்த்தியம். (*R.*)

யுபமாய்ச்செய்கிறது. Doing a thing skilfully.

*யுவ—யுவவருஷம், *s.* The ninth year of the Hindu cycle, as A. D. 1875.

*யுவராசன், *s.* A young prince, especially the heir apparent. See இளவரசு. W. p. 687. Yuvarja.

*யுவன், *s.* [*fem.* யுவதி.] A young man between sixteen and thirty years of age. See உவா. W. p. 687. Yuvan.

யூ

யூ. A syllabic letter compounded of ய் and ஊ.

*யூகம், *s.* Reasoning, disputation, logic, தருக்கம். 2. Knowledge of secret arts, உட்பொருளுணர்தல். 3. Military array, படைவகுப்பு. 4. Battle, படை; [*from Sa. Ooha; or by aphæresis, Vyooka.* W. p. 821.] 5. A black monkey, கருங்குரங்கு. 6. A female monkey, பெண்குரங்கு. 7. A large black ape, as முசு. (சது.) Compare ஊகம்.

யூகி, *s.* A reasoning man, a wise, ingenious person, விவேகி. W. p. 167. Oohin.

யூகிமந்திரி, *s.* A wise minister, as மதிமந்திரி.

யூகி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To meditate, scrutinize, consider attentively. See ஊகி. [*from Sa. Ooha*, to reason.]

யூகிபாஷை—யூகிப்பயில், *s.* A kind of secret language in occult characters.

*யூகை, *s.* Learning, erudition, கல்வி. 2. [*fig.*] An erudite person; [*ex* யூகம்.]

*யூதம், *s.* A herd of elephants, யானைக்கூட்டம். (பு. 52.) 2. A multitude of birds, beasts, &c., விலங்கினக்கூட்டம். W. p. 687. Yoot'ha.

யூதநாதன்—யூதபதி—யூதபம், *s.* The chief elephant, or leader in a wild herd, யானைக்கூட்டத்துக்குத்தலையானை.

யூதர், *s.* [*Chris. usage.*] Jews, இசரேலியர்.

*யூபம், *s.* A sacrificial post to which the victim for sacrifice is bound, யாகஸ்தம்பம். [*also* யூபஸ்தம்பம்.] W. p. 687. Yoopa. 2. A head and trunk deprived of members, உடற்குறை. 3. A sacrifice, யாகம். 4. Battle-array, as யூகம், படைவகுப்பு. (சது.)

யூமியா, *s.* [*Arab.*] Allowance or pension, calculated originally by the day.

யோ

யோ. A syllabic letter compounded of ய் and ஓ.

*யோகம், *s.* Religious, and abstract meditation, contemplation; keeping the body in a fixed posture, நிஷ்டை. 2. Luck, fortune, a lucky conjunction, அதிஷ்டம். 3. Civility, urbanity, உபசாரம். 4. A means, an expedient, உபாயம். 5. Height, excellency, உயர்ச்சி. 6. Effort, perseverance, உற்சாகம். 7. Union, junction—especially of stars and planets, கூடல். 8. An astrological element of an almanac. See பஞ்சாங்கம். 9. An assembly, கூட்டம். W. p. 688. Yoga. 10. [*by aphæresis of* வியோகம்.] Death, சாவு.

அவனுக்குயோகமடிக்கிறது. He has good luck.

எனக்கதிலேயோகமில்லை.......I am not fortunate in that.

யோகம், அ, or அஷ்டாங்கயோகம். The eight qualities of a yogi; 1. இயமம், restraint of the appetites; 2. நியமம், voluntary religious observances; 3. ஆசனம், position; 4. பிராணாயாமம், breathing in a peculiar way; 5. பிரத்தியாகாரம், restraining the senses; 6. தாரணை, fixing the mind on a member of the body; 7. தியானம், silent meditation. 8. சமாதி, vision of one's self—which see in their places.

யோகம், உஎ. [*in astrology.*] Twenty-seven sections of the lunar path or ecliptic, depending upon the sum of the longitudes of the Sun and moon—opp. to Tithi which depends upon their difference. They are: 1. விஷ்கம்பம்; 2. பிரீதி; 3. ஆயுஷ்மான்; 4. சௌபாக்கியம்; 5. சோபனம்; 6. அதிகண்டம்; 7. சுகர்மம்; 8 திருதி; 9. சூலம்; 10. கண்டம்; 11. விருத்தி; 12. துருவம்; 13. வியாகாதம்; 14. அரிஷணம்; 15. வச்சிரம்; 16. சித்தி; 17. வியதிபாதம்; 18. வரியான்; 19. பரிகம்; 20. சிவம்; 21. சித்தம்; 22. சாத்தியம்; 23. சுபம்; 24. சுப்பிரம்; 25. பிரமம்; 26. ஐந்திரம்; 27. வைதிருதி.

யோகக்காட்சி, *s.* The spiritual perception of the yogi. See காட்சி.

யோகக்காரன்—யோகமுள்ளவன்—யோகவான், *s.* A fortunate man.

யோகசமாதி, *s.* As சமாதி. See யோகம், அ.

யோகசம், *s.* One of the twenty-eight Agamas of the Saivas. See சிவாகமம்.

யோகசாதனை, *s.* The practice of *yoga* discipline, and exercise.

யோகசாஸ்திரம்—யோகநூல், *s.* The science of abstract devotion, including the postures. See கலைஞானம்.

யோகசாரணம், *s.* A system of religion. See சமயம். III.

யோகஞ்சாதித்தல், *v. noun.* Practising *yoga* devotions, and contemplations.

யோகட்சேமம்—யோகக்ஷேமம், *s.* Welfare, well-being; national prosperity, the

good government of a state or agents in maintaining it—as king, minister, priest. 2. News, intelligence, செய்தி.

யோகதண்டம், *s.* A staff used by *yogis* for supporting the neck to keep their head erect.

யோகதிட்டை, *s.* Instruction by example. See திட்டை.

யோகத்திலிருக்க—யோகத்தில்நிற்க, *inf.* To remain in profound meditation.

யோகநித்திரை, *s.* Conscious or contemplative sleep—as an attribute of the gods, especially of Vishnu. See அறிதுயில்.

யோகநிலை, *s.* Religious and abstract, meditation—as யோகம். In the Tantras it is thus described, ஐம்பொறியடக்கி, மூலவாயுவையெழுப்பி, இடைபிங்கலை வழியை யிறுகவடைத்து, சுழிமுனைவழியைத் திறந்து, பிரணவநாதத்தொடுபோய், ஐந்தெழுத்தும் பிரணவரூபமாந்தன்மை கண்டுசிதாகாசத்திற்கலந்திருக்கை, by restraining the external senses; driving upwards the air in the entrails; stopping the breath which should come through the nostrils; and opening the porous passage in the head, [the devotee] will hear a divine sound, see the five holy characters, in the shape of a mountain; and enter into union with the omnipresent God.

யோகபதம், *s.* A complex word, resolvable into simpler elements,—oppos. to ரூடபதம், a simple word, காரணச்சொல்.

யோகபரீட்சை — யோகாப்பியாசம், *s.* Experience or practice of *yoga* meditation.

யோகப்பட்டை, *s.* A thick and broad tape used by *Yogis.* See பட்டை.

யோகப்பிரத்தியட்சம், *s.* One of the elementary principles of reasoning, or logic, as யோகக்காட்சி.

யோகமார்க்கம், *s.* *Yoga* system of religion.

யோகரூடி, *s.* Arbitrary use of a word expressing quality as a substantive, thus அந்தணர், the good natured, is made an epithet of brahmans, காரணஇடுகுறி.

யோகர், *s.* [*pl.*] Sages among the Jainas or Buddhists, சமணமுனிவர். 2. Anchorets, or ascetics, முனிவர். (சது.)

யோகவேஷ்டி, *s.* A certain garment or dress, worn by a *yogi* or ascetic.

யோகாக்கினி, *s.* A heap of fire. 2. Excessive heat, caused in the eyes of a *Yogi* by continued meditation.

யோகாசனம், *s.* A *Yogi*-posture in meditation. See ஆசனம்.

யோகாசாரியன், *s.* A teacher of the *Yoga* philosophy.

·யோகாதிகாரம், *s.* Ability to undertake the practice of the *yoga* philosophy; power for abstract meditation. (சி. 21.)

யோகாதிசயம், *s.* Condition, state, health.

ஒருவனுடையயோகாதிசயங்கேட்கிறது. Inquiring after one's health.

யோகார்த்தம், *s.* A word of various meanings and significations, பலகருத்துடைய ஒருசொல்; [*ex* அர்த்தம்.]

யோகி, *s.* A *Yogi,* a contemplative sage, நிஷ்டைசெய்வோன். (*El.* 68.) 2. An ascetic, முனிவன். 3. Siva, சிவன். 4. Argha, அருகன். 5. Ayanar, ஐயனார். (சது.) 6. [*in anat.*] Abductor muscle.

யோகி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To meditate deeply, to contemplate mentally, ஆழ்ந்துநினைக்க; [*ex* யோகம்.]

யோகித்துக்கண்டுபிடிக்கிறது. Inventing.

யோகித்துப்பார்க்கிறான். He is reflecting.

யோகிப்பு, *v. noun.* Meditation, thought, consideration, சிந்திப்பு.

*யோகினி, *s.* A female fiend, or spirit, attendant on Durga, காளியேவல்செய்பவள். W. p. 688. Yogin. 2. Kali, காளி. (சது.)

யோகினிதிசை, *s.* The influence of a sevenfold class of demi-goddesses, as calculated in the horoscope.

*யோகு, *s.* Meditation, as யோகம், நிஷ்டை.

*யோக்கியதை, *s.* Propriety, honesty, integrity, யோக்கியம். W. p. 689. Yogyata.

யோக்கியதாபத்திரிகை, *s.* A certificate of good character.

*யோக்கியம், *s.* Fitness, suitableness, worthiness, eligibility, qualification, தகுதி. 2. Goodness, desert, worthy conduct, conformity to rule; purity; holiness, as of the Vedas, which may not be learnt by unworthy persons, புனிதம். W. p. 689. Yogya. 5. [*in cant.*] Hazard, danger, fate, மோசம்.

இதைச்செய்வதுஉனக்குயோக்கியமல்ல. It does not become you to do this.

உழவுக்குயோக்கியமானமாடு. An ox fit for ploughing.

இராசயோக்கியம். Becoming for a king.

பிராமணயோக்கியம். Suitable to a brahman.

பிராணயோக்கியம். Risk of life.

பளாயோக்கியம். Very good! (*ironical.*)

யோக்கியத்துக்குக்கொடுக்க, *inf.* To advance money, to an honest man upon his character. 2. (*R.*) To risk one's own money in a ship, &c.

யோக்கியபாத்திரம், *s.* A decent vessel. 2. [*met.*] A respectable person.

யோக்கியப்பட்டவன்—யோக்கியமுள்ளவன்—யோக்கியவான், *appel. n.* An honest man.

யோக்கியர், *s.* [*sing.* யோக்கியன்.] Worthy persons. 2. Capable heads.

அதற்குஅவன்யோக்கியனல்ல. He is not a proper person for the work.

யோக்கியாசனம், *s.* A seat or place suitable to one's dignity, யோக்கியமானஇடம்.

யோக்கியாதி, *s.* [*in Hindu astron.*] A table giving the equation of the sun's motion, at the rate of a degree for a day, to his true motion for every day in the year.

யோக்கியாயோக்கியம், *s.* Worthiness and unworthiness; [*ex* அயோக்கியம்.]

யோக்கியாயோக்கியந்தெரிந்துகொள்ளவேண்டும். One must discriminate worthiness and unworthiness.

*யோசனை, *s.* A measure of distance reckoned from 4 to 10 நாழிகை, *usually* about 13 miles. *Wils.* about 9 miles. (*Sa. Yojana.*) 2. Thought, opinion, sentiment, discretion, prudence, wisdom, skill, device, scheme, contrivance, ஆலோசனை. 3. A sound, ஓசை. (சது.) 4. [*in astron.*] The 5059th part of a great circle, or on the equator, about 4¼ geographical miles.

உம்முடையயோசனையென்ன. What is your opinion?

நான்அங்கேபோகயோசனையாயிருக்கிறேன். I intend to go there.

யோசனைகந்தி, *s.* An epithet of *Satyavati,* the mother of *Vyasa,* வியாதர்தாய்.

யோசனைக்காரன்—யோசனையுள்ளவன், *s.* A prudent man.

யோசனைசாலி, *s.* A politic man.

யோசனைசொல்ல, *inf.* To give advice.

யோசனைபண்ண, *inf.* To consider, to reflect.

யோசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To deliberate, to consider, to ponder, ஆராய. (*c.*)

உன்னைக்குறித்துயோசிப்பேன். I will consider your case.

*யோசியம், *s.* [*prov. for* சோசியம்.] Astrology, prognostication, divination.

*யோதைகள், *s.* Learned men, sages, men of extraordinary qualifications, அறிவுடையோர். (*p.*)

*யோனி, *s.* Cause, origin, காரணம். 2. The vulva, இராசியம். 3. Birth, பிறப்பு—as கும்பயோனி, one born from a pot, a name of Agastya. W. p. 689. Yoni.

யோனித்துவாரம், *s.* The genital organs of the female animal creation.

யோனிபேதம், *s.* Diversities of animal kinds and species. They are seven as எழுபிறப்பு. 1. Supernals and infernals embracing 1,400,000; 2. The human species 900,000; 3. Quadrupeds 1,000,000; 4. Flying creatures 1,000,000; 5. Creeping things 1,100,000; 6. Fishes and other acquatic creatures 1,000,000; 7. Vegetables 2,000,000; in all 84,000,000 different species of creatures. Some reckon 200,000 more than the above for the gods and 200,000 less for vegetables.

யோனிப்பொருத்தம், *s.* One of the தசப்பொருத்தம்.

யௌ

யௌ. A syllabic compound of ய் and ஔ.

*யௌகிகம், *s.* A divisible word, பகுபதம்; [*ex* யோகம்.] W. p. 689. Yougika.

*யௌதகம், *s.* A nuptial gift, presents made to a bride at her marriage, by her father or friends, and to the bridegroom or son-in-law, சீதனம். W. p. 689. Youtaka.

*யௌவனம், *s.* Adolescence, youth, manhood. See எவ்வனம். 2. Beauty, அழகு. 3. Joy, களிப்பு. (சது.)

ர்

ர். The twelfth consonant and the second of the இடையினம் or medium class. It is not grammatically an initial. When animated by அ, ஆ; இ, ஈ; எ, ஏ; generally, இ is prefixed—as in இரணம், இராகம், இரிஷி, இரீதி, இரெப்பம், இரேகை; sometimes, அ may precede ர—as அரங்கம், அரத்தம், அரம்பை, &c.; and if it is animated by உ, ஊ; ஒ, ஓ; the vowel உ is the proper prefix—as உருசி, உரூபம், உரொட்டி, உரோமம்.—For most words therefore beginning with this letter, see under இ or உ. As foreign terms take their natural pronunciation, both in common conversation and in writing, without the prefix, some are here given.

*ரகசியம், s. A secret, &c. See இரகசியம்.

*ரங்கம், s. A public place, &c. See அரங்கம்.

ரங்கு, s. [Tel.] Color, dye.

*ரசபுத்திரர், s. Rajputs, people of Rajputana.

*ரசம், s. Vegetable juice or flavor. See இரசம். 2. Pepper-broth.

ரசா, s. [Hind.] Leave, உத்தரவு.

ரஸ்தா, s. [Pers.] A road, பாட்டை.

ரஸ்தாளி, s. A plantain-tree, as இரசதாளி. (Colloq.)

ரஸ்தாளிக்கரும்பு, s. A large kind of sugar-cane.

ரஸ்து, s. [Hind.] Provisions. See இரஸ்து.

*ரதம், s. A car, &c. See இரதம்.

*ரத்தினம், s. A gem. See இரத்தினம்.

ரத்து, s. [Arab.] Rejection, தள்ளுபடி.

*ரந்திரம், s. A fissure. 2. [fig.] Secrecy. See இரந்திரம்.

ரம்ஜான், s. [Arab.] A Mohammedan month of fasting.

*ரம்மியம், s. Satisfaction. See இரம்மியம்.

ரயத்து—ரயித்து, s. [Arab.] A cultivator of the soil, a ryot.

ரயித்துவாரி, s. An annual settlement in which each ryot's *pattah* is considered.

ரவாணா, s. [Pers.] A despatch, a permit to pass goods free of duty.

ரவிக்கை, s. [Tel.] A bodice. See இரவிக்கை.

ரா

ராகி, s. [Canar.] A kind of millet, raggy.

ராஜி, s. [Arab.] Consent, agreement; resignation. See இராசி.

ராஜிநாமா, s. A deed of consent. 2. An agreement, a resignation.

என்வேலையைராஜிநாமாசெய்துபோட்டேன்...... I have resigned my employment.

*ராட்சதர், s. [sing. ராட்சதன்.] Rakshasas. See இராக்கதர்.

ராட்டினம், s. [Tel.] A spinning wheel. 2. A turning swing. See இராட்டினம்.

ராதாரி, s. [Tel.] A guide, a pass. 2. Collection of duties on roads.

ராப்தா, s. [Arab.] Thorough-fare.

ராப்பொடி, s. Filings, as அரப்பொடி.

*ராமச்சீத்தா, s. Bullock's heart. See இராமன்.

*ராமன், s. Rama. See இராமன்.

*ராவணன், s. Ravana. See இராவணன்.

ராவு, v. To file. See இராவு.

ராவடவேலை, s. The work of filing.

ரி

*ரிஷபம், s. A bull, &c. See இடபம்.

ரிவாஜ், s. [Arab.] Practice, custom, usage, வழக்கம்.

ரீ

ரீகர், s. [Hind.] The black soil generally known as cotton ground, கரம்பைநிலம்.

ரு

*ருசி, s. Good taste, &c. See உருசி.

ருஜா, s. [Hind.] Proof. See உருசு.

ருஜாம், s. [Arab.] Customary gratuities, perquisites either in kind or money.

*ருஷ்டி, s. Violence, rage, துஷ்டம். W. p. 708. RUSHT'I.

ருமாலை, s. See உறுமாலை.

ரூ

*ரூபம், s. Form, shape, &c. See உருபம்.

*ரூபாய், s. [Hind.] A rupee. See உருபாய்.

ரூபி, v. To prove. See உரூபி.

ரூபுரூபு, s. [Pers.] Presence, face to face, முன்னிலை.

ரெ

ரெட்டு, s. Sackcloth, as இரட்டு, under இரண்டு.

ரெட்டி, s. [Tel.] A caste. See இரெட்டி.

ரெண்டு, s. Two. See இரண்டு.

ரெம்ப, as adv. [also ரொம்ப.] Much, abundantly. (Colloq.)

ரே

ரேகம், s. [vul. for தேகம்.] The body.

*ரேவணசித்தியர், s. A Saiva ascetic-author of a metrical lexicon, called after his name, ரேவணசித்தியர்சூத்திரம்.

ரேவு, s. [Tel.] A port, &c. See இரேவு.

ரொ

*ரொக்கம், s. Ready money. See உரொக்கம்.

ரோ

*ரோசம்—ரோஷம், s. Keen sensibility. See உரோசம்.

ரோஜ், s. [Pers.] A day, நாள்.

ரோஜ்நாமா, s. A daily account or report.

ரோஜ்கார், s. [Pers.] Service, situation, பணிவிடை.

ரோந்தை, s. [Tel.] Filthiness, vileness.

*ரோமம், s. The hair of the body. See உரோமம்.

ல்

ல். The thirteenth consonant and third of the இடையினம் class. Like ர் it is not properly, an initial, but has இ or உ prefixed. A few words only are here given as more common without the prefix.

லகோடா, s. [Arab.] An envelope.

*லக்கம், s. A number, &c. See இலக்கம்.

லங்கர்கானா, s. [Pers.] An alms-house, a place for distributing food to paupers.

*லச்சை, s. [com. லெச்சை.] Shame; trouble, &c. See இலச்சை.

லஞ்சம், s. [Tel.] A bribe. See இலஞ்சம்.

*லட்சம், s. [com. லெட்சம்.] A lak. See இலட்சம்.

லட்டு, s. [Hind.] A sweet-meat.

லத்தாடு, s. Vexation, agitation. (c.)

லப்பம், s. [for.] Putty, as மக்கு.

லப்பை, s. [also லெப்பை.] Lubbis, a class of Mohammedans.

*லயம், s. Dissolution, destruction. See இலயம்.

வவ்வால், *s.* [*also* வௌவால்.] Bats of different kinds, the dormouse.—The most common are, குருட்டுவவ்வால், the small bat; பழந்தின்வவ்வால், the large bat, or vampire, Pteropus Javanicus. (*c.*)

வவ்வால்மீன், *s.* A kind of flat fish Stromatous Paru, ஓர்மீன்.

வவ்வாற்பந்தம், *s.* [*prov.*] A rod carried overhead, supporting a row of pendent torches to grace a procession.

வவ்வு, கிறேன், வவ்வினேன், வேன், வவ்வ. To take up by the handful, and carry off, வார.

வவ்வல், *v. noun.* Taking up. (சது.)

வழக்கம், *s.* Custom, habit, usage, fashion, manner, இரீதி. 2. That which is ordinary, conventional, common, அப்பியாசம். (*c.*) 3. Bounty, liberality, ஈகை; [*ex* வழங்கு.]

வழக்கச்சொல், *s.* Common usage. 2. A proverb, பழமொழி.

இடதுகைவழக்கமானவன், *appel. n.* A left-handed man.

வழக்கு, *s.* Custom, usage, manners, வழக்கம். 2. Style, usage, phraseology, வழக்கநடை. 3. Law-suit, litigation, strife, contention, disputation, controversy, debate, altercation—as one of the three charities, அறப்பான்மூன்றனுளொன்று.—For ஆறுவழக்கு, see *Nannûl.*

அறுவழக்கு. An endless dispute which cannot be settled.

ஒருதலைவழக்கு. An *ex parte* statement.

கணக்குவழக்கு. Dealings, accounts, or affairs not yet settled.

செய்யுள்வழக்கு. Poetic usage.

வழக்கன்—வழக்காளி, *appel. n.* [*sometimes* வழக்காடி.] Plaintiff, litigant, disputant, controvertist, wrangler.

வழக்காட, *inf.* To prosecute.

வழக்கியல்-வழக்குநடை, *s.* Colloquial style.

வழக்குக்கேட்க, *inf.* To hear or try a case.

வழக்குச்செய்ய, *inf.* To wrangle, altercate.

வழக்குச்சொல், *s.* [*poet. for* வழக்கச்சொல்.] Words in common use.

வழக்குச்சொல்ல, *inf.* To state a case in court, to plead, maintain, argue. 2. To claim, to express a claim.

வழக்குத்தீர்க்க, *inf.* To settle a lawsuit, or dispute.

வழக்குத்தொடர, *inf.* To prosecute in law, to commence a law-suit.

வழக்குத்தோற்க, *inf.* To lose a suit.

வழக்குப்பேச, *inf.* To plead a cause.

வழக்குப்பொருள், *s.* The colloquial meaning of a word,—*oppos. to* செய்யுட்பொருள்.

வழக்குறுத்த, *inf.* To decide a lawsuit; to settle a dispute.

வழக்குவெல்ல, *inf.* To win a cause.

வழக்கோரம், *s.* Partiality in stating, pleading for, or deciding a case.

வழக்கோரம்பேசேல். Don't plead with partiality. (*Avv.*)

வழங்கு, கிறேன், வழங்கினேன், வேன், வழங்க, *v. n.* To be accustomed, to practise, to be in use; to pass current, as money or words, வழக்கமாக. 2. (*p.*) To proceed in a suit; to advance, செல்ல. (*Ell.* 403.) 3. To walk about, உலாவ. 4. *v. a.* To give, to distribute, ஈய. 5. To speak, சொல்ல 6. To direct, நடத்த. 7. To use.

அவனுக்குக்கைகால்வழங்காது. He is unable to use his hand or foot.

இந்தச்சொல்அங்கேவழங்குகிறதா. Is this word used there?

வாய்க்குவழங்காதகறி. Unpalatable curry.

சர்க்கரைவழங்கினான். He distributed sugar.

வழங்குமின். Ye give. (*p.*)

வழங்காதசொல், *s.* A word not in use.

வழங்காதவன், *appel. n. neg.* A miser, a worthless man.

வழங்கி, *appel. n.* [*masc. or fem.* (*lit.*) *one who exchanges.*] A pimp, one who prostitutes his own wife; a harlot for money.

வழட்டு. See வழற்று.

வழலிக்கை, *s.* [*Tel.* బడలిక.] Languor, weariness, fatigue, இளைப்பு.

வழலு, கிறேன், வழன்றேன், வேன், வழல, *v. n.* [*com.* வழனு.] To be scratched, to peal off, as thin skin.

வழலை, *s.* A kind of snake, வழலைப்பாம்பு. 2. Phlegm, கோழை. (சது.) 3. Soap, சவுக்காரம். 4. A kind of salt, வழலையுப்பு. (*R.*)

வழவழ—வழுவழு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be slippery, வழுக்க. 2. To babble, to speak without meaning, அலப்ப.

வழவழப்பு—வழுவழுப்பு, *v. noun.* Slipperiness.

வழற்று, கிறேன், வழற்றினேன், வேன், வழற்ற, *v. a.* [*com.* வழட்டு.] To scratch the skin from the body.

வழாநிலை, *s.* [*in gram.*] Concord in the different parts of a sentence, faultless combinations—*oppos. to* வழுஉநிலை.

வழாறு, *s.* A full river; a tank, நிறைபுனல். (சது.)

வழி, *s.* A way, a road, a path, நடவை. 2. A way in a moral sense, a course of conduct, நடை. 3. Manner, method, mode, வயணம். 4. A place, இடம். 5. Original cause, காரணம். 6. A lump or ball—as of butter, &c., திரட்சி. 7. Antiquity, oldness, பழமை. 8. Succession, a following—as வழிநாள், the following day. 9. A form of the seventh case or local ablative, ஏழனுருபு.—as நிழல்வழி, in the shade. 10. A son, as வழித்தோன்றல். 11. Usage, முறைமை.

இந்தவழியெங்கேபோகிறது. Where does this road go?

இதைமுடிக்கவழியறியேன். I do not know how to accomplish this.

அவ்வழி. In that manner.

அவன்வழிக்குவரமாட்டான். He will not come to a right course [*of conduct*].

புத்திரர் வழிக்கெல்லாந் தொடர்ந்தேற்றியாய் வந்தபாவம். Original sin propagated by children's children.

அவன்வழிப்போகாதே. Do not meddle with him.

என்வழியாக. By my means.

அந்தவீதிவழியாக. By way of that street.

வழிகாட்ட, *inf.* To show the way, to guide. 2. To direct morally, or religiously.

வழிகாட்டி, *appel. n.* A guide, a leader; one who shows the way. 2. One who sets a good example.

வழிகாட்டிமரம், *s.* [*sometimes* கைகாட்டிமரம்.] A guide-post.

வழிகாண, *inf.* To find the way. 2 To offer or present itself—as an opportunity, &c.

வழிச்சாரி, *s.* A beaten road, நடையுள்ளவழி. 2. A bye-path, for custom-house officers, &c., to apprehend smugglers.

வழிச்செலவு, *s.* Money for expenses on a journey. 2. (*p.*) A journey.

வழிச்செல்வோன், *appel. n.* A traveller.

வழிதப்பிப்போக, *inf.* To miss the road, to go astray.

வழிதுறை, *s.* [*lit. road and harbor.*] Means to an end, auxiliary aid.

வழிதுறைதெரியாமல்அலைகிறான். He wanders about not knowing the road, or harbor.

வழிதுறையில்லாமற்பேசினான். He spoke without method.

வழித்தடை, *s.* Impediments, hinderance in a way or journey.

வழித்துணை, *s.* A fellow traveller. 2. A guide.

வழித்தோன்றல், *s.* A son, மகன். (*p.*)

வழிநாள், *s.* To-morrow, மறுநாள்—*in Stoke's Cural,* வழிநாளை.

வழிநூல், *s.* A copy of an original work. See நூல்.

வழிபட, *inf.* To enter a way, மார்க்கமடைய. 2. To reverence, to perform ritual worship, வணங்க. 3. To follow a way; *morally,* to attend upon, be devoted to, இணங்கிநடக்க.

வழிபடுத்த, *inf.* To cause one to enter a right road, மார்க்கத்திற்சேர. 2. [*fig.*] To put one into a good way. 3. To regulate, subdue; to cause to reverence, வணக்கஞ்செய்விக்க.

வழிபயக்க, *inf.* To give without refusal, மறுப்பறுக்க. (*p.*)

வழிபறிக்க, *inf.* [*v. noun.* வழிப்பறி.] To rob or plunder in the highways.

வழிபாடு, *v. noun.* Reverence, worship; ஆராதனை, 2. Proper conduct, service, (*Ell.*); civility, courtesy, politeness, obedience, வணக்கம். 3. A way; a religious system, கோட்பாடு. 4. Use, custom, habit, வழக்கம்.

வழிபார்க்க, *inf.* To watch an opportunity, as சமையம்பார்க்க. 2. To expect, to look forward to, எதிர்பார்க்க.

வழிப்பயணம், *s.* A journey.

வழிப்பிரிவு, *s.* A place where two or more ways meet.

வழிப்போக, *inf.* [*v. noun.* வழிப்போக்கு.] To go forward, proceed. 2. To intermeddle with others' affairs.

வழிப்போக்கிலேஅவனைக்காண்பாய். You will meet him on your way.

வழிப்போக்கர், *s.* [*pl.*] Way-faring men, travellers.

வழியடைக்க, *inf.* To impede, to obstruct the way, தடுக்க.

வழியனுப்ப, *inf.* To go a little distance with one setting out for a journey, out of respect.

வழியாக. [*as a preposition.*] By or through-as உன்வழியாக, by your means.

வழியுரைப்போர், *appel. n.* [*pl.*] Messengers, தூதர். (சது.)

வழிவகை, *s.* [*pl.* வழிவகைகள்.] Means, resources, expedients, உபாயம்.

வழிவழியாய்ப்போக, *inf.* To go by different ways.

வழிவிட; *inf.* To take leave of any one going on a journey after proceeding with him some distance, வழியனுப்ப. 2. To make a way for water to flow; to contrive a way of relief, from some difficulty, தடைநீக்க. 3. [*fig.*] To leave the right way, நெறிதவற. (*Beschi.*)

வழி, கிறது, ந்தது, யும், ய, *v. n.* To flow down, trickle down; to drip through, ஒழுக. 2. To overflow, நிரம்பிப்பாய. (*c.*)

வழிந்தோட, *inf.* To overflow, to diffuse itself.

வழி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To rub in with the hand, as an ointment. 2. To scrape, wipe, rub off. 3. To scour or cleanse. (*c.*)

அரைத்துவழிக்கிறது. Scraping off from the grinding stone, spices, &c., when bruised.

சவரகன்கத்தியால்வழிக்கிறது. Shaving one's self, or another.

வழு—வழுவு, *s.* An, error, a mistake, an incongruity, a deviation from rule, a failure, a slip, a lapse, தப்பு. 2. Damage, loss, கேடு. 3. A solecism or impropriety in language, சொற்குற்றம்—For வழு, எ, see *Nannul.*

வழுக்கட்டை, *s.* Stupidity, மூடத்தனம்.

வழுக்கட்டைப்பயல், *s.* A stupid boy.

வழுவமைதி, *s.* Allowed deviation from grammatical rule. It is either காலவழுவமைதி, இடவழுவமைதி, திணைவழுவமைதி, or மரபுவழுவமைதி.—For particulars see *Nannûl.*

வழுவுடைக்காமம், *s.* Unlawful and violent lust. 2. Transgression of propriety towards a female. (p.)

வழுக்கு, *s*, Error, deviation, fault, swerving, தவறு. 2. (சது.) Forgetfulness, மறதி. 3. Fat, suet, நிணம்.

வழுக்கு, கிறேன், வழுக்கினேன், வேன், வழுக்க, *v. n.* To err, to deviate, to slip, to slide in slippery places, to lapse, சறுக்க. 2. *v. a.* To move back and forth as the eyes, அசைய, (*Beschi.*) 3. To forget, மறக்க. (குறள். 43. 9.) 4. To beat, அடிக்க. 5. To dash against, மோத.

வழுக்குநிலம், *s.* Slippery ground.

வழுக்குப்பாசி, *s.* A water-plant. See பாசி.

வழுக்கை, *s.* The tender pulp of a young cocoa-nut. 2. Baldness. (*c.*)

வழுக்கைத்தலை, *s.* A bald-head.

வழுக்கைத்தேங்காய், *s.* An immature cocoa-nut in which the kernel begins to form.

வழுக்கைப்பலா, *s.* An inferior kind of jack-tree, the kernels of which are soft.

வழுதலை, *s.* Brinjal plant, *commonly* கத்தரிச்செடி. 2. An impaling stake, placed in corn-fields, as a warning to thieves, புனத்திடும்பொய்க்கழு. (சது.)

வழுதி, *s.* A poetical epithet of the Pandya kings, பாண்டியன். (சது.)

வழுது, *s.* A lie, a falsehood, பொய். 2. Straw, வைக்கோல். (சது.)

வழுதுணை, *s.* Brinjal. See வழுதலை.

சிறுவழுதுணை, *s.* Solanum Indicum. See தசமூலம்.

வழுத்து, கிறேன், வழுத்தினேன், வேன், வழுத்த, *v. a.* To praise, துதிக்க. (*p.*)

வழுத்தல், *v. noun.* Praising. (சது.)

வழுந்து, கிறது, வழுந்தினது, ம், வழுந்த, *v. n.* [*sometimes* வருந்து.] To chafe, excoriate, wear off the skin, as a load on the shoulder, காய்ப்பேற. (பெரியபுரா.)

வழும்பு, *s.* Suet, fat, நிணம். 2. The slimy mucus on the young of a cow when calved. 3. [*fig.*] Filth, impurity, அழுக்கு.

யாதொருவழும்புமில்லாமல்தீர்த்துப்போடு. Settle the matter without filth.

வழுவு, *s.* An error or failure, &c. See வழு.

வழுவு, கிறேன், வழுவினேன், வேன், வழுவ, *v. n.* [*poetice* வழூஉ.] To miss, as a step, to fail, to be turned out of a course, to be turned aside; to err, to swerve from rule or duty, to sway aside or down, as a load, தவற, விலக. (*c.*)

அவன்வழுவிப்போனான். He has back-slidden.

வழுவிவழுவிப்போகிறது......Falling off—as a garment; slipping out of the hand—as a fish.

வழுவல்—வழுவுதல், *v. noun.* Sliding down, நழுவல். 2. Erring, தப்புதல்.

காரியத்துக்குவழுவுதல்வாராமற்பார். See that the thing do not fail of success.

வழுவற்றேங்காய், *s.* [*prov.*] As வழுக்கைத்தேங்காய்.

வழுவன்சுறு, *s.* A species of the சுறு fish, ஓர்மீன்.

வழுவாமை, *v. noun. neg.* [*poetice* வழாமை.] Integrity, நேர்மை.

வழுவை, *s.* An elephant, யானை. (*p.*)

வழூஉ, *v.* To fail, &c. See வழுவு.

வழூஉச்சொல், *s.* An incorrect word, an objectionable expression, குற்றமானசொல்.

வழூஉச்சொற்புணர்த்தல், *v. noun.* Employment of inappropriate terms. See நூற்குற்றம் under குற்றம்.

வழூஉநிலை, *s.* Erroneous phraseology, as to gender, number, case, or tense, sanctioned by long usage of the learned —*oppos. to* வழாநிலை.

வழுவழுப்பு, *s*, Lubricity. See வழுவழுப்பு.

வழை, *s.* A tree, சுரபுன்னை. (சது.)

வளப்பம், *s.* Luxuriance, fruitfulness, copiousness, fatness, செழிப்பு. [See நாட்டுவளப்பம்.] 2. Greatness, excellence, மாட்சிமை. 3. Goodness, நன்மை. (*Beschi.*)

கிணற்றுத்தவளைக்குநாட்டுவளப்பமேன். What has a frog in a well to do with the customs of the land? [*prov.*]

சாதிவளப்பம், *s.* The peculiarities of a caste.

வளமை, *s.* Copiousness, prosperity, as வளப்பம். 2. Greatness, dignity, honor, increase of power, மாட்சிமை. 3. Wealth, riches, செல்வப்பொலிவு. 4. A benefit, kindness, a favor, உபகாரம்.

வளமையாய்ப்பேசுகிறான். He speaks loftily, vauntingly.

வளமையர், *s.* [*pl.*] Agriculturalists, honorable farmers, பூவைசியர். 2. Great, or excellent men, மாட்சிமையுள்ளோர். (*p.*)

வளம், *s.* Abundance, fulness, copiousness, productiveness, செழிப்பு. 2. Part, side, party-interest, a faction, பக்கம். 3, A way, a path, வழி. (*Ell.* 157.) 4. Beauty, அழகு. 5. Excellency, மாட்சிமை. 6. Strength, வலி. 7. Income, wages, salary, profit, வருமானம். 8. Various provisions, &c., பலபண்டம்.

வளமானஇடம். A commodious place.

வளத்தக்காள்வாழ்க்கைத்துணை. She who conforms to the income is a good wife. (குறள்.)

வளமடல், *s.* A poem on a disappointed lover. See மடல்.

வளமாய்ச்சாப்பிட, *inf.* To eat of many dishes, to live luxuriously.

வளம்பெற்றிருத்தல், *v. noun.* Being in good circumstances.

வளவன், *s.* An epithet of Chola, as king of a fertile country, சோழன். (சது.)

*வளயம், *s.* A hoop, &c. See வளையம்.

வளரு—வளர், கிறேன், வளர்ந்தேன், வேன், வளர, *v. n.* To grow, enlarge, increase; to wax as the moon, விர்த்தியாக. (*c.*) 2. [*sometimes.*] To lie asleep, நித்திரைகொள்ள.

அவன்வளர்ந்துவிட்டான். He has grown tall.

கண்வளர்தல். Sleeping. (பஞ். 89.)

வளர்முலைப்பாரங்கண்டு. Seeing the weight of her swelling breasts. (*p.*)

வளமறம், s. Increase in virtue. (p.)

வளர்ந்தஆள், s. A tall person.

வளர்பிறை, s. The crescent moon; oppos. to தேய்பிறை.

வளர்ச்சி, v. noun. Growth, thriftiness, increase, விர்த்தி. (Ell. 146.)

வளர்த்தி, v. noun. Increase, growth; stature, tallness.

வளர்த்திபோதாது. It is not high enough.

வளர்த்தியானவன். A tall man.

வளர்வு, v. noun. Spontaneous increase, or growth.

வளர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To cherish, to foster, to bring up; to attend to while growing, whether a child, an animal or a vegetable, பரிபாலிக்க. 2. To cultivate, to rear, to train, ஆக்க. 3. To place or lay down, as an infant, to sleep, as வளர்த்து.

வளர்த்தகடாமார்பிலேபாய்ந்ததுபோலே........The house bred ram butted the [fostering] hand which nourished it.

என்னோடேசண்டையைவளர்க்கிறான். He nurses a quarrel with me.

தீவளர்க்கிறார்கள். They are keeping the fire burning.

ஏன்வளர்த்துப்பேசுகிறாய். Why do you lengthen the discourse?

வளர்கடா—வளர்கிடாய், s. [vul. வளகடா.] A ram reared in the house.

வளர்த்தகப்பன், s. A foster-father.

வளர்த்தபிள்ளை, s. A foster-child.

வளர்த்தாள், appel. n. A wet nurse; foster-mother, ஊட்டுந்தாய். 2. A female servant that brings up a child, கைத்தாய்.

பெற்றுட்டும்வளர்த்தாட்கும்வித்தியாசமில்லையா... Is there not a difference between an own mother and a foster-mother?

வளர்மயிர், s. A tuft, a knot of hair, மயிர்க்குழற்சி. (சது.)

வளர்த்து, கிறேன், வளர்த்தினேன், வேன், வளர்த்த, v. a. [causat.] To lay down, to cause to lie prostrate; sometimes, to put to sleep கிடத்த. 2. To cause to grow, to make larger, அதிகரிக்கச்செய்ய.

தீவளர்த்த, inf. [also தீவளர்க்க.] To keep the fire burning.

பொன்னின்தகடுகளைவளர்த்த, inf. To beat gold into thin plates. (R.)

வளர்த்திப்பேசுதல்—வளர்த்துப்பேசுதல். Circumlocution in speaking.

வளர்ப்பு, v. noun. Bringing up, fostering; increase, fertilizing, வளர்க்கை. 2. [fig.] One brought up in the house, a servile dependant; also a foster-child, வளர்ப்புப்பிள்ளை.

வளர்ப்புவக்கணையறியாது. A dependant will not understand politeness.

வளவளக்க, inf. [for வழவழக்க.] To be slippery. 2. To babble.

வளவளென்றுஅலப்புகிறான். He is babbling.

வளவி, s. A sloping roof, வீட்டிறப்பு. (சது.)

வளவு, s. [recte வளைவு.] A house, household premises, வீடு. (உபதி. 226.)

வளன், s. [poet. form of வளம்.] Beauty, strength, various utensils, &c.

வளா, Inter. Bravo! See பளா.

வளாகம், s. A place, இடம். 2. A circuit, சுற்றிருக்கை. 3. A millet-field, தினைப்புனம். (சது.) 4. A town near the Coleroon river, ஊர்.

வளார், s. [com. மிளாறு.] A small branch or twig; a rod, a switch. (சது.)

வளாவு, கிறேன், வளாவினேன், வேன், வளாவ, v. a. [com. விளாவு.] To mix, to mix what is cold and what is hot together, கலக்க. 2. To bend, வளைக்க. (சது.)

நீர்வளாவ, inf. To mix water. 2. To wave water round an offering to an idol.

வளாவல், v. noun. Mixing. 2. Bending. 3. As வளைவு. (சது.)

வளி, s. A whirlwind, சுழல்காற்று. 2. Wind, air; air in the body, வாயு. 3. Swollen testicles; a chronic rupture, Hernia, அண்டம்.

வளிவழங்குமல்லன்மாஞாலம். This great, fertile earth over which the wind blows. (Cural.)

வளியன் — வளியிறங்கினவன், s. [vul. வளிப்பிடிக்கன்.] One afflicted with a rupture.

வளுந்து, v. To chaffer. See வழுந்து.

வளுவளு, க்கிறது, த்தது, க்கும், க்க, [southern use for வழுவழுக்க.] To be slimy, &c.

வளுவளுத்தபேச்சு. Uncertain speech, indecisive language.

வளை, s. A hole, a rat hole, துளைவளை. 2. A bracelet of gold, கங்கணம். 3. A bracelet of any material, கைவளை. 4. A chank or shell, சங்கு. 5. The Chakra of Vishnu, சக்கரம். (சது.) 6. A small beam, சிறுஉத்திரம்—as முகட்டுவளை; [from Sa. Vala.]

வளைக்கழுந்து, s. Tenon in the end of the lower beam in a building.

வளைதொளை, s. Holes and apertures. 2. [fig.] Prying, inquisitiveness.

வளைத்தழும்பு, s. Mark of bracelets in the arm.

வளைபோழுநர்—வளைபோழ்நர், appel. n. [pl.] Makers of mother-of-pearl ornaments, சங்கறுப்போர். (சது.)

வளைமணி, s. A shell-bead, அக்குமணி. 2. A bead made from a shell, சங்குமணி.

வளையகம், s. A conch, சங்கு. (சது.)

வளை, கிறேன், ந்தேன், வேன், வளைய, v. n. To bend, கோண. 2. To become crooked, கூன. 3. To be twisted, மடங்க. 4. v. a. To besiege, to hover round, to surround, சூழ; [from Sa. Vala.]

பட்டணத்தைவளைந்துகொண்டார்கள். They besieged the city.

உடம்புவளைந்துவேலைசெய்கிறது........Working hard, (lit.) bending one's body and working.

உடம்புவளையாதவன். A lazy fellow.

அதுவளைந்துகொடுக்கிறது. It yields to pressure.

வளைதடி, s. A short curved cudgel used in the chase or in battle.

வளையக்கொடி, s. [prov.] A kind of torture. See அண்ணாக்தார்.

வளையக்கோலுதல், v. noun. Encompassing, surrounding, environing, monopolizing.

வளைசல், v. noun. Crookedness, a curve, curvature, a bend. 2. A house-yard, a compound.

வளைவு, v. noun. Crookedness, கோணல். 2. A circle, வட்டம். 3. An arch, வில்வடிவு. 4. See வளவு.

வளைவளக்க, inf. To measure a field.

வளைவாணி, s. A hook.

வளைவுவளைக்க, inf. [sometimes வளைவுகுத்த.] To vault, to arch over.

வளைவுவளைக்கிறவன்—வளைவுவளைப்பான்.....One who makes an arched roof.

வளைவெடுக்க, inf. To straighten what is crooked.

வளை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To bend, to inflect, மடக்க. 2. To tie, to bind, கட்ட. 3. To hinder, தடுக்க. 4. To carry off, to sweep away, to steal, வார. 5. To environ, surround, encircle, encompass, besiege, சுற்றிக்கோல.

கள்ளர்அவனைவளைத்துக்கொண்டார்கள். Thieves surrounded him.

வீட்டைவளைத்துக்கட்டுகிறான். He is making additions to his house round about.

வளைப்பு, v. noun. A bend, flexure, fold; crookedness, வளைவு. 2. The end of a field where the oxen turn in ploughing, உழவுசால்.

வளைப்புக்கிலக்குப்பார்க்கிறது. Making a plan for a vault.

*வளையம், s. [as வலயம், also வளயம்.] A bracelet, an armlet, commonly கைவளை. 2. A circuit, enclosure, எல்லை. 3. A hoop, a ring, வட்டம். 4. A tank, குளம். 5. The involved petals of a lotus, தாமரையுட்சுருள். (சது.)

வளையமாடுதல், v. noun. Winding up a rope or coiling a cable, கயிறுசுருட்டுதல்.

வளையல்—வளையில், s. Glass, கண்ணாடிக்கரு. 2. Glass armlets, bangles, கைவளையல். (Beschi.)

வளையல்மண், s. Mineral-sand, of which glass bangles are made.

வளையாபதி, s. One of the five ancient classic poems in Tamil. See காவியம்.

வளைவி, s. A sloping shed. See வளவி. 2. [vul. for வளையல்.] Glass arm-ring.

வள், s. The ear, காது. 2. A point or edge, கூர்மை. 3. Narrowness, நெருக்கம். 4. Strength, வலி. 5. Beauty, வளம். 6. A leather-thong, வார். 7. The sheath of a sword, வாளுறை. 8. A sword, வாள். (சது.)

வள்ளெனல், v. noun. An imitative sound, ஒலிக்குறிப்பு.

வள்ளம், s. A corn-measure containing four மரக்கால் or about a peck; used in the Congu country. 2. A brazen eating dish, வட்டில். (சது.) 3. A boat made of the trunk of a tree, a canoe, சிறுதோணி.

வள்ளம்விட, inf. To boat, to go in a boat.

வள்ளல், s. One of unbounded liberality, வரையாதுகொடுப்போன். 2. [colloq.] One's private affairs, (in contempt.)—Note. According to சதுரகராதி, there are three classes, each embracing seven individuals; I. class, முதல்வள்ளல். 1. குமணன். 2. சகரன். 3. சகாரன். 4. செம்பியன். 5. துந்துமாரி. 6. நளன். 7. நிருதி; II. class, இடைவள்ளல். 1. அக்குரன். 2. அந்திமான். 3. அரிச்சந்திரன். 4. கன்னன். 5. சந்திமான். 6. சிசுபாலன். 7. தந்தவக்கிரன்; III. class, கடைவள்ளல். 1. எழிலி. 2. ஓரி. 3. காரி. 4. நள்ளி. 5. பாரி. 6. பேகன். 7. மலையன். In Nigandu some are different, as சகாரி, விராடன், in the first; வக்குரன், சந்தன், in the second and ஆய், in the third.

உன்வள்ளல்தெரியாதோ. Is not your character known?

வள்ளன்மை, s. Liberality, munificence, கொடையுடைமை; [ex மை.]

*வள்ளி, s. A plant, Convolvulus Batatas, ஓர்கொடி. 2. A winding plant, Dioscorea sativa, படர்கொடி. W. p. 742. VALLI. 3. A ratan-shield, பிரப்பங்கேடகம். 4. A jewel, ஆபரணம். 5. A kind of play, a dance, ஓர்கூத்து. 6. A bracelet, கைவளை. (சது.) 7. Valli, a name of a consort of Subramanya.—Note. Of வள்ளி, winding plant, are different varieties, காட்டுக்காய்வள்ளி—காட்டுச்சிரகவள்ளி-காட்டுவள்ளி, Dioscorea bulbifera; சிறுவள்ளி, Dioscorea aculcata; சர்க்கரைவள்ளி, sweet potatoe; செவ்வள்ளி, Dioscorea var; பெருவள்ளி, the yam, Dioscorea alata; மலைச்சக்கரவள்ளி—ஆள்வள்ளி, the Tapioca plant; வெற்றிலைவள்ளி, காய்வள்ளி, another variety; கர்ப்பூரவள்ளி, thick leaved Lavender.

வள்ளிக்கிழங்கு, s. The sweet potato.

வள்ளிமணாளன், s. The younger son of Siva and husband of வள்ளி, முருகன்.

வள்ளியம்மை, s. See வள்ளி, 7. 2. A Hindu proper name.

வள்ளிசு, s. Beauty, neatness, நேர்த்தி. (colloq.)

வள்ளிசாய்ச்சாப்பிடுகிறது. Faring sumptuously, eating delicacies.

வேலைவள்ளிசாயிருக்கவேணும்......It must be neatly done.

வள்ளியம், s. A pipe, ஊதுகுழல். 2. A ship, மரக்கலம். 3. Wax, மெழுகு. (சது.)

*வள்ளியம், s, Pepper, மிளகு. W. p. 742. VALLYA.

வள்ளியோர், s. Men, famous for liberality, வரையாதுகொடுப்போர். (சது.)

வள்ளுவன், s. One in a high class of Pariahs who acts as a family-priest, or புரோகிதன், and foretells future events, வருங்காரியஞ்சொல்வோன். See திருவள்ளுவர்.

வள்ளுவசாத்திரம், s. The art of foretelling among the Pariahs.

*வள்ளூரம், s. [St. வல்லூரம்.] Roasted meat, சூட்டிறைச்சி. W. p. 742. VALLOORA. 2. Mutton, ஆட்டிறைச்சி. 3. Beef, ஆவின்இறைச்சி. 4. All kinds of flesh, புலால். (சது.)

வள்ளை, s. A water plant and creeper, Convolvulus repens, ஓர்கொடி. 2. A song used by women at work, உலக்கைப்பாட்டு.

வற, க்கிறது, ந்தது, க்கும், வறக்க, v. n. To dry, காய. 2. To grow lean, to shrink, குறைய. 3. (fig.) To be a time of drought.

வானம்வறக்குமேல். If the heaven dry up. (Cural.)

வறஆரை, s. A plant. See வறளாரை.

வறஒட்டி, s. A kind of pot-herb.

வறக்காலன், s. [fem. வறக்காலி.] One who is thought to bring evil to a family, as துடைகாலன்.

வறத்தல், v. noun. Drying; a drought. (சது.)

வறடு, s. [gen. வறட்டின்.] Dryness, meagerness, வறண்டது. 2. (met.) Barrenness, sterility, மலடு; [ex வறள்.]

வறடன், s. [fem. வறடி.] A very lean man. 2. An impotent man, as மலடன்.

வறட்டு, adj. Barren; sterile.

வறட்டாடு. A barren sheep.

வறட்டுமாடு. A barren cow.

வறட்சி. Drought, dryness. See under வறள்.

வறட்டு, கிறேன், வறட்டினேன், வேன், வறட்ட, v. n. To dry up, to evaporate, காய. 2. v. a. To parch, to scorch, வறுக்க; [ex வறள்.]

வறட்டி, s. Dried excrements, dried cow-dung for fuel, எருமுட்டை.

வறட்டல், v. noun. Drying up. 2. Parching.

வறண்டு, கிறேன், வறண்டினேன், வேன், வறண்ட, v. a. [sometimes விருண்டு.] To scratch, with the finger-nails, or with the talons of a cat, as பறண்ட. Beschi.)

வறண்டி, appel. n. A rake, a harrow, குப்பைவாரி. 2. A kind of spatula, வழிக்குங்கருவி.

வறளு—வறள், கிறேன், வறண்டேன், வேன், வறள, v. n. [sometimes வறல்.] To grow dry, to grow very lean, வறக்க. (c.)

அவனுக்குநாவறண்டுபோயிற்று. He has dryness of the tongue.

வறட்காமாலை, s. A kind of jaundice.

வறட்காய்ச்சல், s. Burning fever.

வறட்சி, v. noun. [improp. வரட்சி.] Drought, dryness; heat of the body.

வறட்சியெடுத்தது. The body is covered with eruptions. (R.)

வறட்சுண்டி, s. A species of sensitive plant, Mimosa triquetra.

வறட்பூலா—வறட்பூல், s. A shrub. See பூலா.

வறண்டநிலம், s. A dry field.

வறளாரை, s. A plant. See ஆரை.

வறளி, s. Dry cow-dung for fuel, as வறட்டி.

வறள்முள்ளி, s. [com. வறமுள்ளி.] A medicinal thorn-bush. See முள்ளி.

வறிஞர்—வறிஞோர்—வறியோர், s. The poor, poor men, தரித்திரர்; [ex வறுமை.]

வறு, adj. [poetice.] Empty, small, mean.

வறுங்காலம். Time of scarcity, famine.

வறுங்கோடை. A very dry season.

வறுநகை. A smile.

வறுநிலம். Waste ground.

வறுமொழி. A useless word.

வறும்புனம். Land cleared of light grains.

வறு, கிறது, ந்தது, v. n. [defective.] To be grilled, fried, or parched, வறுபட.

வறல், v. noun. Fried fruit.

வறுகு, கிறது, வறுகினது, ம், வறுக, v. a. To cling to, to paw, பிருண்ட.

வறுகிப்பிடிக்கிறது. Clasping, holding fast.

வறு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To dry, to gril, to fry, to parch, to toast, வறட்ட.

வறுத்துக்கொட்டினமுகம். A fiercely angry countenance.

வறுத்தபயறுமுளைக்குமா. Will parched pulse germinate? [prov.]

அதுவறுத்ததுபத்தாது. It needs more parching.

வறுவோடு, s. A potsherd used for parching. 2. [fig.] A good-for-nothing fellow.

வாழ்ந்ததுகெட்டால்வறுவோட்டுக்குமாகாது. If prosperity is destroyed [he] is less than a potsherd. [prov.]

வறுபட, inf. [neuter form of வறு, v. a.] To become parched, grilled, or toasted.

அதுநன்றாய்வறுபடவில்லை......It is not well parched.

வறுமை, s. Poverty, exigence, தரித்திரம். 2. Vacuity, emptiness, வெறுமை. (c.)

வறிது, appel. n. That which is small, insignificant or ignorant. (p.)

வறை, s. Fried meat, &c., துவட்டற்கறி; [ex வறு, v.] (சது.)

வறையல், s. Cakes of beaten oil-seed, பிண்ணாக்கு. 2. As வறை. (சது.)

*வற்கம், s. A bridle, a rein, a horse-rope round the mouth, குதிரைக்கயிறு. [Sa. Valga.] 2. [for வர்க்கம்.] A square.

*வற்கரி, s. A pitcher, a ewer, கரகம். (சது.) 2. As வற்கம்.

*வற்கலை, s. A garment made of bark, மரவுரி. W. p. 741. VALKALA.

*வற்காலி, s. A goat, வெள்ளாடு. [Sa. Valgu.]

வற்கி, v. To square. See வர்க்கி.

*வற்சதரம், s. A steer, a young bullock, இளங்கன்று. W. p. 731. VATSASATARA.

*வற்சநாபி, s. A poisonous drug. See நாபி and வசநாபி.

*வற்சம், s. Calf, either of a cow or buffalo, மாட்டின்கன்று. [Sa. Vatsa.] 2. The name of a town, ஓர்தேயம். [Sa. Vatsa-pat'tanam.] 3. The breast, மார்பு. See வக்ஷஸ்தலம்.

*வற்சரம், s. A year, வருடம். W. p. 731. VATSARA.

*வற்சலம், s. Parental tenderness, affection, kindness, தயை. 2. A cow fond of its calf, கன்றுக்கிரங்கும்பசு. [Sa. Vatsala.]

*வற்சை, s. A term of endearment to an infant, or scholar, குழந்தை. 2. A barren cow, மலட்டுப்பசு. W. p. 731. VATSA.

*வற்ணம், s. [improp.] Color. See வண்ணம், வர்ணம்.

*வற்தனை, s. [for வர்த்தனை.] Fees.

வற்பம், *s.* Scarceness of corn, famine, பஞ்சம். (*R.*)

வற்பகாலம், *s.* A time of scarcity.

வற்பத்திலொருத்தனைவைத்துத்தாங்குகிறது....... Supporting one in a time of famine.

வற்பு, *s.* Firmness, strength, உறுதி; [*ex* வல்.] (சது.)

வற்புறுத்த, *inf.* To fortify, to strengthen the mind, &c., to cause to be firm, உறுதிப்படுத்த. 2. To assever, to insist on, to declare forcibly, உறுத்திச்சொல்ல.

***வற்மம்**, *s.* [*improp.*] Malice, grudge, secret hatred, as வன்மம். 2. See மர்மம்.

வற்மிக்க, *inf.* To act from malice. (*Beschi.*)

வற்றம், *s.* The ebb tide, the flux toward the sea, வற்று. 2. Dryness, வறட்சி.

ஏற்றம்வற்றம். The ebb and flow of the tide.

வற்று, கிறேன், வற்றினேன், வேன், வற்ற, *v. n.* [*vul.* வத்து.] To grow dry, dry up—as water; to evaporate, சுவற. 2. To subside, as the tide, வடிய. 3. To become absorbed as humors, or a collection in an abscess, உலர. (*Ell.* 222. 310.) 4. To wither, to become dry—as leaves or fruit, வாட; [*ex* வல்.]

குளம்வற்றிப்போயிற்று. The tank is dried up.

அவன்கையிப்பொழுதுவற்றிப்போயிற்று.........His hand is witherd, i. e. *he can no longer give alms.*

வற்றடிக்க, *inf.* [*contrac. of* வற்றஅடிக்க.] To drain a reservoir of water.

முலையைவற்றடிக்கிறது. The drying up of the milk in the breast by medical means.

வற்ருச்சமுத்திரம், *s.* An undiminishing sea.

உன்வீடுவற்ருச்சமுத்திரம்போலிருக்க. May thy house be as the undiminishing sea.

வற்றல், *v. noun.* Dried fruit or fish, வற்றியஉணவு. 2. Being dry.

வற்று, *v. noun.* Ebb of the tide, as வற்றம்.

வனப்பு, *s.* Beauty, fairness, grace, comeliness, excellence, elegance, embellishment, அழகு. (*Ell.* 164, 171, 262.) 2. [*in rhet.*] Beauty of composition, ornament in style, அலங்காரம்.—The eight ornaments are அம்மை, அழகு, தொன்மை, தோல், இயைபு, இழை, புலன், விருந்து, which see.

***வனம்**, *s.* A wilderness, an uncultivated country, காடு. 2. A grove surrounding a town, ஊர்சூழ்ந்தசோலை. 3. Water, நீர். W. p. 732. VANA. 4. The basil plant. See துளசி. 5. A place for burning dead bodies, as சுடுவனம். 6. A way, வழி. 7. Beauty, அழகு. (சது.)

அதுஅங்கேவனமாய்க்கிடக்கிறது. It grows there wild.

வனசஞ்சாரம்-வனசஞ்சரிப்பு, *s.* [*appel.* வனசஞ்சாரி.] Dwelling or roaming in a forest, residence in a wilderness.

வனசம்—வனருகம், *s.* [*as* சலசம்.] A lotus, as water-born, தாமரை; [*ex* சம், உருகம்.]

வனசரம், *s.* A wild elephant, as living in a forest, or forest-born, வனத்திற்பிறந்தயானை. 2. [*prov.*] Wilderness, a large jungle, பெருங்காடு.

வனசரர்—வனவேடர், *s.* [*pl.*] Hunters, foresters. (சது.)

வனசுரம், *s.* Desert, காடு.

வனசெந்து, *s.* Animals of the desert.

வனச்சார்பு, *s.* A sylvan tract, முல்லைநிலம். See சார்பு.

வனபூமி, *s.* A wood-land-country.

வனபோசனம், *s.* A picnic in the woods. 2. A sacred feast held in groves in the month of November to increase the fertility of the fields.

வனமல்லிகை, *s.* The wild Jasmine.

வனமாலி, *s.* An epithet of Vishnu, as having worn a garland of the துளசி plant, விஷ்ணு; [*ex* மாலை.]

வனவாசம், *s.* [*appel.* வனவாசி.] A dwelling or abiding place of a hermit.

வனந்தரம், *s.* A desert, or uninhabited place. (*c.*) 2. Desert after desert; [*ex* அந்தரம்.]

***வனிதை**, *s.* A female, a damsel, a lady, பெண். 2. A beloved woman; mistress or wife, மனைவி. W. p. 732. VANITA.

வனை, கிறேன், ந்தேன், வேன், ய, *v. a.* To form, fashion, shape, உருப்படுத்த, *commonly* மனை. 2. (சது.) To adorn, அலங்கரிக்க.

வன், *adj.* [*a change of* வல், *used in combin.*] Strong, வலிய. 2. Great, மிகு. 3. Cruel, கொடிய.

வன்கணம், *s.* The hard consonants. See வல்லினம்.

வன்கண், *s.* An evil or envious eye, கொடும்பார்வை. 2. Enmity, envy, பொருமை. 3. Cruelty, hard-heartedness, கொடுமை. 4. Bravery, வீரத்தன்மை.

வன்கட்பேதையர், *s.* Women living in a wild and barren country, commonly cruel, பாலைநிலப்பெண்கள். (சது.) 2. Females of savage tribes, குறிஞ்சிநிலப்பெண்கள். (*p.*)

வன்கண்ணன், *s.* An envious man.

வன்கண்மை, *s.* Jealousy. (*p.*)

வன்காய், *s.* A hard, woody fruit.

வன்காரம், *s.* Borax, as வெண்காரம். (*limited.*)

வன்கிழம், *s.* A great age, as வலுகிழம். 2. Extreme precocity. 3. Second childhood. See கிழம்.

வன்குருசு, *s.* [*Chris. usage.*] The cruel cross.

வன்கொடியன், *s.* A very severe man; a wicked and cruel person.

வன்கொலை, *s.* Cruel murder.

வன்சா, *s.* A cruel death. 2. [*fig.*] A perishing crop, அறுப்பழிவு.

வன்சிரம்—வன்சிரமீன், *s.* [*com.* வஞ்சிரம்.] A kind of fish, Scomber Rottleri.

வன்சிறை, *s.* Cruel slavery.

வன்சொல்—வன்மொழி, *s.* Rude language; harsh speech, as கடுஞ்சொல்—*oppos. to* இன்சொல்.

வன்பகை, *s.* Burning enmity, implacable hatred, கடும்பகை.

வன்பால், *s.* Hilly ground, குறிஞ்சிநிலம். 2. Barren ground, பாலைநிலம். 3. A hillock, rising ground, மேடு; [*ex* பால்.]

வன்பிழை, *s.* A great fault, a heinous crime.

வன்பு, *s.* Strength, as வற்பு. 2. Thought, attention, கருத்து, as வன்மை. (உபநி.)

வன்புரை, *s.* A subject, a peculiar theme or topic, in பொருளதிகாரம்.

வன்பொறை, *s.* A heavy burden, a large and ponderous weight, பெரும்பாரம். (*p.*)

வன்மரம், *s.* A very hard timber; a hard timber-tree, satin-wood, Swietenia chloroxylon. (சது.)

வன்மனம், *s.* A hard heart, as கல்நெஞ்சு. (உபநி. 59.)

வன்மீன், *s.* [*lit. a hard fish.*] A crocodile, முதலை. (சது.)

வன்முகிழ், *s.* [*prov.*] Compact part of the cocoa-nut fibre with its shell, தேங்காய்க்காம்பினடி.

வன்னசை, *s.* [*in anat.*] Tendon.

வன்னெஞ்சு, *s.* [*appel.* வன்னெஞ்சன், *fem.* வன்னெஞ்சி.] A cruel heart.

***வன்மம்**, *s.* Malice, grudge, as வர்மம். 2. Any vital member. See மர்மம்.

வன்மத்தானம், *s.* [*also* மருமஸ்தானம்.] Any vital part of the body, as உயிர்த்தானம்.

வன்மமாயிருக்க, *inf.* To be malevolent.

வன்மி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be hardened in mind. 2. To be indurated as trees. [*limited.*]

***வன்மீகம்**, *s.* An ant-hill, புற்று. 2. Ramayana. See வால்மீகம். W. p. VALMEEKA.

வன்மை, *s.* Thought, attention, கருத்து. 2. Strength, வலி. (நீதி. 137.) 2. Violence, பலாற்காரம். (*Ell.* 92.) 3. Skill, competence, ability, சமர்த்து. (*Ell.* 152.) 4. Hardness, See ஊறு. 5. Emphasis, force, accent, சொல்வன்மை; [*ex* வல்.]

***வன்னம்**, *s.* Color. See வண்ணம். (*Ell.* 190.)

***வன்னி**, *s.* Fire, நெருப்பு. 2. The Suma tree, Prosopis spicigera. See சமிதை. W. p. 745. VAHNI. 3. A parrot, கிளி. 4. Brahmachari, the first of the four orders, பிரமசாரித்துவம். (சது.) 5. The name of a general in Rama's army, மூலபலத்தலைவன்.

வன்னிகர்ப்பம், *s.* The bambu, மூங்கில். [*Sa. Vahnigarbha.*]

வன்னிகர்ப்பன், *s.* Subramanya, முருகன்.

வன்னிபோக்கியம், *s.* Ghee, நெய். [*Sa. Vahnib'hogya.*]

வன்னிமாரகம், *s.* Water, as extinguishing fire, நீர்; [*ex* மாரகம்.]

வன்னிமித்திரன், *s.* Wind as favoring fire, காற்று, [*ex* மித்திரம்.]

வன்னி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* [*com.* வர்ணி.] To praise, describe, சிறப்பிக்க. 2. To invoke, வேண்ட. See வருணி.

வன்னியன், *s.* [*pl.* வன்னியர்.] One of a certain tribe, mostly inhabiting the districts of Trichinopoly and Madura. 2. [*loc.*] A man of the பள்ளி caste. 3. A certain giant, as வன்னி.

வன்னிமை, *s.* State of the வன்னியர் caste. (*p.*)

வா

வா. A syllabic letter of வ் and ஆ.

வா. v. [imperative.] Come. See வரு.

வாவெனல், v. noun. Bidding one to come, calling.

*வாகடம், s. A medical book, வைத்திய நூல். 2. Medical science, வாகடசாஸ்திரம்.

வாகணை, s. A jetty extended into a river to turn the stream from the bank.

*வாகனம், s. A vehicle, a conveyance of any kind—as a horse, an elephant, or a carriage, ஏறிநடத்தப்பட்டவை. W. p. 757. VAHNA; hence wagon, wain, van. 2. Cloth tied in bundles, மூட்டை, சீலைக்கட்டு. (சது.)

வாகன், s. A fine looking man. See வாகு.

*வாகியம், s. [improp. வாக்கியம், also பாகியம்.] That which is out; the open field, வெளி. W. p. 757. VAHYA.

வாகியத்துக்குப்போகிறது. Going out to the fields. 2. [fig.] Going to stool.

*வாகினி, s. An army, படை. 2. A division of an army, consisting of eighty-one elephants, eighty-one cars, two-hundred and forty-three horse, and four-hundred and five foot, சேனைவிசேஷத்தொகை. W. p. 757. VAHINEE.

*வாகீசர்—வாக்கீசர், s. A name of அப்பர் a devotee of Siva. (தத். 162.)

*வாகீசுவரன், s. An author, writer of a book or poem, ஆக்கியோன். W. p. 746. VAGEES'VARA. 2. Brahma, பிரமன்.

வாகீசுவரி—வாகேசுவரி, s. Sarasvati, the wife of Brahma, as the goddess of learning, சரஸ்வதி.

வாகு, s. Beauty, அழகு. (சது.)

அதைவாகாய்ச்செய். Do it nicely.

வாகன், s. [fem. வாகி.] A fair, handsome man; a well behaved person.

வாகெடுக்க— வாக்கெடுக்க, inf. To part the hair in a line from the crown of the head towards the nose.

*வாகு, s. [also பாகு.] Shoulder, தோள். W. p. 605. BAHU.

வாகுசன், s. A Kshetriya warrior as born from the shoulders of Brahma, சத்திரியன்; [ex சன்.]

வாகுபுரி, s. The brahman's string worn over the left shoulder, பூணூல்.

வாகுலேயன், s. Kartikeya, the second son of Siva, முருகன். (Sa. Vahuleya.)

வாகுவலயம், s. A kind of epaulet, as தோளணி.

வாகை, s. One of the eight kinds of garlands. See வெற்றிமாலை. 2. Division of a moral book, a moral subject, அறத்தின்றுறை. 3. A gift, beneficence, ஈகை. 4. Good behavior, ஒழுக்கம். 5. Plenty, மிகுதி, 6. Victory, வெற்றி. 7. Penance, தவம். (சது.) 8. Nature, பண்பு. 9. (c.) A flowering tree, ஓர்பூமரம். 10. A tree whose leaves are medicinal, Mimosa flexuosa. The different kinds are இலைவாகை, காட்டுவாகை, and பெருவாகை; also நிலவாகை, a plant, Cassia senna.

வாகைமாலை, s. A wreath of its flowers. See வெற்றிமாலை. 2. A panegyric on a victor crowned with a wreath of வாகை. See பிரபந்தம்.

*வாக்கி, s. A rhetorician in ethics. See புலமையர். 2. A natural poet, as வரகவி; [ex வாக்கு.]

*வாக்கியம், s. A sentence; a speech of a great, or divine person, an oracle, வேதவியமம். 2. An aphorism, or wise saying, பழமொழி. 3. A proposition, containing the subject, object, and predicate. 4. The system of Astronomy followed in the south, as distinguished from the Surya Siddhantha, of the north, வாக்கியசித்தாந்தம். 5. An astronomical table, or a line in such table, கணிதத்திலொருவரி. W. p. 746. VAKYA. 6. See வாகியம்.

ஒத்தவாக்கியஅகராதி. A dictionary of parallel passages. (Chris. usage.)

மாதுருவாக்கியம். The words of a mother.

மூலவாக்கியம். Original text.

அவவாக்கியம். An inauspicious, or ominous expression.

சுபவாக்கியம். An oracular indication of good.

தேவவாக்கியம். An inspired speech, passage or text.

பிரதமவாக்கியம். The first major proposition in a syllogism.

இரண்டாம்வாக்கியம. The minor proposition. R. de Nobili.

வாக்கு, s. Manner, way, விதம். 2. Side, direction, பக்கம். 3. Irregularity, ஒழுங்கின்மை.

உடம்பொருவாக்காயிருக்கிறது. My body is a little out of order.

கோட்டியவில்வாக்கறிந்து. Knowing the bent state of the bow. (நாலடி.)

கிடந்தவாக்கிலேகிடக்கட்டும். Let [him or it] remain so.

வாக்குக்கண், s. [appel. வாக்குக்கண்ணன்.] Squint eye, மாறுகண்.

வாக்கெடுக்க, inf. See வாகெடுக்க.

*வாக்கு, s. Word, speech, வார்த்தை. 2. The mouth, as one of the five organs of the body. See இந்திரியம். [ex Sa. Vach.]

வாக்கு, ச. Four different sounds; 1. சூக்குமை, the sound from the navel—the supposed source of the air, or wind which gives intonation; 2. பைசந்தி, sound from the breast or lungs; 3. மத்திமை, sound from the throat or epiglottis; 4. வைகரி, articulate sound, from the tongue or mouth.

அவருடையதுநல்லவாக்கு. His poetical composition is good.

அவன்வாக்கிலேகேட்டேன். I heard it from his mouth.

அமிர்தவாக்கு, s. A sweet word, a word of good omen—oppo. to விஷவாக்கு.

வாக்காட, inf. To say, to speak. 2. To quarrel, as வாயாட.

வாக்காள், s. Sarasvati, as வாகேசுரி.

வாக்குக்குற்றம், s. A mistake, or fault, in speech, as வாய்க்குற்றம்.

வாக்குக்கெட்டாதது, appel. n. That which is unspeakable.

வாக்கிட, inf. To promise. (p.)

வாக்குச்சகாயம்பண்ண, inf. To aid by words, to recommend.

வாக்குச்சித்தி, s. Success from words. See under சித்தி.

வாக்குச்சொல்ல — வாக்குக்கொடுக்க— வாக்குப்பண்ண, inf. To promise, declare, pledge one's word.

வாக்குத்தத்தம், s. A promise. See தத்தம்.

வாக்குத்தம்பம், s. The art of fascinating the mouth. See கலைஞானம்.

வாக்குத்தானம், s. See தானம், ௰உ.

வாக்குத்தானச்சனி, s. As இரண்டாமிடத்துச்சனி, under சனி. (R.)

வாக்குத்திட்சை—வாசகதிட்சை, s. Oral instruction—one of the modes of enlightening the mind of a disciple. See திட்சை.

வாக்குநாணயம், s. Fidelity to one's word, unfailing fulfilment of promises.

வாக்குப்பிசக, inf. To slip, in words or utterance, as the tongue in pronunciation. 2. See பிசகு.

வாக்குப்புரள — வாக்குமாற, inf. To fail in a promise, to break one's words.

வாக்குப்புறப்படுதல், v. noun. The coming out of words from the mouth.

வாக்குமூலம், s. A deposition in which the statements of complainants, defendants, and witnesses, are taken with their signatures. 2. [as adv. also வாக்குமூகாந்தரம்.] By word of mouth; upon one's assertion.

வாக்குமூலம்வாங்குகிறது. Getting one's deposition as a magistrate. (Govt. usage.)

வாக்குரோசம்—வாக்குரோஷம், s. Irritation from insulting words, irascibility.

வாக்குவசீகரம், s. Cajoling, wheedling, இன்சொல்.

வாக்குவல்லபம், s. Emphatic and powerful language, oratorial speech.

வாக்குவாதம், s. A disputation, a quarrel.

வாக்குவிசேஷம், s. An effective speech.

வாக்குவிற்க, inf. To give a binding promise, (lit.) to sell one's words. (Colloq.)

நானவனுக்குவாக்குவிற்றிருக்கிறேன், தவறக்கூடாது. I cannot fail, for I have promised him firmly.

வாக்க, inf. To pour out. See வார், v.

வாங்கா, s. [vul. for வங்கா.] Trumpet.

வாங்கு, s. A dagger, பிச்சுவா. 2. [for.] A bench, a seat, a board with legs, commonly வாங்குப்பலகை.

வாங்கு, கிறேன், வாங்கினேன், வேன், வாங்க, *v. a.* To receive or take a thing, ஏற்க. 2 To buy, கொள்ள. 3. To bend, வளைக்க. 4. To admit, to receive a person, வரவழைக்க. 5. To draw back, retract, withdraw, பின்வாங்க.

இதைஎங்கேவாங்கினுய். Where did you buy this?

சுவர்சற்றுவாங்கியிருக்கிறது........The wall has given way a little.

உன்கையைவாங்கு. Take away your hand.

ஒருவனைக்கையைவாங்குகிறது. Cutting one's hand off.

இதைநீவாங்கிக்கொள். Take this.

வாங்காமல், *as adv.* Without intermission, incessantly.

வாங்காமலிறைத்துக்கொண்டிருந்தார்கள். They were drawing water continually.

என்வீட்டுக்குவாங்காமல்வருகிறுன். He always comes to my house.

வாங்கி, *appel. n.* [*vul.*] A pimp, (*lit.*) one whe receives. See சங்கம்வாங்கி.

வாங்கிக்கொடுக்க, *inf.* To buy for another. See கொடு.

வாங்கிப்போக, *inf.* To go off, to cease.

தண்டுவாங்கிப்போயிற்று. The army has decamped.

மேகம்வாங்கிப்போயிற்று. The clouds are dispersed.

நோவுவாங்கிப்போயிற்று........The pain has ceased.

வாங்கிப்போட, *inf.* To take off, to remove.

அவனுக்குத்தியோகத்தைவாங்கிப்போட்டார். He dismissed him.

வாங்கல், *v. noun.* Receiving, or admitting, ஏற்றல், வரவழைத்தல். 2. Buying, கொள்ளல். 3. Bending, crookedness, bend of a wall, &c., வளைவு. (சது.) 4. Untoward feeling, மனஸ்தாபம். 5. Distance, தூரம். 6. Depth, ஆழம்.

இரண்டுபேருக்கும்வாங்கலாயிருக்கிறது. They both have ill-will against each other.

அதுக்கிதுவாங்கல். This is farther than that.

இந்தநிலம்வாங்கலாயிருக்கிறது. This ground is slippery. (*R.*)

வாங்கலினுற்கடலிலிறங்கப்படாது. The sea is too deep to ford. (*Beschi.*)

வாங்கற்காரர், *s.* Creditors.

வாங்கற்காரருக்குவகைசொன்ஞன். He compounded with his creditors.

கொடுக்கல்வாங்கல், *v. noun.* Intermarriage. 2. See கொடு, *v.*

*வாசகம், *s.* Sentence, composition, வசனம். 2. Prose, சொன்னடை. 3. Letter, epistle, கடிதம்; [*from Sa. Vachaka*, a word.]

ஒருவாசகஞ்சொல்லு. Give a dictation.

அதுவாசகமோகவியோ. Is it prose or verse?

வாசகங்கட்ட, *inf.* To compose language, to make sentences.

வாசகஞானம், *s.* Mere profession of piety.

வாசகப்பா, *s.* [*improp.* வாசாப்பு.] A comedy, tragedy.

வாசகப்புத்தகம், *s.* A reading-book for learners.

வாசகன், *s.* A speaker.

ஒருசொல்வாசகன். One who speaks truth; (*lit.*) a one-word-man.

மேல்வாசகம், *s.* A copy-book. 2. As மேல்விளாசம்

*வாசந்தி, *s.* A large creeper, வசந்தகாலமல்லிகை, Gærtnera racemosa, *L.* W. p. 756. VASANTA.

*வாசபேயம், *s.* A kind of sacrifice, ஓர்வேள்வி. W. p. 748. VAJAPEYA.

*வாசம், *s.* A dwelling place, an abode, a habitation, இருப்பிடம். 2. A borough, a country, a village, ஊர். 3. A city or small town in a cultivated country, மருதநிலத்தூர். 4. Smell, scent, odor, மணம். 5. Cloth, சீலை. W. p. 756. VASA. 6. An arrow, அம்பு. 7. Feathers, wings, இறகு. [*Sa. Vasa.*] 8. Celerity, heat, swift motion, வேகம். (சது.) 9. Speech, word, வாக்கு. 10. [*prov.*] Sarasvati, the goddess of learning, சரஸ்வதி. [*Sa. Vacha.*]

சகவாசம், *s.* Cohabitation, familiarity. See under சக.

வாசம், ரு. The five aromatics. See பஞ்சகந்தம் under கந்தம்.

வாசங்கட்ட — வாசனைகட்ட, *inf.* To perfume.

வாசஸ்தலம், *s.* A habitation, a dwelling, a house.

வாசம்பண்ண—வாசஞ்செய்ய, *inf.* To dwell, inhabit, to lodge.

வாசர் — வாசிகள், *s.* [*sing.* வாசன், வாசி.] Dwellers, inhabitants—as வனவாசர், inhabitants of a wilderness.

வாசி, *s.* A dweller—as வனவாசி, a hermit.

*வாசரம், *s.* A day, நாள். W. p. 756. VASARA.

வாசனூர், *s.* A town on the Malabar coast, Barcelore.

வாசல், *s.* [*prop.* வாயில்.] A gateway, portal, entrance. (*c.*)—*Note.* The common entrances are ஆசாரவாசல், சாளரவாசல், தலைவாசல், திட்டிவாசல், திருவாசல், தெருவாசல், நுழைவாசல்.

வாசற்கதவு, *s.* The door that closes the entrance.

வாசற்காப்பான், *appel. n.* A door-keeper, a porter.

வாசற்கால், *s.* The door-frame.

வாசற்காவல், *s.* Guard at a gate; a watch, a sentry, காவலாளன். 2. Guarding, watching, காப்பு.

வாசற்படி, *s.* The door-sill; also the door-way.

*வாசவன், *s.* A name of Indra, இந்திரன். W. p. 756. VASAVA.

*வாசனம், *s.* Understanding, knowledge, அறிவு. 2. Cloth, புடவை. W. p. 756. VASANA. 3. Voice, sound of the human voice, குரல். 4. Smell, மணம். 5. Reading, வாசிப்பு. See வாசனை.

வாசனி, *s.* A canopy; a cloth-lining, under the roof of a room, மேற்கட்டி. (சது.)

*வாசனை, *s.* Smell, fragrance, மணம். 2. Abode, residence, இடம். 3. [*fig.*] Knowledge, experience of joys or sufferings by the senses, as வாசனம். 4. (*R.*) Reading, as எழுத்துவாசனை, reading and writing.

இயற்கைவாசனைசெயற்கைவாசனை. Natural and acquired habits.

வாசனையடிக்கிறது. It smells; it gives an odor.

வாசனைதட்ட, *inf.* To perceive [to strike with] a smell.

வாசனைத்திரவியம் — வாசனைப்பண்டம், *s.* Mingled perfume, spices, aromatics.

வாசனைபூசுதல், *v. noun.* Unction of fragrant ointment.

வாசனைப்பொடி, *s.* Sweet scented powder, as கந்தப்பொடி.

வாசனைவிட, *inf.* To yield a fragrant smell.

*வாசா, *s.* (*St.* வாச்சா.) Speech, வாய்விசேஷம். W. p. 747. VACHA.

வாசாஞானம், *s.* Speculative knowledge.

வாசாமகோசரம், *s.* That which is beyond the power of language [*to express*], வாக்குக்கெட்டாமை; [*ex* அகோசரம்.] (*Ell.* 243.)

*வாசாகாரம், *s.* *Zenana;* ladies' apartments in a house, அந்தப்புரம்; [*ex* வாசம் *et* ஆகாரம்.] W. p. 756. VASAGARA.

வாசாப்பு, *s.* [*loc.*] A comedy. See வாசகப்பா.

*வாசாலம்—வாசாலகம், *s.* [*com.* வாய்ச்சாலம்.] Talkativeness, loquaciousness. (*Sa. Vachala.*)

வாசாலன்—வாசாலகன், *s.* A just talker. (சது.)

வாசி, *s.* Reason, cause, நிமித்தம். 2. Quality, nature, தன்மை. 3. Health, convalescence, சௌக்கியம். 4. A quantity, portion, அளவு. 5. Abundance, மிகுதி. 6. Discount.

அரைவாசி. Half-part.

கால்வாசி. Quarter-part.

முக்கால்வாசி. Three-quarter-part.

முழுவாசி. The whole.

வட்டிவாசி. Interest-balance.

தண்டுவாசி. Reparation of loss.

ஆனவாசி. For that reason.

நீவராதவாசிகாரியங்கெட்டது. The business failed because you did not come.

அதுமண்வாசி. It is owing to the nature of the soil.

அதிலும்இதுவாசி. This is better than that.

வியாதிவாசியாய்ப்போயிற்று. The disease is cured.

வாசிகாண — வாசியறிய, *inf.* To find more in quantity.

அளவுவாசிகண்டது. By measure there is an excess.

வாசியாக, *inf.* [*trans.* வாசியாக்க.] To be cured.

வாசியாதஸ்து, *s.* Memorandum of the amount of produce, கண்டுமுதற்குறிப்பு.

*வாசி, *s.* A horse, குதிரை. 2. An arrow, பாணம். 3. A bird, பறவை. W. p. 748. VAJIN. 4. Harmonious song, இசைப்பாட்டு. 5. The first lunar mansion, அச்சுவினி. (சது.) 6. Breath or vital air, *a term in the yoga philosophy*, சுவாசம். 7. A dweller. See வாசம்.

*வாசிகம், *s.* News, tidings, intelligence, message, செய்தி. W. p. 747. VACHIKA.

வாசிகன், *s.* A messenger, தூதன்.

*வாசிகை, *s.* A garland, மாலை. 2. A string of flowers, கோத்தமாலை. (சது.)

வாசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To read, படிக்க. 2. To play on the lute, or other musical instrument, வீணைமுதலியவாசிக்க. 3. To learn, கற்க. (*c.*)

வாசிக்கஅறிந்தவன்—வாசிக்கத்தெரிந்தவன்......A man who knows how to read.

நீயாரிடத்தில்வாசித்தாய். Under whom did you learn?

வாசிப்பு, v. noun. Reading, as வாசனை.

*வாசிட்டம், s. A treatise on Hindu law, as வசிட்டம். See தருமநூல். 2. One of the *Upa-puranas*—as வாசிட்டலைங்கம். See உபபுராணம். (சது.) 3. A part of the Vedas, or particular *mantras*. [*Sa. Vasishta.*]

*வாசிராயணீயம், s. A *Upanishad*. See உபநிடதம்.

வாசிபு, s. [*Hind.*] Propriety of conduct. அவன்வாசிபாய்க்கொடுத்துவிடுவான். He will pay regularly.

வாசு, s. A fragrant grass, இருவேலி. (*French Dic.*)

*வாசுகி, s. One of the eight serpents fabled to support the earth—also said to be used as a rope round Mount Mandara in churning the sea of milk. See under நாகம். W. p. 756. Vasuki.

*வாசுதேவன், s. A name of Krishna, கிருஷ்ணன்; [*ex* வசுதேவன்.]

*வாசை, s. A shrub, ஆடாதோடை, Justicia adhatoda. W. p. 755. Vasa.

வாச்ச, *rel. part.* [*vul. for* வாய்த்த.] Succeeded; obtained. See வாய், v.

*வாச்சல்லியம், s. Tenderness, affection, fondness, love, as வற்சலம். W. p. 750. Vatsalya.

*வாச்சி—வாய்ச்சி, s. A carpenter's adze, மரஞ்செதுக்குமாயுதம். W. p. 756. Vasi.
வாச்சியாலெறிதல். Hewing with an adze; a cruel punishment formerly inflicted on criminals.

*வாச்சியம், s. Musical instruments, as வாத்தியம். (சது) 2. The meaning of a வாசகம் or what is said to exist in a வாச்சியம்; the signification either of a simple or complex term, வாசகத்தின்பொருள். 3. Reproach, taunt, நிந்தை. [*ex Sa. Vachya.*] 4. [*prov.*] That which is manifest or clear, வெளிப்படை.

*வாச்சியாயனன், s. The name of a Muni who was the author of an erotic Sanscrit work, காமநூற்செய்தமுனி. [*Sa. Vatsyayana.*]

*வாஞ்சனை — வாஞ்சை, s. Desire, wish, affectionate and great desire, ஆசை. W. p. 748. Vanch'chana.
பெருவாஞ்சை. Extravagant, immoderate desire; avarice.
வாஞ்சைவைக்க, *inf.* To have desire, as வாஞ்சிக்க.

வாஞ்சி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To long for, to wish, to pant after, இச்சிக்க. (c.)

*வாடகை, s. [*vul.* வாடை. *Tel.* బాడిగ.] Rent, hire, anchorage, குடிக்கூலி. W. p. 616. Bhat'aka.

வாடா, [*fem.* வாடி.] Come sirrah. See அடா, அடி. [*contract. of* வா *et* அடா.]

*வாடி, s. An enclosure, a fenced place, அடைப்பு. 2. A garden, தோட்டம். W. p. 748. Vat'a. 3. See வாடா.
அந்தஊருக்குவாடிபோட்டிருக்கிறது. The village is fenced round.

வாடிக்கை, s. [*Tel.* వాడిక.] Custom, usage, habit, வழக்கம்.
அதனைக்குவாடிக்கையில்லை.....It is not my habit.

வாடு, கிறேன், வாடினேன், வேன், வாட, v. n. To wither, to fade, to die—as a plant, சோம்ப. 2. To be emaciated, to become weak, இளைக்க. 3. To shrink, desiccate, grow dry, வதங்க. 4. [*fig.*] To pine away.
அவன்முகம்வாடவில்லை....His face is not turned pale.
சேவகர்க்குவாடாதவன்கண்வனப்பு. Soldiers are adorned by unshrinking bravery. (*Ell.* 292.)
பீடைவரினும்வாடாதிரு. Though affliction betide thee, pine not. (*Avv.*)
வாடாக்குறிஞ்சி, s. A plant. See குரவகம்.
வாடாமஞ்சள், s. The unfading saffron-shrub.
வாடாமல்லிகை, s. An amaranth, Gomphrena globosa; [*ex* மல்லிகை.]
வாடல், v. *noun.* Withering, dying, becoming lean, fading.
வாடல்வெற்றிலை, s. A dried betel-leaf.

வாடை, s. The north-wind, வடகாற்று. 2. Wind, காற்று. 3. Fume, effluvia, scent, வாசனை, as மஞ்சள்வாடை. 4. Range, line, order, வரிசை. 5. A street, தெரு. 6. The side of a street, தெருவின்பக்கம்—as கீழண்டைவாடை, the east; தெற்கண்டைவாடை, the south; மேலண்டைவாடை, the west; வடவண்டைவாடை, the north side of a street. 7. A street of herdsmen, இடையர்வீதி. 8. A street of wild foresters, வேடர்வீதி. 9. [*vul.*] Rent. See வாடகை.
வாடைஅடிக்கிறது. The north-wind blows.
வாடைமடக்கும்வசந்தனைக்கண்டவே. The north-wind gives place when it sees the south-wind. (*p.*)
அதுவாடையாயிருக்கிறது. It is in a line. (*R.*)
நாய்வாடைபிடித்துவந்தது. The dog has taken the scent.
அதுமேலண்டைவாடையிலிருக்கிறது. It is on the west-side [of the town].
வாடையிலேஓட—வாடையாலேஓட, *inf.* To sail with a north-wind.

வாட்கை, s. [*improp. for* வாழ்க்கை.] Conjugal union, &c.

வாட்சி, s. [*improp.*] An adze. See வாச்சி. (*R.*)

வாட்டம், s. Slope of the ground, or of a roof, which allows the water to flow off, சாய்வு. 2. [*ex* வாடு.] Decay, dryness, &c., வாடுகை. 3. Leanness, மெலிவு. (*c.*)
முகவாட்டம். A sad countenance.
வாட்டரவு, s. Faintness, சோர்வு. 2. Decay, உலர்வு.

*வாட்டம், s. A street, தெரு. 2. A garden, தோட்டம். 3. A way, வழி. (சது.)

வாட்டி, s. A time, turn—as once, twice, தடவை. (*Colloq.*)

வாட்டு, கிறேன், வாட்டினேன், வேன், வாட்ட, v. a. To cause to wither or fade, வதக்க. 2. To vex, afflict, or make lean, துன்புறுவிக்க. (*c.*)
அதைநெருப்பிலேவாட்டு. Dry it by the fire.
காய்ச்சலென்னைவாட்டிவிடுத்துவிட்டது......Fever has greatly harrassed me.
உடம்பைவாட்டுகிறான். He mortifies his body.
வாட்டிவைத்துக்கட்டுகிறது. Applying warmed leaves [to a sore].

வாட்டாழை, s. A kind of sea-plant yielding an edible fruit; [*ex* வாள் *et* தாழை.]

வாட்டு, s. That which is handsome, reasonable, pleasant, or lucky. (*Colloq.*)
அந்தத்தொழிலெனக்குவாட்டாயிருக்கவில்லை. The business does not suit me.
அதெனக்குநல்லவாட்டாய்க்கிடைத்தது. I got it very cheap.
வாட்டாயகப்படாதபொருள். A thing that cannot be readily had.

*வாணகந்தி, s. The pepul-tree, அரசமரம். 2. A kind of prepared arsenic, நீர்பாஷாணம்.

*வாணம், s. [*com.* பாணம்.] An arrow, அம்பு. 2. A rocket, fire work. W. p. 748, Van'a.—Of rockets are different kinds: ஆகாசவாணம், sky-rocket; எலிவாணம், மூஞ்சூறுவாணம், a running fire work—as a rat or mouse; கம்பவாணம், rockets tied to a pole; சக்கரவாணம், wheel-rockets; தருத்திவாணம், a rocket in the form of a leathern bag, see தருத்தி; தேர்வாணம், one tied in the form of a car; நட்சத்திரவாணம் or பூவாணம், sky-rocket, like stars or flowers; படைவாணம், war-rockets; புதைவாணம், a rocket-mine.
வாணக்குழல், s. A rocket-tube.
வாணங்கட்ட, *inf.* To make rockets.
வாணம்விட, *inf.* To throw rockets.

வாணன், s. A prosperous man. See வாழ்நன். 2. (சது.) The third lunar mansion, கார்த்திகைநாள். 3. A chief famous for liberality who lived in தஞ்சாக்கூர், and was called also தஞ்சைவாணன் or தஞ்சாக்கூர்வாணன்; [*ex Sa. Vana*, living.]

*வாணன், s. An Asura, said to have had a thousand hands, and considered as a sovereign, *commonly* வாணாசுரன். W. p. 748. Van'a.

வாணுள், s. [*vul.* வாணாள்.] The life-time, as வாழ்நாள்.

*வாணி, s. [*also* பாணி.] Word, language, சொல். 2. Speech, சொல்லுகை. 3. Sarasvati, the goddess of learning, சரஸ்வதி. W. p. 749. Van'ee. 4. A play, a dance, கூத்து. 5. (சது.) Water, as பாணி.
வாணிகேள்வன், s. Brahma as the husband of Sarasvati, பிரமன்.
வாணினி, s. A dancing girl, கூத்தி. 2. A meretricious, or an immodest, intriguing woman, மதத்தவள். W. p. 749. Van'in.
வாணீசன், s. Brahma as lord of வாணி.

*வாணிகம் - வாணிச்சியம் - வாணிபம்—வாணியம், s. [*as* வணிகம், வணிச்சியம்.] Merchandize, traffic, வியாபாரம். W. p. 603. Ban'yjya. 2. Gain, profit, இலாபம்.
வாணிகஞ்செய்வார்க்கு வாணிகம்பேணிப்பிறவுந்தமபோற்செயின். Trade will proft those who regard the rights of others, as well as their own. (*Cural.*)
வாணிகன், s. A merchant, செட்டி. 2. Libra in the Zodiac, துலாராசி. (சது.)
வாணிபர், s. Merchants in general.
வாணியன், s. [*fem.* வாணிச்சி.] A man of the oil-monger-caste, as செக்கான்.

*வாணிதம், s. Toddy, கள். (சது.)

*வாணியன்—வாணினி. See வாணி, வாணிகம்.

வாணுதல், s. A shining forehead, &c. See வாள்.

வாதமை, s. [*vul.*] The almond tree. See வாதுமை.

*வாதம், *s.* Wind, air, காற்று. 2. The vital airs, வாயு. 3. One of the diseases from bad humors of the body. See முப்பிணி. 4. Rheumatism, gout, inflammation of the joints, வாயுநோய். W. p. 749. VATA. 5. Disputation, argument, discussion, தருக்கம். [*Sa. Vada.*] 6. Alchemy, a pretended art of transmuting metals, &c.; occult chemistry, as taught in India, இரசவாதம்; [*a corrupt. of Sa. Vatiga.*]—*Note.* There are different kinds of rheumatism, as இளம்பிள்ளைவாதம் or பச்சைவாதம், a kind of pleurisy; கா‌ட்டுவாதம், a goitre, wen; காஸ்தம்பவாதம், a kind of flatulency; குதிவாதம், a cramp in the heels; திமிர்வாதம் palsy, paralysis.

வாதம்ஊதியறிவேதம்ஓதியறி. Try alchemy by refining metals, and the Vedas by sound learning. *Prov.*

வாதகரப்பான், *s.* The Ailanthus tree.

வாதகரப்பான்பட்டை, *s.* Its bark which is used as an antidote for paralysis.

வாதகாசம், *s.* A pulmonic complaint. See காசம்.

வாதகாலம், *s.* The third period of life; see also பித்தம் and சிலேட்டுமம். 2. The third division of a day.

வாதகுன்மம், *s.* Hypochondriac disorders. See குன்மம்.

வாதக்காலன்—வாதக்கையன், *s.* One who is arthritic in his arms and legs.

வாதக்கொதி—வாதசுரம், *s.* Feverish state of the body from flatulent, or acid humors.

வாதசரீரம், *s.* A bloated body. See சரீரக்கூறு.

வாதசாரதி, *s.* An epithet of *Agni*, as driven by the wind, அக்கினி. (சது.)

வாதசூலை, *s.* Arthrites, or gout, from cold humors. See சூலை.

வாதநாடி, *s.* A low, flatulent pulse. See நாடி.

வாதநிகண்டு, *s.* A treatise on the nostrums and mysteries of Alchemy. There are three such treatises, ascribed severally to போகர், சட்டைமுனி, and மச்சமுனி.

வாதநீர், *s.* Rheumatic humors, flatulency.

வாதபித்தசூலை, *s.* An arthritic complaint from bad humors and bile. See சூலை.

வாதபோதம், *s.* A tree, Butea frondosa, பலாசு. [*Sa. Vatapot'ha.*]

வாதப்பிடிப்பு, *v. noun.* Rheumatic affections.

வாதப்பிரமி, *s.* The antelope—as outstripping the wind, மான். [*Sa. Vatapra-mi.*]

வாதமடக்கி, *appel. n.* Two different trees furnishing medicine for flatulency, நந்தக்காரி, தழுதாழை.

வாதராட்சதன்குளிகை, *s.* A medicinal pill.

வாதயுத்தம், *s.* Contention in argument, disputation; polemical literature.

வாதரோகம்—வாதாதிரோகம்—வாதநோய், *s.* Acute rheumatism or gout.

வாதாதிசாரம், *s.* A diarrhœa by which the belly is inflated; the first of the four kinds of அதிசாரம்—the others are, பித்தாதிசாரம், vomiting and purging; சிலேஷ்மாதிசாரம், a severe disease from cold; திரிதோஷாதிசாரம், a fatal disorder in which the three humors are complicated.

வாதராக்காச்சி, *s.* [*prov.*] A tree, as வாதாராயணம்.

*வாதராயணம், *s.* Shooting an arrow; using a bow, அம்பெய்கை. 2. Acceleration; great velocity, swift motion, மிகுகதி. 3. The peak of a mountain, மலைச்சிகரம். 4. A sort of pine-tree, ஓர்மரம். 5. A sword, வாள். W. p. 759. VATARAYAN'A.

*வாதராயணன், *s.* *Vyasa*, the compiler of the Vedas and author of *Maha Bharata*, வியாசன். W. p. 750. VADARAYANA.

*வாதனம், *s.* Cloth, சீலை. (சது.)

*வாதனை, *s.* Pain, வருத்தம். [*poetice* யாதனை.] 2. Impediment, தடை. W. p. 603. BAD'HANA. 3. Knowledge of pleasure and pain, experience through the senses, as வாசனை.

*வாதாயனம், *s.* A window, பலகணி; [*ex* வாதம், wind *et* அயனம், course.] W. p. 750. VATAYANA.

*வாதி, *s.* A complainant, a plaintiff—*oppos. to* பிரதிவாதி. 2. A disputant, வாதஞ்செய்வோன். W. p. 751. VADIN. 3. One of the four poets. See புலமையர். 4. An alchemist, வாதவித்தைசெய்வோன்; [*ex* வாதம்.]

வாதிபட்சம், *s.* Plaintiff's side or part.

வாதிபட்சந்தீர்ந்தது......It was decided in favor of the plaintiff.

வாதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To torment, afflict, trouble, plague, as உபாதிக்க; [*ex Sa. Vad'ha.*] 2. To argue, to dispute, to conduct a logical process, தருக்கிக்க. 3. To discourse, discuss, பேச; [*ex* வாதம்.]

வாதிப்பிக்க, *inf.* To cause to plague.

*வாது, *s.* Disputation, a discussion, தருக்கம். (*Ell.* 141.) 2. A dispute, a quarrel, சண்டை. [*ex* வாதம்.] (சது.)

வாதாட, *inf.* [*appel. n.* வாதாடுகிறவன், *also* வாதுக்காரன்.] To dispute, to wrangle.

வாதுமுற்கூறேல். Do not begin a quarrel. (*Avv.*)

வாதுமை, *s.* [*improp.* வுாதமை.] Almond tree, வாதுமைமரம்.

வாதுமைக்கொட்டை — வாதுமக்கொட்டை, *s.* Almonds.

வாதுமைக்கொட்டைப்பிசின், *s.* Gum—Tragacanth, Astragalus Verus.

வாதுமைப்பருப்பு, *s.* A kernel of the same.

வாதுவர், *s.* Caviliers, horsemen, குதிரைப்பாகர். 2. Elephant drivers, யானைப்பாகர். (சது.)

*வாதுளம், *s.* An Agama of the Saivas. See சிவாகமம்.

*வாதை, *s.* Affliction, torment, plague, as உபாதை. 2. Sickness, pain, நோய். W. p. 603. BAD'HA.

வாதைப்பட, *inf.* To suffer pain, to be afflicted.

*வாதோரணமஞ்சரி, *s.* A poem extolling the bravery of those who subdue a raging elephant, or kill one or more furious elephants of a hostile army. See பிரபந்தம்.

*வாத்தி, *s.* [*com. for* உவாத்தி, *fem.* வாத்திச்சி. *hon.* வாத்தியார், *pl.* வாத்திமார்.] A teacher, school-master, கற்பிப்போன். See உவாத்தி.

*வாத்தியம், *s.* [*poet.* வாச்சியம்.] Any musical instrument. W. p. 751. VADYA.

வாத்தியமுழக்க—வாத்தியம்பண்ண, *inf.* To beat the kettle-drum.

வாத்தியம்வாசிக்க, *inf.* To play upon a musical instrument.

பெரியவாத்தியம், *s.* A large drum, as பேரிகை. (*R.*)

வாத்து, *s.* [*for.*] A goose, பெருந்தாரா. 2. [*Madura usage.*] A branch as கொப்பு.

*வாத்து—வாஸ்து, *s.* [*used in combin.*] A house. W. p. 755. VASTU.

வாத்துசாந்தி—வாஸ்துசாந்தி, *s.* A propitiatory ceremony. See under சாந்தி.

வாஸ்துபுருடன் — வாஸ்துமன், *s.* The image made for the வாஸ்துசாந்தி. See சாராட்புருடன்.

வாத்துபோதம், *s.* An order of architecture. See சிற்பநூல்.

வாந்தம், *s.* Bantam, a town in Java.

*வாந்தி, *s.* [*Jaff.* சத்தி.] Vomiting, ஓக்காளம். W. p. 751. VANTI.

எனக்குவாந்தியாயிற்று I have vomited.

வாந்திக்குவாங்க, *inf.* To take an emetic.

வாந்திபண்ண — வாந்தியெடுக்க, *inf.* To vomit.

வாந்திபேதி, *s.* Cholera, (*lit.*) vomiting and purging; *sometimes* வாந்திபிராந்தி.

வாந்திபேதியாற்செத்தான். He died of cholera.

வாந்திமருந்து, *s.* An emetic.

வாந்தி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To vomit, *commonly* more than once. [*limited.*]

வாபஸ்—வாப்ஸ், *s.* [*Pers.*] Returning; refunding.

வாபஸ்செய்துபோடு. Return it.

*வாமம், *s.* Beauty, அழகு. 2. Left side, இடப்பக்கம். (தத். 165. *El.* 164. 8.) 3. Light, brightness, splendor, ஒளி. 4. One of the five faces of Siva, that which indicates illumination. See ஈசான்முகம், ®. 5. A snake, ஓர்பாம்பு. 6. Shortness, dwarfishness, குறுமை. 7. Riches, செல்வம். W. p. 751. VAMA. 8. Breast of women, முலை. 9. Counteraction, opposition, எதிரிடை. 10. One of the six systems of religion. See சமயம். 11. (சது.) The thigh, தொடை.

வாமதேவர், *s.* The name of a Rishi, ஒருரிஷி.

வாமதேவன், *s.* A name of Siva as opposed to human institutions, சிவன்.

வாமலோசனன் *s.* Vishnu, திருமால்; [*ex* உலோசனம்.]

வாமலோசனை—வாமாட்சி, *s.* A woman who has a beautiful eye, அழகியவிழியுடையவள், (சது.) 2. Lukshmi, இலக்குமி.

*வாமலூரு, *s.* A white ant-hill, a hillock thrown up by termites, புற்று. W. p. 752. VAMALOORA.

வாமலூருதனையன், *s.* A name of *Valmika*, author of the Ramayana. See வால்மீகி; [*ex* தனையன், son.]

வாரத்திட்டம், *s.* Regulated share of the produce of a field between two parties; that of the landlord is மேல்வாரம், and that of the cultivator is குடிவாரம்; the whole is உடைவாரம்.

வாரத்துக்குவளர்க்க, *inf.* To raise fowls, pigs, &c., on shares.

வாரத்துண்டு, *s.* Balance of a share, remaining portion.

வாரப்பாடு, *v. noun.* Partiality, bias, pre-possession.

வாரப்பிரிவு, *v. noun.* [*inf.* வாரம்பிரிக்க.] Division of shares.

வாரம்வாரம். [*as an adv.*] Weekly.

*வாரவாணம், *s.* A coat of armor, கவசம். 2. A quilted jacket, as a defence for the body, பஞ்சபெய்துதைத்தமெய்ச்சட்டை. W. p. 753. VARAVAN'A.

*வாரவாரம், *s.* Armor, mail, கவசம். (சது.)

*வாராவதி, *s.* [*Tel.* వారధి.] A bridge, பாலம்; [*ex* வார், water, ஆ *et* வதி, way.]

*வாராகி, *s.* One of the seven *matris* or mothers. See மாதர், எ. 2. A sow, பெண்பன்றி. W. p. 753. VARAHA.

*வாராணசி, *s.* (*St.*) Benares. See வாரணசி.

வாராணே, *s.* A term of calling. See பிள்ளைத்தமிழ்.

வாரி, *s.* A comb, சீப்பு. 2. A rake, குப்பைவாரி. 3. A plank across a dhoney; [*ex* வாரு.]

*வாரி, *s.* Water, நீர். 2. The sea, கடல். 3. A stable, or stall for elephants, யானைக்கொட்டம். 4. A hole as a trap for catching elephants, யானைப்படுக்குத்குழி. W. p. 753. VARI. 5. A flute or pipe, இசைக்குழல். 6. A door, கதவு. 7. A full river, a reservoir; any deep water, நிறைபுனல். 8. A wall, மதில். 9. A surrounding wall, மதிற்சுற்று. 10. A way, வழி. 11. A door-way வாயில். 12. A flood, an inundation, a torrent, வெள்ளம். 13. Abundance, மிகுதி. (சது.)

பெருவாரிவிளைந்தது. A great crop is grown.

மேலெழுந்தவாரி. Superficialness, (*lit.*) upon a wave.

வாரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* and *v. a.* To take an oath, ஆணையிட. 2. To hinder, to stop, தடுக்க. (சது.)

*வாரிசம், *s.* The lotus as the water-born, தாமரை; [*ex* வாரி *et* சம்.] (சது.)

*வாரிதம், *s.* A cloud, மேகம். W. p. 753. VARIDA.

வாரிதி, *s.* [*improp.* வாருதி.] The sea, the ocean, கடல். [*Sa.* *Varid'hi.*]

*வாரிவாகம், *s.* A cloud as bearing water, மேகம். W. p. 754. VARIVAHA.

வாரு, கிறேன், வாரினேன், வேன், வார, *v. a.* To take up by the handful; to remove people in great numbers out of the world, திரளாகக்கொண்டுபோக. 2. To carry off, கவர. 3. To take or gather, சேர்த்துக்கொள்ள. 4. To steal, திருட. 5. To cast up, as a wave of the sea, or the current of a river, வாரற. 6. To shave a palmyra-leaf, for writing, ஓலைவார. 7. To comb the hair, மயிர்சீவ; [*from Sa. Vru.*]—*Note.* In the last two meanings, the past tense may be also வார்க்தேன்.

இதைவாரிப்போடு......Take away this. 2. Throw sand or earth

பேதிஅனேகரைவாரிக்கொண்டுபோனது. Cholera has taken away many.

வாரியடிக்கிறகாற்று....A wind that blows things away.

வாரியிறைக்க, *inf.* To scatter abroad. 2. [*met.*] To give liberally.

வாருகோல், *s.* A broom; a rake, துடைப்பம்.

வாரெழுத்தாணி, *s.* A kind of style, or iron-pen.

வாரல்—வாருதல், *v. noun.* Gathering; carrying off; thieving; combing, &c.

*வாருணம், *s.* The sea, கடல். 2. The west, மேற்கு. 3. A *Upapurana.* See உபபுராணம். (சது.) 4. An astrological indication of the clouds. See மேகம், சு.

*வாருணி, *s.* A name of Agastya, அகஸ்தியன். [*Sa.* *Varun'i.*] 2. Any distilled spirituous liquor, காய்ச்சிவடித்தமது. 3. The twenty-fourth lunar mansion, சதயநாள். 4. The west, மேற்கு. W. p. 754. VARUN'EE.

*வாருண்டகம்—வாருண்டம், *s.* The fabled eight-footed-bird. See எண்காற்புள். (சது.)

வாளை, *s.* A beam, வாளைவிட்டம். (சது.) 2. A pole for carrying burdens, காவுதடி.

*வார், *s.* Water, நீர். W. p. 752. VAR. 2. A girdle, a band, a girdle of leather, கச்சு. 3. Length, நீளம். 4. Smallness, நுண்மை. 5. A shoe-tie, தோல்வார்.

கல்லணைவார், *s.* Stirrup-leather.

பின்வார், *s.* A crupper.

வாரிட, *inf.* To cut in slips, or slices, as fish for drying.

வார்க்கயிறு, *s.* A braided leather-thong.

வார், கிறேன், ந்தேன், வேன், வார, *v. n.* To flow down, to drop, ஒழுக. 2. To rise high, உயர. 3. To lengthen, நீள. 4. To know, தெரிய. (சது.) 5. *v. a.* To remove from a surface. See வாரு.

வார்காது, *s.* Ears with the perforation greatly enlarged.

வார்தல், *v. noun.* Running down. 2. Lengthening itself. 3. Being high. (சது.)

வார்ந்தோடுகிறது. Flowing in a torrent.

வார், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To pour, ஊற்ற. 2. To infuse, suffuse, உட்செலுத்த. 3. To cast metal in a mould, உருக்கிச்சாய்க்க. (*c.*)

வார்ப்பதுவார்க்க, *inf.* To pour out for a guest. (*R.*)

வார்ப்பு, *v. noun.* An effusion.

வார்ப்புவேலை, *s.* As வார்ப்படம்.

வார்ஸ், *s.* [*Arab.*] Claim, heirship.

வார்ஸ்தார், *s.* Claimant, an heir.

வார்ஸ்நாமா, *s.* A deed of transfer of one's right.

*வார்த்தகம்—வார்த்திகம், *s.* Infirmity of old age, கிழத்தன்மை. 2. Assembly of the aged, கிழவர்குழு. W. p. 755. VARDD'HAKA.

*வார்த்தாகம், *s.* The egg-plant, Solanum melongena, கத்தரி. 2. The unripe fruit of this plant, கத்தரிக்காய். W. p. 754. VARTTAKA.

*வார்த்தாகி, *s.* A plant, சிறுவழுதலை, Solanum. [*Sa.* *Varttaki.*]

*வார்த்தாவகன், *s.* A messenger, தூதன். 2. A carrier, one who conveys letters or news, செய்திகொண்டுபோவோன். [*Sa.* *Varttavaha.*]

*வார்த்தை, *s.* A word, a phrase, வசனம். 2. [*Chris. usage.*] The word. [*a corrup. of Sa. Varddara,* speech.]

வார்த்தையிலேகுத்தையா. Is there any harm in words?

வார்த்தைகொடுக்க, *inf.* To speak, to talk.

வார்த்தைநாணயம், *s.* Honesty, as shown in the fulfilment of promises.

வார்த்தைபிசக, *inf.* To fail in one's word.

வார்த்தைப்பாடு, *v. noun.* A promise, an engagement by word.

வார்த்தையிழுக்க, *inf.* To draw one into a dispute.

வார்த்தையெடுக்க, *inf.* To begin to speak.

வார்த்தையைப்புரட்ட, *inf.* To pervert the meaning of a word.

வார்த்தைத்தொழிலோர், *s.* Head cultivators, பூவைசியர்; [*ex Sa. Vartha,* agriculture.] (சது.)

வார்ப்படம், *s.* A casting, வார்ப்படவேலை; [*ex* வார்ப்பு.] (*Colloq.*)

வார்ப்பிக்க, *inf.* To cause to cast metal.

வார்மை, *s.* [*in comb.*] Decorum.

வார்மைசீர்மையறியாதவன்.........A man unacquainted with polite manners.

*வால, *adj.* Juvenile, young, as பால. W. p. 603. BALA.

வாலசன்னியாசி, *s.* See பாலசன்னியாசி, under சந்நியாசி. 2. [*in R. C. usage.*] A monk from his youth.

வாலசிங்கம், *s.* A young lion.

வாலத்துவம், *s.* Vigor of youth.

வாலவயசு, *s.* Early age, youthhood.

*வாலகம், *s.* A horse's or elephant's tail, as வால். (சது.)

*வாலகில்லியர், *s.* A number of 60,000 *Rishis,* அறுபதினாயிரம்ரிஷிகள்.

*வாலசரம், *s.* A town in Orissa, Ballasore, ஓரூர். 2. A kind of rice-corn brought thence to Madras, ஓர்நெல்.

*வாலதி, *s.* Tail, வால். 2. Elephant's tail, யானைவால். (சது.)

*வாலம், *s.* A tail, வால். 2. The hair of the head, தலைமயிர். W. p. 603. BALA. 3. [*prov.*] Rags, or tatters like a tail, கந்தைத்துணி.

வாலவாசக்குரங்கு, *s.* Mischievous monkey, *in abuse.*

வாலபத்திரம், *s.* The Ebony tree, Diespyros Ebenater, கதிரம்.

*வாலரசம், *s.* Essence of vermilion, சாதிலிங்கம்வடித்தஇரசம்.

*வாலவாயசம், *s.* Lapis lazuli, வைடூரியம். (சது.)

வாலறிவன், s. One of pure intelligence, an epithet of the Deity, கடவுள்; [ex வால், purity.] (குறள்.)

*வாலன், s. An infant, as பாலன்.

*வாலாசம், s. A crupper for a bullock, as பின்வார்; [ex வால்.]

வாலாதி, s. A horse trained to the race-course. (Beschi.)

வாலாமை, s. Impurity. See வால்.

வாலாயம், s. Cat's eye, as வாலவாயசம். 2. [Tel.] Too much familiarity.

*வாலி, s. Bali son of Indra, and elder brother of Sugrîva. W. p. 603. Bali.

*வாலியம் — வாலிபம், s. Youth, juvenility, as பாலியம். (c.)

வாலியகாலம், s. Youthful years of a person.

வாலியன், s. A youth, as பாலியன்.

*வாலுகம், s. Sand, மணல். 2. White sand, வெண்மணல். W. p. 604. Baluka.

*வாலுங்கி, s. A sort of cucumber, Cucumis, சக்கரி. [Sa. Balungi.] 2. [com. வாலுளுவை.] A medicinal seed. See அதிபதிச்சம். (சது.)

வாலுவர், s. Cooks, those employed in the cook-room, மடையர். (சது.)

வாலுவசாஸ்திரம் — வாலுவநூல், s. A system of cookery.

வாலுளுவை, s. See வாலுங்கி.

*வாலேயம், s. An ass, கழுதை. W. p. 604. Baleya.

வாலை, s. A still, an alembic, திராவகம் வடிக்கும்பாத்திரம்.

வாலையிலேற, inf. To distil. (R.)

*வாலை, s. [also பாலை.] A child. 2. A girl under maturity. See மகளிர்பருவம்.

*வால், s. A tail, trail, train, வாலதி. 2. Purity, truth; clearness, சுத்தம். 3. Whiteness, வெண்மை. 4. Abundance, மிகுதி. [contrac. of Sa. Vala. W. p. 603.]

வாலாட்ட, inf. [lit. to wave the tail.] To do mischief; to be pompous, to show authoritative airs.

வாலாட்டாதே. Do not be impudent, be quiet.

வாலாமை, s. Uncleanness, impurity, அசுத்தம். 2. The uncleanness of menstruation, சூதகம். (சது.)

வாலான், s. A kind of bearded rice, ஓர்நெல்.

வாலிது. appel. n. That which is pure, white, appropriate, தூயது. (நாலடி.)

வால்நட்சத்திரம்—வால்மீன்—வால்வெள்ளி, s. Comet.

வால்மிளகு, s. Long pepper. See மிளகு.

வால்வெள்ளி, s. Comet—as வால்நட்சத்திரம்.

வாற்குருவி, s. The bird of paradise.

வாற்கொடி, s. A long triangular flag for the mizen mast. (Old Dic.)

வாற்கோதுமை, s. Barley.

*வால்மீகம், s. A name of Ramayana, from its author Valmîka, ராமாயணம்.

வாவல், s. A bat, வௌவால். (சது.) 2. See வாவு, v.

*வாவி, s. A small walled tank or reservoir, தடாகம். (Ell. 212.) W. p. 751. Vapi.

வாவு, s. A school-holiday, a holiday in general. (Colloq.)

வாவுமுறை, s. Term of vacation.

வாவுவிட, inf. To give a holiday.

வாவு, கிறேன், வாவினேன், வேன், வாவ, v. a. To jump over; to gallop; to go by leaps, தாண்ட.

வாம்பரி, s. [for வாவும்பரி.] The galloping horse. (p.)

வாவல், v. noun. Jumping over.

வாவுத்தன், s. The prow of a vessel.

வாழாத்திப்போளம், s. [prov.] Gum-myrrh.

வாழி—வாழிய, s. A poetic expletive, முன்னிலையசைச்சொல். 2. See வாழு.

காணியவாழியமலைச்சாரல். Look to the side of the mountain. (p.)

வாழு—வாழ், கிறேன், வாழ்ந்தேன், வேன், வாழ, v. n. To live, to sustain life, சீவிக்க. 2. To flourish, to enjoy happiness, to prosper, செழிக்க. (Ell. 150.) 3. To be, or exist; to reside, as living creatures in their appropriate place; to roam, சஞ்சரிக்க.

வாழுகின்றகாலம். The time of prosperity. (p.)

வாழுகிறபெண். A married girl, living with her husband.

நீர்வாழுஞ்செந்துக்கள். Aquatic creatures.

வாழ—வாழி—வாழிய. [optative.] May I, thou, he, she, it, prosper.

வாழ்நன், s. A prosperous man. 2. [sometimes வாணன்.] An inhabitant, as தஞ்சைவாணன், a resident of Tanjore.

வாழ்நாள், s. [sometimes வாணாள்.] The days of one's life.

வாழ்வு, v. noun. Prosperity, happiness, felicity, life, வாழ்க்கை. 2. Custom, usage.

அற்பவாழ்வு. An insignificant life, transitory happiness.

வாழ்வுதாழ்வு. Prosperity and adversity.

வாழ்வுமங்குதல், v. noun. The decrease of one's riches.

பெருவாழ்வு. Great prosperity, bliss.

வாழ்வுப்பெருக்கம்—வாழ்வுமிகுதி........Great wealth.

வாழை, s. Plantain tree, Musa paradisiaca.—Note. Of வாழை are different varieties, இரசதாளிவாழை or commonly ரஸ்தாளி, that producing fruit of a sweet flavor; கதலிவாழை, another variety; கருவாழை, a black kind; கொட்டைவாழை, a plantain having seeds; செவ்வாழை, a red kind; பேயன்வாழை, an inferior kind, but medicinal; மொந்தன்வாழை, a large variety, ஆனைவாழை, உதிரிவாழை, மருத்துவவாழை, &c., are other varieties; பூவாழை and சாறுவாழை are different plants, which see.

வாழைக்கட்டை, s. The large bulbous root of the plantain tree.

வாழைக்காய், s. An unripe plantain.

வாழைக்குலை, s. An entire cluster of plantains.

வாழைச்சீப்பு, s. A comb of plantains.

வாழைத்தண்டு, s. Spadix of the plantain. See தண்டு.

வாழைத்தாறு, s. A cluster of plantains.

வாழைத்தோட்டம், s. A plantain-garden.

வாழைநார், s. Fibres in the stem of the tree.

வாழைப்பழம், s. Plantains.

வாழைப்பூ, s. A flower of the plantain-tree, used for curry

வாழைமடல், s. [sometimes வாழைப்பட்டை.] s. The rind of the plantain stem.

வாழைமரம், s. As வாழை.

வாழையடிவாழை.....Plantains from one plantain-root—so a family.

வாழையிலை, s. Plantain leaves used as an eating vessel.

தொடைவாழை, s. A tumor on the thigh. See தொடை.

வாழ்க்கை, s. Riches, felicity, செல்வம். 2. A wife, a consort, மனைவி. 3. A borough, a small town, ஊர். 4. A town, in a cultivated district, மருதநிலத்தூர். (சது.) 5. Living prosperously; [ex வாழு, v.]

இல்வாழ்க்கை, s. Domestic life. See இல்.

வாழ்க்கைத்துணை, s. A wife, மனையாள். (Ell. 216.)

வாழ்க்கைப்பட, inf. [vul. வாக்கப்பட.] To get married; used in reference to a woman.

வாழ்த்து, கிறேன், வாழ்த்தினேன், வேன், வாழ்த்த, v. a. To praise, applaud, துதிக்க. 2. To felicitate, congratulate, மங்களங்கூற. (c.)

வாழ்த்து, v. noun. Benediction, congratulation. See அலங்காரம்.

மங்களவாழ்த்து. Congratulatory poem.

சோபனவாழ்த்து. Congratulation on marriage.

வாழ்த்திக்கொடுக்கிறது. Giving a present with congratulation.

வாழ்விக்க, inf. To cause one to prosper. 2. To cause a woman to live happily with a husband, வாழும்படிசெய்ய.

வாளாமை, s. Silence, taciturnity, மௌனம். 2. Deafness, disobedience, கேளாமை. (சது.)

வாளாதேபோவாரன்மாந்தர். As men leave [this world] in silence. (நாலடி.)

வாளா, adv. Silently, quietly, indifferently, fruitlessly, vainly, as சும்மா. (நீதிநெறி.)

*வாளி, s. An ear-jewel, or a sort of ear-ring, காதிலொளி. W. p. 603. Bala. (c.) 2. A circular course, வட்டமாயோடல். 3. An arrow, அம்பு. (சது.)

*வாளை—வாளைமீன், s. A fish, Trichiurus Lepturus. [*Sa. Vala.*] There are three varieties, ஆற்றுவாளை, Silurus bimaculatus; ஓலைவாளை, another kind of trichiurus; சொட்டைவாளை, another variety.

வாளைகடியன், s. A poisonous snake whose bite is said to be fatal; which enters the mouth of rivers.

வாள், s. A sword, scimitar, கத்தி. 2. A saw, ஈர்வாள். [*aphærisis of Bhalanga.*] 3. Lustre, light, splendor, &c., ஒளி. [*Sa. Vhala.*]

வாட்காரன் — வாளறுக்கிறவன், s. A sawyer.

வாட்படையாள் — வாள்கைக்கொண்டாள், s. An epithet of Durga, துர்க்கை.

வாளரம், s. A two-edged file, or rasp, to sharpen saws, ஓரம்.

வாளவரை, s. A kind of pulse. See அவரை.

வாளாண்மை, s. Skill with the sword, வாளில்சாமர்த்தியம். (*Ell.* 145.)

வாளாயுதம், s. A sword, as வாள்.

வாளுழவர், s. [*pl.*] Soldiers, heroes, champions, படைவீரர். (சது.)

வாளுறை, s. A scabbard.

வாளேந்தி, *appel. n.* The sword-armed, the prince.

வாளோர்தடங்கண், s. Large eyes, darting glances keen as a scimitar. (*Ell.* 186.)

வாள்மீன், s. A sword-fish.

அரிவாள், s. A sickle.

முள்வாள், s. A saw.

வாள்வாளெனல், *v. noun.* Crying of a dog when beaten; a repetitious sound, ஒலிக்குறிப்பு.

வாறது, [*symb. verb. contrac. of* வருகிறது. *vul.*] That which comes.

வாறான், s. [*in seamanship.*] A small stay-rope to the leeward of the sail, to keep it in place, கப்பலிலோர்கயிறு. 2. [*contrac. of* வருகிறான். *vul.*] He comes.

*வாற்தை, s. [*improp.*] A word. See வார்த்தை.

வானகம், s. The visible heavens, &c., as வானம்.

வானகத்தமரர், s. The gods of the celestial regions, as அமரர். (*p,*)

வானதி, s. The celestial Ganges, ஆகாயகங்கை; [*ex* வான் *et* நதி.]

*வானபத்தி, s. A tree bearing fruit without blossoms, பூவாதகாய்க்குமரம். [*an elongation of Vanaspati.*]

*வானபத்தியம்—வானப்பிரத்தி, s. A tree bearing fruit from blossoms—as the mango, &c. W. p. 751. VANASPATYA.

*வானப்பிரத்தன் — வானப்பிரஸ்தன், s. A religious hermit, of the third order. [*Sa. Vanasprat'ha.*]

வானப்பிரஸ்தாச்சிரமம், s. The state of an anchorite. See ஆச்சிரமம்.

வானம், s. The atmosphere, firmament, heaven, ஆகாயம். [*improp.* மானம்.] 2. Rain, மழை; [*ex Sa. Vana,* water.] 3. [*prov.*] One of the ornamental lines in a tower, கோபுரத்திலோருறுப்பு.

வானஞ்சுருங்கில். If rain be wanting.—see under சுருங்கு.

வானசாஸ்திரம், s. Astronomy.

வானசோதிகள், s. Heavenly bodies.

வானம்பாடி, *appel. n.* A sky-lark.

வானவரம்பன், s. A title of the Sera kings as having a lofty boundary, சேரன்; [*ex* வரம்பு.] (சது.)

வானவர், s. Gods, celestials.

வானவருறையுள், s. Residence of the celestials. (*p.*)

வானவர்முதுவன்—வானோர்முதுவன், s. A title of the Sera kings, சேரன். (சது.) 2. An epithet of Brahma, பிரமன்.

வானவன், s. Any heavenly being of the male sex. 2. (சது.) As வானவர்முதுவன்.

வானவில், s. The rain-bow.

வானோர், s. The celestials of different orders.

வானோர்கணம், கூ. *or* நவவானோர்கணம். The nine orders in heaven according to Romanists: 1. பத்திச்சுவாலிகர், seraphs; 2. ஞானநிக்கர், cherubim; 3. பத்திராசனர், those who surround the throne of God —These are considered to be invested with dignity of the first order; 4. நாதகிருத்தியர், those employed on gracious errands, messengers; 5. சத்துவகர் or சத்திகர், celestial powers; 6. பலத்தவர், those averting evils—These are considered as invested with dignity of the second order; 7. பிராத்மிகர், principalities or princes of earthly kingdoms; 8. அதிதூதர், archangels; 9. தூதர், angels, ministering spirits. These are of the third order.

வானோர்கோமான், s. King of the celestials; an epithet of Indra, இந்திரன்.

வானோர்மாற்றலர், s. [*pl.*] Asuras, as enemies of the Suras, அசுரர். 2. Giants, இராக்ஷதர். (சது.)

வானோர்வரம், ச. The four endowments of celestials: 1. இலகு, lightness; 2. சூக்குமம், subtility; 3. அட்சயம், incorruptibility; 4. பிரகாசம், splendor.

*வானம், s. A dry tree, seasoned wood, உலர்ந்தமரம். (சது.)

*வானரம், s. An ape, a monkey—as having a man's face and living in the woods, குரங்கு; [*ex Sa. Vana,* pertaining to the woods *et Ra.* to get *or Rama,* to play.] 2. A sylvan; [*ex Sa. Va,* resemblance *et* நரம், a man.] W. p. 751. VANARA.

வானரக்கொடியோன், s. An epithet of Arjuna, as having on his banner a picture of Hanuman, அருச்சுனன்.

வானி, s. A tent, கூடாரம். 2. A canopy, a hood, மேற்கட்டி. 3. An army, படை. 4. A warrior's banner, விருதுக்கொடி. (சது.) 5. Bishop's weed, ஓமம்.

*வானீரம், s. A sort of cane or rattan, Calamus rotang, நீர்ப்பிரம்பு. W. p. 751. VANEERA.

வான், s. Air, ether, sky, the visible heavens, ஆகாயம். 2. Rain, மழை. (*Ell.* 49.) 3. A cloud, மேகம். 4. *adj.* Great, excellent, eminent, பெருமையான. 5. [*as a particle.*] A sign of the future tense, எதிர்காலஇடைச்சொல். (*p.*)

கொல்வான்கொடித்தானைக்கொண்டெழுந்தான்...... He rose with his bannered army, in order to slay.

வானுலகம், s. The upper world, as தேவலோகம்.

வானேறு, s. A clap of thunder, a thunder-bolt, இடி.

வான்கோழி, s. A turkey, (*lit.*) a large fowl.

வான்பயிர், s. Articles of cultivation excepting grain, as fruit trees and vegetables.

வான்மீன், s. A group of stars, a constellation, தாரகாகணம். 2. A star, as மீன். (சது.)

வான்மிகம், s. The rain-bow, இந்திரவில். (சது.)

*வான்மீகி, s. *Valmika.* See வால்மீகம்.

வி

வி. A syllabic letter composed of வ் and இ.

*வி. A Sanscrit particle and prefix, usually expressing privation, like அ privative—as விமலம், purity, from மலம், filth; வியோகம், disunion, from யோகம், union. Sometimes it implies certainty, or totality, as விமோசனம், total expiation, from மோசனம், liberation. W. p. 758. VI.

*விகங்கம், s. A bird, பறவை. W. p. 795. VIHANGA. 2. A swan, அன்னம். (சது.)

*விகசம், s. [*also* விகாசம்.] That which is blossoming or opening, as a flower, மலர்ந்தது. W. p. 758. VIKACHA.

விகசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To open, to bloom, மலர; [*ex* விகசம்.]

கருப்பம்விகசிக்க, *inf.* To open as the womb.

விகசிதம், s. Blossoming, blooming, அலர்ச்சி; [*Sa. Vikasita.*]

*விகடம், s. Diversity, obstruction. hinderance, வேறுபாடு. 2. That which is great, பெரியது. W. p. 758. VIKAT'A.

அகடவிகடம், s. Chicanery. See அகடம்.

விகடகவி, s. A sportive verse; a witty saying, a conundrum, சரசப்பாட்டு. 2. One who writes sportive verses. 3. A buffoon, ஆஸ்தானசந்தோஷி.—*Note.* This word, read either backwards or forwards, is the name of Kalidas, the celebrated Sanscrit poet in the court of Vicramditya.

விகடசக்கரன், s. The Ganesa of Conjeveram.

விகடபுத்தி, *s.* Intriguing designs.

விகண்டி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*prov.*] To refute, ஆட்சேபிக்க.

விகண்டிப்பு, *v. noun.* Difference.

*விகண்டை, *s.* [*for* விதண்டை.] Refutation, ஆட்சேபம். 2. Hostility, impatience, விரோதம்.

*விகமனம், *s.* A bad course of life, ill conduct, துர்நடக்கை; [*ex* வி *et* கமனம்.]

*விகர்த்தனன், *s.* Sun, சூரியன். W. p. 758. VIKARTTANA.

*விகலம், *s.* Deficiency, a want, குறை. [*Sa. Vikala.*]

*விகலை, *s.* A moment, காலநுட்பம். 2. A second or 1-60th of a கலை. 3. (*R.*) An Indian hour of 24 minutes, நாழிகை; [*ex* வி *et* கலை.]

*விகற்பம், *s.* Diversity, variety, difference, வேற்றுமை. 2. Error, mistake, தவறு. 3. Doubt, ஐயம். W. p. 759. VIKALPA.

நீஎன்னைவிகற்பம்பண்ணலாமா. Is it proper for you to change toward me?

சித்தவிகற்பம், *s.* Confusion of mind.

விகற்பக்காட்சி, *s.* Discrimination between things that differ. See காட்சி.

விகற்பத்தின்முடித்தல், *v. noun.* An author's discussing a point at large or giving varieties, particulars, &c. in detail. See உத்தி.

விகற்பி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To make a difference or change, வித்தியாசப்படுத்த.

*விகாசம், *s.* Any thing open; also that which is blown, as a flower, மலர்ந்தது. W. p. VIKASA.

*விகாதம், *s.* An impediment, obstacle, prohibition; opposition, விரோதம். W. p. 762. VIGHATA.

அவன்விகாதம்பண்ணுகிறான். He contradicts or opposes.

விகாதக்காரன், *s.* An opponent. (*c.*)

விகாதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*com.* விகாதம்பண்ண.] To impede, hinder.

*விகாரம், *s.* Modification, change—as varieties of inflection or combination in grammar, &c, திரிபு. 2. Sickness, நோய். 3. Delirium, பைத்தியம். 4. Passion, emotion, a change from a quiet or natural state in a soul, or in the deity. W. p. 759. VIKARA.

அவனுக்குவிகாரம்பிறந்தது. He is delirious.

விகாரங்காணுகிறது. Sensual affection arises.

காமவிகாரம்—மோகவிகாரம். Lasciviousness.

விகாரம், அ. The eight evil dispositions, These are காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், for which see உட்பகை, also add இடும்பை, arrogance and அசூயை, envy.

விகாரசன்னி, *s.* Epilepsy, convulsions.

விகாரப்புணர்ச்சி, *s.* [*in gram.*] Changes of letters in the combination of words, being of three kinds: தோன்றல், திரிதல் and கெடுதல்—*oppos. to* இயல்புப்புணர்ச்சி.

விகாரி, *s.* [*masc. or fem.*] A lascivious or lewd person, மோகி. (தி. 232.)

*விகாரி, *s.* The 22d year of the Hindu Cycle, A. D. 1839—40, ஓர்வருஷம். 2. See under விகாரம்.

விகாரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To change, பேதிக்க. 2. To be sensual, மோகிக்க. (*p.*)

*விகிதம், *s.* Prescribed rule, direction, appointment, விதிமுறை. 2. Proportion, ratio, வீதம். 3. Comparison of one thing to another, ஒப்பிடுகை. 4. Propriety, தகுதி. 5. Classification, order, வகுப்பு. 6. (*c.*) Intimacy, harmony, சிநேகம்; [*ex Sa. Vihita*, fixed. W. p. 796.]

உனக்கும்அவனுக்கும்விகிதமா. Is there great intimacy between you and him?

விகிதமாயிருக்க, *inf.* To be proper.—*Note.* The Sanscrit is different.

*விகிரம், *s.* A bird, பறவை. 2. A fragment, கண்டம். 3. Any thing scattered, இறைக்கப்பட்டது. W. p. 759. VIKIRA.

*விகிருதி — விகிர்தி, *s.* The twenty-fourth year of the Hindu Cycle, ஓர்வருஷம். 2. [*com. in gram.* விகுதி.] A change, an ending, a termination.

*விகிர்தம், *s.* A lie, பொய். 2. Diversity, வேறுபாடு. (சது.)

விகு, *s.* Tightness; austerity. See பிகு.

*விகுணம், *s.* Bad nature, குணமின்மை; [*ex* வி *et* குணம்.] W. p. 761. VIGUN'A.

விகுணி, *s.* [*masc. and fem.*] One wanting in good qualities, குணங்கெட்டவன். 2. [*met.*] Intoxicating drink, மது.

*விகுதி, *s.* Change, விகாரம். 2. [*in gram.*] The termination in a compound word, பகுபதவுறுப்பிலொன்று. [*corrupt. of* விகிர்தி.] 3. [*in the Sankya philos.*] Generated effects, created objects, results of primitive principles not reproductive, *as distinct from* பிரகிருதி, or பகுதி.

விக்கல், *s.* Hiccough. See விக்கு.

*விக்கியாதன், *s.* One well known, a famous man, பிரசித்தன்; [*ex* வி *et* கியாதம்.] W. p. 761. VIKHYATA.

*விக்கியாபனம் — விக்ஞாபனம் — விஞ்ஞாபனம், *s.* A communication, information, அறிவிப்பு. 2. A memorial, விண்ணப்பம். W. p. 765. VIGNGAPANA.

*விக்கியானம் — விக்ஞானம் — விஞ்ஞானம், *s.* Knowledge, science, secular knowledge, கல்வி. [*Sa. Vigngana.*]

விக்கியானமயம், *s.* That which belongs to a science. See மயம்.

விக்கியானி, *s.* A learned man, கல்விமான்.

*விக்கிரகம், *s.* A body, a shape, a form, உடல். 2. An idol, an image, சுரூபம். 3. Separation, destruction, as சந்திவிக்கிரகம். W. p. 761. VIGRAHA.

விக்கிரகபூசகன், *s.* [*com.* விக்கிரகாராதனைக்காரன்.] An idolater.

விக்கிரகவணக்கம் — விக்கிரகாராதனை, *s.* Idolatry, worship of images.

*விக்கிரம, *s.* The fourteenth year of the Hindu cycle, ஓர்வருஷம்.

*விக்கிரமம், *s.* Bravery, heroism, strength, பராக்கிரமம். 2. Great strength, மிகுபலம். W. p. 761. VIKRAMA.

விக்கிரமாதித்தன் - விக்கிரமசேனன் - விக்கிரமசிங்கன் — விக்கிரமார்க்கன், *s.* The celebrated Vicramaditya king of Oujein from whom an era is reckoned, commencing fifty-six years before the Christian.

விக்கிரமாதித்தவருஷம், *s.* The era of Vickramaditya.

*விக்கிரயம், *s.* Sale, selling, vending, விற்கை; [*ex* வி *et* கிரயம்.] W. p. 760. VIKRAYA.

அன்னவிக்கிரயம். The sale of food.

வீட்டுவிக்கிரயம். The sale of a house.

விக்கிரயபத்திரம் — விக்கிரயச்சீட்டு, *s.* A bill of sale.

விக்கிரயம்பண்ண — விக்கிரயஞ்செய்ய — விக்கிரயப்படுத்த, *inf.* To sell.

*விக்கேபம் — விக்ஷேபம் — விட்சேபம், *s.* Celestial latitude in general. W. p. 760. VIKSHEPA. 2. [*in lunar eclipses.*] The latitude of the moon, சசிவிசாலம். 3. [*in solar eclipses.*] Three elements to be found, சசிவிக்கேபம், இரவிவிக்கேபம், நித்தியவிக்கேபம், which see.

*விக்கினம், *s.* Obstacle, impediment, hinderance, difficulty, இடையூறு. 2. That which is noxious, dangerous, injurious—as a drug, தீமை. W. p. 762. VIG'HNA.

விக்கினம்பண்ண - விக்கினப்படுத்த, *inf.* To hinder, check, impede.

விக்கினேசுரன் — விக்கினேச்சுவரன், *s.* Ganesa, as remover of obstacles; [*ex* ஈசுரன்.]

விக்கு, கிறேன், விக்கினேன், வேன், விக்க, *v. n.* To hickup, hiccough, விக்கலெடுக்க. 2. To be choked, throttled; to stick in the throat, to be stopped as a shooting ear in the spathe, அடைக்க. (*c.*)

விக்கல், *v. noun.* [*sometimes* விக்குள்.] Hiccough.

விக்கலெடுக்க, *inf.* To hiccough.

*விங்களம், *s.* Tergiversation, difference, diversity, திரிவு. 2. Guile, deception, insincerity, treachery, கபடம். 3. [*usage.*] Adulteration, vileness, alloy, களிம்பு. 4. Want of cordiality, coolness in friendship, withholding proper aid, பேதம்.

விங்களி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To tergiversate, to shift, to separate, பிரிக்க. 2. *v. n.* To keep back, to be wanting in cordiality or co-operation, வேறுபட. 3. To be insincere, treacherous, deceptive, சூதுசெய்ய. 4. To shift, to be unsteady, நிலையற்றிருக்க.

விங்களிப்பு, *v. noun.* Diversity, disagreement, tergiversation.

விங்களிப்புபண்ண, *inf.* To treat a friend as a stranger.

*விசதம், *s.* Whiteness, வெண்மை. 2. Any thing clear or pellucid, நிருமலம். 3. That which is evident or apparent, வெளிப்படை. 4. Purity, சுத்தம். W. p. 780. VISATA.

*விசய, *s.* The twenty-seventh year of the Hindu cycle, ஓர்வருஷம்.

*விசயச்சந்தம், *s.* An ornamental string of seven hundred pearls, எழுநூறுகோவைமுத்துத்தாழ்வடம். W. p. 764. VIJAYACHANDA.

*விசயநகரம், *s.* The name of a town, ஓர்பட்டணம்.

*விசயம், *s.* Conquest, victory, success, வெற்றி. W. p. 763. VIJAYA. 2. Refuge, shelter, அடைக்கலம். 3. Research, speculation, examination, ஆராய்வு. 4. Doubt, discrepancy, incongruity, ஐயம். 5. Sugar, சருக்கரை. 6. One of the twenty-eight Agamas of the Saivas, சிவாகமங்களிலொன்று. 7. The sun's region, or the solar system, சூரிய மண்டலம். 8. A chariot, or howda, of the gods, தேவவிமானம்.

விசயகோதண்டம், *s.* A victorious bow, வெற்றிவில்.

விசயதந்தன், *s.* A rat, எலி. (பஞ்.)

விசயன், *s.* An epithet of Arjuna, அருச்சுனன். 2. A title of Salivahana, சலி சகாத்தன். 3. The door-keeper of Vishnu, திருமால்வாயில்காப்போன். (சது.)

*விசயாரத்தம், *s.* Mount Kylasa, கைலைமலை. (சது.)

*விசயை, *s.* Durga, துர்க்கை. [*Sa. Vijaya.*]

*விசரம், *s.* A crowd, a multitude, கூட்டம். W. p. 794. VISARA. 2. Murder, கொலை.

விசர், *s.* [*prov.*] Madness, rabidness, பைத்தியம்.

விசர்நாய், *s.* A mad dog.

விசர்ப்புத்தி, *s.* Confused understanding, delirium, madness, disorder of the brain.

*விசர்க்கம், *s.* Setting free, விடுகை. 2. Evacuation, கழிச்சல். 3. [*in astron.*] The southern course of the sun. W. p. 794. VISARGA.

*விசர்க்கை, *s.* [*in St. gram.*] The soft aspirate marked by two dots one above the other (:) denoting a lengthening of the sound.

*விசர்ச்சனம், *s.* Gift, donation, ஈகை. 2. Relinquishment; despatching, விடுதல். W. p. 794. VISARJANA.

*விசலை, *s.* A pan, a shallow earthen vessel, சட்டி. (சது.)

*விசனம், *s.* Sorrow, affliction, distress, துயர். 2. Intense application; great desire, பேராசை; [*contrac. of Sa. Vyasana.*] 3. An uninhabited place, a solitary place, மனிதரில்லாதவிடம். [*Sa Vijana.*] 4. A fan, விசிறி; [*contrac. of Sa. Vyajana.*] (சது.)

எனக்கதிகவிசனமாயிருக்கிறது. I am very sorry.

விசனக்கரை, *s.* A cemetery. (*R.*)

*விசாகம், *s.* The sixteenth lunar mansion, அனிலநாள். 2. The month of May, as வைகாசி. (*p*)

விசாகன், *appel. n.* Kartikeya, குமரன். W. p. 786. VISAKHA.

விசாதி, *s.* [*vul. for* வியாதி.] Disease.

*விசாதி—விசாதிபேதம், *s.* Difference in things unlike—*oppos. to* சசாதி. See பேதம். W. p. 764. VIJATI.

*விசாரணை, *s.* Investigation, oversight, superintendence, ஆராய்ச்சி. W. p. 763. VICHARAN'A.

சாஸ்திரவிசாரணைபண்ணுகிறது. Searching the Shastras.

வீட்டுவிசாரணைக்காரன். A steward.

விசாரணைக்குக்கொண்டுவருகிறது. To bring to trial.

என்வியாச்சியம்நாளைக்குவிசாரணையாகும். My case will be investigated to-morrow.

விசாரணைக்காரன் — விசாரணைக்கர்த்தன், *s.* A superintendent.

விசாரணைநியமஸ்தர், *s.* [*R. C. usage.*] The ordinary.

*விசாரதம், *s.* A rhyming quatrain. (*R.*)

*விசாரதர், *s.* Learned persons, those who examine, புலவர். W. p. 786. VISARADA.

*விசாரம், *s.* Care, concern, trouble, anxiety, disquietude, solicitude, கிலேசம். (*c.*) 2. [*Sa. Vichara.*] Consultation, ஆலோசனை. 3. Opinion, cogitation, thought, எண்ணம். (சது.)

அவன்மெத்தவிசாரப்படுகிறான். He is very sorry.

விசாரத்தகடு, *s.* An iron hoop. (*R.*)

விசாரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To think, to consider, எண்ண. [ராமா. 21. 18.] 2. (*c.*) To take care of, பாதுகாக்க. 3. To provide, or procure, பராமரிக்க. 4. To examine, ஆராய.

என்னசெய்தியென்றுவிசாரி. Inquire what news.

இவனைநன்றாய்விசாரியும். Treat him very hospitably.

குற்றவாளியைவிசாரிக்கிறது. Examining a culprit.

ஒருஇடம்விசாரிக்கிறது. Searching out a place. [of residence].

விசாரிதம், *s.* What has been investigated, ஆலோசிக்கப்பட்டது. (சது.)

விசாரிப்பு, *v. noun.* Superintendence. 2. Management, direction. 3. Examination. 4. Oversight of land, or of a village.

இந்தநிலமவன்விசாரிப்பு. This land is his charge.

*விசாலம், *s.* Extension, நீளம். 2. That which is large, broad, wide, அகலம். W. p. 786. VISALA. 3. A tree, Eugenia racemosa, கடம்பு. 4. An order of architecture. See சிற்பநூல்.

விசாலப்படுத்த, *inf.* To extend, spread out; to make wide.

விசாலாக்கன்—விசாலாட்சன், *s.* Garuda, கருடன். 2. Siva, சிவன்; [*ex* அக்கம்.]

விசாலாட்சி, *s.* Parvati as having large and beautiful eyes, பார்வதி; [*ex* அட்சி.]

விசாலி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To extend, spread out, become wide, விரிய.

*விசாலை, *s.* A city, Oujein, உச்சினி. [*Sa. Visala.*]

விசானம், *s.* [*also* வியானம்.] A place of cremation, as மசானம்.

விசி, *s.* A bench, *commonly,* விசிப்பலகை. 2. A band, கட்டு.

*விசிகம், *s.* An arrow, அம்பு. W. p. 786. VISIK'HA. 2. A wave, புனற்றிரை. [*Sa. Vichi.*]

விசிகை, *s.* A swath, a band, a girdle, கச்சு. 2. Thought, deliberation, கருத்து. 3. A street, தெரு. (சது.)

விசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To fasten, to bind, கட்ட. (சது.)

*விசிட்டம்-விசிஷ்டம், *s.* Superiority, supreme excellence, eminence, மேன்மை. (சித்.) W. p. 787. VISISHTA.

விசிட்டஞானம், *s.* Excellent wisdom, divine knowledge.

விசிட்டாத்துவிதம், *s.* A treatise by எம்பெருமானர்.

விசிதம், *s.* Sacred ashes, விபூதி. (சது.)

*விசிதை, *s.* As வசித்துவம். See அஷ்டசித்தி under சித்தி.

*விசித்திரம், *s.* [*also* விச்சித்திரம்.] Any thing curiously wrought or handsome, பலநிறமுள்ளது. 2. Wonderfulness, அதிசயம். 3. (*Beschi.*) Show, pomp, வேடிக்கை; [*ex* வி *et* சித்திரம்.] W. p. 763. VICHITRA.

விசித்திரமானவேலை. Very curious workmanship.

விசித்திரம், ௫. The five manual arts. See கைத்தொழில்.

விசித்திரவேளாகொல்லி, *s.* A kind of melody, கொல்லித்திறம். (சது.)

*விசிராமம், *s.* Rest, repose, இளைப்பாறுகை. W. p. 788. VISRAMA.

விசிறி, *s.* A fan, சிற்றாலவட்டம். [*Compare* விசனம்.] 2. A shrub with leaves, &c., like a fan, Ehretia buxifolia, ஓர்செடி. 3. The top of a letter, the symbols of இ and ஈ, எழுத்திலேருறுப்பு.

விசிறிகட்டிநடக்க, *inf.* To walk with a swinging motion, to swing the hands, &c. (*Jaff.*)

விசிறிமுருகு, *s.* An ear-ring of gold like a fan, worn on the upper part of the ear.

மேல்விசிறி, *s.* The mark of இ, &c., at the top of a letter.

விசிறு, கிறேன், விசிறினேன், வேன், விசிற, *v. a.* To fan, வீச. 2. To brandish, சுழற்ற. 3. To hurl, to throw with a whirling motion, சுழற்றியெறிய. 4. *v. n.* To splash, to cast up—as surf; to beat upon—as rain, மோத.

வளைதடியைவிசிறியெறிந்தான். He whirled the cudgel round and threw it.

*விசு—விஷு, *s.* The fifteenth year of the Hindu cycle, ஒருவருஷம்.

விசுக்கிட—விசுக்கிட்டுக்கொள்ள, *inf.* [*vul.*] To become displeased, விதனப்பட.

*விசுத்தி, *s.* A region of the body. See ஆதாரம். 2. A freeing from, தீர்தல். 3. Equality, நிகர். W. p. 787. VISUD'DHI. 4. Phlegm, ஐயம். 5. Purity, சுத்தம். 6. Correction, good state, ameliorated condition, திருத்தம்; [*ex* வி *et* சுத்தி.]

விசும்பு, *s.* The visible heavens, the sky, ether, ஆகாயம். 2. Swerga, the heaven of the inferior gods, தேவலோகம். 3. A cloud, மேகம். 4. A point of the compass, திசை. (சது.)

விசும்புத்திசை, *s.* The zenith, உச்சி.

விசும்பு, கிறேன், விசும்பினேன், வேன், விசும்ப, *v. a.* To throw away in contempt, to toss, to cast away, அசட்டையாய்விலக்க. (*Beschi.*)

*விசுவம் — விச்சுவம், *s.* The world, உலகம். 2. Entireness, எல்லாம். W. p. 788. VISVA. 3. [*also* விஷுவம் விஷுவம்.] Equinoxes. See மகாவிசுவம். [*Sa. Vishva.*]

விசுவகருமன் – விசுவகர்மன் — விசுவகன்மன் — விசுவகர்மா, *s.* The son of Brahma, and architect of the gods.

விசுவச்சாயை — விசுவச்சாயாங்குலம் *s.* Equinoctial shadow.

விசுவசித்து, *s.* A particular ceremony, or sacrifice, ஓர்யாகம்.

விசுவதேவர், *s.* A particular class of thirteen celestials. (சது.) 2. A class of superiors worshipped at funerals.

விசுவநாதன் — விசுவேசன், *s.* Siva as worshipped at Benares, காசிச்சிவன். (சது.)

விசுவநாள், *s.* The twenty-first lunar mansion, உத்திராடம். (சது.)

விசுவப்பிரகாசன், *s.* One who is a universal light.

விசுவம்பரன், *s.* Vishnu as supporter of all things, விஷ்ணு. (சது.)

விசுவம்பரை, *s.* The earth as bearing and nourishing all, பூமி. (சது.)

விசுவரூபம் — விசுவசொரூபம், *s.* That which exists in all forms.

விசுவரூபன், *s.* An epithet of Vishnu.

விசுவாமித்திரன், *s.* [*also* கௌசிகன்.] A famous Rishi or Muni, preceptor of Rama, who by extraordinary austerities obtained superior powers, and is said by some to have formed creatures, counterpart and opposed to those formed by Brahma.

விசுவாமித்திரசிருஷ்டி, *s.* Any creature made by Visvamitra.

விசுவாமித்திரப்புல், *s.* A kind of grass, Saccharum spontaneum.

விசுவான்மா, *s.* Brahma as soul of the world, பிரமன். (சது.)

*விசுவாசம், *s.* Confidence, trust, நம்பிக்கை. 2. Faithfulness, veracity, உண்மை. 3. Faith, பத்தி. W. p. 789. VISVASA.

வாக்குவிசுவாசம். Faithfulness to one's word.

அவிசுவாசம். Unbelief, infidelity.

விசுவாசகன், *s.* A trusty person. (*R.*)

விசுவாசகாதகன், *s.* A covenant-breaker, a double-dealing person, a villain. (பஞ்.)

விசுவாசபத்தி, *s.* Faithful adherence.

விசுவாசபாதகம், *s.* Breach of trust, violation of intimate belief.

விசுவாசபாதகன், *s.* A treacherous man.

விசுவாசமில்லாமை, *s.* Want of confidence. 2. [*Chris. usage.*] Unbelief.

விசுவாசமுள்ளவன், *appel. n.* A faithful man. 2. As விசுவாசி.

விசுவாசி, *s.* [*masc. and fem.*] One who depends upon another. 2. [*Chris. usage.*] A believer.

அவன் விசுவாசத்திலிருக்கிறேன். I am under his protection. (*R.*)

விசுவாசி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To believe, to credit, to trust, நம்ப.

*விசுவாமித்திரன், *s.* See விசுவம்.

*விசுவாவசன் — விசுவாவசு, *s.* One of the celestial singers or Gandharbas, ஓர் கந்திருவன். W. p. 789. VISVAVASU.

*விசுவாவசு, *s.* The twenty-ninth year of the Hindu cycle, ஓர் வருஷம். 2. See விசுவாவசன்.

விசுளி, *s.* Fermented palm-tree-sap, கள். (சது.)

*விசேஷகம் — விசேடகம், *s.* Relation; narrative; anything special. [*Sa. Viseshaka.*]

விசேஷகன், *s.* One who brings tidings, a narrator, as சுவிசேஷகன்.

*விசேஷணம் — விசேடணம், *s.* A qualifying term, epithet, attribute; one of the five specialities of grammatical construction. See அன்னுவயவிலக்கணம்.

விறைப்பு, v. noun. Numbness, caused by cold; stupor.

விறைய, inf. [vul. for விறைக்க.] To grow stiff from cold, குளிர.

விற்க, inf. To sell, &c. See வில், v.

விற்றுமுதல், s. Proceeds by sale.

*விற்பத்தி, s. Acumen, skill, learning, கல்வி. 2. Etymology, derivation of words. [corrup. of Sa. Vyutpatti.]

விற்பத்திமான், s. A learned man, அறிஞன்.

*விற்பனம் — விற்பன்னம், s. Harrangue, discourse, பிரசங்கம். 2. Science, learning, கல்வி. [Sa. Vyutpanna.]

விற்பன்னர், s. [sing. விற்பன்னன்.] Learned men, those eminent for learning, சற்சோர். 2. Poets, bards, புலவர். (சது.)

விற்பனை. Selling. See வில், v.

விற்பன்னி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To harangue; to beautify, to represent in vivid colors, வருணிக்க. (p.)

விற்றென, inf. [com. விர்ரென.] To make a whirring noise, as a stone whirled in the air, or as rustling paper. (R.)

விற்புருதி, s. An ulcer. See விப்புருதி.

*வினகம், s. The marking nut-tree. See சேங்கொட்டைமரம்.

*வினயம், s. Politeness, as விநயம். 2. [fig.] False dealing, pretension, வஞ்சகம்.

வினவு, கிறேன், வினவினேன், வேன், வினவ, v. a. [com. வினவு.] To question, to inquire, to investigate, கேட்டறிய. 2. [com. மினவு.] To pay visits of congratulation; to salute. (R.)

வினு, s. Sagacity, prudence, புத்தி. 2. Attention, ஞாபகம். 3. A question.—oppos. to விடை, கேள்வி. 4. One of the modes of explanation. See உரை. 5. (Beschi.) In computation, where the numbers are of the same kind, and the integers and fractions each one வினு, as 1 is one வினு, 1½ two வினு; 1½ $\frac{1}{20}$ that is an integer with two fractions is three வினு.

அதெனக்குவினுவில்லை. I don't remember it.

அவனுக்குவினுப்போதாது. He has not sufficient discretion.

வினுவோடேகேள். Hear with attention.

தேவினுமூர்த்தம், s. Interrogation, a query, a problem.

வினு, டு. There are according to சது. five special categories, in questioning; 1. அறியான்வினுவல், asking what one does not know; 2. அறிவொப்புக்காண்டல், seeking to learn whether another's knowledge agrees with one's own; 3. ஐயமறுத்தல், clearing up of doubts; 4. அவனறிவுதான்கோடல், learning what the other knows; 5. மெய்யவற்குக்காட்டல், discovering the truth.—According to Nannul these are அறிவினு, அறியாவினு, ஐயவினு, கொளல்வினு, கொடுத்தல்வினு, ஏவல்வினு.

வினுக்குறிப்பு, s. [in gram.] An interrogative pronoun, especially, எவன் and யார்.

வினுப்பெயர், s. An interrogative pronoun.

வினுவறிபருவம், s. Years of discretion.

வினுவறிய, inf. [also விரகறிய.] To begin to understand, as children.

வினுவிடை — வினுவும்விடையும், s. Questions and answers.

வினுவிடைப்புத்தகம், s. A catechism.

வினுவுள்ளவன், appel. n. A judicious man.

வினுவெழுத்து, s. An interrogative letter, as ஆ, ஏ, ஓ, டு, யா.

*வினு, [prep.] Without, except, besides, அன்றி. (c.)

தங்களைவினுஎனக்குச்சிபாரிசுஆர். Who is there to recommend me besides your honor?

*வினுசன் — வினுடி. See விநாசன், விநாடி.

வினு, கிறேன், வினுயினேன், வேன், வ, v. a. [poetice.] To ask, to inquire.

*வினுபூதம், s. That which is obscure or doubtful. (P. du Bourges.)

வினுபூதகற்பனை, s. An obscure precept, தெளிவில்லாதது.

வினுவு, கிறேன், வினுவினேன், வேன், வினுவ, v. a. To question, to ask questions, to inquire, கேள்விகேட்க. (c.)

*வினியோகம், s. Giving in expectation of a return, பிரதிபலனைநோக்கிஈதல். W. p. 772. VINIYOGA. 2 Distribution of cakes, &c., among brahmans at a shrine.

வினியோகக்காரன், s. A liberal man, கொடையாளன்.

*வினீதன், s. A culprit, one punished, தண்டிக்கப்பட்டவன். 2. A humble, modest man, வினயமுள்ளவன். (சது.) See விநீதம்.

வினை, s. Act, action, deed, work, தொழில். 2. Accumulation of moral actions, the results of deeds in former births, ஊழ். 3. An evil deed, mischief, the actions or intentions of enemies, தீவினை. 4. Design, thought, counsel, கருத்து. 5. War, போர். 6. [in gram.] A verb.—Note. Of verbs are தன்வினை, பிறவினை, முற்றுவினை, எச்சவினை, தெரிநிலைவினை, குறிப்புவினை, உடன்பாட்டுவினை, or விதிவினை, மறைவினை or எதிர்மறைவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, செயப்படுபொருள்குன்றியவினை, செயப்படுபொருள்குன்றுவினை; which see.

அது அதிக வினைசெய்யும்போலேயிருக்கிறது. It appears that it will cause me much pain.

வினைக்காலம்வருங்காலம்மனைவழியுந்தெரியாது. When misfortunes come, we know not even our own house, i. e. are perplexed. [prov.]

தன்வினைதன்னைச்சுடும். His devices injure himself.

வினைமின்காலம். A time of misfortunes.

வினைவழி. According to fate.

வினை, உ. The two-fold actions, good and bad, நல்வினை, தீவினை.

வினைக்குணம், s. Spitefulness, sulkiness.

வினைக்குறிப்பு, s. A conjugated appellative.

வினைக்குறிப்புமுற்று, s. A finite conjugated appellative.

வினைசூழ, inf. To plot evil. (p.)

வினைசெயல்வகை, s. Means of accomplishing an action.

வினைசெய்வோர், appel. n. Workmen; servants. 2. Doers of evil deeds.

வினைச்சொல், s. Verbs of both kinds.

வினைஞர், s. Artificers, கம்மாளர். 2. Ploughmen, மருதநிலமாக்கள். 3. Dancers, கூத்தர். 4. Sudras, சூத்திரர். (சது.)

வினைதீர்க்க, inf. To remove moral corruptions.

வினைத்திட்பம்—வினைவலி, s. Boldness in action.

வினைத்தூய்மை, s. A pure action. (p.)

வினைத்தொகை, s. An aorist form of the relative participle, as செய், instead of செய்த, செய்கிற or செய்யும். See தொகைநிலை.

வினைப்பகாப்பதம்-வினைப்பகுதி, s. The root or primitive verb.

வினைப்பகுபதம், s. The verb with its termination.

வினைப்பயன்—வினைப்போகம்-வினைவழி, s. Fruit of moral actions.

வினைமுதல், s. The agent or subject of the verb.

வினைமுதற்றொழில், s. The object.

வினைமுற்று, s. A finite verb, as செய்தேன், I did.

வினையனுபவிக்க, inf. To suffer for the sins of former births.

வினையன்—வினையுள்ளவன், appel. n. A malicious, deceitful man.

வினையாலணையும்பெயர், s. Finite verbs used as appellatives, as செய்தேன், I who did; மலையேன், I who am the mountaineer.

வினையிலேவெந்துபோகிறது. Being consumed by one's own malice.

வினையுரைப்போர், appel. n. Messengers, தூதர். (சது.)

வினையுவமை, s. A figure in which the verb is the word of comparison, as புலிபோலப்பாய்ந்தான், he jumped like a tiger.

வினையெச்சம், s. An unfinished part of a verb. See எச்சம்.

வினைவளர்த்த, inf. [improp. வினையளக்க.] To create ill-will, enmity, or spite, பகைவிளைக்க.

வினைவிநாசன், s. God as destroyer of sin, கடவுள்; [ex விநாசன்.]

வினைவிளைய, inf. To be produced—as hatred or ill-will.

*வின்னம், s. That which is cut off, split or broken. 2. Difference, variance. distortion of a limb, &c. See பின்னம். 3. (R.) A cavity, a chink, a flaw in gems.

வின்னமாய்நடக்கிறது. Behaving offensively.

வின்னுண்—வின்னூல். See under வில்.

வீ

வீ. A syllabic compound of வ், and ஈ.

*வீ, s. Death, சாவு, 2. Separation, நீக்கம்; [ex Sa. Vee, going.] 3. A bird, பறவை. 4. A flower, பூ. (சது.)

வீகம், s. A ring, மோதிரம். 2. A lock, பூட்டு. (சது.)

வீகமுத்திரை, s. [Tel.] A bar upon which a seal is put.

வீ, கிறேன், ந்தேன், வேன், ய, v. n. To die, சாக. 2. To be ruined, கெட. (சது.)

வீகுதல் — வீதல், v. noun. Dying. 2. Being ruined.

வீவு. Death, சாவு.

வீக்கம், s. Swelling, enlargement, வீங்குகை. 2. Puffing up of the limbs or body; an imposthume, ஓர்வியாதி. (c.) 3. (சது.) Plenty, abundance, மிகுதி; [ex வீங்கு.]

வீக்கங்கொள்ள, inf. To swell, to puff up.

வீக்கமிறங்குதல், v. noun. Sinking of a swelling from the upper to the lower parts of the system.

வீக்கு, கிறேன், வீக்கினேன், வேன், வீக்க, v. a. To tie up, to bind, கட்ட. 2. To destroy, to annihilate, அழிக்க. 3. To cause to swell, வீங்கச்செய்ய. (p.)

வீங்கு, கிறேன், வீங்கினேன், வேன், வீங்க, v. n. To increase in size, as by dropsy, to swell, as from inflammation, தடிக்க. 2. To be copious, to exceed mediocrity, to be full, மிக. 3. To desire greatly, with dative of the thing, ஆசைப்பட. 4. To sleep, நித்திரைசெய்ய. 5. To pine away, மெலிய.

சோற்றுக்குவீங்கிப்போனுன்......He longs for food.

வீங்கல், v. noun. Swelling. 2. Sleeping. 3. Longing after a thing.

வீங்கி, appel. n. [in combin.] One over-anxious for a thing—as பொன்னுக்குவீங்கி, சோற்றுக்குவீங்கி, &c. 2. [fig.] The marking nut. See சேங்கொட்டை.

*வீசகணிதம், s. [improp. பீசகணிதம்.] Algebra, அட்சரகணிதம். W. p. 796. VEEJAGAN'ITA.

வீசம், s. One-sixteenth of an integer, மாகாணி. 2. A weight of gold equal to that of a grain, or rice-corn, நெல்லிடைப்பொன். (சது.)

வீசமிடை, s. The smallest weight.

*வீசனம், s. [sometimes வீசானம்.] A fan, விசிறி; [Sa. Veejana.] 2. A small fan, சிற்றாலவட்டம்.

வீசு, கிறேன், வீசினேன், வேன், வீச, v. n. To emit as rays, or odor, பரவ. 2. To fan; to beat or dash against—as rain or wind, மோத. 3. To blow, as the wind, காற்றுவீச. 4. v. a. To throw, fling, cast as a weapon, or a net, எறிய. 5. To strew, to scatter, to sow, சிதற. 6. To wave, or flourish, as a sword, அசைக்க. 7. To give liberally, ஈய. 8. To flog, அடிக்க.

காற்றுவீசுகிறது. The wind blows.

அனல்வீசுகிறது. The heat radiates.

கைவீசுகிறது. Swinging the arms in walking.

வித்துவீசுகிறது. Sowing seeds. (Ell. 253.)

கிரணம்வீசுகிறது. Emitting rays.

மணம்வீசுகிறது. Diffusing odors.

துவானம்வீசுகிறது. Beating in, as rain in scattered drops.

வீசுகோல்—வீசுதமர் — வீசுவில், s. A kind of boring instrument for metal, தூரப்பணம்,

வீசுவிற்குடம், s. The head or case of a drill.

வீசல், v. noun. Throwing, எறிதல். 2. Giving liberally, ஈதல். (சது.)

வீச்சு v. noun. A blow, throw, cast, beat, flap, அடி. 2. A swing, a vibration. an impulse, or oscillation, ஆட்டம். 3. Strength, வலி. See உள்வீச்சு, புறவீச்சு.

வீச்சாட்டம், s. Extension of space. (Beschi.) 2. [fig.] Good circumstances.

வீச்சுவலை—வீசுவலை, s. A casting-net.

ஒருவீச்சிலுலே—ஒருவீச்சோடே. At one blow, or stroke.

வீசை, s. A vis, equal to forty Palams, or about three pounds, two ounces, avordupois. 2. The mustachios, மீசை. (c.)

வீச்சம், s. Smell, commonly, a bad smell, நாற்றம். (c.)

வீச்சு, v. To fly, as வீசு.

*வீஷ்மம் — வீட்டுமம், s. Superstitious zeal, fanaticism, வைராக்கியம்.

வீஷ்மாசாரி, s. The son of சந்தனு, B'hishma.

வீஞ்சு, கிறேன், வீஞ்சினேன், வேன், வீஞ்ச, v. n. To be avaricious, அதிகலோபமாய்க்கேட்க.

வீடாரம், s. A house, வீடு.

*வீடிகை, s. Betel-leaf folded with areca-nut, lime &c., for chewing, தாம்பூலம். (சது.)

வீடு, s. [gen. வீட்டின்.] A house, habitation, abode, மனை. 2. Emancipation from births, separation, heavenly felicity, மோட்சம்; [ex விடு, v.] 3. [in astrol.] A constellation, or house of a planet, கிரகவீடு. 4. (p.) Leaving, விடல்.

வீடுபோவென்கிறது. The house-life says go thou; see under காடு.

வீடாவழி—வீட்டுக்குவீடு. From house to house.

வீடுகுடிபுக, inf. To engage a house, &c. See குடிபுக.

வீடுங்கூடமும். The main and side rooms of a Hindu house.

வீடுதூங்கி, appel. n. A hanger on, a sponger.

வீடுபெயர — வீடுபெயர்க்க, inf. To remove one's residence or abode.

வீடுபேறு, v. noun. Obtaining heaven, as முத்திப்பேறு. (p.)

வீடும்விளக்குமாய்வைக்க, inf. To provide one a living. See under விளக்கு.

வீடெடுக்க, inf. To lay the foundation of a building.

வீடேறிவர, inf. To come to one's house, as an unwelcome visitor.

வீட்டார்—வீட்டுமனுஷர், s. Domestics, people living in a house.

வீட்டாள், s. A servant in the house, as distinct from காட்டாள்; [ex ஆள்.]

வீட்டிறப்பு, s. The eaves of a house.

வீட்டுக்காரி, s. [masc. வீட்டுக்காரன்.] A female owner of a house. 2. [fig.] The wife.

வீட்டுக்கிரியை, s. Funeral rites for a deceased parent. See ஏகோதிட்டம்.

வீட்டுக்குடையவன், appel. n. The owner of a house. 2. The head of a family. 3. The land-lord.

வீட்டுக்குட்சாட்சி, s. Domestic evidence.

வீட்டுக்குத்தூரம் — வீட்டுவிலக்கம்—வீடுவிலக்கம், s. Removal outside of the house, —as of a menstruous woman.

வீட்டுக்குளிர்ச்சி, s. [prov.] Offering fruits, &c., in a house to ferocious deities.

வீட்டுச்சீட்டு, *s.* The deeds and bills of sale of a house.

வீட்டுப்பண்டம் — வீட்டுப்பொருள், *s.* Household-utensils.

வீட்டுப்பெண், *s.* A daughter-in-law. See நாட்டுப்பெண்.

வீட்டுப்பெண்சாதி, *s.* One's own wife.

வீட்டுப்பெண்சாதிவேம்புக்காட்டுப்பெண்சாதிகரும்பும். His own wife is a Margosa, a strange woman sugar-cane. [*prov.*]

வீட்டுமணியம் — வீட்டுவிசாரணை, *s.* Stewardship; business of a house, or family.

வீட்டுமுன்கட்டு, *s.* The front part of a house.

வீட்டுவாடகை, *s.* [*loc.* குடிக்கூலி.] Rent of a house.

வீட்டுள்ளார், *appel. n.* Householders. (குறள்.) 2. One of the four religious orders.

வீட்டுவீட்டுக்கு. From house to house. 2. To each house.

வீட்டேபோ—வீட்டுக்குப்போ. Go to your house.

வீடு, கிறேன், வீடினேன், வேன், வீட, *v. n.* To die, சாக. 2. *v. a.* To let, or leave, off, விட. (*p.*)

வீடல், *v. noun.* Dying, சாகல். (சது.) 2. Leaving, as விடல்.

*வீட்சணம் — வீட்சணை, *s.* Sight, seeing, பார்வை. (ராமா.) W. p. 796. VEEKSHAN'A.

கடாட்சவீட்சணை. A gracious look.

வீட்டு, கிறேன், வீட்டினேன், வேன், வீட்ட, *v. a.* To kill, கொல்ல. (சது.)

*வீட்டுமாசாரி. See வீஷ்மாசாரி.

வீணன், *s.* An idle fellow. See வீண்.

*வீணை, *s.* The *Vina* or Indian lute, usually of seven strings and two octaves. 2. One of the sixty-four கலைஞானம், a knowledge of stringed instruments. W. p. 797. VEEN'A.

நாரதவீணை. The lute of *Narada,* the supposed inventor of the *Vina.*

உருத்திரவீணை. The *Vina* of Siva.

வீணாகானம், *s.* A song with a lute-accompaniment. (ராமா.)

வீணாகானம்பண்ணுகிறது. Playing the lute.

வீணாதண்டு, *s.* A straight bone, as that of the spine, முள்ளெலும்பு. 2. The neck of a guitar, வீணைக்காம்பு.

வீணைவலிக்கட்டு, *s.* See திவவு.

வீணைவல்லோர், *s.* Lute-players. 2. Celestial choristers, கந்தருவர். (சது.)

வீணைவாசிக்க, *inf.* To play the *Vina.*

வீண், *adj. and s.* Vain, useless, unemployed, unprofitable.

அதொருவீண்காரியம். It is a vain thing.

அதுவீணாய்போயிற்று. It became useless.

அவன்வீணாய்த்திரிகிறான். He is unemployed.

வீணலப்பு, *v. noun.* Talking to no purpose.

வீணன், *s.* An idle, useless person.

வீணாய்—வீணுக்கு—வீணே, *adv.* Vainly.

வீணாரவீணன், *s.* A person who has no right to what he demands.

வீணாவிலே. As வீணாய்.

வீணிழவு, *s.* A vain deprivation, useless privation.

வீண்காலம்-வீணாள், *s.* Time spent in vain.

வீண்செலவு, *s.* Useless expenditure.

வீண்சொல், *s.* Idle talk, unprofitable discourse.

வீண்சோறுதின்னி, *appel. n.* A useless person whose rice is lost upon him.

வீண்தெண்டம், *s.* An unjust fine.

வீண்தேங்காய், *s.* [*prov.*] A cocoa-nut which breaks easily when dashed against another, in a game.

வீண்பத்தி, *s.* Superstition.

வீண்பயல், *s.* An idle fellow. (*in contempt.*)

வீண்பாக்கு, *s.* Betel-nut taken before eating—*oppos. to* ஊண்பாக்கு.

வீண்பாடு, *v. noun.* Useless trouble.

வீண்பிரதிட்டை, *s.* Vanity, மாயை.

வீண்புத்தி, *s.* Idle imaginations.

வீண்பொழுதுபோக்குகிறது. Trifling away the time.

வீண்போக்கு, *s.* A vain excuse.

வீதம், *s.* Rate, ratio, பங்கு. 2. (சது.) Rule, regularity, முறை.

எனக்குஅவன்வீதங்கொடு. Give me at the same rate as to him.

*வீதராகம், *s.* Freedom from worldly passion, பற்றின்மை. [*Sa. Veetaraga.*] 2. Zeal, fanaticism, as வைராக்கியம். (சது.) 3. Pertinacity, as விடிமம்.

வீதல், *s.* Poverty, வறுமை. (சது.) 2. See வீ, *v.*

*வீதி, *s.* A street, a road, தெரு. 2. A way, வழி. 3. A market-street, கடைவீதி. 4. Row, order, ஒழுங்கு. 5. A straight course, நேரோட்டம். W. p. 797. VEET'HI. 6. A place for breaking in horses, வையாளிவீதி. 7. The breadth or width of a shingle, tile, &c., விசாலம்.

வீதிவண்ணச்சீலை,* *s.* A cloth with colored stripes.

வீதிவிட, *inf.* To break in a horse.

வீதிவிலாசம், *s.* A walk in the streets.

வீதி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* [*com.* வீதித்துக்கொள்ள.] To share, to allot, பங்கிட; [*ex* வீதம்.]

வீத்து, *v.* To flog, as வீச்சு. (*R.*)

*வீபணி, *s.* [*elongation of Sa. Vipani.*] A market-street, a fair, a market, கடைவீதி.

*வீபத்து, *s.* [*corrup. of Sa. Vibud'ha.*] The moon, சந்திரன். (சது.)

*வீபற்சு, *s.* An epithet of Arjuna, அருச்சுனன். (சது.)

வீப்பகழி, *s.* A flower-arrow of the Hindu Cupid, மன்மதன்கணை; [*ex* வீ *et* பகழி.]

*வீமம், *s.* A fearful thing. 2. Bulkiness. See பீமம்.

வீமதேவன், *s.* One of the eleven celestials. See உருத்திரர்.

*வீமன், *s.* Bhima, &c. See பீமன்.

வீமபாகம், *s.* A fine dish prepared by வீமன்.

வீம்பு, *s.* Boasting, swaggering, bombast, vaunting, வீண்பெருமை. (*c.*)

வீம்பன்—வீம்புக்காரன், *s.* A boaster, a braggadocio.

வீம்பாட்டம், *v. noun.* Ostentatious display, bragging.

வீம்புகாட்ட—வீம்புபாராட்ட, *inf.* To do things from love of display. 2. To boast.

வீம்புபேச, *inf.* To defy, to challenge.

*வீரட்டாணம், *s.* A kind of dance, or play, கூத்தின்விகற்பம்; [*ex* வீரம்.] (சது.)

*வீரணம், *s.* The fragrant Kusa grass and root, இலாமிச்சு. (சது.)

*வீரம், *s.* Heroism, bravery, fortitude, magnanimity, வீரியம். 2. Strength, might, வலி. 3. A king-like medicine, as சௌவீரம். W. p. 798. VEERA. 4. A mountain, மலை. (சது.) 5. One of the Saiva Agamas. See சிவாகமம். 6. A posture of the Yogi. See ஆதனம்.

வீரகங்கணம்-வீரகடகம், *s.* A warrior's bracelet.

வீரகண்டாமணி — வீரகண்டை, *s.* An ornament or ring for the foot.

வீரகுடியான், *s.* One employed to sound the chank, or trumpet, on joyful, and mournful occasions, பணிசெய்பவன்.

வீரகெம்பீரன், *s.* A proud champion.

வீரகேசரி, *s.* An epithet of a hero. See வீரர், கூ. 2. Vickramaditya.

வீரசாகி, *s.* [*St.* வீரவிருக்ஷம்.] The marking nut-tree, சேங்கொட்டைமரம். (சது.)

வீரசூரம், *s.* Hereic valor.

வீரசூரன், *s.* A veteran. 2. See வீரர், கூ.

வீரசேனன், *s.* The father of Nala Raja.

வீரசைவம், *s.* The high Saiva, or *Jangama* system. See சைவம்.

வீரசைவர், *s.* High Saivas, who worship the Linga; formerly known as the exterminators of the Jainas.

வீரச்செல்வி, *s.* An epithet of Durga, துர்க்கை. (சது.)

வீரஞ்செலுத்த, *inf.* To act bravely.

வீரதச்சுவன், *s.* Kama, மன்மதன். (சது.)

வீரதத்துவம்—வீரத்துவம், *s.* A heroic spirit, bravery.

வீரதீரம், *s.* As வீரசூரம்.

வீரதுரந்தரன், *s.* A champion, one ready to take the part of others, மகாவீரன்.

வீரபத்திரன், *s.* Virab'hadra, a form of Siva and destroyer of the sacrifice of Daksha.

வீரப்பாடு, *s.* Victory, conquest, வெற்றி.

வீரமாகாளர், *s.* The commander of a Jain army.

வீரமாமுனி, *s.* A name given to Beschi, compiler of சதுரகராதி, and author of the *Tembavani* and other works.

வீரமார்த்தாண்டன், *s.* One of the nine heroes in Subramanya's army. See வீரர், கூ. 2. Any illustrious hero; [*ex* மார்த்தாண்டன், sun.]

வீரமுட்டி—வீரமுஷ்டி, *s.* A *Vira Saiva,* or *Jangama* mendicant of a ferocious class, and often licentious, வீரசைவப்பண்டாரம். (சது.)

வீரமுத்திரிகை, s. An ornament worn on the middle toe, கால்நடுவிரலணி. [Sa. Viramudrika.]

வீரம்பேச, inf. [also வீரியம்பேச.] To hector, to boast, to challenge.

வீரர், s. [pl.] Warriors, heroes, champions.

வீரர், கூ. or நவவீரர். Nine heroes, in the army of Subramanya; 1. வீரவாகு; 2. வீரகேசரி; 3. வீரமகேந்திரன்; 4. வீரபுரேந்திரன்; 5. வீரமார்த்தாண்டன்; 6. வீரராக்கதன்; 7. வீராந்தகன்; 8. வீரதீரன்; 9. வீரசூரன்.

வீரலட்சுமி, s. Goddess of bravery. See அஷ்டலட்சுமி.

வீரவாளிச்சேலை—வீரவாளிப்பட்டு, s. A kind of silk-cloth printed with curious devices.

வீரவான், s. As வீரியவான்.

வீரவெட்சிமாலை, s. A panegyric, on one who has made a successful foray, and been crowned with a wreath of வெட்சி. See பிரபந்தம்.

வீரவெண்டையம், s. See வெண்டையம்.

வீரன், s. A hero, a veteran, திண்ணியன். 2. An epithet of Argha, and of Bishma.

வீரன்கேண்மைகூரம்பாகும். The friendship of a hero may become a sharp arrow.

வீராதிவீரன், s. A hero of heroes, a distinguished hero; [ex அதிவீரன்.]

வீராவேசம், s. Fury of bravery, as குணலை; [ex ஆவேசம்.]

வீராணம், s. A kind of drum, ஓர்வகைப்பறை. 2. A town, ஊர். (R.)

வீராணிக்கிழங்கு, s. A plant and root, Viper's grass, *Port.* Escorcioneira, Scorzonera, *L.*

வீராய, inf. To scrape together. See பிராய.

*வீரி, s. A heroine, வீரமுடையவள். [masc. வீரன்.] 2. Durga, Kali, காளி. (சது.) 3. A medical twining plant. See வட்டத்திருப்பி; [ex வீரம்.]

வீரிட—வீரிட்டழ, inf. To bellow, cry aloud, to scream; as a child, as வீர்வீரென.

*வீரியம், s. Strength, vigor, power, வலி. 2. Fortitude, firmness, courage, தைரியம். 3. *Semen Virile*, விந்து. 4. Bravery, heroism, valor, வீரம். W. p. 799. VEERYYA. 5. (சது.) Musical instruments, பறைப்பொது.

வீரியம்பேசேல். Don't boast. (*Avv.*)

வீரியத்தம்பனம், s. Privation of strength, by enchantment. 2. *Pillula medicinalis erotica.* (R.)

வீரியர், s. Heroes, as வீரர்.

வீரியவான், s. A brave, powerful man.

*வீருதம், s. Bushes, small shrubs, மிடைதூறு. [Sa. *Veerud'h.*]

வீரை, s. A tree, ஓர்மரம். 2. The sea, கடல். 3. Affliction, துன்பம். (சது.)

வீரைச்செடி, s. A kind of shrub.

வீர்வீரென, inf. To shriek, or cry in anguish, as a child.

குழந்தைவீர்வீரென்றழுகிறது. The infant cries in distress.

வீவு. Death. See வீ, v.

வீழி, s. A medicinal plant. See விழுதி.

வீழ—வீழ், கிறேன், வீழ்ந்தேன், வேன், வீழ, v. n. To fall, [*poetic form of* விழு] 2. v. a To desire, ஆசைவைக்க. 3. To long for, to desire earnestly, மேவ. (p.)

வீழ்கதி, s. Hell, நரகம். (சது.)

வீழ்ச்சி, v. noun. Falling.

வீழ், s. The falling roots from the branches of a Banyan, &c., as விழுது. (சது.)

வீழ், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To cause to fall, as வீழ்த்து.

வீழ்க்கை, v. noun. Thrusting down, தள்ளுகை. 2. A lapse induced by an external cause.

வீழ்க்கை, s. Desire, longing, விருப்பம்; [ex வீழ், v. n.] 2. The fifteenth lunar mansion, சோதிநாள். (சது.) 3. See வீழ், v. a.

வீழ்த்து, கிறேன், வீழ்த்தினேன், வேன், வீழ்த்த, v. a. To cause to fall, to involve, overwhelm, as விழுத்த. (p.)

வீறுப்பு. See வீறு.

வீறு, s. Greatness; arrogance, பெருமை. 2. Solitariness, தனிமை. 3. Merit, புண்ணியம். 4. Brightness, clearness, பிரகாசம். 5. Disgust, வெறுப்பு. (சது.) 6. (c.) Strength of medicines, or poisons, மருந்துச்சத்து.

வீறுப்பு, s. Arrogance, pomp, இறுமாப்பு. (c.)

வீறுகாட்ட—வீறுப்புக்காட்ட, inf. To display pride.

வீறுள்ளசரக்கு, s. A powerful drug.

வீறு, கிறேன், வீறினேன், வேன், வீற, v. n. To be great, பெருமையாக. 2. To be evident, விளங்க. 3. To be disgustful, வெறுப்பாக. 4. To be alone, தனித்திருக்க. 5. To be split, cleft, பிரிய. 6. To draw, delineate, கீற. 7. As பீற. (p.)

வட்டம்வீற, inf. To describe a circle.

வீற்றம், v. noun. Difference, வேறுபாடு.

வீற்று. Solitariness, தனிமை. 2. As வீற்றம். (சது.) 3. A curve, வளைவு.

வீற்றுப்பொருள். Sundry goods.

வீற்றிருக்க, inf. To sit majestically, or in state, சிறந்தாரணத்திருக்க. (c.)

சிங்காசனத்தில்வீற்றிருக்கிறார். He is seated on the throne.

வெ

வெ. A syllabic compound of வ் and எ.

வெ, adj. Hot, warm, harsh, hard, severe, cruel, *used in combination.* It is the radical of many words, as வெங்களம், a battle field; வெந்நீர், hot water; வெயில், the heat of the sun, &c.

*வெகு, adj. [St. பகு.] Much, many, பன்மைக்குறிப்பு. (c.)

வெகுகாலம் — வெகுநாள், s. A long time.

வெகுசனம், s. Many people.

வெகுச்சுருதம், s. An order of architecture. See சிற்பநூல்.

வெகுதானிய, s. The twelfth year of the Hindu cycle or A. D. 1878. ஓர்வருஷம்.

வெகுத்தம், s. [as மிகுத்தம்.] Much; abundance, மிகுதி.

வெகுத்துவம், s. Plurality, பன்மை. 2. Magnificence, மகத்துவம்.

வெகுநாயகம், s. Government in the hands of many, பலபேராளுகை.

வெகுநியாயம், s. External worship, வெளியாங்கபூசை. (உபநி.)

வெகுபேர், s. A great many.

வெகுமதி, s. Present, reward, இனம்.

வெகுமானம், s. Regard, respect, honor, மிகுகனம். 2. Hospitality, உபசாரம். 3. Pretension.

வெகுமானக்காரன், s. One who makes great pretensions.

வெகுமானிக்க, inf. To respect, to shew civility, உபசரிக்க. 2. To make a show of greatness. (*Beschi.*)

வெகுவசனம், s. Plural number. See பகுவசனம்.

வெகுவாய், adv. Very much, greatly.

வெகுவாய்ச்சொல்ல, inf. To inculcate at length.

வெகுர், s. Prickly heat, as வேர்க்குரு.

வெகுளி, s. Anger, wrath, கோபம். (சது.)

வெகுளு—வெகுள், கிறேன், ண்டேன், வேன், வெகுள, v. n. To be angry, to be incensed, to be displeased, enraged, கோபிக்க. (p.)

வெகுளல்—வெகுள்வு, v. noun. Being incensed; indignation.

வெகுளாமை, s. The absence of anger

வெஃகு, கிறேன், வெஃகினேன், வேன், வெஃக, v. a. To desire ardently, to long for, to wish, அவாவ. (p.)

வெஃகல், v. noun. Excessive desire, unlawful passion, அதிகஆசை. (சது.)

வெஃகாமை, neg. Dislike, disgust, வெறுப்பு.

வெக்கடிப்பு, s. Sore-eyes without inflammation. (c.)

வெக்கம், s. [*improp.*] Shame. See வெட்கம்.

வெக்காலி, s. A kind of tree used for timber, ஓர்மரம்.

வெக்காளம், s. Fair weather, without rain, மழையில்லாக்காலம்.

வெக்காளி, க்கிறது, த்தது, க்கும், க்க, v. n. [com. வெக்களி.] To clear up, as the weather, வானந்தெளிய.

வெக்காளிப்பு, v. noun. Fine weather.

வெக்கை, *s.* The heat of a close place, காங்கை. 2. Heat rising from the ground, நிலக்கொதிப்பு. 3. As வெக்கைநோய்.

வெக்கைநோய், *s.* Looseness with which cattle are attacked. 2. Pox, small-pox, வைசூரிநோய்.

வெங்கண், *s.* Jealousy, spite, animosity, implacability, enmity, பொறாமை. (*p.*) 2. A fish with protuberant eyes, ஓர்மீன்.

வெங்களம், *s.* A battle-field, போர்க்களம்; [*ex* வெம்.] (சது.)

வெங்கன், *s.* One reduced to poor circumstances; *in contempt*, வெங்கன்பயல். (*Colloq.*)

வெங்காயம், *s.* [*also* வெண்காயம்.] An onion, Allium cepa. See சருள்ளி.

வெங்காரம், *s.* [*also* வெண்காரம்.] Borax. (*Ell.* 240.)

வெங்கிணாத்தி, *s.* A large kind of mountain-snake, ஓர்மலைப்பாம்பு.

வெங்கோல், *s.* A cruel sceptre, an arbitrary government, *oppos. to* செங்கோல், கொடுங்கோல்.

வெச்சுவெச்செ்என, *inf.* To grow warm by degrees, அனல்வீச.

வெச்சென, *inf.* To be hot, to become heated, வெப்பமாக. (தத். 168.)

வெஞ்சமம், *s.* A tune for a barren country, பாலைநிலத்திராகம். 2. War, battle, போர். (சது.)

வெஞ்சமன், *s.* The cruel arbiter, Yama, இயமன்; [*ex* வெம் *et* சமன்.]

வெஞ்சம், *s.* Vengeance, பழி. (*p.*)

*****வெஞ்சனம்**, *s.* Sauce, condiment, சண்டற்குழம்பு. (*c.*) 2. A consonant. See வியஞ்சனம்.

வெஞ்சிலைச்செல்வன்—வெஞ்சுடர்க்கிரணன். See under வெம்.

வெடி, *s.* Explosion of a gun, துப்பாக்கிபிரங்கிவெடி. 2. Shock, crack, thunder, இடி. 3. Good smell, odoriferous perfume, நறுமணம். (*c.*) 4. (சது.) Fear, அச்சம். 5. Toddy, கள். 6. Incense of a good smell, smoke of frankincense, நறும்புகை. 7. An open field, as வெளி.

வெடியெழும்பிற்று. The report of the gun sounded.

வெடிகிரந்திப்புண், *s.* A venereal ulcer.

வெடிக்கயிறு, *s.* A quick-match.

வெடிச்சுட, *inf.* To fire a gun, to produce an explosion.

வெடிதீர—வெடிபோட, *inf.* To fire a cannon.

வெடிநாற்றம், *s.* A bad smell.

வெடிபலவன், *s.* A kind of plant, the seed-pods of which burst open with a noise, ஓர்பூண்டு.

வெடிப்பட்டடை, *s.* See பொட்டில்.

வெடிமருந்து, *s.* Gun-powder.

வெடியுப்பு—வெடிலுப்பு, *s.* Salt-petre; nitre, எவட்சாரம்.

வெடியுப்புத்திராவகம், *s.* Nitric acid, அக்கினித்திராவகம்.

வெடி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To explode, to discharge, படாரென. 2. To crack as earthen ware, to chap open, to part—as the ground; to split, பிளக்க. (*c.*)

அவன்வெடித்தாற்போலேபேசுகிறான். He speaks in a rattling manner.

வெடித்தகுரல், *s.* A loud, thundering voice, &c. See குரல்.

வெடிப்பு, *v. noun.* Crevice, fissure, gap, பிளப்பு. 2. Explosion. 3. [*fig.*] Bad smell. 4. Disgust.

வெடிப்படிக்க, *inf.* To be qualmish from a bad smell, as of some medicines. 2. To shew disgust.

வெடிப்படைக்க, *inf.* To close up crevices or cracks.

வெடில்—வெடியல், *s.* Explosion of gunpowder, a shock, வேட்டு.

வெடுக்கு, *s.* Churlishness, as வெடுவெடுப்பு.

வெடுக்கன், *s.* A churlish man.

வெடுக்கென — வெடுக்குவெடுக்கென, *inf.* To indicate a piercing pain, குத்தற்குறிப்பு.

வெடுவெடுக்க, *inf.* To be cross and sourly disposed, to express discontent in language and behavior, கடுமையாக. (*c.*)

வெடுவெடுத்தசொல்லி, *appel. n.* A crabbed person, a churl.

வெடுவெடுத்தவன், *appel. n.* A rough, surly, morose man.

வெடுவெடுப்பு, *v. noun.* Churlishness, crabbedness, சினக்குறிப்பு.

வெடுவெடென, *inf.* To indicate, displeasure or anger, சினக்குறிப்பு. (*c.*)

வெடுவெடென்றுபேசுகிறான். He speaks petulantly.

வெட்கம், *s.* [*vul.* வெக்கம்.] Shame, modesty, bashfulness, நாணம். (*c.*)

ஏன்வெட்கப்படுகிறாய். Why are you bashful?

வெட்கக்கேடு, *v. noun.* [*appel.* வெட்கங்கெட்டவன்.] Shamelessness, absence of shame.

வெட்கங்கெடுக்க, *inf.* To treat one shamefully.

வெட்கஞ்சிக்கி, *s.* Want of modesty. See சிக்கி.

வெட்கப்பட, *inf.* To be ashamed, to feel shame, to be bashful.

வெட்கப்படுத்த, *inf.* To put one to shame, to disgrace.

வெட்கு, கிறேன், வெட்கினேன், வேன், வெட்க, *v. n.* [*with dat. of pers.*] To be ashamed, நாண. 2. To be afraid, அஞ்ச.

வெட்கறை, *s.* A shame-faced person, male or female.

வெட்கிருவை, *s.* A species of இருவை tree; [*ex* வெண்.]

வெட்சி, *s.* A flower-shrub, Ixora coccinea, நீர்பூஞ்செடி. 2. A flower-garland worn by a certain class of warriors. See வெற்றிமாலை. (சது.)

வெட்ட. [*in comb.*] Clear, plain, public.

வெட்டவழி, *s.* A frequented way, or road.

வெட்டவெளி, *s.* An open plain, a desert; mere vacuum.

வெட்டவெளிச்சம், *s.* Broad day-light. 2. Being evident.

இவன்பேச்சுபொய்யென்பதுவெட்டவெளிச்சமும்பட்டப்பகலுமாயிருக்கிறது. It is clear as day that he lies.

வெட்டவெளியாய், *adv.* Publicly, notoriously.

வெட்டனவு, *s.* Rashness—as வெட்டெனவு. (*R.*)

வெட்டாந்தரை, *s.* Dry ground or soil, உலர்ந்தநிலம். (*c.*)

வெட்டி, *s.* Path, road, way, வழி. (சது.) 2. [*colloq.*] Vainness, uselessness, as வீண். 3. See வெட்டு, *v.*

வெட்டியில்அலைந்தேன். I wandered to no purpose.

அதுவெட்டியாய்ப்போயிற்று. It became ineffectual.

வெட்டிப்பயல், *s.* A worthless fellow.

வெட்டிமை, *s.* The office of a town-servant, வெட்டியான்றொழில்.

வெட்டியான், *s.* The lowest town-servant, one who burns corpses, or digs graves. 2. An insect that cuts off the leaves of grain, ஓர்பூச்சி.

வெட்டிவேர், *s.* The odoriferous cuscus root, விலாமிச்சம்வேர்.

வெட்டிவேர்த்தட்டி, *s.* An Indian *tatty* made of the above root, as a screen from the hot wind.

வெட்டு, *s.* A cut, ஓரறு. (*c.*)

கல்வெட்டு, *s.* Engraving in stone. See under கல்.

வெட்டுக்கட்டை, *s.* The stump of a tree, a pollard.

வெட்டுக்காயம், *s.* A wound made by a sword, hatchet, &c.

வெட்டுக்கிலக்குப்பார்க்க, *inf.* To watch an opportunity for wounding another.

வெட்டுக்கிளி, *s.* A grass-hopper. See கிளி.

வெட்டுக்குருத்து, *s.* Saplings of a lopped tree.

வெட்டுணி, *appel. n.* A disobedient child; a villain, துஷ்டன்.

வெட்டுண்ண—வெட்டுண்டுபோக—வெட்டுப்பட, *inf.* To be cut off.

வெட்டுத்தட்டு, *s.* [*prov.*] The ear of a drum.

வெட்டுப்போட, *inf.* To give a cut by a hatchet.

வெட்டுமூளை, *s.* Money lately coined.

வெட்டுவாய், *s.* A gash, the opening of a cut. 2. A joining, பொருத்து.

வெட்டுறை—வெட்டுறைப்பணம், *s.* Bad coin.

வெட்டுவாலி, *s.* A locust. (*Beschi.*)

வெட்டுவிழ, *inf.* To fall, cutting.

வெட்டுவேளாண்மை, *s.* Harvest, அறுப்பு.

வெட்டு, கிறேன், வெட்டினேன், வேன், வெட்ட, *v. a.* To cut, with a sword or axe, to cut off, to fell by a blow. 2. To engrave, முத்திரைவெட்ட. 3. To dig, as a

well, தோண்ட. 4. To injure, to mar—as insects, பூச்சிவெட்ட. 5. To strike off, as in measuring grain. See தலைவெட்ட. (c.)

அறுதுவெட்டிப்போடு. Cut it down.

அவனைவெட்டிக்கொன்றுபோட்டார்கள்......They killed him by cutting [his throat].

வெட்டி, *appel. n.* [*in comb.*] That which cuts, as மண்வெட்டி, புழுவெட்டி.

வாய்வெட்டி, *s.* Calumny, slander.

வெட்டரிவாள், *s.* A scythe.

வெட்டிமுறிக்க, *inf.* To fell a tree and cut it to pieces. 2. [*fig.*] To take great pains, to labor hard.

நீரென்னவெட்டிமுறிக்கிறாய்......What hard labor you take?

வெட்டிரும்பு, *s.* A chisel for cutting iron.

வெட்டல், *v. noun.* Cutting, killing, digging, &c. 2. See மெய்ப்பாசம், and ஊறுபாடு.

வெட்டுவெட்டெனல், *inf.* To indicate anger, சினக்குறிப்பு. 2. To shew signs of fear, அச்சக்குறிப்பு.

வெட்டுவெட்டென்றெறிக்கிறது. It shines very brightly.

வெட்டென, *inf.* [*as adv.*] Furiously, violently.

வெட்டெனப்பேசேல். Speak not harshly.

வெட்டெனவு, *v. noun.* Severity, harshness; hardness—*oppos.* to மெத்தெனவு, கடினமானது. (*p.*)

வெட்டை, *s.* Heat in the system, உட்டணம். (சது.) 2. [*Tel.* వెట్టె.] The whites, *fluor albus*; also gonorrhœa, மேகவெட்டை. 3. [*prov.*] Wild land without vegetation, கட்டாந்தரை. 4. Emptiness, வெறுமை. 5. (*R.*) Heat of the ground, நிலக்கொதி. 6. Excessive hardness of metals, &c., கடினம்.

வீடுவெட்டைவெளியாய்ப்போயிற்று. The goods are all gone from the house.

வெட்பகடம், *s.* [*prov.*] Outward show, வீண்பகட்டு.—For similar compounds, see under வெள்.

வெண், *adj.* White, pure, bright; [*ex* வெண்மை.]

வெண்கடம்பு, *s.* See கடம்பு.

வெண்கடுகு, *s,* White mustard. See கடுகு.

வெண்கண், *s.* A fish. See வெங்கண்.

வெண்கதிரோன்—வெண்சுடர், *s.* Moon, the silver-beamed, சந்திரன். (*p.*)

வெண்கலி—வெண்கலிப்பா, *s.* A kind of verse. See கலிப்பா.

வெண்கல், *s.* Marble, (*lit.*) white stone.

வெண்காந்தள், *s.* The white காந்தள் flower.

வெண்காயம், *s.* Onion, as வெங்காயம்.

வெண்காயப்பல், *s.* The tooth-like bulb in the onion.

வெண்காரம், *s.* [*com.* வெங்காரம்.] Borax.

வெண்கிடை—வெண்கிடைச்சி, *s.* White cork tree, a shrub which grows in water. See கிடை.

வெண்குட்டம், *s.* White leprosy.

வெண்குன்றி, *s.* The wild licorice, resembling Glycyrrhiza glabra. See அதிமதுரம். 2. See குன்றி.

வெண்கூதாளம், *s.* A species of கூதாளம் shrub.

வெண்கோஷ்டம், *s.* The white கோஷ்டம் plant.

வெண்சலசமுற்றாள் — வெண்டாமரையாள், *appel. n.* Sarasvati, as sitting upon the white lotus, சரஸ்வதி. (சது.)

வெண்சாமரம்-வெண்சாமரை, *s.* [*improp.* வெண்சாமரை.] A whisk, *chowrah.* See சாமரம்.

வெண்சீர், *s.* A metrical foot. See சீர்.

வெண்சுக்கான்கல், *s.* One of the one-hundred and twenty kinds of natural bodies, நிரவுபாசம்.

வெண்டகரை, *s.* The white flowered cassia. See தகரை.

வெண்டலை, *s.* Scull, தலையோடு. (சது.)

வெண்டளை, *s.* Connexion of வெண்பா verse. See தளை.

வெண்டாது, *s.* Silver, வெள்ளி; [*ex* தாது. (சது.)]

வெண்டாமரை, *s.* A white lotus. See தாமரை.

வெண்டாழிசை, *s.* A kind of verse. See தாழிசை.

வெண்டாழை, *s.* A variety of Pandanus odoratissimus with white flowers; [*ex* தாழை.]

வெண்டுகில், *s.* A white cloth. (*p.*)

வெண்டுறை, *s.* One of the divisions of verse. See பா.

வெண்டேர், *s.* Mirage. See கானல்.

வெண்டோன்றி, *s.* The white தோன்றி flower.

வெண்ணுயுருவி, *s.* A species of நாயுருவி plant.

வெண்ணாரை, *s.* A white cormorant. See நாரை.

வெண்ணிலம், *s.* Bare ground.

வெண்ணிலவு—வெண்டிங்கள்—வெண்மதி, *s.* The moon, as வெண்கதிரோன்.

வெண்ணிலை — வெண்ணிலைக்கடன், *s.* A debt without security.

வெண்ணிலைப்பத்திரம், *s.* Note of hand without security.

வெண்ணெய், *s.* [*vul.* வெண்ணை.] Butter, (*lit.*) white ghee.

வெண்ணெய்ச்சுறு, *s.* A species of சுறு fish.

வெண்ணெய்தல், *s.* A white water-flower. See நெய்தல்.

வெண்ணெய்நல்லூர், *s.* A town near Madura, where வெண்ணெய்நல்லூர்ச்சடையன், patron of கம்பன், lived.

வெண்ணெய்யெடுக்க, *inf.* To make butter.

வெண்ணொச்சி, *s.* A species of நொச்சி plant.

வெண்ணோ, *s.* [*com.* வெக்கடுப்பு.] Sore-eyes unattended with inflammation.

வெண்ணோக்காடு, *s.* False labor-pains.

வெண்பதம், *s.* Underboiled, &c., இளம்பதம்.

வெண்பலி, *s.* Ashes, சாம்பல். (சது.)

வெண்பா, *s.* A species of verse of different kinds. See பா.—The most important are குறள்வெண்பா, சிந்தியல்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, பஃறொடைவெண்பா.

வெண்பாப்புலி, *s.* The name of a distinguished poet, ஓர்புலவர்.

வெண்புணர்ச்சிமாலை, *s.* A poem of three-hundred stanzas of the வெண்பா versification.

வெண்புழுக்கல், *s.* [*prov.*] Underboiling, இளம்புழுக்கல்.

வெண்பொன், *s.* Silver. (சது.)

வெண்மட்டம், *s.* Shallowness, superficialness, மேலெழுந்தவாரி.

வெண்மட்டக்கருத்து, *s.* Superficial judgment.

வெண்மட்டவேலை, *s.* Indifferent work.

வெண்மணல், *s.* White sand.

வெண்மணி, *s.* Pearl, முத்து. (*p.*) 2. [*prov.*] One of the three circles about the pupil of the eye.

வெண்மயிர், *s.* Gray hairs, நரைமயிர். 2. (சது.) *Chowrah,* as சாமரம்.

வெண்மலை, *s.* The feigned residence of Siva, (*lit.*) the silver mountain. See கைலை. (சது.)

வெண்மொந்தன், *s.* A kind of plantain, ஓர்வாழை.

வெண்கலம், *s.* Bell-metal—a composition of செம்பு and வெள்ளீயம். (*c.*)

வெண்டாவி, *s.* Drowsiness induced by eating after a fast, அன்னக்களை. (*Colloq.*)

வெண்டு, *s.* Hollowness of a thing—as of a pipe, tube or cane, உட்டுளை. (*Beschi.*)

வெண்டு, கிறேன், வெண்டினேன், வேன், வெண்ட, *v. n.* To grow dry by the sun, காய.

அதுவெண்டிப்போயிற்று. It became dry.

வெண்டிவெறித்துவந்தான்......He came very much exhausted.

வெண்டைக்காய்—வெண்டிக்காய், *s.* The unripe fruit of a garden-plant used for curry; the eatable Hibiscus, Abelmoschus esculentus. (*c.*)

வெண்டையம், *s.* [*sometimes* வெண்டயம்.] A woman's trinket, a kind of thumb-ring used by *Pujaris*; a hollow ring with pebbles tied to the feet of horses, elephants, &c. (*c.*)

வீரவெண்டையம், *s.* A larger kind worn on the feet by warriors.

வெண்ணுங்கு, *s.* A medicinal plant. See இடைக்கொடி.

வெண்ணுந்தை, *s.* A mountain-snake, as வெள்ளாந்தை.

வெண்ணுரி, *s.* A plant, ஓர்பூடு.

வெண்மை, *s.* Whiteness, paleness, brightness, as வெள்ளை. 2. (*p.*) Simplicity, sincerity, a tender age, இளமை. 3. Ignorance of the world, அறிவின்மை; [*ex* வெள்.]

வெண்மையறிவு, *s.* Ignorance.

அதுசுத்தவெண்மையாயிருக்கிறது. It is pure white.

*வெதிரேகம், s. Difference, dissimilitude, எதிர்மறை. (சது.) 2. [in logic.] Negative conclusion. See வியதிரேகம்.

வெதிரேகவனுமானம், s. Method of drawing an inference. See அனுமானம்.

வெதிர், s. The bambû, மூங்கில். (சது.) 2. Deafness, செவிடு. (p)

வெதிர், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To fear, அஞ்ச. 2. To be angry, சினக்க. 3. To tremble, நடுக்க. (p.)

வெதிர்ப்பு, v. noun. Fear, trouble, confusion, கலக்கம். 2. An indication of anger, சினக்குறிப்பு. 3. Tremor, நடுக்கம். (சது.)

வெதுப்பம்—வெதுப்பு, s. Warmth, a gentle heat, வெப்பம். 2. A sickness, a frothy diarrhœa, ஓர்நோய்; [ex வெதும்பு.]

வெதுப்படக்கி, appel. n. A plant, Ballota distichа, ஓர்பூண்டு.

வெதுப்பு, கிறேன், வெதுப்பினேன், வேன், வெதுப்ப, v. a. To warm, to heat to a gentle degree, வாட்ட. (c.)

வெதுப்பிக்கொள்ள, inf. To warm for one's self.

வெதுப்பல், v. noun. Heating, as a leaf for a medical application.

வெதும்பு, கிறேன், வெதும்பினேன், வேன், வெதும்ப, v. n. To grow warm, to be softened, melted with heat, வெம்ப. 2. To be deprived of greenness or freshness, as fruits, வாட. 3. To be enraged, சினங்காட்ட.

வெதுவெதுக்க, inf. To be partially withered—as fruits, சற்றுவாட. 2. To be partially boiled, to be parboiled, half cooked, கொஞ்சங்காய. (c.)

தண்ணீர்கொஞ்சம்வெதுவெதென்றிருக்கட்டும். Let the water be a little hot.

வெதுவெதுப்பு, v. noun. A lukewarm state, இளஞ்சூடு.

வெதுவெதுப்பானகுணம், s. Lukewarmness, indecision.

வெந், s. The back, as வெரிந், முதுகு. (சது.)

வெந்திட, inf. To retreat, fly before an enemy, புறங்காட்ட. (p.)

வெந்தயம், s. [also வெந்தியம், வெந்தையம்.] The Fenugreek plant, the seeds of which are used in dysentery, ஓர்மருந்துச்சரக்கு, Trigonella Fœnum Græcum. (c.)

வெந்திட, inf. To be burned. See வே, v.

வெந்தை, s. A kind of meal-cake, பிட்டு. (சது.)

வெந்நீர், s. Hot water, சுடுநீர்; [ex வெ or வெம் et நீர்.] (c.)

வெந்நீர்வைக்க, inf. To prepare hot water.

வெப்பம், s. Heat, வெம்மை. 2. Desire, ஆசை. (சது.)

வெப்பசாரம், s. Indignation, spite, spleen.

வெப்பமுற, inf. To become heated.

வெப்பிக்க, inf. To make hot, சூடாக்க.

வெப்பு, s. Heat, வெம்மை. 2. As வெதுப்பு. (c.)

வெப்புக்கட்டி—வெப்புப்பாவை — வெப்புப்பாவைக்கட்டு, s. A swelling in the intestines after chronic fever.

வெப்புக்கொதி—வெப்புநோய், s. Slight fever, feverishness.

வெப்புநாற்றம், s. An offensive or putrid smell, கெட்டநாற்றம்.

வெப்புவெப்பென்றுபேச, inf. To speak with warmth. (R.)

வெப்புறு, s. Heat, as வெப்பு. (R.)

வெம், adj. Hot, severe, pungent, &c.

வெஞ்சிலைச்செல்வன், s. An epithet of Vîrab'hadra as bearing a cruel bow, வீரபத்திரன். (சது.)

வெஞ்சுடர்க்கிரணன், s. The sun as the hot-rayed, சூரியன். (சது.)

வெம்பவக்கடல், s. The horrid sea of transmigration. (p.)

வெம்பளிக்கை — வெம்பிளிக்கை, s. Haughtiness, pride, இறுமாப்பு.

வெம்பாய், s. Bombay, the island or town.

வெம்பு, கிறேன், வெம்பினேன், வேன், வெம்ப, v. n. To become prematurely ripe, முதிராதுகனிய. 2. To fade, வாட. (c.) 3. To be very hungry, மிகப்பசிக்க. 4. To be angry, கோபமுற.

வெம்பல், v. noun. A premature fruit, வாடினபிஞ்சு. 2. Fading, வாடல். 3. (சது.) Wrath, பெருங்கோபம்.

வெம்மை, s. Heat, glow, வெப்பம். 2. Severity, cruelty, furiousness, harshness, கடுமை. 3. Desire, விருப்பம். 4. See ஊறு.

வெயில்-வெய்யில், s. [vul. வெய்யல்.] Sunshine, சூரியப்பிரகாசம். 2. The heat and glare of a tropical day, கானல். (c.) 3. The sun, சூரியன். 4. Brightness, ஒளி; [ex வெ.]

இன்றைக்குவெயில்மெத்த. It is very hot to-day.

வெய்யில்தாழவா— வெயிற்குளிரவா. Come when the heat has subsided.

வெயிலடிக்க — வெயிலெறிக்க, inf. [v. noun வெயிலெறிப்பு.] To shine as the sun.

வெயிலுந்தரவிந்தம், s. The lotus. See under உந்து.

வெய்யிலுறைக்க, inf. To burn from exposure to the sun, as the skin.

வெயிற்குளிக்க, inf. [prov.] To be greatly exposed to the sun. 2. To go into the sun for warmth.

வெய்யிற்சுடுதல், v. noun. Scorching of the sun.

வெய்யிலில்காயப்போடு. Put [the things] to dry in the sun.

வெய்து. [symb. appel.] That which is hot, சுடுள்ளது; [ex வெம்.] (சது.)

வெய்துபிடிக்க, inf. To cause perspiration. See வேதுபிடிக்க.

வெய்துயிர்க்க, inf. To breath forth fury; to utter sighs in anger or grief, as மூச்செறிய. (p.)

வெய்துறல், v. noun. A sign for expressing fear, அச்சக்குறிப்பு. 2. A sign of anger, சினக்குறிப்பு. 3. Affliction, துன்பம். (சது.)

வெய்தெனல். An indication of haste, விரைவுக்குறிப்பு. (சது.)

வெய்ய, adj. Hot, fierce, lustful, cruel, கொடிய; [ex வெ.]

வெய்யவன்—வெய்யோன், s. The sun, சூரியன். 2. A cruel man, தீயன். 3. The fifth lunar mansion, மிருகசீரிடம். 4. A lustful man, விருப்புற்றோன். (சது.)

வெய்யோன்கதி, s. Mean daily motion of the sun.

வெரிந், s. [also வெந்.] The back, முதுகு. (சது.)

வெரு—வெருவு, s. Fear, dread, அச்சம். (சது.)

வெருக்கொள்ள, inf. [appel. வெருக்கொள்ளி.] To be afraid, to be frightened.

வெருகம், s. The under side of an animal's tail, வாலின்கீழிடம். (சது.)

வெருகு, s. A tom-cat, ஆண்பூனை. (c.) 2. A cat, பூனை. (சது.)

வெருகடி, s. (lit. a cat's foot.) A large pinch, a pugel. (Medical usage.)

வெருகடித்தூள், s. As much powder as can be taken between the thumb and two fingers.

*வெருகு, s. [also விருகு.] A shrub with a very large leaf, used for covering newly planted saplings, ஓர்செடி, Arum macrorhizon.

வெருகங்கிழங்கு, s. Its bulbous root used medicinally, Long rooted Arum.

வெருட்டு, கிறேன், வெருட்டினேன், வேன், வெருட்ட, v. a. To terrify, to frighten, அச்சுறுத்த; [ex வெருளு.]

வெருட்டு, v. noun. Causing shyness.

வெருவந்தம், s. Fear, terror, அச்சம்; [ex வெருவரு.] (சது.)

வெருவரு, கிறேன், வெருவந்தேன், வேன், வெருவர, v. n. To fear, பயப்பட. (p.)

வெருவந்தசெய்யாமை, v. noun. neg. A king's mild government.

வெருவு, கிறேன், வெருவினேன், வேன், வெருவ, v. n. [com. வெருளு.] To fear, to be alarmed, or frightened; to be startled, as a beast, வெருள.

வெருளு—வெருள், கிறேன், வெருண்டேன், வேன், வெருள, v. n. To be frightened; to be confused, மருள. 2. To be infatuated, மயங்க.

வெருளி, appel. n. Scare-crow, bugbear. 2. (சது.) Shyness, as வெருட்சி.

வெருட்சி, v. noun. Shyness, skittishness, of a beast, மருட்சி. 2. Fear, அச்சம்.

வெருள், s. Fear, பயம். 2. Delirium, உன்மத்தம். (சது.)

வெலவெல, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. n. To be faint from fatigue; to be cramped, திகைக்க, களைக்க. 2. To be convulsed in the hands and feet, கைகாலுதற.

வெலவெலவென்றுதைத்துக்கொள்ளுகிறது. Struggling in the agonies of death.

வெவி, s. [Tel. colloq. வெலி.] Banishment, excommunication, நீக்கல்.

வெவிகாரம், s. [Tel.] Borax, as வெண்காரம்.

வெவித்தி, s. [Tel.] Thin cloth not closely woven, கடித்தமில்லாதது. 2. Any thing having interstices. (c.)

வெல்லம், *s.* [*Tel.* பெல்லம்.] Coarse sugar, from the cane, கரும்பின்கட்டி. (*c.*)
வெல்லப்பாகு, *s.* Treacle, molasses.

வெல்லு — வெல், கிறேன், வென்றேன், வேன், வெல்ல, *v. a.* To overcome, conquer, subdue, செயிக்க.
நிலைபெறவேபுலன்வென்று. Completely subjecting the senses. (*p.*)
வெல்லுமா, *s.* A conquering beast, a tiger, புலி. (சது.)
வெல்லல்—வெல்லுதல், *v. noun.* Conquering.

வெவ்விது. [*symb. appel.*] That which is hot, severe, &c., as வெய்து.

வெவ்வுரை, *s.* Severe or inflammatory language, கடுஞ்சொல்; [*ex* வெ.] (*p.*)

வெவ்வுழவு, *s.* [*prov.*] Superficial ploughing, மேலுழவு.

வெவ்வேறு, *adj.* Separate, different, various; [*ex* வேறு reiterated.]
வெவ்வேறுகணக்கு. A separate account.
வெவ்வேறேவைக்க, *inf.* To place things separately.

வெளி, *s.* Outside, exterior, புறம். 2. An open field, &c., a space free from obstruction—as a plain, the air, the sky, மைதானம். 3. Ether, as one of the five elements, ஆகாயம். 4. [*fig.*] Publicity, notoriety, பகிரங்கம்.
அதுவெட்டவெளியாயிருக்கிறது. It is an open plain. 2. It is clearly manifest.
வெளிகாண, *inf.* To be clear as the sky without clouds.
அதுவெளிகண்டுபோயிற்று. It penetrated to the other side.
வெளிகண்டசொல், *s.* A plain word.
வெளிகொள்ள, *inf.* To leave an opening, as between furrows.
வெளிக்கட்டு, *s.* The exterior of a building.
வெளிக்காட்சி—வெளித்தோற்றம், *s.* An imaginary sight. See உருவெளி.
வெளிக்கிட, *inf.* [*prov.*] To set out, to start, புறப்பட.
வெளிக்குவர, *inf.* To come to publicity. 2. [*with the dative.*] To feel urged to stool.
இதுவெளிக்குவராமலுன்மனதிலிருக்கட்டும்...... Make it not public, keep it to yourself.
வெளிக்குப்போக, *inf.* To go to the privy.
வெளிக்கோபம், *s.* Manifested displeasure.
வெளிசங்கம், *s.* As வெளியரங்கம்.
வெளிச்சாடை, *s.* Outside show, mere profession.
வெளிச்சாயல், *s.* Outward appearance.
வெளிதிறந்துசொல்ல, *inf.* To speak plainly and frankly.
வெளிப்பட—வெளியாக, *inf.* To come out, to issue forth as the breath; to become manifest.
வெளிப்படுத்த—வெளியாக்க—வெளியிட—வெளிவிட, *inf.* To show, to indicate, to exhibit. 2. To divulge secrets.
வெளிப்படை, *s.* That which is clear, obvious.
வெளிப்படையானசொல், *s.* A common word.
வெளிப்படையுவமம், *s.* An evident comparison.
வெளிப்பயன்—வெளிப்பொருள், *s.* The obvious meaning.
வெளிப்பாடு, *v. noun.* [*prov.*] Presents of fruit to great persons.
வெளிப்பொருளாய். Clearly, perspicuously.
வெளிமடை, *s.* [*prov.*] Offerings of flesh, spirits, &c., to ferocious deities, outside the temple.
வெளிமனிதர், *s.* Strangers, people not belonging to a domicile.
வெளிமான், *s.* A grey deer, a roe.
வெளியடை, *s.* A curtain, a veil, திரைச்சீலை.
வெளியரங்கம், *s.* Openness, that which is clear or evident, பகிரங்கம்.
வெளியரங்கமாக, *inf.* To become publicly known.
வெளியாக்க—வெளியிட, *inf.* To lay open, as வெளிப்படுத்த.
வெளியாடைகள், *s.* Hangings, tapestry. (*R.*)
வெளியேபோக, *inf.* To go out. 2. As வெளிக்குப்போக.
வெளிவாங்க, *inf.* To be dispersed, as the clouds.
வெளிவிட, *inf.* To expose. See வெளிப்படுத்த.

வெளி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* [*prov.*] To break as the day, விடிய. 2. To become clear, as the sight after dimness, as the sky after cloudiness; to brighten, as the sun or moon after being obscured, or as the meaning of an obscure verse, தெளிய. 3. To come to light, as dishonest tricks, வெளியாக. [*limited.*]
வெளித்துக்காட்ட, *inf.* To clear up after rain.

வெளிசம், *s.* An angle, தூண்டில். (சது.)

வெளிச்சம், *s.* Light, properly diffused light,—not an illuminating body; though it is used for a lamp, or other artificial light, பிரபை. 2. [*fig.*] Publicity. (*c.*)
இதுவெட்டவெளிச்சமாயிருக்கிறது. It is clear as day-light.
இதுவெளிச்சமாயிற்று. This has been made public.
நிலாவெளிச்சத்திலேநடந்தேன். I walked in the moon-shine.
வெளிச்சங்காட்ட, *inf.* To show a light, as at sea. 2. To brandish a torch in order to illuminate one's path. 3. To shine. 4. To appear, as a light.
வெளிச்சமான, *adj.* Bright. 2. Clear, evident.
வெளிச்சம்போட, *inf.* To make things appear in a favorable light, to make false pretensions, *used in cant.*

வெளிது. [*symb. appel.*] That which is white; [*ex* வெள்.] (*p.*)

